# மகாத்மா காந்தி நூல்கள்

# 9

295 / 1, 64

N62

# மகாத்மா காந்தி

## நூல்கள்

ஒன்பதாம் தொகுப்பு

SCRUTINY OFFICER
10 MAR 1964
PUBLIC (INFORMATION AND PUBLICITY) DEPARTMENT

MADRAS RECORD OFFICE
MADRAS

முதல் பதிப்பு: 15, ஏப்ரல், 1962


[இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள மகாத்மாவின் கட்டுரைகள், பிரசங்கங்கள் முதலியன நவஜீவன் டிரஸ்டின் அனுமதியின் பேரில் பிரசுரிக்கப்படுகின்றன.]

முழு உரிமை:

காந்தி நூல் வெளியீட்டுக் கழகம், சென்னை-2.

விலை: ரூ. 7-50

மாணிக்கம் பிரஸ், அமைந்தகரை, சென்னை - 29.



காந்திஜி அமரராவதற்கு இருதினங்களுக்கு முன் பிரார்த்தனைக் கூட்டத்தில் பிரார்த்தனையிலிருக்கிறார்.

# மகாத்மா காந்தி நூல்கள்

9

சமூக ஒற்றுமையின், ஹிந்து-முஸ்லிம் சமரசத்தின் முக்கியத்தைக் குறித்து மகாத்மா காந்தி தமது ஆரம்ப காலத்திலிருந்து கூறிய கருத்துகள், எழுதிய கட்டுரைகள், செய்த பிரசங்கங்கள் ஆகியவற்றையும், இந்த ஒற்றுமைக்காக அவர் செய்திருக்கும் தியாகங்கள், உண்ணுவிரதங்கள் முதலிய விவரங்களையும் கொண்டது இந்நூல்.


*வெளியிடுவோர் :*

**காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்**

[ தமிழ் நாடு காந்தி நினைவு நிதி ஆதரவில் ]

சர்க்கார் எஸ்டேட், மவுண்ட் ரோடு,

சென்னை-2.

ஆசிரியர் :

**ரா. வேங்கடராஜுலு**

துணை ஆசிரியர் :

**ஜெயமணி சுப்பிரமணியம்**

ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS
100328

# சமூக ஒற்றுமை

மகாத்மா காந்தி
எழுதியது

தமிழாக்கம் :

க. அருணாசலம்
ரா. வேங்கடராஜுலு
ஜெயமணி சுப்பிரமணியம்

# பதிப்புரை

தேசீய ஒற்றுமை பற்றி (National Integration) திட்டங்கள் அமைக்கப்படும் இக்காலத்தில், காந்தியடிகளின் இந்நூல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

திருக்குறளில் ஒரு நாட்டின் சிறப்புகளைக் கூற முன்வந்த திருவள்ளுவ நாயனர், அதில் எவை கூடாது என்பதையும் கூறியிருக்கிருர். 'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும், வேந்தலைக்கும் கொல் குறும்பும்' ஒரு நல்ல நாட்டில் இருக்கக்கூடாதவை. இதில் 'பல்குழு' என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. ஒரு நாட்டின் மக்கள் அனைவரும் ஒருமித்து ஒன்றுபட்டு ஒரு மக்களாக வாழ்ந்தால் அந்நாடு சிறப்பாக வளரும். சாதி, மதம், மொழி என்ற வேறுபாடுகள் சில பெரிய நாடுகளில் இருக்கின்றன. ஆனல், இவற்றின் மூலம் மக்கள் பல குழுக்களாகப் பிரியாமல், அடிப்படையான ஒற்றுமையுடன் ஒரு தாயின் புதல்வர்களாக, பரஸ்பர அன்புடனும் ஒற்றுமையுடனும் பழகி வாழ வேண்டும் என்பதுதான் அதன் கருத்து.

சுதந்திரத்துடன் நம் நாட்டில் அனைவருக்கும் ஓட்டுரிமையும் வந்திருக்கிறது. தேசீயப் போராட்டத்தின்போது, மக்கள் தங்கள் சுயநலத்தை மறந்து, நாட்டின் முன்னேற்றத்தை நினைத்து அவ்வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்; அப்பொழுது சாதி, மத, மொழிப் பேதங்கள் மறைந்து, ஒருவரோடு ஒருவர் ஒன்றுபட்டு நின்று தாய்நாட்டிற்காகப் பாடுபட்டார்கள். ஆனல், சுதந்திரத்திற்குப் பின் தேர்தல்கள் காரணமாக ஏற்பட்டிருக்கும் ராஜீயப் போராட்டங்களில், கட்சிகளும் நபர்களும் தங்கள் சுயநலத்தை முன்னிட்டு, இவ்வேறுபாடுகளை உபயோகப்படுத்தி வருகின்றனர். எனவே, நாட்டில் உண்மையான ஜனநாயகம் வளருவதற்கு இவை இன்று இடையூறுகளாக இருக்கின்றன. எனவே, மக்களைப் பிரிக்கும் இந்த இடையூறுகளை அகற்றி, மக்களைப் பிணைத்து ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவதே நம் முதற் கடமையாக இருக்கிறது.

இப்பிரச்னையைப் பற்றிய காந்தியடிகளின் அடிப்படையான கருத்துக்கள் இத்தொகுப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை முக்கியம் என்பது மாத்திரமல்ல,

தம் மூச்சும், இந்நாட்டு நலனின் ஆணி வேரும் அதுவே என்று காந்தியடிகள் கருதினர். எனவே, இதற்காக அவர் செய்த சேவை, அவர் இந்திய ராஜீய அரங்கில் பிரவேசிப்பதற்கு முன்னலேயே ஆரம்பமாகிவிட்டது. அவர் தென்னப்பிரிக்காவில் இருந்த போதே சமூக ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்திப் பேசி, எழுதியிருக்கிறர். அவருடைய அந்த ஆரம்ப கால எழுத்துக்களும் பேச்சுக்களும் இத்தொகுப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிலாபத் காலம் முதற்கொண்டு சமூக ஒற்றுமைக்கென்றே அவர் தமது முழு நேரத்தையும் செலவிட்டுப் பாடுபட்ட சமயங்கள் பல உண்டு. அந்தச் சமயங்களையும், ஒவ்வோர் சமயத்திலும் அவர் பேசியவைகளையும், எழுதியவைகளையும் தமிழ் மக்கள் தெளிவாக அறிவதற்கு உதவும் வகையில், காலத்தை ஒட்டிப் பல பகுதிகளாகப் பிரித்து இத்தொகுப்பில் அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. அச்சம்பவங்களை நினைவுபடுத்தும் வகையில் ஆங்காங்கு குறிப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கு முந்திய எட்டுத் தொகுப்புக்களையும் அன்புடனும் ஆர்வத்துடனும் வரவேற்றிருக்கும் தமிழ்ப் பெருமக்கள் இத்தொகுப்பையும் ஏற்று அருள்வார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை, *9—4—1962.* **தி. சு. அவினசிலிங்கம்**

# பொருளடக்கம்

எண் | பக்கம்


பகுதி ஒன்று

## ஆரம்ப காலங்களில்

1. கஷ்டத்தின் உபயோகங்கள் ... 2
2. ஆரம்ப கால மத சமரச முயற்சி ... 6
3. இந்தியா விழித்துக்கொள்ளுமா? ... 10
4. பிரித்தாளும் தந்திரம் ... 12
5. உலகத்தின் சமயம் ... 15
6. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ... 17

பகுதி இரண்டு

## கிலாபத், ஒத்துழையாமை நாட்களில்

1. ஒற்றுமைப் பிரதிக்ஞை ... 26
2. கிலாபத் பிரச்னை ... 29
3. ஒற்றுமை விழா ... 34
4. பம்பாய் கிலாபத் பொதுக்கூட்டத்தில் ... 36
5. முஸ்லிம் மகாநாட்டின் வேண்டுகோள் ... 38
6. கடினமான கிலாபத் பிரச்னை ... 40
7. அகில இந்திய கிலாபத் மகாநாடு ... 43
8. என்ன செய்ய வேண்டும்? ... 45
9. வாக்குறுதிகள் வீணாயின ... 49
10. கிலாபத் கூட்டத்தின் முடிவு ... 52
11. ஒத்துழையாமைக் கமிட்டி ... 54
12. துருக்கியை அழிக்கும் இயக்கம் ... 56
13. அலி சகோதரர்கள் கைது ... 59
14. கிலாபத்தைப் பற்றி என்ன? ... 63
15. கிலாபத்தும் பசுவும் ... 65
16. பசுத் தாய்க்கு உண்மையான சேவை ... 67
17. ஹிந்து சகோதரர்களுக்கு ஆலோசனை ... 69
18. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் அவசியம் ... 70
19. கருணையே உருவெடுத்த கவிதை! ... 73
20. சமூக ஒற்றுமையின்றேல் சுயராஜ்யமில்லை ... 75
21. பிரிந்து நின்றால் வீழ்ச்சியே ... 78
22. சகிப்புத் தன்மையின் அவசியம் ... 80

எண் பக்கம்

23. கலப்பு மணம் அமைதியைக் கொண்டு வருமா? 83
24. பசுவைப் பாதுகாக்கத் தவம் ... 83
25. ஒரே தாயின் புதல்வர்கள் ... 86
26. சுயராஜ்யத்தைவிடப் பெரிய பிரச்னை ... 87
27. உணர்ச்சிகளைப் புண்படுத்தக்கூடாது ... 91
28. பசு வதையும் கொட்டு முழக்கமும் ... 92
29. கவலையைக் கொடுக்கும் பண்டிகை ... 96
30. சமூக ஒற்றுமை ஒரு மாயாஜாலமா? ... 96
31. வீண் பிரமை ... 100

பகுதி மூன்று

## மாப்பிள்ளைக் கலகம்

1. கலகத்திற்குக் காரணம் ... 101
2. பொருத்தமான கேள்வி ... 105
3. ஹிந்துக்களும் மாப்பிள்ளைமார்களும் ... 107

பகுதி நான்கு

## இளவரசர் விஜயமும் பம்பாயில் அமளியும்

1. பம்பாய் வாசிகளுக்கு வேண்டுகோள் ... 113
2. நல்லதும் கெட்டதும் ... 116
3. திரை மறைவில் தீங்கு செய்ய வேண்டாம் ... 117
4. பம்பாய் மாவாசிகளுக்கு ... 118
5. சக ஊழியர்களுக்கு ... 121
6. உபவாசம் முடிவடைந்தது ... 125
7. இழந்த மதிப்பை மீண்டும் பெறவேண்டும் ... 127

பகுதி ஐந்து

## ஹிந்து- முஸ்லிம் பிணக்கு

1. மிரட்டுவது மத வழியல்ல ... 131
2. ஹிந்து-முஸ்லிம் குற்றச் சாட்டுகள்:
காரணமும் பரிகாரமும் ... 132
3. முஸ்லிம் நண்பரின் கோபம் ... 156
4. ஹிந்துக்கள் என்ன செய்யலாம்? ... 158

பகுதி ஆறு

## ஆரிய சமாஜிகளின் கோபம்

1. சகிப்புத்தன்மையற்ற எதிர்ப்பு ... 163
2. மீண்டும் ஆரிய சமாஜிகள் பிரச்னை ... 166

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 3. | துதி செய்வதால் ஒற்றுமை ஏற்படாது | ... | 169 |
| 4. | ஒற்றுமைக்கு வழி | ... | 170 |
| 5. | டில்லியும் நாகபுரியும் | ... | 171 |
| 6. | இருள் சூழ்ந்த சித்திரம் | ... | 173 |
| 7. | இரு இனங்கள் அல்ல | ... | 175 |
| 8. | அபேத வாதமா, கட்டுப்பாடா? | ... | 176 |
| 9. | இதய ஒற்றுமை | ... | 179 |
| 10. | நாட்டிற்குச் செய்தி | ... | 180 |
| 11. | ஒழுக்கம் இன்றேல் மதம் இல்லை | ... | 182 |
| 12. | எழுத்தாளர்களின் கடமை | ... | 184 |
| 13. | பொய்ப் பிரசாரம் | ... | 186 |
| 14. | ஹிந்து மதம் யாது? | ... | 192 |
| 15. | வெறி பிடித்த குல்பர்கா | ... | 195 |
| 16. | ஒரு விளக்கம் | ... | 198 |
| 17. | உடலை வளர்ப்பது உண்மையான பரிகாரமா? | ... | 200 |
| 18. | ஆண்மைக்கு அழகு அகிம்சையே | ... | 201 |
| 19. | தைரியசாலிகளாக எப்படி மாறுவது? | ... | 207 |


பகுதி ஏழு

## சமூக ஒற்றுமைக்காகக் கடுந்தவம்


| | | | |
|---|---|---|---|
| 1. | சகிக்க முடியாத சம்பவங்கள் | ... | 215 |
| 2. | கடவுள் ஒருவரே | ... | 216 |
| 3. | உதவியின்மை, நம்பிக்கையின்மை அல்ல | ... | 221 |
| 4. | உண்ணாவிரதத்தைப் பற்றிய அனைத்தும் | ... | 222 |
| 5. | இந்த உண்ணாவிரதத்தின் உட்கருத்து | ... | 227 |
| 6. | எனது புகலிடம் | ... | 234 |
| 7. | காந்திஜிக்கு வைஸ்ராய் தடை | ... | 235 |
| 8. | மோசமான ஒரு தீர்மானம் | ... | 238 |
| 9. | கோஹத் அகதிகள் | ... | 239 |
| 10. | கோஹத் கோர சம்பவங்கள் | ... | 240 |
| 11. | கோஹத் ஹிந்துக்கள் | ... | 243 |
| 12. | மீண்டும் வைஸ்ராய் தடை | ... | 246 |
| 13. | பரஸ்பர நட்பு அவசியம் | ... | 249 |
| 14. | ஒற்றுமைக்கு வழி | ... | 251 |
| 15. | கடவுளுக்குக் கொடுக்கக் கொள்ளையடிப்பதா? | ... | 252 |
| 16. | பிரிட்டிஷ் பாதுகாப்பு ஒற்றுமைக்கு முரணாகும் | ... | 255 |
| 17. | சரணாகதி சாஸ்திரம் | ... | 256 |
| 18. | உண்மையைக் கூறுவதில் தயக்கம் எதற்கு? | ... | 259 |
| 19. | கோழைத்தனத்தைவிட கத்தியை உபயோகிப்பதே மேல் | ... | 261 |

எண்

20. அந்த நிரந்தரப் பிரச்னை ... 263
21. மௌலானா ஆஸாதின் வேண்டுகோள் ... 266
22. ஆண்மையற்ற நிலையைவிட பலாத்காரமே மேல் 268

பகுதி எட்டு

**சுவாமி சிரத்தானந்தர்**

1. உயிர்த்தியாகி சிரத்தானந்தர் ... 273
2. நான் அறிந்த சுவாமிஜி ... 276
3. சிரத்தானந்தருக்கு ஞாபகச் சின்னம் ... 280
4. வீராதி வீரர் ... 282
5. பிரசாரத்திற்குப் பலியான கொடுமை ... 288
6. கடவுளின் கைக்கு மாறியது! ... 291
7. சுவாமிஜியின் குரு குலத்தை ஆதரியுங்கள் ... 292
8. புண்படுத்தும் புத்தகம் ... 293
9. ஒரே வழி பிரார்த்தனைதான் ... 295

பகுதி ஒன்பது

**சுத்தி, தப்ளிக், ஞான ஸ்நானம்**

1. குற்றச்சாட்டிற்குப் பதில் ... 299
2. இஸ்லாமை வாழவைத்தவர்கள் ... 300
3. பசி வந்துவிட்டால்...... ... 302
4. மதத்தைக் காப்பது எது? ... 303
5. ‘ரங்கிலா ரசூல்’ ... 307
6. முஸ்லிம்களுக்குச் சலுகையா? ... 311
7. ஏராளமான என் முஸ்லிம் நண்பர்களுக்கு ... 314
8. நிந்தனைப் பிரசாரம் ... 317
9. நான்கு கேள்விகள் ... 319
10. நாம் என்ன செய்வது? ... 320
11. ‘இளம் நெஞ்சு’ ... 323
12. வகுப்புவாதப் பிரச்னை ... 325
13. அது அல்ல ... 326

பகுதி பத்து

**சமூகக் கலவரங்கள்**

1. கான்பூரும் அதன் படிப்பினையும் ... 331
2. கணேச சங்கர் வித்தியார்த்தி ... 334
3. காங்கிரஸில் சேருங்கள் ... 334
4. ஏன் முடிவு செய்ய இயலவில்லை? ... 335
5. நமது தோல்வி ... 337

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 6. | அதிகாரத்தின் நிழலுக்கு ஆசை! | ... | 340 |
| 7. | நம்பிக்கை குன்றவில்லை | ... | 343 |
| 8. | வேண்டியதைச் சிறுபான்மையோர் எடுத்துக்கொள்ளட்டும் | ... | 344 |
| 9. | தற்சோதனை செய்ய வேண்டுகோள் | ... | 347 |
| 10. | சில குற்றச்சாட்டுகள் | ... | 349 |


பகுதி பதினொன்று

## காங்கிரஸ் அரசாங்க ஆட்சியில்


| | | | |
|---|---|---|---|
| 1. | ராணுவமா, நீதியா? | ... | 353 |
| 2. | சமாதானப் படையின் தகுதிகள் | ... | 354 |
| 3. | ஹிந்து–முஸ்லிம் அடிதடி | ... | 357 |
| 4. | சிந்து மாகாணக் கலகங்கள் | ... | 358 |
| 5. | சிந்து மக்களின் சோகம்—1 | ... | 360 |
| 6. | சிந்து மக்களின் சோகம்—2 | ... | 364 |
| 7. | சிந்து காங்கிரஸ்வாதிகளின் கடமை | ... | 365 |
| 8. | சிந்துவில் பொருள் சேதம் | ... | 365 |
| 9. | சிந்து ஹிந்துக்கள் | ... | 368 |
| 10. | மேலும் அவதூறு | ... | 370 |
| 11. | நோவாகாலி ஹிந்துக்களுக்கு ஆலோசனை | ... | 372 |
| 12. | எனது நிலை | ... | 375 |
| 13. | வீண் மனக் குழப்பம் | ... | 377 |
| 14. | திகைக்க வைக்கும் நிலைமை | ... | 378 |
| 15. | கலகங்களில் அகிம்சை நெறி | ... | 381 |
| 16. | நான் கடவுளின் தூதனா? | ... | 383 |
| 17. | பெரும்பான்மை என்ற கட்டுக்கதை | ... | 385 |
| 18. | தேசீய ராணுவமே காங்கிரஸ் | ... | 389 |
| 19. | ஊசலாட்டம் ஓய வேண்டும் | ... | 390 |
| 20. | சமூக நட்பின் பொருள் | ... | 392 |
| 21. | ஒற்றுமையும் நீதியும்—1 | ... | 393 |
| 22. | ஒற்றுமையும் நீதியும்—2 | ... | 395 |
| 23. | கருத்துக்கள் வேறுபடும் | ... | 397 |
| 24. | எனக்குத் தெரியவில்லை! | ... | 401 |
| 25. | இஸ்லாம் இறைவன் அருளியதா? | ... | 403 |
| 26. | முஸ்லிம்களுக்கு எதிராகப் பலாத்கார உபயோகம் | | 404 |
| 27. | ஜனுப் ஜின்னுவிற்குப் பதில் | ... | 406 |
| 28. | கான்பகதூரின் கடிதம் | ... | 408 |
| 29. | ஓர் ஆங்கிலேயரின் யோசனை | ... | 412 |
| 30. | பிரிவினையும் முஸ்லிம் அல்லாதவர்களும் | ... | 414 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 31. | தீண்டாமையின் சாபம் ... | 414 |
| 32. | பாகிஸ்தானும் அரசியல் நிர்ணய சபையும் ... | 416 |
| 33. | பாகிஸ்தானும் அகிம்சையும் ... | 418 |
| 34. | பாகிஸ்தான் அமைதியைக் கொடுத்துவிடாது ... | 419 |
| 35. | ஹிந்து—முஸ்லிம் புதிர் ... | 421 |
| 36. | ஜனுப் ஜின்னுவிற்கு வேண்டுகோள் ... | 422 |
| 37. | விஷம் நிறைந்த பதில் ... | 423 |
| 38. | சுழலும் ஆட்சி ... | 424 |
| 39. | முஸ்லிம் லீகின் முட்டுக்கட்டை ... | 425 |
| 40. | முதலில் இங்கிலீஷ்ஸ்தானை அகற்றுவோம்! ... | 428 |


பகுதி பன்னிரண்டு

## சுதந்திரத் தருவாயில்


| | | |
|---|---|---|
| 1. | இ. தே. சே. யில் சமூக ஒற்றுமை ... | 431 |
| 2. | புனித வாரம் ... | 434 |
| 3. | ஒரு புனித யாத்திரை ... | 435 |
| 4. | பெருமையை இழந்துவிட்டது ... | 437 |
| 5. | மதத்தின் தினுசுகள் ... | 439 |
| 6. | அகமதாபாத்தில் படுகொலைகள் ... | 440 |
| 7. | தனக்குத் தானே பரிகாரம் தேடுக ... | 442 |
| 8. | கொலைக்கு நஷ்ட ஈடு ... | 444 |
| 9. | குதூகலப்படும் நேரம் அல்ல ... | 445 |
| 10. | சுதந்திரக் கொண்டாட்டங்கள் ... | 448 |
| 11. | அந்தக் காலம் வருமா? ... | 449 |
| 12. | சில கேள்விகளுக்குப் பதில் ... | 452 |
| 13. | இருண்டு வரும் நிழல் ... | 455 |
| 14. | கருணையின் செயல் ... | 456 |
| 15. | "கருணை மழையாக வந்து பொழிக" ... | 457 |
| 16. | காலித்தனத்தின் ஆவேசம் ... | 459 |
| 17. | ஹிந்து தேநீர், முஸ்லிம் தேநீர்! ... | 460 |
| 18. | அதிர்ச்சி தரும் வெட்கக்கேடு ... | 461 |
| 19. | ஒரே மாதிரியான உடை பரிகாரமாகுமா? ... | 463 |
| 20. | சாவில் தழுவினர் ... | 464 |
| 21. | முஸ்லிம் லீகுக்கு ஒரு வார்த்தை ... | 465 |
| 22. | சரியான நேரப் பேட்டி ... | 467 |
| 23. | இஸ்லாமுக்கு விரோதமானது ... | 469 |
| 24. | பலவந்த மணம், மத மாற்றம் ... | 474 |
| 25. | இருளடைந்த தீபாவளி ... | 477 |

எண் பக்கம்

பகுதி பதின்மூன்று

## கலவரத் தீயை அணைக்க யாத்திரைத் தவம்


| | | | |
|---|---|---|---|
| 1. | மங்கலான நம்பிக்கை ஒளிக் கதிர் | ... | 480 |
| 2. | ஒரு மனக் குழப்பம் | ... | 482 |
| 3. | நோவாகாலி யாத்திரை | ... | 489 |
| 4. | சமாதானத்திற்குக் காந்திஜி பதில் | ... | 495 |
| 5. | வாரக் கடிதம் | ... | 500 |
| 6. | மனச்சாட்சிக்குக் கோரிக்கை | ... | 511 |
| 7. | அச்சமின்மை போதனை | ... | 513 |
| 8. | வீரம் இன்றியமையாதது | ... | 520 |
| 9. | கடவுளையே நம்புங்கள் | ... | 521 |
| 10. | மதத்தின் சாரம் | ... | 522 |
| 11. | ஸ்ரீராம்பூர் நாட்குறிப்பு | ... | 525 |
| 12. | இனம் பெறுவது இழுக்கு | ... | 528 |
| 13. | நான் மேற்கொண்டிருக்கும் பணி | ... | 534 |
| 14. | இருளில் தவிக்கிறேன் | ... | 535 |
| 15. | ஒன்றுபட்டு வேலை செய்யுங்கள் | ... | 537 |
| 16. | கடவுளுக்குச் சேவை | ... | 538 |
| 17. | கடவுளே காப்பார் | ... | 540 |
| 18. | யாத்திரையின் நோக்கம் | ... | 541 |
| 19. | இரவுக்கு ஒரு கிராமம் யாத்திரை | ... | 544 |
| 20. | சில முஸ்லிம்களின் கேள்விகள் | ... | 545 |
| 21. | நபிகளும் கோஷா முறையும் | ... | 546 |
| 22. | மோசமான சகிப்பின்மை | ... | 547 |
| 23. | இரு சமூகங்களின் நண்பன் | ... | 548 |
| 24. | வாழ்க்கைக் கலை | ... | 550 |
| 25. | ஸ்ரீ ஜின்னாவின் புத்திமதி | ... | 552 |
| 26. | நபிகளின் சில உபதேச மொழிகள் | ... | 553 |
| 27. | முஸ்லிம் லீகர்களின் கேள்விகள் | ... | 554 |
| 28. | பிபி அம்துல் சலாமின் உண்ணாவிரதம் | ... | 559 |
| 29. | சாத்தியமில்லாத யோசனை | ... | 563 |
| 30. | சுதந்திர தினம் | ... | 565 |
| 31. | நடை யாத்திரை ஆரம்பம் | ... | 565 |
| 32. | விரிவான மதம் | ... | 566 |
| 33. | முஸ்லிம்களின் ஹிந்து பகிஷ்காரம் | ... | 568 |
| 34. | ஏன் இந்தக் குறுகிய புத்தி? | ... | 569 |
| 35. | உள்ளங்கள் ஒன்றுபட வேண்டும் | ... | 571 |
| 36. | முஸ்லிம் லீகும் அரசியல் நிர்ணய சபையும் | ... | 573 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 37. | எதிர்கால அரசியல் திட்டம் | ... | 575 |
| 38. | நான்கு கேள்விகள் | ... | 579 |
| 39. | மற்றும் பல கேள்விகள் | ... | 581 |
| 40. | அது மதம் அல்ல | ... | 585 |
| 41. | முஸ்லிம் தலைவரின் கூற்றுக்குப் பதில் | ... | 586 |
| 42. | சரமாரியான கேள்விகள் | ... | 588 |
| 43. | ஸ்ரீ அட்லியின் அறிக்கை | ... | 592 |

பகுதி பதினான்கு

## பீகார் யாத்திரை

| | | | |
|---|---|---|---|
| 1. | எது மனிதத் தன்மை? | ... | 593 |
| 2. | பீகாருக்கு வந்ததேன்? | ... | 595 |
| 3. | தகாத நடவடிக்கைகளும் பிராயச்சித்தமும் | ... | 597 |
| 4. | காமன் பண்டிகையை கொண்டாடுவது எப்படி? | | 599 |
| 5. | தியாகத்தின் இறுதி நிலை | ... | 601 |
| 6. | மதமும் அரசாங்கமும் | ... | 603 |
| 7. | ஹிந்துக்களின் கடமை | ... | 604 |
| 8. | மந்திர்களும் மசூதிகளும் | ... | 606 |
| 9. | தற்கொலை மனப்போக்கு | ... | 608 |
| 10. | உல்லாச யாத்திரை அல்ல | ... | 610 |
| 11. | என் இடைவிடாப் பிரார்த்தனை | ... | 611 |
| 12. | படுகொலைகளை அனுமதிக்கும் மதம் உண்டா? | | 612 |
| 13. | பகிஷ்காரத்திற்கு இடமேயில்லை | ... | 614 |
| 14. | அரசாங்கமும் ஈடுத் தொகையும் | ... | 615 |
| 15. | பிரார்த்தனைக்கு ஆட்சேபணை! | ... | 618 |
| 16. | உண்மையான ஹிந்துவின் கடமை | ... | 620 |
| 17. | எரிமலை அணைய வேண்டும் | ... | 622 |
| 18. | துவேஷ உணர்ச்சியும் வஞ்ச புத்தியும் | ... | 623 |
| 19. | வஞ்சம் கடவுளைச் சார்ந்தது | ... | 625 |
| 20. | வகுப்புவாதத் தீயில் மடிந்தால்... | ... | 628 |
| 21. | மீண்டும் பீகாருக்குப் புறப்பாடு | ... | 630 |
| 22. | உபநிடதமும் குரானும் | ... | 632 |
| 23. | காந்திஜி-ஜின்னா கூட்டு அறிக்கை | ... | 632 |
| 24. | வேண்டுகோள் வீணாயிற்று | ... | 634 |
| 25. | மதங்களின் ஆணி வேர் | ... | 635 |
| 26. | பாகிஸ்தான் என்றால் என்ன? | ... | 637 |
| 27. | வைஸ்ராயின் நேர்மை | ... | 639 |
| 28. | ஜின்னாவுடன் பேசியது தவறா? | ... | 640 |
| 29. | இப்போதே வெளியேறுங்கள் | ... | 641 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 30. | இரண்டு கேள்விகள் ... | 643 |
| 31. | ஹிந்து பகுதி, முஸ்லிம் பகுதி! ... | 644 |
| 32. | மிருக பலத்துக்கு விட்டுக் கொடுப்பதா? ... | 645 |
| 33. | காபிர்கள் யார்? ... | 646 |

பகுதி பதினைந்து

**பாகிஸ்தான் உண்மையாகியது!**

| | | |
|---|---|---|
| 1. | இனி பலாத்காரம் நின்றுவிடுமா? ... | 648 |
| 2. | 'உண்ணுவிரதம் இருப்பீர்களா?' ... | 650 |
| 3. | ஜனுப் ஜின்னுவின் கடமை ... | 651 |
| 4. | ஐக்கிய வங்காள முயற்சி ... | 652 |
| 5. | ஹிந்துக்களின் கடமை என்ன? ... | 653 |
| 6. | பிரிவினையில் சகோதர உணர்ச்சி ... | 654 |
| 7. | பட்டாணியர்ஸ்தான் ... | 656 |
| 8. | சுதந்திர மசோதா ... | 657 |
| 9. | நோவாகாலியிலிருந்து அழைப்பு ... | 658 |
| 10. | இந்தியா எல்லா இந்தியர்களுக்கும் தாயகம் ... | 659 |
| 11. | பயமின்றி வாழ வகை செய்ய வேண்டும் ... | 660 |
| 12. | சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு ... | 661 |

பகுதி பதினுறு

**வெறியைத் தணிக்க உண்ணுவிரதம்**

| | | |
|---|---|---|
| 1. | கல்கத்தாவில் கலவரத் தீ ... | 663 |
| 2. | ஆகஸ்டு 15 ... | 665 |
| 3. | காந்திஜியும் சுஹ்ரவார்தியும் ... | 666 |
| 4. | நாம் கடவுளின் சிப்பாய்கள் ... | 668 |
| 5. | வகுப்புத் தீயைத் தணிக்க உண்ணுவிரதம் ... | 669 |

பகுதி பதினேழு

**டில்லியில் பட்டினித் தவமும் பிறகும்**

| | | |
|---|---|---|
| 1. | 'நான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது' ... | 675 |
| 2. | அகதிகள் முகாம்களின் சுகாதார நிலை ... | 676 |
| 3. | அகதிகள் பிரச்னை ... | 677 |
| 4. | பைத்தியக்காரத்தனமே கோபம் ... | 679 |
| 5. | நடந்ததை மறந்துவிடுக ... | 680 |
| 6. | அரசாங்கங்கள், மக்கள் கடமை ... | 684 |
| 7. | யூனியனிலுள்ள முஸ்லிம்களுக்கு ... | 685 |
| 8. | மனச் சோதனை ... | 688 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 9. | ராஷ்டிரீய சேவா சங்கத்தினருக்கு | ... | 689 |
| 10. | கோபத்தை அடக்குக | ... | 692 |
| 11. | வீரத்துடன் இருங்கள் | ... | 694 |
| 12. | கடவுளே கதி என்றிருங்கள் | ... | 696 |
| 13. | அரசாங்கத்திற்கு வாய்ப்பை அளியுங்கள் | ... | 698 |
| 14. | யூனியன் அரசாங்கத்தின் கடமை | ... | 699 |
| 15. | இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர் | ... | 701 |
| 16. | நம்பிக்கை பலவீனமாகிவிட்டதா? | ... | 702 |
| 17. | சகோதரப் படுகொலைகள் வேண்டாம் | ... | 703 |
| 18. | ஒரு புதிர் | ... | 705 |
| 19. | சமாதானத்திற்கு நிபந்தனைகள் | ... | 707 |
| 20. | பிறந்த நாள் வாழ்த்துக்கள் | ... | 709 |
| 21. | மனச்சோர்வு இல்லை | ... | 710 |
| 22. | அக்கிரமமான உதாரணம் | ... | 711 |
| 23. | முட்டாள்தனமான ஒரு எண்ணம் | ... | 712 |
| 24. | கசப்பான ஒரு கடிதம் | ... | 713 |
| 25. | பாகிஸ்தானில் சிறுபான்மையோர் | ... | 715 |
| 26. | அரசாங்கத்தை பலவீனமாக்கிவிட வேண்டாம் | | 717 |
| 27. | வெளியேறிவிட நிர்ப்பந்தமா? | ... | 718 |
| 28. | காஷ்மீரின் வேதனை | ... | 720 |
| 29. | மீண்டும் காஷ்மீர் | ... | 722 |
| 30. | புத்தித் தெளிவும் பைத்தியமும் | ... | 724 |
| 31. | காஷ்மீரும் ஜம்முவும் | ... | 725 |
| 32. | வழிகாட்டும் தீபம் காஷ்மீர் | ... | 727 |
| 33. | காஷ்மீர் போரின் விளைவு | ... | 729 |
| 34. | ஜுனாகாத், காஷ்மீர், ஹைதராபாத் | ... | 730 |
| 35. | ராம்பூர் சமஸ்தானம் | ... | 733 |
| 36. | உண்மையாயின் பயங்கரமானது | ... | 733 |
| 37. | சோமநாத் ஆலயத் திருப்பணி | ... | 734 |
| 38. | கத்தியவார் செய்திகள் | ... | 735 |
| 39. | சமூகங்களைப் பற்றிக் காங்கிரஸ் கொள்கை | ... | 738 |
| 40. | வர்த்தகத்தில் வகுப்புவாதம் கூடாது | ... | 740 |
| 41. | வகுப்புவாத வர்த்தக சபைகள்! | ... | 740 |
| 42. | கடத்தப்பட்ட பெண்கள் | ... | 742 |
| 43. | சிந்துவிலுள்ள ஹரிஜனங்கள் | ... | 745 |
| 44. | யூனியன் முஸ்லிம்களின் கடமை | ... | 746 |
| 45. | யூனியன் முஸ்லிம்களுக்குப் புத்திமதி | ... | 750 |
| 46. | பஞ்சாயத்தின் கடமை | ... | 751 |
| 47. | எல்லாவற்றிற்குமாக உண்ணாவிரதம் | ... | 752 |
| 48. | டில்லி யாருக்குச் சொந்தம்? | ... | 755 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 49. | டில்லியின் பரிதாப நிலை | ... | 757 |
| 50. | சைத்தானை அப்புறப்படுத்துங்கள் | ... | 761 |
| 51. | என் கனவு | ... | 763 |
| 52. | உண்ணாவிரதத்திற்குத் தகுதியான பதில் | ... | 766 |
| 53. | உள்ளம் சுத்தமாக வேண்டும் | ... | 768 |
| 54. | சமூகப் பிரதிநிதிகளின் பிரதிக்ஞை | ... | 770 |
| 55. | சந்தோஷ தினம் | ... | 776 |
| 56. | டில்லி உண்மையாக நடந்துகொண்டால்...... | ... | 779 |
| 57. | பிரார்த்தனையில் வெடிகுண்டு | ... | 782 |
| 58. | 'என்னை விடுதலை செய்யுங்கள்' | ... | 787 |
| 59. | பூரண சுயேச்சை தினம் | ... | 789 |
| 60. | பிஷாவரில் பாதகச் செயல்கள் | ... | 790 |
| 61. | வெறியர்களின் அட்டூழியங்கள் | ... | 792 |
| 62. | உத்தமரின் உயிர்த் தியாகம் | ... | 793 |


## பின் சேர்க்கைப் பகுதி


| | | | |
|---|---|---|---|
| 1. | உண்ணாவிரதத்தைப் பற்றிய கருத்துக்கள் | ... | 794 |
| 2. | சமூக ஒற்றுமை மகாநாடு | ... | 797 |

# படங்களின் விளக்கம்


பக்கம்

முகப்புப் படம்-மகாத்மா

1. உலகப் பிரசித்தமான கராச்சி வழக்கு விசாரணை எதிரிகளான ஷவுகத் அலி, சாரதாபீட சங்கராச்சாரியார், முகமது அலி, டாக்டர் கிச்சுலு ... 64

2. 1924-டிசம்பர் 31-ஆம் தேதி பம்பாயில் நடந்த முஸ்லிம் லீக் மகாநாட்டில் காந்திஜி. பக்கத்தில் இருப்பவர்கள்-பண்டித மோதிலால் நேரு, டாக்டர் கிச்சுலு, மௌலானா முகமதுஅலி, ஜனப் ஜின்னு, ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, ஷவுகத் அலி, ... 65

3. பெல்காம் காங்கிரஸில் காங்கிரஸ் தலைவர் ஸ்தானத்தை மௌலானா முகமது அலி காந்திஜியிடம் ஒப்படைக்கிருர் ... 224

4. காந்திஜியும் அப்பாஸ் தயாப்ஜியும்-1934 ... 225

5. எல்லைப்புற யாத்திரையின் போது கபார் கானுடனும் அவர் சகோதரர் டாக்டர் கான்சாகிபுடனும் காந்திஜி -1938, மே ... 336

6. வடமேற்கு எல்லைப்புறத்தில் உத்மன்ஜாயில் காந்திஜியும் அப்துல் கபார் கானும்-1938, மே ... 337

7. 1938 ஏப்ரல் 28-ஆம் தேதி பம்பாயில் ஜனப் ஜின்னுவின் வீட்டில் காந்திஜி-ஜின்னு சந்திப்பு ... 352

8. சிம்லாவில் வைஸ்ராய் மாளிகைக்கு காந்திஜி போகும் வழியில்-1945,-ஜூன் ... 353

9. கபார்கான் தலைமையிலிருந்த செந்தொண்டர்கள் என்ற குதாய் கித்மத்கார் தொண்டர்களுடன் காந்திஜி-1938 அக்டோபர் ... 360

10. பிரிட்டிஷ் மந்திரி சபை தூதுகோஷ்டித் தலைவர் லார்டு பெதிக் லாரென்ஸுடன் காந்திஜி-1946 ஏப்ரல் ... 361

11. காந்திஜி நோவாகாலி போகும் வழியில் குஷ்டியா ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் அங்கே கூடியிருந்த மக்களுக்குப் பேசுகிறார்-1946 நவ. 6–ஆம் தேதி ... 488

12. நோவாகாலியில் காந்திஜி படகில் சாந்த்பூருக்குப் போய்க் கொண்டிருக்கிறார்—1946, நவம்பர் ... 489

13. நோவாகாலியில் காந்திஜி ஒரு கிராமத்திலிருந்து மற்றோர் கிராமத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார். ஆயுதம்தாங்கிய போலீஸார் கூடப் போகின்றனர், ... 504

14. நோவாகாலியில் மூங்கில் தோப்புகளுக்கிடையே காந்திஜி வெறுங்காலுடன் போய்க்கொண்டிருக்கிறார் ... 505

15. நோவாகாலியில் கிராமவாசிகள் பலர் தம்முடன் வர காந்திஜி கிராமந்தோறும் நடந்தே சென்றார் ... 528

16. சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவிட்ட நோவாகாலி பெண்கள், காந்திஜியைக் கண்டு தங்கள் சோகக் கதைகளைக் கூறுகின்றனர் ... 529

17. உள்ளத்தில் வேதனை நிறைந்திருந்தும், நோவாகாலியில் தம்மைப் பார்க்க வரும் கிராமவாசிகளுக்கு அன்புடன் வணக்கம் தெரிவித்தார் காந்திஜி ... 544

18. நோவாகாலியில் உண்ணாவிரதமிருந்த அப்துஸ் சலாமுக்கு அவ்விரத முடிவில் காந்திஜி ஆரஞ்சுப் பழரசம் கொடுக்கிறார்-1947, ஜனவரி, 20 ... 545

19. நோவாகாலியில் தட்டப்பாரா என்ற கிராமத்தில் படுநாசம் செய்யப்பட்டிருந்த இடத்தை காந்திஜி பார்க்கிறார்—1946 நவ. 12-ஆம் தேதி ... 592

20. பீகாரில் வகுப்பு வெறியினால் பாதிக்கப்பட்டிருந்த பேலா பகுதியை அப்துல் கபார்கானுடன் காந்திஜி சுற்றிப் பார்த்தார் 1947, மார்ச், 28 ... 593

21. காந்திஜியின் கடைசி உண்ணாவிரதத்தின்போது எடுத்த படம்-1948, ஜன. 17 ... 752

22. படுபாவி சுட்டுக் கொல்லுவதற்கு முதல் நாள், 1948, ஜனவரி 29-ஆம் தேதி பிரார்த்தனைக் கூட்டத்திற்கு காந்திஜி போய்க் கொண்டிருந்தபோது எடுத்த படம் ... 753

# சமூக ஒற்றுமை

பகுதி ஒன்று

## ஆரம்ப காலங்களில்

ஹிந்து – முஸ்லிம் ஒற்றுமையைக் குறித்துத் தமது பொது வாழ்க்கையின் ஆரம்ப காலம் முதற்கொண்டே, தென்னுப்பிரிக்காவில் இருந்த சமயத்திலிருந்தே காந்திஜி அதிக அக்கறை கொண்டிருக்கிறுர். அவர் எழுதிய 'சுய சரிதை'யில் இதைக் குறித்து வருமாறு குறிப்பிட்டிருக்கிறுர்:

"ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உண்மையான நட்பு இல்லை என்பதைத் தென்னுப்பிரிக்காவில் வெகு காலத்திற்கு முன்பே நான் தெரிந்து கொண்டேன். ஒற்றுமைக்குத் தடையாக இருப்பவைகளைப் போக்குவதற்குக் கிடைக்கும் எந்த வாய்ப்பையும் நான் தவற விட்டுவிடுவதில்லை. முகஸ்துதியாகப் பேசியோ, சுயமதிப்புக்குப் பாதகமான வகையில் நடந்தோ ஒருவரைச் சமாதானப்படுத்திக்கொண்டு விடுவது என்பது என் சுபாவத்திற்கே விரோதமானது. ஹிந்து – முஸ்லிம் ஒற்றுமை விஷயத்தில்தான் என்னுடைய அகிம்சை கடுமையான சோதனைக்கு உள்ளாக நேரும் என்பதை, எனது தென்னுப்பிரிக்க அனுபவம் எனக்குத் தெளிவாகக் காட்டியிருந்தது. அதோடு இவ்விஷயமே என்னுடைய அகிம்சையின் சோதனைக்கு மிக விஸ்தாரமான இலக்கை அளிக்கிறது என்றும் அறிந்திருந்தேன். இந்த உறுதியே இன்னும் இருந்து வருகிறது. என் வாழ்நாளின் ஒவ்வொரு கணத்திலும் கடவுள் என்னைச் சோதித்து வருகிறுர் என்பதையும் உணருகிறேன்......"

['மகாத்மா காந்தி நூல்கள்' – *3*-ஆம் தொகுப்பு, *565-570*-ஆம் பக்கங்களில் வெளியாகியிருக்கும் 'ஒற்றுமையில் ஆர்வம்' என்ற அத்தியாயத்தில் காண்க.]

சமூக ஒற்றுமையில் காந்திஜிக்கு இருந்த ஆர்வம் தென்னுப்பிரிக்காவில் அவர் இருந்த காலத்திலேயே பிறந்துவிட்டதால், இந்த ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்தி அந்தக் காலத்தில் அவர் எழுதிய கட்டுரைகளில் சில இப்பகுதியில் கொடுக்கப்படுகின்றன.

# 1

# கஷ்டத்தின் உபயோகங்கள்

தென்னாப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் இந்தியர், காலனி நாடுகளில் விதிக்கப்பட்டிருக்கும் தடைகளைக்கொண்டு கவனித்தால், அநேகமாக மிகக் கடுமையான தடைகளைக்கொண்டே எல்லாப் பக்கங்களிலும் முடக்கப்பட்டிருக்கின்றனர். மிகவும் தவறாகவும் எண்ணப்பட்டு வருகின்றனர் என்பதிலும் சந்தேகமில்லை. இப்பத்திரிகையைக் கவனமாகப் படித்து வரும் வாசகர்கள், மேலே சொன்ன இரு விஷயங்களுக்கும் ஏராளமான ருசுக்கள் இருக்கின்றன என்பதைக் கவனித்திருப்பார்கள். இந்தக் கஷ்டமான நிலைமைகளிலிருந்து சில படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். "கஷ்டங்களின் உபயோகங்கள் இனிமையானவை; புத்திசாலிகளுக்கு அவை போதிப்பவைகளாகும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் கஷ்டங்களிலிருந்து நாம் ஏதாவது பாடங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறோமா என்பதைப் பார்ப்போம்.

இந்தியாவில், அங்கே வசிக்கும் பல இனத்தினரிடையே மோசமான பிரிவினைகள் இருந்து வருகின்றன. உதாரணமாக, தமிழர்கள், வடக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள்—இங்கே அழைக்கப்படுகிற மாதிரி 'கல்கத்தாக்காரர்கள்'—பாஞ்சாபிகள், குஜராத்திகள் என்றெல்லாம் பாகுபாடுகள் இருக்கின்றன. மதங்களை ஒட்டி முஸ்லிம்கள், ஹிந்துக்கள், பார்ஸிகள் முதலியவர்களும் இருக்கிறார்கள். ஹிந்துக்களிடையிலோ, பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வணிகர்கள் முதலியோர் இருக்கிறார்கள். இந்தப் பிரிவினைகளையும், வித்தியாசங்களையும், பத்திரப்படுத்தி வைத்திருக்க வேண்டிய விலையுயர்ந்த சரக்குகளாக மதித்து இவ்வளவு தூரதிசைக்கும் அவற்றை நாம் கொண்டு வந்துவிடுவதானால், இந்தச் சரக்கே நம்மை ஒவ்வோர் கட்டத்திலும் தடுத்து நாம் முன்னேற முடியாதபடிச் செய்துவிடும் என்பது நிச்சயம். பிரிட்டிஷ் இந்தியருக்குத் தென்னாப்பிரிக்கா பெரியதோர் பூரி* க்ஷேத்திரமாக இருக்க வேண்டும். பூரியில் எல்லா வேற்றுமைகளும் ஒழிக்கப்பட்டு சமமாக்கப்படுகின்றன. நாம் தமிழர்கள், கல்கத்தாக்காரர்கள், முகமதியர்கள், ஹிந்துக்கள், பிராம்மணர்கள், வணிகர்கள் என்று இருக்கக்கூடாது. எல்லோரும் பிரிட்டிஷ் இந்தியர் என்றுதான் இருப்பதோடு, அழிந்தாலும் எல்லோரும் அழிய வேண்டும்; கரை சேர்ந்தாலும் எல்லோரும் கரை சேர வேண்டும். பலதரப்பட்ட பிரிவினரின் நலனும் ஒன்றாகவேதான் இருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. அப்படியிருக்கும்

---

"ஒரிஸ்ஸாவிலிருக்கும் பிரபல க்ஷேத்திரமான பூரி ஜகன்னாத்தையே காந்திஜி இங்கே குறிப்பிடுகிறார். அங்கே ஜகன்னாதரைத் தரிசிப்பதில் எந்தவிதமான சாதி வித்தியாசமும் காட்டப்படுவதில்லை. எல்லோரும் சம உரிமையுடன் தரிசிக்கலாம்.

போது, இது போன்ற பிரிவினைத் துவேஷங்களையெல்லாம் விட்டொழித்துவிட வேண்டியது நமது கடமை என்பது தெளிவாகும். இதுதான் முதலில் செய்ய வேண்டிய காரியமாவதோடு, அத்தியாவசியமான காரியமும் ஆகும். இவ்வழியில் நம் மக்கள் அதிக தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை நன்கறிவோம். என்றாலும், நம் கஷ்டங்களிலிருந்து நாம் படிப்பினைகளைப் பெறும்போது, இது பற்றி ஓர் எச்சரிக்கையைச் செய்யாமல் செல்லுவது பூர்த்தியானதாகாது.

ஒவ்வொரு இந்தியரும், தனக்கும் தன் குடும்பத்திற்கும் உண்ணவும் உடுத்தவும் போதுமானது இருக்கிறது என்பதோடு திருப்தியடைந்து இருந்துவிடக்கூடாது. தன் சட்டைப் பையில் ஆழமாகக் கையைப் போட்டு எடுத்துப் பொது நன்மைக்குக் கொடுக்கவும், ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும். தென்னாப்பிரிக்காவிலுள்ள நம் சமூகம் இதிலும் தன் கடமையைச் செய்யத் தவறிவிட்டதில்லை என்பதையும் அறிவோம். என்றாலும், இன்னும் அதிகமாகச் செய்திருக்கலாம் என்று தயங்காமல் கூறுவோம்.

கஷ்டமான சந்தர்ப்பங்களில் இருக்கும்போது ஒருவரிடம் அதிக முக்கியமாக இருக்க வேண்டிய தன்மைகள், தீரமும் பொறுமையுமாகும். தென்னாப்பிரிக்காவிலுள்ள ஆங்கிலேயர்களிடம் இவ்விரு குணங்களும் சிறந்த வகையில் இருந்தன என்பதைக் காணும் சிறந்த வாய்ப்பு நமக்குச் சென்ற யுத்தத்தின்போது கிடைத்தது. லேடி ஸ்மித்தின் முற்றுகையும், பின்னால் அது மீட்கப்பட்டதன் சரித்திரமும், தோல்வியையே காணாத வீரத்திற்கு என்றுமே உதாரணமாக இருந்து வரும்.* அப்போரில் காயம் பட்டோரைத் தூக்கிச் செல்லும் சேவையில் ஈடுபட்டிருந்த அநேக இந்தியர், காலன்ஸோவிலும், ஸ்பியன் காப்பிலும் நடந்த கடுமையான போரில் நேரில் கண்ட காட்சிகளை இப்பொழுதும் நினைவுபடுத்திக்கொள்ள முடியும். பயங்கரமான கஷ்டங்கள் எவ்வளவோ இருந்தும், மோசமான தோல்விகள் ஏற்பட்டும், அவர்கள் விட்டுக்கொடுத்துப் பின்வாங்கிவிடவில்லை. சமாளிப்பது முடியாத காரியம் என்று ஜெனரல் புல்லரும் எண்ணிவிட வேண்டிய சமயம் ஒன்று வந்துவிட்டபோது, ஜெனரல் புல்லரிடம் ஒரே ஒரு ஆள் மாத்திரமே மிச்சமாக இருக்கும் நிலை வரும்வரையில் அவர் விட்டுக் கொடுத்துவிடவே கூடாது என்று சண்டைகார் வீரரிடமிருந்து தந்தி மூலம் செய்தி பறந்தது என்பதை உலகம் அறியும். இதன் பிரமாதமான பலனை நாம் எல்லோரும் அறிவோம். நம் போராட்டம், அவ்வளவு கஷ்டமானதோ, வீரமானதோ அல்ல. என்றாலும் அப்போர், தீரத்திலும், பொறுமை

*போயர் யுத்தத்தில் 'லேடி ஸ்மித் என்ற இடம் முற்றுகையிடப்பட்டதையும், அதை விடாமுயற்சியுடனிருந்து பிரிட்டிஷ் படைகள் மீட்டதையுமே இங்கே காந்திஜி குறிப்பிடுகிறார். இந்த விவரத்தைக் குறித்துக் காந்திஜி விரிவாகக் கூறியிருப்பதை 'மகாத்மா காந்தி நூல்கள்' – முதல் தொகுப்பில் 94–103–ஆம் பக்கங்களில் காண்க.

யிலும் நமக்கும் போதிப்பதாகிறது. ஆகவே, அதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். லேடி ஸ்மித்தில் முற்றுகைக்குள் சிக்கிக்கொண்டவர்கள் மிகச் சிலரே. அந்தச் சிலரை மீட்டு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு எவ்வளவோ பலத்தையும், எவ்வளவோ ரத்தத்தையும், நேரத்தையும் செலவிடுவது பெரியதல்ல என்று கருதப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, நமது சுதந்திரத்தை அடைவதற்கான போரில் நாம் ஈடுபட்டிருக்கும்போது இடையில் ஏற்படும் துரதிருஷ்டங்களைச் சமாளித்துக் கொள்ளுவதற்கு வேண்டிய திடமும் பொறுமையும் நமக்கு அதேபோல இருக்க வேண்டும் என்று நாம் எண்ணவேண்டாமா? "மனிதனுக்கு உண்மையான உரைகல்லாக இருப்பவை அவனுக்கு நேரும் கஷ்டங்களே. அவைகளுக்காக அழுதுகொண்டிருப்பதனால் அவற்றின் தீமைகளை யாரும் போக்கிவிட முடியாது" என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆனால், இதைவிட இன்னும் சில குணங்களும் நமக்கு இருக்க வேண்டும். எல்லாவற்றையும் ஒருவித வேதாந்த அசிரத்தையுடன் எண்ணிக்கொண்டுவிடும் போக்கு, ஒரு தேசிய இனம் என்ற வகையில் நம்மிடம் இருந்து வருகிறது. அன்றாட வாழ்க்கை வசதிகளைக் குறித்து அவ்வளவாக நாம் கவனிப்பதில்லை. இதை நம் மீது ஒரு குற்றச்சாட்டாகவே பாதிரிமார்கள் சொல்லி வருகிறார்கள். என்றாலும், இத்தகைய மனப்போக்கை நாம் அதிகமாகப் போற்றியும் வருகிறோம். எனினும், தென்னாப்பிரிக்காவுக்கு இவ்விதப் போக்கு பொருத்தமானது அல்ல. பண லாபத்திற்கு என்று பாடுபடாமலிருப்பவர்களுக்கு இவ்வித மனோபாவம் இருப்பது ஒரு பெருமை. ஆனால், பணக்காரர்களாகிவிட வேண்டும் என்பதற்காகவே அல்லும் பகலும் பாடுபட்டுக்கொண்டிருப்போருக்கு, இவ்வித மனோபாவம் இருப்பதென்பது கொஞ்சமும் பொருந்தாது. தங்கள் செல்வ நிலையைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர வேறு விருப்பத்திற்காகத் தென்னாப்பிரிக்காவுக்கு வந்திருப்பவர்கள் பலர் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. இவ்வாறு இருக்கையில், நிலைமைக்கு ஏற்ற இயல்பான வழியில் நாமும் போய் நமது வருவாயில் ஒரு பகுதியைச் செலவிட முன்வருவதுதான் அதிக வேதாந்தமான காரியமாக இருக்கக்கூடும். வருடமெல்லாம் செலவு என்பது எதுவுமே இல்லாமல் இந்தியர் வாழ்ந்துவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கும் அப்பொழுது வழியில்லாது போகும். அதே சமயத்தில் இன்பங்களிலேயே திளைத்துக் கொண்டிருக்க, ஒரு சமூகம் என்ற வகையில் நாம் முற்பட வேண்டும் என்று நாம் நினைத்துவிடவும் கூடாது. 'ரோமாபுரியில் ரோமானியர்களைப் போன்றே நாமும் இருந்தாக வேண்டும்' என்பதையே நாம் இங்கே வற்புறுத்த விரும்புகிறோம். அதே சமயத்தில் அதில் சிரத்தையில்லாத மனோநிலையும் நமக்கு இருந்து வர வேண்டும். அத்தகைய வசதிகள் நமக்கு இருந்தால் நல்லதே; இல்லை என்றால் அதுவும் நல்லதே.

ஆனால், பிறரால் மோசமாக நடத்தப்பட்டுவரும் ஒரு சமூகத்திற்கு முக்கியமாக இருந்தாக வேண்டிய அருங் குணம் அன்பும் தயாளமுமாகும். மனிதர்கள் சந்தர்ப்பத்தின் சிருஷ்டிகளேயன்றி வேறொன்றுமில்லை என்பது தெரிந்த விஷயம். எந்த நிலைமையில் மனிதர்கள் இருக்கிறார்களோ அந்த நிலைமையின் ஆதிக்கத்திற்குட்பட்டு, தாங்களும் அறியாமலேயே நியாயமில்லாத காரியங்களையும் செய்துவிடுவார்கள். அவ்விதமிருக்கையில், நாம் செய்துகொள்ளும் முடிவுகளில் நாம் தாராளத் தன்மையுடன் இருக்க வேண்டியது அவசியமல்லவா? நாம் தெய்வ நம்பிக்கையுள்ளவர்கள். எதிர்த்துக் கெடுதல். செய்வதில்லை. தீயது செய்தவருக்கும் நல்லதே செய்வது என்ற தத்துவத்தை நாம் கொண்டவர்கள். நமது எண்ணங்கள், நாம் யாரை நினைக்கிறோமோ அவர்களின் செயல்களிலும் பிரதிபலிக்கின்றன என்ற உண்மையிலும்கூட நாம் திடமான நம்பிக்கையுள்ளவர்கள். நமது அன்றாட வாழ்க்கையில் அத்தகைய சம்பவங்களை நாம் அடிக்கடி பார்க்கிறோம். ஒருவன் செய்துவிடும் பெரும் குற்றம், அவனுடைய முகத்தில் அப்படியே பதிந்து போய்விட்டதைப் போன்று அவன் முகத்தையே மாற்றிவிடுவதையும் பார்க்கிறோம். அதே போல ஒருவர் செய்யும் நற்காரியம், மேலே சொன்னதற்கு நேர்மாறான சாயலை அவரிடம் உண்டாக்கிவிடுகிறது. இவ்விதம் ஒருவர் செய்யும் காரியத்தைப் பொறுத்து அவர், மக்களின் கவர்ச்சியையோ, வெறுப்பையோ பெறுபவராகிறார். ஆகையால், நம்மிடம் அக்கிரமமாக நடந்துகொள்ளுகிறார்கள் என்று நாம் கருதுகிறவர்களுக்குக்கூட, தீமையை எண்ணாமலிருக்க வேண்டியது நமது தலையாய கடமையாகிறது. நமக்கு நல்லதைச் செய்தவர்களிடம் நல்லவர்களாக நாமும் நடப்பது என்பதில் பிரமாதமான சிறப்பு எதுவும் இல்லை. கொடிய குற்றவாளிகளாக இருப்பவர்கள்கூட இதைச் செய்கின்றனர். ஆனால், எதிரிக்கும் நல்லதையே செய்வதில்தான் பெருமை இருக்கிறது. அந்தச் சாதாரண விஷயத்தை நாம் எப்பொழுதும் மனத்தில் வைத்திருப்போமாயின், நாம் எண்ணுவதைவிட இன்னும் அதிக சீக்கிரத்தில் நமக்கு வெற்றி கிடைக்கும் என்று கருதுகிறோம். இக்கட்டுரையில் லேசாகச் சொல்லியிருக்கும் ஒவ்வோர் விஷயத்தைக் குறித்தும் காலக்கிரமத்தில் விரிவாக எழுத முடியும் என்றும் நம்புகிறோம். இப்போதைக்கு, இங்கே நாம் கூறியிருப்பவைகளைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்குமாறு நம் தேச மக்களைக் கேட்டுக்கொள்ளுவதே போதும். அவர்கள் எச்சரிக்கையுடனும் இருந்து வர வேண்டும். இல்லையானால், இப்பொழுதே புயலில் சிக்குண்டவர்களாக இருக்கும் நம்மைப் பெரும் அலை வந்து மூழ்கடித்துவிடும். அச்சமயம் நாம் எதைச் செய்தாலும், அது காலங் கடந்ததாகிவிடும்.

— 'இந்தியன் ஒபீனியன்' - 20—8—1903

# 2

# ஆரம்ப கால மத சமரச முயற்சி

*[1905 மார்ச்சில் காந்திஜி தென்னப்பிரிக்கா ஜோகன்னஸ்பர்க்கில் ஹிந்து சமயத்தைக் குறித்து அங்கிருந்த பிரம்மஞான சங்கத்தின் ஆதரவில் நான்கு பிரசங்கங்களைச் செய்தார். 1905 மார்ச் 4-ஆம் தேதி அவர் தமது முதல் பிரசங்கத்தைச் செய்தார். அதில் ஹிந்து சமயத்தின் தத்துவங்களையும், தன்னல மறுப்பே அச்சமயத்தின் முக்கியமான கோட்பாடு என்றும் எடுத்துக் காட்டினர். இதற்கு உதாரணமாக, ஆற்காட்டில் பிரிட்டிஷ் படைகள் முற்றுகையிடப்பட்டுவிட்ட போது ஹிந்து சிப்பாய்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட அரிசிச் சோற்றை ஆங்கில சிப்பாய்களுக்குக் கொடுத்துவிட்டு, வடித்த கஞ்சியை தாங்கள் குடித்துக்கொண்டு உயிர் வாழ்ந்த வரலாற்றைக் குறிப்பிட்டார். அடுத்து மார்ச் 11-ஆம் தேதி காந்திஜி செய்த பிரசங்கத்தில் ஹிந்து-முஸ்லிம் சமயங்களுக்குள் ஒருமைப்பாட்டை உண்டாக்கிவிட கபீர் காலத்திலேயே முயற்சி நடந்ததைப் பற்றிக் கூறினர். இப்பிரசங்கத்தில் காந்திஜியின் சர்வ சமய சமரச நோக்கு தெளிவாவதால், அப்பிரசங்கத்தைக் கீழே கொடுக்கிரேம்:]*

புத்தரின் உபதேசங்களின் காரணமாக ஹிந்து சமயத்திற்குள்ளேயே அநேக மாறுதல்களெல்லாம் ஏற்பட்ட பிறகு, ஹிந்து சமயத்தில் விக்கிரக ஆராதனையே பெரும்பாலும் இருந்து வரலாயிற்று. இதில் தவறு இல்லை என்பதைக் காட்டுவதற்காக எத்தனையோ சமாதானங்கள் கூறப்பட்டன. ஆயினும், ஹிந்துக்கள் மரத்தையும் கல்லையும் கும்பிடுகிறவர்களாகவே தோன்றினர் என்பது மறுக்க முடியாதது. ஹிந்து தத்துவ ஞானிகள், புனிதமான பரமாத்மனே கடவுள் என்று கண்டு அதை வணங்குவதை எளிதாகக்கொண்டனர். சர்வம் கடவுள் மயம் என்று அவர்கள் கொண்ட கொள்கை, அவர்களுக்கு அதிக உயர்வை அளித்தது. அதே போல இந்த உண்மையை அறியாத பாமர மக்களை இது மிகத் தாழ்ந்த நிலைக்கும் கொண்டு போய்விட்டது. கடவுளைப் புனிதமான பரமாத்மனுக உணர்ந்துகொள்ள பக்குவமடையாத மனத்தினல் முடியாத போது, கடவுளின் பல்வேறு ரூபங்களையும் வழிபடுவது அம்மனத்திற்கு எளிதானதாக இருந்தது. சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் மூலமாகவும் அநேகர் கடவுளை வழிபடலாயினர். பலர், மரத்தையும் கல்லையும் வைத்து வழிபடுகிருர்கள். தத்துவ ஞானங்கொண்ட ஹிந்து சமயத்திற்குச் சகிப்புத் தன்மை இருந்ததால் இத்தகைய வழிபாட்டு முறைகளையும் சகித்துக் கொண்டது. இவ்விதம் ஹிந்து வாழ்க்கைச் சக்கரம், அரேபியப் பாலைவனத்தில் புதியதோர் சக்தி தோன்றிய வரையில், ஆனந்த

மாகவே போய்க்கொண்டிருந்தது. அந்தப் புதிய சக்தி, கருத்துக்களில் புரட்சிகரமான மாறுதல்களை உண்டாக்கியதோடு நிரந்தரமான சுவட்டையும் பதியவைத்துவிட்டது. முகமது, சிறுவராக இருந்த போதே, தம்மைச் சுற்றிலும் மக்கள் விக்கிரகங்களை வணங்கி வருவதையும், குடி போன்றவைகளில் திளைத்து வருவதையும் கண்டுவந்தார். அவருக்கு வயதாகவாக இவற்றின் மீது அவருக்குக் கோபமும் அதிகமாயிற்று. யூத தருமம் தாழ்ந்து போய், கிறிஸ்தவமும் மோசமான நிலைக்குப் போய்க்கொண்டிருந்ததையும் அவர் கண்டார். மோஸஸூம் கிறிஸ்துவும் எண்ணியதைப் போன்றே, தாம் உயர்ந்ததோர் லட்சியத்திற்காகப் பிறந்திருப்பதாக முகமதுவும் கருதினர். உலகிற்குத் தமது உபதேசத்தைச் செய்வது என்று முடிவு செய்துகொண்டார். தமது குடும்பத்தினரையே முதலில் தமது கொள்கைக்கு மாற்றிக் கொண்டார். வாளின் பலத்தைக்கொண்டதே இஸ்லாம் மதம் என்று எண்ணுகிறவர்கள் இருக்கலாம். நான் அப்படி நம்புகிறவன் அல்ல. வாஷிங்டன் இர்விங், இஸ்லாமைக் குறித்துத் தாம் எழுதியிருக்கும் நூலில், ஒரு பொருத்தமான கேள்வியைக் கேட்டிருக்கிறார். "இஸ்லாமுக்கு அதன் முதல் கட்டத்தில், வாளை உபயோகிப்பதற்கு ஆட்கள் எங்கே இருந்தார்கள்?" என்பது அவருடைய கேள்வி. முகமதியம் வெற்றி பெற்றதற்கு அதன் எளிமையும், மனிதருக்குக் குறைபாடுகளும் உண்டு என்பதை அது ஒப்புக்கொண்டதுமே முக்கியமான காரணங்கள் என்று வாஷிடன் இர்விங் நம்புகிறார். கடவுள் ஒருவரே; ஒரே ஒருவர் தான்; அவர் தூதரே தாம் என்று முகமது நபி உபதேசித்தார். மேன்மையை அடையும் சக்திக்குப் பிரார்த்தனை அத்தியாவசியம் என்றார் அவர். தம்மைப் பின்பற்றுகிறவர்கள் ஒன்று சேரும் படிச் செய்வதற்காக, ஆண்டுக்கு ஒரு முறை மெக்காவுக்கு யாத்திரை வர வேண்டும் என்றும் விதித்தார். முடிந்தவர்கள் அவ்வாறு யாத்திரை வர வேண்டும் என்றார். மக்கள் பணம் திரட்டுவார்கள் என்பதை ஒப்புக்கொண்டார். தம்மைப் பின் பற்றுகிறவர்கள், அப்படிச் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியை பக்தியுடன் தரும காரியங்களுக்காக ஒதுக்கி வைத்துவிட வேண்டும் என்றார். என்றாலும், எல்லோரும் சமத்துவமாக இருக்கும்படி செய்ய வேண்டும் என்பதுதான் இஸ்லாத்தின் முக்கியமான தருமம். இம்மதத்தில் சேருகிறவர்களெல்லோருக்கும், உலகத்தில் வேறு எந்தச் சமயமும் அளிக்காத வகையில், சமத்துவத்தை அது அளித்தது. ஆகையால், கிறிஸ்துவுக்கு 900 ஆண்டுகளுக்குப் பின்னால், முகமதிய மதத்தைப் பின்பற்றியவர்கள் இந்தியாவின் மீது திடீரென்று தாக்கியபோது, ஹிந்து சமயம் திகைத்துப் போய்விட்டது. எல்லாவற்றையும் மிஞ்சிவிடக்கூடிய சக்தி இஸ்லாமுக்கு இருப்பதாகவும் தோன்றியது. சாதி வித்தியாசங்கள் மிகுந்து கிடந்த பொது மக்களுக்கு, சமத்துவம் என்ற தத்துவம் கவர்ச்சிகரமானதாக இல்லாதிருக்க முடியாது. இஸ்லாமிடமிருந்த இயல்பான இந்தப் பலத்துடன் வாளின் பலமும் சேர்ந்துகொண்டது. அப்போதைக்கப்போது

இந்தியாவின் மீது படையெடுத்து வந்த மத வெறியர்கள், மனத்தைக் கவர்ந்து மதம் மாற்ற முடியாதபோது, வாளின் பலத்தைக் கொண்டு மதம் மாற்றத் தயங்கவில்லை. அவர்கள் அநேகமாக இந்தியாவின் எல்லாப் பகுதிகளின் மீதும் படையெடுத்துச் சென்றூர்கள். விக்கிரகங்களையெல்லாம் உடைத்தார்கள். ஹிந்து சமயத்திற்கு ரஜபுத்திர வீரத்தின் உதவி இருந்தபோதிலும் முகமதியத் தாக்குதலை அதனால் சமாளித்துவிட முடியவில்லை. ஹிந்து சமயத்திற்குள்ள சமரச உணர்ச்சியை அனுசரித்து, இவ்விரு சமயங்களுக்குமிடையே சமரச மனப்பான்மை ஏற்படும்படிச் செய்ய முதலில் முயற்சி நடந்தது. பதின்மூன்றும் நூற்றூண்டில் காசி நகரில் கபீர் என்ற ஒரு மகான் தோன்றினர்.* ஹிந்து தருமத்தின் முக்கியமான கொள்கைகளை அப்படியே வைத்துக்கொண்டு, இஸ்லாம் சமயத்திலிருந்து சிலவற்றையும் எடுத்துக்கொண்டு இரண்டையும் ஒன்றுபடுத்த அவர் முயன்றூர். இம்முயற்சி அவ்வளவாக வெற்றி பெறவில்லை. முஸ்லிம் படையெடுப்பாளர்கள் பஞ்சாபின் வழியாகவே இந்தியாவிற்குள் பிரவேசித்தனர். இப்படையெடுப்புகளின் முதல் கஷ்டங்களை அனுபவித்ததும் பஞ்சாபே. அங்கே குருநானக் தோன்றினர். இவர் சீக்கிய சமயத்தை ஸ்தாபித்தார். இவர் கபீரின் தத்துவங்

* கபீர் (1399-1518) : காசியில் இருந்த பெரிய மகான். இவர் பூமியில் எந்தப் பெற்றோருக்கும் பிறக்கவில்லை என்றும், தேவர்கள் அவரைப் பூமிக்கு ஒரு மலராகக் கொண்டு வந்தார்கள் என்றும் கதை கூறுகிறது. பின்னர் குழந்தையாகி விட்ட அம்மலரைக் கண்டெடுத்த ஒரு நெசவாளியும் அவர் மனைவியும் அக்குழந்தையைத் தம் மகனுக வளர்த்து வந்தனராம். அவர்கள் முஸ்லிம்கள். ஆனால், கபீர் எம்மதத்தையும் பின்பற்றவில்லை. எல்லா மதங்களும் ஒன்றே என்று அவர் கருதினர்.

வட இந்தியாவின் மகானுன ராமானந்தர், கபீரைச் சீடராக ஏற்க மறுத்து விட்டாராம். ஒரு நாள் காலையில் ராமானந்தர் போகும் வழியில் கபீர் படுத்துக் கொண்டார். அவர் கால் கபீரின் மீது பட்டது. கபீர் விரும்பியதும் அதுவே. உடனே ராமானந்தர், 'ராம ராம' என்றூராம். இதையே கபீர் குரு மந்திரமாகக்கொண்டு அவருக்குத் தாம் சீடர் என்று எண்ணி வந்தார். கபீரின் பக்தியைப் பிறகு அறிந்த ராமானந்தர், இவரைச் சீடராக்கிக்கொண்டார் என்றும் கதை கூறுகிறது.

கபீரின் பக்திப் பாடல்கள் எளிமையானவை; ஆயினும் கம்பீரமானவை. ராமபக்தி அவருக்கு அதிக மெனினும் அவர் ஒரே தெய்வத்தையே வழிபட்டுவந்தார். கபீர் நரடெங்கும் யாத்திரை செய்தார். ஆங்காங்குள்ள மக்களின் மொழியில் பாடினர். அவருடைய பக்தர்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஏராளமாக இருந்தனர். 1518-ஆம் ஆண்டில் அவர் காலமானதும், அவருக்கு இறுதிச் சடங்குகளைச் செய்வது பற்றி ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தகராறு ஏற்பட்டதாம். இறந்ததும் அவர் உடல் மறைந்து விட்டது என்றும், அவர் படுத்திருந்த பாயின் அடியில் மலரே இருந்தது என்றும் ஒரு கதையும் உண்டு. மக்கள் அவரிடம் எவ்வளவு பக்தி கொண்டிருந்தார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. சீக்கிய மரபை நிறுவிய குருநானக் சம்பந்தமாகவும் இதே கதை கூறப்படுவதும் உண்டு. அவருடைய மரணம் சம்மந்தமாக மற்றோர் கதையும் கூறப்படுகிறது. காசிக்கு அருகே மாகிரி என்ற ஊர் இருந்தது. அதில் இறப்பவர்கள் நேரே நரகத்திற்கே போவார்கள் என்று கூறப்பட்டு வந்தது. கபீர் தமது பிறப்பிடமான காசியைவிட்டு அவ்வூருக்குப் போய்த் தங்கி அங்கேயே காலமானூராம். கபீர் 300 ஆண்டுகள் வாழ்ந்ததாகச் சொல்லுவோரும் உண்டு. ஆனால், இதற்குச் சரியான ஆதாரம் எதுவும் இல்லை.

களை வைத்துக்கொண்டு அதனுடன் வீர ஹிந்து தத்துவத்தையும் சேர்த்தார். முஸ்லிம் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து, முஸ்லிம்களுடன் சமாதானத்திற்கும் தயார் என்றார். ஆனால், அது ஏற்றுக் கொள்ளப்படவில்லையானால், முஸ்லிம் தாக்குதலிலிருந்து ஹிந்து சமயத்தைப் பாதுகாக்கவும் தாம் தயார் என்றும் குருநானக் கூறினார். இவ்விதம் சீக்கிய சமயம், இஸ்லாமின் நேரடியான பலனாயிற்று. சீக்கியர்கள் எவ்வளவு வீரமுள்ளவர்கள், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எவ்வளவு சேவை செய்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

இஸ்லாமினால் ஹிந்து சமயத்தில் ஏற்பட்ட ஒரு காரியம், சீக்கியம் தோன்றியதாகும். மற்றொன்று, ஹிந்து சமயத்தின் முக்கிய தன்மையான சகிப்புத் தன்மை, அதனுடைய உண்மையான சொரூபத்தையும் நிறைவையும் பெற்றதாகும். ராஜீய செல்வாக்கு எதுவும் குறுக்கிட்டு வேலை செய்யாமலிருந்த வரையில், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் அக்கம் பக்கத்தில் இருந்துகொண்டு ஒற்றுமையோடும், சமாதானமாகவும் வாழ்ந்து வந்தார்கள்; ஒருவர் மற்றொருவரின் விருப்பு வெறுப்புக்களை மதித்து நடந்துகொண்டனர்; அவரவர்கள் அவரவர் சமயக் கோட்பாடுகளை எவ்விதமான இடையூறுகளுமின்றி அனுசரித்தும் வந்தார்கள். ஹிந்து சமயமே இஸ்லாமுக்கு அதன் அக்பரை அளித்தது. அவர் சிறந்த முன்யோசனையுள்ளவர். சகிப்பு உணர்ச்சியின் முக்கியத்தை அவர் உணர்ந்தார். இந்தியாவை ஆட்சி புரிவதில் அதே உணர்ச்சியை அனுசரித்தும் வந்தார். மேலும், ஹிந்து மதமும் தன்னுடைய விரிந்து கொடுக்கும் தன்மையையும் காட்டிக்கொண்டது. கடுமையான போராட்டங்கள் நடந்தபோதிலும், முக்கிய வகுப்பாரேயன்றி பெரும் பகுதியான பொது மக்கள் அதனால் பாதிக்கப்படவில்லை. குளிர்ந்த நீரில் குளித்தெழுந்த பிறகு உடலில் சூடான பிரகாசம் ஏற்படுவதைப் போன்று, அப்போராட்டங்களிலிருந்து ஹிந்து சமயம் எழுந்தது. முதல் அதிர்ச்சி பலமாகத் தாக்கிவிட்டது என்பதில் சந்தேகமில்லை. என்றாலும், சீக்கிரத்தில் ஹிந்து சமயம் திரும்பவும் உறுதியடைந்துவிட்டது. பல பக்கிரிகளும் யோகிகளும் இரு சமயங்களிலும் இருந்தனர். பக்கிரிகள் இஸ்லாமையும், யோகிகள் ஹிந்து சமயத்தையும் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், இவர்கள் இருவரும் ஒரேவிதமான வாழ்க்கையே வாழ்ந்து வந்தனர்.

—'ஸ்டார்' — 18—3—1905

# 3

# இந்தியா விழித்துக்கொள்ளுமா?

வங்காளத்தை இரண்டாகப் பிரித்து அதில் ஒரு பகுதியை அஸ்ஸாமுடன் இணைத்துவிட வேண்டும் என்று லார்டு கர்ஸான்* நீண்ட நாட்களாக எண்ணி வந்திருக்கிறார். ஒரு கவர்னரால் நிர்வகித்துவிட முடியாத அளவில் வங்காளம் பெரியதாக இருக்கிறது என்பது, இவ்வாறு பிரிக்க யோசிப்பதற்கு முக்கியமான காரணம் என்று கூறப்பட்டது. இதற்கு மாறாக, அஸ்ஸாம் மிகச் சிறிய மாகாணம், ஜனத்தொகையும் மிகக் குறைவு; அது வங்காளத்தை அடுத்தாற் போலும் இருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆகையால், வங்காளத்தின் ஒரு பகுதியை அஸ்ஸாமுடன் சேர்த்து விட வேண்டும் என்பது வைஸ்ராயின் நோக்கம். ஆனால், மற்றோர் பக்கத்தில் வங்காள மக்களோ, வேறுவிதமான வாதங்களைக் கூறுகிறார்கள். அஸ்ஸாமியரிலிருந்து தாங்கள் முற்றிலும் மாறுபட்டவர்கள் என்கின்றனர், வங்காளிகள். தாங்கள் அதிகக் கல்வியறிவு உள்ளவர்கள், அநேக தலைமுறைகளாக ஒன்றாக இருந்து வாழ்ந்து வருபவர்கள் என்றும் கூறுகின்றனர். ஆகவே, தங்களைத் தனித்தனியாகப் பிரித்துத் தங்களின் பெரும் பகுதியினரை அஸ்ஸாமுடன் சேர்த்துவிடுவது படுமோசமான அக்கிரமம் என்கிறார்கள். இது சம்பந்தமாக எவ்வளவோ விவாதங்கள் நடந்திருக்கின்றன. லார்டு கர்ஸானின் யோசனையை தாம் அங்கீகரித்து விட்டதாகச் சில தினங்களுக்கு முன்னால் ஸ்ரீ பிரடரிக் அறிவித்தார். இச்செய்தி இந்தியாவுக்குக் கிடைத்ததிலிருந்து அநேகமாக வங்காளத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் பொதுக்கூட்டங்கள் நடந்து வருகின்றன.† பொதுக் கூட்

---

* லார்டு கர்ஸான் (1859-1925) :- பிரிட்டிஷ் ராஜதந்திரி; நிர்வாகி. வாலிபத்தில் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்தவர்; நூலாசிரியர் என்ற வகையிலும் பிரபலமாயிருந்தார். 1899 முதல் 1905 வரை இந்தியாவில் பிரிட்டிஷ் வைஸ்ராயாக இருந்தார். 1919-24-இல் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரியாக இருந்து முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு நடந்த பல மகாநாடுகளில் முக்கியமான பங்கு வகித்தார்.

† லார்டு கர்ஸானின் வங்காளப் பிரிவினையை இந்திய மக்களில் எல்லா சமூகத்தினரும் ஒருமித்து எதிர்த்தனர். வங்காளத்தில் திரண்டு வந்த தேசிய சக்தியை நசுக்கிவிடுவதற்காகவே இந்தப் பிரிவினை செய்யப்படுகிறது என்று கருதினர். அதோடு ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே பிரிவினையை உண்டாக்கி விடுவதற்குச் செய்யப்பட்ட தந்திரமே வங்காளப் ரிவினை. கர்ஸான் கிழக்கு வங்காளத்திற்குப் போனார். அங்கே ஏராளமான முஸ்லிம்கள் கூடியிருந்த கூட்டத்தில் அவர் பேசுகையில் வங்காளப் பிரிவினையின் நோக்கத்தை விளக்கினார். "வங்காளத்தை நிர்வகிப்பது எளிதாக இருக்க வேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல. இஸ்லாமே பிரதானமாக இருந்து, அதை அனுசரிப்பவர் முன்னேறுவதற்கான முஸ்லிம் மாகாணத்தை அமைப்பது தான் நோக்கம்" என்றார். பிரபலமான முஸ்லிம்கள் அநேகர் இப்பிரிவினையை எதிர்த்தார்கள். 1906-இல் காங்கிரஸில் பேசிய நவாப்ஜடா அடிகுல்லாகான், "கிழக்கு வங்காள முஸ்லிம்கள் இப்பிரிவினையை ஆதரிக்கிறார்கள் என்பது உண்மையல்ல என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு சில முக்கியமான முஸ்லிம்கள்,

டங்கள் மிகப் பெரியவைகளாக இருப்பதால் அவற்றைப்பற்றிய செய்திகள் தூரத்திலிருக்கும் தென்னுப்பிரிக்காவுக்கும் எட்டியிருக்கின்றன. அப்பொதுக்கூட்டங்களில் எல்லாச் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ளுகிருர்கள். சீன வியாபாரிகளும்கூடக் கலந்துகொள்ளுகிருர்களாம். அரசாங்கத்திற்குச் சவால் விட்டு அக்கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டுவரப்படுகின்றன. இவ்விதம் செய்வது இதுவே முதல் தடவை என்று தோன்றுகிறது. தங்கள் கோரிக்கையை அரசாங்கம் ஏற்று நடக்க மறுத்துவிடுமானல், பிரிட்டனுடன் எல்லா வியாபாரத்தையுமே இந்திய வர்த்தகர்கள் நிறுத்திவிடுவார்கள் என்று அப்பொதுக் கூட்டங்களில் பேசுகிறவர்கள் கூறுகிருர்களாம். இந்த உபாயத்தை சீனவிடமிருந்தே நம் மக்கள் கற்றுக்கொண்டிருக்கிருர்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவே வேண்டும். உண்மையிலேயே நம் மக்கள் அவ்வாறு நடந்து கொள்ளுவார்களானல், நமது கஷ்டங்களெல்லாம் சீக்கிரத்தில் தீர்ந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், இவ்விதம் செய்யப்படுமானல் பிரிட்டனுக்கு அதனல் பெரும் நஷ்டம் உண்டாகும்; இதைச் சமா

---

தங்களுடைய சொந்த நலனுக்காக இப்பிரிவினையை ஆதரிக்கிருர்கள் என்பதுதான் உண்மையான விஷயம்'' என்ருர்.

இந்தியா முழுவதும் எழுந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் வங்காளப் பிரிவினை 1905 ஜுலை 19-ஆம் தேதி அரசாங்கத்தின் உத்தரவின் மூலம் அறிவிக்கப்பட்டது. அக்டோபர் 16-ஆம் தேதி பிரிவினை அமுலுக்கும் வந்தது. இதை அடுத்து பெரும் கிளர்ச்சி எழுந்தது. எங்கும் கண்டனக் கூட்டங்கள் நடந்தன. வக்கீல்கள், பகிஷ்காரப் பிரதிக்ஞையும் செய்து கொண்டனர். பிரிவினை எதிர்ப்புக் கூட்டங்களுக்கு மாணவர் ஏராளமாக வந்தார்கள். பகிஷ்கார, சுதேசிப் பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். 'வந்தே மாதர' கீதங்களைப் பாடினர். தேச சேவைக்குத் தொண்டர்களாகச் சேர்ந்துகொண்டதோடு, அந்நியத் துணிக் கடைகளையும் மறியல் செய்தார்கள். சுதேசிக் கூட்டங்களைப் போலீஸார் பலாத்காரத்தைக் கொண்டு கலைத்தனர். தலைவர்களுக்குத் துன்பம் விளைவித்து ராஜ நிந்தனை வழக்குகளும் தொடுத்தார்கள். தெருக்களில் 'வந்தே மாதர' கீதம் பாடுவது சட்ட விரோதம் என்றும் பிரகடனஞ் செய்தார்கள். இதனல் மக்களிடையே கொதிப்பு மிகுந்து பயங்கரப் புரட்சி இயக்கம் தோன்றலாயிற்று. முஸ்லிம்களுக்கு விசேஷ சலுகைகளைக் காட்டும் தந்திரத்தை அதிகாரிகள் அனுசரித்து வந்தனர். ''இரு மனைவிகளில் முஸ்லிம்தான் ஆசைநாயகி'' என்று ஒரு பெரிய அதிகாரியே பகிரங்கமாகக் கூறினர். பிரிவினை விரும்பத்தக்கது அல்ல என்று டாக்கா நவாப் ஆரம்பத்தில் கூறிவந்தார். ஆனல், அவருக்கு மிகக் குறைந்த வட்டிக்கு லட்சம் பவுன் கடன் கொடுத்து அரசாங்கம் அவரைத் தங்கள் கட்சிக்கு இழுத்துவிட்டது. இவ்விதம் இரு சமூகங்களுக்குமிடையே விரோதத்தை வளர்த்துவிடும் கொள்கையை அரசாங்கம் அனுசரித்து வந்ததால், ஹிந்து-முஸ்லிம் கலவரங்கள் எங்கும் அதிகமாயின. பலர் மாண்டார்கள்; கோயில்களை நாசப்படுத்தினர்; கடைகளைக் கொள்ளையிட்டார்கள். ஹிந்து விதவைகள் பலரைத் தூக்கிக்கொண்டு போய்க் கற்பழித்தார்கள். கோமில்லா கலக வழக்கில் நீதிபதி பகிரங்கமாக முஸ்லிம்களின் சார்பாக நடந்துகொண்டார்.

1905 நவம்பரில் லார்டு கர்ஸான் போய் லார்டு மிண்டோ வைஸ்ராயாக வந்தார். இவர் காலத்திலும் வங்காளப் பிரிவினை ரத்தாகவில்லை. 1910 நவம்பரில் லார்டு ஹார்டிஞ்ச் வைஸ்ராயானுர். 1911 டிசம்பர் 12-ஆம் தேதி ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் தர்பார் புதுத் தலைநகராகிய டில்லியில் நடந்தபோது, வங்காளப் பிரிவினை ரத்துச் செய்யப்பட்டது.

ளித்துவிட அரசாங்கத்திற்கும் வழி இருக்காது. தங்களுடன் வர்த்தகம் செய்துதான் ஆக வேண்டும் என்று அவர்கள் மக்களைக் கட்டாயப்படுத்த முடியாது. இம்முறை, மிகவும் எளிதானது, நேரடியானது. ஆனல், வங்காளத்திலிருக்கும் நம் மக்களிடையே இதற்கு வேண்டிய ஒற்றுமை இருந்து வருமா? நாட்டின் நன்மையை முன்னிட்டு நம் வர்த்தகர்கள் கஷ்டப்படத் தயாராயிருப்பார்களா? இந்த இரு கேள்விகளுக்கும், 'ஆம், இருப்பார்கள்' என்று நாம் பதில் சொல்ல முடிந்தால், உண்மையில் இந்தியா விழித்துக்கொண்டு விட்டது என்றே சொல்லலாம்.

[குஜராத்தியில் எழுதியது]

—'இந்தியன் ஒபீனியன்' – 19—8—1905

★ ★ ★

'வீர வங்காளம்' என்ற தலைப்பில் காந்திஜி பிறகு எழுதியதாவது:

இச்சமயம் வங்காளம் விழித்தெழுந்துவிட்டது என்றே தோன்றுகிறது. வங்காளப் பிரிவினை விஷயத்தில் அரசாங்கம் பிடிவாதமாக இருக்க இருக்க, அதை எதிர்ப்பதில் வங்காளிகளும் அதிக உறுதியுடன் இருந்து வருகின்றனர் என்று வாரந்தோறும் அங்கிருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதிக ஆடம்பரங்களுடனும் சடங்குகளுடனும் டாக்காவுக்குப் புதிய கவர்னரைப் பதவியில் வைத்த அதே நாளில்* வங்காளிகள் கல்கத்தாவில் ஹர்த்தால் நடத்தினர். லட்சம் பேர் கூடிய ஒரு பொதுக்கூட்டமும் நடந்தது. பெடரேஷன் மண்டபத்திற்கு அடிக்கால் நாட்டி தங்கள் ஒற்றுமையையும் எடுத்துக்காட்டினர்கள். சுதேசி சாமான்களை வாங்கி உபயோகிப்பது என்ற இயக்கமும் பலமடைந்து வருகிறது.

[குஜராத்தியில் எழுதியது]

'இந்தியன் ஒபீனியன்' – 28—10—1905

## 4

# பிரித்தாளும் தந்திரம்

இக்கட்டுரைக்குக் கொடுத்திருக்கும் தலைப்பில் காணும் கொள்கை, மலைகள் எவ்வளவு பழைமையானவையோ அவ்வளவு பழைமையானது. இக்கொள்கையில் அடங்கிய முறையை, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நடத்துவதில் ஒரு பிரிட்டிஷ் ராஜதந்திரி ஆரம்பித்து வைத்தார். இப்பொழுது இந்தியாவிலிருந்து

*1905 அக்டோபர் 10-ஆம் தேதி வங்காளத்தை இரண்டாகப் பிரித்து டாக்காவில் ஒரு புதிய கவர்னர் பதவி ஏற்கும்படி பிரிட்டிஷ் அரசாங்கம் செய்தது.

வந்த பத்திரிகைகளில் வெளியாகியிருக்கும் தந்திகள், அக் கொள்கையின் போக்கை நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. புதிதாகப் பிரிக்கப்பட்டிருக்கும் வங்காளத்தின் புதிய தலைநகரான டாக்காவில், முஸ்லிம்கள் இருபதினாயிரம் பேரைக் கொண்ட கூட்டம் நடந்ததாம். அங்கே கூடியிருந்தவர்கள், பிரிவினை ஏற்பட்டதற்காகவும், அதனால் ஹிந்துக்களின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்றதற்காகவும் கடவுளுக்கு நன்றி தெரிவித்துப் பிரார்த்தனை நடத்தினராம். இந்த இயக்கம் தானாகவே தோன்றியிருக்கக்கூடும் என்று நம்பிவிட நாம் தயாராயில்லை. அதனளவிலேயே அக்கூற்று ஆபாசமானதாகும். ஹிந்துக்கள் கொடுமைகள் செய்து வந்தார்கள் என்றே வைத்துக்கொண்டாலும், பிரிவினை இல்லாமலேயே அதற்கு நிவாரணத்தை முஸ்லிம்கள் அடைந்திருக்க முடியும். ஏனெனில், ஒரு சமூகத்தை இன்னொரு சமூகத்தின் கொடுமையிலிருந்து காப்பாற்ற பிரிட்டிஷ் ஆட்சியின் சக்தி அங்கே இருக்கிறது. ஆகையால், பிரிவினையை எதிர்த்து வங்காளத்தில் செய்யப்படும் பலமான கிளர்ச்சிக்குப் பதிலாகவே இது செய்யப்படுகிறது என்று நாம் கருதுகிறோம். இதற்கு முன்னால் என்றும் கண்டறியாத வகையில் பகிஷ்காரம் எங்கும் பரவியிருக்கிறது. படித்தவர்களிடத்திலேயேயன்றி பாமர மக்களிடத்திலும் அது புகுந்துவிட்டது. இது வளர்ந்து வருமானால், இது முஸ்லிம்களுள்பட வங்காளத்திலுள்ள எல்லாச் சமூகத்தினரையும் ஒன்றுபடுத்தி இணைத்துவிடும். ஆகவே, பிரித்தாளுவது என்ற தருமத்தில் நம்பிக்கை இருப்பவர்கள், இதற்கு ஒரு மாற்றத்தைக் கண்டுபிடித்தாக வேண்டும் என்று இயற்கையாகவே விரும்புகிறார்கள். டாக்காவிலுள்ள சில முஸ்லிம்களிடம் இந்த மாற்று கிடைக்கிறது என்பதையும் கண்டுபிடித்திருக்கின்றனர். கோடிக்கணக்கான மக்களை, ஒரு வகுப்பினரை மற்றோர் வகுப்பினர் மீது ஏவிவிட்டு அரசாங்கத்தை நடத்திக்கொண்டு போக எண்ணுவது முட்டாள்தனமான ராஜதந்திரமாகும். இத்தகைய யோசனை பலமாக எதிர்க்கப்படும் என்பதை நாம் அறிவோம். சரியான பிரிட்டிஷ் ராஜதந்திரம், இத்தகைய நோக்கத்தைப் பலமாக எதிர்த்தே தீரும் என்பதையும் நாம் அறிவோம். அதே சமயத்தில் இக்கொள்கையோ ஆழ வேர் ஊன்றிவிட்டது. இதற்கு முன்னாலும் இதே முறை அனுசரிக்கப்பட்டுத் தாற்காலிகமான பலனையும் கண்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து செய்யப்பட்டு வரும் காரியமே இப்பொழுது டாக்காவில் நடந்து வரும் தமாஷ். இந்திய சாம்ராஜ்யத்தை உண்மையாகவே அமைத்தவர்களான ஆங்கில - இந்திய நிர்வாகிகள், அந்தச் சாம்ராஜ்யம் நீடித்திருப்பதற்கு மக்களின் நல்லெண்ணத்தையே நம்பினர்கள். இறந்துவிட்ட அவர்கள், இன்று சவக்குழிகளிலிருந்து எழுந்து வருவார்களானால், பகிஷ்காரக் கிளர்ச்சியை அவர்கள் முதலில் ஆதரித்து ஊக்கமளிப்பார்கள் என்பதே நம் அபிப்பிராயம். அதே சமயத்தில், இவ்வளவு தூரம் கொதிப்படைந்துவிட்ட பொதுஜன அபிப்பிராயத்தையும் சமாதானப்படுத்த முற்படுவார்கள். தாங்கள் தயாரிக்கும் துணிகளையே தாங்கள் உடுத்

துவது, தாங்கள் தயாரித்துக்கொள்ளும் உணவு வகைகளையே தாங்கள் சாப்பிடுவது, உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களைக்கொண்டே தங்களுடைய ஆடம்பரத் தேவைகளைத் தீர்த்துக்கொள்ளுவது என்று ஒரு நாட்டு மக்கள் எண்ணுவதைவிட இயற்கையானது வேறு என்ன இருக்க முடியும்? அநேக குடியேற்ற நாடுகளில் இத்தகைய இயக்கங்கள் அதிக விரிவான வகையில் வேலை செய்திருப்பதை நாம் காண்கிறோம். இது மக்களிடையே ஏற்படும் நல்லதோர் வளர்ச்சியே ஆகும். பிரிட்டிஷ் மன்னரிடம் விசுவாசத்துடன் இருப்பதற்கு முரணானது எதுவும் இதில் கொஞ்சமும் இல்லை. இந்தியா சம்பந்தமாக மெகாலே சொன்ன ஜோசியம் நிறைவேறுகிறது என்பதுதான் இது.

ஆனால், இந்தியாவை ஆளுகிறவர்கள்தான் இந்த இயக்கத்திலுள்ள நியாயத்தைக் காணவில்லையென்றால், இந்தியராவது இதை ஏன் கவனிக்கக்கூடாது? உள்ளுக்குள் இருந்த பகைமையின் காரணத்தினாலேயே பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிற்குள் புகுத்திவிட முடிந்தது என்பது ஓரளவு உண்மையே. எனினும், இந்தியாவிலுள்ள இரு பெரும் சமூகத்தினரும் ஒன்றுபட்டிருக்கும்படிச் செய்து, அதற்கான பாரம்பரியத்தை உண்டாக்க வேண்டியது பிரிட்டனுக்குள்ள ஒரு விசேஷக் கடமையாவதோடு, அது அதற்குள்ள ஒரு நல்ல வாய்ப்புமாகும். இவ்விதம் பிரிட்டன் செய்யுமாயின் இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களின் நன்றியறிதல் அதற்குக் கிடைக்கும்; உலகம் முழுவதுமே தயங்காமல் பிரிட்டனைப் பாராட்டும். அப்பொழுது அவ்விரு சமூகத்தினரும் தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, இரு தரப்பினருக்கும் பொதுவான நன்மையை முன்னிட்டு தங்களுக்குள் இருக்கும் துவேஷங்களையும் சச்சரவுகளையும் விட்டொழித்துவிட வேண்டியது கடமையாகும். ஏனெனில், தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொண்டு அதனால் ஏற்படும் பிளவினால் மூன்றுமவர் உள்ளே புகுந்து சொந்த நன்மையை அடைய விடுவதைவிட, இரு சகோதரர்களும் கஷ்டங்களைத் தாங்களே சகித்துக்கொண்டு போவது எவ்வளவோ மேல். இப்பொழுது வங்காளத்தில் ஆரம்பமாகியிருக்கும் கிளர்ச்சியில் இரு சமூகத்தினரையும் ஒன்றுபடுத்துவதற்கான அம்சம் இருக்கிறது. எவராக இருந்தாலும் இந்த வகையில் எண்ணுகிறவர்கள், 'வங்காளத்தின் இயக்கம் வளர வேண்டும்; டாக்காவிலும் மற்ற இடங்களிலும் இருக்கும் மக்கள், அவர்கள் ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும், இந்திய மக்களுக்கு ஏற்படவிருக்கும் மகத்தான சாத்தியங்களுக்குப் பாதகம் விளைவித்துவிடாமலிருப்பதற்கான நற்புத்தி ஏற்பட வேண்டும்' என்று நம்முடன் சேர்ந்து பிரார்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

—'இந்தியன் ஒபீனியன்' — 4—11—1905

# 5

# உலகத்தின் சமயம்

'எங்கள் சமயம் ஒன்றே உண்மையானது; மற்ற சமயங்களெல்லாம் பொய்யானவை.' ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்கள் இவ்விதம் சொல்லிக்கொண்டுவிடக்கூடிய காலம் இப்பொழுது போய்விட்டது. எல்லா சமயங்களிடமும் சகிப்பு உணர்ச்சி வளர்ந்துகொண்டு வருவது எதிர்காலத்தின் நற்சகுனமாகும். லண்டனிலிருந்து வெளிவரும் சமய வாரப் பத்திரிகையான 'கிறிஸ்தியன் ஓர்ல்டு' என்பதில், சமீபத்தில் ஜே. பி. எழுதிய ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. இவ்விஷயமாக அவர் இப் பத்திரிகையில் அடிக்கடி எழுதி வருகிருர். இதிலிருந்து சில விஷயங்களை இங்கே எடுத்துக் கொடுக்க விரும்புகிறேன்.

இக் கட்டுரையாளர் மிகுந்த தாராள உணர்ச்சியுடன் இவ் விஷயத்தை கிறிஸ்தவர் நிலையிலிருந்து ஆராய்ந்திருக்கிருர். உலகத்திலுள்ள சமயங்கள் ஒன்றுக்கொன்று எவ்விதம் தொடர்புடையனவாக இருக்கின்றன, ஒவ்வொரு சமயமும் எல்லாவற்றிற்கும் பொதுவான தன்மையையே எவ்விதம் கொண்டிருக்கிறது என்பதையும் அவர் எடுத்துக்காட்டியிருக்கிருர். இத்தகைய ஒரு கட்டுரை கிறிஸ்தவப் பத்திரிகையில் வெளியாகியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். மாறுதலடைந்து வரும் காலப் போக்கையும் இது காட்டுகிறது. இதுபோன்றதோர் கட்டுரை, சமய விரோதமானது என்று சில ஆண்டுகளுக்கு முன்னுல் கருதப்பட்டிருக்கும்; அதை எழுதியவர் சமயக் கொள்கைக்குத் துரோகி என்றும் கூறப்பட்டிருப்பார்.

மற்ற சமயங்களின் சம்பந்தமாகக் கிறிஸ்தவர்களின் போக்கில் புதிய உணர்ச்சி ஏற்பட்டு வருகிறது என்பதைக் கட்டுரையாளர் குறிப்பிடுகிருர். எத்தனையோ பொய்யான சமயங்களுக்கிடையே கிறிஸ்தவ சமயம் ஒன்றே முக்கியமானதாக இருந்து வருகிறது என்ற கருத்து, கிறிஸ்தவர்களிடையே சில ஆண்டுகளுக்கு முன்னுல் வரையில் எவ்விதம் இருந்து வந்திருக்கிறது என்பதையும் கூறுகிருர். அவர் மேலும் சொல்லுவதாவது:

"சாதாரண மனிதனுக்குப் பிரமாதமான உணர்ச்சி மாற்றம் திடீரென்று ஏற்பட்டது. இதுவரையில் தான் எந்த தத்துவத்தில் வளர்க்கப்பட்டு வந்தானே, அத்தத்துவங்களெல்லாம் ஆரம்ப கால கிறிஸ்தவ உபதேசங்களே அல்ல என்பதைக் கண்டுகொண்டதே இதில் ஓர் அம்சமாகும். வெளி இனங்களையும் சமயங்களையும் குறித்து தான் யூகித்துக்கொண்டிருக்கும்படி செய்யப்பட்டிருந்ததற்கெல்லாம் மாறுபட்டதான எண்ணங்களே, மிகப் பெருமை வாய்ந்த கிறிஸ்தவ மதப் பாதுகாப்பாளர்களுக்கு இருந்திருக்கிறது என்பதை சாதாரண மனிதன் கண்டுகொண்டான். சாக்ரடீஸின் ஞானம் கடவுள் உபதேசத்தினுல் ஏற்பட்டது என்று, கிறிஸ்தவ சமய ஆரம்ப காலத்தவரான ஜஸ்டின் மார்டயர் கருதுகிருர் என்றும் சாதாரண மனிதன் கேள்விப்படுகிருன்.

ஆரிஜன், நிஸ்ஸாவின் கிரிகி ஆகியவர்களின் உபதேசங்களும் ஆண்டவன் போதனைக்குட்பட்ட எல்லா மனித வர்க்கத்தையும் சேர்ந்ததாகவே இருக்கின்றன என்பதையும் காண்கிறன். தெய்வ கடாட்சம் என்ற நம்பிக்கை எல்லா சமயங்களுக்குமே பொதுவான சொத்து என்று லாக்டான்டியஸ் கூறியிருப்பதையும் அறிகிறன்......

"......உண்மையில் சிறந்த கிறிஸ்தவர்களாக இருந்தவர்களின் எண்ணங்களெல்லாம், எல்லாக் காலங்களிலும் இதே கருத்தில்தான் இருந்திருக்கின்றன. ஒரு சமயத்திற்கும் மற்ரோர் சமயத்திற்குமிடையே 'போக முடியாத தாகப் பிளவு' இருக்கிறது என்ற தத்துவம், வாழ்க்கைக்கும் ஆன்மாவுக்கும் பொய்யானது என்பதை உடனே உணர்ந்துகொள்ளுவதற்கு வேண்டியதெல்லாம், வெளியிலிருக்கும் இந்த இனங்களுடன் மனிதன் தொடர்பு கொண்டு அவர்கள் இலக்கியங்களிலோ அல்லது நேருக்கு நேரிலோ அறிந்து கொள்ளுவதே.........

"......நூற்றுக் கணக்கில் பெயர்களையும் முறைகளையும் கொண்ட சமயம், மனிதனின் உள்ளத்தில் ஒரே விதையை விதைத்து, மனம் ஏற்றுக் கொள்ளக் கூடியதான ஒரே உண்மையைக் காட்டியிருக்கிறது."

பல தரப்பட்ட கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் தத்துவங்களும், மற்ற சமயங்களை அறிந்ததனல் பிறந்தவைகளே என்றும் 'ஜே. பி.' குறிப்பிடுகிறர். பல சின்னங்களும் புராதன காலத்திலிருந்து வந்திருக்கும் சின்னங்களே என்கிறர்.

"பாரஸீகத்திலிருந்த மித்ராக்களின் சமய முறையும்கூட அற்புதமானதாகும். குமாண்ட் வருமாறு கூறுகிறர்: "கிறிஸ்தவர்களைப் போன்றே மித்ராவைப் பின்பற்றி வந்தவர்களும் நெருங்கி ஒன்றுபட்டிருந்த சமூகங்களாக வாழ்ந்திருக்கிறர்கள். ஒருவரையொருவர் தந்தையென்றும் சகோதரர் என்றும் அழைத்துக்கொண்டிருந்திருக்கின்றனர். கிறிஸ்தவர்களைப் போன்றே ஞானஸ்நானம், கிறிஸ்தவாலயங்களின் சேர்க்கை ஆகியவைகளையெல்லாம் அவர்களும் அனுசரித்து வந்திருக்கிறர்கள். அதிகாரபூர்வமான ஒழுக்கம் இன்னது என்பதையும் போதித்து வந்திருக்கின்றனர். புலனடக்கம், கற்பு, தன்னலத் தியாகம் ஆகியவைகளை உபதேசித்திருக்கிறர்கள். ஆன்மா அழிவற்றது, இறந்தவரின் புனர்ஜென்மம் ஆகியவைகளிலும் நம்பிக்கை கொண்டிருந்திருக்கிறர்கள்."

இக் கட்டுரையை எழுதியிருப்பவர் கிறிஸ்தவ சமயத்திற்கு முதன்மையான நிலையைக் கொடுப்பதில் ஆச்சரியமில்லை. ஆனல், கிறிஸ்தவ எழுத்தாளர்களும் கிறிஸ்தவப் பத்திரிகைகளும் இத்தகைய விசாலமான மனத்தோடு கூடிய போக்கை அனுசரித்திருப்பது மகிழ்ச்சியடைய வேண்டியதாகும்.

பொதுவான நன்மையை உத்தேசித்து ஒன்ருகப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் ஐரோப்பியருக்கும் இந்தியருக்கும் இது அதிக முக்கியமானதாகிறது. புராதனமான சமயங்களைக் கொண்டதான இந்தியா, பிறருக்கு அளிக்கக்கூடியவை எவ்வளவோ உண்டு. ஒருவர் சமயத்தை மற்ருெருவர் மதித்து, மனப்பூர்வமான அனுதாபம் கொள்ளுவதனுலேயே நம்முள்

ஒற்றுமை ஏற்படும்படிச் செய்ய முடியும். இந்த முக்கியமான விஷயத்தில் அதிகமான சகிப்புத் தன்மை இருப்பது என்ருல், நமது அன்ருட உறவுகளில் அதிக தாராளம் இருப்பதோடு இப்பொழுது இருக்கும் அவநம்பிக்கைகளும் போய்விட வேண்டும். முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்குமிடையே இந்தச் சகிப்புத் தன்மை இருந்து வர வேண்டும் என்பதும் உண்மையானதல்லவா? கிழக்குக்கும் மேற்குக்கும் இருக்க வேண்டியதையும் விடக்கூட இது அதிக முக்கியமானது என்றும் சில சமயங்களில் நினைக்க வேண்டியிருக்கிறது. இந்தியருக்குள்ளே இருக்க வேண்டிய ஐக்கியத்தை சச்சரவுகளும் குழப்பங்களும் நாசமாக்கி விடாமலிருக்கட்டும். உள்ளுக்குள்ளேயே பிளவுண்டு விட்ட வீடு விழுந்துதான் போகும். ஆகவே, இந்திய சமூகத்தின் எல்லா வகுப்பினரிடையேயும் சரியான ஒற்றுமையும் சகோதரத்துவமும் நிலவ வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிறேன்.

—'இந்தியன் ஒபீனியன்' — 23—8—1905

# 6

# ஹிந்துக்களும் முஸ்லிம்களும்

[சமூக ஒற்றுமையில், அதிலும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில் மகாத்மா காந்திக்கு, அவர் இந்திய ராஜீயத்தில் புகுவதற்கு முன்னுலேயே என்ன அபிப்பிராயங்கள் இருந்திருக்கின்றன என்பதற்கு, 'இந்திய சுயராஜ்யம்' என்ற நூலில் அவர் எழுதியிருப்பவையும் சரியான ஆதாரங்களாகும். இந்த நூலைக் காந்திஜி 1909-இல், இங்கிலாந்திலிருந்து தென்னுப்பிரிக்காவுக்குத் திரும்புகையில் கப்பலில் எழுதினர். (இந்நூல் 'மகாத்மா காந்தி நூல்கள்' முதல் தொகுப்பில் பிரசுரமாகியிருக்கிறது). கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறையில் சமூக ஒற்றுமையின் முக்கியத்தையும், தகராறின் காரணங்களையும் பற்றி காந்திஜி அக்காலத்தில் தெரிவித்திருக்கும் கருத்து முக்கியமானதாகையால் அந்நூலிலிருந்து இது சம்பந்தமான பகுதியை மாத்திரம் கீழே கொடுக்கிருேம்:]

**வாசகர்:** முஸ்லிம்களின் வருகைக்கு முந்திய காலத்து இந்தியாவைப் பற்றி எனக்கு விவரித்தீர்கள். ஆனுல், இப்பொழுதோ முஸ்லிம்கள், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள் ஆகியோரும் நம்முடன் இருக்கிருர்கள். அவர்களும் ஒரே தேசீயச் சமுதாயமாக எப்படி ஆக முடியும்? ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பழைய விரோதிகள். நமது பழமொழிகளே அதை நிரூபிக்கின்றன. முகமதியர்கள் பிரார்த்தனை செய்ய மேற்கு முகமாகத் திரும்பிக்கொள்ளுகின்றனர்; ஹிந்துக்களோ கிழக்கு முகமாகத் திரும்புகின்றனர். விக்கிரகங்களை வழி

படுவோர் என ஹிந்துக்களை முஸ்லிம்கள் அவமதிப்பாக எண்ணுகின்றனர். ஹிந்துக்கள் பசுக்களைப் போற்றுகின்றனர். முஸ்லிம்கள் பசுக்களைக் கொல்லுகின்றனர். ஹிந்துக்களுக்குக் கொல்லாமையில் நம்பிக்கை உண்டு; முஸ்லிம்களுக்கோ அது இல்லை. இவ்விதம் ஒவ்வொரு கட்டத்திலும் நமக்குள் வேறுபாடுகள் இருக்கின்றன. அப்படியிருக்க, இந்தியா ஒரே தேசீயச் சமுதாயமாக எப்படி ஆக முடியும்?

**ஆசிரியர்:** உங்களுடைய கடைசிக் கேள்வி கடினமானதேயாகும். ஆனால் தீர யோசித்தால், அதற்கு விடை தருவது எளிது என்பது தெரியும். ரெயில்களும், வக்கீல்களும், டாக்டர்களும் இருப்பதனாலேயே இக் கேள்வி எழுகிறது. கடைசியான இரண்டை இப்பொழுது கவனிப்போம். ரெயில்களைப் பற்றி முன்னாலேயே கவனித்திருக்கிறோம். இன்னும் ஒன்றும் சொல்ல விரும்புகிறேன். மனிதன், தன்னுடைய கைகளையும் கால்களையும் கொண்டு செலுத்தும் அளவுக்குத் தன் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டிய வகையில் இயற்கையினால் அமைக்கப்பட்டிருக்கின்றான். ரெயில்களையும், வெறி மூட்டும் மற்ற வசதிகளையும் கொண்டு ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நாம் விரைவாகப் போகாமலிருந்தால், எத்தனையோ குழப்பங்கள் இல்லாமல் இருக்கும். நாமே நம் சங்கடங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். மனிதனின் உடல் அமைப்பிலேயே, அவன் இயங்கும் ஆசைக்கு ஒரு வரம்பை கடவுள் வகுத்திருக்கிறார். அந்த வரம்பை மீறிப் போவதற்கான சாதனங்களைக் கண்டு பிடிக்க மனிதன் உடனே துணிந்தான். படைத்த இறைவனை அறிவதற்கே மனிதனுக்கு அறிவைத் தந்தார் கடவுள். ஆனால், மனிதனோ, படைத்தவனையே மறந்துவிடும் வகையில் தனது அறிவைத் துஷ்பிரயோகம் செய்யலானான். என்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு மட்டுமே சேவை செய்யக் கூடிய வகையில் நான் ஆக்கப்பட்டிருக்கிறேன். ஆனால், எனது அகந்தையின் காரணமாக, என் உடலைக்கொண்டு இப்பிரபஞ்சத்தில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் சேவை செய்ய வேண்டும் என்று பாசாங்கு செய்கிறேன். இவ்விதம் அசாத்தியமானதைச் செய்துவிட முயலுவதால், பல தரப்பட்ட சுபாவங்கள், மதங்கள் இவற்றுடன் தொடர்பு கொண்டு மனிதன் அடியோடு தோல்வி அடைகிறான். இந்த நியாயத்தைக் கொண்டு கவனித்தால், ரெயில்கள் மிகவும் ஆபத்தானவை என்பது உங்களுக்குத் தெளிவாகும். இவைகளினால் மனிதன் கடவுளைவிட்டு விலகியே சென்றுவிட்டான்.

**வாசகர்:** என் கேள்விக்கு உங்களுடைய பதிலை அறியவேண்டும் என்பதில் நான் பொறுமையை இழந்தவனாக இருக்கிறேன்.

முகமதியம் புகுத்தப்பட்டது, ஒரே தேசீய இனம் என்பதைச் சிதைத்துவிட்டதல்லவா ?

**ஆசிரியர்:** பல தரப்பட்ட மதங்களைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள் என்பதனால், ஒரே தேசீயச் சமுதாயமாக இந்தியா இல்லாது போய்விடாது. அயலார் வந்ததனால் தேசீயச் சமுதாயம் பாழாகிவிட வேண்டும் என்பதுமில்லை. அவர்கள் இதில் ஐக்கியமாகிவிடுகின்றனர். இத்தகைய நிலைமை இருக்கும்போதுதான் ஒரு நாடு ஒரே தேசீயச் சமுதாயம் ஆகிறது. அந்த நாட்டிற்கு ஐக்கியப்படுத்திக்கொள்ளும் சக்தி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஓர் நாடாகவே இந்தியா என்றும் இருந்து வந்திருக்கிறது. உண்மையில் மனிதர் எத்தனையோ, அத்தனை மதங்களும் இருக்கும். ஆனால், தேசீய உணர்ச்சியை உணர்ந்திருப்பவர்கள், ஒருவர் மற்றொருவரின் மதக் கோட்பாடுகளில் குறுக்கிடுவதில்லை. அவர்கள் குறுக்கிடுவார்களானால், ஒரு தேசீய இனம் என்று கருதப்படுவதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள் ஆவார்கள். இந்தியாவில் ஹிந்துக்கள் மாத்திரமே இருக்க வேண்டும் என்று ஹிந்துக்கள் நம்புவதாயின், அவர்கள் கனவு உலகத்தில் வசிப்பவர்களே ஆவர். இந்தியாவைத் தங்கள் நாடாக்கிக்கொண்டிருக்கும் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள் ஆகிய எல்லாரும் இந்நாட்டு மக்களே. இவர்கள் யாவரும் தங்களுடைய சொந்த நன்மையை முன்னிட்டாவது ஒன்றுபட்டிருந்து வாழ்ந்தாக வேண்டும். உலகத்தின் எப்பகுதியிலும் ஒரே தேசீயச் சமுதாயம் என்பது ஒரே மதம் என்று பொருள் கொண்டிருந்ததில்லை. இந்தியாவிலும் இவ்விதம் இருந்ததில்லை.

**வாசகர்:** ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே உடன் பிறந்ததான பகையைக் குறித்து என்ன கூறுகிறீர்கள்?

**ஆசிரியர்:** அந்தச் சொற்றொடர் நம் பரஸ்பர விரோதியினால் சிருஷ்டிக்கப்பட்டதாகும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் சச்சரவிட்டுக்கொண்டபோது அதே ஆவேசத்தில்தான் பேசினார்கள். தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொள்ளுவதை நீண்ட காலமாகவே நிறுத்திவிட்டார்கள். அப்படி இருக்கும்போது உடன்பிறந்ததான பகைமை என்பது எப்படி இருக்க முடியும்? பிரிட்டிஷார் இந்தியாவைப் பிடித்துக்கொண்ட பிறகுதான் அவர்கள் சச்சரவிட்டுக் கொள்ளுவதை நிறுத்தினார்கள் என்பதல்ல. இதைத் தயை செய்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். முஸ்லிம் மன்னர்களின் ஆட்சியில் ஹிந்துக்கள் சௌகரியமாகவே இருந்திருக்கிறார்கள்; ஹிந்து மன்னர்களின் ஆட்சியில் முஸ்லிம்களும் சுகமாக இருந்திருக்கின்றனர். ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளுவது தற்கொலைக்குச் சமம் என்று

ஒவ்வொரு தரப்பினரும் உணர்ந்தார்கள். இதில் எந்தத் தரப்பினரும் ஆயுத பலத்தினால் தங்கள் மதத்தை விட்டுவிட மாட்டார்கள். ஆகவே, இரு தரப்பாரும் சமாதானமாக வாழ்வது என்ற முடிவுக்கு வந்தனர். ஆங்கிலேயர்கள் வந்து சேர்ந்ததும், திரும்பவும் சச்சரவு ஆரம்பமாகி விட்டது.

நீங்கள் கூறிய பழமொழிகள், இரு தரப்பாரும் சச்சர விட்டுக் கொண்டிருந்தபோது உண்டாக்கப்பட்டவை. அவற்றை இப்பொழுது குறிப்பிடுவதென்பது நிச்சயம் தீங்கு விளைவிப்பதாகும். பல ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மூதாதையர் ஒருவரே என்பதும், அதே ரத்தமே அவர்களின் உடலில் ஓடிக்கொண்டு இருக்கிறது என்பதும் நமக்கு நினைவிருக்க வேண்டாமா? ஹிந்துக்களின் கடவுள் வேறு, முஸ்லிம்களின் கடவுள் வேறு? ஒரே இடத்திற்குப் போய்ச் சேருவதற்கான பல வழிகளே மதங்கள். அடையப் போகும் லட்சியம் ஒன்றாக இருக்கும்போது, பல தரப்பட்ட சாலைகளின் வழியாகக் குறிக்கோளை அடைவதில் என்ன தவறு இருக்கிறது? இதில் சச்சரவிட்டுக்கொள்ளுவதற்கு என்ன இருக்கிறது?

சைவர்களுக்கும் வைணவர்களுக்குமிடையே பயங்கர மான வசைமொழிகள் வழங்கி வருகின்றன. எனினும், இவ்விருவரும் ஒரே தேசீயச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று யாரும் சொல்லவில்லை. வேத வழி வந்த மதத்திற்கும் ஜைன சமயத்திற்கும் அதிக மாறுபாடு உண்டு என்று சொல்லப்படுகிறது. இதனால் இவ்விரு மதத்தினரும் வெவ்வேறு தேசீயச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்களாகார். உண்மை என்னவெனின், நாம் அடிமைப்பட்டிருக்கிறோம்; இதனால் சச்சரவிட்டுக்கொள்ளுவதோடு மூன்றாமவர் நம் சச்சரவில் தீர்ப்புக் கூற வேண்டும் என்றும் விரும்புகிறோம். முஸ்லிம்களைப் போலவே விக்கிரக வழிபாடு கூடாது என்பவர்கள் ஹிந்துக்களிலும் இருக்கிறார்கள். உண்மையான அறிவில் நாம் அபிவிருத்தி அடைய அடைய, நாம் பின்பற்றாத மதத்தைச் சேர்ந்தவர்களுடன் சண்டையிட வேண்டியதே இல்லை என்பதை நாம் நன்றாக உணர்ந்துகொள்ளுவோம்.

**வாசகர்:** பசுப் பாதுகாப்பைப் பற்றி இப்பொழுது உங்கள் கருத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**ஆசிரியர்:** நானே பசுவுக்கு மரியாதை செலுத்துகிறேன். அதாவது, அதனிடம் அன்பு கலந்த ஒரு மதிப்பு வைத்திருக்கிறேன். இந்தியாவைப் பாதுகாப்பது பசு. ஏனெனில், இந்திய நாடு விவசாய நாடாக இருப்பதால் அது பசுவை நம்பி வாழ வேண்டியிருக்கிறது. நூற்றுக்கணக்கான வழி

களில் பசு மிகவும் பயன் அளிக்கும் ஒரு பிராணி. நம் முஸ்லிம் சகோதரர்களும் இதை ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஆனால், நான் பசுவுக்கு மதிப்பளிப்பதைப் போலவே என் நாட்டிலுள்ள சகோதரர்களுக்கும் மதிப்பளிக்கிறேன். ஒருவர் ஹிந்துவானாலும் சரி, முஸ்லிமாக இருந்தாலும் சரி, பசுவைப் போன்றே மனிதருக்குப் பயன் உள்ளவரே. அப்படி இருக்கும்போது ஒரு பசுவைப் பாதுகாப்பதற்காக ஒரு முஸ்லிமுடன் சண்டையிடுவதோ அல்லது அவரைக் கொல்லுவதோ சரியா? அப்படிச் செய்வதனால் ஒரு முஸ்லிமுக்கும் ஒரு பசுவுக்கும் விரோதியாவேன். ஆகையால், பசுவைப் பாதுகாப்பதற்கு எனக்குத் தெரிந்த ஒரே வழி, நாட்டின் நன்மையை முன்னிட்டு அதைப் பாதுகாப்பதற்கு என்னுடன் ஒத்துழைக்கும்படி என் முஸ்லிம் சகோதரர்களைக் கேட்டுக்கொள்ளுவதேயாகும். நான் கூறுவதற்கு அவர் இணங்கவில்லையாயின், இவ்விஷயம் என் சக்திக்குப் புறம்பானது என்ற காரணத்தினால், பசு எப்படியாவது போகட்டும் என்று நான் விட்டுவிட வேண்டும். பசுவிடம் பச்சாத்தாபம் எனக்கு மிக அதிகமாக இருக்குமானால், அதைக் காப்பாற்ற நான் என் உயிரையே தியாகம் செய்ய வேண்டுமேயல்லாமல் என் சகோதரனின் உயிரைப் போக்கி விடக்கூடாது. இதுவே நமது தருமம் என்று நான் கொள்ளுகிறேன்.

மனிதர் பிடிவாதக்காரர்கள் ஆகிவிடும்போது நிலைமை சங்கடமானதாகிவிடும். நான் ஒரு வழிக்கு இழுத்தால், என் முஸ்லிம் சகோதரர் வேறு வழிக்கு இழுப்பார். நான் உயர்ந்தவன் என்ற அகம்பாவத்துடன் இருந்தால் அவரும் பதிலுக்கு அப்படியே செய்வார். நான் கௌரவமாக அவருக்குப் பணிந்தால், அவர் மேலும் அப்படியே பணிந்துவிடுவார். அவர் அப்படிச் செய்யாது போனாலும், நான் பணிந்து போனதில் நான் தவறு செய்துவிட்டதாகக் கருத முடியாது. ஹிந்துக்கள் பிடிவாதம் காட்டக் காட்டப் பசுவதையும் அதிகமாகிறது. பசுப் பாதுகாப்பு சங்கங்களைப் பசுவதைச் சங்கங்கள் என்று சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். இத்தகைய சங்கங்கள் நமக்குத் தேவைப்படும் என்பதே வெட்கக்கேடானதாகும். பசுக்களை எப்படிப் பாதுகாப்பது என்பதை நாம் மறந்துவிட்டபோதே, இத்தகைய சங்கங்கள் அவசியமாயின என எண்ணுகிறேன்.

ரத்தக் கலப்புள்ள ஒரு சகோதரன், ஒரு பசுவைக் கொல்லும் தறுவாயில் இருக்கும்போது நான் என்ன செய்வது? நான் அவனைக் கொன்றுவிடுவதா அல்லது அவன் காலில் விழுந்து கொல்ல வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுவதா? பிந்திய முறையையே நான் கைக்

கொள்ள வேண்டும் என்று நீங்கள் ஒப்புக்கொண்டால், எனது முஸ்லிம் சகோதரனிடமும் நான் அதையேதான் செய்ய வேண்டும்.

ஹிந்துக்கள் பசுக்களைக் கொடுமையாக நடத்தும் போது அவை அழியாமல் பாதுகாக்கிறவர் யார்? பசு வமி சத்தை ஹிந்துக்கள் தடிகளால் போட்டு அடிக்கும்போது அது நியாயமல்ல என்று அவர்களிடம் யார்தாம் வாதாடு கிறார்கள்? ஆனால், இவையெல்லாம் நாம் ஒரே தேசீயச் சமு தாயமாக இருப்பதைத் தடுக்கவில்லை.

கடைசியாக, ஹிந்துக்கள் கொல்லாமையில் நம்பிக்கை யுள்ளவர்கள், முஸ்லிம்கள் அப்படியல்ல என்பது உண்மை யாக இருக்குமானால், ஹிந்துக்களின் கடமை என்ன? கொல்லாமை மதத்தைப் பின்பற்றும் ஒருவர், இன்னொரு வரைக் கொல்லலாம் என்று விதிக்கப்பட்டிருக்கவில்லை. அவர் செய்ய வேண்டிய காரியம் நேரானது. ஓர் உயிரைக் காப்பதற்காக இன்னொருவரைக் கொன்றுவிடக்கூடாது. கொல்ல வேண்டாம் என்று வேண்டிக்கொள்ளலாம்; அவ ருடைய முழுக் கடமையும் அவ்வளவுதான்.

ஆனால், ஒவ்வொரு ஹிந்துவுக்கும் அகிம்சையில் நம் பிக்கை இருக்கிறதா? விஷயத்தை ஆழ்ந்து கவனித்தால், இந்த அகிம்சைக் கொள்கையை ஒருவர்கூட அனுசரிக்க வில்லை; உயிரினங்களை அழித்துக்கொண்டுதான் வருகிறோம். ஓர் உயிரைக் கொல்லும் பாபத்திலிருந்து தப்பவே இந்தக் கொள்கையைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லப்படு கிறது. பொதுவாகப் பார்த்தால் ஹிந்துக்களில் பலர் மாமி சம் சாப்பிடுகிறார்கள். இதனால் அவர்கள் அகிம்சையைக் கடைப்பிடிக்கவில்லை என்றாகிறது. ஆகையால், அகிம்சை யில் நம்பிக்கை வைக்கும் ஹிந்துக்களும், அந்த நம்பிக்கை யில்லா முகமதியர்களும், ஒன்றாக வாழ முடியாது என்று சொல்லுவது அபத்தமானதாகும்.

சுயநலமிகளும் போலிகளுமான மதப் பிரசாரகர்கள், இத்தகைய எண்ணங்களையெல்லாம் நம் புத்தியில் உண் டாக்கியிருக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் இதற்கு மெருகு கொடுத்திருக்கிறார்கள். சரித்திரம் எழுதும் வழக்கம் அவர் களுக்கு இருக்கிறது. எல்லா மக்களின் பழக்க வழக்கங் களையும் ஆராய்வதாகவும் பாசாங்கு செய்கிறார்கள். கடவுள் நமக்கு ஓர் அளவுக்குத்தான் புத்தியைக் கொடுத்திருக்கி றார். ஆனால், அவர்களோ, தங்களையே கடவுளாக எண்ணிக் கொண்டு விசித்திரப் பரீட்சைகளிலெல்லாம் ஈடுபடுகிறார் கள். தங்களுடைய ஆராய்ச்சிகளையெல்லாம் உயர்வாகப் புகழ்ந்து, அவர்களை நம்பும்படியும் நம்மை மயக்குகிறார்கள். நாமும் நமது அறியாமையால் அவர்களுக்கு அடிபணிகி றோம்.

விஷயங்களைத் தவருகப் புரிந்துகொள்ளாதிருக்க வேண்டும் என விரும்புகிறவர்கள் குரானைப் படிக்கலாம். அதில் நூற்றுக்கணக்கான விஷயங்கள் ஹிந்துக்கள் ஒப்புக் கொள்ளக்கூடியவையாக இருப்பதைக் காணலாம். எந்த ஒரு முஸ்லிமும் ஆட்சேபிக்கமுடியாத உண்மைகளும் பகவத் கீதையில் உள்ளன. எனக்குப் புரியாதவையும், நான் விரும்பாதவையும் குரானில் இருக்கின்றன என்பதற்காக ஒரு முஸ்லிமை நான் வெறுப்பதா? இரண்டு பேர் சச்சரவுக்குத் தயாராக இருந்தால்தான் சச்சரவுக்கே இடம் ஏற்படுகிறது. ஒரு முஸ்லிமுடன் சண்டையிட நான் விரும்பவில்லையென்ருல் என்னிடம் சண்டைக்கு வருவதற்கு அவருக்குச் சக்தியே இல்லாது போகும். அதே போல, என்னுடன் சச்சரவுக்கு வர ஒரு முஸ்லிம் மறுத்துவிடுவாராஞல், நானும் சக்தியற்றவன் ஆகிவிடுவேன். வெறும் கையை ஓங்கிஞல் சுளுக்கிக்கொள்ளத்தான் செய்யும். ஒவ்வொருவரும் தங்களுடைய மதத்தின் தத்துவத்தை நன்கு அறிந்து அதைக் கடைப்பிடிப்பார்களாஞல்-போலிப் போதகர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கும் அனுமதி தராமல் இருதால்-சண்டை சச்சரவுக்கு இடமே இராது.

**வாசகர் :** இந்த இருவரும் ஒன்ருவதற்கு ஆங்கிலேயர்கள் எப்பொழுதாவது அனுமதிப்பார்களா?

**ஆசிரியர் :** இக்கேள்வி நம்முடைய கோழைத்தனத்திஞலேயே எழுகிறது. இது நமது விவேகமின்மையையும் வெளிப்படுத்துகிறது. சமாதானமாக வாழ்வது என்று இரு சகோதரர்கள் முடிவு செய்துகொண்டு விட்டால், மூன்ரும் ஆள் அவர்களைப் பிரித்துவிடமுடியுமா? கெட்டவர்களின் பேச்சை அவர்கள் கேட்பதாயின், அவர்களை முட்டாள்கள் என்று கருதுவோம். அதே போல நம்மைப் பிரித்துவைப்பதற்கு ஆங்கிலேயருக்கு நாம் இடங் கொடுத்துக் கொண்டிருந்தால் அவர்கள் மீது குறை கூறுவதைவிட, ஹிந்துக்களும் முஸ்லிம்களுமாகிய நாம் நம் மீதே குறை கூறிக்கொள்ள வேண்டும். ஒரு மண் பாண்டம் உடைவதற்கு, அது ஒரு கல் மீது மோதவே வேண்டியதில்லை. ஒன்றின்மேல் ஒன்று சற்று வலுவாகப் பட்டாலும் போதும். இப்பாண்டம் பத்திரமாக இருக்கும்படிச் செய்வதற்குச் சரியான வழி, ஆபத்தான இடத்தைவிட்டு அதைத் தூரத்தில் வைத்துவிடுவதன்று; கல்லில் பட்டாலும் அது உடையாதிருக்கும் வகையில் அதை நன்ருகச் சூளையிலிட வேண்டும். ஆகவே, நாம் நம் மனத்தைச் சரியானபடி சுட்ட மண் போல் ஆக்கிக்கொள்ள வேண்டும். பிறகு எல்லா ஆபத்துக்களையும் சமாளிக்கும் இரும்பான உறுதியை நாம் அடைந்துவிடுவோம். இதை ஹிந்துக்கள் மிகச் சுலபமாகச் செய்யலாம். தொகையில் இவர்கள் அதிகம். தாங்கள் அதிகம் படித்தவர்கள் என்றும்

பாசாங்கு செய்கிறார்கள். ஆகையால், முஸ்லிம்களுடன் தங்களுக்குள்ள நேச உறவை எந்தத் தாக்குதலிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய தகுதி இவர்களுக்கே அதிகம் உண்டு.

இவ்விரு சமூகத்தினருக்குள்ளும் பரஸ்பர அவநம்பிக்கை இருந்து வருகிறது. ஆகையால் முஸ்லிம்கள், தங்களுக்குச் சில சலுகைகள் வேண்டுமென்று லார்டு மார்லியிடம்* கேட்கிறார்கள். ஹிந்துக்கள் இதை ஏன் எதிர்க்க வேண்டும்? ஹிந்துக்கள் ஆட்சேபிக்காதிருந்தால், ஆங்கிலேயர் இதைக் கவனித்துக்கொள்ளுவார்கள். நாளாவட்டத்தில் முஸ்லிம்கள் ஹிந்துக்களை நம்ப ஆரம்பிப்பார்கள். இதன் பலனாக சகோதரத்துவமும் வளரும். நம் சச்சரவுகளை ஆங்கிலேயரிடம் கொண்டு போவதைக் குறித்து நாம் வெட்கப்பட வேண்டும். ஆட்சேபணை செய்யாமல் இருப்பதால், ஹிந்துக்களுக்கு எதுவும் நஷ்டமாகிவிடாது என்பதை ஒவ்வொருவரும் தமக்குத் தாமே உணரவேண்டும். மற்றொருவர் உள்ளத்தில் நம்பிக்கையை உண்டாக்கியவர் இவ்வுலகத்தில் எதையும் இழந்துவிட்டதில்லை.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் என்றுமே சண்டையிட்டுக்கொள்ளமாட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. சேர்ந்து வாழும் இரு சகோதரர்கள் அடிக்கடி சண்டையிட்டுக்கொள்ளுவார்கள். சில சமயங்களில் நாம் மண்டைகளையும் உடைத்துக்கொள்ளுவோம். இத்தகைய காரியங்களுக்கு அவசியம் இல்லைதான். ஆனால், எல்லோருமே ஒரே மாதிரியாக இருந்துவிடவில்லை. கோபத்தில் இருக்கும்போது எத்தனையோ முட்டாள்தனமான காரியங்களைச் செய்துவிடுகின்றனர். இவைகளையெல்லாம் சகித்துக்கொள்ளவே வேண்டும். ஆனால், நாம் சண்டையிட்டுக்கொள்ளும்போது, வக்கீல் வைக்கவோ, ஆங்கிலேயரிடம் செல்லவோ, கோர்ட்டுக்குப் போகவோ நாம் நிச்சயமாக விரும்புவதில்லை. இருவர் சண்டை போட்டுக்கொள்ளுகிறார்கள்; அவர்கள் மண்டைகள் உடைகின்றன; அல்லது ஒருவரின் மண்டையாவது உடைகிறது. மூன்றாமவர் அவர்களுக்குள் நியாயத்தை எப்படித் தீர்த்துவிட முடியும்? சண்டை போடுகிறவர்கள் காயம் அடையக்கூடும் என்றே எதிர்பார்க்க வேண்டும்.

---

*லார்டு மார்லி (1838-1923): பிரிட்டிஷ் லிபரல் கட்சி ராஜீயவாதி; நூலாசிரியர். 1892 முதல் 1895 வரை பிரிட்டிஷ் அயர்லாந்து மந்திரியாக இருந்தார். 1905 முதல் 1910 வரை இந்தியா மந்திரியாகவும் இருந்தார். அக்காலத்திலேயே மிண்டோ-மார்லி அரசியல் சீர்திருத்தங்கள் இந்தியாவில் கொண்டு வரப்பட்டன. கிளாட்ஸ்டன், வால்டயர், ரூஸோ, பர்க், வால்போல் முதலிய பல ஐரோப்பிய அறிஞர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை எழுதியிருக்கிறார்.

பகுதி இரண்டு

# கிலாபத், ஒத்துழையாமை நாட்களில்

[*1919*-ஆம் ஆண்டு இந்தியாவின் சரித்திரத்தில் மிக முக்கிய மான சமயம். இந்திய மக்களில் எல்லாப் பகுதியினருமே நட வடிக்கையில் இறங்குவதற்குத் தயாராக இருந்தார்கள். முதல் உலக யுத்தம் முடிந்ததும் விலைவாசிகள் உயர்ந்ததால் விவசாயிகள் துன்பப்பட்டு வந்தனர். தொழிற்சாலைத் தொழிலாளரின் நிலைமை மோசமாக இருந்தது. அந்த ஆண்டு ஆரம்பத்தில், அதற்கு முன்னால் கண்டறியாத வகையில், எங்கும் வேலை நிறுத்தங்கள் நடந்து வந்தன. தோல்வியுற்ற துருக்கி கலிபா விஷயத்தில் பிரிட் டன் நடந்துகொண்ட விதத்தினால் முஸ்லிம்கள் ஆத்திரமடைந் திருந்தார்கள். அளித்த வாக்குறுதிப்படி பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்துகொள்ளாததைக் குறித்து காங்கிரஸ் வெறுப்படைந் திருந்தது.

அரசாங்கம், தன்மீது எங்கும் வெறுப்பு ஏற்பட்டிருந்ததை உணர்ந்து, ரௌலட் சட்டங்களைக் கொண்டு வந்தது. எங்கும் அடக்குமுறை ஆட்சியை நடத்தி மக்கள் எழுச்சியை அடக்கிவிடவும் முயன்றது. பஞ்சாபில் அடக்குமுறை அட்டூழியங்கள் நடந்தன. 1919 ஏப்ரல் 12-ஆம் தேதி அமிர்தசரஸ் ஜாலியன்வாலா பாக்கில் ஜெனரல் டயர் பொதுக்கூட்டத்தின்மீது குண்டுகள் தீரும் வரை யில் சுட்டு அட்டூழியம் செய்தான். அந்த நெருக்கடியான சமயத் திலும் பின்னால் நடந்த கிலாபத், ஒத்துழையாமை இயக்க காலத் திலும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்தி காந்திஜி எழுதிய கட்டுரைகளும், செய்த பிரசங்கங்களும் இப்பகுதி யில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.]

1

# ஒற்றுமைப் பிரதிக்ஞை

ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையைக் குறித்து காந்திஜி ஒரு துண்டுப் பிரசுரத்தைக் குஜராத்தியில் வெளியிட்டார். அதன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் பார்த்து அவரே அங்கீகரித்தார். அதுவே இங்கே கொடுக்கப்படுகிறது :

ஏப்ரல் 6-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஸோனுப்பூர் மசூதி மைதானத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஏராளமாகக் கூடியிருந்த ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடந்தது. அவமானத்தை உணர்ந்து பிரார்த்தனை செய்த நாள் அது. சௌபாத்தியில் நடந்த பொதுக்கூட்டத்தில் சுதேசிப் பிரதிக்ஞை செய்துகொண்டதைப் போன்று, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப் பிரதிக்ஞையை இக்கூட்டத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. இந்த இரு சமயங்களிலும் நான் ஓர் எச்சரிக்கையைச் செய்தாக வேண்டியிருந்தது. சந்தோஷ வெறி வந்துவிடும் போது, சில காரியங்களைச் செய்துவிட முற்பட்டுவிடுகிறோம். இதற்காகப் பிறகு நாம் வருத்தப்பட வேண்டியிருக்கிறது. பிரதிக்ஞை செய்துகொள்ளுவது என்பது தெய்விகமான காரியம். உணர்ச்சி வேகத்தில் நாம் இதைச்செய்துகொண்டுவிடக்கூடாது. புனிதமான மனத்துடனும் நிதானத்துடனும் கடவுளைச் சாட்சியாகக்கொண்டே நாம் பிரதிக்ஞை செய்துகொள்ள வேண்டும். சுதேசி விரதத்தைக் குறித்து நான் எழுதியவை யாவும் இதற்கும் பொருந்தும். சாதாரணமான தியாகத்தினுல் சாத்தியமாகாத காரியங்கள், பிரதிக்ஞை அல்லது விரதம் கொள்ளுவதனுல் சாத்தியமானவை ஆகின்றன. இதற்கு அசாதாரணமான தியாகம் அவசியமாகிறது. எனவே, விரதங்கள் நம்மை மேலுக்குக் கொண்டு போகமுடியும். ஹிந்து, முஸ்லிம் சமூகங்கள், பரஸ்பர நட்புடன் ஒன்றுபட்டிருக்க முடிந்தால், ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்களைப் போன்று ஒரு சமூகத்தினர் மற்றோர் சமூகத்தினரிடம் நடந்துகொள்ளுவதாயின், அதுவே பிரார்த்தனையுடன் விரும்பக்கூடியதான முடிவாகும். ஆனுல், இந்த ஒற்றுமை உண்மையானதாக ஆவதற்கு முன்னுல், இவ்விரு சமூகத்தினரும், இதுவரை கொண்டு வந்திருக்கும் கருத்துக்களில் அநேகவற்றை விட்டொழித்துத் தீவிரமான மாறுதலை அடைந்தாக வேண்டும். ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள், இன்னெரு சமூகத்தைப்பற்றிப் பேசும்போது சில சமயங்களில் ஆபாசமாகப் பேசிவிடுகின்றனர். இவ்விதம் செய்வது இரு சமூகத்தினரிடையேயும் விரோதத்தையே அதிகரித்துவிடுகிறது. ஹிந்து சமூகத்தில், முஸ்லிம்களைப்பற்றிப் பேசும்போது ஆபாசமான பாஷையை உபயோகிக்க நாம் தயங்குவதில்லை. அதே போலத்தான் முஸ்லிம்களும். முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்குமிடையே இயல்பாகவே

அழிக்க முடியாததான பகைமை இருந்து வருகிறது என்று சிலர் நம்புகின்றனர். ஒரு சமூகம் மற்றோர் சமூகத்தின் மீது அவநம்பிக்கை கொண்டிருப்பதைப் பல இடங்களில் பார்க்கிறோம். ஒருவரைக் குறித்து இன்னொருவருக்குப் பயம் இருந்து வருகிறது. இந்தக் காரணமில்லாத, மோசமான நிலைமை நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டும் வருகிறது என்பதிலும் சந்தேகமில்லை. காலப் போக்கும் கட்டுதிட்டமின்றி வேலை செய்துகொண்டு போகிறது. நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் நாம் சேர்ந்தே வாழ்ந்தாக வேண்டியிருக்கிறது. ஆனால், இப்பொழுது விரதம் ஏற்றுக்கொள்ளுவதன் நோக்கம், காலத்தின் முழு மாறுபாட்டினால் தானே வரும் என்று எதிர் பார்க்கப்படுவதை, தியாகத்தின் சக்தியினால் சீக்கிரத்தில் வரும்படிச் செய்வதே ஆகும். இது சாத்தியமாவது எப்படி? ஹிந்துக்களின், வைதிக ஹிந்துக்களின் கூட்டங்களைக் கூட்டி இவ்விஷயத்தை முக்கியமாக ஆலோசிக்க வேண்டும். முஸ்லிம் கள்மீது ஹிந்துக்கள் கூறி வரும் நிரந்தரமான புகார், அவர்கள் மாட்டிறைச்சி தின்கிறார்கள், பக்ரீத் நாளில் வேண்டுமென்றே பசுக்களைக் கொல்லுகிறார்கள் என்பது. பசுவைப் பாதுகாப்ப தற்கு என்று முஸ்லிம் சகோதரர்களைக் கொன்றுவிட ஹிந்துக் கள் தயங்காமலிருக்கும் வரையில், இப்பொழுது ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒற்றுமைப்படுத்துவது என்பது முடியாத காரியம். ஏனெனில், நமது பலாத்காரம், முஸ்லிம்கள் பசுக்களைக் கொல்லாமல் இருக்கும்படிச் செய்துவிடும் என்பது வீண் காரியம் என்று நான் கருதுகிறேன். அன்றாடம் கொல்லப்பட்டு வரும் பசுக்களின் தொகையை, நமது பசுப் பாதுகாப்பு ஸ்தாப னங்களின் முயற்சிகள் எந்தவிதத்திலும் குறைத்துவிட்டதாகவும் நான் எண்ணவில்லை. குறைத்துவிட்டதாக நான் நம்புவதற்கும் எந்தவிதக் காரணமும் இல்லை. நானும் ஒரு வைதிக ஹிந்து என்றே நம்புகிறேன். ஹிந்து தருமத்தைப் பிழையறப் பின் பற்றி நடக்கும் ஒருவர், பசுவைப் பாதுகாக்க என்று பசுவைக் கொல்லுபவரைக் கொன்றுவிடமாட்டார் என்றே திடமாகக் கருதுகிறேன். பசுவைப் பாதுகாப்பதற்கு ஹிந்துவுக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. பசு கொல்லப்படுவதை சகிக்க அவரால் முடியவில்லையென்றால், அதற்குப் பதிலாகத் தன்னைப் பலியிட்டு விடும்படி முன்வருவதுதான் அந்த ஒரே வழி. அறிவாளி களான ஒரு சில ஹிந்துக்கள் இவ்விதம் தங்களையே தியாகம் செய்துகொண்டு விடுவார்களானால், நம் முஸ்லிம் சகோதரர்கள் பசு வதையையே கைவிட்டுவிடுவார்கள் என்பதில் சந்தேக மில்லை. ஆனால், இதுதான் சத்தியாக்கிரகம்; இதுதான் நியாயம். என் சகோதரன் ஒரு குறைக்குப் பரிகாரம் செய்ய வேண்டுமானால், அவனுக்குத் துன்பம் விளைவிக்காமல் நானும் ஓரளவுக்குத் தியாகத்தை மேற்கொள்ள வேண்டியதைப் போன்றதே இதுவும். அதை, என் சகோதரனிடம் என் உரிமை யைக் கூறிக் கேட்க முடியாது. என் சகோதரனுக்கு எதிராக எனக்குள்ள ஒரே உரிமை, பலியாக என்னையே அளித்து

விடலாம் என்பதுதான். இந்த வகையிலான புனிதமான அன்பு உணர்ச்சியை ஹிந்துக்கள் அடைந்தால் மாத்திரமே, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை எதிர்பார்க்க முடியும்.

ஹிந்துக்கள் என்ன செய்ய வேண்டுமோ அதையே முஸ்லிம்களும் செய்யவேண்டும். முஸ்லிம் தலைவர்கள் ஒன்று கூடி, ஹிந்துக்கள் சம்பந்தமாகத் தங்கள் கடமை என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். இரு தரப்பாருக்கும் தியாக உணர்ச்சி ஏற்பட்டுவிடும்போது, ஒருவருக்கொருவர் தங்கள் உரிமைகளைக் குறித்து வற்புறுத்திக்கொண்டிருக்காமல் ஒருவர் மற்றொருவருக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்ய முற்படும்போது தான், இரு சமூகத்தினருக்குமிடையே நீண்ட காலமாக இருந்து வரும் வேற்றுமைகள் போகும். ஒரு மதத்தினர் இன்னொரு மதத்திற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்; அந்தரங்கத்தில்கூட இன்னொரு மதத்தைக் குறித்து கெட்ட எண்ணம் கொள்ளாமல் இருக்கவேண்டும். ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தினரைத் தூஷிப்பதை விட்டுவிடும்படி இரு சமூகத்தினரையும் பணிவுடன் கேட்டுக்கொள்ள வேண்டும். தீவிரமான முயற்சி எடுத்துக் கொண்டால் மாத்திரமே நமக்குள் இருந்துவரும் வேற்றுமைகளைப் போக்கமுடியும். இந்த முயற்சியில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஏராளமாகக் கலந்துகொண்டால்தான் நமது பிரதிக்ஞைக்குப் பலன் இருக்கும். இப்பிரதிக்ஞையின் முக்கியத்தையும் அவசியத்தையும் வேண்டிய அளவு தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறேன் என்றே நினைக்கிறேன். சத்தியாக்கிரக அலை நாடு முழுவதிலும் பரவியிருக்கும் இப்புனிதமான சந்தர்ப்பத்தில், இந்த ஒற்றுமை விரதத்தை நாம் எல்லோரும் மேற்கொள்ள வேண்டும். இதற்கு ஹிந்து, முஸ்லிம் தலைவர்கள் ஒன்றுகூடி இப்பிரச்னையைக் குறித்துத் தீவிரமாகச் சிந்தித்துப் பிறகு பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இப்பொழுது நாம் செய்துவரும் முயற்சியைத் தொடர்ந்து செய்து வருவோமானால், இக்காரியம் நிச்சயமாகப் பூரணமானதாகிவிடும். தனிப்பட்டவர்கள் இப்பொழுதுங்கூட இப் பிரதிக்ஞையைச் செய்துகொள்ளலாம் என்றும் நான் நினைப்பதுடன், தினமும் பலர் இவ் விரதத்தை மேற்கொள்ளுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன். என்னுடைய எச்சரிக்கையெல்லாம், ஏராளமானவர்கள் கூட பகிரங்கமாகப் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுவதைப் பற்றியே ஆகும். பொதுஜனங்கள் கூட்டமாக இப்பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுவதாயின், அது வருமாறு இருக்க வேண்டும் என்பது என் பணிவான கருத்து:

"ஹிந்துக்களும் முஸ்லிம்களுமாகிய நாங்கள், கடவுளைச் சாட்சியாகக்கொண்டு பின் வருமாறு உறுதி செய்துகொள்ளுகிறோம்: நாங்கள் ஒரே பெற்றோரின் குழந்தைகளைப் போன்று ஒருவர் மற்றொருவரிடம் நடந்துகொள்ளுவோம். நாங்கள் வேற்

றுமை இன்றி, ஒருவர் துயரங்களை மற்றொருவரின் துயரங்களாக எண்ணி, அவற்றைப் போக்கிக்கொள்ள ஒருவர் மற்றொருவருக்கு உதவி செய்வோம். ஒருவர், மற்றொருவரின் மதத்தையும் மத உணர்ச்சிகளையும் மதித்து நடந்துகொள்ளுவதோடு, அவரவர்களின் மதப் பழக்கவழக்கங்களுக்குக் குறுக்கே நிற்கமாட்டோம். மதத்தின் பெயரால் ஒருவர் மற்றொருவர் மீது பலாத்காரத்தை உபயோகிக்காமலும் இருந்து வருவோம்."

— 'எங் இந்தியா' - 7—5—1919

# 2

# கிலாபத் பிரச்னை*

*[1919 மே 9-ஆம் தேதி கிலாபத் பிரச்னையைக் குறித்து ஆலோசிப்பதற்காக அஞ்சுமன் ஜியா இஸ்லாமின் விசேஷக் கூட்டம் பாரிஸ்டர் ஸ்ரீ எப். டி. காதர்பாயின் தலைமையில் நடந்தது. ஏராளமான முஸ்லிம்கள் வந்திருந்தார்கள். காந்திஜி, ஸ்ரீமான்கள் ஜம்னாதாஸ் துவாரகதாஸ், சங்கரலால் பாங்கர் ஆகியவர்கள் விசேஷ அழைப்பின் பேரில் வந்தனர். ஸ்ரீ காதர்பாய் காந்திஜியை கூட்டத்திற்கு அறிமுகம் செய்துவைத்தார். ஹிந்துக்களும் முஸ்லிம்களும்*

---

* முதலாவது உலக மகாயுத்தம் முடிந்த பின் 1919-ஆம் ஆண்டில் பிரிட்டிஷார் பஞ்சாபில் புரிந்த ஜாலியன்வாலாபாக் படுகொலை முதலிய அட்டூழியங்களைப் போல், கிலாபத் பிரச்னையும் இந்திய மக்களின் மனக்கொதிப்பிற்குக் காரணமாக இருந்தது. கிலாபத் பிரச்னைக்குக் காரணம் இதுதான்: 1914-1918-இல் நடந்த யுத்தத்தில் இங்கிலாந்துக்கும் துருக்கிக்கும் போர் மூண்டது. துருக்கி ஓர் முஸ்லிம் நாடு அல்லவா? அந்தப் போரில் எந்த நாட்டை ஆதரிப்பது என்று தெரியாமல் இந்திய முஸ்லிம்கள் குழப்பத்தில் ஆழ்ந்தனர். துருக்கி மக்களையும் இஸ்லாமின் பிரதிநிதியும் பாதுகாவலருமான துருக்கி சுல்தான் கலிபாவையும் ஆதரிப்பதா? அல்லது ஒரு நூற்றாண்டுக்குமேலாக தாங்கள் எந்த ஆட்சியின் கீழ் இருந்து வருகிறார்களோ அந்தப் பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரிப்பதா? அவர்கள் மனத்தில் இந்தக் கேள்வி எழுந்தது. இஸ்லாமிய ஸ்தலங்கள் முஸ்லிம்களின் நிர்வாகத்தின் கீழ் வைக்கப்படும்; சமாதான உடன்படிக்கையில் தங்கள் மதத்தினரான துருக்கியருக்குச் சாதகமான ஷரத்துக்கள் சேர்க்கப்படும் என்ற நம்பிக்கையின் மீது பிரிட்டிஷ் அரசாங்கத்தையே ஆதரிப்பதென்று இந்திய முஸ்லிம்கள் முடிவு செய்தனர் இந்தியா வைஸ்ராயும், பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ லாயிட் ஜார்ஜும் கூறிய உறுதிமொழிகளை அடிப்படையாகக்கொண்டே அவ்வாறு முடிவு செய்தார்கள். அரேபியா, மெசபொடேமியா, ஜெட்டா முதலிய இடங்களில் உள்ள புனித முஸ்லிம் ஸ்தலங்கள் பாதிக்கப்படமாட்டா என்று அவர்கள் உறுதி கூறினர். அவ்விதம் உறுதி கூறிய பிரிட்டிஷ் அரசாங்கம் யுத்தத்தில் இந்திய முஸ்லிம்களின் ஒத்துழைப்பைப் பெற்றது. ஆனால், யுத்தம் முடிந்த பின் பிரிட்டிஷ் அரசாங்கம் தான் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றாமல், துருக்கிக்குக் கடுமையான நிபந்தனைகளை விதிக்க முற்பட்டது. துருக்கி சாம்ராஜ்யத்தின் ஆசியா பகுதிகளை பிரிட்டனும் பிரான்சும் பங்கு போட்டுக்கொண்டன. அதைக் கண்டித்து இந்திய முஸ்லிம்களுடன் ஹிந்துக்களும் சேர்ந்து கொண்டார்கள். னவே, கிலாபத் பிரச்னை அகில இந்தியப் பிரச்னையாகியது.

வேற்றுமை நீங்கி ஒருமித்து வாழ வேண்டும் என்பதற்காக காந்திஜி தமது வாழ்நாளெல்லாம் பாடுபட்டு வந்திருக்கிறார் என்றும், தென்னாப்பிரிக்காவில் அவர் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டம் முக்கியமாக முஸ்லிம்களுக்காகவே என்றும், ஏனெனில், அங்கே இந்தியரின் வர்த்தகத்தில் முக்கால்வாசி, முஸ்லிம்களின் கையில் இருக்கிறதுஎன்றும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக இப்பல்லாண்டுகள் முயன்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் செய்ய முடியாத காரியத்தைக் காந்திஜி ஒரே நாளில் செய்துவிட்டார் என்றும் ஸ்ரீ காதர்பாய் கூறினார். பிறகு காந்திஜியைப் பேசுமாறு கேட்டுக் கொண்டார். அங்கே காந்திஜி பேசியதன் சாரமே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

என்னைக் குறித்து கூட்டத்தின் தலைவர் கூறியது உண்மையானது. ஏனெனில், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருக்கும் வேற்றுமை நீங்கியாக வேண்டும் என்ற ஆர்வம் வாலிபப் பருவத்திலிருந்தே எனக்கு இருந்து வருகிறது. நான் தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது முஸ்லிம் சகோதரர்களுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஒரு முஸ்லிமின் வழக்கிற்காகவே நான் அங்கே சென்றேன். அங்கே நான் இருந்தபோது, அவர்களுடைய பழக்க வழக்கங்கள், எண்ணங்கள், அபிலாஷைகள் ஆகியவைகளை அறிந்துகொண்டேன். 1914-இல் தென்னாப்பிரிக்காவிலிருந்து கப்பலேறி ஆகஸ்டு 6-ஆம் தேதி லண்டன் போய்ச் சேர்ந்தேன். அது, இங்கிலாந்திற்கும் ஜெர்மனிக்கும் யுத்தப் பிரகடனமாகி இரண்டு நாள் கழித்து. அப்பொழுது துருக்கி யாருடன் சேரும் என்பதைப் பற்றிய ஹேஷ்யங்களைக்கொண்ட பல கட்டுரைகளை 'டைம்ஸ்' பத்திரிகையில் படித்தேன். லண்டனிலிருந்த முஸ்லிம்களும் இது சம்பந்தமாகப் பரபரப்படைந்திருந்ததைக் கண்டேன். துருக்கி, ஜெர்மனியுடன் சேர்ந்துவிட்டது என்ற செய்தியை ஒரு நாள் காலை பத்திரிகைகளில் படித்தோம். துருக்கிப் பிரச்னையைக் குறித்து ஆராய்ந்து, எது சரி, எது தவறு என்று ஒரு முடிவுக்கு வருவதற்கு அச்சமயம் எனக்கு அவகாசம் இல்லை. இந்தக் கொந்தளிப்பிலிருந்து இந்தியா பாதுகாக்கப்பட வேண்டும் என்று மாத்திரமே பிரார்த்தித்தேன். திரியோலிடன் யுத்த சம்பவங்களைக் குறித்து தென்னாப்பிரிக்காவிலிருந்த முஸ்லிம் நண்பர்களுக்கு விளக்க வேண்டியிருந்ததாலும், அவர்களுடைய உணர்ச்சியை நான் அறிந்திருந்ததாலும், துருக்கி செய்த முடிவு சம்பந்தமாக முஸ்லிம்களின் உணர்ச்சி எதுவாக இருக்கும் என்பதை அறிவதில் எனக்கு எவ்விதக் கஷ்டமும் இல்லை. அவர்களின் நிலைமை அதிகக் கஷ்டமானதாயிற்று. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, துருக்கிப் பிரச்னை ஆகியவைகளைப் பற்றிய எண்ணத்துடன் அடுத்த ஆண்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தேன். இப்பிரச்னைகளுக்குத் தக்க பரிகாரங்களைத் தேடுவது என்று எண்ணிக்கொண்டும் வந்தேன். ஹிந்து-முஸ்லிம்களுக்கிடையே

நிரந்தரமான ஒற்றுமை, சத்தியாக்கிரகம் ஆகிய இரண்டுக்குமே என் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன். சத்தியாக்கிரகம் விசாலமான துறைக்குள்ளதாகையால் அதில் எனது ஈடுபாடு அதிகமாக இருக்கக்கூடும். எல்லாவற்றிற்குமான இயக்கமே சத்தியாக்கிரகம். சத்தியாக்கிரக தருமத்தை நாம் ஒப்புக்கொண்டுவிடுவதாயின், ஒற்றுமை தானே ஏற்பட்டு விடும். 'சென்ற யுத்தத்திலிருந்து எழுந்திருக்கும் முஸ்லிம்களின் பிரச்னையைச் சரியானபடி தீர்ப்பதற்கு நான் என்ன உதவி செய்ய முடியும்?' என்பதற்கே நான் இன்று பதில் சொல்ல வேண்டும். நான் இந்தியாவுக்கு வந்த பிறகு, நல்ல முஸ்லிம் தலைவர்களைக் கண்டுகொள்ள ஆரம்பித்தேன். நான் டில்லியை அடைந்ததும் என் ஆசை பூர்த்தியாயிற்று. அலி சகோதரர்களைக் கண்டு கொண்டேன். அவர்களை அதற்கு முன்னாலேயே அறியும் பாக்கியம் எனக்கு இருந்தது. எங்களுக்கிடையே அது, கண்டதும் காதல் கொண்ட விஷயமே! டாக்டர் அன்சாரியைச் சந்தித்ததால், அறிந்த முஸ்லிம் நண்பர்களின் வட்டாரம் எனக்கு விசாலமாயிற்று. லட்சுமணபுரியைச் சேர்ந்த மௌலானா அப்துல் பாரியும் அந்த வட்டாரத்தில் சேர்ந்தவர். இந்த நண்பர்களுடனும், இந்தியா முழுவதிலும் மற்றும் பல முஸ்லிம்களுடனும் முஸ்லிம் பிரச்னையைக் குறித்து விவாதித்திருக்கிறேன். இப் பிரச்னை எல்லாவற்றையும்விடப் பெரியது, ரௌலட் சட்டம் ரத்தாவதையும்விடப் பெரியது என்று உணருகிறேன். ஏனெனில், இவ்விஷயம் கோடிக்கணக்கான முஸ்லிம்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்துவதாக இருக்கிறது. இதில் முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும்கூட அதிகச் சிரத்தை கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதான உண்மையாகும். இப் பிரச்னையில் ஏகாதிபத்திய அரசாங்கத்தின் நோக்கம் சம்பந்தமாக முஸ்லிம்களின் மனத்தில் சந்தேகம் பலமாக வேரூன்றியிருக்கிறது. நிலைமை எவ்வளவு நெருக்கடியானதாக இருக்கிறது என்பதை வைஸ்ராய் கவனிக்காது போகவில்லை என்றாலும், முஸ்லிம்களின் உணர்ச்சி சமாதானம் அடைவதற்குப் பிரிட்டிஷ் கொள்கையை வெளியிட்டாக வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன்.

நான் அறிந்தவரையில் இதில் மூன்று விஷயங்கள் அடங்கியிருக்கின்றன: முதலாவது, கிலாபத்தையும், துருக்கி யாரிடம் இருப்பது என்பதையும் பற்றியது. இரண்டாவது, புனித ஸ்தலங்களான மெக்கா, மெடினாவைப் பற்றியது. மூன்றாவது, பாலஸ்தீனம் சம்பந்தமானது. சுருங்கச் சொன்னால், யுத்தத்திற்கு முன்னாலிருந்த நிலைமையே இனியும் இருந்து வர வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். முஸ்லிம் நாட்டு மக்களுக்கு, ஆட்சியும் மத அதிகாரமும் ஒன்றுக்கொன்று சேர்ந்தே இருக்கின்றன. ஆகையால், துருக்கியை எந்தவிதத்திலும் சிதைத்து விடக்கூடாது என்பது முஸ்லிம்களின் உணர்ச்சியாக இருப்பதை நான் புரிந்துகொள்ளுகிறேன். ஆனால், முஸ்லிம்கள்

கேட்பது என்ன என்பதற்கு எவ்விதமான அதிகாரபூர்வமான அறிக்கையுமே இதுவரை இல்லை என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையும் வேறு சிலரும் கூறுகிறார்கள். செய்யாது போயிருக்கும் இக் காரியத்தை நீங்கள் மாத்திரமே செய்ய முடியும். கேட்கும் உரிமை இன்னது என்பதைச் சொல்லியாக வேண்டும். முஸ்லிம்கள் கோருவதைப் பாரபட்சமற்ற, நியாயமான முறையில் எடுத்துச் சொல்ல வேண்டும். நியாயமாகவும் பாரபட்சமற்றும் இவ் விஷயத்தைக் கவனிக்கிறவர்களுக்கும் தெரியும் வகையில் உங்களுடைய குறைந்த பட்சக் கோரிக்கையை நீங்கள் தெரிவித்துவிட வேண்டும் என்பதே என் பணிவான அபிப்பிராயம். காலம் வேகமாகக் கடந்துகொண்டு வருகிறது. விரும்பத்தக்க வழியில் உடனே நடவடிக்கை எடுத்துக்கொண்டாலன்றி பிறகு காலங் கடந்ததாகிவிடும். ஏனெனில், சர்வ தேச சங்கம், அதன் முடிவுகளினால் சாதக பாதகமடையக்கூடிய உலக நலன்களின் கருத்தை அனுசரித்து காரியங்களைச் சாத்தியமான அளவு துரிதமாகச் செய்துகொண்டு போகிறது. உங்கள் கோரிக்கையைப் பற்றிய அறிக்கையைத் தயாரித்த பிறகு அதை அமலுக்குக் கொண்டு வருவது எப்படி என்பதையும் நீங்கள் பார்க்க வேண்டும்.

ஹிந்துவாகிய நான், முஸ்லிம்களின் பிரச்னையைக் குறித்து சிரத்தை எடுத்துக்கொள்ளுவானேன் என்று கேட்கலாம். நீங்கள், என் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள்; என் நாட்டினர். உங்கள் துயரத்தில் பங்குகொண்டாக வேண்டியது என் கடமை. இதுவே அக் கேள்விக்குப் பதில். ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி நான் பேசிக்கொண்டு, அதே சமயத்தில் சோதனை வரும்போது என் கடமையை நான் செய்யாமல் இருந்துவிட முடியாது. டில்லியில் நடந்த யுத்த மகாநாடு முடிந்தவுடனேயே வைஸ்ராய்க்கு நான் எழுதிய கடிதத்தில்* முஸ்லிம்கள் பிரச்னையைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதிலிருந்து, சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம், என்னுடைய கருத்தை உரிய இடங்களுக்கு எடுத்துச் சொல்ல நான் தவறியதே இல்லை. உங்களுடைய கோரிக்கை எந்தவிதத்தில் அமலாக்கப்படும் என்பதை இப்பொழுது நான் கவனிக்க வேண்டியதாகிறது. இயல்பாகவே அரசாங்கத்தினிடம் முறையிட்டுக் கொள்ளுவது வழக்கமான வழி. சில சமயங்களில் அரசாங்கம் நம் கருத்துக்கு மாறான கருத்தைக் கொள்ளுகிறது. அந்த நிலைமையில் நாம் செய்யப் போவது என்ன? நமக்கு வாக்குரிமை இருந்து பொறுப்பாட்சியும் இருந்து வருமாயின், நமது வாக்குரிமையைக்கொண்டு அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து விரட்டி விடலாம். நமது எண்ணத்தை உணரும்படிச் செய்வதற்குள்ள அத்தகைய சரியான முறைகள்

*வைஸ்ராய்க்குக் காந்திஜி எழுதிய இக் கடிதத்தின் முழு விவரத்தையும் 'மகாத்மா காந்தி நூல்கள்' — 3-ஆம் தொகுப்பு 574–577–ஆம் பக்கங்களில் காண்க.

இல்லாதபோது, நாம் செய்யப் போவது என்ன? அரசாங்கம் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்றே மறுத்து விடும்போது, ஆத்திரமடைந்துவிடும் மக்கள் பலாத்காரச் செயல்களில் இறங்கிவிடுகிறார்கள். சாதாரணக் கிளர்ச்சியால் பல னில்லாது போய்விடும்போது இதற்குள்ள ஒரே பரிகாரம் பலாத் காரமே என்று சிலர் நம்புகிறார்கள் என்பதையும் அறிவேன். இது வெகு நீண்ட காலப் பரிகாரம். இது காட்டுமிராண்டித் தனமானது என்று நான் கருதுகிறேன். மக்களின் முன்பும், அரசாங்கத்தின் முன்பும் மற்றோர் விதமான பரிகாரத்தை வைக்க நான் முயன்றுகொண்டிருக்கிறேன். எந்த உருவிலான, முறையிலான பலாத்காரத்தையும் இப்பரிகாரம் தவிர்த்துவிடு கிறது. பலாத்காரத்தைவிட இது நிச்சயமாக அதிக வெற்றி கரமானது. நமது உரிமைகளை வலியுறுத்துவதற்காகப் பலாத் காரத்தில் இறங்குவது நியாயமல்ல என்று நான் கருதுகிறேன். கொல்லுவதைவிட செத்துப் போவது எவ்வளவோ பெருமை வாய்ந்தது. பாரி சாஹிபுடன் நான் பேசியிராதிருந்தால், ஆழ்ந்த மத சம்பந்தமான இவ் விஷயத்தைக் குறித்து உங்களிடம் பேசுவதற்கே தயங்கியிருப்பேன். ஆனால், அவர், திருக்குரானில் சத்தியாக்கிரகத்திற்குப் போதுமான ஆதாரம் இருக்கிறது என்று உறுதி கூறினார். சில குறிப்பிட்ட சந்தர்ப் பங்களில் பலாத்காரம் அனுமதிக்கப்படுகிறது என்றாலும், பலாத் காரத்தைவிட கடவுளுக்குப் பிரியமானது தன்னடக்கமே, அதுவே அன்பின் நியதி என்று குரானுக்குக் கூறிய விளக்கத்தை யும் அவர் அங்கீகரித்தார். அந்த நியதியே சத்தியாக்கிரகம். மனி தனின் குறைபாட்டை முன்னிட்டுச் சலுகையாக ஏற்கப்பட்டது பலாத்காரம்; சத்தியாக்கிரகமோ, மனிதனின் கடமை. அனுப வத்தைக் கொண்டு பார்த்தாலும், பலாத்காரம் நிச்சய மான தீமையைத்தான் செய்ய முடியுமேயன்றி நன்மையைச் செய்ய முடியாது. அகமதாபாத்திலும் விரம்காமிலும்* இதைப் பார்த்திருக்கிறோம். மேற்கொண்டும் உதாரணத்தை ஞாயிற்றுக்கிழமை நீங்கள் காணலாம். பட்டினி விரதமிருந்து பிரார்த்தனை நடத்தி சத்தியாக்கிரக ஹர்த்தால் நடத் தும்படி நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். கௌர விப்பதற்கும், துக்கத்திற்கும், ஆட்சேபத்திற்குமான அதில் நீங்கள் எல்லோரும் கலந்துகொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன். சிறந்த முறையில் இந்தியாவுக்குச் சேவை செய்த ஓர் ஆங்கிலே யரை† கௌரவிப்பதற்கும், அவர் நாடு கடத்தப்பட்டு விட்ட

*ரௌலட் சட்டங்களை எதிர்த்து 1919 ஏப்ரல் 6-ஆம் தேதி முதல் முதலில் நாடெங்கும் ஹர்த்தால் ஆரம்பமானபோது அகமதாபாத்திலும் விரம்காமிலும் நடந்து விட்ட கலவரங்களையே இங்கே காந்திஜி குறிப்பிடுகிறார். அனுசூயாபென்னைக் கைது செய்துவிட்டார்கள் என்ற வதந்தி பரவவே, தொழிலாளர் ஆத்திரமடைந்து வேலை நிறுத்தஞ் செய்து பலாத்காரச் செயல்களில் இறங்கி, ஒரு சார்ஜண்டை அடித்துக் கொன்றுவிட்டனர். விரம்காமில் ஓர் அதிகாரி கொல்லப்பட்டார்.

† 'பம்பாய் கிரானிகிள்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த பிரபல பத்திரிகை யாளரான ஸ்ரீ ஹார்னிமன் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டுவிட்டதையே காந்திஜி இங்கே குறிப்பிடுகிறார்.

ஒரு முடிவுக்கு வராது போகலாம். அதன் பேரில் அவர், அமைதியான உறுதியுடன், எந்தவிதமான தயக்கமும் இன்றி, "ஹிந்துக்களாகிய உங்களுக்கு நாங்கள் உதவி செய்து, நியாயத்தையும் செய்யாது போனால், நீங்கள் தீவிரமாக என் மதத்தினருக்கு உதவவேண்டும் என்று கேட்கவோ. அதைப் பெறவோ எனக்கு உரிமை இல்லை" என்றார். இதற்கு நான், "பேரம் பேசும் உணர்ச்சியுடன் நான் பேசுவதாக நீங்கள் நிச்சயமாகக் கணமும் கருதக்கூடாது. பசுவைக் கொல்லும் விஷயத்தை அதன் தகுதியைக் கொண்டு முடிவு செய்துகொள்ளலாம். நம்மிடையே பாரபட்சமற்று விவாதிப்பதற்கு வேண்டிய நட்பு நமக்குள் ஏற்படும்வரையில், முடிவுக்கு வருவதில் காத்திருக்கலாம் என்பதே நீங்கள் இப்பொழுது தெரிவித்திருக்கும் கருத்தில் அடங்கிய விஷயமாகும்" என்றேன். நான் இவ்வாக்கியத்தை முடித்தவுடனேயே அவர் குறுக்கிட்டுக் கூறியதாவது: "தயவு செய்து மன்னியுங்கள். எங்கள் கட்சி நியாயமானது என்பதனாலும், ஒரே மண்ணில் பிறந்த சகோதரர்கள் என்பதனாலும், பிரதிபலன் என்ன கிடைக்கும் என்பதைப் பாராமல் எங்களுக்கு உதவியளிக்க நீங்கள் விரும்புகிறீர்கள். ஆனால், எங்களுக்கும் ஒரு கடமை இருக்கிறதல்லவா? எடுத்துக்கொள்ளுவதே தவிர எதுவும் கொடுப்பதில்லை என்றிருந்தால், இஸ்லாம் சிதறி அழிந்துவிடும். எல்லாவற்றையும்விட இஸ்லாம் நன்றியறிதலுடன் இருக்கவேண்டும். அக்கம் பக்கத்தாரிடம் கண்டிப்பாக, நியாயமாக, நடந்து கொள்ள வேண்டும் என்பது எங்கள் தருமத்தினிடமுள்ள பெருமை. இங்கோ, பிறருடைய சேவையைப் பெற்றுக்கொள்ளுவது என்றாகிறது. தங்களிடம் முஸ்லிம்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைக்கொண்டே ஹிந்துக்கள், எங்கள் மத தருமத்தைக் குறித்து மதிப்பிடுவார்கள். அவர்கள் அப்படிச் செய்வதே நியாயம். உங்களிடமிருந்து நாங்கள் எதையாவது எடுத்துக்கொண்டால், நாங்களும் ஏதாவது கொடுக்க வேண்டும்."

சிறந்த படிப்பு, உண்மையான ஞானம், அடக்கம் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட மத சிரேஷ்டரிடம் நான் பேசிக்கொண்டிருந்த அற்புதமான சம்பாஷணையின் மிகச் சிறு பகுதியையே நான் கொடுத்திருக்கிறேன். மௌலானா, தாம் சொன்னபடி நடந்து வந்தார். பசு வதை செய்யாமலிருப்பதன் அவசியத்தைக் குறித்து தமது சீடர்களிடமும் அவர் உபதேசித்து வந்தார். எல்லா நாட்களிலும் இஸ்லாமுக்கு மிகப் புனிதமான நாளான இன்று அவர் ஹிந்துக்களைக் குறித்து எண்ணி எனக்கு வருமாறு தந்தியும் கொடுத்திருக்கிறார்: "ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் கொண்டாடுவதற்காக பிராங்கி மகாலில் இந்த பக்ரீத் பண்டிகையில் பசு கொல்லப்படவில்லை-அப்துல் பாரி." நான் வருமாறு பதில் தந்தி கொடுத்தேன்: "உங்கள் தியாகத்திற்காக நான் அதிக ஆனந்தமடைகிறேன். 'இத் முராபத்'தை ஏற்றுக் கொள்ளப் பிரார்த்திக்கிறேன்."

ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், யூதர்கள் ஆகிய எல்லா இனத்தினருக்கும் இதே போன்ற தரும குணத்தையும், நியாய புத்தியையும், விசால நோக்கத்தையும் கடவுள் அருளுவாராக. அப்பொழுது உலகம் எவ்வளவோ மேன்மையாக இருக்கும்.

—'எங் இந்தியா' - 10-9-1919

# 4

# பம்பாய் கிலாபத் பொதுக்கூட்டத்தில்

*[1919 செப்டம்பர் 18-ஆம் தேதி பம்பாய் முஸ்லிம்களின் பொதுக்கூட்டமொன்று இரவு 8-30 மணிக்கு நடந்தது. கிலாபத்தையும் இஸ்லாம் புண்ணிய ஸ்தலங்களையும் பாதுகாப்பதைப் பற்றியும், அப்பொழுதுள்ள இஸ்லாமிய நிலைமையைக் குறித்தும் மேற்கொண்டும் ஆலோசிப்பதற்காகவே அக்கூட்டம் நடந்தது. கூட்டத்தினரும், கூட்டத் தலைவரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, துருக்கியைப் பற்றிய தீர்மானத்தின் பேரில் காந்திஜி குஜராத்தியில் பேசியதே கீழே கொடுக்கப்படுகிறது:]*

இக்கூட்டத்திற்கு வர முடிந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். என்னை இதற்கு அழைத்ததற்காக நன்றி செலுத்துகிறேன். விவாதிக்க நாம் இன்று கூடியிருக்கும் விஷயம் புதியது அன்று. நான் இந்தியாவுக்குத் திரும்பியதிலிருந்து, பல தரப்பட்ட அபிப்பிராயங்களுள்ள முஸ்லிம்களுடனும் நான் பழகி வருகிறேன். எல்லாப் பிரச்னைகளிலும் இது முக்கியமான பிரச்னை என்பதை அறிவேன். அதற்குச் சரியான பரிகாரம், நாட்டின் எதிர்கால அமைதியைப் பொறுத்திருக்கிறது. ஆகையால், இப்பிரச்னை இந்தியாவிலுள்ள முஸ்லிம்களை மாத்திரமல்ல, ஹிந்துக்களையும் மற்றவர்களையும்கூட பாதிப்பதாக இருக்கிறது. இது மிகப் பெரிய சாம்ராஜ்யப் பிரச்னை. எனவே, சட்டசபையில் பேசிய வைஸ்ராய், அவர் பேசிய 55 நிமிட நேரத்தில் ஒரு நிமிடம் மாத்திரமே இதைக் குறித்துப் பேசியதைப் பற்றி நான் அதிக மனவேதனை அடைந்தேன். பயனுள்ள வகையிலும், நியாயமாகவும் அவர் உத்தரவை மாற்றியிருக்கலாம். இந்தப் பிரச்னை எவ்வளவு ஆபத்தானது என்பதைக் குறித்து, நான் பகிரங்கமாகவும் மரியாதையோடும் அவருக்கு எச்சரிக்கை செய்துமிருக்கிறேன். இஸ்லாமிலிருக்கும் புனிதமானவை யாவும் இதில் பிணைபட்டு இருக்கின்றன. தங்கள் மத கௌரவத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்றால் ஹிந்துக்களுக்கு என்ன உணர்ச்சி இருக்கும் என்பது எனக்குத் தெரி

யுமாகையால், உங்களுக்கு இருந்துவரும் உணர்ச்சியையும் நான் காண்கிறேன். இப்பொழுது உங்களுக்கு கிலாபத்தே எல்லாவற்றிலும் முக்கியமானதாக இருக்கிறது. ஆகையால், உங்களுடைய இந்த நியாயமான போராட்டத்தில் ஹிந்துக்கள் எல்லோருமே உங்களுடன் இருப்பார்கள் என்பது நிச்சயம். உங்களுடைய நியாயத்தை வைஸ்ராய் எடுத்துக் கூறுவதோடல்லாமல், சமாதான மகாநாட்டின் முன்பு உங்கள் தூது கோஷ்டி போகவும் அனுமதி பெற அவர் பாடுபட வேண்டும் என்று சமீபத்தில் நான் எழுதிய கட்டுரையில் வைஸ்ராயைக் கேட்டுக் கொண்டேன். இது நல்லதே. ஆனால், இது மாத்திரம் போதாது. உங்களுக்கு இருக்கும் உணர்ச்சி அவருக்கும் இருக்க வேண்டும். உங்கள் கட்சியை அவர் தமது கட்சியாக்கிக்கொண்டுவிட வேண்டும். வைஸ்ராயும், ஸ்ரீ மாண்டேகுவும் * உங்கள் உணர்ச்சியை சரியாக அறிவார்களானால், உங்களுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் இப்பிரச்னையைத் தீர்க்காது போனால், தாங்கள் வகிக்கும் பதவிகளிலிருந்து விலகிவிடுவதாகப் பிரிட்டிஷ் மன்னருக்கு அறிவித்து விட வேண்டும். மன்னரின் மந்திரிகள், பெரிய முஸ்லிம் நலனுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பவர்களாக இருப்பதால் இவ்விஷயத்தில் நியாயம் கிடைக்கப் பாடுபடக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஓரளவுக்குப் பொறுப்பாட்சியைப் பெறும் தறுவாயில் நாம் இருந்து வருகிறோம். இது, முஸ்லிம் உணர்ச்சியை மதிக்காதிருப்பதற்கு முற்றிலும் பொருந்தாததாகும். இந்த மேடை மீது இருக்கும் தலைவர்கள், இக்கூட்டத்திலிருப்போர் ஆகியவர்களின் அசிரத்தை விஷயத்தில் எனக்குப் பயமிருப்பது போல, மந்திரிகளின் அசிரத்தையில் எனக்கு அவ்வளவு பயம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். எப்படியாவது எல்லாம் ஒழுங்காகிவிடும் என்று கோடிக் கணக்கான முஸ்லிம்கள் இன்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இன்று நீங்களும் நானும் நம் கடமையைச் செய்யத் தவறி விடுவோமாயின், நியாயமாகவே நாம் அவர்களுடைய சாபத்திற்குத்தான் ஆளாவோம். எதுவும் சரியானபடி நடக்கவில்லை என்று அவர்கள் காணும்போது, அவர்களுக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்படும். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கெட்டிக்காரர்கள்; தந்திரசாலிகள். உண்மையிலேயே நாம் தீவிரமான சிரத்தையுடன்தான் இருக்கிறோமா, அல்லது விளையாட்டாக இருந்து வருகிறோமா என்பதை அவர்கள் சீக்கிரத்தில் கண்டுகொண்டு விடுவார்கள். ஆகையால், இதில் உண்மையிலேயே அதிக சிரத்தையுடனேயே இருக்கிறீர்களா என்று உங்களைக் கேட்கிறேன். இவ்விஷயத்தில் அதிகக் கவலையுடனேயே இருக்கிறீர்கள் என்றால், நாம் இன்னும் இழந்துவிடவில்லை என்பதை நீங்கள் நம்புங்கள். லார்டு ஆம்திலையும் மற்றவர்களையும் போன்ற கனவான்கள், உங்கள் கட்சியை எடுத்

* ஸ்ரீ மாண்டேகு அச்சமயம் இந்தியா மந்திரியாக இருந்தவர்.

துக் கூறி வாதாடி வருகின்றனர். அந்த நல்ல ஆங்கிலேயரான ஸ்ரீ ஆண்டுரூஸிடமிருந்து நீங்கள் ஒரு கடிதத்தைத்தான் பார்த்திருக்கிறீர்கள். உங்களுக்காக அவர் இடைவிடாது செய்து வரும் முயற்சிகளில் மிகச் சொற்பமானதே அது என்பதையும் உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். ஆனால், இதில் நீங்கள் உணர்ச்சி பெருவிட்டால் ஸ்ரீ ஆண்டுரூஸின் சேவையும், நான் கூறிய மற்ற ஆங்கிலேயரின் சேவைகளும் ஒன்றுக்கும் பயனில்லாது போய்விடும். பிரார்த்தனையுடன் ஆரம்பித்தீர்கள்; பிரார்த்தனையுடன் முடிக்கப் போகிறீர்கள். எப்பொழுதும் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு சாட்சியாக இருந்து வரும் கடவுளை நாம் ஏமாற்றிவிட முடியாது. உங்கள் கட்சி நியாயமானது என்பதைத் உலகத்திலுள்ள சிறந்தவர்கள் எல்லோருமே ஒப்புக்கொள்ளுகிறார்கள். நீங்கள் நியாயமானவர்களாக இருக்கிறீர்களா? இதில் மனப்பூர்வமாகவும் இருந்து வருகிறீர்களா? இதற்குச் சோதனை எளிதானது. மனப்பூர்வமான, உண்மையான மனிதன், லட்சியத்திற்காகத் தன்னையே தியாகம் செய்துவிடத் தயாராயிருக்கிறான். லட்சியத்திற்காகத் தியாகஞ் செய்ய நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? உங்கள் சுகபோகம், வசதிகள், வியாபாரம் ஆகியவைகளையும், உங்கள் உயிரையுங்கூட தியாகஞ் செய்துவிட நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? அப்படியானல் நீங்கள் சத்தியாக்கிரகிகள்; நீங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள். ரகசியமான பலாத்காரம் சில சமயங்களில் சத்தியாக்கிரகம் ஆகாதா என்று சில சமயங்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் என்னிடம் வந்து கேட்கிறார்கள். பலாத்காரம். ரகசியமானதாயினும், பகிரங்கமானதாயினும், அது சத்தியாக்கிரகத்திற்கு நேர் விரோதமானது என்று நான் பதில் சொன்னேன். நியாயமான ஒரு லட்சியத்துடன் பூரணமான அமைதியும் திடமான உறுதியும் கலந்துவிடுமானல், எப்பொழுதும் நிச்சயமாக வெற்றி வந்தே தீரும். லட்சியத்திற்காகச் சாவது மனிதனின் தருமம்; கொல்லுவதோ மிருக தருமம்.

—'எங் இந்தியா' – 20—9—1919

## 5

# முஸ்லிம் மகாநாட்டின் வேண்டுகோள்

1919 அக்டோபர் மாதம் 17-ஆம் தேதி வெள்ளிக்கிழமை உபவாசம் இருந்து பிரார்த்தனை செய்யும் நாளாகக் கொண்டாடும்படி, லக்ஷ்மணபுரியில் கூடிய முஸ்லிம் மகாநாடு பறையறைந்து சேட்டுக்கொண்டுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் எல்லாம் விரைவில் செய்யப்படும். இது கிலாபத் நாள் என்று கருதப்படும். கிலாபத் பிரச்னை என்ன என்பதும், முஸ்லிம்களின் வாதம் எவ்வளவு நியாயமானது என்பதும் ஸ்ரீ ஆண்டுரூஸின்

கடிதத்திலிருந்து தெளிவாகிறது. துருக்கிக்கு நியாயம் வழங்கும்படி செய்ய முடியாவிட்டால், ஸ்ரீ மாண்டேகுவும் லார்டு செம்ஸ்போர்டும் தம் பதவிகளை ராஜிநாமாச் செய்துவிட வேண்டுமென நான் கூறியதை இவர் ஏற்றுக்கொள்ளுகிறார். ராஜிநாமாக்களையும் எதிர்ப்புக்களையும்விட நியாய புத்தி படைத்தவர்களின் பிரார்த்தனையே மேலானது. ஆதலால், நான் லக்ஷ்மணபுரித் தீர்மானத்தை வரவேற்கின்றேன்.

ஆன்மாவின் வேண்டுகோளைப் பிரார்த்தனை வெளிக்காட்டுகிறது. உயர்ந்த நிலையிலிருந்து பயனுள்ள விதத்தில் பிரார்த்தனை செய்ய உபவாசம் ஆன்மாவிற்கு உதவியளிக்கிறது. தேசீய உபவாசமும் தேசீயப் பிரார்த்தனையும் வேலை நிறுத்தத்துடன் சேர்ந்தே நடைபெற வேண்டும் என்பது என் எண்ணம். ஆதலால் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று எவ்விதத் தயக்கமுமின்றி நான் யோசனை கூறுகின்றேன். ஆனால், ஒன்று. வேலை நிறுத்தத்திலே, அமைதியும் கண்ணியமும் இருக்க வேண்டும்; பிறரது கட்டாயமின்றிச் சுயமாய் அது நடக்க வேண்டும்.

ஹிந்துக்களும் வேறு மதத்தினரும் முஸ்லிம்களான தங்கள் சகோதரர்களுடன் இதில் கலந்துகொள்ள வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையை உண்டுபண்ணுவதற்கு, இதுதான் மிக எளிய, நிச்சயமான வழி. நட்பின் உரிமை, உடனிருந்து அளவளாவுவதே; இடுக்கண்தான் நட்பின் தகுதியை எடுத்துக்காட்டும் அக்கினிப் பரீட்சை. முஸ்லிம்களின் துயரங்களில் தாங்களும் பங்குகொள்ளுகிறார்கள் என்பதை லட்சக்கணக்கான ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்குக் காட்ட வேண்டும்; இதில் அரசாங்கமும் பொது மக்களுடன் கலந்து கொள்ள வேண்டும்; தங்களுடைய உணர்ச்சிகளை அமைதியாக வெளிக்காட்டுவதில் உற்சாகமூட்டி இதனை அவர்கள் ஒழுங்குபெற நடத்த மக்கள் உதவ வேண்டும். இது எனது விநயமான வற்புறுத்தல். நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ தங்களுக்கு அரசாங்கம் தடை உண்டுபண்ணும் என்று மக்கள் நினைக்காது இருக்கட்டும்.

இத்தலைமுறையினர் உபவாசத்திலும் பிரார்த்தனையிலும் நம்பிக்கையிழக்கவோ, சந்தேகம் கொள்ளவோ கூடாதென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றேன். உபவாசம், பிரார்த்தனை இவை மூலம், உலகம் போற்றும் பெரிய மகான்கள், மனித வர்க்கத்தின் மேன்மைக்காக உள்ளத் தெளிவையும் அளவற்ற பலத்தையும் பெற்றிருக்கிறார்கள். இக்கட்டுப்பாடுகளில் பெரும் பகுதி வீணாகின்றது. ஏனெனில், இவை இதயபூர்வமாக இருப்பதில்லை. அடிக்கடி இவைகள் வெளிவேஷத்திற்காகவே கையாளப்படுகின்றன. ஆதலால், நான் இவ்வியக்கத்தை நடத்தும் ஸ்தாபனங்களை இத்தகைய தற்கொலை வழி

யிலிருந்து விலகிக்கொள்ளுமாறு எச்சரிக்கை செய்கின்றேன். தாங்கள் சொல்லுவதில் அவர்களுக்கு முழு நம்பிக்கையிருக்கட்டும்; இல்லையேல் விட்டுவிடட்டும். நம் நாட்டு மக்களில் கோடிக் கணக்கானவர்களின் கவனத்தை நாம் இழுக்க ஆரம்பித்திருக்கின்றோம். தெரிந்தே நாம் அவர்களைத் தவறான வழியில் அழைத்துச் சென்றால், அவர்களின் பழிச் சொல்லுக்கு ஆளாவோம். ஹிந்துக்களாயினும் சரி, முஸ்லிம்களாயினும் சரி, எல்லோருக்கும் மத உணர்ச்சி இருக்கின்றது. மதத்துடன் விளையாடி, இவ்வுணர்ச்சியின் அடிப்படையை நாம் தகர்த்துவிடக்கூடாது.

# 6

# கடினமான கிலாபத் பிரச்னை

இந்திய சரித்திரத்திலே, அக்டோபர் 17-ஆம் தேதி ஒரு பெரும் நாளென்று, நீண்ட காலம் வரையில் ஞாபகத்தில் இருந்து வரும். 17-ஆம் தேதியன்று செய்யப்பட்டிருந்த பெரிய ஏற்பாடுகள் தங்குதடையின்றி நிறைவேறின. நிர்வாகிகளின் திறமையையே அது எடுத்துக்காட்டுகிறது. உண்மையில் இது சத்தியாக்கிரகத்தின் ஒரு வெற்றியே. அமைதியாக ஒருங்கு கூடி, இடைவிடாது முயலுவதன் மூலமே பெரிய காரியங்களைச் சாதிக்கலாம், பலாத்காரத்தின் மூலம் அல்ல என்பதை மக்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள். எவ்வளவு சீக்கிரம் பொது மக்கள் பலாத்காரத்தைக் கண்டு பயப்பட மறுக்கின்றார்களோ, அவ்வளவு சீக்கிரத்தில், சர்க்காரும் பலாத்காரம் பலனற்றது என்று கண்டு கொள்ளுவார்கள். யார் பலாத்காரத்தை உபயோகிக்க மறுக்கின்றார்களோ, அவர்கள்தான் அதைக் கண்டு பயப்படவும் மறுப்பார்கள். மக்கள் சிறிது பலாத்காரத்தில் ஈடுபடுவதையே பொதுவாக அதிகாரத்தில் இருப்பவர்கள் விரும்புகிறார்கள். திகிலடைந்து, ஜனங்களைப் பணியச் செய்யும் அளவுக்குத் தன்னிடம் போதிய மிருக பலம் வைத்துக்கொள்ளுவதில்தான் பொதுவாக ஆட்சிக்கலை அடங்கி இருக்கின்றது. குடிகளின் சம்மதம் பெற்றிருக்கும் வரையில்தான் அரசாங்கம் சேவை செய்யும் கருவியாக இருக்க முடியும். கத்தி முனையில் அடக்கியாளும் பொழுது; அது மக்களை நசுக்கும் கருவியாகிவிடுகிறது. கத்தி முனையைக் கண்டு மக்கள் அஞ்சவில்லையாயின், நசுக்குதல் ஒழிந்துவிடும். அரசாங்கத்தின் மிருக பலமோ, அல்லது கண்மூடிப் பழக்க வழக்கங்களோ, அல்லது சாதிக் கோட்பாட்டின் சிறு கொடுமைகளோ திரண்டு, உருவாகி வந்து தாக்கினும், கலங்காது உண்மையில் பற்றுடனிருத்தல்தான் சத்தியாக்கிரகம்.

கிலாபத்தின் நிர்வாகிகள் இந்த முக்கியமான தத்துவத்தைக் கண்டுகொண்டுள்ளதாகத் தெரிகிறது. அன்று நடந்த ஏற்பாடுகளிலிருந்து நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ கொஞ்சமாவது பலாத்காரம் ஆரம்பமாகியிருக்குமானால், இவர்கள் தங்களுடைய எதிரியின் வலையில் விழுந்திருப்பார்கள். இந்த அமைதியான ஏற்பாட்டினால், இஸ்லாமின் கட்சி பலம் பெற்றுவிட்டது. போலீசாரின் முன்னேற்பாட்டிற்குப் பம்பாய் ஓர் அத்தாட்சியாக இருந்ததால், அவர்கள் ஐயமின்றி உயர்ந்த புகழுரைக்கு உரித்தாகின்றார்கள். ஏனெனில், பம்பாயிலும் அகமதாபாத்திலும் பொது மக்களிடையே அமைதியை நிலைநாட்ட, விசேட முன்னேற்பாடுகள் ஒன்றும் செய்யப்பட்டிருக்கவில்லை. பலாத்காரத்தின் சின்னம்கூட எங்கும் காணப்படவில்லை. பெரும் போலீஸ் படை, ராணுவப் படை வந்திருந்தால், மக்களுக்கு அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் உறுத்திக்கொண்டே இருக்கும். அவர்கள் வராததால் அமைதி குலையவில்லை. கிலாபத்தின் நிர்வாகிகளையும் நாம் பாராட்ட வேண்டும். அவர்கள் பொதுக்கூட்டங்கள் கூட்டவில்லை. அறிவும் பொறுப்புணர்ச்சியும் இல்லாத சாதாரண மக்களைத் திரளாகச் சேர்க்கும் எந்த நடவடிக்கையையும் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை.

கிலாபத் ஒரு கடினமான பிரச்னை. ரகசிய ஒப்பந்தங்களினால் இது இன்னும் அதிக சிக்கலாக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும், நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. எட்டு கோடி மக்களின் பக்கத்தில் நீதி இருக்கும்போது, அவர்களை யாரும் எந்த இடத்திலும் அலட்சியம் செய்துவிட முடியாது. ஆதலால், முஸ்லிம் நண்பர்கள் தங்கள் பலத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். வெள்ளிக்கிழமை நடந்த அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மகத்தானவை. ஆயினும், இம்மட்டற்ற சக்தி, சரியான வழியில் புத்திசாலித்தனமாகவும் கட்டுக்கோப்பாகவும் சரியான வழியில் செயல்படாவிடின், சிதறுண்டு போகும். முஸ்லிம்களின் உணர்ச்சி என்ன என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவ்விஷயமாகத் தங்கள் மனம் படாத பாடுபடுவதாகக் கூறுவோர், போதுமான அளவு கஷ்டப்படவும் தயாராக இருக்கின்றார்கள் என்பதைக் கண்டால்தான், அரசாங்கம் அதை உணர்ந்துகொள்ளும். பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு, அவர்கள் விரும்பினால், அறிவுள்ள பொது மக்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தொடர்ந்து வற்புறுத்துதல் இந்தச் சிக்கலான பிரச்னையைத் தீர்த்து, ஒருவித நல்ல உடன்படிக்கை ஏற்படுத்த உதவியாக இருக்கும். மிரட்டல், ஆர்ப்பாட்டம், படாடோபம், சுயவிளம்பரம் முதலியன எதுவுமே கூடாது. அமைதியான, கண்ணியமுள்ள உழைப்பே வேண்டும்.

கிலாபத் பிரச்னை நியாயமான முறையிலோ, அல்லது முஸ்லிம்களின் விருப்பத்திற்கு இணங்கவோ தீர்க்கப்படாவிட்டால்,

முஸ்லிம்களால் சமாதானக் கொண்டாட்டத்திலே பங்குகொள்ள இயலாது என்று சில கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேறின. இது முற்றிலும் சரியே. ஆனால், இதுதான் எல்லோருடைய பொது விருப்பம் என்றால், அதை நன்கு தெளிவுபடச் சொல்லிவிட வேண்டும்; கண்ட கண்ட கூட்டங்களில் எல்லாம் சொல்லுவதில் பயனில்லை.

சிலர் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். இதைப் பற்றி ஐயத்திற்கு இடமின்றித் தெளிவாக நாம் கூறியுள்ளோம். இது பகைமையை வளர்க்கிறது. அநேகமாகப் பயனற்றது. ஆகவே, பகிஷ்காரத்தில் நமக்கு நம்பிக்கையில்லை. சாமான்களைப் பகிஷ்கரிப்பது, தந்திரமாக அரசாங்கத்தைப் பகிஷ்கரிப்பதேயாகும். தந்திரமாகச் செய்யும் எதையும் நாம் வெறுக்கின்றோம். அரசாங்கத்தைப் பகிஷ்கரிப்பதற்குத் தக்க காரணங்கள் காட்டப்பட்டால், நாம் கொஞ்சமும் தயங்காது அதை ஆதரிப்போம். பகிஷ்காரம் ராஜவிசுவாசமின்மையைக் காட்டுகிறது. ராஜவிசுவாசம் என்பது மாற்ற முடியாத ஒரு தத்துவமல்ல; அது பரஸ்பரம் உள்ள நல்ல எண்ணமேயாகும். ஆளப்படுவோரிடம் விசுவாசமாயிருக்கும் அரசாங்கம், அவர்களின் விசுவாசத்திற்குத் தகுதியுள்ளதுதான். நமது அரசாங்கம் எப்பொழுது விசுவாச பங்கம் செய்கிறதோ, அதாவது எப்பொழுது அநீதியாக அடக்கியாளுகிறதோ, அப்பொழுதே நாம் நமது விசுவாசமின்மையை வெளிப்படுத்திவிடுவோம்; சகலவித ஒத்துழைப்பையும் மறுக்குமாறு தூண்டுவோம். சமயம் வந்தால் இவ்வித பகிஷ்காரத்தையே கையாளுதல் நமது கடமை. ஆனால், ஆங்கிலேயர்களின் தொடர்பை வைத்துக்கொண்டு, அவர்களின் சாமான்களை மட்டும் பகிஷ்கரித்தல் முதல்தரமான தவறாகும்.

நமது முஸ்லிம் சகோதரர்களுக்கு ஒரு தெய்விகப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. பகிஷ்காரம் போன்ற ஆட்சேபகரமான ஒரு ஆயுதத்தைக் கையாண்டு, இதைச் சிதறடித்துவிடக்கூடாது. அவர்களின் இயக்கம் எட்டு கோடி முஸ்லிம்களை மட்டும் சார்ந்ததல்ல; இருபத்திரண்டு கோடி ஹிந்துக்களையும் சார்ந்தது. இதை அவர்களும் அறிவர்; உலகமும் அறியும். அக்டோர் 17–ஆம் தேதி அன்று ஏற்பட்ட ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை உண்மையானது; உருவானது. அத்துடன் நாளுக்கு நாள் அந்த ஒற்றுமை அதிகரித்து வருகிறது என்பதையும் அத்தினம் நிரூபித்துவிட்டது. ஒன்றுபட்டுப் பலம் வாய்ந்த இந்தியா சொல்லுவதை, பிரிட்டனின் நேச தேசங்கள் மரியாதையுடனும் கவனத்துடனும் செவி கொடுத்துக் கேளாமல் இருக்க முடியாது.

—'எங் இந்தியா' - 22—10—1919

7

# அகில இந்திய கிலாபத் மகாநாடு

*[1919 நவம்பர் மாதம் 24-ஆம் தேதி டில்லியில் நடந்த அகில இந்திய கிலாபத் மகாநாட்டிற்குத் தலைமை வகித்துக் காந்திஜி உருது மொழியில் பேசினர். அப்பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]*

முஸ்லிம்களை மட்டுமே மிகுதியாகப் பாதிக்கும் ஒரு காரியத்தில், ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒரே மேடையில் காணுவது ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடாது. இடுக்கண் களைவதுதானே நட்பின் அறிகுறி. ஹிந்து, பார்ஸி, கிறிஸ்தவர், யூதர், எவராயிருந்தாலென்ன? நாம் எல்லோரும் ஒரே தேச மக்கள் தொகுதியினராக வாழ விரும்பினல், நிச்சயமாய் நம்மில் ஒருவருடைய நலன்தான் எல்லோருடைய நலனுமாக இருக்க வேண்டும். இதில் நாம் கவனிக்க வேண்டியது, ஒரு குறிப்பிட்ட விஷயத்தின் நியாயத்தைப் பற்றியேயாகும். முஸ்லிம்கள் பக்கத்தில் நீதி இருக்கிறது என்பதற்கு இங்கிலாந்தின் பிரதம மந்திரியும், பல உயர்ந்த மாஜி உத்தியோகஸ்தர்களுமே சாட்சிகள் ஆவர். ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்தைப்பற்றிப் பேசுகிருேம். முஸ்லிம்களின் அடிப்படையான நலன் பாதிக்கப்படுகையில், ஹிந்துக்கள் விலகி இருந்துவிட்டால், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை என்பது வெறும் அடைமொழியாகிவிடும். நமது நாட்டு மக்களாள முஸ்லிம்களுக்குச் சில நிபந்தனைகளின் பேரில்தான் ஹிந்து உதவியளிக்க முடியுமெனச் சிலர் கூறுகின்ருர்கள். நிபந்தனையின்மீது செய்யும் உதவி என்பது, பிணைக்கும் சக்தியற்ற கலப்படமான சிமெண்டு போன்றது. ஆதலால், இங்குள்ள ஒரே பிரச்னை, எவ்வாறு அவர்களுக்கு உதவுவது என்பதுதான்.

கிலாபத் மகாநாடு, வரவிருக்கும் சமாதான விழாவில் பங்கெடுத்துக்கொள்ளக் கூடாதென்கிற முடிவுக்கு வந்திருக்கிறது. இது சரியான முடிவு என்றே எனக்குத் தோன்றுகிறது. தம்மில் நான்கில் ஒரு பகுதியினரைப் பாதிக்கும் சமாதான முடிவுகளை வெளியிடாமலிருக்கும் வரை, இந்தியர்களுக்குச் சமாதான விழா என்பது வெறும் அர்த்தமற்ற பேச்சேயாகும். சமாதான உடன்படிக்கையில் கிலாபத்தைப் பாதிக்கக்கூடிய ஷரத்துக்களைப் பற்றித் தெரிந்துகொள்ள எட்டு கோடி முஸ்லிம்கள் ஆவலுடன் இருக்கின்ருர்கள். கிலாபத்தின் விதி அந்தரத்தில் ஆடிக்கொண்டிருக்கையில், அவர்களைச் சமாதான விழாக் கொண்டாடச் சொல்லுவது நியாயமற்றது. அல்ஸேஸ் - லொரைன் சம்பந்தமாக ஒரு சமரசத்திற்கும் வராமல் பிரான்ஸ் தேசம் சமாதான விழாக் கொண்டாடுமென எதிர்பார்ப்பதைப் போலத்தான் இது

இருக்கிறது. துருக்கி, இந்தியாவிற்கு வெளியிலிருக்கிறது என்பது இந்த உவமையைப் பாதிக்காது. இங்கிலாந்து கிறிஸ்தவ நாடு; அதே அளவிற்கு அது ஒரு ஹிந்து நாடும், முஸ்லிம் நாடும் ஆகவே செய்யும். ஏகாதிபத்தியத்தில் இந்தியா ஒரு பங்காளியாக இருக்க வேண்டுமென்றால், வேறுபட்ட அபிப்பிராயங்களுக்கு விட்டுக் கொடுப்பது போலவே, முஸ்லிம் உணர்ச்சிகளையும் கவனிக்க வேண்டும். ஆதலால் வைஸ்ராய், கிலாபத் பிரச்னை சரியான முறையில் தீர்க்கப்படாதிருக்கும் வரை சமாதான விழாக் கொண்டாட்டத்தை ஒத்திவைக்க வேண்டியதுதான் சரியெனத் தோன்றுகிறது.

இந்தப் பிரச்னை இங்கிலாந்தின் கௌரவத்தையே பாதிக்கிறது. பிரதம மந்திரி, தானே வாக்குறுதி கொடுத்திருந்தார். கௌரவத்திற்குக் களங்கம் ஏற்பட்டுவிட்டால், அப்புறம் செல்வம், படைப் பலம், புகழ் எல்லாம் இருந்தும் என்ன பலன்? தந்திமூலம் வந்த முதல் மந்திரியின் பேச்சின் சாரத்தைக்கேட்டு, நான் மிகுந்த வேதனை அடைந்தேன். இது, அவர் அன்று கொடுத்த வாக்குறுதிக்கு நேர்மாறாகவே கிலாபத் பிரச்னை சம்பந்தமான முடிவுகள் ஏற்படும் என்பதற்குச் சூசகமாக இருக்கிறது. அநாவசியமாக இப்பேச்சு முஸ்லிம்களைப் புண்படுத்துகிறது. பிரதம மந்திரியின் வாக்குறுதிதான் அன்று முஸ்லிம்களின் ராஜவிசுவாசத்தைத் தளராதிருக்கச் செய்தது. அதுவே, முஸ்லிம்களிலே யுத்தப் பிரியர்கள் யுத்தத்தில் அதிகமாகச் சேருவதற்கும் ஊக்குவித்திருக்கலாம். நற்புத்தி வந்து, முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்கப்படுமென நான் இன்னும் நம்புகிறேன். எதிர்பாராதது யாதேனும் நடப்பின், அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்துவிடும்படி முஸ்லிம்களுக்கு யோசனை கூறுவதென்று, கிலாபத் கமிட்டி நேற்று இரவு முடிவு செய்துள்ளது. நான் விஷயாலோசனைக் கூட்டத்திலும், பொதுக்கூட்டங்களிலும் இருக்கும் பேறு பெற்றேன். அச்சமயத்திலிருந்த உணர்ச்சியின் ஆழத்தையும், செய்த முடிவின் பின்னே இருக்கும் உறுதியையும் பற்றி நான் அரசாங்கத்தினருக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். ஒத்துழைக்க மறுத்தல் என்பது பெரிய, ஆழ்ந்து யோசிக்க வேண்டிய ஒரு விஷயம். கஷ்டத்தைச் சகிக்கும் சக்தி வேண்டும். ஒத்துழைப்பதால் தனக்கு இழிவு வரும் என்கிற நிலையில், ஒவ்வொரு பிரஜையும் தனது ஒத்துழைப்பை அரசாங்கத்துக்கு மறுத்துவிடுவதற்கு உரிமை உண்டென்பது எனக்குத் தெரியும். அரசாங்கத்தின் செய்கைகளைப் பற்றிய தனது அருவருப்பைக் காட்டுவதற்கு இது ஒரு தெளிவான வழி. ஆகையால், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கம், நிலைமையின் அபாயத்தை உணர்ந்துகொள்ளும் என நம்பலாம். ஆனால், ஒத்துழையாமையிலிருந்து பகிஷ்காரத்திற்கு வருவது, உயரிய நிலையிலிருந்து இழிநிலைக்கு வருவதாகும்.

கிலாபத் பிரச்னை திருப்திகரமாக முடிவு செய்யப்படாவிட்டால், பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரிப்பது என்று, நேற்று

இரவு பெருவாரியான வாக்குகளால் கமிட்டி ஒரு முடிவுக்கு வந்துள்ளது. பகிஷ்காரம் பழி வாங்கும் முறை. நமது சிக்கலைத் தீர்த்துவைக்க இதை உபயோகிப்பதானால், அதற்கு முன்பு நமக்கு ஆதரவாக உலக அபிப்பிராயத்தை உருவாக்கவேண்டும். பிரிட்டிஷ் சாமான்களைமட்டும் பகிஷ்கரிப்பதாலும், இதர சாமான்களை ஆதரிப்பதாலும் நமக்குச் சாதகமாக உலக அபிப்பிராயத்தை உருவாக்க முடியாது என்று முஸ்லிம் நண்பர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். காரியத்தில் இது நடைபெறவும் முடியாது. அத்துடன் ஈண்டு குறிப்பிடப்பட்டிருக்கும் பகிஷ்காரம் நமது பலவீனத்தையே காட்டுகிறது. சகல பிரச்னைகளையும் பற்றி வெற்றிகரமாக முயன்று சிக்கறுக்க உங்களுக்கு வேண்டியது பலமேயல்லாது, பலவீனமல்ல. ஆகையால், தீர யோசித்தும், புனராலோசனை செய்தும், பகிஷ்காரத் தீர்மானத்தைக் கிலாபத் கமிட்டி ரத்துச்செய்யும் என்று நம்புகின்றேன். இப்பெரிய பிரச்னையைப்பற்றி ஆலோசிக்கும்பொழுது அமைதி, பொறுமை, உண்மையில் உறுதி ஆகியவை அவசியம். பலாத்காரம் இல்லாமலிருந்தால் மட்டும் போதாது. பலாத்காரமான பேச்சே பல தடவைகளில் பலாத்காரச் செயலினும் அதிக தீமையை விளைவிக்கக்கூடும். அவசரப்பட்ட வார்த்தையாலோ, அல்லது செய்கையாலோ, நியாயமான, புனிதமான லட்சியத்தைக் கெடுத்துவிடமாட்டீர்கள் என்று நம்புகின்றேன்.

—'எங் இந்தியா'. 3—12—1919

8

# என்ன செய்ய வேண்டும்?

[கிலாபத் பிரச்னை சம்பந்தமாகக் காந்திஜி பத்திரிகைகளுக்குக் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் :]

கிலாபத் பிரச்னை இப்போது மாபெரும் முக்கியப் பிரச்னையாகிவிட்டது. இது முதல்தரமான ஏகாதிபத்தியப் பிரச்னையாகி யிருக்கிறது.

இங்கிலாந்திலுள்ள பெரிய மதக் குருக்களும் முகமதியத் தலைவர்களும் சேர்ந்து, இக்கேள்வியை முன்னணிக்குக் கொண்டு வந்துள்ளார்கள். மதக்குருக்கள் சவால் விடுத்துள்ளனர். முஸ்லிம் தலைவர்களும் அதை ஏற்று, கச்சை கட்டிவிட்டனர்.

கிலாபத் பிரச்னையானது, சீர்திருத்தம் முதலிய பிற எல்லா வற்றையும் பின்னணிக்குத் தள்ளிவிட்டது என்பதை ஹிந்துக்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். முஸ்லிம்களின் வேண்டுகோளுக்கு அவர்களது மத நூல்களில் ஆதாரம் இருந்தாலும், அது நியாயமற்றதாக இருந்தால், யாரும் அதற்கு ஆதரவளிக்கத் தயங்குவார்கள். ஆயினும், நியாயமான கோரிக்கைகள் மத நூல்களின் ஆதரவும் பெற்றிருக்கும்பொழுது, அதற்கு உதவி அளிப்பது மறுக்க முடியாததாகிவிடுகிறது.

ஐரோப்பிய துருக்கி, துருக்கியர்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும். முஸ்லிமல்லாத குடிகளுக்கு விசேஷப் பாதுகாப்புகள் அளிக்கப்படும். இஸ்லாத்தின் புண்ணிய ஸ்தலங்களெல்லாம் சுல்தானின் ஆட்சியின் கீழ் இருக்கவேண்டும். ஜாஜிரத்-உல்-அரேபியா—அதாவது, முஸ்லிம் அறிஞர்களால் அரேபியா என்று வரையறுக்கப்பட்ட நாடு, சுல்தானின் ஆதிபத்தியத்தின் கீழ் இருக்கவேண்டும். இந்த அராபியர்கள் விரும்பினால் அவர்களுக்குச் சுய ஆட்சி உரிமை கொடுத்துவிடப்படும். இதுதான் சுருக்கமாக முஸ்லிம்களின் கோரிக்கையாகும். இதையேதான் ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் செய்வதாக வாக்குறுதி தந்திருந்தார். லார்டு ஹார்டிஞ்ஜ் எண்ணியிருந்ததும் இதுதான். துருக்கி நாடிழந்து நிற்பதற்காகவா முஸ்லிம் சிப்பாய்கள் போரிட்டனர்? கலிபாவுக்கு அரேபியாமீதுள்ள ஆதிபத்தியத்தைப் பறிப்பது, கிலாபத்தைச் சூனியமாக்கி விடுவதேயாகும்.

யுத்தத்திற்கு முன் துருக்கிக்குச் சேர்ந்திருந்த நாடுகளை எல்லாம் அவசியமான உத்திரவாதங்களின்மீது அதற்கே சேர்ப்பிப்பது, கிறிஸ்தவர்கள் செய்ய வேண்டிய நியாயமான கடமை. அதைத் தண்டிப்பதற்காக அதனிடமிருந்து சில நாடுகளைப் பிடுங்கிக்கொள்ளுவது, வெடி மருந்துத் தீர்ப்பேயாகும். நேச தேசத்தினரோ, அல்லது இங்கிலாந்தோ, வெற்றி கிடைத்த சமயத்தில், நடுநிலைமையிலிருந்து இம்மியும் பிறழக்கூடாது. துருக்கியர்களைப் பலமிழக்கச் செய்வது அநியாயம் மட்டுமல்ல; இதய பூர்வமாகக் கொடுத்த வாக்குறுதிகளை மறுப்பதுமாகும். இச்சமயத்தில் வைஸ்ராயே தைரியமாகக் கிலாபத் இயக்கத்திற்குத் தலைமை வகித்துச் சரியான வழியைக் காட்டி, உறுதியாக நடத்த வேண்டும். லார்டு ஹார்டிஞ்ஜ், தென் னாப்பிரிக்காவில் சாத்விக எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தபோது, இப்படித்தான் செய்தார். இல்லையேல், தவறுதலான அல்லது உணர்ச்சி மீறிய தலைமையின் கீழ் பெருங்கேடு விளையலாம்.

ஆனால், வைஸ்ராயைக் காட்டிலும் ஹிந்து, முஸ்லிம்களாகிய நம்மைத்தான் இந்நிலைமை பொறுத்திருக்கிறது. ஹிந்துக்களையும் வைஸ்ராயையும்விட, அதிகப் பொறுப்பு முஸ்லிம் தலைவர்களையே சார்ந்திருக்கிறது.

ஏற்கனவே முஸ்லிம் நண்பர்கள் பொறுமை இழந்துவிட்ட தன் அறிகுறிகள் தென்படுகின்றன. பொறுமையின்மை எந்த நிமிடத்திலும் ஆவேசமாக மாறலாம். ஆவேசம் பலாத்காரத்திற்கே கொண்டு போய்விடும். பலாத்காரம் தற்கொலைதான் என்பதை ஒவ்வொருவரும் உணரும்படி செய்ய எனக்கு ஆற்றல் வேண்டுமென விரும்புகின்றேன்.

நேச நாடுகளினாலோ அல்லது இங்கிலாந்தாலோ முஸ்லிம்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகின்றன என்று வைத்துக் கொள்ளுவோம். ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் தமது பிரகடனத்தைத் தாமே விளக்க வேண்டும். ஸ்ரீ மாண்டேகு முஸ்லிம்களின் சார்பாகத் தைரியமாக முன்நிற்க வேண்டும். இதில்தான் நம்பிக்கை இருக்கிறது; வேறொரு வழியும் காணோம். ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் தயங்குவது உண்மைதான். ஆனால், முழு நியாயமும் வழங்கும்படி அவர் செய்ய முடியும். நாம் மோசமானதையே எதிர்பார்ப்போம். ஆனால், மேலானவைகளையே அடைய முயலுவோம். எவ்வாறு முயலுவது என்பதுதான் கேள்வி.

நாம் என்ன செய்யக்கூடாது என்பது தெளிவாகும். அவை யாவன:

1. எண்ணத்திலோ, பேச்சிலோ அல்லது செயலிலோ பலாத்காரம் இருக்கக்கூடாது.

2. எனவே, பழி வாங்கவோ அல்லது தண்டனையாகவோ பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்காரம் செய்யக்கூடாது. பகிஷ்காரம் ஒரு வகையான பலாத்காரம் என்பதே எனது அபிப்பிராயமாகும். தவிர, அது விரும்பத்தக்கதாக இருந்தாலும்கூட, அது நடைமுறையில் முற்றிலும் அசாத்தியமானது.

3. குறைந்த பட்சக் கோரிக்கைகளைப் பெறும் வரையில் ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாது.

4. கிலாபத் பிரச்னையுடன் மற்றப் பிரச்னைகளை, அதாவது எகிப்துப் பிரச்னையைக் கலக்கக்கூடாது.

நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போது பார்ப்போம்:

1. 19-ஆம் தேதி எல்லா நடவடிக்கைகளையும் நிறுத்திவிட வேண்டும். ஒரே ஒரு தீர்மானத்தின் மூலம் குறைந்த பட்ச கோரிக்கைகளை வெளியிட வேண்டியது அவசியமான முதற் படியாகும். எனினும், ஹர்த்தால், வற்புறுத்தலின்றி தன்னிச்சையானதாக இருக்க வேண்டும். சிப்பந்திகள் தங்கள் எஜமானர்களிடமிருந்து அனுமதி பெற்றாலன்றி, வேலைக்குப் போகாமல் இருக்கும்படி அவர்களைக் கேட்கக்கூடாது. மில் தொழிலாளர்கள் விஷ

யத்தில் சிறிதும் தலையிடக் கூடாதென்று நான் பலமாக வற்புறுத்துகிறேன். ஹர்த்தாலைத் தொடர்ந்து சிறிதும் பலாத்காரம் இருக்கக்கூடாது. சிற்சில சமயங்களில் ரகசிய போலீசார் பலாத்காரத்தைத் தூண்டுவதாக என்னிடம் பலரும் அடிக்கடி கூறுகிறார்கள். அந்தப் பொதுவான குற்றச்சாட்டை நான் நம்பவில்லை. அது உண்மையாக இருந்தாலும்கூட, நம்முடைய கட்டுதிட்டமானது அவர்கள் பலாத்காரத்தைத் தூண்டுவதை அசாத்தியமாகும்படி செய்வதாக இருக்க வேண்டும். பாமர மக்களிடையே ஒழுங்கு நிலவும்படி செய்வதையும், அவர்களைக் கட்டுப்பாட்டிற்கு உட்படும்படி செய்து அவர்களைச் சரியான வழியில் நடத்திச் செல்லுவதையுமே நம்முடைய வெற்றி முற்றிலும் பொறுத்திருக்கிறது.

நமது கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படாவிடில் என்ன செய்யலாம் என்பது பற்றி இப்பொழுது ஒரு வார்த்தை.

நேரடியாகவோ, அல்லது ரகசியமாகவோ யுத்தம் செய்வது என்பது காட்டுமிராண்டித்தனமான முறை. இது சாத்தியமற்றது என்பதற்காகவாவது, இதை விலக்க வேண்டும். இது எக்காலத்தும் தீயது என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி என்னால் செய்ய முடியுமானால், நாம் நியாயமானவைகளை அதிசீக்கிரத்திலேயே அடைய முடியும். பலாத்காரத்தைத் துறக்கும் மனிதனோ, அல்லது தேசமோ உண்டுபண்ணுகிற பலம், யாரும் எதிர்த்து நிற்க முடியாதது. ஆனால், இன்று நான் பலாத்காரத்திற்கு விரோதமாகச் சொல்லும் வாதம் எல்லாம், அது பயனற்றது, காரியத்திற்கு உதவாதது என்பதே.

ஆகையால், நம் முன்னே இருக்கும் ஒரே வழி, ஒத்துழையாமைதான். இது பரிசுத்தமானது. கொஞ்சமும் பலாத்காரக் கலப்பற்றிருக்குமானால், நிச்சயமான பலனைக் கொடுக்கக்கூடியதும் இதுதான். ஒத்துழைப்பானது தாழ்வையோ, இழுக்கையோ அல்லது தாம் போற்றும் மத உணர்வுக்குப் பங்கத்தையோ உண்டாக்குமாயின், அச்சமயம் ஒத்துழையாமையே ஒரு வரது கடமையாகிவிடுகிறது. உரிமைகள் அநியாயமாய் அபகரிக்கப்பட்டு, முஸ்லிம்கள் வாழ்வதா, சாவதா என்ற ஒரு விஷயத்தில், நாம் தாழ்ந்து பணிந்து போவதை இங்கிலாந்து எதிர்பார்க்கக்கூடாது; ஏற்றுக்கொள்ளவும் கூடாது. உயர்ந்த சம்பளமும் கௌரவமும் உடைய பதவி வகிப்பவர்கள், அவைகளிலிருந்து விலகிவிட வேண்டும். அரசாங்கத்தில் கீழ்த் தர உத்தியோகங்கள் வகிப்பவர்களும் அவ்வாறே செய்ய வேண்டும். தனிப்பட்ட மனிதனிடம் வேலை செய்பவனுக்கு ஒத்துழையாமை பொருந்தாது. ஒத்துழையாமையை ஏற்றுக்கொள்ளாதவர்களைச் சமூக பகிஷ்காரம் செய்வதென்ற பயமுறுத்தலை நான் ஆதரிக்கமாட்டேன். வலிய வந்து ஒத்துழையாமை செய்வதே பலன் தரும். இதுதான் பொது மக்களின் உணர்ச்சிகளையும் அதிருப்தியையும் தெற்றென வெளிக்காட்டும்.

சிப்பாய்களை ஒத்துழையாமைக்குத் தூண்டுவதற்கு இன்னும் காலம் வரவில்லை. இது முதற்படியல்ல, இறுதிப் படியாகும். வைஸ்ராய், இந்தியா மந்திரி, பிரதம மந்திரி முதலியோர் நம்மைக் கைவிட்டுவிட்டால், நாம் அம்முறையைக் கையாளுவதற்கு உரிமையுடையவர்களாவோம். அத்துடன், ஒத்துழைப்பு மறுத்தலில் தீர யோசித்தே படிப்படியாய்ச் செல்ல வேண்டும். எவ்வளவு தாங்க முடியாத கொதிப்பு ஏற்பட்ட போதிலும், தன்னடக்கத்தைக் கைவிடாவண்ணம் நாம் மெதுவாக முன்னேறிச் செல்ல வேண்டும்.

தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை அடைவதில் போதுமான கட்டுப்பாட்டுடன் முஸ்லிம் நண்பர்கள் நடந்து கொள்ள வேண்டும். பலாத்காரத்தை உபயோகிக்க விருப்பமும் இருக்கக்கூடாது; இதை உபயோகிப்பதைச் சகிக்கவும் கூடாது. இப்படி இருக்கும்வரைதான், இவர்களுடன் நான் முழு மனத்துடன் ஒத்துழைப்பேன். பலாத்காரம் செய்தாலோ, செய்யத் தூண்டினாலோ, அல்லது செய்வதைச் சகித்துக்கொண்டாலோ, அந்த நிமிடமே நான் ஒத்துழைப்பதை நிறுத்திக்கொள்ளுவேன். அத்துடன் ஒவ்வொரு ஹிந்துவையும், ஏன் ஒவ்வொரு மனிதனையுமே, ஒத்துழைக்க மறுக்கும்படி யோசனை கூறுவேன். ஆகையால், அளவு கடந்து கோபமூட்டப்பட்டாலும், பேசுபவர்கள் தன்னடக்கத்துடன் இருக்க வேண்டும். உறுதியுடன் சாந்தமும் கலந்திருந்தால் வெற்றி நிச்சயம். கோபம், வெறுப்பு, பகைமை, மூர்க்கத்தனம், பலாத்காரம் முதலியவை மேலோங்கி விட்டால், படுதோல்வியைத் தவிர வேறு யாதுமில்லை. நான் தன்னந்தனியே நிற்க நேரிடினும், இவைகளை உயிர் இருக்கும் வரை நான் எதிர்ப்பேன். எனது குறிக்கோள் உலகத்துடன் நட்புக்கொள்ளுவதே. மகத்தான அன்பையும், தீமைக்கு ஒரு மகத்தான எதிர்ப்பையும் என்னால் ஒன்று சேர்த்துவிட முடியும்.

—'எங் இந்தியா'–10—3—1920

# 9
# வாக்குறுதிகள் வீணாயின

நெடுநாளாக எதிர்பார்த்த துருக்கி சம்பந்தமான சமாதான ஷரத்துக்கள்* வெளிவந்துள்ளன. பிரிட்டிஷ் மந்திரிகளையும், உயர்மன்றத்தையும் இவை அவமானத்திற்கு உள்ளாக்குவதாக இருக்கின்றன என்பதே எனது தாழ்மையான

* 1914-ஆம் ஆண்டில் முதலாவது உலக மகாயுத்தம் ஆரம்பமானபோது துருக்கி சாம்ராஜ்யத்தில் ஐரோப்பிய துருக்கி, அனடோலியா, சிரியா, லெபனான், ஈராக், ஜார்டன், பாலஸ்தீனம், அரேபியா, எமென் முதலிய பல நாடுகளும் அடங்கியிருந்தன.

அபிப்பிராயம். கிறிஸ்தவ மதத்திலிடம் அன்பும் மரியாதையும் உள்ள ஒரு ஹிந்து என்கிற முறையில், கிறிஸ்துவின் போதனைகளுக்கே அவை விரோதமாக இருக்கின்றன என்று கருதுகிறேன். உள்நாட்டுக் குழப்பங்களால் சீர் குலைந்து கிடக்கும் துருக்கி இவ்வாறு தன்னைப் புறக்கணிப்பதைச் சகித்துக்கொள்ளலாம். இந்திய முஸ்லிம்கள் பயத்தால் பணிந்து போகலாம். ஆபத்தான நிலையில் இருக்கும் முஸ்லிம் சகோதரர்களுக்கு உதவி புரிய பீதியினாலோ, அக்கறையின்மையினாலோ அல்லது நிலைமையை அறியாமையினாலோ ஹிந்துக்கள் முன்வராதிருக்கலாம். ஆயினும், இங்கிலாந்து பிரதம மந்திரி இதயபூர்வமாகக் கொடுத்த வாக்குறுதி வேண்டுமென்றே மீறப்பட்டுள்ளதென்பது உண்மையாகிவிட்டது, தலைவர் வில்சனின் பதினான்கு திட்டங்களைப் பற்றி நான் யாதும் சொல்லப்போவதில்லை. ஒரே நாள் அதிசயமென என்றோ அவை மறைந்து போய்விட்டன! இந்திய அரசாங்கம், இந்த ஷரத்துக்களுக்குச் சப்பைக் கட்டுக் கட்டப் பார்ப்பதுதான் மனத்தைப் புண்படுத்துகின்றது. 1918-ஆம் ஆண்டு ஜனவரி 5-ஆம் தேதி ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் கொடுத்த வாக்குறுதியை இவை நிறைவேற்றுகின்றன என்கிறது, இந்திய அரசாங்கத்தின் அறிக்கை. இதிலுள்ள குறைபாடுகளுக்கு இந்திய அரசாங்கம் நீலிக் கண்ணீர் வடிக்கிறது. அமைதியுடன் இவைகளை ஏற்றுகொள்ள வேண்டுமென முஸ்லிம்களைக் கேட்பது, ஏளனம் செய்வது போல் இருக்கின்றது. இப் பகல்வேஷம் எவரையும் ஏமாற்றிவிட முடியாது. ஸ்ரீ லாயிட் ஜார்ஜ் வாக்குறுதி கொடுத்தது தவறுதான் என்பதை அறிக்கை ஒப்புக்கொண்டிருந்தால் கண்ணியமாக இருந்திருக்கும். வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கூறுவது, புண்ணில் கோல் கொண்டு குத்துவது போலிருக்கிறது. கலிபாவின் சாம்ராஜ்யம் இரக்கமின்றித் துண்டிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியப் புண்ணிய ஸ்தலங்களில் அவருக்கு இருந்த அதிகாரம் வெட்கக்கேடான முறையில் பறிக்கப்பட்டுள்ளது. அவரை அவரது மாளிகையிலேயே செயலற்ற கைதி போல் ஆக்கிவிட்டார்கள். இதோடு நில்லாமல், "கிலாபத் பிரச்னை முஸ்லிம்களுடையது. இது சம்பந்தமான விஷயங்களில் முஸ்லிம்களின் சுய விருப்பத்தில் அரசாங்கம் குறுக்கிட விரும்பவில்லை" என்று வைஸ்ராய் கூறுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? வைஸ்ராய், "சமாதான ஷரத்துக்கள் முஸ்லிம்களுக்கு மனவேதனையை விளைவிக்கும்" எனப் பயப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்திய முஸ்லிம்களுக்கு ஓர் அனுதாபச் செய்தி அனுப்பி, அவர்களின் புத்திசாலித்தனத்தை

---

அந்த யுத்தத்தில் துருக்கி அச்சு நாடுகளின் கட்சியில் சேர்ந்துகொண்டது. அந்தப் போரில் துருக்கி தோல்வியுற்றதால், அது தன் சாம்ராஜ்யத்தின் பெரும் பகுதியையும் இழக்க நேர்ந்தது. துருக்கி சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. பிறகு அந்த நாட்டில் சுல்தான் ஆட்சி மறைந்து, 1923 அக்டோபர் 23-ஆம் தேதி துருக்கி ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. முஸ்தபா கெமால் துருக்கிக் குடியரசின் முதலாவது தலைவர் பதவியை ஏற்றார்.

இவர் ஏன் பழிக்க வேண்டும்? அவர்கள் எதில் ஆறுதல் காணுவது? - மமதை வழிந்தோடும் சமாதான ஷரத்துக்களைத் திரும்பத்திரும்பச் சொல்லுவதிலிருந்தா, அல்லது ஏகாதிபத்தியம் இடைஞ்சலில் மாட்டிக்கொண்டிருந்த சமயம், அரசரின் அழைப்பிற்கு இணங்கி ஆரவாரத்தோடு உதவினார்களே, அதை எண்ணியா? நேச தேசத்தினர் சண்டையிட்டு நியாயத்திற்கும் மனித வர்க்கத்திற்கும் வெற்றி கொண்டு வந்துள்ளனரென வைஸ்ராய் கூறுவது அவரது கௌரவத்திற்கு உகந்ததல்ல. துருக்கியுடன் செய்துகொண்டுள்ள சமாதானம் என்று சொல்லப் படும் ஷரத்துக்கள் நிலைத்து நிற்குமேயானால், உண்மையில் அவை மானிட அகந்தைக்கும், மனிதனால் செய்யப்பட்ட அநீதிக் கும் அழியாச் சின்னமாக விளங்கி வரும். யுத்தத்தில் தோற்று விட்டது என்பதாலேயே, துணிவும் பெருந்தன்மையும் உள்ள ஓர் இனத்தை ஒடுக்கிவிட முயல்வது, மனிதத் தன்மையின் வெற்றியைக் குறிக்கவில்லை; அதன் இழிவையே வெளிப்படுத்துகிறது. யுத்தத்திற்கு முன் துருக்கி இங்கிலாந்துடன் உயிர்த் தோழமை பூண்டிருந்தது. துருக்கியை இழிவுபடுத்துவதில் பங்கெடுத்துக் கொண்டதன் மூலம், இங்கிலாந்து துருக்கி செய்த அந்தத் தவறுக்கு நிறைய ஈடு செய்துவிட்டது! இச்சமாதான உடன் படிக்கைக்குப் பின் துருக்கி பழைய மாதிரி இங்கிலாந்துடன் நட்பு உரிமை பூண்டு, முன் போலவே புத்துயிர் பெற்று இஸ்லாமிய மதத்திற்குப் பேராதரவளிக்கும் நாடாகத் திகழ வேண்டுமென வைஸ்ராய் உறுதியாக நம்புவதை, நம்மால் சகிக்க முடியவில்லை. "இத்தனை தலைமுறையாக நீங்கள் களங்கமற்ற ராஜ விசுவாசிகளாக இருந்தது போல் இன்னும் இருக்க வேண்டும். இப்படி உறுதியாக இருப்பதற்கு நான் சொன்ன கருத்துக்கள் உதவும். தைரியத்துடனும் ஆண்மையுடனும் சமாதான ஷரத்துக்களை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று துடுக்காக வைஸ்ராயின் செய்தி முடிகிறது. முஸ்லிம்களின் விசுவாசம் களங்கமற்றதாயிருக்கிறது. இந்திய அரசாங்கத்தின் நீக்குப் போக்குத் தெரியாத நடத்தையின் பின்னும் இது அப்படித்தான் இருக்கும், காரணம், முஸ்லிம்கள் தங்கள் பலத்தை உணருவதால்தான்; அவர்களின் பக்கம் நியாயமிருப்பதை அவர்கள் அறிவதால்தான். அதிகார மயக்கத்திலை இங்கிலாந்தின் பிரதம மந்திரி வாக்குறுதி கொடுப்பதிலும், அவற்றினின்று பிறழ்வதிலும் கண்மூடித்தனமாக இருக்கிறார். இதையெல்லாம் எதிர்த்து, நியாயத்தை நிலைநாட்டக்கூடிய பலம் முஸ்லிம்களிடம் இருக்கிறது.

சமாதான ஷரத்துக்களிலோ அல்லது அவைகளை ஒட்டி வைஸ்ராய் விடுத்த செய்தியிலோ, முஸ்லிம்களிடையும், பொதுவாக இந்தியர்களிடையும், விசுவாசமும் நம்பிக்கையும் உண்டு பண்ணக்கூடிய விதத்தில் ஒன்றுமில்லை. எனினும், நம்பிக்கை யிழக்கவோ, கோபம் கொள்ளவோ யாதொரு காரணமும் இல்லை. இதுதான் சமயம்; முஸ்லிம்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். பலம் குறைவாயிருப்பினும் உள்ளதை எல்லாம்

ஒருங்கு திரட்ட வேண்டும். ஆண்டவனிடத்தில் நம்பிக்கை வைத்து, கிளர்ச்சியை இரட்டிப்புப் பலத்துடன் நியாயம் கிடைக்கும்வரை நடத்தவேண்டும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்த இந்தியா மட்டும் ஒரே மனிதன் போலிருந்து, இந்த மனித வர்க்கத்திற்கே தீங்கிழைக்கும் சமாதான ஷரத்துக்களில் தனக்கிருக்கும் பொறுப்புகளிலிருந்து விலகிவிட முடியுமானால், சமாதான உடன்படிக்கைகளை மாற்றுவதன் மூலம் உலகத்துக்கே இல்லாவிட்டாலும், தனக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் மட்டுமாவது நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டு வர முடியும். போராட்டம் கடுமையானதாயும் நீண்டதாயும் இருக்கலாம். ஆனால், இதில் செய்யும் தியாகம் எல்லாம் பயன் தருவனவேயாகும். இதில் எவ்வளவு தியாகம் செய்தாலும் தகும். இது முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் சோதனைக்காலம். கிலாபத்திற்கு நேர்ந்த அவமதிப்பு முஸ்லிம்களுக்குக் கவலையைக் கொடுக்கக்கூடிய விஷயம் அல்லவா? அவ்விதமாயின், அவர்கள் தமது இனத்தாருக்கு நேரும் பொருள் நஷ்டத்தையும் கவனியாது, ஹிம்சையினின்றும் விலகி, ஒத்துழையாமையை அனுஷ்டிக்க முன்வருவார்களா? ஹிந்துக்கள் உண்மையாகவே தங்கள் முஸ்லிம் சகோதரர்களிடம் பரிவு காட்டுகின்றனரா? முஸ்லிம்களின் கஷ்டங்களில் ஹிந்துக்கள் பூரண பங்கு எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்களா? கிலாபத்தின் விதியைச் சமாதான ஷரத்துக்கள் முடிவு செய்யமாட்டா; மேலே விடுத்துள்ள கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில்கள்தான் தீர்மானிக்க முடியும்.

— 'எங் இந்தியா' — 19—5—1920

# 10

# கிலாபத் கூட்டத்தின் முடிவு

ஒத்துழையாமைத் தத்துவத்தை அலகாபாத்தில் கூடிய கிலாபத் கூட்டம் மறுமுறையும் ஏகமனதாக வற்புறுத்தியிருக்கிறது. விரிவான திட்டம்போட்டு நடத்துவதற்குக் காரியக் கழகம் ஒன்றையும் அது நியமித்திருக்கிறது. இக்கூட்டத்திற்கு முன், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அடங்கிய கூட்டமொன்று நடந்தது. இதில் ஹிந்து தலைவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடலாமென அழைக்கப்பட்டார்கள். இக்கூட்டத்தில் ஸ்ரீமதி பெஸன்ட், பண்டித மாளவியா, டாக்டர் சாப்ரு, மோதிலால் நேரு, ஸ்ரீ சிந்தாமணி முதலியோர் இருந்தனர். கிலாபத் கமிட்டி, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஹிந்துக்களைக் கூட்டி யோசனை கேட்டது, புத்திசாலித்தனமான காரியமாகும். ஸ்ரீமதி பெஸன்டும் டாக்டர் சாப்ருவும் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிடுமாறு வலியுறுத்தினர். மற்றவர்கள் எப்பக்கத்தையும் தீவிரமாக ஆதரிக்கவில்லை. ஒத்துழையாமையைக்

கொள்கையளவில் இவர்கள் ஆதரித்த போதிலும், இந்த இயக்கத்தில் நடைமுறையில் வரும் இடைஞ்சல்களை இவர்கள் எடுத்துக்காட்டினர். இந்தியாவின் மீது ஆப்கானியர்கள் படையெடுப்பதை முஸ்லிம்கள் வரவேற்பதன் விளைவாகப் பல சிக்கல்கள் ஏற்படுமென இவர்கள் அஞ்சினர். இந்தியாவைக் கைப்பற்றும் எண்ணத்துடன் படையெடுக்கும் எவரையும், முஸ்லிம்கள் உயிர்போகும் வரை எதிர்ப்பர்; ஆனால், இஸ்லாமின் கௌரவத்தை நிலைநாட்டுவதற்காக வரும் எந்தப் படையெடுப்புக்கும் முஸ்லிம்கள் முழு மனத்துடன் ஆதரவளிப்பார்கள்; இது முஸ்லிம்களால் தெளிவாக விளக்கப்பட்டது. ஹிந்துக்களின் எச்சரிக்கையை அறிந்து கொள்ளுவதும், அது நியாயமானது என்று கூறுவதும் எளிதாகும். அதே சமயத்தில் முஸ்லிம்களின் நிலையும் அசைக்க முடியாததே. இஸ்லாமியப் படைகளுக்கும் ஆங்கிலப் படைகளுக்கும் இடையே இந்தியா போர்க்களமாவதைத் தடுப்பதற்கான சிறந்த வழி, ஹிந்துக்கள் ஒத்துழையாமையை உடனே பூரண வெற்றிகரமாகச் செய்ய வேண்டும் என்பதே என் அபிப்பிராயமாகும். தாங்கள் வெளியிட்ட கருத்துக்களின்படி தன்னடக்கத்துடன் தியாக நெறியில் முஸ்லிம்கள் நிற்பார்களாயின், ஹிந்துக்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து கௌரவத்தை நிலைநாட்டுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் ஆப்கானியர்களுக்கும் இடையே யுத்தம் ஏற்படும்படி செய்ய முஸ்லிம்கள் முனைந்தால், அதற்கு ஹிந்துக்கள் ஒரு காலத்திலும் உதவமாட்டார்கள். பிரிட்டிஷ் படைகள் நல்ல பலம் பொருந்தியவை. ஆதலால், யாரும் இந்திய எல்லைப்புறத்தில் படையெடுக்கத் துணியார். எனவே, இஸ்லாமின் கௌரவத்தைக் காக்க முஸ்லிம்கள் கைக்கொள்ளக்கூடியது ஒரே வழிதான். அதாவது, அவர்கள் முழு மனத்துடன் ஒத்துழையாமையை அனுஷ்டிக்க வேண்டும். எல்லோரும் இதில் முனைவார்களானால், அது பூரண பலனைக் கொடுக்கும். தனி நபர்கள் தத்தம் மனச்சாட்சியின்படி நடப்பதற்கும் இவ்வியக்கம் இடம் தரும். ஒரு தனி நபரால் அல்லது ஒரு ஸ்தாபனத்தால் இழைக்கப்பட்ட அநீதியை நான் சகிக்க முடியவில்லையாயின், ஆனால் அத்தகைய தனி நபர் அல்லது ஸ்தாபனத்தை ஆதரித்து நிற்க நான் நேரடியாகவோ, மறைமுகமாகவோ காரணமாக இருப்பேனாயின், அதற்காக நான் என்னைச் சிருஷ்டித்த கடவுளுக்குப் பதில் சொல்லி ஆக வேண்டும். மேலே குறிப்பிட்டது போன்ற அநீதியை நான் ஆதரிக்கவில்லையென்றாலும், தவறு இழைத்தவருக்குக்கூடத் துன்பம் விளைவிக்க மறுக்கும் ஒழுக்க நியதிக்கு உகந்த முறையில் மனித சாத்தியமான எல்லாவற்றையும் நான் செய்து வந்திருக்கிறேன்.

எனவே, இத்தகைய வலிமை வாய்ந்த மகத்தான சக்தியைக் கையாளுகையில், அவசரத்திற்கோ ஆத்திரத்திற்கோ இடம் கொடுத்துவிடக்கூடாது. ஒத்துழையாமை, எவரும் தாமே மன

முவந்து மேற்கொள்ளுவதற்காக இருக்கவேண்டும்; அப்படியே இருந்தும் வருகிறது. இங்கிலேயில் சகலமும் முஸ்லிம்களையே பொறுத்திருக்கிறது. அவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொண்டால், ஹிந்துக்களின் உதவி தானே கிடைக்கும். எவ்வளவு பலம் பொருந்திய அரசாயினும் எதிர்த்து நிற்கமுடியாத இச்சக்தியின் முன் பணிந்து கொடுக்க வேண்டியதுதான். ஒரு தேசம் முழுவதும் ரத்தக் களரியற்ற முறையில் ஒருமித்து எதிர்ப்பதை எந்த அரசாங்கமும் பொருட்படுத்தாமல் இருக்க முடியாது.

—'எங் இந்தியா' – 9—6—1920

# 11

# ஒத்துழையாமைக் கமிட்டி

அலகாபாத்தில், கிலாபத் கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட ஒத்துழையாமைக் கமிட்டியைப் பற்றிய தப்பு எண்ணங்களையும், தவருன கருத்துக்களையும் பற்றி காந்திஜி குறிப்பிட்டுவிட்டு, அக்கமிட்டி பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்பதை வற்புறுத்தினர். அவ்விஷயமாக அவர் எழுதியதாவது:

பொது மக்களுக்கும், உள்நாட்டு அலுவல்கள் சம்பந்தமாகவும் ஒத்துழையாமைக் கமிட்டி மிகவும் பிரதிநிதித்துவம் வாய்ந்தது. முஸ்லிம்களின் அபிப்பிராயத்திற்குப் பிரதிநிதிகளாக அலியையும் ஹஸரத் மோஹனியையும் தவிர, வேறு எவரையும் கண்டுபிடிப்பது கடினம். மற்றவர்கள் வெளிக்கு அவ்வளவு தெரிந்தவர்களல்லர். இருப்பினும், வீரத்திற்கும், விடாமுயற்சிக்கும், பொறுமைக்கும், உண்மைக்கும், தியாகத்திற்கும், தீரத்திற்கும் உறைவிடம் என்று இவர்கள் நம்பப்படுவதால், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நான்தான் இவ்வியக்கத்திற்குத் தலைமை வகிக்க வேண்டுமென யோசனை கூறப்பட்டுள்ளது. இது ஓரளவுக்குத்தான் உண்மை. அடக்கம் காரணமாக நான் இவ்வாறு சொல்லவில்லை; உண்மை இதுதான். நான் தலைமை வகிக்கின்றேன் என்ற எண்ணம் வலுப்பெற்றுல் அது இந்த இயக்கத்திற்கே கேடு விளைவிக்கலாம். இன்று, ஓர் ஆலோசகன் என்ற முறையில் இந்த இயக்கத்தை நடத்துபவன் நான் தான். எனது ஆலோசனை இன்று மிகவும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. அத்துடன், ஒத்துழையாமையை வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்பதில் மற்றவர்களைக் காட்டிலும் அதிக உறுதியும் ஆர்வமும் எனக்கு உண்டு. இந்த அர்த்தத்தில்தான் நான் தலைமை வகிக்கிறேன் என்று சொல்ல முடியும். முஸ்லிம்களின் அபிப்பிராயத்திற்கு நான் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளவில்லை. அவர்களுடைய அபிப்பிரா

யத்தை நான் விளக்க முயலக்கூடும்; அவ்வளவுதான். நான் தனித்து நின்று முஸ்லிம் பொதுமக்களை அழைத்துச் செல்ல முடியாது. மத சம்பந்தமான விஷயங்களில் சிறந்த முஸ்லிம்களின் கருத்துக்களுக்கு எதிராக நான் ஏதாவது சொல்லப் புகுந்தால், நியாயமாக சிரிப்புக்கும் அவமதிப்புக்கும் ஆளாகும்படி நேரும். ஆனால், நான் ஒரு முஸ்லிமாக இருந்தால், முஸ்லிம்களின் கூட்டத்தில் எத்தகைய எதிர்ப்பையும் பொருட்படுத்தமாட்டேன். நான் என்னை, திறமை வாய்ந்த ஒரு தொண்டனாக எண்ணுகிறேன். ஆனால், எனது திறமை, எனக்குள்ள சக்தியின் எல்லைகளை அறிந்துகொள்ளுவதில்தான் இருக்கிறது. எனவே, எனது சக்திக்குப் புறம்பான காரியங்களில் நான் தலையிடுவதில்லை. நெஞ்சார எப்பொழுதுமே இப்படிச் செய்ததில்லை. ஒவ்வொரு புத்திசாலியான முஸ்லிமும் என் சக்தியின் எல்லைகளையும், நான் செய்யக்கூடிய வேலையையும் பற்றித் தெரிந்துகொள்ளுதல் அவசியம். இயக்கம் வெற்றிகரமாக நடப்பதற்கு அறியாமை பெரும் தடையாகிவிடும். நான் இதில் தொடர்பு வைத்திருப்பதால் ஊழியர்கள் உணர்ச்சியற்று சோம்பேறித்தனமாகவோ, அக்கறையின்றியோ இருந்துவிடக்கூடாது. எனது தொடர்பு நல்ல பயன் அளிக்க வேண்டுமானால், ஊழியர்கள் அதிக விழிப்புடனும், அதிகப் பொறுப்புடனும், அதிக ஆர்வத்துடனும், திறமையோடும் பணியாற்ற வேண்டும். நான் திட்டம் போடலாம். அவைகளை நிறைவேற்றுவது முஸ்லிம் ஊழியர்கள்தான். இவ்வியக்கம், என் போன்ற நபர்களின் உதவி கொண்டு, முஸ்லிம்களின் தலைமையில் முஸ்லிம்களாலேயே நடக்க வேண்டும்; உதவி இல்லையெனினும் நடக்க வேண்டும். நான் ஒத்துழையாதவர்களை உற்பத்தி செய்வேனென எதிர்பார்க்கக்கூடாது. முஸ்லிம் தலைவர்கள்தான் அவ்வாறு செய்ய முடியும். நான் எவ்வளவு தியாகம் செய்தாலும், முஸ்லிம்களிடையே அது ஒத்துழையாமை ஆர்வத்தை உண்டுபண்ணாது. பொதுமக்கள் அதைக் கடைப்பிடிக்குமுன், முஸ்லிம் தலைவர்கள் தம் வாழ்க்கையில் அதை அனுஷ்டித்துக் காட்ட வேண்டும்.

ஹிந்துத் தலைவர்கள் ஏன் கமிட்டியில் இல்லை என்னும் கேள்விக்கு, இப்போது பதில் சுலபமாகச் சொல்லியாகிவிட்டது. தலைமைக் கமிட்டியில் முஸ்லிம்கள்தான் இருக்க முடியும். நான் அங்கு இருப்பது தீயதே. எனினும், இது விலக்க முடியாத கெடுதல் ஆகும். எனது தகுதிகளில் அங்கு நான் இருக்க வேண்டியதாகின்றது. ஒத்துழையாமையில் நான் விசேடப் பயிற்சி பெற்றிருக்கின்றேன்; நான் இதில் வெற்றிகரமான ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கின்றேன். டில்லி மகாநாட்டில் இத்தீர்மானம் தோன்றியதே என்னிடமிருந்துதான். எனவே, ஹிந்து என்கிற முறையில் அல்லாமல், நிபுணன் என்கிற முறையில்தான் நான் இக்கமிட்டியில் இருக்கின்றேன். இங்கே எனது வேலை வெறும் யோசனை கூறுவது மட்டும்தான். எல்லா ஹிந்துக்களும் முஸ்லிம்களுடன் ஒத்துழையாமை இயக்கத்தில் பூரண பங்குகொள்ள

வேண்டுமெனச் சொல்லுகிற உறுதி வாய்ந்த ஹிந்துவாய் நான் இருப்பது, இக்கமிட்டிக்குப் பெரிய லாபந்தான். ஆனல், நான் கமிட்டியில் இருந்தாலும் இராவிட்டாலும், இந்த உதவி அவர்களுக்குக் கிடைத்திருக்கும்.

கிலாபத் இயக்கத்துடன் ஹிந்துக்களின் சம்பந்தத்தைப் பற்றி நான் குறிப்பிடுவது, கூறியது கூறலேயாகுமாயினும், எனது சொந்த நிலைமையைத் தெளிவுபடுத்த நான் விரும்புகின்றேன். முஸ்லிம்களின் வேண்டுகோள், மத விஷயங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும், முற்றிலும் நியாயமானதே. ஆதலால், அவர்களுடன் சேர்ந்து நானும் பூரணமாக ஒத்துழையாமையை மேற்கொள்ள விரும்புகின்றேன். இது பிரிட்டிஷாரிடம் நான் கொண்டுள்ள விசுவாசத்திற்கும் பொருத்தமானதேயாகும். ஆனல், ஹிம்சை கலந்த எந்த இயக்கத்திலும் நான் அவர்களுடன் சேர மாட்டேன். உதாரணமாக, நல்ல சமாதான ஷரத்துக்களை ஒப்புக்கொள்ள வைப்பதற்காக ஆப்கானிஸ்தானத்தின் வழியாகவோ, அல்லது வேறு வழியிலோ, ஒரு படையெடுப்புக்கு அவர்கள் உதவுகிருர்கள் என வைத்துக்கொள்ளுவோம். அந்த நிலைமையில் என்னல் உதவி செய்ய முடியாது. முஸ்லிம் சகோதரர்கள் தமது நியாயமான வேண்டுகோளை அடைவதற்கு ஒத்துழையாமை, அல்லது வேறுவித தியாக வழியில் உதவுவது, ஒவ்வொரு ஹிந்துவின் கடமை. இதற்காக இந்தியாவின் சுதந்திரத்தை இழக்கக்கூடாது; வேறு எம்மனிதனையும் ஹிம்சித்தலும் கூடாது. இம்மாதிரியே இந்தியா எக்காரணம் பற்றியும் அடிமையாவதைத் தடுப்பதும் ஒவ்வொரு ஹிந்துவின் தலைசிறந்த கடமையாகும். வேறு யாதொரு காரணமுமில்லையென்ருலும், அத்தகைய யுத்தத்தைத் தடுப்பதற்காகவாவது, நான் முழு மனத்துடன் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றேன்.

—'எங் இந்தியா' – 23—6—1920

# 12

# துருக்கியை அழிக்கும் இயக்கம்

முஸ்லிம் சகோதரர்களுக்கு நலம் புரிய நாம் உண்மையில் விரும்பினல், துருக்கி தேசிய உணர்ச்சியை அழிக்க ஐரோப்பாவில் நடக்கும் இயக்க சம்பந்தமாக நாம் அவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) அனுதாபம் காட்ட வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கம் மறைமுகமாகவோ, அல்லது வெளிப்படையாகவோ இவ்வியக்கத்தைத் தலைமை வகித்து நடத்துவது பெரிய துக்ககரமான விஷயம். அகில உலக இஸ்லாமியம் என்று கூறப்படுவதைக் குறித்து ஹிந்துக்கள் திடுக்கிட வேண்டாம். இந்தியாவிற்கோ, அல்லது ஹிந்து மதத்திற்கோ அது விரோதமானதல்ல ; விரோத

மானதாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. எல்லா முஸ்லிம் தேசங்களும் சுகமாக இருக்க முஸ்லிம்கள் விரும்ப வேண்டும். தான் எவ்விதத் தவறும் செய்யாமல் ஆபத்தில் சிக்கிக் கொண்ட தேசத்திற்கு அவர்கள் உதவுவது நியாயமே. ஹிந்துக்கள், முஸ்லிம்களின் உண்மை நண்பர்களாக இருந்தால், அவர்களது உணர்ச்சிகளில் தாங்களும் பங்குகொள்ளுவார்கள். முஸ்லிம்கள், ஐரோப்பாவில் உள்ள துருக்கி தேசம் அழியாமல் காக்க முயற்சிக்கின்றனர். அம்முயற்சியில் நாமும் முஸ்லிம் சகோதரர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

அங்கோராவிலுள்ள துருக்கி சர்க்காருக்கு விரோதமாகக் கிரேக்கர்களுடன் ஆங்கிலேய சர்க்கார் வெளிப்படையாகச் சேர்ந்துவிடக்கூடும் எனக் கேட்ட மாத்திரத்திலேயே, முஸ்லிம்கள் கலங்கி வருகின்றனர். இதைக் கண்டு ஹிந்துக்கள் பரபரப்படைய வேண்டியதில்லை. ஆங்கிலேயர்கள் இவ்வளவு பைத்தியக்காரத்தனமாக நடந்துகொள்ளுவார்களானால், துருக்கிக்கு விரோதமாக, ஆங்கிலேயருக்கு இந்தியா ஒருகாலும் உதவ முடியாது. அவர்களுக்கு உதவுவது, இஸ்லாமிய மதத்துடன் போர் தொடங்குவது போலாகும்.

தனக்கு இஷ்டமான வழியை இங்கிலாந்து தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். விழிப்புற்றிருக்கும் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் இனி ஒரு கணமும் அது அடிமைகளாக வைத்திருக்க முடியாது. சாம்ராஜ்யத்தில் மற்ற நாடுகளுடன் இந்தியா சமமான பங்காளியாக இருக்க வேண்டுமாயின், இந்தியாவின் வாக்குரிமைப் பலம் மற்றெந்த நாட்டையும் காட்டிலும் மிகவும் மேன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும். சுதந்திர நாடுகளைக் கொண்ட காமன்வெல்த்திலிருந்து ஒவ்வொரு பங்காளிக்கும், மற்றவர்கள் தவறான வழியில் செல்லும்போது விலகிக்கொள்ள உரிமை உண்டு. அது போலவே, மற்றவர்கள் சில பொதுவான கொள்கைகளை நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் பின்பற்றி வருகையில், அதிலிருந்து விலகாமல் இருக்க வேண்டியதும் கடமையுமாகும். இந்தியா தவறினால், மற்ற நாடுகளைப் போல் இங்கிலாந்தும் வெளியேறிக்கொள்ளலாம். இப்பொழுது எல்லாம் இங்கிலாந்தையே சார்ந்திருக்கின்றன. இது மாறி இந்தியாவைச் சார்ந்திருக்கும் நிலைமை வர வேண்டும். இதுதான் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட சுயராஜ்யம் என்று நான் சொல்லுவதன் அர்த்தம். நமது ஆலோசனைகளில் பலாத்காரத்திற்கு இடமே இருக்கக்கூடாது. புத்திக்கு இடமளிக்க வேண்டுமேயொழியக் கத்திக்கு அல்ல.

இங்கிலாந்துக்கு எப்படியோ அப்படித்தான் இந்தியாவுக்கும். இந்தியாவும் இரண்டில் ஒன்று செய்ய முடியும். இங்கிலாந்து முடிவில் சத்தியத்தின் பக்கம் நிற்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் இன்று சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட சுயராஜ்யம்

கேட்கிறோம். சத்திய நெறியினின்றும் வழுவினால், நாம் கோருவது பரிபூரண சுதந்திரமேயாகும். ஆனால், பிரிட்டன் துருக்கியை அழிக்க முயற்சிக்கிறது என்று சந்தேகமற நிரூபிக்கப்பட்டால், பரிபூரண சுதந்திரத்தைத் தவிர, வேறொன்றையும் இந்தியா தேர்ந்தெடுப்பதற்கில்லை. துருக்கியின் வாழ்விற்கே ஆபத்து வந்திருக்கும்போது, முஸ்லிம்கள் யோசிப்பதற்கே இடமில்லை. இயன்றால், வாளையுருவித் துருக்கியருக்குத் துணையாக நிற்பார்கள்; வீரர்களான துருக்கியர்களுடன் அழிவார்கள் அல்லது வெற்றி பெற்று எழுவார்கள். ஆனால், பிரிட்டிஷ் சர்க்காரின் ஆட்சி முறையின் பயனாக, இன்று முஸ்லிம்கள் அவர்களுடன் யுத்தம் தொடுக்கும் நிலையில் இல்லை. எனினும், அக்கிரமமாகத் துருக்கிக்கு விரோதமாகப் போர் தொடுக்கும் சர்க்காரிடம் தங்களுக்கு விசுவாசம் இல்லையென்று முஸ்லிம்கள் கூறிவிட முடியும். ஹிந்துக்களின் கடமையும் தெளிவானது. இன்னும் நாம் முஸ்லிம்களுக்குப் பயந்து அவநம்பிக்கை கொண்டால், நாம் பிரிட்டிஷாருடன் சேர்ந்து அடிமை வாழ்வை நீடிக்கச் செய்ய வேண்டும். நாம் தைரியமும் மதப்பற்றும் உடையவர்களாயின், நமது தேச மக்களாகிய முஸ்லிம்களைக் கண்டு பயப்படக்கூடாது. நமக்கு அவர்களை நம்புவதற்கு வேண்டிய புத்திசாலித்தனமிருந்தால், நாம் அவர்களுடன் இந்திய சுதந்திரத்திற்காக அமைதியான, உண்மையான எல்லா வழிகளிலும் சேர்ந்து உழைக்க வேண்டும். பூரண சுதந்திரத்திற்கோ, அல்லது சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட சுயராஜ்யத்திற்கோ ஒரு ஹிந்துவிற்கு அகிம்சையுடன் கூடிய ஒத்துழையாமையைத் தவிர வேறு வழியே இல்லை. நான் அறிந்து கொண்டுள்ள ஹிந்து மதத் தத்துவம் இதுதான். அகிம்சையின் ரகசியமான, எதிர்க்க முடியாத சக்தியை இந்தியா உணர்ந்து கையாண்டால், இந்தியாவிற்கு இன்றே குடியேற்ற நாட்டு அந்தஸ்து, அல்லது சுதந்திர அந்தஸ்து கிடைத்துவிடும். இந்தப் பாடத்தைக் கற்றுக்கொண்டால், பின்னர் இந்தியா ஒத்துழையாமையின் மற்ற நிலைகளாகிய வரி கொடாமை முதலியவற்றைக் கைக்கொள்ளத் தகுதியடையும். இதற்கு இன்று இந்தியா தயாராயில்லை. துருக்கியை அழிக்கவோ, அல்லது இந்தியாவை அடிமையாக வைத்திருக்கவோ, நடக்கும் சதிகளை எல்லாம் முறியடித்துவிட நாம் தயாராக இருக்க வேண்டுமானால் பகுத்தறிவுடன் கூடிய அகிம்சை செயல்படுவதற்கான சூழ்நிலையை விரைவில் உண்டாக்க வேண்டும். அது கோழைகளின் அகிம்சை அல்ல, வீரர்களின் அகிம்சையாக இருக்க வேண்டும். அத்தகையோர் பிறரைக் கொல்லுவதை வெறுப்பார்கள்; சத்தியத்தை நிலைநிறுத்துவதற்காக மகிழ்ச்சியுடன் தங்கள் உயிரையே கொடுப்பார்கள்.

—'எங் இந்தியா' – 29—6—1921

# 13

# அலி சகோதரர்கள் கைது

[கிலாபத் பிரச்னை சம்பந்தமாக அலி சகோதரர்களான மௌலானா முகமது அலியும் மௌலானா ஷவுகத் அலியும் மக்களிடையே பலாத்காரத்தைத் தூண்டும் வகையில் பிரசங்கங்கள் செய்ததாகக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கைதியானதும், இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுக்குக் காந்திஜி ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

அன்புள்ள தேச மக்களே!

மௌலானா ஷவுகத் அலியையும், முகமது அலியையும் சிறைப் படுத்தியது, ஒவ்வொரு இந்தியரது உணர்ச்சியையும் தட்டியெழுப்பிவிட்டது. உங்களை அது எவ்வாறு பாதிக்கிறது என்பதை நான் அறிவேன். அலி சகோதரர்கள் தேசபக்தர்கள். ஆனால், முதலில் அவர்கள் முஸ்லிம்கள்; பிறகுதான் மற்றதெல்லாம். இப்படித்தான் உணர்ச்சியுடைய ஒவ்வொருவரும் இருக்க வேண்டும். இஸ்லாமில் உள்ள சிறப்புகளுக்கெல்லாம் அலி சகோதரர்கள் பல வருடங்களாகப் பிரதிநிதிகளாக இருந்து வந்திருக்கின்றார்கள். இந்தியாவில் இஸ்லாமின் அந்தஸ்தை உயர்த்துவதற்காக, வேறு எந்த முஸ்லிமைக் காட்டிலும் இவ்விரு சகோதரர்களும்தான் அதிகமாகப் பாடுபட்டிருக்கிறார்கள். கிலாபத் லட்சியத்திற்காக இவர்கள் உழைத்திருப்பதைப் போல் வேறு எந்த முஸ்லிமும் உழைக்கவில்லை. அவர்கள் உண்மையாளர்கள்; சிந்துவாராவில் கண்காணிப்புக் கைதியாக இருந்தபோதுகூட தங்கள் மனத்திற்குத் தோன்றியதை அவர்கள் தைரியமாக வெளியிட்டார்கள். நெடுநாள் கண்காணிப்பு அவர்கள் மனோதிடத்தை அசைக்கவில்லை. எவ்வளவு தைரியத்துடன் சிறைக்குள் சென்றார்களோ அவ்வளவு தைரியத்துடனேயே வெளிவந்தார்கள். கண்காணிப்பிலிருந்து விடுதலையானதிலிருந்து தாங்கள் உண்மைத் தேசீயவாதிகள் என்பதை அவர்கள் காட்டியுள்ளனர். நீங்களும் அதில் பெருமை கொண்டிருக்கிறீர்கள்.

தங்களுடைய எளிமையினாலும், அடக்கத்தினாலும், தளரா ஊக்கத்தினாலும் பொதுமக்களுக்கு உத்வேகம் ஏற்படும்படி அவர்கள் செய்துள்ளனர். வேறு எந்த முஸ்லிமும் இம்மாதிரி செய்ததில்லை. இந்தக் குணாதிசயங்கள் எல்லாம் அவர்கள் மீது உங்களுக்கு அன்பு ஏற்படும்படி செய்திருக்கின்றன. அவர்களை உங்களுடைய லட்சியப் புருடர்களாகக் கருதுகிறீர்கள். உங்களைப் போல் மற்றும் பலரும் அவர்களது இன்முகம் காணாது வருந்துகின்றனர். எனக்கு அவர்கள் இணைபிரியாதவர்களாகிவிட்டார்கள். நான் கையிழந்தவன் போலாகி விட்டேன். முஸ்லிம்கள் சம்பந்தமான விஷயங்களில் ஷவுகத் அலிதான் எனக்கு ஆலோசகரும் நண்பருமாக

இருந்தார். அவர் எனக்குத் தப்பு வழி காட்டியதில்லை. அவரது முடிவுகள் பெரும்பாலும் நியாய நெறியினின்று வழுவியதில்லை. நம் மத்தியில் அலி சகோதரர்கள் இருந்த வரை, நான் ஹிந்து -முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி நிச்சயமாக இருந்தேன். இந்த ஒற்றுமையின் மதிப்பை அவர்களைப் போல் வேறு எவரும் அறியவில்லை.

நம்மிடையே அவர்கள் இல்லாதது நம்மைத் துக்கத்தில் ஆழ்த்திவிடக்கூடாது. அதைக் குறித்து நாம் சோர்வும் அடையக்கூடாது. நாம் ஒவ்வொருவரும் தனித்து நிற்கப் பழகிக் கொள்ள வேண்டும். கடவுள் ஒருவர்தான் நமக்கு தவருத, நிரந்தரமான வழிகாட்டி. சோர்வடைவது, அலி சகோதரர்களை நாம் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை என்பதையே காட்டும். அத்துடன் நாம் மதத்தையும் நன்கு தெரிந்துகொள்ளவில்லை என்றுதான் ஆகும். நமது பிரியத்திற்குகந்தவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த காலத்தும், அவர்களின் ஆன்மா நம்முடனேயே இருக்கிறது என்பது எல்லா மதங்களிலும் காணும் உண்மை அல்லவா? அலி சகோதரர்களின் ஆன்மா நம்முடனிருப்பது மட்டுமல்லாமல் தாம் படும் கஷ்டத்தினல் அவர்கள் மேலான சேவை செய்கிருர்கள். நம்மிடையே இருந்து அவர்கள், தைரியத்தையும் நம்பிக்கையையும் சக்தியையும் நமக்கு ஊட்டிச் சேவை செய்வதைவிடப் பன்மடங்கு அதிகமாகவே அங்கிருந்து சேவை செய்கின்றனர்.

அகிம்சை, ஒத்துழையாமை இவைகளின் ரகசியமே, நாம் படும் கஷ்டத்தினல் நமது குறிக்கோளை அடைகிருேம் என்பதுதான். பட்டம் பதவிகளைத் துறப்பது, சட்டசபைகளையும் நீதி மன்றங்களையும் பகிஷ்கரிப்பது, பாடசாலைகளை விடுவது எல்லாம் கஷ்டத்தின் அற்ப அளவுதானே. இந்தப் பூர்வாங்கமான தியாகம், பின்வரும் கஷ்டங்களுக்கு முதற்படியாகும். அவசியமானல், சிறைவாசம், தூக்குத்தண்டனையும் உள்படப் பெருங் கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தே தீர வேண்டும். அதிகம் பேர் அதிகக் கஷ்டங்களுக்கு உள்ளாகும்பொழுது, நாம் நமது லட்சியத்தை நெருங்குகிருேம். பெரிய கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நமக்கு வெற்றியைத் தரா; அமைதியாக அனுபவிக்கும் கஷ்டங்களே வெற்றியைக்கொடுக்கும். இந்த உண்மையை நாம் எவ்வளவு சீக்கிரமாகத் தெரிந்துகொள்ளுகிருேமோ, அவ்வளவு சீக்கிரமாகவும் நிச்சயமாகவும் நமக்கு வெற்றி கிட்டும்.

உங்கள் லட்சியம் நியாயமானது. அதனுல்தான், நான் அதை என் சொந்தமானதாக்கிக்கொண்டுள்ளேன். கிலாபத் ஒரு லட்சியம் என்பதை உங்களில் சிறந்தவர்களிடமிருந்து தெரிந்து கொண்டேன். ஒரு தீமையை, அல்லது தீய ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக நீங்கள் சண்டையிடவில்லை. பலமிழந்தோரையும் அவர்களது தேசத்தையும் பறிக்கும் நவீனக் கலையைத் துருக்கி தெரிந்துகொள்ளவில்லை. ஆதலால், ஐரோப்பியர்கள்,

முக்கியமாக ஆங்கிலேயர்கள், அவர்களை இழிவாகக் கருதுகிறார்கள். துருக்கியர்கள் முஸ்லிம்கள்,என்பதற்காகவும் பழிக்கப்படுகிறார்கள்; நீங்கள் துருக்கியர்களுக்கு உதவ விரும்புகிறீர்கள். துருக்கியர்களுக்காகச் சண்டயிடுவதன் மூலம், நீங்கள் உங்கள் மதத்தின் கௌரவத்தையும் தூய்மையையும் உயர்த்துவதற்காகப் போராடுகிறீர்கள்.

எனவே, நீங்கள் உங்கள் நோக்கத்தை அடையப் பரிசுத்தமான வழிகளைக் கையாள இயல்பாகவே முடிவு செய்திருக்கிறீர்கள். முஸ்லிம்களும் ஹிந்துக்களும் ஆன்ம சக்தி மிகவும் குன்றி நிற்கின்றோம் என்பதை மறுக்க முடியாது. நாம் நமது மதங்களின் சக்தியற்ற பிரதிநிதிகளாக இருக்கின்றோம். ஒவ்வொருவரும் கடவுளின் உண்மைக் குழந்தைகள் ஆவதைவிட்டு, மற்றவர்கள் நம்முடைய மதத்திற்காக வாழவும் இறக்கவும்கூட வேண்டுமென நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால், ஒவ்வொருவரையும் கடவுளை நோக்கும்படி செய்கிற ஒரு முறையை நாம் இப்போது தேர்ந்தெடுத்திருக்கிறோம். நமது எதிரி தவறான காரியங்களைச் சாதிக்கத் தவறான முறைகளைக் கையாளுகிறார் என்பதே ஒத்துழையாமையின் கருத்தாகும். ஆதலால், நமது எதிரியின் வழியினின்றும் வேறான சத்திய நெறியைக் கடைப்பிடித்தால் தான் கடவுள் நமக்கு அருளுவார். நாம் கொண்டுள்ள முடிவும் வழியும் பெருமையானவை. நம் முறை உண்மையிலேயே நடைமுறையில் சர்க்கார் கொண்டுள்ளதைவிட வேறானதாயிருந்தால் மாத்திரமே, வெகு சீக்கிரத்தில் நாம் நமது குறிக்கோளை அடைவோம். பலாத்காரம் தான் அரசாங்கம் இறுதியாக நாடும் அடைக்கலமாகும். ஆனால், நமது நம்பிக்கை முழுதும் அன்பு நெறியில்தான் இருக்க வேண்டும். எதிர்ப்பு இல்லாமல் ஒருவித சக்தியையும் உண்டுபண்ண முடியாது. சர்க்காரின் பலாத்காரத்தை நமது எதிர்ப்பின்மையின் மூலம் செயலற்று நிற்கும்படி செய்ய வேண்டும். இதற்கு நமது அகிம்சை உண்மையானதாக இருக்க வேண்டுமாயின், மனம், பேச்சு. மெய் இவற்றிற்கு முரணின்றி இருக்க வேண்டும். நீங்கள் அகிம்சையை ஓர் உபாயமாகவே ஏற்றுக்கொண்டிருக்கின்றீர்கள் என்பது, இதில் யாதொருவித மாறுதலையும் உண்டுபண்ணுவதற்கில்லை. நீங்கள் எடுத்துக்கொண்டுள்ள விரதம் நிலைத்து நிற்கும் வரை, ஹிம்சை பயக்கும் எந்தவிதச் செயல்களையும், திட்டங்களையும் பற்றி நினைக்கவும் கூடாது. அகிம்சைத் திட்டத்தில் நமக்குப் பூரண நம்பிக்கை வேண்டும். மனம், வாக்கு, காயம் இம்மூன்றும் ஒரே வழியில் அகிம்சையைப் பின்பற்ற வேண்டும். கோபமூட்டுவதற்குரிய பெரிய சந்தர்ப்பத்தில் நாம் அகிம்சையைக் கடைப்பிடித்தால், பூரண வெற்றி நிச்சயம். அதுவும் இவ்வருடத்திற்குள்ளேயே கிடைக்கும். இதை ஒவ்வொரு முஸ்லிமும் உணர வேண்டுமென விரும்புகிறேன்.

அகிம்சைத் திட்டம் ஒரு பகற்கனவல்ல. ஹிந்துக்களை விட்டுவிட்டாலும் ஏழு கோடி முஸ்லிம்களின் ஒன்றுபட்ட உறுதி

என்னென்ன காரியங்களைச் சாதிக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். பட்டதாரிகள் எல்லாம் பட்டத்தைத் துறந்திருந்தால், வக்கீல்கள் எல்லாம் நீதி மன்றங்களுக்குச் செல்லாதிருந்தால், மாணவர்கள் அனைவரும் பாடசாலைகளைப் பகிஷ்கரித்திருந்தால், இதற்குள் வெற்றி கிட்டியிராதா? நம்மில் பலர் சுயநலமிகள், கோழைகள் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஏழு கோடிப் பேரை முஸ்லிம்கள் என்றும், இருபத்திரண்டு கோடிப் பேரை ஹிந்துக்கள் என்றும் கூறுகிறார்கள். ஆயினும், ஒரு சிலர்தான் உண்மையான ஹிந்துக்கள் அல்லது உண்மையான முஸ்லிம்கள் எனக் கூறுவதற்குத் தகுதியுடையவர்கள். நமது நோக்கம் கைகூடாமற் போனதற்குக் காரணம் நாம்தான். நாம் சொல்லிக்கொள்ளுவது போல், நமது போராட்டம் மத சம்பந்தமானதாயிருந்தால், நாம் நம்மையே குறை கூறிக் கொள்ளுவதல்லாமல், மற்றவர்கள் மேல் பொறுமையிழக்கக் கூடாது; ஒருவருக்கொருவர்கூடக் குறை கூறிக்கொள்ளக் கூடாது.

எவ்வளவு தூண்டினாலும், நான் பலாத்காரச் செயல்களில் இறங்கமாட்டேன். அது போலவே அலி சகோதரர்களும் கள்ளங் கபடமற்ற உள்ளம் படைத்தவர்கள். அவர்களின் தியாகம் களங்கமற்றது. தம்மால் இயன்ற அனைத்தையும் இஸ்லாமிற்கும் நாட்டிற்கும் அவர்கள் செய்துள்ளார்கள். இவ்வருடத்திற்குள் கிலாபத் பிரச்னைக்கும், பஞ்சாப் படுகொலைக்கும் சரியான பரிகாரம் ஏற்பட்டு சுயராஜ்யம் நிலைநாட்டப்படாவிட்டால், அக்குறை உங்களையும் என்னையுமே சாரும். நாம் அகிம்சை நெறியில் நிற்க வேண்டும். ஆனால், செயலற்றிருக்கக்கூடாது. சிப்பாய்களின் கடமையைப் பற்றி அலி சகோதரர்களின் திட்டத்தை மறுபடியும் கோஷித்து, நாமும் சிறை செல்ல முன் வர வேண்டும். பெரிய தலைவர்கள் இல்லாவிட்டால், இந்த இயக்கம் நடைபெறாதென நாம் நினைக்கக்கூடாது. நடைபெறாதென்றால் கிலாபத், பஞ்சாப் கொடுமைகளுக்குப் பரிகாரம் தேடவும், சுயராஜ்யத்திற்கும் நாம் தகுதியற்றவர்கள் ஆவோம். இப்போதுள்ள அரசாங்கத்தில் சிப்பாயாகவோ, அல்லது வேறு எந்த முறையிலோ வேலை செய்வது, எந்த முஸ்லிமுக்கும் ஹிந்துவுக்கும் பாவமான காரியம் என்று ஓராயிரம் மேடைகளில் நின்று நாம் பறைசாற்ற வேண்டும்.

இதற்கெல்லாம் மேலாக, நாம் அந்நியத் துணிகளைப் பகிஷ்கரிக்க வேண்டும். அது பிரிட்டிஷ், ஜப்பான், அமெரிக்கா, பிரான்ஸ் எந்த நாட்டுத் துணியாக இருப்பினும் சரி. அத்துடன் ஏற்கனவே ராட்டினத்தை நாம் கைக்கொண்டிராவிட்டால், இனியாவது உடனே நமது வீடுகளில் ராட்டினம் சுற்ற ஆரம்பிக்க வேண்டும். நமக்கு வேண்டிய எல்லாத் துணிகளையும் நமது வீடுகளிலேயே கைத்தறிகள் வைத்து உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். இப்படிச் செய்வது கிலாபத்தைக் காப்பதற்கும், நாட்டின் விடுதலைக்கும் அகிம்சை வழி என்பதில் நமக்

குள்ள உறுதியைக் காட்டும். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை யும் இது வெளிப்படுத்தும். இதுதான் நமக்கு நமது திட்டத்தி லுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தக்கூடிய ஒரு சோதனையு மாகும். மறுமுறையும் கூறுகின்றேன். வெளிநாட்டுத் துணி முழு வதையும் பூரணமாகப் பகிஷ்காரம் செய்தால், ஒரு மாதத்திற் குள்ளேயே நமது நோக்கம் நிறைவேறும். இது எனது உறுதி யான துணிபு. இப்படிச் செய்தால், பிறகு நமது சக்தியிலே நமக்கு நம்பிக்கை வந்துவிடும். பலாத்காரச் செயல்களை அடக் கும் திறமையுண்டாகும். அவசியமான சமயம் சட்ட மறுப்பும் செய்யலாம்.

அரசாங்கம் உங்கள்மீது ஆழமான காயங்களை உண்டாக்கி யிருக்கிறது. அகிம்சைதான் இதற்கேற்ற மருந்து. நடைமுறை யில் அகிம்சை என்பது, அந்நியத்துணி பகிஷ்காரமும் நமது வீடுகளிலேயே துணி உற்பத்தி செய்தலுமேயாகும்.

இப்படிக்கு
உங்கள் நண்பனும் தோழனுமான,
**மோ. க. காந்தி.**

—'எங் இந்தியா' - 29-9-1921-

# 14

# கிலாபத்தைப்பற்றி என்ன?


அநேக முஸ்லிம் நண்பர்கள் இவ்விதம் சொல்லுகிறார்கள் :

"உங்கள் திட்டம் சுயராஜ்யம் அடைவதற்குச் சரிதான். கிலாபத்தைக் காப்பாற்றுவதற்குப் போதுமான வேகம் இதில் இல்லை. கிலாபத் பிரச்னை இன்னும் சில மாதங்களில் முடிவு செய்யப்படும். ஏதாவது நம்மால் செய்ய முடியுமானால், அதை இப்போதே செய்ய வேண்டும்."


**நாம்** இதைப் பரிசீலனை செய்யலாம். கடவுளின் கிருபை யால் கிலாபத்தின் பொறுப்பு அனைத்தும் காஜி முஸ்தபா கமால் பாட்சாவின் கையில் பத்திரமாக இருக்கிறது. கிலாபத்தின் கௌரவத்தை மறுபடியும் அவர் நிலைநாட்டியுள்ளார். நவீன காலத்திய வேறு எந்த முஸ்லிமும் இந்த அளவிற்குச் செய்த தில்லை. பணத்தினால் இந்தியா அதிக உதவி செய்யவில்லை. எனினும், இங்கிருந்து போன பணம் ஓரளவுக்கு உதவியாக இருந்தது. இதைவிட ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையினாலும், அர சாங்கத்திற்குக் கொடுத்த சவாலினாலுமே, துருக்கிக்கு இந்தியா அதிகம் உதவி செய்திருக்கிறது. துருக்கிக்கு விரோதமாக நடந்துகொண்டு, தனது செல்வாக்கைத் துருக்கிக்கு எதிராக இங்கிலாந்து உபயோகிப்பதைக் கண்டித்து, இந்தியா வெகு தெளிவாகச் சொல்லிவிட்டது. இந்த நிலை நீடித்தால், இந்தியா

பூரண சுதந்திரம் அடைவதே தனது லட்சியம் என்பதைப் பிரகடனப்படுத்தும் என்பதையும் தெளிவாக்கியிருக்கிறது. இந்தப் பிரகடனத்திற்கு அதிகப் பலமிருந்தால், இஸ்லாமின் கௌரவமும் கமால் பாட்சாவின் சக்தியும் உயரும். தராதரமின்றிச் சில ஆயிரம் பேர் சிறை சென்று சர்க்காருக்கு முட்டுக்கட்டை போடுவதால், நமது விருப்பத்திற்கு அரசாங்கம் இணங்கிவிடுமென்று சிலர் நினைக்கின்றனர். அரசாங்கத்தின் சக்தியை நாம் இவ்விதம் குறைவாக மதிப்பிடக்கூடாது. பலாத்காரத்தை நசுக்குவதற்குப் போதிய பலம் சர்க்காருக்கு இன்னும் நிச்சயமாய் இருக்கின்றதெனநான் நம்புகின்றேன். எப்படியாவது சிறைக்குப் போவது என்பது, பலாத்காரத்தைத் தவிர வேறில்லை. வீணர்களின் கூக்குரலால் ஒன்றும் ஆகாது. கடவுளிடம் பயபக்தியுள்ள பரிசுத்தவான்கள் படும் துன்பத்தினால் மாத்திரமே நன்மை ஏற்படும். பரிசுத்தம் அடைந்த அளவிற்கு இந்தியா பலம் பெறும். உடல் பலம் குன்றியவர்களின் ஒரே ஆயுதம் தூய்மைதான். உடல் வலி மிக்கோர் தங்கள் பலத்தை ஒன்று சேர்த்துக்கொண்டு கர்வத்தினால் ஆண்டவனின் வேலைகளைக்கூடத் தன்மீது போட்டுக்கொள்ளுகிறார்கள். தங்களுடன் மோதுவதற்குத் தங்கள் போன்ற எதிரியில்லாமல் முற்றிலும் நேர்மாறான எதிரிகளைக் காணும்போது, இவர்களின் மிருக பலம் செயலற்றுப் போகிறது. திண்மையுள்ள வஸ்துதான் மற்றொரு திண்மையுள்ள வஸ்துவை எதிர்த்து முன்னேறிப் போகமுடியும். ஆகாயத்தில் கோட்டை கட்ட முடியாது. வீண் வம்பர்களின் ஒழுங்கற்ற கூட்டத்தார் சிறை செல்லலாம், கட்டிடங்களைக் கொளுத்தலாம், அல்லது கூக்குரலிட்டு ஆர்ப்பாட்டம் செய்யலாம். இவை எல்லாம் "உலகத்திலேயே மிக்க உறுதி வாய்ந்த மக்களின்" கட்டுக்கோப்பான அகங்காரத்தின்முன் நிற்கமுடியா. இந்த வெளிப்படையான உண்மையைப் பொறுமையிழந்துள்ள முஸ்லிம்கள் உணரவேண்டும். சாந்தமும் பரிசுத்தத் தன்மையும் உடையவர்களின் அடக்கத்தினால்தான் இப்பயங்கரமான அகங்காரத்தை எதிர்க்க முடியும். திக்கற்றவர்களுக்குத்தான் தெய்வம் துணைசெய்யும். தாங்கள் ஏதோ சாதித்துவிடமுடியும் என்று நம்புவோருக்கு அத்துணை கிட்டாது. முஸ்லிமல்லாத எனக்கு இந்தப் பேருண்மையைக் குரானின் ஒவ்வொரு பக்கமும் புகட்டுகிறது. அருள் வள்ளலும் கருணாநிதியுமாகிய கடவுளின் பெயரைக் கொண்டே, குரானின் ஒவ்வோர் அத்தியாயமும் கருத்தும் ஆரம்பமாகின்றது. ஆதலால், நாம் உடல் வலி குறைந்தவர்களாயினும், ஆன்ம பலமுடையவர்களாக இருப்போம். முஸ்லிம்கள் அகிம்சையை நம்பினால் அதற்குச் சரியானபடி ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கவேண்டும். கோபத்திற்கும் பகைமைக்கும் நெஞ்சில் இடமளித்தார்களானால், அவர்கள் அகிம்சைக்குச் சந்தர்ப்பம் அளித்தவர்கள் ஆகமாட்டார்கள்.

மற்றவர்களைப் பயமுறுத்துவதாலும், பலாத்காரத்தை விளம்பரப்படுத்துவதாலும், பலாத்காரமான மறியலாலும் நம்முடன் பிறரை ஒத்துழைக்கும்படி செய்ய முடியாது. இப்படிச் செய்தால்,



உலகப்பிரசித்தமான கராச்சி வழக்கு விசாரணை எதிரிகளான ஷவுகத் அலி, சாரதாபீட சங்கராச்சாரியார், முகமது அலி, டாக்டர் கிச்சுலு.



1924 டிசம்பர் 31-ஆம் தேதி பம்பாயில் நடந்த முஸ்லிம் லீக் மகாநாட்டில். அப்பொழுது காங்கிரஸ் தலைவரா யிருந்த காந்திஜி பேசினர். அப்பொழுது பண்டித மோதிலால் நேரு, டாக்டர் கிச்சுலு, மௌலானா முகமது அலி, ஜனப் ஜின்னா, ஸ்ரீமதி சரோஜனி நாயுடு, மௌலானா ஷவுகத் அலி ஆகியோர் பக்கத்தில் இருக்கின்றனர்.

நாம் அநேகம் பேருடைய அனுதாபத்தை இழப்போம். சர்க்காருடன் ஒத்துழைக்க நம்மைப் பலவந்தப்படுத்தினால் நாம் அதற்கு ஒருப்படோம். அப்படி இருக்க, மற்றவர்களை நாம் எப்படி நம்முடன் ஒத்துழைக்குமாறு பலவந்தப்படுத்துவது? நம்மிடம் மற்றவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென நாம் விரும்புகிறோமோ, அவ்வாறே நாமும் பிறரிடம் நடந்துகொள்ள வேண்டும் அல்லவா?

ஸெவ்ரிஸில்* கையெழுத்தான யுத்த சமாதான உடன்படிக்கை நமக்குத் திருப்தியளிக்கும் முறையில் மாற்றப்படாவிட்டால் அது முடிவடைந்துவிடாது. தனது கோரிக்கைக்குக் குறைந்த எதைக்கொண்டும் இந்தியா திருப்தியடைதல் கூடாது. இதுதான் இந்தியாவிற்குப் பெருமையை அளிக்கும். ஜாஜுருத்-உல்-அரேபியாவைப்பற்றிய முடிவை முஸ்தபா கமால் வற்புறுத்தாதிருக்கலாம். ஆனால், அது அப்படியே முஸ்லிம்களுக்குத் திருப்பித் தரப்படும் வரை நாம் நமது போரைத் தொடர்ந்து நடத்தவேண்டும். படைப் பலத்தால் தங்களது கோரிக்கையை அடையலாம் என முஸ்லிம்கள் கருதினால், அவர்கள் அகிம்சைக் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து விலகிக்கொள்ளட்டும். விலகமுடியாதென நினைத்தால், மனம், வாக்கு, காயங்களினாலும் அகிம்சையைப் பின்பற்றட்டும். அப்பொழுது, கிலாபத் அநீதிக்குப் பரிகாரம் கிடைப்பதற்கும், தங்களது துக்கம் தணிவதற்கும் இதைவிட நேரான, நிச்சயமான வழி வேறொன்றில்லை என்பதை அவர்கள் கண்டுகொள்ளுவார்கள்.

—' எங் இந்தியா "—23-2-1922.

# 15

# கிலாபத்தும் பசுவும்

[டில்லியில் நடந்த அகில இந்திய கிலாபத் மகாநாட்டில், கிலாபத் இயக்கத்தையும் பசுப் பாதுகாப்புப் பிரச்னையையும் ஏன் இணைக்கக்கூடாது என்பதை விளக்கி காந்திஜி நிகழ்த்திய பிரசங்கத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

"மகாநாட்டுக் காரியதரிசி ஸ்ரீ ஆஸப் அலி தமது சுற்றறிக்கையில், கோரட்சணையைப் பற்றியும் பஞ்சாப் விஷயத்தைப் பற்றியும் ஆலோசிக்கப்படும் எனத் தெரிவித்திருக்கிறார். ஹிந்

* ஸெவ்ரிஸ், பிரான்ஸ் தேசத்தில் உள்ள ஒரு நகரமாகும். முதலாவது உலக மகாயுத்தம் முடிந்த பின் பிரான்ஸைச் சேர்ந்த வர்செயில்ஸ் நகரில் யுத்த சமாதான உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. ஸெவ்ரிஸ் நகரில் 1920 ஆகஸ்டு 10-ஆம் தேதி துருக்கி சம்பந்தமான உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. துருக்கியின் சீர்குலைவுக்குக் காரணமான அந்த உடன்படிக்கை, குறிப்பாக இந்திய முஸ்லிம்களிடையே பேராத்திரத்தை உண்டாக்கியது. இந்தியாவில் கிலாபத் இயக்கம் உருவானதற்குக் காரணம்

துக்கள், கோரட்சணையைப்பற்றி இங்கு குறிப்பிடக்கூடாது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். நட்பு எனப்படுவது இடுக்கண் களைவது; அதுவும் கைம்மாறு வேண்டாது செய்வது. யோசித்துச் செய்கிற கூட்டுறவு ஒரு வியாபார ஒப்பந்தமாகி விடும்; அது நட்பாகாது. கைம்மாறு கருதிய கூட்டுறவு, இணைக்கும் சக்தியிழந்த கலப்படமான சிமென்ட் போன்றது. முஸ்லிம்களின் கட்சி நியாயமானது என்ருல், அவர்களுடன் ஒத்துழைப்பது ஹிந்துக்களின் கடமை. ஹிந்துக்களின் உணர்ச்சிகளுக்கு மரியாதை செய்வதும், பசுக்களைக் கொல்லுவதை நிறுத்துவதும் தங்கள் கடமை என முஸ்லிம்கள் நினைத்தால், ஹிந்துக்கள் தங்களுடன் ஒத்துழைத்தாலும் ஒத்துழைக்காவிட்டாலும், அப்படியே செய்யலாம். பசுவைப் பூஜை செய்வதில் நான் எந்த ஹிந்துவுக்கும் குறைந்தவனல்ல. எனினும் பசுவதை தவிர்த்தலை, ஒத்துழைப்புக்கு ஒரு நிபந்தனையாக்க நான் விரும்பவில்லை. நிபந்தனையற்ற ஒத்துழைப்பே பசுக் காத்தல்தான்.

"பஞ்சாப் விஷயத்திலும் நான் வேறு மாதிரியாகவே நினைக்கின்றேன். இவ்விஷயத்தை நான் ஆழ்ந்து ஆராய்ந்துள்ளேன். இது பலரை வெந்துயரில் ஆழ்த்தியிருக்கும். ஆனல், அது அவர்கள் எல்லோரையும்விட அதிகமாகப் புண்படுத்தியது என்னைத்தான். இருப்பினும் இதைப் பற்றி நாம் இங்கே பேசுவதை நான் விரும்பவில்லை. பஞ்சாப் அக்கிரமங்கள் எவ்வளவு கொடியனவாக இருப்பினும், அதைக் காரணமாகக்கொண்டு ஏகாதிபத்தியக் கொண்டாட்டங்களிலிருந்து நாம் விலகி நிற்க முடியாது; நாம் விலகி நிற்பதற்குச் சரியான காரணம், பஞ்சாப் அக்கிரமத்திற்குப் பரிகாரம் கிடைக்காததே என்று நாம் கூற முடியாது. ஏனென்ருல், நாம் இன்னும் இதற்குப் பரிகாரத்தை எதிர்பார்க்கிருேம். ஹண்டர் கமிட்டி இன்னும் வேலை செய்துகொண்டிருக்கிறது. நமது கமிட்டியும் அவ்விஷயத்தில் மும்முரமாக இருந்து வருகிறது. சமாதான ஷரத்துக்களைப் பற்றிச் சந்தேகம் ஏற்பட்டாலோ, அல்லது அதில் அதிருப்தி ஏற்பட்டாலோதான் விலகி நிற்க நாம் முடிவு செய்யலாம்.

"கிலாபத் பிரச்னை ஒன்றுதான் அப்படிப்பட்டது. கிலாபத் பிரச்னை எந்த நிலையில் இருக்கிறது என்பது பற்றி நமக்கு எதுவுமே தெரியவில்லை. அத்துடன் நமக்குத் திருப்தி தரும் வழியில் அது முடிவுருது என்னும் ஐயமும் நமக்கு இருக்கிறது. எனவே, இது காரணமாக நாம் விலகி நிற்கலாம். பஞ்சாபை இங்கே கொண்டு வந்தால், தகுதி அறியாதவர்களென நாம் குற்றம் சாட்டப்படுவோம். அது கிலாபத்திற்கும் பஞ்சாப் பிரச்னைக்

இந்த உடன்படிக்கையேயாகும். அப்போது இந்தியா வைஸ்ராயாக இருந்த லார்டு செம்ஸ்போர்டு, "மடத்தனமான திட்டங்களுக்கெல்லாம் மேலான மகா மடத்தனமான திட்டம்" என்று கிலாபத் இயக்கத்தை இறுமாப்புடன் கண்டித்தார். இந்தியாவில் காந்திஜியினல் ஆரம்பிக்கப்பட்ட மாபெரும் ஒத்துழையாமை இயக்கத்திற்கு மூல காரணம், பஞ்சாப் படுகொலையும் கிலாபத் அநீதியுமேயாகும்.

குமே நஷ்டம் விளைவிக்கும். கிலாபத் பிரச்னை மிகவும் முக்கியமானது. இது உடனே கவனித்துப் பரிகாரம் செய்ய வேண்டிய விஷயமாகும். இதற்குச் சரியான தகுதி கொடுக்கவேண்டுமானல், ஒன்றுடனும் இதை நாம் கலக்கக்கூடாது."

தலைவருக்கு வந்தனோபசாரம் கூறுகையில், மௌலானா அப்துல் பாரி சாகிப் பின்வருமாறு பேசினர் :

"கோரட்சணை சம்பந்தமாகப் பேசுவதைப் பற்றி மகாத்மா காந்தி என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். அது அவருக்கும் நமது ஹிந்து சகோதரர்களுக்கும் பெருமையைத்தான் அளிக்கிறது. ஹிந்துக்களின் ஒத்துழைப்பை மறந்தால், முகமதிய சமுதாயத்திற்கு ஒரு பெருங் கேடுதான் உண்டாகும். என்னைப் பொறுத்தவரையில், அவர்கள் ஒத்துழைத்தாலும் சரி, ஒத்துழையாவிட்டாலும் சரி, பசுவதை செய்வதை உடனே நாம் நிறுத்திவிட வேண்டும் என்றுதான் சொல்லுவேன். ஏனெனில், நாம் எல்லோரும் ஒரே நாட்டு மக்கள். நாமே விரும்பிப் பசுவதையைத் தவிர்ப்பது, நமது மதக் கோட்பாடுகளுக்கு விரோதமாகாது. மௌல்வி என்கிற முறையில் இதை நான் சொல்லுகிறேன். கிலாபத் பிரச்னையில் ஹிந்துக்களின் ஒத்துழைப்பைப் போல் வேறு எதுவும் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு அவ்வளவு உதவியளிக்காது."

(கூட்டம் முழுதும் 'அங்ஙனமே ஆகுக' என்று ஆரவாரம் செய்தது!)

—'எங் இந்தியா' – 10—12—1919

# 16

# பசுத் தாய்க்கு உண்மையான சேவை

பசுக் காத்தலை ஹிந்துக்கள் உயிரினும் மேலாகக் கருதுகிருர்கள். அவர்களது உணர்ச்சிகளைக் கௌரவிக்க இதில் தங்களால் இயன்றதை எல்லாம் முஸ்லிம்கள் செய்கிருர்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஹக்கீம்ஜி அஜ்மல்கானின் தலைமையில் அமிர்தசரஸில்கூடிய முஸ்லிம் லீக், பசுக் காத்தல் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. மௌலானா அப்துல் பாரி அதைப் பற்றி எழுதினர். தம் நாட்டு ஹிந்துக்களுக்காகத் தமது வீட்டில் மாட்டு இறைச்சி உபயோகிப்பதை அலி சகோதரர்கள் நிறுத்திவிட்டார்கள். மியான் சோட்டானி சென்ற வருடம் பக்ரீத் பண்டிகையின்போது பம்பாயில் மாத்திரம் பல நூறு பசுக்களைக் காப்பாற்றினர். நம் நாட்டு முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் அக்கறை காட்டவில்லை என்று நாம் குற்றஞ் சாட்ட முடியாது.

ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்துவைக்க முனைந்துள்ள ஒரு கட்சி இருப்பதை நாம் அறிய வேண்டும். அந்தக் கட்சியே இவ்விஷயத்தில் ஹிந்து உணர்ச்சியைக் கௌரவிக்க முன் வரலாம். நான் இதைப் பற்றி ஜாக்கிரதையாக இருப்பேன்; நம்பவும் மாட்டேன். முஸ்லிம் சகோதரர்கள் கொஞ்சம் காத்திருக்கட்டும் என்று சிக்கார்பூர் நண்பர்களுக்கு நான் யோசனை கூறுகிறேன்.

இவர்கள் சகலவிதப் புலால் உணவையும் நீக்கட்டும். முஸ்லிம்களுக்கு அப்பொழுது மற்றப் புலால்கள் மாட்டு இறைச்சியை விட மலிவாகக் கிடைக்கும். பசுவோ, அல்லது அதன் சந்ததிகளோ ஹிந்துக்கள் கையில் சிக்கிக்கொண்டு துன்பப்படுவது தங்களுக்கு அவமானம் என அவர்கள் கருதட்டும். கோசாலைகளை முன் மாதிரியான பால் பண்ணைகளாக உயர்த்தட்டும். வயது முதிர்ந்த, சக்தியற்ற மாடுகளுக்கு உகந்த ஒரு நல்ல வீடாக இவை இருக்கட்டும். கோசாலைகளில் உயர்ந்த ரக மாடுகளை உற்பத்தி செய்யட்டும். கோமாதாவிற்கு இப்படி அவர்கள் உண்மையான சேவை செய்யலாம். சிக்கார்பூர் மக்கள் உண்மையான ஒத்துழையாதவர்களாகி கிலாபத் அநீதிக்கு விரைவில் பரிகாரம் ஏற்படும்படி செய்ய வேண்டும். கிலாபத்தைக் காப்பாற்றத் தங்களால் ஆனதையெல்லாம் செய்து, அதன் மூலம் பசுவையும் அவர்கள் காப்பார்களென நான் உறுதி கூறுகிறேன்.

முஸ்லிம்களின் நட்பினுல்தான் பசுவைக் காப்பாற்ற முடியும் என்று ஹிந்துக்கள் நம்ப வேண்டும். முஸ்லிம்களின் நல்லெண்ணத்தினுல்தான் பூரணப் பசுக் காத்தல் நடக்கும் என்பதை நாம் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்மை முஸ்லிம்கள் வழிக்குத் திருப்புவது கடினம். அது போலவே, அவர்களை நம் வழிக்குத் திருப்புவதும் இயலாதது. நிபந்தனையற்ற சம உரிமையும் சுயேச்சையும் உள்ள பங்காளிகளாயிருக்கும் ஒரு புதிய தத்துவத்தை நாம் சிருஷ்டித்துக்கொண்டு இருக்கிறோம்; டயரிஸம் என்னும் பயங்கர அரசுடன் போரிடக் கற்றுக் கொண்டிருக்கின்றோம்.

பசுக் காத்தல், ஹிந்துக்கள் நெஞ்சாரப் போற்றும் ஒன்று. ஹிந்துக்கள் அனைவரும் ஸ்தூலமாக நம்புவது இது ஒன்றைத்தான். பசுக் காத்தலை நம்பாதவர்கள் ஹிந்துக்களெனச் சொல்லிக்கொள்ள முடியாது. இது ஓர் உயர்ந்த நம்பிக்கை. பசுக் காத்தல் என்றால், மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடையேயுள்ள சகோதரத்துவமே. இது நீண்ட தவத்தினுலும் பொறுமையான உழைப்பினுலும் உண்டாகக்கூடிய மேலான உணர்ச்சியாகும். இதை யார்மேலும் சுமத்த முடியாது. கத்தி முனையில் பசுக் காத்தல் என்பது, அத்தத்துவத்திற்கே முரணானது. பழங்கால ரிஷிகள் பசுவிற்காகக் கடுந்தவம் கிடந்ததாகச் சொல்லப்படுகிறது. நாமும் அவர்களைப் பின்பற்றுவோம்; தவங்கிடப்போம்; அதன் மூலம் பசுவையும், அது காட்டும் தத்துவங்களையும் காத்து உயர்வடைவதற்கு வேண்டிய பரிசுத்த நிலையை அடைவோம்.

# 17

## ஹிந்து சகோதரர்களுக்கு ஆலோசனை

பசுக் காத்தல் ஹிந்து மதத்தில் ஒரு முக்கியமான நம்பிக்கையாகும். மத சம்பந்தமான புனிதத்தன்மை ஒருபுறமிருக்க, அது நம்மையே உயர்த்தும் மேலான கொள்கையாக இருக்கிறது. ஆனால், இன்று ஹிந்துக்களாகிய நமக்குப் பசுவினிடத்தும், அதன் சந்ததியினிடத்தும் கொஞ்சமும் மரியாதையோ, அக்கறையோ இல்லை. இந்தியாவைப் போல் போதிய உணவின்றியும், பராமரிப்பு இல்லாமலும் இவ்வளவு மோசமாக உலகத்தில் வேறு எந்தத் தேசத்திலும் ஆடு மாடுகள் நடத்தப்படுவதில்லை. மாட்டு இறைச்சி தின்னும் இங்கிலாந்திலும், எலும்புக் கூடுகள் வெளியே துருத்திக் கொண்டிருக்கும் ஆடு மாடுகளைக் காண முடியாது. நமது மாட்டுப் பட்டிகளில் பல, தகுதியற்ற இடங்களிலும் ஊழலான நிர்வாகத்தின் கீழும் படுமோசமான நிலையில் இருக்கின்றன. மிருக உலகத்திற்கு இவை வரப்பிரசாதமாக இருப்பதற்குப் பதிலாக, சாகும் தறுவாயிலுள்ளவைகளை ஏற்றுக்கொள்ளும்படியாக இருக்கின்றன.

இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களுக்காக நாள்தோறும் நூற்றுக்கணக்கான பசுக்களைக் கொல்லுகிறார்கள். இவர்களிடம் நாமொன்றும் சொல்லுவதில்லை. தமது ஆங்கில விருந்தாளிகளுக்கு மாட்டு இறைச்சி உணவு ஏற்பாடு செய்வதற்கு, நமது ராஜாக்கள் தயங்குவதில்லை. எனவே, நமது பசுக் காத்தல், அவைகளை முஸ்லிம்களிடமிருந்து காப்பாற்றுவதுடன் நின்று விடுகிறது. தலைகீழான இந்த முறைதான் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயுள்ள ரத்தக் களரிகளுக்கும் முடிவற்ற சண்டைகளுக்கும் காரணம்; இதுதான் அதிகமான பசுவதைக்கும் காரணமாகும். சரியான முறையில் பிரசாரம் ஆரம்பித்திருந்தால், இது குறைவாக இருந்திருக்கும். நம்மிடமிருந்தே நாம் ஆரம்பித்திருக்க வேண்டும். அதாவது, ஆடு மாடுகளை அன்புடன் வளர்ப்பதில் அவா வளர வேண்டும். சாஸ்திர அறிவோடு பசுப் பண்ணை, பால் பண்ணை, கால் நடைப் பட்டிகள் முதலியவற்றை நிர்வாகம் செய்ய வேண்டும். ஆங்கிலேயர்களுக்கிடையே மாட்டு இறைச்சி உணவை அவர்களாகவே விலக்கிவிடுமாறு பிரசாரம் செய்ய வேண்டும். அவர்கள் அவ்விதம் விலக்க மறுத்தால், இறக்குமதியான மாட்டு இறைச்சியைக்கொண்டு திருப்தி அடையும்படி சொல்ல வேண்டும். இந்தியாவிலிருந்து ஆடு மாடுகள் ஏற்றுமதியைத் தடை செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நமக்குச் சுத்தமான பால் அதிக அளவில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இந்த நிதானமான முறையில் சென்றால், முஸ்லிம்கள் தாங்களாகவே நமக்கு உதவி செய்வார்கள் என்பதில் எனக்குக் கொஞ்சமும் ஐயமில்லை. பண்டிகை தினங்களில் அவர்கள் கொல்லுவதை நாம்

பலவந்தமாகத் தடை செய்வதை நிறுத்திவிட்டால், கொல்லத் தான் வேண்டுமென்று வற்புறுத்துவதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் இராது. நாம் பலாத்காரத்தை உபயோகிப்பது, எதிர்ப்பையும் மனக்கசப்பையும் உண்டுபண்ணும். பலவந்தத்தினுல் முஸ்லிம்களையோ, அல்லது வேறு யாரையுமோ நமது மத அல்லது பிற உணர்ச்சிகளைக் கௌரவிக்கும்படி செய்ய முடியாது. சகோதர உணர்ச்சியை உண்டுபண்ணுவதால்தான் நாம் அப்படிச் செய்ய முடியும்.

முஸ்லிம்களுக்கு இக்கட்டு வந்துள்ள சமயம், கணக்கு வழக்குப் பாராமல் தன்னலத் தியாக உணர்வுடன் உதவுங்கள். அவ்விதம் உதவி செய்தால், நீங்கள் இயல்பாகவே பசுவைப் பாது காத்தவர் ஆவீர்கள். இஸ்லாம் ஓர் உயர்ந்த மதமாகும். அதையும் அதைப் பின்பற்றுபவர்களையும் நம்புங்கள். கிலாபத் போராட்டம் நடந்து கொண்டிருக்கையில், பசுப் பாதுகாப்பு பற்றி நாம் அவர்களுடன் பேசுவதோ, அல்லது நமது மத சம்பந்தமான பிற உதவிகளை அவர்களிடமிருந்து கோருவதோ ஒரு பெருங்குற்றமென நாம் கருத வேண்டும். இதுதான் என் ஹிந்து சகோதரர்களுக்கு நான் சொல்லும் யோசனையாகும்.

—'எங் இந்தியா' - 4—8—1920

# 18

# ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் அவசியம்

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின்றி நாடு நிச்சயமான வழிகளில் முன்னேற முடியாது. இது எல்லோரும் அறிந்ததே. இருவரையும் பிணைக்கும் சாந்து இன்னும் குழம்பலாகவும் ஈரமாகவும் இருக்கிறது. இடையே அவநம்பிக்கை இன்னும் இருந்து வருகிறது. நம்பிக்கை, சேர்ந்து செயல் புரிதல் முதலியவற்றின் அவசியத்தை இருவரும் உணரும் வரை, இந்தியா முன்னேறுவது சாத்தியமில்லை என்பதைத் தலைவர்கள் உணருகின்றூர்கள். பொது மக்களிடையே பெரும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பது உண்மையே. எனினும், இது நிரந்தரமானதல்ல. முஸ்லிம் பொது மக்கள், ஹிந்துக்களைப் போல், சுயராஜ்யத்தின் அவசியத்தை இன்னும் உணரவில்லை; ஹிந்துக்களைப் போல் முஸ்லிம்கள் பொதுகூட்டங்களுக்குத் திரளாக வருவதில்லை. இதை நாம் துரிதப்படுத்த முடியாது. முஸ்லிம்களிடையே தேசப்பற்று வளருவதற்குப் போதிய காலம் ஆகவில்லை. இருப்பினும், சென்ற ஆண்டு வரை காங்கிரஸில் பற்றில்லாதிருந்த முஸ்லிம்கள், இப்போது இந்தியா முழுவதிலும் ஆயிரக்கணக்கில் அங்கத்தி

னர்களாகப் பதிவு செய்துகொண்டுள்ளார்கள். இது பேராச்சரியமான விஷயமாகும். இது மட்டுமே பெரும் லாபகரமானது என்பதில் ஐயமில்லை.

இன்னும் செய்ய வேண்டியது அதிகம் இருக்கிறது. அது முக்கியமாக ஹிந்துக்களின் வேலை. முஸ்லிம்கள் அக்கறையின்றி இருக்குமிடங்களில், வந்து சேரும்படி அவர்களை அழைக்க வேண்டும். முஸ்லிம்கள் காங்கிரசில் சேருவதில்லை, சுயராஜ்ய நிதிக்குப் பணம் கொடுப்பதில்லை என்று ஹிந்துக்கள் புகார் செய்வதை அடிக்கடி கேட்கிறோம். அவர்கள் அழைக்கப்பட்டார்களா என்பதே இயல்பாக எழும் கேள்வியாகும். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹிந்துக்கள் தங்கள் அக்கம் பக்கத்திலுள்ள முஸ்லிம்களைச் சேர்க்க விசேஷ முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் தம்மை மற்றொருவரைவிடத் தாழ்வாகவோ, அல்லது உயர்வாகவோ நினைத்துக் கொண்டிருக்கும் வரை உண்மைச் சமத்துவம் இருக்க முடியாது. சமத்துவமுள்ளவர்களிடையே நாம் மற்றவருக்கு ஆதரவளிக்கிறோம் என்கிற உணர்ச்சிக்கு இடமில்லை. தங்களுக்குக் கல்வி குறைவென்றோ, அல்லது தாங்கள் சிறுபான்மையினராக உள்ள இடங்களில் தங்களுக்குப் பலக்குறைவு என்றோ முஸ்லிம்கள் எண்ணும்படியாக நாம் நடந்து கொள்ளக்கூடாது. கல்விக் குறைவை அதிகம் பேர் படித்து நிவர்த்திக்க வேண்டும். சிறுபான்மையோராக இருப்பது, பல சமயங்களிலும் லாபகரமாக இருப்பது உண்டு. எண்ணிக்கைப் பலம் அடிக்கடி இடைஞ்சல்களை உண்டுபண்ணும். ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொண்ட நடத்தையே முடிவில் பயன் தரும். ஆனால், பரிபூரணத்துவத்தை உபதேசிக்கவோ அல்லது நெடு நாட்களுக்குப் பின் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று விதிக்கவோ நான் இவற்றை எழுத ஆரம்பிக்கவில்லை.

தங்களுடைய ஹிந்து சகோதரர்களுக்காகப் பசுவைக் காப்பாற்ற முஸ்லிம்கள் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டுள்ளனர் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இதைக் குறைத்துச் சொல்லுவது பெரிய தவறாகும். ஆனால், நாமே சாதிக்கப் போகிறோமென்று சொல்ல ஆரம்பித்த மாத்திரத்திலேயே, நாம் அவர்களது முயற்சிகளை எல்லாம் வீணாக்குகின்றோம். சென்ற பல வருடங்களாகப் பசு வதையை முணுமுணுத்துக்கொண்டே சகித்தோம். சில சமயங்களில் பலனற்ற பலாத்காரச் செயல்களால் எதிர்த்தோம். தம்மைத் தாமே கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும் நமது முஸ்லிம் சகோதரர்களின் நன்றிக்கு உரியவர்களாக நடந்துகொள்ள நாம் எப்பொழுதும் முயலவில்லை. வழி விட்டுக் கொடுத்தாவது, அவர்களின் நட்பை நாம் பெற வேண்டும். ஆனால், இது நடைமுறையில் சாத்தியமில்லாத காரியம் என்று நாம் காரணமின்றி முடிவு செய்துகொண்டுவிட்டோம்.

இப்பொழுது அதிகத் தேவையாக இருக்கும் சமயத்தில் உதவி செய்ய எல்லா முயற்சிகளும் நாம் எடுத்துக்கொண்டி

ருக்கிறோம். நாம் செய்துள்ள புனிதமான தியாகத்தைப் பேரம் பேசிக் கெடுத்துவிடக்கூடாது. நட்பு எப்போதும் ஒப்பந்த மாக இருக்க முடியாது; அது நிபந்தனையற்ற ஒரு நிலையாகும். பணி புரிதல் கடமை. கடமை நமது கடன். இதில் தவறுவது பாவம். நமது நட்பைக் காட்ட விரும்பினால், அவர்கள் பசுவைக் காப்பாற்றினாலும் காப்பாற்றாவிட்டாலும், நாம் நமது சகோத ரர்களுக்கு உதவ வேண்டும். நம்முடன் அவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்னும் பொறுப்பை, நாம் அவர்கள் மீதே போட்டுவிடலாம். நமது உதவிக்குக் கைம்மாறாக, அவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்ல நாம் ஆரம்பித்துவிடக்கூடாது. அம்மாதிரி உதவி புரிதல் கூலிக்கு உழைப்பது போலாகும். இதை வேண்டாமென அவர் கள் உதறித் தள்ளினால், அதற்காக முஸ்லிம்களை நாம் குறைகூற முடியாது. ஆதலால், பக்ரீத் தினத்தன்று முஸ்லிம்கள் என்ன செய்தாலும், தாங்கள் பொறுமையுடன் இருப்பதன் அவசியத் தைப் பீஹார் ஹிந்துக்களும் இந்தியாவிலுள்ள மற்ற ஹிந்துக் களும் உணருவார்களென நம்புகிறேன். இஷ்டமான பாதையில் செல்ல அவர்களை நாம் விட்டுவிட வேண்டும். அமிர்தசரஸில் ஹக்கீம் அஜ்மல்கான் ஒரு மணி நேரத்தில் என்ன செய்தாரோ, அதை ஹிந்துக்கள் வருடக்கணக்காக முயன்றாலும் செய்ய முடி யாது. சென்ற பக்ரீத் தினத்தன்று ஸ்ரீ சோட்டானியும், ஸ்ரீ காத் ரியும் காப்பாற்றிய பசுக்களை பம்பாயிலுள்ள ஹிந்து கோரக்ஷ வரர்கள் தங்கள் செல்வம் அத்தனையும் தந்திருந்தாலும் காப் பாற்றியிருக்க முடியாது. முஸ்லிம்களை அதிகம் நெருக்க நெருக் கப் பசு வதையும் அதிகமாகும். அவர்களின் நல்லறிவுக்கே நாம் அதை விட்டுவிட வேண்டும். இப்படிச் செய்வதால், நாம் பசுவிற்குப் பெரும் பணி செய்தவர்களாவோம்.

பசுவைக் காக்கும் வழி முஸ்லிம்களைக் கொல்லுவதோ அல் லது அவர்களுடன் சண்டையிடுவதோ அல்ல. பசுவைப் பற்றி நினைவூட்டாமல், கிலாபத்தைக் காக்கும் முயற்சியில் உயிர் துறப் பதே பசுவைக் காக்கும் வழி. பசுக் காத்தல், களங்கத்தைப் போக்கும் ஒரு வழியாகும். அது தவம் அல்லது ஒரு நோன்பு போன்றது. கைம்மாறு கருதாது நாமே துன்பத்தை மேற் கொண்டால், நமது அழுகைக் குரல் வானுலகிற்கு எட்டும். கடவுள் அதைக் கேட்டு அருளுவார். இதுதான் மதத்தின் பாதையாகும். ஒரு மனிதனாவது இதை முழுவதையும் அப்படியே பின்பற்றினால், கோரும் பலன் தானாகவே கைகூடிவிடும். பசுவைக் காப்பாற்ற ஒரு சகோதர மனிதனைக் கொல்லுவது, ஹிந்து மதக் கோட்பாட் டிற்கு முரணாகும். இதை யாரும் மறுக்க முடியாது என்பதைத் தைரியமாகச் சொல்லுகின்றேன்.

தனது மதத்திற்காக, அதாவது பசுவைக் காப்பதற்காக ஒரு ஹிந்து தன்னையே தியாகம் செய்ய வேண்டும் என்பது ஹிந்து மத விதி. முஸ்லிம்களோடு பேரம் செய்யாமல், அவர்களுக்காகவும் தமது மதத்திற்காகவும் உயிர்விட எத்தனை

ஹிந்துக்கள் தயாராக இருக்கிறார்கள்? – இதுதான் கேள்வி. ஹிந்துக்கள் இக்கேள்விக்கு மத உணர்ச்சியுடன் பதில் சொல்ல முடியுமானால், அவர்கள் முஸ்லிம்களின் நட்பை ஊழி ஊழி காலத்திற்கும் பெறுவார்கள் ; பசுவையும் எக்காலத்திலும் காப்பார்கள். நாம் முஸ்லிம்களில் பெரியவர்களின் மீது ஆணையிட்டுக் கூடச் சொல்லக்கூடாது. அவர்கள் ஓரளவுதான் உதவி புரிய முடியும். இதுகாறும் பசு வதை செய்யும்பொழுது தங்கள் அக்கம் பக்கத்தில் உள்ள ஹிந்துக்களின் உணர்ச்சிகளைக்கூடப் பொருட் படுத்தாதிருந்த லட்சக்கணக்கான மனிதர்களுடைய மனத்தை மாற்றும் பொறுப்பை எப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியும்? ஆனால், சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் ஒரே விநாடியில் அவர் களைக் கசிந்துருகும்படி செய்ய முடியும். துன்பம் அனுபவித் தலுடன் கூடிய வழிபாடு, நெஞ்சாரச் செய்யும் பிரார்த்தனையாகும். இதுதான் கடவுளுக்கு ஏற்றது.

எனது முஸ்லிம் நண்பர்களுக்கு நான் ஒரே வார்த்தைதான் சொல்லுவேன். பொறுப்பற்ற, அல்லது அறிவற்ற மதவெறி பிடித்த ஹிந்துக்களின் செயல்களால் அவர்கள் மிரண்டுவிடக் கூடாது. கோபமூட்டினாலும் அடக்கத்துடன் இருப்பவனுக்குத் தான் சண்டையில் வெற்றி கிடைக்கும். பொறுப்பு வாய்ந்த ஹிந்துக்கள் எவரும், அவர்களின் ஆபத்துக் காலத்தில் பேரம் பேசும் நோக்கத்துடன் அவர்களின் பக்கம் சேரவில்லை என்பதை முஸ்லிம்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். கிலாபத் நியாய மானது என்று ஹிந்துக்கள் உணருகிறார்கள். நியாயத்திற்கு உதவுவது இந்தியாவிற்குச் சேவை செய்வதாகும். அத்துடன் அவர்களும் ஒரே நாட்டில் பிறந்தவர்கள், பாரத மாதாவின் புதல் வர்கள், உடன்பிறந்த சகோதரர்கள் போன்றவர்கள்தானே.

## 19

# கருணையே உருவெடுத்த கவிதை!

['ஹிந்து மதம்' என்ற தலைப்பில் காந்திஜி எழுதிய புகழ்பெற்ற கட்டுரையின் ஒரு முக்கிய பகுதியே கீழே கொடுக்கப்பட்டிருக் கிறது:]

பசுப் பாதுகாப்பு, ஹிந்து மதத்தின் அச்சாணி போன்றது. மனித பரிமாணத்திலேயே மிக விசித்திரமான தத்துவம் பசுப் பாதுகாப்புதான். இது மனிதனையே, தன் வர்க்கத்திற்கு வெளியே உள்ள பிராணிகள் மீதும் அக்கறை கொள்ளும்படி செய்கிறது. பசு, மனிதனுக்குக் கீழ் உள்ள பிறவிகளுக்கெல்லாம் பிரதிநிதி ஸ்தானம் வகிக்கிறது என்பதே என் கருத்தாகும். உயிர் வாழ்பவை அனைத்துடனும் தனக்குத் தொடர்பு உண்டு என்பதை, பசுவின் மூலம் மனிதன் ஒன்றி உணர வேண்டும் என்

பது ஆண்டவனின் கட்டளையாகும். பசுவைத் தெய்வமாக ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பது வெளிப்படை. பசு, இந்தியாவின் தலைசிறந்த தோழி; அவள் வரையாது வழங்குபவள். அவள் பால் மட்டும் கொடுக்கவில்லை. விவசாயம் நடப்பதற்கும் உதவுகின்றாள். பசு கருணையின் கவிதை. இந்தச் சாந்தமான மிருகம், இரக்கமே உருவாகத் திகழ்வதை எவரும் உணரலாம். இந்திய மனித வர்க்கத்தைச் சேர்ந்த கோடிக்கணக்கானவர்களுக்குப் பசு தாயாக இருக்கிறது. பசுவைப் பாதுகாத்தல், கடவுள் சிருஷ்டியில் வாயில்லாப் பூச்சிகளான அனைத்தையுமே காப்பதாகும். முதல் முதல் தோன்றிய ரிஷி, அவர் யாராயிருப்பினும், பசுவின் அருகிலேயே இருந்திருக்க வேண்டும். சிருஷ்டியில் கீழ் நிலையுள்ளவைகளின் முறையீடு, அவை பேச்சற்றிருப்பதாலேயே அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. பசுப் பாதுகாப்பு உலகத்திற்கு ஹிந்து மதம் அளித்துள்ள அருமையான பரிசாகும். பசுவைக் காப்பதற்கு ஹிந்துக்கள் இருக்கும் வரையில் ஹிந்து மதமும் வாழ்ந்து வரும்.

பசுவைக் காப்பதற்கு வழி, பசுவிற்காகச் சாவதுதான். பசுவைக் காக்க ஒரு மனிதனைக் கொல்லுவது ஹிந்து மதத்தையும் அகிம்சையையும் மறுப்பதாகும். தவத்தினாலும், தூய்மையினாலும் தன்னலத் தியாகத்தினாலும் பசுவைக் காக்க வேண்டுமென ஹிந்துக்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள். இன்று பசுக் காத்தல் என்பது, முஸ்லிம்களுடன் இடையருது சண்டை போடுவது என்னும் நிலைக்கு தாழ்ந்துவிட்டது. ஆனால், பசுக்காத்தல் என்பது நமது அன்பினால் முஸ்லிம்களை வெற்றி கொள்ளுவதேயாகும்.

சில காலத்திற்கு முன்பு ஒரு முஸ்லிம் நண்பர் எனக்கு ஒரு புத்தகம் அனுப்பினார். பசுவினிடமும் கன்றுகளிடமும் நாம் செய்து வரும் அக்கிரமங்கள் பல அப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. பசுவினிடமிருந்து ரத்தம் வரும் வரையில் சொட்டுப் பால்கூட மிஞ்சிவிடாமல் நாம் எப்படிக் கறக்கிறோம்; பசுவுக்குப் போதிய தீனி போடாமல் பட்டினி போட்டு அது எலும்பும் தோலுமாகும்படி எப்படிச் செய்கிறோம்; கன்றுகளை நாம் எவ்விதம் கொடுமையாக நடத்துகிறோம்; கன்றுக்குட்டிகளுக்குச் சேர வேண்டிய பாலையும் நாம் எப்படி கறந்து அபகரித்துக்கொள்ளுகிறோம்; காளை மாடுகளைக் கசையடித்தும் நாம் எப்படி இம்சிக்கிறோம்; அதிகப் பாரத்தை இழுக்கச்செய்து, தார்க்கோலால் குத்தி ஓட்டி அவைகளை எவ்விதம் கொடுமைப் படுத்துகிறோம்! இவையெல்லாம் அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தன. பேச்சுத் திறன் இருந்தால், நமது அநியாயங்களைப் பற்றி அவை சாட்சியம் கூறி முறையிடும். அதைக்கண்டு உலகமே திடுக்கிட்டுப் போகும். நமது ஆடு மாடுகளுக்குச் செய்யும் ஒவ்வொரு தீங்கினாலும் நாம் கடவுளையும் ஹிந்து தருமத்தையுமே மறுப்பவர்கள் ஆகிறோம். துரதிருஷ்ட இந்தியாவைப்போல் உலகத்தின் வேறு எந்த நாட்டிலாவது ஆடு மாடுகளின் நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கிறதா என்பதுபற்றி எனக்குத் தெரியாது.

இதற்கு நாம் ஆங்கிலேயர்மீது குறை கூறக்கூடாது. அத்தகைய நிலைக்கு, வறுமை காரணம் என்றும் நாம் சொல்லிக்கொள்ளமுடியாது. ஆடு மாடுகள் இந்த அவல நிலையிலிருப்பதற்குக் காரணம், நமது தண்டனைக்கு உரிய அலட்சிய புத்திதான். நமது கோசாலைகள் இயல்பாகவே நமக்குள்ள இரக்கச் சித்தத்தைக் காட்டுகின்றன. ஆயினும், அவைகள் நாகரிகமற்ற முறையில் நிர்வகிக்கப்படுகின்றன. பால் பண்ணைகளுக்கும் லாபகரமாக நடக்கும் தேசீய ஸ்தாபனங்களுக்கும் எடுத்துக்காட்டாக இருப்பதை விடுத்து, காலங் கழிந்த நொண்டி முடங்களை ஏற்றுக்கொள்ளும் கூடங்களாக அவை இருக்கின்றன.

திலகமிடுவது, மந்திரங்களைச் சரியாக உச்சரிப்பது, ஸ்தல யாத்திரை செய்வது, சாதிக் கட்டுப்பாட்டு விதிகளை எள்ளளவும் வழுவாது அனுசரிப்பது முதலியவற்றைக் கொண்டெல்லாம் ஒருவரை ஹிந்து என்று கூற முடியாது. பசுவைக் காப்பதற்குள்ள சக்தியைக்கொண்டே ஒருவரை ஹிந்து என்று கூற முடியும். பசுவைப் பாதுகாக்கும் மதத்தைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டு நாம் பசுவையும் அதன் சந்ததிகளையும் அடிமைப்படுத்தினோம். அதனால், நாமே அடிமைகளாகிவிட்டோம்.

என்னை ஏன் ஒரு சனாதன ஹிந்து என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன் என்று இப்போது விளங்கும். பசுவைக் கௌரவிப்பதில் நான் யாருக்கும் பின்வாங்கியவனல்லன். கிலாபத் நிலைத்திருப்பது, பசுவிற்குப் பூரணப் பாதுகாப்பேயாகும். ஆதலால்தான் நான் கிலாபத் பிரச்னையை என் சொந்தப் பிரச்னைபோல் பாவிக்கின்றேன். எனது சேவையைக் கருதி பசுவைக் காப்பாற்ற வேண்டுமென எனது முஸ்லிம் நண்பர்களை நான் கேட்கவில்லை. நியாயமெனக் கருதும் ஒன்றிற்கு நான் செய்யும் சேவையினால் ஆண்டவன் மனம் குளிர்ந்து முஸ்லிம்களின் மனத்தை மாற்றவேண்டும். அவர்கள் கருணைமேலீட்டினால் தங்களுடைய ஹிந்து நேயர்கள் உயிரென மதிக்கும் பசுக்களைக் காப்பாற்றவேண்டும். இதுவே நான் நாடோறும் ஆண்டவனிடம் கோரும் வரமாகும்.

—'எங் இந்தியா' - 6–10–1921.

# 20

# சமூக ஒற்றுமையின்றேல் சுயராஜ்யமில்லை

ஒத்துழையாமை வெற்றி பெற, அகிம்சையைப் போல ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையும் அவசியம். அந்த இரண்டிற்கும் இப்போராட்டம், ஒரு சோதனைக் காலமாகும். இதில் தேறினால் நமக்கு வெற்றி நிச்சயம்.

ஆக்ராவில் கடுமையான சோதனை ஏற்பட்டது. இரு கட்சிகளும் அதிகாரிகளிடம் சென்றபொழுது, என்னிடமும் மௌலானா ஷவுகத் அலியிடமும் போகும்படி அவர்கள் கூறிவிட்டார்களாம். அதிருஷ்டவசமாக எங்களைக் காட்டிலும் அதிகத் தகுதி வாய்ந்தவர் அருகில் இருந்தார். அவர்தான் ஹக்கீம்ஜி அஜ்மல்கான். அவர் பக்தி நிறைந்த ஒரு முஸ்லிம் ஆவார். இரு தரப்பினருக்கும் அவர்பால் நம்பிக்கையும் மதிப்பும் உண்டு. அவர், தம் ஊழியர்களுடன் விரைந்து சென்று சச்சரவைத் தீர்த்துச் சமாதானத்தை நிலைநிறுத்தினர். அதன் பலனாக இதற்குமுன் என்றும் இராதவாறு இரு கட்சியினரும் நட்புரிமை பூண்டனர். டில்லிக்குப் பக்கத்தில் ஒரு சம்பவம் நடந்தது. நிலைமை மோசமாவதற்குள் இவர்களே அங்கும் சென்று சமாதானம் ஏற்படும்படி செய்தனர். ஆனால், ஹக்கீம் அஜ்மல்கான் ஒவ்வோர் இடத்திலும் குறிப்பிட்ட நேரத்தில் சமாதான தூதரைப்போல் வந்து சேர முடியாது. அம்மாதிரியே மௌலானா ஷவுகத் அலியோ, நானோ எல்லா இடங்களுக்கும் போக முடியாது. இருப்பினும், இரு தரப்பினரையும் பிரித்துவைக்க முயற்சிகள் நடந்தாலும் சமாதானம் நிலவ வேண்டும்.

ஆக்ராவில் மக்கள் அதிகாரிகளிடத்தில் ஏன் முறையிட்டுக் கொண்டார்களோ? ஒத்துழையாமையை வெற்றிகரமாக நடத்த வேண்டுமாயின், நமக்குள் ஏற்படும் சில்லறைச் சண்டைகளைச் சர்க்கார் உதவியின்றி நாமே தீர்த்துக்கொள்ளவேண்டும். நமது சச்சரவைத் தீர்த்துக் குற்றவாளியைத் தண்டிக்க, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியை நாம் நாடினால், ஒத்துழையாமை இயக்கமே சிதறுண்டு பலனற்றுப் போகும். ஒவ்வொரு கிராமத்திலும் இரு சமூகத்தினருக்கும் ஏற்படும் சச்சரவைத் தடுக்க, ஒரு ஹிந்துவும் ஒரு முஸ்லிமுமாவது அதையே தங்களுடைய முக்கிய வேலையாகக்கொண்டு தயாராக இருக்கவேண்டும். சில சமயங்களில் உடன் பிறந்தவர்களும் சண்டையிட்டுக் கொள்ளுகிறார்கள். ஆரம்ப நிலையில் நாம் சண்டையிடுவது இயல்பே. துரதிருஷ்டவசமாகப் பொது ஊழியர்கள், பொது மக்களின், கட்டுக்கடங்காதவர்களின் போக்கறிந்து உதவ இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. பொது மக்களின் தயவைச் சம்பாதிக்கும் வரையில், அடங்காப்பிடாரிகளின்மேல் நமக்கு ஆதிக்கம் வரும் வரையில், ஆத்திரம் எழத்தான் செய்யும். இத்தகைய சந்தர்ப்பங்களில், சர்க்கார் உதவியின்றி சமாளிக்க நாம் பழகவேண்டும். இதை எப்படிச் செய்வதென்று ஹக்கீம் அஜ்மல்கான் காட்டியிருக்கிறார்.

இந்திய முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் இடையே பிரிக்க முடியாத ஒற்றுமை ஏற்படாதவரையில், இந்தியாவிற்குச் சுயராஜ்யம் ஒரு கிட்டாத கனவாகவே இருக்கும். இதை நிச்சயமாக உணர்ந்துகொள்ளுவதால் ஏற்படும் இதய ஒற்றுமைதான் தேவையாகும்; வெறும் ஒட்டுப் போட்ட ஒற்றுமை அல்ல. இது ஓர் இடைக்கால ஒப்பந்தமாக இருக்க முடியாது. பயம்,

அவநம்பிக்கை இவற்றின் அடிப்படையில் இது ஏற்படக்கூடாது. இது மனம் ஒத்தவர்களுக்குள் ஏற்படும் கூட்டுறவாக இருக்க வேண்டும். ஒருவர் மற்றவரது மதத்திற்கு மரியாதை செய்ய வேண்டும்.

இஸ்லாமியர்களுக்கு ஹிந்துக்கள் இயல்பிலேயே விரோதிகள் என்று குரான் விதித்தாலோ, அல்லது ஹிந்து மதம் இருவருக்குள்ளும் சாசுவதப் பகைக்கு இடம் கொடுத்தாலோ, இவ்வித ஒற்றுமை ஏற்படும் என்னும் ஆசையை நான் விட்டு விடுவேன்.

முன் காலத்தில் சண்டையிட்டுக் கொண்டிருந்ததனால், எதிர்காலத்திலும் சண்டை யிட்டுக்கொள்ளுவோமென முடிவு செய்வது சரித்திரத்தைத் தவருகத் தெரிந்துகொள்ளுவதேயாகும். ஒருவர்மேல் ஒருவர் பாய்வதைத் தடுப்பதற்குப் பிரிட்டிஷாரின் படைப் பலம் எப்போதும் தேவை என்று நினைப்பது தவறு. ஹிந்து மதத்திலோ, அல்லது இஸ்லாமிலோ இத்தகைய முடிவுகளுக்கு ஆதாரமான கொள்கை எதுவுமில்லை என்பது எனக்குத் தெரியும். சுயநலமுள்ள மதக் குருக்கள் இரு மதங்களையும் ஒன்றுக்கொன்று விரோதமானதென்று கருதும்படி செய்துவிட்டார்கள். கிறிஸ்தவ அரசர்களைப்போல, முகமதிய அரசர்களும் தங்களுடைய மதத்தைப் பரப்பக் கத்தியை உபயோகித்தது உண்மைதான். எத்தனையோ தகாத காரியங்கள் தற்காலத்தில் நடைபெற்றபோதிலும், கட்டாய அடிமைக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதது போல, கட்டாயப்படுத்தி மதம் மாற்றுவதையும் உலகம் ஏற்றுக்கொள்ளாது. இது தற்கால விஞ்ஞான அறிவின் பயன் போலும். இப்போக்கு கிறிஸ்தவ மதத்தைப் போலவே இஸ்லாமிலுமுள்ள பல தவறுகளை மாற்றியுள்ளது. இஸ்லாமைப்பற்றி எழுதுகிறவர்கள் எவரும், பலவந்த மத மாற்றத்தை ஆதரிப்பதாக நான் காணவில்லை. தற்காலத்தில் உபயோகிக்கப்படும் கருவிகள் கத்தியைவிடப் பன்மடங்கு சூட்சுமமானவை!

மேல் நாடுகளில் நடக்கும் இரத்தக் களரி, பித்தலாட்டம், நயவஞ்சகம் இவைகளுக்கு மத்தியிலும் மனித வர்க்கம் உயர் நிலையை நாடி நிச்சயமாகவும், உறுதியுடனும் சென்றுகொண்டிருக்கிறதென நான் நம்புகிறேன். அகிம்சை, அதாவது கலப்பற்ற தன்னலத் தியாகத்தின் மூலமும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் மூலமும் இந்தியா உண்மைச் சுதத்திரம் எய்தினல், இது இப்பொழுது சூழ்ந்துள்ள இருளிலிருந்து வெளிச்செல்ல வழி காட்டும்.

## 21

# பிரிந்து நின்றால் வீழ்ச்சியே

ஒற்றுமையே பலம் என்பது ஏட்டுச்சுரைக்காய் அல்ல, இது வாழ்க்கை விதி என்பதை ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப் பிரச்னை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறது. நாம் பிரிந்து நின்றால் வீழ்ச்சி அடைவோம். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் கழுத்தில் கத்தி வைக்கத் தயாரானால், எந்த நாடும் இந்தியாவை எளிதில் அடிமைப்படுத்தி விடலாம். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே உண்டாகும் ஒற்றுமையை மட்டும் குறிக்கவில்லை. அவர்கள் எம்மதத்தினராயினும் சரி, இந்தியாவைத் தாயகமாகக் கருதுகிற சகலரின் ஒற்றுமையையும் அது குறிக்கிறது.

எந்த வற்புறுத்தலையும் தாங்கும் அளவுக்கு இந்த ஒற்றுமை உண்டாகிவிடவில்லை. இது எனக்கு நன்கு தெரியும். அது தினசரி வளர்ந்துகொண்டு வரும் ஒரு இளம் செடியாகும். அதை விசேஷ அக்கறையுடனும் கவனமாகவும் வளர்க்க வேண்டும். இது நெல்லூரில் தெளிவாயிற்று. அங்கேதான் இப்பிரச்னையை நேருக்கு நேர் நான் உருவான முறையில் சமாளிக்க வேண்டியதாயிற்று.

இரு தரப்பினருக்கும் உள்ள சம்பந்தம் திருப்திகரமாக இருந்து வரவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்தான் ஒரு சிறிய விஷயத்திற்காக இரு சாராரும் சண்டையிட்டுக்கொண்டனர். மசூதிகளைக் கடந்து செல்லுகையில் வாத்திய இசை முழக்கம் செய்வதுதான் இச்சிறிய விஷயம். சில்லறை விஷயங்களை மத சம்பந்தம் கொடுத்துப் பெரிது படுத்தக்கூடாதென்பது என் துணிபு. ஆகையால் ஒரு ஹிந்து, மசூதிப் பக்கத்தில் வாத்தியம் வாசிப்பதை வற்புறுத்தக்கூடாது. பழைய பழக்க வழக்கங்களைக் கூறி விவாதிக்க வேண்டியதில்லை. மசூதியின் பக்கத்தில் போகும்போது வாத்திய இசை முக்கியமான விஷயமல்ல. இருபத்து நான்கு மணி நேரமும் மசூதியைப் புனித மௌனம் சூழ்ந்திருக்கவேண்டுமென முஸ்லிம்கள் விரும்புவதை யாரும் உணர்ந்து கௌரவிக்க முடியும். ஹிந்துவுக்கு முக்கியமல்லாதது முஸ்லிமுக்கு முக்கியமாகலாம். முக்கியமல்லாத விஷயங்களில் எல்லாம் கேட்ட மாத்திரத்திலேயே ஹிந்து விட்டுக் கொடுக்க வேண்டும். அற்ப விஷயங்களுக்காகச் சண்டையிட்டுக்கொள்ளுவது முட்டாள்தனமாகும். ஒருவரோடொருவர் தாராளமாகப் பழகுவதையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் வளர்த்தால் மாத்திரமே நாம் விரும்பும் ஒற்றுமை நிலைக்கும்.

ஒரு ஹிந்துவுக்கு, பசு உயிர் போன்றது. ஆதலால், ஹிந்து சகோதரருக்காக ஒரு முஸ்லிம் இவ்விஷயத்தில் தாமாக விட்

டுக் கொடுக்க முன்வர வேண்டும். முஸ்லிமுக்குப் பிரார்த்த னைக் காலத்தில் அமைதி அளவற்ற மதிப்புடையது. ஒவ்வொரு ஹிந்துவும் முஸ்லிம் சகோதரரின் இந்த உணர்ச்சியைக் கௌர விக்க வேண்டும். எனினும், இந்த யோசனை எவ்வளவு குற்றம் குறையற்ற பூரண நிலையைக் குறிக்கிறது? கீழ்த்தரமான முஸ் லிம்கள் இருப்பது போல கீழ்த்தரமான ஹிந்துக்களும் இருக்கி றார்கள். இவர்கள் எடுத்ததற்கெல்லாம் சண்டை போடுவார் கள். இச்சமயத்தில் இரு கட்சிகளும் ஒப்புக்கொள்ளக்கூடிய பஞ்சாயத்து ஏற்பட வேண்டும். யாரும் தடை சொல்ல முடி யாதபடி, பொதுஜன அபிப்பிராயத்தை இந்தப் பஞ்சாயத் தின் முடிவுகளுக்குச் சாதகமாக வளர்க்க வேண்டும்.

இன்னும் பரஸ்பர அவநம்பிக்கை அதிகம் இருக்கிறது. முஸ் லிமின் நேர்மையை அநேக ஹிந்துக்கள் சந்தேகிக்கின்றனர். பிரிட்டிஷார் இல்லாவிட்டால் இந்திய முஸ்லிம்கள் வெளியிலுள்ள முஸ்லிம் அரசுகளுக்கு இந்தியாவில் முஸ்லிம் சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க உதவியளிப்பார்கள் என்பது இவர்களுடைய வாத மாகும் இவர்கள் சுயராஜ்யம் என்றால் முஸ்லிம் ராஜ்யமே என்கின்றனர். ஹிந்துக்கள் பெரும்பான்மையோராக இருப்ப தால், தங்களை அவர்கள் நசுக்கிவிடுவார்கள் என்று முஸ்லிம்கள் பயப்படுகின்றனர்.

இரு தரப்பினரும் சக்தியற்றவர்கள் என்பதைத்தான் இந்த மனப்பான்மை காட்டுகிறது. பெருந்தன்மைக்காக இல்லா விட்டாலும் சமாதானமாக வாழ்வதற்காகவாவது, இவர்கள் பரஸ்பரம் நம்ப வேண்டும்; விட்டுக் கொடுக்க வேண்டும். பிரித்துத் தூரத்தில் வைப்பதற்கு இரு பாலாரின் மத்தியிலும் ஒன்றும் இல்லை. பலவந்தப்படுத்தி மதம் மாற்றும் காலம் போய்விட்டது. பசுவை விட்டால் ஹிந்துக்களுக்கு முஸ்லிம் களிடம் சண்டையிட வேறு காரணம் ஒன்றுமில்லை. முஸ்லிம்கள் பசுவைக் கொன்றுதான் ஆக வேண்டும் என்ற மதக்கட்டுப்பாடு கிடையாது. உண்மை என்னவென்றால், நாம் இதற்கு முன் நமது தகராறுகளைத் தீர்த்துக்கொண்டு ஒரே நாட்டு மக்களாக ஒத்து வாழ முயன்றதில்லை. இப்பொழுது சமயம் வாய்த்துளது. கிலாபத் பிரச்னை இன்னும் ஒரு நூறு வருடங்களுக்கு மறுபடி யும் கிளம்பப் போவதில்லை. ஹிந்துக்கள் முஸ்லிம்களுடன் சாசு வதமான நட்பை வளர்க்க விரும்பினால், முஸ்லிம்களுடன் சேர்ந்து இஸ்லாமின் கௌரவத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் முஸ்லிம் களுடன் அழிய வேண்டும்.

—'எங் இந்தியா' - 11—5—1921

# 22

# சகிப்புத் தன்மையின் அவசியம்

நான் சொல்லுபவை உண்மையானால், என் மகளை ஒரு முஸ்லிமுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பேனா? முஸ்லிம்களுடன் சமபந்தி உண்வு சாப்பிடுவேனா? இவ்விதம் ஸ்ரீ கேண்ட்லர்* சில காலத்திற்கு முன் என்னுடன் ஒரு கற்பனைப் பேட்டியின்போது கேட்டார். இதே கேள்வி வேறு உருவத்தில் வேறு சில நண்பர்களால் கேட்கப்பட்டுள்ளது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குக் கலப்பு மணமும் சமபந்தி உணவும் அவசியமா? இவை இரண்டும் அவசியமானால், ஒற்றுமை ஏற்பட முடியாது; கோடிக்கணக்கான சனாதனிகள் சமபந்தி உணவிற்கே ஒப்பமாட்டார்கள்; பிறகு, கலப்பு மணத்திற்கு எப்படிச் சம்மதிப்பார்கள் என்று இக்கேள்வி கேட்பவர்கள் சொல்லுகிறார்கள்.

சாதி அமைப்பு கெடுதலானது அல்ல என நினைப்பவர்களுள் நானும் ஒருவன். ஆரம்பத்தில் அது தீமையற்றதாக, தேசீய ஆக்கத்திற்கு ஆதரவாக இருந்தது. கலப்பு மணமும் சமபந்தி உணவும் தேசீய வளர்ச்சிக்கு அவசியம் என்பது மேல் நாட்டினின்று கடன் வாங்கிய மூடநம்பிக்கை. சாப்பிடுவது, மற்ற சுகாதாரத் தேவைகளைப் போல் வாழ்க்கைக்கு முக்கியமானது. மனித வர்க்கம் தனக்குக் கேடு உண்டாகும் முறையில் சாப்பாட்டைப் பிரமாதப்படுத்தி இராதிருந்தால், நாம் வேறு அவசியமான அலுவல்களை மறைவில் செய்வது போல் இதையும் தனித்தே செய்திருப்போம். ஹிந்து மதத்தின் உயரிய பண்பு, சாப்பாட்டை இந்த லட்சியத்துடனேயே நோக்குகிறது. சாப்பாட்டை மற்றவர்கட்கு எதிரில் சாப்பிடாத ஆயிரக்கணக்கான ஹிந்துக்கள் இன்னும் இருக்கிறார்கள். உயரிய பண்புடைய ஆண் பெண்களை எனக்கு நேரில் தெரியும்; இவர்கள் தனிமையில்தான் உணவு சாப்பிடுவார்கள். ஆயினும், எவர் மீதும் இவர்களுக்குத் துவேஷமோ, பகையோ இல்லை; இவர்கள் எல்லோருடனும் மிகவும் அந்நியோந்நியமாகவே பழகுகின்றனர்.

கலப்பு மணம் இன்னும் அதிகக் கடினமான பிரச்னை. சகோதர சகோதரிகள் ஒருவரையொருவர் மணப்பதைப் பற்றிய நினைவே இல்லாமல் நட்புரிமையில் வாழ்கின்றனர். இதைப் போலவே எனது மகளும் எல்லா முஸ்லிம்களையும் சகோதரர்களாகப் பாவிப்பதிலும், அவர்கள் இவளைச் சகோதரி என்று பாவிப்பதிலும் சிரமம் இருக்குமென நான் கருதவில்லை. மதத்தைப் பற்றியும்

---

* ஸ்ரீ எட்மண்ட் கேண்ட்லர் ஒரு பிரபல ஆங்கில பத்திரிகாசிரியர்; யுத்த நிருபராகவும் இருந்தவர். அவர். பஞ்சாபில் விளம்பர அதிகாரியாக இருந்தபோது, மகாத்மா காந்திஜிக்குக் கிலாபத் பிரச்னை சம்பந்தமாக அவரது காந்திஜியின்) போக்கைக் கண்டித்துச் சில பகிரங்கக் கடிதங்கள் எழுதினார். அவரது கேள்விகளுக்கே காந்திஜி மேலே விடை அளித்துள்ளார்.

மணவினையைப் பற்றியும் எனக்குத் திட்டமான கருத்துக்கள் உள்ளன. சாப்பாடு, கல்யாணம் இவைகளில் நாம் கட்டுப்பாடு ஏற்படுத்திக்கொள்ளும் அளவிற்கு, மத வாழ்க்கையில் நாம் மேன்மையடைகின்றோம். எந்த இளைஞனையினும் அவனுக்கு என் மகளைக் கல்யாணம் செய்துகொள்ள உரிமை கொடுக்க வேண்டும் என்றால், நான் எப்பொழுதும் உலகத்தோடு ஒட்ட ஒழுக முடியாதெனப் பயப்படுகின்றேன். எந்த மனிதனுடனும் சாப்பிடுவதும் இப்படித்தான். உலகமனைத்துடனும் நான் நட்புக் கொண்டாடுகின்றேன். தனி முஸ்லிமுடனே அல்லது கிறிஸ்தவருடனே நான் சண்டையிட்டதில்லை. எனினும், அவர்கள் வீடுகளில் பழ உணவுதான் உட்கொண்டிருக்கின்றேன். சமைத்த ஆகாரத்தை ஒரே தட்டிலிருந்து என் மகனுடனும் உண்ண நான் சம்மதியேன். அவன் எச்சில் செய்த டம்ளரில், அதைக் கழுவாமல் தண்ணீர் உட்கொள்ள நான் சம்மதியேன். நான் ஏற்படுத்திக்கொண்ட இக்கட்டுப்பாடுகள் எனக்கும், எனது மகன், அல்லது முஸ்லிம், கிறிஸ்தவ நண்பர்களுக்கும் இடையேயுள்ள நெருங்கிய நட்புக்கு ஒரு போதும் தடையாக இருந்ததில்லை.

பிளவுக்கும், ஒற்றுமையின்மைக்கும், சண்டையைவிட கேவலமான நிலைமைக்கும் ஒரு காலத்திலும் கலப்பு மணமும், சமபந்தி உணவும் தடையாக இருந்ததில்லை. பாண்டவர்களும் கௌரவர்களும் தயவு தாட்சண்யமின்றி, ஒருவர் மேல் ஒருவர் பாய்ந்தனர். எனினும் இருவர்களுக்குள் சமபந்தி உணவும் கலப்பு மணமும் உண்டு. ஆங்கிலேயர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் இடையேயுள்ள கசப்பு இன்னும் நீங்கவில்லை. கலப்பு மணமும் சமபந்தி உணவும் நட்பிற்கும் ஒற்றுமைக்கும் சின்னங்களாயினும், அவை இன்றியமையாதவை அல்ல. இதுதான் உண்மை. இவற்றை வற்புறுத்துதல் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குத் தடையாகும். இன்று இப்படித்தான் இருக்கிறது. கலப்பு மணமும் சமபந்தி போஜனமும் இல்லாமல் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றாக வாழ முடியாது என்ற எண்ணத்திற்கு இடம் கொடுப்பது, பின் எப்பொழுதும் நீக்க முடியாத, செயற்கையான தடையை நம்முள் நாம் ஏற்படுத்திக்கொள்ளுவதாகும். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே வளர்ந்து வரும் ஒற்றுமையை இது பாதிக்கும். உதாரணமாக, முஸ்லிம் இளைஞர்கள் ஹிந்துப் பெண்களைக் காதலிப்பது சட்டவரம்பிற்குட்பட்டது எனக் கருதுதல், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே வளர்ந்து வரும் ஒற்றுமையை மிகவும் பாதிக்கும். பெற்றோர்களான ஹிந்துக்கள் இம்மாதிரி நடக்குமென்று ஐயப்பட்டால்கூட, முஸ்லிம்களை இப்போது போல் தாராளமாக வீட்டிற்குள் வந்து போகவிடமாட்டார்கள். ஹிந்து, முஸ்லிம் இளைஞர்கள் இந்த எல்லைகளைத் தெரிந்து ஒழுகுதல் அவசியமென்று நான் கருதுகின்றேன்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலப்புமணம் செய்துகொண்டு, தங்களுடைய மதத்தைச் சரிவரப் பின்பற்றுவது நடவாத

காரியம். தத்தம் மதத்தை உண்மையாகப் பின்பற்றிக்கொண்டு, ஒருவரோடொருவர் உண்மையுடன் நடந்துகொள்ளுவதுதான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் உண்மையான அழகாகும். ஏனெனில், இயற்கையில் பகைவர்கள் என்று கருதிய வைதிக ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பகைமையை விட்டுவிட்டு, பரஸ்பரம் இயற்கை நண்பர்கள் என்று கருத முற்படுகிறார்கள் அல்லவா?

ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை பின் எதில்தான் இருக்கிறது? இதை எப்படி வளர்ப்பது? இதற்குப் பதில் அளிப்பது சுலபம். நோக்கம், லட்சியம், கஷ்ட நஷ்டங்கள் எல்லாவற்றையும் பொதுவாகக் கருதுவதில்தான் அது அடங்கியிருக்கிறது. தாராள நோக்கத்தால் நமது துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளுவதன் மூலமும், பொதுவான லட்சியத்தை அடைய ஒன்று கூடுவதன் மூலமும் ஒற்றுமையை வளர்க்க முடியும். நமக்கு ஒரு பொது லட்சியம் இருக்கிறது. நம் நாடு பெருகிச் சுதந்திரமுடையதாக நாம் விரும்புகின்றோம். பகிர்ந்துகொள்ளப் போதுமான துன்பமும் இருக்கின்றது. இன்று முஸ்லிம்கள் கிலாபத் பிரச்னையினால் மிகவும் மனம் நொந்திருக்கின்றனர். எனவே, ஹிந்துக்கள், முஸ்லிம்களது நட்பைப் பெற இச்சமயத்தில் அவர்களுக்கு கிலாபத் சம்பந்தமான மனப்பூர்வமான உதவி அளிப்பதைப் போல் சக்தி வாய்ந்தது வேறொன்றுமில்லை. எத்தனை பேர் ஒரே கோப்பையில் குடித்தாலும், எத்தனை பேர் ஒரே தட்டில் சாப்பிட்டாலும் இவை, கிலாபத் பிரச்னையில் உதவுவதைப் போல இரு சமூகங்களையும் பிணைக்க முடியாது.

பரஸ்பரம் சகிப்புத் தன்மை எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சமூகத்திற்கும் அவசியமானது. முஸ்லிம் வழிபாட்டு முறைகளையும் பழக்க வழக்கங்களையும் ஒரு ஹிந்து சகிக்காவிட்டாலும், அல்லது ஹிந்து விக்கிரக ஆராதனையையோ, பசு வழிபாட்டையோ கண்டு ஒரு முஸ்லிம் பொறுமையிழந்தாலும், நாம் அமைதியாக வாழ முடியாது. நான் எதைச் சகித்துக்கொள்ளுகிறேனோ, அதை அப்படியே ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. குடி, ஊனுணவு, புகை பிடிப்பது இவைகளை ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்களிடையே நான் சகித்துக்கொள்ளுகின்றேன். ஆனாலும், நான் அவற்றை அறவே வெறுக்கின்றேன். இவைகளிலிருந்து நான் விலகியிருப்பதை அவர்கள் விரும்பாவிடினும் சகித்துக்கொள்ள வேண்டும்.

ஒருவர் தமது கருத்தை மற்றவர்மேல் புகுத்த முனைந்ததுதான், ஹிந்து, முஸ்லிம்களுக்குள் நடந்த எல்லாச் சச்சரவுகளுக்கும் காரணம்.

—'எங் இந்தியா' – 25—2—1920

# 23

# கலப்பு மணம் அமைதியைக் கொண்டு வருமா?

ஒவ்வொரு ஆடவருக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் அவரவர் மதத்தை அனுசரிப்பதற்கான சுதந்திரம் இருக்கும் வரையில் கலப்பு மணத்திற்கு தார்மிகமான ஆட்சேபணை எதுவும் இருக்கக்கூடுமென நான் நினைக்கவில்லை. எனினும், கலப்பு மணங்கள் அமைதியைக்கொண்டு வந்துவிடும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. ஹிந்து, முஸ்லிம் இரு சமூகங்களுக்கும் உள்ள சம்பந்தம் திருப்திகரமாக இராத வரையில், இரு சமூகங்களுக்கும் கலப்பு மணக்கொள்கையை உபதேசிப்பதால், பெரும் கேடு விளையும் என்பதே என் கருத்தாகும். அசாதாரணமான சந்தர்ப்பங்களில் அத்தகைய கலப்பு மணங்கள் இன்ப வாழ்விற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், அதை ஒரு பொதுக் கொள்கையாக அனுசரிக்கும்படி யோசனை கூறுவதற்குக் காரணமே இல்லை.

ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இப்போதுகூட பரந்த அளவில் சமபந்தி போஜனம் நடைபெற்று வருகிறது. எனினும், அதனால் பரஸ்பரம் அமைதி வளர்ந்துவிடவில்லை. கலப்பு மணம், சமபந்தி போஜனம் இவற்றிற்கும் சமூக ஒற்றுமைக்கும் சம்பந்தம் இல்லை என்பதே எனது உறுதியான கருத்தாகும். ஹிந்து-முஸ்லிம் சமூக வேற்றுமைக்குக் காரணம், பொருளாதார, அரசியல் பிரச்னைகளேயாகும். எனவே, அந்தப் பிரச்னைகள் திருப்திகரமாகத் தீர்க்கப்பட வேண்டும்,

ஐரோப்பாவில் கலப்பு மணமும் சமபந்தி போஜனமும் அமலில் இருந்து வருகின்றன. அப்படியிருந்தும் ஐரோப்பியர்கள் அவர்களுக்குள் சண்டை போட்டுக்கொள்ளுகிறார்கள். அவர்களைப் போல் அவ்வளவு உக்ரமாக சரித்திரத்தில் எக்காலத்திலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சண்டையிட்டுக் கொண்டதில்லை. இந்தச் சண்டையில் பாமர மக்கள் எப்போதுமே ஒதுங்கி நின்று வந்திருக்கிறார்கள்.

—'எங் இந்தியா' – 4—6—1921.

# 24

# பசுவைப் பாதுகாக்கத் தவம்

பேராசிரியர் வஸ்வானி, பசுவின் சுதந்திரக் கொடியைப் பறக்கவிட்டுள்ளார். நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக விரைவாகவே இந்த அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதையெல்

லாம் பரபரப்பின்றி சீரான மனநிலையில் நோக்கக்கூடிய ஆற்றல் இந்திய மக்களுக்கு ஏற்படும்போது, இந்த அபாயம் வரும் என்று நான் நம்பியிருந்தேன். பேராசிரியர் வஸ்வானி இதைக் காட்டி லும் நல்ல சூழ்நிலையில் இந்த இயக்கத்தை ஆரம்பித்திருக்கலாம். முஸ்லிம்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பின்றி, பசுவைப் பாதுகாப்பதற்காக ஹிந்துக்கள் ஆரம்பிக்கும் எந்த இயக்கமும் தோல்வியடைந்தே தீரும்.

கிலாபத்தில் ஹிந்துக்கள் கலந்துகொள்ளுவதே பசுவைப் பாதுகாப்பதற்கான மிகச் சிறந்த, மதத்தான இயக்கமாகும். அதனால்தான் கிலாபத்தை நமது காமதுக்* என்று நான் குறிப் பிடுகிறேன்.

ஹிந்துக்கள் இருப்பதா, இறப்பதா என்ற இவ்விஷயத் தில் ஹிந்துக்களின் உணர்ச்சிகளுக்கு மரியாதை கொடுக்க முஸ் லிம்கள் தங்களால் இயன்ற வரையில் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். ஹக்கீம்ஜி அஜ்மல்கான் தலைமையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் அமிருதசரஸில் கூடிய முஸ்லிம் லீக், பசுப் பாதுகாப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அதைப் பற்றி மௌலானா அப்துல் பாரி எழுதியிருக்கிறார். தங்கள் வீட் டில் மாட்டிறைச்சி சாப்பிடுவதை அலி சகோதரர்கள் தங்கள் நாட்டில் உள்ள ஹிந்து சகோதரர்களுக்காக விட்டுவிட்டார்கள். சென்ற பக்ரீத் பண்டிகையின்போது பம்பாயில் மாத்திரம், மியான் சோடானி நூற்றுக்கணக்கான பசுக்களைக் காப்பாற்றி னர். எனவே, இவ்விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ள வில்லை என்று நாம் இந்நாட்டில் உள்ள முஸ்லிம்கள் மீது குற் றம் சாட்ட முடியாது.

நமது நோக்கம் தோல்வியுறுவதற்கான நிச்சயமான வழி, இவ்விஷயத்தில் முஸ்லிம்களை அவசரப்படுத்துவதுதான்.

இவ்விஷயத்தில் முஸ்லிம்கள் ஒருபோதும் கௌரவக் குறை வாக நடந்துகொண்டதில்லை. எனினும், மற்றவர்களைப் போலவே முஸ்லிம்களிடையும் வெறுப்பும் தப்பெண்ணமும் எளிதில் ஒழிவ தில்லை. ஆனால், இவ்விஷயத்தில் விசால அறிவுள்ள முஸ்லிம்கள் நமக்கு ஆதரவாக இருந்து வருகிறார்கள். எனவே, அவர்களுடைய கருத்துக்கள் பாமர முஸ்லிம் மக்களிடையே பரவுவதற்குச் சிறிது காலம் செல்லத்தான் வேண்டும். எனவே, ஹிந்துக்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும்.

ஷிகார்புரி ஹிந்துக்கள் யாவரும் பசு வதையைத் தடுக்க வேண்டும் என்பதை ஆதரித்து ஏகமனதாகத் தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறார்கள் என்பதில் விந்தை எதுவுமில்லை. அதற்கு ஆதரவாக வாக்குக் கொடுக்காத ஹிந்து ஒருவராவது இருக்க முடி

---

* 'காமதுக்' என்ற வடமொழிச் சொல்லுக்கு எல்லா விருப்பங்களையும் நிறை வேற்ற வல்லது என்ற பொருளாகும்.

யுமா? முஸ்லிம்களின் எதிர்ப்பைத் தகர்ப்பதற்காக அவ்விதம் ஏகமனதாகத் தீர்மானித்ததுதான், அவர்களின் எதிர்ப்பை இன்னும் பலப்படுத்துவதற்கான வழியாகும். அவ்விஷயமாக ஹிந்துக்கள் முஸ்லிம்களின் உணர்ச்சியை அறிந்துகொண்டிருக்க வேண்டும். முஸ்லிம்களின் அபிப்பிராயம் தங்களுக்கு எதிராக இருக்கும் வரையில், அவர்கள் தீர்மானத்தையொட்டி வாக்கு எடுக்காமல் இருந்திருக்க வேண்டும்.

நம்மை, அதாவது ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து வைத்திருப்பதற்காகத் தீவிரமாக வேலை செய்யும் ஒரு கூட்டம் இருப்பதை நாம் உணர வேண்டும்.

மாட்டிறைச்சியைவிட வேறு இறைச்சிகள் முஸ்லிம் சகோதரர்களுக்கு மலிவாகக் கிடைக்கும்படி செய்வதற்காக, ஹிந்துக்கள் இறைச்சியை சாப்பிடுவதையே தவிர்ப்பார்களாக. ஒரே ஒரு பசுவோ அல்லது அதன் கன்றுகளோகூட ஹிந்துக்களால் துன்புறுத்தப்படுவதை, வெட்கக்கேடான ஒரு விஷயமாக ஹிந்துக்கள் கருதுவார்களாக. ஹிந்துக்கள் தங்களுடைய கோசாலையை முன் மாதிரியான ஒரு பால் பண்ணையாகவும், வயதான, நோயுற்ற மாடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஒரு விடுதியாகவும் அபிவிருத்தி செய்வார்களாக. அவர்கள் தங்களுடைய கோசாலையில் சிறந்த கால்நடை இனம் அபிவிருத்தியாகும்படி செய்வார்களாக. இவ்விதமாயின், அவர்கள் கோமாதாவுக்கு உண்மையான தொண்டு செய்தவர்களாவார்கள். ஷிகார்புரிவாசிகள் யாவரும் உண்மையான ஒத்துழையாதவர்களாகி, கிலாபத் தவறுக்குப் பரிகாரம் தேட விரைவார்களாக. கிலாபத்தைப் பாதுகாக்க அவர்கள் தங்களால் இயன்றதையெல்லாம் செய்த பின்தான் அவர்கள் பசுவைப் பாதுக்காக்க முடியும்.

முஸ்லிம்களுடைய நட்பினால் மாத்திரமே பசுக்களைப் பாதுகாக்க முடியும் என்பது ஹிந்துக்களின் மத நம்பிக்கையாக இருக்க வேண்டும். பசுவின் பூரண பாதுகாப்பு, முஸ்லிம்களின் நல்லெண்ணத்தையே பொறுத்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தங்கள் இஷ்டப்படி முஸ்லிம்கள் எப்படி நம்மை வளைக்க முடியாதோ, அது போலவே நமது இஷ்டப்படி நாம் முஸ்லிம்களை வளைக்க முடியாது. நாம் சம உரிமைகளும் சுதந்திரமும் உள்ள பங்காளிகள் என்ற சித்தாந்தத்தை உருவாக்கி வருகிறோம். நாம் டயரிசத்தை, அதாவது பயங்கர ஆட்சி முறையை எதிர்த்துப் போராடி வருகிறோம்.

பசுப் பாதுகாப்பு, ஹிந்துக்களின் உள்ளத்தைக் கவர்ந்த அரியதொரு பொக்கிஷமாகும். அது ஒன்றுதான் ஹிந்துக்களில் எல்லோருக்கும் பொதுவான உறுதியான நம்பிக்கையாக இருந்து வருகிறது. பசுப் பாதுகாப்பில் நம்பிக்கையில்லாத ஒருவர்கூட ஹிந்துவாக இருக்க முடியாது. அது கண்ணியமும், கௌரவமும் உள்ள நம்பிக்கையாகும். எனவே, பசுவைப்

போற்றி பேராசிரியர் வஸ்வானி கூறியுள்ள ஒவ்வொரு வார்த்தை யையும் நான் அங்கீகரிக்கிறேன். பசுவைப் பூஜிப்பது, கள்ளங் கபடமற்ற தன்மையைப் பூஜிப்பதாகும் என்பதே எனது அபிப் பிராயமாகும். பசுப் பாதுகாப்பு என்றால், பலவீனர்களையும் திக்கற்றவர்களையும் பாதுகாப்பதே. அது ஓர் சிறந்த உணர்ச்சி யாதலால், பொறுமையான உழைப்பினாலும் தவத்தினாலும் அந்த உணர்ச்சியை வளர்க்க வேண்டும். அந்த உணர்ச்சியை யாருடைய உள்ளத்திலும் திணித்துவிட முடியாது. கத்தி முனை யில் பசுப் பாதுகாப்பை அமலுக்குக் கொண்டுவருவது, ஒன்றுக் கொன்று முரணானது. பசுவிற்காக, பண்டைய காலத்து ரிஷிகள் தவம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. எனவே, நாமும் அந்த ரிஷிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தவம் புரிவோமாக. அப் படிச் செய்தால்தான் நாம், பசுவையும், அந்தச் சித்தாந்தத் தில் அடங்கியுள்ள கருத்துக்களையும் பாதுகாப்பதற்கான தூய் மையை அடையலாம்.

—'எங் இந்தியா' – 8—6—1921

## 25

# ஒரே தாயின் புதல்வர்கள்

முஸ்லிம்களைக் கொல்லுவதோ அல்லது அவர்களுடன் சண்டை யிடுவதோ பசுவைப் பாதுகாப்பதற்கான வழியல்ல; பசுவைப் பற் றிப் பிரஸ்தாபிக்காமலேயே கிலாபத்தைப் பாதுகாக்கும் நடவடிக் கையில் இறப்பதே, பசுவைப் பாதுகாக்கும் வழியாகும். பசுப் பாதுகாப்பு ஒரு தூய்மை நடவடிக்கையே. அது ஒரு தவம், அதாவது தான் துன்பத்திற்கு உள்ளாவதே. நாம் மனமுவந்து துன்பத்திற்கு உள்ளாகும்போது, அதற்குப் பிரதியாக வெகுமதி எதையும் நாம் எதிர்பார்ப்பதில்லை. அப்போது நமது துன்பக் குரல் உண்மையில் சொர்க்கத்தையே போய் எட்டுகின்றது. மேலேயுள்ள கடவுள், அந்தக் குரலைக் கேட்டு நமக்கு அருள் புரி கிறார். மகத்தான வழி இதுதான். ஒரே மனிதர் பூரணமாக அம்முறையைக் கைக்கொண்டபோதுகூட கடவுள் அருள் புரிந் திருக்கிறார்.

ஒரு பசுவைப் பாதுகாப்பதற்காகக்கூட ஒரு மனிதரைக் கொல்லக்கூடாது. அவ்விதம் செய்வது ஹிந்து மதம் அல்ல என்று நான் தைரியமாகக் கூறுவேன். இதை எவராவது மறுப் பாரோ என்று நான் அஞ்சவில்லை. தங்களுடைய மதத்திற்காக, அதாவது பசுவைப் பாதுகாப்பதற்காக ஹிந்து மத பக்தர்கள் தங்களுடைய உயிரையே தியாகம் செய்ய வேண்டும். தங் களுடைய மதத்திற்காகவும் பசுவைப் பாதுகாப்பதற்காகவும் எத்தனை ஹிந்துக்கள், முஸ்லிம்களுடன் பேரம் செய்யாமல் தங்

களுடைய உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்பதே இப்போது கேள்வியாகும். ஹிந்துக்கள் மத பக்தியுடன் அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியுமாயின், அவர்கள் என்றென்றும் முஸ்லிம்களுடைய நட்பை மாத்திரம் பெற்றவர்களாகமாட்டார்கள்; முஸ்லிம்களிடமிருந்து பசுவை எக்காலத்தும் பாதுகாத்தவர்களும் ஆவார்கள். அவர்களிடையே மிகப் பெரியவர்களைக்கூட நாம் தூஷிக்க வேண்டாம். அவர்கள் உதவியளிக்கத்தான் முடியும். பசுவை வதை செய்யும்போது தங்களுக்கு அண்டையில் உள்ள ஹிந்துக்களின் உணர்ச்சி எப்படி இருக்கும் என்று சிந்திப்பதற்கும் இடம் கொடுக்காத கோடிக்கணக்கான முஸ்லிம்களின் உள்ளங்களை மாற்றும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், எல்லாம் வல்ல இறைவன் அவர்களுடைய உள்ளங்களை ஒரு நொடிப் பொழுதில் மாற்றி, அவர்கள் இரக்கம் காட்டும்படி செய்துவிட முடியும்.

போதிய துன்பத்துடன் கலந்த பிரார்த்தனையே, உள்ளத்தின் பிரார்த்தனையாகும். அத்தகைய பிரார்த்தனைக்கு மாத்திரமே கடவுள் அருள் புரிவார். என்னுடைய முஸ்லிம் நண்பர்களுக்கு நான் ஒரு வார்த்தை கூறுவேன். பொறுப்பற்ற அல்லது அறியாத்தனமுள்ள, ஆனால், மத வெறி கொண்ட ஹிந்துக்களின் நடவடிக்கைகளால் முஸ்லிம் நண்பர்கள் ஆத்திரம் அடையக்கூடாது. கோபமூட்டப்படும்போது யார் அடக்கத்துடன் நடந்துகொள்ளுகிறாரோ, அவர்தான் போரில் வெற்றி பெறுவார். முஸ்லிம்களுக்குச் சோதனை ஏற்பட்டுள்ள இச்சமயத்தில், பொறுப்புள்ள ஹிந்துக்கள் பேரம் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியுடன் அவர்கள் பக்கம் சேர்ந்துகொள்ளவில்லை. இதை முஸ்லிம்கள் நிச்சயமாக உணர வேண்டும். கிலாபத் ஒரு நியாயமான லட்சியம் என்பதற்காகப் பொறுப்பு வாய்ந்த ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்கு உதவி அளித்து வருகிறார்கள். அத்தகைய ஒரு லட்சியத்திற்கு உதவுவது, இந்தியாவிற்கே தொண்டு செய்வதாகும் என்பதே அவர்களின் கருத்தாகும். முஸ்லிம்கள், ரத்த சகோதரர்களைப் போலவே ஒரே தாயான பாரத மாதாவின் புதல்வர்கள் அல்லவா?

—'எங் இந்தியா'–28—6—1921

## 26

# சுயராஜ்யத்தைவிடப் பெரிய பிரச்னை

ஒரு சமயம் நான் சம்பாரணில் இருந்தபோது, பசுப் பாதுகாப்பு பற்றி எனது கருத்துக்களை விளக்க வேண்டுமென்று கேட்டார்கள். அவ்விஷயமாக நான் சம்பாரண் நண்பர்களுக்குக் கூறியது இதுதான்: யாராவது பசுவைப் பாதுகாக்க உண்மையான ஆர்வம் கொண்டிருந்தால் அவர், பசுவைக் கொல்லாமல்

இருக்கும்படி கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தங்கள் மனத்திலிருந்து உடனடியாக ஒழித்துவிட வேண்டும்.

பசு வதை செய்யாமல் இருக்கும்படியும் மாட்டிறைச்சி தின்னுமல் இருக்கும்படியும் ஹிந்துக்கள் அல்லாதாரை, குறிப்பாக முஸ்லிம்களைத் தடுப்பதில்தான் பசுப் பாதுகாப்புப் பிரச்னை அடங்கியிருக்கிறதென நாம் எல்லோரும் நம்புகிறோம். இது துரதிருஷ்டமானது. அவ்விதம் நம்புவது மதியீனம் என்று தோன்றுகிறது. எனினும் இதிலிருந்து, ஹிந்துக்கள் அல்லாதார் பசுவைக் கொல்லுவதுபற்றி நான் அக்கறைகொள்ளவில்லையென்றோ, அல்லது பசு வதை வழக்கத்தை நான் சகித்துக் கொண்டிருக்க முடியும் என்றோ யாரும் முடிவு கட்டிவிட வேண்டாம். அதற்கு மாறாக, ஒரு பசு கொல்லப்படும்போது என் ஆன்மா அடையும் வேதனையைக் காட்டிலும் அதிக வேதனை வேறு எவருக்கும் இருக்க முடியாது. ஆனால், நான் என்ன செய்வது? என் தருமத்தை நானே நிறைவேற்றுவதா அல்லது எனக்குப் பிரதிநிதியாக நான் ஒருவரை நியமித்து அவர் நிறைவேற்றும்படி செய்வதா? நானே துன்மார்க்கத்தில் ஆழ்ந்திருந்தால், மற்றவர்களுக்கு நான் பிரம்மச்சரியத்தை உபதேசிப்பதால் என்ன பலன் ஏற்பட முடியும்? நானே மாட்டிறைச்சி தின்றால், அதைத் தின்னுமல் இருக்கும்படி நான் முஸ்லிம்களை எப்படித் தடைசெய்யமுடியும்? நான் பசுவைக் கொல்லுவதில்லை என்றால்கூட, முஸ்லிம்களை அவர்களுடைய விருப்பத்திற்கு விரோதமாகப் பசுவைக் கொல்லாதிருக்கும்படி செய்வது எனது கடமையாகுமா?

பசுவைக் கொல்ல இஸ்லாம் அனுமதிக்கிறது என்று முஸ்லிம்கள் கூறுகிறார்கள். எனவே, ஒரு முஸ்லிமைக் கட்டாயப் படுத்தி பசுவைக் கொல்லாமல் இருக்கும்படி தடுப்பது, அவரை பலாத்காரமாக ஹிந்து மதத்திற்கு மாற்றுவது போலாகும் என்பதே என் அபிப்பிராயம். இந்தியாவில் சுயராஜ்ய ஆட்சியில் கூட பெரும்பான்மையோரான ஹிந்துக்கள், சிறுபான்மையோரான முஸ்லிம்களைப் பசு வதை செய்யாமல் இருக்கும்படி சட்டம் கொண்டு வந்து தடுப்பது விவேகமற்ற, ஒழுங்கற்ற காரியம் என்பதும் எனது கருத்தாகும். பசுவைப் பாதுகாப்பதாக நான் பிரதிக்ஞை செய்யும்போது, நான் இந்தியாவில் உள்ள பசுக்களை மாத்திரம் குறிப்பிடவில்லை, உலகம் முழுவதும் உள்ள பசுக்களையே குறிப்பிடுகிறேன். பசு வதை ஒரு பாவம்; எனவே, அதைக் கைவிட்டுத் தீர வேண்டும். இந்த உறுதியான கொள்கையை, என் சொந்த ஒழுக்கத்தின்மூலம் பல்வேறு விதமான கருத்துக்கள் உடையவர்களின் மனத்திலும் பதியும்படி நான் செய்யவேண்டும். எனது மதம் எனக்குக் கற்பிப்பது இதுதான். உலகம் முழுவதும் பசுப் பாதுகாப்புக் கொள்கை நிலைக்கும்படி செய்யவேண்டும் என்பதே எனது பேரார்வமாகும். அவ்விதம்

செய்வதற்கு, முதலில் என் வீட்டை நான் முற்றிலும் ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா?

ஆதலால், பசுவைப் பாதுகாப்பது எப்படி என்று என்னைக் கேட்டால், நான் கூறும் முதல் யோசனை இதுதான்: "உங்கள் மனத்திலிருந்து கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களையும் அகற்றி விடுங்கள். முதலில் உங்களுடைய சொந்தக் கடமையை நீங்கள் செய்து வாருங்கள்."

மௌலானா ஷவுகத் அலியின் பசுவைப் பாதுகாக்க நான் உதவி செய்து வருவதாக, நெடுநாட்களாக நான் அவரிடம் கூறிக் கொண்டிருக்கிறேன். அதாவது, கிலாபத்துதான் அவரது பசுவாகும். கிலாபத்தைப் பாதுகாப்பதன்மூலம் எனது பசுவை நான் பாதுகாக்கலாம் என்பதே எனது நம்பிக்கையாகும். முஸ்லிம்களின் கையில் என் உயிரை ஒப்படைக்கவும், அவர்களுடைய தயவினால் மாத்திரமே வாழவும் நான் தயாராக இருக்கிறேன். ஏன்? அதன்மூலம் நான் பசுவைப் பாதுகாக்கமுடியும் என்பதற்காகத்தான். முஸ்லிம்களுடன் பேரம் செய்துகொள்ளுவதன்மூலம் அல்ல, அவர்களுடைய மனம் மாறும்படி செய்வதன் மூலமே நான் அந்த லட்சியத்தை அடையலாமென நம்புகிறேன். அவர்களுடைய மனம் மாறும் வரையில் எனது ஆன்மா பொறுமையுடன் இருந்து வரும். அவர்கள் விஷயத்தில் நம்முடைய ஒழுங்கான நடத்தையினாலும், நம்முடைய சொந்த உதாரணத்தினாலும்தான் அத்தகைய மன மாறுதலை உண்டாக்க முடியும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை.

பசுவைக் கொல்லுவதும் மனிதனைக் கொல்லுவதும் ஒரு நாணயத்தின் இருபுறங்களைப் போன்றதே என்பது எனது கருத்தாகும். அவ்விரண்டிற்கும் பரிகாரம் ஒரேவிதமானதுதான். அதாவது நாம் அகிம்சைக் கொள்கையை வளர்த்து, நமது எதிராளிகளை அன்பினால் வசப்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அன்பின் சோதனை தவம்தான், அதாவது துன்பத்தை அனுபவிப்பதுதான். என் சக்திக்கு இயன்ற வரையில், முஸ்லிம்களின் துன்பத்தில் பங்குகொள்ளுவதாக நான் அவர்களிடம் கூறினேன். அதற்குக் காரணம், சுயராஜ்யம் பெற அவர்களுடைய ஒத்துழைப்பை நான் விரும்பினேன் என்பது மாத்திரமல்ல; பசுவைப் பாதுகாக்கவேண்டும் என்ற எண்ணமும் என் மனத்தில் இருந்தது. நான் அறிந்த வரையில், காரணமின்றி உயிருள்ள எதையும் கொல்லுவது பாவம் என்றே குரான் கூறுகிறது. பசுவைக் கொல்லுவது தங்களுடைய தேச மக்களும் நண்பர்களுமான ஹிந்துக்களைக் கொல்லுவதேயாகும் என்று முஸ்லிம்கள் சந்தேகமின்றி உணரும்படி செய்யும் ஆற்றலை நான் அபிவிருத்தி செய்துகொள்ள விரும்புகிறேன். நிரபராதியான அண்டை வீட்டுக்காரரின் ரத்தத்தைச் சிந்துவோர் சொர்க்கத்தை அடைய முடியாது என்று குரான் கூறுகிறது. எனவே, முஸ்லிம்களுடன் அண்டை வீட்டுக்காரர்கள் என்ற சிறந்த தொடர்பை ஸ்தாபிக்க நான் ஆர்வம் உள்ளவனாக இருக்கிறேன்.

முஸ்லிம்களுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தக்கூடிய எதையும் செய்யாமல் தவிர்ப்பதில் நான் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வருகிறேன். அவர்களுடைய தப்பெண்ணங்களுக்குக்கூட மரியாதை கொடுக்க நான் முயற்சிக்கிறேன். எனினும், பேரம் செய்யும் நோக்கத்துடன் நான் இவ்விதம் செய்யவில்லை. இதற்காக அவர்களிடம் நான் வெகுமதி எதையும் கோரவில்லை. கடவுளிடமிருந்து மாத்திரமே நான் வெகுமதியை நாடுவேன். ஒரு நல்ல நடவடிக்கையிலிருந்து எக்காலத்திலும் தீமை ஏற்படாது என்று எனது கீதை எனக்குக் கூறுகிறது. எனவே, முஸ்லிம்களுடன் எவ்வித ஒப்பந்தமும் செய்துகொள்ளாமல் தூய்மையான கடமை உணர்ச்சியுடன் அவர்களுக்கு நான் உதவி செய்ய வேண்டும். இந்தியாவில் இன்று முஸ்லிம்களைக் காட்டிலும் ஆங்கிலேயர்களுக்காக அதிகப் பசுக்கள் கொல்லப்படுகின்றன. எனவே, ஆங்கிலேயர்களின் மனத்தையும் மாற்ற நான் விரும்புகிறேன். ஆங்கிலேயர்கள் நம்மிடையே இருக்கும்போது, மேனாட்டுப் பண்பாடு நமது பண்பாட்டிற்கு முரண்பாடாக இருக்கும் விஷயங்களை மாத்திரம் தவிர்ப்பதே அவர்களுடைய கடமை என்பதை அவர்கள் நன்கு உணரும்படி செய்ய நான் விரும்புகிறேன். எனவே, சுயநல நோக்குடன் கவனித்தாலும் நாம் அகிம்சையை அனுசரிக்க வேண்டியது அவசியம் என்பதை நீங்கள் காணலாம். அகிம்சையின்மூலம் நாம் பசுவைப் பாதுகாக்க முடியும், ஆங்கிலேயர்களின் நட்பையும் பெற்றுவிடமுடியும். தியாகத்தினால் எல்லாருடைய நட்பையும் பெற நான் விரும்புகிறேன். முஸ்லிம்களை நான் முழந்தாளிட்டு அணுகுவதுபோல, ஆங்கிலேயர்களை அணுக நான் விரும்பவில்லை. ஏனெனில், ஆங்கிலேயர்கள் அதிகார போதையில் இருந்து வருகிறார்கள். நம்மைப் போலவே முஸ்லிம்களும் அடிமைத்தனத்தில் ஆழ்ந்து உழன்று வருகிறார்கள். எனவே, நாம் நண்பர்கள் என்ற முறையிலும், தோழர்கள் என்ற முறையிலும் முஸ்லிம்களுடன் பேசமுடியும். ஆனால் அதற்கு மாறாக ஆங்கிலேயர்களோ, நாம் காட்டும் நட்பு உரிமையை உணர்ந்து பாராட்ட இயலாதவர்களாக இருக்கிறார்கள். நட்பு முறையில் நாம் செய்யும் காரியங்களை அவர்கள் வெறுத்தும் தள்ளிவிடுவார்கள். நமது நட்பை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அவர்கள் நம் விஷயத்தில் தயவுக்காக ஏதாவது செய்யவே விரும்புகிறார்கள். நாம், அவர்களுடைய அவமதிப்புகளை விரும்பவில்லை; அவர்களுடைய தயவையும் விரும்பவில்லை. எனவே, அவர்களை நாம் தனியாக விட்டுவிடுகிறோம்.

தகுந்த பாத்திரர்களுக்கு மாத்திரமே தருமம் செய்ய வேண்டுமென்று நமது சாஸ்திரங்கள் விதிக்கின்றன. விரும்புவோருக்கு மாத்திரமே அறிவை உபதேசம் செய்யவேண்டும் என்பதும் சாஸ்திரங்களின் கட்டளையாகும். எனவே, நம்மை ஆட்சி புரிவோருடன் ஒத்துழைக்க மறுப்பதோடு நாம் திருப்தி அடைகிறோம். அவர்கள்மீது துவேஷம் காரணமாக அல்ல,

அவர்களிடம் நமக்குள்ள அன்பினுலேயே அவர்கள் விஷயத்தில் நாம் ஒத்துழையாமையை அனுசரிக்கிறோம். அன்பின் சக்தி ஒத்துழையாமைக்குப் பின்னிருந்து இயங்குவதால்தான், பம்பா யிலும் செளரி செளராவிலும் பலாத்காரம் மூண்டபோது சட்ட மறுப்பை நிறுத்திவிடும்படி நான் ஆலோசனை கூறினேன். ஆங்கி லேயர்களின் ரத்தத்தைச் சிந்தி நான் சுயராஜ்யம் பெற விரும்ப வில்லை. ஆனால் தங்களுடைய உடலுக்கு எவ்விதத் தீங்கும் நேராது என்று அவர்கள் முற்றிலும் நம்பிக்கையுடன் இருக் கும்படி செய்தே நான் சுயராஜ்யம்பெற விரும்புகிறேன். இதை, ஒவ்வொரு ஆங்கிலேயரும் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண் டும் என்பதே எனது விருப்பமாகும்.

பசு வதையைப் பாவமாகக் கருதாதவர்களுக்கு எதிராகப் பலாத்காரத்தை உபயோகிப்பதன்மூலம், சில பசுக்களை மர ணத்திலிருந்து காப்பாற்றுவதில் நாம் வெற்றி பெற்றோமாயின், அதனால் என்ன லாபம் ஏற்பட்டுவிடும்? எனவே, எல்லோரிடை யும் நட்பை வளர்ப்பதன்மூலம், அதாவது அகிம்சையின் மூலம் தான் பசுவிற்குப் பாதுகாப்பு ஏற்படும்படி செய்யமுடியும்? சுய ராஜ்யத்தைக் காட்டிலும்கூட பசுப் பாதுகாப்புப் பிரச்னை மகத் தானது என்று நான் ஏன் கருதுகிறேன் என்பதை இப்போது நீங்கள் உணர்ந்துகொள்ளுவீர்கள். உண்மை என்னவெனில், பசுப் பாதுகாப்பு அமலுக்கு வரும்படி செய்வதில் நமக்குள்ள சக்தியே, நாம் சுயராஜ்யத்தை அடைவதற்கும் போதுமானது என்பதே யாகும்.

—'எங் இந்தியா' – 29—1—1925

## 27

# உணர்ச்சிகளைப் புண்படுத்தக்கூடாது

பசு சம்பந்தமான ஹிந்துக்களின் உணர்ச்சியை மதிக்க வேண்டுமாயின், முஸ்லிம்கள் பலிக்காகவோ அல்லது உணவுக் காகவோ பசுவதை செய்வதைத் தாங்களாக மனமுவந்து அறவே நிறுத்திவிட வேண்டும். யாராவது ஒரு கொடியவன் ஆயுத பலாத்காரத்தை உபயோகித்து, கொல்லப்படுவதிலிருந்து பசுவிற்கு விலக்கு ஏற்படும்படி செய்வானாயின், ஹிந்து தருமம் காக்கப்பட்டதாகிவிடாது. இந்தியாவில் உள்ள இஸ்லாம் மதத் தினர் தாங்களாக வலுவில் பசுவதையை நிறுத்திவிடுவார்களா யின், இதைக் காட்டிலும் அவர்கள் ஹிந்துக்களுக்கு அளிக்கும் சிறந்த ஒரு பரிசு வேறு இருக்க முடியாது. பசுவதையை இஸ் லாம் வற்புறுத்தவில்லை என்று உறுதியாகக் கூறும் அளவுக்கு, எனக்கு இஸ்லாமைப் பற்றி ஓரளவு தெரியும். மனித சாத்திய மான சந்தர்ப்பங்களில், தங்களுடைய அயலாரின் உணர்ச்சி

களைப் புண்படுத்தக்கூடாதென்றும், அவற்றிற்குப் பூரண மதிப்புக் கொடுக்க வேண்டும் என்றுமே இஸ்லாம் தன் பக்தர்களை வற்புறுத்துகிறது. என் சம்பந்தப்பட்ட வரையில், பசுவதையும் மசூதிகளுக்கு முன் மேளம் வாசிப்பதும் சரிசமமானதல்ல. எனினும், அதற்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டுவிட்டதால், அதை அசட்டை செய்வது மடத்தனமாகும். தங்களுடைய உணர்ச்சிகளை எவை புண்படுத்தாமலிருக்கும் என்பதை முஸ்லிம்கள்தான் கூற வேண்டும். மசூதிகளின் முன்னிலையில் மேளம் வாசிப்பதை அறவே நிறுத்துவதுதான், முஸ்லிம்களுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தாமல் இருப்பதற்கான வழி எனில், ஒரு விநாடிகூட யோசிக்காமல் அவ்விதமே செய்ய வேண்டியது ஹிந்துக்களின் கடமையாகும். இதய ஒற்றுமையை நாம் அடைய வேண்டுமாயின், நாம் ஒவ்வொருவரும் போதிய அளவு தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

—'எங் இந்தியா' – 5—1—1928

# 28

# பசுவதையும் கொட்டு முழக்கமும்

இம்மாபெரும் பிரச்னையைப் பற்றிச் சென்ற வாரம் விடுத்த நீண்ட அறிக்கையை, நான் இந்திய தேச பக்தர்களுக்காகச் சுருக்கித் தருகிறேன். பின்பற்றுகிறவர்கள் நடந்து கொள்ளுவதைக்கொண்டுதான், வருங்காலச் சந்ததியார் இவ்விரு மதங்களையும் மதிப்பிடுவார்கள்.

ஹிந்து மதமோ, இஸ்லாம் மதமோ, அதனதன் தத்துவ ரீதியில் எவ்வளவு நல்லதாக இருப்பினும், பொதுவாகப் பார்க்கும்போது அதைப் பின்பற்றுபவர்களிடையே அது எத்தகைய பலனை உண்டுபண்ணியிருக்கிறது என்பதைப் பொறுத்தே அதை மதிப்பிட வேண்டும். அந்த அறிக்கையின் சுருக்கமான விவரம் பின்வருமாறு :

**காரணங்கள் :**

1. ஹிந்து - முஸ்லிம் பிணக்கிற்கு உடனடியல்லாத காரணம் மாப்பிள்ளைக் கலகமாகும்.
2. பஞ்சாபில், முஸ்லிம்களின் ஜனத்தொகைக்கேற்ப கல்வி இலாகாவில் அவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்க ஸ்ரீ பஸ்லி ஹுசேன் முயற்சித்தார். ஹிந்துக்கள் இதை எதிர்த்தனர்.
3. சுத்தி இயக்கம்.
4. மிகத் தீவிரமான காரணம் அகிம்சையில் சலிப்பு. அகிம்சையிலேயே நெடுநாள் பழகிவிட்டால், அப்

புறம் சமூகங்கள் ஒன்றையொன்று பதிலுக்குப் பதில் தாக்கவும், தற்காப்புச் செய்துகொள்ளவும் மறந்து விடுமென்ற பயம்.

5. முஸ்லிம்களின் பசுவதையும் ஹிந்துக்களின் சங்கீதமும்.

6. ஹிந்துக்களின் கோழைத்தனமும், அதனல் ஹிந்துக்களுக்கு முஸ்லிம்களிடம் ஏற்பட்ட அவநம்பிக்கையும்.

7. முஸ்லிம்களின் துஷ்டத்தனம்.

8. ஹிந்துக்கள் நியாயமாக நடப்பார்களா என்பதில் முஸ்லிம்களுக்கு உள்ள நம்பிக்கையின்மை.

**பரிகார முறைகள் :**

1. வாள் பலத்தை நம்பாமல், மத்தியஸ்தம் பண்ணிக் கொள்ள ஒத்துக்கொண்டால், இப்பிரச்னையைத் தீர்ப்பது எளிதாகும். தீங்கிழைக்கப்பட்டவர்கள் தண்டோபாயத்தை நாடக்கூடாதென்ற எண்ணம் பொது ஜனங்களிடையே பரவி வளர வேண்டும். பிரத்தியேகமான பஞ்சாயத்தார்களைக்கொண்டு மத்தியஸ்தம் செய்யலாம். கட்சிகளுக்கு ஒத்துழையாமையில் நம்பிக்கையில்லா விட்டால், நியாயஸ்தலங்களை நாடலாம்.

2. புஜவலிமைக்குப் பதில் கோழைத்தனமான அகிம்சை வந்துவிடும் என்ற அறிவற்ற பயத்தை அகற்ற வேண்டும்.

3. தலைவர்களுக்கு ஒற்றுமையில் நம்பிக்கை இருந்தால் அவர்களுக்குள் வளர்ந்து வரும் அவநம்பிக்கை மறைந்து நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

4. முஸ்லிமின் வீண் வம்புக்கு ஹிந்துக்கள் பயப்படக் கூடாது. முஸ்லிம்கள் தம் ஹிந்து சகோதரர்களுக்கு வீண் தொந்தரவு கொடுப்பதை கண்ணியக் குறைவான செயல் என்று நினைக்க வேண்டும்.

5. முஸ்லிம்கள் பசுவதை செய்வதைப் பலவந்தத்தினல் தடுத்துவிட முடியும் என்று ஹிந்துக்கள் கற்பனை செய்துகொள்ளக்கூடாது. முஸ்லிம்களை நேசித்தால், அவர்கள் தாங்களாகவே ஹிந்து அண்டை அயலார்களிடமுள்ள மரியாதையால் பசுவதை செய்வதை விட்டுவிடுவார்கள் என்று ஹிந்துக்கள் நம்ப வேண்டும்.

6. மசூதிகளின் முன் சங்கீதம் வாசிப்பதையோ ஆரத்தி, எடுப்பதையோ ஹிந்துக்களைப் பலவந்தப்படுத்துவதன் மூலம் நிறுத்திவிட முடியும் என்று முஸ்லிம்களும் வீண் எண்ணம் கொள்ளக்கூடாது. ஹிந்துக்

களோடு நட்புரிமை கொண்டு, தங்களுடைய உணர்ச்சிகளை ஹிந்துக்கள் மதித்து நடப்பார்கள் என்று முஸ்லிம்களும் நம்ப வேண்டும்.

7. பிரதிநிதித்துவ சபைகளுக்கு அனுப்பப்படும் நபர்களின் தொகை சம்பந்தமாக ஹிந்துக்கள், முஸ்லிம்களும் மற்ற சிறுபான்மையோரும் அவரவர் உசிதம் போல் செய்துகொள்ளும்படி விட்டுவிட வேண்டும். அத்துடன், ஒரு பொது மனிதர் காட்டும் முடிவுக்கு முழு மனத்துடன் ஆதரவு கொடுத்து அதன்படி செய்து வர வேண்டும். என்னுடைய இஷ்டப்படிவிட்டால், நான் ஹக்கீம் சாஹிப் அஜ்மல்கானைப் பொது மனிதராக இருக்கும்படி கேட்பேன். முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்தவர், பார்சிகள் முதலியவர்களைத் தமது இஷ்டப்படி கலந்துகொள்ள அவருக்கு முழுச் சுதந்திரம் கொடுத்துவிடுவேன்.

8. தேசீய அரசாங்க உத்தியோகத்திற்குத் தகுதியுடையவர்கள்தான் நியமிக்கப்படுவார்கள். இதைப் பல சமூகங்களின் பிரதிநிதிகளடங்கிய பரீட்சை சபை நிர்வகிக்கும்.

9. சுத்தி அல்லது தப்ளிக்கிற்கு யாதொரு இடையூறும் விளைவிக்கக்கூடாது. ஆனல், இரண்டில் எதையும் நடத்துகிறவர்கள் உயரிய ஒழுக்கமுள்ளவர்களாக இருந்து, நேர்மையாக நடத்தி வர வேண்டும். பிற மதங்களைத் தூஷிக்கக்கூடாது. ரகசியப் பிரசாரம் செய்தும், வெகுமதிகளைக் கொடுத்தும் மதமாற்றம் செய்வதை விலக்க வேண்டும்.

10. இழிவான பிரசுரம் எதையும், முக்கியமாக பஞ்சாப் பத்திரிகைகள் சிலவற்றில் பிரசுரமாவது போன்றவற்றைத் தடை செய்யத் தகுதியுள்ள பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும்.

11. ஹிந்துக்கள் தம் கோழைத்தனத்தை உதறித் தள்ளினலொழிய ஒன்றும் நடவாது. அவர்களின் உரிமைகள்தான் மிக அதிகம். ஆகவே, மிக அதிகமான தியாகத்திற்கு அவர்கள்தான் தயாராக வேண்டும்.

இந்தப் பரிகாரம் எவ்வாறு அமலுக்கு வரும்? பசுவைக் காப்பதற்காக முஸ்லிம் சகோதரரைத் தூண்டுவதை விட்டுவிட்டு, பசுவிற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வது தான் சிறந்த வழி என்பதை ஹிந்துப் பித்தருக்கு யார் அறிவுறுத்துவது? மசூதியின் முன்னர் கொட்டு முழக்கியதற்காகத் தனது ஹிந்துச் சகோதரனின் மண்டையை உடைப்பது மதமல்ல; நாஸ்திகம் என்பதை முஸ்லிம் மதவெறியருக்கு யார் அறிவுறுத்துவது? பிரதிநிதித்துவ சபைகளில் சிறுபான்மையோர் அதிகம் பேர்

இருப்பதனுல் தனக்கு நஷ்டம் வராது என்பதை ஹிந்துவுக்கு விளங்கச் செய்வது யார்? இக்கேள்விகள் நியாயமானவை. இப் பரிகாரத்தை அமல் நடத்துவதில் உள்ள இடைஞ்சல்களே, இவை எடுத்துக்காட்டுகின்றன.

ஆனுல், இதுதான் உண்மையான ஒரே பரிகாரமானுல் எல்லா இடையூறுகளேயும் சமாளித்தே ஆகவேண்டும். பார்க்கப் போனுல் இந்த இடையூறுகள் எல்லாம் வெறும் தோற்றமே. பரிகாரத்தில் பூரண நம்பிக்கையுள்ள ஒரு சில ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மாத்திரம் இருந்து விட்டால், மற்றவையெல்லாம் எளிதாகிவிடும். சில ஹிந்துக்கள் மட்டுமோ, அல்லது சில முஸ்லிம்கள் மட்டுமோதான் அந்த நம்பிக்கையுடன் இருக்கிருர்கள் என்று வைத்துக்கொண்டாலும், அப்பொழுதும் பரிகாரம் சுலபமாகவே இருக்கும். ஒன்றுபட்ட மனத்தினராய் அவர்கள் உழைக்க வேண்டும். மற்றவை தாமாகப் பின்தொடரும். ஒரு கட்சி மனம் மாறினுல் மட்டுமே போதும். ஏனெனில், பரிகாரத்தில் பேரம் செய்வதற்கு இடம் இல்லே. உதாரணமாக, ஹிந்துக்கள் பசு சம்பந்தமாக முஸ்லிம்களேத் தொந்தரவு செய்வதை, எவ்வித ஆதரவையும் எதிர்பாராமல் விட்டொழிக்க வேண்டும். பிரதிநிதித்துவத்தைப் பற்றி முஸ்லிம்கள் என்ன கேட்டாலும் பிரதிப் பலனே எதிர்பாராது விட்டுக் கொடுக்க வேண்டும். கொட்டு முழக்கத்தையோ, ஆரத்தியையோ பலவந்தத்தால் முஸ்லிம்கள் நிறுத்த முயன்ருல், ஹிந்துக்கள் திருப்பியடிக்காமல் கடைசி நபர் வரை செத்தாலும் பரவாயில்லே என்றிருக்க வேண்டுமேயன்றி, அதை நிறுத்தக்கூடாது. பிறகு, முஸ்லிம்கள் நாணித் தலே குனிந்து ஒரு நொடியில் வழிக்கு வந்து சரியானதையே செய்யப் பழகிவிடுவார்கள். விரும்பினுல், முஸ்லிம்களும் இம் மாதிரியே செய்து ஹிந்துக்கள் நாணத்தால் வழிக்கு வந்து சரியானதையே செய்யும்படி தூண்டலாம். இதில் நம்பிக்கை கொள்ளத்தக்க தீரம் வேண்டும்.

ஆனுல், கிரியாம்சையில் இப்படியிராது. இதற்கு மாருக ஊழியர்கள் தங்களுக்குத் தாங்களே உண்மையுள்ளவர்களாகி விட்ட அதே நிமிஷத்திலே, இரு தரப்பினரும் ஒரே சமயத்தில் சரியானதையே செய்வார்கள். துரதிருஷ்டவசமாக, ஊழியர்கள் இப்படியாகிவிடவில்லே. இவர்கள் பெரும்பாலும் ஆத்திரத்திற்கும் தப்பெண்ணத்திற்கும் இலக்காகி விடுகிருர்கள். ஒவ்வொருவரும் தமது மதத்தினரின் குறைகளே மறைக்கப் பார்க்கிருர்கள். இப்படியே சந்தேகமும் அவநம்பிக்கையும் சுற்றிச் சுற்றி விபரீதமாக வளருகின்றன.

அரசாங்கத்தினர் இப்பிளவுகளே ஆதரித்து தூபம் போடுவதாக என்னிடம் வந்து கூறுகிருர்கள். நான் அதை நம்ப விரும்பவில்லே. அவர்கள் இப்படிச் செய்கிருர்கள் என்று வைத்துக்கொண்டாலும், நாம் உண்மையுடனும் நம்பிக்கையுடனும் நடந்துகொள்ளுவதன் மூலம், அவர்களின் முயற்சியைப் பலனற்றதாக்கிவிடலாம் என்பது நிச்சயம்.

—'எங் இந்தியா' – 5—6—1924

## 29

# கவலையைக் கொடுக்கும் பண்டிகை

எக்காலத்திலும் பக்ரீத் பண்டிகை நாளில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கவலைதான் இருந்து வருகிறது. ஒருவருக்கொருவர் மரியாதையும் சகிப்புத் தன்மையும் இருந்தால், கவலைக்கு இடம் இராது. முஸ்லிம்கள் மிருக பலியில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆதலால், பசுக்களையும் பலியிடுகின்றனர். இதில் ஹிந்துக்கள் ஏன் தலையிட வேண்டும்? இதைப் போலவே, முஸ்லிம்கள் ஏன் ஹிந்துக்களுக்குக் கோபமூட்டுகிற வழியில் பசுவைப் பலி கொடுக்கவேண்டும்? 1921-இல் ஹிந்துக்களின் உணர்ச்சிகளைப்புண்படுத்த விரும்பாமல்,முஸ்லிம்கள் தாங்களாக முன்வந்து நூற்றுக்கணக்கான பசுக்களைக் காப்பாற்றினார்கள். அதே போல் ஏன் மறுபடியும் இன்று அவர்கள் செய்யக்கூடாது? அப்பண்டிகை நாளில் முஸ்லிம்கள் ஹிந்துக்களிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். முஸ்லிம்கள் தங்களுக்கு ஒவ்வாத விக்கிரக ஆராதனைக்கு மரியாதை காட்ட வேண்டுமென ஹிந்துக்கள் விரும்புவதைப் போல், ஹிந்துக்களும் முஸ்லிம்களுடைய சடங்குகளையும் ஆகாரங்களையும் தங்களுடைய உணர்ச்சிகளுக்கு மாறாயிருப்பினும் கௌரவிக்க வேண்டும். அண்டை வீட்டுக்காரரின் செயலுக்காக அல்ல, நமது சொந்தச் செயல்களுக்குத்தான் கடவுள் நம்மில் ஒவ்வொருவரையும் பொறுப்பாளியாக்குவார்.

## 30

# சமூக ஒற்றுமை ஒரு மாயாஜாலமா?

“மாடர்ன் ரிவ்யூ” பத்திரிகையின் இந்த மாத இதழில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றிய குறிப்பு ஒன்று வெளியாகியிருக்கிறது. இதற்குப் பதில் கூறியாக வேண்டும். திறமை மிக்க ஆசிரியர் அதற்கு “மாயாஜாலம்”என்ற தலைப்புக் கொடுத்திருக்கிறார். ஒற்றுமை என்பது சொல்லளவில்தான் என்ற முடிவுக்கும் வருகிறார். எனது அபிப்பிராயத்தில் இது மாயாஜாலம் இல்லை என்பது மாத்திரமல்ல, விரைவாக அது நிலைத்து நிற்கும் உண்மையாகிக்கொண்டும் வருகிறது. இது ஒரு சிறு செடி போன்றது. நாம் அதை மிகவும் மிருதுவாகக் கையாள வேண்டும் என்பதை ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளேன். இதில் மூடு மந்திரமோ, பாசாங்கோ எதுவுமில்லை. இதை, இரு தரப்பினரும் பொதுவாக உணர்ந்துகொண்டால் போதுமானது.

துரதிருஷ்டவசமாக, வகுப்புவாத உணர்ச்சி மேலோங்கி யிருப்பது இன்றும் உண்மைதான். பரஸ்பர அவநம்பிக்கை இன்னும் இருக்கிறது. பழைய நினைவுகள் அப்படியே ஞாபகத்தில் இருக்கின்றன. தேர்தல்களில் தகுதியைக் கவனியாது மதத்தைப் பற்றி இன்றும் நினைக்கின்றனர் என்பது உண்மைதான். இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளுவது, ஒற்றுமை உண்டாவதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளு வதாகும். இரு பாலாரும் இதை உணர்ந்து, இவையெல்லாம் இருப்பினும் ஒற்றுமையை உண்டுபண்ணுவது என யோக்கிய மான முறையில் முயற்சி செய்வதை, மாயாஜாலம் என்று குறிப் பிடுவது நியாயமானதல்ல.

கிலாபத் சங்கங்கள் பசு வதைக்கு விரோதமாகச் செய்யும் பிரசாரம் பயனற்றதென்றும், அதற்கு முஸ்லிம்கள் செவி சாய்ப்ப தில்லை என்றும் சொல்லுவது சரியல்ல. முதலில் முஸ்லிம்களான கிலாபத் ஊழியர்களே பசு வதையைத் தவிர்க்க உழைப்பது உற்சாகமான காட்சியமல்லவா? இரண்டாவதாக, இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இவர்களின் வேண்டுகோள் ஆச்சரிய கரமாக வெற்றி பெற்று வருகிறதென ஆசிரியருக்கு நான் உறுதி கூறுகிறேன். 'முஸ்லிம் ஊழியர்கள்' பசுவைப் பாதுகாக்கும் பொறுப்பை முற்றிலும் தாங்களே ஏற்றுக் கொண்டிருப்பது ஒரு சிறிய விஷயமா? பம்பாயைச் சேர்ந்த ஸ்ரீ சோடானியும், ஸ்ரீ காத்ரியும் நூற்றுக்கணக்கான பசுக்களைத் தம் மதத்தினரிட மிருந்து காத்து, நன்றி செலுத்தும் ஹிந்துக்களிடம் கொடுத்தது மனத்தை உருக்கும் கண்கொள்ளாக் காட்சியல்லவா?

மௌலானா முகமது அலி என் விஷயத்திலும், நான் அவர் விஷயத்திலும் தலையிடுவதில்லை என்பது உண்மையே. எனினும், மனம் விட்டுப் பேசுவதில் எங்களை யாரும் மிஞ்ச முடியாது. ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை, விளையாடும் சீட்டுகளால் ஆன பொம்மை வீடு போன்றதென ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது கொடூரமானதாகும். எங்களைப் பொறுத்த மட்டில் அது அப்படி அல்ல; அது உறுதியான உண்மையே. உயிரைக் கொடுத்தேனும் நாங்கள் இந்த ஒற்றுமையைக் காப்போம். நாங்கள் சேர்ந்து பிரயாணம் செய்தபோது ஓரிடத் திலாவது இதில் எவ்விதத் தகராறும் வரவில்லை; எவ்வித மனத் தாங்கலும் ஏற்பட்டதில்லை. ஆசிரியர் கூறியுள்ள பின்வரும் வாக்கியம்தான் எங்கள் மனத்தை மிகவும் புண்படுத்துகிறது: "அவர்களுடைய பிரசங்கங்களை வரி பிளந்து அர்த்தம் பண்ணினால், ஒருவருக்கு தூரத்திலுள்ள துருக்கியின் கிலாபத் பிரச்னைதான் பிரதானம் என்பதும், மற்றவருக்கு இந்தியாவிற்கு சுயராஜ்யம் வாங்குவதுதான் முக்கியம் என்பதும் தெளிவாகத் தெரிவதை அறிந்துகொள்ளுவது கஷ்டமல்ல." இருவருக்கும் கிலாபத்துதான் முக்கியம் என்பதைச் சொல்ல நான் விரும்பு

கின்றேன். முகமது அலிக்கு அதுதான் மதம். நானோ, கிலாபத்திற்காக என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்வதன்மூலம் முஸ்லிமின் கத்தியிலிருந்து பசுவுக்குப் பாதுகாப்பு ஏற்படும்படி செய்கிறேன். பசுவைப் பாதுகாப்பதுதான் என் மதம். இருவரும் சுயராஜ்யத்தையும் இதைப் போலவே முக்கியமானதாகக் கருதுகின்றோம். சுயராஜ்யத்தின் மூலம்தான் எங்களது மதங்களைக் காக்கமுடியும். இது தாழ்வான ஒரு லட்சியமாகத் தோன்றலாம். ஆனால், இதில் ஒளிவு மறைவு ஒன்றுமில்லை.

இந்தியாவின் சக்தியைக்கொண்டு கிலாபத்தைப் பெறுவது, எனக்கு இந்தியா சுதந்திரம் பெறுவதேயாகும். மதத்திற்கு அடிப்படை அன்புதான். அது போலவே அன்புதான் எங்கள் நட்பிற்கும் ஆதாரம். அன்பின்மூலம் நான் முஸ்லிம் நட்பைப் பெற விழைகின்றேன். அன்பு ஒரு சமூகத்தினிடத்தில் மட்டுமாவது நிலைத்திருக்குமானால், ஒற்றுமை தேசீய வாழ்க்கையில் வந்தேயாகும். வங்காள முஸ்லிம்களுக்குப் புரியாத கடினமான உருது பாஷையில் மௌலானா முகமது அலி பேசுகிறார் என்பது, அவருக்கு அநீதி செய்வதாகும். தமது நடையில் எளிமையைப் புகுத்தத் தம்மால் இயன்ற வரையில் அவர் முயற்சி செய்கிறார் என்பது எனக்குத் தெரியும்.

துரதிருஷ்டவசமாக, இன்னும் ஒருவரைக் கண்டு ஒருவர் பயப்படும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். எனவே, இவர்கள் அந்நிய ஆட்சி அவசியமென்று கருதுகின்றனர். நமது லட்சியத்தை அடைவதற்குத் தடையும் இதேதான். இரு தரப்பினருக்கும் நடக்கும் தங்கு தடையில்லாத சண்டை, அந்நிய ஆதிக்கத்தைவிடக் குறைந்த தீமை என்பதை நாம் இன்னும் தெளிவாகத் தெரிந்துகொள்ளவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் குறுக்கே இருப்பதால்தான் பரஸ்பரம் நாம் சண்டையிட்டுக்கொள்ளாதிருக்கின்றோம் என்பது உண்மையானால், நாம் சண்டையிட்டுக்கொள்ள, கூடிய சீக்கிரம் சுதந்திரம் கொடுக்க வேண்டும். இது நமது நாட்டிற்கும், மதங்களுக்கும், நமது ஆண்மைக்கும் நன்மை பயக்கும். சண்டையிட்டுச் சண்டையிட்டு நாம் புத்தி சுவாதீனமடைந்தால், அது உலகில் ஒரு புதிய நிகழ்ச்சியாக இராது.

ஆங்கிலேயர்கள் அமைதியாக வாழத் தொடங்குமுன், இருபத்தொரு வருடங்கள் உள்நாட்டுக் கலகங்களில் உழன்றுகொண்டிருந்தனர். சமீப காலத்தில் கண்டிராத கோரத்துடன் பிரெஞ்சுக்காரர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டனர். அமெரிக்கர்களும் தங்களுடைய சாம்ராஜ்ய ஸ்தாபனத்திற்கு முன் அவ்விதமே சண்டையிட்டனர். நமக்குள் சண்டை வந்துவிடுமே என்ற பயத்தால், நாம் நமது ஆண்மையின்மையை ஆலிங்கனம் செய்துகொண்டிருக்க வேண்டியதில்லை. திறமைசாலியான ஆசிரியர், நாம் விரும்புவது போலவே ஒற்றுமையை விரும்புகின்றார். 'அடிப்படையிலிருந்து மாறுதலும் புதிய அமைப்பும்

உண்டாகவேண்டும்' என்று இவர் குறிப்பிடுகிருர். ஆனல், உருவான வழிகளை இங்கே இவர் காட்டியிருந்தால் நன்ருக இருந்திருக்கும். எனினும், பரிகார முறைகளை வாசகர்கள் யூகிக்கும்படி இவர் விட்டுவிட்டார். ஆரம்ப முறைகளாக கலப்பு மணம், சமபந்தி போஜனம் முதலியவற்றை இவர் விரும்பலாம். சுயராஜ்யம் வருவதற்கு முன் இவை நடந்தேற வேண்டிய அடிப்படை மாறுதல்கள் என்ருல், நாம் இன்னும் நூருண்டு களாவது காத்திருக்க நேரும் என்று அஞ்சுகிறேன். இது, ஹிந்துக்கள் தங்கள் மதத்தைத் துறக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவது போலாகும். இது தவறு என்று நான் கூறவில்லை. ஆனல், நடக்கக்கூடிய அரசியல் காரியமாகாது என்றுதான் சொல்லுகிறேன். இந்த மாறுதல் வரும்பொழுது— அது எப்போதாவது வரக்கூடுமானல்—அது ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையாக இருக்காது. பயபக்தியுள்ள ஒரு முஸ்லிமும், பயபக்தியுள்ள ஒரு ஹிந்துவும் தங்கள் மதக் கோட்பாடுகளைப் பின்பற்றிக்கொண்டே ஒற்றுமையுடன் இருக்கவேண்டும் என்பது தான் இப்போதைய இயக்கத்தின் நோக்கமாகும். எனவே, கூட்டங்களில் பேசும்பொழுது ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு என்னையும் அலி சகோதரர்களையுமே நான் அடிக்கடி உதாரண மாகக் காட்டியுள்ளேன். எங்கள் எங்கள் சொந்த மதத்தையே நாங்கள் பின்பற்றுகிருேம். அலி சகோதரர்களை நான் கௌரவிக் கிறேன். இருந்தாலும், என் மகளை அவர்களில் ஒருவருடைய மக னுக்குக் கொடுக்க நான் இசையேன். அவர்களும் அம்மாதிரியே. என் மகனுக்கு, அவன் எவ்வளவு தகுதியுடையவனுக இருந் தாலும், அவர்களின் மகளை மணம் செய்துகொள்ளும் அளவுக்குச் சீர்திருந்தியவனுனலும், அவர்கள் தங்கள் மகளைக் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் பரிமாறும் மாமிச உணவை நான் சாப்பிடுவதில்லை. இந்த மூடபக்திக்கு, எனது தன்னல மறுப்பை மூடபக்தி என்று சொல்லக்கூடுமானல், அவர்கள் மரியாதை காட்டுகிருர்கள். இருப்பினும், எங்கள் மூவரைப்போல் உள்ளம் ஒன்றியவர்களைக் காண்பது அரிது. இந்த ஒற்றுமை வெறும் மாயாஜாலம் அல்ல என்பதை வாசகர்களுக்கு வலியுறுத்த விரும்புகின்றேன். மற்றவர்களின் எண்ணங்களையும், பழக்க வழக்கங்களையும் கௌரவிக்கும் தாராள சிந்தையை அடிப்படை யாகக் கொண்ட நிலைபெற்ற நட்பு இது.

பிரிட்டிஷ்காரர்கள் அளிக்கும் பாதுகாப்பு வாபசாகிவிட் டால், அலி சகோதரர்களோ அல்லது அவர்களைச் சேர்ந்தவர் களோ என் சுதந்திரத்தைத் தடை செய்வார்கள் என்ருே, அல்லது எனது மதத்தைத் தாக்குவார்கள் என்ருே நான் அஞ்ச வில்லை. நான் கடவுளுக்குப் பயந்தவன். அவனுக்குட்பட்ட எவ் வுயிருக்கும் ஆபத்தில்லை. இது அவன் ஆணை. இதை நான் முதலில் நம்புகிறேன். இரண்டாவதாக, அலி சகோதரர்கள், அவர்களது நண்பர்கள் முதலியோரின் கண்ணியமான நடத்தை யில் எனக்கு நம்பிக்கை உண்டு. இவர்கள் ஒவ்வொருவரும்

உடல் வலியில் என் போன்ற பன்னிருவருக்கு ஈடு சொல்லக் கூடியவர்களேயாயினும், இந்த ஒரு உதாரணத்திலிருந்து இந்தியா முழுமைக்கும் நான் பொது விதி காட்டியுள்ளேன். பரஸ்பரம் சகிப்புத் தன்மையும், சுயநம்பிக்கையும் மனிதனது உயர் தன்மையில் நம்பிக்கையும் இருந்தால், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை நிச்சயமாகச் சாத்தியமானதே.

—'எங் இந்தியா' - 20—10—1921

# 31

# வீண் பிரமை

வங்காள ஜமீன்தார் ஒருவர், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை, சுயராஜ்யம் இவைபற்றி நீண்ட கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். கடிதம் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. பிரசுரத்திற்கும் அதிக நீளமானதாக இருக்கிறது. இருப்பினும், அதிலிருந்து மாதிரிக்காக ஒரு வாக்கியத்தைக் கீழே தருகின்றேன் :

"ஐந்நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பகை இருந்து வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சி வந்த பிறகு இவர்கள் தங்களுடைய நெடுநாட் பகைமையை மறக்க வேண்டியதாயிற்று. இப்போது பகைமையின் கசப்பு மறந்துவிட்டது. ஆனால், இரு சமூகங்களுக்கும் இயல்பிலேயே உள்ள வேற்றுமை இன்னும் இருந்தே வருகிறது. தற்போதுள்ள நட்பிற்குக் காரணம் நவீன ஹிந்து மதத்தின் தாராள நோக்கம் அல்ல, பிரிட்டிஷாரின் ஆட்சி முறைதான் என்று நான் நம்புகிறேன்."

வீண் பிரமையே இந்த அபிப்பிராயத்திற்குக் காரணமாகும். முஸ்லிம்களின் ஆட்சியில் இந்த இரு சமூகத்தினரும் சமாதானமாகவே வாழ்ந்தார்கள். இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னமேயே பலர் இஸ்லாமைத் தழுவினர் என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்படாதிருப்பினும், இந்தியாவில் கிறிஸ்தவர்கள் இருந்திருப்பார்கள். இதைப் போலவே முஸ்லிம் அரசு இல்லாதிருப்பினும், இந்தியாவில் இஸ்லாமியர்கள் இருந்திருப்பார்கள். பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன் ஹிந்துக்களும் முகமதியரும் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டே இருந்தனர் என்பதை நிரூபிக்கச் சான்று எதுவும் கிடையாது. பிரிட்டிஷாரின் 'பிரித்தாளும்' கொள்கை தான் நமக்குள்ள வேற்றுமைகளை அதிகமாக்கிவிட்டது என்பதே எனது நம்பிக்கை. பிரிட்டிஷாரின் கொள்கை அப்படி இருப்பினும், நாம் ஒன்றுபடவேண்டும் என்பதை உணரும் வரையில் பிளவு இருந்தே தீரும். பதவிக்கும் அதிகாரத்திற்கும் நாம் போட்டி போடுவதை நிறுத்தும்வரை ஒன்று சேர வேண்டுமென்கிற எண்ணம் உண்டாகாது, உண்டாக முடியாது. ஹிந்துக்களே இந்த நற்காரியத்தைை ஆரம்பிக்கவேண்டும்.

— 'எங் இந்தியா' - 26—2—1925

No. ____
TAMIL ... EGMORE, MADRAS-600 008

பகுதி மூன்று

# மாப்பிள்ளைக் கலகம்

## 1

## கலகத்திற்குக் காரணம்

[1921 ஆகஸ்டு மாதம் 19-ஆம் தேதி மலையாளத்தில் மாப்பிள்ளைமார் (முஸ்லிம்கள்) கலகம் பீறிட்டது. அதன் மூல காரணம் என்னவெனில், திருரங்காடி என்ற இடத்தில் ஜில்லா மாஜிஸ்திரேட் சில கிலாபத் ஊழியர்களைக் கைது செய்ய முயற்சித்தார். அதிகாரிகளின் இரக்கமற்ற அடக்கு முறைகளே தங்களை ஆத்திரம் கொள்ளும்படி செய்திருப்பதாக மாப்பிள்ளைகள் கூறினர். அவர்கள், கிலாபத் ஊழியர்களை அதிகாரிகள் கைது செய்வதைத் தடுத்ததுடன் அரசாங்கத்தை எதிர்த்துப் பகிரங்கமாகக் கலகம் செய்யவும் முற்பட்டார்கள். முதலில் அரசாங்கத்திற்கு விரோதமாக மூண்ட கலகம், பிறகு ஹிந்துக்களுக்கு விரோதமாக மாறியது.

அதன் விளைவாக ஹிந்துக்களின் வீடுகள் கொள்ளையிடப்பட்டன; ஹிந்துக்கள் பலாத்காரமாக இஸ்லாம் மதத்திற்கு மாற்றப்பட்டனர். மற்றும் மாப்பிள்ளைகளின் அறியாமையும் வகுப்பு வெறியும் காரணமாக ஹிந்துக்கள் இலக்காக நேர்ந்த கொடுமைகளை வருணிக்க முடியாது. பிரிட்டிஷ் ஆட்சி முடிவடைந்து கிலாபத் ஆட்சி ஏற்பட்டுவிட்டதாகவே மாப்பிள்ளைமார் கருதினர். அந்த அட்டூழியங்களை முஸ்லிம் பொது மக்கள் நம்ப விரும்பவில்லை. முஸ்லிம் தலைவர்களில் சிலரும் அக்கொடுமைகளை மழுப்ப முற்பட்டனர். அத்தகைய தலைவர்களில் மௌலானா ஹஸரத் மோஹானியும் ஒருவர். மாப்பிள்ளைகள் தங்கள் மதத்திற்காகப் போராடுவதாக அவர்கள் கூறினர். அந்தக் கூற்றை, மலையாளத்தில் உள்ள காங்கிரஸ் ஊழியர்கள் கண்டிக்க முற்பட்டது இயல்பேயாகும்.

இவ்விஷயமாக, 1922 ஜனவரி 26-ஆம் தேதி 'எங் இந்தியா'வில் காந்திஜி, 'ஹிந்துக்களும் மாப்பிள்ளைகளும்' என்ற தலைப்பில் எழுதியபோது, ஹிந்துக்களுக்குத் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார். மிருக பலத்தை எதிர்த்து நிற்கும் மன உறுதியை ஹிந்துக்கள் அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும் என்றும், அவசியமாயின் அதை எதிர்த்து நின்று உயிரையும் கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். காந்திஜி எழுதிய மற்றொரு தலையங்கம் ஒன்றில், மாப்பிள்ளைகளின் பலாத்காரத்தை வன்மையாகக் கண்டித்ததுடன், பலாத்காரம் வெற்றிக்கு ஒரு தடையாகும் என்றும் எடுத்துக் காட்டினார்.

மாப்பிள்ளைகளைச் சமாதானப்படுத்தி அங்கே அமைதியை நிலைநிறுத்துவதற்காக செப்டம்பர் மாதம் காந்திஜி, மௌலானா முகமது அலியுடன் மலை

யாளத்திற்குப் புறப்பட்டார். ஆனல், வழியில் வால்டேர் ஸ்டேஷனில் அதிகாரிகள் முகமது அலியைக் கைது செய்துவிட்டார்கள். அப்போது காந்திஜி கூறியதாவது : "மௌலானு முகமது அலியைக் கைது செய்ததன் மூலம் அரசாங்கம் கிலாபத்தையே கைது செய்துவிட்டது. ஏனெனில், அலி சகோதரர்கள் கிலாபத்தின் மிக்க உண்மையான பிரதிநிதிகள் ஆவர். அந்தச் சகோதரர்களின் தைரியம், நம்பிக்கை, பயமின்மை, கண்காணிப்பு, சலியா உழைப்பு முதலியவற்றை நாம் பின்பற்றி நடப்போமாக."

மாப்பிள்ளைக் கலக சம்பந்தமான நிகழ்ச்சிகளைப் பற்றிக் காந்திஜி அப்போது எழுதிய கட்டுரைகளே இங்கே தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன.]

நான் இப்பத்திரிகையில் மாப்பிள்ளைக் கலகத்தைப் பற்றிப் போதிய அளவு எழுதவில்லை என்று கண்டித்து ஸ்காட்லந்திலிருந்து ஒருவர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். நான் எழுதாததனல், இங்கிலாந்தில் இந்தியாவைப் பற்றிப் படித்துத் தெரிந்து கொள்ளுகிறவர்கள், இந்தியாவில் இஸ்லாமிய ராஜ்யம் ஏற்பட்டிருக்கிறதென்று நம்ப வேண்டியிருப்பதாக இவர் சொல்லுகிறார். இதில் உண்மை இல்லாமலில்லை. ஆனல், நான் கடமையில் தவறவில்லை; வெறும் திக்கற்றவனுயிருக்கிறேன். கள்ளிக்கோட்டை சென்று நிலைமையை உள்ளது உள்ளபடி அறிய விரும்பினேன். அரசாங்கம் அதற்கு இடமளிக்கவில்லை. பிரிட்டிஷ் சிப்பாய்கள் தான் இந்தியாவில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்பதை மறுமுறையும் காட்டவேண்டுமென்பது அவர்களுடைய விருப்பம்! ஒத்துழையாமைவாதிகள் அமைதியாக நிலைமையைச் சமாளிப்பதை, அந்த இடத்திலிருக்கும் அதிகாரிகள் விரும்பவில்லை என்பதைக் குறித்து வருந்துகிறேன். என்னை அந்த இடத்திற்குப் போக வேண்டாம் என்று அரசாங்கம் கட்டளையிட்டதை அலட்சியம் செய்து நான் அப்போது அரசாங்கத்துடன் போரிட முடியவில்லை.

அந்த ஸ்தலத்திலுள்ள மனிதர்களைப் பற்றி உயர்வாகவே நினைக்க விரும்புகிறேன். மனிதர்களைப் பற்றிக் கேவலமாக நினைப்பது எனது இயல்புக்கு மாறானது. தனது லட்சியத்தை அடைய எதையும் செய்யும் அதிகார வர்க்கத்தின் இழிந்த தன்மைக்குச் சான்றுகள் என்னிடம் ஏராளமாக இருக்கின்றன. சம்பாரண் போகு முன்னர், அங்குள்ள விவசாயிகளுக்குச் செய்யும் கொடுமைகளைப் பற்றிக் கேட்ட விவரங்களை நான் சிறிதும் நம்பவில்லை; ஆனல், அவை அப்படியே உண்மை. அங்கே போனபொழுது அவற்றைவிடக் கேவலமான நிலைமையைக் கண்டேன். ஜாலியன் வாலாத் தோட்டத்தில் நிரபராதிகள் எச்சரிக்கையில்லாமல் துடிதுடிக்கச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதையும் நான் நம்ப மறுத்தேன். மனிதர்களை வயிற்ருல்ஊர்ந்து செல்லும்படி செய்தார்கள் என்பதையும் நம்பவில்லை. ஆயினும் கேள்விப்பட்டதைவிட அதிகக் கொடூரங்கள் நிகழ்ந்திருந்தன என்பதை, பஞ்சாபிற்குப் போனபொழுது கண்டேன். இவைகளெல்லாம் அமைதியை நிலை

நாட்டுவதற்காகச் செய்யப்பட்டன என்று கூறப்பட்டது. உண்மையில் போலிக் கௌரவத்தையும், போலி நடைமுறையையும், இயற்கைக்கு மாறான வியாபார முறையையும் நிலைநாட்டுவதற்கென்று செய்யப்பட்டன. சம்பாரணில் தைரியமுள்ள கவர்னர், ஏராளமான எதிர்ப்பையும் புறக்கணித்து நியாயம் வழங்கினார் என்பது உண்மைதான். எனினும் இது ஒரு விதிவிலக்கேயாகும். அந்த விலக்கிற்கும் சில விசேஷ காரணங்கள் இருந்தன. ஆதலால், மாப்பிள்ளைக் கலகம், தனது அக்கிரமங்களின் பளுவையே தாங்காது தகர்ந்து வரும் ஓர் ஆட்சி முறையைச் சீர் செய்ய வந்த மறைமுகமான ஒரு வரப்பிரசாதம் என்றே நான் உணருகின்றேன்.

மாப்பிள்ளைக் கலகம் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஒரு பெரும் சோதனை. ஹிந்துக்கள் பொறுமையுடன் இன்னும் நட்புரிமை காட்டுவார்களா? முஸ்லிம்கள் மாப்பிள்ளைகளின் நடத்தையை உள்ளூர ஆதரிப்பார்களா? காலம்தான் உண்மையை வெளிப்படுத்தும். தவிர்க்க முடியாததை, ஒரு தத்துவமாக வார்த்தையளவில் சொல்லுவது ஹிந்துக்களின் நட்பிற்கு அறிகுறியாகாது. ஹிந்துக்கள், எத்தகைய வெறி பிடித்த கிளர்ச்சிகள் தோன்றினாலும், தங்களின் தைரியத்தினாலும் உறுதியான நம்பிக்கையினாலும் தங்களுடைய மதத்தைக் காப்பாற்ற முடியும் என்று நம்ப வேண்டும். மாப்பிள்ளைகளின் பைத்தியக்காரத்தனத்தை வெறும் சொல்லளவில் கண்டித்துவிடுவது முஸ்லிம்களின் நட்பிற்குச் சான்றாகாது. மாப்பிள்ளைகள் செய்த பலவந்த மதமாற்றம், கொள்ளை முதலியவைகளைக் கண்டு, முஸ்லிம்கள் இயல்பாக வெட்கித் தலை குனிய வேண்டும். அத்துடன், இனிமேல் மத வெறியர்களிடமிருந்துகூட, இத்தகைய செயல்கள் வராதிருக்கும்படி அமைதியாகவும் உறுதியாகவும் வேலை செய்ய வேண்டும். ஹிந்துக்கள் மொத்தத்தில் மாப்பிள்ளைகளின் செயல்களைச் சாந்தத்துடனேயே ஏற்றுக்கொண்டுள்ளனர். பண்புடைய முஸ்லிம்கள், உண்மையாகவே மாப்பிள்ளைகள் நபிநாயகத்தின் உபதேசங்களை இழிவுபடுத்தும் செயல்களைப் புரிந்ததற்காக வருத்தமடைகின்றனர்.

மாப்பிள்ளைக் கலகம் இன்னுமொரு பாடத்தைக் கற்பிக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் தற்காப்புக் கலையைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். எதிர்த்து நின்று பதிலுக்கு அடி கொடுக்க உடல்களுக்குப் பயிற்சியளிப்பதைவிட, மனம் எப்படித் தாக்குதலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத்தான் கற்பிக்க வேண்டும். இதுதான் முக்கியம். இதுவரை நாம் திக்கற்றவர்கள் என்றே நம் மனத்திற்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. தைரியம் உடம்பிற்குரிய குணமன்று; ஆன்மாவிற்குரிய குணம். வலிவுள்ள உடலில் கோழைகளையும், பலமற்ற உடம்பில் காண்பதற்கரிய தீரர்களையும் நான் கண்டுள்ளேன். ஸ்ரீமதி எமிலி ஹாப்ஹௌஸுக்கு, பாரிச வாத நோய்க்கு இலக்கான உடலாக இருந்தும்

அவர் உயரிய தீரத்தைக் காட்டினர். தீரர்களான போயர் தளகர்த்தர்களும் போயர் பெண்களும் உற்சாகம் குன்றிய காலத்தில், அதைத் தளரவிடாமல் ஊக்கமூட்டியவர் ஸ்ரீமதி எமிலி ஹாப்ஹௌஸ்தான்.

நம்மில் பலவீனர்களைக்கூட அபாயத்தை எதிர்த்து வெற்றி காணப் பழக்க வேண்டும். மாப்பிள்ளைகள் அறியாமையில் வாழ்ந்த மதவெறியர்கள்; ஹிந்துக்கள் கோழைகள். இஸ்லாமிய மந்திரத்தை உச்சரிக்கவும், தங்கள் குடுமியை வெட்டிக்கொள்ளவும், உடைகளை மாற்றவும் இவர்கள் இசைந்தனர். இதில் எது வெறுக்கத்தக்கது! என்னைத் தப்பர்த்தம் பண்ணிக்கொள்ளாதீர்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கொல்லாமல் உயிர்விடும் சாந்த வீரத்தைப் பயில வேண்டும் என்பதே என் விருப்பம். ஒருவனுக்கு இந்த வீரம் இல்லையேல், அவன் கொல்லவும் கொல்லப்படவுமாவது பயில வேண்டும். ஆபத்திலிருந்து கோழைத்தனமாகத் தப்ப முயலுதல் இழிவாகும். இப்படி முயலுகிறவன் தப்பினலும் மனத்தில் ஹிம்சையே செய்கிருன். தான் கொல்லப்படுவதற்கு அவனுக்குத் தைரியமில்லை; ஆதலால் அவன் ஓடுகிருன்.

மாப்பிள்ளைக் கலகம் கற்பிக்கும் மற்றும் ஒரு பாடமும் உண்டு. நம் நாட்டு மக்களில் எப்பகுதியினரையும் இருள் சூழ விட்டுவிட்டு, அவ்விருள் நம்மைத் தொடராது என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது. மாப்பிள்ளைமார்கள் தாராள மனப்பான்மையுடன் இஸ்லாமின் உண்மைகளையும் கற்று அமைதியான நற்குடிகளாக வாழ்வதில் நமது ஆங்கில எஜமானர்களுக்கு அக்கறையில்லை. நாமும் பல நூற்றுண்டுகளாக நமது அறியாச் சகோதரர்களைக் கவனிக்கவில்லை. எவனும் தான் பிழை ஏதும் செய்யாதிருக்கையில், தனக்கு ஊணுடையின்றியும் மனிதாபிமானமின்றியும் இருக்கக் கூடாதென்று வழிகாட்டக்கூடிய அன்பொழுக்கம் இல்லாமல்தான் நாமும் இருந்து வந்திருக்கிரேம். நாம் காலாகாலத்தில் விழித்தெழாவிட்டால், இம்மாதிரியே ஒவ்வொரு ஒடுக்கப்பட்ட சாதியும் நடந்துகொள்ளுவதை நாம் பார்ப்போம். இப்பொழுது ஏற்படுகிற விழிப்பு எல்லாப் பகுதியினரையும் பாதிக்கிறது. தீண்டத்தகாதவர்களையும், அரைக் காட்டுமிராண்டிகளெனச் சொல்லப்படுகின்றவர்களையும் கண்டு மனம் வருந்தி, அவர்களுக்குக் காலங் கடந்தேனும் நியாயம் வழங்கி நாம் பரிகாரம் தேடாவிட்டால், நாம் இழைக்கும் தீங்குகளைக் கண்டித்து அவர்களும் எதிர்க்கத் தொடங்குவார்கள்.

—'எங் இந்தியா' - 20—10—1921

# 2

# பொருத்தமான கேள்வி

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை மாப்பிள்ளைக் கலகம் எவ்வாறு பாதித்திருக்கிறதென்று ஒரு நண்பர் எழுதியதை இங்கே சாரமாகத் தருகிறேன்:

"ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில் திடமான நம்பிக்கையுள்ளவன் நான். ஆனால், இந்த மாப்பிள்ளைக் கலகம் என் மனத்தில் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. கிலாபத் வெற்றி முஸ்லிம்களுக்குப் பலம், இஸ்லாமிற்குப் பலமென்றால், மதமாற்ற முயற்சிக்குப் பலம் என்பதேயாகும். பல தடவைகளில் நாம் கத்திக்கும் இஸ்லாமிற்கும் இடையில் சிக்கிக்கொண்டு விழிக்கவில்லையா? மாப்பிள்ளைமார்களைப் போன்றவர்கள் அகிம்சையின் அழகைக் காண முடியுமா? தமது மதத்திற்காக இப்போது அகிம்சையைப் போற்றினாலும்; பின்னால் அவர்கள் மதத்தைப் பரப்பப் பலாத்காரத்தை உபயோகிக்காதிருப்பார்களா? ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இருப்பினும், எனது கேள்விகள் பொருத்தமானவையே என்று தங்களுக்குப் படவில்லையா?"

இதை எழுதியவர் நிதான புத்தியுடையவர். இத்தகையவர் மனத்தில் பட்டதற்காகவாவது இக்கேள்விகளைப் பொருத்தமானவை என்றே கூற வேண்டும். இருப்பினும், இது சம்பந்தமாகத் தப்பெண்ணம் இருக்கிறதென்றே நான் கருதுகிறேன். இஸ்லாம் பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால், கிலாபத்திற்கு நாம் ஆதரவு கொடுப்பது தவறு. மதமாற்றத்திற்காகப் பலாத்காரத்தை உபயோகப்படுத்துவதற்குக் குரானில் ஆதாரம் கிடையாது. அந்தப்புனிதமான புத்தகம், 'மதத்தில் பலவந்தம் கிடையாது' என்று தெளிவான பாஷையில் சொல்லுகிறது. நபியின் வாழ்க்கை முழுதுமே, மதத்தில் பலவந்தத்திற்கு ஒரு மறுப்பாகும். எனக்குத் தெரிந்தவரை எந்த முஸ்லிமும் பலாத்காரத்தை ஏற்றுக்கொண்டதில்லை. தன் பிரசாரத்திற்குப் பலாத்காரத்தை நம்பியிருந்தால், இஸ்லாம் உலக மதமாயிருக்க முடியாது.

இரண்டாவதாக, சரித்திரத்தைப் பாருங்கள். இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் பலாத்காரத்தைக் கொண்டு தம் மதத்தைப் பரப்பினார்கள் எனக் குற்றஞ்சாட்ட முடியாது. அத்துடன் மதமாற்றத்திற்குப் பலாத்காரம் உபயோகப்படுத்தப்பட்டபோது, பொறுப்பு வாய்ந்த முஸ்லிம்கள் அதைக் கண்டித்திருக்கிறார்கள்.

மூன்றாவதாக, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை என்பது, இரு தரப்பினருள் யாரும் எப்போதும் தவறு செய்யவேமாட்டார்கள் என்ற அடிப்படையில் உருவாக்கப்படவில்லை. இதற்கு மாறாக,

மாப்பிள்ளைகள் பலவந்தமாக மதமாற்றம் செய்வது போன்ற அதிர்ச்சிகளைத் தாங்கும் அளவுக்கு ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில் விசுவாசம் இருக்கவேண்டும். இச்சமயங்களில் கிளர்ச்சி செய்து, யாரையும் பொதுப்படையாகக் குற்றஞ்சாட்டிப் பழி வாங்கமுற்படாமல் தனி நபர்களின் செயல்களுக்குப் பொது மனிதர்களைக் கொண்டு பஞ்சாயத்து செய்து, நியாயம் வழங்கும்படி செய்ய வேண்டும் என்றே கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

நான்காவதாக, இந்திய சுதந்திரத்திற்கு அகிம்சையை ஒத்துக்கொண்டுள்ளோம். இதன் மூலம் ஹிந்து-முஸ்லிம் இணைப்பிற்கும் அகிம்சை கருவியாகிறது. மாப்பிள்ளைகள் நிச்சயமாகவே வரம்பை மீறிவிட்டார்கள். புதிய தத்துவங்களை இவர்கள் தெரிந்துகொள்ள முடியவில்லை. கிலாபத்தைப் பற்றி ஏதோ சிறிது தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; அகிம்சையைப் பற்றியோ கிஞ்சித்தும் அறியார்கள்.

ஐந்தாவதாக, சுயராஜ்யத்தின் கீழ் இந்தியாவிற்கு ஏதேனும் கேடு வருமென நாம் ஐயுற வேண்டியதில்லை. காங்கிரஸ், கிலாபத் ஊழியர்களை மாப்பிள்ளைமார்கள் இருந்த பக்கம் போக அனுமதித்திருந்தால், அவர்கள் இந்தக் கலகத்தை முளையிலேயே கிள்ளி விட்டிருப்பார்கள் என்பது நிச்சயம். இந்த நிலையிலுங்கூட, கிலாபத் ஊழியர்கள் சென்ற இடங்களிலெல்லாம் அமைதி நிலவியது. மாப்பிள்ளைகள் பைத்தியக்காரத்தனமாக நடந்த சமயம் நாம் அமைதியாசு இருந்தது, ஹிந்து-முஸ்லிம் ஐக்கியத்தின் உறுதியையே காட்டுகிறது. குடும்பத்துள் இருப்பது போல் நம்முள் எப்போதும் சண்டையிருக்கும்; ஆனால், பெரியவர்கள் இருந்து அமைதி நிலவச் செய்வார்கள்.

ஆறாவதாக, இம்மாதிரி பைத்தியக்காரச் செயல்களை எதிர்காலத்தில் தடுக்க ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையன்றி வேறென்ன சாதனம் இருக்கிறது? அடிமை வாழ்வு நிலைத்திருக்கச் செய்வதா? பரஸ்பரம் இயற்கை விரோதிகளாகக் கருதினால், நாம் இரு தரப்பினரும் நிரந்தரமான அந்நியர் ஆதிக்கத்திலிருந்து தப்ப வழி ஏதேனும் இருக்கிறதா? பலவந்தமான மதமாற்றத்தையோ அல்லது அதைவிட மோசமான நிலையையோவிட இப்போதுள்ள ஆதிக்கம் இழிவானதில்லையா? பலாத்காரத்தை எதிர்த்து நிலைபெற முடியாவிட்டால், அது என்ன ஹிந்து மதம்? இந்த நண்பர் கேட்ட கேள்விகளைப் போல முஸ்லிம்கள் கேட்க மாட்டார்களா? ஷாஹாபாத்தில் மூன்று வருடங்களுக்கு முன் ஹிந்துக்கள் கொலை செய்து கொள்ளையிட்டுச் சூறையாடினார்களே, அது போல் திரும்பவும் நடவாதா? எனவே, எத்தனை இடர்களிருந்தாலும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை வந்துதான் ஆக வேண்டும் என்பது தெளிவாகவில்லையா? ஹிந்துவோ, முஸ்லிமோ ஆவேசமடையும்பொழுது செய்வதற்கு இரு வழிகள் உள்ளன. எதிர்க்காமல் தீரத்துடன் உயிரை விடலாம்; இது தீமையை வளரவிடாமல் தடுக்கும். இல்லையேல், எதிர்த்து

உயிர் வாழலாம், அல்லது சாகலாம். தனித்தவர்களுக்கு உலகம் உள்ளளவும் இரு வழிகளும் திறந்தேயிருக்கும். நாம் நிர்க்கதியாகிவிட்டோம். அதனால்தான் கேள்விகள் எழுகின்றன. பதிலுக்குப் பதில் செய்யாமல், பழி வாங்காமல், நமது மதத்திற்காக உயிர்விடும் தெய்விகக் கலையை நாம் மறந்து விட்டோம். உயிர் இழக்கும் தறுவாயில், தற்காப்பிற்காகப் பலாத்காரத்தை உபயோகிக்கும் கலையைக்கூட மறந்துவிட்டோம். தீரமான ஆண், பெண்களின் கூட்டுறவின்றேல் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை என்பதற்கே இடமில்லை. நாம் ஒருவரையொருவர் எப்போதும் நம்ப வேண்டும். ஆனால், முடிவில் நம்மையும் நமது ஆண்டவனையுமே நம்பவேண்டும்.

— 'எங் இந்தியா' - 29—9—1921

# 3

# ஹிந்துக்களும் மாப்பிள்ளைமார்களும்

மாப்பிள்ளைக் கலகத்தையும் அதைப் பற்றி முஸ்லிம்களின் அபிப்பிராயத்தையும் குறித்து, கேசவ மேனனும் மற்றவர்களும் எழுதிய கடிதங்கள் பத்திரிகைகளில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டுள்ளன. எனினும், அவை முக்கியம் வாய்ந்தவையாக இருப்பதால் வழக்கத்திற்கு விரோதமாக அவ்விரு கடிதங்களையும் நான் பிரசுரிக்கின்றேன். ஒரு வேளை அவை 'எங் இந்தியா'வில் பிரசுரமாவது, மாப்பிள்ளைமார்களின் வெறியினால் ஹிந்துக்களின் மனத்தில் ஏற்பட்ட புண்களுக்கு மருந்தாக உதவலாம். தம் உள்ளக் குமுறலை வெளியிட அக் கடிதங்களை எழுதியவர்களுக்கு உரிமை உண்டு.

மௌலானா ஹஸரத் மோஹானி, வீரபுருஷர்களுள் ஒருவர். அவர் உறுதியும், உள்வலியும், மிதமிஞ்சிய திறந்த உள்ளமும் உடையவர். ஆங்கில அரசாங்கத்தின் மேலுள்ள, ஒரு வேளை ஆங்கிலேயர் அனைவர்மீதும் உள்ள மூடத்தனமான துவேஷம் காரணமாக, மாப்பிள்ளைகள் செய்ததில் குற்றம் எதையும் அவர் காணவில்லை. மௌலானாவுக்கு எல்லாம் நேர்மையாகவே தோன்றுகிறது. மாப்பிள்ளைகள் தங்கள் மதத்திற்காகச் சண்டையிட்டார்களென மௌலானா முதலிலேயே முடிவு செய்து கொண்டுள்ளார். இந்த ஒன்றே மாப்பிள்ளைமார்கள் செய்த குற்றங்களையெல்லாம் போக்குவதற்குப் போதுமானதென்று அவர் கருதுகிறார். இது சந்தேகமின்றி மதத்திற்கும் அறவாழ்விற்கும் முற்றிலும் முரணான ஒரு நிலையாகும். மௌலானா ஹஸரத் மோஹானியின் மதப்போக்கு, மதத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதேயாகும். இஸ்லாமில் இதற்கு ஆதாரம் இல்லை என்பது எனக்குத் தெரியும். பல கற்றறிந்த

முஸ்லிம்களுடன் நான் பேசியிருக்கிறேன். அவர்களும் ஹஸரத் மோஹானியின் போக்கை ஆதரிக்கவில்லை.

மௌலானாவின் கூற்றைப் பொருட்படுத்த வேண்டாமென நான் எனது மலையாள நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவருடைய மதக் கோட்பாடுகள் விபரீதமானவையாக இருப்பினும், மௌலானாவைப் போன்ற தேச பக்தரும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை விரும்புபவரும் வேறு எவருமில்லை. அவரது நெஞ்சம் அறிவைவிட உயர்ந்தது. அவரது அறிவு தடம் புரண்டிருக்கிறது என்பதே என் தாழ்மையான எண்ணமாகும்.

முஸ்லிம்கள் பொதுவாக மாப்பிள்ளைகளின் செயல்களைக் கண்டிக்கவில்லை அல்லது அவர்கள் செய்தவை அட்டூழியங்கள் என ஒப்புக்கொள்ளவில்லை என்று எனது மலையாள நண்பர்கள் நினைப்பது தவறு. யுத்த காலத்திலும்கூடப் பெண், குழந்தை, கிழவர் இவர்களுக்கு இஸ்லாம் காப்பளிக்கிறது. வரையறுக்கப்பட்ட காரணங்களுக்கின்றி 'ஜிஹாத்'தை (பிற மதத்தினரை எதிர்த்து மதப் போர் செய்வதை) இஸ்லாம் அனுமதிப்பதில்லை. எனக்குத் தெரிந்தவரை 'ஜிஹாத்'தைத் தாமே தொடங்கும் உரிமை இஸ்லாமியச் சட்டப்படி மாப்பிள்ளைமார்களுக்குக் கிடையாது. மௌலானா அப்துல் பாரி, மாப்பிள்ளைமார்களின் அக்கிரமங்களை திட்டவட்டமாகக் கண்டித்திருக்கிறார்.

முஸ்லிம்கள் கண்டனம் செய்யாவிட்டால்தான் என்ன? ஹிந்து-முஸ்லிம் நட்பு வியாபாரம் அல்ல. நட்பு என்கிற வார்த்தையே இவ்வித எண்ணத்தைப் புறக்கணிக்கிறது. மாப்பிள்ளைகள் அனைவரும், ஹிந்துக்களைப் போல் இந்தியர்களே. ஹிந்துக்களின் மத வெறியைவிட எவ்வகையிலும் முஸ்லிம் மத வெறியை ஹிந்துக்கள் பொருட்படுத்தக் கூடாது. மலையாளத்தில் ஹிந்துக்களின் வீடுகளை, மாப்பிள்ளைமார்களுக்குப் பதிலாக ஹிந்துக்களே சூறையாடியிருந்தால் யாருக்கு விரோதமாகப் பிராது கொடுப்பது? முஸ்லிம்களைப் போலவே ஹிந்துக்களும் இத்தகைய செயல்களுக்கு நிவாரணம் கண்டுபிடிக்க வேண்டும். ஹிந்துவோ, முஸ்லிமோ குற்றம் செய்தால் அதை, ஓர் இந்தியனுக்குச் செய்த குற்றமாகவே கருதவேண்டும். நாம் அனைவரும் இக்குற்றத்தைப் பகிர்ந்துகொண்டு, பரிகாரம் தேட முயற்சிக்க வேண்டும். ஒற்றுமைக்கு இதைத் தவிர வேறு அர்த்தம் இல்லை. இதுகூட இல்லை என்றால், தேசீயம் என்பதில் ஒன்றுமேயில்லை. சமூகப் பற்றைவிட நாட்டுப் பற்று மிகப் பெரிது. இந்த முறையிலே முதலில் நாம் இந்தியர்கள்; பிறகுதான் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் என்ற பிரிவினர் ஆவோம்.

ஆகையால், நாம் மௌலானா ஹஸரத் மோஹானியின் போக்கிற்காக வருந்தலாம். ஆனால், முஸ்லிம்களை மொத்தமாகக் குறைகூற முடியாது. மௌலானாவையும் முஸ்லிம் என்பதற்காகக் குறை கூறாது, ஓர் இந்தியர் மற்ற இந்திய சகோதரர்களுக்கு இழைத்துள்ள பட்டவர்த்தனமான தீங்கைக் காண

மாட்டேன் என்கிறாரே என்றுதான் வருந்த வேண்டும். தொடர்ந்து வகுப்புவாத முறையிலேயே நாம் விஷயங்களைப் பார்த்தால் ஒற்றுமை சாத்தியமில்லை.

“இவையெல்லாம் முற்றிலும் முட்டாள்தனமானவை. ஏனெனில், அவை உண்மைக்கு முரணானவையாக இருக்கின்றன; அவை பகற் கனவுகள்” என்று பிழை கண்டுபிடிப்பவர்கள் கூறலாம். நடைமுறை உண்மைகளுக்குத் தக்கவாறு தத்துவங்களை மாற்றுதல் நடவாத காரியம். ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால், தத்துவங்களுக்கேற்றவாறு புதிய உண்மைகளை ஏற்படுத்த வேண்டும். இதுதான் எனது வாதம். ஹிந்துக்கள் இந்தியர்கள்; மாப்பிள்ளைகளும் இந்தியர்களே. இந்தியர்கள் இந்தியர்களை அவர்களுடைய தவற்றிலிருந்தும் மீட்க முடியாமற் போகாது. பலாத்கார மதமாற்றத்தை அங்கீகரிப்பதைவிட, சாவதற்குள்ள தைரியத்தையும் பலத்தையும் பயிற்சி செய்து கொள்ள வேண்டும் என்று ஹிந்துக்களைக் கேட்டுக்கொள்ளுவது முடியாத காரியமென்று எனக்குத் தோன்றவில்லை. மதமாற்றத்திற்கு உடன்பட மறுத்து மாப்பிள்ளைகளின் கத்திகளை வரவேற்ற ஹிந்துக்களும் இருந்தார்கள் என்பதைக் கேட்டபோது நான் பெருமகிழ்ச்சி அடைந்தேன். கோபமும் பகைமையுமின்றி இறந்திருந்தால், இவர்கள்தான் உண்மை ஹிந்துக்களாக இறந்தவர்கள் என்று கூறவேண்டும். ஏன், ஹிந்துக்களுக்குள்ளும், மனிதர்களுக்குள்ளுமே இவர்கள்தான் உண்மையானவர்கள். இவர்களைப் பலாத்காரப்படுத்தியவர்கள் முஸ்லிம்களல்லாமல் ஹிந்துக்களாயிருந்தாலும், இவர்கள் இப்படியே இறந்திருப்பார்கள். பரஸ்பர உதவியை அடிப்படையாகக்கொண்ட ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையானது, கீழ்த்தரமான வெளி வேஷமாகவே இருக்கும். கணவனின் விசுவாசம் மனைவியின் விசுவாசத்தைப் பொறுத்ததா? அல்லது கணவன் தூர்த்தன் என்பதற்காக மனைவி அவனை நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? சதிபதிகள் தங்கள் ஐக்கியத்தை வெறும் பண்டமாற்று வியாபாரத்தைப் போல் நினைத்தார்களானால், கல்யாணம் ஒரு இழிவான விஷயமாகி விடும். ஒற்றுமையானது கல்யாணத்தைப் போன்றதே. மனைவி தவறப் போகும் சமயத்தில்தான் கணவன் அவளுடன் நெருங்கி உறவாட வேண்டும். இரட்டிப்பு அன்பைச் சொரிவதற்கு அதுதான் சரியான சமயம். அது போலவே மாப்பிள்ளையோ, முஸ்லிமோ தனக்கு இடையூறு செய்யப் போகும்போதோ அல்லது செய்துவிட்ட பிறகோ, ஒரு ஹிந்து அவர்களை அதிகம் நேசிக்க வேண்டும். ஒற்றுமையாக இருக்க வேண்டுமானால், எவ்வளவு தாக்கினாலும் மனம் உடைந்து போகக்கூடாது. இது அவிழ்க்க முடியாத பிணைப்பாக இருக்க வேண்டும்.

நான் தேசத்தின் முன் வைத்துள்ள மேலே கூறிய கருத்துக்கள் சுலபமானவை; சுயநலமுள்ளவை. தம்மையும் தமது நாட்டையும்விட அதிகமாக ஒரு ஹிந்து தமது மதத்தை நேசிக்கின்

ஞரா? அப்படியானல், அவர் மதத்தையும் தேசத்தையும் அறியாத ஒரு பேதை முஸ்லிமுடன் சண்டையிடக் கூடாது. உலகப் புகழ்பெற்ற பெண், தனது குழந்தையைத் தன் எதிரியுடன் பங்கிட்டுக்கொள்ள இசையாமல், அவளுக்கே தன் குழந்தையைக் கொடுக்கச் சம்மதித்தாளே, அதைப் போன்றதுதான் இது. பங்கிட்டிருந்தால், அந்த எதிரிப் பெண்ணின் எண்ணம் நிறைவேறியிருக்கும் அல்லவா?

இது உண்மையன்று. எனினும், முஸ்லிம்கள் எல்லோரும் மாப்பிள்ளைமார்கள் செய்தவற்றை அப்படியே ஆதரிக்கிறுர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அப்படியானல், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் கலைத்துவிடுவதா? கலைத்ததனுல் ஹிந்துக்கள் முன்னிலும் அதிக நன்மையடைவார்களா? அந்நிய உதவி கொண்டு மாப்பிள்ளைகளையும் அவர்களின் முஸ்லிம் சகோதரர்களையும் பழிவாங்கிவிட்டு, ஹிந்துக்கள் சாசுவத அடிமைகளாக இருக்கச் சம்மதிப்பார்களா?

ஒத்துழையாமை ஒரு பொதுவான சித்தாந்தம். வேறெந்த விஷயத்திலும் போலக் குடும்ப சம்பந்தமாகவும் அதைப் பிரயோகிக்கலாம். தன்னம்பிக்கையையும் பலத்தையும் வளர்க்க அது ஒரு வழியாகும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் உண்மையில் ஒற்றுமையடைவதற்கு முன், உலகத்தையே தனித்து நின்று எதிர்க்கப் பழக வேண்டும். ஒற்றுமை, பலமற்றவர்களுக்கிடையே உண்டானதாக இருக்கக்கூடாது; தம் பலத்தைத் தாமே அறிந்தவர்களுக்கிடையே உண்டானதாயிருக்க வேண்டும். ஹிந்துக்களின் நல்லெண்ணத்தால்தான் தமது மத ஒழுக்கங்களைப் பின்பற்ற வேண்டுமென்றிருப்பது, தாங்கள் சிறுபான்மையோராக இருக்குமிடத்தில்கூட முஸ்லிம்களுக்கு நல்லதல்ல. இதைப் போலவேதான் ஹிந்துக்களுக்கும், ஒத்துழையாமை என்பது தம்மைத்தாமே அறிந்துகொள்ளும் ஒரு முறையாகும்.

மிருகத் தன்மை வாய்ந்து, பலமற்றவர்களைப் பலவான்கள் நசுக்கினல், தன்னையறிதல் இயலாததாகிவிடும். பிறகு இன்னும் அதிகப் பலமுள்ளவர்களால் இவர்கள் அடக்கப்படும்படி நேரும். ஆகையால், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் உண்மையில் மதப் பற்று உடையவர்களாக வாழ விரும்பினல், தத்தம் உள்வலியை வளர்த்துக்கொள்ளவேண்டும். அவர்களுக்குப் பணிவு, பலம் இரண்டும் வேண்டும். மாப்பிள்ளைகளின் மத வெறிக்குக் காரணங்களை ஹிந்துக்கள் காணவேண்டும். அப்படியாயின், தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்பதையும் அவர்கள் காண்பார்கள். இதுவரை அவர்கள் மாப்பிள்ளைகளைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை. இதுவரை ஹிந்துக்கள் அவர்களை அடிமைகளைப்போல் நடத்தி வந்திருக்கிறுர்கள், அல்லது அவர்களைக் கண்டு நடுங்கி வந்திருக்கிறுர்கள்; அவர்களை நண்பர்களாகவோ, அண்டை அயலாராகவோ கருதவில்லை; சீர்திருத்தம் செய்வதற்கோ, மரியாதை செலுத்துவதற்கோ உரியவர்களாகவும் எண்ணவில்லை.

எனவே, இப்பொழுது மாப்பிள்ளைகளைப் பற்றியோ அல்லது பொதுவில் முஸ்லிம்களைப் பற்றியோ கோபங்கொள்ளுவதில் பயன் கிடையாது. ஹிந்துக்களுக்கு முஸ்லிம் உதவியை எதிர் பார்க்க உரிமை உண்டு. எனினும், உள்வலியை அதிகப்படுத்திக் கொண்டு தனக்குத்தானே உதவி செய்துகொள்ளுவதுதான் பிரச்னை. கிலாபத்தைப் பாதுகாப்பதற்கு ஹிந்துக்களின் உதவி யையே நம்பிக்கொண்டிருந்தால், அது இஸ்லாமிற்குக் கெட்ட காலம்தான். முஸ்லிம்களுக்கு ஹிந்துக்களின் உதவி எப்போதும் உண்டு. இது ஹிந்துக்கள் அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையாகும். முஸ்லிம்கள் இந்த உதவியை ஏற்றுக்கொள்ளும்போதும், தாம் இறுதியாகக் கடவுளையே நம்பி யிருக்கவேண்டும். திக்கற்றவர்களுக்கு அவர்தான் என்றும் தவறாத துணைவர். மலையாளத்திலுள்ள ஹிந்துக்களும் இதையே தான் நம்பியிருக்க வேண்டும்.

—'எங் இந்தியா' - 26—1—1922

பகுதி நான்கு

# இளவரசர் விஜயமும் பம்பாயில் அமளியும்

## 1

## பம்பாய்வாசிகளுக்கு வேண்டுகோள்

[1921 நவம்பர் மாதம் 17-ஆம் தேதி வேல்ஸ் இளவரசர் பம்பாயில் வந்து இறங்கியபோது அந்நகரில் பெரும் கலகம் ஏற்பட்டது. அந்தக் கலகம் பற்றிய விவரங்களை 'மகாத்மா காந்தி நூல்கள்' 8-ஆம் தொகுப்பு 747-748-ஆம் பக்கங்களில் காணலாம். அக்கலகத்தை நேரில் கண்டு திடுக்கிட்ட காந்திஜி, மிகவும் மனம் வருந்தி பம்பாய் நகர மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். மனத்தை உருக்கும் அந்த வேண்டுகோளின் விவரமே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

பம்பாய் சகோதர சகோதரிகளே!

சென்ற இரண்டு நாட்களாக நான் அடைந்த வேதனையை விவரிக்க முடியாது. அதிகாலை 3-30 மணிக்கு ஆழ்ந்த அமைதியுடன் நான் இதை எழுதுகிறேன். இரண்டு மணி நேர வந்தனை வழிபாட்டுக்குப் பிறகே, இந்த அமைதியை நான் அடைய முடிந்தது. பம்பாய் ஹிந்துக்களும் முஸ்லிம்களும், பார்சிகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் முதலியோருடன் சமாதானம் செய்து கொள்ளாதவரையில், ஒத்துழையாமைவாதிகள் ஒத்துழைப்பவர்களுடன் சமாதானம் செய்துகொள்ளாதவரையில், தண்ணீரைத் தவிர வேறு எதையும் குடிக்கவும் சாப்பிடவும் நான் மறுத்துத்தான் தீரவேண்டும்.

சென்ற இரு தினங்களாக நான் கண்ட சுயராஜ்யம் துர்நாற்றம் வீசுகிறது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, சொற்ப அளவினராகிய பார்ஸி, கிறிஸ்தவ, யூதர்களுக்கு அபாயத்தை உண்டாக்கியிருக்கிறது. ஒத்துழையாமைவாதிகளின் அகிம்சை ஒத்துழைப்பவரின் ஹிம்சையைவிட அதிக மோசமாகியிருக்கிறது. அகிம்சையை வாயினால் உச்சரித்துக்கொண்டு, நம்முடன் கருத்தொருமித்துப் போகாதவர்களைத் துன்புறுத்தி அவர்கள் நடுங்கும்படி செய்திருக்கிறோம். இதன்மூலம் கடவுளையே மறுத்திருக்கிறோம்.

குரான், பைபிள், ஸெண்ட் அவெஸ்தா*, தால்மத் † அல்லது கீதை இவைகளில் எதன்மூலம் நோக்கினும் நமக்குக் கடவுள் ஒருவரே. அவர் உண்மை மயம், அன்பு மயம். இதில் எனக்கு உள்ள நம்பிக்கையை என் வாழ்க்கையில் காட்டுவதைத் தவிர உயிர் வாழ்தலில் வேறு பற்றுதல் எனக்குக் கிடையாது. ஓர் ஆங்கிலேயரையோ அல்லது வேறு எவரையோ நான் வெறுக்க முடியாது. அவரது ஸ்தாபனங்களை, விசேடமாக அவர்கள் இந்தியாவில் ஏற்படுத்தியிருக்கும் ஸ்தாபனங்களைக் கண்டித்து நான் ஏராளமாகப் பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். நான் உயிர் வாழ்ந்தால், இதை மேலும் தொடர்ந்தே செய்து வருவேன். ஆனால், ஆட்சி முறையைக் கண்டிக்கும்பொழுது, நான் தனி மனிதரைக் கண்டிப்பதாக நீங்கள் தவறான எண்ணம் கொள்ளலாகாது. என்னை நான் நேசிப்பது போலவே ஆங்கிலேயரையும் நேசிப்பதே என் மதமாகும். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நான் இதை நிரூபிக்க முயற்சிக்காவிட்டால், கடவுளையே மறுத்தவன் ஆவேன்.

பார்சிகள் விஷயம் என்ன? நான் அவர்களைப்பற்றிக் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மையே. உயிரைக் கொடுத்தாவது இவர்களின் மானத்தையும் உயிரையும் காப்பாற்றாவிட்டால், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் விடுதலைக்கு அருகதையற்றவர்கள் ஆவர். சமீபத்தில்தான் அவர்கள் தங்களது தாராளத் தன்மையையும் நட்பையும் காட்டினார்கள். முஸ்லிம்கள் இவர்களுக்கு விசேஷமாகக் கடமைப்பட்டிருக்கிறார்கள். முஸ்லிம்களைவிட அதிகமாகக் கிலாபத் நிதிக்கு இவர்கள்தான் உதவியிருக்கிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்கள் செயல்களுக்கு வருந்தித் தங்களுடைய பச்சாத்தாபத்தையும் தவறையும் தெரிவித்துக்கொள்ளாதவரையில், நான் 17-ஆம் தேதி கண்ட பார்சி ஆண், பெண் மக்களின் சோகம் ததும்பும் கண்களை மீண்டும் பார்க்க நான் தைரியம் கொள்ள முடியாது. நமது சகோதர சகோதரிகளைப்போல் பாவித்து நாம் பாதுகாக்க வேண்டிய இந்தியக் கிறிஸ்தவர்களுக்கு இழைத்த தீங்குகளுக்குத் தகுந்த முறையில் நாம் ஈடு செய்யாவிட்டால், நான் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பவும் ஆண்டுரூஸை எப்படிப் பார்ப்பேன்? பார்சிகளும் கிறிஸ்தவர்களும் தற்காப்புக்காகவோ அல்லது பழிவாங்கவோ நம்மவரில் சிலருக்குச் செய்தவற்றை நாம் நினைக்க வேண்டாம்.

---

* ஸொரோஸ்டிரியர்கள் அல்லது பார்சிகளின் வேத நூல்களே ஸெண்ட் அவெஸ்தா என்று குறிப்பிடப்படுகின்றன. அது ஆதியில் 21 நூல்களாக இருந்தன. ஆனால், கால வெள்ளத்தினால் மறைந்தது போக, இன்று மிகுதியிருப்பது மூன்று நூல்களே யாகும்.

† தால்மத் என்பது யூதர்களின் புராதனச் சட்டங்கள் அடங்கிய புனித நூலாகும். அது பாலஸ்தீனப் பிரிவு என்றும் பேபிலோனியப் பிரிவு என்றும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பாலஸ்தீனப் பிரிவு கிறிஸ்தவ சகாப்தம் 5-ஆம் நூற்றாண்டிலும், பேபிலோனியப் பிரிவு 6-ஆம் நூற்றாண்டிலும் இயற்றப்பட்டவை.

பெரிதும் என் முயற்சியினலேயே உருவான சக்திகளால் மிகச் சிறுபான்மையோரான இந்த ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் இக்கஷ்டம் நேர்ந்தது. எனவே, இதற்கு என்னல் இயன்ற எல்லாவித ஈடுகளும் நான் செய்தாக வேண்டும். இம்மாதிரியே ஒவ்வொரு ஹிந்துவும் முஸ்லிமும் செய்யவேண்டும். ஆனல், ஒருவரும் உபவாசம் இருக்கவேண்டாம். பிரார்த்தனையின் பயனுகவும், ஆன்மாவின் தாபத்தினுலும் வருவதுதான் சரியான உபவாசமாகும். ஒவ்வொரு முஸ்லிமும், ஹிந்துவும் தத்தம் வீடுகளுக்குச் சென்று கடவுளிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும்; துன்புற்ற சமூகத்தாரிடம் அந்தரங்கபூர்வமாக நட்புரிமை பாராட்ட வேண்டும்.

எனது சக ஊழியர்கள் எனக்குஅனுதாபமாக ஒரு வார்த்தை கூடச் செலவழிக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதை நான் கோரவில்லை. அதற்கு நான் தகுதியுள்ளவனும் அல்ல. அடங்காப்பிடாரிகளைக் கட்டுப்படுத்த இடைவிடாது முயற்சிக்க வேண்டுமென நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது பயங்கரமான, உண்மையான போராட்டம். இதில் பாசாங்குக்கோ, மோசத்திற்கோ இடமில்லை. போராட்டத்தில் நாம் மேலும் முன்னேறுவதற்கு முன்னே, நமது இதயங்கள் சுத்தமடைய வேண்டியது அவசியம்.

எனது முஸ்லிம் சகோதரர்களுக்குத் தனியே ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். கிலாபத்தை நான் ஒரு புனிதப் பிரசனையாகவே நோக்குகின்றேன். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு நான் ஏன் பாடுபடுகிறேன் என்றால், அதின்றி இந்தியா சுதந்திரமாக வாழ முடியாது. அவ்விதமின்றி, நாம் இருவரும் பரபஸ்ரம் இயற்கை விரோதிகள் என்று நினைத்தோமானல், அது கடவுளையே மறுப்பதாகும். அலி சகோதரர்களிடம் நான் என்னையே ஒப்படைத்திருக்கிறேன். அவர்களை நான் உண்மையும் கடவுள் பக்தியும் உடையவர்களென நம்புகிறேன். நான் அறிந்தவரையில், இந்த இரு நாட்களாக நடந்த படுகொலையில், முஸ்லிம்கள்தான் அதிகப் பங்கு பெற்றிருக்கிறார்கள். இது, என்னை வெகுவாகப் புண்படுத்தியுள்ளது. ஒவ்வொரு முஸ்லிம் ஊழியரும் தம் கடமையை உணர்ந்து, தம் முழுப் பலத்துடன் இப்படுகொலையைத் தடுத்துத் தனது மதத்திற்குச் சேவை செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

எத்தனை துன்பம் வரினும், உண்மையையே கடைப்பிடித் தொழுகக் கடவுள் நமக்கு அறிவையும் ஆற்றலையும் அருள்வாராக!

இப்படிக்கு,
உங்கள் ஊழியன்
மோ. க. காந்தி

—'எங் இந்தியா' – 24—11—1921

# 2

# நல்லதும் கெட்டதும்

இந்த நான்கு தினங்களில் நல்லதும் கெட்டதுமான பல செய்திகள் வந்திருக்கின்றன என்று சொல்லுவதன் கருத்தை வாசகர்கள் நன்கு அறிந்துகொள்ளுவார்கள். ஒத்துழையாதவர்கள் படுகாயமடைந்தனர். ஹிந்து, முஸ்லிம்கள் பார்சிகளைத் தாக்கினர். பார்சிகள் அவர்களைச் சுட்டனர். கதருடை, கதர்க் குல்லாய் தரித்தவர்களைக் கிறிஸ்தவர்கள் தாக்கினர். ஹிந்து, முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களைத் தாக்கினர். இத்தகைய செய்திகளிடையே ஹிந்து, முஸ்லிம்களைப் பார்சிகள் மற்ற பார்சிகளிடமிருந்து பாதுகாத்து வருகிறார்கள்; கிறிஸ்தவர்கள், ஹிந்து முஸ்லிம்களைப் பாதுகாக்கின்றனர்; ஒத்துழையாதவர்கள், அமைதியை நிலைநிறுத்துவதற்காகத் தாங்கள் ஆபத்திற்குள்ளாகி வருகிறார்கள்; இவை போன்ற தகவல்களும் கலந்து கலந்து வருகின்றன. எக்காலத்திலும் வலிமையுள்ள, நேர் எதிரிடையான இரு வகை மனவெழுச்சிகளுக்கு இடையே சிக்கிக்கொண்டு நான் தத்தளித்ததில்லை. இப்படிப்பட்ட கஷ்டத்திலுள்ள நண்பர்களை எமன் வாயில் புகுத்திவிட்டு, நான் மட்டும் உயிரைக் காத்துக்கொள்ளும்படி எனக்கு நேரிட்டதேயில்லை. பிரார்த்தனை, எனக்கு மனவலிவைக் கொடுக்கும் அகச்சாதனமாக இருக்கிறது. உபவாசம் என் உடலைத் தாங்கும் ஊன்று கோல், புறச்சாதனமாகும்.

17-ஆம் தேதி எனது பலமனைத்தும் மறைந்துவிட்டதுபோல் எனக்குத் தோன்றியது. கூட்டத்தை நிரந்தரமாக மாற்றிவிட என்னால் ஏன் முடியவில்லை? என்னிடமுள்ள அகிம்சையின் சக்தி எங்கே? நான் என்ன செய்வது? புண்படுத்தப்பட்டவர்களை அரசாங்கத்தின் உதவியை நாடும்படி நான் சொல்லமாட்டேன்; சொல்லவும் கூடாது. நியாயம் வழங்கப் பஞ்சாயத்துகள் இல்லை. அமைதியை நிலைநாட்டக்கூடிய விதத்தில் யாரும் இல்லை. பலாத்காரத்தை உபயோகிக்கப் பழகிய ஒரு படையைத் தயாரிக்க முடியாது. அப்படிச் செய்யவும் கூடாது. கலகக்காரர்களின் பலாத்காரச் செயல்களால் தவிப்பவர்கட்கு நான் என்ன நிவாரணம் அளிக்க முடியும்? நியாயமாகவே ஆத்திரமடைந்த பார்சிகள் அல்லது கிறிஸ்தவர்கள் என்னைப் பிடித்துப் பிய்த்தெறியட்டும் என்றிருந்துவிட்டால், இதனால் இன்னும் அதிக ரத்தக் களரிதான் உண்டாகியிருக்கும். யுத்த வீரனைப் போல் ஆபத்திலிருந்து விலகக்கூடாதெனினும், கண்மூடித்தனமாக என்னைக் கொல்லும்படி விட்டுவிடவுங்கூடாது. பிறகு என்னதான் செய்வது? இந்த உபவாசம் என்னைத் தரும சங்கடமான நிலையிலிருந்து விடுவித்து, ஆன்ம சாந்தி அளித்தது.

மனிதர்கள் என்னைக் கொல்லும்படி செய்யாவிட்டாலும், கடவுளிடத்தாவது என்னை ஒப்படைத்துவிடுகிறேன்; அவர் என் உயிரை ஏற்றுக்கொள்ளட்டும். எனது பிரார்த்தனை கடவுளின் செவிக்கு எட்டும் வரையில், நான் உணவொழித்துவிடுகிறேன் என்று முடிவு செய்தேன். கடன் தீர்க்க வழியற்ற எனக்கு, இந்த ஒரு வழிதான் இருந்தது. ஜனங்களின் அறியாமையை எனக்குச் சாதகமாக நான் உபயோகித்துக்கொள்ள முடியாது. நான் 17-ஆம் தேதி விடுத்த வேண்டுகோளுக்கு மரியாதை செய்ய மக்கள் மறந்துவிட்டார்கள். எப்படியும் இழந்த மரியாதையைத் திரும்பவும் பெற வேண்டும். இல்லையேல், அம்முயற்சியில் சாக வேண்டும். கடவுளின் வேலையைச் செய்வதற்கு அவரிடமிருந்து நான் இன்னும் கைமுதல் பெற்றுக்கொள்ள வழி தேட வேண்டும். அவர் முன்னால் சாஷ்டாங்கமாகப் பணிந்து அவர் எனக்குக் கொடுத்துள்ள உணவை மறுப்பதன் மூலமே நான் இதைப் பெற முடியும். நான் காரியத்தில் அக்கறையுள்ளவன் என்பதை ஆயிரம் வழிகளில் காட்ட வேண்டும். அவரது வேலையைச் செய்வதென்றால், என்னைத் திருப்பியழைத்து அவர் இச்சைப்படி எதற்குப் பொருத்தமாயிருக்கின்றேனே, அப்படி நடத்தட்டும்.

எனவே, நான் உபவாசம் மேற்கொண்டுள்ளேன். சக ஊழியர்களோ அல்லது கலகத்தில் ஈடுபட்டுள்ளவர்களோ அடையும் நஷ்டங்கள் என்னை இனிக் கலங்கும்படி செய்யாது. எனக்கு எனது அகிம்சையே உதவி. ஆகவே, இந்த உபவாசம் ஒரு தவம், ஆன்ம பரிசுத்த நடவடிக்கை, பிராயச்சித்தம். ஊழியர்கள் இந்த இயக்கத்தில் நான் சொல்லுபவைகளை அற்பமாக மதிக்கக்கூடாது என்பதற்கு இது ஓர் எச்சரிக்கை. அகிம்சையில் நம்பிக்கையுள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்தில் இருக்க வேண்டும். உண்மையும் உறுதியுமுள்ள சில ஊழியர்களைக் கொண்டே இந்த இயக்கத்தைச் சிக்கலும் இடைஞ்சலும் இல்லாது நடத்த முடியும். வஞ்சனைக்காரர்கள் அதிகம் பேர் இருப்பினும், அவர்களால் தீமைதான். கடைசியாக அமைதியைத் துரிதமாக உண்டாக்க இந்த ஒரு மருந்துதான் உளது.

## 3

# திரை மறைவில் தீங்கு செய்ய வேண்டாம்

உபவாசத்தைக் கைவிடும்படி எனக்கு வேண்டுகோள்கள் வந்து கொண்டிருக்கின்றன. சிலர் அனுதாப உபவாசம் கைக் கொண்டிருக்கின்றனர். இதெல்லாம் மிகமிகத் தவறாகும். எனக்கு

உபவாசம் இன்றியமையாததாயிருக்கிறது. இதில் ஹிம்சை எதுவும் இல்லை. சிறிதளவு ஹிம்சையும் நமது நோக்கத்தை அடையவொட்டாது தடுக்கும். ஆகையால், உபவாசம் இருப்பதற்குப் பதிலாக ராட்டையைச் சுழற்றுங்கள். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை மட்டுமல்லாது, எல்லா வகுப்புகளிடையேயும் ஒற்றுமை ஏற்பட வேண்டும். சிறுபான்மைச் சமூகங்களின் நன்மைகளைத் தமது நன்மைகளைவிட அதிகமாகக் கவனிக்காவிட்டால், ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை ஒரு காசுக்குக்கூடப் பிரயோஜனமில்லை. கிறிஸ்தவர்களோ, யூதர்களோ அல்லது பார்சிகளோ இந்தியாவில் அந்நியர்கள் அல்லர். அவர்களுடன் நட்புக்கொண்டு சேவை செய்து உதவ நாம் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் நம்மவர் இழைக்கும் தீங்குகளிலிருந்து அவர்களை நாம் காப்பாற்ற வேண்டும். இம்மாதிரியே ஒத்துழைப்பவர்களுடனும் ஊழியர்கள் நட்புக்கொள்ள வேண்டும். ஆங்கிலேயர்களாயினும் சரி, இந்தியர்களாயினும் சரி, அவர்களை ஊழியர்கள் பழித்துப் பேசக்கூடாது. நமது கட்சியின் உண்மையிலும் துன்பத்தைச் சகிக்கும் நமது திறமையிலும் நமக்குப் பூரண நம்பிக்கை இருக்கவேண்டும். ஆங்கிலேயர் நமக்கென்ன செய்தபோதிலும், அவர்கட்குத் தீங்கிழைப்பதில்லையென்று தாற்காலிகமாகவாவது நாம் கடவுள் மேல் ஆணையிட்டு உலகத்தாருக்கு அறிவித்துவிட்டோம். இந்த வாக்குறுதியின் திரை மறைவில் ஒரு ஆங்கிலேயருக்கோ அல்லது இந்திய ஒத்துழைப்பாளிக்கோ நாம் ஏதேனும் தீங்கு செய்தால், கடவுள் முன்னும் மனிதன் முன்னும் நாம் பெருங்குற்றவாளிகளாவோம்.

## 4

# பம்பாய் மாவாலிகளுக்கு

[பம்பாய்க் கலகத்திற்குக் காரணஸ்தர்களான மாவாலிகளுக்கு, அதாவது துஷ்டர்களுக்கு, காந்திஜி ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதன் விவரம் பின்வருமாறு:]

பம்பாய் மாவாலிகளுக்கு,

ஒத்துழையாதாருக்கு உங்களிடம் செல்வாக்கு உண்டு என்றும், சாத்விகத்தின் தார்மிக அவசியத்தை நீங்கள் அறியாவிட்டாலும் அதுதான் அரசியல் விவேகம் என்பதை நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள் என்றும் நான் நினைத்து வந்தேன். நான் அவ்விதம் எண்ணியது மிகவும் பயங்கரமான ஒரு தவறாகிவிட்டது. உங்கள் தேச நலன்களை நீங்கள் போதிய அளவு அறிந்து கொண்டிருக்கிறீர்கள் என்றும், எனவே ஒத்துழையாமை இயக்கத்திற்கு விரோதமாக அதில் தலையிட்டுக் குழப்பமாட்டீர்கள் என்றும் நான் நினைத்தேன். உங்களுடைய படுமோச

மான வெறி உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமலிருக்கும் விவேகம் உங்களுக்கு உண்டு என்றும் நான் எண்ணியிருந்தேன். கொள்ளையிடுவதிலும், சூறையாடுவதிலும், உங்களுடைய மிகவும் கீழ்த்தரமான மிருக உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதிலும் கூட உங்களுக்குள்ள வெறியைத் தணித்துக்கொள்ள நீங்கள் பொது மக்களின் விழிப்பை உபயோகித்துக் கொண்டிருப்பதைக் காண என் மனம் துடிதுடிக்கின்றது. நீங்கள் உங்களை ஹிந்து என்றோ, முஸ்லிம் என்றோ, பார்சி என்றோ, கிறிஸ்தவர் என்றோ அல்லது யூதர் என்றோ எப்படிக் கூறிக்கொண்டாலும் சரி, உங்கள் சொந்த மதத்தின் நலன்களைப் பற்றிக்கூடச் சிந்திக்க நீங்கள் தவறி விட்டீர்கள்.

நான் மனித இயல்பை அறியாதவன் என்று என் நண்பர் களில் சிலர் என்மீது குற்றஞ் சாட்டுவார்கள் என்பதை நான் அறிவேன். அந்தக் குற்றச்சாட்டை நான் நம்பினால், நான் அதை ஒப்புக்கொண்டு மக்கள் குழாம்களிலிருந்து விலகிவிடு வேன்; மக்கள் குழாம்களைப் பற்றிய அறிவைப் பெற்ற பின்பே மீண்டும் திரும்பி வந்து அக்குழாம்களில் கலந்து கொள்ளுவேன். ஆனால், தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களிடையே இருந்த மாவாலிகளைக்கூட அடக்கிக் கொண்டு செல்லுவதில் எனக்கு சிரமம் ஏற்படவில்லை. ஏனெனில், அவர்களுடன் எனக்கு நேரடி யான தொடர்பு இராத இடங்களில் சக ஊழியர்களின் மூலம் அவர்களை அணுகுவதில் நான் வெற்றி பெற முடிந்ததேயாகும். உங்கள் விஷயத்திலோ, நாங்கள் உங்களை அணுகுவதில் தோல்வியடைந்து விட்டோம். மதம், தேசம் இவ்விரண்டின் உயர்ந்த கட்டளைக்குச் செவி சாய்க்கும் ஆற்றல் உங்களுக்கு இல்லை என்பதை நான் நம்பவில்லை.

நீங்கள் என்னென்ன செய்திருக்கிறீர்கள் என்பதைப் பாருங்கள்! ஹிந்து, முஸ்லிம் மாவாலிகள், பார்சிக் கோவில் களின் புனிதத் தன்மைக்குப் பங்கம் விளைவித்து விட்டார்கள். அதன் விளைவாக, பார்சி மாவாலிகளின் கோபத்திற்குத் தங்க ளுடைய கோவில்களும் இலக்காகும்படி செய்திருக்கிறார்கள். வேல்ஸ் இளவரசரை வரவேற்பதில் சில பார்சிகள் பங்கு எடுத் துக்கொண்டார்கள் என்பதற்காக, ஹிந்து, முஸ்லிம்கள் தங்கள் கண்ணில் தென்பட்ட ஒவ்வொரு பார்சியிடமும் முரட்டுத்தன மாக நடந்து கொண்டிருக்கிறார்கள். அதன் பலன் என்ன வெனில், பார்சி மாவாலிகள் இப்போது தங்கள் கவனத்தை ஹிந்துக்களிடமும், முஸ்லிம்களிடமும் செலுத்தி வருகிறார்கள்.

பார்சி மாவாலிகளை அதிகமாகக் குற்றம் கூறுவதற்கில்லை. சில பார்சிகளும், கிறிஸ்தவர்களும் உடுத்திக்கொண்டிருந்த அந் நியத் துணிகளை, ஹிந்து, முஸ்லிம் மாவாலிகள் மரியாதையின்றி யும், முரட்டுத்தனமாகவும், கர்வத்துடனும் அகற்றியிருக்

கிறார்கள். எல்லா ஹிந்துக்களும், முஸ்லிம்களும் அந்நியத் துணி உடுத்துவதை விட்டுவிட்டார்களா? ஹிந்து, முஸ்லிம்களில் பெரும்பாலோர்கூட அந்நியத் துணி உடுப்பதை மனப்பூர்வமாக விட்டுவிடவில்லை. எனவே, பார்சி, கிறிஸ்தவ மாவாலிகள் கதர் உடுத்திக் கொண்டுள்ள ஹிந்து, முஸ்லிம்கள் விஷயத்தில் தலையிட்டு வருகிறார்கள். இவ்விதமாக நாம் எல்லோரும், விபரீதமான சுழலில் சிக்கிக் கொண்டு சுற்றிச் சுற்றி வருகிறோம். அதனால், தேசம் துன்பத்திற்கு உள்ளாகி வருகிறது.

உங்களைக் குறை கூறுவதற்காக இதை நான் எழுதவில்லை. ஆனால், உங்களை எச்சரிப்பதற்காகவும், நாங்கள் உங்களை வருந்தத்தக்க முறையில் அலட்சியம் செய்துவிட்டோம் என்பதை ஒப்புக் கொள்ளுவதற்காகவுமே இதை நான் எழுதுகிறேன். நான் ஒரு வழியில் இதற்குத் தவம் செய்து வருகிறேன். மற்ற ஊழியர்கள் மற்றொரு வழியில் தவம் புரிந்து வருகிறார்கள். துரதிருஷ்டவசமான இந்த திடீர் எழுச்சி தணியும்படி செய்வதற்காக, ஸ்ரீமான்கள் ஜயகர். ஜம்னாதாஸ் மேத்தா, சாதே, அஸாத் ஸோபானி, மோஸாம் அலி முதலிய மற்றும் பலர் தங்களுடைய உயிர்களையே அபாயத்திற்கு உள்ளாக்கி வருகிறார்கள். ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, உங்களுக்கு நியாயத்தை எடுத்துக் கூறி, உங்களை வேண்டிக் கொள்ளுவதற்காக அஞ்சாமல் உங்களிடையே வந்துள்ளார். உங்கள் மத்தியில் எங்களுடைய வேலை இப்போதுதான் ஆரம்பமாகி யிருக்கிறது. திருப்பித் தாக்கும் பைத்தியக்காரத்தனமான இந்த நடவடிக்கையை நிறுத்துவதன் மூலம், நீங்கள் எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கமாட்டீர்களா?

பார்சிகள் அல்லது கிறிஸ்தவர்களுக்கு விரோதமாகப் பழிவாங்க ஹிந்துக்களும், முஸ்லிம்களும் வெட்கமடைய வேண்டும். ஹிந்து, முஸ்லிம்களின் மூர்க்கத்தனத்தை, மிருக பலத்தைக் கொண்டு எதிர்த்துப் போராடுவது தற்கொலை செய்து கொள்ளுவதாகும் என்பதைப் பார்சிகளும், கிறிஸ்தவர்களும் அறிய வேண்டும். ஏனெனில், அவ்விதம் போராடுவதன் விளைவாக அவர்கள் அந்நிய அரசாங்கத்தின் உதவியை நாடும்படி நேரும். அதாவது, தங்களுடைய சுதந்திரத்தை விற்றுவிட நேரும். அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த வழி என்னவெனில், தாங்கள் இந்தியர்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும். ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தங்களுடைய சொந்த நலன்களுக்கு முன் சிறுபான்மையோரின் நலன்களையே பாதுகாப்பார்கள், பாதுகாக்கவும் வேண்டும் என்பதை அவர்கள் நம்ப வேண்டும். அது எப்படியாயினும், இப்போது பம்பாயின் முன் உள்ள பிரச்னை என்னவெனில், சிறுபான்மையோருக்குப் பூரணப் பாதுகாப்பு ஏற்படும்படி செய்வதும், காலிகளின் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதும்தான். எனவே, பம்பாய் மாவாலிகளான நீங்கள், உங்கள் கைவரிசைகளைக் காட்டமாட்டீர்கள் என்றும், உங்களுக்

குத் தொண்டு புரிய விரும்பும் ஊழியர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பீர்கள் என்றும் நம்புகிறேன். கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக.

உங்கள் நண்பன்
எம். கே. காந்தி

—'எங் இந்தியா' – 24—11—1921

# 5

# சக ஊழியர்களுக்கு

[பம்பாயில் நிகழ்ந்த கலக சம்பந்தமாகக் காந்திஜி, தமது சக ஊழியர்களுக்குக் கீழ்வருமாறு ஒரு வேண்டுகோள் விடுத்தார் :]

தோழர்களே,

சென்ற சில நாட்கள் நமக்கு ஓர் அக்னிப் பரீட்சையாகி விட்டன. நம்மில் சிலர் அத்தகைய நிலைமையைச் சமாளிக்கும் ஆற்றல் பெருமல் போய்விடவில்லை. இது கடவுளின் கிருபை தான். மண்டைகள் உடைந்து என் முன் நிற்பவர்களும், பலியானவர்களைப் பற்றி முற்றிலும் நம்புவதற்குரியவர்களிடமிருந்து நான் கேள்விப்பட்ட விவரங்களும் அந்த உண்மையை நிரூபிப்பதற்குப் போதிய சாட்சியங்களாகும். அமைதியைப் பாது காப்பதற்கான நடவடிக்கைகளிலும், வெறி பிடித்த தேச மக்களின் கோபாவேசமான காரியங்களிலிருந்து அவர்களைத் தடுப்பதிலும் ஊழியர்கள் தங்கள் உயிர்களையும், உடல் உறுப்புக்களையும் இழந்துள்ளனர்; பலர் அந்தத் தொண்டில் காயமும் அடைந்துள்ளனர். இந்த உயிர்த் தியாகங்களும், காயங்களும், நம் தேச மக்களில் பலர் தவறு செய்துவிட்டாலும்கூட, சிலர் நமது லட்சியத்தை அடைவதற்காக உயிரைக் கொடுப்பதற்கும் தயாராக இருந்தார்கள் என்பதையே காட்டுகின்றன. சாத்விக தத்துவத்தை நாம் எல்லோரும் மனத்தில் பதிய வைத்துக் கொண்டிருந்தால், அல்லது சிலரே அத் தத்துவத்தை மனத்தில் கிரகித்திருந்தாலும், மற்றவர்கள் அமைதியாக இருந்திருந்தாலும் ரத்தம் சிந்தியிருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஆனல், அத்தகைய நிலைமைக்கு வழியிராமற் போய்விட்டது. எனவே, ரத்தக் களரியற்ற ஒரு சூழ்நிலையை உண்டு பண்ணுவதற்காக சிலராவது தாங்களாக முன்வந்து தங்களுடைய ரத்தத்தைக் கொடுக்க வேண்டியதாயிற்று. பலாத்காரத்தில் ஈடுபடும் பலவீனமான மக்கள் இருக்கும் வரையில், தங்களைக் காட்டிலும் அதிகத் திறமையும், அதிக பலாத்காரத்தில் ஈடுபடுவதற்கான வசதிகளும் உள்ளவர்களின் உதவியை நாடும் பலவீனர்களும் இருக்கத்தான் செய்வார்கள். அதனல்தான் பார்சிகளும்,

கிறிஸ்தவர்களும் அரசாங்கத்தின் உதவியை நாடினார்கள்; அந்த உதவியைப் பெறவும் செய்தார்கள். அரசாங்கம் பகிரங்கமாக ஒரு கட்சிக்கு உதவியது; பார்சிகளும், கிறிஸ்தவர்களும் மற்றவர்கள் மீது பழி தீர்க்கும் வெறியைத் தூண்டிவிட ஆயுதங்களைக் கொடுத்து உதவியது. பார்சிகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் முதலியோருக்குக் கோபம் மூண்டது மன்னிக்கத்தக்கதே. ஏனெனில், முதலில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும்தான் பார்சிகளையும் மற்றவர்களையும் தாக்கத் தொடங்கினார்கள். எனினும், அரசாங்கத்தின் உதவி பெற்ற பார்சிகள் முதலியோரின் பலாத்காரத்துக்குப் பலியான ஒருவருடைய உயிரைக்கூட அரசாங்கம் பாதுகாப்பதில் அக்கறை கொள்ளாதது பெரும் குற்றமாகும். எனவே, அரசாங்கத்தின் வேஷம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அது, பலாத்காரத்தில் ஈடுபட்ட ஒரு கட்சியாகவே மாறிவிட்டது. அமைதியைப் பாதுகாப்பதற்காக மாத்திரம் அரசாங்கம் பலாத்காரத்தில் இறங்கவில்லை; தொல்லைகளுக்கு உட்பட்ட தங்களுடைய ஆதரவாளர்கள் கையாண்ட பலாத்காரத்திற்கும் இடம் கொடுக்க வேண்டியிருந்தது.

கிறிஸ்தவர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டது நியாயமேயாகும். ஆத்திரம் கொண்ட அவர்கள், நிரபராதிகளின் குல்லாய்களைப் பிடுங்கினார்கள்; குல்லாய்களைக் கொடுக்க மறுத்தவர்களை அடித்துத் துன்புறுத்தினார்கள். பார்சிகளோவெனில், பலரையும் அடித்தார்கள், சுட்டுத் தள்ளினார்கள். அவர்கள் தற்காப்பிற்காக அவ்விதம் செய்யவில்லை. ஹிந்துக்கள் என்பதற்காகவும், முஸ்லிம்கள் என்பதற்காகவும், ஒத்துழையாதார் என்பதற்காகவுமே அப்படிச் செய்தார்கள். அவர்களின் பலாத்காரச் செயல்களை போலீசாரும் ராணுவத்தினரும் ஈவிரக்கமின்றியும், பொறுப்பின்றியும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். முதலில் ஹிந்துக்களாலும் முஸ்லிம்களாலும் துன்பத்திற்கு உள்ளான பார்சிகளையும் கிறிஸ்தவர்களையும் நான் மன்னிக்க முடியும். ஆனால், ஒரு கட்சியினருக்குச் சலுகை காட்டிய குற்றத்திற்கு ஆளான போலீசாரையும் ராணுவத்தினரையும் மன்னிப்பதற்கே இடமில்லை.

எனவே, இங்கிலையில் ஊழியர்களின் கடமை என்னவெனில் அரசாங்கத்தினிடமிருந்தும், தவறான வழியில் செல்லும் நமது தேச மக்களிடமிருந்தும் அடிகளை வாங்கிக்கொள்ளுவதுதான். இது ஒன்றுதான், பலாத்கார சக்திகளைப் பலனற்றுப்போகும்படி செய்வதற்கான வழியாகும். பலாத்கார சக்திகளை அடக்கி ஆளுவதுதான் சுயராஜ்யத்திற்கு உடனடியான வழியாகும். இன்னும் அதிக பலாத்காரத்தைக் கைக்கொள்ளுவதால் அல்ல, தார்மிக செல்வாக்கின் மூலம்தான் விரைவில் சுயராஜ்யம் பெற முடியும். தற்போதுள்ள அரசாங்கத்தை விலக்குவதற்குப் போதிய பலாத்காரத்திற்குத் தேவையான பயிற்சியையும் ஆயுதங்களையும் நாம் பெறுவது முடியாத காரியம் என்பது, பட்டப்பகலைப் போல் தெளிவாக நமக்குத் தெரியவேண்டும்.

இளவரசர் வரவேற்கப்படுவதை எதிர்த்து நமக்குள்ள கோபத்தை, 17-ஆம் தேதியன்று நிகழ்ந்த பொதுமக்களின் பேராவேசத்தைக் காட்டிலும் சிறந்த விதத்தில் நாம் விளம்பரப் படுத்தியிருக்க முடியாது என்று சிலர் எண்ணுகிறார்கள். இத் தகைய வாதம், நமது அறியாமையையும் பலவீனத்தையுமே வெளிப்படுத்துகிறது. நமது லட்சியம், வரவேற்புக்குக் குந்தகம் விளைவிப்பதல்ல. அவ்விதம் நினைப்பது அறியாமையாகும். நமக்கு பலம் இருக்கிறது என்பதில் நமது மனத்திற்குத் திருப்தி ஏற்பட வேண்டுமேயன்றி, மற்றவர்களிடம் நாம் அதை விளம்பரப்படுத்திக் கொள்ள இன்னும் ஆசைப்படுகிறோம். இது தான் நமது பலவீனமாகும். இவ்விதம் செய்ததன் மூலம் நமது லட்சியத்தை நோக்கி நாம் அடைந்துவரும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட்டுள்ளோம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

எனினும், ஊழியர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து அதன்படி நடந்து கொள்ளுவார்களாயின், நாம் நம்பிக்கையை அடியோடு இழந்துவிடவேண்டியதில்லை. பம்பாயில் உள்ள போக்கிரிகளின் பூரண ஒத்துழைப்பை நாம் பெற்றுத் தீரவேண் டும். நாம் மில் தொழிலாளர்களை யெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும். அத்தொழிலாளர்கள், ஒன்று அரசாங்கத்தின் சார்பில், அதாவது பலாத்காரத்திற்குச் சாதகமாக வேலை செய்ய வேண் டும்; அல்லது நம் சார்பில், அதாவது பலாத்காரத்திற்கு விரோத மாக வேலை செய்யவேண்டும். இவ்விரண்டில் ஒன்றைத் தவிர, வேறு நடுத்தர வழி எதுவும் இல்லை. அவர்கள் நம் விஷயத்தில் தலையிடக்கூடாது. அவர்கள் நம்முடைய அன்பு உணர்ச்சிக்கு உடன்பட வேண்டும்; இல்லாவிடில், திக்கற்ற நிலையில் துப்பாக்கி முனைக்குத் தலைவணங்கவேண்டும். ஆனால், பலாத்கார நோக்கத் துடன் அவர்கள் சாத்விகக் கொடியின் கீழ் ஒண்டிக்கொள்ள முயற்சிக்கக் கூடாது. நம்முடைய செய்தியை அவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்வதற்காக நாம் ஒவ்வொரு மில் தொழி லாளியையும் தனித்தனியாக அணுகவேண்டும். நம்முடைய போராட்டத்தை அவர்கள் நன்கு உணரும்படியும், மதித்து நடக்கும்படியும் செய்யவேண்டும். அதுபோலவே, நாம் போக்கிரி களையும் அணுகவேண்டும்; அவர்களுடன் நட்புக் கொண்டு நமது போராட்டத்தின் தார்மிகத் தன்மையை அவர்கள் உணர்ந்து கொள்ளுவதற்கு உதவி அளிக்க வேண்டும். அவர்களை நாம் அசட்டை செய்துவிடக்கூடாது; அவர்களுடைய வெறிக்கு உடந்தையாகி விடவும் கூடாது. நாம் அவர்களுடைய ஊழியர் களாகிவிடவேண்டும்.

நாம் அடைய உத்தேசிக்கும் அமைதியானது, தாற்காலிக ஒட்டு வேலை அமைதி அல்ல. அரசாங்கத்தின் உதவியின்றியும், சிற்சில சமயங்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதி

ராகவும் கூட, அந்த அமைதி தொடர்ந்து நிலவிவரும் என்பதற்கான நியாயமான உத்தரவாதம் இருக்கவேண்டும். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் இவர்களிடையே இருதய ஒற்றுமை இருக்கவேண்டும். பின்னர் குறிப்பிட்ட மூன்று சமூகத்தினரும் முதலில் குறிப்பிட்டுள்ள இரு சமூகத்தினர்களை நம்பாமல் இருக்கலாம், நம்பமாட்டார்கள். சமீப கால நிகழ்ச்சிகள், அந்த அவநம்பிக்கையை பலப்படுத்துவதாக இருக்கின்றன. அவர்களுடைய அவநம்பிக்கையை நாம் எப்பாடுபட்டாவது அகற்ற வேண்டும். அவர்கள் பூரண ஒத்துழையாதாராக இருக்க விரும்பாவிட்டால், அவர்கள் சுதேசியையோ, அல்லது அதற்கு அறிகுறியான வெள்ளைக் கதர்க் குல்லாயையோ கைக்கொள்ளாவிட்டால், அவர்களை நாம் தொந்தரவு செய்யக் கூடாது. ஒவ்வொரு சமயத்திலும் அவர்கள் சர்க்கார் பக்கம் சேர்ந்து கொண்டால்கூட, நாம் அவர்கள் மீது ஆத்திரம் கொள்ளக் கூடாது. அன்புடன் கூடிய தொண்டின் மூலம் நாம் அவர்களை நம்மைச் சேர்ந்தவர்களாகச் செய்ய வேண்டும். இது, இப்போதுள்ள நிலையில் அவசியமாகும். இல்லாவிடில், உள்நாட்டுப்போர் தான் உண்டாகும். உள்நாட்டு யுத்தம் ஏற்பட்டால், மூன்றாவது பேர் வழிகளான சர்க்கார், ஒரு சமயம் அந்தக் கட்சியிலும் ஒரு சமயம் இந்தக் கட்சியிலும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டு, தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக் கொள்ளுவார்கள். எனவே, உள்நாட்டு யுத்தம் அசாத்தியமாகும்படி செய்யவேண்டும்.

சிறிய சமூகங்கள் விஷயத்தில் எது உண்மையோ, அது தான் ஒத்துழையாதார் விஷயத்திலும் உண்மையாகும். அவர்களிடம் நாம் பொறுமையிழந்துவிடக் கூடாது; அவர்களிடம் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும். ஒத்துழையாமையை அனுசரிக்கச் சுதந்திரம் வேண்டும் என்று நாம் கோரினால், அரசாங்கத்துடன் ஒத்துழைக்க அந்தச் சமூகங்களுக்கும் சுதந்திரம் உண்டு என்பதை அங்கீகரிக்க வேண்டியது நமது கடமையாகும். ஒத்துழையாதாராகிய நாம் ஒரு சிறுபான்மையோராக இருப்பதாகவும், ஒத்துழைப்போர் பெரும்பான்மையோராக இருப்பதாகவும் வைத்துக் கொள்ளுவோம். அந்நிலையில் அவர்கள் நம்மீது பலாத்காரத்தை உபயோகித்தால் நம் மனம் எப்படி யிருக்கும்? எதிரிகளை நம் வசப்படுத்துவதற்கு, உலகத்திற்குத் தெரிந்த மிகத் துரிதமான முறை ஒத்துழையாமையும் சாத்விகமும்தான். ஆங்கிலேயர்கள் உள்பட நம் எதிராளிகள் யாவரையும் நம் பக்கம் இழுத்துக் கொள்ளுவதே நமது போராட்டத்தில் அடங்கியுள்ள தத்துவமாகும். அவர்களிடையே பலவீனமானவர்கள், பலம் பொருந்தியவர்கள் எவர் விஷயத்திலும் நாம் சிறிதும் துவேஷமின்றி நடந்து கொள்ளுவதன் மூலம் மாத்திரமே நாம் அவர்களை நம் வசப்படுத்திக்கொள்ள முடியும். நாம் பிரகடனம் செய்யும் உண்மையை அறிந்துகொள்ளாதவர்களைக் கொல்லுவதால் அல்ல, நமது நம்பிக்கைக்காக

உயிரை விடத் தயாராக இருப்பதன் மூலம் மாத்திரமே நாம் எதிராளிகளை நமது பக்கம் சேரும்படி செய்ய முடியும்.

உங்கள் நம்பிக்கையுள்ள
தோழன்
மோ. க. காந்தி

— 'எங் இந்தியா' – 24—11—1921

# 6

# உபவாசம் முடிவடைந்தது

[பம்பாயில் நடந்த கலகத்திற்குப் பிராயச்சித்தமாக காந்திஜி 1921 நவம்பர் மாதம் 19-ஆம் தேதி உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க முடிவு செய்தார். அன்று காந்திஜி வெளியூரிலிருந்த தமது புதல்வர் ஸ்ரீ தேவதாஸ் காந்தியைப் பம்பாய்க்கு வருமாறு கூறி, மீண்டும் பம்பாயில் கலகம் நடந்தால், கலகக்காரர்களிடம் பலியாக தேவதாஸ் காந்தியை அனுப்ப காந்திஜி முடிவு செய்தார். உண்ணாவிரதத்தின்போதுகூட, காந்திஜிக்கு ஓய்ச்சல் ஒழிவு இல்லை. ஊழியர்கள் காந்திஜியிடம் ஆலோசனை கேட்க வந்தவண்ணம் இருந்தார்கள். கலகத்தை நிறுத்த என்ன வழி என்பது பற்றி அவர்கள் காந்திஜியின் புத்தி மதியை நாடினர். நல்ல வேளையாகப் பம்பாயில் கலகம் நின்று அமைதி ஏற்பட்டுவிட்டதால், காந்திஜி நவம்பர் 22-ஆம் தேதி உண்ணாவிரதத்தை நிறுத்தினார். அப்போது ஒத்துழைப்போர், ஒத்துழையாதார், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள் முதலியோர் மத்தியில் காந்திஜி தமது உபவாசத்தை முடித்தார். ஒவ்வொரு வகுப்பின் பிரதிநிதியும் தமது நல்லெண்ணத்தைத் தெரிவித்துப் பேசினார். அங்கே காரியக் கமிட்டி அங்கத்தினர்களும் இருந்தனர். உபவாசத்தை முடிக்கு முன்னர், காந்திஜி குஜராத்தியில் ஓர் அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையின் மொழிபெயர்ப்பே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

இச்சிறு கூட்டத்தில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஒருங்கு கூடியிருப்பதைக் காண என் மனம் மகிழ்ச்சியடைகிறது. இன்று காலை நாம் உண்ணும் அற்பமான பழ உணவு நிலைத்த நட்பிற்கு அறிகுறியாக இருக்கும் என நான் நம்புகின்றேன். எதுவும் நன்மைக்கே என்று நம்புவது எனது இயல்பு. எனினும், நான் ஆகாயத்தில் கோட்டை கட்டுபவனல்லன். இக்கூட்டம் என்னை ஏமாற்றிவிட முடியாது. எல்லா வகுப்புகளிடையேயும் நிலைத்த நட்பு உருவாகும்படி செய்வதற்காக இங்கே கூடியுள்ளவர்கள் அனைவரும் இடைவிடாது முயன்றால்தான், அது முடியும். உங்கள் வாக்குறுதிகளின் பலத்தினால்தான் நான் உபவாசத்தை முடிக்கிறேன். இந்த நான்கு நாட்களும் எண்ணற்ற நண்பர்கள் என்மீது காட்டியுள்ள அன்பை நான் கவனிக்காமல் இல்லை. நான் என்றென்றும் அவர்களுக்கு

நன்றி செலுத்தி வரக் கடமைப்பட்டுள்ளேன். சென்ற சில நாட்களாக நான் இருந்து வந்த அமைதித் துறைமுகத்தினின்றும் கொந்தளிக்கும் அலைகடலுக்குள் குதிக்கிறேன். சென்ற சில நாட்களாக துயரக் கதைகள் என் செவிகளில் விழுந்தவண்ணம் இருந்தன. இருப்பினும், எனது பசித்த வயிறு காரணமாக நான் அமைதியை அனுபவிக்க முடிந்தது. உபவாசத்தை முடித்த பிறகு, இந்த அமைதியை அனுபவிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். மற்றவர்கள் படும் துன்பத்தை என்னால் சகிக்க முடியாது. நானும் மனிதன்தானே. துன்பம் துடைக்க வழி காணாதபோது, எனது மனித இயற்கை துடிதுடிக்கிறது. நெடுநாள் காணாத நண்பனைப் போன்று காலனைக் கட்டித் தழுவ ஏங்குகின்றேன். ஆதலால், பம்பாயில் உண்மையான அமைதி நிலவாது, மறுபடியும் குழப்பம் ஏற்பட்டால், இதைவிடப் பெரிய தவத்தை நான் மேற்கொள்ள நேரிடும். இவ்விஷயமாக என் நண்பர்களை இப்பொழுதே எச்சரிக்கின்றேன். பின்னால், அவர்கள் திடுக்கிடவோ, துக்கப்படவோகூடாது. சமூகப் பிரிவுகளிடையே வெறுப்பும் சந்தேகமும் இருந்து, கடந்ததை மறந்து நாம் மன்னிக்கத் தயாராக இல்லாவிட்டால், அதனால் உண்மையான அமைதி ஏற்படாமலிருந்தால், தயவுசெய்து என் உபவாசத்தை முடிக்கும்படி வற்புறுத்தாதீர்கள். அப்படிக் கேட்காமல் இருப்பதைத்தான் உண்மையான நட்பின் அறிகுறியாக நான் கருதுவேன்.

ஹிந்து-முஸ்லிம்களின் பேரில் ஒரு விசேஷப் பொறுப்பைச் சுமத்த நான் துணிகிறேன். அவர்களில் பெரும்பாலோர் ஒத்துழையாமைக்காரர்கள்; அகிம்சை நெறியை ஒத்துக்கொண்டுள்ளார்கள். அவர்களுக்கு எண்ணிக்கைப் பலம் இருக்கிறது. தாற்காலிகமாக அவர்கள் அரசாங்க உதவியில்லாமல் சிறுபான்மையினரின் எதிர்ப்பைச் சமாளித்து நிற்கமுடியும். ஆதலால், இவர்கள் சிறுபான்மையினருடன் நட்புரிமையுடனும் தாராள நோக்கத்துடனும் நடந்துகொண்டால், எல்லாம் சரியாகிவிடும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் புதிய விழிப்பைக் கவனிக்கும்படி பார்சி, கிறிஸ்தவ, யூதர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள், ஹிந்து-முஸ்லிம் ஜனசமூக சாகரத்தில் பல நிறமான நீர்களைக் காண்பார்கள்; கரையருகில் கலங்கிய நீரையும் காண்பார்கள். ஹிந்து-முஸ்லிம் தலைவர்களுடன் அவர்களுடைய தலைவர்களையும் நியாயம் வழங்குவதற்காக ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் துரதிருஷ்ட நிகழ்ச்சியின் பயனாகச் சமூகச் சச்சரவுகளைத் தீர்த்துவைக்கும் மஹாஜன சபை ஒன்று ஏற்படும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நமது எண்ணங்களில் எத்தனையோ வேற்றுமை இருப்பினும், ஒரே கடவுளை வணங்குகின்ற நாம், அனைவரும் இங்கே இந்தச் சிற்றுண்டி விருந்தில் கலந்துகொண்டதுதான் இக்கூட்டத்தின் சிறப்பு எனக் கருதுகிறேன். நமக்குள் இருக்கும்

வேற்றுமைகளைக் குறைத்துக்கொள்ளுவதற்காக நாம் இங்கு கூடவில்லை; நாம் வாழ்க்கையில் முக்கியமெனக் கருதும் ஒரே நோக்கத்தை விட்டுக்கொடுப்பதற்காகவும் இல்லை. ஆனால், நமது தத்துவங்களைப் பின்பற்றி வாழ்ந்துகொண்டே, ஒருவருக்கொருவர் பகைமை உணர்ச்சி இல்லாது இருக்க முடியும் என்பதைக் காட்டுவதற்காகவே நாம் கூடியிருக்கிறோம்.

கடவுள் நமது முயற்சிக்கு அருள் புரிவாராக!

—'எங் இந்தியா' - 24—11—1921

# 7

# இழந்த மதிப்பை மீண்டும் பெறவேண்டும்

பம்பாய் நகர வாசிகளுக்கு,

கடவுள் கிருபையால் நம்மிடையே மறுபடியும் அமைதி நிலவத் தொடங்கியிருக்கிறது. ஒருவர் மண்டையை மற்றொருவர் உடைப்பது, கற்களை எறிவது, கட்டடங்களை எரிப்பது போன்ற அலுவல்களில் இப்போது நாம் ஈடுபட்டிருக்கவில்லை. இருந்தாலும் நம்மில் சிலருடைய மனத்தில் இன்னும் கோபமும், துவேஷமும், பீதியும் இருந்து வருகின்றன. இவை, இங்கே வரும் ஏராளமானவர்களும், கடிதம் எழுதும் ஏராளமான நிருபர்களும் உபயோகிக்கும் பாஷையிலிருந்து நன்கு தெளிவாகின்றன. நமது மனத்திலிருந்து இந்த அசுத்தங்களை யெல்லாம் நாம் அகற்றினால் மாத்திரமே, நாம் அதை உண்மையான அமைதி என்று கூற முடியும். அத்தகைய நிலைமைக்கு முதற்படி என்னவெனில், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களுடைய குற்றத்தை ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்ளுவதுதான். முதன் முதலில் கல்லை எறிந்தவர்கள்தான் குற்றவாளிகளாகக் கருதப்பட வேண்டும். நான் முதலில் வசை மொழியை உபயோகிக்கத் தொடங்கினால், அதன் விளைவாகப் பின்னர் அசம்பாவிதங்களை யெல்லாம் நான் ஏற்றுக்கொண்டுதான் தீர வேண்டும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் முதலில் தாங்கள் பலாத்காரமாக அந்நியக் குல்லாய்களை அகற்றியோ அல்லது கற்களை எறிந்தோ கலகத்தை ஆரம்பித்திருந்தால், அவர்கள்தான் குற்றம் செய்தவர்கள் ஆவர். அவர்கள் மிகப் பெரும்பான்மையோராவர். தவிர சாத்விகப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருப்பவர்கள் பெரிதும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும்தான். எனவே, முதலில் அவர்கள்தான் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இங்கே நான், சட்டப்படி யார் பொறுப்பாளி என்பது பற்றிப் பரிசீலனை செய்யவில்லை. சாதாரணமாக மனிதனுக்கு மனிதன் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பது பற்றியே நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். பார்சிகளும் கிறிஸ்தவர்களும் தங்கள் பங்கிலும் குற்றம் இருக்கிறது என்பதை உணராவிடில், நிரந்தரமான அமைதி ஏற்படும்படி செய்வது கடினமாகும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பலாத்காரத்தை உபயோகித்தபோது, பார்சிகளும், கிறிஸ்தவர்களும் பதிலுக்குப் பதில் தாக்காமல் இருந்திருப்பார்களாயின், அவர்கள் தெய்வத் தன்மை வாய்ந்தவர்களாகக் கருதப் பட்டிருப்பார்கள்; தங்களுடைய ஆன்ம சக்தியின் அதிசயத் தன்மையை அவர்கள் உலகத்திற்குக் காட்டியிருப்பார்கள். அவர்கள் தற்காப்பிற்காக பலாத்காரத்தை உபயோகிக்க முற்பட்டார்கள். அது நியாயமே. எனினும், அவர்கள் கோபாவேசம் கொண்டு தற்காப்பு எல்லைகளை மீறியும் சென்றுவிட்டார்கள். அவர்களில் சிலர் அவசியத்தைக் காட்டிலும் அதிகமாக பலாத்காரத்தை உபயோகித்து விட்டார்கள். அவர்கள் இதை ஒத்துக்கொள்ளாவிட்டால், உடனடியாக இதய ஒற்றுமை ஏற்படும்படி செய்வது கஷ்டமாகிவிடும். ஏனெனில், கோபமூட்டப் பட்டும்கூட தாங்கள் முற்றிலும் சாத்விகமாக இருந்ததாக அவர்கள் கூறுவதை ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒரு கட்சி தனது குற்றத்தைத் தொடர்ந்து சென்று, மற்றொரு கட்சி இடைவிடாது பொறுமையையும் துன்பத்திற்கு உள்ளாவதையும் கடைப்பிடித்துவருமாயின், குற்றமுள்ள கட்சி தனது முயற்சியில் சோர்வடைந்துவிடும். நடவடிக்கையைத் தொடர்ந்து பிரதி நடவடிக்கை இராவிடில், உலகத்திற்குக் கதி மோட்சம் ஏற்பட்டுவிடும்.

பொதுவாக நம்மை யாராவது தூற்றினால், அதற்குப் பதிலாக நாம் அவரது கன்னத்தில் அறைகிறோம். அந்த அடிக்குப் பதிலாக இரண்டு அடிகள் விழுகின்றன. அதற்குப் பதில் உதை, உதைக்குப் பதில் துப்பாக்கி ரவை – இப்படியாக பாவச் சுழல் விரிந்து கொண்டே போகின்றது. அடிக்கு அடி கொடுப்பதில் நம்பிக்கை உடையவர்கள், பொதுவாக சிறிது காலத்திற்குப் பிறகு ஒருவரை யொருவர் மன்னித்து, நண்பர்களாகி விடுகிறார்கள். இந்தப் பொதுவான விதியை நாம் பின்பற்றுவது அசாத்தியமானதா? எனவே, ஒருவருக்கொருவர் செய்த தவறுகளை மறந்து பரஸ்பரம் மன்னிக்கும் இந்த விதியை அனுசரிக்கும்படி பார்சி, கிறிஸ்தவ நண்பர்களைக் கேட்டுக் கொள்ள நான் தயங்கவில்லை.

எனினும், ஹிந்துக்கள் மீதும் முஸ்லிம்கள் மீதும் விசேஷப் பொறுப்பு சுமந்திருக்கிறது என்பதை நான் வற்புறுத்துகிறேன். பார்சி, கிறிஸ்தவ நண்பர்கள் மன்னித்தாலும் மன்னிக்காவிட்டாலும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு, தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளக் கட

மைப் பட்டிருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அமைதியாக இருக்கவேண்டும். கலகத்தில் நஷ்டம் அடைந்தவர்களும், நெருங்கிய சுற்றத்தாரை இழந்தவர்களும் அந்தக் கஷ்டங்களை மறந்திருக்க முடியாது. அவர்களில் சிலர், நஷ்டத்தைத் தாங்க முடியாத அளவுக்கு அவ்வளவு ஏழைகள். அவர்களுடைய நிலையை நாம் நன்கு உணரவேண்டும். ஏற்பட்ட நஷ்டங்களை யாரால் தாங்க முடியாதோ, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை விசாரிப்பதற்கு உத்தியோகப் பற்றற்ற, பாரபட்சமற்ற ஒரு கமிட்டி நியமிக்கப்படும் என்றும், அவ்விதம் துன்பத்திற்கு உள்ளானவர்களுக்கு உதவி செய்ய அவசியமான நிதி வசூலிக்கப்படும் என்றும் நான் நம்புகிறேன். அதே சமயத்தில் எவரும் சட்டத்தின் உதவியையோ, அல்லது சர்க்காரின் உதவியையோ நாடமாட்டார்கள் என்றும் நம்புகிறேன். நான் இவ்விதம் யோசனைகூறுவது, ஒத்துழையாதாருக்கு மட்டும் அல்ல, எல்லோருக்குமே தான். ஏனெனில், தனி நபர்களின் மத்தியஸ்தத்தினால்தான் அத்தகைய விஷயங்கள் அதிக உண்மையாகவும், நியாயமாகவும் தீர்க்கப்படும். இதை நான் என் பரந்த அனுபவத்திலிருந்து கூறுகிறேன். மனக் கசப்புகளைத் தவிர்ப்பதற்கான வழியும் இதுதான். ஒருவர் மீது ஒருவர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரும் எண்ணத்தை விட்டுவிடவேண்டும்; இனி அவ்விதம் ஏற்படாமல் முன்கூட்டியே தடுப்பதற்கான முறைகளில் நாம் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். இது தான் அமைதி ஏற்படும்படி செய்வதற்கு மிக மிக எளிதான முறையாகும். அவ்விதம் செய்தால்தான், மீண்டும் அத்தகைய பைத்தியக்காரத்தனத்திற்கு இடம் ஏற்படாது. எனவே, பம்பாய் அத்தகைய முறைகளைக் கைக்கொண்டு, தான் இழந்த புகழையும் பெருமையையும் மீண்டும் அடையும் என்று நம்புகிறேன்.

உங்கள் ஊழியன்,

**மோ. க. காந்தி**

—'எங் இந்தியா'–1–12–1921

பகுதி ஐந்து

# ஹிந்து - முஸ்லிம் பிணக்கு

## 1

## மிரட்டுவது மத வழியல்ல

டாக்டர் சோயித்ராம் எனக்கு சில பத்திரிகைத் துணுக்குகளை அனுப்பியிருக்கிறார். அவை ஒருவாறு சிந்துவில் புகைந்துகொண்டிருக்கும் பூசலைப் பற்றித் தெரிவிக்கின்றன. இது சம்பந்தமான நுணுக்கங்களில் புக எனக்கு விருப்பமில்லை. ஹிந்து - முஸ்லிம் பிணக்கை மத்தியஸ்தம் செய்துகொள்ள முயற்சி நடந்துள்ளது. டாக்டர் சோயித்ராமும், சேத் ஹாஜு அப்துல்லா ஹரூனும் தாங்கள் சொல்ல வேண்டியதைப் பத்திரிகைகள் மூலம் சொல்லிவிட்டார்கள். மனமாற்றத்திற்கு முன்னால் மத்தியஸ்தம் இருக்க முடியாதென சேத் ஹாஜு அப்துல்லா ஹரூன் சொல்லுகிறார். காரணம் எதுவாயினும், மத்தியஸ்தம் நடக்க முடியாமல் போனது துரதிருஷ்டமே. கலவரம் நடந்த இடங்களில் போலீஸ் காவல் இருப்பதும், ஹிந்துக்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று உணருவதும்தான் இதிலெல்லாம் மிகவும் மனதைப் புண்படுத்தக்கூடிய செய்தியாகும். இது உண்மையானால், ஏதோ பெரிய தவறு இருக்கிறதென்றே தோன்றுகிறது. தவறு யாருடையதாயினும், அதிகாரத்தை யாரும் தாங்களே கையாளக் கூடாதென்று இரு சாராரும் உணர வேண்டும். தங்களுக்குள் மத்தியஸ்தம் செய்துகொள்ள முடியாவிட்டால் இவர்கள் நியாயஸ்தலத்தை நாடலாம். ஆனால், ஒரு சாரார் மற்றொரு சாராரை மிரட்டக் கூடாது. அவ்விதம் செய்வது ரத்தக்களரியில்தான் வந்து முடியும்; அது சிறிதும் மதத்தின் வழியாகாது.

ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி எனது கருத்துக்களை வெளியிடுவதற்கு நான் துடிதுடித்துக்கொண்டிருக்கிறேன். என்பதை எனது ஹிந்து - முஸ்லிம் நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சில நண்பர்கள், நானும் அவர்களும் இவ்விஷயத்தைக் கலந்தாலோசிக்கும் வரை நான் எதுவும் சொல்லக்கூடாதெனக் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். இந்தத் தகராறைப் பற்றிய செய்திகள் தினமும் வந்துகொண்டிருக்கின்றன. இவைகளிலிருந்து நாட்டில் ஹிந்து - முஸ்லிம் பிரச்னையைப் போன்ற மகத்தானது

வேறொன்றும் தற்சமயம் இல்லை என்பது உறுதியாகிறது. இப்போதிருக்கும் அதிருப்திகரமான நிலையிலிருந்து மீள, ஏதாவது வழி கண்டுபிடிக்கப்படுமென நம்புகிறேன்.

# 2

# ஹிந்து - முஸ்லிம் குற்றச்சாட்டுகள்: காரணமும் பரிகாரமும்

## ஹிந்துக்களின் குற்றச்சாட்டு

தாங்கநீகாவில் வசிக்கும் ஒரு ஹிந்துவிடமிருந்து, பண்டித பனாரசிதாஸ் சதுர் வேதி ஒரு செய்தி கொண்டுவந்துள்ளார். அதன் சாரம் பின்வருமாறு: "முல்டானில் முஸ்லிம்கள் செய்த அட்டூழியங்களுக்குக் காந்திதான் பொறுப்பாளி என்று அவரிடம் சொல்லுங்கள்."

இந்த முக்கியமான பிரச்னையைப் பற்றி எழுதுவதற்கு நான் தயாராக இல்லாததால், அச்செய்தியை இதற்கு முன் வெளியிடவில்லை. ஆனல், இதற்குள் பல கடிதங்கள் வந்துவிட்டன. நன்கு தெரிந்த சில நண்பர்களும் எழுதியிருக்கிருர்கள். மாப்பிள்ளைமார்கள் செய்ததாகச் சொல்லும் அட்டூழியங்களுக்கும், ஏன், கிலாபத்துக் கிளர்ச்சிக்குப் பின் ஹிந்துக்கள் நஷ்டமடைந்ததாகச் சொல்லப்படும் எல்லாக் கலவரங்களுக்குமே நான்தான் பொறுப்பு என்கின்றனர். "கிலாபத் பிரச்னையில் முஸ்லிம்களுடன் தோழமை பூணும்படி சொன்னீர்கள். அத்துடன் நீங்கள் சேர்ந்திருந்ததால், வேறு எவ்வழியிலும் பெறமுடியாத அளவுக்கு அது முக்கியத்துவம் பெற்றுவிட்டது. முஸ்லிம்களை ஐக்கியப் படுத்தி, அவர்கள் விழிப்படையச் செய்தது, என்றுமில்லாத அளவுக்கு மௌல்விகளுக்கும் மதிப்பு ஏற்பட்டது. கிலாபத் பிரச்னை இப்போது தீர்ந்து போய்விட்டபடியால், விழிப்புற்ற முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு விரோதமாக 'ஜிஹாத்' தை ஆரம்பித்திருக்கிருர்கள்." இதுதான் நண்பர்களின் வாதமாகும். குற்றச்சாட்டின் சுருக்கத்தை மரியாதையான நடையில் சொல்லியிருக்கிறேன். சில கடிதங்கள் அச்சிடத் தகுதியற்ற வசைமாரியாக இருக்கின்றன. இவ்வளவுதான் என் மீது ஹிந்துக்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு.

## முஸ்லிம்களின் குற்றச்சாட்டு

ஒரு முஸ்லிம் நண்பர் சொல்லுகிருர்:

கிலாபத் ஆபத்திலுள்ளது, ஹிந்து-முஸ்லிம்களின் ஒன்றுபட்ட கிளர்ச்சியால் அதைத் தடுக்கலாம் என்பதை மதப்பற்றும் எளிய இயல்பும்

உள்ள முஸ்லிம் சமூகம் நம்பியது. ஒன்றும் அறியாத இந்த ஜனங்கள் உங்களுடைய அலங்கார வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து உற்சாகம் காட்டினர். அதன் பலனை, நீதிமன்றம், பள்ளிக்கூடம் முதலியவைகளைவிட்டு முதலில் வெளியேறியவர்கள் அவர்கள்தான். சர்சையத், தனது வாழ்நாள் முழுதும் உழைத்து உருவாக்கிய புகழ்பெற்ற அலிகார் ஸ்தாபனம், அதைப் போன்றவைகளுள் முதன்மையானது. அது முற்றும் கெட்டுப் போய்விட்டது. ஹிந்து சமுதாயத்திற்கு இப்படிப்பட்ட ஸ்தாபனம் ஒன்றுண்டா? இருந்தாலும், அது இம்மாதிரி கெட்டுவிட்டதா? இதை அறிய ஆவலுள்ளவனாக இருக்கிறேன். தங்களுக்கும் சமுதாயத்திற்கும் சிறப்பளிக்கும் முறையில் பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெறவிருந்த பல இளைஞர்களை எனக்குத் தெரியும். இவர்கள் மதம் காரணமாகப் படிப்பை விடும்படி தூண்டப்பட்டனர். பலன், அவர்களின் சர்வ நாசம்தான். இதற்கு மாறாக, ஒரு சில ஹிந்துக்கள்தான் படிப்பை விட்டார்கள். இவர்களும் இயக்கம் தள்ளாடுகிறதெனத் தெரிந்தவுடன், மறுபடியும் பள்ளிகளில் சேர்ந்துகொண்டனர். வக்கீல்களின் கதியும் இதுவே. அக்காலத்தில், இரு சமூகத்தினரிடையேயும் ஒருவித ஐக்கியத்தை உண்டுபண்ணினீர்கள். அது நிலையானதென்று நீங்கள் எங்கும் விளம்பரம் செய்தீர்கள். எளிய சுபாவமுடைய முஸ்லிம்கள் அதை நம்பினார்கள். அதன் பலனை அஜ்மீர், லக்ஷ்மணபுரி, மீரத், ஆக்ரா, சஹரன்பூர், லாகூர் முதலிய இடங்களில் அவர்கள் கொடூரமாக நடத்தப்பட்டார்கள். ஸ்ரீ முகமது அலி, பிறவியிலேயே பத்திரிகைத் தொழிலில் நிபுணர். 'காம்ரேட்' என்னும் அவரது சிறந்த பத்திரிகை முஸ்லிம் சமூகத்தினரிடையே நல்ல வேலை செய்து வந்தது. அவரை நீங்கள் கவர்ந்துகொண்டீர்கள். இப்பொழுது முஸ்லிம் சமூகத்திற்கு அது ஒரு பெரிய நஷ்டம். உங்கள் ஹிந்துத் தலைவர்கள் 'சுத்தி','சங்கதன்' என்னும் போர்வையில் முஸ்லிம் சமூகத்தைப் பலவீனப்படுத்த முயற்சிக்கின்றனர். சட்டசபைகளுக்குப் போகக்கூடாதென்று நீங்கள் செய்திருக்கும் குறுகிய நோக்குடைய முடிவினால் இந்தச் சமூகத்திற்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. உங்களுடைய கட்டளை காரணமாக, மிகக் திறமைசாலிகளில் பெரும்பாலோர் சட்டசபைக்குள் பிரவேசிக்காமல் இருந்துவிட்டனர். இந்நிலையில் முஸ்லிம்களை, அவர்கள் ஒரு சிலரேயாயினும், உங்கள் பக்கத்தில் இன்னும் வைத்துக்கொண்டிருப்பதன் மூலம் நீங்கள் முஸ்லிம் சமூகத்திற்குப் பெரும் தீங்கு விளைவிப்பதாக உண்மையில் நம்பவில்லையா?"

இது கடிதத்தின் சுருக்கமேயாகும். எனினும், இந்தச் சுருக்கம் முஸ்லிம்கள் என்மீது சுமத்தும் குற்றச்சாட்டின் சாராம்சத்தைத் தெரிவிக்கிறது.

## குற்றவாளியல்ல

இரு தரப்பினருக்கும் நான் குற்றவாளியல்ல என்பதைத் தெரிவிக்க வேண்டும். மேலும் நான், சென்றதைக் குறித்து சிறிதும் வருத்தப்படவில்லை. நான் தீர்க்கதரிசியாக இருந்து, நடக்கப்போவதை எல்லாம் தெரிந்துகொண்டிருந்தாலும், நான் கிலாபத் கிளர்ச்சியில் ஈடுபட்டுத்தான் இருப்பேன். இரு சமூகங்களுக்குமிடையே இப்போது மனக்கசப்பு இருந்தபோதிலும், இவ்விரு சாராருமே லாபமடைந்திருக்கின்றனர். பொதுமக்களிடையே விழிப்பு ஏற்பட வேண்டியது பயிற்சிக்கு அவசிய

மான ஓர் அம்சம். இதைப் பெறுவதே ஒரு மகத்தான லாபம். மறு படியும் மக்களைத் தூக்கத்திலாழ்த்த நான் எதுவும் செய்யேன். விழிப்பைச் சரியான வழியில் திருப்பிப் பயன்படுத்துவதில்தான் நமது திறமை இருக்கிறது. நம் முன்னர் இருக்கும் இந்நிலை வருந் தத்தக்கது. ஆனால், அது நமக்குச் சோர்வை உண்டாக்க வேண்டியதில்லை. நம்மிடம் மட்டும் நமக்கு நம்பிக்கை வேண்டும். இப்புயல், வரப்போகும் அமைதிக்கான அறிகுறியே. பலம் உடை யோம் என்ற அறிவால் அமைதி நிலவும்; தோல்வியினாலும் களைப்பின் சோர்வினாலும் அது உண்டாவதில்லை.

பல்வேறு இடங்களில் நடந்த கலவரங்களைப் பற்றி நான் தீர்ப்பளிப்பேனென்று பொதுமக்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். தீர்ப்பளிக்கவும் எனக்கு இஷ்டமில்லை. தீர்ப்பளிக்க நான் விரும் பினாலும், என் முன் உண்மை விவரங்களில்லை.

**மாப்பிள்ளைகள்**

காரணங்களைப் பற்றிச் சிறிது சொல்லுகிறேன். மலையாள நிகழ்ச்சிகள் சந்தேகமின்றி ஹிந்துக்களைக் கலவரப்படுத்தி விட்டன. உண்மை என்ன என்பது ஒருவருக்கும் தெரியாது. மாப்பிள்ளைகளின் அட்டூழியங்கள் சொல்லத் தரமன்று என ஹிந்துக்கள் சொல்லுகிறார்கள். இவையெல்லாம் அளவுக்கு மீறி மிகைபடுத்தப்பட்டவை என டாக்டர் முகமது சொல்லுகிறார். ஹிந்துக்களின் மீதும் மாப்பிள்ளைகளுக்குப் புகார் கூற இடம் இருப்பதாயும், பலவந்தமான மத மாற்றம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லையென்றும் அவர் கூறுகிறார். ஓரிடத்தில் நடந்த தாகக் கூறப்படும் மத மாற்றமும் ருசுப்பிக்கப்படவில்லை. டாக்டர் முகமது கண்ட இந்த முடிவுகளை ஹிந்துக்களும் அங்கீ கரித்துள்ளனர். இரு தரப்பினர் சொல்லுவதையும் சொல்லிவிட் டேன். இதிலிருந்து நாம் சரியான உண்மையைக் காணுவது முடியாத காரியம். அத்துடன், நமது எதிர்காலப் போக்கை நிர்ணயிக்க அது உதவவும் மாட்டாது. இதுவே எனது முடிவு. பொது மக்களும் இந்த முடிவுக்கே வருவார்களென்று நம்பு கிறேன்.

**முல்டானிலும் மற்ற இடங்களிலும்**

முல்டான், சஹரன்பூர், ஆக்ரா, அஜ்மீர் முதலிய இடங்களில் ஹிந்துக்கள்தான் அதிகக் கஷ்டப்படுகிறார்கள். பால்வாலில் முஸ்லிம்கள் தங்களுடைய தாற்காலிகமான மசூதியைப் புதுப் பித்துப் பலப்படுத்திக் கொள்ளுவதை ஹிந்துக்கள் தடுத்தனர் என்று சொல்லப்படுகிறது. கட்டிய சுவரின் பகுதியைத் தகர்த் ததுமின்றி முஸ்லிம்களை மசூதியே கட்டுவதில்லை யென்றும் 'அஜான்'* சொல்லுவதில்லையென்றும் வாக்குறுதி கொடுக்கா விடில், அவர்கள் அக்கிராமத்திலிருக்க முடியாதென்று விரட்டிய

* 'அஜான்' என்பதற்கு, தொழுகைக்காக மசூதியில் விடுக்கும் அழைப்பு என் பது பொருளாகும்.

தாகவும் கூறப்படுகிறது. இங்கிலே ஒரு வருடத்துக்கு மேல் நீடித்த தாம். விரட்டப்பட்ட முஸ்லிம்கள் ரோடாக்கிற்கு அருகில் தாற்காலிகமான குடிசைகளில் வசித்து வருகிருர்களாம்.

தார்வார் ஜில்லாவைச் சேர்ந்த பையேடில் மசூதியின் முன் சங்கீதம் முழங்குவதை முஸ்லிம்கள் தடுத்தனர். ஹிந்துக்கள், முஸ்லிம்களை நையப்புடைத்து மசூதியையும் தகர்த்துவிட்டனர். அத்துடன் முஸ்லிம்கள் மீது குற்றம் சாட்டிக் கைது செய்யும்படியும் ஏவினர்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும், நிலைநாட்டப் பெற்ற உண்மைகளென்று இங்கே நான் குறிப்பிடவில்லை. முஸ்லிம்களுக்கும், ஹிந்துக்கள் மீது புகார் சொல்ல இடமிருக்கிறது என்பதைக் காட்டவே இதைக் குறிக்கிறேன்.

ஹிந்துக்கள் எங்கே பலமாகவும், முஸ்லிம்கள் நிச்சயமாகப் பலவீனமாகவும் இருந்தார்களோ அங்கெல்லாம், பல வருடங்களுக்கு முன் கர்த்தர்பூர், அர்ரா முதலிய இடங்களில் நடந்தது போல், முஸ்லிம்கள் ஈவிரக்கமின்றி நடத்தப்பட்டனர் என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். ரத்தம் கொதிக்கும் சமயம், மனிதன் மிருக நிலைக்கு வந்து, மிருகம் போலவே நடக்கிருன். அவன் ஹிந்து, கிறிஸ்தவன், முஸ்லிம் அல்லது வேறு எந்தப் பெயர் கொண்டவனுயினும் சரி, இதுதான் உண்மை.

### சங்கடத்தின் கேந்திரம்

பஞ்சாப்தான் தொந்தரவின் விளைநிலமாக இருக்கிறது. ஸ்ரீ பாசில் ஹுசேன், அரசாங்க உத்தியோகங்களில் கணிசமான ஒரு பகுதியை கோழைத்தனமாக முஸ்லிம்களுக்கு கொடுக்க முயற்சித்தார். இதைக் கண்டு ஹிந்துக்கள் கடுமையாகக் கண்டிக்க முற்பட்டார்கள். ஹிந்துக்கள் எங்கெங்கு உத்தியோகத்தில் தலைமைப் பதவி வகித்தார்களோ, அங்கெல்லாம் முஸ்லிம்கள் சர்க்கார் வேலை பெறுவதிலிருந்து வேண்டுமென்றே விலக்கப்பட்டனர். இவைதான் முஸ்லிம்களின் புகார்கள்.

எனவே, தகராறின் காரணங்கள் மத சம்பந்தமானவை மட்டுமல்ல. நான் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாம் தனிப்பட்டவை. ஆயினும், தனிப்பட்டவர்களின் அபிப்பிராயத்தின் சாயல்தானே பொதுமக்களின் மனம்.

### அகிம்சை அலுத்துவிட்டது!

உடனடியாக நிகழ்ந்த காரணம்தான் மிகவும் அபாயகரமானது. சிந்திக்கும் சக்தியுடைய பகுதியினர், அகிம்சையில் சலிப்படைந்துவிட்டதாகத் தெரிகிறது. அகமதாபாத், விரம்காம் சோக சம்பவங்களுக்குப் பிறகும், பம்பாயில் காலிகளால் உண்டான குழப்பத்திற்குப் பிறகும், சௌரி சௌரா பலாத்கார அட்டூழியங்களுக்குப் பிறகும், நான் சத்தியாக்கிரகத்தை நிறுத்தி

யதை இவர்கள் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. கடைசி நிகழ்ச்சி எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி போடப் போது மானதாயிருந்தது. சத்தியாக்கிரகத்திலும், எனவே சுயராஜ் யத்திலும் இருந்த நம்பிக்கைக் கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து விட்டதாகவே இவர்கள் கற்பனை செய்துகொண்டார்கள். சுய ராஜ்யத்திற்குச் சமீப காலத்தில் வழியில்லை என்றும் இவர்கள் கருதினார்கள். அகிம்சையில் இவர்களது நம்பிக்கை மேலெ ழுந்தவாரியாகவே இருந்தது. "எனக்கு உங்கள் அகிம்சையில் சிறிதும் நம்பிக்கையில்லை. எனது முஸ்லிம் சகோதரர்கள் இதை உங்களிடமிருந்து கற்பதை நான் விரும்பேன். பலாத்காரமே வாழ்வின் நியதி. நீங்கள் கூறும் அகிம்சையின் மூலம் சுயராஜ் யம் பெறுவதில் எனக்கு விருப்பமில்லை. எனது விரோதியை நான் வெறுக்கத்தான் செய்வேன்." இது இரண்டு வருடங்களுக்கு முன் ஒரு முஸ்லிம் இதய சுத்தியுடன் என்னிடம் சொல்லியதாகும். இந்த நண்பர் நேர்மையுள்ளவர். அவருக்கு நான் மரியாதை காட்டுகிறேன். இம்மாதிரியே என்னுடைய மற்றொரு முஸ்லிம் நண்பரைப்பற்றிச் சொல்லப்படுகிறது. எனக்குக் கிடைத்திருக் கும் செய்தி பொய்யாக இருக்கலாம். ஆனால், செய்தி தெரி விப்பவர் பொய் சொல்லுபவர் அல்ல.

### ஹிந்துக்களின் அருவருப்பு

அகிம்சையைப்பற்றிய இந்த அருவருப்பு முஸ்லிம்களிடை மட்டும்தான் என்பதல்ல. ஹிந்து நண்பர்கள் இதையே இன்னும் அதிகக் கடுமையாகச் சொல்லியுள்ளார்கள். அகிம்சையை நான் அதன் தீவிர நிலையில் நம்புவதாலும், பரப்புவதாலும், எனக்கு ஹிந்து மதத்தில் இடமளிக்கவும் மறுக்கின்றனர். நான் மாறு வேடத்தில் உள்ள ஒரு கிறிஸ்தவன் என்றுகூடச் சொல்லுகின்ற னர். பெரும் காவியமாகிய கீதை கலப்பற்ற அகிம்சையையே போதிக்கிறதென நான் சொல்லும்போது, அது கீதையைத் திரித்துக் கூறுவதாகுமென்று அவர்கள் எனக்குச் சொல்லுகிறார் கள். சில சமயங்களில் கொலை செய்வது கடமையாகும் எனக் கீதை போதிப்பதாகச் சில ஹிந்து நண்பர்கள் சொல்லுகின்ற னர். நம்மிடை இருக்கும் நல்ல சக்திகளுக்கும் தீய சக்திகளுக்கு மிடையேயுள்ள சாசுவதமான போரைக் கீதை பிரதிபலிக்கிறது என்பது சில பாஷ்யக்காரர்களின் கருத்தாகும். நம்மிடமுள்ள தீய சக்திகளைத் தயங்காது, கருணையின்றி, வேரறுக்க வேண்டும் என்று அது போதிக்கிறது. இப்படிக் கீதையை நான் வியாக் கியானம் செய்வதற்கும், பாஷ்யக்காரரின் பாஷ்யத்துக்கும் கொஞ்சமும் ஆதாரமில்லையென்று கற்றறிந்த சாஸ்திரி ஒருவர் சில நாட்களுக்கு முன் சொன்னார். இவர் கீதைக்கு நான் கூறும் அர்த்தத்தை நிராகரிக்கிறார்.

இப் பிரச்னையைத் தீர்க்க நான் கூறும் வழிகளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அகிம்சைக்கு எதிராகக் கூறுபவை

களை அறிவது அவசியம். ஆதலால்தான் இந்த விவரங்களை எல்லாம் நான் சொல்லுகிறேன்.

அகிம்சை பரவுவதைத் தடுக்கும் முயற்சிகளை என்னைச் சுற்றிலும் நான் காண்கிறேன். பலாத்காரம் பொங்கி வருவதை நான் உணருகிறேன். இந்தச் சலிப்பின் தீவிரமான தோற்றம் தான் ஹிந்து-முஸ்லிம் பிணக்கு ஆகும்.

என்னைப் பொருட்படுத்த வேண்டாம். எனது மதம், என்னைப் படைத்தோனுக்கும் எனக்கும் மட்டுமுள்ள ஒரு விஷயமாகும். நான் ஒரு ஹிந்துவானல், ஹிந்து சமூகம் முழுதுமே என்னைப் புறக்கணித்தாலும் நான் ஹிந்து அல்ல என்று ஆகிவிடமாட்டேன். இருப்பினும், எல்லா மதங்களின் முடிவும் அகிம்சையே என்பதுதான் நான் கூறுவதாகும்.

**எல்லைக்கு உட்பட்ட அகிம்சை**

அதிதீவிரமான அகிம்சையை எக்காலத்திலும் நான் இந்தியாவில் போதித்ததில்லை. ஏனெனில், அந்தப் புராதனமான தத்துவத்தை மீண்டும் போதிப்பதற்கு நான் தகுதி வாய்ந்தவன் அல்ல என்றே கருதுகிறேன். நான் அந்த அகிம்சையை முற்றிலும் புரிந்துகொண்டுள்ளேன். எனினும், என்னிடத்தில் அது ஊறிப்போய் என்னேடு ஒன்ருகிவிடவில்லை. எனது வாழ்க்கையில் பல தடவைகள் அனுஷ்டித்துப் பாராத ஒன்றை, மற்றவர்களைச் செய்யும்படி நான் சொன்னதே கிடையாது. இது தான் எனது பலமாகும். ஆகையால், இன்று சுயராஜ்யம் அடைவதற்கும், பல சமூகங்களுக்குள்ளும் உள்ள உறவை நிலைநிறுத்துவதற்கும் மட்டுமே அகிம்சையைப் பின்பற்றுமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஹிந்து, முஸ்லிம், பார்சி, சீக்கியர், கிறிஸ்தவர் முதலியோர் தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளைப் பலாத்காரத் தால் தீர்க்க முயற்சிக்கக்கூடாது. அகிம்சையை நான் இந்தியாவின் ஆயுதமாக உபயோகிக்க விரும்புகிறேன். இது பலவீனர்களின் ஆயுதம் அல்ல; பலவான்களுடையதே.

மதத்தில் கட்டாயம் கூடாது என்பதைப் பற்றி ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பிரமாதமாகப் பேசிக்கொள்ளுகிருர்கள். பசுவைக் காப்பதற்காக ஹிந்து ஒரு முஸ்லிமைக் கொன்ருல், அது கட்டாயப்படுத்துதல் இல்லாமல் வேறென்ன? அது ஒரு முஸ்லிமைப் பலவந்தத்தால் ஹிந்து மதத்தில் சேர்ப்பதையே ஒக்கும். இது போலவே, மசூதியின் முன் ஹிந்துக்களின் சங்கீதத்தைப் பலவந்தமாகத் தடைசெய்வதும் கட்டாயப்படுத்துதல் இல்லாமல் வேறென்ன? கூக்குரல், குழப்பம் இவற்றிற்கிடையேயும் தனது பிரார்த்தனையில் ஆழ்ந்திருத்தல்தான் பக்திக்கு அழகு. நமது மதக்கோட்பாடுகளை மற்றவர்கள் கௌரவிக்க வேண்டுமெனப் பலவந்தம் செய்து வந்தோமானல், வருங்காலச் சந்ததிகள் நம்மை மத வாழ்வற்ற காட்டுமிராண்டிகள் என்றே மதிப்பர். மற்றும், ஒரு லட்சம் ஆங்கிலேயர்களை வழிப்படுத்த

முப்பது கோடி ஜனங்களடங்கிய ஒரு தேசம் பலாத்கார வழிகளைக் கையாளுதல் வெட்கக்கேடான காரியமாகும். அவர்களை மனமாற்றம் அடையச் செய்வதற்கோ, அல்லது நீங்கள் விரும்புகிறபடி அவர்களை நாட்டைவிட்டு விரட்டு வதற்கோ, நாம் ஆயுத பலத்தை நாட வேண்டியதில்லை; மன வலிமையே போதும். பிந்தியது நம்மிடம் இல்லையேல், முந்தியதை நாம் என்றும் அடைய முடியாது. மனவலிவை வளர்த்தால், ஆயுத பலம் அவசியமில்லை என்பதை நாமே உணருவோம்.

ஆதலால், நமது தேசீய வாழ்வுக்கு, நான் குறிப்பிட்ட காரியங்களுக்காக, அகிம்சையை ஏற்றுக்கொள்ளுதல் முற்றும் இயல்பானதும் அவசியமானதுமே ஆகும். நமது ஐக்கிய உடல் வலிவை, இத்தகைய உபயோகமற்ற சகோதரக் கொலையில் இழப்பதைக் காட்டிலும், சிறந்த காரியங்களுக்காகச் சேமித்து வைக்க இது நமக்குப் பயிற்சி அளிக்கும். தேசத்தின் முழு ஆதர வில்லாத ஆயுதம் தாங்கிய கலகம் ஒவ்வொன்றும் பைத்தியக் காரத்தனமானது. ஆனல், நம் நோக்கத்தை ஒரு துளி இரத்தம் கூடச் சிந்தாமல் ஒத்துழையாமையின் எந்தத் தனிப் பகுதியைக் கொண்டும் சாதிக்கலாம். ஆனல் அதை, தேசம் மட்டும் ஆதரிக்க வேண்டும்.

"கொள்ளைக் கூட்டத்தார், திருடர், நாடுபிடிக்க வரும் அயலார் இவர்களிடம் நீங்கள் பலாத்காரத்தைக் காட்டா தீர்கள்" என நான் சொல்லவில்லை. இக் காரியங்களைத் திறம் பட நடத்த வேண்டுமாயின், நம்மை நாமே கட்டுப்பாட்டிற்கு உட்படுத்திக்கொள்ளக் கற்றுக்கொள்ளவேண்டும். சிறுசிறு கார ணத்திற்கெல்லாம் துப்பாக்கியைத் தூக்குவது பலத்தின் அறி குறியல்ல; அது பலவீனத்தின் சின்னமே. பரஸ்பரக் குத்துச் சண்டைகள் ஆண்மையை அழிக்கும்; பலாத்காரத்தில் பயிற்சி தரா. எனது அகிம்சை முறை பலமிழக்கும் வழியல்ல. தேசம் ஆபத்தான நிலைமையில் இருக்கிற சமயங்களில் சரியானபடி உதவக் கூடியது, தேசம் பூராவும் ஏகோபித்துக் கடைப் பிடிக்கும் அகிம்சையில் உண்டாகும் பலாத்காரந்தான். கட்டுப் பாட்டோடு செய்யும் அகிம்சை முயற்சி, எந்தப் பலாத்காரத்தை யும்விடப் பலம் பொருந்தியதாகிவிடும்.

**உண்மையான அகிம்சையில்லை**

அகிம்சைப் பழக்கத்தால், நாம் சோம்பேறிகளாகவும், மந்த புத்தியுள்ளவர்களாகவும் ஆகிவிட்டோமெனச் சிலர் நம்புகின்ற னர். இவர்கள் மட்டும் சிறிது சிந்தித்துப்பார்த்தால், நாம் ஒரு நாளும் அகிம்சையை அதன் உண்மையான பொருளில் கைக் கொண்டதில்லை என்பதைக் காண்பார்கள். நாம் நேரடியாக உடலுக்குத் தீங்கு செய்யாதிருந்தபோதிலும், நமது நெஞ்சு மட்டும் குமுறிக்கொண்டுதானிருக்கிறது. மனம், மொழிகளை நமது வெளிச் செயல்களுடன் ஒன்றுபடும்படி நேரிய முறையில் நாம் முயன்றிருப்போமேயானல், நமக்கு இப்பொழுது சோர்வு தட்டி

யிருக்காது. நமக்கு நாமே உண்மையாக நடந்துகொண்டிருந்தால், நாம் இதற்குள் இணையற்ற பலத்தையும் மனவலிவையும் பெற்றிருப்போம்.

மேலே குறிப்பிட்ட இரண்டு காரியங்களுக்காக மட்டும் அகிம்சையை உபயோகிப்பதில் முன்னர் நமக்கு ஏதாவது நம்பிக்கை இருந்து மீண்டும் நாம் நம்பிக்கை கொள்ளுவோமேயானல், இரு சமூகங்களுக்கிடையே இப்போதுள்ள பிணக்கு பெரும்பாலும் குறைந்துவிடும் என்பது எனது நிச்சயமான அபிப்பிராயமாகும். ஆதலால்தான் அகிம்சையைப்பற்றிய தவருன கொள்கைகளை நான் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். பிணக்கைத் தீர்ப்பதற்குள்ள வழிகளைப்பற்றி விவாதிப்பதற்குமுன் நமக்குள் பரஸ்பரம் ஹிம்சை செய்யக்கூடாது என்ற மனப்போக்கு இருப்பது அவசியமென நான் கருதுகிறேன். எங்காவது, எப்போதாவது தகராறு ஏற்பட்டால், இரு தரப்பினரில் எவரும் பலத்தைப் பிரயோகம் செய்துவிடக் கூடாது. தனிப்பட்டவர்களைக் கொண்டு மத்தியஸ்தம் செய்தோ, அல்லது நியாய மன்றங்களுக்குச் சென்றே தீர்த்துக்கொள்ளவேண்டும். இதை இரு சமூகத்தினரும் உணர்ந்துகொள்ளவேண்டும். சமூக விஷயங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அகிம்சையின் முழு அர்த்தமும் இதுதான். சமூக வாழ்வு சம்பந்தமான காரியங்களில் அபிப்பிராய பேதம் வந்தால், நாம் ஒருவருக்கொருவர் மண்டையை உடைத்துக்கொள்ளுவதில்லை, இதைப் போலவே, மத சம்பந்தமான விஷயங்களிலும் சாவதானமாக நடந்துகொள்ள வேண்டும். உடனடியாக இரு தரப்பினருக்குள்ளும் செய்துகொள்ள வேண்டிய ஒப்பந்தம் இது ஒன்றுதான். மற்றவையெல்லாம் தாமாகப் பின்தொடரும்.

### துஷ்டனும் கோழையும்

இதை ஒத்துக்கொள்ளாதவரையில், தப்பு அபிப்பிராயங்களை நீக்கிக் கௌரவமான, நிலையான முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்படாது. இந்தச் சாதாரண அடிப்படையை இரு தரப்பினரும் ஒத்துக்கொள்ளுகிறர்களென வைத்துக்கொண்டு அடிக்கடி குழப்பம் உண்டுபண்ணும் காரணங்களைப்பற்றி யோசிப்போம். பெரும்பாலான சச்சரவுகளில் ஹிந்து இரண்டாந்தரமாகவே யிருக்கிறன் என்பதில் எனக்குச் சந்தேகமே யில்லை. சாதாரணமாக முஸ்லிமோ துஷ்டன்; ஹிந்துவோ கோழை. இது என் அனுபவம். ரெயில்களிலும், பொது வீதிகளிலும், நான் சமரசம் செய்துவைத்த சச்சரவுகளிலும் இதைக் கவனித்திருக்கிறேன். ஒரு ஹிந்து, தனது கோழைத்தனத்திற்கு முஸ்லிமைக் குறை கூறலாமா? கோழைகள் எங்கெங்கெல்லாம் இருக்கிறர்களோ அங்கெல்லாம் துஷ்டர்களும் இருப்பார்கள். சஹரன்பூரில், முஸ்லிம்கள் பணப்பெட்டிகளை உடைத்து வீடுகளைக் கொள்ளையடித்தார்களாம். ஒரு இடத்தில் ஒரு ஹிந்துப் பெண்ணைக் கற்பழித்தார்களாம். குற்றம் யாருடையது?

இவ்வெறுக்கத்தக்க நடத்தைக்கு முஸ்லிம்கள் சரியான காரணம் காட்ட முடியாது என்பது உண்மை. எனினும், ஹிந்துவாகிய நான், முஸ்லிம்களின் துஷ்டத்தனத்தைக் கண்டு கோபமடைவதைவிட, ஹிந்துக்களின் கோழைத்தனத்தைக் கண்டு வெட்கமடைகிறேன்.

கொள்ளையடிக்கப்பட்டவர்கள், தம் உரிமைகளைக் காக்கும் முயற்சியில் ஏன் உயிர்விடவில்லை? கற்பழிக்கப்பட்ட சகோதரியின் சுற்றத்தார் அப்போது எங்கே போயிருந்தனர்? அவர்கள் ஒன்றும் செய்திருக்கமுடியாதா? உற்றார் உறவினரை நிராதரவாக விட்டுவிட்டு, ஆபத்திலிருந்து தப்பியோடுவதை, எனது அகிம்சை ஒருபோதும் சகியாது. பலாத்காரம் செய்யலாமா, கோழைத்தனமாக ஓடலாமா என்று கேட்டால், நான் பலாத்காரத்தையே விரும்புவேன். குருடனை நற்காட்சிகளைக் கண்டு ஆனந்திக்குமாறு சொல்லமாட்டேன். அதுபோலவே, கோழையினிடம் அகிம்சைப் பிரசாரம் செய்ய மாட்டேன். அகிம்சை தீரத்தின் சிகரம். எனது அனுபவத்தில் ஹிம்சையில் தேர்ந்த மக்களுக்கு அகிம்சையின் சிறப்பை எடுத்துக்காட்டுவதில் சிரமம் இருந்ததில்லை. பல ஆண்டுகள், நான் கோழையாக இருந்த காலத்தில், என் நெஞ்சில் ஹிம்சை நிறைந்திருந்தது. கோழைத்தனம் நீங்கிய பிறகுதான் அகிம்சையைப் போற்ற ஆரம்பித்தேன். அபாயம் வந்தபோது கடமையினின்றும் நழுவி ஓடித் தப்பிய அந்த ஹிந்துக்கள், அகிம்சையால் அப்படி செய்யவில்லை. அவர்கள் அடிக்கவும் பயப்படவில்லை. ஆனல், உயிரிழக்கவோ அல்லது சிறிது காயம்படவோ அவர்கள் இசையவில்லை. வேட்டை நாயிடமிருந்து தப்பி ஒடுகிற குழிமுயல் சிறந்த அகிம்சைவாதியா? பாவம், வேட்டை நாயைக் காணவே நடுநடுங்கி உயிர் பிழைக்க ஓடுகிறது. தம் உயிரை வெல்லமென நினைத்து ஓடிய அந்த ஹிந்துக்கள், குறுநகையுடன் தம் நெஞ்சைக் காட்டி நின்று கடமையைச் செய்து உயிர் துறந்திருந்தால், உண்மை அகிம்சைவாதிகளாயிருந்திருப்பார்கள். தம் மதத்திற்கு ஒளியையும், தமக்கு அழியாப் புகழையும் சம்பாதித்துக் கொண்டிருப்பார்கள். தாக்கிய முஸ்லிம்களின் நட்பும் கிடைத்திருக்கும். அவ்விடத்திலேயே நின்று திருப்பி அடித்திருந்தால், தம் கடமையைச் செய்வதிலுள்ள சிறப்பு இதைவிடக் குறைந்ததுதான். இருப்பினும், ஓடியதைவிட அது மேலாகவே இருந்திருக்கும். வம்பு செய்யும் முஸ்லிம்களை மரியாதையுள்ள நண்பர்களாக்க ஹிந்துக்கள் விரும்பினல், அவர்கள் கடினமான ஆபத்துக்களையும் எதிர்த்து உயிர் துறக்கப் பயில வேண்டும்.

## பிரச்னை தீர வழி

குஸ்திச் சண்டை மேடைகளை நான் வெறுப்பதில்லை. எனினும், அவைகளின் மூலம் நமது பிரச்னைகள் தீரமாட்டா. உடற் பயிற்சிக்கு அவை வேண்டும். அவை எல்லோருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். ஹிந்து - முஸ்லிம் தகராறு

களில் தற்காப்புப் பயிற்சிக்காக நிறுவப்படுமாயின், இவை தோல்வியடையும் என்பதில் சந்தேகமில்லை. முஸ்லிம்களும் இம்மாதிரியே ரகசியமாகவோ, வெளிப்படையாகவோ, தங்களைத் தயார் செய்துகொள்ளலாம். இது சந்தேகத்தையும், கோபத்தையும் உண்டாக்கும். இவைகளால் பிரச்னை தீர்ந்துவிடாது. மத்தியஸ்த முறைக்குப் பொதுஜன ஆதரவும் அவசியமும் ஏற்படும்படி செய்து, சச்சரவுகளை அசாத்தியமாகும்படி செய்ய வேண்டியது சிந்திக்கும் சக்திவாய்ந்தோரின் கடமையாகும்.

கோழைத்தனத்திற்கு மருந்து உடற்பயிற்சி அல்ல; அபாயங்களை எதிர்த்து நின்று சமாளிப்பதுதான். நடுத்தர வகுப்பு ஹிந்துப் பெற்றோர்கள் கோழைகள். இவர்களின் கோழைத்தனம் இவர்களது மக்களுக்கும் உண்டாகிறது. இவர்கள் இப்படியிருக்கும் வரை, அபாயத்திலிருந்து தப்பவும், சங்கடத்தில் மாட்டிக் கொள்ளாதிருக்கவுமே விரும்புவார்கள். வயது வந்த சிறுவர்களைத் தனியே விட்டுவிட வேண்டும். ஆபத்துக்களைச் சமாளிக்கட்டும். சில சமயங்களில் சாவு வந்தாலும் வரட்டும். சிறிய தேகத்துள்ளும் வலிய நெஞ்சம் இருக்கலாம். உடல் வலிமை வாய்ந்த ஜுலுக்கள்கூட, ஆங்கிலச் சிறுவர்கள் முன்னே அடி பணிந்து போகின்றனர்கள். ஒவ்வொரு கிராமமும் அதன் அஞ்சா நெஞ்சர்களைக் கண்டுகொள்ள வேண்டும்.

### குண்டர்கள்

குண்டர்களைக் குற்றஞ்சாட்டுதல் தவறு. அவர்களுக்கு ஏற்ற சூழ்நிலையை நாம் உருவாக்கினாலன்றி, அவர்கள் குறும்பு செய்வதில்லை. 1921-இல் இளவரசர் பகிஷ்கார தினத்தன்று பம்பாயில் நடந்ததை நான் கண்ணாரக் கண்டேன். நாம் விதைத்தோம்; காலிகள் விளைந்த பயனை அறுவடை செய்தனர். அவர்களின் பின்னிருந்து பக்கபலமளித்தவர் நமது மனிதர்கள்தான். கர்த்தர்பூர், அர்ரா இரு இடங்களில் நடந்த தீச்செயல்களுக்குக் கௌரவமான ஹிந்துக்கள் பொறுப்பாளிகள் என்று நான் கூறத் தயங்கவில்லை. அது போலவே முல்டான், சஹரன்பூர் முதலிய இடங்களில் நடந்த அட்டூழியங்களுக்கும் கௌரவமான முஸ்லிம்களையே பொறுப்பாளிகளாக்க நான் சிறிதும் தயங்கவில்லை. (குறிப்பிட்ட எந்த ஒரு நிகழ்ச்சியிலும், குழப்பத்துக்குப் பொறுப்பாளிகள் யாவரும் கௌரவமான மனிதர்கள்தான் என்பதல்ல) பல்வாலில் தாற்காலிக மசூதிகளுக்குப் பதிலாக பக்கா மசூதி கட்டுவதைத் தடுத்தது உண்மையானால், அதைக் குண்டர்கள் செய்திருக்க முடியாது. பொறுப்பு வாய்ந்த ஹிந்துக்கள்தான் அதற்குக் காரணமாகக் கூற வேண்டும். செல்வாக்குள்ளவர்களைக் குற்றங்களிலிருந்து தப்புவிக்கும் பழக்கத்தை நாம் உறுதியாக நீக்கிவிடவேண்டும்.

தற்காப்புக்காக ஹிந்துக் குண்டர்களை ஹிந்துக்கள் ஏற்பாடு செய்தால், இவர்கள் தவறிழைக்கிறார்கள் என்றே நான் கருதுவேன். இது கொதிக்கும் தோசைக் கல்லிலிருந்து நெருப்பில் குதிப்பது போலத்தான். அகிம்சை முறையில் இல்லாவிட்டாலும், பலாத்கார வழியிலாவது வணிகனும் பிராம்மணனும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல், தனது பெண்டு பிள்ளைகளையும், உடைகளையும் குண்டர்கள் வசம் ஒப்படைக்க நேரிடும். ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும் குண்டர்கள் குண்டர்களே. சமீப காலத்தில், தீண்டாதவர்களின் காவலில் (இவர்கள் சாவைக் கண்டு அஞ்சுவதில்லை) ஒரு ஹிந்து ஊர்வலம் (வெற்றிச் சங்கீத முழக்கத்துடன்) எவ்விதத் தடையுமின்றி, ஒரு மசூதியைக் கடந்து சென்றதாக ஹிந்துக்கள் பெருமையடித்துக்கொண்டார்கள். எனவே, அவர்கள் புனிதமான ஒன்றைக் கீழான வேலைக்கு உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். தீண்டாத சகோதரர்களை இவ்வாறு தீய காரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளுவது, பொதுவாக ஹிந்து மதத்திற்கோ, அல்லது ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கோ உதவி அளிப்பதாகாது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட சில ஊர்வலங்கள் சில மசூதிகளைக் கடந்து பத்திரமாகச் சென்று விடலாம். ஆனால், இது எரியும் தீயில் நெய் வார்த்தது போலத் தான். இதனால் ஹிந்து மதத்திற்கு இழிவு ஏற்படும். எதிர்ப்பையும் எதிர்த்து மேளம் அடிக்க விரும்பினால், நடுத்தர ஹிந்துக்கள் அடிதடிக்குத் தயாராக இருக்க வேண்டும். இல்லையேல், சுயமரியாதைக்குப் பங்கமில்லாத முறையில், முஸ்லிம்களுடன் நேசமாகிவிட வேண்டும்.

ஒடுக்கப்பட்டவர்களின்மீது இன்னும் சுமத்திவரும் பழி பாவங்களுக்காகவும், இதற்குமுன் செய்தவைகளுக்காகவும் ஹிந்துக்கள் பிராயச்சித்தம் செய்ய வேண்டும். ஆதலால், நாம் பட்ட கடனைத் திருப்பிக்கொடுப்பதற்குக் கைம்மாறு கருதுவது சரியல்ல. நமது கோழைத்தனத்தை மறைக்க அவர்களை உபயோகித்தால், அவர்களிடையே நாம் என்றென்றும் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்குப் போலி ஆசைகள் ஏற்பட்டுவிடும். அந்த ஆசைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்ற பழி நம் மீது வந்தால், அது, இதுவரை நாம் அவர்களை மிருகத்தனமாக நடத்தியதற்குத் தகுந்த தண்டனையாக முடியும். எனவே, ஹிந்துக்களிடமிருந்து எதிர்பார்க்கும் தாக்குதலுக்குக் காப்பாகத் தீண்டாத சகோதரர்களை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று நான் அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுவேன்.

### வளரும் அவநம்பிக்கை

நம்மவர்களுள் மிகச் சிறந்தோர்க்குள்ளும் வளர்ந்துவரும் அவநம்பிக்கை இப் பிணக்கிற்கு மற்றொரு முக்கிய காரணமாகும். பண்டித மதன் மோஹன் மாளவியாவைப் பற்றி என்னை எச்

சரித்திருக்கிறார்கள். ஏதோ ரகசிய நோக்கங்கள் உடையவரென அவரைச் சந்தேகிக்கிறார்கள். அவர் முஸ்லிமின் நண்பர் அல்ல என்று கூறப்படுகிறது. எனது செல்வாக்கைப் பற்றி அவர் பொறாமைப்படுகிறார் என்றுகூடச் சொல்லுகிறார்கள். 1915-இல் நான் இந்தியாவுக்கு வந்ததிலிருந்து அவரை நன்கு அறிந்த பாக்கியம் எனக்கு உண்டு. அவருடன் மிகவும் நெருங்கிப் பழகியிருக்கிறேன். மிகச் சிறந்த ஹிந்துக்களில் அவர் ஒருவர். வைதிகரேயானாலும், விசால நோக்குடையவரென நான் அவரை மதிக்கிறேன். அவர் முஸ்லிம்களின் விரோதி யல்ல. மற்றவர்களைக் கண்டு பொறாமைப்பட அவரால் இயலவே இயலாது. பகைவரையும் அணைத்து அருளும் விசால நெஞ்சினர். அவர் எப்பொழுதுமே அதிகாரத்தை விரும்பியதில்லை. நம்மில் யாரும் செய்யாத அளவு நீண்ட நாள் இடையறாத தொண்டு, தாய் நாட்டிற்குச் செய்ததன் மூலம், அவர் இன்று இருக்கும் நிலையில் இருக்கிறார். அவரும் நானும் மனப்பான்மையில் வேறுபட்டவர்கள். ஆனால், நாங்கள் இருவரும் சகோதரர்கள்போல் அன்புடையவர்கள். எங்கள் இருவருக்குள்ளும் மனக்கசப்பு ஏற்பட்டதில்லை. எங்களுடைய வழிகள் வேறானதினாலே பொறாமைக்கோ, போட்டிக்கோ இடமே இருக்க முடியாது.

அவநம்பிக்கைக்கு ஆளான வேறொருவர் லாலா லஜபதிராய். அவர் குழந்தையைப் போலத் திறந்த உள்ளத்தினர். அவரது தியாகம் ஒப்புவமையற்றது. ஒரு தடவையல்ல, பல தடவைகளில் அவருடன் ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைப் பற்றிப் பேசியிருக்கிறேன். அவர் முஸ்லிம்களின் விரோதியல்ல. ஆனால், உடனே ஐக்கியம் ஏற்படும் என்பதைப் பற்றி அவர் சந்தேகப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆண்டவனிடமிருந்து அவர் ஒளியை நாடி வருகிறார். சுயராஜ்யத்தில் நம்பிக்கையிருப்பதால், தன்னையறியாமலேயே அவருக்கு இந்த ஐக்கியத்திலும் நம்பிக்கை இருக்கிறது. ஐக்கியமின்றிச் சுயராஜ்யம் சாத்தியமில்லை என்பதை அவர் ஒப்புக்கொள்ளுகிறார். இதை எப்பொழுது, எப்படி அடைவது என்பதுதான் அவருக்குத் தெரியவில்லை. பிரச்னையைத் தீர்க்க நான் கூறும் வழியில் அவருக்குத் திருப்திதான். ஆனால், ஹிந்துக்கள் அதைப் புரிந்து கொண்டு, அதன் உயர்வைப் போற்றுவார்களா என்பதில் அவருக்குச் சந்தேகம் இருக்கிறது. எனது வழியே உயர்வானது என்று நான் சொல்லவில்லை. அது முற்றிலும் நியாயமானது, நடைமுறையில் சாத்தியமானது என்பதே எனது உறுதியான அபிப்பிராயமாகும்.

சுவாமி சிரத்தானந்தர் பேரிலும் அவநம்பிக்கையே ஏற்பட்டிருக்கிறது. பெரும்பாலும் அவருடைய பேச்சுக்கள் எரிச்சலை உண்டாக்குகின்றன என்பது எனக்குத் தெரியும். எனினும், அவரும் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையை விரும்புகிறார். முஸ்லிம் அல்லாதவர் அனைவரும் ஏதாவதொரு நாள் முஸ்லிம் ஆவார்கள் என

அநேக முஸ்லிம்கள் நம்புகிறார்கள் என்று நினைக்கிறேன். இதைப் போலவே அவர், எல்லா முஸ்லிம்களையும் ஒரு நாள் ஆரியர்களின் கூட்டத்தில் சேர்த்துவிடக்கூடும் என்பதில் நம்பிக்கை வைக்கிறார். இது துரதிருஷ்டவசமானதே.

சிரத்தானந்தர் அஞ்சாத தீரர். கங்கைக் கரையில் அடர்ந்து வளர்ந்த காட்டைத் தன்னந்தனியாக ஒரு குருகுலக் கல்லூரியாக்கிய பெருமை அவரைச் சார்ந்தது. அவருக்குத் தன்னம்பிக்கையும் லட்சியத்தில் உறுதியும் உண்டு. ஆனால், அவருக்கு அவசர புத்தியும் முன்கோபமும் உண்டு. ஆரிய சமாஜத்தின் பழக்க வழக்கங்களையே அவர் தமது சொத்தாகக் கொண்டுள்ளார். தயானந்த சரஸ்வதியை நான் போற்றிப் பணிகிறேன். ஹிந்து மதத்திற்கு அவர் பெரும் பணியாற்றியிருக்கிறார். அவரது தீரம் பிரசித்தமானது. ஆனால், தமது ஹிந்து மதத்தை அவர் குறுகிய எல்லைக்குட்படுத்திக் கொண்டுள்ளார்.

ஆரிய சமாஜிகளின் பைபிளாகிய சத்தியார்த்தப் பிரகாசத்தை நான் படித்திருக்கிறேன். எராவ்டாச் சிறையில் நான் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த சமயம், நண்பர்கள் எனக்கு அதில் மூன்று பிரதிகள் அனுப்பினார்கள். இவ்வளவு பெரிய சீர்திருத்தவாதியால் எழுதப்பட்ட, இவ்வளவு ஏமாற்றத்தைத் தரும் வேறு எந்தப் புத்தகத்தையும் நான் படித்ததில்லை. சத்தியத்திற்காகவே வாழ்வதாக அவர் சொல்லியுள்ளார். ஆனால், தம்மையும் அறியாமலே ஜைன, இஸ்லாமிய, கிறிஸ்தவ, ஹிந்து மதங்களைத் திரித்துக் கூறுகிறார். இம்மதங்களைப் பற்றி மேலெழுந்தவாரியாகத் தெரிந்தவர்கள்கூட இப்பெரிய சீர்திருத்தவாதி செய்துள்ள தவற்றைக் காண முடியும். உலகத்திலுள்ள மதங்களுள் எல்லாம் தாராளமானதும் விசால நோக்குடையதுமான ஒரு மதத்தைக் குறுகியதாக்க முயன்றிருக்கிறார். விக்கிரக ஆராதனையின் விரோதியாயிருந்த போதிலும், நுண் உருவில் விக்கிரக ஆராதனைக்கு முதலிடம் அளிப்பதில் வெற்றி பெற்றுள்ளார். வேதத்தின் அக்ஷரங்களையும் போற்றுகிறார். விஞ்ஞானத்தால் விளக்கப் பெற்ற அனைத்தும் வேதத்தில் இடம் பெற்றுள்ளதெனக் காட்ட முயலுகிறார். ஆரிய சமாஜம் வளம் பெற்று நிற்பது சத்தியார்த்தப் பிரகாசத்தின் உண்மை மதிப்பினால் அல்ல; அதை நிறுவியவரின் அரும் பெரும் குணத்தினாலேதான் என்பது எனது தாழ்மையான கருத்து.

எங்கெங்கே ஆரிய சமாஜிகள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் ஜீவனையும் சக்தியையும் காணலாம். குறுகிய நோக்கும் சச்சரவிடும் வழக்கமும் இருப்பதால், அவர்கள் மற்ற மதத்தினர்களுடன் சண்டை போடுவார்கள். இல்லையேல், தங்களுக்குள்ளாவது சண்டை போட்டுக்கொண்டிருப்பார்கள். இவ்வியல்பு சிரத்தானந்த சுவாமியினிடம் அதிகமாக இருந்தது. இக்குறைகளெல்லாம் இருப்பினும், அவர் திருந்த முடியாதவர் அல்ல. ஆரிய சமாஜத்தைப் பற்றியும் சுவாமிஜியைப் பற்றியும் நான் வரைந்

துள்ள இக்குறிப்பு அவர்களுக்கு கோபமூட்டலாம்.* நான் அவர்களைப் பழிக்கவில்லை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆரிய சமாஜிகளை நான் நேசிக்கிறேன். அவர்களிடையே எனக்குச் சக ஊழியர் பலர் இருக்கின்றனர். தென்னாப்பிரிக்காவிலிருந்தபோதே சுவாமிஜியை நேசிக்க முயற்சித்தேன். அவரை இப்பொழுது அதிகம் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆனாலும், அவர் மீது எனக்கு அன்பு குறையவில்லை. அவர் மீது உள்ள அன்பினாலேயே நான் இவ்வளவு தூரம் கூறியுள்ளேன்.

நான் எச்சரிக்கப்பட்டுள்ள ஹிந்துக்களில் கடைசியானவர்கள் ஜயராம்தாஸும் டாக்டர் சோயித்ராமும். ஜயராம்தாஸைப் பற்றி நான் உறுதி கூறமுடியும். இவரைக் காட்டிலும் உண்மையுள்ள மனிதர்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. சிறையில் அவரது ஒழுக்கம் எங்களைப் பெருமைக்கு உள்ளாக்கியது. அவர் எல்லையற்ற உண்மையுடையவர். முஸ்லிம்களுக்கு அவர் விரோதியல்ல. வெகு நாட்களுக்கு முன்பே டாக்டர் சோயித்ராமை அறிவேனாயினும், அவரைப் பற்றி எனக்கு அவ்வளவு நன்றாகத் தெரியாது. ஆனால், எனக்குத் தெரிந்தவரையில் அவரை, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை வளர்ப்பவர் என்பதைத் தவிர வேறுவிதமாய்க் கருத என்னால் இயலவில்லை. இந்த ஜாபிதா இன்னும் போய்க்கொண்டே இருக்கும். இந்த ஹிந்துக்களும் சமாஜிகளும் இன்னும் ஐக்கியத்தை உணர்ந்து ஒன்றுபடவில்லையெனில், ஐக்கியம் என்கிற சொல்லே என் வரையில் பொருளில்லாமல் போய்விடுகிறது. அத்துடன் எனது வாழ்நாளில் ஐக்கியத்தை அடையவே முடியாதோ என்ற ஐயமும் உண்டாகிவிடுகிறது.

**பாரி சாகிப்**

இதில் மோசமான பகுதி, இந்த நண்பர்களைச் சந்தேகித்ததல்ல. ஹிந்துக்களைப்பற்றி நான் எச்சரிக்கப்பட்டது போலவே, முஸ்லிம்களைப் பற்றியும் எச்சரிக்கப்பட்டுள்ளேன். மூன்று பேர்களை மட்டும் எடுத்துக்கொள்ளுகிறேன். மௌலானா அப்துல் பாரி சாகிப் ஹிந்துத் துவேஷ வெறியர் என்று என்னிடம் சொல்லுகிறார்கள். அவர் எழுதிய சிலவற்றைக் காட்டினார்கள். அவை எனக்கு விளங்கவில்லை. அவைகளைப் பற்றி நான் அவரைத் தொந்தரவு செய்யவில்லை. அவர் கடவுளின் எளிய குழந்தை. அவரிடம் மாசு மறு எதையும் நான் காணவில்லை. அவர் அடிக்கடி யோசியாது பேசித் தமது நெருங்கிய நண்பர்களைக்கூடச் சங்கடமான

* காந்திஜி எதிர்பார்த்தபடியே, ஆரிய சமாஜிகள் மேலே கண்ட கட்டுரையைக் குறித்து காந்திஜியின் மீது கோபம் கொண்டார்கள். அக்கட்டுரை நாடு முழுவதுமுள்ள ஆரிய சமாஜிகளிடையே கண்டனப் புயலைக் கிளப்பியது. ஆனால், ஆத்திரமடைந்த ஆரிய சமாஜிகளுக்குக் காந்திஜி அளித்த பதில், ''சகிப்புத்தன்மையற்ற எதிர்ப்பு'' என்ற தலைப்பின் கீழ் இந்தத் தொகுப்பின் பின் வரும் அத்தியாயம் ஒன்றில் வெளியாகியிருக்கிறது.

நிலைமைக்குக் கொண்டுவந்துவிடுகிறார். எவ்வளவு வேகத்தில் புண்படுத்துகிறாரோ, அதைவிட வேகத்தில் மன்னிப்பும் கேட்டு விடுவார். ஒன்றைச்சொல்லும் போது, அப்போதைக்கு அதைத் தெரிந்தே சொல்லுகிறார். கோபத்தில் எவ்வளவு கபடமற்றவராக இருக்கிறாரோ அவ்வளவு மன்னிப்புக் கோருவதிலும் உண்மை யுள்ளவராக இருக்கிறார். ஒரு சமயத்தில், நியாயமான காரணம் எதுவுமின்றி அவர் மௌலானா முகமது அலியின் மீது பாய்ந் தார். அப்பொழுது நான் அவரது விருந்தாளியாக இருந்தேன். என் மனமும் ஏதோ புண்படக்கூடிய விதத்தில் பேசிவிட்டதாக அவர் நினைத்துக்கொண்டுவிட்டார். மௌலானா முகமது அலியும் நானும் கான்பூர் போவதற்காக, அவர் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தோம். நாங்கள் போன பிறகு, எங்களுக்குத் தவ றிழைத்துவிட்டதாக அவருக்குத் தோன்றியது. அவர் உண்மையி லேயே என்னையல்ல, மௌலானா முகமது அலியைப் புண்படுத்தி விட்டார். ஆனால், தம்மை மன்னித்துவிடும்படி கேட்டுக்கொள்ளு வதற்காக அவர் கான்பூருக்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்பி விட்டார்! இச்செயல் காரணமாக, அவர் மீது எனக்கு இருந்த மதிப்பு அதிகமாயிற்று. எனினும், மௌலானா சாகிப் ஆபத்தான நண்பராகலாம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நான் சொல்ல விரும்புவதெல்லாம் அவர் ஒரு நண்பர் என்பதே. அவர் சொல்லுவதொன்று, செய்வது வேறு அல்ல. அவரைப் பொறுத்த வரையில், ஒளிவு மறைவு கிடையாது. இப்படிப் பட்ட நண்பரை நம்பி என் உயிரைக்கூட ஒப்படைப்பேன். ஏனெனில், இவர் என்னை இருட்டில் மறைந்திருந்து குத்திவிட மாட்டார் என்பது எனக்குத் தெரியும்.

### அலி சகோதரர்கள்

அலி சகோதரர்களைப் பற்றியும் இது போலவே எனக்கு எச்சரிக்கை செய்தார்கள். மௌலானா ஷவுகத் அலி மனிதர் களுள் தீரர். அளவற்ற தியாகம் செய்யும் ஆற்றலுடையவர். கடவுளின் படைப்பிலுள்ள தாழ்ந்ததிலும் தாழ்ந்ததையும் நேசிக்கும் சக்தியுள்ளவர். அவர் இஸ்லாம் மதத்தை மிகவும் நேசிக்கிறார். எனினும், அவர் பிற மதங்களைத் துவேஷிப்பதில்லை. முகமது அலியை, அவரது சகோதரரின் மற்றோர் உருவம் என்றே கூற வேண்டும். மௌலானா முகமது அலிக்குத் தன் மூத்த சகோ தரரிடத்துள்ள நம்பிக்கையை நான் வேறு எவரிடத்திலும் கண்ட தில்லை. ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையில்லாமல் இந்தியாவுக்குக் கதி மோட்சமில்லை என்று அவரே யோசித்து முடிவு செய்து கொண்டார். அவர்களின் 'அகில இஸ்லாம்' ஹிந்துவுக்கு விரோதமானதல்ல. இஸ்லாம் ஐக்கியப்பட்டு உள்ளே சுத்தி யடைந்து, புறத்தேயிருந்து வரும் தாக்குதல்களை எதிர்க்கும் சக்தியுடையதாக இருக்கவேண்டுமென அவர்கள் தீவிரமாக விரும்பினால், அதற்காக அவர்களுடன் யார் சண்டை போட முடியும்? மௌலானா முகமது அலியின் காகினடா பிரசங்கத்தில் ஒரு பகுதியை அதிக ஆட்சேபகரமானதென எனக்கு எடுத்துக்

காட்டினார்கள். நான் அதை அவர் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். உடனே அதை அவர் தவறு என ஒப்புக்கொண்டார். கிலாபத் மகாநாட்டில் மௌலானா ஷவுகத் அலி நிகழ்த்திய சொற்பொழிவிலும் ஆட்சேபிக்கத்தக்க விஷயங்கள் இருக்கின்றன என்று நண்பர்கள் குறிப்பிடுகிறார்கள். அச் சொற்பொழிவு என்னிடம் இருக்கிறது. அதைப் படிக்க நேரமில்லை. அதில் துன்புறுத்தக் கூடியது ஏதாவது இருந்தால், அதற்கு உடனே தக்க பரிகாரம் செய்யக் கூடிய மனிதர் அவர் என்பது எனக்குத் தெரியும். சகோதரர்கள் குற்றமற்றவர்கள் அல்லர். குற்றம் நிறைந்த நான் அவர்களுடன் நட்புக்கொண்டொழுகச் சிறிதும் தயங்கியதில்லை. அவர்களிடம் குற்றம் சில இருந்தால், குணம் பல உள. குறைகளிருப்பினும், அவர்களை நான் நேசிக்கிறேன். மேலே குறிப்பிட்ட ஹிந்து நண்பர்களை விட்டுவிட்டு, ஹிந்துக்களுக்கிடையே ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு எப்படி ஒன்றும் செய்ய முடியாதோ, அம்மாதிரியே நான் சொல்லிய முஸ்லிம் நண்பர்களை விட்டுவிட்டு அந் நோக்கத்தை அடைய முஸ்லிம்களின் மத்தியில் வேலை செய்ய முடியாது.

நம்மில் சிறந்தவர்களையும் சந்தேகிக்கும் இச் சூழ்நிலையைப் பரிசுத்தப்படுத்துவதற்காகவே நான் முக்கியமான சிலரைப்பற்றி விவரிக்க வேண்டியதாயிற்று. நான் மதிப்பிடுவது சரிதான் என்று வாசகர்களுக்குப் படாது போயிருக்கலாம். எப்படியாயினும், அவர்களது கருத்து மாறுபட்டிருந்தாலும், என் கருத்து இன்னதுதான் என்று அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாயிற்று.

**சிந்துவிலிருந்து உதாரணம்**

இந்தத் தீவிர அவநம்பிக்கையானது, அநேகமாக உண்மையைத் தெரிந்துகொள்ள முடியாமற் செய்து விடுகிறது. சிந்துவில் ஒரு ஹிந்துவைப் பலவந்தமாக மத மாற்றம் செய்த முயற்சியைப்பற்றி உறுதியான செய்திகள் டாக்டர் சோயித்ராமிடமிருந்து எனக்குக் கிடைத்துள்ளன. அந்த மனிதர் இஸ்லாமை ஏற்க மறுத்ததால், அவரது முஸ்லிம் நண்பர்கள் அவரைக் கொன்றுவிட்டனராம். இது சம்பந்தமான நிகழ்ச்சிகள் உண்மையாயின், இவை மிகக் கோரமானவை. இது சம்பந்தமாக விசாரிக்கும்படி சேத் ஹாஜி அப்துல்லா ஹரூனுக்கு நேராகத் தந்தி கொடுத்தேன். அது ஒரு தற்கொலை எனச் சொல்லுகிறார்களென்றும், இன்னும் அது சம்பந்தமாகத் தாம் மேற்கொண்டு விசாரித்து வருவதாகவும் அவர் அன்புகூர்ந்து உடனே பதில் தந்தி கொடுத்தார். இது சம்பந்தமான உண்மையைத் தெரிந்து கொள்ளுவதில் நாம் வெற்றி பெறுவோமென நான் நம்புகிறேன். சந்தேகத்துக்கு மத்தியில் வேலை செய்வது கடினம் என்பதையே நான் எடுத்துக்காட்டுகிறேன். சிந்துவில் இன்னொரு சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது. முழுதும் நம்பிக்கையான செய்திகள் வரும் வரை அதைப் பற்றிச் சொல்லத் தயங்குகிறேன். ஹிந்துக்களுக்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ விரோதமாகக் கூறப்

படும் செய்திகளைக் கேட்டு அமைதியாக இருக்கும்படியும், ஆதாரம்காட்டக்கூடிய செய்திகளையே பரப்ப வேண்டுமென்றும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன். சிறு சிறு சம்பவங்களைப் பற்றி விசாரித்துத் தனி ஒரு மனிதனால் என்ன என்ன செய்ய முடியுமோ, அதையெல்லாம் செய்வதாக உறுதி கூறுகிறேன். இத்தகைய புகார்களைப் பற்றி விசாரித்து அதற்குச் செய்ய வேண்டியதைச் செய்து நியாயம் வழங்குவதையும், எதிர்காலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் நேராவண்ணம் தடுப்பதையுமே தங்களுடைய ஒரே வேலையாகக் கொண்ட ஊழியர்கள் படை, கூடிய சீக்கிரம் ஏற்படுமென நம்புகிறேன்.

### வங்காளத்திலிருந்து

ஹிந்துப் பெண்களை மானபங்கப்படுத்தியதாக வங்காளத்திலிருந்து வரும் செய்திகள், அவை ஓரளவு உண்மையாயிருப்பினும்கூட, மிகவும் கலக்கத்தை விளைவிப்பவை. இந்தச் சமயத்திலே இத்தகைய நிகழ்ச்சிகள் தோன்றக் காரணம் என்ன என்று கண்டுபிடிப்பது கடினமாக இருக்கிறது. கற்பழிக்கப்பட்ட இந்த ஹிந்துச் சகோதரிகளுடைய ஹிந்துப் பாதுகாப்பாளர்களின் கோழைத்தனத்தைப் பற்றி ஆத்திரமின்றி அடக்கமாகப் பேசுவதும் கடினம்தான். களங்கமற்ற மாதர்களுடன் இவ்வளவு கேவலமாக நடந்துகொண்ட காமப் பித்தர்களைப் பற்றி வர்ணிப்பதும் முடியாத காரியமே. துஷ்டர்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு, ஸ்தலத்திலுள்ள முஸ்லிம்களிடமும், பொதுவாக வங்காளத்திலுள்ள முஸ்லிம் தலைவர்களிடமும் உள்ளது. இவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும் என்பதற்காக அல்ல, இத்தகைய கொடுமைகள் மறுபடியும் நடவாமல் தடுப்பதற்கேயாகும். சில துஷ்டர்களை அவர்கள் மறைவிடங்களிலிருந்து பிடித்துப் போலீஸாரிடம் ஒப்புவிப்பது எளிதான காரியமே. எனினும், இவ்விதம் செய்வதால் அத்தகைய குற்றங்கள் மறுபடியும் நடவாமல் சமூகத்தைப் பாதுகாத்துவிட முடியாது. பரிபூரணமான சீர்திருத்தங்களைச் செய்து, தீமையின் அடிப்படைக் காரணங்களையே களைய வேண்டியது அவசியமாகும். இம்மாதிரி மனிதர்களுக்கிடையே உழைப்பதற்குச் சீரிய ஒழுக்கம் படைத்தவர்கள் ஹிந்து மதத்திலும் இஸ்லாமிலும் உண்டாக வேண்டும். காபூலிகளின் பயங்கரத்தைப் பற்றியும் இதையே சொல்லலாம். இதற்கும் ஹிந்து-முஸ்லிம் பிணக்கிற்கும் சம்பந்தமில்லை. ஆயினும், போலீஸாரின் உதவி கோரி நிராதரவாக நிற்பதைத் தவிர்க்க விரும்பினால், நாம் இது போன்ற நிகழ்ச்சிகளை எல்லாம் சமாளித்தேயாக வேண்டும்.

### சுத்தியும் தப்ளிக்கும்

சுத்தி அல்லது மதமாற்ற இயக்கம் நடக்கும் முறையினால் தான், ஹிந்து-முஸ்லிம் பிணக்கு நீடிக்கிறது. கிறிஸ்தவ மதத்திலுள்ளது போலவோ, அல்லது ஓரளவு இஸ்லாமிலும் உள்ளது போலவோ, ஹிந்து மதத்தில் மதமாற்றத்திற்கு இடமில்லை

என்பது என் கருத்து. பிரசாரம் செய்வதில் ஆரிய சமாஜம், கிறிஸ்தவரது முறைகளைப் பின்பற்றுகிறதென நான் நினைக்கிறேன். இந்த நவீன முறை என்னைக் கவரவில்லை. அது, நன்மையை விடத் தீமையையே அதிகம் விளைவித்திருக்கிறது. இது, தனக்கும் தன்னைப் படைத்தோனுக்கும் இடையில் உள்ளத்தைப் பொறுத்த விஷயமாகும். இருப்பினும், தற்காலத்தில் அது சுயநலத்தைக் கிளறிவிட்டு, அதற்குத் தூபம் போடுகிற ஒரு செயலாகிவிட்டது. ஆரிய சமாஜப் பிரசாரகருக்கு, மற்ற மதங்களைக் கேவலமாகத் தாக்கிப் பேசும்பொழுது, எப்பொழுதுமில்லாத அளவு ஆனந்தம் ஏற்படுகிறது. எல்லா மதங்களும் ஓர் அளவுக்கு உண்மையானவை என்றே எனது ஹிந்து மத உணர்வு கூறுகிறது. எல்லாம் ஒரே கடவுளிடமிருந்து தோன்றியவை. ஆனால், அனைத்தும் தலைமுறை தலைமுறையாகக் குறைபாடுடைய மனிதன் மூலமே வருவதனால், குறைபாடுடையனவாகவே இருக்கின்றன. அவரவர் மதத்திலேயே பூரணத்துவத்தை நோக்கி வளர்ச்சியடைவதுதான் உண்மையான சுத்தியாகும். அப்படிப்பட்ட திட்டத்தில் ஒழுக்கம்தான் அளவுகோல். அற வாழ்வில் உயர்வு இல்லாமல் ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்கு மாறுவது போலிருந்தால், மத மாற்றத்தால் யாது பயன்? அவர்களின் செய்கைகளின்மூலம் நாள் தோறும் கடவுளை மறுக்கும் பலர் இருக்கையில், புதிது புதிதாக மனிதர்களைக் கடவுளின் சேவைக்கென (சுத்தி, அல்லது தப்ளிக் என்பதன் பொருள் இதுதானே) சேர்ப்பதன் அர்த்தம் யாது? "வைத்தியரே, நீர் உம்மையே சுகப்படுத்திக்கொள்ளும்". இந்தப் பழமொழி லௌகிக விஷயங்களைவிட, மத விஷயங்களில்தான் அதிகப் பொருத்தமானது. ஆனால், இவை என்னுடைய சொந்தக் கருத்துக்கள். இது மனச்சாட்சியால் தூண்டப்பட்டது என ஆரியசமாஜிகள் நினைத்தால், இந்த இயக்கத்தை நடத்துவதற்கு அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு. இம்மாதிரி மனச்சாட்சியின் அழைப்புக்கள் காலத்தால் கட்டுப்படுத்த முடியாதவை; அனுபவத்தால் தடைப்படுத்த முடியாதவை. உள்ளத்தின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, ஒரு ஆரிய சமாஜப் பிரசாரகரோ, அல்லது முஸ்லிம் பிரசாரகரோ செய்யும் வேலையினால் ஹிந்து-முஸ்லிம் ஐக்கியம் தடைப்படுமேயானால், அந்த ஐக்கியம் ஆழமற்றதாகும். நாம் ஏன் இப்படிப்பட்ட இயக்கங்களால் கலங்க வேண்டும்? அவை மட்டும் கலப்பற்றவையாயிருக்க வேண்டும். மல்கானர்கள்* ஹிந்து மதத்திற்குத் திரும்பவும் வந்து சேர விரும்பினால், அவர்களுக்கு அப்படிச் செய்யப் பூரண உரிமை உண்டு. ஆனால்,மற்ற மதங்களைப்பழிக்கும் எந்தவிதப் பிரசாரமும் நடக்க விடக்கூடாது. விட்டால், மதங்களின் சகிப்புத் தன்மையைப் பொய்ப்பிப்பதாகிவிடும். வெளிப்படையாக அவைகளைக் கண்டனம் செய்வதே அத்தகைய பிரசாரங்களைத் தடைப்படுத்துவதற்கு உரிய சரியான வழி. ஒவ்வோர் இயக்கமும் மரியாதைப்

---

*இஸ்லாம் மதத்திற்கு மாறிய ஹிந்துக்களே மல்கானர்கள் என்று குறிப்பிடப் படுகின்றனர்.

போர்வையைப் போர்த்துக்கொள்ளப் பார்க்கிறது. மரியாதைப் போர்வையைப் பிய்த்தெறிந்துவிட்டால், அது உடனே மரியாதை கெட்டு மடிந்துவிடுகிறது. ஆரிய சமாஜிகளும், முஸ்லிம்களும், பெண்களைத் தூக்கிச் சென்று மதம் மாற்ற முயற்சி செய்கின்றனராம். படிப்பதற்காக ஏராளமான ஆகாகானி இலக்கியம் வைத்திருக்கிறேன். கவனம் செலுத்தி அதைப்படிக்க நேரமில்லை. அது ஹிந்து மதத்தை அப்படியே உருத் தெரியாமல் திரித்துக்கூறுகிறதென்று என்னிடம் உறுதியாகச் சொல்லுகிறார்கள். கனம் ஆகாகானை* ஒரு ஹிந்து அவதாரம் என்று சொல்லுகிறார்கள் என்கிற அளவுக்கு அந்த இலக்கியத்திலிருந்து நான் தெரிந்துகொண்டேன். இந்த இலக்கியங்களைப் பற்றியெல்லாம் ஆகாகானே என்ன நினைக்கிறார் என்பது தெரிந்தால் ருசிகரமாக இருக்கும். எனக்கு அநேக கோஜா நண்பர்கள் இருக்கிறார்கள். இந்த இலக்கியங்களை அவர்களின் பார்வைக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

ஆகாகான் இயக்கத்தின் சில ஏஜண்டுகள், ஹிந்து ஏழைகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். பின்னர் கடனாளி இஸ்லாமில் சேர்ந்துவிட்டால், கடன் ரத்துச் செய்யப்படும் என்கிறார்களாம். இதை எனக்கு ஒருவர் சொன்னார். இதுபோல மத மாற்றம் செய்வது நெறியற்ற வழி. டில்லியிலுள்ள ஒரு பெரியார் பிரசாரம் செய்யும் முறைதான் எல்லாவற்றுள்ளும் மிகக் கேவலமானது. அவருடைய துண்டுப் பிரசுரத்தை ஆரம்பம் முதல் இறுதி வரையில் நன்கு படித்தேன். எவ்வாறு பிரசாரம் செய்ய வேண்டுமென்ற நுணுக்கங்களைப் பிரசாரகர்களுக்கு இது விளக்கமாகக் கூறுகிறது.

இஸ்லாம் கடவுளின் ஐக்கியத்தைப்பற்றித்தான் பேசுகிறது என்னும் உயரிய உண்மையைக் கொண்டு இந்நூல் ஆரம்பமாகிறது. இந்த உண்மையை ஒவ்வொரு முஸ்லிமும் பிரசாரம் செய்யவேண்டும். அவரது ஒழுக்கத்தைப்பற்றிக் கவலையில்லை.

* காலஞ் சென்ற ஆகா சுல்தான் சர் முகமது ஷா என்ற ஆகாகான் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஒரு பிரிவான ஷியா இஸ்மெய்லியா வகுப்பினரின் மத குரு ஆவார். இந்தியா, பாகிஸ்தான், மத்திய ஆசியா, கிழக்கு ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் உள்ள அப்பிரிவினரின் மொத்தத் தொகை ஒரு கோடியாகும். ஆகாகான் 1937-இல் இருந்த சர்வதேச சங்கத்தின் தலைவர் பதவியை வகித்தவர். ஆகாகானின் கோஜாக்களைப் பற்றி இங்கே காந்திஜி குறிப்பிட்டுள்ளது அவர்களைப் புண்படுத்திவிட்டது. ஆதலால், காந்திஜியைப் பேட்டி காண அவர்கள் சமூகத்தைச் சேர்ந்த ஐவர் வந்தனர். தாமே படித்துவிட்ட பிறகு அவருக்குச் சொல்லியவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள் பொய் எனக் கண்டால், தாம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவதாக, காந்திஜி அவர்களுக்கு வாக்குறுதி கொடுத்தார். "ஆனால், நான் படித்தது எனக்குச் சொல்லியவர்களின் எண்ணத்தை உறுதிப்படுத்தினால், நீங்கள் என்னைத் தப்பாக அர்த்தம் பண்ணிக் கொள்ளக்கூடாது" என்றார் காந்திஜி. "ஹிந்து மத சம்பிரதாயப்படி ஆகாகான் ஓர் அவதாரம் என்னும் கொள்கைக்கு நான் இசைய முடியாதென்று அவர்களுக்குச் சொல்லிவிட்டேன். ஓம் என்னும் பிரணவத்தை அவர்கள் உபயோகிக்கும் முறையும், அவர்கள் அதற்குக் கொடுத்துள்ள உருவமும் ஹிந்து மதக் கோட்பாடுகள் விஷயத்தில் தாறுமாறாகவும் தான்தோன்றித்தனமாகவும் நடப்பதாகும்" என்றும் காந்திஜி சொன்னார்.

ஒற்றர் கழகம் ஒன்று இருக்கலாமாம். முஸ்லிம் அல்லாத வர்களின் வீட்டிலுள்ள ரகசியங்களை அறிதல், விபசாரிகள், பாடிப் பிழைப்பவர்கள், பிச்சைக்காரர்கள், அரசாங்க ஊழியர் கள், வக்கீல்கள், டாக்டர்கள், தொழிலாளிகள் எல்லோருமே இப்பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதுதான் அந்தக் கழகத்தின் ஒரே வேலையாகும். இத்தகைய பிரசாரம் வழக் கத்தில் வந்துவிட்டால், இஸ்லாமியத் தீர்க்கதரிசியின் உயரிய செய்தியைத் திரித்துக்கூறும் (இவர்களை நான் மதப் பிர சாரகர்கள் என்று கூறமாட்டேன்.) வேஷதாரிகளின் ரகசியக் கவனத்திலிருந்து எந்த ஹிந்துக் குடும்பமும் தப்ப முடியாது. இந்தத் துண்டுப் பிரசுரம் நைஜாம் ராஜ்யத்தில் பலராலும் படிக்கப்படுகிறது என்றும், இதில் கூறியுள்ள முறைகள் விரிவாக நைஜாம் ராஜ்யத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றன என்றும் மரியா தைக்கு உரிய ஹிந்து நண்பர்கள்மூலம் அறிகிறேன்.

இவ்வளவு சந்தேகத்திற்கு இடமான ஒழுக்க நெறிகளைப் பரப்புவதில் பிரபல உருது ஆசிரியர் ஈடுபட்டுள்ளாரே என்பதை நினைத்து, ஒரு ஹிந்து என்கிற முறையில் நான் வருந்துகிறேன். மரியாதையுள்ள முஸ்லிம் யாரும் இம்முறைகளை ஏற்றுக் கொள்ளுவதில்லை என எனது முஸ்லிம் நண்பர் ஒருவர் சொல்லு கிறார். இங்கே கவனிக்க வேண்டியது, மரியாதையுள்ள முஸ்லிம்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதல்ல. முஸ்லிம் பொது மக்களில் பெரும்பான்மையோர் எதை ஏற்றுக்கொண்டு நடக் கிறார்கள்? பஞ்சாப் பத்திரிகைகளின் ஒரு பகுதி அருவருக்கத் தக்கதாகவும், சில சமயங்களில் ஆபாசமாகவும் இருக்கிறது. அவற்றில் உள்ள பல குறிப்புகளையும் வாசிப்பது எனக்குச் சித்திரவதையாக இருக்கிறது. இப்பத்திரிகைகளை நடத்துவது ஆரிய சமாஜி, அல்லது ஹிந்து, முஸ்லிம் எழுத்தாளர்கள். எதிரியின் மதத்தைப் பழிப்பதில், இழிமொழிப் பிரயோகம் செய்வதில் இவை ஒன்றோடொன்று போட்டி போட்டு வரு கின்றன. இப்பத்திரிகைகளைப் பலரும் படிக்கிறார்கள். கௌரவ மான வாசகசாலைகளில் கூட இவைகள் இடம்பிடித்துக்கொண் டிருக்கின்றன.

இந்த அவதூறு இயக்கத்திற்குப் பின்னால் சர்க்கார் ஏவலா ளர்கள் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இதை நம்பத் தயங்குகிறேன். உண்மை என வைத்துக்கொண்டாலும், பெருகி வரும் இந்த மானக்கேடு சம்பந்தமாகப் பஞ்சாப் பொது மக்கள் விழிப்படைய வேண்டும்.

இரு சமூகத்தினருக்கும் இடையே உள்ள மூல காரணங் களையும், அவற்றையொட்டி இன்னும் தொடர்ந்திருந்து வரும் காரணங்களையும் நான் பரிசீலனை செய்துவிட்டேன். அடிக்கடி சச்சரவு ஏற்படக் காரணமாயுள்ள குறைகளை நிவர்த்திக்கும் வழிகளைப்பற்றி இப்போது பரிசீலனை செய்வோம்.

### பசு வதை

முதலாவது பசு வதை. பசுக் காத்தலை ஹிந்து மதத்தின் முக்கிய அம்சமாக நான் கருதுகிறேன். அது உயர்ந்தோருக்கும், பொது மக்களுக்கும் பொதுவானது. இருப்பினும், அதன் பொருட்டு முஸ்லிம்களை வெறுப்பது எனக்கு விளங்கவில்லை. ஆங்கிலேயர்களுக்காகத் தினமும் நடக்கும் வதையைப் பற்றி நாம் ஒன்றும் சொல்லுவதில்லை. ஒரு முஸ்லிம் பசுவைக் கொன்றுவிட்டாலோ, நமது கோபம் ஜ்வாலை போல் சீறுகிறது. பசுவின் பெயரால் நடந்த கலகங்களில் எல்லாம் நமது முயற்சி பைத்தியக்காரத்தனமாக வீணாகியது. அவைகளால் ஒரு பசுக்கூடக் காக்கப்படவில்லை. அதற்கு மாறாக, முஸ்லிம்கள் அவ்விஷயமாகப் பிடிவாதம் கொண்டு விட்டார்கள். அதன் விளைவாகப் பசு வதை அதிகரித்துவிட்டது. முந்திய இருபது ஆண்டுகளில் ஹிந்துக்களின் முயற்சியால் காப்பாற்றப்பட்ட பசுக்களைவிட, 1921-ஆம் ஆண்டிலே முஸ்லிம்களே பெருந்தன்மையாக வலிய வந்து காத்த பசுக்களின் தொகை அதிகமாகும்.

பசுக் காத்தல் நம்மிடமிருந்தே ஆரம்பமாக வேண்டும். உலகின் வேறு எப்பகுதியிலும் இந்தியாவைப்போல் கால் நடைகளைக் கேவலமாக நடத்துவதில்லை. களைப்படைந்த எருதுகளை நடத்திச் செல்லும் ஹிந்துக்களே, தார்க்கோல் கொண்டு குத்தி வருத்துவதைக் கண்டு கண்ணீர் வடித்திருக் கிறேன். நமது கால்நடைகளில் பெரும் பகுதி அரைப் பட்டினி யால் வாடுவது நமக்கு ஒரு வெட்கக்கேடாகும். ஹிந்துக்கள் விற்பதனாலேயே பசுக்கள் கசாப்புக் கடைக்காரர்களின் கத்திக்கு இரையாகின்றன. முஸ்லிம்களை நேசிப்பதுடன், பசுக் காத்தலை அவர்களின் நல்லெண்ணத்திற்கே விட்டுவிட வேண்டும். இதுதான் பலன் தரக்கூடிய கௌரவமான வழி.

பசுப் பாதுகாப்புச் சபைகள் கால்நடைகளைப் போஷிக்க வேண்டும். கொடுமையைத் தவிர்த்தல், நாளுக்கு நாள் வேகமாக மறைந்து வரும் மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாத்தல், கால்நடைகளின் இன விருத்தியை அபிவிருத்தி செய்தல், ஏழை இடையர்களிடமிருந்து பசுக்களை வாங்கிக் கால்நடைப் பண்ணை களை வருவாய் தரக்கூடிய முறையில் பால் பண்ணைகளாகச் செய்தல் முதலிய வேலைகளில் பசுப் பாதுகாப்புச் சபைகள் ஈடுபடலாம். ஹிந்துக்கள் மேற்சொல்லியவற்றில் எதையும் செய்யாது இருப்பது, மனிதனுக்கும் கடவுளுக்கும் விரோதமாக அவர்கள் செய்யும் பாவமாகும். முஸ்லிம்களிடமிருந்து பசுவைக் காப்பாற்றாத போது அவர்கள் பாவம் செய்வதில்லை. ஆனால், பசுவைக் காப்பதற்காக முஸ்லிம்களுடன் சண்டையிடுதல், அவர்கள் செய்யும் பெரும் பாதகமான செயலாகும்.

### மசூதிகளுக்கு எதிரில் வாத்ய முழக்கம்

மசூதிகளின் முன் கொட்டு முழக்கம் செய்வதும், இப்போது ஹிந்துக் கோவில்களில் ஆரத்தி எடுப்பதும், பிரார்த்தனையுடன் கூடிய எனது கவனத்தை ஈர்க்கின்றன. பசு வதை ஹிந்துக்களுக்கு எப்படியோ, அப்படியே மசூதிகளுக்கு எதிரில் கொட்டு முழக்கம் செய்வது முஸ்லிம்களைப் புண்படுத்தக் கூடியதே. பசுக்களைக் கொல்லக்கூடாதென ஹிந்துக்கள் முஸ்லிம்களைப் பலவந்தப்படுத்தக்கூடாது. இதைப் போலவே, கொட்டு முழக்கம் செய்வதையும், ஆரத்தி எடுப்பதையும் நிறுத்தும்படி முஸ்லிம்கள் கத்தியைக்காட்டி ஹிந்துக்களை நிர்ப்பந்திக்கக்கூடாது. ஹிந்துக்களின் நல்லெண்ணத்தில் இவர்களுக்கு நம்பிக்கை வேண்டும், நான் ஒரு ஹிந்து. முஸ்லிம்களான அண்டை அயலாரின் சௌகரியங்களைத் தெரிந்து, விட்டுக் கொடுத்துப் போகும்படியே நான் என் ஹிந்துச் சகோதரர்களுக்கு யோசனை கூறுவேன். முஸ்லிம் களுக்குத் தொந்தரவு கொடுக்கும் வெளிப்படையான எண் ணத்துடனேயே சில இடங்களில் முஸ்லிம்களின் பிரார்த்தனை ஆரம்பமாகும் சமயம் பார்த்து ஹிந்துக்கள் ஆரத்தி செய்கிறார்களென நான் கேள்விப்படுகிறேன். இது விரோதத்தை வளர்க்கும் புத்தியீனமான செய்கையாகும். நட்பு என்றால், பரஸ்பரம் அனுதாபம் காட்ட வேண்டும் என்பது இல்லவே இல்லை. நண்பனின் உணர்ச்சிகளை மதித்து நடந்துகொள்ளுவதில் அதிகக் கவனமாக இருக்க வேண்டும். ஆனால், முஸ்லிம்கள், ஹிந்து வாத்ய முழக்கத்தைப் பலாத்காரத்தால் அடக்கிவிடலா மென எதிர்பார்க்கக்கூடாது. பலவந்தத்தைக் கண்டு அஞ்சி வழி விடல், சுயமரியாதையையும் மதக் கொள்கையையும் விட்டுக் கொடுப்பதாகும். பயமுறுத்தலுக்கு ஒரு போதும் இடம் கொடாத ஒருவர், பிறருக்கு எரிச்சலை உண்டாக்கும் சந்தர்ப்பங் களை எப்போதும் குறைத்துக்கொள்ளுவார்; சாத்தியமாயின் அவற்றைத் தவிர்க்கவும் முற்படுவார்.

### சமரச ஒப்பந்தம்

மேற்சொன்னவைகளிலிருந்து, சமரசம் ஏற்படக்கூடும் என்று நினைக்கக்கூடிய நிலைக்குக்கூட இன்னும் நாம் வரவில்லை என்பது தெளிவாகிறது. பசு வதைக்கும், கொட்டு முழக்கத்திற்கும் இடையே பேரம் பேசி, ஒப்பந்தம் செய்துகொள்ளுவதென்பது முடியாத காரியம். இரு சாராரும் அவ்விஷயமாகத் தாங்களா கவே மனமுவந்து முயற்சிக்க வேண்டும்; இவற்றைச் சமரசத் திற்கு அடிப்படையாக வைத்துக்கொள்ள முடியாது.

ராஜீய விஷயங்களில் சமரசம் அல்லது வாக்குறுதி அவசியம். பயன் தரும் சமரசம் ஏற்படவேண்டுமானால், நட்பு உணர்ச்சியை மறுபடியும் உண்டாக்க வேண்டும் என்பது என் கருத்தாகும். மத சம்பந்தமாகவோ, அல்லது வேறு விஷயங் களிலோ தகராறு ஏற்பட்டால், அதைப் பலாத்கார சக்தியைக்

கொண்டு தீர்த்துக்கொள்ள முடிவதில்லை என்பதை இரு சாராரும் உண்மையாகவே ஏற்றுக்கொள்ளத் தயாரா? தலைவர்கள் சண்டையிட விரும்பாவிடில், பொது மக்களும் அதை விரும்பமாட்டார்கள். பரஸ்பர சச்சரவுகள் காட்டுமிராண்டித் தனமானவை; இவை மதக் கொள்கைகளுக்கும் விரோதமாகும். மற்ற நாட்டாரைப் போலவே, நாமும் நம் நாட்டுச் சமூக வாழ்விலிருந்து இந்தச் சச்சரவுகளை ஒழித்துவிட்டால், பொது மக்களும் சீக்கிரத்தில் அந்த நல்ல கொள்கையைப் பின்பற்றுவார்கள்.

நான் ஒத்துழையாதவன் என்ற முறையில் ராஜீய விஷயங்களில் எனக்கு அக்கறையில்லை. எனினும், பெரும்பான்மையோரான ஹிந்துக்கள், பேரம் செய்யாமல், எல்லாவற்றையும் ஹக்கீம் சாகிப் அஜ்மல்கானின் முடிவுக்கு விட்டுவிட்டு, அதன்படி நடக்கவேண்டும். எதிர்காலத்தில் பரஸ்பரம் நல்லெண்ணத்திற்கு அதுதான் வழியாகும். சீக்கியர், கிறிஸ்தவர், பார்சி முதலியவர்கள் சம்பந்தமாகவும் நான் இப்படியே நடந்துகொண்டு, எஞ்சியதைக்கொண்டு திருப்தி யடைவேன். இது ஒன்றே நியாயமான, பெருந்தன்மையான, கௌரவமான முடிவு என்பது என் அபிப்பிராயம்.

வெவ்வேறு சமூகத்தினரிடையேயும் ஐக்கியம் ஏற்பட வேண்டுமென்று விரும்பினால், ஹிந்துக்கள், சிறுபான்மையோரிடம் நம்பிக்கை கொள்ளவேண்டும். வேறு எவ்விதமாகச் செய்யும் முடிவும், கடைசியில் அதிருப்தியை உண்டுபண்ணியே தீரும். ஆயிரக்கணக்கான பொது மக்கள் சட்டசபை அங்கத்தினர்களாகவும், முனிசிபல் அங்கத்தினர்களாகவும் பதவி பெற்றுவிட விரும்பவில்லை. நியாயம் தவறி அரசு செலுத்துபவர் முஸ்லீமாகவோ, ஹிந்துவாகவோ, அல்லது வேறு எந்தச் சமூகத்தை, மதத்தைச் சேர்ந்தவராகவோ இருப்பினும், அவரை எதிர்த்தும் சத்தியாக்கிரக ஆயுதத்தை உபயோகிக்கலாம் என்பதை நாம் அறிய வேண்டும். ஆனால், நியாயமாக அரசாளுபவரோ, அவரது பிரதிநிதியோ, ஹிந்துவானாலும் சரி, முஸ்லிமானாலும் சரி, நல்லவரே ஆவார். வெவ்வேறு சமூகம் என்ற உணர்ச்சியை நாம் விட்டுவிட வேண்டும். ஆதலால் பெரும்பான்மையோர் சிறுபான்மையோரிடத்தில் நம்பிக்கையை உண்டுபண்ணி, அவர்களின் நல்லெண்ணத்திற்குப் பாத்திரமாக வேண்டும். பலவீனர்கள் ஏதாவது முதலில் செய்யட்டுமே எனக் காத்திருக்காது, பலமுடையோர் முதலில் காரியத்தில் பிரவேசித்தால் இணக்கத்திற்கு வழியுண்டாகிவிடும்.

அரசாங்க உத்தியோக விஷயத்திலும் சமூகப் பிளவுகளைப் புகுத்தினால், அது நல்ல அரசாங்கத்திற்கு இடையூறாகும். தகுதியுடையவர் கையில்தான் நிர்வாகம் சிறப்பாக நடைபெறும். அங்கே பட்சபாதத்திற்கு இடம் கூடாது. நமக்கு ஐந்து இஞ்ஜி

னீயர்கள் தேவையாக இருந்தால், அவர்களைச் சமூகத்திற்கு ஒருவராகத் தேர்ந்தெடுக்கக் கூடாது. தகுதியுடையோர் அனைவரும் முஸ்லிம்களாயினும் சரி, பார்சிகளாயினும் சரி, அவர்களையே எடுக்க வேண்டும். அவசியமானால், கீழ்த்தர உத்தியோகங்களுக்குப் பரீட்சை வைத்து பல சமூகங்களிலிருந்தும் பொறுக்கி எடுக்கப்பட்டவர்களைக்கொண்ட பாரபட்சமற்ற ஒரு சபையினரால் தகுதிவாய்ந்தவர்கட்குப் பதவி வழங்கலாம். ஆனால், ஒருபோதும் சமூகவாரியாகப் பங்குபோட்டுப் பதவிகளை வழங்கக்கூடாது. கல்வியில் பின்னடைந்த சமூகத்தினர், தேசீய சர்க்காரிடமிருந்து அதிகம் கல்வி பெறச் சில சலுகைகளைத் தாங்கள் எதிர்பார்க்கலாம். இதைப் பலன் தரும் முறையில் செய்யலாம். ஆனால், அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளுக்கு ஆசைப்படுபவர்கள், அவைகளுக்கேற்ற பரீட்சைகளில் தேறிய பின்னர்தான் அப் பதவிகளை அடைய முயல வேண்டும்.

### நம்பிக்கையே நம்பிக்கையை வளர்க்கும்

என்னைப்பற்றிய மட்டில், நம் நாட்டில் உடனே தீர வேண்டியது, ஹிந்து - முஸ்லிம் பிரச்னை ஒன்றேதான். ஹிந்து-முஸ்லிம் ஐக்கியம்தான் சுயராஜ்யம் என்று ஜின்னா சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். துயரமுற்று உழலும் இந்த நாட்டில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நிலையான மன ஒற்றுமை ஏற்பட்டாலன்றி எதையும் செய்ய முடியாது. விரைவில் இந்த ஒற்றுமை ஏற்பட்டு விடும் என்பதே எனது நம்பிக்கை. ஏனெனில், இதுதான் இயல்பானது; இரு சாராருக்கும் மிக அவசியமானது. அத்துடன், நான் மனித இயல்பில் நம்பிக்கையுள்ளவன். தாங்கள் செய்த பல காரியங்களுக்கு முஸ்லிம்கள் பதில் சொல்லித் தீரவேண்டி யிருக்கலாம். 'மிக மோசமான கூட்டம்' எனக் கருதக்கூடியவர்களுடன்கூட நான் நெருங்கிப் பழகியுள்ளேன். இதற்காக வருந்தும்படி ஒரு சிறு நிகழ்ச்சிகூட நடந்ததில்லை. தமக்கு ஒருவர்மேலுள்ள சந்தேகம் தீர்ந்துவிட்டால், முஸ்லிம்கள் மிகவும் நம்பிக்கையுள்ளவர்களாகி விடுவார்கள். அவர்கள் பெருந்தன்மையுடையவர்கள்; தீரர்கள். தாங்களே தவறு செய்யும் ஹிந்துக்கள், தம் அண்டை வீட்டு முஸ்லிமைத் தவறு செய்வதாகக் குறைகூறுவது சரியல்ல. தாங்கள் சரியாக இருந்துகொண்டல்லவா பிறரைக் குறை சொல்ல வேண்டும்? ஒடுக்கப்பட்டவர்களுக்கு நாம் செய்ததையும் செய்து வருவதையும் பாருங்கள்! காபிர் என்பது இழிச்சொல்லானால், சண்டாளன் என்னும் சொல்லை என்ன என்பது? நாம் ஒடுக்கப்பட்டவர்களை நடத்தும் விதத்திற்கு உலக மதங்களின் சரித்திரத்திலேயே உவமை கிடையாது. இன்னும் அது நீடித்து வருகிறதே, அதுதான் வருந்தத்தக்கது. சர்வ சாதாரண மனித உரிமைக்குக்கூட வைக்கத்தில்* எத்தகைய போராட்

---

* திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த வைக்கத்தில் ரஸ்தாக்களில் செல்லும் உரிமையைப் பெறுவதற்காக ஹரிஜனங்கள் சத்தியாக்கிரகப் போர் நடத்தும்படி நேர்ந்த

டத்தை நடத்த வேண்டியிருந்தது? பாவம் செய்தவர்களைக் கடவுள் நேரடியாகத் தண்டிப்பதில்லை. அவரது வழிகள் மனித அறிவுக்குப் புரியாதவை. யார் கண்டது, நமது இன்னல்க ளெல்லாம் அந்த ஒரு பெரும் பாவத்தினால் நேர்ந்தவையாக இருக்கலாம்.

இஸ்லாம் சரித்திரத்தில் அது அறநிலையிலிருந்து வீழ்ச்சி யுற்ற சம்பவங்கள் உள்ளன. இருந்தபோதிலும், இஸ்லாம் சிறந்து விளங்கிய காலத்தில் அது தாராள நோக்குடையதாகவே இருந்திருக்கிறது. அது உலகப் புகழ் பெற்று விளங்கியது. மேற்கத்திய உலகில் இருள் சூழ்ந்திருந்த சமயம், கீழ் வானத் தில் ஒரு ஜோதி மயமான நட்சத்திரம் தோன்றித் துன்பத்தி லாழ்ந்து கிடந்த உலகிற்குச் சாந்தியையும் ஒளியையும் தந்தது. இஸ்லாம் ஒரு பொய் மதமல்ல; ஹிந்துக்கள் அதைப் பயபக்தி யுடன் ஆராய்ச்சி செய்யட்டும். பின்னர் என்னைப் போலவே அவர்களும் அதை நேசிப்பார்கள். அது இப்போது அழுக்கும் வெறியும் நிறைந்ததாக ஆகிவிட்டதெனில், அதற்கு நாமும் ஒரு வாறு காரணம்தான் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஹிந்துக்கள் தம் வீட்டைச் சரி செய்துகொண்டால், இஸ்லாமும் தனது பழைய, விசால நோக்கத்தைப் பெறும். இதில் எனக்குக் கொஞ்சமும் ஐயமில்லை. ஹிந்துக்களின் கையில்தான் சாவி இருக்கிறது. நாம் பீதியையும் கோழைத்தனத்தையும் விரட்டி விட வேண்டும். நம்புவதற்கு நமக்குத் தைரியம் வேண்டும். அப்படியாயின் எல்லாம் நன்மையாகிவிடும்.

—'எங் இந்தியா' – 29—5—1924

# 3

# முஸ்லிம் நண்பரின் கோபம்

ஹிந்து-முஸ்லிம் கடமைகளை விவரித்து நான் விடுத்த அறிக்கையைக் குறித்து ஒரு முஸ்லிம் நண்பர் எழுதிய கடிதத் திலிருந்து கீழ்க்கண்ட பகுதியைக் கொடுத்துள்ளேன்:

"ஹிந்துவின் கோழைத்தனத்தைக் கண்டு நான் அதிக வெட்கப்படு கிறேன். கொள்ளையடிக்கப்பட்ட வீட்டுக்காரர்கள், ஏன் தம் உடைமைகள் முதலியவற்றைக் காக்கும் முயற்சியில் உயிர்விடவில்லை?" நீங்கள் எழுதியுள்ள இந்த வாக்கியங்கள் ஹிந்துக்களைத் தூண்டிவிடக்கூடும். எனவே நீங்கள் இதை எழுதியதற்காக வருந்துகிறேன். உங்கள் எழுத்துக்களால் ஏற்படக் கூடிய விபரீதத்தை நினைக்கவே பயமாக இருக்கிறது."

---

தையே காந்திஜி மேலே குறிப்பிட்டுள்ளார். வைக்கம் சத்தியாக்கிரகப் போர் சம்பந்த மான முழு விவரங்களையும், மகாத்மா காந்தி நூல்கள்–7–ஆம் தொகுப்பு 234–272 பக்கங் களிலும், 8-ஆம் தொகுப்பு 413-419 பக்கங்களிலும் காணலாம்.

அபாயகரமானது எதையும் என் எழுத்துக்களில் என்னால் காண முடியவில்லை. அபாயத்தை எதிர்த்துத் தற்காப்புச்செய்து கொள்ளும் சக்தியை ஹிந்துக்களுக்கு என் அறிக்கை உண்டு பண்ணுமாயின், நான் சந்தோஷமே அடைவேன். ஒருவரை யொருவர் கண்டு பயப்படுவதை ஒழித்தாலன்றி ஐக்கியம் ஏற்படாது. இதை எழுதியவர், ஹிந்து-முஸ்லிம் பிரச்னை தீர வேறு என்ன செய்யலாம் எனச் சொல்லவில்லை. ஒரு ஹிந்து தனது அயலானைக் கண்டு பயந்து வாழ்கிறான். தன்னைக் காத்துக்கொள்ளுவதற்காக அடிக்கு அடி கொடுத்தோ, அல்லது அகிம்சை முறையில் நின்ற இடத்திலேயே கடமையைச் செய்தோ உயிர் துறக்கப் பழக வேண்டும் என்பதைவிட, இந்த ஹிந்துவுக்கு வேறு நான் என்ன சொல்ல முடியும்? நண்பர் மேலும் சொல்லுகிறார்:

"பண்டித மாளவியாஜி 'முஸ்லிம்களின் விரோதியில்லை' என நீங்கள் சொல்லுவதை அறிவுள்ள ஹிந்துவோ, முஸ்லிமோ ஒத்துக்கொள்ளமாட்டார். அவர் முஸ்லிம்களின் விரோதி என்பது பட்டப்பகலைப்போல் வெளிச்சமாயுள்ளது. ஹிந்துக்கள்கூட இதில் உங்களை நம்ப மாட்டார்கள் என்பது என் உறுதி. பண்டித மாளவியாஜியைச் சேர்ந்தவர்தான் லாலா லஜபதிராயும். ஜயராம்தாஸ், சோயித்ராம் இவர்களைப் பொறுத்த மட்டில், நீங்கள் உங்களுக்கே அநீதி இழைத்துக்கொள்ளுகிறீர்கள். பத்திரிகை வாசிப்பவர்களுக்கெல்லாம், அவர்கள் முஸ்லிம்களுடன் நடந்து கொள்ளுவது குன்றின் மேலிட்ட விளக்குப்போல் தெளிவான விஷயமாகும். ஹிந்துத் தலைவர்களைப் போற்றுவதாலும், முஸ்லிம் தலைவர்களைத் தூற்றுவதாலும் நீங்கள் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப் பாதையில் இம்மியும் முன்னேற முடியாதென உறுதியாகக் கூறுகிறேன்."

அலி சகோதரர்களையும், மௌலானா பாரி சாகிபையும் நான் நம்பும்வரையில் ஒற்றுமை சாத்தியமில்லை என்று ஹிந்து நண்பர்கள் சொல்லுகிறார்கள். இப்போதுள்ள ஹிந்து தலைவர்களையும் முஸ்லிம் தலைவர்களையும் நம்பாவிட்டால், ஒற்றுமை என்பது இவர்கள் இறந்த பிறகுதான் சாத்தியமாகும். நண்பர் மேலும் சொல்லுவதாவது:

"ஏன் தப்ளிக்கையும் ஆகாகானின் இலக்கியத்தையும் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள்? தேசீய இயக்கத்திற்கு அவை ஒரு சிறிதும் தீமை செய்ததில்லை. தப்ளிக்கை அவர்கள் சமாதான முறையில் நடத்திவருகிறார்கள். கேவலமான முறையில் நடக்கும் முஸ்லிம் பிரசாரத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறீர்கள். சுத்தி இயக்கத்தைப்பற்றிய செய்தி என்ன? அந்தத் துண்டுப் பிரசுரத்தில் காணும் முறைகள் நைஜாம் ராஜ்யத்தில் விரிவாகக் கையாளப்படுகின்றன என்று நீங்கள் சொல்லுவது ஆபத்தானது. இதன் மூலம் நீங்கள் உங்களை அறியாமலே ஒரு முஸ்லிம் ராஜ்யத்தைத் தாக்குகிறீர்கள்.'

நாம் எண்ணுவதைப் பேசக் கூடாது, மனத்தில் அடக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் ஊழியர் கூட்டம் பெருகி வருகிறது. அதற்கு உதாரணம் இக் கடிதம் எழுதியவர்தான்.

பலர் அறிய குப்பையைக் கிளற வேண்டிய அவசியமில்லை என்பது எனக்கு விளங்குகிறது. ஆனால், நம்மை எதிர்நோக்கும் பிரச்னைகளை, அதுவும் அவைகளைப்பற்றிப் பலரும் எண்ணமிட்ட வண்ணமிருக்கும் சமயத்தில், நாம் மூடிவைக்க முடியுமா? நான் முஸ்லிம் ராஜ்யத்தைத் தாக்கவில்லை என்பதைக் கவனிக்க, உணர்ச்சி வெறியில் கடிதம் எழுதியவர் தவறி விட்டார். எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஆட்சேபகரமான தப்ளிக் முறைகள் 'நைஜாம் ராஜ்யத்தில் விரிவாக நடைபெறுகின்றன என நான் கேள்விப்படுகிறேன்' என்றுதான் நான் கூறியுள்ளேன்.

அவர் மேலும் சொல்லுகிறார்:

"பசு வதையும் வாத்ய முழக்கமும் ஒரேவிதமானவை என்று கூறுவது எனக்கு விளங்கவில்லை. பசுவைப் பலியிட வேண்டுமென்று குரான் விதிக்கிறது. மசூதியின் முன் கொட்டு முழக்கம் செய்ய வேண்டுமென ஹிந்துக்களுக்கு எதுவும் விதிக்க வில்லை. சர்க்கார் ஆஸ்பத்திரி, ஆபீஸ்களின்முன் ஹிந்துக்கள் தங்களுடைய கொட்டுமுழக்கத்தை நிறுத்தவேண்டியிருக்கிறது. அதையே ஒரு மசூதியின்முன் செய்வதற்கு அவர்களின் பிடிவாதம் இடம் கொடுப்பதில்லை."

பசுப் பலியை முஸ்லிம்களுக்குக் குரான் விதிக்கவில்லை என்பது, கடிதம் எழுதியவருக்குத் தெரிய வேண்டும். குறிப்பிட்ட காலங்களில் பசு உள்படச் சில மிருகங்களைப் பலியிடுவதைக் குரான் விதிக்கிறதென்று சொல்லப்படுகிறது. பசுப் பலிதான் கொடுக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. மூன்றாவது கட்சியினர் பசு வதையைப் பலவந்தமாகத் தடுக்க முயற்சிக்கையில், பசு வதை செய்துதான் ஆக வேண்டும் என்றாகிவிடுகிறது. மசூதிகளின் முன் அவசியம் வாத்யம் வாசிக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், முஸ்லிம்கள் இதைப் பலவந்தப்படுத்தித் தடை செய்ய முன்வந்த உடனே, அதுவும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. இவ்விரு விஷயங்களும் தாமாகச் சீராகி விடுமாறு விட்டுவிடவேண்டும்.

4

## ஹிந்துக்கள் என்ன செய்யலாம்?

நான் விடுத்த ஹிந்து-முஸ்லிம் அறிக்கை சம்பந்தமாக எனக்குப் பல கடிதங்கள் கிடைத்துள்ளன. ஆனால் அவற்றில், புதிதாகவோ அல்லது மனத்தைக் கிளறும் விதத்திலோ எதுவும் இல்லை. எனவே, அவற்றை நான் பிரசுரிக்கவில்லை. ஆனால், பாபு பகவன்தாஸ் எழுதியுள்ள கடிதத்தை நான் மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறேன்; அவரது கேள்விகளுக்குப் பதிலும் கூறுகிறேன்.

முதலிரண்டு கேள்விகளைப் பொறுத்த மட்டில் அவரே பதில் சொல்லிவிட்டார். அவை ஓரளவுதான் உண்மை என்பது என் கருத்து. இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோரும், ஹிந்துக்களும் ஒரே இனத்தவராயினும், மதச் சூழ்நிலை அவர்களை வேறுபடுத்திவிட்டது. எண்ணம் மனிதனின் தோற்றத்தையும் ஒழுக்கத்தையும் மாற்றிவிடுவதை நான் கண்டுள்ளேன்; இதை நம்புகிறேன். சீக்கியர்கள் இந்த உண்மைக்குச் சமீப கால உதாரணமாகத் திகழ்கிறார்கள்.

முஸ்லிம்கள் பொதுவாகச் சிறுபான்மையினர். எனவே, இவர்கள் ஒரு வம்பர்கள் சமுதாயமாகவே ஆகியிருக்கிறார்கள். புதிய பரம்பரைகளைப் பின்பற்றத் தொடங்கியதனால், புது வாழ்க்கையில் கிடைத்த ஆண்மையைக் காட்டுகிறார்கள். என் கருத்துப்படி குரானில் அகிம்சைக்கு ஏராளமாக இடமிருந்த போதிலும், பதின்மூன்று நூற்றாண்டுகளாகச் செலுத்திய ஏகாதிபத்திய ஆட்சியினால் முஸ்லிம்கள் சண்டை போடுகிறவர்களாகியிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் எதிலும் முண்டியடித்துச் செல்லும் சுபாவமுடையவர்களாகிவிட்டனர். சண்டையிடும் இயல்பு அவர்களைத் துஷ்டத்தனம் வாய்ந்தவர்களாகச் செய்திருக்கிறது.

ஹிந்து நாகரிகம் மிகப் பழமையானது. ஹிந்துக்களுக்கு அகிம்சையே பிரதானம். ஹிந்துக்களின் நாகரிகம் இப்போது தோன்றியுள்ள புதிய இரு நாகரிகங்கள் அனுபவிக்கும் நிலைகளையெல்லாம் கடந்து வந்துள்ளது. நவீன அர்த்தத்தில் ஹிந்து மதம் எப்போதாவது ஏகாதிபத்தியத் திமிர்கொண்டிருந்திருக்குமாயின், அதைப் பழகிய பின்னர் வேண்டுமென்றோ, அல்லது காலத்தை அனுசரித்தோ அது கைவிட்டுவிட்டது. அகிம்சை உணர்ச்சி மேலோங்கியதன் காரணமாக, அது ஆயுத உபயோகத்தை ஒரு பிரிவினருக்கு மட்டும் உரிமையாக்கியது. எனினும், அப்பிரிவு கற்றறிந்த, பற்றற்ற, ஆன்மிக உணர்வு நிறைந்த, யுத்த சம்பந்தமற்ற, ஒழுக்கம் நிறைந்த ஓர் அதிகாரத்திற்கு அடங்கி நடக்க வேண்டியிருந்தது. ஹிந்துக்கள் சமூகம் யுத்த முஸ்தீபு உடையதல்ல. ஹிந்துக்கள் ஆன்மிகப் பயிற்சியை இழந்ததால், ஆயுதங்களுக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடிய சக்தியையும் இழந்துவிட்டார்கள். அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் இல்லை; அதில் மனமும் செல்லவில்லை. ஆதலால், இவர்கள் பயங்காளிகளாகவும், கோழைகளாகவும் ஆகிவிட்டார்கள். இத்தீமை சாந்தத்தின் விபரீதமான வளர்ச்சியேயாகும்!

ஹிந்துக்கள் தனித்திருப்பது சந்தேகமின்றித் தீமையே என்பது என் கருத்தாகும். ஆனால், அதுதான் அவர்களது கோழைத்தனத்திற்குக் காரணம் என்று நான் கருதவில்லை. இதனாலேயே தான் தற்காப்புக்கு குஸ்திப் பயிற்சி சரியான வழி என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. உடற் பயிற்சிக்கு அது சிறந்தது. ஆனால், தற்காப்புக்கு ஆன்மிகப் பயிற்சியையே மீண்டும் கொண்டு வர நான் முயற்சிப்பேன். எனினும், தன்னைத் தூய்

மைப்படுத்திக்கொள்ளுவதுதான் மிகச் சிறந்த, அழியாத தற்காப்பு. இன்று நம்மைச் சூழ்ந்துள்ள மிரட்டல்கள், என்னைக் காலை வாரிவிடுவதற்கு நான் இடங்கொடேன். ஹிந்துக்கள் தன்னம்பிக்கையுடன் தங்களுடைய பரம்பரைச் சம்பிரதாயங்களைப் பின்பற்றி ஒழுகினுல், அவர்கள் துஷ்டர்களைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. ஆன்மிகப் பயிற்சியை ஆரம்பித்த நிமிஷத்திலேயே முஸ்லிம்கள் வழிக்கு வந்துவிடுவார்கள். அவர்களால் இணங்காமல் இருக்க முடியாது. தங்களிடத்திலும் முஸ்லிம்கள் பேரிலும் நம்பிக்கையுள்ள ஹிந்து இளைஞர்களின் ஒரு சிறு கூட்டம் எனக்குக் கிடைத்தால், இவர்களைப் பலவீனர்களுக்குக் கவசம் போன்ற காப்பாளர்கள் ஆக்கிவிடுவேன். இவ்விளைஞர்கள் கொல்லாமல் சாகும் வழியைக் கற்பிப்பார்கள். எனக்கு வேறு வழி தெரியாது. துன்பம் தங்களைச் சூழ்ந்த பொழுது, நமது முன்னேர் தவம் செய்தனர்; தங்களைப் பரிசுத்தப் படுத்திக்கொண்டனர்.

உடலின் குறைகள் அவர்களுக்குத் தெரியும். ஆதரவற்ற நிலையில் ஆண்டவனை நோக்கி, அவர்கள் தம் வேண்டுகோளுக்கு அவன் இணங்கும்வரை பிரார்த்தனை செய்தனர். "ஆம்! ஆனல் கடவுள் ஆயுதப் பிரயோகம் செய்ய ஒருவரை அனுப்பினுரே" என்கின்றனர் என் ஹிந்து நண்பர்கள். இந்தப் பதிலின் உண்மையை மறுப்பது என் வேலையல்ல. எந்த ஒரு ஹிந்துவும் பணி செய்யாமல் பலனை எதிர்பார்க்க மாட்டார் என்பதை மட்டும் இந்த நண்பருக்கு நினைவூட்டுகிறேன். போதிய தவம் செய்த பிறகு, யுத்தம் செய்யக் காலம் வரும். போதிய அளவு நாம் தூய்மை அடைந்துவிட்டோமா என்பதே என் கேள்வி. தனிப்பட்டவர்களின் பரிசுத்தம் ஒரு புற மிருக்கட்டும். தீண்டாமைப் பழியைப் போக்கிவிடப் போதுமான பிராயச்சித்தத்தையாவது நாம் விரும்பிச் செய்துள்ளோமா? நமது மத வழிகாட்டிகள் இருக்கவேண்டியப்படி இருக்கிருர்களா? முஸ்லிம்களின் நடத்தையில் குறை கண்டுபிடிக்கும்போதெல்லாம் நாம் காற்றுடன் குஸ்தி போடுவதிலே கவனம் செலுத்துகிறவர்களாகிருேம். ஆங்கிலேயர்களிடம் எப்படி நடந்துகொள்ளுகிருேமோ, அப்படியேதான் முஸ்லிம்களிடமும் நடந்துகொள்ள வேண்டும். நாம் சொல்லிக்கொள்ளுவது உண்மையானல், ஆங்கிலேயரைக் காட்டிலும் முஸ்லிம்களிடம் நாம் வெற்றி காண்பது அதிக எளிதாகும். வெற்றி காணலாம். ஆங்கிலேயர்களைப்பற்றி நம்பிக்கை இருக்கிறது; ஆனல், முஸ்லிம்கள் விஷயத்தில் கொஞ்சமும் நம்பிக்கை கிடையாது என்று என் ஹிந்து நண்பர்கள் என்னிடம் காதோடு காதாகக் கூறுகிருர்கள். 'முஸ்லிம்களிடத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையேல், ஆங்கிலேயர்களிடத்தில் வைக்கும் நம்பிக்கை நிச்சயமாகத் தோல்வியுறும்' என்று இவர்களுக்கு நான் சொல்லுகிறேன்.

மற்றக் கேள்விகளுக்குச் சுருக்கமாகப் பதில் அளித்துவிடலாம். தலைவர்கள் விரும்பியதாலேயே குண்டர்கள் அங்கு

வந்தனர். தலைவர்கள் ஒருவரை யொருவர் நம்பவில்லை. அவ நம்பிக்கை, தெளிவான காரணங்களால் உண்டாவதில்லை. நமது நலன்கள் ஒரேவிதமானவை என்பதை நாம் இன்னும் கண்டு கொள்ளவில்லை. ஒரு கட்சி, மற்றொன்றைத் தந்திரத்தால் வீழ்த்தி விடலாமென்ற தெளிவற்ற நம்பிக்கை இருந்து வருகிறது. பாபு பகவான் தாஸ் கூறுவதுபோல், நாம் எத்தகைய சுயராஜ்யத்தை விரும்புகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளாததும், இந்தச் சந்தேகத்துக்குப் பெரிய காரணம் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். முன்னால் நான் இப்படி நினைத்ததில்லை. எராவ்டா மத்திய சிறையில் நான் சர் ஜார்ஜ் லாயிடின் விருந்தினனைகப் போவதற்கு முன்னால், என் மனத்தை அவர் அநேக மாக மாற்றிவிட்டார். இப்பொழுது நான் முழுதும் அவர் வழிக்கே மாறியுள்ளேன்.

'தொடர்பு நிலை' என்று நான் குறிப்பிட்ட சொற்றொடர், தனிப்பட்டவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்ப எல்லா சமூக, மத, ராஜீய சம்பந்தங்களையும் குறிக்கும். உதாரண மாக, மதத்தில் உள்ள பிளவுகளை அதிகரிக்காமல், இரண்டுக்கும் பொதுவான உயர்ந்த விஷயங்களைக் கண்டுபிடிக்க முயற்சிப்பது நன்மையாகும். மத நம்பிக்கைகளுக்குப் பங்கமின்றிச் சமூகப் பிரிவிற்கு முடிந்த இடங்களில் தொடர்பை அமைக்கலாம். ராஜீய அரங்கத்தில் பொதுவான தொடர்பு அம்சத்தைக் கண்டுபிடிக்க நான் என் சொந்த வழியை விட்டுச் செல்லவும் தயாராக இருக்கிறேன்.

ஹக்கீம் சாகிபை நான் மத்தியஸ்தராகக் குறிப்பிட்டதற்குக் காரணம், சந்தேகத்துக்கு இடமின்றி எல்லோருடைய மதிப்பை யும் அவர் பெற்றிருப்பதுதான். இருப்பினும், மத வெறியும் பட்ச பாதமும் நிரம்பிய ஒரு முஸ்லிமின் கையில்கூட இந்த அதிகா ரத்தைக் கொடுப்பதில் எனக்குச் சிறிதும் தயக்கமில்லை. இந்த மத்தியஸ்தர் எல்லா மாகாணங்களிலுமே முஸ்லிம்களுக்கு அதிகப் படி பிரதிநிதித்துவம் கொடுத்தாலும், நான் ஒரு ஹிந்து என்ற முறையில் எனக்கு நஷ்டம் ஒன்றும் இல்லை என்பதை உணரு வேன். தேர்ந்தெடுத்த சபைகளில் இடம் பெறுவதாலோ, கொடுப்பதாலோ, கொள்கைகளுக்கு அபாயம் எதுவும் ஏற்படுவ தில்லை. ஒரு மனிதருக்கு எல்லாப் பொறுப்பையும் கொடுத்து விட்டால், அவரது தன்மதிப்பும், கடவுளிடத்துள்ள பயபக்தியும் அவரைச் சீர்செய்து சாந்த நிலையை அடையும்படி செய்கின்றன என்பது எனது அனுபவமாகும்.

நாம் இனிமேல் ஐக்கியமாக இருப்போம் என்று அல்லது இதைப்போன்ற வேறு ஏதாவது பிரகடனம் செய்வதால் மட்டுமே ஒற்றுமை வந்துவிடாது. பிரகடனப்படுத்துவதை நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். இப்படி வாழ்பவர்கள் ஒரு சிலரே யாயினும் நன்மையே உண்டாகும்.

—'எங் இந்தியா'–19—6—1924

பகுதி ஆறு

# ஆரிய சமாஜிகளின் கோபம்

## 1

## சகிப்புத் தன்மையற்ற எதிர்ப்பு

ஆரிய சமாஜிகளின் கோபத்திற்கு நான் இலக்காகியுள்ளேன். சமாஜம், அதன் புகழ்பெற்ற ஸ்தாபகர், சுவாமி சிரத்தானந்தஜி, சுத்தி இயக்கம் முதலியவற்றைப்பற்றி நான் குறிப்பிட்டுள்ளதை எதிர்த்துப் பல தந்திகளும் கடிதங்களும் வந்துகொண்டிருக்கின்றன. காஜிபாத், முல்டான், டில்லி, சுக்கூர், கராச்சி, ஜாக்ரான், செகந்திராபாத், லாகூர், சயால்காட், அலகாபாத் முதலிய இடங்களிலிருந்து அவை வந்துள்ளன. தனிப்பட்ட கடிதங்களை விட்டுவிடுகிறேன். எல்லோரும் தங்களுடைய எதிர்ப்பைப் பிரசுரிக்குமாறு எதிர்பார்க்கிறார்களென எண்ணுகிறேன். சிலர், நான் அப்படிச் செய்ய வேண்டுமென வற்புறுத்துகிறார்கள். அவர்கள் விருப்பத்திற்கு இசையாததற்காக என்னை அவர்கள் மன்னிக்க வேண்டும். பெரும்பாலான கடிதங்களும் சென்ற வாரம் வெளியிட்டிருந்த தந்தியைப் போன்றவைதான். ஆரிய சமாஜம், சத்தியார்த்தப் பிரகாசம், ரிஷி தயாநந்தர், சுவாமி சிரத்தானந்தஜி, சுத்தி இயக்கம் முதலியவற்றை நான் தாக்கிவிட்டதாகக் கருதி, அனைவரும் வெகுண்டெழுகிறார்கள். என் நிலையில் இன்னும் மாறுதல் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனக்கு வந்த வாதபூர்வமான கடிதங்களை எல்லாம் கவனத்துடன் வாசித்தேன்.

என் அறிக்கை, அறியாமையால் நிகழ்ந்ததெனக் கூறுபவர்கள், ஒருவேளை நான் என் தவறை உணர்ந்து திருந்தக் கூடுமென நினைத்து, எனக்குப் புகலிடம்வைத்திருக்கிறார்கள் போலும்! துரதிருஷ்டவசமாக, என்னைப் பொறுத்த அளவில், எவ்வகைச் சந்தேகமும் இல்லை. சத்தியார்த்தப் பிரகாசத்தைப் பற்றியோ, அல்லது ஆரிய சமாஜிகளின் பொதுக் கொள்கைகளைப்பற்றியோ தெரியாதென நான் சொல்லிக்கொள்ள முடியாது. நான் ஆரிய சமாஜத்திற்கு விரோதமான எண்ணம் கொண்டவனும் அல்ல. இதற்கு மாறாக, நான் அதை அதிக பயபக்தியுடன் அணுகினேன். இன்னும் ரிஷி தயானந்தரின் ஒழுக்கத்தில் நான் மிகுந்த மதிப்பு உள்ளவனாக இருந்தேன்; இன்றும் இருக்கிறேன்.

அவரது பிரம்மச்சரியம் எனக்கு வழிகாட்டியது. அவரது பயமின்மை என்னைக் கவர்ந்தது. அவர் நான் பிறந்த கத்திய வாரைச் சேர்ந்தவர் என்பதைக் குறித்து நான் பெருமை அடைகிறேன். எனினும், நான் என்ன செய்ய முடியும்? நானுகை விரும்பாமலேயே இந்த முடிவுக்கு வந்தேன். பொருத்தமான காலத்தில் அதை வெளியிட வேண்டியதாயிற்று. இதை வெளியிடாது மறைத்திருந்தால், அது எனது கோழைத்தனமாக இருந்திருக்கும். எனது எண்ணத்தை வெளியிட்டதற்காக என் மீது கோபம் வேண்டாம். நான் கூறிய ஆட்சேபணைகளை நல்லபடியாக ஏற்றுக்கொண்டு, சோதித்துப் பார்த்த பிறகு, அந்த ஆட்சேபணைகள் தவறு என்பதை நான் ஒப்புக்கொள்ளும்படி செய்ய முயற்சிக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் ஒப்புக்கொள்ளும்படி செய்ய முடியாவிட்டால், எனக்காக அவர்கள் பிரார்த்தனை செய்யலாம். நான் கண்ட முடிவிற்கு ஆதாரங்களைக் காட்டும்படி, கடிதங்களை எழுதிய இருவர் எனக்குச் சவால் விடுத்திருக்கின்றனர். அது ஒரு நியாயமான சவாலேயாகும். நான் வந்துள்ள முடிவுக்கான ஆதாரங்களைச் சத்தியார்த்தப் பிரகாசத்திலிருந்தே கூடிய விரைவில் எடுத்துக் காட்ட முடியுமென்று நம்புகிறேன். அதைக்கொண்டு என் நண்பர்கள் என்னை மத விவாதத்திற்குள் இழுத்துவிடக்கூடாது. எனது முடிவுகளுக்கு ஆதாரங்களைக் கொடுப்பதுடன் நான் திருப்தியடைவேன்.

சுவாமி சிரத்தானந்தஜியைப் பொறுத்த வரையில், ஆதாரம் காட்ட வேண்டிய கேள்வியே இல்லை. என்னையும் அவரையும் தனியே விட்டுவிடுங்கள். எனது அபிப்பிராயம் இப்படியிருந்தாலும், சுவாமிஜியுடன் நான் சண்டையிடப் போவதில்லை. ஒரு நண்பன் என்ற முறையிலேயே நான் குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறேன். 'கிறிஸ்தவ மதத்திலும், அதைவிடக் குறைந்த அளவு இஸ்லாமிலும் நடைமுறையில் இருப்பது போல்' என்று நான் கூறியுள்ளேன். கண்டனவாதிகள், தங்களுடைய மூடத்தனமான ஆத்திரத்தில் நான் உபயோகித்த அந்தப் பகுதியை மறந்துவிட்டார்கள். அவ்விதம் கூறுவதற்கும், ஹிந்து சமயத்தில் மத மாற்றம் இல்லை என்று கூறுவதற்கும் முற்றிலும் வேற்றுமை உண்டு. ஹிந்து மதத்திற்கு, அதற்கென்று தனியான 'சுத்தி' வழியுண்டு. ஆரிய சமாஜிகள் என் கருத்துக்கு மாருக இருந்தால், அவர்கள் என் கருத்தை நானே வைத்துக்கொண்டிருக்கும்படி விட்டுவிடலாம் அல்லவா? விரும்பினுல், இவ்வியக்கத்தை நடத்திச் செல்ல அவர்களுக்குப் பூரண உரிமையுண்டென்று நான் கூறியதை, எனது அறிக்கையை அவர்கள் மறுபடியும் வாசித்தால் தெரிந்துகொள்ளுவார்கள். சகிப்புத்தன்மை என்பது கருத்துக்கள் ஒன்றுபடுவது என்பதல்ல. கருத்துக்கள் துருவங்களைப் போல வேறுபட்டாலும், சகிப்புத்தன்மை வேண்டும். இறுதியாக, ஆரிய சமாஜிகளோ அல்லது முஸ்லிம்களோ பெண்களைத் திருடிக்கொண்டு போகிருர்களென நான்

சொல்லவில்லை. 'அவ்விதம் கேள்விப்படுகிறேன்' என்றுதான் சொல்லியிருக்கிறேன். நான் கேட்டவைகளைச் சொல்லி இரு தரப்பினருக்கும் குற்றச்சாட்டைப் பொய்ப்பிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்தேன். நான் கேள்விப்பட்டவைகளைப் பிர சுரித்துச் சூழ்நிலையைத் தெளிவுபடுத்துதல் நல்லதல்லவா?

அவர்களின் எதிர்ப்பு, அவர்களுக்குச் சகிப்புத் தன்மை இல்லை என்பதைக் காட்டுகிறது என்று என் ஆரிய சமாஜ நண்பர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பொது மனிதர் களும் பொது ஸ்தாபனங்களும் தொட்டால் சிணுங்கிகளாக இருக்கக்கூடாது; குறைகளை எடுத்துக்காட்டுவதைப் பெருந் தன்மையுடன் ஏற்க வேண்டும்.

அவர்களுக்கு இப்போது ஒரு வேண்டுகோள். அவர்கள் அனைவரும் தங்களுடைய கண்டனங்களைத் தெரிவித்துவிட்டனர். அவற்றை நான் மனத்திற்கொள்ளவில்லை. அவர்களின் வருத்தத் தில் நானும் பங்குகொள்ளுகிறேன் என உறுதி கூறுகிறேன். அந்தக் கண்டனத்தை எழுதியபோது என் மனம் வேதனை யடைந்தது. இப்போது, அவர்களை அது புண்படுத்தியதென அறிய, இன்னும் அதிக மனவேதனையடைகிறேன். நான் அவர் களின் விரோதியல்ல, நண்பனே என உரிமை பாராட்டுகிறேன். காலம்தான் எனது நட்பை நிரூபிக்கும்.

எந்த மதத்துடனும், வேறு எவருடனும் அவர்கள் சண்டையிட விரும்பவில்லை. இதைப் பலரும் தங்களுடைய கடிதங்களில் கூறி யுள்ளார்கள். சமாஜத்திற்கும், ஸ்தாபகருக்கும், சுவாமிஜிக்கும் நான் கூறியுள்ள புகழுரைகளைப்பற்றி அவர்கள் சிந்திப்பார்களாக. ஆரிய சமாஜிகள் செய்துள்ள பரிசுத்தப்படுத்தும் வேலைகள் எனக்குத் தெரியும். ஹிந்து மதத்தைப் பாழ்படுத்தி வந்த பல துர்ப்பழக்கங்களை அவர்கள் அகற்றியுள்ளனர். ஆனால், எவரும் தம்முடைய கைமுதலைக்கொண்டே வாழ முடியுமா? இதற்கு மேலும் செய்து, சீர்திருத்த மனப்பான்மையை அவர்கள் விசால மாக்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் மறுத்தபோதிலும், நான் மறுபடியும் சொல்லுகிறேன். சுத்திப் பிரசாரத்தில் கிறிஸ்தவப் பிரசார மணம் கமழுகிறது. இவர்கள் உயரவேண்டும் என்பதே என் விருப்பமாகும். உள்ளுக்குள்ளிருந்தே சீர்திருத்தம் வேண்டு மென வற்புறுத்தினால், அது அவர்களின் நேரத்தையும் சக்தி யையும் சாப்பிட்டுவிடும். ஆரிய சமாஜம் ஹிந்து மதத்தின் ஒரு பகுதியென என்னைப்போல் இவர்கள் நம்பினால், ஹிந்துக்களை ஹிந்து தருமங்களைப் பின்பற்றுவோராகச் செய்யவேண்டும். வேறென்று நினைத்தார்களானால், ஹிந்துக்களை இவர்கள் மாற்று வது கடினமான காரியமாகிவிடுமென்று நான் அஞ்சுகிறேன். அவர்கள் தங்களுடைய உண்மையான நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். இப்பொழுது நடந்து வரும் மகத்தான தேசீய, மத இயக்கங்களுக்கு அவர்கள் உதவ வேண்டும் என்ப தால்தான் நான் அவர்களின் குற்றங் குறைகளைப்பற்றிக்

கூறினேன். குறுகிய வழி என எனக்குத் தோன்றியதை, அவர்கள் விசாலமாக்குவார்களேயானால், சமாஜத்திற்கு எதிர்காலம் மகத்தானதாக இருக்கும். விசாலமடைய இடமில்லையென சமாஜிகள் கருதினால், நான் அவர்களுக்காக வருந்துவேன். அப்படியானால், நான் அவர்களுடைய விசால திருஷ்டியைக் காண முடியாததற்காகப் புண்படக்கூடாதெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் பெரிய மனதுடன் எனது குருட்டுத்தனத்தைப் பொறுத்துக்கொண்டு அதை நீக்க முயலவேண்டும்.

— 'எங் இந்தியா' - 12—6—1924

## 2

# மீண்டும் ஆரிய சமாஜிகள் பிரச்னை

ஆரிய சமாஜக் கொள்கைகளையும் அவற்றின் பெருமையையும் நான் அறியவில்லையென நினைத்துக்கொண்டு, பலர் நீண்ட விரிவுரைகள் எழுதி அனுப்பியுள்ளனர். வாசகர்கள், எனது வியாக்கியானத்தைப்பற்றி ஆரிய சமாஜிகள் கொண்டுள்ள எண்ணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் மேலீட்டால், ஒரு கடிதத்தைப் பிரசுரிக்கிறேன். பிரசுரம் செய்வதில் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒரு கடிதம் கடைசியாகக் கிடைத்திருக்கிறது. அது காங்கிரி குருகுலத் தலைமைப் பேராசிரியர் ராமதேவரிடமிருந்து வந்துள்ளது. அவர் எழுதியதில் ஒரு பகுதியை மட்டும் எடுத்துவிட்டேன். அது அவருக்கு நீதி வழங்குவதாக இல்லை. அது அவசரத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். அதைக் குறைத்ததால், அவரது வாதத்தின் வேகம் குறைந்துவிடவில்லை. நிச்சயமாக, சமாஜ ஸ்தாபகரைப்பற்றிய அவரது உற்சாகத்துடன் கூடிய புகழுரையின் வேகம் சிறிதும் குறைந்துவிடவில்லை. இதுதான் தலைமைப் பேராசிரியர் ராமதேவரின் கடிதம்:

" 'எங் இந்தியா'வில் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றித் தாங்கள் எழுதியிருந்ததைப் படித்து அதிக வருத்தமடைந்தேன். இவ்வளவு பெரிய ஒருவர், இவ்வளவு ஏமாற்றந் தரத்தக்க விதத்தில் எழுதியதை என் வாழ்வில் இதற்கு முன் நான் படித்ததில்லை. பஞ்சாபிலும், ஐக்கிய மாகாணத்திலும் அக்கட்டுரை கடுமையான கோபத்தையும் மனக்கொதிப்பையும் உண்டுபண்ணியுள்ளது. நிலைமையில் அமைதி ஏற்படுவதற்குப் பதிலாக, ஹிந்துக்களின் மனம் அதனால் கொந்தளிப்படைந்துள்ளது. ஆரிய சமாஜிகளுள் சிந்தனையாளர் பலர், நீங்கள் இஸ்லாமின் பக்கம் சார்ந்து பேசுகிறீர்கள் என்றும், எனவே, உங்களுக்குத் தெரியாமலேயே நீங்கள் ஆரிய சமாஜத்திற்குப் பெரிய தீங்கிழைத்து வருகிறீர்கள் என்றும் எண்ணுகின்றனர். ஆரிய சமாஜத்தின் கோட்பாடுகளைப் பற்றித் தாக்கியிருக்கிறீர்களே, அவற்றிற்கும் ஹிந்து-முஸ்லிம்

ஒற்றுமைக்கும் சம்பந்தமேயில்லை. அவற்றை நீங்கள் சிந்தித்து முறைப்படுத்த வில்லை; நீங்கள் தத்துவ விவாதம் செய்யும் நிலையில் இல்லை. வேதங்கள் கடவுளால் உண்டாக்கப்பட்டவையென ஆரிய சமாஜிகள் நம்புவதற்கும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும் உள்ள சம்பந்தம், மரணத்திற்குப்பின் ஆன்மா வேறொரு உடலில் பிரவேசிப்பது பற்றி உங்களுக்குள்ள நம்பிக்கைக்கும் தேசீய மகாசபையில் ஏற்பட்டுள்ள பிளவுக்கும் உள்ள சம்பந்தத்தைப்போன்றது தான்! வேதங்கள், கடவுள் அருளால் நேரே போதிக்கப்பட்டவை என்ற நம்பிக்கை குறுகிய நோக்குடையதாகுமானல், இஸ்லாமும் வேத மதத்தைப் போன்று குறுகிய நோக்குடையதே. முஸ்லிம் மதம் செழித்தோங்கிய காலத்திலேயே, நீங்கள் உற்சாகத்துடன் போற்றிப் புகழும் அம்மதத்திலேயும் இந்த நம்பிக்கை முக்கிய இடம் பெற்றிருந்தது.

"வேதம் குற்றம் குறையற்றது என்ற தத்துவத்தை மஹரிஷி தயானந்தர் தான் முதன் முதலில் வெளியிட்டுச் சொல்லியவர் என்ற தங்கள் குறிப்பு உண்மையில் ஆதாரமற்றது. ஒரு மனிதர் எவ்வளவு பெரியவரா யிருப்பினும், தாம் படிக்காத விஷயங்களில் பிரவேசிப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதையே இது காட்டுகிறது.

"உபநிஷத்துக்கள், மனுஸ்மிருதி, ஆறு தத்துவ தரிசனங்கள், புராணங்கள், சங்கரர், ராமானுஜர், மத்வர், சைதன்யர் மற்றும் வேதரிஷிகள், பண்டிதர்கள், இவர்களின் நூல்கள் யாவும் இக் கோட்பாட்டைப் பிரசாரம் செய்கின்றன என்பதை, நான் தாழ்மையாக எடுத்துக் காட்டலாமா? வேதங்கள், பூத பௌதிக சாஸ்திரங்கள் உட்பட்ட, எல்லா அறிவையும் வித்துருவில் தம்முள் அடக்கிக்கொண்டுள்ளன என்பது புதிதல்ல. ஆரிய பட்டர், பாஸ்கராச்சாரியர் போன்ற முற்கால விஞ்ஞானிகளும் இக்கொள்கை உடையவர்களே. பாவ்கீ, பரமசிவ ஐயர், துவிஜதாஸ் தத்தா போன்ற தற்கால வேத ஞானிகளும் தனித்தனியே கண்ட முடிவும் இதுவே. இவர்கள் யாரும் ஆரிய சமாஜி அல்லர். சுவாமி தயானந்தர் ஒருவரே வேதத்திற்குச் சரியான அர்த்தம் பண்ணும் வழிகளைக் கண்டுள்ளார் என அரவிந்த கோஷ் வெளிப்படையாகச் சொல்லியிருப்பது உங்களுக்குத் தெரியுமோ என்னவோ? தம் வாழ்நாள் முழுவதையுமே வேதங்களைப் படிப்பதற்கே செலவிட்ட இத்தகைய பேரறிஞர்கள் சொல்லுவதை ஒரு மகாத்மா தமது கூற்றினல் புறக் கணித்துவிட முடியுமா? அம்மகாத்மா ஒரு ஐந்து வருடங்கள் கூட வேதங்களை மூலத்தில் கற்பதில் செலவிடவில்லை. இவர் எத்தகைய ஒழுக்கசீலராக இருந்தால் என்ன? இவருக்கு மனிதவர்க்கத்தின்மீது எல்லையற்ற அன்பு இருந்த போதிலும்தான் என்ன? எல்லா மதங்களையும் கோட்பாடுகளையும் கொண்ட பல்வேறு மக்களின் மேலான அரசியல் தலைவர் என்ற முறையில் எழுதும் போது, பாரமார்த்திகத் தர்க்க வாதத்தில் நீங்கள் இறங்கியது பெரிய தவறு. சத்தியார்த்தப் பிரகாசத்தைப் பற்றிய உங்களின் மதிப்பீடு மிகவும் தவறானது. பிரார்த்தனை, பிரம்மச்சரியம், கல்விமுறை, திருமணச் சீர்திருத்தம், சந்நியாசம், அரசியல், முக்தி, அறிவு, அறியாமை, வேதம், சைவம், முதலியவைகளைப் பற்றிக் கூறும் முதல் பத்து அத்தியாயங்களை நீங்கள் படித்ததில்லைபோல் தோன்றுகிறது. இந்த அத்தியாயங்கள் வேறு மதங்களைப் பற்றிப் பேசுவதே இல்லை. நீங்கள் கடைசி நான்கு அத்தியாயங்களை மட்டும் மேலெழுந்த வாரியாகப் பார்த்திருப்பீர்கள் போலிருக்கிறது. சத்தியார்த்தப் பிரகாசத்தை அவசரமாகப் படிப்பதற்கு வெகு நாட்களுக்கு முன்னரேயே, உங்களது அந்த

ராத்மாவின் உதவியால் சுவாமி தயானந்தர் சகிப்புத்தன்மை யற்றவர் என்ற விபரீதமான முடிவுக்கு வந்துவிட்டீர்கள் போலிருக்கிறது. சர்க்கார் தரப்பு வாதம் முடிந்ததும் தீர்ப்புக் கூறிய பின்னர், தமது தீர்ப்பை நிலைநாட்டுவதற்காகப் பிரதிவாதியை விசாரிக்க முற்பட்ட நியாயாதிபதியைப் போலிருக்கிறது உங்கள் செய்கை. தயானந்தரின் நூல்களைக் கவனமாய்ப் படித்தவர்கள்—உங்கள் நண்பர் ஆண்டுரூஸும் இவர்களில் ஒருவர்—அவர் பாதங்களில் வீற்றிருந்து கேட்கும் பாக்கியம் பெற்ற ஹியூம், ரெவரெண்டு ஸ்காட், சர் சையத் அஹமத், ரானடே, திலாங், மலபாரி, ரகுநாத ராவ், பிஷன் நாராயண் தார் போன்றவர்களுக்கு அவர் அக்காலத்தில் தலைசிறந்த மத சீர்திருத்தக்காரர் என்ற முடிவுக்கு வருவதில் சிரமம் இருக்கவில்லை. அவரது அன்பு, சாதி, தேசம், நிறம், பண்பாடு முதலியவைகளை யெல்லாம் கடந்தது. இனி, நான் நிறுத்திக்கொள்ள வேண்டும். நான் இவ்வளவு எழுதியதையே, உலகத்திலுள்ள மனிதர்களுக்கெல்லாம் மிகப் பெரியவராகிய ஒருவரைப்பற்றி ஒரு சிறிய மனிதன் அகங்காரத்துடன் குறிப்பிட்டவை யெனக் கருதலாம். ஆனால், நான் சொல்லுவதெல்லாம் எனக்கு உங்கள்மீதுள்ள பயபக்திக்கு ஈடு எனது அன்பும் பிரியமும் தான் என்பதே. அன்பும் பக்தியும் மிகத் தாழ்ந்தவர்களையும் பலசாலிகளின் தரத்திற்கு உயர்த்தி விடுகின்றன.

அன்பும் பக்தியும் கொண்ட,
உங்கள் பிரியமுள்ள.
**ராம தேவர்,''**

என் மதத்திற்கு உட்பட்டதுதான் எனது ராஜீயம் என்று நான் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறேன். எனது மத வாழ்வை, அதாவது பணிசெய்து கிடப்பதை, ராஜீயத்தால் பாதிக்கப்படாமல் நடத்த முடியவில்லை. ஆதலால், நான் ராஜீயத்தில் என்னை அறியாமலேயே ஈடுபட்டுள்ளேன். பணி செய்வதற்கு ராஜீயம் இடையூறாக இருந்தால், அதை உதறித்தள்ளி விடுவேன். எனவே, அரசியல் தலைவராயிருப்பதால் மத விஷயங்களைப் பற்றி எழுதக்கூடாதென்கிற கோட்பாட்டிற்கு நான் உடன்பட முடியாது. ஆரிய சமாஜத்தின் உபயோகம் குறைந்து வந்தது; அத்துடன் அதன் தற்கால வேலைகள் தேசத்திற்கு ஹானி விளைவித்தன. ஆதலால்தான் நான் அதைப் பற்றி எழுத வேண்டியிருந்தது. ஒரு ஹிந்து நண்பன் என்ற முறையில், ஒரே மூல மதத்தைப் பின்பற்றுகிறவர்களுக்கு நான் குறிப்பாக எடுத்துச் சொன்னேன். நான் மதங்களின் தாரதம்மியத்தைப் பற்றி விவரித்துக்கொண்டிருப்பவனாயின், நிச்சயமாக இஸ்லாமைப் பற்றியும் சொல்லியே இருப்பேன்.

எனக்கு வேதங்களைப் பற்றிய நேரடியான அறிவு இல்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், பல விஷயங்களை யொட்டியும் நானே முடிவு காண்பதற்கான அளவு எனக்குத் தெரியும். மஹரிஷி தயானந்தரின் போதனைகளுக்கு நான் விரோதமாக இருக்கிறேன் என்று தலைமைப் பேராசிரியர் ராம தேவர் நினைப்பது தவறு. ஸ்ரீ ராம தேவர் குறிப்பிடும் பெரி

யோர்கள் கூறிய புகழுரைகளின் வாசகம் எனக்குத் தெரியாது. ஒரு வேளை அவர்களின் புகழுரையில் நானும் பங்கெடுத்துக் கொண்டிருந்தாலும், என்னுடைய இதே கருத்துக்கள் மாருது இருந்திருக்கும். என் மனைவியின் குறைகள் எனக்குத் தெரிவதால், நான் அவளைக் குறைவாக நேசிப்பதில்லை. நான் அந்த ஸ்தாபகரின் குறைகளை எடுத்துக் கூறியதால் எனக்கு அவரிடம் மதிப்போ, பக்தியோ இல்லையென எனது நண்பர்கள் நினைக்கின்றனர். சத்தியார்த்தப் பிரகாசத்தின் எல்லா அத்தியாயங்களையும் படித்தேன் என ஸ்ரீ ராமதேவருக்கு உறுதி கூறுகிறேன். ஒருவருடைய ஒழுக்க போதனை உயரியதாயிருக்கலாம். ஆனால், நோக்கம் குறுகியதாயிருக்கலாம் என்பதை அவர் மறுக்க முடியுமா? நான் சீரிய ஒழுக்கமுடையவன், உயர்ந்த நீதி போதனை செய்பவன் என்று என்னைக் கருதும் நண்பர்கள், வாழ்க்கையைப் பற்றிய எனது எண்ணங்கள் குறுகியவை, வைதிகமானவை என்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் விசால நோக்குடையவன், மனிதர்களுள் மிகவும் சகிப்புத் தன்மை வாய்ந்தவர்களில் ஒருவனுகச் சேர்க்கப்பட வேண்டியவன் என்றே நினைக்கிறேன். ஆனாலும், அவர்களின் குற்றச்சாட்டை ஒரு தாக்குதலாக நான் எடுத்துக்கொள்ளுவதில்லை. நான் தீர்ப்புக் கூறியுள்ளேன் என்றால், அவர்கள் எனக்கு எப்படி நியாயம் கூற வேண்டுமோ, அவ்வாறே நானும் கூறியுள்ளேன் என எனது ஆரிய சமாஜ நண்பர்களுக்கு உறுதி கூறுகின்றேன். ஆதலால், இந்த வாக்குவாதத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளலாம். தங்கள் நாட்டினருள் என்னைச் சற்றும் சகிப்புத் தன்மையே இல்லாதவன் என்று அவர்கள் வைத்துக்கொள்ளட்டும்; என்னை அறிவிலி என்றும் வைத்துக்கொள்ளட்டும். ஆனால், நான் சொன்ன அபிப்பிராயங்களைக் கைவிடாமல் என்னிடமே வைத்துக்கொள்ளுகிற சுதந்திரத்தை மட்டும் அவர்கள் எனக்கு அளிக்கட்டும்.

—'எங் இந்தியா' – 19—6—1924

## 3

# துதி செய்வதால் ஒற்றுமை ஏற்படாது

நான் முஸ்லிம்களின் சார்பில் உள்ளவன் என்னும் குற்றச்சாட்டு, மறுபடியும் இரு மடங்கு வேகத்துடன் எழுந்துளது. "நீங்கள் ஹிந்துக்களின் குறைபாடுகளை மிகைபடுத்திவிடுகிறீர்கள்; முஸ்லிம்களின் குறைபாடுகளைக் குறைத்து விடுகிறீர்கள்". இதுஎன்னைப்பற்றி விமர்சனம் பண்ணுகிறவர்கள் கூறுவதன் சாரமாகும். இக் குற்றச்சாட்டை ஒரு வழியில் ஏற்றுக்கொள்ளுகிறேன். நாம் சரியான முடிவிற்கு வர வேண்டுமானால், விஷயங்களை உள்

ளது உள்ளபடி பார்க்கும் இயற்கை வழியை நாம் பின்பற்றியே தீரவேண்டும். பழக்கம் காரணமாக, செயற்கை இயற்கைபோல ஆகிவிட்டது. நமது குறைபாடுகளைக் குறைத்து, எதிரியின் குறைபாடுகளை மிகைபடுத்துகிறோம். இது சகியாத்தன்மையை வளர்க்கிறது. நாம் பெருந்தன்மையாகவும் தாராளமாகவும் இருந்தால் நமது எதிரிகள் நம்மை எப்படிக் கருதுகிறார்களோ, அப்படியே நாமும் அவர்களைக் காண முயலுவோம். இம் முயற்சியில் ஒரு காலும் பூரண வெற்றி கிடைக்காது. ஆனால், அதுதான் நமக்கு விஷயங்களை உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டும். எனவே ஹிந்துக்களின் குறைபாடுகளை நான் மிகைபடுத்தியிருக்கிறேன் என்பது, மேற்பார்வைக்குத்தான் அப்படித் தெரியும்.

எனது விமர்சகர் இவ்வாறு சொல்லுகிறார்; "நீங்கள் சொல்லுவதுபோல் மௌலானா அப்துல் பாரி கடவுளின் கள்ளமில்லாத ஒரு குழந்தைதான் என்று நாங்கள் நம்ப வேண்டும் என்பது உங்கள் விருப்பமா? ஐக்கிய மாகாணத்தில் உள்ள அவர், எங்களுக்குத் தெரிந்த மட்டில், ஒரு தற்பெருமைக்காரர், பொய்யர், நம்பமுடியாதவர் என்றே சொல்லுவோம்." இவர்கள் சொல்லுவதுபோல மௌலானா சாகிப் எனக்குத் தோன்றியிருந்தால், அதைத் தயங்காது கூறியிருப்பேன் என்பது உறுதி. அவர் ஒரு ஆபத்தான நண்பராகலாம் என்று நான் கூறும்போது, அவருக்கு எதிராகச் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிட்டேன் என்றே நினைக்கிறேன். பொய்மையை நான் அவரிடம் கண்டதில்லை. சிலர் நினைப்பதைப்போல், நான் ராஜீய காரியங்களைச் சாதிப்பதற்காக முஸ்லிம்களைத் துதி செய்கிறேன் என விமர்சகர்கள் கருதக் கூடாது. முகஸ்துதி செய்வது என்னால் முடியாத காரியம். இதனால் ஒற்றுமை ஏற்பட்டுவிடாது என்பது எனக்குத் தெரியும். மரியாதையை முகஸ்துதி என்றும், அடக்கமின்மையைப் பயமின்மை என்றும் தவறாக நினைத்துவிடக் கூடாது.

# 4

# ஒற்றுமைக்கு வழி

*"ஏற்கனவே நீங்கள் முஸ்லிம்களைத் துதிசெய்கிற மனநிலையில் இருக்கிறீர்கள். அது போதாதென்று, அவர்கள் செய்த அடாத செயல்கள் குற்றமுள்ளவையல்ல என்று சொல்லுவதன் மூலம், ஹிந்துக்களுடன் அவர்களை நெருங்கிய தொடர்புடையவர்களாக்க நினைக்கிறீர்கள் போலிருக்கிறது. குற்றமிழைத்தவர்கள் மீது அவரவரது குற்றத்துக்குத் தக்க பங்கு வீதப்படி பழி சுமத்த நீங்கள் இனிப் பழக வேண்டும். நியாயமாகப் பார்த்தால் பலமற்றவர்கள், சாதுக்கள் இவர்கள் மீது குற்றம்சாட்டிவிட்டு, பலசாலிகளையும் அடாத செயல் புரிபவர்களையும் முகமன்கூறித் திரிவது புத்திசாலித்தனமான செய்கையே அல்ல."*

ஹிந்து நண்பர் ஒருவர் எழுதியுள்ள நீண்ட தருமோபதேசத்தின் ஒரு பகுதி இது. வேறு பல ஹிந்துக்களும் இந் நண்பரைப்போலவே நினைக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். சந்தேகமும், ஆத்திரமும் நிறைந்துள்ள சூழ்நிலையில், நான் பாரபட்ச மில்லாமல் சொல்லுவது பாரபட்சமாகத்தான் தோன்றும். முஸ்லிம்களிடம் நல்லதைக் காண மறுக்கும் ஹிந்துக்கள், நான் இஸ்லாமுக்காக அல்லது அதைப் பின்பற்றுபவர்களுக்காகப் பரிந்து பேசுவதைக் கண்டு திடுக்கிடுகிறார்கள். இதனால் நான் மனம் கலங்கவில்லை; மனம் மாறவும் இல்லை. என்றாவது ஒருநாள் என் ஹிந்து நண்பர்கள் நான் சொல்லுவதன் உண்மையை உணருவார்கள் என்பது எனக்குத் தெரியும். இரு தரப்பினரும் மறு தரப்பினரைப்பற்றி நன்றாய்த் தெரிந்து கொண்டு, மனப்போக்கைப் புரிந்துகொண்டு, அவரவரது குறைகளையும் நோக்கங்களையும் உள்ளது உள்ளபடி உணர்ந்துகொண்டால், ஒற்றுமைக்கு வழி பிறக்கும் என்பதையாவது ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். இதற்கு, தரும நிலை என்கிற பரந்த மனப்பான்மை இருந்தாக வேண்டும். நமக்குப் பிறர் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ, அதையே நாம் பிறருக்குச் செய்வோமாக.

# 5

# டில்லியும் நாகபுரியும்

டில்லி தன் பெயரைக் கெடுத்துக்கொண்டு விட்டது. அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்பதன் அர்த்தம், ஜனங்களுக்குள் ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்பதே. சென்ற வாரத்தில், டில்லி அரசாங்கத்துடன் ஒத்துழையாமையைவிட மக்கள் ஒருவருக்கொருவர், அதிக ஒத்துழையாமையை அனுசரித்திருக்கிறார்கள். காங்கிரஸ்வாதிகளாலும் கிலாபத்வாதிகளாலும் மக்களிடையே அமைதியை உண்டுபண்ண முடியவில்லை. போலீஸ்காரரும் ராணுவத்தினரும்தான் அமைதி ஏற்படும்படி செய்தனர். அதனால், அவர்களுக்குப் பெருமை; நமக்குக் கிடைத்தது அவமானமே. நமது தொண்டர்கள் அமைதி நிலவும்படி செய்யும் முயற்சியில் தோல்வியுற்றதால், அதற்கடுத்த நல்ல காரியத்தைச் செய்தனர்; அதாவது காயமுற்றவர்களுக்குப் பணிவிடை செய்தனர். இவர்கள் போலீஸ்காரர்களால் அடிபட்டவர்கள் அல்லர்; தமக்குள் நடந்த அடிதடியில் காயம் அடைந்தவர்கள். இதை யெல்லாம் என் முன்னிருக்கும் கடிதங்கள் சொல்லுகின்றன.

முஸ்லிம் வாலிபன் ஒருவனை ஹிந்துக்கள் தாக்கினர் என்ற குற்றச்சாட்டிலிருந்து எழுந்தது இது முழுவதும். அவ்வாலி

பன் இறந்து விட்டால்தான் என்ன? சமீபத்தில் நியமிக்கப்பட்ட சமரச சபையின் மூலமோ, அல்லது சர்க்கார் நியாயஸ்தலங்களின் மூலமோ தீங்கிழைக்கப்பட்ட முஸ்லிமிற்கு நிவாரணம் கிடைத்திருக்கும்.

முஸ்லிம் யுவரை ஹிந்துக்கள் அடித்துவிட்டார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். முஸ்லிம்கள் ஹிந்துக்களைத் திருப்பித் தாக்கினுர்கள். அந்த ஹிந்துக்கள், அவர்கள் யாராயிருப்பினும் சரி, முஸ்லிம்களை மறுபடியும் ஏன் திருப்பித் தாக்கினுர்கள்? சண்டையானது இந்தியப் பகுதி முழுவதுமே பரவி விட்டதென எனக்கு வந்த கடிதங்கள் தெரிவிக்கின்றன. பரவியபோதிலும், பெரும்பாலான மக்கள் இதனுல் பாதிக்கப்படாதிருந்தனர் என்றும், சில சமயங்களில் ஹிந்துக்களுக்கு முஸ்லிம்களும், முஸ்லிம்களுக்கு ஹிந்துக்களும் அடைக்கலம் அளித்தனர் என்றும் அதே கடிதங்களிலிருந்து தெரிகிறது. இதெல்லாம் மெச்சத்தக்கதே. எனினும், பெரும்பாலான மக்கள் கலகக்காரர்களை அடக்கும் சக்தியின்றி இருந்தனர். விஷமிகளை அடக்கும் சக்தி நமக்கு இன்னும் வரவில்லை.

நாகபுரி நிகழ்ச்சி இதைவிட ஒன்றும் மேலானதில்லை. இது வரை அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் மிகக் குறைவாகும். எல்லோரும் ஒன்று சேர்ந்து அரசாங்கத்துடன் அகிம்சை முறையில் சண்டையிடுவதைவிடத் தங்களுக்குள் சச்சரவிட்டுக் கொள்ளுவதுதான் லாபகரமானதென்று நாகபுரி ஹிந்து, முஸ்லிம்கள் நினைக்கிருர்கள் என்பது வெளிப்படையாகும்.

டில்லியிலும் நாகபுரியிலும் இருக்கும் நிலைமையை, பொது ஜன மனப்போக்கை எடுத்துக்காட்டுவதாகக் கொண்டால், இன்னும் நெடுங் காலத்திற்கு நாம் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றி நினைப்பதற்கில்லை. அதுவரையில், நாம் சுதந்திரமடைய முயற்சிப்பதைவிட்டு அடிமை வாழ்வில் திருப்தியடைய வேண்டியதுதான்.

ஆனுல், நான் நம்பிக்கை இழந்துவிடவில்லை. இந்தச் சண்டைகள் தோன்றி மறைபவை; கூடிய சீக்கிரத்தில் இரு சமூகத்தினரும் அமைதியாக வாழ்வார்கள் என்பது மௌலானு ஷவுகத் அலியின் கருத்து. நானும் இதை நம்புகிறேன்.

நாம் இப்படி அமைதியாக வாழப்போவது உண்மையானுல், நாகபுரி, டில்லி காங்கிரஸ்காரர்களுக்கும் கிலாபத் காரர்களுக்கும் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு கட்சியும் நியாயஸ்தலத்திற்குப் போகக் கூடாது. வழக்குகளை மத்தியஸ்தம் செய்தே தீர்த்துக்கொள்ள வேண்டும். வக்கீல்கள், தொழில் நடத்துபவர்களும் சரி, தொழில் நடத்தாதவர்களும் சரி, இதற்கு நல்ல விதமாக அநேக உதவிகள் செய்யலாம். நியாய ஸ்தலங்களுக்கு வழக்குகளைக்கொண்டு போவதால் நஷ்டம் அதிகம்

என்பதை எடுத்துக்காட்டி, இவ் விஷயத்தில் உதவ மறுத்து விட வேண்டும். உண்மையில் அமைதியை விரும்பினுல், அதை நீதிமன்றங்களில் பெற முடியாது என்பதையும் அவர்கள் எடுத்துச் சொல்லிவிடவேண்டும்.

# 6

# இருள் சூழ்ந்த சித்திரம்

அமிர்தசரஸிலிருந்து ஒரு முஸ்லிம் அன்பர் பின்வருமாறு உணர்ச்சி ததும்ப ஒரு கடிதம் எழுதியுள்ளார்:

"வடகோடி இந்தியாவில் ஹிந்து-முஸ்லிம் சச்சரவுகள் அநேகமாக தினசரி நிகழ்கின்றன. அடிமைகளாயிருந்து வரும் இரண்டு சமூகங்கள், தமது சொந்த விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ளக் கொஞ்சங்கூடத் திறமை யற்றிருப்பதையும், தமது சொந்த விஷயத்திலேயே இப்படியானல், பல வகைப்பட்ட ஜனசமூகத்தைக் கொண்ட ஒரு பெரிய நாட்டை ஆளக்கூடிய பொறுப்பை இவர்கள் ஏற்று நடத்த முடியாது என்பதையுமே இவை எடுத்துக் காட்டுகின்றன.

"பிளவைச் சரி செய்வதில் நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பயனளித்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனல், நீங்கள் சிறைப்பட்ட உடனே போரின் உக்ரம் மறுபடியும் தலைதூக்கிவிட்டது. நெடுநாள் அண்டை அயலாராயிருந்து வந்ததன் பயனுக, அனுதாபமும் தோழமையும் நீங்கள் சிறைப்படுமுன் இருந்தது. இன்று அதே இடத்தில் பிளவும் அடிதடியும் தாண்டவமாடுகின்றன. பஞ்சாபிலுள்ள எல்லாப் பெரிய நகரங்களும் இரு சமூகத்தினர்களுக்கும் போர்க்களங்களாகிவிட்டன. பழைய உறவு என்றைக்காவது மீண்டும் ஏற்படும் என்பதற்கான அறிகுறியையே காணேம்.

"நோய் முற்றுமுன் இதற்கு உங்களால் ஏதாவது பரிகாரம் தேட முடியுமா? தயவுசெய்து பஞ்சாபுக்கு வாருங்கள்; நிலைமையை நேரில் பாருங்கள். நிலைமையைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தாலன்றி, கதர் மேல் உங்களுக்குள்ள ஆர்வம் பயனற்றுப்போகும். 1919-இல் ஒளி வீசிய அமிர்தசரஸ் இன்று இருளடைந்த சித்திரமாக இருக்கிறது. சற்றேறக் குறைய இரண்டு லட்சம் பேரில், ஐம்பது பேர்கூடக் கதர் கட்டிக்கொண்டிருக்க மாட்டார்கள். இவர்களும், காங்கிரஸில் பதவி வகிப்பதாலேயே கட்டாயத்திற்காகக் கட்டுகிருர்கள். இதெல்லாம் ஹிந்து-முஸ்லிம் பிணக்கின் விளைவுதான். இந்த விபரீதத்தை அகற்றினல் எல்லாம் சீராகிவிடும். பாவம், தேசத்தில் "சங்கதன்" இயக்கத்திற்கு அஸ்திவாரம் போட்ட நேரம் பொல்லாத நேரம் போலும்."

முஸ்லிம் அன்பர் வரைந்துள்ள சித்திரம் மிகையானது என்பதில் சந்தேகமில்லை. பஞ்சாபில் நாள் தோறும் ஹிந்து-முஸ்லிம்களுக்குள் அடிக்கடி சண்டை நடந்துகொண்டேயிருந்தால்,

அங்கே வசிப்பதே மகா கஷ்டமாகிவிடும். உள்ளுக்குள்ளே எப்படியிருந்த போதிலும், மேல் பார்வைக்காவது மற்ற மாகாணங்களில் இருப்பது போல் பஞ்சாபிலும் அமைதி நிலவவே செய்கிறது என்பதில் சந்தேகமில்லை. கடிதம் எழுதியவர், எல்லாப் பழியையும் "சங்கதன்" மீது சுமத்துவது சரியல்ல. ஏற்கனவே அங்கிருந்த நோயை அது அதிகப்படுத்திவிட்டிருக்கிறது என்பதிலும் சந்தேகமில்லை. இரு சமூகங்களும் தம் நிதான நிலையை இழந்துவிட்டன.

பிணக்கின் காரணமாகப் பஞ்சாபியர்கள் கதர் உடுத்துவதை விட்டுவிட்டால், அவர்களுக்குக் கதரின் மீதும் தேசத்தின் மீதும் உள்ள பற்று வெறும் மேற்பூச்சுத்தான் என்று கூற வேண்டும். மற்றவர்களுடையதைவிட அவர்களின் தேசப்பற்று குறைந்ததென நான் கருதவில்லையாதலால், அங்கே கதர் க்ஷீணித்ததற்குக் காரணம் வேறு ஏதாவதுதான் இருக்க வேண்டும். சுயராஜ்யத்திற்குக் கதர் அவசியம் என்பதில் நம்பிக்கையின்மையும், மஸ்லினும் காலிகோவும் குறிக்கும் சுக வாழ்வில் ஆசையும் தான் வெளிப்படையான காரணங்களாகும். விரும்பினால், எல்லா மாகாணங்களிலும் பஞ்சாப்தான் அந்நியத் துணி பகிஷ்காரத்தை இன்று நடத்திவைக்க முடியும். ஆனால், அது விரும்புவதில்லை. முஸ்லிம்கள் நெசவு செய்வதால் கதர் கட்டுவதில்லை என்று பல ஹிந்துக்கள் சொல்லுகிறார்களாம். சுயராஜ்யத்தில் விருப்பமில்லாததால் முஸ்லிம்கள் கதர் கட்ட மறுக்கிறார்கள் என்றும் நான் கேள்விப்படுகிறேன். இவர்கள் ஆங்கிலேயர்களை விரட்ட விரும்புகின்றனர்; ஆனால், பழைய முஸ்லிம் ஆட்சி திரும்புவதை ஆதரிக்கின்றனர். ராட்டினமானது ஹிந்துவையும் முஸ்லிமையும் ஒரு பொது லட்சியத்தில் பிணைத்துவிட்டால், முஸ்லிம் ஆட்சியைத் திரும்பவும் நிலைநாட்ட முடியாமல் போய்விடுமென்று கூறப்படுகிறது. இவையெல்லாம் கொதிப்படைந்த மூளையின் புகைப் பந்தல் என்பது என் கருத்து. ஏழை முஸ்லிமிற்கும் ஏழை ஹிந்துவிற்கும் மேற்கூறியவைகளைப் பற்றி நினைக்க நேரமில்லை. அவர்கள், நூற்பதன் மூலம் வரும் ஒரு சில ரூபாய்களைத் தங்கள் வருட வருமானத்துடன் சந்தோஷமாகச் சேர்த்துக்கொள்ளுவார்கள்.

கதரின் குறைவும், கடிதம் எழுதியவர் மிகைபடக் கூறியிருப்பதும் ஒரு புறமிருக்கட்டும். பிணக்கின் தீவிர நிலையை நாம் மறுக்க முடியாது. டில்லியில் தலைவர்களின் அதிகாரம் செல்லுபடியாகாமல் சிதைந்துபோனதை, நாம் எளிதில் தட்டிக் கழித்துவிட முடியாது.

அதிருஷ்டவசமாக அறிவுத் தெளிவின் அறிகுறிகள் தோன்றுகின்றன. இரு சமூகத்தினரும் ஒருவர் மண்டையை ஒருவர் உடைத்துக்கொள்ளுவதிலுள்ள தவற்றை உணர்ந்து சமரசம் செய்துகொண்டார்களாம். வெறிபிடித்த கொலைபாதகர் சிலர் இருந்தார்களென்றால், காத்தலையே கடமையாகக் கொண்ட

நிதானபுத்தியுள்ள சில ஆண்களும் பெண்களும் இருக்கவே இருந்தனர் என்ற செய்திகள் தான் எல்லாவற்றுள்ளும் நம்பிக்கை யூட்டக் கூடியவையாக இருக்கின்றன. இத்தகைய சம்பவங்கள் ஒன்றிரண்டல்ல, பல. இவை, இரு சமூகத்தினரிடையேயும் சண்டையில் இருந்த பிரியத்தைப்போல் அமைதியின் மேலிருந்த ஆர்வத்தையும் காட்டுகின்றன. சண்டையில் பிரியம் இருப்பது இயல்பில்லை. இது ராஜபிளவையைப் போன்றது. ஆனால், அமைதி நீடித்து நிற்கும். இரு சாராரும் ஒருவர் மற்றவரின் மத உணர்ச்சிகளைக் கௌரவிப்பது என்று முடிவு செய்துகொண் டால், பிறகு எல்லாம் எளிதாகிவிடும். பஞ்சாபிற்கும், கலவரம் நடக்கும் இதர இடங்களுக்கும் போக நான் துடிதுடித்துக் கொண்டிருக்கிறேன் என்பது எல்லோரும் அறிந்த ரகசியம். மனம் போகவேண்டுமென விழைகிறது; ஆனால், உடல் பலவீன மாயிருக்கிறது. ஆபத்துக்கு இடமில்லாமல் பிரயாணம் தொடங்க முடிந்த உடன், நான் மௌலானா ஷவுகத் அலியுடன் சிந்துவையும் பஞ்சாபையும் பார்க்கப் புறப்பட வேண்டுமென்று உத்தேசித் திருக்கிறேன்.

# 7

# இரு இனங்கள் அல்ல

கீழ் வருவன அக்கறையுடன் வாசிக்கத்தக்கவை:

"ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் இந்தியாவிலுள்ள இரு இனங்களாக நீங்கள் குறிப்பிடுவதை நான் பல தடவை கவனித்திருக்கிறேன். உங்கள் முஸ்லிம் நிருபர் ஒரு தடவை 'இரு தேசீய இனங்கள்' என்று குறிப்பிட்டார். இரு மத சமூகங்களை இரு இனங்கள் எனக் குறிப்பிடுவதைவிட இது குறைந்த தீமை விளைவிக்கக்கூடியது என்பதைத் தவிர, இதுவும் தீமை விளை விக்கக்கூடியதே என்பது என் தாழ்மையான கருத்து. நூற்றுக்குத் தொண் ணூறு முஸ்லிம்கள் இந்தியர்களே; (நான் இப்படியே சொல்ல விரும்புகிறேன்; அவர்கள் விரும்புவது போல் இந்திய முஸ்லிம்கள் என்று நான் கூற விரும்ப வில்லை.) ஹிந்துக்களைப் போன்ற ஒரே இனத்தை அல்லது இனங்களைச் சேர்ந்தவர்களே. 'இந்திய மூதாதையர்கள் வழி வந்த' இவர்கள் இந்தியாவி லேயே இஸ்லாமைத் தழுவியுள்ளார்கள்.

"மற்றப் பத்துச் சதவிகித முஸ்லிம்களின் உடல்களில் துருக்கிய, அராபிய, பட்டாணிய, பாரசீக, அல்லது அபிசீனிய ரத்தம் சில துளிகள் இருக்கலாம். இருப்பினும், பல தலைமுறைகளாக இந்தியர்களுடன் கலந்த தாலும் கலப்பு மணம் காரணமாகவும் எளிதாக இவர்களை 99 சத விகிதம் சுதேசி இனத்தவர்களென்றே கூறிவிடலாம். இங்கிலாந்தில் புராடெஸ்டன்ட் களும் கத்தோலிக்கர்களும்* எங்ஙனம் இரு இனங்களாவதில்லையோ,

* புராடெஸ்டன்டுகளும் கத்தோலிக்கர்களும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இரு பிரிவினர் ஆவர். புராடெஸ்டன்டுகள் போப் ஆண்டவரின் அதிகாரத்தை எதிர்த்து

அங்ஙனமே இந்தியாவிலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரு இனங்களாக மாட்டார்கள், இப்பிரச்னை சம்பந்தமாகச் சரித்திரம், மனித உடல், அளவை நூல், வமிச பரம்பரை நூல் ஆகியவை ஏறக்குறையச் சரியான முடிவுக்கு வர முடியும். மேலும், அவர்களின் ரத்தக் கலப்பு எவ்வாறு இருப்பினும் அவர் களனைவரும் (நூற்றுக்கு நூறு) இந்தியாவில் பிறந்தவர்கள் என்பதையும், இவர்களது தந்தையர்களைப் போல இந்தியாவிலே வாழ்ந்து வருகிற, இந்தியாவிலேயே மடியப் போகிறவர்கள் என்பதையும் மறுக்க முடியாது. இந்தியா ஒரே தேசம்; எனவே, அவர்களனைவரும் ஹிந்துக்களுடன் சேர்ந்த ஒரே தேசீய இனத்தினரேயாவர். அவர்கள் மட்டும் தங்களை இந்திய முஸ்லிம்கள் என்று கூறாமல் முஸ்லிம் இந்தியர்கள் என்று கருதுவார்களானல் எவ்வளவு சிறப்பாக இருக்கும்!

"மேற்சொன்னவைகள் எல்லாம் இந்தியாவிலுள்ள மூன்றாவது மத சமூக மாகிய கிறிஸ்தவ இந்தியர்களுக்கும் அப்படியே பொருந்தும். எந்த மதமும் சமூகமும் இந்தியாவிலோ, அல்லது வெளியிலோ ஒரே பிரிவினர்களால் ஆகியதாக இராதென நினைக்கிறேன். ஹிந்துக்கள் அப்படியில்லை என்பது நிச்சயம். பிறகு மற்ற எந்தச் சமூகத்தையும் இனம் என்று ஏன் குறிப்பிட வேண்டும்? நமது கிறிஸ்தவர்களும் தேச அரசியலில் கிறிஸ்தவ இந்தியர்கள் எனச் சொல்லிக் கொள்ளட்டும். இவர்களது மதத்தைச் சேர்ந்த எகிப்தியர், பாலஸ்தீனியர், சீனர், ஜப்பானியர், பிலிப்பைனர் முதலியோர் இப்படித் தானே செய்கிறார்கள்."

இந்த நண்பர் எடுத்துக்கொண்ட நிலை சரித்திரபூர்வமாகச் சரியானது. குறிப்பிட்ட அர்த்தத்துடன் வழக்கத்தில் வந்துவிட்ட வார்த்தைகளை உபயோகிக்கும் பழக்கத்தைவிட்டுத் தப்புவது கடினமாகும். "இரு சமூகங்கள்" என்பதும் இதே ஆட்சேபணை களுக்கு இடமாகும். எதிர்காலத்தில் விழிப்புடன் இருப்பதாக மட்டும் நான் உறுதி கூற முடியும். விழிப்புள்ள நண்பர் 'எங் இந்தியா'விலுள்ள வாசகம் உண்மையை ஒட்டியிருக்கும்படி பார்த்துக்கொள்ளும் முயற்சியைத் தளரவிடக்கூடாது.

## 8

# அபேத வாதமா, கட்டுப்பாடா?

கடவுளையோ, ஒழுக்கத்தையோ அறியாததும், வெளிப்படையாக நாஸ்திகம் பேசுவதுமான போல்ஷிவிசத்தை மதத்தின் பெயரால் நான் இந்தியாவில் புகுத்துகிறேன் என்று இரு அமெரிக்கர்கள் எனக்கு உணர்ச்சி மிக்க கடிதம் ஒன்று எழுதியுள்ளனர். போல்ஷிவிக் ரஷ்யாவின் உதவி கொண்டு கீழ் நாடுகளின் மீது வெற்றி பெற முஸ்லிம்கள் முயற்சிக்கின்றனர்;

---

1529-இல் பிரிந்தார்கள். கத்தோலிக்கர்கள், போப் ஆண்டவரையே கிறிஸ்தவ மத உலக குருவாகக் கருதுகிறார்கள்.

ஆதலால், எனக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள கூட்டுறவு புனித மற்றது, உலகத்திற்கே ஆபத்தானது என்று அவர்கள் வாதிக்கிருர்கள். இதற்கு முன்னரே இக்குற்றச்சாட்டுகள் என் மீது சுமத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால், இதுவரை அவற்றை நான் பொருட்படுத்தவில்லை. பொறுப்புள்ள அயல் நாட்டு நண்பர்களிடமிருந்து நல்லெண்ணத்துடன் வந்துள்ள இந்தப் புகார் சம்பந்தமாகக் கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்திருக்கிறதென்று நினைக்கிறேன்.

முதலில் எனக்கு, போல்ஷிவிசத்திற்கே பொருள் தெரியாது என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். இரு கட்சிகள் இருக்கின்றன: ஒன்று, அதை முடிந்த அளவு கேவலமாகக் காட்டுகிறது; மற்றொன்று, அதை உலகத்திலுள்ள நசுக்கப்பட்ட மக்களுக்கெல்லாம் விடுதலையளிப்பதென்று கருதிப் பரவசம் அடைகிறது. எதை நம்புவது என்று தெரியவில்லை. நான் சொல்லக்கூடியதெல்லாம், எனது இயக்கம் நாஸ்திக இயக்கம் அல்ல என்பதுதான். அது கடவுளை மறுப்பதில்லை. அந்த இயக்கம் கடவுளின் பெயராலேயே ஆரம்பிக்கப்பட்டது. இடையருத பிரார்த்தனையுடன் அது தொடர்ந்து நடத்தப்படுகிறது. அது பொதுஜன இயக்கம்தான். பொது ஜனங்களின் மேலான இயல்புகளின் மூலமும், இதயத்தின் மூலமும் அது அவர்களைக் கவர முயலுகிறது. கட்டுப்பாட்டை அது வலியுறுத்துகிறது. ஆதலால்தான் எனது சிறந்த சக ஊழியர்களில் சிலர் கூட நம்பிக்கை இழக்கின்றனர்.

எனக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி நான் பெருமையடைகிறேன். இஸ்லாம் கடவுளை மறுப்பதில்லை. சர்வ வல்லமையுள்ள ஒரே கடவுளை அது அங்கீகரிக்கிறது. அதைப்பற்றி இழிவாகப் பேசுபவர்கள்கூட, அதை நாஸ்திக மதம் எனச் சொல்லியதில்லை. போல்ஷிவிசம் நாஸ்திகமாயிருந்தால், அதற்கும் இஸ்லாமிற்கும் பொதுவான அடிப்படை எதுவும் இருக்க முடியாது. ஆதலால், இவை இரண்டிற்கும் கோரமான போராட்டம் வந்தே தீரும். அது விரோதிகளின் தழுவுதலாக இருக்கும்; நண்பர்களின் தழுவுதலாக இருக்க முடியாது. விஷயத்தின் உண்மை நிலையைப் பற்றி அப்படி ஒன்றும் நான் பொய்க் கனவு கண்டுகொண்டிருக்கவில்லை என்பதை எனது அமெரிக்க வாசகர்களுக்கும் பிறருக்கும் சொல்லிவிட விரும்புகிறேன். நான் செய்யக்கூடிய செயல் மிகவும் அடக்கமான தொண்டுதான். பிரமாதமாக ஒன்றும் சாதிக்கப் போவதாக நான் சொல்லவில்லை.

அலி சகோதரர்களுக்கும், நான் மதிக்கும் சில முஸ்லிம் நண்பர்களுக்கும் எனக்கும்தான் கூட்டுறவு இருந்து வருகிறது. இதை முஸ்லிம்களுக்கும் எனக்கும் என்பதற்குப் பதிலாக, முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் உள்ள தொடர்பு எனச்

சொல்லவே நான் விரும்புகிறேன். எனினும், அது ஒரு பகற் கனவாகவே போய்விட்டதென்று தோன்றுகிறது. ஆகையால், உண்மையில் அலி சகோதரர்கள் உள்படச் சில முஸ்லிம்களுக்கும், நான் உள்படச் சில ஹிந்துக்களுக்கும் கூட்டுறவு உள்ளதெனச் சொல்லலாம். எங்களுக்கு எந்த வரைக்கும் இது உதவியாக இருக்கும் என்பதை எதிர்காலந்தான் காட்ட வேண்டும். இந்தக் கூட்டுறவைப் பற்றித் தெளிவின்மை எதுவுமில்லை. அது, உலகத்தில் மிக மிகச் சாதாரணமாக நிகழ்வது. ஆச்சரியத்தையும் பயத்தையும்கூட அது உண்டுபண்ணுவது தான் துக்ககரமான விஷயமாகும். இந்தியாவில் பிறந்து வளர்ந்த ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரேவிதத் துன்பத்துடனும் நம்பிக்கையுடனும் நிரந்தர நண்பர்களாகவும் இந்தியத் தாய்க்குப் பிறந்த சகோதரர்களாகவும் வாழ்வதைவிட, உலகத்தில் இயல்பான காரியம் வேறு யாது? எனவே, நாம் ஐக்கியப்படுவதல்ல, சண்டை போடுகிறோமே அதுதான் விந்தையாக இருக்கிறது. இந்த ஐக்கியம் ஏன் உலகத்திற்கு ஆபத்தாக இருக்கவேண்டும்? இன்று உலகத்திலுள்ள அபாயத்திலெல்லாம் மிகப் பெரிய அபாயம், வளர்ந்து வரும், சுரண்டும், பொறுப்பற்ற ஏகாதிபத்தியம்தான். இது, இந்தியாவை அடிமைகொண்டதன் மூலம் உலகத்திலுள்ள வலுக் குறைந்த மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு இடையூறாக உள்ளது. இந்த ஏகாதிபத்தியம்தான் கடவுளை மறுப்பதாகும். அது கடவுளின் பெயரால் கடவுளுக்கு அடுக்காத அக்கிரமச் செயல்களைப் புரிகிறது. டயரிசம், ஓட்வியரிசம் போன்ற மனிதத் தன்மையற்ற அதன் செயல்களை இரக்கம், நீதி, நியாயம் போன்ற போர்வைகளால் அது மூடி மறைக்கின்றது. இதிலெல்லாம் வருந்தத்தக்கது என்னவென்றால், ஆங்கிலேயர்களில் பெரும்பாலோருக்குத் தங்களின் பெயர் தீய காரியங்களுக்கு உபயோகப்படுகிறது என்ற விஷயம் தெரியாதிருப்பதே. இந்தியாவில் எல்லாம் தாறுமாறாக நடந்து வருகையில், கடவுளுக்குப் பயப்படும் நிதான புத்தியுள்ள ஆங்கிலேயர்கள் இந்தியாவில் எல்லாம் சரியாக நடக்கிறதென்று ஏமாற்றப்படுகிறார்கள். இவர்களின் பெயரால் ஆப்பிரிக்க மக்கள் சுரண்டப்பட்டும், இழிவு படுத்தப்பட்டும் வருகையில், அவர்கள் சுகமாக இருக்கின்றனர் என்றும், எல்லாம் அங்கே சரியாக நடக்கிறதென்றும் பெரும்பாலான ஆங்கிலேயர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். மத்திய நாடுகளும் ஜெர்மனியும் தோற்றதால் ஜெர்மன் ஆபத்தை ஒழித்துவிட முடிந்ததெனில், நேச நாடுகளின் வெற்றி உலக சமாதானத்திற்கு எதிராக அதைவிட நாசகரமான சக்தியை உண்டுபண்ணியிருக்கிறது. ஆதலால், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள கூட்டுறவு என்று சொல்லுகிறார்களே, அது நிரந்தரமான உண்மையாக ஆகிவிட வேண்டும் என்பது என் விருப்பம். இந்தக் கூட்டுறவு கண்ணியமான சுயநலத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கும். இதன் பலகை, இழிவான ஏகாதிபத்திய இரும்பு, ஜீவகாருண்யம் என்ற பொன்னுக

மாறும். அனைவரும் வாழவேண்டும், அமைதி நிலவ வேண்டும் என்னும் எண்ணத்தில் பிறந்திருப்பதால், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை இந்தியாவிற்கும் உலகிற்கும் ஒரு வரப்பிரசாதமாகும். இந்தியா சுயராஜ்யமடைவதற்கு அகிம்சையும் சத்தியமும் இன்றியமையாதவை என்ற நோக்கத்துடனேயே அது உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் சின்னமாகிய ராட்டினம் எளிமை, தன்னம்பிக்கை, தன்னடக்கம், கோடிக்கணக்கானவர்களிடையே மனமுவந்த கூட்டுறவு, இவற்றிற்கு அறிகுறியாகும். இப்படிப்பட்ட நியாயமான ஐக்கியம் உலகத்திற்கு அபாயமாக இருக்குமேயானால், அப்போது கடவுள் இல்லை, அல்லது கடவுள் தூங்குகிறார் என்றுதான் கொள்ள வேண்டும்.

– 'எங் இந்தியா' - 21—8—1924

# 9

# இதய ஒற்றுமை

ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:

"பம்பாய் நகர சபையின் வரவேற்புக்குப் பதில் அளிக்கையில் நீங்கள் 'இதய ஒற்றுமை' என்னும் தொடரை உபயோகித்திருக்கிறீர்கள். இதைப் பற்றி நான் சிந்தித்தேன், ஆலோசனை செய்தேன். இதய ஒற்றுமையின் ரகசியம் அண்டத்தின் ஆழத்துள் இருப்பதைக் கண்டேன். ஆழமறியா ஆழியுள் மூழ்கித் தெய்விக உரை கல்லைக் கொண்டுவந்து, நிறமற்றுச் சிதைவுண்டிருக்கும் மனிதத் தொடர்புகளுக்கு நிறமும் இன்பமும் கொடுக்க அவற்றை இதைக்கொண்டு தொடவேண்டும். உண்மையிலும் இயற்கை நியதியிலும் உள்ளாழ்ந்திருக்கிறது அது. இதய ஒற்றுமைதான் கிரகங்களோடு கிரகங்களைப் பிணைக்கிறது; அவைகளை அந்தரத்தில் இயங்கச் செய்கிறது. பஞ்ச பூதங்களையும் ஒன்றோடொன்று ஒன்றச்செய்வதும் இதய ஒற்றுமைதான். பிராணவாயுவும் ஜலவாயுவும் சேர்ந்தே நீராகிறதென ரசாயன நிபுணர்கள் கண்டனர். ஆனால், ஒரு மின்சக்தி ஊடுருவிச் சென்றாலன்றி, அவை இரண்டின் சேர்க்கையால் மட்டும் நீர் உண்டாவதில்லை. இயற்கையில் உள்ள இதய ஒற்றுமைதான் இந்த மின்சக்தியாகும். இதய ஒற்றுமைதான் பொருள்களை உருமாற்றிவிடுகிறது. பனிக் கட்டியை நீராகவும், நீரைப் பனிக் கட்டியாகவும் மாற்றுகிறது. இருப்பது சிறத்தல், சிறந்தது சுருங்கல், ஆன்ம சக்தி பொருளாதல், பொருள் ஆன்ம சக்தியாக மாறுதல் எல்லாம் இதய ஒற்றுமையின் வேலையே.

"சிவனுடன் இதய ஒற்றுமை பெறுவதற்காகப் பார்வதி தவம் இயற்றியது ஹிந்து கற்பனையின் விசித்திர வேலைப்பாடாகும். பார்வதி கடவுளின் சக்தி அல்லது உலகை இயக்கும் ஆற்றல்; மனித உருவெடுத்தவள். இது கடவுளின் அருளால் மனித வர்க்கத்தின் முற்கால சாதகர் ஒருவர் கண்ட காட்சி என்று நான் கருதுகிறேன். எல்லாம் வல்லவனின் சக்தி அளவிலா அழகுடன் தவமியற்றும் பார்வதியாக உருக்கொண்டது—எதற்காக?

இதயங்களுள் இதயமாக விளங்கும் தன்னுடன் இதய ஒற்றுமைப் படுவதற் காகவே. மனித வர்க்கம் இந்தப் பாடத்தை குற்றம் குறைவின்றி நன்கு கற்று அதன்படி நடக்கவும் வேண்டும். நீங்கள் இதை முற்றும் கற்று, அலி சகோ தரர்களுடனும் மற்றவர்களுடனும் இதய ஒற்றுமை கொள்ளுவதன் மூலம் ராஜீய உலகில் இதை நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதன் பலனாக பல்வேறு மதங்களையும் சித்தாந்தங்களையும் கொண்ட வெவ்வேறு பிரிவினரையும் ஒரே இந்திய தேசீய இனமாகச் செய்யும் பாதையில் நாம் நல்ல முறையில் சென்று வருகிறோம். உங்களின் குறிப்பை உணர்ந்து இந்நாடு இதய ஒற்றுமையை நோக்கி இயற்றும் தவத்தில் உறுதியாக நிற்கட்டும்."

என்னைப் பாராட்டிக் கூறியுள்ள புகழுரைகளுக்காக இக் கடிதத்தை நான் பிரசுரிக்கவில்லை. இதை எழுதியவர், அலி சகோதரர்களுடனும், மத சம்பந்தமில்லாத மற்றவர்களுடனும், கருத்து வேற்றுமையுடையவர்களுடனும் எனக்குள்ள தொடர்பில் இருக்கும் இதய ஒற்றுமையை மெய்யாகக் கண்டு, அழுத்தமாகக் கூறுவதால் இதை அச்சிடுகிறேன். "பெரும்பா லான விஷயங்களில் வேறுபட்ட நம்மை இரண்டறப் பிணைப்பது யாது? ஒரே கடவுளுக்கு நாம் செலுத்தும் வணக்கமும் அவரிட முள்ள பயமுமே அல்லவா?" எனப் பெரிய சகோதரர் சென்ற வாரம் கேட்டார். அவர் சொல்லியது இயற்கையாகும், உண்மை யாகும். கடவுளை நாம் குரான், பைபிள், தால்மத், அவெஸ்தா, அல்லது கீதை போன்ற வேறுபட்டவைகள் மூலம் காணுவதால், நாம் ஏன் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டு அவரை நிந்தனைக்குள்ளாக்க வேண்டும்? சமவெளிகளில் பிரகாசிக்கும் சூரியன் இமயத்திலும் பிரகாசிக்கிறான். சூரியனின் உஷ்ணம் வேறுபட்டதாக இருப்பதால் சமவெளி மனிதர்கள் பனி மலையில் உள்ளவர்களுடன் சண்டை போட வேண்டுமா? விடுதலைக்கும் இதய ஒற்றுமைக்கும் உபயோகிப்பதை விடுத்து, ஏன் புத்தகங்களையும் உயர்ந்த விதிகளையும் நம்மை இறுக்கி அடிமைப்படுத்தும் இத்தனை தளைகளாக்கிக்கொள்ள வேண்டும்?

— 'எங் இந்தியா' – 18—9—1924

# 10

# நாட்டிற்குச் செய்தி

[1924 பிப்ரவரி மாதம் 5–ஆம் தேதி சிறையில் இருந்து விடுதலையானதும் காந்திஜி, நோய்வாய்ப்பட்ட நிலைமையில், அப்பொழுது அகில இந்திய காங்கிரஸ் மகா சபைத் தலைவராயிருந்த காலஞ்சென்ற மௌலானா முகமது அலி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில், அச்சமயத்தில் ஹிந்துக் களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருந்த நிலைமையைக் குறித்துக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:]

நாட்டின் நிலைமையை நான் நன்கு அறியேன். இருப்பினும், பர்டோலித் தீர்மானங்கள் செய்தபோது, தேசீயப் பிரச்னைகள் இருந்ததைவிட, இப்போது இன்னும் அதிக திகைப்பூட்டக் கூடிய நிலையில் இருக்கின்றன என்பதை மாத்திரம் அறிவேன். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள், இன்னும் பிற இந்தியர்கள் முதலியோரிடையே ஒற்றுமையில்லை. இந்நிலையில் சுயராஜ்யத்தைப்பற்றிப் பேசுவதெல்லாம் வீண்தான் என்பது தெளிவாகும். 1922-இல் அடைந்தேவிட்டோமென நான் வெகு ஆர்வத்துடன் நம்பியிருந்த ஒற்றுமை, ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பொறுத்தவரையில், பெரிதும் தடைப்பட்டுப் போயிருப்பதை நான் காண்கின்றேன். பரஸ்பர நம்பிக்கை மறைந்து, அதற்குப் பதில் அவநம்பிக்கை நிலவி வருகிறது நாம் சுதந்திரம் அடையவேண்டுமானால், எல்லாச் சமூகங்களிடையேயும் தகர்க்கமுடியாத ஓர் ஐக்கியத்தை உண்டு பண்ணிவிட வேண்டும். என் விடுதலைக்காகத் தேசம் முழுதும் கொண்டாடும் நன்றிபாராட்டுதல், சமூகங்களிடையே நிலையான ஒற்றுமையை ஏற்படுத்திவிடுமா? வைத்திய சிகிச்சை, ஓய்வு இவற்றைவிட, இப்படி ஒற்றுமைக்கு வழி தேடுவதுதான், என் உடல் வெகு சீக்கிரத்தில் நலம் பெறச் செய்யும். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே, சில இடங்களில் தகராறு நடந்ததைச் சிறையிலிருந்தபோது கேட்டதும் என் நெஞ்சம் சோர்வடைந்தது. நான் ஓய்வெடுக்க வேண்டுமென்ற யோசனை கூறப்படுகிறது. ஒற்றுமையின்மை என்னும் பெருஞ்சுமை என்னை அரித்துக்கொண்டிருக்கும்போது, எனது ஓய்வும் ஓர் ஓய்வாகுமா? என்னை நேசிக்கிறவர்கள் அனைவரையும் நான் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் தங்களுடைய அன்பையெல்லாம், நாம் அனைவரும் விரும்பும் ஐக்கியத்தைப் பெறுவதில் செலவிடவேண்டும். இது கடினமான வேலை என்பது எனக்குத் தெரியும். ஆனால், கடவுளிடத்தில் நமக்குக் குன்றாத நம்பிக்கை இருக்குமாயின், எதுவுமே கடினமானதாகாது. நமது குறைகளை உணர்ந்து, நாம் அவனை அணுகுவோமானால், அவன் நிச்சயமாய் நமக்கு உதவுவான். பலமின்மை பயத்தை வளர்க்கிறது. பயம் அவநம்பிக்கையை உண்டாக்குகிறது. இரு தரப்பினருமே பயத்தை ஒழிப்போம். நம்மில் ஒரு தரப்பாராவது பயம் நீங்கியிருந்தால், நாம் சண்டையிட்டுக்கொள்ள மாட்டோம் என்பதும் எனக்குத் தெரியும். ஒற்றுமைக்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்துத்தான் உங்களின் தலைமைப் பதவிக் காலம் மதிப்பிடப்படும். நாம் ஒருவரை ஒருவர் உடன்பிறந்த சகோதரர் போலவே நேசிக்கிறோம் என்பதை நான் அறிவேன். ஆதலால், நீங்கள் எனது ஆர்வத்தில் கொஞ்சம் பங்குகொண்டு, நான் நோயுற்றிருக்கும் இக்காலத்தை அதிகக் கவலையின்றிக் கழிக்க உதவும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

# 11

# ஒழுக்கம் இன்றேல் மதம் இல்லை

ஒழுக்கத்திலிருந்து தவறுவது மத வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி போடுவதேயாகும். ஒழுக்க மில்லாமல் மதம் என்பதே கிடையாது. பொய்மையும் அடக்கமின்மையும் உடைய மனிதன் தன்னகத்தே கடவுள் இருப்பதாகச் சொல்லிக்கொள்ள முடியாது. பம்பாயில், ஒத்துழையாமையின் அனுதாபிகள் ஒழுக்க நிலை பிறழ்ந்துவிட்டார்கள். இளவரசரது வரவேற்பில் பங்கு கொண்ட பார்சிகள், கிறிஸ்தவர்கள்மீது இவர்கள் கோபம் கொண்டார்கள். அத்துடன் அவர்களுக்குப் "பாடம் கற்பிக்கவும்" முனைந்தார்கள், அதனால் கிளர்ச்சி முற்றியது. பதிலுக்குப் பதில் வம்பு வளர்ந்தது. 12-ஆம் தேதிக்குமேல் அது பெரும் போட்டா போட்டியில் முடிந்தது. இதில் உண்மையாக யாருக்கும் லாபமில்லை, எல்லோருக்கும் நஷ்டம்தான்.

இவ் வழியில் சுயராஜ்யம் வந்துவிடாது. இந்தியா போல்ஷிவிசத்தை விரும்பவில்லை. இங்குள்ளவர்கள் அமைதியாக வாழ்பவர்கள். இவர்களால் அராஜகத்தைத் தாங்க முடியாது. இந்தியாவின் மனநிலையை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இம்மாதிரி அமைதியை விரும்பி அலைவது நல்லதா, கெட்டதா என்பதைப்பற்றிய விவாதத்தில் நாம் இப்போது இறங்க வேண்டியதில்லை. இந்தியாவிலுள்ள சாதாரண முஸ்லிம்கள், உலகத்தில் வேறு பாகத்திலுள்ள முஸ்லிம்களைவிட முற்றும் வேறானவர்கள். இந்தியச் சூழ்நிலையில் நெடுநாள் இருந்ததனால், இவர்கள் வெளிநாட்டிலுள்ள தங்கள் மதத்தினரைக் காட்டிலும் சாதுவாகிவிட்டார்கள். வாழ்விற்கும் சொத்திற்கும் ஏற்படும் சிறிய அபாயத்தைக்கூட இவர்களால் சிறிதும் தாங்கமுடியாது. ஹிந்துவின் சாதுத்தன்மை, பழமொழியாகக்கூட ஆகிவிட்டது. இது சில சமயங்களில் வெறுக்கத்தக்க இழிநிலைக்கும் போய் விடுகிறது. அடிதடியைக் காட்டிலும் அமைதியையே பார்சியும் கிறிஸ்தவரும் பெரிதும் விரும்புகிறவர்கள். நாம் நமது மதத்தைப் பெரும்பாலும் அமைதிக்கு அனுசரணையாக இருக்கும்படியே செய்துள்ளோம். இம் மனப்பான்மைதான் நமது பலமும், நமது குறைபாடுமாகும்,

இம் மனப்பான்மையின் மத சம்பந்தமான பகுதியை நாம் வளர்ப்போம். மதத்தில் எவ்விதமான கட்டாயமும் வேண்டாம். சுதேசியத்தை அனுஷ்டிப்பதும், அதன் மூலம் கதரை ஆதரிப்பதும் நமக்கு மதம் போன்றதல்லவா? ஆனால், மற்றவர்களின் மதம் சுதேசியத்தை அனுஷ்டிக்கும்படி தூண்டாவிட்டால், நாம் அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது. குரானில் வற்புறுத்தப்பட்டிருக்கும் இந்தச் சர்வ வியாபகமான சட்டத்தை நாம் மறு முறையும் மீறிவிட்டோம். இதில் இல்லாத வேறு விஷயங்

களில் கட்டாயப்படுத்தலாம் என்பது இந்தச் சட்டத்தின் அர்த்தமல்ல. உறுதியான கொள்கைகளுடன் கூடிய மத விஷயங்களிலேயே கட்டாயம் செய்தல் கூடாதென்றால், இதைவிட அற்பமான காரியங்களில் கட்டாயப்படுத்துதல் முற்றிலும் தீமையேயாகும்.

எனவே, நமது எதிரிகளுடன் நாம் நியாய அநியாயங்களைக் காட்டி விவாதிக்கலாம். அவ்வளவுதான். தனிப்பட்ட வாழ்க்கையில், அகிம்சை முறையில் ஒத்துழையாமை செய்வதுதான் நாம் கடைசிப் பட்சமாய்ச் செய்யக்கூடியது. இங்கே நாம் அரசாங்கத்திலிருக்கும் மனிதர்களுடன் ஒத்துழையாமையை அனுஷ்டிக்கவில்லை. அவர்கள் நடத்தும் அரசாங்க முறையுடன் தான் ஒத்துழைக்க மறுக்கிறோம். கவர்னர் என்ற முறையிலேயே ஜார்ஜ் லாயிடுடன் நாம் ஒத்துழைக்க மறுக்கிறோம். ஆனால், ஸர் ஜார்ஜ் லாயிட் என்கிற ஆங்கிலேயருக்கு நாம், சமூக வாழ்வுக்கு அவசியமான சேவைகளைச் செய்ய மறுக்கவே கூடாது.

இத் தவறு ஹிந்துக்களுக்குள்ளும் முஸ்லிம்களுக்குள்ளுமே ஆரம்பமானதைப்பற்றி நான் வருந்துகிறேன். கொடுமையும் நிர்ப்பந்தமும் இருந்தன என்றால், எவ்வளவு முடியுமோ அந்த அளவு நான் இதைக் கண்டிக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகின்றேன். எங்கும் பரவிவிட்ட உடனேயே இத்தகைய இயக்கத்திலிருந்து நான் விலகிக்கொண்டிருந்திருக்கலாம். எனினும், நாம் சீக்கிரம் நமது போக்கைத் திருத்திக்கொண்டோம்; தாராள மனப்பான்மை காட்ட ஆரம்பித்தோம்; நிர்ப்பந்தம் ஓரளவு இன்னும் இருந்தே வந்தது. நாளடைவில் இது இயல்பாகவே மறைந்துவிடுமென நினைத்து, நான் இதைக் கவனிக்காமல் விட்டுவிட்டேன். பம்பாயில் இது மறையவில்லை என்பதைக் கண்டேன். 17-ஆம் தேதியன்று இது கோர உருவம் எடுத்தது.

கிலாபத் கட்சிக்கும், பஞ்சாப் அநீதிக்கும், சுயராஜ்யத்திற்குமே நாம் பெரும் கேடு இழைத்து விட்டோம். நாம் இந்தத் தவற்றிலிருந்து பின்வாங்கிவிட வேண்டும். சிறுபான்மையோருக்குக் கொஞ்சமும் தீங்கு நேராதபடி நாம் உறுதியாக நிற்க வேண்டும். ஒரு கிறிஸ்தவர், ஐரோப்பியத் தொப்பியையும், இன்னும் வேறு எதையும் அணிய விரும்பினால், அதைச் செய்ய அவருக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். பார்சிகள் தலைப்பாகை அணிய விரும்பினால் அவர்களுக்கு அதைச் செய்யச் சகல உரிமையும் இருக்க வேண்டும். அரசாங்கத்துடன் சேர்ந்திருப்பதிலேயேதான் தங்களது நலன்கள் பாதுகாக்கப்படும் என அவர்கள் நம்புகிறார்கள். இத் தவற்றிலிருந்து அவர்களைத் தடி கொண்டு தாக்கித் திருப்ப முயலக் கூடாது. யுக்திவாதங்களைக் காட்டித்தான் மாற்றவேண்டும். பலாத்காரத்தை நாம் அதிகம் உபயோகிப்பது அரசாங்கத்திற்கு நிரம்ப வசதியளிப்பதாகும். ஏனெனில், அவர்களிடம் நம்மைவிட வலிவுள்ள பலாத்கார ஆயு

தங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தைவிட அதிகமாகப் பலாத்காரத்தை நாம் பிரயோகிக்க ஆரம்பிப்பது, இந்தியாவை மீளாத அடிமைத்தனத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

சுயராஜ்யம் என்பது நம்மில் ஒவ்வொருவருக்கும், கடையனுக்கும்கூட, தன்னிஷ்டப்படி யாதொரு தடையுமின்றி நடந்துகொள்ளுவதற்குள்ள சுதந்திர உரிமையே. பொதுஜன எண்ணத்தை உருவாக்கி, அதை எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி செய்யும் முறையைத்தான், அகிம்சை முறையில் ஒத்துழையாமை என்பது. தத்தம் கருத்துக்களைச் சொல்லப் பூரண சுதந்திரம் இருக்கையில், பெரும்பான்மையினரின் கருத்தைத்தான் ஒப்புக்கொள்ள வேண்டும். சிறுபான்மையினராயிருந்தால், நிர்ப்பந்தத்தையும் எதிர்த்து நமது மதத்திற்கு உண்மையாகவே நாம் நடந்துகொள்ள வேண்டும். நபிகள் நாயகம் பெரும்பான்மையினரின் கொடுமைக்கு ஆளாகியும், தமது சொந்த நம்பிக்கையைக் கைவிட்டுவிடவில்லை. பெரும்பான்மையினரின் ஆதரவு பெற்றுவிட்ட பிறகு, தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு மதத்தில் வலுக்கட்டாயம் கூடாதென அவர் அறிவித்துவிட்டார். மொழியாலோ, மெய்யாலோ பலாத்காரம் செய்து, இக்கட்டளையை நாம் மீறக் கூடாது. நமது தவற்றினால் முன்னேற்றத்திற்குத் தடையுண்டுபண்ணி விடக் கூடாது.

## 12

# எழுத்தாளர்களின் கடமை

சட்ட சபைப் பிரவேசத்தைப்பற்றியும், ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைப் பற்றியும் எனது அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளப் பலர் அவசரப்படுகிறார்கள். வேறு சிலர், நான் அவசரப்பட்டு எத்தகைய அறிக்கையும் வெளியிடக் கூடாதென்று வற்புறுத்துகின்றனர். இந்த இரண்டு பிரச்னைகளைப்பற்றியும் நானே என் கருத்துக்களை வெளியிட ஆவலோடிருக்கிறேன். ஆனால், தவிர்க்கக் கூடிய தவறுகளை எல்லாம் தவிர்க்க விரும்புகிறேன். என்னோடு வேறுபடுகிறவர்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமை ஒன்றிருக்கிறது. அவர்கள் என் மதிப்பிற்குரிய சக ஊழியர்கள். நான் நேசிக்கிறதாகச் சொல்லும் அளவுக்கு அவர்களும் தங்கள் நாட்டை நேசிக்கிறார்கள். சிலர், சமீப காலத்தில் தியாகம் செய்துள்ளார்கள். நானும் இம் மாதிரி தியாகம் செய்ததாகச் சொல்லிக்கொள்ளுவதற்கு எனக்கு ஒன்றுமில்லை. என்னைவிட அவர்களுக்கு நேரடியாக நீண்டகால அனுபவம் இருக்கிறது. ஆதலால், அவர்களுடைய கருத்துக்கள் அவர்களின் அந்தஸ்திற்கும் திறமைக்கும்

தகுந்த மதிப்பிற்கு உரியனவே. எல்லாவற்றுக்கும் மேலாக, நான் தீர ஆலோசிக்காத கருத்துக்களைச் சொல்லி, அவர்களைச் சங்கடமான நிலையில் வைக்க விரும்பவில்லை. அவர்களது உழைப்பு வெறும் ஊதிய மற்ற உழைப்பு. அவர்களின் முயற்சிகள் அனைத்தையுமே அரசாங்கம் நிராகரித்து விட்டது. அரசாங்கம், தனது பலமான இருப்பிடத்திலிருந்து சிறிதும் அசைந்து கொடுக்க மறுத்து விட்டது. மௌலானா ஹஸரத் மோஹனியை விடுதலை செய்வது, ஸ்ரீ ஹார்னிமனுக்குள்ள தடையை நீக்குவது போன்ற விஷயங்கள் அவர்களுக்குப் பெரிய காரியமல்ல; இந்த விஷயங்களில்கூட அரசாங்கத்தார் விட்டுக்கொடுக்க மறுக்கின்றனர். இந்த நிலையில், சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் சந்தர்ப்பத்தைச் சமாளிப்பதற்காக வகுக்கும் திட்டங்களைப் பாதிக்கும் படி நான் ஏதாவது சொல்லுவது அசம்பாவிதமாகும். அவர்களுடைய போக்கைத் தெரிந்து, நிலைமையை அறிந்துகொள்ள நான் முயன்று கொண்டிருக்கிறேன். பொறுமையால் இழக்கப் போவது ஒன்றுமில்லை; அவசரம் அவசியமற்ற தீமையை விளைவிக்கலாம்.

இந்து–முஸ்லிம் ஒற்றுமை சம்பந்தமாகவும் இதையே இன்னும் அழுத்தமாகச் சொல்லலாம். அது மிக மென்மையாகக் கையாள வேண்டிய பிரச்னை. ஒவ்வொரு எண்ணத்தையும் பரிசோதிக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தையையும் எடைபோட வேண்டும். அவசரப்பட்ட ஓர் அடைமொழி, திடுக்கிடும் நிலையை உண்டுபண்ணி விடலாம். எனவே, நான் இந்தப் பிரச்னை சம்பந்தமாக ஒரு முடிவான எண்ணம் உடையவனாயினும், அதை வெளியிட அவா அதிகம் இருப்பினும், நான் காலந் தாழ்த்தியே ஆகவேண்டும். சமூகத்தின் முன்னணியிலுள்ள முஸ்லிம்களும் ஹிந்துக்களும் நிலைமையை முற்றும் ஆராயாமல் நான் எதுவும் சொல்லக்கூடாதென்றே தெரிவிக்கின்றனர். சுற்றிப் பார்த்து நேரே காணமல் நான் உண்மையைச் சிறிதும் அறிய முடியாது என்றுகூட எனக்கு வந்த கடிதம் ஒன்றில் எழுதி இருக்கிறது. அவர்களுக்கும், அவர்களைப் போல் நினைப்பவர்களுக்கும் நான் ஓர் உறுதிமொழி கூற விரும்புகிறேன். கவனத்துடனும் பிரார்த்தனையுடனும் இப் பிரச்னையைத் தீர ஆராயாமல் ஏதாவது சொல்லவோ, எழுதவோ மாட்டேன். என்னைப் பொறுத்தவரையில், சுயராஜ்யம் பெறுவது என்பது, ஆங்கிலேய அரசாங்க அந்தரங்க சபை நினைப்பதையோ, சொல்லுவதையோ பொறுத்ததல்ல. ஆனல், முள் நிறைந்த இந்தச் சிக்கலான பிரச்னை, எவ்வாறு நிரந்தரமாகத் திருப்தியளிக்கக் கூடிய முறையில் சிக்கறுக்கப்படுகிறது என்பதையே பொறுத்திருக்கிறது. இந்தப் பிரச்னை தீராவிடில், நம் முன்னே இருளே சூழ்ந்திருக்கும். இது தீர்ந்துவிட்டால், சுயராஜ்யம் அண்மையிலேயே இருக்கிறது எனலாம்.

ஆதலால், மகாநாடுகள் நடந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், முக்கியமான இப் பிரச்னைகளைப்பற்றித் தெரிந்து

கொள்ள விரும்புகிறவர்களை நிர்மாண வேலையில் ஈடுபடும்படி நான் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். நூற்று முடிக்கும் ஒவ்வொரு கெஜ நூலும், நெசவாகிற ஒவ்வொரு கெஜக் கதரும், சுயராஜ்யத்தை நோக்கி நாம் முன்வைக்கும் ஒவ்வொரு அடியாகும். தமது முஸ்லிம், அல்லது ஹிந்து சகோதரனைப்பற்றிக் கெடுதலாக நினைக்க மறுக்கிற ஒவ்வொருவரும், இப் பெரும் பிரச்னையைத் தீர்க்க உதவியவரேயாவர். அடைமொழிகளைச் சுருக்கிக்கொண்டும், நோக்கங்களைக் கற்பனை பண்ணித் திரித்துக் கூறுமலும், பொதுஜன அபிப்பிராயத்தைத் தூண்டி விடாமலும் இருக்கும் ஒவ்வொரு எழுத்தாளரும் சரியான வழி கண்டுபிடிப்பதற்கு உதவியவரேயாவார். தற்கால எழுத்தாளர்களின் மனப்பாங்கிற்கு எடுத்துக்காட்டாக, சுதேசி மொழிப் பத்திரிகைகளிலிருந்து சில துணுக்குகளை **'டைம்ஸ் ஆப் இந்தியா'** பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. நாம் எப்படிச் செய்யக் கூடாது என்பதை இவை எடுத்துக் காட்டுகின்றன. ஒரு ஹிந்துவோ, அல்லது முஸ்லிமோ அவசரமாக ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டாரென்று வைத்துக்கொள்ளுவோம். நாட்டின் நலனைக் கருதும் எந்தப் பத்திரிகைக்காரரும் உடனே அதை விளம்பரப் படுத்திவிடக் கூடாது. அம்மாதிரித் தவறுகளை மிகை படுத்துதல் பெரும் கொலைபாதகச் செயலாகும். அந்தத் துணுக்குகளில் வெளியிடப்பட்டுள்ள செய்திகள், குறிப்பிட்ட நபர்கள் சொல்லியவைதானு என்றுகூட என்னுல் நம்ப முடியவில்லை. உண்மை தவறக் கூடாது; நாவடக்கம் வேண்டும். பேனுவைக் கட்டுப்படுத்த வேண்டும். இவற்றின் அவசியத்தை யாரும் விளக்கத் தேவையில்லை.

# 13

# பொய்ப் பிரசாரம்

இச்சமயத்தில் ஹிந்து-முஸ்லிம்களிடையே உள்ள பிளவை வேண்டுமென்றே அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் நடக்கின்றன என்று தோன்றுகிறது. சில ஹிந்து, முஸ்லிம் பத்திரிகைகள் உணர்ச்சிகளைக் கிளறிவிடத் தங்களால் இயன்றதை எல்லாம் செய்கின்றன. மிகை படுத்தவும், திரித்துக் கூறவும் அவை சிறிதும் தயங்குவதில்லை. தாங்களே மனம் அறிந்து இக்குற்றங்களைச் செய்யாதவர்கள், முன்பின் யோசியாது மற்றப் பத்திரிகைகளில் வெளியாகும் கிளர்ச்சி யுண்டுபண்ணும் செய்திகளைச் சரிபார்க்காமல் அப்படியே தங்களுடைய பத்திரிகைகளிலும் பிரசுரித்து விடுகிறுர்கள்.

மௌலானு முகமது அலியைப்பற்றி இத்தகைய அறிக்கையொன்று வெளியாயிற்று. விபசாரம் செய்யும் ஒரு முஸ்லிம் என்

னைக் காட்டிலும் மேலானவரென்று அவர் கூறியதாகச் சொல்லப்பட்டுள்ளது. மௌலானா முகமது அலி இவ்வாறு சொல்லுவார் என நம்பக்கூடிய ஒருவர் இருந்தார் என்பதே, ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே எவ்வளவு விபரீதமான தப்பெண்ணம் இருக்கிறது என்பதையே காட்டுகிறது. வேறு பக்கத்தில், சுவாமி சிரத்தானந்தருக்கும் தேஜுக்கும் மௌலானா எழுதிய இரு கடிதங்களின்* மொழிபெயர்ப்பை வாசகர்கள் காணலாம். மௌலானாவைப்பற்றிப் பத்திரிகைகளில் வெளியாகும் அவதூறுகளுக்கு, இக் கடிதங்களே சரியான பதிலளித்து அவற்றை ஒழித்துவிடும். இந்திய சுதந்திரத்தின் விரோதிகள், மௌலானாவின் அறிக்கையைச் சிதைத்து, ஹிந்துக்களை மௌலானா சாகிபிற்கு விரோதமாக்குவதற்குத் தயங்கவில்லை. சிந்தனையாளரான ஒவ்வொரு ஹிந்துவையும், இக் கடிதங்களை ஊன்றிப் படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மௌலானாவின் அந்தரங்க சுத்தமான நியாய புத்திக்கு இக் கடிதங்கள் எடுத்துக்காட்டாக இருக்கின்றன என்றே நான் கருதுகிறேன்.

சில பத்திரிகைகள் இவ்வளவு ஈவிரக்கமின்றிச் சிதைத்துள்ள மூல அறிக்கைதான் யாது? இஸ்லாமின் சித்தாந்தம் எனது சித்தாந்தத்தைவிட மேலானது என்பதுதான் அவர் சொல்லுவதன் சாரம். இதில் அருவருக்கத்தக்க தீமை எதுவும் இருக்கிறதா? பல்வேறு மதங்கள் இருக்கும்வரை, மௌலானா கூறுவது நியாயமானதும் நேர்மையானதும் இல்லையா? தென் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் எனக்கு மிகவும் நெருங்கிய கிறிஸ்தவ நண்பர்கள் இருக்கிறார்கள். எனக்கு ஒளி வர வேண்டுமென அவர்கள் பிரார்த்திக்கின்றார்கள். தென் ஆப்பிரிக்காவில் கௌரவமான நிலையிலுள்ள, ஓய்வு பெற்ற வக்கீல் ஒருவர், கிறிஸ்துவையும் அவரது ரட்சிப்பையும் ஏற்றுக்கொள்ளும்படி என்னைத் தூண்டுகிறார். அவையின்றி எனது முயற்சி எல்லாம் வீண் என்று அவர் சொல்லுகிறார். ஏசுகிறிஸ்துவினிடத்து நம்பிக்கையில்லாத ஓர் உண்மையான மனிதன், விபசாரஞ் செய்யும் ஒரு கிறிஸ்தவனைவிடத் தாழ்ந்தவன் என்றே ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.

ஒரு வைதிக ஹிந்து, இதைக்காட்டிலும் மேலாக இருக்கிறாரா? அப்படி இருந்தால், சுத்திச் சடங்கு சம்பந்தமாக ஏன் இவ்வளவு பரபரப்பான ஆர்ப்பாட்டங்கள்? ஒரு வைதிக ஹிந்து தமது மகளுக்கு மாப்பிள்ளை தேடுகையில், மதத்தைக் கவனிக்காமல் நற்குணமுடைய ஒருவனையே மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுப்பாரா? அல்லது தமது மதத்திற்குள்ளேயே உள்ள

* மௌலானா முகமது அலியின் கடிதத்தை இந்தத் தொகுப்பின் 190–192–ஆம் பக்கங்களில் காணலாம்.

வர்களில் நல்லவராகப் பார்த்துத் தேர்ந்தெடுப்பாரா? தமது கூட்டத்திற்குள்ளிருந்தே தேர்ந்தெடுத்தால், மௌலானுவைப் போலவே இவரும் தமது மதமே எல்லாவற்றுள்ளும் சிறந்தது என்று நம்புகிறுர் என்று அர்த்தமாகாதா?

மத சம்பந்தமான இந்தச் சட்டத்தை மௌலான அழகிய சொற்களால் சித்திரிக்கிறுர். தமது நண்பர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாயினும் அவர்களைக் காட்டிலும் தமது மதத்தையே பெரிதாகப்போற்றுவதை அவர்விளக்கியுள்ளார். இதற்கு உதாரணமாக, அவரது நெருங்கிய ஹிந்து நண்பர்களுள் ஒருவனுகிய என்னை எடுத்துக் காண்பித்திருக்கிறுர். நான் வருத்தமடையமாட்டேன் என்பது அவருக்குத் தெரியும். ஆதலால் தான் தைரியமாக என்னைக் குறித்துச் சொல்லியிருக்கின்றுர். எவ்வளவு நெருங்கிய நண்பர்களாயினும் அவர்களைவிட மதத்தையே தாம் பெரிதாக மதிப்பதை இதன்மூலம் அவர் காட்டியுள்ளார். அவருக்குத் தமது மதத்தின் மேலுள்ள பற்றைக் குறித்து நாம் அவரைப் பாராட்ட வேண்டும். தமது நண்பரிடத்தில் பற்றில்லாதவர் எனவோ, அல்லது தமது நண்பரின் மதத்தை அவதூறு செய்கிறவர் எனவோ அவரைக் குற்றஞ்சாட்டக் கூடாது. நான் இதயபூர்வமாக இஸ்லாத்தைத் தழுவ வேண்டும் என்று அவர் பிரார்த்தனை செய்வதைக் கண்டு திகிலோ, ஆச்சரியமோ அடைய வேண்டியதில்லை. அவரது கொள்கைப்படி எது மேலானது எனக் கருதுகிறுரோ, அதையே நானும் அடைய வேண்டுமென்று விரும்பாவிட்டால், அவர் ஓர் உண்மை நண்பராக மாட்டார். சத்தியம், அகிம்சை இவற்றின் அதி தீவிர நிலையே எனது சித்தாந்தம். அது தவருகவே இருக்கலாம். ஆனுல், எனது நண்பர்களுக்கு நான் நலனுற்ற விரும்பினுல், நான் உயர்ந்ததென நம்பும் சித்தாந்தத்தையே அவர்களையும் நம்பும்படி சொல்லுவேன். எனது சித்தாந்தப்படி எது சரி என்று நான் கொள்ளுகிறேனே, அதெல்லாம் ஹிந்து மதத்தி லிருக்கிறது. அதனுலேதான் நான் ஹிந்து மதத்திற்குள்ளேயே இருக்கிறேன்.

சுவாமி சிரத்தானந்தர், மௌலானுவின் கடிதத்தை முழு மனத்துடன் அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனுல், மௌலானுவின் மதம், கொள்கைக்கும் அனுஷ்டானத்திற்கும் வித்தியாசம் பாராட்டுவதாகத் தமக்குத் தோன்றியது என்றும், தமது ஹிந்து மதம் அவ்வாறு பாராட்டவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மௌலானுவின் இரண்டாம் கடிதம் எல்லாவற்றையும் தெளிவாக விளக்கியிருக்கிறது. தமது மதம் கொள்கைக்கும் அனுஷ்டானத்திற்கும் வேற்றுமை பாராட்டுவதில்லை என்று அதில் சொல்லி, மேற்கொண்டு வாதத்துக்கு இடமில்லாமல் செய்துவிடுகிறுர். தமது கடிதத்தில், உலக மதங்களை ஒப்பிட்டுப் பார்த்து, அவற்றுள் தம் மதமே சிறந்ததென்று தாம் கருதியதாகத் தெரிவித்திருந்ததாகவும் அவர் மேலும் சொல்லி

யுள்ளார். இப்படிச் சொல்லாவிட்டால், அவர் இஸ்லாமியராக இருப்பதெப்படி? அவர் வேறு விதமாக நினைத்தால், இஸ்லாமை விட மேலானதென்று தமக்குத் தோன்றும் மதத்தையல்லவா பின்பற்ற வேண்டும்? அதுதானே நேர்மையுமாகும்?

தமது குடும்பத்தில் ஏற்பட்ட துக்கத்திற்கிடையிலும், தமது மேன்மை வாய்ந்த சகோதரர் நோய்வாய்ப்பட்டிருக்கையிலும், ஹிந்து-முஸ்லிம்களுக்கு இடையே ஏற்பட்ட சச்சரவைத் தீர்ப்பதற்கு முகமது அலி தம்மால் இயன்றதை எல்லாம் செய்ய முயன்றிருக்கிறார். உண்மை ஹிந்துக்கள் அனைவரும் அவருக்கு இச் சமயத்தில் அனுதாபம் காட்டுவார்களென நம்புகிறேன். ஒற்றுமைக்காகப் பாடுபடும் ஹிந்துக்களுக்கும் மத வைராக்கியம் இருக்கவே செய்கிறது. ஆகவே, முஸ்லிம் சக ஊழியர்களும் தங்களைப் போன்றவர்களே என்பதை இவர்கள் உணர்ந்து கொள்ள முடியும். மற்றொரு நிகழ்ச்சி டிபியா காலேஜில் நடந்ததாம். அங்கே உண்மையாக நடந்ததை எனக்குத் தெரிவிக்குமாறு, டாக்டர் அன்சாரிக்கு எழுதும்படி என் மகனுக்குச் சொன்னேன். தன்னடக்கம், ஆராய்ந்தறிதல் என்னும் இரு சட்ட வரம்புகளையும் மீறிக் குற்றமிழைத்து விட்ட அப்பத்திரிகையின் பெயரைக் குறிக்கும் ஆறு எழுத்துக்களை மட்டும் நீக்கிவிட்டு, அன்சாரி எழுதிய பதிலை முழுதும் அப்படியே கீழே இங்கே தருகிறேன். பத்திரிகை உலகில் பரவிவருகிற இந்த நோய்க்கு நிவாரணம் காண்பதுதான் நமது வேலை; பத்திரிகைகளைப் பொறுக்கி எடுத்து, அவற்றின்மீது குற்றம் சாட்டுவதல்ல. ஆதலால்தான் அப் பெயரை இங்கே நீக்கிவிட்டேன். டாக்டர் அன்சாரி பின்வருமாறு எழுதுகிறார்:

"டிபியா காலேஜில் நடந்த நிகழ்ச்சி மிக அற்பமானது. காந்திஜியின் பிறந்த நாள் டிபியா காலேஜில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது பேசியவர் காந்திஜியை ஏசுநாதருக்கு ஒப்பிட்டார். இதை ஒரு முஸ்லிம் மாணவர் ஆட்சேபித்தார். உயிருடன் இருக்கும் ஒருவர் எல்லா வகைகளிலும் சிறப்புற்று விளங்கினாலும், அவரைத் தீர்க்கதரிசிகளுடன் ஒப்பிடக் கூடாது என்பது இவரது வாதம். சிலர், இந்த முஸ்லிம் மாணவரது அபிப்பிராயத்தை எதிர்த்தனர். அப்போது, அம் முஸ்லிம் மாணவர் தமது அபிப்பிராயத்தை மறுபடியும் விளக்கினார். தம்மைப்பற்றித் தப்பர்த்தம் செய்துகொண்டது குறித்து வருந்தினார். இதுதான் நடந்த சம்பவம். இதில் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதும், அமைதிக்குப் பங்கம் விளைந்தது என்பதும் அசம்பாவிதமாகும். நீங்கள் குறிப்பிடும் பத்திரிகைகள் தீவிரக் கட்சிச் சார்புள்ளவை. சமூகத்தோடு சமூகம் மோதிக்கொள்ளத்தக்க செய்திகளையும், அற்ப விஷயங்களைக்கூடத் திரித்துப் பிரமாதப்படுத்திச் சொல்லும் செய்திகளையும் வெளியிடுவதே இவைகளின் சிறப்பியல்பு! இந்தப் பத்திரிகைகள் மட்டும் இக்குற்றத்திற்காளாயிருந்தால் பாதகமில்லை. இவை பிரபலமான பத்திரிகைகளுமல்ல, முக்கியமானவைகளுமல்ல. நமது கெட்ட காலம், வட இந்தியாவிலுள்ள ஹிந்து-முஸ்லிம் தாய்மொழிப் பத்திரிகைகள் அனைத்துமே இந் நோயால் பீடிக்கப்பட்டுள்ளன.

"நீங்கள் குறிப்பிட்டுள்ள இந்த ஒரு விஷயத்தில் இவை மட்டுமே இவ்வளவு மோசமான, குறுகிய புத்தியைக் காட்டியிருக்கின்றன என்று சொல்லுவதற்கு இல்லை. கண்மூடித்தனமான மத வைராக்கியமும், எவ்வழியிலாவது மற்றச் சமூகத்தைக் கேவலப்படுத்த வேண்டும் என்கிற இழிவான ஆசையும் தான், தற்போது ஒரு வட இந்தியத் தேச பாஷைப் பத்திரிகையின் வாழ்க்கை லட்சியமாகிவிட்டன!"

இந்த நிகழ்ச்சியை எவ்வாறு மிகைபடுத்தி யிருக்கிறார்கள் என்பது பத்திரிகை வாசிப்பவர்களுக்குத் தெரியும். பிரசங்கத்தில் வந்த ஒப்புவமையை ஆட்சேபித்த முஸ்லிம் மாணவரின் செய்கை முற்றிலும் நியாயமானதே. ஒரு மனிதரைக் கௌரவிக்க விரும்பினால் அவரை, வேறொரு கௌரவமுள்ள மனிதருடன் ஒப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்பதில்லை. அதிலும், பக்திக்குரிய தீர்க்கதரிசிகளுடனே ஒப்பிட வேண்டிய அவசியமேயில்லை. தேச மொழிப் பத்திரிகைகளைப்பற்றி டாக்டர் அன்சாரி கொடுத்திருக்கும் செய்தி, திகிலையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணக் கூடியதாக இருக்கிறது. கிளர்ச்சி யுண்டுபண்ணும் செய்திகளைக் கொண்டு வாழ்ந்து வரும் பத்திரிகைகள், தேசீயத்தையும் உண்மையையும் தங்கள் பணப்பைகளைவிட மேலாக மதிக்க வேண்டும். ஹிந்துப் பத்திரிகை ஆசிரியர்கள் முஸ்லிம்களையும், ஹிந்து மதம் இஸ்லாத்தையும் தூற்றுவதை நிறுத்தினால், ஹிந்துக்களையும் ஹிந்து மதத்தையும் தூற்றுவதைத் தங்கள் நிறுத்திக்கொள்ளுவதாக முஸ்லிம் பத்திரிக்கை ஆசிரியர்கள் சொல்லுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஹிந்துப் பத்திரிகை ஆசிரியர்களோவெனில், நேர்மாறாகத் திருப்பிச் சொல்லுகின்றனர். இரு சாராரும் ஒரே சமயத்தில் நாம் விரும்பும் நற்காரியத்தைச் செய்யட்டும் என்பதுதான் எனது யோசனை.

உண்மையை மறைத்துவிட வேண்டும் என்பது என் விருப்பமல்ல. இப்பொழுது தேவையானது என்னவென்றால், உண்மையைப் பயமின்றிச் சொல்ல வேண்டும். ஆனால், மிகைபடுத்தலும், தந்திரமாகச் சுட்டிக்காட்டுதலும் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

### மௌலானா முகமது அலியின் கடிதம்

மேலே குறிப்பிட்டுள்ள கடிதத்தின் முக்கிய பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இது மௌலானா முகமது அலி சுவாமி சிரத்தானந்தருக்கு எழுதிய கடிதமாகும். மௌலானா, தேஜ் என்னும் பத்திரிகையில் எழுதிய கடிதமும் இதே கருத்தைக் கொண்டதே:

"சில முஸ்லிம் நண்பர்கள், நான் ஹிந்துக்களை வணங்குபவன் என்றும், காந்தி பூஜை செய்பவன் என்றும் அடிக்கடி என் மீது குற்றஞ்சாட்டுகின்றனர். நான் எனது மதக் கோட்பாடுகளில் மகாத்மா காந்தியைப் பின் பற்றுகிறவனாகிவிட்டேன் என்று காட்டி, என்னிடம் முஸ்லிம் சமூகம் வெறுப்படையவும்

காங்கிரஸிலும், கிலாபத் கமிட்டியிலும் எனது செல்வாக்கு குறையவும் செய்வதே இந்த நண்பர்களின் உண்மை நோக்கமாகும். ஆதலால், நான் பல தடவைகளில், மதக் கோட்பாடுகளில் மற்ற முஸ்லிம்கள் நம்புவதையே நானும் நம்புகிறேன் என்றும், முகமது நபியையே பின்பற்றுகிறேன், காந்திஜியைப் பின்பற்றுவதில்லை என்றும் சொல்லியிருக்கிறேன். நான் இஸ்லாத்தைக் கடவுளின் கொடைகளி லெல்லாம் சிறந்ததெனக் கருதுகிறேன். ஆகையால், மகாத்மாஜிக்கு இஸ்லாத்தின் உண்மை ஒளியைக் காட்டி, அவருக்கு ஆன்மப் பிரகாசம் உண்டு பண்ண வேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்தித்திருக்கிறேன். இது எனக்குக் காந்திஜிமீதுள்ள அன்பினால் ஏற்பட்டது. இன்று இத்துடன் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இஸ்லாம், ஹிந்து, யூத, கிறிஸ்தவ, பார்சி மதங்களின் பிரதிநிதிகள், காந்திஜியைப் போன்ற உயர்ந்த ஒழுக்கமும் குணசீலமும் உடைய வேறொருவரைக் காட்ட முடியாது. ஆகையால்தான் நான் அவரை இத்தனை மரியாதையுடனும் அன்புடனும் போற்றுகிறேன். எல்லா நிலையிலும் போது மென்ற மனமும் நன்றியுடைமையும்தான் இஸ்லாத்தின் உண்மைத் தத்துவங்கள் என்றால், எவ்வளவு பாண்டித்தியம் உடையவரும் எனது தாயாரைப் போல் இஸ்லாத்தை அறிந்திருக்க முடியாதெனக் கருதுகிறேன். அவருக்கு என் ஆழ்ந்த பக்தியைச் செலுத்துகிறேன். இதைப் போலவே, மௌலானா அப்துல் பாரியை எனது மத வழிகாட்டியாகக் கருதுகிறேன். அவரது அன்பொழுகும் நேசம் என்னை அடிமை கொண்டுவிட்டது. அவரது நெஞ்சத்தின் நேர்மையை நான் மிகவும் போற்றுகிறேன். இவைகளெல்லாமிருப்பினும், உண்மை ஒழுக்கத்தில் மகாத்மா காந்தியைவிட மேலான இடத்தைப் பெறத் தகுதி வாய்ந்த வேறொரு மனிதரை நான் இன்னும் காணவில்லை. இதை நான் தைரியமாகச் சொல்லுகிறேன்.

''நம்பிக்கைக்கும் நடைமுறை ஒழுக்கத்திற்கும் பெரிய வேற்றுமை இருக்கிறது. இஸ்லாத்தைப் பின்பற்றுகிறவன் என்கிற முறையில், இஸ்லாமல்லாத பிற மதங்களைப் பின்பற்றுபவர்களது கோட்பாடுகளைவிட இஸ்லாமின் சித்தாந்தமே உயர்ந்ததென நான் கொண்டுதானாக வேண்டும். இப்படிப் பார்க்கும்போது, தூர்த்தராயும் இழிநிலை எய்தியவராயும் உள்ள முஸ்லிம் ஒருவர் முஸ்லிம் அல்லாதவரைக் காட்டிலும் உயர்ந்தவரே யாகிறார். முஸ்லிம் அல்லாதவர் எவ்வளவு உயர்குணம் படைத்தவரே யாயினும் என்ன? மகாத்மா காந்தியாகவே இருப்பினும் அக்கறை யில்லை.

''லக்ஷ்மணபுரியில் நான் பேச ஆரம்பிக்குமுன், யாரோ ஒருவர் பிரஸ்தாபக் கேள்வியின் அச்சடித்த நகல் ஒன்றை என்னிடம் பதில்சொல்லுவதற்காகக் கொடுத்தார். (கூடியிருந்தவர்களுக்கு, முன்னாலேயே இதன் பிரதிகள் தாராளமாக விநியோகிக்கப்பட்டிருந்தன) இம்மாதிரிக் கேள்வி எதற்கும் நான் பதில் சொல்லப் போவதில்லை என்று சொன்னேன். என்னைக் காட்டிலும் மகாத்மாஜியை அதிகமாக நேசிப்பவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்று ருசுப்பிக்காதவரை, மகாத்மாஜியை நான் இழிவு படுத்தினேனென்று என்மேல் குற்றஞ் சுமத்த யாருக்கும் அருகதையில்லை எனக் கருதினேன். மகாத்மாஜியை இழிவு படுத்தியதைப்பற்றி இங்கே பேச்சில்லை, ஹிந்து மதத்தை இழிவுபடுத்தியதைப் பற்றித்தான் என்பதை எனக்குத் தெரியப்படுத்தியதன் பின்னரே, நான் மேலே கண்ட பதிலைச் சொன்னேன். அந்தச் சமயத்தில், அதாவது, ஒரு மாதத்திற்கு முன்னால், என் பேச்சு 'ஹம்டம்' என்கிற பத்திரிகையில் வெளியாகி இருந்தது. அத்துடன் ஒவ்வொரு கிறிஸ்தவரும், கொள்கையைப்

பொறுத்த அளவில் எத்தகையதாயிருப்பினும், ஒரு முஸ்லிம் அல்லது யூதரைவிட ஒழுக்கத்தில் இழிநிலையிலிருக்கும் கிறிஸ்தவரே உயர்ந்தவர் என்று நம்புகிறார் என்றும், இதேதான் ஒவ்வொரு ஹிந்து அல்லது மற்ற மதத்தினர்களின் நிலையும் என்றும் எடுத்துக்காட்டினேன். என்னுடைய பதில் நான் முன் சொன்ன மாதிரி திருப்தியளித்தது. ஒரு ஹிந்து நண்பர், இருபத்திரண்டு கோடி ஹிந்துக்களும் என்னை ஆதரிப்பார்கள் என்று கோஷித்தார். கூட்டத்திலிருந்த பல ஹிந்துக்களும் "வந்தே மாதரம்", "அல்லாஹோ அக்பர்" என்று கோஷமிட்டு இதை ஏற்றனர். கேள்வி அச்சுப் பிரதிகளைக் கொண்டு வந்தவர்களும் வாயடைத்துப் போயினர்."

# 14

# ஹிந்து மதம் யாது?

மௌலானா முகமது அலி மதங்களை ஒப்பிட்டு நிகழ்த்தியதும், இப்போது புகழ் பெற்றுவிட்டதுமான சொற்பொழிவை நான் ஆதரித்துப் பேசிய வழியைக் குறைகூறி ஒரு நண்பர் கடிதம் எழுதியுள்ளார். ஒரு ஹிந்து, மௌலானாவைவிட மேலாக நடந்துகொள்ளமாட்டார் என்று நான் சொன்னதனால், ஹிந்து மதத்திற்கு நான் நியாயம் வழங்கத் தவறிவிட்டேன் என அவர் எடுத்துக்காட்டுகிறார். மணவினை சம்பந்தமாக நான் எடுத்துக்காட்டியதை அவர் எதிர்க்கிறார். ஹிந்து மதத்தின் அழகுகளை எல்லாம் எடுத்துரைக்கிறார். வேறொரு நண்பரும் இதுபோலவே தர்க்கம் செய்வதுடன், இன்னும் பலரது கருத்துக்களும் அதுபோன்றவையே என்றும் தெரிவிக்கிறார்.

மதங்களை ஒப்பிடுவதில் உள்ள நியாயத்தோடு, அவைகளிடையே வேற்றுமை காணுதல் என்கிற பிரச்னையைப் புகுத்தி இந்த நண்பர்கள் குழப்புகிறார்கள். ஹிந்து மதம் இஸ்லாமைப் போன்றதல்ல. மௌலானா நினைப்பதைப் போல ஒரு ஹிந்து நினைக்க மாட்டார் என்று இவர்கள் வாதிப்பதே, மௌலானாவின் வாதங்களுக்கு இவர்கள் ஆதரவு கொடுப்பதாகும். தாமே தேர்ந்தெடுத்துக்கொண்ட ஒரு கொள்கை, கீழான ஒருவரால் பின்பற்றப்பட்டாலும், மற்றொருவருடைய கொள்கையைவிடச் சிறந்தது என்பதே மௌலானாவின் வாதம். இந்த மற்றொருவர் எவ்வளவு ஞானியாக இருப்பினும் பொருட்படுத்த வேண்டியதில்லை. பல கொள்கைகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதிலிருந்தே, இது சரியானது என்றுமட்டு மல்லாமல், தர்க்கரீதியான முடிவு இப்படித்தான் இருக்க முடியும் என்றும் ஆகிறது.

நான் மணவினையைப்பற்றி எடுத்துக்காட்டியதை மறுபடியும் வற்புறுத்துகிறேன். எனினும் இதைத் தவிர்த்திருந்தால் நன்மையாக இருக்குமென இப்பொழுது தெரிகிறது. அது தெளிவாக அறிவுறுத்தத்தக்க, முடிவான எடுத்துக்காட்டல்ல. ஒரு

வகுப்புக்குள்ளேயே வரனைத் தேர்ந்தெடுப்பதற்குப் பல காரணங்கள் இருப்பதை, என்னைக் குறைகூறுபவர்களுடன் சேர்ந்து நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். எனினும், வேறு வகுப்பையோ, சமூகத்தையோ சேர்ந்த ஒரு மேலான மனிதரை விலக்குவதற்கு முக்கியமான காரணம், அவரது மதக் கொள்கைதான். ஒரு பிராம்மணத் தந்தை தமது மகளுக்குப் பிராம்மண வரனையே தேர்ந்தெடுக்கிறார். இதற்குக் காரணம், நம்பிக்கைக் கோட்பாடு என்று சொல்லக்கூடிய தமது வகுப்புப் பொதுஜன அபிப்பிராயத்தை அவர் மதிப்பதேயாகும். ஒரு சிந்தாந்தத்தை ஏற்றுக்கொண்டால், அதன்படி நடக்க வேண்டும். வரனைத் தேர்ந்தெடுப்பதற்கு, அடிப்படையில் இந்த நம்பிக்கை இருக்கிறதென்பதில் சந்தேகம் இல்லை. ஒரு குறுகிய சித்தாந்தத்தை மனப்பூர்வமாக நம்பிவிட்டால், அதை அனுசரிப்பதற்குக் குறிப்பிட்ட அளவு வசதிகள்தான் இருக்க முடியும். மனித பலி அவசியமென விதிக்கும் ஒரு சிந்தாந்தத்தை நம்புகிறவர் அதை விட்டு ஒழித்தாலன்றி, மதத்தின் பெயரால் செய்யும் கொலைப் பாவத்தினின்றும் தப்ப முடியாது. ஆதலால்தான் ஒழுக்கத்தில் சிறந்த சில மனிதர்கள், உயர்நிலையினின்றும் வழுவி நமக்கு ஏமாற்றத்தை உண்டாக்குகிறார்கள். இவர்களின் குறுகிய சித்தாந்தமே இதற்குக் காரணம். வேறு பல வழிகளில் தாராளமாகவும், நெறி தவருமலும் இருக்கும் ஹிந்துக்கள் சிலருக்குத் தீண்டாமை என்பது ஹிந்து மதத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. இவர்களுக்கு, சீர்திருத்தக்காரர்கள் அனைவரும் ஜாதிப் பிரஷ்டர்களே. தீண்டாமை ஹிந்து மதத்தின் ஒரு பகுதியாக இருந்தால், நான் ஹிந்து என்று சொல்லிக்கொள்ள மறுத்திருப்பேன். நிச்சயமாக, எனது உயர்ந்த அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய வேறு மதத்தைத் தழுவியிருப்பேன். நல்ல வேளையாக, தீண்டாமை ஹிந்து மதத்தின் ஒரு பகுதியல்ல; அது ஹிந்து மதத்தின் களங்கமே. இம் மதத்தை நேசிக்கும் ஒவ்வொருவரும் இச்சாபத் தீட்டை ஒழிக்கத் தன்னையே தியாகம் செய்ய வேண்டும். தீண்டாமை, ஹிந்து மதத்தில் ஒரு முக்கிய பகுதி என்று கண்டேன் என வைத்துக்கொள்ளுங்கள். அப்போது, நான் திசை தெரியாத வனாந்தரத்திலே சுற்றியலைய வேண்டியதைத் தவிர வேறு வழி இராது. ஏனெனில், அந்தந்த மதத்தில் சரியான விளக்கக்காரராகக் கொள்ளப் பெற்றவர்கள் மூலம் நான் அறிந்தவரையில், வேறு எந்த மதமும் எனது உயர்ந்த அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை.

நான், ஹிந்து மதத்துடன் சத்தியம், அகிம்சை முதலியவற்றைக் கலந்து குழப்பிவிட்டதாக எனக்குக் கடிதம் எழுதியவர் குற்றம் சாட்டுகிறார். இக் குற்றம் நான் வேண்டுமென்றே செய்ததாகும். அதிருஷ்டவசமாகவோ, துரதிருஷ்டவசமாகவோ, ஹிந்து மதத்திற்கு அதிகாரபூர்வமான கோட்பாடுகள் கிடையா. ஆதலால், தப்பர்த்தத்திற்கு உள்ளாகாமல் தற்காத்துக்கொள்ளவே, நான் சத்தியமும் அகிம்சையும் எனது சித்தாந்தம் எனச்

சொல்லியுள்ளேன். ஹிந்து மதத்தை வரையறுத்துக் கூறும்படி என்னைக் கேட்டால், அகிம்சை நெறியில் சத்தியத்தைத் தேடுங்கள் என்றுதான் சுருக்கமாகச் சொல்லுவேன். ஒருவன் கடவுளையே நம்பாதிருக்கலாம். இருப்பினும், தன்னை ஹிந்து என்று சொல்லிக்கொள்ளலாம். ஓய்வு ஒழிவின்றி உண்மையைத் தேடும் முயற்சியே ஹிந்து மதமாகும். நாம் களைப்படைந்து விட்டதன் காரணமாக, இன்று அது உயிரிழக்கும் தறுவாயில் செயலற்று, வளர்ச்சிக்கு வழியின்றி நிற்கிறது. களைப்புத் தெளிந்த மாத்திரத்திலேயே இதற்குமுன் என்றும் கண்டிராத ஒளியுடன் ஹிந்து மதம் உலகத்தின்முன் தோற்றமளிக்கும். ஆகவே, ஹிந்து மதம்தான் எல்லா மதங்களையும்விட மிகவும் அதிக சகிப்புத்தன்மை வாய்ந்தது. அதன் சித்தாந்தம் சகலத்தையும் தன் அகத்தே கொண்டுள்ளது. இப்படிச் சொல்லுவது, உலகத்திலுள்ள மற்ற எல்லா மதங்களையும்விட ஹிந்து மதத்திற்கு அதிக உயர்வு கொண்டாடுவதுதானே. இந்த வரிகளை எழுதுகையில், "நீங்கள் விவரிப்பது ஹிந்து சமயம் அல்ல; எங்களிடம் வாருங்கள்; உண்மையைத் தெரிவிக்கிறோம்" என்று குறுகிய இன புத்தியுள்ளவர்களின் கூட்டம் முணுமுணுப்பதை நான் உணருகிறேன். "நேதி, நேதி,—அதுவல்ல நண்பர்களே, அதுவல்ல" என்று நான் அவர்களைக் குழப்பத்திற்கு உள்ளாக்குகிறேன். ஆனால், அவர்கள் இரட்டிப்புக் கோபத்துடன் 'அதுவல்ல, அதுவல்ல' என்று சொல்லிக் குழப்பத்தை இன்னும் படுகுழப்பமாக்குகிறார்கள். இருப்பினும், இன்னும் ஒரு குரல் காதோடு காதாக எனக்குச் சொல்லியது: "ஏன் இந்தச் சச்சரவு, வார்த்தைச் சண்டை? இதிலிருந்து விமோசனத்தை நான் காட்ட முடியும். அதற்கு மௌனமான பிரார்த்தனையே வழி."

இப்போது நான் இந்தக் குரலுக்குத்தான் செவிசாய்க்கப் போகிறேன். மௌனத்தில் ஆழ்ந்து எனது நண்பர்களையும் அவ்வாறே செய்யும்படி கேட்டுக்கொள்ளப் போகிறேன். இவர்களையும் இவர்களது அபிப்பிராயத்தில் பங்குகொள்ளும் இவர்களின் சகாக்களையும் நான் அறிவுறுத்த முடியாமற் போயிருக்கலாம். அப்படியிருந்தால், அதற்குக் காரணம் நானே உண்மை ஒளி காணாதிருத்தல்தான். மௌலானா முகமது அலியை ஆதரித்து நான் விசேஷ வாதங்களில் ஈடுபடவில்லை என உறுதி கூறுகிறேன். எனது தவற்றைக் கண்டேனானால், அதை ஒப்புக்கொள்ள எனக்குத் தைரியமிருக்குமென நம்புகிறேன். மௌலானாவுக்கு என்னிடமிருந்து ஆதரவு ஒன்றும் தேவையில்லை. அவரை ஆதரிப்பதற்காக உண்மையை இம்மியேனும் தியாகம் செய்திருந்தால், நான் ஒரு பொய் நண்பனே ஆவேன். மற்றவரின் குற்றங்களை ஏற்றுக்கொண்டு, மீண்டும் நட்பை வலியுறுத்துதல்தான் நட்பின் தனிச் சிறப்பாகும்.

—'எங் இந்தியா' – 24—4—1924

# 15

# வெறி பிடித்த குல்பர்கா

ஹிந்து ஆலயங்களை அசுத்தப்படுத்தும் பைத்தியத்திற்குப் பின்னணியாக ஒரு ஸ்தாபனம் இருப்பது தெளிவு எனச் சென்ற வாரம் குறிப்பிட்டேன்.* குல்பர்கா, வெகு சமீபத்தில் நடந்த காரியங்களுக்கு ஓர் உதாரணமாகும். ஹிந்துக்கள் என்னதான் கோபமூட்டியிருந்தாலும், முஸ்லிம்களின் ஆவேசம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபாயத்தை சூசிப்பதாகும். எந்த நிலையிலும் ஆலயங்களை அசுத்தப்படுத்துதல் நியாயமாகாது. பழி வாங்குவதற்காக ஒரு நாள் ஹிந்துக்கள் மசூதிகளையெல்லாம் அசுத்தப்படுத்திவிட்டால், முஸ்லிம்கள் ஆச்சரியப்படக்கூடாதென்று மௌலானா ஷவுகத் அலி, ஷம்பாரிலும் அமேதியிலும் கோவில்களை அசுத்தப்படுத்தியதைக் கேட்டபொழுது கோபம் தாங்காமல் கூறினார். மௌலானாவின் கோபக் குரலைக் கேட்கும் ஹிந்துக்கள் பெருமிதம் கொள்ளலாம், அல்லது மகிழ்ச்சி அடையலாம். ஆனால், நான் அதைக் குறித்து மகிழ்ச்சி அடையவில்லை. ஹிந்துக்களும் மகிழ்ச்சி அடையக்கூடாதென யோசனை கூறுகிறேன். முஸ்லிம்களின் மத வெறி பிடித்த ஒவ்வொரு காரியத்தையும் பார்த்து, மற்ற எந்த ஹிந்துவையும்விட அதிகமாக நான் ஆத்திரப்படுகிறேன். இவ்விஷயத்தில் எனக்குள்ள பொறுப்பையும் நான் நன்றாக அறிவேன். இக்கிளர்ச்சிகளில் பலவற்றுக்கு ஜவாப்தாரி நான்தான் என்று பல ஹிந்துக்கள் நினைக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். முஸ்லிம் பொது மக்களை விழிப்படையச் செய்ததில் பெரும் பங்கு எனக்குத்தான் என்பது அவர்களின் வாதமாகும். அந்தக் குற்றச்சாட்டில் தப்பில்லை. அவ்விஷயத்தில் என் பங்கைப் பற்றி நான் வருந்தவில்லையெனினும், மறுப்பின் வேகத்தை நான் உணருகிறேன். ஆகையால், வேறு எதற்காக இல்லாவிட்டாலும், இக்காரணத்திற்காகவாவது, கோவில்களை அசுத்தப்படுத்தும் இந்த இழிவான செயல்களுக்காக மற்றவர்களைவிட அதிகமாக நான் துக்கப்பட வேண்டும்.

நான் விக்கிரக ஆராதனையை ஆதரிக்கிறேன்; அதே சமயம் நான் விக்கிரக ஆராதனைக்கு விரோதியும் ஆவேன். விக்கிரக ஆராதனையில் அடங்கியுள்ள தத்துவத்தை நான் போற்றுகிறேன்.

---

* முராதாபாத்தில் உள்ள ஒரு ஹிந்து ஆலயத்தையும், அமேதியில் உள்ள ஆலயத்தையும் முஸ்லிம்கள் அசுத்தப்படுத்தியதன் சம்பந்தமாகக் காந்திஜி 1924 ஆகஸ்டு 21-ஆம் தேதி 'எங் இந்தியா'வில் ஒரு தலையங்கம் எழுதியிருந்தார். அத்தகைய நிகழ்ச்சிகளுக்கு மூல காரணமான ஒரு ஸ்தாபனம் திரை மறைவில் வேலை செய்து வருகிறது என்பதில் ஐயமில்லை என்று காந்திஜி குறிப்பிட்டதுடன், அந்த ஸ்தாபனத்தினால் இஸ்லாம் மதத்தின் பெருமையும் செல்வாக்கும் அதிகமாக முடியாது என்றும் கூறியிருந்தார்.

மனித இனத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு அதற்கு உண்டு. இந்நாட்டைப் புனிதமாக்கும் ஆயிரக்கணக்கான ஆலயங்களை என் உயிரைக் கொடுத்தும் காக்கும் ஆற்றலைப் பெற நான் விரும்புகிறேன். எனது விக்கிரகங்களையும் கோவில்களையும் முஸ்லிம்கள் முழுதும் சகிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தே, முஸ்லிம்களுடன் நான் கொண்டுள்ள தொடர்பு ஏற்பட்டிருக்கிறது. நான் வணங்கும் உருவத்தில்தான் இறை வணக்கம் செய்யவேண்டும் என்றும், பிறவற்றால் பலனில்லையென்றும் சொல்லும் மத வெறியும் ஒரு நுணுக்க வகையான ஆராதனையேயாகும். இதை நான் முற்றிலும் கண்டிக்கிறேன் என்ற முறையில், நான் விக்கிரக ஆராதனைக்கு ஒரு விரோதியே. கல் அல்லது தங்கப் பிரதிமைகளில் தேவதைகளை ஆவாகனம் செய்து வணங்குவது வெளிப்படையான, சூதில்லாத ஒரு முறையாகும். ஆனால், வெறி உருவத்தில் விக்கிரக ஆராதனை அதிக நாசகரமானதும், தூய்மையற்றதுமாகும்.

மற்றவர்கள் தங்கள் தங்கள் மதத்தை உண்மையென நம்பும் வரை, முஸ்லிம்கள் ஏதோ மதங்களைச் சகிப்பதை ராஜீயத்திற்கு வேண்டிய கட்டாயமான நல்ல முறையாகக் கொள்ளாமல், தங்களுடைய மதத்தின் ஒரு பகுதியாகவே கொள்ளவேண்டும். உண்மையான ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு இது அவசியம் இருக்கவேண்டும். இதைப் போலவே ஹிந்துக்களும் பிற மதங்களின்மீது நம்பிக்கை வைத்து அவற்றைச் சகிக்கவேண்டும். இவர்களின் மத உணர்ச்சிக்கு அவை எவ்வளவு அருவருப்புடையவையாகத் தோன்றினும், அதை ஹிந்துக்கள் பொருட்படுத்தக்கூடாது. ஆதலால், ஹிந்துக்களுக்குப் பழி வாங்கும் எண்ணம் கூடாது. ஆதாமின் காலத்திலிருந்து பழி வாங்கும் நியதியைக் கையாண்டு, அது சற்றும் பலனளிக்கத் தவறிவிட்டதென்று அனுபவத்தில் கண்டிருக்கிறோம். அதன் விஷம் இன்று நம்மைத் திணற அடிக்கிறது. எல்லாவற்றையும்விட முக்கியமாக, கோவில்களை இடித்ததற்குப் பிரதியாக ஹிந்துக்கள் மசூதிகளை இடிக்கக்கூடாது. அடிமைத்தனத்திற்கும், அதைவிட மோசமான படுகுழிக்கும் அது வழி செய்துவிடும். ஆயிரம் ஆலயங்கள் தகர்த்துப் பொடி பண்ணப்பட்டாலும், ஒரு மசூதியைக்கூட நான் தொடமாட்டேன். இதன் மூலம், மதவெறியர்கள் மதம் என்கிறார்களே அந்த மதத்தைவிட என் மதம் மேலானதென்று நிரூபிக்க முடியுமென எதிர்பார்க்கிறேன். தமது விக்கிரகங்களையும் கோவில்களையும் பாதுகாப்பதற்காக, அவ்விடத்திலேயே நின்று அர்ச்சகர்கள் உயிர் விட்டனர் என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். கடவுள் எங்கும் நிறைந்தவர்; விக்கிரகங்களை அழித்து இழிவுபடுத்துதல் அவரை இழிவுபடுத்துவதாகும். அவர் இதைச் சகிக்கிறார். இதைப் போலவே கோவில்களைக் காப்பதில் துன்பத்தைச் சகிக்கவும், சாகவும் ஹிந்துக்கள் பயில வேண்டும். மத வெறியர்கள் கோவிலை அசுத்தப்படுத்துவது போலவே, ஹிந்துக்களும் மசூதிகளைத் தகர்த்து, அவர்களைப்போல் இவர்

களும் மத வெறியர்களாவதன் மூலம், தங்களின் மதத்தையோ, கோவிலையோ பாதுகாத்தவர்களாகமாட்டார்கள்.

தூய்மையற்ற இந்த இழிவான வேலைகளுக்குப் பின், சந்தேகமின்றி ஒளிந்துகொண்டிருக்கும் ஊர், பெயர் தெரியாத முஸ்லிம்களுக்கு நான் சொல்லுவது இதுதான் : "இஸ்லாம் உங்கள் நடத்தையைக்கொண்டு மதிப்பிடப்படுகிறது. கோபமூட்டப்பட்டாலும்கூட அத்தகைய செயல்களில் ஈடுபடுவதை ஆதரிக்கும் ஒரு முஸ்லிமைக்கூட நான் காணவில்லை. ஹிந்துக்கள் ஒரு சிறிதாவது கோபமூட்டும் செயல் புரிந்தார்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை. அப்படி ஆதாரம் இருந்ததென்றே வைத்துக்கொண்டாலும், ஹிந்துக்கள் முஸ்லிம்களைக் கோபமூட்டுவதற்காகவே மசூதிகளின் முன் கொட்டுமுழக்கம் செய்தார்கள், தொழுகிற மசூதியிலிருந்து ஒரு கல்லை எடுத்தார்கள் என்றெல்லாம் வைத்துக்கொண்டாலும், முஸ்லிம்கள் ஹிந்துக் கோவில்களை அசுத்தப்படுத்தியிருக்கக்கூடாது என்றே சொல்லத் துணிகிறேன். பழி வாங்குதலுக்குக்கூட எல்லையுண்டு. தங்கள் உயிரைக் காட்டிலும் மேலாகத் தங்கள் கோவிலைக் கருதுகிறார்கள் ஹிந்துக்கள். உயிருக்கு நேரிடும் தீங்கைப்பற்றி நிதானமிழக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், கோவில்களுக்கு நேரிடும் தீங்கை நிதானமாகப் பார்த்துக்கொண்டிருப்பது முடியாத காரியம். மதம் என்பது உயிரைவிட மேலானது. தத்துவப் பெருமைகளில் குறைவுடையதாயிருப்பினும், ஒவ்வொருவருக்கும் அவரவரது மதமே உண்மையானதென்பது ஞாபகமிருக்கட்டும். ஆனால், ஹிந்துக்கள் கோபமூட்டினார்கள் என்பதற்கு ஆதாரமில்லை. முல்டானில் கோவிலை அசுத்தப்படுத்தியது, எதிரி ஒன்றும் செய்யாமல் சும்மாவிருக்கும்போதே செய்த செயலாகும். 'ஹிந்து-முஸ்லிம் குற்றச்சாட்டுகள்' என்னும் கட்டுரையில், ஹிந்துக்கள் எங்கெந்த இடங்களில் மசூதிகளைக் களங்கப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டனர் என்று குறிப்பிட்டிருந்தேன். இதற்கு ஆதாரமாக ருஜுக்கள் தேடினேன். ஒன்றும் கிடைக்கவில்லை. அமேதி, ஷாம்பார், குல்பர்கா முதலிய இடங்களில் நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறவைகளைக்கொண்டு இஸ்லாமின் கௌரவத்தை உயர்த்த முடியாது. இப்படி நான் சொல்ல அனுமதித்தீர்களானால், நான் என்னுடைய மதத்தைப் போலவே இஸ்லாமின் கௌரவத்தைப்பற்றியும் உணருகிறேன் எனச் சொல்லுவேன். முஸ்லிம்களுடன் நான் மனமுவந்த, வெளிப்படையான முழு நட்புடன் வாழ விரும்புவதால் இப்படிக் கூறுகிறேன். இந்தக் களங்க வேலைகள் எனது இதயத்தில் ஒரு பெரும் காயத்தை உண்டுபண்ணிவிட்டன என்பதை நான் சொல்லாமல் இருப்பதற்கில்லை."

டில்லி ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நான் சொல்லுவது இதுதான் : "இரு சமூகங்களுக்கிடையே அமைதி நிலவ விரும்பினால், அதற்கு இதுதான் பொன் போன்ற ஒரு தருண

மாகும். அமேதி, ஷாம்பார், குல்பர்கா முதலிய இடங்களில் நடந்ததாகச் சொல்லப்படுபவைகளைக்கொண்டு பார்த்தால், பரிகாரம் தேடும் கடமை உங்களுக்கு இரட்டிப்பாகும். உங்கள் மத்தியில் இரு முஸ்லிம்கள், அதாவது ஹக்கீம் சாஹிப் அஜ்மல் கானும் டாக்டர் அன்சாரியும் இருக்கும் அதிருஷ்டம் பெற்றிருக்கிறீர்கள். இவர்கள் இது வரைக்கும் இரு சமூகத்தினருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமாயிருந்து வந்தவர்கள். பெருந்தன்மையான பரம்பரைப் பழக்கம் உங்களுக்கு உண்டு. எத்தகைய சோதனையையும் தாங்கக்கூடிய நட்பை ஏற்படுத்துவதற்கு, இப்போதுள்ள உங்கள் சண்டையை உபயோகித்துக்கொள்ளுங்கள். எச்சமயத்திலும் நீங்கள் எனது தொண்டை உபயோகிக்கலாம். மத்தியஸ்தனுக என்னை ஏற்றுக்கொண்டால், டில்லியிலேயே இருந்து, நீங்கள் குறிப்பிட்டு நியமிக்கும் மற்றவர்களுடன் கலந்தாலோசித்து உண்மையைக் காண முயலுவேன். சென்ற ஜூலை மாத நிகழ்ச்சிகள் அடங்கிய ஆதாரமுள்ள குறிப்பைத் தயார் செய்வது, நிரந்தரமான பரிகாரத்திற்கு அவசியமான பூர்வாங்க வேலையாகும். சீக்கிரமாக ஒரு முடிவுக்கு வாருங்கள். இந்தியாவின் உடனடியான எதிர்காலம், ஹிந்து-முஸ்லிம் பிரச்னைக்குத் தேடும் பரிகாரத்தையே பொறுத்திருக்கிறது. டில்லி, பரிகாரம் தேடமுடியும். மற்றவர்கள் அநேகமாக டில்லியையே பின்பற்றுவார்கள்.''

—'எங் இந்தியா' - 28—8—1924.

# 16

# ஒரு விளக்கம்

டில்லியிலிருந்து சில முஸ்லிம் நண்பர்கள் வந்திருந்தார்கள். ஹிந்து ஆலயங்களை அசுத்தப்படுத்தியதன் பின்னணியில் ஒரு முஸ்லிம் ஸ்தாபனம் இருக்கிறதென்றும், இந்த அசிங்கமான காரியங்களைச் செய்யும்படியாக ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்குக் கோபமூட்டவில்லை என்றும் நான் சொல்லியதைக் கேட்டு, இவர்கள் ஆச்சரியப்படுவதாகத் தெரிவித்தனர். ஸ்தாபனத்தைப் பற்றிய எனது அறிக்கையை, முஸ்லிம்களின் சமூகம் முழுமைக்குமே உள்ள ஒரு ஸ்தாபனம் என்றும், கோபத்திற்குத் தூண்டத்தக்க காரணம் என்று நான் சொன்னதைக் கோபமூட்டும் எவ்விதக் காரணமும் என்றும், அர்த்தம் செய்யப்படுகிறதென இந்த நண்பர்கள் சொல்லுகிறார்கள். ஸ்தாபனம் என்னும்போது நான் முஸ்லிம் சமூகத்தினர் ஸ்தாபித்த, அல்லது அவர்களால் தூண்டப்பட்ட ஸ்தாபனம் என்று கூறவில்லை. ஆனல், ஒரு சில, எத்தனை பேர் என்பதற்கு ஆதாரம் இல்லாத நபர்களைக்கொண்டதையே நான் அவ்வாறு குறிப்பிட்டேன் என்று இவர்களுக்குச் சொன்னேன்.

இப்படிப்பட்ட ஸ்தாபனம் ஒன்று இருப்பது இவர்களுக்குத் தெரியாது. இருந்தால் தமக்குத் தெரிந்திருக்க வேண்டுமென இந்த நண்பர்கள் தெரிவித்தனர். நான் டில்லிக்குப் போனதும் இவ்வாறே ஹக்கீம் சாகிபும் மௌலானா முகமது அலியும் சொன்னார்கள். அவர்களது மறுப்பினால், அவ் விஷயமாக எனது நம்பிக்கை பாதிக்கப்பட்டதெனினும், நான் குறிப்பிட்ட மாதிரியான ஸ்தாபனம் இருப்பதை என் மனத்தினின்றும் அகற்ற முடியவில்லை என அவர்களுக்குத் தெரிவித்தேன். முஸ்லிம்கள் உள்பட அநேகர் இதைப் பற்றி, இச் சமீப சம்பவங்களுக்கு முன்னாலேயே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இவை இந்தக் குறிப்பிட்ட முறையில் நிகழ்ந்ததும் ஒரு ஸ்தாபனத்தின் தூண்டுதலால்தான் இருக்க முடியும்; அகஸ்மாத்தான வெறியால் இவ்வாறு நடந்திருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தேன். நான் நினைத்தது முற்றிலும் தவறு என்று அறியச் சந்தோஷமடைவேன். தவற்றை உணர்ந்த உடனேயே தக்க பரிகாரம் தேடி அவசியமான திருத்தமும் வெளியிடுவேன். அந்த ஸ்தாபனம் சர்க்காரின் ஏற்பாடாக இருக்கலாம் என்று குறிப்பிடப்படுகிறது. இக் கலவரத்தில் அரசாங்கத்திற்குப் பங்கில்லை என்று மறுக்க நான் தயாராக இல்லையென்றும் சொன்னேன். அரசாங்கமே இதையெல்லாம் நடத்திவைத்தது என்று கண்டுபிடித்தால் கூட, நான் நிச்சயமாக ஆச்சரியப்படுவதற்கில்லை.

கோபமூட்டப்பட்டதன் சம்பந்தமாக இதை நான் எடுத்துக் காட்டினேன்: "நிகழ்ச்சி பற்றிய நம்பிக்கை, ஹிந்துக்கள் கோபமூட்டினார்கள் என்பதற்கு விரோதமாக இருக்கிறது. முல்டானில் அசுத்தப்படுத்தியது, எதிரி ஒன்றும் செய்யாமல் சும்மா விருக்கும்போதே செய்த செயலாகும். 'ஹிந்து - முஸ்லிம் குற்றச்சாட்டுகள்' என்னும் கட்டுரையில் எங்கெந்த இடங்களில் ஹிந்துக்கள் நாச வேலை செய்தனர் என்று குறிப்பிட்டிருந்தேன். இதற்கு ஆதாரமாக ருஜுக்களைத் தேடினேன்; ஒன்றும் கிடைக்கவில்லை."

என்னைக் காண வந்தவர்கள், ஹிந்துக்கள் கோபமூட்டினார்கள் எனக்கூறும் ஹைதராபாத் பத்திரிகை ஒன்றை என்னிடம் காட்டினார்கள். நினைத்துப் பார்க்கக்கூடிய எந்த நிலைமையிலும், கோவில்களையும் மசூதிகளையும் அசுத்தப்படுத்துவது நியாயமற்றது என்று இன்றும் நான் வாதாடிக்கொண்டிருக்கும் போது, ஹிந்துக்களும் கோபமூட்டினார்கள் என்பதை ருஜுப்படுத்த முடியுமானால், என் கண்டனத்திற்கு மதிப்பு இராது என்பதை ஒத்துக்கொண்டேன். குல்பர்காவில் ஹிந்துக்கள் அபசாரம் செய்தார்கள் என்பது உண்மையென நிரூபிக்கப்பட்டால், நான் ஆழ்ந்த வருத்தமும் வெட்கமும் அடைவேன்.

அதுபோல் ஹிந்துக்களுக்குள் எதிர் ஸ்தாபனம் ஒன்று இல்லையாவென என்னைச் சந்திக்க வந்தவர்கள் கேட்டார்கள். மசூதிகளை அசுத்தப்படுத்தும்படி தூண்டும் ஸ்தாபனம் இருப்பதாக எனக்குத் தெரியாது. ஆனால், சில ஹிந்துக்கள் அடங்கிய

ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது. இஸ்லாமைப் பற்றி அவதூறாக எழுதுவதும் முஸ்லிம்களின் குற்றங்களை மிகைபடுத்தி விளம்பரம் செய்வதும்தான் அதனுடைய வேலை என்று அவர்களிடம் சொன்னேன். இது மன்னிக்க முடியாதது. இதைப் பொறுத்த அளவில் இரு சாராரும்தான் குற்றவாளிகள். தேசீய நலனைக் கருதும் ஒவ்வொருவரும் தீமையை வளர்க்கும் கட்சிகளைக் கண்டித்து, அத் தீமையைத் தடை செய்ய எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும். சந்தர்ப்பமளித்து இரு சாராரும் முழுமனத்துடன் ஒத்துழைத்தால், அவசியமானால் தனியாகவோ, முடியுமானால் சக ஊழியர்களின் ஒத்துழைப்பினாலோ, ஒரு விசாரணை நடத்தி, யார் இத் தீங்கை ஆரம்பித்தார்கள், இது எப்படி வளர்ந்தது, இதற்கு எவ்வாறு பரிகாரம் செய்யலாம் என்பனவற்றைக் காண முயற்சிக்கிறேன் என்று, என்னைச் சந்திக்க வந்தவரிடம் சொன்னேன்.

—'எங் இந்தியா' - 18—9—1924

# 17

# உடலை வளர்ப்பது உண்மையான பரிகாரமா ?

ஹிந்து - முஸ்லிம் பிரச்னைக்கு ஒருவர் தமது கடிதத்தில் பரிகாரம் கூறுகிறார். கீழ் வரும் பகுதி அதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது :

"முஸ்லிம்களைப் போல் ஹிந்துக்களும் உடல் வலிமை உள்ளவர்களாக இருந்தால்தான் அவர்கள் இவர்களை மதிப்பார்கள்; பிறகுதான் ஒற்றுமை சாத்தியமாகும். அதற்கு முன்பு அது சாத்தியமல்ல. ஆகையால், உங்கள் சக்தி அனைத்தையும் ஹிந்து இனத்தவரின் உடல் பலத்தை வளர்ப்பதில் செலுத்த வேண்டும். ஹிந்துக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் குஸ்திப் பயிற்சிசாலைகளை நிறுவட்டும். நல்ல புஷ்டி தரும் உணவு கொள்ளட்டும். கலியாணங்களில் அதிகம் செலவிடாதிருக்கவும், 21 வயதுவரை பிரம்மச்சரியத்தை அனுசரிக்கவும் பிரசாரம் செய்யுங்கள். இதன் மூலம் ஹிந்து இனத்தவர்களுக்குப் பெரிய பணி செய்தவராவீர்கள். இதன் பலனாக சுயராஜ்யம் சீக்கிரத்தில் இயல்பாகவே சித்திக்கும். தயவு செய்து இக்கடிதத்தை 'எங் இந்தியா'வில் பிரசுரியுங்கள்."

இக் கடிதம் எழுதியவர் தாம் கூறியுள்ள யோசனையின் மூலம், தொடர்ந்து உயிர் வாழ்வதற்கு மிருக பலம் அவசியம் என்று கூறிக்கொண்டே இருக்கும்படியான கீழான மிருக நிலைக்கு ஹிந்து-முஸ்லிம்களைக் கொண்டுவந்துவிடுவார். மிருகங்களுக்கிடையே அன்பு நிலைத்து நீடிப்பதில்லை என்பதை இவர் மறந்துவிடுகிறார். ஹிந்துக்களுக்கு உடல் வலிமை வேண்டும்.

இவர்கள் எவருக்கும் பயப்படக் கூடாது. இவை ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு அவசியம். அதைவிடத் தேசீய வாழ்விற்கே மிக்க அவசியம். உடல் வலி மட்டும் ஒற்றுமையை உண்டுபண்ணி விடாது என்பது எனக்குத் தெரியும். நம்மிடையே ஒருவருக்கொருவர் அன்பு இல்லையேல், பிறகு நாயையும் பூனையையும் போல் சண்டையிட்டுக் கொண்டுதான் இருப்போம். ஆயுதம் தாங்கிய சமாதானத்திற்காக என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்வது உசிதமென நான் நினைக்கவில்லை. ஒருவர் மதத்தை மற்றவர் சகித்துக்கொண்டு போவதிலிருந்து ஏற்படும் நிரந்தர சமாதானம்தான் வேண்டும். இது பழைய கதை. நமக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையேயும், ஹிந்து - முஸ்லிம்களுக்கு இடையேயும் நாம் வேண்டுவது மனமாற்றமே; மற்றவை இயல்பாகப் பின்தொடரும்.

உடல் வலியை வளர்க்க நண்பர் பிரம்மச்சரியத்தைக் குறிப்பிடுகிறார். தன்னடக்கத்தை, உடல் பலம் பெறுவதற்காக உபயோகிப்பது விலை மதிப்பில்லா ஒன்றை இழிதொழிலுக்கு உபயோகப்படுத்துவதாகும். இங்கிலீஷ் சிப்பாய்கள் சாண்டோக்களாவதற்குத் தன்னடக்கத்தையா அனுசரிக்கிறார்கள்? எனது நிருபர் அமைதியாக அவரது மருந்தின் பலாபலன்களைப் பற்றிச் சிந்திக்கட்டும். *10,000* உண்மைப் பிரம்மச்சாரிகள் நம்மிடையே இருந்தால், அப்பொழுது நாம் முஸ்லிம்கள், ஆங்கிலேயர், மற்ற எவரையும் வெற்றி காணலாம். நிருபர் சொல்லுவதுபோல் அவர்கள் சண்டையிடமாட்டார்கள் என்பதை அவர் உணருகிறாரா? அவர்கள் அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் இராது என்பதும் உண்மைதான்.

## 18

# ஆண்மைக்கு அழகு அகிம்சையே

சூரத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருந்தபோது, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி விவரமாகக் குறிப்பிட்டேன். ஏனெனில், அங்குள்ள நண்பர்கள் சங்கதன் இயக்கத்தைப் பற்றி எனது அபிப்பிராயத்தைக் கேட்டார்கள்.

கூட்டம் முடிந்த பிறகு முஸ்லிம் நண்பர் ஒருவரிடமிருந்து எனக்குக் கடிதம் ஒன்று வந்தது. அப்பிரச்னை தீருவதற்கான சில யோசனைகளை அவர் கூறியிருந்தார். குஜராத்கூட வகுப்புக் கலக அபாயங்களிலிருந்து விடுதலை பெற்றிருக்கவில்லை என்பது இப்போது எனக்குத் தெரிகிறது. விசநகர் தகராறு இன்னும் சமரசமாகத் தீர்க்கப்படவில்லை. மண்டலில் இன்னும் கொந்

தளிப்பு இருந்து வருகிறது. அகமதாபாத்திலும் ஏதோ கலகம் ஏற்படலாம் என்ற பீதி இருந்து வருகிறது. உம்ரேத்தில் தகராறு ஏற்படலாமென்று கருதுகிருர்கள். மற்றவிடங்களிலும் அதே அபாயம் இருந்து வருகிறது.

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைப் பிரச்னை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. இப்பிரச்னையை யொட்டி முதலில் ஒரு விஷயத்தைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். இந்தக் கலகங்கள் பலவற்றிலும், சர்க்கார் ஏஜண்டுகள் திரை மறைவில் இருந்து வேலை செய்ததாகக் கேள்விப்படுகிருேம். அந்தக் குற்றச்சாட்டு உண்மையாயின், அது எனக்கு மனவருத்தத்தைக் கொடுக்குமேயன்றி, ஆச்சரியத்தைக் கொடுக்காது. கலகங்களை அரசாங்கம் தூண்டிவிடுமாயின், அதைக் குறித்து நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், நம்மிடையே பிளவு ஏற்படும்படி செய்வதே அவர்களுடைய கொள்கையாகும். அரசாங்கம் தூண்டிவிட்டாலும், தங்களுடைய நலன் யாரைச் சார்ந்திருக்கிறது என்பதை இரு சமூகங்களும் உணராதது வருந்தத்தக்கதாகும். மூன்ருவது கட்சியினரால் காதைப் பிடித்து இழுக்கப்படுவோர்தான், சண்டையிடுவது வழக்கமாக இருக்கிறது. பிராம்மணர்-வைசியர் சண்டையையோ அல்லது சுன்னி-ஷியா முஸ்லிம்களுக்குள் சண்டையையோ சர்க்கார் தூண்டிவிட்டதாக ஒருபோதும் நாம் கேள்விப்பட்டதில்லை. ஆனல், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அடிக்கடி சண்டையிடுவதால், சர்க்கார் அவர்களைத் தூண்டிவிடுகிருர்கள் என்ற சந்தேகத்திற்கும் பீதிக்கும் இடம் ஏற்படுகிறது. நாம் சுயராஜ்யத்தை அடையவும், அடைந்த சுயராஜ்யத்தைப் பாதுகாத்துக்கொள்ளவும் விரும்பினல், சண்டையிடும் இந்த வழக்கத்தைக் கைவிட்டுவிட வேண்டியது அவசியமாகும்.

ஹிந்துக்கள் பயத்திற்கு ஆளாகிவரும் வரையில், சண்டைகள் பீறிட்டு எழுவதைத் தவிர்க்க முடியாது. கோழைகள் இருந்துவரும் வரையில், அவர்களை ஆட்டிவைக்கும் துஷ்டர்களும் இருந்துகொண்டுதான் இருப்பார்கள். ஹிந்துக்கள் பீதியைத் தழுவிக்கொண்டேயிருந்தால், தங்களுக்கு யாரும் பாதுகாப்பு அளிக்க முடியாது என்பதை அவர்கள் அறியவேண்டும். மனிதனைக் கண்டு பயப்படுவது, கடவுளிடம் நம்பிக்கையின்மையையே காட்டுவதாகும். கடவுளிடம் நம்பிக்கை இராதவரே, இறைவன் எங்கும் வியாபித்துள்ளார் என்பதை நம்பாதவரே, தமது உடல் பலத்தில் நம்பிக்கை வைக்கிருர். எனவே, ஹிந்துக்கள் ஒன்று கடவுளை நம்பப் பழக வேண்டும்; அல்லது தம்முடைய சொந்த உடல் பலத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். இரண்டிலும் அவர்களுக்கு நம்பிக்கையில்லாவிடில், ஹிந்து சமூகமே அழிந்து போக வேண்டியதுதான்.

முதலாவதாக, கடவுளிடத்தில் உள்ள நம்பிக்கையும், மனிதனிடத்தில் பயத்தை உதறித் தள்ளுவதுமே சாத்விக

வழியாகும்; அதுதான் மிகச் சிறந்த வழியுமாகும். இரண்டாவதாக, ஒருவர் தம்முடைய உடல் பலத்தில் நம்பிக்கை வைப்பது பலாத்கார வழியாகும். அந்த இரண்டிற்கும் இந்த உலகில் இடமிருக்கிறது. இரண்டில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவது நம் கையில்தான் இருக்கிறது. ஆனால், எவரும் ஒரே சமயத்தில் இரண்டையும் கைக்கொள்ள முயற்சிப்பது முடியாத காரியம். எல்லா ஹிந்துக்களும், எல்லா முஸ்லிம்களும் பலாத்கார வழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவார்களாயின், சமீப காலத்தில் நாம் சுயராஜ்யம் பெறலாம் என்ற பேச்சை விட்டுவிடுவதே நல்லது. ஆயுத பலாத்காரத்தினால் அமைதி ஏற்படும்படி செய்வதெனில், அது சிறு சண்டையுடனோ அல்லது சில மண்டைகள் உடைவதுடனோ முடிந்துவிடாது. அதன் விளைவாக நீண்ட காலம் சண்டை நடப்பதுடன், ரத்த வெள்ளம் ஆறுகளாக ஓடியே தீரும்.

நான் சங்கதனை எதிர்க்கிறேன், அதை எதிர்க்கவுமில்லை. 'அகாடா'க்களை அதாவது குஸ்திப் பயிற்சிசாலைகளை ஆரம்பிப்பதும், அவற்றின் மூலம் ஹிந்து காலிகளைச் சேர்ப்பதும் சங்கதனின் நோக்கமாயின், நான் அதைப் பரிதாபகரமான ஒரு நிலைமையாகவே கருதுவேன். நீங்கள், உங்களையும் உங்களுடைய மதத்தையும் காலிகளைக்கொண்டு பாதுகாத்துக்கொண்டுவிட முடியாது. அது, ஓர் ஆபத்திற்குப் பதிலாக மற்றோர் ஆபத்திற்கு, இரண்டிற்குமேகூட இடம் கொடுப்பதாகும். குஸ்திப் பயிற்சிசாலைகள், தங்களுடைய உடலின் கம்பீரத்தை அபிவிருத்தி செய்துகொள்ளுவதற்காகப் பிராம்மணர்கள், வணிகர்கள் முதலிய மற்றவர்களால் உபயோகிக்கப்படுமாயின், அவற்றிற்கு எதிராக நான் எதுவும் கூறுவதற்கில்லை. ஆனால், முஸ்லிம்களை எதிர்த்துப் போராடுவதற்காக அவை பயிற்சி அளிக்குமாயின், அவற்றால் நன்மை ஏற்படாது என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. சண்டையிடுவதற்கான உடல் பலத்தைப் பெற பல ஆண்டுகள் பயிற்சிபெற வேண்டியிருக்கும்.

ஆதலால், பிரச்னை தீர குஸ்திப் பயிற்சிசாலை நிறுவுவது சரியான வழியில்லை. நாம் முஸ்லிம்களின் இதயத்தை மாற்ற விரும்பினால், சுயத் தூய்மை பெற வேண்டும்; தவ முறையை மேற்கொள்ள வேண்டும்; நம்மிடமுள்ள தீய முறைகள் அனைத்தையும் தூர உதறித் தள்ளிவிட வேண்டும். அவர்கள் நம்மைத் தாக்கினால், அடிக்கு அடி கொடாமல் தீரர்களாகச் சாகப் பழக வேண்டும். பெண்டு பிள்ளைகளைப் பின்னே விட்டுவிட்டு ஓடி, கோழைகளைப் போல் சாகாமல் முகமலர்ச்சியுடன் அடியை ஏற்று, சாவை ஆலிங்கனம் செய்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கும் இதே யோசனைதான் சொல்லுவேன். எனினும், சாதாரணமாக முஸ்லிம்கள் துஷ்டர்கள் என்று வைத்துக் கொண்டு விட்டோமாதலால், இது அனாவசியம். முஸ்லிம்கள்

சண்டை போடுவார்கள், அதுவும் நன்ருகச் சண்டை போடுவார்கள் என்ற எண்ணம் பொதுவாக இருந்து வருகிறது. ஆதலால், ஹிந்துக்கள் தாக்கும்பொழுது எவ்வாறு எதிர்க்க வேண்டும் என அவர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. இதற்கு மாருக, அந்தத் தாக்குதல்களைப் பொறுத்துக்கொள்ளும்படி அவர்களை நான் கேட்டுக் கொள்ளவேண்டும். காலிகளை அடக்கி அமைதி நிலவச்செய்யும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும். ஹிந்துக்களைப் பிற விஷயங்களில் அபாயமானவர்கள் என முஸ்லிம்கள் நினைக்கலாம். பொருளாதாரத் துறையில் அபாயமானவர்கள் என நிச்சயமாக நினைக்கிருர்கள். பக்ரீத் தினத்தில் மதச் சடங்குகளில் ஹிந்துக்கள் தலையிடுவதைக் கண்டு அவர்கள் கலங்குகின்றனர். ஆனல் ஹிந்துக்கள் அடித்துவிடுவார்கள் என்கிற பயம் அவர்களுக்குக் கொஞ்சமும் கிடையாது. ஆதலால், அவர்களுக்கு இது மட்டும் சொல்லுவேன்: "தடி, அல்லது கத்தியைக்கொண்டு இஸ்லாமை நீங்கள் காக்க முடியாது. தடியை உபயோகிக்கும் காலம் மலையேறி விட்டது. பின்பற்றுகிறவர்களின் புனிதத் தன்மைதான் ஒரு மதத்தின் உரைகல். உங்கள் இளைஞர்களைக் காக்கும் பொறுப்பை நீங்கள் குண்டர்களிடம் விட்டீர்களானல், நீங்கள் இஸ்லாமிற்குப் பெரும் தீங்கு இழைத்தவர் ஆவீர்கள். இப்படியானல், பக்கிரிகளையும் அல்லாவை வணங்குபவர்களையும் கொண்டதாக இஸ்லாம் ஒருபோதும் இராது."

இதுவரைப் பொதுவாக யோசனை சொன்னேன். முஸ்லிம்கள், ஹிந்துக்களுக்காகப் பசுவைக் காப்பாற்ற வேண்டும். ஹிந்துக்கள் வட இந்தியாவில் முஸ்லிம்களை நடத்துவது போல் தீண்டாதவர்களாக நடத்தக்கூடாது என்று மௌலான ஹசரத் மோஹானி எனக்குச் சொன்னர். "இவ்விஷயத்தில் நான் பேரம் செய்யமாட்டேன். முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்காகப் பசுவைக் காப்பதும் தங்களுடைய கடமை என நினைத்தால், ஹிந்துக்கள் தங்களை எவ்வாறு நடத்திய போதிலும் பசுக்களைக் காக்கலாம். பசுவை முஸ்லிம்கள் காத்தாலும் சரி, கொன்ருலும் சரி, ஹிந்துக்கள் முஸ்லிம்களைத் தீண்டாதவர்களாகக் கருதக்கூடாது. இப்படிக் கருதுவது பாவம் என்று நான் சொன்னேன். மேலும் நான் அவரிடம் பின்வருமாறு கூறினேன்:

"ஹிந்துக்களிடையே உள்ள நான்கு சாதியார்களுக்குள் எப்படி தீண்டாமை என்பது இல்லையோ, அதுபோலவே ஹிந்து-முஸ்லிம்களிடையே தீண்டாமை இருக்கக்கூடாது. இவ்விஷயங்கள் மிகத் தெளிவான உண்மைகளாகும். ஹிந்து மதம், இஸ்லாமை, அல்லது ஹிந்துக்கள் அல்லாதவர்களை வெறுக்கக் கற்பிக்குமாயின், அது அழிந்து போக வேண்டியதுதான். ஒவ்வொரு சமூகமும் மற்ற சமூகங்களுடன் பேரம் எதுவும் செய்யாமல், முதலில் தன்னை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். பசுவைக் காப்பதற்காக முஸ்லிம்களுக்கு எதிராகப் பகையை வளர்ப்பது,

பசுவைக் கொல்ல நிச்சயமான வழியாகும். இது இரட்டைப் பாவம். ஹிந்து அல்லாதவர் ஒரு பசுவைக் கொல்லுவதால், ஹிந்து மதம் அழிந்துவிடாது. பசுக்காத்தல் ஹிந்து மதமே யானால், ஹிந்துவல்லாதவர் மீது பலாத்காரத்தைப் பிரயோகித்து, பசுவைக் காப்பது ஒருபோதும் ஹிந்து மதம் ஆகாது. ஹிந்துக்கள் இந்தியாவில் விரும்புவது சுயராஜ்யமேயன்றி, ஹிந்து ராஜ்யம் அல்ல. ஹிந்து ராஜ்யமாயிருந்தபோதிலும், சகிப்புத் தன்மை அதன் அம்சமாக இருந்தால், அதிலே முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடம் உண்டு. பலவந்தத்தினல் பசு வதையை நிறுத்தாமல், முஸ்லிம்களும் பிறரும் தாங்களாகவே பசு வதையை நிறுத்தினல், அது ஹிந்து மதத்தின் பெருமைக்குச் சான்ருக விளங்கும். ஆகையால், ஹிந்து ராஜ்யத்தைப்பற்றிக் கனவு காண்பதுகூட, தேசத் துரோகம் என்று நான் கூறுவேன்.

இனி, மேளத்தைப்பற்றிய சங்கடத்தைக் கவனிப்போம். ஒவ்வொரு நாளும் அந்தச் சங்கடம் அதிகமாகி வருகிறது. ஹிந்துக்கள் மேளம் வாசிக்க வேண்டிய கட்டாயமில்லை; ஆதலால், முஸ்லிம்களைப் புண்படுத்தாமலிருக்க மசூதிகளின் பக்கத்தில் அதை ஹிந்துக்கள் நிறுத்திவிடவேண்டும் என சூரத்திலிருந்து எனக்கு வந்த கடிதம் ஒன்று கூறுகிறது. இந்த நிருபர் நினைப்பதுபோல் பிரச்னை அவ்வளவு எளிதாக இருந்திருந்தால் நன்ருயிருக்கும். ஆனல், அது அவ்வளவு எளிதான விஷயம் அல்ல; அதற்கு நேர் மாருனதாகும். மேளமில்லாமல் ஒரு ஹிந்துச் சடங்குகூடச் செய்ய முடியாது. சில சடங்குகளுக்கு இடையருத மேளம் அவசியமாக இருக்கிறது. இங்கேகூட முஸ்லிம்களின் உணர்ச்சிக்குப் போதிய மதிப்பு அளிக்கலாம் என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சந்தர்ப்பங்களில் மேளம் குறைந்த சப்தமுடையதாயிருக்கலாம். ஆனல், இதெல்லாம் பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனநிலையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இவ்விஷயத்தில் அநேக முஸ்லிம்களுடன் நான் கலந்து பேசினேன். மசூதிக்கு அருகில் முஸ்லிம் அல்லாதார் மேளம் வாசிப்பதை முஸ்லிம்கள் தடுக்க வேண்டுமென இஸ்லாம் விதிக்கவில்லை. முஸ்லிம் அல்லாதவர் அப்படிச் செய்வது இஸ்லாத்திற்குக் கேடு விளைவித்துவிடாது. ஆகையால், மேளம் ஒரு போதும் சண்டைக்குக் காரணமாக இருக்கக் கூடாது.

அநேக இடங்களில் ஹிந்துக்கள் மேளம் வாசிப்பதை முஸ்லிம்கள் பலவந்தமாக நிறுத்த முயன்றிருக்கிருர்கள். இதை நிச்சயமாகச் சகிக்க முடியாது. மரியாதைக்கு விட்டுக்கொடுப்பதை, பலத்திற்காக விட்டுக் கொடுப்பதில்லை. மரியாதையான வேண்டுகோளுக்குப் பணிவது மதம்; பலத்திற்குப் பணிவது மத விரோதமாகும். முஸ்லிம்களின் அடிக்குப் பயந்து மேளத்தை ஹிந்துக்கள் நிறுத்தினர்களானல், அவர்கள் ஹிந்துக்களே அல்ல. எங்கு மசூதிக்கு அருகில் வெளிப்படையாக மேளத்தை நெடுநாளாக ஹிந்துக்கள் நிறுத்தி வந்திருக்கிருர்களோ, அங்

கெல்லாம் இப்பழக்கத்தை மாற்றக்கூடாது; இது பொது விதியாக இருக்கலாம். ஆனால், எங்கே தலையீடில்லாமல் மேளம் வாசித்து வந்திருக்கிறார்களோ, அங்கெல்லாம் இது தொடர்ந்து நடக்கும். எங்கே தொந்தரவு வருமோ, எங்கே வாதத்திற்கு இட மிருக்கிறதோ, அங்கெல்லாம் இரு சமூகத்தினரும் அவ்விஷ யத்தை மத்தியஸ்தர்களின்மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

நியாயஸ்தலம் எங்கு மேளத்தைத் தடை செய்திருக் கிறதோ, அங்கு ஹிந்துக்கள் சட்ட விரோதமாக அதைக் கைக் கொள்ளக்கூடாது; முஸ்லிம்களும் மேளத்தை நிறுத்தும்படி வற்புறுத்தக்கூடாது.

முஸ்லிம்கள் விட்டுக் கொடுக்க மறுக்கும் இடங்களிலும், ஹிந்துக்கள் முஸ்லிம்களின் பலாத்காரத்தை எதிர்பார்க்கும் இடங்களிலும், நியாய ஸ்தலம் தடை செய்யாத இடங்களிலும், ஹிந்துக்கள் மேளத்துடன் ஊர்வலம் சென்று, எதிரி கொடுக்கும் அடிகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த ஊர்வலத்தைச் சேர்ந்தவர்கள், அல்லது மேள கோஷ்டியினர் அனைவரும் இப்படித் தங்களைத் தாங்களே தியாகம் செய்து கொள்ள வேண்டும். இதன்மூலம் அவர்கள் தங்கள் சுயமதிப்பை யும் மதத்தையும் பாதுகாத்துக்கொண்டவர்கள் ஆவர்.

இத்தகைய ஆன்ம பலம் இல்லாத ஹிந்துக்கள் தற்காப் பிற்குப் பலாத்காரத்தை உபயோகிக்கலாம்; எதிர்க்காமல் சாவது அல்லது எதிர்த்து நின்று சாவது இவ்விரண்டில் ஏதாவது ஒன்றுதான் வழி என்று இருக்குமிடங்களில், ஒரு கட்சியும் நியாய ஸ்தலத்திற்குச் செல்ல நினைக்கக்கூடாது; அரசாங்க உதவி யையும் நாடலாகாது. ஏதாவது ஒரு கட்சி உதவியை நாடினாலும், மற்றக் கட்சி விலகி நிற்கவேண்டும். நியாய ஸ்தலங்களுக்குப் போவதைத் தவிர்க்க முடியாவிட்டால், பொய்ச் சாட்சியமாவது சொல்லாமல் இருக்கவேண்டும்.

இரு கட்சிகளிலும் மனமார அடி கொடுத்து அடி வாங்கிக் கொண்ட பிறகு கோபம் தணிந்து அமைதியான நிலையை அடைய வேண்டும்; வெளி உதவியை நாடக்கூடாது. பழி வாங்கும் எண்ணம் எஞ்சியிருக்கக்கூடாது. இதுதான் கௌரவமான யுத்தத்தின் விதியாகும்.

ஒரு தெருவிலிருந்து இன்னொரு தெருவிற்குச் சண்டையை எந்நிலையிலும் கொண்டு போகக்கூடாது. பெண்கள், வயது முதிர்ந்தோர், அங்கவீனர், குழந்தைகள், சண்டையில் ஈடு படாதவர் இவர்களில் எவரும் கலகத்தால் கஷ்டப்படும்படி நேரக்கூடாது. இவ்விதிகளை அனுசரித்தால், சண்டை சுத்த வீரனின் செயல் எனக் கருதப்படும்.

குஜராத்திலுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சித்தம் கலங்காது சமாதானத்தைக் காப்பார்களென நம்புகிறேன். உம்ரேத்தில் தொந்தரவு வரலாம் எனப் பயப்படுவதும் நியாய மில்லை. அங்குள்ள இரு சமூகங்களும் கூடி யோசித்து, வேற்று மைகளை அமைதியாகத் தீர்த்துக்கொள்ளுவார்களாக.

சாகப் பயந்து உற்ருர் உறவினரையும், கோவில்கள் கொட்டு முழக்கங்களையும், அவை எக்கேடு கெட்டாலும் கெடட்டுமென்று விட்டுவிட்டு ஓடுவது மதமல்ல; அது கோழைத்தனமும் பேடித் தனமும் ஆகும். ஆண்மைக்கு அழகு அகிம்சை; கோழை அதைப் பற்றி அறியான்.

சராசரி ஹிந்து கோழையில்லாமலும், சராசரி முஸ்லிம் துஷ்டராக இல்லாமலும் இருக்கும் நிலை ஏற்பட இன்னும் சில காலம் ஆகும். இதற்குள் இரு சாராருக்குள்ளும் இருக்கும் அறிவாளிகள் சங்கடம் நேரும்பொழுதெல்லாம் தகராறுகளை மத்தியஸ்தத்திற்கு விட்டுத் தீர்த்துக்கொள்ளவேண்டும். அவர் களின் நிலை தர்ம சங்கடமானது. எனினும், அமைதியை நிலை நாட்ட அவர்கள் தங்கள் சக்தி முழுவதையும் செலவிட வேண்டும்.

—'எங் இந்தியா' - 18—9—1924.

# 19

## தைரியசாலிகளாக எப்படி மாற்றுவது ?

நான் டில்லிக்குச் சென்றுகொண்டிருந்தபோது, எனக்கு வந்த கடிதம் ஒன்றை வாசித்தேன். அதில் இரண்டு மூன்று இலக்கணப் பிழைகளைத் திருத்தியதைத் தவிர வேறு ஒரு வார்த் தையைக்கூட விடாமல் கீழே கொடுத்திருக்கிறேன் :

"நாகபுரி முஸ்லிம்களுக்கு வெறி பிடித்துவிட்டது. நான் ஒரு ஹிந்து வாக இருந்தும்கூட, நாகபுரி ஹிந்துக்களின் கிளர்ச்சியில் நான் எத்தகைய பங்கும் எடுத்துக் கொள்ளாமல் மிகவும் ஜாக்கிரதையாக ஒதுங்கி இருந்து வந்திருக்கிறேன். அகிம்சை, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை இரண்டிலும் நான் நம்பிக்கை உடையவன். இன உணர்ச்சி எனக்கு இல்லை என்பதைத் தாங்கள் நம்பலாம். ஆனால், மற்றவிடங்களைப் போல் நாகபுரியிலும் முஸ்லிம்கள் செய்த அட்டூழியங்கள், எனது நம்பிக்கையைக் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கி யிருக்கின்றன. இதில் பரிதாபம் என்னவெனில், நாகபுரியில் உள்ள பொறுப்பு வாய்ந்த ஒரு முஸ்லிம்கூட அந்தச் செயல்களைப் பகிரங்கமாகக் கண்டிக்க வில்லை. தைரியசாலியான டாக்டர் மூஞ்சேயும், வீரர் உதராமும், அவர் களுடைய முயற்சியால் நிறுவப்பட்ட கோஷ்டிகளும் இல்லாவிட்டால், முஸ்லிம்களின் அட்டூழியங்கள் எவ்வளவு தூரம் போயிருக்கும் என்பது பற்றி யாரும் கூற முடியாது.

"அன்பில், பேரத்திற்கு இடமில்லை என்பதை நான் அறிவேன். எல்லாவற்றையும் கொடுத்துவிடுவதே அன்பாகும் என்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன் அன்பினால் தியாகங்களைச் செய்வதும், துன்பங்களை அனுபவிப்பதும் தன்னிச்சையாக இருக்க வேண்டுமேயன்றி, நிர்ப்பந்தம் காரணமாக இருக்கக்கூடாது என்பதையும் நான் மறுக்க முடியாது. ஆனால், ஹிந்துக்கள் தங்கள் பலம் காரணமாக, தங்கள் விருப்பம் காரணமாக விட்டுக் கொடுக்கவில்லை; தங்களுடைய பலவீனம் காரணமாகவும், வேண்டா வெறுப்புடனுமே விட்டுக் கொடுக்கிறார்கள். ஹிந்துக்கள், முஸ்லிம்களின் அடிமைகளாவதற்காகப் பிரிட்டிஷாரின் ஆட்சியில் உள்ள அடிமைத்தனத்தை உதறித் தள்ள முயற்சித்து வருகிறார்கள் என்றே என் மனத்திற்குத் தோன்றுகிறது. 'குல்பர்காவிற்கு வெறி பிடித்துவிட்டது' என்ற தலைப்பில் நீங்கள் எழுதிய மனதை உருக்கும் கட்டுரை, இவ்விஷயமாக உங்கள் உணர்ச்சியின் ஆழத்தை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

"எனினும் கோழைத்தனத்தைக் காட்டிலும் பலாத்காரமே மேல் என்று நீங்களே பல தடவைகளிலும் பிரகடனம் செய்திருக்கிறீர்கள். சராசரி முஸ்லிம் ஒரு துஷ்டர் என்றும், சராசரி ஹிந்து ஒரு கோழை என்றும் சில வாரங்களுக்கு முன் நீங்கள் 'எங் இந்தியா'வில் எழுதினீர்கள். அந்தோ! இது முற்றிலும் உண்மையாகும்! இல்லாவிடில், சிறுபான்மையோரான நாகபுரி முஸ்லிம்கள், மிகப் பெரும்பான்மையோரான நாகபுரி ஹிந்துக்களை அடிக்கடி எப்படித் துன்புறுத்த முடியும்? அப்பாவிகளான ஹிந்துக்களிடம் முஸ்லிம்களுக்கு மதிப்போ, அச்சமோ எதுவும் இல்லையென்பது முற்றிலும் உண்மையாகும். இது எப்படியாயினும், பலவீனர்களுக்கு இந்த உலகில் இடமில்லை. அவர்கள் ஒன்று பலவான்கள் ஆக வேண்டும், இல்லாவிடில் ஒழிந்துவிட வேண்டும். ஹிந்துக்கள் வாழ விரும்பினால், அவர்களிடையே கட்டுக்கோப்பு வேண்டும்; அவர்கள் பலத்துடன் விளங்கவேண்டும்; அவர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும்; தங்களுடைய தெய்வங்களுக்காகவும் தங்கள் பெண்மணிகளின் மானத்தைக் காக்கவும் உயிரை விடும் தெய்விகக் கலையை ஹிந்துக்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

"ஆனால், அவர்கள் படுமோசமான கோழைகள். அவர்கள் சம்பந்தப்பட்டவரையில் அகிம்சைக்குப் பொருளே இல்லை. அது, அவர்களுடைய இழிவான கோழைத்தனத்தை மூடி மறைக்கும் ஒரு போர்வையாகவே உபயோகப்படுகிறது. அவர்களிடம் அகிம்சையை உபதேசிப்பது, பஞ்சத்தால் அடிபட்டவர்களிடம மித உணவுப் பிரசாரம் செய்வதற்கு ஒப்பாகும்; பலவான்களாலேயே ஜீரணிக்க முடியாத உணவை ஒரு நோயாளி சாப்பிடும்படி செய்வதற்கு ஒப்பாகும். அவருக்கு அதனால் நன்மை ஏற்படாது. மிகுந்த ஆபத்தே ஏற்படும்.

"நீங்கள் இந்தத் தோரணையில் சிந்திக்க முற்பட்டால், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை நிரந்தரமாகவும் உண்மையாகவும் இருப்பதற்கு ஹிந்துக்கள் ஆண்மை உணர்ச்சியை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டு தீர வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? ஹிந்துக்கள் தங்களுடைய கோவில்களையும், பெண்களின் கௌரவத்தையும் பாதுகாக்கக் கற்றுக்கொள்ள வேண்டாமா? பலவீனர்கள் தான் சமூகத்தின் பெரும் விரோதிகள் ஆவர். அவர்கள் தங்களை மாத்திரம் கெடுத்துக்கொள்ளுவதில்லை; பலவான்களையும் கெடுத்துவிடுகிறார்கள். தங்களைத் துன்புறுத்தும்படி

அவர்கள் பலவான்களை இழுக்கிறார்கள் அல்லவா? பலவீனம், பலவீனருக்கும் அவரைத் துன்புறுத்துவோருக்கும் கேடு விளைவிக்கிறது. அடிக்கு அடி கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஹிந்துக்கள் வஞ்சம் தீர்க்க முற்படாமல் இருக்கலாம். முஸ்லிம் பெண்களை மானபங்கம் செய்தோ அல்லது மசூதிகளை அசுத்தம் செய்தோ, இடித்தோ பழி வாங்காமல் இருக்கலாம். எனினும், அகிம்சை அவர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டதாக இருப்பதால், தவறு செய்வோருக்குச் சரியான பாடம் கற்பிக்கும்படி நீங்கள் அவர்களுக்கு ஆலோசனை கூற வேண்டாமா? அவர்கள் அகிம்சைத் தத்துவத்தை உணர்ந்து கொள்ளுமுன், பலாத்காரத்தைக் கைக்கொண்டு தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சக்தியை அவர்கள் அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டாமா? ஹிந்துக்களின் நன்மைக்கும், உண்மையான ஹிந்து-முஸ்லிம் நட்பிற்கும், சுயராஜ்யத்திற்கும் கூட அது வழியல்லவா?

"இத்தகைய சிந்தனைகள் நீண்ட காலமாக என் மனத்தைக் கிளறி வருகின்றன. இதைப்பற்றி எனக்குள் ஆலோசித்தேன். ஆனால், மேற்கண்ட கேள்விகளுக்குத் திருப்திகரமான பதிலை என்னால் காண முடியவில்லை. எனவே, வழி காட்டும்படி உங்களை நாடினேன். இவ்வளவு நீண்ட கடிதத்தை எழுதி உங்கள் நேரத்தை வீணாக்கியதற்காக என்னை மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன். இதற்கு விரைவில் 'எங் இந்தியா'வின் மூலம் உங்களுடைய பதிலை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

"என் கடிதத்தை வெளியிட்டாலும், என் பெயரை வெளியிடாமல் இருக்க விரும்புகிறேன்."

இக்கடிதம் எழுதியவரின் அந்தரங்க சுத்தி, கடிதத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தெளிவாகத் தெரிகிறது. அவரது வாதமும், பெரிதும் நியாயமாக இருக்கிறது. கடிதம் எழுதியவரின் யோசனைகளை அமலுக்குக் கொண்டு வரும் விஷயமாக ஆலோசிக்க முற்படும்போதுதான் எனக்குச் சிரமம் ஏற்படுகிறது.

சென்ற வாரம் நான் 'நவஜீவனி'ல் எழுதிய கட்டுரையொன்றில், சமூக ஒற்றுமை சம்பந்தமாக எனது வேலைத் திட்டத்தின் சுருக்கமான விவரங்களை* வாசகர்கள் காணலாம். குஜராத்தில் ஏற்பட்ட சங்கடமான நிலைமையைச் சமாளிக்கவும், ஹிந்து-முஸ்லிம் நண்பர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலாகவுமே அக்கட்டுரையை எழுதினேன்.

எனது தற்போதைய நிலைமை மிகப் பரிதாபகரமானதாகும். நாட்டிற்குச் சோதனை ஏற்பட்டுள்ள இச்சமயத்தில், தங்களுக்கு வழிகாட்ட ஆயிரக்கணக்கானவர்கள் என்னை எதிர்பார்க்கிறார்கள் என்று உண்மையாகச் சொல்லலாம். கிலாபத் கிளர்ச்சியில்

* காந்திஜி குறிப்பிடும் வேலைத் திட்ட விவரங்கள் அடங்கிய முக்கியமான கட்டுரை, 'ஆண்மைக்கு அழகு அகிம்சையே' என்ற தலைப்பில் இந்தத் தொகுப்பின் முந்திய அத்தியாயம் ஒன்றில் வெளியாகியிருக்கிறது. ஹிந்து-முஸ்லிம் வேற்றுமை தீருவதற்கான பல யோசனைகள் அதில் அடங்கியிருப்பதால், குஜராத்தியில் காந்திஜி எழுதிய அக்கட்டுரையை அவரே ஸ்ரீ மகாதேவ தேசாயைக்கொண்டு மொழிபெயர்த்துப் பிரசுரிக்கும்படி செய்தார்.

நான் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டுள்ளேன். பதிலுக்கு எதுவும் கேட்காமலேயே கொடுப்பது என்ற சித்தாந்தத்தை நான் தயக்கமின்றியும், அச்சமின்றியும் பிரகடனப்படுத்தி வந்திருக்கிறேன். அவ்விஷயமாக எனது வாதத்தில் குற்றம் குறை இருப்பதற்கில்லை. 'தற்போதைய நிலையில் உங்கள் வாதம் பொருத்தமானதா? கொடுப்பதற்கு ஹிந்துக்களிடம் என்ன இருக்கிறது? நிறைய இருந்தால் அல்லவா ஒருவர் பதிலுக்கு எதுவும் வாங்கிக் கொள்ளாமல் கொடுக்க முடியும்?' என்று கடிதம் எழுதியவர் கேட்டிருக்கிறார்.

இப்போது இவ்விஷயத்தைப் பார்க்கலாம்.

சராசரி ஹிந்து ஒரு கோழை என்பதை இருவரும் ஒப்புக் கொண்டுள்ளோம். அவரை ஒரு தைரியசாலியாக எவ்விதம் மாற்றுவது? உடல் தசைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர் தைரியசாலியாவதா அல்லது ஆன்ம பலத்தின் மூலம் அவர் தைரியசாலியாவதா? 'பலவீனர்களுக்கு இந்த உலகத்தில் இடமில்லை' என்று அந்த நிருபர் கூறுகிறார். உடல் பலம் இல்லாதவர்களையே பலவீனர்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார் என எண்ணுகிறேன். அப்படியானால், அந்தச் சித்தாந்தம் சரியல்ல. ஏனெனில், மனிதனைக் காட்டிலும் அதிக உடல் பலம் உள்ள மிருகங்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்படியிருந்தும், மனிதன் வாழ்ந்து வருகிறான். உடல் பலம் வாய்ந்த பல இனத்தினர் மடிந்து மறைந்து விட்டார்கள்; இன்றுகூட சில இனத்தினர் மறைந்து வருகிறார்கள். எனவே, மனிதன் சம்பந்தப்பட்டவரையில், 'மனோ பலம் இல்லாதவர்களுக்கு இந்த உலகத்தில் இடமில்லை' என்பதே சித்தாந்தமாக இருக்க வேண்டும்.

இனி நான் பின்வாங்குவது என்ற பேச்சிற்கே இடமில்லை. அகிம்சை, எல்லா மதங்களுக்கும் பொதுவான ஓர் அம்சமாகும். சில மதங்கள் மற்றவைகளைக் காட்டிலும் அதிக அகிம்சையைக் கைக்கொள்ள வேண்டுமென்றுதான் வற்புறுத்துகின்றன. அதிக அகிம்சை கூடாது என்று ஒரு மதமாவது கூறவில்லை. ஆனால், அகிம்சை அகிம்சையாக இருக்க வேண்டுமேயன்றி, கோழைத்தனத்தை மறைக்கும் போர்வையாக இருக்கக்கூடாது என்பதை நாம் நிச்சயம் செய்துகொள்ள வேண்டும்.

இப்பிரச்னையையொட்டி நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டுமாயின், தெருவில் உள்ள சாதாரண மனிதனைப் பற்றி நாம் சிந்திக்கக்கூடாது. அவனுக்குப் பின்னே இருந்துகொண்டு, அவனை ஆட்டிவைக்கும் நம்மைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும். பயம் காரணமாக நாம் எதுவும் செய்யக்கூடாது, இவ்விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இருவர் சேர்ந்து ஒருவருக்கொருவர் போராடுவதை நான் அறவே வெறுக்கிறேன். எனினும், அதிலும் ஒரு விசித்திரமான அம்சம் இருக்கத்தான் செய்கிறது. அந்த அம்சத்தை முன்னணிக்குக் கொண்டு வரு

வதில் நான் இப்போது ஈடுபட்டிருக்கிறேன். பெரிய சகோதரருடன்* (Big Brother) மற்போரில் ஈடுபட நான் ஆசைப்படுகிறேன். ரத்தக்களரியின்றி ஹிந்து–முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட சந்தர்ப்பம் இல்லை என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்துவிட்டால், நாங்கள் இருவரும்கூட அமைதியாக வாழ்வதற்கு நாங்கள் இசையமுடியா விட்டால், பிறகு நான் என்னுடன் மற்போர் செய்யும்படி பெரிய சகோதரரை அழைக்கவேண்டும். அவர் அவருடைய தடித்த விரல்களால் என்னை முறுக்கி அடித்து நொறுக்கிவிடுவார் என்பதை நான் அறிவேன். அன்றுதான் ஹிந்து மதம் விடுதலை பெறும். அவ்விதமின்றி, ஒரு பூதத்திற்கு உள்ள பலம் அவருக்கு இருந்தும்கூட, அவரை நான் கொல்லும்படி அவர் விட்டுவிடுவாராயின், இந்தியாவில் இஸ்லாம் விடுதலை பெறும். முஸ்லிம்கள் செய்த அக்கிரமங்களுக்கெல்லாம் அவர் பிராயச்சித்தம் செய்தவராவார்.

நான் வெறுப்பது என்னவெனில், இரு கட்சிகளிலும் உள்ள குண்டர்கள் போட்டி போடுவதேயாகும். அத்தகைய பலப் பரீட்சையை அடிப்படையாகக்கொண்டு ஏற்படும் எத்தகைய சமாதானமும் இறுதியில் துவேஷத்திலேயே வந்து முடியும். ஹிந்துக்களின் கோழைத்தனத்தைப் போக்க வேண்டுமாயின், ஹிந்துக்களில் கல்வியறிவுள்ள பகுதியினர் குண்டர்களை எதிர்த்துப் போராட வேண்டும். நாம் தடிகளையும் களங்கமற்ற மற்ற ஆயுதங்களையும் உபயோகிக்கலாம். அவற்றை உபயோகிக்க எனது அகிம்சை அனுமதிக்கும். அந்தப் போராட்டத்தில் நாம் கொல்லப்படலாம். எனினும், அத்தகைய சம்பவம் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் இரு சாராரையும் சீர்திருத்தும். அது ஒரு விநாடியில் ஹிந்துக்களின் கோழைத்தனத்தைப் போக்கிவிடும்.

இப்போதுள்ள நிலைமையில் ஒவ்வொரு பிரிவினரும் அவரவர்களைச்சேர்ந்த குண்டர்களின் அடிமைகளாகவே இருப்பார்கள். அதன் பொருள் என்னவெனில், ராணுவ பலம் உள்ளவர்களே ஆதிக்கம் செலுத்துவார்கள். சிவில் ஆட்சியின் ஆதிக்கத்திற்காக இங்கிலாந்து போர் செய்து வெற்றி பெற்றது, வாழ்வும் பெற்றது. லார்டு கர்ஸான் நமக்கு அதிகமாகத் தீங்கு இழைத்தார். எனினும், ராணுவ ஆட்சியை எதிர்த்துச் சிவில் ஆட்சியின் ஆதிக்கத்தை அவர் ஆதரித்தது முற்றிலும் சரியாகும்.* அது நிச்சயமாக அவரது தைரியத்தையே காட்டுகிறது. ரோம் நகர் ராணுவ சிப்பாய்களின் ஆட்சியில் சிக்கியதால், அது வீழ்ச்சி அடைந்தது.

---

* அதிகமாக உடல் வளர்ச்சி பெற்றிருந்த மௌலானா ஷவுகத் அலியையே காந்திஜி 'Big Brother," அதாவது பெரிய சகோதரர் என்று குறிப்பிடுவது வழக்கம்.

* லார்டு கர்ஸான் பிரபல பிரிட்டிஷ் ராஜதந்திரியும், நிர்வாக நிபுணரும் ஆவார். அவர் பிரிட்டிஷ் மந்திரி சபையில் 1891-இல் உதவி மந்திரியாகவும், 1895-இல் உதவி வெளிநாட்டு மந்திரியாகவும், 1915-16–இல் வெளிநாட்டு மந்திரியாகவும் இருந்தார். 1899-இலிருந்து 1905 வரையில் லார்டு கர்ஸான் இந்தியா வைஸ்ராயாக இருந்தார். அவர் செய்த வங்காளப் பிரிவினை காரணமாக இந்தியா முழுதும் மக்களி

குண்டர்களின் தயவால் எனது மதத்தைப் பாதுகாக்க நேரலாம் என்ற வெறும் எண்ணம்கூட, என் ஆன்மாவையே முற்றிலும் வெகுண்டு எழும்படி செய்கிறது. தற்போது நான் ஹிந்துக்களைப் பற்றி மாத்திரமே குறிப்பிட விரும்புகிறேன். தங்களுக்கும் தங்களுடைய கோவில்கள், பெண்டு பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க குண்டர்களின் உதவியை நாடவேண்டாமெனச் சிந்திக்கும் ஹிந்துக்களை நான் மரியாதையுடனும் மனப்பூர்வமாகவும் எச்சரிக்கிறேன். உடல் பலவீனமான அவர்கள், தாங்கள் இருக்குமிடத்திலேயே இருந்துகொண்டு போராடியவண்ணமோ, அல்லது போரிடாமலேயோ உயிர் விடுவதற்கு உறுதிகொள்ள வேண்டும். அமைதி ஏற்படும்படி செய்யும் முயற்சியில் ஜம்னலால்ஜியும் அவரது சகாக்களும் உயிர் விட்டிருந்தால், அவர்களுடைய மரணம் அற்புதமானதாக இருந்திருக்கும். டாக்டர் மூஞ்சேயோ அல்லது நானோ கோவில்களைப் பாதுகாக்கும் முயற்சியில் இறந்திருந்தால், அது மிகச் சிறந்த மரணமாக இருந்திருக்கும். ஆன்மாவின் தைரியம் என்பது அதுதான்.

ஆனால், நாம் செய்வதற்கு அதைக் காட்டிலும் குறைந்த வீரத்தனமுள்ள காரியங்களும் இருக்கின்றன. நாகபுரியைப் பற்றிய உண்மைகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அதைப் பற்றி நான் டாக்டர் மூஞ்சேயுடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறேன். டில்லியில் ஏற்பட்ட கலகத்திற்கு மூல காரணங்கள் என்ன என்பதை எனக்குத் தெரிவிக்கும்படி நான் வேண்டிக்கொண்டிருக்கிறேன். நான் தனியாகவோ அல்லது வேறு சிலருடன் சேர்ந்தோ மத்தியஸ்தம் செய்துவைப்பதாகக் கூறியுள்ளேன். எனது விருப்பத்தை அவர்கள் இன்னும் தள்ளிவிடவில்லை. துரதிருஷ்டகரமான அக்கலகத்தைப் பற்றிய ஆதாரபூர்வமான விவரங்கள் இன்னும் தெரியவில்லை. எனினும், நான் நிதானம் இழந்துவிடவில்லை. ஒவ்வோரிடத்திலும், ஒவ்வொரு விஷயத்திலும் முஸ்லிம்கள்தான் குற்றவாளிகள் என்று கூறுவது எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. கலகத்திற்கு முதல் காரணம் என்ன என்பது எனக்குத் தெரியாது. இன்று இரு கட்சிகளையும் சேர்ந்த, எதற்கும் துணிந்த பத்திரிகைகள், வெகுளிகளான ஹிந்துக்கள், முஸ்லிம்களின் மனத்தில் விஷத்தைப் புகுத்தி வருகின்றன என்பதை நான் அறிவேன். தனிப்பட்டவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, இன்னும் அதிக விஷத்தைப் பரப்பி வருகிறார்கள் என்பதையும் நான் அறிவேன். கலக சம்பந்தமான நிகழ்ச்சிகள் உண்மைக்கு நேர் மாறாக மிகைபடுத்தப்படுகின்றன. இருள், சந்தேகம், சோர்வு முதலியவற்றால் உருவான இந்தக் கடலின் அடித்தளத்திற்குப்

டையே கொதிப்பு ஏற்பட்டதுடன், சுதேசி இயக்கமும் வலுப் பெற்றது. இந்தியாவில் பிரிட்டிஷ் ராணுவ தளபதியாக இருந்த லார்டு கிச்னருக்கும் தமக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக லார்டு கர்ஸான் வைஸ்ராய் பதவியைத் துறந்து, இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார். ராணுவ ஆதிக்கத்தை எதிர்த்து லார்டு கர்ஸான் வைஸ்ராய் பதவியை ராஜிநாமா செய்ததையே, காந்திஜி மேலே குறிப்பிட்டுள்ளார்.

போய் உண்மையைக் கண்டுபிடிக்க நான் சகல முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறேன். அங்கே ஏற்பட்டுள்ள தகராறு, மக்கள் நலனுக்கான பொது அலுவல்களையெல்லாம் சீர் குலைத்து விடும்போல் தோன்றுகிறது. எனவே, அத்தகராறு தீருவதற்கான வழியைக் கண்டுபிடிப்பதற்கு அத்தியாவசியமான பூர்வாங்கமுறை, இன்றுவரை நிகழ்ந்துள்ள உண்மைச் சம்பவங்களை அறிந்துகொள்ளுவதேயாகும். தகராறு தீருவதற்கான வழியைக் காணவேண்டும் என்ற என்னுடைய பேரார்வமே, சுயராஜ்யக் கட்சியினருக்கும், சம்பந்தப்பட்ட மற்றவர்களுக்கும் விட்டுக் கொடுக்கும்படி என்னை வற்புறுத்திய காரணங்களில் முக்கியமானதாகும்.

—'எங் இந்தியா' – 18–9—1924.

பகுதி ஏழு

# சமூக ஒற்றுமைக்காகக் கடுந்தவம்

## 1

## சகிக்கமுடியாத சம்பவங்கள்

[1924-ஆம் ஆண்டில் இந்தியாவின் பல பகுதிகளிலும் ஹிந்து-முஸ்லிம் கலகங்கள் மூண்டன. கலகங்கள் ஏற்படாமல் தடுத்து, ஹிந்து-முஸ்லிம் வேற்றுமைகளைத் தீர்ப்பதற்காகக் காந்திஜி பெருமுயற்சி செய்தார். அவ் விஷயமாகவே 'எங் இந்தியா'வில் வாரந்தோறும் மனத்தை உருக்கும் கட்டுரைகளை எழுதினர். பல பொதுக்கூட்டங்களிலும் சமூக ஒற்றுமையைப் பற்றியே பேசினர். அவரது கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் நாடெங்கும் மக்களிடையே மிகுந்த உணர்ச்சியை உண்டாக்கின. எனினும், அவற்ருல் மக்கள் பலன் அடைந்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாருக, சமூகத் தகராறுகள் அதிகமாயின. அமேதி, ஷாம்பார், குல்பர்கா முதலிய இடங்களில் முஸ்லிம்கள் அங்குள்ள ஹிந்துக் கோவில்களில் அட்டூழியங்கள் செய்ய முற் பட்டனர். அதன் விளைவாகக் கலகங்கள் அதிகமாயின. அந்தக் கலகங்களுக் குச் சிகரம் வைத்தாற் போல், செப்டம்பர் மாதம் கோஹட்டிலிருந்து பயங்கர மான செய்திகள் வரத் தொடங்கின. அங்கே நடந்த ஹிந்து-முஸ்லிம் கலகத் தில் ஏராளமானவர்கள் பலியாயினர். லட்சக்கணக்கில் சொத்துக்களும் சேத மாயின. கோஹட்டில் இருந்த ஹிந்துக்கள் யாவரும் அந்நகரிலிருந்து வெளி யேறிவிட்டார்கள், இஸ்லாம் மதத்திற்கு விரோதமாக யாரோ ஒரு கவி புனைந்து, அதைத் துண்டுப் பிரசுரமாக வெளியிட்டதே கோஹட் கலகத்திற்குக் காரணம்.

கோஹட் நிகழ்ச்சிகள், காந்திஜியின் மனவேதனையை மிகவும் அதிக மாக்கிவிட்டன. "புகைந்துகொண்டிருந்த தீ கோஹட் நிகழ்ச்சிகளால் ஜ்வாலையாக மூண்டுவிட்டது. இதற்குப் பரிகாரம் ஏதாவது செய்து தீர வேண்டும். கோஹட் கலகங்களின் காரணமாக நான், தூக்கமின்றியும் வேதனை யுடனும் சென்ற இரண்டு தினங்களைக் கழித்தேன்'' என்ருர் காந்திஜி.

1924 செப்டம்பர் மாதம் 18-ஆம் தேதி, காந்திஜி மேலே குறிப்பிட்ட சம்பவங்களுக்குப் பிராயச்சித்தமாக 21 நாட்கள் உண்ணுவிரதத்தை மேற் கொள்ளத் தீர்மானித்தார். அவ்விஷயமாக, டில்லியில் உள்ள முகமது அலியின் ஜாகையிலிருந்து காந்திஜி விடுத்த முதல் அறிக்கையே கீழே கொடுக் கப்பட்டிருக்கிறது:]

சமீப கால சம்பவங்களை என்னால் சகிக்க முடியவில்லை என்னால் ஒன்றும் செய்ய முடியாதிருப்பது, மேலும் சகிக்க முடியாததாக இருக்கிறது. துன்பம் துடைக்க ஒருவனால் இயலாது போகும் சமயத்தில், அவன் உணவு மறுத்துப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென எனது மதம் கற்பிக்கிறது. எனக்கு மிகவும் நெருங்கிய உறவினர்கள் சம்பந்தமாக நான் இவ்வாறு செய்திருக்கிறேன். நான் சொல்லுவதும் எழுதுவதும் இரு சமூகங்களையும் ஒன்று சேர்க்காது என்பது வெளிப்படை. ஆகையால், இன்று தொடங்கி அக்டோபர் 6-ஆம் தேதி புதன் கிழமை முடிய 21 நாள் உபவாசத்தை மேற்கொள்ளுகிறேன். உப்புடனோ, உப்பில்லாமலோ தண்ணீர் குடிக்கும் உரிமையை மட்டும் வைத்துக்கொள்ளுகிறேன். இது ஒரு தவமும் பிரார்த்தனையும் ஆகும்.

ஒரு தவமென்றால், இதைப்பற்றி நான் பொது மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதில்லை. ஆனால், இது நாளதுவரை ஒன்றாக உழைத்துவந்த ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தற்கொலை செய்துகொள்ள வேண்டாமெனப் பிரார்த்தனைசெய்யும் வகையில் இதைப் பொதுமக்களுக்கு வெளியிடுகிறேன். ஆங்கிலேயர்கள் உள்பட எல்லாச் சமூகங்களின் தலைவர்களையும் மதத்திற்கும் மனித இனத்திற்கும் இழுக்கைத் தரும் இச்சண்டையைத் தீர்ப்பதற்குக் கூடும்படி மரியாதையுடன் வரவேற்கிறேன். கடவுளை அரியாசனத்திலிருந்து அகற்றிவிட்டதுபோல் தோன்றுகிறது. நாம் நமது இதயபீடத்தில் அவரை முந்திய நிலையில் இருத்துவோமாக.

—'எங் இந்தியா' – 18—9—1924

## 2

# கடவுள் ஒருவரே

[காந்திஜி உண்ணாவிரதம் இருந்தபோது படுத்தவண்ணம் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். செப்டம்பர் 25-ஆம் தேதி வெளியான 'எங் இந்தியா' முழுதும் அவர் எழுதியதேயாகும். உண்ணாவிரதத்தின் இரண்டாவது நாள் காந்திஜி, "கடவுள் ஒருவரே" என்ற தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதினார். நாலாவது நாள், 'நமது கடமை' என்று ஆதி மலைவாசிகளுக்காக ஒரு கட்டுரை எழுதினார். ஆறாவது நாள், 'வேலை இல்லை; வோட் இல்லை' என்ற மகுடத்தின் கீழ் ஒரு தலையங்கம் எழுதினார். ஹஸரத் மோஹானி காந்தியிடம் காட்டிய சோவியத் ருஷ்யாவின் அரசியல் திட்டத்தில் இருந்த ஒரு கவர்ச்சியான ஷரத்தைக் குறிப்பிட்டே காந்திஜி அந்தத் தலையங்கத்தை எழுதினார். 'எங் இந்தியா' ஆசிரியர் பொறுப்பையெல்லாம் நிறுத்தி

வைக்கும்படி டாக்டர்கள் காந்திஜிக்கு ஆலோசனை கூறினர். காந்திஜியின் உடல் மிகவும் பலவீனமாவதற்கு முன், 'உண்ணாவிரதத்தைப் பற்றிய அனைத்தும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். உண்ணாவிரதத்தின்போது காந்திஜி எழுதிய கட்டுரைகளில் சில இந்தப் பக்கத்திலிருந்து தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.]

* அவனுடை நாமம் சொல்ல வல்லாரார்?
அவனுள னென்பதை அறிந்தே னென்று
சொல்லுவ தறிந்து சொல்ல வல்லாரார்?
உள்ளம் உணர்ந்து கள்ளம் அறிந்து
உருகும் நெஞ்சை இரும்பாய் மாற்றித்
தாமே தமக்குத் தறுகண ராகி
அவனை நம்பேனென அறைய வல்லாரார்?
சகலமும் தாங்கும் சர்வ வியாபிதான்
உன்னில் இலனோ? என்னில் இலனோ?
உள்ளே அடக்கி உயக் கொண்டிலனோ?
தானே தன்னையும் தழுவிநின் றிலனோ?
வானை வளைத்து நாம் வாழும் உலகை
மன்னிட வைத்து மகிமை செய்திலனோ?
அண்ட வெளியிலே அருள் நகை காட்டி
விண்மீன் கோடி கண்ணிமையாது
என்றும் நமக்கு ஏமம் புரியும்
உன்வழிக் குள்ளு டுருவுகில் லேனோ?
உன்னைச் சுற்றியும் உனக்குள்ளேயும்
காணும் பொருளாய்க் காணாப் பொருளாய்
ஓயாச் சக்தியாய் உணரா மர்மமாய்
இயங்கி இலங்குவ தெல்லாம் உந்தன்
மதியில் நெஞ்சில் பதியவில்லையோ?
அதனைக் கொண்டுன் அகமெலாம் நிரப்பிடு.
நெஞ்சம் உணரும் நித்யானந்தம்
தன்னில் மூழ்கித் தன்னை மறந்து
இயங்கிடும் போதில் எண்ணியபடி நீ
எப்பெயரிட்டும் அழைத்திடு அதனை
இன்பம் இதுதான் என்றிடுவா யோ!
இதயம்! அன்பு! இறை யென்பாயோ!
யானோர் நாமம் இயம்பிட அறியேன்!

---

* இந்தக் கவிதை, உலகப் பிரசித்தி பெற்ற ஜெர்மன் கவி கெதே எழுதிய 'பாஸ்ட்' என்ற புகழ் பெற்ற நாடகத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். அவர் எழுதிய கவிதைகளில் 'பாஸ்ட்' தான் சிகரம் போன்றது. 1749-ஆம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்து 1832-இல் அமரரான கெதே மாபெரும் ஜெர்மன் கவி மாத்திரமல்ல, விஞ்ஞானியும், தத்துவ ஞானியும் ஆவார்.

எல்லாம் உணர்வே எல்லாம் அதுவே!
ஓதும் பெயரெலாம் ஓசையும் புகையும்
சுவர்க்கமதனில் சுடர்விடும் சோதியைச்
சுற்றிச் சுழலும் பனித்திரை தானே.

சென்ற வியாழன் இரவு சில முஸ்லிம் நண்பர்கள் முன்னேற் பாட்டின் மீது என்னைச் சந்தித்தனர். இவர்கள் ஆர்வமுள்ள வர்களாகவும் கபடமற்றவர்களாகவும் தென்பட்டனர். சுத்திக் கும் சங்கதனுக்கும் எதிராக எவ்வளவோ சொன்னார்கள். இவ் வியக்கங்களைப் பற்றி ஏற்கனவே சொல்ல வேண்டியதை எல் லாம் நான் சொல்லிவிட்டேன். கருத்து வேற்றுமைக்கு இட மளிக்கும் எவ்விஷயத்தைப் பற்றியும் இப்புனித வாரங்களில் இயன்றவரை பேசாதிருக்க விரும்புகிறேன். அவர்கள் கூறிய பரிகார முறைகளையொட்டி வாசகர்களின் கவனத்தை இழுக்க விரும்புகிறேன். அவர்கள் சொல்லுகிறார்கள்: "ஹிந்து வேதங் களின் தெய்விகத் தன்மையை நாங்கள் நம்புகிறோம். நாங்கள் ஸ்ரீ கிருஷ்ணஜி மஹாராஜையும் ஸ்ரீ ராமசந்திரஜி மகாராஜையும் நம்புகிறோம். (அடைமொழிகள் அவர்களுடையவை) பின்னர், ஹிந்துக்கள் ஏன் குரானின் தெய்விகத் தன்மையை நம்பக் கூடாது? ஒரு கடவுளைத் தவிர வேறொரு கடவுள் கிடையாது. முகமது அவரது தீர்க்கதரிசி என்று ஏன் எங்களுடன் சேர்ந்து சொல்லக்கூடாது? எங்கள் மதம் எதையும் விலக்குவதில்லை. எல்லாவற்றையும் உள்ளடக்கிக்கொண்டுள்ளது."

இவர்கள் சொல்லும் பரிகார முறை அவ்வளவு சுலபமான தல்ல என்று இவர்களுக்குச் சொன்னேன். இவர்கள் குறிப்பிடு வது போன்ற பண்பட்ட உள்ளம் சிலருக்கு ஏற்றதாயிருக்க லாம். சாதாரண மனிதனுக்குப் பயன்படாது. பசுக் காத்த லும், மசூதியின் அருகில் மேளம் வாசித்தலும்தான் ஹிந்துக் களுக்கு ஹிந்து மதத்தின் சாரமாகும்; முஸ்லிம்களுக்கு, பசு வதையும் மேளத்தைத் தடை செய்தலும்தான் இஸ்லாமின் சாரம். ஆதலால், ஹிந்துக்கள் முஸ்லிம்களைப் பசு வதை செய் யக்கூடாதெனப் பலவந்தப்படுத்துவதை விட்டுவிட வேண்டும். முஸ்லிம்கள் ஹிந்துக்களை மேளம் வாசிக்கக் கூடாதென்று பலவந்தப்படுத்துவதை விட்டுவிட வேண்டும். பசு வதை, மேளம் வாசித்தல் இவற்றை ஒழுங்குபடுத்தும் பொறுப்பை, இரு சமூகத்தினரின் நல்லெண்ணத்திற்கு விட்டுவிட வேண்டும். சகிப்புத் தன்மை வளர வளர, ஒவ்வொரு பழக்கமும் வளர்ச்சி பெறும். ஆனால், வம்புக்கிடமான இந்த விஷயத்தைப்பற்றி இன்னும் விரிவாக எழுத நான் விரும்பவில்லை.

முஸ்லிம் நண்பர்கள் கொடுத்துள்ள பரிகாரத்தைப் பரி சோதனை செய்து நான் ஏற்றுக்கொள்ளத்தக்க பகுதிகள் எவை எனச் சொல்லவாவது விரும்புகிறேன். எனது இயல்பு ஹிந்து

மயமாய் இருப்பதால், நான் சொல்லப்போவது பெரும்பாலான ஹிந்துக்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கும்.

உண்மையில், சராசரி முஸ்லிம், வேதத்தையும் பிற ஹிந்து சாஸ்திரங்களையும் தெய்விகத்தன்மை உடையவை என்றும், கிருஷ்ணன் அல்லது ராமனைத் தீர்க்கதரிசிகள் அல்லது கடவுளின் அவதாரங்கள் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டார். குரானையும் நபிகள் நாயகத்தையும் இகழ்வது ஹிந்துக்களுக்கு ஒரு புதுப் போக்கான எண்ணமே. ஹிந்துக்களுள் பலர் நபிகள் நாயகத்தைப் பற்றிப் பயபக்தியுடன் பேசிவருவது எனக்குத் தெரியும். இஸ்லாமிற்குப் புகழ்சூட்டும் ஹிந்துப்பாட்டுக்கள் இருக்கின்றன.

பரிகாரத்தின் முதற் பகுதியைப் பார்க்கலாம். கடவுள், நிச்சயமாக ஒருவர்தான். அவருக்கு இரண்டாவதாகக் கடவுள் யாரும் இல்லை. அவர் அடிமுடியற்றவர்; எவரும் அறிய முடியாதவர்; மக்களுள் பெரும்பாலோருக்குத் தெரியாதவர்; எங்கும் உள்ளவர்; கண்ணில்லாது பார்க்கிறார்; காதுகளின்றிக் கேட்கிறார்; அவர் உருவற்றவர்; பிரிக்கமுடியாதவர்; படைக்கப்படாதவர்; தாய், தந்தை, குழந்தை ஏதுமற்றவர்; இருப்பினும், தன்னைத் தாயாகவும், தந்தையாகவும், துணைவியாகவும், குழந்தையாகவும் வணங்க இடம் தருபவர்; மரமாகவும் கல்லாகவும்கூடத் தன்னை வணங்க இடம் தருகிறார்; எனினும் அவர் இவை ஒன்றும் அல்ல; அவர் எளிதில் அகப்படாதவர்; உண்மையை அறிந்தவர்களின் உள்ளத்தே உள்ளவர்; ஆனால், எங்கும் நிறைந்த அவரது தன்மையை நாம் அறிய விரும்பாதபொழுது சித்தமும் செல்ல முடியாத தூரத்திலுள்ளவர். வேதத்தில் பல கடவுள்கள் பேசப்படுகின்றனர். வேறு மத சாஸ்திரங்கள் அவர்களைத் தேவதூதர்கள் என்று கூறுகின்றன. ஆனால், வேதங்கள் பாடிப் புகழ்வது ஒரே ஒரு கடவுளைத்தான்.

பைபிள், ஜெந்த்அவெஸ்தா, கிரந்த் சாகிப் முதலிய இன்னும் சுத்தமான பிற மதநூல்களைக் கடவுளால் அருளப்பட்டவை என ஏற்றுக்கொள்ளுவதில் எனக்கு எவ்வாறு ஆட்சேபமில்லையோ, அங்ஙனமே குரானையும் ஏற்றுக்கொள்ளுவதில் தயக்கமில்லை. மெய்ஞானத்தை வெளிப்படுத்துதல் எந்தத் தனிப்பட்ட தேசத்தினரின், அல்லது கூட்டத்தினரின் ஏகபோக உரிமையுமல்ல. ஹிந்து மதத்தைப்பற்றி எனக்கு ஏதாவது தெரியுமானால், சிறப்பாக எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுவது, சதா வளர்வது, சதா மாறியமைவது என்பதுதான் அது. கற்பனை, அனுமானம், சிந்தனை இவைகளுக்குத் தாராளமாக அது இடம் தருகிறது. குரானுக்கும் நபிகள் நாயகத்திற்கும் ஹிந்துக்களிடையே பயபக்தியைப் பெறுவதில் சிரமம் இருந்ததில்லை. ஆனால், வேதங்களுக்கும் அவதார புருஷர்களுக்கும் இதே பயபக்தியை முஸ்லிம்களிடையே பெறுவதில் சிரமம் இருக்கிறது.

தென் ஆப்பிரிக்காவில் எனக்கு ஒரு சிறந்த முஸ்லிம் கட்சிக்காரர் உண்டு. பாவம்! இன்று அவர் உயிருடன் இல்லை. கட்சிக்காரருக்கும் வக்கீலுக்கும் தொடர்பு நெருங்கி நட்பு ஏற்பட்டது. நாங்கள் இருவரும் அடிக்கடி மத சம்பந்தமாகப் பேசியிருக்கிறோம். அதிகம் படித்தவரில்லை யெனினும், எனது நண்பர் கூரிய அறிவுடையவர். குரான் முழுமையும் அவருக்குத் தெரியும். மற்ற மதங்களைப்பற்றியும் கொஞ்சம் அறிவார். நான் இஸ்லாமை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் அவருக்கு அக்கறை இருந்தது. "குரானுக்கும் நபிகள் நாயகத்திற்கும் நான் முழு மரியாதை செலுத்த முடியும். வேதங்களையும் அவதார புருஷர்களையும் ஏன் புறக்கணிக்கும்படி கூறுகிறீர்கள்?" என்று நான் சொன்னேன். "நான் இப்போதிருக்கும் நிலைக்கு என்னைக் கொண்டு வந்தவை அவைதான். பகவத் கீதையும் துளசி ராமாயணமும் எனக்குப் பெரும் ஆறுதலளிக்கின்றன. கிருஷ்ணனின் கீதையும் துளசிதாசரின் ராமாயணமும் என்னை உருக்குவதைப் போல், குரான், பைபிள் இன்னும் உலகத்திலுள்ள பிற மத நூல்கள், இவைகளிடத்தில் எனக்கு எவ்வளவோ மரியாதையிருப்பினும், உருக்குவதில்லை என்பதை நான் வெளிப்படையாக ஒத்துக்கொள்ளுகிறேன்" என்றேன்.

நண்பர் சலிப்படைந்தார். என்னிடம் ஏதோ கோளாறு இருக்கிறதென்று சொல்லவும் அவர் தயங்கவில்லை. இவருடைய விஷயம் ஏதோ தனிப்பட்டதல்ல. இதற்குப் பிறகு இம்மாதிரி எண்ணம்கொண்ட பல முஸ்லிம்களைச் சந்தித்திருக்கிறேன். எனினும், இது மறையும் நிலை என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஹரூன் அல் ரசீத், மாமுன் இவர்கள் காலத்தில் இஸ்லாம் உலக மதங்களுள் மிகவும் தாராள நோக்கமுடையதாக இருந்தது என்பது நீதிபதி அமீர் அலியின் கருத்து. இதை நான் நம்புகிறேன். அக்காலத்தில் குருமார்களின் இவ்விசால நோக்கிற்கு எதிர்ப்பும் இருந்தது. எதிர்த்தவர்களிடையே மிகப் படித்தவர்களும், திறமைசாலிகளும், செல்வாக்குடையவர்களும் இருந்தார்கள். தங்களுடைய திறமையால் இஸ்லாமின் தாராள நோக்குடைய ஆசாரியர்களையும் தீர்க்கதரிசிகளையும் இவர்கள் அமுக்கிவிட்டனர். இந்தியாவில் நாம் இன்னும் அந்த எதிர்ப்பின் பலனை அனுபவிக்கிறோம். குறுகிய மனப்பான்மை, சகிப்பின்மை இவற்றிலிருந்து பரிசுத்தமடைய இஸ்லாமில் போதுமான சக்தியிருக்கிறது என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. நண்பர்கள் குறிப்பிட்ட பரிகார முறையை மக்கள் சர்வ சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் காலத்தை நாம் வெகு வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் நமக்குத் தேவை ஒரு மதம் அல்ல; ஆனால், பல மதங்களைப் பின்பற்றுபவர்களிடையே மரியாதையும் சகிப்புத் தன்மையும் இருக்கவேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டுமேயல்லாது, உயிரற்ற ஒருமையல்ல. சம்பிரதாயங்கள், பரம்பரைப் பழக்கங்கள், சீதோஷ்ண நிலை முதலிய மற்ற சூழ்நிலைகளின் பலா

பலன்களை வேரறுக்க முற்படுவது இறுதியில் தோல்வியடைந்தே தீரும் என்பது மாத்திரமல்ல, அது பாவமும் ஆகும். மதங்களின் ஆன்மா ஒன்றே. ஆனால், அது பலவித உருவமுள்ள உறைகளில் வைக்கப்பட்டிருக்கிறது. ஊழிக்காலம் வரைக்கும் இந்த உருவ வேறுபாடுகள் இருந்து வரவே செய்யும். அறிவாளிகள், புறத்தோலைப் புறக்கணித்துவிட்டு உள்ளே இருக்கும் அதே ஆன்மாவைக் காண்பார்கள். தாம் கற்பனை செய்யும் இஸ்லாம் மட்டுமே உலகில் நிலவவேண்டுமென்கிற முஸ்லிம்களின் கனவைப் போலவே, இஸ்லாம், கிறிஸ்தவம், அல்லது ஜொராஷ்டிர மதத்தை இந்தியாவை விட்டு விரட்ட வேண்டுமென ஹிந்துக்கள் எதிர்பார்ப்பதும் அசம்பாவிதமானது. ஒரு கடவுளிலும், முடிவிலாத் தொடர்பில் வரும் அவரது தீர்க்கதரிசிகளின் வம்சத்திலும் கொண்டுள்ள நம்பிக்கை இஸ்லாமிற்குப் போதுமானதென்றால், நாம் அனைவரும் முஸ்லிம்கள் தான். ஆனால், அதே சமயத்தில் நாம் அனைவருமே ஹிந்துக்களும் கிறிஸ்தவர்களும் ஆவோம். உண்மை, தனிப்பட்ட மத நூலின் ஏகபோகச் சொத்தல்ல.

— 'எங் இந்தியா' - 25—9—1924

# 3

# உதவியின்மை; நம்பிக்கையின்மை அல்ல

உபவாசத்தைப்பற்றிய எனது குறிப்பில் "என்னுடைய நம்பிக்கையின்மையை இன்னும் சகிக்க முடியவில்லை!" என்று நான் கூறியதாக வெளிவந்திருக்கிறது. எனது அறிக்கை "உதவியின்மை"யைக் குறிப்பிடுகிறது. நம்பிக்கையின்மையை அல்ல. கடவுளின்மீது கடுகத்தனையாவது நம்பிக்கையுள்ளவன் நம்பிக்கை இழப்பதில்லை; சத்தியம் வெற்றியடையும் என்பதில் அவனுக்கு எப்போதும் நம்பிக்கை உண்டு. பக்தன் பொய்மையை விரும்புவதில்லை. ஆதலால், நம்பிக்கையை ஒருபோதும் இழக்க மாட்டான். இதற்கு மாறாக, இருள் சூழ்ந்த காலத்திலும் அவனுடைய நம்பிக்கை ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. ஆனால், எனது நிர்க்கதியான நிலையை வெளிப்படையாகத் தள்ளிவிட முடியாது. இதை நான் ஒத்துக்கொள்ள வேண்டும். 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை'' என்பது அழகிய தமிழ்ப் பழமொழியாகும். இதன் உண்மை இன்றுபோல் என்றுமே எனக்கு இவ்வளவு தெளிவாக விளங்கியதில்லை. கடவுள், மனிதனின் சக்தியை எல்லைக்குட்படுத்தி யிருக்கிறார். ஏராளமான பொதுமக்களை நடத்துவதும், அவர்களுடன் பழகுவதும், அவர்களுக்காகப்

பேசுவதும், செய்வதும் அவருக்கு விளையாட்டான காரியமல்ல. ஆதலால், சதா விழிப்புடனிருக்க வேண்டியிருக்கிறது. முற்றும் திக்கற்ற என் நிலையை உணர்ந்த பிறகே, நான் இக் கடைசி முடிவுக்கு வந்தேன் என்று வாசகர்களுக்கு உறுதி கூறுகிறேன். தனது ஐந்து வீரபுருஷர்களாலும் கைவிடப்பட்டதாக உணர்ந்த திரௌபதி, ஆதிமூலனை நினைத்து எங்ஙனம் அலறினாளோ, அங்ஙனமே நானும் கடவுளை நினைத்துக் கதறினேன். அவளது அலறல் வீண் போகவில்லை. உதடுகளால் உச்சரிக்கப்பட்டதாயிராமல், இதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். இப்படிப்பட்ட அழுகை ஒருவன் மீளாத துன்பத்தில் ஆழ்ந்துள்ளபோதுதான் உண்டாகும். என் அழுகை உபவாசமாக வெளிப்படுகிறது. இருக்கும் பிரச்னைகளுக்கு இது ஈடாகவே ஆகாது.

## 4

# உண்ணாவிரதத்தைப் பற்றிய அனைத்தும்*

தீர்க்காலோசனை செய்யாமல் இந்த உண்ணாவிரதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என வாசகர்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன். உண்மையில் ஒத்துழையாமை பிறந்ததிலிருந்தே என் உயிர் ஆபத்திலிருந்து வந்திருக்கிறது. கண்மூடித்தனமாக நான் அதில் ஈடுபடவில்லை. அதை ஒட்டிய ஆபத்துக்களைப் பற்றிப் போதிய அளவு முன்னெச்சரிக்கை எனக்கு இருந்தது. என் செய்கையில் ஒன்றுவது பிரார்த்தனையின்றிச் செய்யப்படுவதில்லை. மனிதன் தவறும் இயல்பு உள்ளவன். தன்னையே அவன் முழுதும் நம்ப முடியாது. பிரார்த்தனைக்குப் பதில் கிடைப்பதாக அவன் கருதுவது, ஒரு வேளை அவனது அகங்காரத்தின் எதிரொலியாக இருக்கலாம். பழுதிலா உதவி பெற வேண்டுமாயின், தீமை செய்ய இயலாத, களங்கமற்ற நெஞ்சத்தை மனிதன் பெற்றிருக்க வேண்டும். இந்தப் பாக்கியம் எனக்கு இருக்கிறதென்று நான் சொல்லிக்கொள்ள முடியாது. போராடி, முயன்று, தவறிக்கொண்டிருக்கும் அரைகுறையான நிலையிலுள்ளது எனது ஆன்மா. என் மீதும், பிறர் மீதும் சோதனைகள் செய்தே நான் உயர முடியும். கடவுளின் ஒருமையிலும், ஆகையால் மக்கள் இனத்தின் ஒருமையிலும் எனக்கு நம்பிக்கை உண்டு. உடல் பலவாயினும் என்ன? ஆன்மா ஒன்றே. வக்கிரத்தால்

* காந்திஜியின் உண்ணாவிரதத்தைப் பற்றி பாபு ராஜேந்திரப் பிரசாத், மௌலானா முகமது அலி, மௌலானா ஷவுகத் அலி, தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸ், சுவாமி சிரத்தானந்தர் முதலிய பல பிரமுகர்களும் அப்போது இந்திய மக்களுக்கு விடுத்த மனத்தை உருக்கும் அறிக்கைகளை இத்தொகுப்பின் பின்சேர்க்கைப் பகுதியில் காணலாம்.

சூரியன் கதிர்கள் பலவாகின்றன. ஆனால், அவை அனைத்திற்கும் மூலம் ஒன்றே. ஆகவே, அனைவரிலும் தீயவரின் ஆன்மாவிலிருந்து நான் என்னைப் பிரித்துக்கொள்ள முடியாது. எவரையும்விடப் பெரிய உத்தமனுடன் நான் சேர்ந்துகொள்ளுவதைத் தடுக்கவும் முடியாது. ஆகையால், நான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் என் சோதனையில் மனித இனம் முழுவதையும் உட்படுத்தியாக வேண்டும். சோதனை நடத்தாமலிருக்கவும் முடியாது. வாழ்க்கையே முடிவில்லாத சோதனைகளின் தொடர் தானே!

ஒத்துழையாமை ஆபத்தான சோதனை என்பது எனக்குத் தெரியும். அது இயற்கைக்கு முரணானது, தீமையானது, பாவமானது. எனினும், சாத்விக ஒத்துழையாமை சில சமயங்களில் தூய்மையான கடமையாகிறது. அநேக சந்தர்ப்பங்களில் நான் இதை நிரூபித்திருக்கிறேன். திரளான மக்களிடையே இதைப் புகுத்தும்போது, தவறுகள் பல நேரிட்டிருக்கலாம். ஆனால், கடுமையான பிணிகளுக்குக் கடுமையான சிகிச்சையே வேண்டியிருக்கிறது. அராஜகத்திற்கும், அதைவிட மோசமான நிலைக்கும் மாற்று, சாத்விக ஒத்துழையாமை ஒன்றேயாம். அகிம்சை முறையில் நடத்த வேண்டியிருந்ததால், என் உயிரைத் தராசில் ஈடாக வைக்க வேண்டியதாயிற்று.

இரண்டு ஆண்டுகளுக்கு முன், பார்வைக்கு நண்பர்களைப் போல் சேர்ந்து உழைத்த ஹிந்து-முஸ்லிம்கள், இப்போது சில இடங்களில் நாய்களையும் பூனைகளையும் போல் சண்டையிட்டு வருகிறார்கள். இதிலிருந்து அவர்கள் கையாண்ட ஒத்துழையாமை சாத்விகமானதல்ல என்பது முடிவாகத் தெரிகிறது. பம்பாய், சௌரி சௌரா, இன்னும் வேறு அநேக சிறு இடங்களிலும் இதன் அறிகுறிகளைக் கண்டேன். அதற்காகப் பிராயச்சித்தம் செய்தேன். தகுந்த பலன் கிடைத்தது. ஆனால், இந்த ஹிந்து-முஸ்லிம் பிணக்கைப் பற்றி நினைக்கக்கூட முடியவில்லை. கோஹட் கோரத்தைப் பற்றிக் கேட்டதும், இது சகிக்க முடியாததாகிவிட்டது. நான் சாபர்மதியிலிருந்து டில்லிக்குப் புறப்படும் தறுவாயில், சமாதானத்தைப் பற்றிய உபதேசங்களும் பிரசங்கங்களும் பயன் தராவென்று சரோஜினி தேவி எழுதினார். பயன் தரும் பரிகாரத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அவ்வம்மையார், பொறுப்பை என் மேல் போட்டது சரிதான். மக்களின் அபார சக்தியைக் கிளப்பிவிடுவதற்குக் காரணமாயிருந்தவன் நான் அல்லவா? அச்சக்தி தன்னையே அழிக்கும் போலிருந்தால், அதற்குப் பரிகாரம் கண்டுபிடிக்க வேண்டியதும் நானே தான். பிரயாசைப் பட்டுத்தான் அதைக் கண்டுபிடிக்க முடியும் என்று நான் பதில் எழுதினேன். வெறுமையான பிரார்த்தனை ஓசையிடும் வெண்கலம் அல்லது கைத்தாளம் போன்றது. அந்தப் பரிகாரம் இந்த நீண்ட உண்ணாவிரதமாக இருக்கும் என்று அப்போது எனக்குச் சிறிதும் தெரியாது. ஆயினும், இந்த உண்ணாவிரதம் என்

ஆன்மாவின் வியாகூலத்தைத் தீர்க்கும் அளவுக்கு நீடிக்கவில்லை. நான் தவறிவிட்டேனா? நான் பொறுமை இழந்துவிட்டேனா? நான் தீய சக்திகளுக்கு விட்டுக் கொடுத்துவிட்டேனா? நான் இவை யாவும் செய்திருக்கலாம்; செய்யாமலும் இருந்திருக்கலாம். எனக்குத் தெரிந்ததெல்லாம் இப்போது நான் என் முன் காண்பவையே. தற்சமயம் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் ஜனங்கள் அகிம்சையையும் சத்தியத்தையும் கைக்கொண்டிருந்திருப்பராயின், இப்போது நடக்கும் இந்த ரத்தம் தோய்ந்த கோர சம்பவங்கள் ஏற்பட்டிரா. எனவே, எனது பொறுப்பு எங்கேயோ இருப்பது தெளிவாகியது.

அமேதி, ஷாம்பார், குல்பர்கா நிகழ்ச்சிகள் எனக்குப் பலமான அதிர்ச்சியைக் கொடுத்தன. ஹிந்து-முஸ்லிம் நண்பர்கள் தயாரித்திருந்த அமேதி, ஷாம்பார் அறிக்கைகளை நான் படித்திருந்தேன். குல்பர்காவுக்குப் போன ஹிந்து-முஸ்லிம் நண்பர்கள் சேர்ந்து விசாரித்துக் கண்டுபிடித்த முடிவுகளும் எனக்குத் தெரிந்திருந்தன. நான் ஆழ்ந்த மனவேதனையால் துடித்தேன். எனினும், பரிகாரம் காண என்னால் முடியவில்லை. கோஹட் செய்தி, புகையும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது; ஏதாவது செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இரண்டு இரவுகள் மனவேதனைப்பட்டு உழன்றேன். புதன்கிழமை பரிகாரத்தைக் கண்டேன். நான் தவமியற்ற வேண்டும். சத்தியாக்கிரக ஆசிரமத்தில், காலை பிரார்த்தனை வேளையில், நாங்கள் அருட்கடவுளாகிய சிவனிடம், அறிந்தும் அறியாமலும் செய்த குற்றங்களுக்காக மன்னிப்புக் கேட்கிறோம். அறியாமல் செய்த பாவங்களுக்காக மன்னிப்புக் கோரும், ரத்தம் கசியும் இதயத்தின் பிரார்த்தனையே என் தவமாகும்.

என்னை நேசிப்பதாகச் சொல்லும் ஹிந்து, முஸ்லிம்களுக்கு இது ஓர் எச்சரிக்கை. அவர்கள் என்னை உண்மையில் நேசித்திருந்தால், அவர்களின் அன்புக்கு நான் தகுதியுடையவனாயின், அவர்களும் என்னுடன் சேர்ந்து தங்கள் இதயத்தில் கடவுளை மறுத்த பெரும் பாவத்திற்காகத் தவம் செய்வார்கள். மற்றவர் மதத்தைத் தூற்றுவது, பொறுப்பற்ற வார்த்தைகள் பேசுவது, பொய் சொல்லுவது, குற்றமற்றவரின் ரத்தத்தைச் சிந்துவது, ஆலயம் அல்லது மசூதிகளை அசுத்தப்படுத்தி வருவது எல்லாம் கடவுளை மறுப்பதேயாகும். நம்மிடையே நடக்கும் இக்கோரச் சண்டையை உலகத்தில் உள்ளவர்கள் - சிலர் சந்தோஷத்துடனும் சிலர் துக்கத்துடனும் - கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் சைத்தானுக்குச் செவி கொடுத்துவிட்டோம். மதம்-எப்பெயரிட்டு அழைத்தாலும் சரி—இதைவிட உயர்ந்தது, கடுமையானது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் செய்ய வேண்டிய தவம் உண்ணாவிரதம் அல்ல; தங்கள் தவறுகளைத் திருத்திக்கொள்ளுவதுதான். தனது ஹிந்து சகோதரருக்குத் தீங்கு நினையாதிருப்பது முஸ்லிமின் தவம்; இதைப் போலவே, தனது முஸ்லிம்



பெல்காம் காங்கிரஸில் காங்கிரஸ் தலைவர் ஸ்தானத்தை மௌலானா முகமது அலி காந்திஜியிடம் ஒப்படைக்கிறார்.



காந்திஜியும் அப்பாஸ் தயாப்ஜியும்—1934

சகோதரருக்கு யாதொரு தீங்கும் நினையாதிருப்பதே ஹிந்துவின் உண்மைத் தவமாகும்.

ஹிந்துவையோ, முஸ்லிமையோ தமது மதக் கொள்கைகளில் ஓர் அணுவேனும் விட்டுக்கொடுக்குமாறு நான் கேட்கவில்லை. தான் பின்பற்றுவது மதம்தான் என்பதைப்பற்றி மட்டும் அவர் நிச்சயம் செய்துகொள்ளட்டும். ஸ்தூல நன்மைக்காகச் சண்டைபோடவேண்டாம் என்று நான் ஒவ்வொரு ஹிந்து, முஸ்லிமையும் கேட்டுக்கொள்ளுகிறேன் கொள்கையைப்பற்றிய விஷயங்களில் எந்தச் சமூகமாவது என் உபவாசத்தால் விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தால், அது என்னைப் புண்படுத்தும். எனது உபவாசம் கடவுளுக்கும் எனக்கும் இடையேயுள்ள ஒரு விஷயமாகும்.

புதன்கிழமையன்று ஹக்கீம் சாகிப் என்னுடன் வெகு நேரம் தனித்துப் பேசிக்கொண்டிருந்தார். மௌலானு முகமது அலியின் வீட்டில் நான் விருந்தாளியாக இருந்தேன். எனினும், இந்த நண்பர்களுடன்கூட நான் கலந்தாலோசிக்கவில்லை. தன்னைப் படைத்தவரைத் திருப்தி செய்ய முற்படும்போது, மனிதன் பிறிதொருவருடன் கலந்து யோசிப்பதில்லை. அவ்வாறு செய்வதும் சரியில்லை. சந்தேகமிருப்பின், நிச்சயமாய்க் கலந்துகொள்ள வேண்டும். ஆனல், எனது முடிவின் அவசியத்தைப்பற்றி யாதொரு சந்தேகமும் எனக்கு இல்லை. நான் உபவாசம் இருப்பதைத் தடுப்பது, தங்கள் கடமையென நண்பர்கள் நினைக்கலாம். இவ் விஷயங்கள் விவாதத்திற்கும் ஆலோசனைக்கும் புறம்பானவை. இவை உணர்ச்சியைப் பொறுத்தவை. ராமர் காட்டுக்குப் போக உறுதிகொண்டபொழுது, அருமை அன்னை அழுது புரண்டாள்; ஆசிரியர் நன்மதி கூறினர்; மக்கள் கெஞ்சினர்; உறுதியை நிறைவேற்றுங்கால் தந்தை நிச்சயமாய் உயிர் துறப்பார் என்றும் தெரியும். இவையெல்லாம் நீர்க்குமிழி போன்றவை. எனவே, தம் உறுதியினின்றும் அவர் பிறழவில்லை. சோதனைகளை எதிர்த்து ராமர் தமது நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டிராவிடில், ஹிந்து மதம் மதமாகவே இருந்திருக்காது. வருங்கால மக்களுக்கு ஓர் உதாரண புருஷனுக விளங்கவும், மனித சமூகத்திற்குச் சேவை செய்யவும் வேண்டுமானல், ஒவ்வொரு வேதனையையும் தாம் கடந்து செல்ல வேண்டுமென்பதை அவர் அறிவார்.

ஒரு முஸ்லிமின் வீட்டில் இந்த உண்ணுவிரதத்தை மேற்கொண்டது சரியா? ஆம், சரியே. தனித்த எவருக்கும் விரோதமாக இந்த உண்ணுவிரதம் ஆரம்பிக்கப்படவில்லை. முஸ்லிமின் வீட்டில் நான் இருப்பது இவ்வித அர்த்தம் செய்வதற்கு இடம் கொடுக்கிறது. இது ஒரு முஸ்லிமின் வீட்டில் ஆரம்பமாகி, அங்கேயே முடிவடைவது சகல விதத்திலும் பொருத்தமே.

முகமது அலிதான் யார்? இரண்டு நாட்களுக்கு முன்பு சொந்த விஷயமாக நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்

கையில், என் உடைமைகள் அனைத்தும் அவருடையவை என்றும், அவர் உடைமைகள் யாவும் என்னுடையவை என்றும் தெரிவித்தேன். முகமது அலியின் வீட்டில் எனக்குக் கிடைக்கும் மனமுவந்த உபசரிப்பைக் காட்டிலும் உயர்ந்தது வேறெங்கும் எனக்குக் கிடைத்ததில்லை என்பதை, நான் பொது மக்களுக்கு நன்றியுடன் தெரிவிக்க வேண்டும். முன் யோசனையுடன் என் தேவைகள் யாவும் இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எங்களைச் சந்தோஷமாகவும் சௌகரியமாகவும் பார்த்துக் கொள்ளுவதுதான் அவருடைய வீட்டார் ஒவ்வொருவரின் முக்கிய எண்ணமாக இருக்கிறது. டாக்டர்கள் அன்சாரியும் அப்துர் ரஹ்மானும் எனது வைத்திய ஆலோசகர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தினமும் என்னைப் பரிசோதிக்கின்றனர். என் வாழ்வில் இன்பம் தரும் நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்திருக்கின்றன. இங்கே கிடைப்பது முந்தியவைகளைக் காட்டிலும் சற்றும் இன்பம் குறைந்ததல்ல. உணவு கிடைத்துவிட்டால் எல்லாம் பூர்த்தியானதாகிவிடுமா? அபரிமிதமான அன்பை நான் இங்கே அனுபவித்துக்கொண்டிருக்கின்றேன். எனக்கு உணவைவிட இதுவே முக்கியமாகும்.

முஸ்லிம் நண்பர்களுடன் இவ்வாறு பழகுவதால், ஹிந்துக்களின் மனத்தை அறிய முடியாதவனாகிவிடுகிறேன் என ரகசியமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். ஹிந்துக்களின் மனம் நான்தான். எனது உடலின் ஒவ்வொரு நரம்பிலும் ஹிந்துத் தன்மை ஊறிக் கிடக்கும்போது, ஹிந்துக்களின் மனத்தை அறிய நான் ஹிந்துக்களின் மத்தியில் வசிக்க வேண்டிய அவசியமில்லை. பிரதிகூலமான சூழ்நிலையிலும் சிறந்து விளங்காவிட்டால் என் ஹிந்து மதம் சாரமற்றதாயிருக்கவேண்டும். ஹிந்து மதத்தின் தேவைகள் எனக்கு இயல்பாகவே தெரியும். எனவே, முஸ்லிம்களின் மனத்தை அறியத்தான் நான் அதிகமாக முயற்சிக்க வேண்டும். உத்தமமான முஸ்லிம்களுடன் நெருங்கிப் பழகும் அளவுக்கு நான் முஸ்லிம்களையும் அவர்களது செய்கைகளையும் மதிப்பிட முடியும். இந்த இரு மதத்தினருக்கும் நடுவே உத்தமமான பிணைக்கும் சாந்துபோல் இருக்க வேண்டுமென்று முயன்று கொண்டிருக்கின்றேன். இரு பிரிவினரையும், அவசியமானால் எனது இரத்தத்தால் பிணைக்கவேண்டும் என்பது என் ஆசை. ஆனால், அவ்வாறு செய்வதுடன் நான் ஹிந்துக்களை நேசிக்கும் மாதிரியே அவர்களையும் நேசிக்கிறேன் என்று முஸ்லிம்களுக்கு நிரூபிக்க வேண்டும். எல்லோரையும் சமமாக நேசிக்கும்படி என் மதம் எனக்குப் புகட்டுகிறது. அவ்வாறு செய்ய ஆண்டவன் அருள்வாராக! சமமான, சுயநலமற்ற அந்த அன்பை அடைய என்னைத் தகுதியாக்கவே பிறவற்றுடன் இந்த உபவாசத்தையும் மேற்கொண்டேன்.

—'எங் இந்தியா' - 25—9—1924

# 5

# இந்த உண்ணாவிரதத்தின் உட்கருத்து

[ஹிந்து-முஸ்லிம் கலகங்களுக்குப் பிராயச்சித்தமாகக் காந்திஜி 21 நாட்கள் வரையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டபோது, ஸ்ரீ மகாதேவ தேசாய் அவருடன் இருந்து அவருக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் பெற்றார். அந்த உண்ணாவிரதத்தின் நோக்கத்தைப் பற்றி ஸ்ரீ மகாதேவ தேசாயும், மௌலானா ஷவுகத் அலியும் காந்திஜியுடன் விவாதித்தனர். உண்ணாவிரதம் ஆரம்பமான முதல் வாரத்தில் அம்மூவருக்கும் நடந்த சம்பாஷணை, உண்ணாவிரதத்தின் உட்கருத்தை விளக்குவதாக இருப்பதால், ஸ்ரீ மகாதேவ தேசாய் 'எங் இந்தியா'வில் எழுதியுள்ளபடி அவ்விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன:]

"பம்பாய், சௌரி சௌரா சம்பவங்களின் காரணமாக மேற்கொண்ட உண்ணாவிரதத்தின் அர்த்தம் விளங்குகிறதா ?" என்று கேட்டார், காந்திஜி. "ஆம்" என்றேன்.

"பின் ஏன் இந்த உண்ணாவிரதத்தின் அர்த்தம் உங்களுக்கு விளங்கவில்லை ?"

"அங்கே நீங்கள் ஏதோ குற்றம் செய்ததாக எண்ணி, அக்குற்றத்திற்குப் பிராயச்சித்தமாக உண்ணாவிரதத்தைக் கைக்கொண்டீர்கள். அதுபோல் இங்கே ஒன்றும் காணோம்; உங்கள் மீது சாட்டக்கூடிய குற்றத்தின் சாயல்கூட இங்கே இல்லை."

"என்ன தவறான எண்ணம்! சௌரி சௌரா குற்றவாளிகள் என்னைப் பார்த்ததுமில்லை; என்னை அறிந்துகொண்டதுமில்லை. ஆனால், இன்றையக் குற்றவாளிகள் என்னை அறிந்தவர்கள்: அது மட்டுமல்ல, என்னை நேசிப்பதாகச் சொல்லிக்கொள்ளுபவர்கள்."

நான் சொன்னேன்: "ஷவுகத் அலியும் முகமது அலியும் தம்மால் இயன்றவரை இக்கொந்தளிப்பை அடக்க முயற்சித்து வருகின்றனர். எனினும், அவர்களால் முடியவில்லை. சில மனிதர்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் உட்படாதவர்களாக இருக்கலாம். அவர்கள் என்ன செய்ய முடியும்? நீங்கள்தான் என்ன செய்வீர்கள் ? நிலைமை சீர்பெறக் காலம் ஆகும்."

"அக்கதை வேறு. ஷவுகத் அலியும் முகமது அலியும் சொக்கத் தங்கம் போன்றவர்கள். அவர்களால் இயன்றதையெல்லாம் செய்கிறார்கள்; அது எனக்குத் தெரியும். நிலைமை இன்று நம்மை மீறிவிட்டது. அது ஆறு மாதங்களுக்குமுன் நம் கைக்குள் இருந்தது. என்னுடைய உண்ணாவிரதம் அவர்கள் மனத்தைக் கலக்கும் என்று எனக்குத் தெரியும். யார் மனத்திலும் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்காக இந்த உண்ணா

விரதத்தை நான் மேற்கொள்ளவில்லை. ஆனால், மறைமுகமாக அவர்களின் மனம் பாதிக்கப்படலாம்" என்றார் காந்திஜி.

"அது சரி. ஆனால், இந்தப் பிராயச்சித்தத்திற்குக் காரணமாக நீங்கள் செய்த குற்றம் யாது என்று எனக்கு இன்னும் விளங்கவில்லையே?" என்றேன்.

"என் குற்றமா! ஏன்? ஹிந்துக்களுக்குத் துரோகம் செய்ததாக என் மீது குற்றம் சாட்டலாம். முஸ்லிம்களுடன் நட்புரிமை கொள்ளும்படி நான் அவர்களுக்குச் சொன்னேன். தங்கள் உயிரையும் உடைமைகளையும் அவர்களுடைய புண்ணிய ஸ்தலங்களைப் பாதுகாக்க முஸ்லிம்களிடம் சமர்ப்பிக்கச் சொன்னேன். சச்சரவுகளைத் தீர்க்கப் பிறரைக் கொல்லாமல் தாங்களே சாகவும் அகிம்சையை அனுசரிக்கவும், இன்றுகூட நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன். ஆனால், நான் காணும் பயன் யாது? எத்தனை கோவில்கள் அசுத்தப்பட்டிருக்கின்றன? எத்தனை சகோதரிகள் என்னிடம் முறையிடுகின்றனர்? நேற்று ஹக்கீம்ஜியிடம் நான் கூறியது போல், ஹிந்துப் பெண்கள் முஸ்லிம் குண்டர்களைக் கண்டு நடுநடுங்குகின்றனர்; அநேக இடங்களில் பெண்கள் தனியே செல்லவும் அஞ்சுகின்றனர்......இடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அவருடைய சிறு குழந்தைகள் மானபங்கம் செய்யப்பட்ட விதத்தை நான் எப்படித் தாங்க முடியும்? பொறுமையுடன் எல்லாவற்றையும் சகியுங்கள் என ஹிந்துக்களை இனி நான் எப்படிக் கேட்க முடியும்? முஸ்லிம்களுடன் நட்புக்கொள்ளுவதால் நல்ல பயன் கிடைக்குமென நான் அவர்களுக்கு உறுதி கொடுத்திருந்தேன். பயனைக் கருதாமல் அவர்களை நேசிக்கும்படி சொன்னேன். நான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற எனக்குச் சக்தியில்லை; முகமது அலி, ஷவுகத் அலிக்கும் அத்தகைய சக்தி இல்லை. யார் நான் சொல்லுவதைக் கேட்கிறார்கள்? இருப்பினும், இன்றும் கொல்லவேண்டாம், உங்கள் உயிரை விடுங்கள் என்றுதான் நான் ஹிந்துக்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும். என் உதாரணத்தின் மூலம் சாகும் வழியை நான் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க முடியும். வேறு வழியில்லை......ஒத்துழையாமையை ஆரம்பித்தேன். அகிம்சை முறையைச் சற்றும் கவனியாது, இன்று மக்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழையாதிருப்பதை நான் காண்கிறேன். காரணம் யாது? நானே முற்றிலும் அகிம்சை தர்மத்தைக் கைக்கொள்ளவில்லை. இது ஒன்றுதான் காரணம். நான் பூரண அகிம்சையை அனுஷ்டித்திருந்தால், இன்று என்னைச் சுற்றிலும் காணும் ஹிம்சையை நான் காணும்படி நேர்ந்திராது. ஆகவே, என் உண்ணாவிரதம் ஒரு தவமே. நான் ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவில்லை. என் மீதுதான் நான் குற்றம் சாட்டிக் கொள்ளுகிறேன். மக்களைக் கேட்டுக்கொள்ளும் சக்தியை இழந்துவிட்டேன். தோல்வியடைந்து திக்கற்ற நான் ஆண்டவனின் நியாய ஸ்தலத்தில் தான் மனுச் செய்துகொள்ள வேண்டும். அவர்தான் செவிசாய்ப்பார். வேறு யாரும் செவி சாய்க்கமாட்டார்கள்."

சரமாரியாக அவர் பொழிந்த வார்த்தைகளை நான் சரிவரப் பின்பற்ற முடியவில்லை. எனவே, அவற்றை இங்கு நான் குறிப்பிடுவது எவ்விதம் சாத்தியமாகும்? கடைசியில் நான் அவரை இவ்வாறு கேட்டேன்: "பாபு, ஆனால், பிராயச்சித்தம் இந்த உருவத்தில்தான் இருக்க வேண்டுமா? இதில் வேறு வழி இல்லையா? நம்முடைய மதத்தில் உண்ணுவிரதம் விதிக்கப் பட்டிருக்கிறதா?"

"நிச்சயமாக" என்று பதிலிறுத்து, காந்திஜி மேலும் சொன்னார்: "பண்டைக் கால முனிவர்கள் யாது செய்தனர்? அவர்கள் சில சமயங்களில் குகைகளில் நூற்றுக்கணக்கான வருடங்கள் இயற்றிய தவங்களின்போது அவர்கள் உணவருந்தினர்கள் என்பதை நினைக்கவே முடியாது. சிவனை அடைய வேண்டித் தவம்செய்த பார்வதி மரங்களின் இலைகளைக்கூடத் தொடவில்லை என்ருல், பழங்களையும் உணவையும் ஏறெடுத்தும் பார்த்திருக்கமாட்டாள். தவமும் பிரார்த்தனையும் ஹிந்து மதத்தில் ஏராளம். முந்திய உண்ணுவிரதங்களில் யோசித்ததைவிட அதிகமாக யோசித்தே இந்த உண்ணுவிரதத்தை மேற்கொண்டேன். ஒத்துழையாமையைப் பற்றி நினைத்து அதை ஆரம்பித்த போதே, இத்தகைய உண்ணுவிரதம் ஒன்று என் மனத்திலிருந்தது. அப்போது, 'மக்களின் கையில் இப்பயங்கரமான ஆயுதத்தைக் கொடுக்கிறேன். இது தவருக உபயோகிக்கப்பட்டால், பிராயச்சித்தமாக என் உயிரையேவிட வேண்டும்' என்று நான் எனக்குள் சொல்லிக்கொண்டேன். இன்று அச்சமயம் வந்துவிட்டது என்று தோன்றுகிறது. முந்திய உண்ணுவிரதங்களின் நோக்கங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. இப்போதோ அதற்கு எல்லை இல்லை; இதில் எல்லையற்ற அன்பு அடங்கியிருக்கிறது. இன்று நான் அன்புக் கடலில் ஆழ்ந்திருக்கிறேன்."

மௌலானு ஷவுகத் அலி மறுநாள் வந்தார். இவர் வந்தால் ஒரு வேளை காந்திஜியின் முடிவை அசைத்துவிடுவார் என்று ஆசையுடன் மௌலானு முகமது அலி மனக்கோட்டை கட்டியிருந்தார். ஆம். ஷவுகத் அலியோ அல்லது முகமது அலியோ உண்ணுவிரதம் ஒழுக்கத் துறையிலாவது, வேறு எம்முறையிலாவது தவறு என்று தெளிவாக்கினுல், தாம் அதைவிட்டுவிடுவதாகக் காந்திஜி முகமது அலிக்கு வாக்களித்திருந்தார். ஷவுகத் அலி காந்திஜியுடன் நீண்ட நேரம் பேசினுர். உண்ணுவிரத நிறுத்தத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பேச்சினுல் பலன் ஏற்படவில்லை. ஆனுல் அதன் உட்கருத்து முன்னிலும் பன்மடங்கு அதிகமாகத் தெளிவாயிற்று.

"மகாத்மாஜி, நிலைமையைச் சரிப்படுத்த நாம் என்ன செய்திருக்கிறோம்? கிட்டத்தட்ட ஒன்றுமேயில்லை! உங்கள் பத்திரிகையின்மூலம் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறீர்கள். ஆனுல், சுற்றுப்பிரயாணம் ஒன்றும் செய்யவில்லை. தயவு செய்து பீடிக்கப்பட்ட பாகங்களுக்குச் சென்று சூழ்நிலையைச் சரி செய்யுங்

கள் எனக் கெஞ்சுகிறோம். தீமையை எதிர்க்க இந்த உண்ணு விரதம் சரியான வழியல்ல'' என்று ஷவுகத் அலி கூறினர்.

அதற்குப் பதிலாக, காந்திஜி கூறியதாவது: "எனக்கு இது முற்றும் மத சம்பந்தமான விஷயமாகும். நான் என்னைச் சுற்றிலும் பார்த்தேன். என்னையே நான் கேள்வி கேட்டுக் கொண்டேன். நான் சக்தியிழந்து நிற்பது தெரிந்தது. நீண்ட பிரயாணத்தின் மூலம்கூட நான் என்ன செய்துவிட முடியும்? பொது மக்கள் இன்று நம்மைச் சந்தேகிக்கின்றனர். டில்லியி லுள்ள ஹிந்துக்கள் என்னை முழுதும் நம்புகிருர்கள் என்று தயவு செய்து எண்ணிவிடாதீர்கள். அவர்கள் ஏகோபித்து மத்தியஸ்தம் செய்யும்படி என்னைக் கேட்கவில்லை; இது இயல் புதான். கொலைகள் நடந்திருக்கின்றன. துன்பப்பட்டவர்கள் என் சொல்லைக் கேட்கவேண்டுமென நான் எப்படி எதிர் பார்க்க முடியும்? தங்களுடைய ஆருயிர் போன்றவர்களைக் கொலை செய்தவர்களையும் மன்னிக்கும்படி நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுவேன். ஆனல், நான் கூறுவதை யார் கேட் பார்கள்? ஹக்கீம்ஜி சொல்லுவதைக் கேட்க அஞ்சுமனைச் சேர்ந்தவர்கள் மறுக்கின்றனர். அவர்களுக்குள் சமாதானம் செய்ய முயன்றுகொண்டிருக்கையில், கோஹத்தைப்பற்றிக் கேள்விப்பட்டேன். 'இப்போது, நீ என்ன செய்யப் போகிருய்?' என்று நான் என்னையே கேட்டுக்கொண்டேன். நன்மையே விளை யும் என்பதில் நான் யாரும் தகர்க்கமுடியாத நம்பிக்கையுடைய வன். ஆனல், எனது நம்பிக்கை உறுதியான, உருவான உண் மைகளை அடிப்படையாகக் கொண்டது. நீங்களும் நம்பிக்கை யுடையவர்கள்தான். என்றுலும், உங்களுடைய நம்பிக்கை சில சமயங்களில் மணலின் மீது உருவாகிறது. இன்று யாரும் உங் களுக்குச் செவி சாய்க்கமாட்டார்கள். குஜராத்தில் உள்ள விச நகரில், அப்பாஸ் தயாப்ஜியும் மகாதேவும் கூறியதைக் கேட்க மறுத்துவிட்டார்கள். அகமதாபாத்தில் எழும்பிய புயல் ஆரம் பத்திலேயே அடக்கப்பட்டது. குஜராத்தைவிட்டு நான் புறப் பட்டபோது உம்ரெத்தில் தொல்லை புகைந்துகொண்டிருந்தது. இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பது, என் ஆற்றலின்மையின் இழிநிலையையே காட்டுகிறது. நூற்றுக் கணக்கான சகோதரிகள் என்னை இன்னும் நேசிக்கின்றனர். இன்று அவர்கள் மரண பயத்தால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு என் உதாரணத்தால் சாகும் வழியைக் காட்ட விரும்புகிறேன்.

"சண்டையை நான் பொருட்படுத்தவில்லை. ஆனல், அது இரு சமூகங்களுக்கிடையே நியாயமான, யோக்கியமான, தீர மான போராக இருக்க வேண்டும். ஆனல், இப்போது அது கலப்பற்ற கோழைத்தனமாகவே இருக்கிறது. கற்களை எறிந்து விட்டு ஓடிவிடுகிருர்கள்; கொலை செய்துவிட்டு மறைந்துவிடு கிருர்கள்; நீதி மன்றத்திற்குச் சென்று பொய்ச் சாட்சிகளைக் கொண்டு பொய் வாதம் செய்கின்றனர். என்ன இழிவான நிலை?

இவர்களை எப்படித் தீரர்களாக்குவது? உங்களால் இயன்றதை நீங்கள் செய்கிறீர்கள், நானும் என்னுல் ஆனதைச் செய்ய வேண்டும். அவர்கள் நான் சொல்லுவதைக் கேட்கும்படி செய்யும் சக்தியைப் பெற வேண்டும்.''

ஷவுகத் அலி சொன்னுர்: "இல்லை, நீங்கள் தோற்றுவிடவில்லை. அவர்கள் உங்கள் சொல்லைக் கேட்டார்கள்; கேட்டுக் கொண்டிருந்தார்கள். நீங்கள் இல்லாத சமயத்தில் அவர்களுக்கு வேறு ஆலோசகர்கள் ஏற்பட்டுவிட்டார்கள். அவர்கள், இவர்களின் யோசனையைக் கேட்டுத் தீய வழியில் சென்றுவிட்டார்கள். தாங்கள் செல்லும் வழி தீயதென்பதை இனி தெரிந்து கொள்ளுவார்கள் என்பது உறுதியாகும். மக்கள் மனத்திலுள்ள விஷத்தைக் குறைக்க நீங்கள் எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். இக்குழப்பங்களைக் கண்டு நான் கவலைப்படவேமாட்டேன். 'பிசாசுகளே! உங்கள் ஆசை தீரும்வரை வேலைகளை நடத்துங்கள். கடவுள் இன்னும் இருக்கிருர். நீங்கள் ஒருவரையொருவர் கொல்லலாம்; ஆனுல் அவரைக் கொல்ல முடியாது' என்று நான் அவர்களுக்குச் சொல்லுவேன். ஐயனே, கடவுளைக் குறுக்கிடாதேயுங்கள். நீங்கள் அவருடன் மல் யுத்தம் செய்கிறீர்கள். அவருக்கு வழி விடுங்கள்."

"நானு? கடவுளுடன் குஸ்தியா!" என்று காந்திஜி வியப்புடன் கேட்டார். "என்னிடம் கர்வமோ, எதிர்ப்போ இருந்தால் அதெல்லாம் தொலைந்தன. அன்பரே, பல நாட்கள் தொடர்ச்சியாக நடத்திய பிரார்த்தனைகளின் பயனே இந்த உண்ணுவிரதமாகும். இரவு மூன்று மணிக்குத் தூக்கத்திலிருந்து விழித்து, நான் என்ன செய்வதென்று அவரைக் கேட்டிருக்கிறேன். செப்டம்பர் 17-ஆம் தேதி மின்னல் போல் பதில் தோன்றியது. நான் தவறியிருந்தால், அவர் என்னை மன்னிப்பார். நான் செய்வது, செய்தது எல்லாம் கடவுளுக்குப் பயந்தே செய்யப்படுகிறது; அதுவும் கடவுளுக்குப் பயப்படும் ஒரு முஸ்லிமின் வீட்டில் செய்யப்படுகிறது. துன்பம் அனுபவிக்கத் தயாராயிருப்பவனே கடவுளிடம் பிரார்த்தனை செய்ய முடியுமென என் மதம் சொல்லுகிறது. உண்ணுவிரதமும் பிரார்த்தனையும் என் மதத்தில் சர்வ சாதாரணமான கட்டளைகளாகும்.

"இஸ்லாமில்கூட இவ்விதத் தத்துவம் இருக்கிறது. நபிகள் நாயகம் பலமுறை உண்ணுவிரதம் இருந்து வேண்டிக்கொண்டதாயும், மற்றவர்களை அவ்வாறு செய்யக்கூடாதெனக் கண்டிப்பாகத் தடுத்ததாயும் அவரது வாழ்க்கைச் சரித்திரத்தில் வாசித்திருக்கிறேன். அவர் செய்த ஒன்றை, மற்றவர்கள் செய்யக் கூடாது என்று தடுத்தது ஏன் என ஒருவர் கேட்டார். 'நான் தெய்விக உணவால் வாழ்கிறேன்' என அவர் பதில் கூறினுர். அவரது அருஞ்செயல்களை உண்ணுவிரதத்திலுைம் பிரார்த்தனையினுலுமே செய்து சாதித்தார். கடவுளின் மேல் தளரா நம்பிக்கை கொண்டவன்தான் உண்ணுவிரதம் இருக்க முடியுமென

நான் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன். நபிகள் நாயகம் உயர்ந்த உண்மைகளைச் சுகபோகமாக வாழும் சமயங்களில் காணவில்லை. உண்ணாவிரதம் இருந்து பிரார்த்தித்தார். பல இரவுகள் ஓய்வு உறக்கமின்றி மன்றாடினார். உண்மை ஒளி பெற்ற சமயம் இரவெல்லாம் நின்று நின்று காத்திருந்திருப்பார். அப்படி உண்ணாவிரதமிருந்து பிரார்த்தித்த நபிகள் நாயகத்தின் தோற்றத்தை இப்பொழுதுகூட என் முன் பார்க்கிறேன். அன்புள்ள ஷவுகத்! நீங்களும் உங்கள் சகோதரரும் எனக்குக் கொடுத்த வாக்குறுதியினின்றும் பிறழ்ந்துவிட்டீர்கள் என்று ஜனங்கள் குற்றம் சாட்டுவதை என்னால் தாங்க முடியவில்லை. அதற்காக நான் சாக வேண்டும். இந்த உண்ணாவிரதத்தை, என்னைத் தூய்மைப்படுத்துவதற்காகவே, பலப்படுத்துவதற்காகவே மேற்கொண்டுள்ளேன். என்னைத் தவறான அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டாம். நீங்கள் இஸ்லாமுக்கு மரியாதை செய்வது போல, நானும் மரியாதை செய்யப் பழகியிருக்கிறேன். ஆதலால், நான் உங்களிடம் ஒரு முஸ்லிமைப் போலவே பேசுகிறேன். இஸ்லாமில் எனக்கு ஏற்கனவேயுள்ள பயபக்தியுடன், உண்ணாவிரதம் இருந்து கடவுளை வேண்டிக்கொண்ட பிறகு, இரு சமூகத்தினரிடமும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுவதற்கு நான் அதிக பலத்தைப் பெறுவேன். புலன்களை அடக்கும் அளவுக்கு ஆன்மா வளர்ச்சி பெறுகிறது என்பது எனது உறுதியான நம்பிக்கை. நாம் காலித்தனத்தை எதிர்க்க வேண்டும். ஆனால், அதை எதிர்த்துப் போராடுவதற்கான போதிய ஆன்ம பலம் நம்மிடம் இல்லை.''

இந்நிலையில், ஷவுகத் அலி தம் விவாதத்தின் போக்கை மாற்றி, "இந்த நீண்ட உண்ணாவிரதம் தேசத்தை எவ்வாறு கிடுகிடுக்க வைக்கும் என்பதையாகிலும் நீங்கள் யோசிக்கக் கடமைப்பட்டவர்கள் இல்லையா?'' என வினவினார்.

"இல்லை! மனிதன் எத்தனையோ முறை அடிக்கடி தன்னை ஏமாற்றிக்கொள்ளுகிறான். அவன் விலக்க வேண்டியவைகளை, மற்றவர்களை மகிழ்விப்பதற்காக அடிக்கடி செய்கிறான். ஆகையால், குறிப்பிட்ட விஷயத்தில் உறுதி செய்துகொண்ட பின்னரே, உலகை நோக்குமாறு மதம் கற்பிக்கிறது. ஒருவன் தனது தவத்தைக் கண்டு உலகம் திடுக்கிடும் என்று நினைப்பது எவ்வளவு பெரிய தற்பெருமை! யாருடைய விருப்பத்தை நாம் பொருட்படுத்த வேண்டும்? இதற்கு எல்லை இராது. கலந்து யோசிக்க ஆரம்பித்திருந்தால் ராமர் வனவாசம் போய் உலகத்தின் துன்பத்தைத் துடைத்திருக்கமாட்டார். யாருடைய யோசனைக்காகவும் அவர் காத்திருக்கவில்லை. தமது வார்த்தையை உயிரினும் பெரிதாக மதித்தார். ஆதலால், உடனே காட்டுக்குச் சென்றார். கடவுளிடத்துப் பயமும் தளரா நம்பிக்கையும் உடையவர்கள்தான் பெரிய முடிவுகளைச் செய்ய இயலும்.''

"இன்னும் ஒரே ஒரு கேள்வி. இம்மாதிரி முடிவுக்கு வருமுன் யாரையும் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு

இல்லையா? உங்களின் ஆரோக்கியத்திற்கும் அல்லது உடம்பிற்கும் இதனால் என்ன விளையும் என்பது பற்றிக்கூட நீங்கள் சிந்திக்க வேண்டியதில்லையா?" என்றார், புறப்பட எழுந்த ஷவுகத் அலி.

"இல்லை. இது எனக்கும் என்னைப் படைத்தவனுக்கும் இடையேயுள்ள விஷயம். யாரையாவது கலந்தாலோசிக்க வேண்டியிருந்தால், நான் உண்ணுவிரதம் மேற்கொள்ளாதிருந்திருப்பதே நல்லது. எனது ஆரோக்கியத்திற்கும் உடம்பிற்கும் உண்ணுவிரதத்தால் ஏற்படும் தீங்கைப் பற்றிப் பேசுகிறீர்கள். இதனைத் தாங்கப் பலம் என்னிடம் இல்லையேல் நான் இறந்துவிடலாம். இந்த உடலால் யாது பயன்? சிறையிலிருந்த சமயம் நபிகள் நாயகத்தின் தோழர்களின் வாழ்க்கையை ஆனந்த பரவசத்துடன் வாசித்தேன். ஹஜரத் உமர் யாருக்கோ 500 தினார்கள் இனமாக அனுப்பினராம். அவர் அதைக் கண்டு நடுங்கி அழத் தொடங்கினர். 'ஏன் அழுகிறீர்கள்' என்று அவர் மனைவி கேட்டபோது 'மாயை – அசத்தியம் – என்னிடம் வந்திருக்கிறது. எனக்கு என்ன ஆகுமோ?' என்றார். அந்தத் தினார்கள் பரிசுத்தவானாகிய ஹஜரத் உமரிடமிருந்து இனமாக வந்தவை. இருப்பினும், அவை அசத்தியமான நிலையாப் பொருளானதால் அவற்றைக் கண்டு அவர் நடுங்கினர். இதுதான் வாழ்க்கை. இந்த உடலைக்கொண்டு இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமானால் கடவுள் இதைக் காப்பார். அவரது காரியம் நிறைவேற்றப்பட்டிருந்தால், இது நசித்துப் போகட்டும். உண்மையில் இந்த உண்ணுவிரதம் முடிந்த பிறகும் நிலைமை சீர்திருந்தாவிட்டால், நீடித்த உண்ணுவிரதம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தேன். இதைப்பற்றி நினைக்க வேண்டாமென்று ஹக்கீம்ஜி கேட்டுக்கொண்டார். 'என் மனத்தினின்றும் இதை எப்படி நீக்க முடியும்? இது என்னுள் ஊடுருவி இருக்கிறது. என் எலும்பின் உள்ளும் ஊன்றி விட்டது' என்றேன். மதத்திற்கு விரோதமாக இல்லாவிட்டால், ஹிந்துக்களை நேசியுங்கள் என முஸ்லிம்களுக்குச் சொல்லுவேன், யோசித்த பிறகு அது அவர்களுடைய மதத்திற்கு விரோதமானதெனச் சொல்லுவார்களேயானால், நான் உயிர் வாழ்வதற்குக் காரணமேயில்லை; நான் இறக்கத்தான் வேண்டும். காஜா ஹாசன் நிஜாமி சாகிபுடன் அன்று நான் மனம்விட்டுப் பேசினேன். 'தீண்டாதவர்களையும், அனாதைகளையும், நெறி தவறி அலைபவர்களையும் ஏன் மதம் மாற்ற முயற்சிக்கிறீர்கள்? என்னை மதம் மாற்றுங்கள். பல பேர் என்னைப் பின்பற்றி வரலாம். இஸ்லாமின் அழகைக் கண்டு இந்த ஏழைகள் மதம் மாறுவதில்லை; வேறு காரணங்களுக்காக மாறுகின்றனர். அதனால், இஸ்லாமின் செல்வாக்கு அணுவளவும் பெருகாது' என்றேன்."

அது மனத்தை உருக்கும் ஒரு சம்பாஷணையாகும். அதைச் சரியாக முற்றும் எழுத என்னால் இயலவில்லை. ஷவுகத் அலி உணர்ச்சிப் பெருக்கால் திணறிவிட்டது போல் தோன்றி

யது. எழுந்திருக்கும்போது அவர் சொன்னார்: "மூன்று விஷயங்களுக்காக நான் தினமும் பிரார்த்திக்கிறேன். முதலாவதாக, ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை. இரண்டாவதாக, இஸ்லாமும் இந்தியாவும் சுதந்திரமாக இருப்பதைப் பார்க்க என் தாயார் உயிர் வாழ வேண்டும். மூன்றாவதாக, மகாத்மா காந்தியின் லட்சியம் நிறைவேற வேண்டும்."

—'எங் இந்தியா' – 23—10—1924

# 6

# எனது புகலிடம்

இன்று என் தவத்தின், பிரார்த்தனையின் 21-ஆம் நாள் ஆகும். சிறிது நேரத்தில் அமைதி உலகிலிருந்து போர் நிறைந்த உலகிற் புகுவேன். அதை நினைக்க நினைக்க என்னை நான் அதிகத் திக்கற்றவனாக உணருகிறேன். ஒற்றுமை மகாநாடு* ஆரம்பித்த வேலையை முடிக்கும்படி அநேகர் என்னை எதிர்பார்க்கின்றனர். அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்தும்படி பலர் எதிர்பார்க்கின்றனர். என்னால் ஒன்றும் செய்ய முடியாதென்று எனக்குத் தெரியும். கடவுளால்தான் எல்லாவற்றையும் செய்ய முடியும். ஆண்டவரே! என்னை உங்களுக்குத் தகுந்த கருவியாக்கி, உங்கள் விருப்பப்படி என்னை உபயோகித்துக்கொள்ளுங்கள்.

மனிதன் ஒரு சக்தியும் இல்லாதவன். நெப்போலியன் பிரமாதமாகத் திட்டமிட்டான். கடைசியில் ஹெலினாத் தீவில் ஒரு கைதியாக இருந்தான். பராக்கிரமசாலியான கெய்சர் ஐரோப்பாவின் முடி மன்னனாகத் திகழ நோக்கம் கொண்டான். ஆனால், சாதாரணமான ஒரு தனி மனிதனின் நிலைக்குத் தாழ்த்தப்பட்டுள்ளான். இது கடவுள் விதித்தது. இத்தகைய உதாரணங்களைச் சிந்தித்துப் பார்த்து நாம் பணிவை அடைவோமாக.

சாந்தம், சுதந்திரம், அருள் இவை நிறைந்த இந்நாட்களிலே சத்தியாக்கிரக ஆசிரமத்தில் அடிக்கடி நாங்கள் பாடும் ஒரு பாடலை, நான் எனக்குள்ளேயே பாடிக் கொண்டிருந்தேன். அது மிகச் சிறந்தது. சரளமாக மொழிபெயர்த்த அதன் வாசகத்தை, வாசகருடன் கலந்து அனுபவிக்காமல் இருக்க என்னால் முடிய

---

* காந்திஜியின் உண்ணாவிரத தவத்தைக் கண்டு மனம் பதறிய ஏராளமான நண்பர்களும், பக்தர்களும் டில்லிக்கு வந்தனர். அங்கே செப்டம்பர் 26-ஆம் தேதி மோதிலால் நேருவின் தலைமையில் சமூக ஒற்றுமை மகாநாடு ஆரம்பமாயிற்று. அந்த மகாநாட்டைப் பற்றிய முழு விவரங்கள் இந்தத் தொகுப்பின் பின் சேர்க்கைப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

வில்லை. நான் எழுதக் கூடிய எதையும்விட இப்பாடலின் சொற்கள் என் நிலைமையை நன்கு விளக்குகின்றன. அவை இதோ உள்ளன:

என் மானம் மதிப்பெலாம்
    இறைவனே உனது வசம்
என்றும் என் புகலும் நீயே
தீனரைக் காக்கின்ற அண்ணல் நீ
    பாவியர்கள்
முறை கேட்பெனென்றவன் நீ
பழம்பெரும் பாவியான்
    பாயுமிருட் கடல் தாண்டப்
பரிந்துதவி புரிந்தருளுவாய்
பாவங்கள் தீர்ப்பதும்
    பாரின் துயர் களைவதும்
பகவனுன் பாரமன்றோ
துளசிதாஸிவனையும்
    தண்ணளிக் காளாக்கித்
தொண்டனாய் ஏற்றருளுவாய்.

— 'எங் இந்தியா' – 9—10—1924

# 7

# காந்திஜிக்கு வைஸ்ராய் தடை

[காந்திஜி உண்ணாவிரதத்தை முடித்த பிறகுகூட தேசத்தில் எதிர்பாராத சம்பவங்கள் நிகழலாயின. கோஹத்தில் ஹிந்து-முஸ்லிம் கலகங்களுக்குக் காரணம் என்ன என்பதை விசாரித்து, அங்கே அமைதி ஏற்படும்படி செய்வதற்காகக் காந்திஜி முஸ்லிம் சகாக்களுடன் கோஹத்திற்குச் செல்லத் திட்டம் வகுத்திருந்தார். ஆனால், அங்கே செல்ல அரசாங்கம் அவரை அனுமதிக்கவில்லை. அவ்விஷயமாகக் காந்திஜிக்கும் வைஸ்ராய்க்கும் நடந்த கடித, தந்திப் போக்குவரத்தின் விவரங்களைக் கீழே காணலாம்: ]

பதினாறும் தேதி காந்திஜி, வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசிக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதினார்:

"எனக்குப் போதிய பலம் வந்தவுடன், அரசாங்கம் என்னை அனுமதித்தால் ஹிந்து-முஸ்லிம் நண்பர்கள் சிலருடன் கோஹத்துக்குப் போக உத்தேசித்திருக்கிறேன். அங்குள்ளவர்களிடமிருந்து, ஹிந்து-முஸ்லிம் சச்சரவுகளுக்குக் காரணங்கள் என்ன என்று கண்டு பிடிப்பதும், கூடுமானால் நண்பர்களின் உதவியைக் கொண்டு, இரு சாராருக்கும் சமாதானம் செய்து வைப்பதுமே கோஹத்துக்கு நான் போக விரும்புவதன் நோக்கமாகும். மேற்கூறப்பட்ட காரியத்திற்காக நானும் என் சிநேகிதர்களும் கோஹத்துக்குப் போக மேன்மை தங்கிய வைஸ்ராய் அனுமதிப்பாரா என்று கூடிய சீக்கிரம் எனக்குத் தெரிவித்தால் நன்றியுள்ளவனாக இருப்பேன்."

பதில் வராததால் 24-ஆம் தேதி காந்திஜி கீழ்க்கண்ட தந்தியை அனுப்பினர்:

"எனது 16-ஆம் தேதி கடிதத்திற்குத் தந்தி மூலம் பதில் கிடைக்குமா?"

அந்தத் தந்திக்குப் பதிலாக, வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசியிடமிருந்து காந்திஜிக்குக் கீழ்வரும் தந்தி அக்டோபர் 26-ஆம் தேதி வந்தது:

"16-ஆம் தேதி எழுதப்பட்ட கடிதத்தில் நீங்கள் எப்போது கோஹத் போக விரும்புகிறீர்கள் என்று சொல்லவில்லை. வைஸ்ராய் தெரிந்துகொள்ளுவதற்காகச் சுமாராக எந்தத் தேதியில் போக விரும்புகிறீர்கள் எனத் தயவு செய்து தந்தி கொடுங்கள்."

27-ஆம் தேதி காந்திஜி வைஸ்ராய்க்குக் கீழ்க்கண்ட தந்தியை அனுப்பினர்:

"தந்திக்காக வந்தனம். நண்பர்களுடன் நவம்பர் 16-ஆம் தேதி அல்லது அதன் பின் இரண்டொரு தினங்களில் டில்லியை விட்டுப் புறப்பட்டு, ராவல் பிண்டியில் இரண்டு, மூன்று நாட்கள் தங்கி, பின் கோஹத் போய் அங்கே மூன்று, நான்கு நாட்கள் தங்க உத்தேசம்."

மேற்கண்ட தந்திக்குப் பதிலாக வைஸ்ராயிடமிருந்து 28-ஆம் தேதி காந்திஜிக்குக் கீழ்வருமாறு ஒரு தந்தி கிடைத்தது:

"உங்கள் தந்திக்கு வந்தனம். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலிருந்து கிடைத்துள்ள செய்தியிலிருந்து தாங்கள் கோஹத்துக்குப் போகக் குறிப்பிட்டிருக்கும் தேதிகள் சரியான சமயமல்ல என்று மேன்மை தங்கிய வைஸ்ராய் எண்ணுகிறார். சற்றுப் பின்னால் போவது நல்ல யோசனையாகும்.

"ஹிந்துக்களைத் திரும்பக் குடியேற்ற உதவவும், பழைய நட்பு நிலையை மீண்டும் உண்டாக்கவும், கோஹத்தில் இரு சமூகத்தினரையும் ஒன்று சேர்க்கவும் சிறிது காலமாக நாங்கள் முயற்சி செய்து வருகிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். அந்தச் சமரச முயற்சி தடையின்றி நடைபெற்றால், எதிர்காலத்தில் நிரந்தரமான சமாதானம் நிச்சயமாக ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் உணர்ச்சி வேகம் முற்றும் குறையவில்லை. சிறு காரணம் கூட, சமீபத்தில் ஏற்பட்ட புண்ணில் எரிச்சலை உண்டாக்கிவிடலாம்.

"நீங்கள் அங்கே போவதால் பரபரப்பு ஏற்படலாம் என்ற அச்சம் இருக்கிறது. ஏன், நிச்சயமாக அது ஏற்படும். உங்களுடைய உத்தேசம் நல்லதாக இருப்பினும் நீங்கள் அங்கே செல்லுவதால், காரியம் தடைப்படும். ஹிந்துக்கள் இயல்பாகவே உங்களைச் சந்திக்கத் திரளாகக் கூடுவார்கள். முஸ்லிம்களும் ஒரு வேளை பலம் திரட்டலாம். எல்லைக்கு அப்பாலுள்ள முஸ்லிம்கள் இவர்களுக்கு உதவ வரலாம். கட்சிப் பிரதி கட்சிகள் உண்டாகலாம் எனப் பயப்படுகிறோம். ஒவ்வொரு கட்சியிலும் உணர்ச்சி வலுக்கும். இருவருக்கிடையிலும் கலகம் விளைந்து நிலைமை இன்னும் அதிக மோசமாக முடியலாம்.

"இக்காரணங்களால் நீங்களும் உங்கள் நண்பர்களும், நீங்கள் குறிப்பிட்ட தேதிகளில் கோஹத்துக்குப் போக விரும்புவது புத்திசாலித்தனமாகாது, விரும்பத்தகாததுமாகும் என்பது வைஸ்ராயின் கருத்து. இரு சமூகத்

தினரிடையேயும் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும் என்கிற உங்கள் ஆசை பாராட்டப்படுகிறது. ஆனால், எல்லைப்புற ஜில்லாக்களில் கிளம்பும் சக்திகளை அடக்குவது சிரமமான காரியம் என்பதும் ஞாபகத்தில் இருக்க வேண்டும். "தற்சமயம் உங்களைப் போகவிட முடியாததற்கு வைஸ்ராய் வருந்துகிறார். சிறிது காலத்தில் நிலைமை மாறும். மக்களின் உணர்ச்சி வேகம் சிறிது தணியும். நேரடியாகவும் தீவிரமாகவும் பகைப்பது குறையும். பழைய நிகழ்ச்சிகளைப் பற்றிய தப்பெண்ணங்களை ஆற்றுவதோ, சாந்தப்படுத்துவதோ, வேரறுப்பதோ மட்டும்தான் பாக்கி வேலையாக இருக்கும். அச்சமயம் உங்கள் விருப்பத்தைப் பற்றி மே. த. வைஸ்ராய் புனராலோசனை செய்வது சாத்தியமாக இருக்கலாம்"

வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசிக்கு 28-ஆம் தேதி காந்திஜி பின் வருமாறு பதில் தந்தி அனுப்பினார்:

"உங்கள் தந்திக்கு வந்தனம். வைஸ்ராயின் முடிவுக்குத் தலை வணங்குகிறேன். எனினும், கோஹத்திலுள்ள முஸ்லிம்கள் விருப்பத்துடனும் நீட்டிய கரங்களுடனும் வரவேற்க ஆவலுடன் இருந்தாலொழிய, ராவல்பிண்டியிலுள்ள ஹிந்து அகதிகளைத் திரும்பிப் போகச் சொல்லித் தூண்டும் எண்ணம் எனக்கு இல்லை என்பதைத் துணிவுடன் வெளியிட விரும்புகிறேன். கோஹத்துக்குப் போக எனக்கு அனுமதி கிடைத்திருக்குமாயின், முஸ்லிம் நண்பர்களுடைய உதவியால் முஸ்லிம்களிடம் எனக்குள்ள நட்பை உபயோகப்படுத்தி, ஓர் சமாதான உடன்பாட்டுக்கு வர உத்தேசித்திருந்தேன். இரு சமூகத்தினருக்கும் இடையே இதய ஒற்றுமையை அதிகாரிகளால் உண்டுபண்ண முடியாது, மற்றவர்களாலேயே முடியும். இதுதான் நான் முன் கொண்டிருந்த அபிப்பிராயம். இப்போதும் அவ்வாறே எண்ணுகிறேன். அதிகாரிகள் மௌனமான, உத்தியோக சம்பந்தமில்லாத பல வழிகளில் நிச்சயமாய் உதவலாம். ஆனால், அவர்கள் அதிகார தோரணையில் ஆயுதம் தாங்கிய ஒரு நடு நிலையைத்தான் உண்டாக்குவார்கள்; அவர்களால் நட்பை ஒருபோதும் உண்டாக்க முடியாது. இது பல தடவைகளிலும் தவறாது நான் கண்ட அனுபவமாகும்.

"பொது மக்களுக்கு, நான் கோஹத்துக்குப் போகப் போவதாக எண்ணம் இருப்பதால், மே. த. வைஸ்ராயின் சம்மதம் தெரிந்து, நமக்குள் நடந்த தந்திப் போக்குவரத்தை வெளியிட விரும்புகிறேன்."

அதற்குப் பதிலாக, அக்டோபர் 28-ஆம் தேதி வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசியிடமிருந்து காந்திஜிக்கு வந்த தந்தி வருமாறு:

"உங்கள் தந்திக்காக வந்தனம். மே. த. வைஸ்ராய் தங்களின் கருத்துக்களைக் கவனித்தார். என் முந்திய தந்தியில் கூறிய விசேஷக் காரணங்களுக்காக அவர் அதே முடிவில் உறுதியாக இருக்க வேண்டியிருக்கிறது. கடிதக், தந்திப் போக்குவரத்தைத் தாங்கள் வெளியிடுவதில் யாதொரு ஆட்சேபணையும் இல்லை."

—'எங் இந்தியா' – 31—10—1924

# 8

# மோசமான ஒரு தீர்மானம்

ஜாமியத்-உல்-தப்ளிக் இஸ்லாம் சமீபத்தில் தாங்கள் செய்த தீர்மானத்தின் மொழிபெயர்ப்பை எனக்குக் கொடுத்து உதவி யிருக்கின்றனர். அதன் விவரம் கீழ் வருமாறு:

"சமீபத்தில் கோஹத்தில் நடந்த சம்பவங்களில் அந்நகரவாசிகளின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பெருஞ்சேதம் விளைவித்த பரிதாபகரமான செயல்கள் அனைத்திற்கும், இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தித் தாக்கி முஸ்லிம் களின் மத உணர்ச்சியைப் புண்படுத்தி அங்கே வெளிவந்த கோபமூட்டக்கூடிய, அருவருக்கத்தக்க பிரசுரத்திற்குக் காரணமாயிருந்த தனி மனிதரோ, அல்லது மனிதர்களோதான் பொறுப்பாளிகள் ஆவர். துப்பாக்கிப் பிரயோகம் செய்து முஸ்லிம்களைக் கொன்ற ஹிந்துக்கள், இச் சங்கடமான நிலையை இன்னும் அதிக மோசமாக்கிய பழிக்காளாவார்கள். இந்த ஜாமியத் ஜாதி மத பேதமின்றி இச் சச்சரவுகளில் உயிர்ச் சேதம், பொருட் சேதம் அடைந்த கோஹத் வாசிகள் அனைவருக்கும் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது. மதம், மத ஸ்தாபகர், மத இயக்கத் தலைவர் இவர்களைப்பற்றிப் பேச்சிலோ, எழுத்திலோ தூஷித்துத் தாக்குவதை நிறுத்தினாலன்றி, இந்தியாவில் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிறுவுவது இயலாத காரியமாகும். ஒரு மத ஸ்தாபனம் என்ற ரீதியில் இவ் விஷயத்தை இந்த ஜாமியத் மகாத்மா காந்திக்கும் மற்ற அரசியல் தலைவர்களுக்கும் எடுத்துக்காட்டுவது தன் கடமை எனக் கருதுகிறது."

இத் தீர்மானத்திற்காக நான் ஜாமியத்தைப் புகழமுடியாது. ஓரவஞ்சனையற்ற விசாரணையின்றியே முக்கிய நடவடிக்கைகளைப் பற்றி இரு கட்சியினரும் முடிவுகட்டிக்கொண்டனர் எனத் தெரிகிறது. "பரிதாபகரமான செயல்கள் அனைத்திற்கும் கோஹத்தில் வெளிவந்த கோபமூட்டக்கூடிய, அருவருக்கத்தக்க பிரசுரத்திற்குக் காரணமாயிருந்த தனி மனிதரோ, அல்லது மனிதர்களோதான் பொறுப்பு" என்பது நிலைநாட்டப்பட்ட உண்மையா? முஸ்லிம்களைச் சுட்டுக் கொன்ற ஹிந்துக்கள் கஷ்டமான நிலைமையை இன்னும் அதிக மோசமாக்கின பழிக்கு ஆளாயினர் என்பதும் விசாரித்துக் கண்டறிந்த முடிவா? இவ்விரு விவரங்களும் தெளிவாய் நிலைநாட்டப்பட்டால், ஹிந்துக்கள் தாங்கள் அடைந்த உயிர்ச்சேதத்திற்காவும் பொருள் நஷ்டத்திற்காகவும் ஜாமியத் காட்டும் எவ்வித அனுதாபத்திற்கும் தகுதியற்றவர்கள் ஆவர். ஏனெனில், அவர்கள் செய்த தீமைக்குப் பலனை அனுபவித்தார்கள். ஆகையால் ஜாமியத், ஹிந்துக்களுக்கு அனுதாபம் காட்டுவது முரண்பாடாகும். "மதம், மத ஸ்தாபகர், மத இயக்கங்கள் இவைகளைப்பற்றி தூஷித்துத் தாக்குவதை நிறுத்தினாலன்றி இந்தியாவில் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிறுவுவது இயலாத காரியமாகும்" என்று எனக்கும் மற்ற அரசியல் தலைவர்களுக்கும் ஜாமியத் சொல்லு

வதன் அர்த்தம் என்ன? ஜாமியத் சொல்லுவது சரியென்ருல், ஒற்றுமை ஏற்படவே முடியாது என்பதை ஜாமியத்தும் மற்ற அரசியல் தலைவர்களும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டியது உண்மையல்லவா? யாரோ ஒருவர் மதத்தைத் தாக்குகிருர் என்பதிலைலேயே ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுவது முடியாத காரியமாகப் போக வேண்டுமா? ஜாமியத் சொல்லுவதன் படி, ஓர் அறிவிழந்த ஹிந்துவோ, முஸ்லிமோ, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படாமல் செய்வதற்குப் போதும்! அதிருஷ்ட வசமாக, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையானது இறுதியாகச் சமயத் தலைவர்களின் கையை எதிர்பார்த்து நிற்கவில்லை; இரு சமூகங்களையும் சேர்ந்த பொதுமக்களின் அறிவறிந்த தன்னல உணர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. இவர்களை எப்பொழுதுமே தவருன வழியில் நடத்திச் சென்றுகொண்டிருக்க முடியாது. அசல் தீர்மானத்தின் வாசகம், மொழிபெயர்ப்பைப்போல இவ்வளவு மோசமாக இராதென நம்புகிறேன்.

## 9

# கோஹத் அகதிகள்

கோஹத்திலிருந்து உயிருக்குப் பயந்து ஓடி ராவல்பிண்டியில் அடைக்கலம் புகுந்துள்ளவர்களை நான் உடனே அங்கே போய்ச் சந்தித்து, அவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டுமென்று என்னை வற்புறுத்தி வருகிருர்கள். இதன் சம்பந்தமான குறிப்புகளை நான் பத்திரிகைகளில் பார்த்தேன். அது போலவே, அகதிகளிடமிருந்து நேரடியாகவும் எனக்குச் செய்திகள் வந்துள்ளன. ஆனல், அந்த அழைப்பிற்கு நான் தற்போது இணங்க முடியாததற்காக மிகவும் வருந்துகிறேன். இடைவிடாது தொடர்ந்த பிரயாணத்தைத் தாங்கக் கூடிய அளவிற்கு என் உடல் நிலைமை இன்னும் அபிவிருத்தி அடையவில்லை. வங்காள அடக்குமுறையை யொட்டி பம்பாயில் நடக்கப்போகும் மகாநாட்டிற்கு நான் செல்லுவதை ஒத்திவைப்பதற்கில்லை. எனினும், பம்பாயிலிருந்து திரும்பி வந்ததும், நான் உடனே ராவல்பிண்டிக்குச் செல்ல இயலுமென நம்புகிறேன். அவர்கள் இடைவிடாது என் ஞாபகத்தில் இருந்து வருகிருர்கள் என்று நான் அவர்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன்.

உண்ணாவிரதம் முடிந்த பிறகு பிரயாணம் செய்ய எனக்குச் சிறிது சக்தி ஏற்பட்டதும், கோஹத்திற்குச் செல்ல நான் எல்லா ஏற்பாடுகளும் செய்தேன். என்னை அதிகாரிகள் அனுமதித்திருந்தால், சில ஹிந்து-முஸ்லிம் நண்பர்களுடன் நான் அங்கே சென்று சமாதானம் ஏற்படும்படி செய்ய முயற்சிப்பது எனது முதற் கடமையாக இருந்திருக்கும். அப்போது என்னல் பலனை அளிக்கக்கூடிய பணி செய்திருக்க முடியும். கோஹத் ஹிந்து-

முஸ்லிம்களிடையே சமாதானம் ஏற்படும்படி செய்யும் முயற்சியில் எனது தாழ்மையான பங்கை நான் செய்திருப்பேன். கோஹத்திற்குச் செல்லக்கூடாதென்று அதிகாரிகள் என்னைத் விதப் பலனும் விட்டதால், ராவல்பிண்டிக்குச் செல்லுவதால் எவ் தடுத்து ஏற்படுமென நான் எண்ணவில்லை.

அகதிகளுக்குப் பல நண்பர்கள் உதவி புரிந்து வருகிறார்கள் என்பதை நான் அறிவேன். பண்டித மாளவியா, அவர்கள் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார் என்பதையும் நான் அறிவேன். அகதிகளுக்கு ஆறுதல் கூறுவதைக் காட்டிலும் நான் சிறிது அதிக உதவி செய்யமுடியும் என்பதை உணரும் போது, நான் ராவல்பிண்டிக்கு நிச்சயமாகச் செல்லுவேன். கோஹத் பிரச்னை அகில இந்தியப் பிரச்னை என்பதை நான் அகதிகளுக்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். கோஹத் பிரச்னை ஒழுங்காகவும், கௌரவமாகவும், நேர்மையாகவும் தீர வேண்டும் என்பதில் இந்தியாவில் உள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். அகதிகள் எத்தகைய சமரசத் தீர்ப்பை ஒப்புக்கொள்ளுவதாக இருந்தாலும், அவ்விஷயமாக முதலில் ஹிந்து-முஸ்லிம் தலைவர்களின் சம்மதத்தைப் பெறவேண்டும். அரசாங்கத்திற்கும் நான் அதே ஆலோசனையை மரியாதையுடன் கூறத் துணிகிறேன். அரசாங்கத்தின் சமரச யோசனைகள் என்று பத்திரிகைகளில் வந்த ஷரத்துக்கள் சரியல்ல என அரசாங்கம் மறுத்திருப்பதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையையே தாங்கள் விரும்புவதாக அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பிரகடனம் செய்திருக்கிறார்கள். இரு சமூகங்களும் ஒப்புக்கொள்ளுவதற்காக அவர்கள் தயாரிக்கும் எந்தச் சமரச ஷரத்துக்கள் பற்றியும் அவர்கள் பொது மக்களின் சம்மதத்தைப் பெறுவதே, அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு அறிகுறியாக இருக்கும்.

—'எங் இந்தியா' —20—11—1924

# 10

# கோஹத் கோர சம்பவங்கள்

இந்திய அரசாங்கத்தார் கோஹத் கோர சம்பவங்களைப் பற்றிய பேச்சை முடித்துக்கட்டி விட்டார்கள். பண்டித மாளவியாஜிக்கு வைஸ்ராய் அனுப்பிய பதிலிலிருந்து, இப்பொழுது சர்க்கார் வெளியிட்டுள்ளதைப் போன்றதொரு தீர்மானத்தைத் தான் பொதுமக்கள் எதிர்பார்த்தார்கள். சர்க்காரின் அசைக்க முடியாத சர்வாதிகாரத்தையும், பொதுமக்களின் எண்ணத்தை அவர்கள் எவ்வளவு கேவலமாக மதிக்கிறார்கள் என்பதையும் இத் தீர்மானம் காட்டுகிறது. தேச மக்களின் சக்தியற்ற

நிலையையும் இது தெளிவாக்குகிறது. கோஹத் படுபழிக்கு ஹிந்து-முஸ்லிம் பிணக்கைவிட, அங்குள்ள முழு மோசமான, திறமையற்ற ஸ்தல அரசாங்கமே காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது. உயிரையும் பொருளையும் பாதுகாக்கும் முதல் கடமையை அதிகாரிகள் செய்திருப்பின், பட்டப் பகலில் வேண்டுமென்றே ஆரம்பித்துத் தொடர்ந்து நடத்திய அழிவு வேலைகளைச் சுலபமாகத் தடுத்திருக்கலாம். ஆனால், நீரோவைப் போல், ரோம் எரிவதைக் கண்டு அதிகாரிகள் வேடிக்கை பார்த்துக் கூத்தாடினார்கள். போதிய உதவி பலம் இல்லை என்று அதிகாரிகள் சொல்லிக் கழிக்க முடியாது. போதுமான ஆட்களும் சாமான்களும் கைவசம் இருந்தன. நிலைமை அவர்கள் கையிலிருந்து எப்பொழுதுமே மீறிவிடவில்லை. மீறியிருந்தால், அதற்கு அவர்களின் பாதகமான அசட்டைப் புத்தியும், ஈவிரக்க மற்ற தன்மையுமே காரணமாகும்.

ஸ்தல அதிகாரிகளின் அசட்டையை, அல்லது அதைவிடக் கேவலமான நடத்தையை 'வீரம், நிதான புத்தி' என மாற்றிக் காட்டி, மேற்பூச்சுப் பூச இந்திய அரசாங்கத்தினர் முற்படுகிறார்கள். இதன் மூலம் இவர்களும் இந்தப் பழிச் சொல்லுக்குப் பங்காளிகளாகி இருக்கிறார்கள்.

பகிரங்கமான, சுதந்திரமான முழு விசாரணை நடக்குமென யாரும் எதிர்பார்ப்பார்கள். ஆனால், பொதுமக்கள் பிரதிநிதித்துவம் வகிக்காத சர்க்கார் இலாக்காவின் விசாரணைக்கு மேல் வேறொன்றும் நடக்கவில்லை. இதன் முடிவுகள் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற முடியா. நானும் என் முஸ்லிம் நண்பர்களும் சந்தித்த ராய் பஹதூர் சர்தார் மகான் சிங் உள்பட எல்லா அகதிகளும், லாலா ஜீவன்தாஸ் என்பவரால் மிக இழிவான சொற்கள் நிறைந்த துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டதாக ஒத்துக்கொள்ளுகின்றனர். ஆனால், ஹிந்துக்கள் இதற்கு வேண்டிய அளவு நஷ்ட ஈடு செய்தார்களாம். முஸ்லிம்கள் தங்களுடைய நாச வேலைகளைத் தொடங்கிய பின்னரே, ஹிந்துக்கள் தற்காப்புக்காகச் சுட்டார்கள் என இவர்கள் சொல்லுகிறார்கள். துண்டுப் பிரசுரம் சம்பந்தமாகப் போதிய நஷ்டஈடு செய்யப்படவில்லை; ஹிந்துக்கள் சுட்டு முஸ்லிம்களைக் கொன்ற பிறகுதான் முஸ்லிம்களின் நாச வேலையும் துப்பாக்கிப் பிரயோகமும் ஆரம்பமாயின என்று கோஹத் முஸ்லிம்களின் சார்பாகக் கூறப்பட்டது. துரதிருஷ்டவசமாக, கோஹத் முஸ்லிம்கள் ராவல்பிண்டிக்கு வராததால், உண்மையை நாங்கள் காண முடியவில்லை. ஆகையால் இந்திய சர்க்கார் குற்றத்தைப் பங்கீடு செய்த முறை தவறு என்று சொல்ல முடியவில்லை. ஆனால், அவர்கள் செய்துள்ள முடிவுகள் எல்லாம் பட்சபாதமற்றவை, நியாயமானவை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. கோஹத் ஹிந்துக்கள் அவற்றை ஒப்புக்கொண்டு அவற்றின்படி நடக்க வேண்டுமென எதிர்பார்க்க முடியாது. முஸ்லிம்களின் வாதத்தை அவை ஆதரிப்

பதாகத் தோன்றுவதால், கோஹத் முஸ்லிம்களுக்கு இம் முடிவுகள் ஆறுதலளித்துவிட முடியாது. ஏனெனில், இந்திய சர்க்கார் இந்த நிமிஷத்திற்கு மட்டும் தங்களை ஆதரிப்பதுபோல் தோன்றுவதாலேயே அவர்களின் முடிவுகளை மெச்சி முஸ்லிம் பொது மக்கள் பேசுவது தவறாகும். திருப்தியளிக்கக் கூடிய ஒரு முடிவாக இருக்க வேண்டுமாயின், அது பட்சபாதமற்றவர்கள் என்று ஊரறிந்த ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து செய்ததாக இருக்க வேண்டும். எனவே, இந்திய அரசாங்கத்தின் தீர்ப்பு இரு சமூகத்தினருக்கும் ஓர் அறைகூவலாகும். இதன்படி, வெகு கேவலமான நிர்ப்பந்தங்களுக்குப் பணிவதன் மூலமே ஹிந்து அகதிகள் கோஹத்துக்குத் திரும்ப முடியும். அது, தங்களது ஹிந்து சகோதரர்களின்மீது இழிவான நிபந்தனைகளைச் சுமத்தும்படி முஸ்லிம்களை இழிவான முறையில் தூண்டுவதாக இருக்கிறது. அவமானத்துடன் கோஹத்தில் செல்வமாய் வாழ்வதைவிட, கோஹத்துக்கு வெளியே மானத்துடன் எளிய வாழ்வு வாழ்வதையே ஹிந்துக்கள் விரும்புவர் என நம்புகிறேன். மிகச் சிறுபான்மையினராக இருக்கும் கோஹத் ஹிந்து சகோதரர்களை இழிவுபடுத்துவதில் அரசாங்கத்தாருக்கு உதவ மறுத்து, அவர்கள் வீசிய வலையினின்றும் தப்பும் ஆண்மை முஸ்லிம்களுக்கு இருக்குமென நம்புகிறேன். முதல் குற்றமும் தூண்டுதலும் யாருடையதாயினும், ஹிந்துக்கள் கோஹத்திலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர் என்பது தெளிவான உண்மை. ஆகையால், முஸ்லிம்கள்தான் இப்போது ராவல்பிண்டிக்குப் போய், துரத்தப்பட்டு ஓடியவர்களை அன்புடன் கோஹத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அவர்களுடைய உயிருக்கும் பொருளுக்கும் சேதம் வராதென்று முழு உத்தரவாதம் அளிக்க வேண்டும். முஸ்லிம்கள் இவ்வாறு செய்வது எளிதாகுமாறு வெளியே இருக்கும் ஹிந்துக்கள் நடந்துகொள்ள வேண்டும். வெளியிலிருக்கும் முஸ்லிம்கள் கோஹத்தில் இருக்கும் தங்கள் மதத்தினரை ஹிந்துச் சிறுபான்மையினருக்குத் தாங்கள் செய்ய வேண்டிய மூலாதாரமான கடமையை உணர்ந்துகொள்ளுமாறு வற்புறுத்த வேண்டும். ஹிந்து–முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுத்த எடுக்கும் முயற்சிகளின் வெற்றி, இந்தத் தருமசங்கடமான பிரச்னையை நியாயமாகவும், கௌரவமாகவும் தீர்ப்பதையே பெரும்பாலும் பொறுத்திருக்கிறது.

ஒத்துழைப்போரும் ஒத்துழையாதாரும் ஒருவருக்கு விரோதமாக ஒருவர், சர்க்காரின் பாதுகாப்பைப் பெறுவதை எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கிறோமோ, அவ்வளவு சீக்கிரத்தில் பரிகாரம் கிடைக்கும். அந்தப் பரிகாரம்தான் நிலைத்தும் இருக்கும். இந்த முறையில் பார்த்தால், கோஹத் அதிகாரிகளின் அசட்டை வரவேற்கத்தக்கதே. ஹிந்துக்கள், அதிகாரிகளின் ஆதரவை நாடாமல் இருந்திருந்தால், தங்கள் வீட்டைவிட்டு வெளியேறாமலிருந்து, தங்களைக் காத்துக்கொள்ளவும்கூட ஒன்றும் செய்யாமல், அல்லது தங்களையும் உற்றார் உறவினரையும், உடைமைகளையும் பலாத்கார முறையில் பாதுகாக்கும் முயற்சியில் கரியாக்கி

விட்டிருந்தால், சரித்திரம் வேறுவிதமாகவும் அதிகக் கௌரவமாகவும் எழுதப்பட்டிருக்கும். சாதி மதப் பூசல்களில் ஒருவரும் தங்களின் உதவியை எதிர்பார்க்க வேண்டாம் என்று அரசாங்கத்தார் தீர்மானம் செய்வதை நான் வரவேற்பேன். ஒவ்வொரு பிரிவினரும் மற்றவர்கள் தங்களுடைய சுதந்திரத்தில் தலையிடாதபடி தங்களையே பாதுகாக்கக் கற்றுக்கொண்டால், நாம் சுயராஜ்யப் பாதையில் முன்னேறுவோம். சுயராஜ்யம் எனப்படும் சுயப் பாதுகாப்பிலும், சுய மரியாதையிலும் இது நல்ல பயிற்சியாகும். பாதுகாத்துக் கொள்ளுவதில் இரு வழிகள் இருக்கின்றன. தன்னைப் பாதுகாக்காமலே எவ்வித விபத்துக்கும் அஞ்சாமல் தன் இடத்திலேயே நிற்பது சர்வ உத்தமமான முறை; அது சிறந்த பயனைத் தரும். அதற்கு அடுத்தபடியாக நல்லதும், அதே அளவு கௌரவமுமுள்ள முறை தன்னைக் காப்பதற்காக வீரப் போர்புரிந்து, ஆபத்து நிறைந்த இடங்களில் கூடி முன் அணியில் நிற்பது. நேர்த் தாக்குதல்கள் சில நடந்துவிட்டால், ஒருவர் மண்டையை ஒருவர் உடைப்பதனால் பயனில்லை என்று இரு கட்சியினரும் சீக்கிரம் தெரிந்துகொள்ளுவார்கள். இவ்வாறு சண்டையிடுதல் கடவுள் பணியல்ல; சைத்தானின் சேவையே என்பதையும் அறிவர்.

ராவல்பிண்டியில் அடைக்கலம் புகுந்துள்ளோருக்கு நான் கொடுத்த வாக்குறுதியை மறு முறை சொல்லிவிட்டு, இக் கட்டுரையை முடிக்கிறேன். கோஹத் முஸ்லிம்கள் அன்புடன் அழைக்கும்வரையில், இவர்கள் கோஹத்துக்குத் திரும்பிப் போகாமல் இருந்தார்களானால், என் கைமேலிருக்கும் வேலைகள் தீர்ந்த உடனே, மௌலானா ஷவுகத் அலியுடன் நான் ராவல் பிண்டிக்குப் போவேன். இரு கட்சியினருக்குள்ளும் சமாதானம் உண்டுபண்ண முயலுவோம். தவறிவிட்டால், இவர்களுக்குச் சரியான ஜீவனம் கண்டுபிடிக்க உதவுவோம்.

—'எங் இந்தியா' – 18—12—1924

# 11

# கோஹத் ஹிந்துக்கள்

சென்ற செப்டம்பர் மாதம் நடந்த கோஹத் கோர நிகழ்ச்சிகள் சம்பந்தமாக மௌலானா ஷவுகத் அலியும் நானும் கண்டறிந்த உண்மைகளைப் பற்றிய அறிக்கை* ஒன்றை வெளியிடு

* மகாத்மா காந்தியும் மௌலானா ஷவுகத் அலியும் வெளியிட்ட அறிக்கை 1925-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ஆம் நாள் பிரசுரமாயிற்று. அவ்வறிக்கையில் காந்திஜி பின்வருமாறு கூறியிருந்தார்:

"சில ஹிந்து ஆண்களும் விவாகமான பெண்களும் மதம் மாற்றப்பட்டனர். ஆனால், ஹிந்துக்கள் கோபம்கொண்டு சில நடவடிக்கைகள் எடுத்தனர். இது முஸ்லிம்

வோம் என்று இவ்வார 'எங் இந்தியா' பத்திரிகையைப் பலர் தேடிப் பார்ப்பார்கள். ஆவலுள்ளவர்கள் ஏமாற்றம் அடையும் படி செய்வதற்காக வருந்துகிறேன். மௌலானா ஷவுகத் அலி இப்போது என்னுடன் இல்லை. அவரைப் பார்க்குமுன் நான் எதையும் வெளியிடக்கூடாது. என் கருத்துக்களைப் பற்றி நான் ஏற்கனவே பண்டித மோதிலால்ஜியுடனும், பண்டித மாள வியாஜியுடனும், கடைசியாக ஹக்கீம் சாஹிப் அஜ்மல்கான், டாக்டர் அன்சாரி, அலி சகோதரர்களுடனும் விவாதித்துவிட்டேன் என்பதை வாசகர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சாபர்மதி நோக்கி வந்துகொண்டிருக்கையில், அவைகளை எழுதியும் முடித்து விட்டேன். எனது குறிப்புகள் உடனே மௌலானா ஷவுகத் அலிக்கு அனுப்பப்படும். அவர் செய்யும் கூட்டல், குறைத்தல் களுடன் நான் அவற்றை வெளியிட முடியுமென நம்புகிறேன். நாங்கள் கண்ட முடிவுகள் ஒருபுறமிருக்க, ஹிந்துக்களுக்கு நான் முன்பு கூறிய ஆலோசனையையே மீண்டும் சொல்லுகிறேன். ஹிந்துக்களின் தற்போதைய நிலையில் நான் இருந்தால், சர்க்கார் தலையீடின்றி முஸ்லிம்கள் ஒரு கௌரவ உடன்படிக்கைக்கு வந்தா லன்றி, நான் கோஹத்துக்குத் திரும்பமாட்டேன். தற்சமயத்தில் இக்கௌரவ உடன்படிக்கைக்கு இடமில்லை. ஏனெனில், கோஹத்

---

களுக்குக் கோபமூட்டியது. 1924 செப்டம்பர் 9-ஆம் தேதி கோஹத்தில் நடந்த சம்பவங் களுக்கு இது முதல் காரணம். மற்றொன்று, கோஹத் முஸ்லிம் வியாபாரிகளாகிய பராக்கர்கள் கோஹத் ஹிந்துக்களை அங்கிருந்து பலாத்காரமாக வெளியேற்றிவிட விரும் பியது. சர்தார் மகான் சிங்கின் மகன் மணமுடித்த ஒரு முஸ்லிம் பெண்ணைத் தூக்கிச் சென்றதாகச் சொல்லப்படும் செயலினால் முஸ்லிம்களுக்கு உண்டான வருத்தம் மூன்றா வது காரணமாகும்." சனாதன தரும சங்கக் காரியதரிசி லாலா ஜீவன்தாஸ் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் தூஷணையாக இருந்தது. எனினும், ஹிந்துக்கள் பின்பு போதிய அளவு நஷ்ட ஈடு செய்துவிட்டனரெனக் காந்திஜி கண்டார். செப்டம்பர் 10-ஆம் தேதியன்றும் அதை அடுத்த சில நாட்களிலும் முஸ்லிம்கள் ஹிந்துக்களின் மேல் கோபாவேசமாகப் பாய்ந்ததற்கு ஒரு காரணமுமில்லை என்பது காந்திஜியின் முடிவு. தங்கள் உயிரும் உடை மைகளும் அபாயத்திற்குள்ளாகி இருக்கின்றனவென்றும், முஸ்லிம்கள் தங்களைச் சூறை யாடுவதற்குத் தயாராகி வருகின்றனர் என்றும் ஹிந்துக்கள் பன்முறை எச்சரித்தனர். இதைக் கவனியாது புறக்கணித்தது அங்கிருந்த அதிகாரிகளின் உணர்ச்சியற்ற அலட் சிய புத்தியையும், திறமையின்மையையும், பலமின்மையையும் காட்டுகிறது என்று அர சாங்கத்தைப் பொறுத்த அளவில் காந்திஜி சொன்னார். ஹிந்துக்களைப் பலாத்காரமாக மதம் மாற்றியதை அவர் கண்டனம் செய்தார்.

மௌலானா ஷவுகத் அலி, தமது அறிக்கையில் முஸ்லிம்களைப் போலவே ஹிந் துக்களும் அந்நிகழ்ச்சிக்குப் பொறுப்பாளிகள் என வெளியிட்டார். ஹிந்துக்கள் சாமர்த்தியசாலிகள்; அதிகம் படித்தவர்கள். கோஹத் முஸ்லிம்களைக் கெடுத்து அவர் கள் வலுத்து வந்தனர். அதிகாரிகள் ஹிந்துக்களின் பலம் அதிகரிப்பதில் ஆவல் காட்டா விடினும், முஸ்லிம் மேன்மக்களை இன்னும் அதிக பலவீனமாக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். அங்கே பலாத்காரமான மதமாற்றங்கள் இருந்தன என்ப தையும் ஷவுகத் அலி மறுத்தார். குடுமியை எடுத்து முஸ்லிம் குல்லாயை ஹிந்துக்கள் உபயோகிக்கும்படி செய்தது, ஆவேசங்கொண்ட முஸ்லிம் கூட்டத்தினிடமிருந்து ஹிந்து நண்பர்களைக் காப்பாற்றச் சில முஸ்லிம்கள் செய்த வேலையே என்றும் மௌலானா ஷவுகத் அலி அறிக்கையில் குறிப்பிட்டார்.

-பாபு ராஜேந்திரப் பிரசாத்

முஸ்லிம்களுக்குத் தற்போது வழிகாட்டிக்கொண்டிருக்கும் முஸ்லிம் காரியக் கமிட்டியினர் எங்கள் முன் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க மறுத்துவிட்டனர். ஹிந்துக்களின் தருமசங்கடமான நிலையை நான் உணர்ந்துள்ளேன். தங்களுடைய சொந்த சொத்துக்களை இழக்க அவர்கள் விரும்பவில்லை. மௌலானா சாகிபும் நானும் சமாதானம் செய்துவைப்பதில் தோல்வியடைந்துவிட்டோம். முக்கியமான முஸ்லிம்களைக் கூப்பிட்டு விவாதிக்க விரும்பினோம். அதிலும் தோல்விதான் அடைந்தோம். எங்கள் முயற்சியினால் அண்மையில் வெற்றி கிடைக்கும் என்று கூற முடியாது. இந்நிலையில் ஹிந்துக்களுக்கு, தங்களுக்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதைச் செய்ய உரிமை உண்டு. நாங்கள் தோற்றுவிட்டபோதிலும், நான் ஒரே வழியைத்தான் காட்ட முடியும். "கௌரவத்திற்கும் சுயமரியாதைக்கும் பங்கமில்லாமல் முஸ்லிம்கள் உங்களைக் கோஹத்திற்கு அழைத்துச் சென்றாலொழியப் போகாதீர்கள்." எவருடைய யோசனைக்கும் காத்திராது தங்களையே நம்பியிருப்பவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு இது ஆறுதலளிக்காது என்பது எனக்குத் தெரியும். எனது கருத்துக்களைப் பண்டித மாளவியாஜியிடம் தெரிவித்துவிட்டேன். அவர்தான் முதலிலிருந்து அவர்களுக்கு வழிகாட்டி வருகிறார். அவருடைய யோசனைப்படிதான் அவர்கள் நடக்க வேண்டும். லாலாஜி பிண்டிக்கு வந்திருந்தார். ஆனால், துரதிருஷ்டவசமாக, அவர் படுத்த படுக்கையிலேயே இருக்க வேண்டியதாகிவிட்டது. நான் மௌலானா ஷவுகத் அலிக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் எனது முடிவான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். அது கோஹத் ஹிந்துக்களுக்கு ஆறுதல் அளிக்காதென முன்னரே ஒத்துக்கொள்ளுகிறேன். நான் உடைந்த ஒரு நாணல் குழல் போலாகியிருக்கிறேன். என்னை நம்புவதில் பயனில்லை.

கோஹத்துக்கு வெளியிலிருக்கும் காலத்தில் அகதிகள் என்ன செய்ய வேண்டும் என்று நான் சொன்ன யோசனையில் எனக்குத் தடுமாற்றம் எதுவும் இல்லை. உறுதியான கை கால்களையுடைய ஆண்களும் பெண்களும் தானத்தினால் பிழைப்பது ஒழுக்கக்கேடு என்று என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை. தாங்களாகவோ அல்லது அங்குள்ளவர்களின் உதவியுடனோ. அவர்கள் ஏதாவது வேலை கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் பஞ்சடிக்கலாம்; நூற்கலாம்; நெசவுகூடச் செய்யலாம். இன்னும் அவர்கள் வேறு எவையேனும் பயனுள்ள வேலைகளையும் செய்யலாம். என் கருத்து என்னவெனில், உடல் உரமுள்ளவர் எவரும், ஆணோ பெண்ணோ, தானத்தால் உயிர் வாழக்கூடாது. வேலை செய்ய விரும்புகிறவர்கள் அனைவருக்கும் நன்கு அமைக்கப்பட்ட சமூகத்தில் வேலையிருக்க வேண்டும். தேசத்தால் காப்பாற்றப்படும் அகதிகள் ஒவ்வொரு நிமிஷத்திற்கும் கணக்குக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். 'சோம்பேறி சும்மாயிரான்; ஏதேனும் தீச் செயலில் ஈடுபடுவான்' என்பது வெறும் பள்ளிப் பழமொழியல்ல. இதில் ஆழ்ந்துள்ள ஓர் உண்

மையை ஒவ்வொருவரும் அனுபவத்தில் காணலாம். பணக்காரர், ஏழை, உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கிற வேறுபாடு வேண்டாம். ஏழ்மையில் எல்லோரும் சரிநிகர் சமானம். பணக்காரர்களும் வசதியுடையவர்களும் பங்கீடு பெருவிட்டாலும், பயனுள்ள உழைப்பில் ஈடுபடுவதன் மூலம் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். ஆபத்துக்காலத்தில் உதவியாக இருக்கக்கூடிய மாதிரி தொழில் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தெரிந்திருந்தால், அந்தத் தேசத்திற்கு அது கணக்கிட முடியாத அளவு நன்மையாக இருக்கும் அல்லவா! அகதிகள் அனைவரும் நூற்பவர்களாகவோ, பஞ்சடிப்பவர்களாகவோ, அல்லது நெசவாளிகளாகவோ இருந்திருந்தால், அவர்களின் வாழ்க்கை உயர்ந்த மாதிரியாக இருந்திருக்கும். அகதிகள் தங்கியிருக்கும் இடம் அப்பொழுது தேனீக் கூட்டைப்போல் தோற்றமளித்திருக்கும். இதைக் காலவரையில்லாது நீடித்திருக்கலாம். இவர்கள் உடனே போக முடிவு செய்யவில்லையானால், இன்னும் காரியங்களைச் சீர்செய்ய முடியும். உலர்ந்த உணவு கொடுப்பது தவறு. காரியத்தை நிர்வகிக்கும் கமிட்டிக்கு இது எளிதாக இருக்கலாம். ஆனால், அகதிகளிடையே இது வீண் பண்டச் சேதத்தையும் ஒழுங்கின்மையையும் மிகுதிப்படுத்துகிறது. யுத்த வீரர்களைப்போல், இவர்கள் கட்டுப்பாட்டிற்கு உட்படவேண்டும். எழுந்திருத்தல், குளித்தல், துவைத்தல், பிரார்த்தனை செய்தல், சாப்பிடுதல், வேலை செய்தல், தூங்கப் போதல் எல்லாவற்றையும் குறித்த நேரங்களில் செய்ய வேண்டும். இவர்கள் ராமாயணம் அல்லது அதைப்போன்ற வேறு நூலொன்றைப் படிக்கலாம். இதற்கெல்லாம் நினைவு, கவனம், அக்கறை, சலியாத உழைப்பு இவை வேண்டும். இவைகளிருப்பின், இப்பெரும் துக்க நிகழ்ச்சியைக் கூடக் கடவுள் மறைவாக அருளிய வரப்பிரசாதமாக்கிக்கொண்டு விடலாம்.

—'எங் இந்தியா' – 12—2—1925

## 12

# மீண்டும் வைஸ்ராய் தடை

வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசிக்கும் எனக்கும் நடந்த பின்வரும் தந்திப் போக்குவரத்தை இங்கே வெளியிடுகிறேன்:

வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசிக்கு அனுப்பிய தந்தி பின்வருமாறு:

10, பிப்ரவரி 1925

"மார்ச்சு ஆரம்பத்தில் கோஹத்திற்குச் செல்ல என்னையும் என் சகாக்களையும் அனுமதிப்பது சாத்தியமென்று மே. த. வைஸ்ராய் இப்பொழுது கருதுகிறாரா?"

மேற்கண்ட தந்திக்கு வைஸ்ராயிடமிருந்து கிடைத்த பதில்:

13, பிப்ரவரி 1925

"உங்கள் தந்திக்காகவும், அதை அனுப்பத் தூண்டிய உங்களுடைய கண்ணியமான போக்கிற்காகவும் உங்களுக்கு அவர் சார்பில் நான் நன்றி செலுத்த வேண்டுமென வைஸ்ராய் விரும்புகிறார். உங்கள் விருப்பத்திற்கு இணங்க முடியுமானால் வைஸ்ராய் மகிழ்வடைந்திருப்பார். ஆனால், சர்க்கார் தலையீடின்றி முஸ்லிம்களோடு கௌரவமான உடன்படிக்கைக்கு வந்தாலன்றி, கோஹத்துக்குத் திரும்பக்கூடாதென்று கோஹத் ஹிந்துக்களுக்கு நீங்கள் இப்பொழுது 'எங் இந்தியா' வில் கூறியுள்ள யோசனை, அவரது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. சமீபத்தில் கோஹத்தில் சமரசம் ஏற்படுத்தப்பட்டது. வைஸ்ராய் இதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டார். இதிலிருந்து நிலைத்த சமாதானம் தோன்றும் என்று அவர் நம்புகிறார். நீங்கள் இப்போது கோஹத்திற்குப் போனால், உங்கள் செல்வாக்கு சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையைத் தகர்ப்பதில் பயன்படும் என்று உங்கள் கட்டுரையினின்று வைஸ்ராய் ஊகிக்கிறார். ஆதலால், உங்கள் விருப்பத்துக்கு இசைவது எவ்வளவு கஷ்டம் என்பதை நீங்களே உணருவீர்கள் என்பது வைஸ்ராயின் நிச்சயமான கருத்தாகும்."

வைஸ்ராய் அந்தரங்கக் காரியதரிசிக்கு இரண்டாவது தந்தி:

19, பிப்ரவரி 1925

"தந்திக்கு வந்தனம். 'எங் இந்தியா'வில் குறிப்பிட்டுள்ளதில் நான் லட்சியத்தைச் சொல்லியிருக்கின்றேன். தொடர்ந்துள்ள வழக்குகளை வாபஸ் பெறும் வேலையைத் தடை செய்யும் எண்ணம் எனக்கு இல்லை. உண்மைச் சமாதானம் ஏற்படுத்துவதே எனது நோக்கம். இது சர்க்கார் தலையிடுவதால் ஏற்படாது. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், இது உள்ளிருந்து தனிப்பட்டவர்கள் மூலம் தானே தோன்றும் முயற்சியின்றி நடைபெறாது. அமைதியை வளர்க்கும் அளவுக்கு நாங்கள் தலையிடுவது அரசாங்க முயற்சிக்கு உதவியாகத்தானிருக்கும். தயவு செய்து சாபர்மதிக்குப் பதில் அனுப்புங்கள்."

மேற்கண்ட தந்திக்கு வைஸ்ராயின் பதில்:

22, பிப்ரவரி 1925

"உங்கள் தந்திக்கு நன்றி கூறும்படி வைஸ்ராய் விரும்புகிறார். இரு சமூகங்களையும் சேர்ந்த தனிப்பட்ட மனிதர்களின் உதவியினால்தான் இவ்வளவு உழைப்புக்குமேல் இந்த உடன்படிக்கை சாத்தியமாயிற்று. இரு சமூகத்தினரும் விட்டுக்கொடுத்தே இந்த முடிவிற்கு வந்துள்ளனர். இதில் ஏதாவது மாறுதல் உண்டுபண்ணினால், உடன்படிக்கையும் சீர்குலைந்து போகும். இந்த உடன்படிக்கையின் அடிப்படையில்தான், நீண்ட இதய சோதனையின் பிறகு, வைஸ்ராய் வழக்குகளை வாபஸ் செய்ய ஒத்துக்கொண்டார். வைஸ்ராய் அமைதியை நாடும் உங்கள் விருப்பத்தைப் பாராட்டுகிறார். எனினும், உங்கள் விஜயம், விஷயங்களை மறுபடியும் கிளப்பிவிடும் என அவர் நினைக்கிறார். ஆகையால், அவருக்கு இது அதிக வருத்தத்தைத் தருகிறதாயினும், அவருடைய முந்திய முடிவையே உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது."

இந்த உடன்படிக்கை கெட்டதாக இருப்பதால், எனது கோஹத் விஜயம் மறுபடியும் இதைக் கிளப்பிவிடலாம் என்பது உண்மைதான். இந்த உடன்படிக்கை வலுக்கட்டாயத்தால் ஏற்படுத்தப்பட்டது. வழக்குகள் தொடரப்படுமென இரு பக்கத்தாரையும் மிரட்டினர்கள். இரு கட்சிகளும் தங்களுடைய விருப்பப்படி செய்துகொண்டதல்ல இது. ஆதலால், அவர்களுக்குத் திருப்தியளிக்காது. மௌலானு ஷவுகத் அலியும், ராவல்பிண்டியில் சந்தித்த ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இதையே சொன்னர்கள். நான் கோஹத்தைப் போய்க் காணுதல், எதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் கட்சிகளுக்குள் நிச்சயமாக இன்னும் அதிக விரோதத்தை உண்டாக்காது. ஆதலால், என்னை முஸ்லிம் நண்பர்களுடன் கோஹத்திற்குப் போக அனுமதித்திருந்தால், வைஸ்ராய் என்னைப்போல இதயபூர்வமாக விரும்புவதாகச் சொல்லும் அமைதியை, அது இன்னும் அதிகம் வளர்த்திருக்கும். ஆகையால், குழப்பம் அதிகமாய் இருந்த சமயம் தடை செய்ததைப் புரிந்துகொண்ட என்னல், இச் சமயத்தில் போகக் கூடாது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் உத்தரவு கேட்காமல் அல்லது தெரியப்படுத்தாமல் கோஹத்திற்குப் போக வேண்டும் என்றும், தடையுத்தரவு வந்தால் அதைப் பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்றும் சொன்ன நண்பர்கள் பலர். இம் மாதிரித் தடையுத்தரவுகள் எதையும் மீறிச் சிறை செல்லத் தயாராக இருந்தாலன்றி, நான் அவ்வாறு செய்வதற்கில்லை. இப்படிச் செய்வதற்குத் தேசத்தின் சூழ்நிலை ஏற்றதாக இல்லை. ஆகையால், நான் இந்த ஆபத்தான செய்கையைச் செய்யத் துணியவில்லை. சட்ட மறுப்பில் கொண்டுபோய்விடும் எந்தச் செயலிலிருந்தும் நான் யோசித்தே விலகிக்கொண்டு வருவதை அதிகாரிகள் பாராட்டுவார்கள் என நம்புகிறேன். மக்களிடையே பலாத்காரம் மறைமுகமாகவேனும் பரவுவதற்கு உதவும் எல்லா நடவடிக்கைகளையும் மனித முயற்சியாலான அளவுக்கு விலக்குவதே எனது நோக்கமாகும். ஆனல், விளைவுகளைப்பற்றிச் சிந்தனை செய்வதை முற்றிலும் புறக்கணித்து விட்டுக் கடமை என மதித்து நான் அகிம்சை எதிர்ப்புச் செய்ய வேண்டிய காலம் ஒன்று வந்தே தீரும். அத்தகைய சமயம் எப்பொழுது வரும் அல்லது வரக்கூடும் என்று எனக்கே தெரியாது. அது வரலாம் என்பது மட்டும் தெரியும். காலம் வரும்பொழுது நான் பின்வாங்க மாட்டேன் என்பதை நண்பர்கள் அறிவார்கள். அதுவரை பொறுக்கும்படி நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

**'எங் இந்தியா' – 26—2—1925**

# 13

## பரஸ்பர நட்பு அவசியம்

*பெல்காம் 39-ஆவது இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபைக்கூட்டத்தில் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்திக் காந்திஜி கீழ்வரு மாறு குறிப்பிட்டார்:*

ராட்டையைவிட ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் முக்கியத் துவம் குறைந்ததல்ல. இது நமது உயிர்நாடியாகும். இதைப் பற்றி அதிகம் பேச வேண்டியதில்லை. சுயராஜ்யத்திற்கு இது இன்றியமையாதது என்பது ஏறக்குறைய எவரும் ஏற்றுக்கொள் ளும் விஷயம். முற்றிலும் ஹிந்து மயமான இந்தியா அல்லது முஸ்லிம் மயமான இந்தியா உருவாகாவிடில், இப்போதுள்ள பிரிட்டனை நம்பி வாழும் நிலையே நீடித்தல் நலம் எனக் கருதும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சிலர் இருக்கிறார்கள். ஆதலால் தான் 'ஏறக்குறைய' என்று நான் கூறுகிறேன். எனினும், அப்படி நினைப்பவர் வெகு சிலர் என்பது மகிழ்ச்சிக்குரியது. இப்போதைய பிணக்கு விரைவில் மறைந்துவிடும் ஓர் கோளாறு என்று மௌலானா ஷவுகத் அலி எண்ணுகிறார். நானும் அவ் விதமே நம்புகிறேன். கிலாபத் இயக்கத்தில் ஹிந்துக்கள், முஸ் லிம் சகோதரர்களுடைய கட்சியைத் தங்களுடையதாக்கிக் கொண்டனர். இதுவும் இதைத் தொடர்ந்து வந்த ஒத்துழை யாமை இயக்கமும், இதுகாறும் உறங்கிக்கொண்டிருந்த பொது மக்களைத் தட்டியெழுப்பிவிட்டது. உயர்ந்தவரிடத்திலும் தாழ்ந் தவரிடத்திலும் இது ஒரு புதிய விழிப்பை உண்டுபண்ணியிருக் கிறது. இதனால் பாதிக்கப்பட்ட சிலர், ஒத்துழையாமை உச்ச நிலையில் இருந்த காலத்தில் மனமுடைந்து போயிருந்தனர். இப் போது இவ்வியக்கம் நவீனத் தன்மையையும் கவர்ச்சியையும் இழந்துவிட்டதால், இவர்களுக்குச் சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது. இரு சமூகத்தினரிடையேயும் உள்ள மூடபக்தி, சுயநலம் இவற் றைத் தங்கள் காரியத்திற்காக அவர்கள் பயன்படுத்திக் கொள்ளு கின்றனர். இதன் விளைவு கடந்த இரண்டு ஆண்டுகளில் நடந் துள்ள சச்சரவுகளின் சரிதையில் எழுதப்பட்டுள்ளது. மதத் தைப் போர்வையாகக்கொண்டு தவறுகள் இழைக்கப்பட்டிருக் கின்றன. மதக் கோட்பாடுகள் எனக் கூறி அற்ப விஷயத்தை யும் மிகைபடுத்தியிருக்கின்றனர். என்ன ஆனாலும், இக்கோட் பாடுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது இம்மதவெறி யர்களின் கூற்றாகும். தொந்தரவு கொடுப்பதற்காகப் பொரு ளாதார, அரசியல் பற்றிய விஷயங்களையும் இதில் இழுத்துப் போட்டுக்கொள்ளுகின்றனர். இது கோஹத்தில் உச்ச நிலையை அடைந்தது. உள்ளூர் அதிகாரிகளின் ஈவிரக்கமற்ற அலட்சிய புத்தி, கோஹத் அக்கிரமங்களின் உக்ரத்தை அதிகமாக்கியது. காரணங்களை ஆராய்வதிலோ அல்லது குற்றத்தைப் பங்கீடு செய்வதிலோ நான் காலம் கழிக்கக்கூடாது. மனமிருந்தாலும்

அவ்வேலையைச் செய்யப் போதுமான விவரங்கள் என்னிடம் இல்லை. ஹிந்து அகதிகள் தங்கள் உயிருக்காக ஓடினர் என்பதே போதுமானது. கோஹத்தில் அமிதமான பெரும்பான்மையோர் முஸ்லிம்களாவர். அந்நிய ஆட்சிக்குள் எவ்வளவு இயலுமோ அவ்வளவு தூரம் முஸ்லிம்களுக்கு அங்கே அரசியல் ஆதிக்கம் இருந்து வருகிறது. ஆகையால், கோஹத் மக்கட் தொகுதி முழுதும் ஹிந்துக்களாயிருந்தால் எவ்வளவு பத்திரமாயிருப்பார்களோ, அவ்வளவு பத்திரமாய் முஸ்லிம் பெரும்பான்மையோரிடையிலும் ஹிந்துக்கள் இருக்க இயலும் என்பதைக் காண்பிப்பது அவர்களுடைய கடமையாகும். ஓடிப் போனவர்கள் அனைவரையும் மீண்டும் கோஹத்திற்கு அழைத்து வரும்வரை கோஹத் முஸ்லிம்கள் திருப்தியடைந்துவிட முடியாது. அரசாங்கத்தார் விரித்துள்ள வலையில் ஹிந்துக்கள் விழுந்துவிடமாட்டார்கள் என்று நம்புகிறேன். கோஹத் முஸ்லிம்கள் இவர்களது உயிருக்கும் உடைமைக்கும் முழு உத்திரவாதம் அளித்தாலொழிய அங்கே போவதற்குக் கண்டிப்பாக மறுத்துவிட வேண்டும்.

ஹிந்துப் பெரும்பான்மையோரிடையே சிறுபான்மை முஸ்லிம்கள் கௌரவமாக வாழ ஹிந்துக்களின் நட்பு இன்றியமையாதது. இது போலவே முஸ்லிம் பெரும்பான்மையோரின் இடையில் ஹிந்துக்கள் வாழ்வதற்கு முஸ்லிம்கள் இவர்களை நண்பர்களாகவும் சமமானவர்களாகவும் நடத்த இசைய வேண்டும். திருடரையும் கொள்ளைக் கூட்டத்தாரையும் எதிர்த்து ஓர் அரசாங்கம் பாதுகாப்பளிக்க முடியும். ஆனால், ஒரு சமூகம் முழுதும் சேர்ந்து பிறிதொரு சமூகத்தைப் பகிஷ்கரிப்பதைத் தடுத்து ஒரு சுயராஜ்ய அரசாங்கங்கூட மக்களைப் பாதுகாக்க முடியாது. அரசாங்கங்கள் அசாதாரண நிலைகளைச் சமாளிக்க இயலும். சண்டைகள் வாழ்க்கையில் சாதாரண நிகழ்ச்சிகள் ஆகும்போது, அவை உள்நாட்டுக் கலகம் எனப்படும். இரு கட்சிகளும் தங்களுக்குள் சண்டையிட்டுத்தான் இதற்கு முடிவு காண வேண்டும். இப்போதுள்ள அரசாங்கம் மறைமுகமான ராணுவ ஆட்சியே. நாம் எப்படித் திரண்டாலும் அதை எதிர்த்துத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளத்தக்க மூலபலம் அதற்கு உண்டு. ஆகையால், அது விரும்பினல் வகுப்புச் சண்டைகளைக்கூடச் சமாளிக்க முடியும். மக்களது சம்மதத்தின் அடிப்படையில் இருக்க விரும்பும் எந்தச் சுயராஜ்ய அரசாங்கத்தையும் யுத்த சன்னத்தமான அரசாக நிறுவி நடத்துவது இயலாது. சுயராஜ்ய அரசாங்கம் என்ருல், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பிறரும் சுதந்திரமாகச் சேர்ந்து அமைத்த அரசு என்றே பொருள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சுயராஜ்யத்தை விரும்பினல். கட்டாயம் தங்களுக்குள்ளிருக்கும் வேறுபாடுகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒற்றுமை மகாநாடு மத வேறுபாடுகளைச் சரிப்படுத்திக் கொள்ளுவதற்கு வழி காட்டியிருக்கிறது. சர்வ கட்சி மகாநாட்டுக் கமிட்டி, மற்ற வேலைகளுடன் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்

கும் இடையே மட்டுமல்லாது, எல்லா வகுப்புகளுக்கும், சாதிகளுக்கும், சம்பிரதாயங்கள் அல்லது உட்பிரிவுகளுக்கும் இடையே உள்ள அரசியல் வேறுபாடுகளுக்கும் நியாயமான, நடைமுறையில் சாத்தியமான ஒரு பரிகாரம் கண்டுபிடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வகுப்புவாரி அல்லது உட்பிரிவுவாரிப் பிரதிநிதித்துவத்தை எடுத்துவிடுவதுதான் நமது லட்சியமாய் இருக்க வேண்டும். பொது மக்கள் தொகுதிதான், பாரபட்சமின்றித் தகுதியை மட்டும் கருதி, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நமது உத்தியோகங்களும் பாரபட்சமின்றி மிக மிகத் தகுதியுடைய ஆண் பெண்களாலேயே நிரப்பப்பட வேண்டும். இந்நன்னாள் வரும் வரை அல்லது சமூகப் பொறாமைகளும் பட்சபாதங்களும் மறைந்தொழியும் வரை, பெரும்பான்மையினரின் நோக்கங்களைச் சந்தேகிக்கும் சிறுபான்மையோரின் இஷ்டப்படியே நடக்க வேண்டும். பெரும்பான்மையோர் தன்னலத் தியாகம் செய்து உதாரணம் காட்ட வேண்டும்.

—'எங் இந்தியா' – 26—12—1924

# 14

# ஒற்றுமைக்கு வழி

ஒற்றுமை மகாநாடு தன்னிடம் ஒப்புவித்த பிரச்னையைப் பற்றிக் கவனிப்பதற்காகச் சர்வ கட்சிக் கமிட்டி கூடியது. இப்பிரச்னையை ஆராய்வதற்காக ஐம்பது பேரடங்கிய ஓர் உப கமிட்டியை அது நியமித்தது. சாத்தியமான எல்லா சுயராஜ்யத் திட்டங்களையும் ஆய்ந்து, அதன் ஆலோசனைகளின் முடிவைத் தனக்குத் தெரிவிப்பதற்காக உப கமிட்டி ஒரு சிறு கமிட்டியை நியமித்தது. வயதில் இளைய ஆண் பெண்களை வெட்கத்தில் ஆழ்த்தும் அளவுக்குப் பெஸன்டம்மையார் தமது வழக்கமான சக்தியையும் திறமையையும் உபயோகித்து, இச்சிறு கமிட்டியில் உழைத்துக்கொண்டிருக்கிறார். இயல்பாகவே ஹிந்து-முஸ்லிம் பிரச்னை விஷயத்தில் முழுக் கவனமும் செலுத்தப்பட்டிருக்கிறது. என்னைப் போன்றவர்களைத் தவிர பிறருக்கு இது அவ்வளவு முக்கியமான பிரச்னை அல்ல. ஆனால், சுயராஜ்யப் பாதையில் இது பெரும் தடையாக இருப்பதால்தான் எல்லோருடைய கவனத்தையும் இது கவர்ந்தது. ஒரு கமிட்டியின் ஒழுங்கு முறைகளையும் கண்டிப்பையும் தவிர்க்க வேண்டியது அவசியமாயிற்று. ஆகையால், சிலரே எவ்விதக் கட்டுத் திட்டங்களுக்கும் ஆளாகிவிடாமல் கூடவேண்டியிருந்தது. இப்படியே ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் சிலர் சேர்ந்து ஹக்கீம் சாகிபின் வீட்டில் சந்தித்தோம். இதன் முடிவுகளைச் சுருக்கமாகப் பண்டித மோதிலால் நேரு பத்திரிகைகளுக்குக் கொடுத்திருக்கிறார். கவலைக்கோ, ஏமாற்றத்திற்கோ இடமில்லை என்பதை

நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஏனெனில், எல்லோரும் பரிகாரம் வேண்டுமென்று விரும்புகிறார்கள். சிலர் இப்போதே வேண்டுகின்றனர்; சிலர் அதற்கு இச்சமயம் ஏற்றதல்ல என்று கருதுகின்றனர்; சிலர் பரிகாரம் பெறுவதற்கு எதையும் தியாகம் செய்வார்கள். பிறர் தங்களுக்கு எது குறைந்த அளவு என்று நினைக்கிறார்களோ, அது கிடைக்கும் வரை காத்திருப்பார்கள். ஆனால், சுயராஜ்யத்திற்கு இப் பிரச்னை தீரவேண்டியது இன்றியமையாதது என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டனர். சுயராஜ்யம் வேண்டுமென அனைவரும் விரும்புவதால், ஒரு பரிகாரம் காணுவது அதைக் கண்டுபிடிக்க முனைந்துள்ளவர்களின் சக்திக்குப் புறம்பானதாகாது. பிப்ரவரி 28-இல் மறுபடியும் சந்திப்பதற்காகப் பிரிந்தோம். அப்போது இருந்த நம்பிக்கை இதற்கு முன் எப்போதுமே இருந்ததில்லை. இதற்குள் ஒவ்வொருவரும் உடன்படிக்கைக்குப் புதிய வழிகளைக்காண முயலவேண்டும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றிய என் கருத்துக்களைப் பொதுமக்கள் அறிய விரும்பமாட்டார்கள். நான் அதை என் முழுமனத்துடன் எதிர்க்கிறேன். இருப்பினும், இரு கட்சிகளுக்கும் கௌரவமுள்ளதாயும் அமைதியளிப்பதாயும் இருக்கும் எதையும் நான் ஒத்துக்கொள்ளுகிறேன். இரு கட்சிகளும் கூறிய திட்டத்தில் இசைவு ஏற்படாததால், நான் காரியசாத்தியமான ஒரு பரிகாரம் கூறியுள்ளேன். அதை நான் இந் நிலையில் விவாதிக்க வேண்டியதில்லை. இரு சமூகங்களையும் சேர்ந்த பொறுப்பு வாய்ந்தவர்கள் தனிப்பட்ட பேச்சுக்களின் மூலமும், தங்களுடைய கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்லுவதன் மூலமும் எல்லா வழிகளிலும் முயற்சி செய்வார்களென நம்புகிறேன். பத்திரிகையாளர்கள் எக் கட்சியையும் புண்படுத்தும்படி எழுதமாட்டார்கள் என்றும், தாங்கள் உதவ முடியாத சந்தர்ப்பங்களில் மௌனமாகவே இருப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

—'எங் இந்தியா' - 5—2—1925

# 15

# கடவுளுக்குக் கொடுக்கக் கொள்ளையடிப்பதா ?

நண்பர் ஒருவர் கீழ்வருமாறு சொல்லுகிறார்:

"ஒவ்வொரு விஷயத்திலும் எங்களை முஸ்லிம்களுக்கு விட்டுக் கொடுக்கச் சொல்லுகிறீர்கள். என்ன நேரிடினும் நியாய மன்றங்களுக்குச் செல்லக் கூடாது என்று எங்களுக்குச் சொல்லுகிறீர்கள். உங்கள் சொற்படி நடந்தால் என்ன விளையும் என்பதை நீங்கள் தீர ஆலோசித்தீர்களா? மனிதனுடைய இயற்கைச் சுபாவத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டீர்களா? எங்களுடைய உத்தரவின்றி எங்கள் நிலத்தில் மசூதிகள் கட்டினால் நாங்கள் என்ன செய்வது?

நேர்மையற்ற மனிதர்கள், நாங்கள் படாத கடனுக்காக எங்கள் மேல் வழக்குத் தொடரும்போதும், எங்கள் சொத்துக்களைக் கொள்ளையடிக்கும் போதும், நாங்கள் என்ன செய்வது? ஏழைகளாகிய எங்களை ஞாபகத்தில் வைத்துப் பதில் அளியுங்கள். எங்களைத் தெரியாதென்று நீங்கள் கூற முடியாது. எங்களை அறவே மறந்து எங்களுக்கு நீங்கள் கட்டளைகள் பிறப்பிப்பீர்களாயின் உங்கள் அறிவுரைகளைக் கேட்டு அவற்றைப் பின்பற்றுததற்காக எங்களைக் குறைகூறக்கூடாது. சில சமயங்களில் நீங்கள் கூறுவதெல்லாம் அசாத்தியமாக இருக்கின்றன என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.''

இத்தகைய தொனியில் பேசும் நண்பர்கள் விஷயத்தில் நான் அனுதாபம் கொள்ளுகிறேன். என்னுடைய குறைகளை உணருகிறேன்; ஆதலால், மனித இயல்பின் குறைபாடுகளையும் ஒப்புக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். ஆனால், எனது குறைபாடுகளையும் நான் அறிந்தபோதிலும், நான் செய்யக் கடமைப்பட்டுள்ளதற்கும், செய்யத் தவறுவதற்குமுள்ள வேறுபாட்டைக் காண மறுத்து நான் என்னையே ஏமாற்றிக்கொள்ளுவதில்லை. மற்றவர்களிடத்திலும் அதே வேறுபாட்டைக் காண மறுத்து, அவர்கள் செய்ய எண்ணுவது நியாயமென நிரூபிக்கக் கூடியது மட்டுமல்லாது, அதுதான் சரியானது என்றும் கூறி அவர்களை ஏமாற்றலாகாது. அநேக விஷயங்கள் அசாத்தியமானவை. ஆனால், அவை மட்டுமே சரியானவை. சீர்திருத்தம் விரும்புகிறவனுடைய வேலை, தன் நடத்தையில் அதைச் செய்ய முடியும் என்று கண்கூடாகச் செய்து காட்டி, அசாத்தியத்தைச் சாத்தியமாக்குவதே. நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ளவர்களுடன் பேசுதல் சாத்தியமென்று எடிசனுக்கு முன் யார் நினைத்திருப்பார்கள்? மார்க்கோனி இன்னும் ஒரு அடி முன்சென்று, கம்பியில்லாச் செய்தித் தொடர்பு வைத்துக்கொள்ளுவதைச் சாத்தியமாக்கினார். நேற்று அசாத்தியமாக இருந்தவை இன்று சாத்தியமாகும் விந்தையை நாம் தினசரி கண்டு வருகிறோம். இயற்கைத் தத்துவத்தைப் போலவேதான் மனத் தத்துவமும்.

இப்போது கைமேல் உள்ள பிரச்னைக்கு வருவோம். உத்தரவின்றி ஒருவர் மற்றவருடைய நிலத்தில் மசூதிகட்டும் கேள்வி மிகமிகச் சாதாரண விஷயமாகும். 'அ' என்பவருக்குச் சொந்தத்தில் நிலமொன்றிருந்தது. அதில் வேறொருவர் ஏதோ கட்டிடம் கட்டவந்தால், அது மசூதியாக இருப்பினுங்கூட, தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே அதை இடித்தெறியும் உரிமை 'அ'வுக்கு உண்டு. மசூதி வடிவமுள்ள எந்தக் கட்டிடமும் மசூதியாகி விடாது. ஒரு கட்டிடம் மசூதியாக வேண்டுமாயின், அது முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும். உத்தரவின்றி வேறொருவரது நிலத்தில் கட்டிடம் கட்டுவது, அசல் கொள்ளையே. கொள்ளையடித்துக் கடவுளுக்குக் கொடுக்க முடியாது. மசூதி என்று தவறாக அழைக்கப்படும் கட்டிடத்தை இடிக்க 'அ'வுக்கு மனமோ, ஆற்றலோ இல்லாவிடின், அதை

இடிக்க வைப்பதற்காக நீதி மன்றத்தில் முறையிட அவருக்கு உரிமையுண்டு. முற்றும் அறிந்த, உறுதி வாய்ந்த ஒத்துழை யாமைவாதிகளுக்கே நீதி மன்றம் விலக்கு ஆகும், பிறருக் கல்ல. மேலும் பூரண ஒத்துழையாமையை நாம் எப்போதும் கையாளவில்லை. ஓர் வழக்கம் அசெளகரியமாக இருப்பதுமட்டு மல்லாமல், நமது லட்சியத்திற்கு விரோதமாயும் இருந்தால், அதில் ஏதோ குறைபாடு இருக்கவேண்டும். எனக்குச் சொந்த சொத்து இருக்குமட்டும், நீதி மன்றத்தின் மூலமாகவோ அல்லது என் கை பலத்தாலோ நான் அதைக் காக்க வேண்டும். இரு முறைகளும் சாராம்சத்தில் ஒன்றே. நமது தேசீய ஒத்துழை யாமை ஒரு ஸ்தாபனத்துடன் நம் அனைவருக்குள்ளும் பொது வான ஒத்துழைப்பு இருக்கும் என்பதை எதிர்பார்க்கிறது. ஆனால், நமக்குள்ளே ஒத்துழையாமை இருந்தால், தேசீய ஒத் துழையாமை கானல் நீராகி விடும். ஒரு கட்டி மண்கூட நமக்குச் சொந்தமாக இராவிட்டால்தான், தனிப்பட்டவரின் ஒத்துழை யாமை சாத்தியமாகும். சந்நியாசிக்குத்தான் அது முடியும். ஆகையால், மதத்தை உத்தம முறையில் அனுஷ்டிப்பதற்கு எல்லா உடைமைகளையும் துறக்க வேண்டியதாயிருக்கிறது. வாழ்வின் உண்மையை உறுதியாகத் தெரிந்துகொண்ட பின், அதை நம் ஆற்றலுக்கு எட்டியவரை நடைமுறையில் கொண்டு வருவதில் ஈடுபடவேண்டும்; அதற்கு மேலே போகக்கூடாது. இதுதான் நடுவழி. திருடன் ஒருவன் 'அ'வின் சொத்தை அப கரிக்க வரும்போது, அவனை ரத்தக் கலப்புள்ள சகோதர னாக 'அ' நினைத்தால் தன் சொத்தை அவனுக்குக் கொடுத்து விடலாம். சகோதரனாகப் பாவிக்க முடியாமல், கொள்ளைக் காரனுக்கு மருண்டு, அவனை அடித்து விரட்டப் பக்கத்தில் யாராவது இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணுவதா யிருந்தால், அவனுடன் தானே சண்டையிட்டு அதனால் வரும் பயனையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். சண்டையிட ஆசை யிருந்து ஆற்றல் இல்லாவிடில், பறிபோக விட்டுவிட்டுப் பின்னர் போன சொத்தை மீண்டும் அடைய நீதி மன்றங்களின் உதவியை நாட வேண்டும். இரு வகைகளிலும் சொத்தை மீளப் பெறுவ தற்குள்ள சந்தர்ப்பம் இருப்பதற்கும் உண்டு. அவன் என் னைப்போல் நிதான புத்தியுடையவனாக இருந்தால், உண்மை யில் இன்பமுடன் வாழ உடைமைகள் உதவாது அல்லது அய லகத்தார் அனுமதிக்கும்வரை அவ்வாறு உரிமை பாராட்டலாம் என்று முடிவு கட்டிக்கொள்ளுவான். இக்கடைசி முறைப் படி, நாம் நமது தேக பலத்தால் வாழாமல் மற்றவர்களின் சம்ம தத்தின் மேல் வாழ்கிறோம் என்றாகிறது. ஆதலால் எல்லையற்ற பணிவும், ஆண்டவன் மேல் முழுநம்பிக்கையும் இருப்பது அவசியமாகும். ஆன்ம சக்தியால் வாழ்க்கை நடத்துவது இது தான்.

இந்த நியதியை, வாதிப்பதற்குரிய கவர்ச்சியான ஒரு காகி தத் திட்டமாகக் கொள்ளாமல், இடைவிடாது எப்போதும்

அனுசரிக்க வேண்டிய வாழ்க்கைச் சட்டமாக மனத்தில் இறுத்திக்கொள்ளுவோமாக. நமது நடத்தையை, இச் சட்டப்படியும் இதை அனுசரிக்க நமக்குள்ள ஆற்றலுக்கு ஏற்பவும் உருவாக்கிக்கொள்ளுவோமாக.

—'எங் இந்தியா' - 5—2—1925

# 16

# பிரிட்டிஷ் பாதுகாப்பு ஒற்றுமைக்கு முரணுகும்

ஏப்ரல் 6-ஆம் தேதியும் 13-ஆம் தேதியும் எப்போதும் பசுமையாகவே இந்தியர் மனத்தில் இருக்க வேண்டும். 1919-ஆம் ஆண்டு ஏப்ரல் 6-ஆம் நாளன்று, எதிர்பாராத விதமாகத் தேசம் முழுவதும் பொதுமக்களிடையே மகத்தான விழிப்புத் தோன்றியது. ஏப்ரல் 13-ஆம் நாள், நாடு பலி கொடுக்கும்படி செய்யப்பட்டது. அப் பலியில் ஜாலியன்வாலா பாக்கில் ஹிந்து, முஸ்லிம், சீக்கியர்களின் உதிரம் கலந்தது; மரணத்தில் அவர்கள் ஒன்றுபட்டனர்.

அப்போதிருந்து சாபர்மதிப் பாலத்தின் கீழ்ப் பெரும் வெள்ளம் ஓடியிருக்கின்றது. என்னென்னவோ நடந்திருக்கின்றன. தேசம் பல மாறுபாடுகளுக்கு உள்ளாகியிருக்கிறது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஓர் கனவென்றே தோன்றுகிறது. இரு சாராரும் யுத்த சன்னத்தராவதைக் காண்கிறேன். ஒவ்வொரு கட்சியும் தற்காப்புக்காகவே தான் தயாராவதாகக் கூறுகிறது. ஓரளவில் இருவர் செய்வதும் நியாயந்தான். சண்டையிட்டுத்தான் ஆகவேண்டுமாயின், போலீஸ், நியாய மன்றம் இவைகளின் உதவியை உதறித்தள்ளிவிட்டு, வீரமாய்ச் சண்டையிடட்டும். இப்படிச் செய்தால், ஏப்ரல் 13-ஆம் நாள் பாடம் வீண் போகாது. அடிமைத் தளையினின்றும் மீள வேண்டுமானல், பிரிட்டிஷ் துப்பாக்கி முனை அல்லது நீதி மன்றத்தின் சந்தேகாஸ்பதமான நியாயம் நம்மைப் பாதுகாக்கும் என எதிர்பார்ப்பதை நிறுத்த வேண்டும். அதிக மோசமான நிலையிலும், இவை எதன் மீதும் நம்பிக்கை வைக்காதிருப்பதே சுயராஜ்யத்திற்கு முதற் பயிற்சியாகும். சர். அப்துர் ரஹீமை அலட்சியம் செய்தது, உதவி அவசரச் சட்டங்களை இயற்றியது, உப்பு வரியைத் திரும்பவும் அமலுக்குக் கொண்டு வந்தது முதலிய யாவும், பிரிட்டிஷார் நமது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் நம்மை ஆட்சி புரிய உத்தேசிக்கின்றனர் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. உண்மையில், நம் உதவியின்றியே நம்மை ஆள முடியும், ஆளுவார்கள் எனப் பிரிட்டிஷார் தங்களுடைய செயல்களின் மூலம் நமக்குச் சொல்லுகின்றனர்! அவர்களுடைய உதவியின்றி வாழ

நமக்கு எதிர்மறை வீரமாவது கிடையாதா? நம்முள் சண்டையிட்டுக்கொள்ளாதிருக்கையில் நம்மால் அவ்வாறு செய்ய முடியும் என்பதை நாம் கண்டிருக்கிறோம். சண்டையிட்டாலும் கூடக் கொஞ்சம் தைரியமிருப்பின் அந்த உதவியின்றி இருக்க முடியும். தலையைக் காப்பதற்காகத் தன் வயிற்றால் நகருவதை விட, மண்டை உடைந்து கட்டுப் போடப்பட்ட தலையுடன் நேராய் நிற்பது என்றும் மேன்மையானதே. சர்க்கார் தலையீடின்றி நாம் போடும் தெருச் சண்டைகளிலிருந்துகூட ஹிந்து–முஸ்லிம் ஒற்றுமை உண்டாகலாம். பிரிட்டிஷ் ராணுவ பலத்தின் பாதுகாப்பிலும், பிரிட்டிஷ் நீதிமன்றங்களின் பொய்ச் சத்தியத்தின் நிழலிலும் நாம் நம்முள் சண்டையிட்டுக்கொண்டால், மெய்யான ஒற்றுமை உண்டாகும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. நாம் நம்மை ஆளுவதற்கு முன் ஆண்மையுடையவர்களாக வேண்டும்.

—'எங் இந்தியா' - 2—4—1925

# 17

# சரணாகதி சாஸ்திரம்

தேசபந்து, முஸ்லிம்கள் சம்பந்தமாகச் சரணாகதி சாஸ்திரத்தைப் பரிபூரணமாக்கிவிட்டார் என்று கல்கத்தாவில் நடந்த ஒரு கூட்டத்தில் நான் சொல்லியதைச் சிலர் கண்டிக்கிறார்கள். சரணாகதி, அதாவது விட்டுக்கொடுப்பது என்னும் போது, தேசபந்து முஸ்லிம்களுக்குச் சலுகை காட்டினார்; அதாவது அவர்களுக்குப் பெற உரிமையில்லாதவற்றைக் கொடுத்தார் என்று பொருள் கொள்ளுகிறேன் என என்னைக் குறைகூறுவோர் கருதுகின்றனர். நம் அனைவரிடமும் ஆங்கிலேயர் நடந்து கொள்ளுவது போலவே, ஹிந்துக்கள் முஸ்லிம்களிடமும் நடந்து கொள்ளுகிறார்கள். முதலில் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பிச்சை போடுவது போல் தயை காட்டுகிறார்கள். இதுதான் குறை கூறுகிறவர்களின் வாதமாகும்.

பிரஸ்தாபக் கூட்டத்தில் என்ன சொன்னேன் என்பது எனக்குத் தெரியும். பத்திரிகையில் வெளியான எனது பேச்சை நான் படிக்கவில்லை. இருப்பினும், அக்கூட்டத்தில் கூறிய அனைத்திற்கும் பொறுப்பேற்றுக்கொள்ள விரும்புகிறேன். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காவிட்டால், இத்துன்பம் நிறைந்த நாட்டிற்கு விமோசனமில்லை என்று நான் தைரியமாகச் சொல்லுவேன். நாம் அளவுக்கு மிஞ்சிய உணர்ச்சியுடையவர்களாகவோ அல்லது கற்பனையற்றவர்களாகவோ இருக்கக்கூடாது. விட்டுக் கொடுத்தல் என்பது சலுகை காட்டுவது அல்ல. அன்பு

அளிக்கும் நீதி விட்டுக் கொடுப்பதாகும்; சட்டம் வழங்கும் நீதி தண்டனையாகும். அன்பன் விட்டுக்கொடுப்பது நீதியையும் மிஞ்சி விடுகிறது. இருப்பினும், அது எப்போதும் தான்கொடுக்க விரும்பும் அளவிற்குக் குறைந்தது. ஏனெனில், அவனுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது. இன்னும் அதிகமாகக் கொடுப்பதற்கு இல்லையே என்றுதான் அலட்டிக்கொள்ளுகிருன். ஹிந்துக்கள், ஆங்கிலேயர்களைப் போல் நடந்துகொள்ளுகிருர்கள் என்று கூறுவது தவருகும். கிட்டர்பூர் தொழிலாளிகளின் மிருகத்தனமான செய்கை ஒருபுறமிருப்பினும், ஹிந்துக்கள் விரும்பிஞல்கூட ஆங்கிலேயர்களைப் போல் அவர்களால் நடந்துகொள்ள முடியாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே படகில்தானே பிரயாணம் செய்கின்றனர். இருவரும் அடிமைகள். விரும்பிஞலும், விரும்பாவிட்டாலும் அவர்கள் நண்பர்களின் நிலையில் இருக்கிருர்கள்; இருந்தே தீரவேண்டும். ஆகையால், ஹிந்து, முஸ்லிம்களுக்குள் பரஸ்பரம் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் வெறும் நீதியாக மட்டும் இராமல் விட்டுக்கொடுப்பதாகவும் இருக்கவேண்டும். ஒவ்வொரு செய்கையையும் தங்கத் தராசில் துல்லியமாக நிறுத்து, அதற்கு விலை வாங்கிவிடக்கூடாது. ஒருவர் மற்றவருக்குத் தம்மை எப்பொழுதும் கடனாளியாகவே கருத வேண்டும். நியாயமாக, நாள்தோறும் ஓர் முஸ்லிம் என் கண்முன் ஏன் ஒரு பசுவைக் கொல்லக்கூடாது? ஆனல், அவ்விதம் செய்வதினின்றும் அவன் அன்பு தடுக்கிறது. சில சமயங்களில் என் மீதிருக்கும் அன்பிஞல் மாட்டிறைச்சி தின்பதையும் ஒழிக்கிருன். இருப்பினும், எது சரியோ அதை மட்டும்தான் செய்ததாகக் கருதுகின்ருன். மௌலான முகமது அலி பிரார்த்தனையிலிருக்கும் வேளையில், அவரது காது செவிபடும்படி மேள நாதம் செய்ய நீதி என்னை அனுமதிக்கிறது. ஆனல், அவருடைய உணர்ச்சிகளைப் பொருட்படுத்தி அவர் பிரார்த்தனை செய்யும் வேளையில் நான் மெதுவான குரலில் பேசுகிறேன். இருந்தபோதிலும், நான் அவருக்கு ஏதோ பிரமாதமான நன்மை ஒன்றும் செய்துவிடவில்லை என்றே நினைக்கிறேன். அதற்கு மாருக, அவர் பிரார்த்தனை வேளையில் நியாய உரிமையாகிய கொட்டு முழக்குதலைச் செய்வேனுயின், நான் அருவருக்கத்தக்க பிராணியாகிவிடுவேன். தேசபந்து தாஸ் முஸ்லிம்களுக்குச் சில பதவிகள் கொடுக்காமல் இருந்திருந்தால், நீதிக்குப் பங்கம் ஏற்பட்டிராது. ஆனல், அவர் முஸ்லிம்களின் உணர்ச்சிகளையும் பற்றுகளையும் எதிர்பார்த்து, தன் வழியினின்றும் விலகிப் போய்க்கூட இதைச் செய்தார். அவர்களைத் திருப்தி செய்ய வேண்டும் என்ற நுண்ணுணர்ச்சிதான் அவரது மரணத்தைத் துரிதப்படுத்தியது. சட்டம் அனுமதிக்காத இடங்களிலிருந்து புதைத்த பிணத்தைத் தோண்டியெடுக்கச் சட்டம், அதாவது நீதி தன்னை நிர்ப்பந்தப்படுத்தும் என்பதை அறிந்ததும், அவருக்கு எவ்வளவு திகைப்பும் அதிர்ச்சியும் உண்டாயிற்று என்பது எனக்குத் தெரியும். அவ்விஷயத்தில் முஸ்லிம்களுடைய

உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப்பது நியாயமற்றதாக இருந்தும்கூட, முஸ்லிம்களின் மனத்தைப் புண்படுத்தாமல் இருப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்க அவர் முயற்சித்தார். இது சாதாரணப் போக்குக்கு மாறுனது - அவருடைய போக்குக்கு அல்ல, உலகப் போக்குக்கு. அப்படியிருந்தும், முஸ்லிம்களுடைய உணர்ச்சிகளை நுட்பமாய்க் கவனித்து நடந்ததை, முஸ்லிம்களுக்குத் தாம் காட்டிய தயவு என்று அவர் எண்ணிக்கொள்ளவில்லை. அன்பு ஒரு போதும் கேட்பதில்லை; எப்போதும் கொடுக்கும்; அன்பு எப்போதும் சகிக்கும்; ஒருபோதும் கோபிக்காது; அது ஒருபோதும் பழி தீர்த்துக்கொள்ளுவதும் இல்லை.

ஆகவே, நீதி என்ற பேச்சு ஹிந்துக்களிடமிருந்து வந்தாலும், அல்லது முஸ்லிம்களிடமிருந்து வந்தாலும் அது யோசனையற்ற, கோபமும் அறியாமையும் நிறைந்த பேச்சேயாகும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் நீதியைப் பற்றி ஓயாது பிதற்றிக்கொண்டிருக்கும் வரை அவர்கள் எக்காலத்திலும் ஒன்று சேர முடியாது. 'நீதி, நீதியைத் தவிர வேறொன்றுமில்லை' என்று சொல்லுவதன் முடிவு, 'பலமே நீதி' என்பதைத் தவிர வேறில்லை. வெற்றியடைந்து பிடித்தவற்றிலிருந்து ஆங்கிலேயர் ஏன் ஓர் அங்குலமும் விட்டுக் கொடுக்க வேண்டும்? அல்லது, இந்தியர்கள் அதிகாரத்திற்கு வரும்போது அவர்கள் ஏன் ஆங்கிலேயரின் மூதாதையர் அபகரித்ததையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடும்படிச் செய்யக்கூடாது? ஆயினும், ஏதோ ஒரு நாள் நாம் வந்து தீர வேண்டிய ஒரு முடிவுக்கு வரும்போது, நீதி என்னும் தராசில் நிறுவை போடமாட்டோம். அன்பு, பிரியம் அல்லது சகோதரப் பான்மை என்ற வார்த்தைகளைப் போல், அதே அர்த்தம் உள்ள விட்டுக் கொடுத்தலையும் இந்தக் கணக்கில் சேர்ப்போம். போதிய அளவு ஒருவரோடொருவர் தங்களுடைய மண்டைகளை உடைத்துக் குற்றமற்ற ரத்தத்தைச் சிந்தும் நமது புத்தியீனத்தை உணர்ந்தபின், ஹிந்து - முஸ்லிம்களுக்குள் மேலே குறிப்பிட்ட நல்லுறவு உண்டாகும்; அப்போது நம்மிடமுள்ள குறைகள் நீங்கும்; நமது கண்களில் தென்படும் குறைகள் மறைந்துவிடும்; பழிவாங்குதல் நட்புச் சட்டமல்ல என்பதை அறிவோம்; நீதி நியாயமின்றி விட்டுக் கொடுப்பதுதான் நட்பின் சட்டம் என்பதைத் தெரிந்துகொள்ளுவோம். பசுக்கள் கொல்லப்படும் காட்சியைச் சகித்துக்கொள்ள ஹிந்துக்கள் கற்க வேண்டும். ஹிந்துக்களின் நுண்ணிய உணர்ச்சிகளைப் புண்படுத்த ஓர் பசுவைக் கொல்லுவது இஸ்லாமிய நியதிக்கு மாறுனது என்று முஸ்லிம்கள் அறிய வேண்டும். அந்தப் பாக்கியமான நாள் வரும்போது நாம் பிறரின் நற்குணங்களை மட்டுந்தான் அறிவோம்; குற்றங்கள் நம் கண்களுக்குத் தென்படா. அந் நாள் வெகு தூரத்திலிருக்கலாம்; அல்லது அருகிலும் இருக்கலாம். அதிசீக்கிரத்தில் வருமென நான் உணருகிறேன். அந்த லட்சியத்திற்காகவே நான் உழைப்பேன்; வேறொன்றுக்குமல்ல.

விட்டுக் கொடுத்தல் என்றுல், கொள்கைகளை விட்டுக் கொடுத்தல் என்று பொருள் ஆகாது. இதை நான் ஓர் எச்

சரிக்கையாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. கூட்டத்தில் இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்தினேன். அதை மறுபடியும் வற்புறுத்த விரும்புகிறேன். ஆனால், நாம் இப்போது சண்டையிட்டுக்கொள்ளுவது லட்சியத்திற்காக அல்ல; வீண் பெருமையினாலும், குருட்டுத்தனமான விரோத பாவத்தினாலுமே. கொசுவை வடிகட்டி விலக்கும் நாம், ஒட்டகத்தை விழுங்கி விடுகிறோம்!

—'எங் இந்தியா' - 9—7—1925

# 18

# உண்மையைக் கூறுவதில் தயக்கம் எதற்கு?

கிட்டர்பூரில் பக்ரீத் தினத்தன்று கலகம் நடந்த சில மணி நேரத்திற்குள் நான் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டேன். என்றாலும் அக் கலகத்தைப்பற்றி விவரித்து 'எங் இந்தியா' வாசகர்களைத் தொந்தரவு செய்யவில்லை. கிட்டர்பூரிலிருந்து ரஸ்ஸா ரோடிற்கு வந்த சிறிது நேரத்தில் 'அசோஸியேடெட் பிரஸ்' பிரதிநிதிக்கு நீண்ட பேட்டியளித்தேன். ஹிந்துத் தொழிலாளிகள் செய்தது முற்றிலும் தவறு என்பது ஆராய்ந்து செய்யப்பட்ட என் முடிவு என்று அப் பேட்டியில் சொன்னேன். இந்த அறிக்கை எனது ஹிந்து அன்பர்கள் சிலருக்குக் கோபமூட்டியிருக்கிறது. ஹிந்துக்களின்மீது குற்றம் கண்டுபிடித்ததை எதிர்த்து அவர்கள் தூஷணை நிறைந்த கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அதில் ஒருவர், என்னை முஸ்லிம் பெயர் வைத்துக் கொள்ளச் சொல்லுகிறார். நாம் நமது மதங்களுக்காக எவ்வளவு கண்மூடித்தனமான உற்சாகத்தை மேற்கொள்ளுகிறோம் என்பதைக் காட்டவே இக் கடிதங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். நம்மிடம் உள்ள குறைகளைக் காண நாம் மறுக்கிறோம். குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த பெரும்பான்மையோருக்கு இம் மனநிலை சாதாரண அம்சமாகும்போது, அம் மதம் ஜீவனிழந்து விடுகிறது. ஏனென்றால், பொய்யை அடிப்படையாகக் கொண்ட எதுவும் நீடித்திருக்க முடியாது.

சம்பந்தப்பட்ட ஹிந்துத் தொழிலாளரின் குற்றத்தைச் சற்றும் குறைக்காமல் வெளிப்படுத்தியதால் ஹிந்து மதத்திற்கு நான் சேவை செய்திருக்கிறேன். ஒளிவு மறைவின்றி நான் பேசியதற்காகத் தொழிலாளர்களே என்னிடம் கோபித்துக் கொள்ளவில்லை; நன்றிபாராட்டுபவர்கள்போல் தோன்றினர். அவர்கள் மனம் வருந்திப் பிழையை ஏற்று, உண்மையாகவே மன்னிப்புக் கேட்டனர்.

கண்ணால் கண்டதையும், உள்ளத்தில் உணர்ந்ததையும் பேசக்கூடாது என்றால், நான் செய்திருக்கக்கூடியதுதான் என்ன? பிழை செய்தோரைக் காப்பதற்காக நான் மழுப்பிப் பேச வேண்டுமா? சர்வ வியாபிகளாகிய பத்திரிகைக்காரர்கள் நடு நிசியில் என்னைத் தேடிப் பிடித்தபோது, நான் பேட்டி கொடுக்க மறுத்திருக்க வேண்டுமா? உண்மையைப் பேசுவதற்குத் தகுந்த சமயத்தில் நான் திகைத்திருப்பேனானால், ஹிந்து என்று சொல்லிக்கொள்ள உரிமையிழந்து, காங்கிரஸ் தலைவனாக இருப்பதற்குத் தகுதியற்றவனுமாகி, சத்தியாக்கிரகி என்ற பெயரையும் மாசுபடுத்தி யிருப்பேன். தவறு செய்துவிட்டு அதை மறைக்க முயலும் குற்றத்தை முஸ்லிம்களின்மீது ஹிந்துக்கள் சாட்டத் தயங்குவதில்லை. அதே குற்றத்திற்கு இவர்கள் ஆளாகக் கூடாது.

ஹிந்துக்கள் டில்லியில் என் உதவியை நாடியபோது நான் கைவிரித்து விட்டதாகவும், லக்ஷ்மணபுரியில் தேடியபொழுது நான் நழுவிவிட்டதாகவும், ஆனால் ஹிந்துக்களைக் குற்றம் சாட்டுவதில் மட்டும் நான் யோசனையின்றி முடிவுகூற முந்திக் கொள்ளுகிறேன் என்றும் ஒரு அன்பர் சொல்லுகிறார். ஹிந்துக்களின் சார்பில் ஒரு ஹிந்துவிடமிருந்து அழைப்பு வந்ததன் பேரில் நான் கிட்டர்பூருக்கு சென்றேன். எனக்குமுன் அங்கே சென்றிருந்த ஸ்ரீ சென் குப்தாவும் என்னை அழைத்தார். இதை மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். திக்கற்ற நிலையிலும் சச்சரவைப் பற்றிக் கேள்விப்பட்டால், அதிலும், இரு கட்சிகளும் என்னை விரும்புகின்றனவென்று அறிந்தால், நான் அவர்களை மீட்பதற்காக விரைந்து செல்லுவேன். ஒரு கட்சி மட்டும் சச்சரவைத் தீர்க்கவோ, தடுக்கவோ அழைக்கும்போதுதான் ஹிந்துக்களிலும் முஸ்லிம்களிலும் ஒரு பகுதியினரிடையே என் செல்வாக்கை இழந்தவனாக என்னால் எதுவும் செய்ய இயலவில்லை என்று சொல்லவேண்டியிருக்கிறது. இவ்விரு சந்தர்ப்பங்களுக்கும் உள்ள வேற்றுமை மிகத் தெளிவாகும். இதை நான் எடுத்துக் காட்டத் தேவையில்லை.

நான் ஹிந்துக்களைத் தீவிரக் கண்டனம் செய்தது, குற்றமற்ற ஹிந்துக்களைத் தாக்கிச் சேதப்படுத்த முஸ்லிம்களுக்கு ஊக்கமளித்தது; ஹிந்துக் கடைக்காரர்களைக் கொள்ளையடிக்கவும், அதற்கும் மேலான அட்டூழியங்களைச் செய்யவும் முஸ்லிம் குண்டர்களுக்கு இடமளித்தது என்று எனக்குக் கடிதம் எழுதுவோர் எடுத்துக்காட்டுகின்றனர். என்னைக் காண வந்த தூதுகோஷ்டியும் இதையே வற்புறுத்தியது. ஹிந்துக்கள் செய்த குற்றத்தை நான் கண்டித்தது முஸ்லிம்களைக் குற்றம் செய்ய ஏவிற்றென்றால், அதற்கு நான் வருந்த வேண்டும். ஆனால், அப்போதுகூட நியாயமான காரியத்தை நான் செய்யாமல் இருக்கமுடியாது. அத்துடன் ஹிந்துக்கள் ஏன் முஸ்லிம் தாக்குதல்களுக்குப் பயப்பட வேண்டும்? என் முறைகளாகிய அகிம்சையையும், வருவது வரட்டும் என்று இருந்து விடுவதையும் நம்பாவிட்டால் - சொத்துடையவர்களுக்கு இது

கடினமென்று ஒப்புக்கொள்ளுகிறேன் - ஹிந்துக்களுக்குத் தங்களால் முடிந்த எல்லா வழிகளாலும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை உண்டு. ஹிந்துக்களாயினும், முஸ்லிம்களாயினும் மனிதராக இருப்பதற்கு, கோழைத்தனத்தைக் களைந் தெறிந்து தற்காப்புக் கலையைக் கற்க வேண்டும். மற்றவர்களால் பாதுகாக்கப்படுவதை விரும்பியபோதிலும், தம்மைத் தாமே காத்துக்கொள்ள மறுப்போர், நிச்சயமாய் வரவிருக்கும் ஆபத்திலிருந்து எவ்வளவுதான் ஒளிந்தாலும் தப்பமுடியாது. கிட்டர்பூர் ஹிந்துக்களைப்பற்றிய கண்டனம், தாக்கப்பட்டபோது தம்மைக் காத்துக்கொண்டோருக்குப் பொருந்தாது. துன்பம் இழைப்பதற்குப் பதிலாக அதிக எதிர்த் தாக்குதலில் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியில் ஹிந்துக்கள் உயிர் துறந்திருந்தால், அவர்களுடைய வீரத்தைப் புகழ்ந்திருப்பேன். எனக்குத் தெரிந்த மட்டில், கிட்டர்பூரில் அவர்கள் அமிதமான பெரும்பான்மையினராக இருந்தனர்; அவர்களே துன்புறுத்தினர். சண்டைக்குக் காரணமாக இருக்கும்படி முஸ்லிம்கள் ஒன்றும் செய்துவிடவில்லை. தூண்டுதல் இல்லாத பலாத்காரச் செயல்களை நான் தயக்கமின்றிக் கண்டிப்பேன். கோஹத்திலும் குல்பர்காவிலுமுள்ள முஸ்லிம்கள் செய்த பலாத்காரச் செயல்களுக்குத் தூண்டுதலே இல்லை என நான் நினைத்தேன். ஆதலால், அவர்களின் தீய செயல்களைத் தயக்கமின்றிக் கண்டித்தேன். ஓரடிக்குப் பதிலாக இரண்டு கொடுப்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், கோபமூட்டத்தக்க காரணம் எதுவுமின்றியோ, அல்லது அச்சமயத்தில் கோபத்தை வரவழைத்துக்கொண்டோ அடிப்பதை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

—'எங் இந்தியா' - 16—7—1925

## 19

# கோழைத்தனத்தைவிட கத்தியை உபயோகிப்பதே மேல்

**பா**கல்பூரில் கூடிய பெருங்கூட்டத்தில் ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைக் குறித்து நீண்ட பிரசங்கம் செய்ய வேண்டியதாயிற்று. அப்பிரச்னையைக் கிளறிக்கொண்டிருக்கிறவர்களிடையே என் செல்வாக்கு போய்விட்டது. எனினும், அவர்கள் அதிலிருந்து எழும்பும் பல சிக்கல்களைப்பற்றி என்னுடன் தொடர்ந்து வாதித்து வருகின்றனர். ஆகையால், என் கருத்துகளுக்கு மதிப்புள்ள அளவுக்குப் பயன்படுமாறு அவற்றை மறுமுறையும் வெளியிட வேண்டுமென நினைத்தேன். நியாய, அநியாயம் ஒரு புறமிருக்க, இரு கட்சியினரும் தங்களுக்குள்ளேயே மத்தியஸ்தம்

செய்தோ, கத்தி எடுத்தோ முடிவு செய்ய வேண்டிய விஷயங்களைச் சர்க்காரிடம் முறையிட்டுக்கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளவேண்டும். எக்கட்சிக்கும் விட்டுக் கொடுக்க மனமில்லை. ஒருவருக்கொருவர் பயம் கொண்டுள்ளனர். ஆகையால், சர்க்கார் தலையீடின்றித் தண்டோபாயத்தினுல் தீர்த்துக்கொள்ளுவதுதான் உத்தமமான முறை என்று கூட்டத்தினருக்குக் கூறினேன். பயத்தினுல் பின் வாங்குவது கோழைத்தனம். கோழைத்தனம், சமாதானம் உண்டாவதையோ அல்லது அகிம்சை யுகத்தின் உதயத்தையோ துரிதப்படுத்தாது. வெற்றி காண்பதற்கு அரிதான பலாத்கார இனத்தைச் சேர்ந்தது இது. பலாத்காரப் போக்குடைய ஒருவரை, தமது பலாத்காரத்தைக் கைவிட்டு அதனினும் உயர்ந்த சக்தியான அகிம்சை முறையைக் கைக்கொள்ளும்படிச் செய்யலாம். எல்லாவித சக்திக்கும் எதிர்மறைதான் கோழைத்தனமாகும். ஆதலால், ஓர் எலிக்கு பூனையிடம் அகிம்சையை அனுசரிக்கக் கற்பிப்பது அசாத்தியம். எலி, பூனையை எதிர்த்துப் பலாத்காரத்தை உபயோகிக்கும் திறமை யற்றிருப்பதால், அகிம்சை முறை எப்படி யிருக்கும் என்று அதற்குப் புரியவே புரியாது. கண்ணில்லாத கபோதி ஒருவனை விகாரமான பொருட்களைப் பார்க்காதே என்று கூறுவது ஏளனம் செய்வதாகாதா? 1921-ஆம் ஆண்டு மௌலானு ஷவுகத் அலியும் நானும் பெட்டியாவிலிருந்தோம். பெட்டியாவின் அருகிலுள்ள ஒரு கிராமத்தார், போலீஸ்காரர்கள் தங்கள் வீடுகளைக் கொள்ளையிட்டு, பெண்களை மானபங்கப்படுத்திக்கொண்டிருக்கும்போது தாங்கள் ஓடி வந்து விட்டதாகச் சொன்னுர்கள். அகிம்சை முறையை அனுசரிக்க வேண்டுமென்று நான் கூறியிருந்ததால், அவர்கள் அவ்வாறு ஓடி வந்ததாகக் கூறினர். இதைக் கேட்டு நான் வெட்கித் தலை குனிந்தேன். என் அகிம்சை முறையின் அர்த்தம் அதுவல்ல என்று அவர்களுக்கு வற்புறுத்திக் கூறினேன். தங்கள் பாதுகாப்பிற்கு உட்பட்டவருக்குத் தீங்கிழைக்கும் எவ்விதமான பராக்கிரம சக்தியையும் தடுக்கவும், புயலினின்றும் தப்பித்துக்கொண்டு ஓடாமல் மரணம் வரைப் பதிலடி கொடாமல் எல்லா இடர்களையும் தங்கள் தலைமேல் அவர்கள் தாங்கிக்கொள்ளவும் வேண்டுமென்று எதிர்பார்த்தேன். தன் சொத்தையோ, மானத்தையோ கத்தியால் காப்பாற்றுவது வீரம். தவறிழைப்போனுக்குத் தீங்கிழைக்காமல் காப்பாற்றுவதோ, அதனினும் உயர்ந்த வீரமும் கௌரவமும் வாய்ந்தது, ஆனுல், தன் கடமையைக் கைவிட்டுத் தன் உடலைக் காப்பதற்காக எதிரிகளின் கையில் சொத்து, மானம், மதம் இவைகளை விட்டுவிட்டு ஓடுவது ஆண்மையற்றது, இயற்கைக்கு முரண், அகௌரவமுமாகும். சாகத் தெரிந்தவர்களுக்கு அகிம்சையைப்பற்றி வெற்றிகரமாக உபதேசிக்கும் வழியை நான் அறிவேன். சாவிற்குப் பயந்தவர்களுக்கு அதை எப்படி உபதேசிக்க முடியும்? சிலர் என்னைப்போல் சண்டையை விரும்பாதிருக்கின்றனர். ஆனுல், சமாதானம் செய்யும் சக்தி அவர்களிடமில்லை. முதல் நான்கு கலிபாக்களின் காலத்தில், சகோ

தரர்களுள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்ட சமயம், குகைகளுள் அடைக்கலம் புகுந்த முஸ்லிம்களை இவர்கள் பின் பற்ற வேண்டுமென்று சபையோர்களுக்குச் சொன்னேன். இக் காலத்தில் மலைக் குகைகளுள் அடைக்கலம் புகுவது முடியாத காரியம். ஆனால், ஒவ்வொருவரும் தன் உள்ளத்தில் இருக்கும் குகையில் நுழைந்துகொள்ளலாம். ஆனால், பரஸ்பர மரியாதை யும், பிற மதங்களையும் பழக்க வழக்கங்களையும் கௌரவிக்கும் மனப்பான்மையும் உள்ளவர்கள்தான் இப்படிச் செய்யமுடியும்.

—'எங் இந்தியா' - 15—10—1925.

# 20

# அந்த நிரந்தரப் பிரச்னை

ஹிந்து – முஸ்லிம் பிரச்னையிலிருந்து நழுவ நான் எவ்வளவு விரும்பினாலும், அது என்னை நழுவவிடுவதில்லை. அதைத் தீர்ப்ப தில் நான் தலையிட வேண்டுமென முஸ்லிம் நண்பர்கள் வற் புறுத்துகிறார்கள். ஹிந்து நண்பர்களும் இதைப்பற்றி என்னுடன் விவாதிக்க விரும்புகிறார்கள். நான் விதைத்த விபரீதத்தைப் பன் மடங்கு உக்ரமான உருவத்தில் நான் அனுபவித்துத் தீரவேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். ஹிந்துப் பையன்களையும், விசேஷ மாகப் பெண்களையும் தூக்கிச் சென்றதைப்பற்றித் துயரத் துடனும் கோபத்துடனும் பீகார் நண்பர் ஒருவர் நான் கல்கத் தாவிலிருந்தபோது எழுதினார். இக் குற்றச்சாட்டை நம்பமுடியா தென அவருக்குத் தெளிவாகச் சொன்னேன். ஆனால், ருசுப்பிக் கக்கூடிய விவரங்கள் தருவாராயின், அவற்றை ஆராய்வதாகவும், ஆராய்ந்து உண்மையெனக் கண்டால், உருப்படியாக ஒரு நன்மையும் செய்ய முடியாவிட்டாலும், அதை வன்மையாகக் கண்டிப்பேன் என்றும் அவருக்கு எழுதினேன். அதிலிருந்து மனத்தைத் துடிக்கச்செய்யும் விவரங்களுடன் நரசோர நிகழ்ச்சி களைப்பற்றிய செய்திகள் அடங்கிய பத்திரிகைத் துண்டுகள் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பத்திரிகைச் செய்திகள் ருசுப்படுத்தமாட்டா என்றும், அநேக சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளக்கங்கள் மனக்கொதிப்பைத் தூண்டுகின்றன, தப்பெண்ணம் உண்டாகும்படி செய்கின்றன, முற்றிலும் அபத்த மாயும் இருக்கின்றன என்றும் நண்பருக்கு எடுத்துக்கூறினேன். முஸ்லிம்களைக் கேவலப்படுத்தும் ஹிந்துப் பத்திரிகைகளும், ஹிந்துக்களை அவதூறு செய்யும் முஸ்லிம் பத்திரிகைகளும் உண்டு. இரு கட்சியினர் சொல்லுவதையும் உண்மை என ஏற்றுக் கொள்ளுவோமாயின், அவர்களிருவரும் அருவருக்கத்தக்க பிராணி களாகிவிடுவர். பிரசுரிக்கப்படும் அநேக சம்பவங்கள் பொய்யில்லா விட்டால்கூட, எல்லைமீறி மிகைபடுத்தப்பட்டவை என்பதை ஐயமின்றி முடிவுகட்டலாம். ஆகையால், எந்த நீதி மன்றத்திலும்

ஏற்றுக்கொள்ளக்கூடிய, விவாதத்திற்கு நிற்கக்கூடிய ருசுக்கள் கேட்டேன். திட்டாகர் சம்பவம் நிச்சயமாய் அப்படிப்பட்டது தான். அங்கு ஒரு ஹிந்துச் சிறுமியை முஸ்லிம்கள் தூக்கிச் சென்றுவிட்டனர். அவள் இஸ்லாமைத் தழுவியதாகச் சொல்லுகிறார்கள். நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தும்கூட, எனக்குத் தெரிந்தவரை இன்னும் அச்சிறுமியைக் கொண்டு வந்து ஒப்படைக்கவில்லை. இதிலெல்லாம் வேடிக்கை என்னவென்றால், யோக்கியமான மனிதர்கள் இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்பதே. நான் திட்டாகரில் இருந்தபோது யாரும் அப்பெண்ணைப்பற்றிப் பொறுப்பேற்கத் தயாராக இல்லை. பாட்னாவிலும் ஊர்ஜிதப்படுத்தும் விவரங்களுடன் திடுக்கிடச் செய்யும் ஓர் சம்பவத்தைப்பற்றிச் சொன்னார்கள். முழு விவரமும் தெரியாததால், அதைப்பற்றி இப்போது பேசாது விடுகிறேன். இப்பேர்ப்பட்ட விஷயங்கள் நம்மைச் சிந்தனையில் ஆழ்த்துகின்றன. தேச நலம் கருதும் யாவரும் கவனிக்க வேண்டியவை இவை. இவற்றிற்குமேல் மசூதிகளுக்கு முன் மேளத்தைப்பற்றிய பிரச்னையும் இருக்கிறது. மசூதிகளின் முன்னால் கொட்டுமுழக்கத்தை எல்லா நேரத்திலும் நிறுத்திவிட வேண்டுமென்று அதிகார தோரணையில் நிபந்தனை விதித்திருக்கிறார்கள். மசூதிகளின் அருகிலுள்ள கோவில்களில் பிரார்த்தனை நேரங்களில் ஆரத்தி'யை நிறுத்த வேண்டுமென வற்புறுத்துகின்றனர். கல்கத்தாவில் அதிகாலையில் ராம நாமம் சொல்லிக்கொண்டு ஒரு மசூதிப் பக்கம்போன சிறு பையன்களைக்கூட நிறுத்திவிட்டார்களாம்.

என்ன செய்யலாம்? இவ்விஷயங்களுக்கு நீதி மன்றங்களை நம்புவது, ஒடிந்த நாணலை நம்புவதற்கொப்பாகும். என் மகளைத் தூக்கிக்கொண்டு போக விட்டுவிட்டுப் பின்பு நீதி மன்றத்திற்குப் போனால், அதனாலும் ஒன்றும் செய்துவிட முடியாது. அல்லது எனது கோழைத்தனத்தைக் கண்டு நீதிபதிக்குக் கோபம் வந்தால், மரியாதையின்றி அவர் என்னைத் தன் முன்னின்றும் துரத்திவிடலாம். நீதி மன்றங்கள் சாதாரணக் குற்றங்களையே தீர்க்கும். சிறுவர்களையும் சிறுமிகளையும் கடத்திச் செல்லுதல் சாதாரணக் குற்றமல்ல. பொது மக்கள் இவ்விஷயங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ள வேண்டும். தங்கள் காரியத்தைத் தாங்களே பெரும்பாலும் சாதிக்க ஆற்றலுடையவர்களுக்குத் தான் நீதி மன்றங்கள் உதவுகின்றன. அவை ஓர் உதவிப் பாதுகாப்பேயாகும்.* ஆற்றலற்றவர் இருக்கும்வரை, அவர்களின் ஆற்றலின்மையை உபயோகித்து வாழ்பவர் யாராவது ஒருவர்

---

* 'யார் காக்க வேண்டும்?' என்னும் தலைப்பில் 1919 அக்டோபர் 31-ஆம் தேதி 'எங் இந்தியா' வில் காந்திஜி கீழ்க்கண்டவாறு எழுதினார்:

''விவாகமான, ஆகாத, விதைவைகளான பெண்களைக் கடத்திச் செல்லுவதை விளக்கிப் பயங்கரமான கடிதமொன்று அஸ்ஸாம்வாசி ஒருவரிடமிருந்து கிடைத்திருக்கிறது. நமது பெண்களின் மானத்தைக் காக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என அவர் கோபாவேசத்துடன் கேட்கிறார். அவர் சொல்லுவதற்கு ஆதாரமாகப் பத்திரிகைத் துணுக்குகளை அனுப்பியுள்ளார். நான் அடிக்கடி

இருப்பார். ஆகையால், இந்நிலையில் தற்காப்பு அமைத்துக் கொள்ளுவதுதான் பரிகாரமாகும். சம்பந்தப்பட்டவர்கள் அகிம்சையால் தற்காத்துக்கொள்ளும் திறமையுடையவர்களாயிருந்தாலொழிய, அவர்கள் கொடுமையான பலாத்காரத்தையும் இத்தகைய சந்தர்ப்பங்களில் கைக்கொண்டு தங்களைக் காத்துக் கொள்ளுவது நியாயமானது என நான் கூற முடியும். ஏழை எளியவர்களின் பெண்களும் பையன்களும் தூக்கிக்கொண்டு போகப்படும்பொழுது, நிலைமை இன்னும் சிக்கலாகிவிடுகிறது. தனி மனிதனால் இதற்குப் பரிகாரம் காண முடியாது; சமூகம் அல்லது சாதியார் அனைவரும் இம்முயற்சியில் ஈடுபடவேண்டும். பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு ஆதாரபூர்வமான கடத்தப்பட்ட சம்பவங்களைத் திரட்டுதல் மிக இன்றியமையாதது.

மேளத்தைப் பற்றிய பிரச்னை கடத்திச் செல்லுதலைவிட எளிது. இடைவிடாத மேளம், ஆரத்தி அல்லது ராம நாமம் மத வாழ்வுக்கு இன்றியமையாததாக இருக்க வேண்டும்; அல்லது அவசியமற்றதாக இருக்க வேண்டும். இன்றியமையாததானால், நீதி மன்றங்களின் தடை உத்தரவுகள்கூட இவற்றைத் தடை செய்ய முடியா. எவ்வாறாயினும் வாத்யம் முழக்கியாக வேண்டும்; ஆரத்தி செய்தாக வேண்டும்; ராம நாமம் சொல்லியாகவேண்டும். நான் சொல்லுவதை ஒத்துக்கொண்டால், பணிவு நிறைந்த ஆண் பெண்கள் ராம நாமத்தை ஜபித்துக்கொண்டு வந்து, அது சச்சரவுக்கு ஏதுவாயின், தடிகளும்கூட இல்லாமல் நிராயுதபாணிகளாக ஊர்வலம் வந்து முஸ்லிம்களின் கோபங்களை எல்லாம் தாங்கள் தலை கொடுத்துத் தாங்க முன்வரவேண்டும். எனது வழியை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவர்கள் ராம நாமத்தை ஜபித்துக்கொண்டு ஊர்வலம் சென்று, ஒரு சச்சரவிற்குப் பயந்தோ அல்லது நீதி மன்றத்தின் உத்தரவுக்கு இணங்கியோ மேளத்தை நிறுத்துவது தனது மதத்தை மறுப்பதாகும்.

ஆனால், இப்பிரச்னையில் மற்றொரு விஷயம் இருக்கிறது. அதாவது, மசூதிகளின் பக்கத்தில் பிரார்த்தனை வேளைகளில் போகும் போதுகூட, இடைவிடாது மேளம் வாசிப்பது மத வாழ்விற்கு எப்பொழுதுமே அவசியமா? ராம நாம ஜபமும் இப்

---

கூறுவது போல, இவை மிகைபடுத்தப் பட்டிருக்கலாம். இது இருப்பினும் இல்லாவிட்டாலும், கடத்திச் செல்லுதல் நன்கு அமைந்த சமூகத்தில் அசாத்தியமான காரியமாக இருக்க வேண்டும். பத்திரிகை அறிவிப்புகள், கடத்திச் செல்லப்பட்டு விடுவோமோ என்று பயந்து கிடக்கும் பெண்களுக்குச் சிறிதும் பாதுகாப்பு அளிக்கமாட்டா என்பது எனக்குத் தெரியும். இது சுற்றத்தார், நண்பர்கள், அயலகத்தார் இவர்களின் கோழைத்தனம் முதல் தரமானது என்பதை நிரூபிக்கிறது. தனது பெண்களைக் காத்துக்கொள்ள முடியாத சமூகம், மணம் செய்து மக்களைப் பெற லாயக்கற்றது. காமுகர்கள் தங்களுக்குத் தீங்கின்றி எங்கெங்கு, எவ்வெப்பொழுது தமது காமத்தைத் தீர்த்துக் கொள்ள முடியுமோ அங்கெல்லாம், அப்பொழுதெல்லாம் தீர்த்துக்கொள்ளுவார்கள். யார் பெண்டுகளைக் காப்பாற்றித் தம் கடமையைச் செய்யவில்லையோ, அவர்களை நாணத்திற்குள்ளாக்கும் கிளர்ச்சி ஒன்றைத்தான் செய்ய முடியும், செய்யவும் வேண்டும்.''

படி அவசியமானதுதானு? முஸ்லிம்களைப் புண்படுத்துவதற்காகவே ஊர்வலங்கள் ஏற்படுத்துவது, பிரார்த்தனை வேளைகளில் ஆரத்தி செய்வது, ராம நாமம் ஜபிப்பது இவை காலத்தின் கோலமாகிவிட்டன. மத வாழ்விற்கு அத்தியாவசியம் என்பதற்காக இப்படிச் செய்வதில்லை. சண்டை போடுவதற்குச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்காகவே செய்கிருர்கள் என்றெல்லாம் புகார் செய்கிருர்களே? இதற்கு என்ன பதில்? இது உண்மையானுல், இது லட்சியத்தையே தோற்கடிப்பதாகும். இயல்பான ஆர்வமின்மையால் நீதி மன்றத்தின் உத்தரவோ, ராணுவ ஆர்ப்பாட்டமோ அல்லது கல் மாரியோ உண்மையான பக்தியில்லாத இந்த வெளி வேஷத்திற்கு ஒரு முடிவை ஏற்படுத்திவிடும்.

ஆகையால், மதம் சம்பந்தப்பட்ட வரையில் அது அவசியம் என்பது தெளிவாக்கப்பட வேண்டும். புண்படுத்துவது போன்ற வெளித்தோற்றத்தைக்கூடத் தவிர்க்க வேண்டும். பரஸ்பரம் அறிந்துகொள்ள மனப்பூர்வமாக முயற்சிக்க வேண்டும். இது முடியாத இடத்தில், எதிராளிகளின் உணர்ச்சிகளை மதித்துத் தமக்கு வேண்டிய குறைந்த அளவை நிச்சயப்படுத்திய பிறகு, நியாய மன்றத்தின் உதவியை எதிர்பாராமல் அல்லது, உத்திரவிருந்தபோதிலும், அந்தக் குறைந்த அளவிற்காகச் சண்டையிட வேண்டும். கொள்கையை விட்டுக் கொடுப்பதற்கோ, பலவீனத்திற்கோ ஊக்கமளித்தேன் அல்லது யோசனை கூறினேன் என்று யாரும் என்னைக் குற்றஞ்சாட்டக்கூடாது. ஆனுல், ஒவ்வொரு சிறு விஷயத்தையும் பெரிதுபடுத்திக் கொள்கையாக்கி விடக்கூடாது என்று நான் முன்பே கூறியுள்ளேன்; மீண்டும் அதையே கூறுகிறேன்.

—'எங் இந்தியா' – 22—10—1925

## 21

# மௌலானு ஆஸாதின் வேண்டுகோள்

ஹிந்து-முஸ்லிம் பிரச்னை சம்பந்தமாக மௌலானு அபுல் கலாம் ஆஸாத் பத்திரிகைக்கு அனுப்பிய ஒரு செய்தியின் நகலை அவர் எனக்கு மிக்க அன்புடன் அனுப்பியுள்ளார். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட வேண்டுமென மனப்பூர்வமாக விரும்பும் ஒரு சில மனிதர்களில் மௌலானு ஆஸாதும் ஒருவராவார். அப்பிரச்னையைப் பற்றி ஆலோசிப்பதற்காக காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் ஒன்றைக்கூட்ட வேண்டுமென அவர் என்னைக் கேட்டிருக்கிருர். கான்பூரில் நடக்கப் போகும் காங்கிரஸ் கூட்டத்திற்கு முன் நான் காரியக் கமிட்டியைக் கூட்டப்போவதில்லை. ஏனெனில், காங்கிரஸ் கூட்டம் சமீபத்தில் நடக்கவிருக்கும் போது, அதற்குள் காரியக் கமிட்டியைக் கூட்டவேண்டிய அவசியமில்லை.

ஹிந்து-முஸ்லிம் பிரச்னை தீருவதற்கான ஒரு பரிகார முறையைக் காரியக் கமிட்டி கண்டுபிடிக்க வேண்டும் என்பதே எனது ஆர்வமாகும். ஆனால், அதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அந்தப் பிரச்னைக்கு முடிவு காண முற்றிலும் முடியாது என்று நான் கூறவில்லை. ஆனால், அதற்குக் காங்கிரஸ் பரிகார முறையைக் கண்டுபிடிக்கும் என்பதில்தான் எனக்கு நம்பிக்கை இல்லை. வகுப்புக் கலகத்தில் ஈடுபடும் ஹிந்துக்களோ அல்லது முஸ்லிம்களோ காங்கிரஸ் பிரதிநிதிகள் அல்ல என்ற உண்மையை நாம் மறைக்கக்கூடாது. சச்சரவிடுவோருக்குப் பக்கபலமாகக் கண்ணுக்குத் தெரியாமல் இருப்போர் காங்கிரஸின் செல்வாக்கிற்கு உட்பட வேண்டும்; கலகங்களுக்குத் தூபம் போடும் பத்திரிகை ஆசிரியர்கள் ஒன்று மனம் மாறி ஒற்றுமைச் சித்தாந்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்; இல்லாவிடில், அவர்களுக்கு எவ்விதச் செல்வாக்கும் இராமற் போக வேண்டும். அப்படியானால்தான் காங்கிரஸ், ஒற்றுமை ஏற்படுவதற்கு ஏதாவது பலன் தரத்தக்க விதத்தில் பணி புரிய முடியும். ஒற்றுமை என்ற பெயரைக் கூறுவோர் மனத்தில் வேற்றுமையையே எண்ணுகிறார்கள் என்பது எனது மனக்கசப்பான அனுபவமாகும்.

சென்ற மகாயுத்தத்தின்போது ஐரோப்பாவில் இருந்த சூழ்நிலையைப் போல், இன்றும் நம்மைச் சுற்றிய சூழ்நிலை போலியாக இருந்து வருகிறது. பத்திரிகைகள் ஒரு போதும் உண்மையைச் சொல்லுவதில்லை. அந்தந்த நாடுகளின் பிரதிநிதிகள் பொய் சொல்லுவதை ஒரு நளினமான கலையாக வளர்த்திருக்கிறார்கள்! யுத்தத்தில் எல்லாம் நியாயமே என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. குழந்தைகளின் ரத்தத்தைக்கூடச் சிந்துவதற்குத் துடித்த ஜிஹோவாவின் பழைய சித்தாந்தம் மேல் பூச்சு எதுவுமின்றி அப்பட்டமாக அனுசரிக்கப்பட்டது. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டுள்ள குட்டி யுத்தத்திலும் இன்று நிலைமை அப்படித்தான் இருந்து வருகிறது. நமது மதங்களைப் பாதுகாப்பதற்காக நாம் பொய் சொல்லலாம், மோசம் செய்யலாம் என்று ஒருவர் அல்ல, பலரும் என்னிடம் கூறினார்கள்.

எனினும், இது அணுவளவும் நம்பிக்கையைப் பாழாக்குவதற்குக் காரணமாக இருக்க வேண்டாம். வேற்றுமைப் பிசாசு கடைசி மூச்சில் தள்ளாடிக்கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். பொய்க்கு அடித்தளம் கிடையாது. வேற்றுமை பொய்யே ஆகும். இரு சமூகங்களும் கலப்பற்ற சுயநல நோக்கம் கொண்டிருந்தால்கூட, அதனால் ஒற்றுமையே ஏற்படும். சுயநலமற்ற ஒற்றுமை ஏற்படவேண்டும் என்றே நான் நம்பியிருந்தேன். இருந்தாலும், பரஸ்பர நலனை அடிப்படையாகக்கொண்ட ஒற்றுமையைக்கூட நான் வரவேற்கவே செய்வேன். ஆனால், அத்தகைய ஒற்றுமை மௌலானா சாகிப் குறிப்பிட்டுள்ள முறையில் வராது. அது வரும்போது, நாம் சிறிதும் எதிர்பாராத ஒரு விதத்தில் வந்து சேரும்.

கடவுள் பித்தலாட்டக்காரர்களுக்கெல்லாம் பித்தலாட்டக்காரர். நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தி, நமது பித்தலாட்டமான தந்திரங்களை முறியடிப்பது எப்படி என்பது அவருக்குத் தெரியும். அவர், ஒருவர் சிறிதுகூட எதிர்பாராமல் இருக்கும் போது மரண தேவனை அனுப்பிவிடுகிறார். உயிர் வாழ்வதற்கான அறிகுறியே நமக்குத் தென்படாதபோது, அவர் உயிரைக் கொடுக்கிறார். நமது இழிவான, நிர்க்கதியான நிலையை நாம் ஒத்துக்கொள்ளுவோமாக. நாம் முற்றிலும் முறியடிக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் ஒத்துக்கொள்ளுவோமாக. நமது பணிவாகிற புழுதியின் மீது வெல்ல முடியாத ஒற்றுமைக் கோட்டையை நாம் நிர்மாணிப்போமாக.

மௌலானாவின் வேண்டுகோளுக்கு நான் அதிக உற்சாகம் அளிக்கக்கூடிய ஒரு பதிலை அனுப்ப இயலாததற்காக வருந்துகிறேன். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை சம்பந்தமாக அவருக்கு உள்ள பேரார்வத்தில் எனக்கும் பங்கு உண்டு. இந்த உண்மையைக் கண்டு அவர் ஆறுதல் அடையலாம். ஒற்றுமையை அடைவதற்கான அவரது திட்டத்தில், அவருக்கு உள்ள நம்பிக்கையில் நான் பங்கு எடுத்துக்கொள்ள இயலாவிட்டால்தான் என்ன? அவரது திட்டத்திற்குத் தடையாக இருக்கும்படி நான் எதுவும் செய்யமாட்டேன். அதன் சம்பந்தமாக எடுத்துக்கொள்ளப் படும் மனப்பூர்வமான ஒவ்வொரு முயற்சியும் வெற்றி பெறவே நான் பிரார்த்திப்பேன். அவ்விஷயமாக நான் அலட்டிக் கொள்ளுவதை நிறுத்துவதற்கு, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக் கொள்கையில் எனக்குள்ள நம்பிக்கை போய்விட்டதென்பது அர்த்தமல்ல. அதில் எனக்கு உள்ள தளரா நம்பிக்கையை மீண்டும் நான் பிரகடனம் செய்கிறேன். அதற்காக, வந்து கொண்டிருக்கும் அந்த ஒற்றுமையின் சிருஷ்டிகர்த்தா என்ற பாக்கியத்தைக்கூட நான் துறந்துவிட வேண்டும். எனது தலையீடு புண்ணை ஆற்றுமல் கிளறிவிடக்கூடும் என்ற நிலைமை ஏற்படும் போது, ஒதுங்கி நின்று காத்திருக்கும் விவேகம் எனக்கு உண்டு.

—'எங் இந்தியா' – 26—11—1925

# 22

# ஆண்மையற்ற நிலையைவிட பலாத்காரமே மேல்

சாத்தியமாக இருந்திருக்குமாயின், அல்லது எனது அபிப்பிராயத்தில் அது உசிதமென்று தோன்றியிருக்குமாயின், டாக்டர் சையது முகமதுவும் மற்ற நண்பர்களும் விடுத்த வேண்டுகோளுக்கு நான் இணங்கியிருப்பேன். அவ்விதம் இணங்குவதைக் காட்டிலும் எனக்கு அதிக மகிழ்ச்சி அளிக்கக்கூடியது

வேறெதுவும் இல்லை. நான் ராஜீய விஷயங்களிலிருந்து விலகிக் கொண்டுவிட்டதாக வேண்டுகோளில் கையெழுத்திட்டிருப்போர் நினைப்பது தவறாகும். தவிர்க்கக்கூடிய பொது அலுவல்களிலிருந்து ஒரு வருட காலத்திற்கு விலகியிருக்க வேண்டுமென எனக்கு நானே நிபந்தனை விதித்துக்கொண்டுள்ளேன். இந்த வருடமும் அநேகமாக முடிந்துவிட்டது. நான் ஒதுங்கியிருப்பதற்கான காரணங்களை ஆரம்பத்திலேயே பூரணமாக விவரித்துள்ளேன். இடைவிடாத பிரயாணமும், பொது அலுவல்களும் எனக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்தன. எனவே, எனது ஆரோக்கியமும், ஆசிரமத்தின் தேவைகளும் நான் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை உண்டுபண்ணின. சட்டசபை விஷயங்களில் நான் தலையிடவில்லை எனில், அவற்றில் எனக்குள்ள திறமையின்மை காரணமாக இருக்கலாம். நமக்குச் சட்டசபைகள் சுயராஜ்யம் அளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லவே இல்லை. ஹிந்து-முஸ்லிம் சச்சரவுகளில் தலையிடுவதை நான் நிறுத்திக்கொண்டு விட்டேன். ஏனெனில், தற்போது நான் அதில் தலையிடுவதால் பாதகம்தான் ஏற்படும் என்பது எனது நிச்சயமான அபிப்பிராயமாகும். அதற்கு அடுத்தபடியாக, தீண்டாமை, தேசீயக் கல்வி ஸ்தாபனங்கள், ராட்டினம் முதலிய பிரச்னைகள் பாக்கியிருக்கின்றன. என் சக்திக்கு இயன்ற வரையில் இவ்விஷயங்களையொட்டி எனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறேன்.

எனவே, நான் செயலற்றிருப்பதாக என் நண்பர்களுக்குத் தோன்றுவதெல்லாம், செயலில் என் மனம் முழுவதையும் செலுத்தியுள்ள எனது மிகத் தீவிர நிலையையே காட்டுகின்றன என்று கூறத் துணிகிறேன்.

அவர்களுடைய நம்பிக்கையின்மையில் நான் சிறிதும் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை. ஹிந்து-முஸ்லிம் சச்சரவிற்கும் சுயராஜ்யப் போராட்டத்திற்கும் சம்பந்தமே இல்லை என்பதை நாம் அறிவோம். சுயராஜ்யம் விரைவில் வந்துகொண்டிருப்பதை ஒவ்வொரு கட்சியினரும் உணருகின்றனர். அது வரும்போது, அதை ஏற்கத் தகுதியுடனும் தயாராகவும் இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு சாராரும் விரும்புகின்றனர். முஸ்லிம்களைக் காட்டிலும் தாங்கள் உடல் வலிமை குறைந்தவர்கள் என்று ஹிந்துக்கள் எண்ணுகின்றனர். கல்வித்துறையிலும் உலகாயதமான மற்ற அம்சங்களிலும் தாங்கள் பலவீனமாக இருப்பதாக முஸ்லிம்கள் கருதுகின்றனர். இதுவரையில் பலவீனமானவர்கள் என்ன செய்து வந்தார்களோ, அதையே அவர்களும் செய்து வருகிறார்கள். இந்தப் போராட்டம் துரதிருஷ்டகரமானது. எனினும், அது வளர்ச்சியின் அறிகுறியேயாகும். அது ரோஜா புஷ்ப யுத்தங்கள்* போன்றது. அதிலிருந்து மகாவல்லமை பொருந்திய

* ரோஜா புஷ்ப யுத்தங்கள் (Wars of the Roses) என்ற விசித்திரப் போர், பிரிட்டனில் லங்காஸ்டர் ராஜ குடும்பத்திற்கும் யார்க் ராஜ குடும்பத்திற்கும் நிகழ்ந்ததாகும். அந்த யுத்தம் 1455-இலிருந்து 1485-ஆம் ஆண்டு வரையில் நடந்தது. பிரிட்டிஷ்

ஒரு தேசம் உதயமாகும். 1920-இல் ரத்தக்களரியை அடிப்படையாகக்கொண்ட வழியைக் காட்டிலும் சிறந்த ஒரு வழி நம் முன் தோன்றியது. ஆனால், அதை நாம் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. எனினும், முற்றிலும் நிர்க்கதியான, ஆண்மையற்ற நிலையைக் காட்டிலும் ரத்தக்களரி வழி சிறந்ததே.

மோதிலால்ஜிக்கும் லாலாஜிக்கும் * இடையே ஏற்பட்டுள்ள அவலட்சணமான சச்சரவுகூட மேலே குறிப்பிட்ட போராட்டத்தின் ஓர் அம்சமேயாகும். அவர்களுடைய கருத்து வேற்றுமைகளைக் கண்டு இந்திய சுதந்திரத்தின் விரோதிகள் ஆனந்தம் அடையட்டும். ஆனால், அது அற்ப ஆனந்தமாக முடியும். ஏனெனில், வெகு விரைவில் அந்த இரு தேச பக்தர்களும் ஒரே கொடியின் கீழ் தொண்டு புரிந்துகொண்டிருப்பார்கள். அவ்விருவரும் தங்கள் நாட்டை நேசிப்பவர்கள் ஆவர். வகுப்பு வாதத்தி

---

கிரீடத்தை யார் தரிப்பது என்பதையொட்டி ஏற்பட்ட போட்டியே யுத்தத்திற்குக் காரணமாகும். ஆருவது ஹென்ரி மன்னனின் ஆட்சிக் காலத்தில் மூண்ட அந்த யுத்தம் மூன்ருவது ரிச்சார்ட் மன்னனின் மரணத்துடன் முடிவடைந்தது. லங்காஸ்டர் கட்சியைச் சேர்ந்தவர்களின் சின்னம் சிவப்பு ரோஜா; யார்க் கட்சியைச் சேர்ந்தவர்களின் சின்னம் வெள்ளை ரோஜாவாகும். லங்காஸ்டர் கட்சியைச் சேர்ந்த ஏழாவது ஹென்ரி மன்னன், யார்க் கட்சியைச் சேர்ந்தவரும் நான்காவது எட்வர்ட் மன்னனின் மகளுமான எலிஸபெத் இளவரசியை மணம் செய்து கொண்டதுடன், சிவப்பு ரோஜாவிற்கும் வெள்ளை ரோஜாவிற்கும் உள்ள போட்டி மறைந்து, சமாதானம் ஏற்பட்டது!! அந்தப் போட்டிப் போராட்டத்தின் பலனைப் பிரிட்டன் ஒன்றுபட்டு வலிமை பெற்றதையே காந்திஜி மேலே குறிப்பிட்டுள்ளார்.

* 1923 ஜனவரி மாதம் 1-ஆம் தேதி தேசபந்து சித்தரஞ்சன் தாஸைத் தலைவராகவும் பண்டித மோதிலால் நேருவைக் காரியதரிசியாகவும் கொண்டு சுயராஜ்யக் கட்சி அமைக்கப்பட்டது. காங்கிரஸிற்கு உட்பட்டே தாங்கள் தொண்டு செய்ய விரும்புவதாகச் சுயராஜ்யக் கட்சி பிரகடனம் செய்தது. சட்டசபைப் பிரவேசத்தை ஆதரிப்பதே சுயராஜ்யக் கட்சியின் முக்கிய கொள்கையாகும். டில்லியில் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் தலைமையில் நடந்த காங்கிரசின் விசேஷக் கூட்டம், 1923 தேர்தல்களில் போட்டியிட சுயராஜ்யக் கட்சியினருக்கு அனுமதி அளித்தது. தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சியினர் பல மாகாணங்களிலும் பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்றனர். மத்திய சட்டசபையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தானங்களில் சற்றேறக்குறைய பாதி ஸ்தானங்கள் சுயராஜ்யக் கட்சியினருக்குக் கிடைத்தன. ஆக்க வேலைகளில் காந்திஜி கவனம் செலுத்தினர். சுயராஜ்யக் கட்சியினர் சட்டசபைகளில் பிரவேசித்து அரசியல் போராட்டங்களில் கவனம் செலுத்தினர். 1926-இல் சுயராஜ்யக் கட்சியினரிடையே அபிப்பிராய பேதம் முற்றியது. அவ்வருடம் ஆகஸ்டு 7-ஆம் தேதி லாலா லஜபதிராய் சுயராஜ்யக் கட்சியிலிருந்து ராஜிநாமா செய்தார். சுயேச்சைக் காங்கிரஸ் கட்சி என்ற ஒரு புதிய கட்சியை அமைக்க அவர் மாளவியாவிற்குஉதவியாக இருந்தார். புதிய கட்சி, சுயராஜ்யக் கட்சியை எதிர்த்ததுடன், ஹிந்து மகாசபையுடன் ஒத்துழைக்க முற்பட்டு ஹிந்துக்களின் கட்சியாக விளங்கியது. தேர்தலின் போது, சுயராஜ்யக் கட்சித் தலைவர்களும், குறிப்பாக பண்டித மோதிலால் நேருவும் காபூல் சர்க்காருடன் சேர்ந்து சதி செய்வதாக லாலா லஜபதி ராய் குற்றம் சாட்டினர். லஜபதி ராய்க்கும் மோதிலால் நேருவுக்கும் இடையே ஏற்பட்ட தகராறைத் தீர்க்க காந்திஜி இசையவில்லை. ஏனெனில், அன்றிருந்த நிலையில் அது இயல்பே என்று காந்திஜி கருதினர். மோதிலால் நேரு-லஜபதி ராய் போராட்டத்தையே அவலட்சணமானது என்று காந்திஜி அப்போது குறிப்பிட்டார்.

லிருந்து தப்புவதற்கில்லை என்று லாலாஜி கருதுகிறார். பண்டித மோதிலால் நேரு, வகுப்புவாதத்தைப் பற்றிய எண்ணத்தைக் கூடச் சகியாதவர். அவர்களில் ஒருவர்தான் சரி என்று யாரால் கூற முடியும்? இருவருடைய போக்குகளும் தற்போதுள்ள சூழ் நிலையை அனுசரித்தவையாகவே இருக்கின்றன. லாலாஜி சுய ராஜ்யம் என்று உச்சரித்தவண்ணம் பொது வாழ்க்கையில் ஈடுபடுவதற்காகவே பிறந்தவர். இப்போது அதை அவர் வெறுத்துவிடவில்லை. ஆனால், வகுப்புவாதத்தின் மூலம் அவர் அதை அடைய உத்தேசிக்கிறார். நமது மலர்ச்சியில் அது ஓர் அத்தியாவசியமான கட்டம் என்று அவர் கருதுகிறார். ஆனால், வகுப்புவாதம் சுயராஜ்யம் அடைவதற்கு முட்டுக்கட்டை யாக இருக்கிறதென்று பண்டித மோதிலால் நேரு கருதுகிறார். வாழ்க்கையின் நியதி ஆரோக்கியமேயன்றி நோயல்ல என நம்பிக்கை வைத்தியர்கள் நோயைத் துச்சமாக நினைப்பது போல், மோதிலால் நேருவும் வகுப்புவாதத்தைத் துச்சமாகக் கருதுகிறார். ஹக்கீம் சாகிப் அஜ்மல் கானின் தொண்டை தேசம் எவ்விதம் இழக்க முடியாதோ, அது போலவே சர் அப்துல் ரஹீமின் தொண்டையும் இழக்க முடியாது. ஐலிங்டன் கமிஷனில் அங்கம் வகித்து கோகலேயுடன் சேர்ந்து மிகவும் முக்கியமான குறிப்பை எழுதிய சர் அப்துர் ரஹீம், தேசத்தின் விரோதி அல்ல. ஹிந்துக்களுடன் சரி சமானமாக முஸ்லிம்கள் போட்டி போட முடியாவிடில், தேசம் முன்னேற்றம் அடைய முடியாது என்று அவர் எண்ணினால், அவர் மீது யார் குற்றம் கூற முடியும்? அவரது முறைகள் தவறாக இருக்கலாம். எனினும், அவர் நாட் டின் விடுதலையை விரும்புபவரே ஆவார். இவை போன்ற பல் வேறு சிந்தனைகளுக்கும் என் மனத்தில் நான் இடம் கொடுப் பவனே என்றாலும், எனக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. ஒரு கட்டம் என்ற முறையில்கூட வகுப்புவாதத்தில் எனக்கு நம் பிக்கையில்லை. அத்தகைய கட்டத்திற்கு நான் தகுதியும் அல்ல. எனவே புயல் தணியும் வரையிலும், புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாகும் வரையிலும் நான் ஒதுங்கி நிற்கவேண்டும்.

சட்டசபைகளில் நடந்துவரும் போராட்டத்தை நான் பத்திரமான தூரத்திலிருந்து கவனித்து வர முடியும். தேசீயத் திட்டத்தை உற்சாகத்துடன் நிறைவேற்றுவதற்காகச் சட்ட சபைகளில் நம்பிக்கை வைத்திருப்போருக்கு நான் மரியாதை செலுத்துகிறேன்.

இந்தியாவில் கல்வியறிவு உள்ளவர்கள்தான் இரு கட்சிகளா கப் பிரிந்து நிற்கிறார்கள். இந்தக் கட்சிகளை ஒன்றுபடுத்தும் ஆற்றல் எனக்கு இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அவர்களுடைய வழி என் வழி அல்ல. அடித்தளத்திலிருந்து மேலே வேலை செய்ய நான் முயற்சித்து வருகிறேன். பார்ப்பவர் களுக்கு இது கோபத்தை உண்டாக்கும் அளவுக்கு மெதுவான முயற்சியாகத் தோன்றும். அவர்களோ, மேலேயிருந்து கீழ்நோக்கி வேலை செய்து வருகிறார்கள். இது முதலில் கூறப்பட்ட வழி

யைக் காட்டிலும் அதிகக் கஷ்டமானது, அதிகச் சிக்கலானது. மேலே குறிப்பிட்ட வேண்டுகோளில் கையெழுத்திட்டிருப்போர், லட்சக்கணக்கான மக்களின் சார்பில் அதை எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், மக்களுக்குக் கட்சிச் சிக்கல் களில் அக்கறையே இல்லை. அவை அவர்களுடைய அறிவிற்கு அப்பாற்பட்டவை.

—'எங் இந்தியா' - 9—9—1926

பகுதி எட்டு

# சுவாமி சிரத்தானந்தர்

## 1

## உயிர்த் தியாகி சிரத்தானந்தர்

[1926 டிசம்பர் மாதம் 26-ஆம் தேதி கௌஹத்தியில் அஸ்ஸாம் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் ஆரம்பமாயிற்று. பிரம்மபுத்ரா நதிக்கரையில் யாரும் நம்ப முடியாதவாறு வெகு சீக்கிரத்தில் நிர்மாணமான கதர் மயமான காங்கிரசிற்கு ஸ்ரீ ஸ்ரீனிவாச ஐயங்கார் தலைமை வகித்தார். சுவாமி சிரத்தானந்தர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்தபோது அப்துல் ரஷீத் என்ற ஒரு முஸ்லிம் வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டு அப்போது சில நாட்களே ஆகியிருந்தன. அவரது மரணத்தைக் குறித்து காந்திஜி ஒரு துக்கத் தீர்மானத்தைப் பிரரேபித்துக் கூறியதாவது:

''சுவாமிஜியின் மரணத்தைக் குறித்து நாம் கண்ணீர்விடவேண்டாம். நமது இதயத்தைச் சுத்தம் செய்து, ஓரளவு சுவாமிஜியின் நம்பிக்கையுடனும் உத்வேகத்துடனும் அதை உறுதியாக்கிக்கொள்வோமாக. இடையறாத தம்முடைய தைரிய நடவடிக்கைகளால் சுவாமிஜி தேசமே அதிசயிக்கும்படி செய்துள்ளார். அப்துல் ரஷீத் ஒரு சகோதரன். அவனை நான், சுவாமியைக் கொன்ற ஒரு குற்றவாளி என்று கருதவில்லை. ஒருவர் மீது ஒருவர் துவேஷ உணர்ச்சிகளைக் கிளறிவிட்டவர்கள் யாவரும்தான் குற்றவாளிகள் ஆவர். ஹிந்து, முஸ்லிம் தலைவர்கள்தான் பாவம் செய்தவர்கள். இந்தியாவில் உள்ள சில பத்திரிகைகள் நடமாடும் தொத்து நோய்களாகியிருக்கின்றன. உயிருடன் இருந்தபோது சுவாமிஜி நாட்டிற்குத் தொண்டு செய்தார். அவரிடமிருந்து சகலரும் தெரிந்துகொள்ள வேண்டிய பாடம் அதுதான். யாதொரு குற்றமும் செய்யாத சுவாமிஜியின் ரத்தத்தினால் நமது உள்ளத்தைச் சுத்தம் செய்து கொள்ளுவோமாக.''

மேற்கண்ட தீர்மானத்தை மௌலானா முகமது அலி ஆதரித்துப் பேசுகையில், சுவாமிஜியின் தொண்டை வெகுவாகப் பாராட்டினார். 23-12-1926-இல் சுவாமி சிரத்தானந்தர் கொலையுண்ட செய்தி காந்திஜிக்குக் கிடைத்ததும், 'யங் இந்தியா'வில் காந்திஜி எழுதிய கட்டுரையே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

எதிர்பார்த்தது நடந்து விட்டது. சுமார் ஆறு மாதத்திற்கு முன் சாபர்மதி சத்தியாக்கிரக ஆசிரமத்தில் இரண்டொரு நாட்கள் தங்கிய போது நடந்த பேச்சில், தமது உயிருக்கு அபாயம் நேருமென்று பயமுறுத்தி அடிக்கடி கடிதங்கள் வருவதாக சுவாமி சிரத்தானந்தஜி சொன்னார். தமது தலைக்குப் பரிசு வைக்கப்படாத சீர்திருத்தக்காரர் யார்? ஆதலால், அக் கடிதங்

கள் வந்ததில், எதிர்பாராதது ஒன்றுமில்லை. அவர் கொல்லப் பட்டதிலும் எதிர்பாராதது ஒன்றுமில்லை.

சுவாமிஜி சீர்திருத்தக்காரர், வெறும் பேச்சாளியல்ல; தமது கொள்கையைச் செயலில் காட்டுபவர். அவர் ஜீவன் ததும்பும் நம்பிக்கை உள்ளவர். அதற்காக அவர் அல்லற்பட்டார். அவர் வீரத்தின் உருவம். ஆபத்திற்கு முன் ஒருகாலும் அவர் நடுங்கிய தில்லை. அவர் ஒரு போர் வீரர். நோயுற்ற படுக்கையில் அல்ல, போர் முனையிலேயே வீரன் மரிக்க விரும்புகிறான்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னால் சிரத்தானந்தஜிக்கு நோய் கடுமையாகியது. டாக்டர் அன்சாரி தம்மாலியன்ற அளவு அன்பு கனிந்த வைத்திய உதவி செய்து வந்தார். இம்மாத ஆரம்பத் தில் அவருடைய சுகத்தைப் பற்றி விசாரித்தேன். "சற்றுச் சௌகரியமாக இருக்கிறார். உங்கள் அன்பும் பிரார்த்தனையும் அவருக்கு வேண்டும்" என அவர் மகன் இந்திரா தந்தி மூலம் பதில் தெரிவித்தார். கேட்குமுன்னரே எனது அன்பும் பிரார்த் தனையும் அவருக்கு உண்டு.

நோயுற்றுப் படுக்கையில் இருந்த போதிலும், அவர் தமது கொள்கைக்காகப் பிராணத் தியாகம் செய்ய வேண்டும் என்பதே இறைவனின் திருவுள்ளம். அப்படியே அவர் ஒரு சதிகாரன் கையினால் கொலையுண்டார். இவன் சுவாமிஜியுடன் இஸ்லா மைப் பற்றித் தர்க்கவாதம் செய்வதற்காகத் தன்னை அவரிடம் போகவிட வேண்டுமென அனுமதி கேட்டான். சுவாமியினுடைய விருப்பத்தின் பேரில் உள்ளே போனான். அவன், பக்கத்தி லிருந்த சுவாமிஜியின் உண்மைத் தொண்டனாகிய தர்ம சிங்கை வெளியே போகச் செய்வதன் பொருட்டே, தாகத்தால் வருந்து வதாகப் பாசாங்கு செய்தான். தர்ம சிங் தண்ணீர் கொண்டு வருவதற்காக வெளியே போயிருக்கையில், படுக்கையிலிருந்த நோயாளியின் மார்பில் இரு மரணக் காயங்களை உண்டு பண்ணி னான். சுவாமிஜியின் கடைசி வார்த்தைகள் என்ன என்பது நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அவரை நான் அறிந்த அளவில், தவறிழைக்கின்றோம் என்று தெரியாத அவனை ஆண்ட வன் மன்னிக்கவேண்டும் என்று அவர் பிரார்த்தனை செய்திருப் பார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. கீதை கூறுவதுபோல், "புண்ணியமான மரணத்தைச் சம்பாதிக்கும் வீரன் இன்பமே அடைவான்."

எச் சமயத்திலும் மரணம் பாக்கியமேயாகும். ஆனால், சத்திய மென்னும் லட்சியத்திற்காக உயிர்துறப்பது இரட்டிப்புப் பாக்கியம். மரணம் பேயல்ல; நண்பர்களில் உண்மையுள்ள நண்பன்; வேதனையினின்றும் மீட்கிறான்; நாம் விரும்பாவிடினும் நமக்கு உதவுகிறான்; நமக்கு எப்போதும் புதுச் சந்தர்ப்பங்களை யும், புது நம்பிக்கைகளையும் தருகிறான். புத்துயிர் அளிப்பதில் உறக்கத்தைப்போல் இனிமையானவன். ஆயினும், ஒரு நண்பன்

சாகும்பொழுது துக்கப்படுவது வழக்கம். பிராணத் தியாகியின் மரணத்தில் இவ் வழக்கத்திற்கு இடமில்லை. ஆகையால், நான் இவருடைய மரணத்திற்காக வருந்தப் போவதில்லை. அவரும் அவரைச் சார்ந்தோரும் பொறுமைப் படத்தக்க நிலையை அடைந்து விட்டனர். ஏனெனில், சுவாமிஜி இறந்தும் உயிருடனிருக்கிறார். அவர் தம் பூதாகாரமான உடலுடன் நம் மத்தியில் நடமாடியதைவிட அதிக உண்மையான விதத்தில் உயிர் வாழ்கிறார். இவ்வளவு மகத்துவம் வாய்ந்த மரணத்திற்காக அவர் பிறந்த குடும்பத்தையும் தேசத்தையும் பாராட்ட வேண்டும். அவர் வீரராக வாழ்ந்தார், வீரராக மறைந்தார்.

கேடயத்திற்கு மறு புறம் ஒன்றும் உண்டு. முஸ்லிம்களின் நண்பனாகவே என்னை நான் பாவிக்கிறேன். அவர்கள் என் ரத்த சகோதரர்கள். அவர்களுடைய தவறுகள் என்னுடையவை. அவர்களது துன்பத்திலும் இன்பத்திலும் எனக்குப் பங்கு உண்டு. ஹிந்து செய்யும் தீங்கைப் போலவே முஸ்லிம் ஒருவரின் தீச்செயலும் என்னைத் துன்புறுத்துகிறது. முஸ்லிம் பெயர் கொண்ட ஒருவன் இக் கொடிய செயலைச் செய்திருக்கிறான். ஆதலால், முஸ்லிம்களின் நண்பன் என்ற முறையில் இச் செயலுக்காக நான் மிகவும் வருந்துகிறேன். மரணத்தில் இருந்த மகிழ்ச்சியை, இதற்குக் காரணமாயிருந்தது ஒரு தவறிழைக்கும், வழி தவறிய நண்பன் என்பதில் உண்டான துக்கம் குறைத்துளது. ஆகவே, பிராணத் தியாகத்தை எக் காலத்திலும் விரும்புவது முடியாத காரியம். எதிர்பாராமல், முயற்சி செய்யாமல் வரும் பொழுதுதான் அது மகிழ்ச்சியைக் கொடுக்கும் விஷயமாகிறது. நம்மில் கடையனின் தவற்றினாலும் நாம் குதூகலப் படக்கூடாது.

மிகக் கொடுமையாக இருந்தாலன்றித் தவறு வெளிப்படையாகத் தெரிவதில்லை. அது முற்றிலும் இழிவுப்படுத்தப் பட்டாலொழிய மறைவதும் இல்லை.

இக் கொடுமைக்குத் தேசீய முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது. தேசத்தின் உயிர் நிலைகளை உறிஞ்சிக்கொண்டிருக்கும் ஓர் தீமையினிடம் இது நமது கவனத்தை இழுக்கிறது. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஓர் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. இது இருவருக்கும் சோதனைக் காலமாகும்.

கோபம் கொள்ளுவதனால் ஹிந்துக்கள், ஹிந்து மதத்தை அவமானத்திற்கு உள்ளாக்கி, வரவிருக்கும் ஒற்றுமையை ஒத்தி வைக்கலாம். அல்லது தன்னடக்கத்தால் உபநிடதங்களும், மன்னிப்பே உருவாயிருந்த யுதிஷ்டிரரும் கூறியுள்ள போதனைகளுக்கு உகந்தவர்களாய் விளங்கலாம். தனி நபர் செய்த ஒரு குற்றத்தை அப்படியே ஒரு சமூகத்தின் மீது சுமத்தாதிருப்போமாக. பதிலுக்குப் பதில் செய்யும் மனப்பான்மைக்கு இடங் கொடுக்க வேண்டாம். முஸ்லிம் ஒருவர் ஹிந்துவுக்குச் செய்த

தீமையாக இதைக் கருதாமல், வழி தவறிய சகோதரர் ஒருவர் வீரர் ஒருவருக்குச் செய்த தவறாக எண்ணுவோம்.

முஸ்லிம்கள் கடக்க வேண்டிய கடும் சோதனை ஒன்றிருக்கிறது. அவர்கள் கத்தியையும் துப்பாக்கியையும் வெகு தாராளமாக உபயோகிக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. வாள், இஸ்லாமின் சின்னமல்ல. ஆனால், இஸ்லாம் பிறந்தது வாளே மகோன்னதமான சட்டமாயிருந்த, இன்னும் இருக்கிற சூழ்நிலையில்தான். சூழ்நிலை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாததினால் ஏசுவின் போதனை பயனற்றுப் போயிற்று. நபிகள் நாயகத்தின் போதனைக்கும் அதேதான் ஏற்பட்டது. முஸ்லிம்களிடையே இன்னும் வாளுக்குச் செல்வாக்கு இருக்கிறது. வாளை உறையில் விட்டால்தான் இஸ்லாம் சமாதானம் என்னும் அதன் உண்மைப் பொருளில் துலங்கும். இப் பைத்தியக்காரச் செய்கையை முஸ்லிம்கள் அந்தரங்கத்தில் அங்கீகரிப்பார்கள் என்னும் அபாயம் இருக்கிறது. அப்படியானால், அது அவர்களுக்கும் உலகுக்கும் ஆபத்தாகவே முடியும். ஏனெனில், நம்முடைய இந்தப் பிரச்னை ஓர் உலகப் பிரச்னையாகும். வாளை நம்புவது, கடவுளை நம்புவதற்கு முற்றும் முரணானது. இத் தீச் செயலை அவர்கள் அனைவரும் சந்தேகமறக் கண்டிக்க வேண்டும்.

அப்துல் ரஷீதுக்காகப் பரிந்துபேச நான் விரும்புகிறேன். அவன் யாரென்று எனக்குத் தெரியாது. இச் செயலைத் தூண்டியது எதுவாயினும் பரவாயில்லை. தவறு நம்முடையது. பத்திரிகைக்காரர்கள் நடமாடும் கொள்ளை நோயாகி விட்டார்கள். பொய்களையும் அவதூறுகளையும் பரப்புகிறார்கள். தங்கள் தாய்மொழியிலுள்ள இழிச் சொற்களையெல்லாம் காலியாக்கிவருகிறார்கள். வாசகர்களின் கபடமற்ற இளகிய மனத்தில் தங்களுடைய விஷத்தைப் பாய்ச்சி வருகிறார்கள். தங்களின் மொழியழகில் பித்தேறிய தலைவர்களுக்குத் தங்களது நாக்குகளையும் பேனைக்களையும் அடக்கிவைக்கத் தெரியவில்லை. துரோகபுத்தியுள்ள ரகசியப் பிரசாரம் தங்கு தடையின்றித் தனது இருண்ட பயங்கர வேலையைச் செய்திருக்கிறது. ஆகையால், அப்துல் ரஷீதைப் பற்றிக்கொண்டு தலைக்கேறிய ஜுரத்திற்குப் படித்தவர்களும், அரைப் படிப்புப் படித்தவர்களுமாகிய நாம்தான் பொறுப்பாளியாவோம்.

போட்டியிடும் கட்சிகளுக்கிடையே வித்தியாசம் பாராட்டிக் குற்றத்தைப் பங்கீடு செய்தல் அவசியமில்லை. இருவரும் குற்றம் செய்திருக்கையில், யார் தங்கத் தராசு கொண்டு குற்றத்தின் பங்கைச் சரியான அளவில் பகிர்ந்து கொடுக்க முடியும்? பொய்கள் சொல்லுவதோ, அல்லது மிகைபடுத்துவதோ தற்காப்புடன் சேராது.

சுவாமிஜியின் ரத்தம் இந்த மனிதக் குடும்பத்தின் இரு பெரும் பிரிவுகளையும் பிணைத்து, இதயங்களைச் சுத்திசெய்து,

குற்றங்களைக் களையும் என்று நம்புவோம். இது எல்லை மீறிய நம்பிக்கைதான். ஆயினும், இந்த அளவுக்கு அவர் பெரிய மகானாகவே இருந்ததால், அவ்விதம் நம்பலாம்.

சுவாமிஜியின் வாழ்க்கையைப்பற்றி எனக்குத் தெரிந்த அளவில் **எங் இந்தியாவின்** அடுத்த இதழில் எழுத வேண்டும்.

— 'எங் இந்தியா' – 30—12—1926

# 2

# நான் அறிந்த சுவாமிஜி

சுவாமி சிரத்தானந்தர், மகாத்மா முன்ஷிராம் என்ற பெயருடன் இருந்தபோது அவருடன் எனக்கு முதன் முதலாக அறிமுகம் ஆரம்பமாயிற்று; அதுவும் கடிதத்தின் மூலம்தான் ஆரம்பமாயிற்று. அவர் அப்போது காங்டி குருகுலத்தின் தலைவராக இருந்தார். அதன்மூலம் அவர் கல்விக்குச் செய்த தொண்டு உவமையற்றது. மேனாட்டுக் கல்வி முறை அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. தமது மாணவர்கள் வேத உபதேசங்களில் ஊறித் திளைக்க வெண்டுமென அவர் விரும்பினார். மாணவர்களுக்கு ஆங்கிலத்தின் மூலம் அல்ல, ஹிந்தி மொழியின் மூலமே கற்பித்தார். மாணவர்கள் தங்களுடைய கல்வி முடியும் வரையில் பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகிகளுக்கு அக்காலத்தில் வசூலிக்கப்பட்ட நிதிக்குப் பண உதவி புரியும்படி அவர் மாணவர்களை உற்சாகப்படுத்தினார். தென்னாப்பிரிக்காவில் நடந்த போராட்டம், கூலிகளின் போராட்டம் அல்லவா? எனவே, மாணவர்கள் கூலிகளாக வேலை செய்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை நிதிக்குக் கொடுக்கவேண்டுமென அவர் விரும்பினார். மாணவர்களும் அதை நன்கு உணர்ந்து, கூலி வேலை செய்து முழுச் சம்பளம் பெற்று, அந்த நிதியில் சேர்ப்பதற்காக எனக்கு அனுப்பிவைத்தார்கள். அச்சம்பவத்தைப் பற்றி மகாத்மா முன்ஷிராம் எனக்கு ஹிந்தியில் ஒரு கடிதம் எழுதியிருந்தார். 'என் அன்பார்ந்த சகோதரருக்கு' என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அது எனக்கு அவர் மீது மிகுந்த அன்பு உண்டாகும்படி செய்தது. அவரும் நானும் அதற்கு முன் ஒருபோதும் சந்தித்ததில்லை.

ஆண்ட்ரூஸ், எங்கள் இருவரையும் இணைக்கும் சங்கிலி போல் விளங்கினார். நான் இந்தியாவிற்குத் திரும்பும்போது கவி தாகூர், பிரின்ஸிபால் ருத்ரா, மகாத்மா முன்ஷிராம் முதலிய மூவரையும் அறிமுகம் செய்துகொள்ள வேண்டும் என்பதில் ஆண்ட்ரூஸ் மிக்க ஆர்வம் உடையவராக இருந்தார். அந்தக்

கடிதம் வந்ததிலிருந்து நாங்கள் தேசியப் போராட்டத்தில் சகோதரர்களானோம். *1915*-இல் நாங்கள் அவரது குருகுலத்தில் அடிக்கடி சந்தித்தோம். நாங்கள், சந்தித்த ஒவ்வொரு தடவையும் எங்களுக்குள்ள நட்பு அதிகமாகியது, ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொண்டோம். புராதன இந்தியா, சமஸ்கிருதம், ஹிந்தி இவற்றின் மீது அவருக்குள்ள பாசம் மகத்தானது. ஒத்துழையாமை பிறப்பதற்கு முன்பே அவர் ஒத்துழையாதவராக இருந்தார் என்பதில் ஐயமில்லை. சுயராஜ்யத்தை அடைய வேண்டும் என்பதில் அவர் அவசரமும் ஆர்வமும் கொண்டிருந்தார். அவர் தீண்டாமையை வெறுத்தார். தீண்டாதாரின் அந்தஸ்தை உயர்த்துவதில் அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவர்களுடைய சுதந்திரத்தில் எத்தகைய கட்டுப்பாடு இருப்பதையும் அவரால் சகிக்க முடியவில்லை.

ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சி ஆரம்பமான போது, அக்கிளர்ச்சியை முதன்முதலாக வரவேற்றவர்களில் சிரத்தானந்தரும் ஒருவர். அப்போது அவர் எனக்கு அன்புடன் ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஆனால், அமிருதசரஸிலும், விரம்காமிலும் நடந்த அக்கிரமங்களுக்குப் பிறகு சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டதை அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை. அதிலிருந்துதான் எங்களுக்குள் கருத்து வேற்றுமைகள் ஆரம்பமாயின. எனினும், எங்களிடையே இருந்த சகோதர பாவத்தை, கருத்து வேற்றுமைகளால் குலைக்க முடியவில்லை. அவைதான், குழந்தை போன்ற அவரது சுபாவத்தை நான் அறிந்துகொள்ளும்படி செய்தன. பலாபலன்களைக் கவனியாமல் அவர் உண்மையை அப்பட்டமாகக் கூறிவிடுவார். மிதமிஞ்சிய துணிச்சல் அவருக்கு உண்டு. காலம் செல்லச் செல்ல அவருக்கும் எனக்கும் உள்ள வேற்றுமை அதிகமாவதை நான் கண்டேன். எனினும், அதன் பலனாக அவரது ஆன்மச் சிறப்பையே நான் நன்கு அறிந்துகொள்ள முடிந்தது. மனத்தில் எண்ணுவதை எல்லோரும் அறிய வெளியிடுவது குற்றம் அல்ல, அது ஒரு சிறந்த குணமேயாகும். அது சத்தியத்தின் முத்திரையே. சுவாமிஜி மனத்தில் எண்ணுவதை ஒளிவு மறைவின்றி வெளியிட்டார்.

பர்டோலி தீர்மானம்* சுவாமிஜியின் உள்ளத்தைத் தகர்த்துவிட்டது. அதன் விளைவாக, அவர் என்னிடம் நம்பிக்கையை இழந்தார். அத்தீர்மானத்தை அவர் பகிரங்கமாகவும் வன்மை

* 1922-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதி, ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த சௌரி சௌரா என்றஊரில் போலீசாரின் நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த பொது மக்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தீ வைத்துவிட்டார்கள். அதன் விளைவாகப் பல போலீஸ்காரர்கள் தீக்கிரையாகி மாண்டனர். இச்செய்தி காந்திஜியைத் திடுக்கிட வைத்தது. அதன் விளைவாகக் காந்திஜி. தாம் பர்டோலியில் ஆரம்பிப்பதாக இருந்த சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்திவிடத் தீர்மானித்தார். இந்தத் தீர்மானத்தையே காந்திஜி மேலே குறிப்பிட்டுள்ளார். தேசம் முழுவதையும் திடுக்கிட வைத்த சௌரி சௌரா சம்பவங்களையும், காந்திஜியின் தீர்மானத்தையும் மகாத்மா காந்தி நூல்கள் 8-வது தொகுப்பின் 392-405 பக்கங்களில் விவரமாகக் காணலாம்.

யாகவும் கண்டித்தார். அவர் எனக்கு எழுதிய அந்தரங்கக் கடிதங்களில் இன்னும் அதிக வன்மையாகக் கண்டித்திருந்தார். அக் கடிதங்கள் எங்களிடையே உள்ள கருத்து வேற்றுமையை வற்புறுத்தியது போலவே, நட்பையும் வற்புறுத்தியது. வெறும் கடிதங்களில் தம்முடைய நட்பை வற்புறுத்தியதுடன் அவர் திருப்தி அடையவில்லை. சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அவர் என்னை நாடி வந்து, அவரது நிலையை விளக்கிக் கூறினர். எனது நிலைமையையும் அறிந்துகொள்ள முயற்சித்தார். என்னை அவர் நாடி வந்ததன் உண்மையான காரணம் என்னவெனில், ஒருவர் தமது தம்பியிடம் குன்ருத பாசம் கொண்டிருப்பது போல், என்னிடத்திலும் அவருக்குக் குன்ருத பாசம் உண்டு என்பதை வலியுறுத்தவேயாகும். எனினும், என்னிடம் அவருக்குள்ள அன்பை நான் அறிவேனுதலால், அவ்விதம் வலியுறுத்த வேண்டிய அவசியமேயில்லை.

ஆர்ய சமாஜத்தையும், அதன் மாபெரும் கர்த்தாவையும், சுவாமிஜியையும் பற்றி நான் கூறியிருந்த விஷயங்கள், அவர் மனத்தில் ஆழமாகப் பதிந்து, அவரை மிகவும் புண்படுத்திவிட்டன. எனினும், எங்கள் நட்பு அந்தத் துன்பத்தைச் சகித்துக் கொள்ளும் சக்தி பெற்றிருந்தது.

முஸ்லிம் பத்திரிகைகள் அவரது சுத்தி இயக்கத்திற்காக அவரைத் தீவிரமாகக் கண்டித்து அவதூறு செய்தன. அவரது நிலையை என்னுல்கூட ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இப்போதும் நான் அதை ஏற்பதில்லை. ஆனுல், அவருடைய போக்கின்படி அவர் கொள்கைக்குத் தக்க ஆதாரங்கள் வைத்திருந்தார்; அறநெறிக்கும் சட்டவரம்பிற்கும் உடன்பட்டிருக்கும் வரையில், தப்ளிக் * விஷயத்தில் காட்டவேண்டுமென்று கூறப்படும் சகிப்புத் தன்மை, சுத்திக்கும் காட்ட வேண்டும். ஆனுல், அந்த விவாதத்திற்கு இடமளிக்கும் பிரச்னையைப் பற்றிப் பேசுவதற்கு இது தருணமல்ல. சுத்தி, தப்ளிக்கிற்குப் பிரதியாக நடக்கும் இயக்கமாகும். இரண்டுமே தீவிர மாறுதல் அடைய வேண்டும். உலக மதங்களை விசால நோக்குடன் ஆராய்வது அதிகரித்தால், சாரத்தைவிட அதிகமாகச் சக்கையைப் போற்றும் இப்போதுள்ள விகாரமான மத மாற்ற முறையில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும். ஒரு கூட்டத்திலிருந்து மற்ருென்றுக்குத் தனது விசுவாசத்தை மாற்றுவதும், மதங்களைப் பரஸ்பரம் இழிவு படுத்துவதும்தான் இவர்களுக்குள் வெறுப்பை வளர்க்கிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களுமாகிய நாம், சுத்தியின் ஆழ்ந்த அர்த்தத்தை உணருவோமானுல், சுவாமிஜியின் கொலையைப் பயனளிக்கத்தக்க விதத்தில் உபயோகப்படுத்திக் கொள்ள முடியும்.

சில மாதங்களுக்கு முன் சத்தியாக்கிரக ஆசிரமத்திற்குக் கடைசித் தடவையாக அவர் வந்துவிட்டுப் போனதை நினை

* 'தப்ளிக்' என்ற உருதுச் சொல், முஸ்லிம்களின் மதப் பிரசாரத்தையும் மத மாற்ற முயற்சியையும் குறிக்கிறது.

லூட்டாமல், இந்தப் பெரிய சீர்திருத்தக்காரரின் வாழ்க்கைக் குறிப்புகளை நான் முடிக்க முடியாது. அவர் முஸ்லிம்களை வெறுப்பவரல்ல என்பதை நான் முஸ்லிம் நண்பர்களுக்கு உறுதியாகக் கூற வேண்டும். அவர் பல முஸ்லிம்களையும் நம்பவில்லை என்பது மெய்தான். ஆனால், அவர்கள்மேல் அவருக்குத் துவேஷம் கிடையாது. ஹிந்துக்கள் அச்சமுற்றிருந்தனர் எனக் கருதினார். ஹிந்துக்கள் தங்களையும் தங்கள் மதத்தையும் காப்பாற்றிக்கொள்ளவும் தீரர்களாக இருக்கவும் வேண்டுமென விரும்பினார். இந்த விஷயத்தில் தம்மைப் பலர் தப்பர்த்தம் பண்ணிக்கொண்டதாகவும், தமக்கு விரோதமாகச் சொல்லப்படும் பல விஷயங்கள் தமக்கே தெரியாதென்றும் என்னிடம் சொன்னார். அவரைப் பயமுறுத்திப் பல கடிதங்கள் வந்தனவாம். நண்பர்கள் அவரைத் தனியே பிரயாணம் செய்ய வேண்டாமென எச்சரித்திருந்தனர். "கடவுளைத் தவிர வேறு என்ன காவலை நாடட்டும்? அவருடைய ஆக்ஞையின்றிப் புல்லும் அழிவதில்லை. ஆகையால், இந்த உடலைக்கொண்டு பணி செய்ய வேண்டுமென அவர் விரும்பும் வரை இதற்கு எவ்வித அபாயமும் நேர முடியாது" என்று, உறுதியான கடவுள் நம்பிக்கையுள்ள சுவாமிஜி கூறிவிட்டார்.

இங்கே அவர் தங்கியிருந்தபோது, ஆசிரமப் பாடசாலை மாணவ, மாணவிகளிடம் பேசினார். ஹிந்து மதத்தின் உயர்ந்த பாதுகாப்பு உள்ளிருந்து வர வேண்டும்; இது ஆன்ம சுத்தியால் தான் ஏற்படும் என்றார். உடலையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்கு, பிரம்மச்சரியத்தின் அவசியத்தை மிகவும் அதிகமாக வற்புறுத்தினார்.

—'எங் இந்தியா' - 6—1—1927

3

# சிரத்தானந்தருக்கு ஞாபகச் சின்னம்

காலஞ்சென்ற சுவாமி சிரத்தானந்தரின் ஞாபகத்தை நிலை நிறுத்த நிதி வேண்டி, ஹிந்து மகாசபையின் சார்பாகப் பொது மக்களைக் கேட்டுக்கொண்டிருப்பது மிகப் பொருத்தமானதே. சுவாமிஜி சந்நியாச ஆசிரமத்திற்கு வந்த பிறகு ஈடுபட்டிருந்த வேலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு நிதி திரட்டும்படி வேண்டிக்கொண்டதற்காக ஹிந்து மகாசபையை நான் பாராட்டுகிறேன். தீண்டாமை விலக்கு, சுத்தி, சங்கதன் அலுவல்களில் அவர் ஈடுபட்டிருந்தார். தீண்டாமை விலக்குக்கு ஐந்து லட்சமும், சுத்தி, சங்கதன்களுக்குப் பல லட்சமும் கோரி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். என்னைப் பொறுத்த மட்டில், சாதாரணமாக எல்லோரும் பொதுவாக அறிந்தவிதத்தில், சுத்தி இயக்

கத்தின் அவசியத்தைப்பற்றி எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. பாவம் செய்தவர்கள் சுத்தி அடைவது, இடைவிடாது உள்ளத்தில் நிகழும் விஷயமாகும். ஹிந்துக்கள், அல்லது முஸ்லிம்கள் என்று கூறமுடியாதபடி இருப்பவர்கள், மதமாற்றத்தின் பொருள்கூடத் தெரியாதிருப்பவர்கள், தாம் ஹிந்துக்கள் என்று சொல்லிக்கொள்ள நிச்சயமாகப் பிரியப்பட்டுச் சமீபத்தில் மதம் மாறியவர்கள், இவர்களின் சுத்தியை மதமாற்றம் என்று சொல்லுவதற்கில்லை. ஆனால், அது பிராயச்சித்தம், அதாவது தவம் ஆகும். சுத்தியின் மூன்றும் நிலை மத மாற்றம் எனச் சொல்லப்படுகிறது. விசால நோக்கும் பரந்த அறிவும் வளர்ந்து வரும் இந்த யுகத்திலே, இதன் உபயோகத்தை நான் கண்டிக்கிறேன். ஹிந்துக்களின் சுத்தி, முஸ்லிம்களின் தப்ளிக், கிறிஸ்தவர்களின் ஞான ஸ்நானம் என்று சொல்லும் எதற்கும், எல்லா மத மாற்றங்களுக்கும் நான் விரோதி. மத மாற்றம் இதயத்தைப் பொறுத்த விஷயமாகும். அது கடவுளுக்கு மட்டுமே தெரியும். கடவுளால் தான் அதை அறியமுடியும். ஆதலால், அதை அத்துடன் விட்டு விட வேண்டும்.

ஆனால், மத மாற்றத்தைப்பற்றி எனது கருத்துக்களை வெளியிடுவதற்கு இது இடமல்ல. அதை நம்புகிறவர்களுக்குத் தங்கு தடையின்றித் தங்கள் வழியே செல்லப் பூரண உரிமை உண்டு. ஆனால், அது வரையறைக்கு உட்பட்டிருக்க வேண்டும். அதில் பலாத்காரமோ, ஏமாற்றமோ, பொருள் கொடுத்துத் தூண்டுதலோ இருக்கக் கூடாது. மாறுகிறவர்கள் தக்க பருவமும் அறிவும் உடைய சுதந்திரர்களாக இருக்கவேண்டும். ஆதலால், சுத்தியில் நம்பிக்கையுடையவர்கள், இந்த வேண்டுகோளைப் பரிபூரண உரிமையுடன் ஆதரிக்கலாம்.

சங்கதன் உண்மையிலேயே ஆரோக்கியமான இயக்கம். தனித்து வாழ விரும்பும் ஒவ்வொரு சமூகத்திற்கும் தன்னை ஒழுங்குபடுத்தி அமைத்துக்கொள்ளும் உரிமை உண்டு; அமைத்துக்கொள்ள வேண்டியது கடமையுமாகும். ஸ்தாபன அமைப்புக்களைப்பற்றிய எனது கொள்கையே விசித்திரமாதலால், நான் இதிலிருந்து விலகி நிற்கின்றேன். அளவைவிடத் தரத்தில்தான் எனக்கு நம்பிக்கை உண்டு. தரத்தைக் காட்டிலும் அளவுதான் முக்கியம் என்பது இக்காலத்து மரபாக இருக்கிறது. சமூக, அரசியல், பொருளாதாரத்தில் அளவிற்குச் சந்தேகமின்றி இடமுண்டு. ஆனால், இக் காலத்தில் செய்கிறபடி ‘அளவை’ நிர்ணயிப்பதற்கு நான் தகுதியற்றவனாக இருக்கிறேன். ஆதலால், தீண்டாமை ஒழிப்பிற்காக விடுத்துள்ள வேண்டுகோளுக்குத் தான் நான் மதிப்புக் கொடுக்கமுடியும். இது தனக்கே உரித்தான ஒரு சக்தியுடன் வருகிறது. ஹிந்து மதத்தைச் சீர்திருத்துவதற்கும், அதை உண்மையாகப் பாதுகாப்பதற்கும், தீண்டாமையை ஒழித்தல் இன்றியமையாதது. ஹிந்து மதம் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளக் கூடியது. ஆதலால், அதிலுள்ள

இந்தக் கறையை நீக்கிவிட்டால், சுத்தியும் சங்கதனும் கொடுக்கக்கூடிய எல்லாமே அதற்குக் கிடைத்துவிடும். கணக்கில் அடங்காத தீண்டாதவர்களை ஒவ்வொரு ஹிந்துவும் கண்டு கட்டித் தழுவவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை. ஆனால், அநாகரிகமான, தொன்மையான பழக்கம் ஒன்றைத் தகர்த்துத் தூய்மைப்படுத்திய உணர்வு, எதிர்க்க முடியாத ஒரு பலத்தைக் கொடுக்கும் என்பதற்காகச் சொல்லுகிறேன். எனவே, தீண்டாமையை ஒழித்தல் ஓர் ஆன்மிக நடவடிக்கையாகும்.

சுவாமிஜி அத்தகைய சீர்திருத்தத்தின் உருவாகவே திகழ்ந்தார். அரை குறையான முறைகளைக் கைக்கொள்ளும் வழக்கம் அவரிடம் இல்லை. சீர்திருத்த விஷயத்தில் அவரிடம் விட்டுக் கொடுப்பதென்ற பேச்சே இல்லை. அவர் விருப்பப்படி விட்டிருந்தால், அவர் ஹிந்து மதத்திலிருந்து தீண்டாமையை ஒழித்துக் கட்டியிருப்பார். எனவே, ஒவ்வொரு ஹிந்துவும் தீண்டாமையைத் தமது உள்ளத்திலிருந்து ஒழிப்பதே சுவாமி சிரத்தானந்தருக்கு அமைக்கும் சிறந்த ஞாபகச் சின்னமாகும்.

—'எங் இந்தியா" - 6—1—1927

## 4

# வீராதி வீரர்

[கௌஹாதியில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையில், சுவாமி சிரத்தானந்தரின் மரணத்தைக் குறித்து காந்திஜி ஒரு தீர்மானம் கொண்டு வந்து ஹிந்தியில் பேசினர். அந்தப் பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

**நா**ன் பிரரேபிக்கும் தீர்மானம் முதலில் மௌலானா முகமது அலியின் பேரில் இருந்ததை நீங்கள் கவனித்திருப்பீர்கள். ஆனால், தலைவரின் உத்தரவிற்குப் பணிந்து நான் அதைப் பிரரேபிக்க முன் வந்துள்ளேன். சுவாமிஜியின் கொலை, தேசம் முழுதும் துக்கத்தையும், பீதியையும் உண்டாக்கி யிருப்பதைப் பத்திரிகைகள் வாயிலாக நாம் அறிகிறோம். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் இதைப்பற்றிப் பேசுகையில், சுவாமிஜியின் மரணத்தைப்பற்றி நாம் வருந்தக் கூடாதென்று சொன்னேன். அவர் வீரரைப்போல உயிர் துறந்தார். நாம் ஒவ்வொருவரும் அத்தகைய முடிவை விரும்பலாம். ஆனால், இதன் கடைசிப் பகுதியில் சிறு திருத்தம் ஒன்று செய்ய விரும்புகிறேன். வீரமுள்ள மனிதன் அம்மாதிரி மரணம் தனக்கு எப்போது வந்தாலும் வரவேற்பான்; நண்பனைப்போல உபசரிப்பான். ஆனால், எவரும்

மரணத்தை அழைக்கவோ, அல்லது அது வேண்டுமென ஏக்கங் கொள்ளவோ வேண்டாம். தான் உயிர்த்தியாகியாகும் பொருட்டு மற்ருெருவன் கடவுளுக்கும் மனிதனுக்கும் விரோதமாகக் குற்றம் செய்யவேண்டும் என்று விரும்பலாகாது. எவனுவது ஒருவன் நெறிதவறிப் போக வேண்டுமென்று விரும்புவது தவருகும். நாம் அனைவரும் பிராணத் தியாகம் செய்யும் அளவுக்கு வீரர்களாக இருப்போம். ஆனல், எவரும் தாம் பிராணத் தியாகியாக வேண்டும் என்று ஆசை கொள்ளுதல் கூடாது.

சுவாமிஜி வீரருக்குள் வீரர்; தீரருக்குள் சிறந்த தீரர். அவரது இடையரு வீரச் செயல்களைக் கண்டு தேசமக்கள் வியப்புற்றனர். தேசத்தின் பலிபீடத்தில் தம்மைத் தியாகம் செய்ய அவர் எடுத்துக்கொண்ட வாக்குறுதிக்கு நான் சாட்சியாக இருக்கிறேன்.

சுவாமிஜி தேசத்திற்கு ஆற்றிய பணியைப்பற்றி யாரும் அதிகம் பேச வேண்டியது அவசியமா? அவர் திக்கற்றவரின் துணை என்பது எல்லோரும் அறிந்ததே. அவர் பலவீனரின், ஒடுக்கப்பட்டோரின் நண்பர். தீண்டாதாருக்கு அவர் செய்துள்ள சேவை ஒப்புவமை அற்றது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி ஹிந்து அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தம் வீட்டில் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த ஒருவரை வேலைக்காக வைத்துக்கொள்ளா விட்டால், தீண்டாத வகுப்புக்காகக் காங்கிரஸ் செய்யும் வேலை முற்றுப்பெருது என்று அவர் கூறியது, என் மனத்தில் இன்னும் பசுமையாக இருக்கிறது. இது அசாத்தியமானதாகத் தோன்றலாம். ஆனல், தீண்டாதவரிடம் அவருக்கு இருந்த அபார அன்பை இது காட்டுகிறது.

அவர் செய்துள்ள வேறு பல சேவைகளைப்பற்றி இங்கே பேசப் போவதில்லை. சுவாமிஜி பெரிய வீரர், தேசபக்தர், ஆண்டவனின் அடியார். அன்பர் ஒருவர் கொலையுண்டதைத் தேசத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தலாமெனினும், நாம் நிறைவேயற்ற மனிதர்களாதலால், அவரது துக்ககரமான முடிவைப்பற்றிச் சோகம் அடைவது இயல்பாகும். மேலும், இம் மரணம் நேர்ந்த சந்தர்ப்பங்களை நினைக்கும்போது நம் மனத்தில் இயல்பாகவே திகிலும் ஆத்திரமும் கனன்று எழுகின்றன. இஸ்லாமைப்பற்றி விவாதிக்கத் தமக்குப் பேட்டி அளிக்க வேண்டும் என்று கொலைகாரன் கேட்டான். சுவாமிஜி அதிக நோய்வாய்ப் பட்டிருக்கும்வரைப் பேட்டி அளிக்கக் கூடாதென்று டாக்டர் அன்சாரி உத்தரவிட்டிருந்ததால், அவரது உண்மைச் சேவகன் கொலைகாரனை உள்ளேவிட மறுத்தான். ஆனல், ஈசனின் கட்டளை வேருயிருந்தது. அவன் கேட்டது சுவாமிஜியின் காதில் விழ, அவனை உள்ளே விடும்படி தர்ம சிங்குக்குச் சொன்னர். சகோதரன் அப்துல் ரஷீத் உள்ளே வந்தான். வேண்டுமென்றே இவனைச் சகோதரன் என்று அழைக்கிறேன், நாம் உண்மை ஹிந்துக்களாயின், நான் இவ்வாறு கூறுவதை நீங்கள் அறிந்து

கொள்ளுவீர்கள். அப்துல் ரஷீதை, சுவாமிஜி உள்ளே விடும்படி கூறினர். ஏனெனில், இதன் மூலம், சுவாமிஜியின் பெருமையையும் ஹிந்து மதத்தின் மகிமையையும் எடுத்துக் காட்ட வேண்டும் என்பது இறைவனின் திருவுள்ளமாகும். சுவாமிஜி மத சம்பந்தமாக விவாதிக்க முடியாத அளவு நோயுற்றிருந்தார். ஆதலால், வேறொரு சமயம் வரும்படி கூறினர். வந்தவன் போகவில்லை. தாகமாய் இருப்பதாகச் சொல்லித் தண்ணீர் கேட்டான். தண்ணீர் கொண்டுவரும்படி சுவாமிஜி தர்மசிங்கிடம் சொன்னர். தர்மசிங் உள்ளே போன சமயம் பார்த்து அவன் சுவாமிஜியின் மார்பில் துப்பாக்கியால் சுட்டுவிட்டான்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தத்தம் மதங்களைப் பற்றிப் பெருமை கொள்ளும் இந்தியாவில், இது நடந்திருக்கக் கூடாத சம்பவம். கீதைக்குக் காட்டும் பக்தி சிரத்தையுடன் நான் குரானையும் படித்திருக்கிறேன். ஓரிடத்திலும் இம் மாதிரிக் கொலை செய்யலாம் என்றோ, அல்லது செய்ய வேண்டும் என்றோ குரான் கூறவில்லை. இரு சமூகங்களும் ஒருவரையொருவர் பகைத்து விரோதித்ததால் கொலை நடப்பது சாத்தியமாயிற்று. அநேக முஸ்லிம்கள், சுவாமிஜியும், லாலாஜியும், மாளவியாஜியும் இஸ்லாமின் உறுதிகொண்ட பகைவர்கள் என எண்ணுகின்றனர். இதற்கு மாருக சர். அப்துர் ரஹீமையும் பிற முஸ்லிம்களையும் ஹிந்து மதத்தின் விரோதிகள் என்று பல ஹிந்துக்கள் கருதுகின்றனர். இரு சாராரின் கருத்தும் முற்றிலும் தவறு என்பது என் அபிப்பிராயமாகும். சுவாமிஜி இஸ்லாமின் விரோதி அல்ல. *லாலாஜியும் மாளவியாஜியும் இஸ்லாமின் விரோதிகள் அல்ல. லாலாஜிக்கும் மாளவியாஜிக்கும் தங்கள் அபிப்பிராயங்களைத் தங்கு தடையின்றி வெளியிட உரிமையுண்டு. நாம் அவர்கள் கூறுவதை ஒப்புக்கொள்ளாவிட்டால் கூட, அவர்களுக்கு விரோதமாகத் துவேஷ உணர்ச்சியைத் தூண்டக் கூடாது. ஆனல், நாம் இன்று காண்பதென்ன? இத் தேச பக்தர்களை அவதூறு செய்யாத முஸ்லிம் பத்திரிகைகள் இன்று ஒன்றுகூட இல்லை என்றே சொல்லலாம். நான் பணி

---

*"நீடுழி வாழ்க லாலாஜி" என்கிற தலைப்பில் ['எங் இந்தியா' நவம்பர் 22, 1928] இறந்து போன தலைவருக்குத் தலைவணக்கம் செய்துவிட்டுக் காந்திஜி எழுதியதாவது:

"லாலா லஜபதிராய், இஸ்லாம் விரோதியல்ல என்பதை முஸ்லிம் நண்பர்களுக்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். ஹிந்து மதத்தைத் தூய்மைப்படுத்தி, அதைச் சக்தி வாய்ந்ததாகச் செய்ய வேண்டும் என்ற அவரது ஆசையை, முஸ்லிம்களை அல்லது இஸ்லாமை அவர் வெறுத்தார் என்று கூறிக் குழப்பக் கூடாது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு வழி செய்து, அதை நிலைநாட்ட அவர் உண்மையாகவே விரும்பினர். ஹிந்து ராஜ்யத்தை அவர் விரும்பவில்லை; ஆனல், இந்திய ராஜ்யத்தையே ஆர்வத்துடன் விரும்பினர். இந்தியர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் அனைவருக்கும் முழுச் சமத்துவம் வேண்டும் என்பது அவரது அவா. லாலாஜியின் மரணம் நமக்குள் பரஸ்பர மரியாதையை உண்டு பண்ண வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். நாம் பயத்தை ஒழிக்க முடியுமானல், இதை எளிதில் செய்து விட முடியும்."

வுடன் கேட்கிறேன்,—இவர்கள் செய்த குற்றம் யாது? வேலை செய்யும் முறைகளில் நாம் ஒரே நோக்குடையவர்களாக இல்லாதிருக்கலாம். ஆனால், அவருடைய பெரும் பணியினால் தான் மாளவியாஜிக்குப் பாரத பூஷணம் என்னும் பெயர் கிடைத்திருக்கிறது; இது நிச்சயம். லாலாஜியின் சேவையும்கூட வெகு அதிகம்.

முஸ்லிம் தலைவர்களை எடுத்துக்கொள்ளுவோம். ஹிந்துக்கள் எல்லாத் துறைகளிலும் முஸ்லிம்களைவிட முன்னேறியிருக்கின்றனர். அவர்கள் பணக்காரர்கள், படித்தவர்கள். ஆனால், முஸ்லிம்கள் ஏழைகள், படிக்காதவர்கள் என்று சர் அப்துர் ரஹீம் எண்ணலாம். தமது சமூகத்தினருக்கு உத்தியோகங்களில் சலுகை வேண்டும் என்று சர். அப்துர் ரஹீம் நினைக்கிறார். இவரது கருத்துக்கள் தவறானவை என்று சொல்ல நமக்கு உரிமையுண்டு. ஆனால், இவரது கருத்துக்காக நாம் ஏன் இவரைத் தூற்ற வேண்டும்? காந்தியிடம் மரியாதை இருப்பினும், குரானை நம்பும் முஸ்லிமின் மதம் காந்தியின் மதத்தைவிட மேலானதென மௌலானா முகமது அலி கருதினால், நாம் ஏன் கோபமடைய வேண்டும்? ஒரு ஹிந்துவுக்குப் பக்தி யிருப்பினும், அவரை விடக் கோயிலுக்கு ஒழுங்காகப் போய்க்கொண்டு, ஏசுவுக்குச் சேவை செய்யும் கிறிஸ்தவர் சிறந்தவர் என்று சில கிறிஸ்தவப் பாதிரிமார் சொல்லுவதில்லையா? அது நம்மை எப்படிப் பாதிக்கிறது? சுவாமி சிரத்தானந்தரின் ஞாபகம் உங்களுக்கு அருமையா யிருப்பின், நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலையிலிருந்து பரஸ்பரம் பகைமையையும் தூஷணையையும் விரட்ட உதவுங்கள்; பகைமையைக் கிளறித் திரித்துக் கூறும் செய்திகளைப் பரப்பும் பத்திரிகைகளைப் பகிஷ்கரிக்க உதவுங்கள். நூற்றுக்குத் தொண்ணூறு பத்திரிகைகள் இன்று நின்றுவிட்டாலும், இந்தியாவுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. தற்சமயம் அநேக முஸ்லிம் பத்திரிகைகள் ஹிந்துக்களின் பேரில் துவேஷம் மூட்டுவதாலும், அநேக ஹிந்துப் பத்திரிகைகள் முஸ்லிம்களின்பேரில் துவேஷம் மூட்டுவதாலும் உயிர்வாழ்கின்றன. தமது உதிரத்தால் எழுதிய ஒரு சிறந்த படிப்பினையை சுவாமிஜி நமக்கு வைத்துப் போயிருக்கிறார்.

'ஆர்ய சமாஜத்தின் தாராளப் போக்கு உங்களுக்குத் தெரியுமா?' என்று ஒரு முறை சுவாமிஜி என்னைக் கேட்டார். 'மஹரிஷி தயானந்தர் தமக்கு விஷம் கொடுத்தவனை எப்படி மன்னித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா?' என்றும் கேட்டார். அச் சம்பவம் எனக்குத் தெரியும். கீதை, உபநிடதங்களின் உபதேசத்தையும், யுதிஷ்டிரரின் உதாரணத்தையும் மஹரிஷி பின்பற்றி வந்தார் என்பதை அறிந்த நான் இதைப்பற்றி எப்படி அறியாதிருக்க முடியும்? ஆனால், சிரத்தானந்தஜி மஹரிஷியின் மீதுள்ள பக்தி மேலீட்டால், அவர் மன்னிப்பு அளித்ததைப் பற்றி விரிவாகப் பேசினார். அந்தத் தயாள குணம் அவரது பெரிய

குருவிடம் இருந்ததைவிடச் சீடரிடத்தில் குறைவாக இல்லை என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். சுத்தியின் உட்கருத்தைப்பற்றிப் பேசுகையில், அவரது சுத்தி முஸ்லிம்களின்மீது துவேஷ உணர்ச்சியை விலக்குகிறதென்று எனக்குச் சொன்னர். அவரையும், அவர் சார்ந்திருந்த பெரிய சமூகத்தையும் தூய்மைப்படுத்துவதே அதன் அர்த்தம். அவரது லட்சியம் "படைக்கப்பட்டுள்ள பொருள்கள் ஒவ்வொன்றிலும் என்னையே காண்க" என்னும் கீதையின் லட்சியம்தான். ஆனல், ஒரு முஸ்லிமைவிட ஒரு ஹிந்து தமக்குக் குறைந்த அளவு நண்பர் அல்ல; ஆதலால், அவருக்குச் சேவை செய்வது தமது கடமை என்பதை அழுத்திச் சொன்னர். முஸ்லிம் உலகமே எனக்கு எதிராகத் திரும்பிய போதிலும், மாளவியாஜி எனது நண்பரும் மூத்த சகோதரரும் ஆவார் என்பதை வெளிப்படையாகச் சொல்லுவேன். அதே மூச்சில் முஸ்லிம் தலைவர்கள் எவரும் ஹிந்து மதத்திற்கு விரோதிகளல்ல என்பதைத் துணிந்து சொல்லுகிறேன். சர். அப்துர் ரஹீம் ஹிந்துக்களின் விரோதியில்லை; மியான் பஸ்லி ஹுசேனும் ஹிந்துக்களின் விரோதி இல்லை. அவர் ஓர் பழைய காங்கிரஸ்காரர் என்றும், முஸ்லிம்களைவிட ஹிந்துக்களைக் குறைவாக நேசிக்கவில்லை என்றும், ஆனல், தாம் ஒரு முஸ்லிமானதால், முஸ்லிம்களுக்குச் சேவை செய்ய விரும்புவதாகவும் நான் அவரைச் சந்தித்தபொழுது என்னிடம் உறுதி கூறினர். அவருடன் நமக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். முஸ்லிம்களுக்காக அவர் கேட்பதை நாம் விரும்பாதிருக்கலாம். ஆனல், நாம் ஏன் அவர்மீது கோபம் கொண்டு அவரை ஹிந்துக்களின் விரோதி என்று சொல்லவேண்டும்? அவருடன் நமக்கு உள்ள கருத்து வேற்றுமையை வெளியிட்டு, அவசியமானல், நான் அநேக சந்தர்ப்பங்களில் மாளவியாஜியுடன் செய்கிறேனே அதுபோல், சத்தியாக்கிரக முறையில் நாம் ஏன் அவர்களை எதிர்க்கக்கூடாது? ஆகையால், சர் அப்துர் ரஹீம் அல்லது ஸ்ரீ ஜின்ன, அல்லது அலி சகோதரர்கள் ஹிந்துக்களின் விரோதிகள் இல்லை என்பதை நான் முற்றிலும் வற்புறுத்திக்கூறுகிறேன். சுவாமி சிரத்தானந்தஜியினுடைய மரணத்திலை ஏற்பட்ட படிப்பினை நமக்கு உபயோகமற்றுப் போய்விடக் கூடாது. டில்லியில் இப்போது ஒருவேளை ஹிந்து - முஸ்லிம் கலகங்கள் நடந்துகொண்டிருக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் இத் தீர்மானத்தை எழுந்து நின்று நீங்கள் அனைவரும் நிறைவேற்ற வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் சுவாமி சிரத்தானந்தஜி நமக்கு விட்டுச் சென்றிருக்கும் படிப்பினையை உணர்ந்து, இதயத்தில் பதித்துக்கொள்ளுவீர்களானல், இமைப்பொழுதில் நாம் சுயராஜ்யம் அடைய முடியும். அவசரப்பட்டு வாக்குறுதிகள் கொடுக்கும் பைத்தியக்காரன் என என்னை நீங்கள் சொல்லலாம். எனக்குப் பைத்தியமில்லை. எனது திட்டத்தைப்பற்றி 1920-இல் இருந்த அதே ஆர்வம் இன்னும் எனக்கு இருக்கிறது. ஆனல், 1920-இல் வாக்குறுதி கொடுத்தவர்கள் பிறழ்ந்து சுயராஜ்யத்தைச் சாத்தியமில்லாது செய்துவிட்டனர். நாம் அனைவரும் ஒரே

தந்தையின் குழந்தைகள். அவரை ஹிந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் வேறு வேறு பெயர்களால் அறிகிறார்கள். தமது ஒரே கடவுள் நம்பிக்கையைச் சங்கரர் 'ஏகமேவாத்துவிதீயம்' அதாவது இரண்டல்ல, ஒன்றே என்கிற சூத்திரத்திலும், ராமானுஜர் துவைதவாதத் தத்துவத்திலும், முகமது 'லா இலஹா இல்லில்லஹா' என்பதிலும் வெளியிட்டதனால் என்ன? எல்லோரும் ஒரே விஷயத்தைத்தான் சொன்னார்கள். நம்முடைய மனத்தைத் தூய்மையாக்கிக் கொள்ளுவோமானால், சுவாமிஜி உயிரோடிருக்கையில் நமக்குச் சேவை புரிந்த அளவு தம் மரணத்தினாலும் சேவை செய்திருப்பதைக் காணலாம். அவருடைய உதிரத்தைக்கொண்டு நமது இதயத்தைச் சுத்தி செய்வோம்; அவசியமானால் நம் உரிமைகளுக்காக அமைதியாகச் சத்தியாக்கிரக முறையில் சண்டை செய்வோம். சுவாமி சிரத்தானந்தஜி இஸ்லாமின் விரோதியல்ல என்பதை ஒவ்வொரு முஸ்லிமும் புரிந்துகொள்ளட்டும். அவரது வாழ்க்கை தூய்மையானது; மாசு மருவற்றது. சமாதானம் என்னும் படிப்பினையை நம் அனைவருக்கும் தமது ரத்தத்தால் அவர் எழுதிவைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

அப்துல் ரஷீதைச் சகோதரன் என்று நான் ஏன் சொன்னேன் என்பது இப்போது ஒருவேளை உங்களுக்கு விளங்கும். அதை மறுபடியும் சொல்லுகிறேன். சுவாமிஜியின் கொலைக் குற்றவாளி என்றுகூட அவனை நான் கருதவில்லை. ஒருவருக்கொருவர் பகையுணர்ச்சி உண்டுபண்ணியவர் எல்லோரும்தான் உண்மையில் குற்றவாளிகள். ஹிந்துக்களுக்குக் கீதை சம பாவனையை விதிக்கிறது. நாம் பிராம்மணப் பண்டிதரிடம் காட்டும் அதே உணர்ச்சியைத்தான் சண்டாளன், நாய், பசு, யானை இவர்களிடத்திலும் காட்ட வேண்டும்.

இது துக்கப்படுவதற்கோ அல்லது கண்ணீர்விடுவதற்கோ சமயமல்ல; நமது இதயங்களில் தீரம் சுடர்விட்டெரிய வேண்டிய காலமாகும். தீரம் க்ஷத்திரியர்களின் தனிமையான குணமல்ல; அது அவர்களின் சிறப்பான உரிமையாக இருக்கலாம். ஆனால், நமது சுயராஜ்ய யுத்தத்தில் பிராம்மணனும், வைசியனும், சூத்திரனும் க்ஷத்திரியனைப்போலத் தீரர்களாயிருப்பது அவசியம். ஆகையால், நாம் சோகக் கண்ணீர் விடவேண்டாம். நமது இதயங்களைப் பரிசுத்தப்படுத்திச் சிரத்தானந்தஜியிடமிருந்த நம்பிக்கையையும், ஆர்வக் கனலையும் கொண்டு அவற்றை இரும்புபோல் உறுதிப்படுத்திக் கொள்ளுவோமாக.

— 'எங் இந்தியா' - 13—1—1927

# 5

## பிரசாரத்திற்குப் பலியான கொடுமை

பின்வரும் கடிதத்தை நான் வாசகர்களுக்குத் தெரியாமல் வைத்துக்கொள்ளக் கூடாது:

" 'உயிர்த்தியாகி சிரத்தானந்தஜி' என்னும் உங்கள் கட்டுரையை அதற்குத் தக்க கவனத்துடனும் பக்தியுடனும் நான் வாசித்தேன். அதைக் குறை கூற முயலுமுன் ஐந்து தடவைகள் வாசித்தேன். அவசரப்பட்டுக் கண்டிப்பதைத் தவிர்க்கவே, நான் இப்படிச் செய்தேன்.

"கட்டுரை சந்தேகமின்றிக் கவர்ச்சியான வாசகத்தில் எழுதப் பட்டுள்ளது. உங்கள் நடையைக் குறித்து நான் பொறாமைப் படுகிறேன். அது வசீகரமாக இருக்கிறது. ஆனல், எனக்கு அது அபாயகரமான விதத்தில் வசீகரமாய் இருப்பதாகத் தோன்றுகிறது.

"எனது குறைகூறல், உங்கள் ஒழுக்கத்தைப்பற்றி நான் நினைப்பதை அடிப்படையாகக்கொண்டது. இவ் விஷயத்தைப்பற்றிச் சில நண்பர்களுடன் நான் விவாதித்திருக்கிறேன். நீங்கள் முனிவரின் போர்வையில் உள்ள ராஜதந்திரி என்பதும், நாட்டின் நலத்திற்காக உண்மையை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறீர்கள் என்பதும் அவர்களுடைய வாதமாகும். இதற்கு மாறுக, நான் உங்களை ஒரு முனிவரெனச் சொல்லுகிறேன். திகைக்க வைக்கும் நிலையிலும், உங்களுடைய லட்சியத்தை நிறைவேற்றவும், கடுமையான சோதனையை எதிர்த்து சத்திய சாதனை செய்வதற்காகவும் அரசியலில் இறங்கியுள்ளீர்கள். நான் உங்களைப்பற்றிக் •கூறுவது சரிதான என்பதைத் தெரிவித்தால், நன்றியுள்ளவனவேன். இது சரியில்லையேல், எனது குறைகூறலுக்கு மதிப்பில்லை. ராஜதந்திரிகள் நீங்கள் எழுதியுள்ள மாதிரி எழுதினல் தவறில்லை. அது அவர்களின் உரிமையுமாகும்.

"உண்மையை மறைப்பது ஒரு விதப் பொய்தான் என்பதை என்னுடன் நீங்களும் ஒத்துக்கொள்ளுவீர்கள். மனத்தில் உள்ளதை ஒளிவுமறைவின்றி அப்படியே சொல்ல வேண்டும் என்று எண்ணும்பொழுது, சொல்ல மறுப்பது கோழைத்தனமாகும். பயமின்மையும் சத்தியமும் ஒன்றுதான்.

"மகாத்மாஜி! சுவாமிஜியின் கொலை, ஓர் முஸ்லிம் முரடனின் மனிதத்தன்மைக்கு முரணன, காட்டுமிராண்டித்தனமான, கொடூரமான செய்கை என்றும், முஸ்லிம் சமூகம் முழுவதுமே அதைக்குறித்து வெட்கப்பட வேண்டும் என்றும் நீங்கள் உணருகின்றீர்களா? அவ்வாறு இதைப்பற்றித் தெளிவாகக் கூற ஏன் மறுக்கிறீர்கள். செயலையும் செய்தவனையும் அச்செயலுக்குக் காரணமாக இருந்தவர்களையும் (ஹிந்து தலைவர்களைக் காபிர்கள் எனக் கூறும் கொடிய முஸ்லிம் பிரசாரகர்களையும் வெறிபிடித்த முஸ்லிம் பூசாரிகளையும்) கண்டிப்பதற்குப் பதிலாகச் சதிகாரனை ஆதரித்துப் பேசி, அச்சமூகத்திற்காகவும் வழக்காடுகிறீர்கள். டயரை நீங்கள் ஆதரித்துப்பேசவில்லை. ஐரோப்பியனும் சகோதரன் அல்லவா?

"மேலும், நீங்கள் இஸ்லாம் என்றால் சமாதானம் எனப் பொருள் கூறுகின்றீர்கள். இது உண்மையா? குரானின் உபதேசப் படியும், முஸ்லிம்கள் சாதனை செய்கிறபடியும் இது பிறப்பிலிருந்து எப்போதுமே சமாதானம் எனப் பொருள் பட்டதில்லை. இவ்வளவு வெட்ட வெளிச்சமாகத் தவறு எனத் தெரிவதைப் பற்றி இப்படி நீங்கள் எழுதுமாறு எது தூண்டுகிறது? பௌத்த மதம், கிறிஸ்தவ மதம், ஹிந்து மதம் இவை நிச்சயமாகச் சமாதானத்தைப் போதிக்கின்றன. ஆனால், இஸ்லாம் சமாதானத்தைப் போதிக்கவில்லை. நீங்கள் ஏன் இவ்வாறு நினைக்கிறீர்கள், எழுதுகிறீர்கள் என்று நான் தெரிந்துகொள்ளலாமா?

"அரசாங்கத்தின் தவறுகளைக் கண்டிக்கும்போது நீங்கள் விஷயங்களை மழுப்புவதில்லை. ஆரிய சமாஜிகளைக் கண்டிக்கும்பொழுதும் நீங்கள் ஒளிவு மறைவு செய்வதில்லை. பின் ஏன் நிரூபிக்கப்பட்ட குற்றங்களுக்காகக்கூட முஸ்லிம்களைக் கண்டிக்கப் பயப்படுகிறீர்கள்?

"ஒரு ஹிந்துவால் முஸ்லிம் தலைவருக்கு இத்தகைய கொடுஞ்செயல் நேரிட்டிருந்தால் (அவ்விதம் ஏற்படாதவாறு கடவுள் நம்மைக் காப்பாராக நீங்கள் நிச்சயமாகக் கொலைகாரனையும் அவன் சமூகத்தையும் ஈவிரக்கமின்றிக் கண்டித்திருப்பீர்கள். ஹிந்துக்களைச் சாக்கணிந்து, சாம்பலைப் பூசி, மனம் வருந்தவும், உபவாசங்கள் ஏற்கவும், ஹர்த்தால் அனுசரிக்கவும், உயிர் துறந்த முஸ்லிமுக்காக ஞாபகச் சின்னங்கள் எழுப்பவும் இன்னும் பிறவும் சொல்லியிருப்பீர்கள். உங்கள் ரத்தச் சகோதரர்களாகிய முஸ்லிம்களுக்கு நீங்கள் ஏன் இவ்வளவு சலுகை காட்டுகிறீர்கள்? சத்தியவாதிக்குப் பயமில்லை. அவர் இஸ்லாமின் வாளைக்கண்டும் பயப்படமாட்டார். மதிப்பிற்குரிய உங்கள் வாரப் பத்திரிகையில் இதற்குப் பதில் எழுதித் தயைபுரிவீர்களென நம்புகிறேன்."

இதை எழுதியவர் நேர்மையும் அக்கறையும் உள்ளவராகத் தெரிகிறது. இவர் இப்போது நிலவும் மனப்போக்கைப் பிரதிபலிக்கிறார்.

என்னை ஒரு ரிஷியாக்குவது சாத்தியமானாலுங்கூட, அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. நான் என்னை இன்னும் ஒரு வகையிலும் ரிஷியாகக் கருதவில்லை. ஆனால், அறியாது செய்தும், செய்யத் தவறியும் பல தவறுகள் இழைத்திருப்பினும், நான் என்னை ஒரு சத்திய உபாசகனாகவே கருதுகிறேன். நான் "ரிஷியின் போர்வையிலிருக்கும் ராஜதந்திரி" அல்ல என்னும் இந்த நிருபரின் முடிவு சரியானதே. ஆனால் சத்தியம், யாவற்றிலும் சிறந்த விவேகமாதலால், சில சமயங்களில் என் நடவடிக்கைகள் உயர்தர ராஜதந்திரத்திற்கு ஒப்பாக இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால், சத்தியத்தையும் அகிம்சையையும் தவிர வேறொரு ராஜதந்திரமும் என்னிடம் இல்லையென நம்புகிறேன். என் தேசத்தின் அல்லது மதத்தின் விடுதலைக்காகக் கூட நான் சத்தியத்தையும் அகிம்சையையும் கைவிடமாட்டேன். அதாவது, தேசத்தையோ, மதத்தையோ அப்படி விடுதலை செய்யவும் முடியாது.

சுவாமிஜியின் கொலையைப்பற்றிய உண்மையை நான் மறைக்கவில்லை. மேற்கண்ட கடிதம் எழுதியவர் வருணித்

துள்ளபடி அச்செய்கை எல்லாவிதத்திலும் கொடூரமானதே. ஆயினும், ஜெனரல் டயர் விஷயத்தில் நான் பரிதாபப்பட்டது போல், இந்தக் கொலைகாரன் விஷயத்திலும் பரிதாபப்படு கிறேன். ஜெனரல் டயர்மீது வழக்குத் தொடர வேண்டுமென்று நடந்த கிளர்ச்சியில் நான் கலந்துகொள்ளவில்லை என்பதை நிருபர் மறந்துவிடக் கூடாது. ஹிந்து அல்லது இந்திய முஸ்லி மைப்போல் ஐரோப்பியரும் எனக்குச் சகோதரர் என நான் உரிமை பாராட்டுகிறேன்.

மதத்தின் பெயரால் செய்யப்பட்ட அசுத்தமும் பக்தி யற்றதுமான பிரசாரத்திற்கு இவன் பலியானன் என்பதுதான், இச் சதிகாரனைப்பற்றிய எனது எண்ணமாகும். ஆகையால், அக் கொலைக்குப் பொது மக்களின் மனத்தைக் கறைப்படுத்திய பத்திரிகைகளே பொறுப்பு என்று கூறினேன். மௌல்விகளும், சுவாமிஜிக்கு விரோதமாகப் பகைமூட்டிய மறற எல்லோரும் இதற்குப் பொறுப்பாளிகளே.

கிறிஸ்தவ மதம், புத்த மதம், ஹிந்து மதம் இவைகளைப் போலவே இஸ்லாமும் சமாதானத்தை நாடும் மதம் என்று நான் கருதுகிறேன். அளவில் வேறுபாடு உண்டு என்பதில் ஐயமில்லை யெனினும், இவைகளின் நோக்கம் சமாதானமே. இதற்கு நேர் மாருகக் குரானிலிருந்து எடுத்துக்காட்டக்கூடிய பகுதிகள் எனக்குத் தெரியும். வேதத்திலும் அம்மாதிரி முரணான பகுதிகளை எடுத்துக் காட்டலாம். வேதத்தில் ஆரியரல்லாதவர்களைப் பற்றிய வசை மொழிகளின் அர்த்தம் என்ன? இக்காலத்தில் இப்பகுதிகள் வேறுவிதமாகப் பொருள்படுவது உண்மைதான். ஆனல், ஒரு காலத்தில் அவை மிகப் பயங்கரமான பொருள் கொடுத்தன. ஹிந்துக்களாகிய நாம் தீண்டாதவரை நடத்தும் முறையின் பொருள் என்ன? கொப்பரையைக் கறுப்பென்று சுட்டி சொல்ல வேண்டாம்! உண்மை என்னவெனில் நாம் யாவரும் வளர்ச்சி பெற்று வருகிறோம். என் அபிப்பிராயத்தில், இஸ்லாம் மதத்தவர் வாளை அதிகமாக உபயோகிக்கின்றனர். இதற்குக் காரணம் குரானின் போதனையல்ல; இஸ்லாம் பிறந்த சூழ்நிலையேயாகும். கிறிஸ்தவ மதத்திற்கு முற்றிலும் முரணான, ரத்தம் தோய்ந்த சம்பவங்கள் அங்கு காணப்படுவது ஏசுவினிடம் இருந்த குறையினல் அல்ல. அம்மதம் பரவிய சூழ்நிலைதான் அதற்குக் காரணமாகும். அவரது உயர்ந்த போதனைகளை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை இராததே காரணம் எனலாம்.

கிறிஸ்தவமும் இஸ்லாமும் நேற்றைய மதங்கள். இன்னும் அவை விளக்கம் செய்யப்படவேண்டிய நிலையில் இருக்கின்றன. ஏசுவின் போதனைக்கு முடிவான அர்த்தம் கொடுக்கக் கிறிஸ்தவப் பாதிரிகள் எடுத்துக்கொள்ளும் உரிமையை மறுப்பது போலவே, முகமதுவின் போதனைக்கு முடிவான அர்த்தம் கொடுக்கும் மௌல்விகளின் உரிமையையும் மறுக்கிறேன். மௌனமாக முழுவதும் தன்னை அர்ப்பணம் செய்து, வாழ்க்கையில் சாதனை

செய்பவர்கள்தான் இவற்றின் பொருளை உணர்ந்துகொண்டிருக்கின்றனர். கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் செய்வது மதம் இல்லை. விசாலமான மூளையில் அடைத்து வைத்திருக்கும் பரந்த படிப்பும் மதம் ஆகாது. மதத்தின் உறைவிடம் இதயம். ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் இன்னும் பிறர் ஆகிய நாம், நமது மதங்களின் விளக்கத்தை நமது சிவந்த ரத்தத்தால் எழுத வேண்டுமேயல்லாது, வேறு வழியால் அல்ல.

—'எங் இந்தியா' – 20—1—1927

# 6

# கடவுளின் கைக்கு மாறியது!

கோமில்லாவில், மஹேஷ் பிராங்கனில் கூடிய பொதுக்கூட்டத்தில் காந்திஜி நிகழ்த்திய உள்ளத்தை உருக்கும் பிரசங்கம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி நான் பேசத் துணியவில்லை. அது மனிதனின் கைகளை மீறிக் கடவுளின் கைக்கு மாறிவிட்டது. தன் கணவர்களாலும், மனிதர்களாலும், தேவர்களாலும் ஒருங்கே கைவிடப்பட்ட திரௌபதி, கடவுள் ஒருவரையே உதவிக்கு நாடினாள். கடவுள் தவறாது உதவினார். என் விஷயத்திலும் அப்படித்தான். நாம் ஒவ்வொருவரும் அவ்வாறே இருக்க வேண்டும். எல்லாம் வல்ல இறைவனிடம் உதவி கேட்போமாக. அற்பப் படைப்புகளாகிய நாம் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறிவிட்டோம். நாம் ஒருவர்மீது ஒருவர் துவேஷம் கொள்ளுகிறோம்; ஒருவர்மீது ஒருவர் சந்தேகம் கொள்ளுகிறோம்; ஒருவர் மென்னியை ஒருவர் பிடிக்கிறோம். கொலைகாரர்களாகவும் மாறிவிடுகிறோம். இவைகளை எல்லாம் அவரிடம் முறையிடுவோம். அழுது இறைவனை அடைவோம். அவருடைய பாதங்களை நமது ரத்தக் கண்ணீரால் கழுவி, நம்முள் இருக்கும் குரோதத்தினின்றும் நம் இதயத்தைச் சுத்தி செய்யுமாறு அவரைக் கேட்போம். ஒருவரையொருவர் சந்தேகிப்பதால், அவரது உலகையும், நாமத்தையும், இப்புண்ணிய பூமியையும் நாம் அவமானப்படுத்துகிறோம். நாம் ஒரே தாய் நாட்டின் மக்களாயினும், ஒரே உணவு உண்பினும், ஒருவருக்கொருவர் அன்பின்றி நடந்துகொள்ளுகிறோம். அறிவையும் ஞானத்தையும் நமக்கு அருளுமாறு ஆண்டவனைப் பணிவுடன் இறைஞ்சுவோமாக.

—'எங் இந்தியா' - 13—1—1927

# 7

# சுவாமிஜியின் குருகுலத்தை ஆதரியுங்கள்

கங்கிரி குருகுலம் இருக்கும் வரையில் சிரத்தானந்தரும் வாழ்ந்து வருவார். சிரத்தானந்தரின் உடல் பல்வேறு இடங்களுக்கும் யாத்திரை செய்துகொண்டிருந்தாலும், அவரது ஆன்மா மாத்திரம் எப்போதும் கங்கிரி குருகுலத்திலேயே இருந்து வந்தது. எனவே, உயிர்த் தியாகம் செய்த தேசீய வீரர் சுவாமி சிரத்தானந்தருக்கு நாம் நிர்மணிக்கக்கூடிய சிறந்த ஞாபகச் சின்னம் என்னவெனில், அந்தக் குருகுலம் நிரந்தரமாக இயங்கும்படி செய்வதேயாகும். சந்தேகமின்றி உண்மையான, நிரந்தரமான ஞாபகச் சின்னம், குருகுலத்தில் உள்ள பேராசிரியர்கள், கலா நிபுணர்கள் முதலியோரின் ஒழுக்கத்திலிருந்துதான் உருவாகவேண்டும். புராதனமான போதனை முறையின் ஆதிக்கத்தையும், அதை அடிப்படையாகக்கொண்ட ஒழுக்கத்தையும் நிலைநிறுத்துவதன் மூலம்தான் அந்த ஞாபகச் சின்னம் உருவாக வேண்டும். ஒத்துழையாமை பிறப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே, ஒத்துழையாமை ரீதியில் தமது குருகுலம் ஒரு தேசீய ஸ்தாபனம் என்று சிரத்தானந்தர் கூறுவது உண்டு. அவ்விதம் கூறியது முற்றிலும் நியாயமும் ஆகும்.

ஒரு சர்க்காரின் கல்வி ஸ்தாபனத்தைச் சார்ந்திருப்பது, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், மேனாட்டுச் செல்வாக்கின் ஆதிக்கத்திற்கு உதவி புரிவதாகும் என்று அவர் கருதினார். பலன்தரத்தக்க மேனாட்டு முறைகளைத் தாம் விரும்பும்போது, தமது கருத்துக்கு உகந்த விதத்தில் மேற்கொள்ளுவதை அவர் ஆட்சேபிக்கவில்லை. எனவே, சுவாமிஜிக்குத் தகுதியான குருகுலமாக அது இருக்கவேண்டுமாயின், அது அரசாங்கத்தின் கட்டுப்பாடு எதுவுமின்றிச் சுயேச்சையாக இருக்க வேண்டும். எனவே, கங்கிரி குருகுலம் அரசாங்கத்தின் உதவியோ அல்லது செல்வாக்கோ எதுவுமின்றி அதில் கல்வி பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாகி வருவது மட்டற்ற மகிழ்ச்சிக்கு உரிய விஷயமாகும். அவர்களின் தரமும், மதிப்பிற்குரிய அதன் ஸ்தாபகரைப் பின்பற்றி உயர்ந்து வருகிறதென நம்புகிறேன்.

அந்த ஞாபகச் சின்னம் தனது உண்மையான வாழ்விற்கு, அதிலுள்ள பேராசிரியர்கள், கல்வி நிபுணர்கள் இவர்களின் ஒழுக்கத்தையே சார்ந்திருக்குமாயின், அது பொதுமக்களின் பண உதவியை நம்பியே ஆக வேண்டும். எனவே, அதற்காக மூன்று லட்சம் ரூபாய் தேவை என்று ஆச்சாரிய ராமதேவர் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏற்கனவேயே, சற்றேறக்குறைய இரண்டு லட்சம் ரூபாய் வசூலாகிவிட்டதென்று அறிகிறேன். சென்ற

19–ஆம் தேதி அந்தப் பிரம்மாண்டமான பந்தலில் வேண்டு கோள் விடுத்தபோது, என்றும் மறக்க முடியாத அந்தக் காட்சியை நான் நேரில் பார்த்தேன். தொண்டர்கள் கூட்டத்தினிடையே கொண்டு சென்ற வாளிகளில் ஆடவர்களும் பெண்களும் ரூபாய்களையும் நோட்டுக்களையும் சொரிந்தார்கள். அங்கே தாமிர நாணயங்களைப் பார்க்கவே முடியவில்லை. இந்த வேண்டுகோள் விஷயத்தில் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இதயபூர்வமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரிய சமாஜத்திற்கும் எனக்கும் உள்ள கருத்து வேற்றுமைகளை நான் முன்பே கூறியுள்ளேன். அவ்வேற்றுமைகள் இன்னும் இருந்து வருகின்றன. குருகுலத்தை நடத்தும் விஷயத்திலும் எனக்குக் கருத்து வேற்றுமைகள் உண்டு. எனினும், ஆரிய சமாஜத்தின் தொண்டுகளையும், குருகுலங்களின் அவசியத்தையும் குறித்து நான் கண் மூடியாக இருக்க முடியாது. மதத்தின் வளர்ச்சியை அவர்கள் கட்டுப்படுத்தியுள்ளார்கள் எனினும், அவர்கள் மதத்தைப் புனருத்தாரணம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு சீர்திருத்தத்திற்கும் அத்தகைய குறை உண்டு. விவேகமுள்ளவர்கள் நல்ல அம்சங்களை மாத்திரம் தேர்ந்தெடுத்துக்கொண்டு தீயவற்றைத் தள்ளிவிடுவார்கள். பாதுகாக்கக்கூடிய நல்ல அம்சங்கள் குருகுலத்தில் நிறைய இருக்கின்றன. அது இன்னும் சிறந்ததாக விளங்க வேண்டும் என்று விரும்புவோர், அதற்கான மாறுதல்களைக் கொண்டுவர விரும்புமுன், சமாஜத்தின் விஷயத்தில் தங்களுடைய நட்பை நிரூபிக்க வேண்டும். எனவே, நிதி வசூல் சம்பந்தமான வேண்டுகோளை ஆதரிப்பதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. மிதமான அந்தத் தொகையை வசூல் செய்வதில் தாமதமோ அல்லது கஷ்டமோ இருப்பதற்கில்லை.

—'எங் இந்தியா' - 24—3—1927

# 8

# புண்படுத்தும் புத்தகம்

முஸ்லிம் பிரசாரகரான, எப். கே. துரானி, பி. ஏ. எழுதிய "சுவாமி தயானந்தர்—அவரது வாழ்க்கையையும் போதனையையும்பற்றிய ஓர் ஆராய்ச்சி" என்ற புத்தகத்தைக் குறித்து, என் கருத்தை வெளியிடும்படி மூன்று நபர்கள் கடிதம் எழுதியுள்ளனர். ஆசிரியர், லாகூர் தப்ளிக் இலக்கியக் கழகத்தின் செயலாளர். நான்காம் நபர் ஒருவர் அப் புத்தகத்தின் பிரதியொன்றை அனுப்பியிருக்கிறார். 'ரங்கிலா ரசூலை'ப் பற்றிய என் அபிப்பிராயத்தை வெளியிட நான் தயங்கவில்லை என்பதை ஞாபகப்படுத்தி, ஸ்ரீ துரானியின் புத்தகத்தைப் பற்றி என் கருத்தை வெளியிடுவதற்கும் தயங்கக் கூடாதென்கிறார் அவர்களில் ஒரு அன்பர்.

கூடியவரையில் பொறுமையுடன் புத்தகத்தைப் படித்து முடித்தேன். அது பகையும், வன்மமும், அவதூறும் நிறைந்த புத்தகமென முடிவு செய்தேன். பொறுப்புடைய ஒருவர் இப் புத்தகத்தை எழுதியிருக்கக் கூடாது. பொறுப்பு வாய்ந்த ஒரு கழகம் இதை அச்சிட்டிருக்கவும் கூடாது. முகவுரையில், தாம் ஆராய்ச்சி முறையில் விருப்பு, வெறுப்பின்றி எழுதப் போவதாக ஆசிரியர் உறுதி கூறுகிறார். ஆனால், இவ்வுறுதியை முகவுரையிலேயே தகர்த்துவிடுகிறார். "புகழ்வதோ இகழ்வதோ எங்கள் நோக்கமல்ல" என்கிறார். ஆனால், மறு பக்கத்திலேயே சத்தியார்த்தப் பிரகாசத்தைப் பற்றி அவர் சொல்லுவது இதுதான்: "அது உபயோகமற்ற ஒரு நூல். அதில் அடங்கிய போதனைகளும் கருத்துக்களும் அசட்டுத்தனமாகவும், நகைப் புண்டாக்கத் தக்கவையாகவும், சிறுபிள்ளைத் தனமாகவும் இருக்கின்றன. ஆகையால், ஆரிய சமாஜத்தைப் போன்ற வல்லமையுடைய ஸ்தாபனத்தை நிறுவிய ஒருவர், இப் பிதற்றலை எழுதினர் என்பதே நம்பமுடியாததாக இருக்கிறது." அப் பெரிய சீர்திருத்தக்காரரைப் புரட்டு, வஞ்சனை, திறமையின்மை, "தன் விஷச் சாற்றினல் அவரை அடிக்கடி சரணையற்றவராக்கிய" பங்கி குடிக்கும் வழக்கம் முதலியவற்றிற்காகப் பழித்துக் காட்ட இவ்வாசிரியர் தயங்கவில்லை. "தன் வாழ்க்கைச் சரிதையைப்பற்றி அவர் விட்டுச்சென்ற விவரம் வெறும் கற்பனை. அவரது பிறப்பையும் இளமையையும் ஒரு மர்மப் படலம் சூழ்ந்திருக்கிறது."

இவ்விதம் குறிப்பிட்டுள்ளார் அந்த ஆசிரியர். சுவாமிஜியைப்பற்றியோ, சமாஜத்தைப்பற்றியோ ஒரு நல்ல வார்த்தை கூட இவரிடம் காணோம். தனக்குச் சம்பந்தப்பட்டதை விட்டு விலகிப் போய், ஹிந்துக்களையும், ஹிந்து மதத்தையும் கூட இவர் நிந்திக்கிறார். சொல்லி என்ன? ஆதாரங்களை அடுக்கிக் கொண்டு போக வேண்டியதில்லை. புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அதைக் கண்டிப்பதற்கான காரணங்களை ஏராளமாகக் காணலாம். கடைசி அதிகாரத்தில் குட்டு வெளியாகிறது. "நம் தாய்நாட்டை நாம் நேசிக்கிறோம் என்றால், இந்தியாவைச் சிறந்த நாகரிகமான தேசமாக்க விரும்பினல், ஹிந்து மதத்தின் பழமையான மூடக் கொள்கைக் கறைகளை அதனின்றும் சுத்தமாய்க் கழுவுவது நம் கடமை. தாய்நாட்டில் உள்ள ஒவ்வொருவரையும் இஸ்லாம் குணப்படுத்த வேண்டும்.......... இஸ்லாம் வெற்றி கொள்ளும் சக்தி. முஸ்லிம்கள் சுதந்திரம் பெறவும், சாம்ராஜ்யத்தை ஆளவும் பிறந்தவர்கள். நம்முடைய எண்ணிக்கை வலிமையை அதிகரிக்கச் செய்தால், அவை இரண்டையும் நாம் அடையலாம். நாம் இந்தியாவின் புதல்வர்கள். தாய் நாட்டிற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். பிற நாடுகளைப் போல் நம் நாட்டிற்கும் தேசங்களின் கூட்டுறவில் சரிசமமான இடம் கிடைக்க வேண்டும். ஹிந்து இந்தியா அதை ஒருகாலும் அடைய முடியாது. இஸ்லாமின் கொடியின் கீழேதான்

அது விடுதலையாகிப் புகழும் செல்வாக்கும் அடையலாம்." இந்த ஆசையை ஆசிரியர், புது யுகத்தின் பெரிய சீர்திருத்தக் காரரையும், அவர் எழுதியவைகளையும், இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிற ஆரிய சமாஜத்தையும், போகிற போக்கில் ஹிந்துக்களையும், ஹிந்து மதத்தையும் தன் விஷம் தோய்ந்த பேனாவால் எழுதி நிந்திப்பதனால் பூர்த்தி செய்ய நாடுகிறார்.

ஸ்ரீ துரானி தன் கருத்துக்களை புனராலோசனை செய்ய வேண்டும்; இந்த நிந்தனையான வெளியீட்டிற்காக மன்னிப்புக் கோரி, இதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென யோசனை கூறுகிறேன். அவர் ஒரு பகிரங்கக் கடிதத்தில் பின்வருமாறு கூறியிருப்பதனால்தான் இந்த யோசனை கூறத் துணிந்தேன்: "இப் புத்தகம் பகையினால் மற்றவர்களைப் புண்படுத்த எழுதப் பட்டது என்று யாராவது மெய்ப்பிக்க முடியுமானால், இப்போ திருக்கும் பிரதிகளைக்கூட நிறுத்திவிட்டு, இதை விற்பனைக்குக் கொண்டுவருவதில்லை என வாக்குக் கொடுக்கிறேன். அரசாங் கத்தைவிட அதிகமாக என் மனச்சாட்சிக்கு நான் பயப்படு கிறேன். இவ்விஷயத்தில் மனச்சாட்சி தெளிவாக இருக்கிறது." என் வார்த்தைக்கு ஏதாவது மதிப்பிருந்தால், இந்த நூல் ஒவ் வொரு ஆரிய சமாஜியையும் ஒவ்வொரு ஹிந்துவையும்—ஏன் முஸ்லிம்கள் உள்பட, பாரபட்சமில்லாத ஆண், பெண் அனை வரையுமே—புண்படுத்தும் என்று நான் சொல்ல முடியும். மரத்தை அதன் பழத்தைக் கொண்டு நிதானிப்பதென்றால், இந்த நூல் வன்மத்தின் கனி எனலாம்!

## 9

# ஒரே வழி பிரார்த்தனைதான்

[சேவானில் (பீகார்) ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றி ஏதாவது சொல்லும்படி பொதுமக்கள் வற்புறுத்தியபோது, காந்திஜி ஹிந்தியில் செய்த சொற்பொழிவின் சாரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:]

ஹிந்து – முஸ்லிம் ஒற்றுமையைப் பொறுத்த வரையில், மற்ற பாகங்களைவிட உங்கள் பகுதி சிறந்து விளங்குகிறது என்று நீங்கள் கூறுவது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக் கிறது. ஆனால், வேறு எங்கே என்ன நடந்தாலும், உங்களுடைய ஒற்றுமை பாதிக்கப்படாத அளவில் நீங்கள் ஒன்றுபட்டுவிட்டீர் களெனக் கூற முடியுமா? இப்பரந்த நாட்டில், உலகத்தில் உள்ள எந்தச் சக்தியும் தங்களிடையே ஹிந்து-முஸ்லிம் சண்டையைத் தூண்டிவிட முடியாது என்று பெருமையுடன் சொல்லிக்கொள் ளும் ஒரு மாகாணம், ஒரு ஜில்லா, ஒரு சிறு பகுதியாவது இருக்க வேண்டும் என்பதே எனது ஆர்வமாகும். நாம் உயிர் வாழ்

கிறேம் என்று நினைக்கலாம். ஆனால், ஒற்றுமையின்றி உயிர் வாழ்தல் இறப்பதைவிட மோசமாகும். முஸ்லிம்களுடன் சண்டையிடுவதால் ஹிந்து மதத்திற்கு நன்மை செய்வதாக ஹிந்துக்கள் நினைக்கிறார்கள். ஹிந்துக்களுடன் சண்டையிடுவதால், இஸ்லாமுக்கு நன்மை செய்வதாக முஸ்லிம்கள் நினைக்கிறார்கள். ஆனால், இருவரும் தம் மதத்தைப் பாழாக்குகிறார்கள். இவ்விதமாக விஷம் சமூகத்தில் பரவி விடுகிறது. இதில் ஆச்சரியம் எதுவும் இல்லை ஏனெனில், மனிதன் தனது வாழ்க்கையின் ஒரு பகுதியில் தவறு செய்து வரும்போது, மற்றொரு பகுதியில் நியாயமாக நடந்துகொள்ளுவது என்பது இயலாத காரியம். ஏனெனில், வாழ்க்கை பிரிக்க முடியாத ஒரே முழு அம்சமாகும்.

இப்பிரச்னை மனிதர் கையைவிட்டுப் போய்விட்டதென்றும், கடவுள் அதைத் தம் கையில் எடுத்துக்கொண்டுவிட்டார் என்றும் நான் கோமில்லாவில் சொன்னேன். ஒருவேளை இக்கூற்று என் அகம்பாவத்திலிருந்து கிளம்பியிருக்கலாம். ஆனால், நான் அப்படி நினைக்கவில்லை. அதற்கு வேண்டிய காரணங்கள் இருக்கின்றன. என் வாழ்க்கையில் ஒரு நொடிப்பொழுதும் நான் கடவுளை மறப்பதில்லை என்று என் கையை நெஞ்சின் மேல் வைத்துச் சொல்ல முடியும். இருபது ஆண்டுகளாக நான் செய்தவைகளைக் கடவுளின் சந்நிதியில் செய்வது போன்றே செய்து வந்திருக்கிறேன். ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையை என் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டுள்ளேன். தென்னாப்பிரிக்காவில் அதற்காக வேலை செய்தேன். ஆனால், கடவுளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அந்த வேலை செய்த மதிப்பு எனக்குக் கிடைக்க வேண்டாம் என்று கடவுள் நினைத்தார். ஆகையால், நான் இப்போது அவ்விஷயமாகக் கை கழுவிவிட்டேன். நான் திக்கற்றவன். என் முயற்சிகள் யாவும் முடிந்துவிட்டன. ஆனால், நான் இமைப்பொழுதும் இறைவனின் நம்பிக்கையை இழக்காததால், அவர் எனக்கு விதிக்கும் இன்ப துன்பங்களில் நான் திருப்தியடைவதால், நான் என்னைத் திக்கற்றவனைக் கருதலாம். எனினும், நான் ஒருபோதும் நம்பிக்கையை இழப்பதில்லை. ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை வரத்தான் செய்யும்; அது வருமென நம்பத் துணிவதற்கு முன்பே அது வந்துவிடும். நாமே அதைத் தடை செய்தாலும் கடவுள் அதை ஒரு நாள் நம் மீது சுமத்துவார் என்று எனக்குள் இருக்கும் ஏதோ ஒன்று கூறுகிறது. ஆதலால்தான் அது கடவுளின் கைக்குப் போய்விட்டது என்று நான் சொன்னேன். என்னைத் தவிர வேறு எவரும் இவ்வேலையைச் செய்ய முடியாது, வேறெவரும் என்னைவிட இதற்காக அதிகமாய்ப் பாடுபடவில்லை என்றெல்லாம் பொருள்படுமாதலால், இது அகங்காரமான கூற்றாகத் தோன்றலாம் என்று சொன்னேன். ஆனால், இப்படிச் சொல்லுவதில் தற்பெருமை இல்லை. என் அளவு ஆர்வம், அன்பு, ஊக்கம் இவைகளுடன் நூற்றுக்கணக்கானவர்கள் இவ்வேலையைச் செய்திருக்கலாம். ஆனால், எவரும் என்னை விட அதிகமாகச் செய்திருக்க முடியாது. அவர்கள் யாவருக்கும்

என்னைப் போலத் தாங்கள் திக்கற்றவர்கள் என்ற உணர்ச்சி ஏற்படும் என்றே நினைக்கிறேன். படைப் பலம், ராஜதந்திரம், நிர்மாண அமைப்பு இவையெல்லாம் வாய்க்கப் பெற்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்கூட நம்மை அழிக்கவோ, அடிமைப்படுத்தவோ, ஹிந்துக்களை முஸ்லிம்களிடமிருந்து பிரிக்கவோ முடியாதென 1920-ஆம் ஆண்டு சொன்னேன். அதற்குக் காரணம், நாம் அப்போது கடவுளுக்குப் பயந்திருந்தோம். ஒருவரையொருவர் நம்பினோம். ஒருவருடைய பலத்தில் மற்றொருவர் சார்ந்திருந்தோம். ஆனால், இன்று பயம், பகை, நம்பாமை இவை அனைத்தையும் நீங்கள் களைந்தெறியும்படி நான் எப்படிச் செய்வது? சிரத்தானந்தஜி முஸ்லிம்களின் விரோதி அல்ல; அவர் போர் வீரர். தமது கொள்கையில் உறுதியும் நம்பிக்கையும் கொண்டவர். கொலைசெய்து விடுவதாகக் கூறி அவரைப் பயமுறுத்தி விட முடியாது. ஹிந்துக்கள், முஸ்லிம்களான நம் இரு சமூகத்தினரும், நமது உள்ளம் செய்த பாவங்களை அவருடைய ரத்தத்தால் கழுவுவோமாக.

நாம் எதற்காகத்தான் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம்? ஹிந்துக்களாகிய நாம் விக்கிரகங்களைத் தொழலாம். இது தவறாகவும் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு மனிதனுக்கும் தவறு செய்யும் உரிமையைக் கடவுள் கொடுத்திருக்கும்போது, நாம் விக்கிரக ஆராதனை செய்யவும் கடவுள் நம்மை உயிர்வாழ விடும்போது, முஸ்லிம்களும்கூட ஏன் நம்மைச் சும்மா விடக் கூடாது? முஸ்லிம் ஒருவர் பசுவைக் கொல்ல வேண்டுமென்றால், ஏன் ஒரு ஹிந்து அவரைப் பலாத்காரமாகத் தடைசெய்ய வேண்டும்? ஏன் அவர் முன் அடிபணிந்து கெஞ்சக் கூடாது? ஆனால், நாம் அப்படி யொன்றும் செய்வதில்லை. சரி, முஸ்லிம்களும் ஹிந்துக்களும் செய்ய இன்று மறுப்பவற்றை ஒருநாள் கடவுள் செய்யவைப்பார். நீங்கள் கடவுளை நம்பினால், உங்கள் உள்ளத்தில் ஆழ்ந்து அங்கே உறைபவரிடம் உங்கள் கைகளைத் தீமையினின்றும் விலக்கி, நன்மையில் ஈடுபடச் செய்ய வேண்டிக்கொள்ளுங்கள் என உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். காலையிலும் மாலையிலும் இதுவே நம் பிரார்த்தனையாக இருப்பதாக. வேறு வழி இல்லை.

—'எங் இந்தியா' – 27—1—1927

பகுதி ஒன்பது

# சுத்தி, தப்ளிக், ஞான ஸ்நானம்

## 1

## குற்றச்சாட்டிற்குப் பதில்

காந்திஜி நல்ல மனிதராயினும், அவருடைய வேலை தேசத்தை நாசமாக்கி விட்டது என்று ஷோலாப்பூர்வாசிகளில் சிலர் ஒரு பகிரங்கக் கடிதத்தில் கூறியிருந்த குற்றச்சாட்டிற்குப் பதிலாக, காந்திஜி ஷோலாப்பூர்வாசிகள் அடங்கிய கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் கூறியதாவது:

"நான் தவறும் மனிதன்; உங்களைப் போலவே குறைபாடு உள்ளவன். ஆகையால், குற்றம் நீக்கித் தொண்டு செய்ய எனக்குள்ள ஆற்றலை மட்டும் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை வேண்டுகிறேன். தீயவற்றைத் தள்ளிவிட்டு எனது நல்ல குணங்களை உபயோகித்துக் கொள்ளுங்கள். நல்ல அம்சங்களைத் தேர்ந்தெடுக்காமல் என்னை முழுதுமே தள்ளி விட்டீர்களானல், உலகம் உங்களை என்ன சொல்லும்? ஒரு மனிதன் குருடாயிருக்கிருன் என்பதற்காக. அவன் கை மூட்டை தூக்கும் பணியை ஏற்க நீங்கள் மறுப்பீர்களா?

"நாசிக்கில் நான் கூறியபடி, இன்று நடக்கும் முறையில் சுத்தி, தப்ளிக், ஞான ஸ்நானம் முதலியவற்றை என்னல் புரிந்து கொள்ளவே முடியவில்லை. ஒருவர் பிறிதொருவரின் தூண்டுதலால் தமது மூதாதையரின் மதத்தை மாற்றிக்கொள்ளுவது எனக்குப் புரிவதில்லை. ஆனல், இது என் சொந்தக் கொள்கை யாகும். நான் சொல்லுவதால் சுத்தி, தப்ளிக், அல்லது ஞான ஸ்நானத்தை யாரும் நிறுத்திவிட வேண்டிய அவசியமில்லை. இவ் விஷயத்தில் என் கடமை தெளிவாகும். என்னையே தூய்மைப் படுத்திக் கொள்ளுவதனல்தான் என் சூழ்நிலையை நான் மாற்ற முடியும் என்ற நம்பிக்கையுடன் அவ்வாறு நான் தொடர்ந்து செய்து வரவேண்டும். தவமும் தம் குற்றங்களை தலுமே ஹிந்து மதத்தைப் பாதுகாக்க முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு உண்டு. எவ்வளவு வேண்டுமானலும் சங்கதன் பணி செய்யுங்கள். ஆனல், அது தீய சக்திகளை அடிப்படையாகக் கொண்டிராமல், நல்ல சக்திகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

"நான் முஸ்லிம்களிடம் ஒருதலைப்பட்சமாக இருக்கிறேன் என்று கூறுகிறீர்கள், முஸ்லிம்கள் இதை ஒத்துக்கொள்ளுவதில்லை. எனினும், அது அப்படியே இருக்கட்டும். ஆனால், எனது ஒருதலைப்பட்சமான நடத்தையால், என் மதம் அணுவளவும் கெட்டுவிடாது. எவருக்கும், அவரது நியாயமான உரிமைக்குக் குறைவாக நான் கொடுத்தால், என்னைப் படைத்த கடவுளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். ஆனால், உரிமைக்கு அதிகமாகக் கொடுத்தால், அவர் என்னை ஆசீர்வதிப்பார்.

"நான் கூறுவதை நன்கு அறிந்து கொள்ளும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். என் கையோ அல்லது உள்ளமோ எவருக்கும், அவர்களுக்குச் சேர வேண்டியதற்கு மேல் கொடுத்திருந்தால், அதைக் குறித்து நீங்கள் பெருமை அடைய வேண்டுமேயன்றி வருந்தக்கூடாது. முஸ்லிம்களுக்கு நியாயமானதைச் செய்வதுமல்லாமல், அவர்களுக்குச் சேர வேண்டியதற்குமேல் முறை தவறிக் கொடுக்கும் பித்தன் காந்தி ஒருவனாவது உங்களுக்குள் இருப்பதை நினைத்து, ஹிந்துக்களாகிய நீங்கள் பெருமைப்பட வேண்டும். சகிப்புத் தன்மை, தியாகம், மன்னிப்பு இவற்றால் ஹிந்து மதம் நிறைந்துள்ளது. பாண்டவரின் தியாகத்தையும் யுதிஷ்டிரரின் மன்னிப்பையும் நினைவுகூருங்கள். ஹிந்து மதத்தின் போதனைகள் அனைத்தையும் எழுத்தெழுத்தாகச் சாதனை செய்ய முயலுகின்ற ஒருவனாவது இருப்பது, உங்களுக்குத் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய விஷயமாகவா இருக்க வேண்டும்?"

—'எங் இந்தியா' – 10—3—1927

# 2

# இஸ்லாமை வாழ வைத்தவர்கள்

[குல்பர்காவில் காந்திஜி நிகழ்த்திய பிரசங்கம், அவரது மனவேதனையை மக்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டியது. 1924–ஆம் ஆண்டில் வெறி பிடித்த குல்பர்கா மக்கள் செய்த காரியங்களை, காந்திஜிக்கு வாசித்தளித்த உபசாரப் பத்திரங்களில் யாரும் குறிப்பிடவில்லை. அவ்விஷயமாகக் காந்திஜி தமது பிரசங்கத்தில் குறிப்பிடவுமில்லை. எனினும், சோககரமான அந்த நிகழ்ச்சிகள் அங்கே கூடியிருந்த மக்களின் மனத்திலும், காந்திஜியின் மனத்திலும் மேலோங்கியிருந்தன என்பதை எவரும் அறிந்துகொள்ளாமல் இல்லை. குல்பர்காவில் உள்ள பிரபலமான சரண பாசப்பா கோவிலிலேயே கூட்டம் நடந்தது. 1924–இல் வெறி பிடித்தவர்கள் செய்த அட்டூழியங்களின் அறிகுறிகளை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் அங்கே காண முடிந்தது. அப்போது காந்திஜி பேசிய விவரங்களே கீழே கொடுக்கப்பட்டுள்ளன:]

"இங்கே இளைஞர்கள் அந்நிய நாட்டுக் குல்லாய்களையும் உடைகளையும் தரித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும் என் உள்ளம் வேதனையால் பற்றி எரிகின்றது. அந்நியக் குல்லாய்களில் போடும் ரூபாய்கள் நாட்டுக்குப் பலன் எதுவுமின்றி வீணுகின்றன. கதருக்காகச் செலவு செய்யும் ரூபாய்களோ, இந்திய ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகின்றன. தம் சொந்த நாட்டில் உள்ள ஏழைகள் விஷயத்தில் கண்களை மூடிக்கொண்டு, அந்நிய நாட்டு ஏழைகளை நேசிப்பவர்கள் பைத்தியக்காரர்களாக இருக்க வேண்டும். அவ்விதம் செய்வது கடவுளின் கடமையைத் தாமே மேற்கொண்டு செய்யும் அகம்பாவமே யாகும். தங்கள் நாட்டில் உள்ள ஏழைகளுக்குத் தங்கள் உள்ளத்தில் இடம் கொடுக்காத ஹிந்துக்கள் ஒழுங்காக காயத்ரி ஜபம் செய்வதும், முஸ்லிம்கள் தினந்தோறும் ஐந்து தடவை 'நமாஸ்' செய்வதும் வீணே யாகும். இந் நகர் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நான் விடுக்க விரும்பும் செய்தி இதுவே."

பிறகு ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைக் குறித்து காந்திஜி பேசியதாவது:

"என் மன வேதனையை உங்கள்முன் காட்ட விரும்புகிறேன் என்றாலும், அது வனாந்திரத்தில் போடும் கூக்குரலைப்போல் யாருடைய செவிகளிலும் விழாது. ஆகையால், 'இறைவா! இந்தத் தீச்சுழலினின்று எங்களை எப்படியாவது மீட்டருள்' என்று நாள்தோறும் நான் கடவுளை வேண்டிக் கொண்டு வருகிறேன். உங்களிடமிருந்து எனது உள்ளாழ்ந்த எண்ணங்களை மறைத்து வைப்பது, சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கையுள்ள ஹிந்துவாகிய எனது கோட்பாடுகளுக்கு மாறானதாகும். கோவிலுக்குள் போனபோது, விக்கிரகத்தை அகற்றி நந்தியைப் பங்கப்படுத்திய இடத்தை எனக்குக் காட்டினார்கள். அக் காட்சி என்னைத் துன்புறுத்தியது. வேண்டுமானால் என்னை விக்கிரக ஆராதனைக்காரன் என்று சொல்லுங்கள். நான் எங்கும், எல்லாவற்றிலும் கடவுளைக் காண்கிறேன். கேவலப்படுத்தும் இச் செயல்களைக் கடவுள் ஒருகாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார். எராவ்டா சிறையில் மௌலானா ஷிபிலி எழுதிய நபியின் வாழ்க்கை வரலாற்றையும் உஸ்வா - இ - சஹபாவையும் வாசித்தேன். இச் செயல்களைச் செய்தவர்கள் தவறு இழைத்திருக்கின்றனர். இஸ்லாம் இப்படிப்பட்ட விஷயங்களுக்கு ஆதரவு கொடுப்பதில்லை. இதைச் செய்தவர்கள், மனிதர்கள் முன்னும், கடவுள் முன்னும் குற்றவாளிகளாகியிருக்கிறார்கள். இவைகளைப் பற்றிக் கேட்டபோது, இது மனிதனின் கைகளை மீறிவிட்டதென்று உறுதிகொண்டேன். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகத் தங்கள் முழு நேரத்தையும் பலத்தையும் செலவு செய்த மனிதர்கள் இருப்பாராயின், நிச்சயமாய் அவர்களில் நானும் ஒருவன். ஆனல், என் முயற்சிகளுக்குப் பயனில்லை என்று கண்டபோது கடவுளைச் சரணடைந்தேன். நபிகள் நாயகத்தின் மறை

விற்குப்பின் இஸ்லாமியர்களுக்குள் சச்சரவுகளும் பிரிவினைகளும் பெருகின. இதைக் கண்டு இஸ்லாமியப் பக்தர்களும் முனிவர்களும் அவர்களை விட்டுப் பிரிந்து எகிப்து, பாரசீகம் முதலிய நாடுகளுக்குப் போயினர். அங்கே, ஏகாந்தத்தில் ஒதுங்கிக் கடவுளை வேண்டிக்கொண்டிருந்தனர். இந்தப் பக்தர்கள்தான் இஸ்லாமை வாழ வைத்தவர்கள். இம்மாதிரி ஒதுங்கிவிட எத்தனை முறை விரும்பியுள்ளேன்! இமயம் போன்ற குற்றங்கள் செய்த காலத்தும், அவற்றை வெளியிட்டு மனம் வருந்த அஞ்சாத கடவுளின் ஊழியன் என்றுதான், சரித்திரம் என்னைப் பற்றிக் கூறும். ஆனால், இன்று இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசுவதைவிட மௌனமாயிருப்பதே மேலானதென்று எனக்குத் தெரியும்."

—'எங் இந்தியா' – 10—3—1927

# 3

# பசி வந்து விட்டால்...

காந்திஜி, 1927 மார்ச் 18-ஆம் தேதி ரத்னகிரிப் பொதுக் கூட்டத்தில் பேசியபோது, அந்நகரில் லோகமான்ய பால கங்காதர திலகர் பிறந்ததால் அது ஒரு புண்ணிய ஸ்தலமாகியிருக்கிறது என்று கூறியதுடன், இந்தியாவின் வறுமைப் பிணியைப் போக்குவதற்கான அருமருந்து ராட்டினம்தான் என்பதை விரிவாக விளக்கினர். பிறகு ஹிந்து-முஸ்லிம் பிரச்னை சம்பந்தமாகக் காந்திஜி கூறியதாவது:

"முஸ்லிம்கள் எங்களை மதம் மாற்றிக்கொண்டிருக்கையில், உங்கள் கதருக்கு யார் செவி சாய்ப்பார்கள்" என்று ஒருவர் கேட்கின்றார். இஸ்லாமைத் தழுவும்படி யாரோ உங்களைப் பலவந்தப்படுத்துவதாலேயே நீங்கள் முஸ்லிம்களாகிவிட வேண்டுமா? நீங்கள் அவ்வளவு ஆண்மையிழந்து நிற்கிறீர்களா? உங்களிடத்தில் உண்மையான தருமம் இருப்பின், அதைப் பங்கப்படுத்த யாரும் துணியார். நமது தருமத்தையும் கதர் மூலமாகக் காக்க விரும்புகிறேன். கதர் என்றால் ஹிந்துக்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம் பெண்களுக்கும் ஊழியம் செய்வதாகும். வங்காளத்தில் ஒரு மௌல்வி, கதர் ஹிந்துக்களின் இயக்கம் என்று சொல்லிச் சில முஸ்லிம் பெண்கள் நூற்பதைத் தடை செய்தார். இரண்டு நாட்கள் வரையில் அந்தப் பெண்கள் மௌல்வியின் பேச்சுக்கு இணங்கினர். ஆனால், அப் பெண்கள் மூன்றும் நாள் நூற்பதற்குப் பஞ்சு வேண்டும் என்று வரத் தொடங்கினர். அவர்கள் என்ன செய்ய முடியும்? பட்டினியாகவே இருக்க முடியாது. மௌல்வியிடமும், அவர்களுக்குக் கொடுக்க உணவில்லை. மகாபாரதத்தின் ஆசிரியர், விசுவாமித்திர முனிவரைப் பசிவந்து வாட்டிய காலத்து, விலக்கியதை அருந்தவும், களவாட

வும்கூடத் தயாராக இருந்ததாக வருணிக்கிறார். பசியாயிருக்கும் ஆண், அல்லது பெண் எதற்குத்தான் இணங்கமாட்டாரென யார் சொல்ல முடியும்? ஆகையால், வறுமையைக் குறைத்து, உங்கள் பெண்களின் மானத்தைக் காக்க வேண்டுமானால், கதர்ப் பணியை ஏற்றுக்கொள்ளுங்கள்.

சுத்தி இயக்கத்தில் என்னை ஈடுபடச் சொல்லுகிறார்கள். இஸ்லாமிலும், கிறிஸ்தவத்திலும் இருக்கும் இது போன்ற மத மாற்ற இயக்கங்கள் ஒழிய வேண்டும் என்று சொல்லும் நான், எப்படி இதில் ஈடுபட முடியும்? ஹிந்து, கிறிஸ்தவம் அல்லது இஸ்லாம் என்ற ஏதோ ஒரு குறிப்பிட்ட மதத்தைத் தழுவினால் தான் ஒருவன் நல்லவனாவான், அல்லது மோட்சம் அடைவான் என்பது நினைக்க முடியாத காரியம். ஒழுக்கத் தூய்மையும் மோட்சமும், உள்ளத் தூய்மையைப் பொறுத்தவை. ஆகையால், 'உங்களுக்கு இஷ்டமானதைச் செய்யுங்கள். ஆனால், தீர யோசனை செய்து, ஒரு முடிவுக்கு வந்துள்ள என் போன்றவனை, அவன் செய்ய முடியாதவைகளைச் செய்யும்படிக் கேட்காதீர்கள்' என்று ஹிந்துக்களுக்குச் சொல்லுகிறேன். மனிதனின் ஆற்றல்கள் எப்படியும் ஓர் வரம்புக்கு உட்பட்டவைதானே. என் சக்திக்கு உட்பட்டதையே நான் செய்ய முடியும். ஒரே சமயத்தில் நூறு, ஏன், அரைடஜன் வேலைகளைக்கூட என்னால் செய்ய முடியாது. ஒரு சமயத்தில் ஒரு வேலையையேனும் சிறப்பாகச் செய்யக் கூடுமானால், என்னைப் பாக்கியசாலியாகக் கருதுவேன். ராட்டினம் தான் உத்தமமான சங்கதன் என்பதை ஏற்றுக்கொள்ளுவீர்களாயின், உங்களால் இயன்ற அளவு எனக்கு உதவுங்கள்.

—'எங் இந்தியா' – 17—3—1927

## 4

# மதத்தைக் காப்பது எது?

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைப் பற்றி ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியது என்று காங்கிரஸ் தலைவர் எனக்குத் தந்தி கொடுத்தார். அச் செய்தியைக் குறித்து நான் உற்சாகம் கொள்ள முடியவில்லை. தீர்மானத்தின் விவரத்தைப் பற்றிப் போதிய அளவு தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. காங்கிரஸ் தலைவர் நந்தியில் என்னைப் பார்க்க வந்தபோது, சாத்தியமானால் அதைப் பற்றி எழுதச் சொன்னார். உதவியாக இருக்கக்கூடிய விதத்தில் நான் எதுவும் எழுத முடியுமென்று தோன்றவில்லையென அவரிடம் கூறினேன். சில நாட்களுக்குப்பின் ஒரு நண்பர் எனக்கு ஒரு செய்தியனுப்பினார். அதன் கருத்து இதுதான்: "எங்கள் மத்தியில் நடக்கும் விஷமங்களுக்கு நீங்கள்தான் காரணம். கிலாபத் கிளர்ச்சியில்

ஹிந்துக்களை நீங்கள் இழுத்திராவிடில், சமீபத்தில் நடந்த கோர மான சம்பவங்களுக்கு இடம் ஏற்பட்டிராது. ஆனால், இப்போது நீங்கள் தான் எங்களைக் காப்பாற்ற முடியும்."

அச்செய்தியில் உள்ள கடுமையான பாஷை நண்பரின் மனக் கசப்பை வெளிப்படுத்துகிறது. ஆனால், மொழிபெயர்ப்பில் நான் அதன் தீவிரத்தைக் குறைத்தே குறிப்பிட்டிருக்கிறேன். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில் எனக்குள்ள நம்பிக்கையை மறுமுறையும் வற்புறுத்தும்படி இது என்னை அழைப்பதாகத் தோன்றுகிறது.

கிலாபத் கிளர்ச்சியில் எடுத்துக்கொண்ட பங்குக்காக நான் வருந்தவில்லை. அது என் தேச முஸ்லிம்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமையாகும். துன்பத்திலிருந்த தம் சகோதரருக்கு உதவி செய்யாதிருந்திருந்தால், ஹிந்துக்கள் குற்றவாளிகளாகி யிருப்பார்கள். தற்கால நிலைமை எவ்வளவு கேவலமாகத் தோன்றி னாலும், வருங்கால முஸ்லிம் சந்ததிகள் ஹிந்துக்கள் காட்டிய இப்பெரும் நட்பை நன்றியுடன் நினைவு கூர்வார்கள். எதிர்காலம் ஒருபுறமிருக்க, குணத்திற்கு வெகுமதி குணமே என்ற முது மொழியை நம்பி, நண்பரின் கடுஞ் சொல்லை அமைதியாக ஏற் றுக்கொண்டேன்.

ஆனால், அவர் எதிர்பார்ப்பது போல், சமாதானத்தை நிறுவ கணிசமான அளவுக்கு உடனடியாக உதவி புரிய முடிந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன். முற்றிலும் அதன் அவசியத்திலும் எப்போதும் போல எனக்குத் தீவிர நம்பிக்கை இருந்து வரு கிறது. என் உயிரைக் கொடுப்பதால், அதைப் பெற முடியுமா யின், நான் அதைக் கொடுக்கத் தயார். அதற்கு வேண்டிய சக்தியும் என்னிடமிருக்கிறதென நான் நம்புகிறேன். ஹிந்து-முஸ் லிம்களுடைய கல் நெஞ்சைக் கரைத்து, அவர்களுக்கு மனமாற் றத்தை உண்டு பண்ணுமாயின், நான் 1924-ஆம் ஆண்டு டில்லி யில் செய்தது போல் காலவரையற்ற உபவாசத்தைப் பெரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுவேன். ஆனால், என்னுள் உறையும் ஆண்டவனிடமிருந்து இத் தவத்தை மேற்கொள்ளு வதற்கான சமிக்ஞை எனக்குக் கிடைக்கவில்லை. தவமே தூய்மை செய்யும் செயலாகும். எனினும், அதன் அளவுக்கு நாம் முன்னரே தூய்மையடைந்திருக்க வேண்டும். அந்த உயர்ந்த அளவுக்குப் போதிய தூய்மை என்னிடம் இல்லை என்பது தெளிவாகும்.

இந்தப் பிரச்னையைப் பற்றி இந்தப் பத்திரிகையில் நான் இப்போது அடிக்கடி குறிப்பிடுவதில்லை என்பதை வாசகர் காண் பாராயின், அதற்குக் காரணம் நான் அடைந்துள்ள ஆழ்ந்த வெட்கமேயாகும். அதனால் வார்த்தைகளே வெளிவருவதில்லை. வெட்கக்கேடான செயல்களைப் புரிந்தோர் ஹிந்துக்களாயினும், முஸ்லிம்களாயினும் எனக்கு எல்லாம் ஒன்றே. நம்மில் சிலர் மதத்தின் புனித பெயரால் பொறுமையே உருவான கடவுளுக்கு

அபசாரத்தையும், மனிதர் செய்யத் தகாத காரியங்களையும் செய்கிறோம் என்பதை அறிந்து கொள்ளுவதே போதுமானது. சதி செய்து கொலை செய்வதாலும், சகோதரர்களைப் படுகொலை செய்வதாலும் மதத்தைக் காப்பாற்றிவிட முடியாது என்பதும் எனக்குத் தெரியும். மதத்தைப் பின்பற்றுபவரின் உயரிய தூய்மை, அடக்கம், அச்சமின்மை இவைகளால்தான் அதைக் காப்பாற்றமுடியும். இதுதான் சுத்தி, இதுதான் பிரசாரம்.

இதனால்தான், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தீர் மானம் என்னை உற்சாகப்படுத்தவில்லை. இன்னும் நமது மனம் மாற்றமடையவில்லை என்பதை நான் அறிவேன். பரஸ்பர பயம் ஒழியவில்லை. அச்சமின்மையும், மனமாற்றமும் இல்லாத சமரசம் வெறும் தாற்காலிகமான ஏற்பாடுதான்.

மேலும், ஒரு தேச மக்களின் பல பிரிவினருக்குள் ஏற்படும் ஒப்பந்தம், அவர்கள் தாங்களே சுதந்திரமாகச் செய்ததாக இருக்க வேண்டும். அது எக்காலத்தும் நிலைத்ததாயும் இருக்க வேண்டும். சுயராஜ்ய ரீதியில் பார்க்கப்போனால், ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குச் சட்டத்தின் உதவி அவசியமாக இருக்கக் கூடாது. நம் சொந்த ஸ்தாபனங்களின் அங்கீகாரமே முடிவான தாயும், நிரந்தரமானதாயும் இருக்க வேண்டும். அதை நிறை வேற்றும் பொறுப்பு, இரு கட்சித் தலைவர்களின் நேர்மையைப் பொறுத்ததாக இருக்க வேண்டும். தவறியபோது, அகிம்சையை நம்ப வேண்டும். இதுவும் சாத்தியமில்லாவிடில், நேர்மையான அல்லது இழிவான முறையில் நடத்தும் உள்நாட்டுக் கலகத்தின் மூலம்தான் முடிவு காண வேண்டும். நம்மிடையே மத்தியஸ்தம் செய்ய அல்லது கத்தியைக் காட்டி நிர்ப்பந்தப்படுத்த ஆளும் அந்நிய அதிகார வர்க்கத்தைப் போய்க் கேட்பது, நாம் சுயராஜ் யத்திற்குத் தகுதியுடையவர்கள் என்பதைக் காட்டாது. இது பலவீனத்தின் அறிகுறியாகும். இது நமது ஆற்றலின்மையையே காட்டுவதாகும்.

தலைவர்கள் என்று சொல்லப்படுகிற நம்மால் சண்டையிடு பவர்களைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், நம் ஒப்பந்தம் உண்மையற்றதும் பயனற்றதுமாகும். உண்மையான சுயராஜ் யத்தைப் பற்றி நினைக்குமுன், நாம் நம் நடத்தையைச் சரிப்படுத் திக்கொள்ள வேண்டும். நமது ஒப்பந்தத்தினால் டில்லியில் யாதொரு பலனும் ஏற்படவில்லை. பக்ரீத் பண்டிகையின் போது அரசாங்கத்தார் அமைதியைப் பாதுகாக்கும்படி நேர்ந் தது, நாம் என்றென்றும் வெட்கப்பட வேண்டிய விஷயமாகும்.

எனது அகிம்சைக் கொள்கை மிகத் தீவிரமாக வேலை செய்யும் ஒரு சக்தியாகும். கோழைத்தனத்திற்கு, ஏன், பலவீனத்திற்குக் கூட அதில் இடமில்லை. பலாத்காரமுள்ள ஒருவன் என்றைக் காவது அகிம்சைவாதியாகலாம். ஆனால், கோழையால் அது முடி யாது. நம்மையும், நமது பெண்களையும், கோவில்களையும் துன்

பத்தை அனுபவிப்பதன் மூலம், அதாவது அகிம்சை வழியில் பாது காக்க இயலாவிட்டால், மனிதர் என்ற நிலேயில் சண்டையிட்டா வது பாதுகாக்க வேண்டும். இதைப் பற்றி எத்தனேயோ முறை இப் பத்திரிகையில் எழுதியுள்ளேன். நம்மிடமிருந்தே நமது பெண்களைக் காப்பாற்றவும், எதிர்க் கட்சிகளுக்கு இடையில் சமாதானம் உண்டு பண்ணவும் சர்க்காரைக் கேட்பது, அல்லது எதிர்பார்ப்பது ஆண்மையின்மைக்கு அறிகுறியாகும். இவ்வளவு ஆண்மை குன்றியிருக்கும்போது, சுயராஜ்யத்தை எதிர்பார்ப்ப தும் பயனற்றது. சரிவர அமைக்கப்பட்ட சமூகங்களில் அரசாங் கம் போலீஸ் அலுவல்களை மாத்திரமே கவனிக்கும். ஆனால், சமீ பத்தில் டில்லியிலும் லாகூரிலும் செய்த பலமான ஏற்பாடுகளைப் போலீஸ் அலுவல்கள் என்று சொல்ல முடியாது. நம்மிடையே வேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும். அவை, மத சம்பந்த மானவையாயினும், வேருயினும், மத்தியஸ்தத்தின் மூலம் முடிவு செய்ய நாம் பழகவேண்டும். நமக்குச் சுயராஜ்யம் வேண்டும் என் ருல், நம்மை ஆளுபவரை ஒற்றுமையுடன் எதிர்த்து, நமது பழக்க வழக்கங்களைச் சீர்படுத்திக்கொள்ள நமக்குத் திறமை உண் டென்று உலகத்துக்குக் காட்ட வேண்டும்.

விவேகத்துடனும், ஓரவஞ்சனேயின்றியும் நியாயம் வழங்கக் கூடிய மத்தியஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கத் தகுதியுள்ளவர்கள் நம்மிடையே இல்லை என்ருலோ, நாம் தேர்ந்தெடுத்த மத்தியஸ் தர்களின் முடிவுக்குக் காத்திருந்து கீழ்ப்படிய முடியாத அளவு நாம் ஒழுங்கற்ற அடங்காப் பிடாரிகளாகவும் காட்டுமிராண்டி களாகவும் இருந்தாலோ, அந்நிலேயில் நாம் சோர்வுறும்வரை, அல் லது நமக்குப் புத்தி வரும்வரை போரிட வேண்டும். நாம் விரும்பி ஞலும், விரும்பாவிட்டாலும், பொது அமைதியை நிறுவுவதற்காக, அல்லது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக அரசாங்கம் நிச்சயமாகத் தலையிடும். ஆனால், போட்டிக் கட்சிகள் தைரிய மாகவும் நேர்மையாகவும் அரசாங்கத்தின் உதவியையோ, பாது காப்பையோ நாடாதிருந்துவிட்டால், அது நம்மைப் பலவீனப் படுத்தாது. இவ்விதச் சண்டையில் கொலேகாரனே ஏன் பாது காக்க வேண்டும்? அவன் தூக்குமேடையை நாடிச் செல் லட்டுமே. கோவில்களைத் தகர்ப்பவர்கள் தைரியமாய் முன் வந்து, "மதத்திற்காக இதைச் செய்தோம்; வேண்டுமானல் எங்களைத் தண்டியுங்கள்" என்று சொல்லட்டும். குற்றமற்ற வழிப்போக்கரை மாய்ப்பவர்கள் போலீஸாரிடம் தம்மை ஒப் படைத்து, "இவைகளை எல்லாம் கடவுளுக்காகச் செய்தோம்" என்று சொல்லட்டும். இதெல்லாம் ஈவிரக்கமற்ற காரியமாகத் தோன்றலாம். இதுகாறும் நாம் கையாண்டு வந்ததைவிட அதிக நேர்மையும், குறைந்தபட்ச பலவீனமுமான வழியைக் காட்டவே நான் முயன்றிருக்கிறேன்.

நாகரிக மனிதரைப் போலத் தாமே விரும்பி மத்தியஸ்தத் துக்கு உட்பட முடியாமல், அல்லது வீரமுள்ள காட்டுமிராண்டி ஜனங்களைப் போல், பிரிட்டிஷ் நீதிக்கோ அல்லது துப்பாக்கி

முனைக்கோ முறையிடாமல், சண்டையிட்டுத் தீர்க்க முடியாமல் இருந்தால், அரசியல் சீர்திருத்தம் என்று நமக்குக் கிடைப்பதெல்லாம் அதிகார வர்க்க அரசாங்கத்தின் 'ஏஜெண்ட்' என்ற முறையில் அதிகப் பங்கு கூலியேயாகும். அதாவது வாயில்லாப் பிராணிகளான லட்சக்கணக்கான மக்களைச் சுரண்டுவதில் அதிகப் பங்கு கிடைப்பதேயாகும். நாம் செய்யும் எந்த ஒப்பந்தமும், இந்த விரும்பத்தகாத நிலைமைக்கு நம்மைக் கொண்டு செல்லாதபடி எச்சரிக்கையாக இருப்போமாக.

— 'எங் இந்தியா' - 16—6—1927

# 5

# 'ரங்கிலா ரசூல்'

எனக்குக் கடிதங்கள் எழுதியுள்ளவர்கள். புத்திசாலித்தனமாகவும், அப்படியல்லாமலும் தூண்டியுங்கூட நான் இத் துண்டுப் பிரசுரத்தைப் பற்றி மூண்டிருக்கும் விவாதத்தில் இதுவரை கலந்துகொள்ளாமல் இருந்து வந்தேன். இந்த நிருபர்களுக்குத் தனித்த முறையில் பதில் எழுதப் பொறுமையுடன் முயன்றேன்; அவ்விதம் எழுத முடியாத அளவுக்குச் சில நாட்களாகக் கடிதங்கள் அதிகரித்து விட்டன. கடைசியாக வந்த கடிதம் பீகாரிலுள்ள ஒரு முஸ்லிம் பேராசியர் எழுதியதாகும். அவர் எனக்குப் பத்திரிகைத் துண்டு ஒன்றை அனுப்பியிருக்கிறார். அதில், பொதுவாக ஹிந்துத் தலைவர்கள் கையாண்டு வரும் மௌனமாகிய சதியில் நானும் சேர்ந்து கொண்டதாகக் குறிப்பிட்டு, என்னைக் கண்டிக்கும் ஒரு கடிதம் இருந்தது. பேராசிரியர் "உடனே பதில்" வேண்டுகிறார். நிருபர்கள் என் நேர்மையில் திருப்தியுற்று, மௌனத்தின் காரணத்தை உணர்ந்து கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையில் உடனே பதில் எழுதுகிறேன். ஓர் உள்ளூர்ப் பத்திரிகையைத் தவிர வேறொன்றையும் நான் படிப்பதில்லையாதலால், ஹிந்துத் தலைவர்களின் மௌன சதியைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இப்போது நான் அதிகமாகப் படிப்பது சென்னை "ஹிந்து" பத்திரிகைதான். அதில், ரங்கிலா ரசூலுக்கு எதிராகக் காரமான கட்டுரை யொன்றைப் படித்த ஞாபகம் எனக்கு இருக்கிறது. அநேக முஸ்லிம்களுக்கு அத்தகைய பிரசுரம் ஒன்று இருக்கிறதென்று தெரியும் முன்பே, அது என் கைக்கு வந்தது. எனக்குத் தெரிவித்தவரின் உண்மையைச் சோதிப்பதற்காக, நான் அதைப் படித்து 'எங் இந்தியா'வில் *1924* ஜூன் *19*-ஆம் தேதி பின்வருமாறு எழுதினேன்:

### ஆத்திரமூட்டும் இலக்கியம்

"உருதுவில் எழுதப்பட்ட 'ரங்கிலா ரசூல்' என்ற பிரசுரம் ஒன்றை ஒரு நண்பர் எனக்கு அனுப்பியிருக்கிறார். அதில் ஆசிரியரின் பெயர் இல்லை.

அதன் பிரசுரகர்த்தா லாகூர் ஆரிய புத்தகாலயத்தின் நிர்வாகியாவார். வெளியீட்டின் தலைப்பே மனத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது. அதில் அடங்கியுள்ள விவரங்களும் தலைப்புக்கு ஏற்றபடி மோசமாகவே இருக்கின்றன. வாசகரின் நுண் உணர்ச்சியைப் புண்படுத்தாமல், இதன் சில பகுதிகளை மொழிபெயர்க்க முடியாது. இவ்வகையான புத்தகத்தை எழுதுவதும், வெளியிடுவதும் ஆத்திரம், கோபம் போன்ற வெறி உணர்ச்சிகளைக் கிளறிவிடுவதால், இதில் வேறு என்ன நோக்கம் இருக்கமுடியும் எனப் பன்முறையும் யோசித்தேன். நபிகள் நாயகத்தை நிந்தித்துக் கேவலப்படுத்துவதால், முஸ்லிம் ஒருவரைத் தமது மதத்திலிருந்து பிரிக்க முடியாது. தமது மதத்தைப் பற்றி ஐயப்பாடுடைய ஹிந்துவுக்கும் இது நன்மை செய்யாது. ஆகையால், மதத்தைப் பரப்பும் வேலையில் இதற்கு எவ்விதமான மதிப்புமில்லை. இது செய்யக்கூடிய தீங்கோ வெளிப்படையாகும்.

"லாகூர் பொதுஜன அச்சகத்தில் அச்சிட்ட 'சைத்தான்' என்னும் காகிதத்தை மற்றொரு நண்பர் அனுப்பியுள்ளார். முஸ்லிம்கள் மீது வசை மாரி பொழியும் இந்தப் பிரசுரம் மொழிபெயர்க்கவே தகுதியற்றதாக இருக்கிறது. இவ்வாறே வசைமாரி பொழியும் முஸ்லிம் வெளியீடுகளையும் நான் அறிவேன். அதனால், ஹிந்துக்களும் ஆரிய சமாஜிகளும் தூஷிப்பது பதிலாகிவிடாது, நியாயமும் ஆகாது. இப்படிப்பட்ட வெளியீடுகளுக்கு நல்ல ஆதரவு இருக்கிறது என்று கேள்விப்பட்டிராவிட்டால், நான் இவைகளைப் பற்றிக் கவனித்திருக்க மாட்டேன். உள்ளூர்த் தலைவர்கள் இந்தப் பிரசுரங்களைத் தடுக்க வழி காண வேண்டும், அல்லது அவை இழிவானவை என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். இவற்றிற்குப் பதிலாக ஒருவர் மற்றவரின் மதத்தினிடம் தாராள மனப்பான்மை காட்டும் தூய்மையான இலக்கியங்களை வழங்க வேண்டும்."

இதன்பின் ஆரிய சமாஜிகளிடமிருந்து மறுப்புகள் வந்து குவிந்தன. சமாஜிகளையும், இந்தச் சமாஜத்தை நிறுவிய ரிஷி தயானந்தரையும் இழிமொழியில் தாக்கி வெளிவந்துள்ளவைகளின் பிரதிகளை அவர்கள் எனக்கு அனுப்பினர். ரங்கிலா ரசூலும் இதைப் போன்ற வேறு பிரசுரங்களும் முன் கூறிய முஸ்லிம் வெளியீடுகளுக்குப் பதில் கூறும் முறையில் எழுதப்பட்டன என்று சொன்னார்கள். அதற்கு மேல், நான் 'எங் இந்தியா' *10-7-1924* தேதியிட்ட இதழில் கீழ்வரும் இரண்டாம் குறிப்பு எழுதினேன்:

"நபியின் பேரில் எழுதிய வாசிக்கத் தகுதியற்ற வெளியீட்டைப் பற்றியும், சைத்தான் என்னும் தூஷணையான வெளியீட்டைப் பற்றியும் நான் சொன்னவை, ஆரிய சமாஜிகளிடமிருந்து எனக்கு ஒரு கத்தைக் கடிதங்களைக்கொண்டு வந்து சேர்த்திருக்கின்றன. அவர்கள் நான் சொல்லியவற்றின் உண்மையையும் பொருளையும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால், சில முஸ்லிம் வெளியீடுகள் இவற்றைவிட மேலானவை அல்ல, இவை போன்றவையே என்றும், முஸ்லிம்கள் தான் முதலில் தாக்க ஆரம்பித்தார்கள் என்றும், ஆரிய சமாஜிகள் அதற்குப் பதிலாகவே அம்மாதிரி செய்தார்கள் என்றும் கூறுகின்றனர். இவை போன்ற சில பத்திரிகைச் சாராம்சங்களில் சிலவற்றை வாசிக்கும் வேதனையை நான் அனுபவிக்க நேர்ந்தது. சில இடங்களில் அது மிகமிக அருவருக்கத்தக்கதாயுள்ளது. அவைகளை இங்கே எழுதி இப்பக்கங்களை நான் விகாரப்படுத்தப்போவதில்லை. சுவாமி தயானந்தரின் வாழ்க்கை வரலாற்றை ஒரு முஸ்லிம்

எழுதியிருக்கிறார். இதன் பிரதியொன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. இது ஒரு பெரும் சீர்திருத்தக்காரரின் வாழ்க்கை வரலாற்றையே திரித்துக் கூறுவதாக இருக்கிறது. அவர் செய்கையில் ஒன்றாவது ஆசிரியரின் விஷம் கக்கும் தாக்குதலுக்குத் தப்பவில்லை. என் வார்த்தைகள் ஆரிய சமாஜத்தையும் சமாஜத்தினரையும் அவதூறு செய்ய, முஸ்லிம்களுக்குத் துணிச்சலைக் கொடுத்திருக்கிறதென்று கசப்புடன் ஒரு நிருபர் முறையிடுகிறார். சமீபத்தில் லாகூரில் நடந்த கூட்டத்தின் அறிக்கை கிடைத்திருக்கிறது. அக் கூட்டத்தில் சமாஜத்தின்மீது சொல்லத்தகாத நிந்தனைகளைச் சுமத்தியிருக்கின்றனர். அத்தகைய எழுத்துக்களுக்கும், பேச்சுக்களுக்கும் நான் அனுதாபம் காட்டமாட்டேன் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. நான் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்கள் ஒரு புறம் இருப்பினும், சமாஜ ஸ்தாபகரைப் போற்றுபவர்களில் நானும் ஒருவன். அவர், ஹிந்து சமூகத்தைக் கறைபடுத்தும் அநேக தவறுகளை எடுத்துக்காட்டினார். சமஸ்கிருதப் படிப்பில் ஆர்வத்தை உண்டாக்கினார். மூடநம்பிக்கைகளை அறைகூவி எதிர்த்தார். தமது சொந்த வாழ்க்கையின் தூய்மையினால், தாம் வாழ்ந்த சமூகத்தின் பெருமையை உயர்த்தினார். அச்சமின்மையை அறிவுறுத்தினார். நம்பிக்கையிழந்த வாலிபர் பலருக்குப் புது நம்பிக்கை யூட்டினார். தேச நலத்திற்காக அவர் செய்தவைகளையும் நான் மறந்துவிடவில்லை. உண்மையும் தியாகமும் நிறைந்த ஊழியர் பலரைச் சமாஜம் தேசத்திற்குக் கொடுத்திருக்கிறது. பிரம்ம சமாஜத்தைத் தவிர வேறு எந்த ஹிந்து ஸ்தாபனமும் செய்யாத அளவுக்கு இது ஹிந்துக்களுக்குள் பெண் கல்வி பரவ ஊக்கமளித்திருக்கிறது. சிரத்தானந்தஜி என்னைக் குறைகூறியது தான், நான் அவரைப்பற்றி எழுதுவதற்குக் காரணம் என்று அறியாமையில் ஆழ்ந்த கண்டனவாதிகள் தயங்காமலும் மறைமுகமாகவும் கூறுகிறார்கள். குருகுலத்தில் அவர் செய்த முன்னணி வேலைகளை நான் மறுபடியும் பாராட்டுவது, அத்தகையோரின் கிண்டல் பேச்சினால் தடைப்படாது. ஆகையால் சமாஜம், சத்தியார்த்தப் பிரகாசம், ரிஷி தயானந்தர், சுவாமி சிரத்தானந்தஜி இவர்களைப்பற்றி நான் கூறிய குறைகளில் ஒரு வார்த்தையைக்கூட வாபஸ் வாங்க முடியாதெனினும், என்னுடைய குற்றச்சாட்டு ஒரு நண்பனின் குற்றச் சாட்டுதான் என்று மீண்டும் சொல்லுகிறேன். நான் காட்டிய குறைபாடுகளைக் களைந்து சமாஜம் இன்னும் பெரிய சேவை செய்ய வேண்டும் என்பதே எனது ஆசையாகும். அது, விவாதம் செய்யும் தன்மையை விட்டுவிட்டுக் காலத்தை அனுசரித்துப் போக வேண்டுமென விரும்புகிறேன். தனது கொள்கையில் உறுதியாக இருந்துகொண்டு, தான் விரும்பும் அதே சகிப்புத்தன்மையை மற்ற மதத்தினருக்கும் காட்ட வேண்டும். தன் ஊழியர்களைக் கண்காணித்து, இழிவான எழுத்துக்கள் அனைத்தையும் தடுத்துவிட வேண்டும்.

"அவதூறு இயக்கத்தை முஸ்லிம்கள் ஆரம்பித்தார்கள் என்பது, நீங்கள் செய்வதை நிலைநாட்டுவதற்குச் சரியான காரணம் ஆகிவிடாது. அவர்கள் ஆரம்பித்தார்களா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், பதில் மட்டும் சொல்லாதிருந்தால், அவர்கள் சொல்லியதையே திரும்பத் திரும்பச் சொல்லிச் சலித்துப்போயிருப்பார்கள் என்பது மட்டும் எனக்குத் தெரியும். சமாஜத்தினர் தங்களுடைய சுத்தி இயக்கத்தை விட்டுவிட வேண்டுமென்றுகூட நான் வற்புறுத்தவில்லை. ஆனால் முஸ்லிம்களைக் கேட்பது போலவே இவர்களையும், சுத்தியைப்பற்றி இப்போதிருக்கும் தங்கள் கருத்தைத் திருத்திக்கொள்ளும்படி வற்புறுத்துகிறேன்.

"முஸ்லிம் எழுத்தாளர், பேச்சாளரின் நடத்தையைப்பற்றி எனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. எதிரியை வரைமுறையற்ற வசைமாரியால் தாக்குவதால், தங்களுடைய புகழையோ அல்லது தங்களுடைய மதத்தின் பெருமையையோ, புகழையோ அவர்கள் அதிகரித்துக்கொள்ளப்போவதில்லை என்று, அவர்களுக்கு நான் சுட்டிக்காட்டத் துணிகிறேன். சமாஜத்தையும் சமாஜத்தினரையும் ஆத்திரத்துடன் தாக்குவதால், அவர்கள் இஸ்லாமுக்குச் சேவை செய்ய முடியாது. இதனல் அவர்களுக்கு யாதொரு லாபமும் ஏற்படாது."

இவ்வாருக, முஸ்லிம்களின் கோபத்தை நான் முன்கூட்டியே எதிர்பார்த்தேன். இந்த இயக்கத்தின் போக்கை நான் ஆதரிக்க முடியாது. இது அளவுக்கு மிஞ்சுவதும், ஆத்திரமூட்டுவதுமாகும் என்பது என் கருத்து. நீதிபதி துலீப் சிங்கை முஸ்லிம்கள் தாக்கியிருப்பது பொருத்தமற்றது, நியாயமற்றது, ஆத்திரம் தாங்காமல் உளறும் செயலாகும். நீதி இலாகா அரசாங்கத்தாரின் செல்வாக்கிற்கு அப்பாற்பட்டதல்ல. ஆயினும், பொது மக்கள் அதைத் தாக்கவும், பயமுறுத்தவும், அவதூறு செய்யவும் தொடங்கினல், அதனுல் நியாயம் வழங்க இயலாது போய் விடும். நீதிபதியின் நேர்மையைப் பொறுத்த அளவில், பிரசுரத்தை அவர் பலமாகக் கண்டித்த முறையே எந்த முஸ்லிமுக்கும் திருப்தியளிக்க வேண்டும். சட்டத்தைப் பொருள்படுத்திய விதத்திற்காக அவரைக் கடுமையாகத் தாக்குவது தவருகும். மற்ற நீதிபதிகள் அவருக்கு மாருன கருத்துக் கொண்டது பற்றி அக்கறையில்லை. இதற்கு முன்னும் அடிக்கடி நீதிபதிகள் ஒரே சட்டத்தைப் பற்றி நேர்மையுடனும், தங்கள் தங்கள் மனச்சாட்சிக்கு முரணின்றியும் நேர்மாருன விளக்கங்கள் கொடுத்திருக்கிருர்கள். தண்டனை விதிகள் கடுமையாக இருக்கும்படி செய்வதற்காகக் கிளர்ச்சி செய்வது புத்திசாலித்தனமாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில், அது விவேகமானதுதானு என்று நான் சந்தேகிக்கிறேன். அவ்விதிகளைக் கடுமையாக்குவது நம்மையே பாதிக்கும். அவ்வகையான விதிகள், முன்னர் உபயோகிக்கப்பட்டது போல், நம்மீது ஆங்கில அதிகாரத்தின் பிடியை மேலும் இறுக்குவதற்காக உபயோகிக்கப்படும். ஆனல், முஸ்லிம்களோ அல்லது ஹிந்துக்களோ அவ்வகைப் பிரசுரங்களைத் திட்டவட்டமாய்க் குற்றச் சட்டத்தின் கீழ்க் கொண்டு வரக் கிளர்ச்சி செய்ய விரும்பினல், அவ்வாறு செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு.

அரசாங்கப் பாதுகாப்பைப் பற்றிய என் கருத்துக்கள் கடுமையானவை. நமக்கிருந்த நல்லறிவு காரணமாக, இவ்விஷயங்களில் நீதி மன்றங்களின் பாதுகாப்பை நாம் மதியாத காலமும் இருந்தது. ஹிந்து மத எதிர்ப்புப் பிரசுரங்களை நிறுத்துவது முஸ்லிம்களின் கடமையாக இருப்பதுபோல, ரங்கிலா ரசூல் போன்ற முஸ்லிம் எதிர்ப்புப் பிரசுரங்களை நிறுத்துவது ஹிந்துக்களின் கடமையாகும். தலைவர்களால், அவதூறு கூறுவோரை அடக்க முடியவில்லை; அல்லது தலைவர்கள் அவர்களிடம் அனு

தாபம் கொண்டுள்ளனர் என்றுகிறது. எவ்வாருயினும், அரசாங்கப் பாதுகாப்பு காரணமாக நாம் ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மை காட்ட முற்பட்டுவிடமாட்டோம். சட்டம் இன்னும் கடுரமாக இருந்தால், மற்றவர் மதத்தைப் பழிக்கும் ஒவ்வொருவனும் தன் எதிரியின் மதத்தைத் துஷ்டத்தனமாகத் தாக்குவதற்கு ரகசிய வழிகளைத் தேடுவான்; அல்லது கோபமூட்டும் அளவுக்குக் கேவலமாகவும், அதே சமயத்தில் சட்டத்தின் பிடிக்கு உட்படாத வகையில் மறைமுகமாகவும் எழுத முயலுவான். ஆனல், தற்சமயம் நாம் நிதான புத்தியுள்ள தேசீயவாதிகளைப் போலவோ அல்லது மதப் பற்றுள்ளவர்களைப் போலவோ நடந்து கொள்ளவில்லை. ஆனல், மதத்தின் பெயரைச் சொல்லி ஒருவர் மேல் ஒருவர் வெறி பிடித்துப் போய்ப் பழி தீர்க்கப் பார்க்கிருேம்.

இப்போதுள்ள சூழ்நிலை எனக்குச் சிறிதும் பொருத்தமற்றதாக இருக்கிறது என்பதை ஹிந்து, முஸ்லிம் நிருபர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஹிந்துக்களானலும் முஸ்லிம்களானலும் சண்டையிடுபவர்மேல் எனக்கு ஒருவிதப் பிடியுமில்லை என்பதை நான் முற்றிலும் உணருகிறேன். பிணக்கைப் போக்க நான் சொல்லும் முறை, காலத்திற்கு ஏற்றதல்ல என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆகையால், மௌனத்தின் மூலமே நான் நாட்டிற்கு நல்ல பணி செய்ய முடியும். ஆயினும், ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்திலும் சாத்தியத்திலும் எனக்குள்ள நம்பிக்கையைப் போலவே, பிணக்கைத் தீர்க்க நான் காட்டும் முறையிலும் அசையாத நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, என் ஆற்றலின்மை தெளிவான பின்னும் நான் நம்பிக்கை இழக்கவில்லை. வெளிப்படையான எச் செயலையும்விட மௌனமான பிரார்த்தனை அதிக சக்தியுடையது. ஆதலால், மாசற்ற இதயத்தின் பிரார்த்தனை வீண்போகாது என்ற நம்பிக்கையுடன் சக்தியற்ற இந்த நிலையிலும் இடைவிடாது பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறேன். அத்துடன் கடவுள் ஏற்கத் தகுந்த பிரார்த்தனைக்குத் தூய்மையான ஒரு கருவியாவதற்கு, என் முழு பலத்தோடும் முயற்சித்து வருகிறேன்.

—'எங் இந்தியா' - 22—9—1927

## 6

# முஸ்லிம்களுக்குச் சலுகையா?

நாசிக்கில் சில வாலிபர்கள் கேட்ட கேள்விகளுக்கு, காந்திஜி பொதுக் கூட்டத்தில் பதிலளித்தார்:

**கேள்வி :** நீங்கள் முஸ்லிம்களுக்குச் சாதகமாக, ஒருதலைப்பட்சமாகப் பேசுகிறீர்களா? சில முஸ்லிம் தலைவர்கள் உங்கள்

மேல் சாட்டியிருக்கும் குற்றங்களுக்கு நீங்கள் ஏன் பதில் சொல்லுவதில்லை?

**பதில்:** முஸ்லிம்கள் சார்பில் ஒருதலைப்பட்சமாகப் பேசுவது போல் தோன்றுவதால், நான் மற்ற மதத்தினருக்கு நீதி காட்ட முடியும். மற்ற மதங்களுக்கு, நீங்கள் சொல்லுவது போல் நான் சலுகை காட்டுவதால், என் மதத்தையே நான் பாதுகாக்கிறேன் என்பது எனக்குத் தெரியும். ஹிந்து மதத்திற்குத் தீங்கிழைக்க நான் ஒருபோதும் விரும்ப மாட்டேன், என்றால் விரும்பவும் முடியாது. ஏனெனில், ஹிந்து மதம் என்னும் கடலில் நான் ஒரு துளி போன்றவன். முஸ்லிம்கள் என்னைக் காபிர் என்று அழைத்தால் தான் என்ன? அதற்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்? தென் ஆப்பிரிக்காவில் என்னுடன் என் அண்ணன் மகன் ஒருவர் இருந்தார். நான் அவருக்குச் சலுகை காட்டுவதாக ஜனங்கள் சொன்ன பிறகுதான், நான் அவரிடம் நடுநிலைமையாக நடந்துகொள்ளுகிறேன் என்பதை நானும் அவரும் உணர்ந்தோம். முஸ்லிம்கள் என்னிடம் குற்றம் காண்கிறார்கள். நான் முஸ்லிம்களிடம் நியாயமாக நடந்துகொள்ளுகிறேன் என்று அவர்கள் நம்பும் அளவுக்கு, அவர்கள் விஷயத்தில் ஒருதலைப்பட்சமாக நான் நடந்துகொள்ளவில்லை என்பதையே இது காட்டலாம். அவர்களுடைய குற்றச் சாட்டுகளுக்கு நான் ஏன் பதில் கூற வேண்டும்? எனது முழு நேரத்தையும் கிருஷ்ண பரமாத்மாவின் சேவைக்கு அர்ப்பணம் செய்திருக்கிறேன். அவர் எப்போதும் என்னுடன் இருக்கிறார், என்னை வழி நடத்துகிறார். அவசியமான யாவற்றையும் எனக்காகச் செய்யும் நான் அவரைச் சதா வேண்டிக்கொண்டிருக்கிறேன். அவசியமாயிருந்தால், அவரே எனக்காகப் பதிலளிப்பார்.

**கேள்வி:** கிலாபத்துக்காகச் சண்டையிட்ட தாங்கள், ஏன் இன்று ஹிந்து சங்கதனுக்காகச் சண்டையிடக் கூடாது?

**பதில்:** இது சரியான கேள்வியாகும். கிலாபத்துக்காக என் உயிரையும் துறக்க நான் பிரதிக்ஞை பூண்டேன். அதன் மூலம் மறைமுகமாகப் பசு பலியைப்பற்றிய பிரச்னைக்கும் உதவுவேன் என எனக்குத் தெரியும். "எவ்வளவு தூரம் பசுக்களைக் காத்தீர்கள்?" என்று நீங்கள் கேட்பீர்கள். அது மிகச் சொற்பம்தான் என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். எனினும், அதனால் எனக்கென்ன? 'உன் உரிமையும் கடமையும் வேலைதான், பலன் அல்ல' என்கிறது கீதை. ஆண்டவனின் தூண்டுதலின் பேரில்தான் நான் அலி சகோதரர்களுடன் ஒத்துழைத்து, என்னாலியன்ற உதவி செய்தேன். அதற்காக நான் வருந்தவில்லை. இன்னொரு சந்தர்ப்பம் வந்தாலும் முன்பு செய்ததுபோலவேதான் செய்வேன். இதைத்தான் நம்முடைய மத நூல்கள் எல்லாம் போதிக்

கின்றன. மக்கள் என்னைப் பரிகசித்து, இஷ்டமானால் அவமானப்படுத்தட்டும். நான் அவர்கள் செய்வதையே திருப்பி அவர்களுக்குச் செய்யப் போவதில்லை. துளசி தாசரும் வேதங்களும் போதிக்கும் தவமுறைப்படி தவம் புரிவதுதான் என் மதம்; அதுதான் என் உயிர் நாடி; வேறு ஒன்றும் நான் செய்ய முடியாது. படைப்பு முழுதும் தத்தம் வாழ்க்கை விதியையே அனுசரிக்கிறது. 'ஹிந்துக்களுடன் தோள்கொடுத்து முஸ்லிம்களும் பசுவைப் பாதுகாத்த அந்நாளில், இப் பணியிலேயே உயிர்நீத்த பித்தன் காந்தியின் முயற்சியின் பலன்தான் இது' என்று பலரும் சொல்லுவார்கள் என்ற நம்பிக்கையும், கடமையைச் செய்து முடித்தோம் என்ற எண்ணமுமே எனக்கு இன்பத்தைக் கொடுப்பதாகும்.

இப்போது நடக்கும் முறையில் சுத்தி, தப்ளிக், ஞானஸ்நானம் இவைகட்கு, முறையே ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்கள் இடங்கொடுப்பதில்லை. அவ்விதமிருக்க, எப்படி நான் சுத்தி இயக்கத்தில் பங்கு எடுத்துக்கொள்ள முடியும்? எனக்கு அல்லது என் மதத்துக்கு அபாயம் நேரிடும் போது, தன்னைத்தானே பரிசுத்தம் செய்துகொள்ளும்படி கீதையும் துளசி ராமாயணமும் கூறுகின்றன. எனக்கு உண்மையானது யாவருக்கும் உண்மையே. இருபத்து நான்கு மணி நேரமும் நான் என்னைத் தூய்மை செய்துகொண்டே இருக்கிறேன். பயங்கரத் தோற்றமுள்ள கணவன் கிடைப்பான் என்று பார்வதிக்கு நாரதர் முன்னதாகவே சொன்னார். சிவனின் தோற்றம் பயங்கரமாக இருக்கும் அளவுக்கு ஆனந்தமாகவும் இருக்கும் என்று அவளுக்குத் தெரியும். ஆகையால், அவனை அடைவதற்காகத் தவம் இயற்றி வெற்றி பெற்றாள். ஆகவே, தவமும் ஆன்ம சுத்தியும் நமது மறை நூல்களில் எங்கும் தெளிவாக விதிக்கப்பட்டிருக்கின்றன. எண்ணற்ற முனிவர்கள் தம் ஊனினை உருக்கி, உள்ளொளி பரப்பியதற்கு இமயமலை இன்றும் என்றும் அழியாச் சான்றாக விளங்குகிறது. வேதங்கள் என் சம்பந்தப்பட்டவரையில் காகிதத்தில் எழுதப்பட்ட வெறும் வாக்கியங்கள் அல்ல. அவை, என் உள்ளமும். உள்ளத்துள் உள்ளானும் ஆகும். நேம நியமங்களை அனுஷ்டித்து எல்லாவற்றையும் கிருஷ்ண பரமாத்மாவுக்கு ஒப்படைத்து விடும்படி அவை எனக்குச் சொல்லுகின்றன. என் உழைப்பெல்லாம் ஹிந்து மதத்திற்கு நான் செய்யும் பணியென்று நான் தாழ்மையுடன் சொல்லிக்கொள்ளுகிறேன். நான் ஒரு ஹிந்து. எனவே இதைத் தவிர வேறொன்றும் செய்யமுடியாது. செய்யும் முறை மட்டும் தெளிவாக என்னுடையது தான்.

**கேள்வி:** இந்தச் சுற்றுப் பிரயாணத்தில், முஸ்லிம்கள் உங்களுக்கு எவ்வளவு தூரம் உதவி புரிந்து வருகின்றனர்?

பதில்: கதர் வேலையில் அவர்கள் எனக்கு அதிகம் உதவவில்லை. அதனால் என்ன? குடும்பக் காரியங்களில் மனைவியுடன் அல்லது சகோதரனுடன் நான் பேரம் பேசுவதில்லை. என் கடமையை நான் செய்கிறேன். மற்றவர்கள் அவர்களுடையதைச் செய்வார்கள். இம் மாதிரியே, நான் மோதிலால்ஜியுடன் அல்லது கெல்காருடன் பேரம் பேசாதது போல் முஸ்லிம்களுடனும் பேரம்பேச மாட்டேன். நாம் ஏன் முஸ்லிம்களுக்கு அஞ்சவேண்டும்? நாம் கடவுள் ஒருவருக்கே பயப்படவேண்டும், மனிதர்களுக்கல்ல. மனிதர்கள் உங்களை வஞ்சித்தால்கூட, கடவுள் கவனித்துக்கொள்ளுவார் என நம்பி, உங்கள் கடமையைச் செய்யத் தவறாதீர்கள்.

# 7

# ஏராளமான என் முஸ்லிம் நண்பர்களுக்கு

இப்போது வயது ஐம்பதை அணுகிக்கொண்டிருக்கும் என் மூத்த மகன் ஹரிலால், சுமார் இரண்டு வாரங்களுக்கு முன் இஸ்லாமைத் தழுவியதாகப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. மே மாதம் 29-ஆம் தேதி வெள்ளிக்கிழமை, பம்பாயில் ஜும்மா மஜீதில் திரளான மக்களின் மத்தியில் ஹரிலால் தன் மத மாறுதலைத் தெரியப்படுத்தினான். அப்போது பெரும் ஆரவாரம் ஏற்பட்டதாம். அவன் பேசியபின், அவனைப் போற்றுவோர் அவனைச் சூழ்ந்துகொண்டு கைகுலுக்க ஒருவரையொருவர் முந்திக்கொண்டிருந்தனர். அவன் மனத்திலிருந்து இந்த மத மாற்றம் உண்டாயிருக்குமாயின், அதற்கு லௌகிக காரணம் ஒன்றும் இல்லையாயின், எனக்குக் கவலையில்லை. ஏனெனில், என் மதத்தைப்போல் இஸ்லாமும் உண்மையான ஒரு மதம் என்றே நம்புகிறேன்.

ஆனால், இம் மதமாற்றம் மனத்திலிருந்து வந்ததென்பதையும், இதில் சுயநலம் ஒன்றும் இல்லை என்பதையும்பற்றி நான் மிகவும் சந்தேகிக்கிறேன். என் மகன் ஹரிலாலை அறிந்தவர்கள் அனைவருக்கும் அவன் நெடுநாளாகக் குடிப் பழக்கமும் தாசிகளின் தொடர்பும் உள்ளவன் என்பது தெரியும். தாராளமாகக் கொடுத்து உதவிய நண்பர்களின் தருமத்தால் சில ஆண்டுகள் வாழ்க்கை நடத்தினான். உயர்ந்த வட்டிக்குக் கடன் கொடுத்த சிலருக்கு அவன் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறான். பம்பாயில் கடன் கொடுத்த ஒரு பட்டாணியர் தனது உயிருக்கே அபாயம் விளைவித்து விடுவாரோ என்று அவன் சமீப காலம்வரை பயந்திருந்தான். இப்போது அந்நகரத்தில் அவன் தாற்காலிக வீரனாக விளங்குகிறான். அவனுக்கு மிக்க அன்புடைய மனைவி இருந்தாள். அவனது துன்மார்க்கம் உள்பட எல்லாக் குற்றங்களையும் அவள்

மன்னித்தாள். அவனுக்கு இரு புதல்விகளும் ஒரு புதல்வனும் உண்டு. அவர்கள் வயது வந்தவர்கள். நெடு நாட்களுக்கு முன்பே இவர்களைப் பராமரிப்பதை அவன் நிறுத்திவிட்டான்.

சில வாரங்களுக்கு முன் பத்திரிகையில் ஹிந்துக்களுக்கு விரோதமாக [ஹிந்து மதத்திற்கு விரோதமாக அல்ல] கிறிஸ்தவ மதத்தையோ அல்லது இஸ்லாம் மதத்தையோ தழுவி விடுவதாக அவன் பயமுறுத்தினன். கடிதத்தின் தொனியிலிருந்து, பேரம் எங்கு அதிகமோ அங்கு போவான் எனத் தெளிவாகத்தெரிந்தது. விரும்பிய பயன் கிடைத்தது. நகர சபை அங்கத்தினரான ஒரு ஹிந்துவின் முயற்சியால் நாகபுரி நகர சபையில் அவனுக்கு வேலை கிடைத்தது, ஆகவே, பத்திரிகையில் வெளியிட்ட மற்றொரு கடிதத்தில், தன் முதல் கடிதத்தை ரத்துசெய்து, தன் மூதாதையர் மதத்திலேயே தான் இருக்கப்போவதாக உறுதி கூறினன்.

சமீப கால நிகழ்ச்சிகளிலிருந்து, பணத்தைப் பொறுத்த அளவில் அவனுடைய ஆசை திருப்தியாகவில்லை என்று தெரிகிறது. அந்த ஆசையைப் பூர்த்திசெய்வதற்காக இஸ்லாமைத் தழுவினன். அதுபற்றிய வேறு பல விஷயங்களும் எனக்குத் தெரியும். அவை என் அபிப்பிராயத்தை உறுதிப்படுத்து கின்றன.

சென்ற ஏப்ரல் மாதம் நான் நாகபுரியில் இருந்தபோது, அவன் என்னையும் அவன் தாயாரையும் பார்க்க வந்தான். போட்டியிடும் மதங்களின் பிரசாரகர்கள் அவன்மேல் செலுத்திய கவனத்தைப்பற்றி அவனுக்கு வேடிக்கையாக இருப்பதாகச் சொன்னன். கடவுளால் அற்புதங்கள் நிகழ்த்த முடியும். ஒரு நொடியில் கல்நெஞ்சையும் கரைத்திருக்கிறர். பாவிகளைப் பக்தர் ஆக்கியிருக்கிறர். நாகபுரியில் சந்தித்த காலத்திலும், வெள்ளிக் கிழமை விளம்பர நேரத்திலும், தன் பழைய வாழ்க்கைக்காக மனம் வருந்தித் திடீரென்று புதிய மனிதனுகிக் குடியையும், துன்மார்க்க நடவடிக்கைகளையும் விட்டுவிட்டான் எனக் கேட் பதைப்போல் வேறொன்றும் என்னை மகிழ்விக்காது.

ஆனல், பத்திரிகை அறிக்கைகள் அவ்வாறு ஒன்றும் சொல்ல வில்லை. ஆடம்பரமாக வாழ்வதிலும் சிற்றின்பத்திலும் அவனுக்கு இன்னும் மோகமிருக்கிறது. அவன் உண்மையிலேயே மாறி யிருந்தால் என் மனத்தை மகிழச் செய்யும்படி எனக்கு எழுதி யிருப்பான். என் மக்கள் யாவருக்கும் எண்ணத்திலும் செய்கை யிலும் பூரண சுதந்திரம் இருந்திருக்கிறது. தங்கள் மதத்திற்குக் காட்டும் மரியாதையே மற்ற மதங்களுக்கும் காட்ட அவர்களுக்கு நான் கற்பித்தேன். நேர்மையுடன் சமாதான வாழ்க்கை நடத்தும் வகையை இஸ்லாமில் கண்டுபிடித்ததாகச் சொல்லி யிருந்தால், நான் அவனைத் தடுத்திருக்கமாட்டேன் என்று அவனுக்குத் தெரியும். ஆனல், என்னுடனிருக்கும் இருபத்து

நான்கு வயதுள்ள அவன் மகன் உள்பட எங்கள் யாருக்கும், பத்திரிகையில் பார்க்கும்வரை இதைப்பற்றி எதுவுமே தெரியாது.

என் மகனின் மத மாற்றத்தினுல் ஆனந்த பரவசமாகியிருக்கும் முஸ்லிம்களுக்கு இஸ்லாமைப்பற்றிய என் எண்ணங்கள் நன்ருகத் தெரியும். ஒரு முஸ்லிம் அன்பர் குழாம் பின்வருமாறு எனக்குத் தந்தி யடித்திருக்கிறது: "சத்தியத்தை நாடுகிறவராகிய நீங்களும் உங்கள் மகனைப்போல் உலகத்தின் மெய்யான மதமாகிய இஸ்லாமைத் தழுவுவீர்கள் என்று எதிர்பார்க்கிருேம்."

இவை யனைத்தும் என்னைப் புண்படுத்தின. இந்தக் கூற்றில் மத உணர்ச்சி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஹரிலால் இஸ்லாமைத் தழுவியதற்குக் காரணமாக இருந்தவர்கள், இவ்வித விஷயங்களில் செய்ய வேண்டிய மிகச் சாதாரணமான, முன் எச்சரிக்கையான ஏற்பாடுகளைக்கூடச் செய்துகொள்ளவில்லை.

ஹிந்து மதத்தை ஹரிலால் கைவிட்டதனுல், அதற்கு நஷ்டம் எதுவுமில்லை. முன்னிருந்ததுபோலவே அவன் ஒழுக்கம் குன்றியவனுக இருந்தால், இஸ்லாமிற்கு இவனது நுழைவினுல் பலம் குறையும்.

மதம் மாறுதல் உண்மையாகவே, மனிதனுக்கும் அவனைப் படைத்தவருக்கும் இடையே உள்ள ஒரு காரியம். அவருக்குத் தான் அவரது சிருஷ்டிகளின் மனம் தெரியும். மாசுபடிந்த மனத்துடன் மதம் மாறுதல், கடவுளையும் மதத்தையும் மறுப்பதாகும். மனத்தூய்மையற்ற மத மாற்றம் கடவுள் பக்தியுடையவனுக்குத் துன்பந்தரும் விஷயமாகும்; இன்பம் கொடுக்காது.

ஹரிலாலின் சமீப கால வாழ்க்கையை மனத்தில் வைத்து, அவனைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென்பதே நான் என் ஏராளமான முஸ்லிம் நண்பர்களுக்கு இதை எழுதுவதன் நோக்கமாகும். அவனுடைய மதமாற்றம் உயிரற்றது எனக் கண்டால், அதைத் தெளிவாகச் சொல்லி அவனை விலக்கிவிடவேண்டும். நேர்மையானதெனில், கெட்டவழிக்கு இழுக்கும் இயல்புகளிலிருந்து அவனைக் காத்துச் சமூகத்தில் கடவுளுக்குப் பயந்த மனிதனுக்க உதவவேண்டும். மட்டுக்கு மிஞ்சிய சிற்றின்ப வாழ்க்கையினுல் அவன் மூளை குழம்பி யிருக்கிறது. நீதி, அநீதி, மெய், பொய் இவைகளின் உணர்ச்சி குன்றிவிட்டது. பெயரை மாற்றுவதனுல், ஒருவன் கடவுள் பக்தனுவான் எனில், கடவுளின் பக்தன் என்று பொருள்படும்* ஹரிலால் அல்லது அப்துல்லா என்ற இரு பெயர்களுள் அவன் எதை வைத்துக்கொண்டாலும் நான் கவலைப்பட மாட்டேன்.

*சில நாட்களுக்குப் பின், சேவாக் கிராமத்தில் போலிஷ் ஆராய்ச்சியாளர் ஒருவருடன் மத மாற்றத்தையும், அதற்காக கிறிஸ்தவர்கள் கையாளும் முறைகளையும்

# 8

# நிந்தனைப் பிரசாரம்

உருதுவிலிருந்து குஜராத்தியில் மொழிபெயர்த்த மத மாற்றத் துண்டுப் பிரசுரம் ஒன்றை நிருபர் ஒருவர் எனக்கு அனுப்பியிருக்கிறார். அதை உமர்பாய் முகமதுபாய் குஜராத்தியில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார். இது அகமதாபாத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. நிருபரின் கடிதத்திலிருந்து கீழ்க்கண்டவற்றைக் கொடுத்துள்ளேன் :

"உள்ளூர் முஸ்லிம் ஒருவர் வெளியிட்டிருக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்றை உங்களுக்கு அனுப்ப அனுமதியுங்கள். ஹரிஜனங்களை இஸ்லாம் மதத்தைத் தழுவச் செய்வதும், அவர்களுக்குள்ளே ஹிந்துக்களுக்கு எதிராகப் பகைமூட்டுவதும் அதன் நோக்கமாகத் தோன்றுகிறது. ஹிந்து மதத்தைப் பற்றியும் ஆசாரத்தைப் பற்றியும் அதில் கூறியிருப்பவை பொய்யானவை மட்டுமல்ல, சமூகப் பிணக்கையும் அதிகரிக்கும்படி செய்யக்கூடியவை.

"சமீபத்தில் இரு வட இந்தியப் பையன்களை மதமாற்றத்திலிருந்து தப்புவிக்க முயன்றேன். அவர்களைக் கண்டுபிடித்து, தேடிக்கொண்டு வந்த உறவினருடன் அனுப்பிவைத்தோம். சமீபத்தில் ஹரிஜனப் பெண்களைக் கூடத் தூண்டி, இஸ்லாமைத் தழுவும்படி செய்திருக்கின்றனர்.

"தயவு செய்து இவ்வெளியீட்டைப் படித்துப் பார்த்து இம் மாதிரிப் பொய்யான, தீ மூட்டும் வெளியீடுகளின் வலையில் எழுத்தறிவற்ற ஏழை ஹரிஜனங்கள் விழாதிருக்க, நாங்கள் செய்ய வேண்டியது என்ன என்று சொல்லுங்கள்."

பிரஸ்தாப துண்டுப் பிரசுரத்தை வேதனையுடன் படித்தேன். நிருபர் விவரித்தது போலவே இது விஷமம் நிறைந்ததாக இருக்கிறது. ஹரிஜனங்களான தகப்பனும் மகனும் உரையாடுவது போல் இது எழுதப்பட்டுள்ளது. தந்தையின் தூண்டுதலின்பேரில் மகன் ஹிந்து வேதங்களைப் படித்து, அவற்றை ஏளனம் செய்கிறான். ஹிந்து மதத்திலும் சவர்ண ஹிந்துக்களின்மீதும் வெறுப்புண்டாக்கும் வகையில், ஹிந்து மதத்தில் புண்ணியமெனக் கொண்டாடப்படும் அனைத்தையும் கேவலமாக விவரித்திருக்கின்றனர். சுவாமி சிரத்தானந்தருடைய புனிதமான பெயரைக்கூட இழுத்து, அவர் சொல்லியிருக்க முடியாத வார்த்தைகளைச் சொன்

---

பற்றிக் காந்திஜி பேசிக்கொண்டிருந்தார், அப்போது தன் மகனுடைய மத மாற்றம் என்று சொல்லப்படுவதைப்பற்றித் தான் எழுதியதை அவர் வாசித்தாரா என்று கேட்டுவிட்டுக் காந்திஜி கூறியதாவது:

"தூய, மனம் வருந்திய, உள்ளத்துடன் என் மகன் முஸ்லிமாயிருந்தால் எனக்கு விசனமில்லை. ஆனால், அவன் இஸ்லாமைத் தழுவியதைப் பற்றி ஆனந்தப் படுபவர்கள் அவனுடைய குறைகளைப் பயன் படுத்தியிருக்கின்றனர். அவர்கள் இஸ்லாமின் உண்மைப் பிரதிநிதிகள் அல்ல. நான் என் இதயத்தின் ரத்தத்தில் தோய்ந்த பேனாவினால் முஸ்லிம்களுக்கு எழுதினேன் என்று உங்களுக்குச் சொல்லவேண்டும்."

னதாகச் செய்திருக்கின்றனர். நேர்மையுள்ளவன் எவனும் தன் சகோதர மனிதர்களைப்பற்றி எழுத முடியாத வாக்கியம் ஒன்றை இங்கே காணலாம். ''சில ஹிந்துக்கள் வெளிக்குப்போவதுபோலச் சாணம் பூசிய சதுரங்களின்மேல் உட்காருகிறார்கள். அப்படிச் சாப்பிடுபவர்கள் சபிக்கப்படுவார்களாக.'' இந்தப் பிரசுரம் முற்றிலும் பொய்யும் புரட்டும் நிறைந்ததாகும். நிறைவேற்ற முடியாத பல பொருளாசைகள் ஹரிஜனங்களுக்குக் காட்டப்பட்டுள்ளன. அதிலும் ஹரிஜனங்கள் தம் மூதாதையரின் மதத்தை விட்டுக் கூட்டமாய் விலகினால், இவைகளைப் பெறுவது கடினமானது. ஹரிஜன் மகனை மதம்மாற்றிய மௌல்வி, முன்பு சக்கிலியராக இருந்து, பிறகு மதம் மாறியவர். இவர் முஸ்லிம் பிரபுவின் குடும்பத்தில் மணம் புரிந்திருக்கிறார். புதிதாக மதம் மாறியவனும் மௌல்வியும் ஒரே கிண்ணத்தில் குடிக்கின்றனர். எஞ்சியதை மற்றவர் பருகுகின்றனர். ஒரு முன்ஷியின் அரண்மனையில் அவனுக்கு விருந்து நடக்கிறது. உணவு உணவறையைப் பரிமளிக்கச் செய்கிறது. ''ஒவ்வொரு கவளமும் அமிர்தம், ஒவ்வொரு முடக்கும் ஜீவ நீர்.'' இதுவரை ஹரிஜனாக இருந்தவனுக்கு ஹுக்கா கொடுக்கின்றனர். அங்குள்ள அனைவரிடமும் அது போய்ச் சுற்றி வருகிறது. இவ்விதமெல்லாம் துண்டுப் பிரசுரத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

மக்களை மயக்குவதற்காக, கோடிக்கணக்கான மாந்தரின் மிகமிகப் போற்றப்பட்ட எண்ணங்கள் காலடியில் மிதிக்கப்படும் பண்பற்ற லௌகிகமான கீழ்நிலைக்கு மதத்தை இழுப்பது பரிதாபகரமானது.

யோசனையுள்ள முஸ்லிம்கள் இந்தப் பிரசுரத்தை ஆதரிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இவ்வகைப் பிரசுரங்கள் எவ்வகைத் தீங்கிழைக்கும் என்பதை உணருவதற்காக, அவர்கள் இதைப் படிக்க வேண்டும்.

இந்த ஆபத்தை எவ்வாறு சமாளிப்பது என்று நிருபர் கேட்கிறார். பொறுப்புடைய முஸ்லிம் உலகத்தின் கவனத்திற்கு இந்த நிந்தனை விளம்பரத்தைக் கொண்டுவருவது ஒரு பரிகாரமாகும். அதை நான் செய்துவிட்டேன். நிருபரும் உள்ளூர் முஸ்லிம் தலைவர்களிடம் சொல்லலாம். உள்ளிருந்து சுத்தி செய்தல் இரண்டாவதாக முக்கியமானது. ஹிந்து உடலில் தீண்டாமை விஷம் இருக்கும்வரை, புறத்தாக்குதல்களுக்கு இடமிருக்கும். தாக்கப்படாதிருக்க வேண்டுமானால், தீண்டாமையை அறவே ஒழித்தல் என்னும் உருவத்தில், உறுதியும் தகர்க்க முடியாதது மான தூய்மை என்னும் சுவரை எழுப்பியாக வேண்டும்.

—'எங் இந்தியா' – 8—8—1936

# 9

# நான்கு கேள்விகள்

பின்வரும் நான்கு கேள்விகளை ஒருவர் கேட்கிறார் :

1. ஏதோ காரணத்திற்காகத் தம் மதத்தினின்றும் விலகி, இஸ்லாம் அல்லது கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஹிந்துக்கள், உண்மையாக மனம் வருந்தித் திரும்பிவர விரும்புகின்றனர். அவர்களை நாம் திரும்ப மதம் மாற்ற வேண்டுமா, இல்லையா? உதாரணமாக, உங்கள் மகன் ஹரிலாலையே எடுத்துக் கொள்ளுங்கள்.

2. தென் இந்தியாவில் லட்சக்கணக்கான ஒதுக்கப்பட்ட வகுப்பினர் ஒரேயடியாகக் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியது உங்களுக்குத் தெரியும். திருவாங்கூர் தர்பாரின் பிரகடனத்திற்கும், ஹரிஜன இயக்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் பொதுஜன ஆதரவிற்கும் பின்னர், அவர்களில் சிலர் தம் மூதாதையரின் மதத்திற்குத் திரும்புவது நல்லதென நினைக்கின்றனர். இவர்களைப்பற்றி நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள் ?

3. லௌகிகமான லாபத்தைக் கருதி ஒரு ஹிந்து பிறிதொரு மதத்தைத் தழுவினர். சில காலத்திற்குப் பின் கண் விழித்து நம்மிடம் மீண்டும் வருகின்றார். நாம் அவரை ஏற்பதா, கூடாதா?

4. கிறிஸ்தவப் பாதிரிமார் ஹிந்துச் சிறுமியர், சிறுவர்களை எடுத்து மதம் மாற்றுகின்றனர். சில இடங்களில் முஸ்லிம்களும் தங்களுடைய அனாதை விடுதிகளை இம்மாதிரிப் பயன்படுத்துகின்றனர். இச்சிறுவர்கள் தாங்களாகவோ, தம் காப்பாளர்களுடனோ சுத்திக்காக எங்களிடம் வந்தால் என்ன செய்வது?

இந்தக் கேள்விகளையும் இவை போன்ற மற்றக் கேள்விகளையும் இதற்கு முன் கேட்டிருக்கின்றனர். இந்தப் பத்திரிகையிலேயே அவற்றிற்குப் பதிலும் அளித்திருக்கிறேன். தனித் தனியாகப் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை. இவை உண்மையில் உள்ளத்தின் மாறுதல்கள் அல்ல. அச்சம், கட்டாயப் பட்டினி, அல்லது பொருள் லாபம் இவை காரணமாக ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதம் போவதை மதம் மாறுதல் என்று சொல்லுவது தவறாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கூட்டமாய் மதம் மாறுவதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இவை செல்லாக் காசுகளாகும். உண்மையான மத மாற்றம் உள்ளத்தில் ஊற்றெடுத்துக் கடவுள் தூண்டுதலின் பேரில் நடக்கிறது, பிறனொருவனின் தூண்டுதலால் அல்ல. மனிதனின் குரலினின்றும் கடவுளின் குரலை எப்போதும் கண்டுபிடித்துவிடலாம். நிருபர் கற்பனை செய்திருக்கும் சந்தர்ப்பங்கள் மத மாற்றங்கள் அல்ல. ஆகையால், திரும்பி வருவோரை நான் தயங்காது, படாடோபமின்றி, நிச்சயமாக சுத்தியில்லாமல் ஹிந்து மதத்திற்குள் சேர்த்துக்கொள்ளுவேன். இம்மாதிரிச் சந்தர்ப்பங்களுக்குச் சுத்தி பொருத்தமில்லை. எனக்கு உலகத்தின் பெரிய மதங்களனைத்தும்

சமமாகும். ஆகவே, ஒருவன் தான் உட்கார்ந்திருந்த கிளையை விட்டுவிட்டு, அதே மரத்தின் மற்றொரு கிளைக்குப் போனதால், தீட்டாகிவிட்டானென நான் நினைப்பதில்லை. முந்திய கிளைக்கே திரும்புவானாயின், அவனை வரவேற்க வேண்டும். தன் குடும்பத்தைவிட்டு விலகியது பாவம் என்று அவனிடம் சொல்லக் கூடாது. அவன் தவறு செய்தவன் என நினைத்தால், மனம் வருந்தித் திரும்புகிறானே, அதுவே அவனைத் தூய்மை செய்வதற்குப் போதிய பிராயச்சித்தமாகும்.

# 10

# நாம் என்ன செய்வது?

இரண்டு வாரங்களுக்குமுன் கோத்ராவில் நடந்த சோக சம்பவத்தைப்பற்றி 'நவஜீவனி'ல் நான் ஒரு குறிப்பு எழுதினேன். அங்கே சதிகாரர் கையில் ஸ்ரீயுத புருஷோத்தம ஷா வீரமாய் உயிர் துறந்தார். நான் எழுதிய கட்டுரைக்கு "கோத்ராவில் ஹிந்து - முஸ்லிம் சண்டை" என்று தலைப்புக் கொடுத்திருந்தேன். ஹிந்துக்கள் பலருக்கு அந்தத் தலைப்பு பிடிக்கவில்லை. திருத்தியமைக்கும்படி கோபமாய் எழுதினார்கள். அவர்களின் கோரிக்கைக்கு நான் இணங்குவது சாத்தியமல்ல. காயமடைந்தவர் ஒருவராயினும் பலராயினும், இரு சமூகங்களுக்கு மிடையே கைகலந்த சண்டை இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு சமூகம் தாக்கி மற்றொன்று தாக்குண்டாலும், இந்த நிகழ்ச்சிகள் இரு சமூகங்களுக்குமிடையே இருக்கும் யுத்தசன்னத்த நிலையின் விளைவென்றால், அதைச் சண்டை என்றுதான் நான் விவரிப்பேன். கோத்ராவிலும், மற்ற இடங்களிலும் இன்று இரு சமூகங்களுக்குமிடையே யுத்த மனப்பான்மை நிலவுகிறது. நகரங்களில் ஒரு விதத்தில் இல்லாவிட்டால் இன்னொரு விதத்தில் சச்சரவு இருந்துகொண்டே இருக்கிறது. சிற்றூர்களில் இந்நோய் பரவாதிருப்பது நம் பாக்கியமேயாகும். கோத்ராவைப்பற்றி எழுதிய நிருபர்கள்கூட இந் நிகழ்ச்சிகள் அங்கே நிலவிய சமூக விரோதத்தினால் நேர்ந்தன என்பதை மறுப்பதாகத் தெரியவில்லை.

அன்பர்கள் தலைப்பைப்பற்றி மட்டும் பேசியிருப்பின், அவர்களுக்குத் தனியாக எழுதுவதுடன் திருப்தி யடைந்திருப்பேன். 'நவஜீவனி'ல் அவ்விஷயமாக எதுவும் எழுதியிருக்கமாட்டேன். ஆனால், பல்வேறு காரணங்களுக்காகக் கோபத்தைக் கக்கியிருக்கும் வேறு கடிதங்களுமிருக்கின்றன. கோத்ராவுக்குப் போய் வந்த ஓர் அகமதாபாத் தொண்டர் பின்வருமாறு எழுதுகிறார்:

"இந்தச் சச்சரவுகளைப்பற்றி நீங்கள் மௌனமாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். கிலாபத் விஷயமாக நீங்கள்

ஏன் மௌனமாக இருக்கவில்லை? ஏன் எங்களை முஸ்லிம்களுடன் சேரும்படித் தூண்டினீர்கள்? உங்கள் அகிம்சைத் தத்துவங்களைப் பற்றி ஏன் மௌனமாக இருப்பதில்லை? இரு சமூகங்களும் ஒருவர் மென்னியை ஒருவர் கௌவிக்கொண்டும், ஹிந்துக்கள் அணுவணுவாக நசுக்கப்பட்டுக்கொண்டும் இருக்கையில், உங்கள் மௌனம் எப்படி நியாயமாகும்? இதில் அகிம்சை எங்கே? இந்த இரண்டு சம்பவங்களைக் கவனியுங்கள் :

" 'என் கடையில் முஸ்லிம்கள் அரிசி மூட்டைகள் வாங்குகின்றனர். பல தடவைகளில் பணம் கொடுப்பதில்லை. என் கிடங்குகளைச் சூறையிட்டு விடுவரென்று அஞ்சிப் பணத்திற்காக நான் வற்புறுத்த முடிவதில்லை. ஆகவே, ஒவ்வொரு மாதமும் ஐம்பது முதல் எழுபத்தைந்து மணங்கு அரிசி கட்டாய தானம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறேன்' என்று ஹிந்துக் கடைக்காரர் ஒருவர் முறையிட்டார்.

" 'வீடுகளுக்கு வந்து எங்கள் கண்முன் எங்கள் பெண்களை முஸ்லிம்கள் அவமானப்படுத்துகின்றனர். நாங்கள் பேசாமல் தான் உட்கார்ந்திருக்க வேண்டும். தடை ஏதாவது சொன்னால், நாங்கள் தீர்ந்தோம். வழக்குத் தொடரக்கூட எங்களுக்குத் தைரியமில்லை' என்று மற்றவர்கள் ஓலமிடுகின்றனர்.

"இவ் விஷயங்களில் என்ன யோசனை சொல்லுவீர்கள்? அகிம்சை எவ்வாறு வேலை செய்யும்? இங்கும் மௌனமாக இருப்பதுதான் நல்லதோ?"

இவற்றிற்கும், இவைபோன்ற பிற வினாக்களுக்கும் இப்பத்திரிகையில் திரும்பத் திரும்பப் பதில் எழுதியிருக்கிறேன். இன்னும் கேட்கப்படுவதால், கூறியது கூறல் என்னும் குற்றமாகுமே என்ற சிந்தனையின்றி, என் கருத்தை மறுமுறையும் விளக்குவதே நலமாகும்.

அகிம்சை, கோழை அல்லது பயங்கொள்ளிகளின் வழியல்ல. உயிரைக் கொடுக்கத் தயாராக இருக்கும் தீரர்களின் வழி அது. கையில் வாளுடன் மடிந்து வீழ்பவன் வீரன்தான். ஆனால், எதிர்த்து சிறு விரலையும் தூக்காது, பின்வாங்காமல் மரணத்தை வரவேற்பவன் அதிலும் பெரிய வீரன். அடிக்கு அஞ்சி அரிசி மூட்டைகளைக் கொடுப்பவர் அகிம்சைவாதி அல்ல. அவருக்கு அகிம்சை என்பது என்னவென்று தெரியாது. அடிக்குப் பயந்து தன் வீட்டுப் பெண்களை அவமானப்பட விடுபவன் ஆண்மையற்றவன். கணவனாக, தகப்பனாக, சகோதரனாக இருக்க அவன் தகுதியற்றவன். இம் மாதிரியான ஜனங்களுக்கு முறையிட உரிமை கிடையாது.

ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உள்ள கொடும் பகைக்கும், இந் நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தமில்லை. ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும், முட்டாள்கள் இருக்குமிடத்தில் ஏமாற்று

பவர்கள் இருப்பார்கள். கோழைகள் இருக்குமிடத்தில் அவர்களை மிரட்டும் துஷ்டர்களும் இருப்பார்கள். சமூக விரோதங்கள் ஆரம்பமாவதற்கு முன்பும் இம்மாதிரிச் சம்பவங்கள் நடந்தது உண்டு. ஆகையால், இன்று ஒரு சமூகத்திற்குப் பாடம் கற்பிப்பது எப்படி, அல்லது அச் சமூகத்தினரை எவ்வழியில் மனிதராக்கலாம் என்பதல்ல பிரச்னை; கோழையை எப்படித் தீரனாக்குவது என்பதே பிரச்னை.

இரு சமூகங்களிலும் உள்ள புத்திசாலிகள் இச் சண்டைகளுக்கு அடிப்படையா யிருக்கும் கோழைத்தனத்தையும் முட்டாள் தனத்தையும் உணருவார்களானால், எளிதில் இவற்றை நிறுத்தலாம். இரு தரப்பினருக்கும் வீரம் வேண்டும்; விவேகம் வேண்டும். இருவருமோ அல்லது ஒருவரோ அதற்காகவே முயன்று விவேகமடைந்தால், அதுதான் அகிம்சை நெறியாகும். இருவரும் சண்டையிட்டுக் கசப்பான அனுபவத்திற்குப் பிறகு அறிவு பெறுதல் பலாத்கார முறையாகும். இரு வழிகளிலும் சுதந்திரத்தை விரும்பும் மனித சமூகத்தில் கோழைகளுக்கு இடமில்லை. சுயராஜ்யம் கோழைகளுக்கு இல்லை.

ஆகவே, அகிம்சையைக் குறைகூறுவதும், மேற்கூறிய சம்பவங்களுக்காக என்மீது கோபப்படுவதும் பயனற்ற வெறும் பேச்சுதான். அகிம்சை முறையில் மரணத்தை வரவேற்றுத் தன்னையோ, அல்லது உற்றாரின் மானத்தையோ காப்பாற்ற முடியாதவன், ஹிம்சிப்பவனைப் பலாத்கார முறையில் எதிர்த்துக் காப்பாற்றலாம், காப்பாற்ற வேண்டும் என 1921-இல் பெட்டியாவில் அகிம்சையின் அர்த்தம் உருக்குலைக்கப்பட்டதிலிருந்து மீண்டும் மீண்டும் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இரண்டும் செய்ய முடியாதவன், பூமிக்கு சுமையே ஆவான். அவன் குடும்பத் தலைவனாயிருக்கத் தகுதியற்றவன். அவன் ஒளிந்து கொள்ள வேண்டும், அல்லது என்றும் ஆற்றலற்றவனாய் வாழ்ந்து, மிரட்டுகின்றவன் சொல் கேட்டுப் புழுப்போல ஊர்ந்து அலையத் தயாராக இருக்கவேண்டும்.

எனக்கு அகிம்சை நெறி ஒன்றுதான் தெரியும். ஹிம்சை நெறி என் இயல்புக்கு முரணானது. ஹிம்சை செய்யும் திறமையைப் போதித்து ஊட்ட எனக்கு விருப்பமில்லை. இன்று சூழ்ந்திருக்கும் கோழைத்தனத்தில் அகிம்சைக்கு இடமில்லை. ஆகையால், நாள் தோறும் நடக்கும் கலகங்களைப்பற்றி நான் அதிகம் பேசக்கூடாது. என் ஆற்றலின்மையை நான் வெளிக்காட்ட விரும்பவில்லை. நாம் விரும்புவது போலவேதான் நடக்கவேண்டும்; விரும்பாதது நடக்கக் கூடாது என்று கடவுள் ஒருபோதும் விதிப்பதில்லை. ஆற்றலற்றிருந்தும், திக்கற்றவருக்குத் தெய்வமே துணை; இறைவனின் பாதத்தில் விழுவோருக்கு மாத்திரமே அவர் உதவி புரிவார் என்னும் நம்பிக்கையில் நான் உயிர் வாழ்கிறேன். இந்த நம்பிக்கையால்தான் கடவுள், மக்களுக்குச் சிபாரிசு செய்யக்கூடிய ஒரு வழியை எனக்குக் காட்டுவார் என்று நம்பு

கிறேன். விரும்பினும் விரும்பாவிடினும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரு நாள் நண்பராக வாழ வேண்டுமென்னும் நம்பிக்கை எனக்கு என்றும் போல் தீவிரமாகவே இருக்கிறது. என்று, எப்படி இது நடக்குமென்று யாருக்கும் தெரியாது. வருங்காலம் முற்றிலும் கடவுள் கையிலிருக்கிறது. ஆனால், சந்தேகக் கடலைத் தாண்ட நம்பிக்கை என்னும் தோணியை அவர் கொடுத்திருக்கிறார். அது மட்டுமே நமக்கு உதவும்.

—'எங் இந்தியா' – 11—10—1928

# 11
# 'இளம் நெஞ்சு'

'இளம் நெஞ்சு' என ஒப்பமிட்டிருக்கும் ஒருவர், பல பொருள்களைப்பற்றி நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார். தமது பெயரை மறைப்பது, தம் கொள்கை விஷயத்தில் உள்ள கோழைத் தனத்தையும் நெஞ்சுத் தைரியம் இன்மையையுமே காட்டுகிறது. அந்தோ! இது நம்மிடையே சர்வ சாதாரணமாகி வருகிறது. சுய ராஜ்யம் விரும்புவோருக்கு இது தகாது. இளைஞர்கள் இந்த மனத் துணிவுக் குறைவைக் களைந்துவிட்டுத் தைரியமாகத் தாழ்மையுடனும் அடக்கத்துடனும் தம் எண்ணங்களை வெளியிட வேண்டும். தம்முடைய புத்திக்கூர்மையிலும் மரியாதையிலும் ஐயமிருந்தாலுங்கூட, தமக்கு இயல்பாகிவரும் மொழியிலேயே தம் கருத்துக்களை வெளியிடலாம். கோழைத்தனத்தில் பிறந்த மௌனம், புத்திக்கூர்மையையும் மரியாதையையும் கற்பிக்காதது மட்டுமல்லாமல், அவர்களை இழி ஒழுக்கத்தில் ஆழ்த்தி விடும்.

இனி 'இளம் நெஞ்சு' தமது கடிதத்தில் கேட்ட கேள்விகளை எடுத்துக்கொள்ளுவோம்.* மூன்றாவது கேள்வி ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றியது. பின்வரும் வாக்கியங்களை அவரது வார்த்தைகளினின்றே எடுத்துக் கொடுத்துள்ளேன் :

"ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு நீங்கள் செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாகிவிட்டன என நினைத்து, நீங்கள் வாய்ப்பூட்டும் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள். எனக்கு இது சரி என்று படவில்லை. ஒற்றுமையைப் பற்றி நீங்கள் மௌனம் சாதிக்கலாம். ஆனால், சமூகக் கலகங்கள் உண்டாகும்போது விவரங்களின் உண்மையை விசாரித்தறிந்து, தீர யோசித்தபின் நியாயப்படி நிகழ்ச்சிகளை வைத்துப் பார்த்து உங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவது கடமையல்லவா? நீங்கள் ஓடி யலைந்து வேலை செய்ய வேண்டிய

* கடிதம் எழுதியவர் கேட்ட முதல் இரண்டு கேள்விகளும் ஹிந்து-முஸ்லிம் பிரச்னை சம்பந்தமற்றவை; எனவே, மூன்றாவது கேள்வி மாத்திரம் மேலே கொடுக்கப் பட்டிருக்கிறது.

தில்லை. ஆனல், இரு கட்சிகளையும் பாரபட்சமின்றி விசாரித்து, உங்கள் பார்வைக்குக் குற்றவாளியாகத் தோன்றுபவரைக் குற்றவாளி எனச் சொல்லுவதால் தேசத்துக்கு என்ன தீங்கு நேர்ந்துவிடும்? கோத்ரா,சூரத் கலகங்கள் சம்பந்தமாக நீங்கள் நடந்துகொண்டது கொஞ்சமும் சரியானதல்ல. கல்லைக் கல்லென்று பல சந்தர்ப்பங்களில் சொல்லிய தங்கள் வீரம் இப்போது எங்கே? கடவுளே! உங்கள் நடத்தையைக் கண்டு உண்மையில் வியப்புறுகிறேன். காரணமின்றித் தங்களையும் தம் உற்ருர் உறவினரையும் கொல்லுபவர்களுடனும் தாக்குபவர்களுடனும் நீங்கள் காட்டும் அகிம்சையை அனுசரிக்க முடியாவிட்டால், தற்காப்புக்காகவாவது சண்டையிட ஹிந்துக்களுக்கு ஆலோசனை கூறும்படி தங்களைத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

இவ் விஷயத்தில் என் நிலைமையை முன்னரே நான் விளக்கியுள்ளேன். இவ் விஷயத்தைப்பற்றி என் கருத்துக்களை வெளியிடாதது அச்சத்தினல் அல்ல. நான் எழுதுவது சந்தர்ப்பத்திற்கு ஏற்றதாயிராதபோதும், நிதானித்து முடிவுகட்டப் போதிய ஆதாரங்கள் இல்லாதபோதும், விஷயம் என் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்போதும் மௌனம் சாதிப்பதே என் கடமை என நினைக்கிறேன். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு நான் சொல்லும் பரிகாரத்தை ஏற்றுக்கொள்ள ஒரு கட்சியும் தயாராயில்லை. ஆகையால், என் அபிப்பிராயத்தைச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பமில்லை.

நடந்த அல்லது இனி நடக்கப்போகும் கலகங்களின் சம்பந்தமாக அபிப்பிராயம் கூறுவதைப்பற்றிய கேள்வி பாக்கியிருக்கிறது. முன்னரே குறிப்பிட்டபடி, விஷயமே எனது எல்லையை மீறியபின் அதன் விளைவுகள் சம்பந்தமாக நான் அபிப்பிராயம் கூற வேண்டிய பேச்சே இல்லை. அத்துடன், என் அபிப்பிராயத்தைக் கூறுமுன் இரு கட்சியினரும் சொல்ல விரும்புவதைக் கேட்டு, சோதித்து முடிவு கட்டாவிடில், எனது நடத்தை ஒழுங்கற்றதென்றும், அதிகப் பிரசங்கித்தனமானது என்றும்கூட நியாயமாகச் சொல்லுவதற்கு இடம் ஏற்படலாம். நான் தவருன முடிவுக்கு வரும் ஆபத்துக்கும் இடம் உண்டு. என்னிடத்தில் பரிகாரம் தயாராக இல்லை என்று தெரியும்போது, நான் எப்படி விசாரணை நடத்த முடியும்? இப் பிரச்னையைப்பற்றி முற்றிலும் கைகழுவி விட்டேன் என்று இதிலிருந்து யாரும் எண்ணிவிட வேண்டாம். தனது சிகிச்சையில் நம்பிக்கையுள்ள வைத்திய நிபுணனைப் போல், நான் உற்ற காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருக்கிறேன். தீராப் பிணி என்று தோன்றும் இச் சமூகப் பிரச்னைக்கு என்னுடையதுதான் ராஜ வைத்தியம் என்று கடைசியில் ஒரு கட்சியோ அல்லது இரு கட்சிகளுமோ, விரும்பினலும் விரும்பாவிட்டாலும், ஒப்புக்கொள்ளும்படி நேரும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

அதுவரையில், சண்டையிட விரும்புகிறவர்கள் நான் என்ன சொன்னலும் சண்டையிடத்தான் செய்வார்கள். என் தூண்டு

தலும் அவர்களுக்கு அவசியமில்லே. நம்மிடை கோழைத்தனம் வேண்டாம் என்பதைப் பன்முறை திரும்பத் திரும்பச் சொல்லி விட்டேன். அகிம்சை, வீரத்தனத்தைக் கோழைத்தனத்தி லிருந்து வளர்க்க முடியாது. ஹிம்சைக்கும் அகிம்சைக்கும் தீரம் இன்றியமையாதது. உண்மையில் ஹிம்சையைவிட அகிம் சைக்கு அது அதிக அவசியம். அகிம்சை தீரத்தின் சிகரமே யன்றி வேறு எதுவும் அல்ல.

—'எங் இந்தியா' - 3—1—1929

# 12

# வகுப்புவாதப் பிரச்னே

[1929 டிசம்பர் மாத இறுதியில் லாகூரில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு பண்டித ஜவாஹர்லால் நேரு தலைமை வகித்தார். காங்கிரசின் லட்சியம் பூரண சுயேச்சையே என்று அப்போதுதான் தீர்மானம் நிறைவேறியது. சிறுபான்மையோருக்குத் திருப்தி அளிக்காத எந்த அரசியல் திட்டமும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது என்று வகுப்புப் பிரச்னே பற்றிய தீர்மானம் கூறியது. அந்தக் கூட்டத்தில் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின. வகுப்புப் பிரச்னே சம்பந்தமாக நிறைவேறிய தீர்மானத்தை யொட்டி காந்திஜி 'எங் இந்தியா'வில் எழுதிய தலையங்கமே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

காங்கிரசில் நிறைவேறிய சமூகப் பிரச்னேத் தீர்மானமும் அதே அளவு முக்கியமானதுதான். சீக்கியருக்காக அது நிறை வேற்றப்பட்டாலும், அடிப்படையான கொள்கையை விளக்க அது மற்றப்படியும் அவசியமே. சுதந்திர இந்தியாவில் வகுப்பு வாரியான பிரதிநிதித்துவம் இருக்க முடியாது. ஆயினும், சிறுபான்மையோரை நிர்ப்பந்தப்படுத்தாத சுதந்திர ஆட்சியாக இருக்க வேண்டுமாயின், அது எல்லாப் பிரிவுகளேயும் திருப்தி செய்வதாக இருக்க வேண்டும். ஆனல், இப்போது காங்கிரஸ் போற்றி வளர்க்க வேண்டியது ஒரு பொது தேசீய உணர்ச்சியே. வகுப்புவாதப் பிரச்னேயைப் போன்ற அத்தியாவசியமான விஷயத்தில் ஜாலமோ, தந்திரமோ, எதுவும் கூடாது. காங்கிர ஸில் நாம் தனித்தனி ஹிந்து, முஸ்லிம், சீக்கியர், பார்சி, கிறிஸ்தவர், யூதர் என்று எண்ணுவதை நிறுத்த வேண்டும். நாம் அவரவருடைய மதங்களில் உறுதியாக நிற்க வேண்டியது அவசியமே. எனினும், காங்கிரசில் நாம் முதலாவதாகவும் கடைசியாகவும் இந்தியர்களாகவே இருக்க வேண்டும். ஒரு நல்ல ஹிந்து அல்லது முஸ்லிம், தேச பக்தராகவும் இருந்து விட்டால், இன்னும் அதிகச் சிறந்த ஹிந்து அல்லது முஸ்லிமாக விளங்குவார். தேச நன்மைக்கும் மத நன்மைக்கும் இடையே, ஒருபோதும் முரண்பாடு இருக்க முடியாது. எங்கேயாவது அப்படியிருந்தால், அது ஒருவரது மதத்தில் அல்லது ஒழுக்க

விதியில் ஏதோ கோளாறு இருப்பதைக் காட்டுகிறது. உண்மை மதத்தின் பொருள் நல்ல எண்ணமும் நல்ல் ஒழுக்கமும்தான். உண்மைத் தேசபக்திக்கும் இதே பொருள்தான் உண்டு. எனவே, ஒரே அர்த்தமுள்ள இரண்டை ஒப்பிடுவது தவருகும். ஆயினும், வகுப்பு வித்தியாசத்தை அடிப்படையாகக்கொண்ட பரிகாரம் எதையும் யோசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்தால், சம்பந்தப் பட்ட கட்சிகளுக்குத் திருப்தியளிக்காததைக் காங்கிரஸ் நிரா கரித்துவிடும் என்பதையே இத் தீர்மானம் காட்டுகிறது. ஆயினும், அம்மாதிரியான நிர்ப்பந்தம் ஏற்படாதிருக்க, இந்தியா பிரிக்க முடியாத ஒரே தேசமாக இருக்க வேண்டுமென விரும்பும் முஸ்லிம்களும், சீக்கியரும் திரள் திரளாகக் காங்கிரஸில் சேர வேண்டும். எந்த அரசாங்கத்திலும் அது ஒரு தனிப்பட்ட பகுதி யினருடைய ஸ்தாபனமாக இருப்பதைக் காட்டிலும், காங்கிரஸ் மகாசபை முஸ்லிம், சீக்கியர், பார்சி, கிறிஸ்தவர் அல்லது யூதர் கள் கைக்குப் போவதையே நான் வரவேற்பேன். தொண்டு உள் ளம் கொண்ட எவரும் காங்கிரஸைக் கைப்பற்றலாம். பரந்த ஜன நாயக வாக்குரிமை காங்கிரசில் இருக்கிறது. ஊழியம் செய்ய விரும்புவோரை என்றும் அது வரவேற்கும். அனைவரும் அதில் சேர்ந்து, வறுமையிலாழ்ந்தோர், பலவீனர், ஒடுக்கப்பட்டோர் யாவருக்கும் பூரண விடுதலையைப் பெறும் மகாவல்லமை பொருந் திய ஓர் ஆயுதமாக அதைச் செய்வோமாக.

—'எங் இந்தியா' – 9—1—1930

# 13

# அது அல்ல

"சுதந்திர இயக்கம் சுயராஜ்யத்துக்காக அல்ல, முஸ் லிம்களுக்கு விரோதமான ஹிந்து ராஜ்யத்துக்காகத்தான். ஆதலால், முஸ்லிம்கள் அதில் சேரக்கூடாது". இவ்விதம் மௌ லானா ஷவுகத் அலி சொன்னதாகக் கூறப்படுகிறது. இதைப் பத் திரிகையில் வாசித்த உடனே, 'இது சரிதானு' என்று கேட்டு மௌலானுவுக்குத் தந்தி கொடுத்தேன். 'அறிக்கை சரிதான்' என்று அன்புடன் பதில் தெரிவித்தார். இயக்கத்திற்கு எதிராக மௌலானு பெரும் குற்றத்தைச் சாட்டியிருக்கிருர். இதை மறுக்க வேண்டியது அவசியம். இயக்கம் வேறு எதற்காக இருப்பினும், அது நிச்சயமாக ஹிந்து ராஜ்யத்திற்காக அல்ல; அது முஸ்லிம்களுக்கு விரோதமானதும் அல்ல. குற்றச்சாட்டுக் குப் பதில் முழுதும் அதிலேயே அடங்கியுள்ளது. இறுதியான ஒத்துழையாமையில் காங்கிரஸ் முதல் அடி எடுத்து வைத்திருக் கிறது. காங்கிரஸ்காரர் ஒருவரும் சட்டசபைக்குப் போக முடியாது; சர்க்கார் உத்தியோகம் வகிக்கவும் முடியாது; அரசாங் கத்தின் தயவை நாடவும், ஏற்கவும் கூடாது. ஹிந்து-முஸ்லிம்

பிரச்னை அரசியல் அதிகாரத்தை, அதாவது உத்தியோகப் பங்கீட்டைச் சுற்றித்தானே இருந்துவருகிறது? விடுதலை கிட்டும் வரையில் அரசியல் அதிகாரத்தைப் பெற யாரும் கிஞ்சித்தும் எண்ணுது இருக்கையில், இயக்கம் எப்படி முஸ்லிம்களுக்கு விரோதமாகவோ அல்லது ஹிந்து ராஜ்யத்தை அமைப்பதற் காகவோ இருக்க முடியும்? ஸ்தல ஸ்தாபனங்களுக்குள் செல்லு வதைக் காங்கிரஸ் இன்னும் தடுக்கவில்லை என்பது உண்மை தான். கல்கத்தாவில் இப்போது நடப்பதைக் காணும்போது, நான் உறுதியுடன் இந்த ஸ்தாபனங்களையும் பகிஷ்கரிக்கச் சொல்லியிருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. இத்தகைய கவர்ச்சிகள் இராமலேயே, காங்கிரஸ் சிறந்து விளங்குகிறது. தற்சமயம் அவை, ஏமாந்தவர்களுக்கும் சுயநலமி களுக்கும் வீசப்பட்ட வெறும் வலைகளாகவே இருக்கின்றன; தேசபக்தர்கள் ஊழியம் செய்ய உதவும் கருவிகளாக இல்லை. ஆனல், இயக்கம் முஸ்லிம்களுக்கு விரோதமானது என்று கூறிய போது, மௌலாஞ ஸ்தல ஸ்தாபனங்களைப் பற்றி நினைக்க வில்லை என்பது எனக்கு உறுதியாகப்படுகிறது. அந்த இயக் கத்தில் ஈடுபடுவோர் அதிகமான தன்னம்பிக்கையும், தீரமும், சுதந்திரத்தில் தலையிடுவோரை எதிர்த்து நிற்கும் ஆற்றலும் உள்ளவராக இருந்துதான் தீரவேண்டும். அதுதான் இயக்கத் தின் தன்மையாகும். பெரும்பான்மையோர் ஹிந்துக்களாக இருப்பதால், நாளடைவில் அவர்கள் முஸ்லிம்களைவிட அதிக வல்லமையுடன் விளங்குவார்கள் என்ற நம்பிக்கையே, நான் யோசித்த மட்டில், குற்றச்சாட்டுக்குக் காரணமாக இருக்கக் கூடும். நான் பழகி, அறிந்த, ஆண்மையுள்ள மௌலாஞவுக்கு இத்தகைய எண்ணம் தகுதியானதல்ல. ஆகையால், முக்கிய மானதாகக் கூறும் இந்தக் கடுமையான குற்றச்சாட்டின் பொருளை மக்களுக்கு அவர் விளக்க வேண்டும்.

முடிவுவரை சரியான மனப்பான்மையுடன் ஹிந்துக்கள் மட்டுமே இயக்கத்தில் சேர்ந்தாலும், அவர்கள் தியாகத்திற் காகப் போர் புரியும், எதிர்க்க முடியாத சக்தியாக, அதாவது அகிம்சைச் சக்தியாக விளங்குவர் என்பது உண்மைதான். எனவே, தனித்திருப்பவர் அனைவரும் கூடிய சீக்கிரத்தில் இயக் கத்தில் சேர வேண்டும் என்பதே இதில் இருந்து வெளியாகி றது. வகுக்கப்பட்டுள்ள வழியில் பிறழாது சென்ருல், மௌலாஞ வும் பிற முஸ்லிம்களும், சீக்கிய, கிறிஸ்தவ, பார்சி, யூதர் முதலி யோரும் இயக்கத்தில் சேர்ந்து கொள்ளுவார்கள் என இப் போதே நான் ஜோசியம் கூறுகிறேன்.

உப்பு வரியை ரத்துச் செய்வதில் எல்லோருக்கும் ஒரே விதமான அக்கறை உண்டு. எல்லோருக்கும் உப்பு தேவை அல்லவா? எல்லோரும் அதை உபயோகிக்கவில்லையா? மனிதரை வேற்றுமைப்படுத்தாத ஒரே ஒரு வரி இதுதான்.

சட்ட மறுப்பு உள்வலிவைப் பெருக்கும் ஒரு நடவடிக்கையாகும். ஆகவே, அது ஜீவ வளர்ச்சியுள்ளது. உப்பு வரி எதிர்ப்பு, எந்த வகுப்பின் நலனையும் பாதிக்காது. அதற்கு மாறாக வெற்றியடைந்தால், அதில் சேர்ந்தவருக்கும் சேராதவருக்கும்கூட அது உதவி அளிக்கும்.

லட்சியத்தை அடைய முற்றிலும் தேசீய முறையான இதைக் கையாளுவதற்குப் பதிலாக, வட்ட மேஜை மகாநாட்டு முறையைப் பாருங்கள். அது இயற்கைக்கு விரோதமானது; செயற்கையானது. அது ஒரு ராஜ தந்திர முறையாகும். சுயநலம் உள்ள கட்சிகள் பரஸ்பரம் முரணான வாதங்களில் ஈடுபடுவர். எல்லாம் வல்ல பிரிட்டிஷார், இந்தியப் பிரிவுகள் அனைத்தையும் ஆட்டிவைத்து ஆதிக்கம் செலுத்துவார்கள். மக்களின் அதிகாரம் பெறாத, வலிமையுடையோரும் மெலிந்தோரும் சேர்ந்த இந்த மகாநாட்டினால் சுயராஜ்யம் கிடைக்கவே கிடைக்காது. இப்போதிருக்கும் நிலைமையில், பிரிட்டிஷ் அதிகாரத்தை உரப்படுத்துவதிலேயே இது வந்து முடியும்.

சட்டமறுப்பாளருக்கு அத்தகைய மகாநாட்டில் வேலையொன்றும் இல்லை. தேசீய பலத்தை உற்பத்தி செய்து, அதைக் காத்தலே அவர்களின் அலுவலாகும். வகுப்புப் பிரிவினைகளில் அவர்களுக்குத் தொடர்பில்லை. வகுப்புவாத மனப்பான்மையுடைய பரிகாரத்தை ஏற்க வலுக்கட்டாயப்படுத்தினால், சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகளுக்கும் திருப்தி அளிக்கக்கூடிய பரிகாரத்தையே ஏற்பதாக அவர்கள் பிரதிக்ஞை செய்துகொண்டுள்ளனர். இத்தகைய ஓர் இயக்கத்தை முஸ்லிம்களுக்கு விரோதமானது, ஹிந்து ராஜ்யத்திற்காக உழைப்பது என்று மௌலானா எப்படிச் சொல்லமுடியும் என்பது எனக்கு விளங்கவில்லை.

இயக்கத்தில் ஈடுபடுவோர் துரதிருஷ்டவசமாக மிகப் பெரும்பாலும் ஹிந்துக்கள் என்பது உண்மையே. மௌலானாவின் பகிஷ்கரிக்கும் கட்டளை இப் போக்குக்கு உதவி அளிப்பதாகவே இருக்கிறது. அப்படி இருந்தும்கூட, இந்தச் சட்டமறுப்பாளர்கள் தங்களுக்காகப் போராடாமல் முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்தவர், பார்சிகள், மற்றும் எதிர்கால சுதந்திர இந்தியாவின் குடிகள் அனைவருக்காகவும் இயக்கத்தை நடத்தினால், யாதொரு அபாயமும் ஏற்பட்டுவிடாது.

சட்டமறுப்பாளர் போதிய செல்வாக்கு அடைந்த பின்னும், அரசியல் திட்டம் தயாரிக்கும் சமயத்தில் யாரும் முட்டுக்கட்டை போடலாம். இதை அறிந்துகொள்ள கற்பனைசக்தி அதிகம் தேவையில்லை. சட்டமறுப்பாளர் ஆங்கிலேயரைத் துரத்தும் போது, அல்லது கோபத்தினாலோ, வெறுப்பினாலோ ஆங்கிலேயர்கள் தாங்களாக வெளியேறும்போது, இயக்கத்தில் சேரா

திருந்தவர்களான முஸ்லிமோ, ஹிந்துவோ மற்றும் யாராயிருப்பினும் சட்டமறுப்பாளர்களை எதிர்க்கும் ஆற்றலற்றிருப்பார்கள். முதலாவதாக, அவர்கள் சமாதான வழியை எப்போதும் பின்பற்றினல் ஒருகாலும் இவ்வாறு செய்யமுடியாது. இரண்டாவதாக, முஸ்லிம்கள் இயக்கத்தில் சேருவதால் தேசத்திற்கும், எல்லாவற்றையும்விட அதிகமாகத் தங்களுக்கும் நன்மை செய்து கொள்ளமுடியும். மூன்ருவதாக, மக்கள் பலாத்காரத்தை உபயோகிக்காவிட்டால், சட்ட மறுப்பினல் ஆங்கிலேயர் மனம் மாறுவது உறுதியாகும். அப்போது, தேசத்தின் பல இன்னல்களுக்கும் காரணம் தாங்களே என்பதை ஆங்கிலேயர்கள் ஒத்துக்கொள்ளுவார்கள். தங்களுக்கு நஷ்டமுண்டானலும், நம் நாட்டின் கஷ்டங்களுக்குப் பரிகாரம் தேட உதவுவதைத் தங்களுடைய கடமையாகவும் கருதுவார்கள். சுதந்திரமும் ஒழுங்கும் அமைந்த அரசாங்கத்தை ஆரம்பிக்கப் பரிபூரண சமத்துவ ஸ்தானம் வகிக்கும் நண்பர்களாக இருந்து, ஆங்கிலேயர்கள் நமக்கு உதவுவார்கள்.

தனித்த முறையில் மௌலானு என்னுடன் கோபம் கொண்டிருப்பதைப்பற்றி நான் அதிகம் கூற வேண்டிய தேவையில்லை. அவருடைய கோபம் தணிந்து, நான் செய்திருப்பதாகக் கற்பனை செய்யும் பல குற்றங்கள் என்னிடத்தில் இல்லை என்பதை அவர் காண்பார். அன்றுதான் அவருக்கு என்மீது மீண்டும் நம்பிக்கை ஏற்படும். ஏனெனில், சிநேகத்தை விட்டது நானல்ல. அவர்தான் என்னை அவரது சட்டைப் பையிலிருந்து * வெளியே எடுத்து, வீசி எறிந்துவிட்டார். இன்னும், 1921-இல் இருந்த அதே சிறிய மனிதன் தான் நான். ஆங்கிலேயர்கள், தங்களுடைய பிரதிநிதிகள் இதற்குள் எவரஸ்ட் சிகரமளவு குவித்திருக்கும் அநியாயங்களுக்குமேல் இன்னும் அதிகமான அநியாயங்களைக் குவிக்கலாம். அப்போதும்கூட, நான் ஒருபோதும் அவர்களுடைய விரோதியாகமாட்டேன். அவ்வாறே முஸ்லிம்களில் ஒருவரோ, பலரோ எனக்கும், என்னைச் சேர்ந்தவர்களுக்கும் என்ன செய்தபோதிலும், நான் ஒரு காலத்திலும் அவர்களுக்குப் பகைவனுகமாட்டேன். மனித குலத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் என் குறைகள் எனக்கு நன்கு தெரியும். எனவே, குறைகள் உள்ள மனித குலத்தைச் சேர்ந்த யாருடனும் நான் கோபம் கொள்ளமாட்டேன். இடையருது செய்யும் தவறுகளுக்காக நான் துன்புறுத்தப்பட விரும்பவில்லை. இம்மாதிரியே குற்றவாளியைத் துன்புறுத்தாது, குற்றங் கண்ட இடத்தில் அதனுடன் போரிடுவதே எனது நெறியாகும்.

—'எங் இந்தியா' - 12—3—1930.

---

*மகாத்மா காந்திக்கும் தமக்கும் உள்ள தீவிர நட்பைக் குறிப்பிடுவதற்காக, 'காந்திஜியை நான் என் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டிருக்கிறேன்' என்று அக்காலத்தில் மௌலானு ஷவுகத் அலி கூறுவது வழக்கம். அதையே காந்திஜி மேலே குறிப்பிட்டிருக்கிருர்.

பகுதி பத்து

# சமூகக் கலவரங்கள்

## 1

## கான்பூரும் அதன் படிப்பினையும்

[மறக்க முடியாத காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களில், 1931 மார்ச் 29-ஆம் தேதி கராச்சியில் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் நடந்த காங்கிரஸ் கூட்டமும் ஒன்றாகும். புரட்சி வீரரான பகத் சிங்கும் அவரது சகாக்களும் தூக்குமேடையில் மாண்டதால், தேசம் முழுவதும் சோகத்தில் ஆழ்ந்திருந்தபோது கராச்சி காங்கிரஸ் கூடியது. போதாக்குறைக்கு, அதே சமயம் கான்பூரில் மூண்ட ஹிந்து-முஸ்லிம் கலகத்தை அடக்கிச் சமாதானம் நிலவும்படி செய்வதற்காக முயன்ற பிரபல காங்கிரஸ் தலைவரான கணேச சங்கர் வித்தியார்த்தி சமூக வெறியர்களால் தாக்கிக் கொல்லப்பட்டார். காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு வந்த காந்திஜியைக் கண்டதும் இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு, காந்திஜியைத் திரும்பிப் போகும்படி கூக்குரலிட்டார்கள். ''பகத் சிங் நீடூழி வாழ்க'', ''காந்திஜி-அரசாங்கத்தின் சமாதான ஒப்பந்தம் பகத் சிங்கைத் தூக்குமேடைக்கு அனுப்பிவிட்டது'' என்றெல்லாம் கோஷங்கள் வானளாவின. தம்மைக் கண்டித்து கோஷம் செய்த இளைஞர்கள் மீது காந்திஜி கோபம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, அவர்களுக்கு நிலைமையை விளக்கி அவர்களைச் சமாதானப்படுத்தினர். கான்பூரில் நிகழ்ந்த வகுப்புக் கலகக் கொடுமைகளைப் பற்றி கராச்சி காங்கிரஸில் காந்திஜி பேசிய விவரங்களே கீழே கொடுக்கப்பட்டுள்ளன:]

கொலைக்களமாயிருந்த கான்பூரில் நிகழ்ந்த சோக சம்பவங்கள், ஒருவருக்கு விரோதமாக ஒருவர் காட்டி வந்த பலாத்காரத்தின் விளைவே. ஓரளவு அகிம்சையைப் பின்பற்ற நமக்குத் திறமை யுண்டெனக் காட்டியிருந்தும், நம் உள்ளங்களில் பலாத்காரத்தைப் பேணி, நிர்ப்பந்தப்படுத்தும் குற்றத்திற்கு ஆளாகிவிட்டோம். பகத் சிங்கின் உயிர்த் தியாகம் கான்பூர் ஹிந்துக்களை வெறியர்களாக்கியது எனப் பத்திரிகைகள் கூறுகின்றன. பகத் சிங்குக்கு மரியாதையாகக் கடைகளை மூடுவதற்கு மறுத்த முஸ்லிம்களை, ஹிந்துக்கள் பயமுறுத்தத் தொடங்கினர்களாம். அதன் விளைவு உங்களுக்குத் தெரியும். இன்று கான்பூரில் நடப்பவற்றைப் பகத் சிங்கின் ஆவி கவனிக்குமாயின், அது ஆழ்ந்த அவமானமும் வெட்கமும் அடையும் என்பது நிச்சயம். ஏனெனில், அவர் கௌரவமும் யோக்கியப் பொறுப்பும் வாய்ந்த இளைஞர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நாம் எவ்வளவு நாசம் செய்திருக்கிறேம்! அவமான மடைந்த பெண்கள்! கொல்லப்

பட்ட குழந்தைகள்! அவை முஸ்லிம் குழந்தைகள் தானே என்று ஹிந்து எவரும் தம்மைத் தேற்றிக்கொள்ள வேண்டாம். கொலையுண்டவை ஹிந்துக் குழந்தைகள் தானே என்று முஸ்லிம் எவரும் மகிழ்ச்சி அடையவேண்டாம். அவர்கள் எம் மதத்தினரென எனக்குத் தெரியாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும், இரு சாராரும் மதியிழந்தனர் என்பதை நாம் ஒத்துக்கொள்ளுவோம். அவர்கள் அனைவரும் இந் நில மக்கள்; ஒரே தாய் நாட்டின் குழந்தைகள் ஆவர்.

இக் கோரச் செயல்களைப்பற்றி மிக மிக வெட்கம் அடைந்தேன். இத்தகைய சம்பவங்களை இனி சகிக்கமுடியாது என்ற நிலைமை எனக்கு எச்சமயத்திலும் ஏற்படலாம் என்பதை, என் குரல் எட்டும்வரை தெரிவிக்க விரும்புகிறேன். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை யொருவர் கொலை செய்துகொண்டு வருகையில், நாங்கள் அகிம்சாவாதிகளாகவே இருந்து வருகிறோமென நாம் எவ்வாறு தொடர்ந்து கூறமுடியும்? இத் தீச் செயல் பரவி வருகையில், நாம் ஒரு தேசீய இனமாக அகிம்சையைப் பின்பற்றுகிறோம் என்னும் நம்பிக்கையைச் சத்திய உபாசகனாகிய நான் எப்படித் தழுவிக்கொண்டிருக்க முடியும்? அவ்வாறு செய்தால், எனக்கும் என்னைப் படைத்தவருக்கும் நான் ஒரு பொய்யனாவேன். சுற்றிலும் படுகொலைகள் நடந்துகொண்டிருக்கையில், நான் கவலையற்று வாழச் சகியேன். வாழ்க்கை சகிக்க முடியாதென உணர்ந்ததுடன், ரத்த வெறிகொண்ட இக் கலகங்களைக் கண்ணுறுவதைவிட, உபவாசம் இருந்து உயிரை மாய்த்துக்கொள்ள எனக்குத் தைரியம் இருக்குமென நம்புகிறேன். பயபக்தியுடன் விரும்பிக் கொடுத்த உறுதிமொழிகளை மறுப்பதை நான் சகிப்பது முடியாத காரியம் என்பதை இதற்குள் நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள். வியாபாரிகளும் பிறரும் தங்கள் வாக்கை மீறுவதையும், காங்கிரஸ்காரர் என்று சொல்லிக்கொள்ளுபவர், காங்கிரஸ் கொள்கையின் மீது ஆணையிடுபவர் அதை உள்ளத்திலோ, பகிரங்கமாகவோ மறுப்பதையும் பார்ப்பதைவிட நான் இறப்பதையே விரும்புகிறேன். இம் முரண்பாட்டை நிம்மதியாகப் பார்த்துக்கொண்டிருப்பேனே யாகில், உலகத்தையும் என்னைப் படைத்தவரையும் எந்த முகங்கொண்டு நான் பார்ப்பேன்? பொய்யும், புரட்டும், வஞ்சகமுமான வாழ்க்கையையே நடத்தினேனென்று அவர் எனக்குச் சொல்லுவார். என்னையும் உலகத்தையும் நான் வஞ்சிக்கக் கூடாது. அகிம்சையினாலும், சத்தியத்தினாலும் சுயராஜ்யம் பெறுவதற்கே என் வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிஷத்தையும் அர்ப்பணம் செய்திருக்கிறேன்.

இத்தனை வருடங்களாக அவ்வகை நிகழ்ச்சிகள் நடந்துகொண்டே வருகின்றன; அவற்றை நிறுத்த நான் ஒன்றும் செய்யவில்லை என நீங்கள் சொல்லுவீர்கள். என்னைப் பொறுத்தவரை, தவங்கள் உணர்ச்சியற்ற யந்திரச் செயல்கள் அல்ல;

உள்ளக் குரலுக்குக் கீழ்ப்படிந்து செய்யப்படுபவை அவை. இந்த நாட்களில் என் உள்ளத்தில் நிகழ்ந்ததை நான் உங்களிடம் சொல்லுகிறேன். நான் அனுவசியமாகக் கலங்குவதாலோ, உண்மைக்கு ஏற்றவாறு நடக்க எனக்குத் தைரியமில்லாததாலோ, நான் எதிர்பார்க்கும் நெருக்கடி வராதிருக்கலாம். எனினும், என்னைப் படைத்தவரிடம் நான் உண்மையாக நடந்துகொள்ள வேண்டும் அல்லவா? வாழ்க்கையை இனித் தாங்க முடியாது என நான் உணர்ந்த உடனேயே, என்னைக் குறையுள்ளவனாகக் காணமாட்டீர்கள் என்று நம்புகிறேன். எதிராளியின் மனத்தை மாற்றும் திறமையிழந்து, உண்மை நெறி காண ஒருவேளை தடையாக இருக்கும் இவ்வுடலை நானே அர்ப்பணஞ் செய்வதைக் காட்டிலும் வேறு என்ன சிறந்த ஈடு செய்யமுடியும்?

குற்றத்தைப் பங்கீடு செய்ய இப்போது நான் முயற்சிக்க வேண்டாம். நாம் ஹிந்துக்கள் அல்லது முஸ்லிம்கள் என்ற உண்மையை மறந்துவிடுவோமாக. நாம் இந்தியர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவோம். எனவே, கான்பூருக்கு நேர்ந்துள்ள அவமானம் இந்தியாவுக்கு நேர்ந்துள்ள அவமானமேயாகும். ஹிந்துக்களின் மீதுதான் அதிகக் குற்றம் என்று பத்திரிகைகள் கூறுகின்றன. எதற்காக இந்தப் படுகொலைகள் நடந்தன? நாம் எப்படி அவ்வளவு தூரம் மதியிழந்து வெறி பிடித்தவர்களானேம்?

கணேச சங்கர் வித்தியார்த்தி இருக்குமிடம் தெரியவில்லை அல்லது கொல்லப்பட்டுவிட்டார் என்ற தகவலை உங்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் கூறுகிறேன். உண்மையான, தன்னலமற்ற அத்தகைய ஒரு தோழரின் மரணத்தைக் குறித்து யார்தான் வருந்தாமல் இருப்பார்? இதை மற்றொரு விதத்திலும் நோக்குவதற்கு இடம் இருக்கிறது. யாருக்கும் தெரியாத ஏராளமான ஏழை ஹிந்துக்கள் கொல்லப்படுவதைக் காட்டிலும், கணேச சங்கர் வித்தியார்த்தியைப் போன்ற ஒரு தலைவர் கொல்லப்படுவது நன்மை அல்லவா? திக்கற்ற ஏராளமான ஏழை முஸ்லிம்கள் கொல்லப்படுவதைவிட, அமைதிக்காக அல்லது ஒற்றுமைக்காக டாக்டர் அன்சாரியின் மரணம் அதிகமாக வரவேற்கத்தக்கது அல்லவா? ஏனெனில், டாக்டர் அன்சாரியின் உடலில் பாய்ச்சப்படும் கத்தி, நம் எல்லோருடைய உடல்களிலும் பாய்ச்சப்படும் கத்தி போலாகும்.

கணேச சங்கர் வித்தியார்த்தி, அணுவளவும் வகுப்புவாத மனப்பான்மை அற்றவராக இருந்தார். அவர் ஒரு ஸ்தாபனமாகவே திகழ்ந்தார். அவர் கான்பூரின் தலைசிறந்த ஊழியராகவும் விளங்கினர். எனவே, அப்படிப்பட்டவர் சமூக அமைதிக்காக உயிரைத் தியாகம் செய்தது அதிருஷ்டவசமேயாகும். அவரது மகத்தான உதாரணம், நம் எல்லோருக்கும் உத்வேகமும் உற்சாகமும் அளிக்குமாக; அது நம் எல்லோரையும் நமது கடமையைச் செய்யும்படி தட்டி எழுப்புமாக. இவ்விஷயத்தில்

நீங்கள் கவலையுடனும் அக்கறையுடனும் கவனம் செலுத்தி, தொல்லையான இந்தப் பிரச்னை தீருவதற்கு உதவி புரியும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கான்பூர் அவமானம் நமக்கு ஒரு படிப்பினையாக அமையுமாக. அதன் பலனாக, ஆடவர்களும் பெண்களுமாக முந்நூறு பேரின் மரணம் நிரந்தரமான அமைதியைப் பெறுவதற்காகக் கொடுக்கும் அதிக விலையாகாது என்பதை நாம் உணரலாம்.

—'எங் இந்தியா' – 2—4—1931

## 2

# கணேச சங்கர் வித்தியார்த்தி

கணேச சங்கர் வித்தியார்த்தியின் மரணம் நாம் அனைவரும் பொறாமைப்பட வேண்டியதாகும். இறுதியில் இரு சமூகங்களையும் அவரது ரத்தம்தான் பிணைக்கவல்லது. ஒப்பந்தங்கள் எதுவும் உள்ளங்களை ஒன்று சேர்த்துவிடா. ஆனால், கணேச சங்கர் வித்தியார்த்தி காட்டியதைப் போன்ற தீரம், கடைசியில் கல்லினும் கல்லான நெஞ்சையும் கரைக்கும்; கரைத்து ஒன்றாக்கும். ஆனால், விஷம் வெகுதூரம் பரவிவிட்டது. எனவே, இத்தகைய பெருமையும், தன்னலத் தியாகமும், வீரமும் நிறைந்த கணேச சங்கர் வித்தியார்த்தியின் ரத்தம்கூட நம்மை இவ்விஷத்திலிருந்து கழுவிச் சுத்தம் செய்வதற்குப் போதுமானதாக இராமலிருக்கலாம். சந்தர்ப்பம் மறுபடியும் வந்தால் இந்த மேலான உதாரணம் நம் அனைவரையும் செயலாற்றத் தூண்டட்டும். கணவனைப் பறிகொடுத்துள்ள விதவைக்கும் அவள் குழந்தைக்கும் நான் ஆறுதல் கூறப் போவதில்லை. அவர்கள் கணேச சங்கருக்குத் தகுதியுடையவர்களானதற்காக அவர்களுக்கு என் வாழ்த்துக்களை அனுப்புகின்றேன். அவர் இறந்து போகவில்லை. ஊனுடலில் பார்த்தும் அவரை நாம் அறியாதிருந்ததை விட அதிக உண்மையாக இன்று அவர் உயிர் வாழ்கிறார்.

—'எங் இந்தியா' - 9—4—1931

## 3

# காங்கிரஸில் சேருங்கள்

கராச்சியில் நடந்த உலேமா மகாநாட்டில், உலேமாக்கள் காங்கிரஸில் சேர வேண்டிய அவசியத்தைக் குறித்துக் காந்திஜி பேசியதாவது:

காங்கிரஸ் ஓர் ஹிந்து ஸ்தாபனம் என்று சொல்லுவது சரியில்லை. முஸ்லிம்கள் அதில் சேர விரும்பாவிட்டால் காங்கிரஸ் என்ன செய்வது? காங்கிரஸ், வயதுவந்தவரின் வாக்குரிமையை

அடிப்படையாகக் கொண்டது. வயது வந்த எந்த ஹிந்துவும் முஸ்லிமும் அதில் சேரலாம். அதில் எந்த வகுப்பும் விலக்கப் படவில்லை. காங்கிரஸ் அங்கத்தினராக உள்ள முஸ்லிம் நண்பர் களைக் கேளுங்கள். அதில் சேர்ந்ததால் தாங்கள் வருந்தும்படி நேரவில்லை என்பதை அவர்கள் உங்களுக்குக் கூறுவார்கள். ஆகையால், காங்கிரஸ் ஓர் ஹிந்து ஸ்தாபனமென்று ஐயமுற வேண்டாமென உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் காங்கிரஸில் சேருங்கள்; அதைப் பொறுப் பேற்று நடத்துங்கள். ஆனால், யாரும் அப் பொறுப்பைப் பலாத் காரமாகக் கைப்பற்ற முடியாது. மனப்பூர்வமான தொண்டினால் மட்டுமே அதை அடைய முடியும். காங்கிரசை ஆரம்பித்ததி லிருந்து அதற்கு யார் பணி செய்தனரோ, அவர்களே அதை நடத்தியும் வந்தனர். இருப்பினும், காங்கிரஸ் அவர்களுக்கு மட்டும் சொந்தமல்ல; அவர்களுக்காக மட்டும் அது இருக்க வில்லை. அது அனைவருக்கும் சொந்தம்; அனைவருக்காகவும் அது இருக்கிறது. அது சுயராஜ்ய அரசாங்கத்தின் கரு. பிரிட்டிஷ் அரசாங்கத்தைவிட அது உயர்ந்த புகழ் படைத்தது. காங்கிரஸ் தலைவர் வைஸ்ராயைவிடப் பெரியவர்; பணம் படைத் தோரும் உயர் நிலையில் உள்ளவர்களுமே வைஸ்ராயை அறிவர். வைஸ்ராயின் மாளிகைக்குப் போக மோட்டார் வண்டி தேவை. ஆனால், காங்கிரஸ் தலைவரை (தற்சமயம் சர்தார் வல்லபாய்) ஏழையிலும் ஏழை அறிவான். நடந்தே அவரைக் காணப் போக லாம். சர்தார் தேச சேவைக்காகத் தம்மைத் தத்தம் செய்திருக் கிறார். நலிந்தோர்க்கு உழைப்பவர், கடவுளின் பார்வையில் பெரியவர். சுயராஜ்யத்தில் உங்களுக்கு அதிகாரம் வேண்டுமென் றால், காங்கிரஸில் திரள் திரளாகச் சேர்ந்து அதன் பொறுப்பை ஏற்று நடத்த உங்களை அழைக்கிறேன். தேசத்தில் அதிக வலி மையுள்ள ஸ்தாபனம் அதுதான்; அதில் சேருங்கள், உங்களை நாங்கள் வரவேற்போம்.

—'எங் இந்தியா' - 17—4—1931

## 4

# ஏன் முடிவு செய்ய இயலவில்லை?

[பம்பாயில் நடந்த அ. இ. கா. க. கூட்டத்தில் காந்திஜி லண்டன் வட்ட மேஜை மாநாட்டுக்குப் போவதைப்பற்றிக் குறிப்பிடுகையில், நாட்டில் நிலவிய அமைதியற்ற சமூகச் சூழ்நிலையைப்பற்றி உணர்ச்சி ததும்பப் பேசி னார். அவ்விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:]

கப்பலில் ஏறும்வரை நான் புறப்படுகிறேன் என்பதை நம்ப வேண்டாம். இன்றைக்கும் பதினைந்தாம் தேதிக்கும் இடையில்

என்ன நடக்குமென யாருக்குத் தெரியும்? நமது தேசம் மிகப் பரந்தது. நாட்டில் பலவித வதந்திகள் உலவுகின்றன. அவற்றில் எதுவும் பெரு நெருப்பை மூட்டிவிடலாம். ஜின்னா ஹாலில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இவை என்னை நடுங்கச் செய்கின்றன. இவை எனக்கு நரம்புத் தளர்வையும் கூட உண்டு பண்ணலாம். தளர்ந்து சக்தியிழந்த ஒருவனை மகாநாட்டுக்கு அனுப்ப உங்களுக்கு விருப்பமா? என் முடிவு லார்டு இர்வினை அதிரச் செய்யும். எனக்கு மதிகலங்கி விட்டதோ என்றுகூட அவர் காரணத்துடன் எண்ணலாம். அவரைக் கோபமூட்டும் ஆபத்திற்கு உள்ளானபோதிலும், இன்றைக்கும் பதினைந்தாம் தேதிக்கும் இடையில் என் மூளையைக் குழப்பத் தக்கதாக ஏதாவது நேரிடுமாயின் நான் போகாமலேயே இருந்துவிடுவேன்.


ஹிந்துவை நேசிப்பது போலவே, நான் முஸ்லிமையும் நேசிக்கிறேன். என் இதயம் ஹிந்துக்களுக்காகத் துடிப்பது போலவே, முஸ்லிம்களுக்காகவும் துடிக்கும். என்னால் அதைக் கிழித்துக்காட்ட முடியுமானால், நீங்கள் அங்கே ஹிந்துக்களுக்காக ஒன்று, முஸ்லிம்களுக்காக ஒன்று, பிறருக்காக மற்றொன்று என்று இப்படியே தனித்தனியாக ஒதுக்கிய அறைகளைக் காண முடியாது. ஆகையால், ஒரு முஸ்லிம் ஹிந்துவைத் தாக்கினாலும், ஒரு ஹிந்து முஸ்லிமைத் தாக்கினாலும் அதற்கு நானே பொறுப்பென எண்ணுகிறேன். இதுவரையில் நான் சகித்துவந்தேன். மனிதனின் சகிப்புத் தன்மைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? சத்திய விரதம் எடுத்தவன் என்கிற முறையில் என் உள்ளத்தைத் திறந்து பேசுகிறேன். எந்த மனிதனும் தன் உணர்ச்சி முழுவதையும் வெளியிட முடியாது. ஆனால், நான் ஒன்றையும் ஒளிக்கவில்லை. கடும் புயலின் குமுறல் கேட்கிறது. அதன் முன் நான் நடுங்கினேனானால், நீங்கள் வியப்புற வேண்டாம். அச் சமயத்தில் என் சக்தி முழுவதையும் இழந்து நான் செயலற்றவனாகலாம். உங்களது தனிப் பிரதிநிதியாக என்னைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். எனது குற்றங்குறைகளுடன் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆண்மை குன்றிய என் உண்மை உருவத்தை உங்களுக்குக் காட்டிவிட்டேன். ஒரு வேளை, நான் இந்தப் பலவீனத்தைச் சமாளித்து வெற்றி பெறலாம். என்னுடைய பயங்களையும் ஆற்றலின்மையையும் போக்கடிக்கக் கூடிய சக்தி ஒரு தனி முஸ்லிமுக்கு இருக்கலாம்.

[இக் கட்டத்தில் காந்திஜி உணர்ச்சி பொங்க, மனமுடைந்து விம்மி இரண்டொரு நிமிஷங்கள் ஸ்தம்பித்துப் போய்விட்டார். ஆனால், சீக்கிரம் தமது நிலையைச் சரிப்படுத்திக்கொண்டு, தாம் ஹிந்தியில் சொன்னவற்றையே சுருக்கமாக ஆங்கிலத்தில் சொல்லலானார்:]

என் உணர்ச்சிகளை உங்கள் முன் கொட்டுவதற்காக நான் இங்கு வரவில்லை. ஆனால், பேசப் பேசப் பொங்கி எழுந்த உணர்ச்சிகளை என்னால் அடக்க முடியவில்லை. நெஞ்சகத்தே கொந்தளிப்பு இருப்பினும், வெளியில் புன்னகை புரிய என் உள்



ல்லைப்புற யாத்திரையின்போது கபார் கானுடனும் அவர் சகோதரர் டாக்டர் கான்சாகிபுடனும் காந்திஜி—1938, மே.



வடமேற்கு எல்லைப்புறத்தில் உத்மன்ஜாயில் காந்திஜியும் அப்துல் கபார் காநீ
—1938, மே.

ளத்தைப் பழக்கி வந்திருக்கிறேன். இருப்பினும், புயல் அதிகரித்து உச்சநிலே அடைந்ததும், தளர்ச்சியடைந்துவிட்டேன். சக்தி எல்லாம் சிதறுண்டு போயிற்று. அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் எல்லாம் சரியாக இருக்கலாம். சமயம் வரும்பொழுது நான் தயாரின்றி இருப்பேனே என்கிற ஐயம் என் நெஞ்சத்தில் பதுங்கிக் கிடப்பதால், நான் போக முடியாமற் போய்விடலாம்.

ஜின்ன ஹாலில் அன்று நடந்த கேவலமான சம்பவங்களே நினைத்துப் பாருங்கள். யாருக்கும் குற்றம் இழைக்காதவர்களின் மீது காரணமின்றிப் பாய்ந்து அடித்தார்கள். விரும்பினல் பத்துப் பேருக்குப் பதில் சொல்லக் கூடிய ஒருவர், எதிர்த்து அடிக்காமல் அன்று மாலே பட்ட படுகாயங்களால் ரத்தப் பிரவாகத்தில் கிடந்ததைப் பார்த்தேன். பரிதாபகரமான அந்த நிகழ்ச்சிகளே அப்படியே வருணித்தார்கள். அது என்னுள் அம்புபோல் பாய்ந்தது. அது மட்டுமில்லே. அதனடியில் மறைந்து கிடப்பதைத் தெரிந்துகொள்ள முயன்று ஆராய்ந்துகொண்டிருக்கிறேன். இச் சம்பவங்களுக்கு ஓரளவு நான்தான் பொறுப்பாளி என்று சொல்லிக்கொள்ளுவேன்.

*1919*-இல் தேசத்தில் ஒரு பெரும் விழிப்பை உண்டுபண்ணக் கடவுள் என்னே உபயோகித்தார். மக்களுக்கு ஆத்திரம் பொங்கியது. அது இயல்பே. ஆனல், பொது லட்சியத்திற்காகப் போராடும் இந்தியர்களாகத் தம்மை அனேவரும் கருதியதால், உள்நாட்டுக் கலகம் ஏற்படவில்லே. அது ஒரு நிமிஷக் கனவாகவே இருந்து, புகைபோல் மறைந்துவிட்டது. இப்போது நாம் அனேவரும் ஒருவரை யொருவர் எதிர்த்து யுத்த சன்னத்தர்களாகி விட்டோம். இது சுயராஜ்யத்திற்காகப் பாடுபட என்னேத் தகுதியற்றவனுக்குகிறது. சூழ்நிலே மற்றப்படி சரியாக இருந்தாலும், எனது மூளேயைக் குழப்பி என்னே முற்றிலும் ஆற்றலற்றவனுகச் செய்யும் சம்பவங்கள் எவையேனும் நடக்கலாம். நிச்சயமாக அப்போது அவ்வளவு தளர்ந்து போன ஒருவனே லண்டனுக்கு அனுப்ப நீங்கள் விரும்ப மாட்டீர்கள். நம்பிக்கையுள்ள ஒருவரை அனுப்ப வேண்டும். நானே வேகமாக நம்பிக்கை யிழந்து வருகிறேன். சிறிது நேரத்திற்கு முன் நீங்கள் கண்ட தளர்ச்சிக்கு அதுதான் காரணம்.

—'எங் இந்தியா' – 13—8—1931

# 5

# நமது தோல்வி

**கா**ங்கிரஸின் தலேநகராகிய அலகாபாத்தில் வகுப்புக் கலகங்கள் மூண்டதும், அவற்றை அடக்கப் போலீஸையும் ராணுவத்

தையும் உதவிக்கு அழைக்க வேண்டிய அவசியம் நேர்ந்ததும், பிரிட்டிஷ் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளக் காங்கிரஸ் இன்னும் தகுதி பெறவில்லை என்பதைக் காட்டுகின்றன. எவ்வளவு கசப்பாக இருப்பினும், இவ் வெட்டவெளிச்சமான உண்மையை உணர்ந்து அதற்கு ஏற்றவாறு நடப்பதுதான் நல்லது.

தனது பதிவு ஏட்டிலுள்ள சிலருக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்குமே தான் பிரதிநிதி ஸ்தாபனம் என்று காங்கிரஸ் உரிமை பாராட்டுகிறது. தனக்கு விரோதமாக இருப்பவர்களுக்கும், முடிந்தால் தன்னை நசுக்கிவிட விரும்புகின்றவர்களுக்குங்கூட, காங்கிரஸ் பிரதிநிதியாக இருக்க வேண்டும். அந் நிலைமையை நாம் அடையும் வரையில், பிரிட்டிஷ் அரசாங்கத்தை அகற்றிச் சுதந்திர தேசமாக வேலை செய்ய நாம் தகுதியற்றவர்களாவோம்.

பிரிட்டிஷ் ஆட்சியை அகற்ற பலாத்காரத்தையோ, அல்லது அகிம்சையையோ உபயோகிக்க நினைப்பினும், இக் கூற்று பொருந்தவே செய்யும்.

அநேகமாக இம் மொழிகள் அச்சில் வெளிவருமுன், அலகாபாத்திலும் மற்ற இடங்களிலும் அமைதி நிலவலாம். ஆனால், பிரிட்டிஷ் அதிகாரத்தை அறவே அகற்றி, அந்த இடத்தில் காங்கிரஸ் ஒரு ஸ்தாபனமாக இருந்து வேலை செய்யத் தகுதியுடையதா என்ற ஆராய்ச்சிக்கு இது உதவாது.

காங்கிரஸ் இச் சமயத்தில் அவ் வேலையைச் செய்யும் பக்குவத்தை அடையவில்லை என்பதை எந்தக் காங்கிரஸ்காரரும் சந்தேகிக்க மாட்டார். அத் திறமையை எய்தியிருந்தால், அது காத்துக் கொண்டிருக்காது. ஆனால், அதிக வேகமாக அத்தகைய ஸ்தாபனமாகக் காங்கிரஸ் மாறிக்கொண்டுவருகிறது என்பதை ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் நம்புகிறார். ஹரிபுராவில் கிடைத்த சிறந்த வெற்றியே அதற்கு உறுதியான ஆதாரமாகும்.

இக் கலகங்களும், நான் காட்டக் கூடிய வேறு சில காரியங்களும் நம்மை நிதானிக்கும்படி செய்து, காங்கிரஸ் உண்மையாகவே மேன் மேலும் வலிமை பெற்று வருகிறதா என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளும்படி செய்ய வேண்டும். காங்கிரஸ் மேன்மேலும் பலம் பெற்று வருகிறது என்று சொன்ன குற்றத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். அதிகமாக அவசரப்பட்டு நான் அவ்விதம் கூறிவிட்டேனே?

எவ்வளவு குறை இருப்பினும், அகிம்சை முறையை ஏற்று, அதன்படி நடந்ததுதான் காங்கிரஸின் அற்புத வளர்ச்சிக்குக் காரணம் என்பது என் உறுதியான கருத்தாகும். காங்கிரஸ் அகிம்சையின் தன்மையைப் பற்றிச் சிந்திக்கும் சமயம் வந்துவிட்டது. அது பலவீனமான, செயலற்றோரின் அகிம்சையா? ஆண்மை நிறைந்த சக்தியாளரின் அகிம்சையா? முதலாவதெனில், அது நம்மை நமது லட்சியத்தினிடம் நடத்திச் செல்லாது. அதிக

நாள் அதை அனுஷ்டித்தோமானால், நம்மை அது சுய ஆட்சிக்குத் தகுதியற்றவர்களாகக்கூட ஆக்கிவிடும். பலவீனரும், செயலற்றோரும் வேறொன்றும் செய்யமுடியாததால் செய்கையில் அகிம்சையைப் பின்பற்றுகிறார்கள்; ஆனால், உண்மையில் அவர்கள் நெஞ்சில் பலாத்காரம் குடிகொண்டிருக்கிறது. சந்தர்ப்பம் கிடைத்தால் அது வெளிவந்துவிடும்! தனித்தனியாகவும், எல்லோரும் சேர்ந்தும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் தங்களுடைய அகிம்சையின் தன்மையைச் சோதிப்பது அவசியம். இது மெய்யான வலிமையினின்றும் தோன்றாவிடில், அதை அவ்விதமே பிரகடனம் செய்து, காங்கிரஸின் நடத்தையில் அவசியமான மாறுதல்கள் செய்வதே அதற்குச் சிறப்பும் நேர்மையுமாகும்.

பதினேழு வருடங்களாக நாம் அகிம்சை முறையை அனுசரித்துவந்திருக்கிறோம். இதற்குள், போலீஸும் ராணுவமும் அவசியமாயிருக்கிற சந்தர்ப்பங்களில், அவர்களுக்குப் பதிலாக வேலை செய்யக்கூடிய சில ஆயிரங்களல்ல, லட்சக்கணக்கான தொண்டர்கள் அடங்கிய அகிம்சைப் படை ஒன்றைக் காங்கிரஸ் தயாரித்திருக்க வேண்டும். சமாதானம் நிறுவும் முயற்சியில் ஒரு பசுபதி நாத குப்தா உயிர் நீத்தார்.* அந்த ஸ்தானத்தில் நாம் நூற்றுக் கணக்கான பசுபதிநாத குப்தாக்களைப் பலி கொடுக்கத் தயாராக இருந்திருக்க வேண்டும். ஆயுதந்தாங்கியவர் போலல்லாமல், அகிம்சைப் படை சச்சரவுக் காலத்தில் மட்டுமேயன்றி சமாதான காலத்திலும் பணியாற்றும். இவர்கள் எப்போதும் நிர்மாண வேலையில் ஈடுபட்டிருப்பதால், கலகங்களே இல்லாமற் செய்து விடுவார்கள். தமது பகுதியில் உள்ள குழந்தைகள், வயது வந்தோர், ஆண், பெண் ஒவ்வொருவருடனும் தொடர்பை உண்டாக்கிக் கொள்ளக்கூடிய செயல்களில் ஈடுபட்டு, சமாதானப் பிரசாரம் செய்து, சண்டையிடும் சமூகங்களை ஒன்றுபடுத்தும் சந்தர்ப்பங்களைக் கண்டுபிடிப்பதே இவர்களின் கடமை. அத்தகைய படை எந்தச் சந்தர்ப்பத்தையும் சமாளிக்கக் கூடியதாயும், கும்பல்களின் மூர்க்கத்தைத் தணிப்பதற்குப் போதுமான எண்ணிக்கையுடனும், தங்கள் உயிரைப் பலிகொடுக்கத் தக்கதாயும் இருக்க வேண்டும். இந்த மாசற்ற மரணங்கள் சில நூறோ, ஒருவேளை சில ஆயிரமோ நேரிடும்போது, இவை இக் கலகங்களை அறவே ஒழித்துவிடும். திரளான மக்களின் மூர்க்கத்தனத்தை அடக்க, போலீஸ், ராணுவ ஆர்ப்பாட்டத்தைவிடச் சில நூறு வாலிப ஆண் பெண்கள் தாங்களே முன்வந்து தங்களைக் கும்பலின் வெறிக்குப் பலிகொடுப்பது சிக்கனமும் வீரமும் ஆகும்.

சுதந்திரம் அடைந்தபின் கலகங்களும், அவை போன்ற கஷ்டங்களும் நடவாவெனச் சொல்லுகின்றனர். சுதந்திர யுத்தத்திலேயே சகல சந்தர்ப்பங்களிலும் அகிம்சை முறையை நன்கு அறிந்துகொண்டு உபயோகிக்காவிடில், இது வெறும் நம்பிக்கை

* இது தவறு என்பது பின்னால் தெரியவந்தது. பசுபதி நாத குப்தா பலமாகக் குத்துண்டாரே யன்றி, அவரது உயிருக்கு அபாயம் ஏற்படவில்லை.

யாகிவிடும். காங்கிரஸ் மந்திரிகள் போலீஸையும் ராணுவத்தை யும் உபயோகிக்க வேண்டியிருந்த அளவுக்கு நமது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும். துரதிருஷ்டவசமாக, மந்திரிகளுக்கு வேறு வழி யில்லேதான். இது மிக மிக உண்மையாகும். ஒவ் வொரு காங்கிரஸ்காரரும், காரியக் கமிட்டியும், நான் நினைப்பது போல், தோல்வி யடைந்துவிட்டோம் என நினைத்தால், ஏன் இப்படித் தோல்வி யடைந்தோம் எனத் தங்களையே கேட்டுக் கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன்.

—'ஹரிஜன்' – 26—3—1938

# 6

# அதிகாரத்தின் நிழலுக்கு ஆசை!

[காந்தி–இர்வின் ஒப்பந்தத்துக்குப் பின், டில்லியில் நடந்த பெருந்திர ளான மக்கள் அடங்கிய கூட்டம் ஒன்றில் பேசுகையில், காந்திஜி மௌலானு ஷவுகத் அலிக்கும் தமக்கும் ஏற்பட்ட வேற்றுமையைப் பற்றியும், பொது வாக ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைப் பற்றியும் பேசினர். அந்தப் பிரசங்கமே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

**நா**ன் பேசுவதற்கு ஆரம்பிக்குமுன், மௌலானு ஷவுகத் அலி இங்கே இல்லாததைப்பற்றி நான் எவ்வளவு வருந்துகிறேன் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அவர் இன்று காலே இந்நகர் வந்து சேர்ந்தார்; அவர் இங்கே இல்லாதது எனக்குச் சொல்லொ ணுத் துக்கத்தைக் கொடுக்கிறது. நீங்களும் என்னுடன் சேர்ந்து வருந்துவீர்கள் என்பதில் சந்தேகமில்லே. நம்முடன் சேர்ந்து ஒரே மேடையில் வேலே செய்வதற்கு, மௌலானுவையும் பிற முஸ் லிம்களேயும் இசைய வைக்க எந்தச் சந்தர்ப்பத்தையும் நழுவ விடேன்; என்னுலான சகல முயற்சிகளேயும் செய்வேன், இது உறுதி. இரண்டு வருடங்களுக்குமேல் அந்தப் "பெரிய அண்ணனு டன்" சுற்றினேன். என்னேத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டு செல்லக் கூடிய திறமை வாய்ந்தவர் என அவரைப் பற்றிச் சொல்லித் தனி இன்பம் பெற்றேன். அப்படிப்பட்டவர் இன்று என்னுடன் இங்கே இருக்க முடியவில்லே என்பது அவ மானமாக இருக்கிறது. இந்த மானக்கேட்டிற்கு நான் எவ்வளவு தூரம் பொறுப்பாளி என்று எனக்குத் தெரியவில்லே. இதை நீக்க என்னுல் ஆனவரை முயன்றேன். ஆனல், பலிக்கவில்லே. உடன்பிறந்தவர்கள்கூட நுண்ணிய அபிப்பிராய பேதங்களால் பிரிவதை நாம் காண்கிரும். எனவே, இதில் வியப்புக்குரியது ஒன்றுமில்லே.

ஆனல், எங்களிடையே உள்ள வேற்றுமைகள் எங்களது நட்பைச் சிறிதும் பாதிக்கவில்லே. இன்றும் நான் அவரை என்

நண்பராகவும் சகோதரராகவுமே பாவிக்கிறேன். அவரும் என்னை அவ்வாறே கருதுகிறார் என்பதில் சந்தேகமில்லை. எனினும், இதனால் நான் ஆறுதல் அடைந்துவிடவில்லை. இந்தியாவின் நன்மைக்காக, என்னுடன் தோள் கொடுத்து முன்போலவே எனது நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர் வேலை செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். ஒரு சமயம் அந்த வேலை அவருக்குக் கவர்ச்சி யற்றுப்போயிற்று. அதனால் காங்கிரஸ் மேடையை விட்டகன்றார்.

இன்று நான் என்ன பேசப் போகிறேன் என்பதை இம் முகவுரையினின்றும் கொஞ்சம் தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மெய்யான மன ஒற்றுமை இல்லையேல் இப்போது செய்துகொண்டுள்ள *ஒப்பந்தம் பயனற்றுப் போகும். அந்த ஒற்றுமையின்றி நாம் †மகாநாட்டுக்குப் போவதும் வீணாகும். ஒற்றுமையை உண்டுபண்ண மகாநாடு உதவி செய்யுமென எவரும் கருதுவதற்கு இடமில்லை. ஐயங்களைந்த தூய உள்ளங்களுக்குள்தான் இதய ஒற்றுமை ஏற்பட முடியும். இது மகாநாட்டுக்கு வெளியேதான் சாத்தியம். இவ்விஷயத்தில் உங்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறேன். நான் என்னால் இயன்றதைச் செய்வேன் என்பதை நம்புங்கள்.

வைஸ்ராயை அணுகியதைப்போல் ஏன் முஸ்லிம்களையும் அணுகக்கூடாது என ஒருவர் நேற்று வந்த கடிதமொன்றில் கேட்டிருக்கிறார். ஒற்றுமையை விரும்பும் மதிப்பிற்குரிய முஸ்லிம் நண்பர்களிடம் சென்று முழந்தாளிட்டு அவர்களின் ஒத்துழைப்பை ஏன் வேண்டக்கூடாது என அவர் கேட்கிறார். இக் கருத்து எனக்கு விருப்பமே. முஸ்லிம் நண்பர்களுடன் மன்றாட நான் சகல முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளுவேன் என்று அவர் உறுதியாக இருக்கலாம். ஆனால், தனி மனிதனின் திறமைக்கு எல்லையுண்டு. எதையும் செய்யும் வல்லமை தனக்கு உண்டு எனப் பெருமை யடித்துக்கொள்ளும் அந்த நேரத்திலேயே, கடவுள் அவன் அகங்காரத்தை அடக்குகிறார். இதை நீங்கள் உணர வேண்டும். என்னைப் பொறுத்த அளவில் குழந்தைகள், பால் மணம் மாறாப் பாலர்கள், இவர்களின் உதவியைக்கூட நாடும் அளவுக்கு என்னிடம் பணிவு உண்டு. இதுகாறும் சாதிக்கப்பட்டுள்ள சகிப்புத் தன்மையையும் தியாகத்தையும் காட்டிலும் அதிகமாக, கடந்த தீரமான இயக்கத்தில் செய்துள்ள சகோதரிகளைப் பற்றி இது நினைவூட்டுகிறது. எனது இவ்வேலையில் அவர்கள் முழுமனத்துடனும் ஊக்கத்துடனும் உதவுவார்கள் என நான் நம்ப முடியும். "ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை இன்றியமையாதது என உங்களுக்குப்பட்டால், அரசாங்கத்தை எதிர்த்துப் பயன் தரும் முறையில் உபயோகித்த சத்தியாக்கிரகம் என்னும் அதே ஆயுதத்தை உங்கள் தேசமக்களுக்கு எதி

*காந்தி–இர்வின் ஒப்பந்தம்
†லண்டன் வட்டமேஜை மகாநாடு

ராகவும் உபயோகியுங்கள். இழிவான வகுப்புச் சச்சரவுகளை அவர்கள் கை கழுவி விடும்வரை அவர்களுடன் ஒத்துழைக்க முடியாது, சமைக்கவும் முடியாது, நீங்களும் அவர்களும் பட்டினி கிடக்க வேண்டுமென்று உங்கள் ஆடவர்களுக்குச் சொல்லுங்கள். நீங்கள் என்னுடன் ஒத்துழைக்க உறுதிகொடுங்கள்; என் பலமும் சக்தியும் பன்மடங்கு அதிகமாகும்'' என நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன்.

ஹிந்துக்களாகிய நாம், ஓரளவு சரியாகவே, பெரும்பான்மை வகுப்பார் என்று சொல்லப்படுகிறோம். 1921-இல் சொன்னதையே இவர்களுக்கு நான் சொல்லுகிறேன். ஏதாவது ஒரு வகுப்பு, சிறப்பாகப் பெரும்பான்மை வகுப்பு தனது உரிமைகளையும் சலுகைகளையும் தன்னிச்சையாக விட்டுக்கொடுத்தால், உடனே இந்த ஒற்றுமை உண்டாகும். இத் தன்னல மறுப்பை ஹிந்துக்கள் செய்வராயின், அது பெருமை வாய்ந்த ஒரு தீரச் செயலாகும். "கிடைத்ததில் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவை எடுத்துக்கொள்ளுங்கள்; உங்களுக்குப் பணி செய்வதே எங்களுக்குத் திருப்தி," என்று முஸ்லிம்களுக்கு அவர்கள் சொல்லட்டும். பார்க்கப்போனால், எதற்காகத்தான் சண்டையிடுகிறீர்கள்? நிச்சயமாகக் காற்றுக்கும் நீருக்கும் அல்ல; சட்டசபைகளிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் இடத்திற்காகத்தான். உங்களில் பெரும்பாலோருக்கு அவற்றுடன் என்ன வேலை? எத்தனை பேர் அவற்றிற்குள் போகலாம்? அங்கே என்னதான் செய்ய முடியும்? சட்டசபைகளுக்கு வெளியில் அதிசயங்கள் இயற்றினீர்கள். உங்களுக்குப் பலமுண்டு என்ற உணர்ச்சியால் அவசரச் சட்டங்கள், தடியடிகள், துப்பாக்கிப் பிரயோகம் இவைகளைத் துச்சமென எதிர்த்தீர்கள். அவ்வுணர்ச்சி இன்னும் இருக்குமாயின், உங்கள் பாராளுமன்றத்தில் ஹிந்துவேயில்லாமல் எல்லோரும் முஸ்லிம்களாக இருந்தாலும், அதனால் உங்களுக்கு ஆவதென்ன? இடங்களுக்காகச் சண்டையிடுதல், அதிகாரத்தின் நிழலுக்காக இறைஞ்சுதல் முதலியவற்றை நான் வெறுக்கிறேன். இந்தச் சட்டசபைகளுடன் யாதொரு தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாதென்று காங்கிரஸ்காரர்கள் அனைவருக்கும் என்னால் அறிவுறுத்த முடியுமானால், அது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கும்! விரும்பி விட்டுக்கொடுப்பதால், கனவிலும் கண்டிராத சக்தி உங்களுக்கு உண்டாகும்.

எனது சகோதர, சகோதரிகளே! சட்டசபைகளுக்குள் போய் நீங்கள் என்ன செய்வீர்கள்? கலெக்டர், கமிஷனர், ஏன் வைஸ்ராய் முதலிய பதவி வேட்கை உங்களுக்கு உண்டா? உங்களில் ஒருவர் இந்தியாவின் வைஸ்ராயாக ஆகிவிட்டபோதிலும், என்னதான் செய்துவிடுவீர்கள்? இதை விரும்ப மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஏனெனில், வைஸ்ராய்தான் தூக்கு மரம் ஏற்றுவதற்கும், மரண தண்டனை விதிப்பதற்கும் உத்தரவிட வேண்டும். இது நீங்கள் முற்றிலும் வெறுக்கும் வேலை. "தலைவர்

களா"கிய நாங்கள் வைஸ்ராய் பதவிக்குப் போட்டியிட்டோமென வைத்துக்கொள்ளுங்கள். அப்போது பரஸ்பரம் எங்கள் குரல்வளை களை நெரித்துக்கொள்ளுவோம். நாம் மனதார விரும்பும் பரிசு இது அல்ல; தேசத்தின் பணிவுள்ள தொண்டர்களாக இருக் கவே ஏங்குகிறோம். நம் சூழ்நிலை முழுதையுமே இத் தொண்டு உணர்ச்சியால் நிரப்ப விரும்புகிறேன். நீங்களும் இவ் விருப்பத் தில் பங்கு கொள்ளவேண்டும். இது உங்களுக்குச் சரியெனத் தோன்ருவிடில், என்னை உதறித்தள்ளிவிடுங்கள். இந்த நிபந் தனையின்மீதே நான் பணியாற்றுகிறேன். விரும்பி விட்டுக் கொடுப்பதைத் தவிர, வேறொரு மர்மமும் என்னிடமில்லை.

## 7

# நம்பிக்கை குன்றவில்லை

**கேள்வி:** தாங்கள் அதிகப் பெருமை பாராட்டிய ஹிந்து-முஸ் லிம் ஒற்றுமை என்னவாயிற்று? அந்த ஒற்றுமை யின்றிச் சுயராஜ்யத்திலைகூட என்ன பலன்?

**பதில்:** அவ் வொற்றுமையில் என் நம்பிக்கை என்றும்போல் மிளிருகிறது. பலமுள்ள முஸ்லிம்களும், பலத்தில் அவர் களுக்குச் சற்றும் குறையாத சீக்கியர்களும் ஒருபுறம் இருக் கட்டும். பலமே கொஞ்சமும் இல்லாத சிறுபான்மையின ருக்குக்கூடத் துன்பத்தைக் கொடுத்து விடுதலை அடைய நான் விரும்பவில்லை. லாகூர் காங்கிரஸின் ஒற்றுமைத் தீர் மானம், இவ் விஷயமாக முன்பு கைக் கொண்ட முயற்சிகள் அனைத்திற்கும் ஒரு முடிவாக விளங்குகின்றது. வகுப்புவாத அடிப்படையில் அமைந்த பரிகாரங்களை எல்லாம் காங்கிரஸ் தள்ளிவிடுகிறது. ஆயினும், எப்போதாவது அவ்விதப் பரி காரத்தைப்பற்றி யோசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட் டால், எல்லாப் பிரிவினருக்கும், நியாயமானது மட்டுமல்ல, திருப்தி யளிக்கும் பரிகாரத்தையே யோசித்துப் பார்க்கும். ஆகையால், காங்கிரஸ், தனது வாக்குறுதிக்கு முரணின்றி, வகுப்பு உரிமைகளைப் பொறுத்த மட்டில், சம்பந்தப்பட்ட கட்சிகளுக்குத் திருப்தி தராத விடுதலைத் திட்டம் எதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. தேசம் முழுவதும் விடுதலை யடைய வேண்டிய சக்தியை உண்டாக்குவதே இப்போது ஆரம்பிக்கப் போகும் இயக்கத்தின் நோக்கமாகும். ஆனால், எல்லாக் கட்சிகளும் ஒன்றுபடுமுன் இது முடியாது. வகுப்புப் பிரச்னைக்குச் சம்பந்தமில்லாத சட்ட மறுப்பை, அப் பிரச்னை தீரும்வரை ஒத்திவைப்பது பயனில்லாமல் சுற்றிச் சுற்றி வருவது போலாகும். எல்லோரும் தங் கள் முன் வைக்க வேண்டிய லட்சியத்தையும் இது முறி யடித்துவிடும். வகுப்புப் பிரச்னை என்னும் பளு நீங்கிய காங்

கிரஸ், நாடனைத்திற்கும் உண்மையாக இருக்குமானல், மிகவும் பலவீனமான அதன் அங்கத்தினர்களுடைய உரிமைகளையும் காத்துத் தன்னைப் பலப்படுத்தி ஒரு முக்கியமான கட்சியாக அமையவேண்டும் என்பதே எனது அவா. அவ்விதம் விளங்கும் காங்கிரசிற்குத் தேச ஊழியர்களே வேண்டும்; உத்தியோக மோகங் கொண்டவர்கள் அல்ல. விடுதலையோ, ஒற்றுமையோ அடையும்வரை அரசாங்கத்தாரிடம் உத்தியோகம் அல்லது தயவு பெறச் சிறுபான்மையோருடன் அது போட்டியிடாது. வகுப்புகளுக்குள் மனக்கசப்பு அதிகரிக்க வேறு எதையும்விட அதிகம் உதவிய சட்டசபைகளுக்கும் காங்கிரஸுக்கும் இப்போது ஒரு தொடர்பும் இல்லாதது நம் பாக்கியமேயாகும். தற்சமயம் காங்கிரஸில் அதிமாக ஹிந்துக்கள் மட்டும் இருப்பது துரதிருஷ்டம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனல், காங்கிரஸ், ஹிந்துக்கள் வகுப்பு நினைவை ஒழித்துவிட்டுப் பிற வகுப்புகள் அனைத்துடனும் பங்கிட்டு அனுபவிக்கமுடியாத லாபங்களைத் தாங்கள் எடுத்துக் கொள்ளாதிருந்தால், சீக்கிரத்தில் சந்தேகம் தீர்ந்துவிடும். பெருந்தன்மையுள்ள முஸ்லிம்கள், சீக்கியர், பார்சிகள், கிறிஸ்தவர், யூதர், இன்னும் இந்தியாவிலுள்ள அனைவரையும் இது கவர்ந்துகொள்ளும். காங்கிரஸ் இந்த லட்சியத்தை அடைந்தாலும் அடையாவிட்டாலும், என் வழி என்றும்போல் முற்றிலும் தெளிவாக இருக்கிறது. அனைவரிடையும் ஒற்றுமை நிலவவேண்டும் என்பதில் எனக்குள்ள ஆர்வம் ஒன்றும் புதிதல்ல. வாலிபத்திலிருந்து அதைப்போற்றி, அதற்கேற்ப நடந்து வந்திருக்கிறேன். 1889-இல் சிறுவனுக லண்டனுக்குப் போனபோதும் இப்போதிருக்கும் ஆர்வத்துடனேயே அதை நம்பினேன். 1893-இல் தென்னப்பிரிக்கா சென்றபோது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அதை நிறைவேற்றி வந்தேன். என்னிடத்தில் இருப்பதுபோல் ஆழ்ந்து வேரூன்றிய இந்த மாதிரி அன்பை, உலகம் அனைத்தையும் கொடுப்பினும் கைவிடமுடியாது. இந்த இயக்கம், வகுப்புப் பிரச்னையிலிருந்து தேசமக்களின் கவனத்தைப் பிரித்து, அவர்களின் மதம், கட்சி எதுவாயினும், இந்தியர் அனைவருக்கும் பொதுவான லட்சியத்தை நோக்கி அதைச் செலுத்தவேண்டும்.

## 8

## வேண்டியதைச் சிறுபான்மையோர் எடுத்துக்கொள்ளட்டும்

வகுப்புப் பிரச்னையைப்பற்றிய என் நிலையை எவ்வளவோ திரித்துக் கூறுகின்றனர். ஆகையால், வாதவிவாதங்களில் இறங்

காமல், என் மொழி அறிவு இடமளிக்கும் அளவுக்கு எனது நிலையைத் தெளிவாக்குகிறேன்.

1. வகுப்புப் பிரச்னையைப்பற்றி கடந்த நாற்பது ஆண்டுகளாக நான் கொண்டுள்ள கருத்துக்கள் மாறவில்லை.

2. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின்றி சுயராஜ்யம் இல்லை என்பதே எனது உறுதியான அபிப்பிராயமாகும்.

3. இந்த இயக்கம் விடுதலையை நிறுவுவதற்கல்ல; அவ்வாறு செய்யும் சக்தியை மக்களுக்கு அளிப்பதற்காகவே.

4. சக்தி உற்பத்தியாகி விடுதலை நிறுவும் காலம் வந்த பின், முஸ்லிம்களையும் பிற சிறுபான்மையோரையும் திருப்தி செய்ய வேண்டும். இல்லையேல், உள்நாட்டுக் கலகம் வந்தே தீரும். ஆனால், அத்தகைய சக்தியை உண்டாக்கிவிட்டால், நமது வேற்றுமைகளும் ஐயமும் மறைந்துவிடும் என்னும் நம்பிக்கையில் நான் வாழ்ந்து வருகிறேன். இவை நமது மெலிவின் காரணமாக வந்தவை. உள்வலிவு உண்டானால், பலவீனம் தானாகவே ஒழிந்துவிடும்.

5. நேரு திட்டம் காலங்கடந்துவிட்டதால், இயல்பாகவே வகுப்புப் பரிகாரமும் காலங்கடந்துவிட்டது. வகுப்புப் பரிகாரம் சீக்கியருக்கோ, முஸ்லிம்களுக்கோ திருப்தியளிக்காததால், சம்பந்தப்பட்ட எல்லா வகுப்புகளுக்கும் திருப்தியளிக்கும் முறையில் இதைத் திருத்த வேண்டும் என்று தெளிவாக லாகூர் காங்கிரஸ் தீர்மானம் கூறுகிறது.

6. எனக்குத் தெரிந்த பலாத்காரமற்ற ஒரே முறை, சிறுபான்மையோரைத் தமக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளும்படி ஹிந்துக்கள் விட்டுவிடுவதே. சிறுபான்மையோர் தேசத்தை ஆளுவதற்குக்கூட நான் தயங்கமாட்டேன். இது தர்க்கவாதமல்ல. இப் பரிகாரத்தில் ஆபத்தில்லை. ஏனெனில், சுதந்திர அரசாட்சியில் உண்மை அதிகாரம் மக்கள் கையில் இருக்கும்; இப்போது அது செய்து காட்டப்படுகிறது. மக்கள் தம் ஆற்றலை அறிந்து அதைப் பொது நன்மைக்காகக் கட்டுப்பாடான முறையில் உபயோகப்படுத்தினால், மிகப் பலமான அரசும்கூடச் செயலற்றுப் போகும். குஜராத்தில் மக்கள் காட்டும் பலமும் ஒற்றுமையும் குருட்டுப் பக்தியாக இல்லாமல், உண்மையானதாக இருந்தால், அவர்கள் வெற்றியை நெருங்கிவிட்டார்கள் என்று கூறலாம். மக்களில் கடுகத்தனை விகிதம்தான், ஒரு தேசத்தின் அரசாங்கத்தில் பொறுப்பும் அதிகாரமும் உள்ள உத்தியோகங்களை வகிக்கமுடியும். அரசியல் அதிகாரங்களைக் கையில் வைத்திருப்போருக்குப் புறம்பானவர்களிடம்தான் உண்மையான அதிகாரமும் செல்வாக்கும் இருக்கின்றன என்பதை உலக அனுபவம் நமக்குக் காட்டுகிறது. இந்தியாவில் அறியாமையில் ஆழ்ந்துள்ள மக்கள் சுரண்டப்படுவதால், நாம் அதிகாரத்திற்காக

ஏங்குகிறோம். இன்றைய அதிகாரம் அடிவரைக்கும் பழுதுபட்டு விட்டது. அகிம்சை முறையில் அடையும் சுதந்திரம் அயோக்கியத்தனத்தை மிகக் குறைந்த அளவுக்குக் கொண்டுவந்து விடும். இதுதான் இயல்பு. இப் பரிகாரத்தை எனக்குக் காட்டியது எனது அனுபவ ஞானமேயாகும். உண்மை என்னவெனில், தற்கால அல்லது மூதாதையரிடமிருந்து வந்த அனுபவத்துக்கு மாறானவை எதையும் நாம் நமது மனக்கண்ணால் காண முடியவில்லை. எனினும், சுதந்திர இந்தியா தற்கால அனுபவத்திற்கு முற்றும் மாறாகவிருக்கும் என்பதைவிடத் தெளிவாக இருப்பது எது? அகிம்சையும், அதன்மூலம் வரும் சுதந்திர இந்தியாவும் என் கற்பனையில்தான் இருக்கின்றன என்று சொல்லலாம். இப் போராட்டத்துக்குப் பின்னும் அடிமையாக இருக்கும் இந்தியாவில், கடவுள் மனம் வைத்தால், நான் உயிருடன் இருக்க மாட்டேன் என்பதே இதற்குப் பதிலாகும். பலாத்காரத்தினால் பெறும் சுதந்திரத்தில் சிறுபான்மையோர் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால், நமக்கிருக்கும் அரசாங்கத்தின் தயவால் அவர்கள் இவ்வாறு செய்ய அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. ஏனென்றால், அரசாங்கம் ஒரு வகுப்பை மற்றொரு வகுப்புக்கு அல்லது வகுப்புகள் அனைத்துக்கும் எதிராகக் கிளப்பிவிடுவதிலேயே உயிர் வாழ்கிறது. என்மீது குறைகூறுவோர் என்னை அசட்டை செய்து, என் கொள்கைகளைச் சந்தேகிக்கின்றனர். அவர்கள் நீண்ட காலத்திற்கு இப்படிச் சந்தேகித்து வரவோ, அறியாமலிருக்கவோ முடியாது. ஆதலால், நான் அவ்விஷயத்தில் உறுதியாக இருக்கிறேன்.

7. அகிம்சையின் தத்துவங்களைச் செயலில் காட்டாவிடினும், அறிவைக் கொண்டாவது புரிந்துகொண்டவர்களுக்கு, எனது முரண்பாடுகள் என்பவை முரண்பாடுகளாகத் தோன்றமாட்டா.

8. உப்பு வரி, குடி, கஞ்சா, அபினி முதலியவைகளால் விளையும் கொடுமைகளை எதிர்ப்பதாலோ, அல்லது கதர்மூலம் வெளிநாட்டுத் துணிகளை ஒழிப்பதாலோ சந்தேகத்திற்கு இடம் ஏற்படப் போவதில்லை. ஆகையால், இயக்கத்தில் சேரும்படி அனைவரையும் நான் தயங்காது அழைக்கிறேன். சேராதவர்கள், எச் சந்தர்ப்பத்திலும் தீமையை எதிர்க்கும் ஆற்றலைப் பெறும் பாக்கியத்தையே நழுவவிடுபவர்கள் ஆவர்.

9. போராட்டத்தில் அகிம்சையே தோற்றுவிடும் என்ற ஆபத்து இருந்தது. இத்தகைய ஆபத்தைக் கலக்கமில்லாமல் நான் நினைக்கக்கூட முடியாது. ஆகையால், அந்த அவசரமான, சாதாரணக் காரணத்திற்காகவே அகிம்சையைத் தவிர வேறொரு நிபந்தனையுமின்றிச் சட்டமறுப்பை ஆரம்பித்தேன். அகிம்சை பலமுள்ள சக்தியாக இருக்குமானால், மக்கள் பலாத்கார வழியில் சென்றபோதிலும், பலாத்காரத்தையும் சமாளித்து, இறுதியில்

அதையும் அமுக்கிவிட்டு தான் மட்டும் மேலே நிற்கும் என்று கண்டுகொண்டேன்.

# 9

# தற்சோதனை செய்ய வேண்டுகோள்

[ஒரிஸாவிலுள்ள டிலாங்கில் காந்தி சேவா சங்க மகாநாட்டைக் காந்திஜி திறந்துவைத்தபோது, ஐக்கிய மாகாணத்தில் நடந்த வகுப்புக் கலவரங்களைப்பற்றிக் குறிப்பிட்டார். உள்ளத்தை உருக்கும் அந்தப் பிரசங்கத்தைக் கீழே காணலாம்:]

ஐக்கிய மாகாணத்தில் நடந்த கலகங்கள் என்னை மிகுந்த துக்கத்தில் ஆழ்த்திவிட்டன. அகிம்சையை அடிப்படையாகக் கொண்டு, இக் கலகங்களைப் பற்றி மௌலானா அபுல் கலாம் ஆஸாதுடனும் போஸ் சகோதரர்களுடனும் விவாதித்தேன். நமது லட்சியத்தை நாம் அணுகுவது போல் எனக்குத் தோன்றவில்லை; அதற்கு மாறாக விலகியே போய்க்கொண்டிருக்கிறோம். ஹரிபுரா நடவடிக்கைகள் சிறிது நம்பிக்கை யூட்டின. நமது பலம் மேன்மேலும் வளர்ந்து வருகிறது. ஆதலால், குறைகளிருப்பினும் என் வாழ்நாளிலேயே சுயராஜ்யத்தைப் பார்த்து விடலாம் என்றும், அதற்கேற்ற முழு பலமும் இவ் வருடத்திற்குள்ளேயே பெற்றுவிடுவோம் என்றும் நினைத்திருந்தேன். அலகாபாத்திலும் பிற இடங்களிலும் நடந்த கலகங்கள் எனக்கு அதிக அதிர்ச்சியை உண்டாக்கின. போலீஸையும் ராணுவத்தையும் உதவிக்குக் கூப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது, நமக்குப் பெரிய அவமானமாகும்.

காங்கிரஸ் தலைவரை வைஸ்ராய் அழைத்துக் காங்கிரஸின் நிபந்தனைகள் என்ன என்று கேட்டால், "காங்கிரஸிற்கு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் திறமை உண்டு; பிரிட்டிஷார் போகலாம்" என்று சொல்ல அவருக்குத் தைரியம் உண்டா? போலீஸும் ராணுவமும் எங்களுக்கு அவசியமில்லை; சுதேச மன்னர்களுடனும் ஜமீன்தார்களுடனும் முஸ்லிம்களுடனும் நாங்கள் சரிக்கட்டிக் கொள்ளுவோம் என்று அவரிடம் நாம் சொல்ல முடியுமா? இவர்களுடன் எளிதில் நாம் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்துவிடுவோம் என உண்மையுடன் சொல்ல முடியாது. எனினும் மெய்யான அகிம்சை நமக்குள் இருப்பின் நாம் அவ்வாறு சொல்லவும், சொன்னபடி நடக்கவும் முடியும்.

ஆகையால், நமது அகிம்சை பலவான்களுடைய அகிம்சையா, கோழைகளின் அகிம்சையா என்று உங்களையும் என்னையும் கேட்கிறேன். பலமற்றவர்களின் கையில் அது ஓரளவுக்கு வேலை செய்யும் என்பது உண்மைதான். அம்மாதிரியே தான் நம்

விஷயத்திலும் அது பயனளித்தது. நமது ஆற்றலின்மைக்கு அது போர்வையாகும்போது, நாம் ஆண்மையற்றவர்களாகிறோம். உடல் வலிமையைப் பயன்படுத்துவோரின் வீரம், ஆண்மையின்மையைவிட சாலச் சிறந்தது. சண்டையிட்டுக் கொண்டே உயிர் துறப்பது, ஆண்மையின்மையைவிட மிக்க உயர்ந்தது. ஒருவேளை நாம் அனைவரும் ஆதியில் மிருகங்களாக இருந்திருப்போம். மிருகத்திலிருந்து மெதுவாகப் பரிணமித்து, மனிதனாகியுள்ளோம் என நான் நம்பத் தயார். ஆகவே, மிருக வலிமையுடன் நாம் பிறந்துள்ளோம். ஆனால், உள்ளத்தில் உறையும் கடவுளை அறிவதற்காக மனிதராய்ப் பிறந்துள்ளோம். அதுதான் மனிதனின் சிறப்புரிமை. மிருகங்களிலிருந்து அவனை வேறுபடுத்துவதும் அதுதான். கடவுளை அறிவதென்பது, எல்லா உயிர்களிலும் அவரைக் காண்பதே; அதாவது, படைக்கப்பட்டுள்ள அனைத்துடனும் நாம் ஒன்றென உணருவதே. உடல் வலியை நாமே விரும்பி உதறித்தள்ளி, நமக்கு உள்ளிருக்கும் அகிம்சையை அறிவறிந்து வளர்க்காவிட்டால் இது முடியாது. இது பலத்திலிருந்தே உண்டாக முடியும். நம்மிடம் பலவான்களின் அகிம்சை இருக்கிறதா? இது அடைய முடியாத லட்சியம் என்று புறக்கணித்துப் பலாத்கார முறையைப் பின்பற்ற நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால், ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுத்தாக வேண்டும்.

அது வலியுடையோரின் ஆயுதம் என்றால், தப்பமுடியாத சில முடிவுகள் உள. நம்மால் கலகங்களைச் சமாளிக்கவும், ஹிந்து-முஸ்லிம்களிடையே அதிகரித்துவரும் பிணக்கைத் தடுக்கவும் முடிய வேண்டும். அகிம்சை உபாசகர்கள் என்கிற முறையில் இக் கலகங்களைத் தடைசெய்ய நாம் என்ன செய்திருக்க வேண்டுமென நீங்கள் என்னைக் கேட்பீர்கள். கலகங்களை அடக்குவது பிரதானமாகக் காங்கிரஸ் கமிட்டிகளின் வேலை. இம்மாதிரி நெருக்கடியான நேரங்களில் உதவ ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வேண்டும். 1921-இல் தொண்டர்களுக்கு ஒரு வாக்குறுதி தயாரித்தோம். அதில், ஒரு தொண்டர் மனம், மொழி, மெய்களில் அகிம்சையைக் கையாள வேண்டும் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது தலைவராயிருந்த ஹக்கீம் சாகிப் அஜ்மல்கான், கிலாபத் தொண்டர்களையும் அதே வாக்குறுதியை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். கிலாபத் மகாநாடு எளிதில் ஏற்றுக்கொள்ளவில்லை. மொழியிலும், மெய்யிலும் ஒரு தொண்டர் அகிம்சையுடன் இருக்கலாம் என்பதைச் சில மௌலானக்கள் ஏற்றனர். ஆனால், மனத்திலும் அகிம்சையுடன் இருப்பதென்பது மிகை எனக் கருதினார்கள். நான் அவர்களின் மனத்தை ஆள முயலுகிறேன் என்று சொன்னார்கள். "ஆளுவது அகிம்சைதான், தனி மனிதன் இல்லை" என்பதை நான் எடுத்துக்காட்டினேன். முடிவில் அவ் வுறுதி மொழியை ஏற்றுக்கொண்டனர். ஏற்றுப் பதினேழு ஆண்டுகளாயினும் அகிம்சையைப் பின்பற்றுவோர்களுக்கு இருக்கவேண்டிய எதிர்க்க முடியாத வலிமையை

நாம் விருத்தி செய்துகொள்ளவில்லை. அதற்குக் காரணம், நாம் அத்தகைய தொண்டர் படையை நிறுவ முயலவில்லை, உழைக்க வில்லை என்பதே. அவ்வாறு செய்ய முடியாவிடில், வாக்குறுதியை நிறைவேற்ற இயலாது போனால், நமது நிலைமையை நாம் மறுபடியும் யோசித்தல் நலம். வாக்குறுதி இன்றும் உளது. ஆனால், காகிதத்தில் மட்டுமே என்பதுதான் துக்கத்தைத் தருகிறது. வாக்குறுதியில் உள்ளபடி அகிம்சைப் படை போதிய அளவு பெரியதாயிருந்திருப்பின் இக் கலகங்கள் நடந்திரா, நடந்திருப்பினும், அவர்கள் அவற்றை அடக்கியிருப்பர்; அல்லது அம்முயற்சியில் தம்மையே பலி கொடுத்திருப்பர். உயிர் துறந்தவர் ஒருவரைப்பற்றித்தான் கேள்விப்பட்டோம். அவர் தன்னையே பலி கொடுத்ததை நான் பாராட்டுகிறேன். ஆனால், பல குப்தாக்கள் இறந்திருப்பின் மகிழ்ச்சியால் என் உள்ளம் பூரித்திருக்கும்.

இது வெறும் கனவு எனக் கருதுகிறீர்களா? அம்மாதிரி அகிம்சைப் படைகளைக் கொண்டுகூட இக் கலகங்களை அடக்க முடியாதென நினைக்கிறீர்களா? உண்மையாகவே அவ்வாறு நினைத்தால், அமைதியாக, ஆத்திரமில்லாமல் சிந்தித்தும் அம் முடிவுக்கே வந்தீர்களென்றால், அகிம்சை முறையில் சுயராஜ்யம் பெற முடியாதென்றும் நீங்கள் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

— 'ஹரிஜன்' – 2—4—1938

# 10

# சில குற்றச்சாட்டுகள்

ஐக்கிய மாகாணத்தில் சமீபத்தில் நடந்த கலகங்களைப் பற்றி நான் சொல்லியவை அநேகரின் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. நண்பர்கள் பத்திரிகைக் கத்தரிப்புகளை அனுப்பியுள்ளனர். பலரும் கண்டித்து எழுதிய, அல்லது பேசியவற்றுள் சிலவற்றைக் கீழே கொடுத்திருக்கிறேன்:

1. என் எழுத்துக்கள் படபடப்பை வெளிப்படுத்தின.

2. போதிய அளவு விவரங்கள் இல்லாமல் எழுதினேன்.

3. ஒத்துழையாமை, சட்டமறுப்பைப் பற்றிய என் கொள்கைகளை நான் மறுத்துள்ளேன்.

4. மிதவாதிகளின் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு நான் வந்துள்ளேன்.

5. காங்கிரஸ்காரர்கள், தங்களுக்குள் அகிம்சையை எப்போதும் கையாண்டதில்லை.

6. மனித இயல்புக்குப் புறம்பானதை நான் எதிர்பார்த்தேன்.

7. எனது வாதத்தை ஒப்புக்கொண்டால், ஒருகாலும் சுயராஜ்யம் பெற முடியாது. ஏனெனில், இந்தியா முழுதும் ஒருகாலும் அகிம்சை மயமாக முடியாது.

கண்டனங்களிலிருந்து இன்னும் அதிகம் எடுக்கலாம். ஆனால், பொருத்தமுள்ளவைகளை மட்டிலும் எடுத்துள்ளேன்.

1. என் எழுத்துக்களில் எனது படபடப்பு வெளியாகிற தென்றால், அதன் அறிகுறிகள் இன்னும்தான் இருக்கின்றன. கண்டனங்களைக் கவனமாய்ப் படித்த பின்னும் என் வாதத்தை மாற்றுவதற்கான எந்தக் காரணமும் எனக்குத் தோன்றவில்லை. நான் பேசியது குறிப்பிட்ட வரையறைக்குட்பட்ட ஒரு காரியத்தைப்பற்றி என்பதை இவர்கள் மறந்துவிடக் கூடாது. நமது அகிம்சை, வீரருக்கு உகந்ததாயும் பலாத்காரத்தை எதிர்த்து வெற்றிகொள்ளத்தக்கதாயும் இருந்தாலன்றி, இதைக் கொண்டு சுயராஜ்யம் பெறமுடியாது. வேறு வழிகளில் பெற இயலாதென்று நான் சொல்லவில்லை. அவ்வாறு அடைய முடியுமானால், நாம் நமது வேலைக்குத் தயாராயில்லை என்றும், பிரிட்டிஷ்காரரைச் சரியாக எதிர்க்க முடியவில்லை என்றும்தான் ஆகும்.

2. வேண்டிய விவரங்களை அடிப்படையாகக் கொண்டே எழுதினேன். கலகங்கள் சிறிய அளவிலேனும் நடந்தன; காங்கிரஸ்காரர்கள் அகிம்சை நெறியில் அவற்றை அடக்க முடியவில்லை. போலீஸையும் ராணுவத்தையும் உதவிக்கு அழைக்க வேண்டியதாயிற்று. இந்த மூன்று விஷயங்களைப்பற்றி விவாதமேயில்லை. நான் வந்த முடிவுகட்கு இவை போதுமானவை. இதில் மந்திரிகளைப்பற்றி நிந்தனை ஒன்றுமில்லை. அவர்கள் வேறுவிதமாக நடந்திருக்க முடியாதென நான் ஒப்புக்கொண்டுள்ளேன். காங்கிரஸின் அகிம்சையால் சமய சந்தர்ப்பத்தைச் சமாளிக்க முடியவில்லை என்பது உண்மை.

3. ஒத்துழையாமையிலும் சட்டமறுப்பிலும், நான் நம்பிக்கை இழந்துவிட்டேன் என்பதற்கு என் கட்டுரையில் எவ்வித ஆதாரமும் இல்லை. முன்பு இருந்ததைவிட அது பிரகாசமாகவே இருக்கிறது. ஒப்பற்ற தீரர்களின் அகிம்சை கையாளப்பட்டால், சுயராஜ்யம் பெறுவதற்கு இருவர் போதும்.

4. மிதவாதிகளின் கொள்கை என்னைக் கவருமேயாயின், நான் மகிழ்ச்சி அடைவேன். அவர்களுள் பலர் எனது நெருங்கிய நண்பர்கள். ஆனால், அவர்களுக்குப் பலம் இல்லை. என்னிடம் என்றும் தவறாத பலம் இருக்கிறது. கலகங்கள் நடந்தபோது தவறியது அந்தப் பலமல்ல. செயலாற்றவும் ஆக்கவும் திறமையுள்ள அகிம்சையை, அந்தப் பலத்தை ஏற்றுக்கொண்டிருந்த ஸ்தாபனம்தான் அனுசரிக்கத் தவறியது.

5. ஆங்கிலேயரை எதிர்க்க மட்டும் அகிம்சையை உபயோகிக்கவில்லை என்பதை விளக்கும் காங்கிரஸின் பல தீர்மானங்

களை, குறைகூறுவோருக்குச் சுட்டிக்காட்ட முடியும். நமக்குள் அகிம்சையின் அவசியத்தை வற்புறுத்திக் காரியக் கமிட்டியில் பலமுறை விவாதங்கள் நடந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

6. அகிம்சையைப் பொறுத்த அளவில், இதுகாறும் மனித இயல்பு கௌரவமாகவே நடந்துகொண்டுள்ளது. எனது கவலை காங்கிரஸின் சுபாவத்தைப்பற்றித்தான். அகிம்சைக்குக் கட்டுப்படுத்தும் ஒரு வாக்குறுதிப் பத்திரத்தில் காங்கிரஸ்காரர்கள் கையொப்பமிடவேண்டியிருக்கிறது. ஆனால், அவர்களிடம் அகிம்சை இருக்கிறதா? இதுவே அன்றும் இன்றும் என் கேள்வி. இருப்பின், அது வீரருடைய அகிம்சையா? வீரருடையதாயின், கலகங்களை அடக்கவும், வேலைகளை நடத்தி முடிக்கவும் அதுவே போதும் என்பதுதான் எனது வாதமாகும்.

7. மேற்கூறியதிலேயே இதற்குப் பதில் இருக்கிறது.

நமது அகிம்சை இருக்கவேண்டிய மாதிரி இல்லை என்றே நான் அஞ்சுகிறேன். என் எச்சரிக்கையைக் காங்கிரஸ்காரர்கள் அசட்டை பண்ணிவிட வேண்டாம். எப்படியிருப்பினும், குறைபாடுடையவனேயாயினும், நான்தானே அகிம்சையைப் பொறுத்த அளவில் காங்கிரசிற்குள் நிபுணன் என்று கருதப்படுகிறேன்? நான் கண்டுபிடிப்பவைகளிலும், எனது பரிகாரங்களிலும் எனக்கு நம்பிக்கையுண்டு. அகமதாபாத், விரம்காம் கலகங்களையும், இளவரசர் வந்தபோது பம்பாயில் நடந்ததையும், பர்டோலி சம்பவத்திற்கு முந்தின நாள் நடந்த சௌரி சௌரா சம்பவத்தையும் உதாரணமாகக் கூறுகிறேன். அக்காலத்திலும் இயக்கத்தை நிறுத்தியதைக் கண்டித்தவர்கள் பலர். ஆனால், எனது தூண்டுதலால் செய்த பரிகாரங்கள் சரியானவை என்பதைப் பின்விளைவுகள் எடுத்துக்காட்டிவிட்டன. தற்சமயம் நான், நிலைமையைக் கண்டுகொண்டுள்ள நிதானத்திலும், அதற்காகக் கூறியுள்ள பரிகாரத்திலும் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அகிம்சையிலும், அதன் இயல்பிலும் நமக்கு அழியா நம்பிக்கை இருப்பின், பரிகாரங்கள் நமது திறமைக்கு மீறியவையல்ல. உதாரணமாக, சில பரிகாரங்களைக் கூறுகிறேன்:


1. ஹிந்து-முஸ்லிம் பிணக்கைத் தீர்ப்பதற்கு வழிகாண வேண்டும். இதைக் கண்டுபிடித்தால் மற்றது தானாகவே வரும்.

2. காங்கிரஸ் பதிவுப் புத்தக ரிஜிஸ்தர்களில் ஏராளமான போலிப் பெயர்கள் இருக்கின்றன என்று எனக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. போலி வாக்காளர்களுக்குச் சற்றும் இடங்கொடாதபடி நமது பதிவுப் புத்தகங்களைத் திருத்த வேண்டும்.

3. காங்கிரஸ்காரர்கள் தாங்கள் சிறுபான்மையினராக இருப்பதைக் கண்டு அஞ்சக் கூடாது.

4. ஒவ்வொரு மாகாணக் கமிட்டியும் தாமதமின்றி மனம், மொழி, மெய்களால் அகிம்சையைக் கடைப்பிடிக்க உறுதி கொண்டுள்ள தொண்டர் படையை நிறுவ வேண்டும். எல்லோருடைய உபயோகத்திற்காகவும், பயிற்சி முதலியவைகளைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய கைநூல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

இங்கே குறிப்பிட்டுள்ளவைகளுள் அதிக வீரமானதோ, அசாத்தியமானதோ எதுவும் இல்லை. தலைமை வகித்து நடத்துபவர்களுக்கு அகிம்சையில் தளரா நம்பிக்கை இல்லாவிட்டால், இவையெல்லாம் அசாத்தியமே. அவர்களுக்கு நம்பிக்கை இல்லையேல், காங்கிரஸ் அகராதியிலிருந்து அகிம்சையை எவ்வளவு சீக்கிரம் நீக்குகிறார்களோ, அவ்வளவு காங்கிரஸுக்கும் தேசத்திற்கும் நன்மையாகும். இதைவிட்டால் கலப்பற்ற பலாத்காரம் தான் என்பதில்லை. உலகத்திலுள்ள அரசியல் ஸ்தாபனங்களில் காங்கிரஸ் ஒன்றுதான், என்னுடைய தூண்டுதலால், சுயராஜ்யம் அடைவதற்குக் கலப்பற்ற அகிம்சையை ஏற்றுக் கையாளுகிறது. அகிம்சைதான் அதன் ஒரே பலம். அதன் தன்மை இருக்க வேண்டியபடி இல்லாவிட்டால், தேசத்துக்குப் பெருங்கேடு விளையும். முடிவில் நாம் தீரமுள்ள ஆண், பெண்களாய் இருப்பதற்குப் பதிலாக, கோழைகளாக இருப்பதைக் காண்போம். சுதந்திரத்திற்காகப் போராடுகிறவர்களுக்குக் கேவலமானது வேறொன்றுமில்லை. பின்வாங்குவதால் நாம் அவமானப்படக்கூடியது ஒன்றுமில்லை. பலாத்காரப் போராட்டமின்றி, பிரிட்டிஷ் அதிகாரத்தை அகற்ற முடியாதென்று நாம் உணர்ந்தோமானால், காங்கிரஸ் அதைத் தேசமக்களுக்குச் சொல்லி, ஏற்ற முறையில் அவர்களைப் பயில்விக்க வேண்டும். உலகம் முழுதும் செய்கிறபடி நாமும் செய்ய வேண்டும். அதாவது "முடியும்போது சகித்துக்கொண்டு, அவசியமானபோது அடிக்க வேண்டும்." இதுதான் நமது கொள்கையாகவோ, முறையாகவோ இருக்கப் போகிறதென்றால், நாம் மதிப்பிடுவதற்கரிய பதினேழு ஆண்டுகளை வீணாக்கி விட்டோம் எனலாம். ஆனால், கற்றுத் திருந்துவதற்கு ஒரு போதும் காலம் கடந்துவிடுவதில்லை. ஒரு தேசத்தின் வாழ்க்கையில் பதினேழு ஆண்டுகள் பெரிதல்ல. எச்சரிக்கை செய்தும் திருந்தாவிட்டால், காங்கிரஸ்காரர்களுக்குக் கேடுதான் விளையும்.



1938 ஏப்ரல் 28-ஆம் தேதி பம்பாயில் ஜனப் ஜின்னாவின் வீட்டில் காந்திஜி-ஜின்னா சந்திப்பு.



வைஸ்ராயுடன் பேசுவதற்காக சிம்லாவில் வைஸ்ராய் மாளிகைக்கு காந்திஜி போகும் வழியில்—1945, ஜுன்.

பகுதி பதினொன்று

# காங்கிரஸ் அரசாங்க ஆட்சியில்

## 1

## ராணுவமா, நீதியா ?

காங்கிரசுக்குப் பின்பலமாக இருப்பது நீதி ஒன்றே என்பதை அடிக்கடி மறந்து விடுகிறோம். ஆளுபவர்களுக்குப் பின்பலம், இவர்கள் அடிக்கடி ராணுவத்தை நீதியுடன் உபயோகித்த போதிலும், ராணுவம்தான். ஏழு மாகாணங்களில் காங்கிரஸ், அதிகாரத்தை ஏற்றுக்கொண்டதிலிருந்து, இம்முக்கியமான வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது. ஆதிக்கத்துக்கு வருதல் பெரும் புகழைக் கொடுக்கலாம்; அல்லது சர்வநாசத்திற்கும் காரணமாக இருக்கலாம். முழுதும் கெட்டொழியாதிருக்க வேண்டுமானால், மந்திரிகளும் சட்டசபை அங்கத்தினர்களும் தம் அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் கவனமாக இருக்க வேண்டும். ரோமாபுரி அரசனின் (சீசரின்) மனைவியைப் போல, இவர்கள் எதிலும் சந்தேகத்திற்கு இடமின்றி வாழ வேண்டும். தமக்கோ, தம் உற்றார் உறவினருக்கோ தனி நன்மைகள் தேடிக் கொள்ளக்கூடாது. இவர்களின் உறவினருக்கோ, நண்பர்களுக்கோ, தகுதியானவர்களுக்குள் எல்லாம் சிறந்தவர்கள் இவர்கள்தான் என்பதனாலேயே உத்தியோகம் கிடைக்க வேண்டும். அதிலும், அரசாங்கத்தில் கிடைப்பதைவிட அவர்களின் வெளி மதிப்பு அதிகமாக இருக்க வேண்டும். காங்கிரஸின் பெயரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளும் சட்டசபையினரும் அச்சமின்றித் தங்களது கடமையைச் செய்ய வேண்டும். தங்கள் உத்தியோகத்தையோ, பதவியையோ இழக்க என்றும் தயாராக இருக்க வேண்டும். காங்கிரசின் சக்தியையும் புகழையும் அதிகமாக்குவதைவிடப் புறம்பான கௌரவ உத்தியோகங்களுக்கோ, சட்டசபை ஸ்தானங்களுக்கோ அவர்கள் ஆசைப்படக்கூடாது. தனி வாழ்விலும் பொது வாழ்விலும் நீதியைப் பின்பற்றுவதையே இரண்டும் பொறுத்திருப்பதால், எங்காவது நீதிநெறி பிறழ்ந்தால், அது காங்கிரஸைப் பலமாகத்தாக்கும். இதுதான் அகிம்சையின் முக்கியமான உட்கருத்து.

பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர், அவர்களைச் சார்ந்தோர் இவர்களின் உடல்களுக்குத் தீங்கு இழைப்பதில்லை என்பதோடு மட்

டும் காங்கிரசின் அகிம்சை நின்றுவிட்டால், நமக்குச் சுதந்திரம் ஒருகாலும் கிடைக்காது. முடிவில் அது வீழ்த்தப்படும். நேரடியாகத் தீமை பயப்பதில்லையாயினும், நிச்சயமாக முடிவு நிலையை அடைவதற்குள், அது பயனற்றுப் போவதை நாம் காண்போம்.

இதற்கு மாருக, அகிம்சைதான் அதன் முழு குறிப்பீடுகளுடனும் காங்கிரசின் நெறி என்ருல், ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் தம்மைச் சோதித்து, அதன்படி தமது போக்கை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். காரியக் கமிட்டியின் கட்டளைகளுக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டாம். பொது மக்களின் போக்கை அறியும் அளவுக்குத்தான் காரியக் கமிட்டி செயலாற்ற முடியும். அகிம்சை, கட்டளைக்கு இணங்கி வளர்த்துக்கொள்ளக்கூடிய ஒரு பண்பல்ல. அது தனிப்பட்டவர்களின் கடுமையான முயற்சியை அடிப்படையாகக்கொண்ட ஓர் உள் வளர்ச்சியாகும்.

கலகங்கள் முதலியவை நடக்கும் சமயங்களில் தம்மைப் பலியிடத் தயாராயிருக்கும் தொண்டர்களாகப் பதிவு செய்யும்படி, பலர் தங்களுடைய பெயர்களைக் கொடுத்து எனக்குக் கடிதங்கள் எழுதியுள்ளனர். தொண்டர்களைத் தாமே சேர்த்து, அங்கங்கே படைகளை அமைத்து, நான் சொல்லியபடி பயிற்சி செய்ய ஆரம்பியுங்கள் என்று இவர்களுக்கு நான் சொல்லுகிறேன். இவர்கள் சில சந்தர்ப்பங்களுக்காக மட்டும் தம்மைத் தயாரிக்காது வீடு, சமூகம், பொருளாதாரம், அரசியல், மதம் முதலியவற்றைப் பொறுத்தவையான தினசரி வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தம்மைப் பயிற்சி செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் தம் சொந்த வட்டாரங்களில் இடுக்கண் நேரிடும்போது அவற்றைச் சமாளிக்க முடியும். தாம் வேலை செய்யும் இடத்திற்கு நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நடக்கும் சம்பவங்களில் மறைமுகமாகவன்றி நேரடியாகப் பங்குகொள்ள முற்பட வேண்டாம். ஆரம்பம் சரியாக இருந்தால், அந்த ஆற்றலும் தானே வந்து சேரும்.

## 2

# சமாதானப் படையின் தகுதிகள்

கலகங்களை, முக்கியமாக வகுப்புக் கலகங்களை, அடக்கத் தங்களுடைய உயிரையும் கொடுக்கக் கூடியவர்கள் அடங்கிய சமாதானப் படை அமைக்க வேண்டுமென்று சில காலத்திற்கு முன் நான் யோசனை கூறினேன். இப் படை, போலீசிற்கும் ராணுவத்திற்கும் கூடப் பதிலாக இருக்க வேண்டும் என்பது என் கருத்து. இது பேராசைபோல் தோன்றுகிறது. இது நிறை

வேருமல் போகலாம். ஆயினும், காங்கிரஸ் தனது அகிம்சைப் போராட்டத்தில் வெற்றி காணவேண்டுமாயின், இம்மாதிரி நிலைகளை அமைதியாகச் சமாளிக்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும். சமூகக் கலகங்கள் ராஜீயவாதிகளால் உண்டாக்கப்படுகின்றன. அவற்றில் பங்குகொள்ளும் பலர் இவர்களின் கையாட்களேயாவர். இழிவான சமூகச் சச்சரவுகளைச் சமாதான முறைகளால் தடுக்க வழியோ, வழிகளோ கண்டு பிடிப்பது காங்கிரஸ்காரரின் புத்திக்கு எட்டாததல்ல. சமூக ஒப்பந்தம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எக் கட்சியும் ஓர் ஒப்பந்தத்தைப் பலாத்காரமாக நிறுவ முடியாது. அவ்வாறு செய்வது சாத்தியமாயினும், அதன் மதிப்பு அதை எழுதிய காகிதத்தின் விலை கூடப் பெருது. ஏனெனில், அப்படிப்பட்ட ஒப்பந்தத்தின் பின் பொதுவான நல்ல எண்ணம் இருக்க முடியாது. இதைவிட மோசம் என்னவென்ருல், ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகுகூட, சமூகச் சச்சரவு அறவே ஒழிந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆதலால், நாம் யோசிக்கும் சமாதானப் படையின் அங்கத்தினர்கள் எத்தகைய தகுதிகள் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் பார்க்கலாம் :

1. அவருக்கோ, அவளுக்கோ அகிம்சையில் ஜீவ நம்பிக்கை இருக்க வேண்டும். கடவுளிடம் ஜீவ நம்பிக்கையின்றி இது சாத்தியமில்லை. ஆண்டவனின் சக்தியினுலும் அருளாலும் மட்டுமேயன்றி அகிம்சை உபாசகர் எதையும் செய்ய முடியாது. அவையில்லாமல் கோபமின்றி, பயமின்றி, பழிவாங்கும் உணர்ச்சியின்றி, உயிர்துறக்கும் ஆற்றல் அவருக்கு உண்டாகாது. ஆண்டவன், அனைவரின் உள்ளத்திலும் உறைகிருர். அவரது சந்நிதியில் அச்சம் இருக்க வேண்டியதில்லை என்னும் நம்பிக்கையில்தான் அவ் வீரம் பிறக்கிறது. ஆண்டவன் அனைத்திலும் உள்ளார் என அறியுங்கால், எதிராளி எனப்படுவோர் அல்லது குண்டர்களின் உயிருக்குங்கூட மதிப்பு உண்டாகிறது. மனிதனுள் உறையும் மிருக சுபாவம் மேலோங்கும்போது உண்டாகும் மூர்க்கத்தைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையே இக் குறுக்கிடும் யோசனையாகும்.

2. இச் சமாதான தூதர் உலகின் முக்கிய மதங்கள் அனைத்தையும் சமமாக மதிக்கவேண்டும். எனவே, ஹிந்துவானுல் இந்தியாவிலுள்ள மற்ற மதங்களை மதிப்பார். ஆகவே, தேசத்தில் அனுசரிக்கப்படும் பல்வேறு மதங்களின் பொதுவான கொள்கைகள் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

3. இச் சமாதான வேலையை அந்த அந்த வட்டாரங்களில் உள்ள உள்ளூர் ஆட்கள்தான் செய்ய முடியும்.

4. இவ்வேலையைத் தனியாகவோ, பிறருடன் சேர்ந்தோ செய்யலாம். தோழர்கள் வேண்டுமே என்று யாரும் காத்திருக்க வேண்டியதில்லை. இருப்பினும், யாரும் தம் வட்டாரத்தில் தோழர்களைக் கண்டுபிடித்து அங்கேயே ஒரு படை அமைத்துக்கொள்ளுவது எளிதே.

5. இச் சமாதான தூதர், தமது வட்டாரத்தில் அல்லது குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஜனங்களுக்கு நேரடியாக உதவி செய்து, அவர்களுடன்

பழகுவார். ஆதலின், சங்கடமான நிலைமைகளில் வேலை செய்ய வரும்போது அவர் கலகக்காரர்களின் மத்தியில் விரும்பாத, சந்தேகிக்கப்படும் அந்நியராகத் தோன்றமாட்டார்.

6. சமாதான தூதர் மாசு மறுவற்ற குணங்கள் நிறைந்தவராகவும், பாரபட்சமற்றவராகவும், நீதி வழியில் நடப்பவர் என்று புகழ்பெற்றவராகவும் இருக்கவேண்டும்.

7. வரப்போகும் புயலுக்குப் பொதுவாக அறிகுறிகள் தென்படும் அல்லவா? எனவே, நெருப்பு மூளும்வரையில் காத்திராமல், சமாதானப் படை முன்னதாகவே வேலையில் ஈடுபட வேண்டும்.

8. இயக்கம் பரவினால், சில முழுநேர ஊழியர்கள் இருப்பது நலமே. ஆயினும் இது இன்றியமையாததல்ல. நல்ல, உண்மையுள்ள ஆண் பெண்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதுதான் நோக்கம். ஆகவே வாழ்க்கையில் வேறு வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தொண்டர்களாக முன்வர வேண்டும். இவர்களுக்குத் தங்களுடைய வட்டாரங்களில் உள்ள மக்களுடன் சிநேகப் பான்மையில் பழகப் போதிய ஓய்வு கிடைக்க வேண்டும். அத்துடன் இவர்கள் சமாதானப் படையின் அங்கத்தினருக்கு வேண்டிய தகுதிகளை உடையவர்களாக இருக்க வேண்டும்.

9. அமைக்கப் போகும் படையின் அங்கத்தினருக்குத் தனியான ஓர் உடையிருந்தால், நாளடைவில் சிறிதும் சிரமமில்லாமல் அவர்களைத் தெரிந்துகொள்ளலாம்.

இவை பொதுவான யோசனைகள்தான். இங்கே கூறியதை ஒட்டி ஒவ்வொரு இடமும் அதனதன் சட்டதிட்டங்களை அமைத்துக் கொள்ளலாம்.

சமாதானப் படைகள் அமைப்பதில் நான் நேரடியாகப் பங்கெடுத்துக்கொள்ளுவேன் என்கிற தவறான நம்பிக்கை வைக்க வேண்டாமென ஊழியர்களை எச்சரிக்க விரும்புகிறேன். எனக்கு அதற்கு வேண்டிய உடல் நலமோ, சக்தியோ, நேரமோ இல்லை. நான் அவசியம் செய்தாக வேண்டிய வேலைகளைச் செய்து முடிப்பதே என்னால் இயலாததாக இருக்கிறது. அவ்வப்போது கடிதங்கள் மூலமாக அல்லது இப் பத்திரிகை மூலமாக நான் யோசனை கூறி வழிகாட்டத்தான் முடியும். ஆகையால், இவ்வெண்ணத்தைப் பாராட்டி, தமக்குத் திறமை உண்டென்று நம்புகிறவர்கள் தாங்களே இம்முறையை ஆரம்பிக்கலாம். இங்கே கூறப்பட்டுள்ள படை, பெருங் காரியங்களைச் சாதிக்க முடியும் என்றும், இதன் பின்னர் உள்ள கருத்துக்கள், செயலுக்குக் கொண்டுவரத்தக்கவை என்றும் எனக்குத் தெரியும்.

—'எங் இந்தியா' – 18—6—1938

# 3

# ஹிந்து-முஸ்லிம் அடிதடி

காங்கிரஸின் அகிம்சை தாற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட பலாத்காரம் அல்லது செயலற்ற பலாத்காரம் என்பதற்கு ஆதாரம் தேவையாயின், ஹிந்து-முஸ்லிம் கலகங்களில் காணப்படும் ஒழுங்கற்ற, ஆனல் வெற்றிகரமான பலாத்காரமே போதுமானது. கிலாபத் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்கள் உள்ளத்தில் அகிம்சையோடிருந்திருப்பின், இன்று நாம் அவர்களிடையே ஓயாது காணுகின்ற மூர்க்கத்தனம் இராது. அடிதடிகளில் ஈடுபடுபவர்கள் காங்கிரஸ் வாதிகள் அல்ல என்றும் சொல்லமுடியாது. பலாத்காரமாக இருப்பவர் அனைவரையும் காங்கிரஸ்வாதிகள் அல்ல என்று விலக்கிவிட்டால், காங்கிரஸ் பொதுமக்களின் ஸ்தாபனமாக இராது. இக் கலகங்களில் பங்கெடுத்துக்கொள்ளுபவர்கள் பொதுமக்களிலிருந்து வருபவர்களே. மேலும், போட்டியிடும் காங்கிரஸ்வாதிகள் இன்று காங்கிரஸ் கூட்டங்களில் பலாத்காரத்தை உபயோகிப்பதை நாம் பார்க்கிறோம். காங்கிரஸ் தேர்தல்களில் நாம் காணும் வெட்கக்கேடான கட்டுப்பாடின்மையும் ஏமாற்றமும், காங்கிரஸின் பலாத்காரத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும். காங்கிரஸ்காரர்களில் அகிம்சையைக் கையாளுபவர் எவரேனும் இருந்தாலும், அவர்களைக் குறிப்பிடுவது கடினம். அவர்கள் காங்கிரஸில் பெரும்பாலோராய் இருந்து ஹிந்து-முஸ்லிம் கலகங்களில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டிருந்தால், அவைகளைத் தடுத்திருக்கலாம். இல்லையேல், அம் முயற்சியில் தங்களுடைய உயிரையாவது கொடுத்திருப்பார்கள். காங்கிரஸ்வாதிகளில் பெரும்பான்மையோர் உண்மையிலேயே அகிம்சைவாதிகளாக இருந்திருந்தால், அவர்களுக்கு முஸ்லிம்களின்மீது விரோதம் இல்லை என்பதை முஸ்லிம்களே ஒத்துக்கொண்டிருப்பார்கள். நியாயமற்ற மனப்போக்கு தங்களிடம் இல்லை என்று மட்டும் காங்கிரஸ்வாதிகள் சொல்லிவிட்டால் போதாது. நான் செய்வது சட்டப்படி நியாயமாக இருக்கலாம். ஆனல், அகிம்சைத் தராசில் வைத்து நிறுத்தால்,எனது நடத்தை படுதோல்வி யடையலாம். எனவே, அகிம்சையானது, வீரர்களின் அகிம்சையாக இருக்கவேண்டும். இது உள் உறுதியினின்றும் எழவேண்டும். ஆகையால்தான், பேடித்தனத்தை அகிம்சை என்னும் போர்வையால் மூடுவதைவிட, அகத்தில் பலாத்காரமிருந்தால், பலாத்காரமாகவே இருத்தல் நலம் என்று சொல்ல நான் தயங்கவில்லை. பேடித்தனத்தைவிடப் பலாத்காரம் என்றும் சிறந்தது. பலாத்காரத்தைக் கையாளுபவன் அகிம்சையாளனுக மாறிவிட இடமுண்டு. ஆனல் பேடி, அவ்விதம் மாற முடியும் என்ற நம்பிக்கை இல்லை.

[இக் குறிப்பை விவரித்து அதே இதழ் 'ஹரிஜனி'ல் "அதிகம் பிந்தி விடவில்லை" என்ற தலைப்பின் கீழ் காந்திஜி எழுதிய மற்றொரு கட்டுரை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :]

ஹிந்து-முஸ்லிம் அடிதடி என்ற தலைப்பின்கீழ் நான் விளக்கியிருப்பதுபோல், காங்கிரஸைப் பின்பற்றும் பொதுமக்கள் அகிம்சை யுடையவர்கள் என உரிமை கொண்டாடுவது சாத்தியமில்லை. அகிம்சை, இந்தியாவைப் பாதுகாப்பதைப் போலவே, ஹிந்து-முஸ்லிம் கலகங்களிலும் உபயோகிக்க வேண்டிய ஒரு மதக் கோட்பாடு போன்றது என்று நம்புகிற காங்கிரஸ்வாதிகள், தங்களிடையே இக்கொள்கையுடையவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க வேண்டும். இவர்கள் அகிம்சையை முதற்படியாகக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும். அவர்கள் அநேகமாக காங்கிரஸிலிருந்து விலகி, என்னைப்போல் வெளியிலிருந்தே அதன் மனமாற்றத்திற்காக உழைக்க நேரிடலாம். புது வழி நேரானதுதான்; ஆனால், செல்லுவதற்குக் கடினமானது. அது தனியே தேடியலைந்தவர்களின் எலும்புகளால் மேவப்பட்டுள்ளது. அவர்கள் வழியைக் கண்டுபிடியாமலே, ஆனால், தங்களுடைய நம்பிக்கைக்காக உயிர் வாழ்ந்தோம் என்ற மன நிறைவுடனேயே உயிர் நீத்தனர். சமாதானப் படைகள் அமைப்பதைப்பற்றி நான் எழுதியபோது, அவர்களுக்கு ஒரு நடைமுறையையும் காட்டியிருந்தேன். படைகள், தோன்றியதும் மறைந்தன. நடைமுறைத் திட்டமோ இன்றும் உளது. முஸ்லிம் கலகங்கள் போன்றவற்றில் மரணத்தை விரைந்து ஏற்றுக் கொள்ளுவதே திட்டமாகும். ஆனால், மாசு மறுவற்ற, பழி வாங்கும் எண்ணம் நீங்கிய உள்ளம் இல்லாவிட்டால், அப்படித் தற்கொலை செய்துகொள்ளுவது சட்ட விரோதமானதாகக் கருதப்படும்.

—'ஹரிஜன்' - 21—10—1939

# 4

# சிந்து மாகாணக் கலகங்கள்

சிந்துவில் நடந்த கலகங்களை மன வேதனையுடன் கவனித்து வந்தேன். எல்லாத் தீமைகளையும் தவிர்க்க எனக்கு வலிமை யிருப்பதாகப் பலர் நினைத்துத் தங்களையே ஏமாற்றிக் கொள்ளுகின்றனர். அவ்வாறிருந்தால் சந்தோஷப்படுவேன் என்றாலும், அத்தகைய திறமை கலப்பற்ற நன்மையாகாது. வரையறையின்றி நான் அதை உபயோகிப்பேனேயானால், மக்களைச் செயலற்றவர்களாக்கிவிடுவேன். தாராளமாக உபயோகிக்காவிட்டால், அவைகளால் பயன் ஒன்றுமில்லை. இப்போது எனக்குள்ள திறமை அனைத்தையும் உபயோகிக்கிறேன். ஆனால், அவை மிகவும் எல்லைக்குட்பட்டவை யாதலால் தீமை

பயப்பதில்லை. இதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். என் முக்கியமான வேலை, தமக்கே உதவி செய்துகொள்ள மக்களுக்குக் கற்பிப்பதுதான்.

ஷிகார்பூரிலிருந்து கீழ் வருமாறு ஒரு பரிதாபமான தந்தி வந்துள்ளது :

"கலகங்கள், கொள்ளை, தீமூட்டல். சுக்கூர் ஜில்லா கிராமங்களில் ஹிந்துக்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்படுகின்றனர். பெண்களையும் சிறுமிகளையும் கற்பழித்துத் தூக்கிச் செல்லுகின்றனர். ஹிந்துக்களின் உயிரும் பொருளும் ஆபத்திலிருக்கின்றன. நிலைமை வெகு மோசம். அரசாங்கத்தார் கொள்கை உறுதியில்லை. பரிசீலனைக் கமிட்டி ஒன்றை உடனே அனுப்புங்கள்; நேரில் பார்க்கட்டும்.—

தலைவர், ஹிந்து பொதுப் பஞ்சாயத்து."

சிந்துவிலிருந்து வந்த தந்திகளில் இது மூன்றாவதாகும். நான் கிலாபத் விஷயங்களைக் கவனித்துக்கொண்டிருந்தேன். உருவான ஆறுதல் எதுவும் அளிக்கக்கூடிய நிலையிலும் நான் இல்லை. ஆதலால், முதல் இரண்டு தந்திகளையும் நான் கவனிக்கவில்லை. ஷிகார்பூர் பஞ்சாயத்தார், உதவியளிக்க முடியாத நபரிடம் உதவிக்கு வந்துள்ளனர். நானே உதவியற்றிருக்கிறேன். கலகங்களையும், இன்னும் இவை போன்றவைகளையும் சமாளிக்கத்தக்க அளவுக்குக் காங்கிரஸ் அகிம்சையில் முன்னேறவில்லை. தன் கௌரவம் நிலைக்க வேண்டுமாயின், காங்கிரஸ் அந்த அளவுக்குத் தன்னை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். சமாதானப் படைகளைப்பற்றி முன்பு நான் சொல்லியிருந்தேன். அது அனுசரிக்க முடியாதது அல்லவாயினும், அதற்கு இன்னும் பக்குவமான காலம் வரவில்லை. தங்கள் எல்லைக்குட்பட்ட மக்களின் உயிரையும் பொருளையும் சிந்து சர்க்கார் காக்கவேண்டும் என்பதைப்பற்றிச் சந்தேகமேயில்லை. காரியம் அவர்களை மீறிவிட்டது போலிருக்கிறது. சிந்து பெயரளவில்தான் சுயேச்சையுடையது. ஆகவே, அந்த அளவுக்கு அது முந்திய அரசாங்கத்தைவிட உயிரையும் பொருளையும் காப்பதில் ஆற்றல் குன்றியுளது. ஏனெனில், போலீஸ், ராணுவ அலுவல்களில் இதற்குமுன் அதற்குப் பயிற்சி இல்லை. முந்திய கட்டுரைகளில், மத்திய அரசாங்கம் கலகங்களில் உயிர், பொருள் சேதம், இன்னும் இதைவிட மோசமான காரியங்களையும் தடுக்கும் ஆற்றலற்றிருக்கிறது என்று விளக்கியிருக்கிறேன். தான் விரும்பும்பொழுது அது தீங்கிழைப்பவர்களைத் தண்டித்துத் தீமை பரவாமல் செய்கிறது. அது ஏகாதிபத்திய வர்த்தகத்தின் காவல் ஒன்றுக்காகவே நிறுவப்பட்டது. ஆதலால், அவ் வாணிபத்திற்கு வேண்டிய அளவுக்கு மட்டுமே, அது அமைதியைப் பாதுகாப்பதில் ஈடுபடும். மக்களின் மெய்ப் பாதுகாப்பிற்கு ஏற்ற தகுதி அதனிடமில்லை. அவ்விதக் காவலுக்கு மக்களைத் தற்காப்புக் கலையில் பயில்வித்து, கலகங்கள் முதலியவை போன்ற சந்தர்ப்பங்களில் அவர்களுடைய ஒத்துழைப்பைப்

பெறுவது அவசியம். ஆனால், இது சாம்ராஜ்யத்தையே ஆபத்துக்கு உள்ளாக்குவதாகும்!

சிந்திகளுக்குப் பயன்படத்தக்க முறையில் நான் செய்யக் கூடிய ஒரே உதவி, அகிம்சை வழியைக் காட்டுவதேயாகும். ஆனால், அதை ஒரு நாளில் கற்க முடியாது. ஆயுதம் தாங்கி உயிரையும் பொருளையும் காக்கும் மற்ற வழி, உலகம் இதுகாறும் பின்பற்றி வந்துள்ளதே. தமக்குத் தாமே உதவுகிறவர்களுக்குத் தான் கடவுளும் உதவுவார். சிந்திகள் இதற்கு விலக்கல்ல. கொள்ளைக்காரர்கள், ஆக்கிரமித்துத் தாக்குவோர் முதலியோரிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளும் கலையை அவர்கள் கற்கவேண்டும். பத்திரமில்லை என உணர்ந்தாலும், தற்காத்துக் கொள்ளப் போதிய பலம் தங்களுக்கு இல்லாவிட்டாலும், அவர்கள் தாங்கள் வாழமுடியாத இடத்தை விட்டுவிட்டுப் போய்விட வேண்டும்.

—'ஹரிஜன்' - 2—12—1939


# 5

# சிந்து மக்களின் சோகம்-1

சிந்துவிலிருந்து வந்த பல கடிதங்களும், சுக்கூரிலும், ஷிகார்பூரிலும் சமீபத்தில் நடந்த கலகங்களைப்பற்றிய டாக்டர் சோயித்ராமின் நீண்ட அறிக்கையும் என் முன்னால் இருக்கின்றன. சிந்துவில் தேசீய அரசாங்கம் இருக்கிறதென்பதைச் சிந்து ஹிந்துக்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். சுருக்கமாகக் குறிப்பிடுவதற்காக நான் காங்கிரஸ் அரசாங்கம் என்று அடிக்கடி கூறியுள்ளேன். உண்மையில் இது தேசீய ஜனநாயக அரசாங்கமேயாகும். இது அந்நிய ஏகாதிபத்திய அரசாங்கத்தினின்றும் வேறுபட்டது; அதற்குப் பதிலாக அதன் ஸ்தானத்தில் இருப்பது. உள்நாட்டு வேறுபாடுகளையும் கட்சி ராஜீய காரியங்களையும்பற்றிப் பேசும்போது, காங்கிரஸ் அரசாங்கம், முஸ்லிம் லீக் அரசாங்கம் என்று குறிப்பிடலாம். ஆனால், மற்றக் காரியங்களைப் பொறுத்த மட்டில், தேசீய அரசாங்கம் என்றே நினைக்கவும் பேசவும் வேண்டும். எனவே, மனம் நொந்தவர்கள் தங்களுடைய தேசீய அரசாங்கத்திடமே முறையிட்டு, நியாயத்திற்கும் பொது அமைதிக்கும் ஏதுவாக மக்களின் மனத்தைப் பண்படுத்த வேண்டும். சதா குறுகிய சமூக மனப்பான்மையுடன் எண்ணுதல் தவறாகும். கண்முன்னே காணப்படும் உண்மைகளைப் பார்க்காமல் கண்ணை மூடிக்கொள்ளுவது கூடாதென்பதும் எனக்குத் தெரியும். ஆயினும், எதற்கும் சமூக மனப்பான்மையையே காரணமாக்குதல், தாழ்வு மனப்பான்மையுள்ளவர்களின் அறிகுறியாகும். தேசீய வாழ்வில் இன்று தாற்காலிகமாயுள்ள நோயை அது நிலைபெறச் செய்துவிடும்.



கபார்கான் தலைமையிலிருந்த செந்தொண்டர்கள் என்ற குதாய் கித்மத்கார் தொண்டர்களுடன் காந்திஜி—1938 அக்டோபர்.



பிரிட்டிஷ் மந்திரிசபை தூதுகோஷ்டித் தலைவர் லார்டு பெதிக் லாரென்ஸுடன்
காந்திஜி—1946, ஏப்ரல்.

முன் குறிப்பிட்டபடி, பொறுப்பற்ற ஏகாதிபத்தியத்திற்கு மாருகத் தேசீய அரசாங்கங்கள் செயலில் ஆற்றல் குன்றியவையாகவே இருக்கும். ஏனெனில், அவை மக்களின் பெயரில் அரசாட்சி செலுத்தி அவர்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றன. மக்களுடைய நல்லெண்ணம் இல்லாமல் அவை அரசாள முடியாது. எனவே, சட்ட விரோதமான குற்றங்களை ஓரளவுக்குத்தான் அவர்கள் சரிப்படுத்துவார்கள். ஆனால், சமூகக் கலகங்களைப் போன்ற குழப்பங்களை அடக்க அவர்களுக்கு ஆற்றலிருக்காது. பிரிட்டிஷ் ராணுவ உதவி அவர்களுக்கு எப்போதும் கிடைக்காது. பிரிட்டிஷ் ராணுவ உதவியை நம்பியிருக்க வேண்டுமாயின், தேசீய அரசாங்கங்கள் அவற்றின் தேசீயத் தன்மையை இழந்து விடும். மேலும், காங்கிரஸ் கொள்கையாகிய அகிம்சை எல்லாக் கட்சிகளிடையேயும் பரவி விட்டால், ராணுவமும் போலீஸும் கூட புறக்கணிக்கப்படும். பிற கட்சிகள் அகிம்சையைக் கைக்கொள்ளுமுன் காங்கிரஸ்காரர்கள் தங்களுடைய தினசரி வாழ்க்கையில் அகிம்சையைத் தாராளமாக வெளிக்காட்ட வேண்டும். இது எவ்வாறிருப்பினும், துன்பத்திற்கு உள்ளாகியுள்ள சிந்து மக்களுக்கு நான் அகிம்சையை ஒட்டித்தான் யோசனை கூற முடியும்.

சிந்துப் பிரச்னை, உண்மையில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் உள்ளதல்ல. முக்கியமாக இது, மெலிந்தோருக்கும் வலியோருக்கும் இடையேயுள்ள பிரச்னையாகும். ஹிந்துக்களுடன் சண்டையிடுவது போலவே தமக்குள்ளும் முஸ்லிம்கள் சண்டையிட்டுக் கொள்ளுகின்றனர். ஹிந்துக்களும் தங்களுக்குள் சண்டையிடுகின்றனர். எனவே, மூர்க்கத்தனத்தைத் தங்கத் தராசில் நிறுத்து அணுவளவும் ஏற்றத்தாழ்வின்றி எடை போட முற்படுவது தவருகும்.

ஆற்றலின்மைக்கு மறு பெயர் ஹிந்து மதமாகவும், உடல் வலிமைக்கு மறு பெயர் இஸ்லாமாகவும் ஆகிவிட்டது. அகிம்சையில் நம்பிக்கை வைக்கும்படி கற்பிக்கப்பட்டிருந்தும், ஹிந்துக்கள் கூட்டமாய்க் கூடி அகிம்சையின் வலிமையைக் காட்டியதில்லை. உடல் வலியை எதிர்க்கும்போதோ, அதன் மேன்மையை எப்போதுமே காட்டியதில்லை. உடல் வலி எவ்வளவு பெருமிதமாயிருந்தபோதிலும், அகிம்சை அதைவிட உயர்ந்தது என்பதுதான் இதன் சிறப்பு என்று நான் கூறியுள்ளேன். மேலும், இந்த அகிம்சையைத் தனி மனிதர்களைப் போலவே கூட்டங்களும், ஏன், கோடிக்கணக்கானவர்களுங்கூடச் சேர்ந்து உபயோகிக்கலாம் எனச் சொல்லியுள்ளேன். இச் சோதனை இன்னும் உருவாகி வருகிற நிலையிலேயே உள்ளது. இந்தச் சோதனை அனுசரிக்கத்தக்கதுதான் என்பதைக் காட்டப் போதுமான ஆதாரங்கள் கடந்த இருபது ஆண்டுகளில் போதிய அளவு குவிந்துள்ளன. இதைத் தொடர்ந்து நடத்துவதால் கேடு எதுவும் நிகழாது. ஆனால், அத்தகைய அகிம்சை கலப்பின்றி உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாக மட்டும் இருக்க வேண்டும்.

சுக்கூரிலோ, ஷிக்கார்பூரிலோ, பலசாலிகளின் அகிம்சையை நம்பி அதைக் கையாண்ட ஒருவராவது இருந்தாரெனக் காட்டக் கூடிய எதுவும் என் பரிசீலனைக்கு வரவில்லை. ஒருவராவது இருந்திருந்தால், கணேச சங்கர் வித்தியார்த்தியைப்பற்றி நமக்குத் தெரிந்ததைப்போல், அவரைப்பற்றியும் நிச்சயமாக நமக்குத் தெரிந்திருக்கும். அத்தகைய ஒருவர், முழுதும் ஆயுதம் தரித்த ஒருவரைவிடத் தைரியமாகவும் பெருமை தரும்படியாகவும் நடந்துகொள்ளுவார்.

சுக்கூரிலும், ஷிகார்பூரிலும் அநேக காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அகிம்சை முறையில் பயிற்சி பெற்றவர்கள் அல்ல. எனினும், குற்றம் அவர்களுடையதல்ல. அவர்களுக்கு இதைவிட அதிகம் தெரியாது. இப்போது அடிக்கடி நான் சொல்லுவதுபோல, நமது அகிம்சை பலசாலிகளின் அகிம்சையாக இருக்கவில்லை. பலவீனர்கள் திடீரென்று அதை வளர்த்துக்கொள்ள முடியாது. ஆனால், என் பெட்டியில் வேறு மருந்து இல்லை. என்னிடம் இருப்பதும், எப்போதும் தவறாதது மான இம் மருந்தைத்தான் நான் கொடுக்க முடியும். ஆகையால், 'வெற்றி பெறும் வரை திரும்பத் திரும்ப முயலுங்கள்' என்று தான் நான் சொல்லுவேன். உண்மையான வீரரிடத்தில் பொறாமை, கோபம், நம்பிக்கையின்மை, மரணத்தையோ உடல் காயத்தையோ பற்றிய அச்சம் முதலியவை இருக்கக்கூடாது. இந்த முக்கிய குணங்கள் இல்லாதவர்களுக்கு அகிம்சை நிச்சயமாக ஏற்றதல்ல. இப்படிப்பட்டவர்கள் இருக்கும் இடங்களிலெல்லாம் இவர்கள் பலவீனர்களைக் காக்கும் திறனுடையவர்களாக இருப்பார்கள். ஆனால், பலவீனர்கள் தங்களுக்கு உதவுவோரின் சொற்கேட்டு நடக்க வேண்டியது அவசியம்.

பலவீனர்கள், ஒருகாலும் ஆயுதந்தாங்கியவர்களின் உதவியை நம்ப வேண்டாம். அந்த உதவி அவர்களின் ஆற்றலின்மையை அதிகரிக்கும். அகிம்சையால் எதிர்க்கும் வலிமையில்லாவிட்டால், தங்களைப் பாதுகாக்கும் கலையைக் கற்றுக்கொள்ளட்டும். அதற்கு வேண்டியது வலிமையான உடல் அல்ல, வீரமுள்ள உள்ளமே. பிரம்மாண்டமான உருவமுள்ள நீக்ரோக்களுக்கு எதிரில் வெள்ளைச் சிறுவர்கள் குள்ளர்களைப் போன்றிருப்பார்கள். இருப்பினும், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், ஆப்பிரிக்க நீக்ரோக்கள் ஒரு வெள்ளைச் சிறுவனைக் கண்ணால் கண்டாலே பயந்து நடுங்கினார்கள். நீக்ரோக்களைக் கண்டு அஞ்சக்கூடாது என்று வெள்ளைச் சிறுவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்து பயிற்சி அளிக்கப்பட்டனர்.

ஆதலின், தம்மைத் தாமே காத்துக்கொள்ள விரும்புபவர்கள் கொல்லப்படுவதற்கோ, காயமடைவதற்கோ அஞ்சாதிருக்க முதன்முதலில் பழக வேண்டும். விளையாட்டின் விதிகளை அவர்கள் பின்பற்றுவது விரும்பத்தக்கது. திருடர்களுக்குள் கௌரவம் ஒன்றிருப்பது போல், சண்டையிடுபவர்களுக்குள்ளும்

கௌரவம் இருக்க வேண்டும். சிறுவர்களும், வயதானவர்களும் கொல்லப்படுவதையும், பெண்கள் கற்பழிக்கப்படுவதையும்பற்றி எவ்வளவோ கேள்விப்படுகிறோம். மனிதர் மிருகங்களாக வேண்டுமென்றால், அப்போதுங்கூட ஓரளவு மரியாதை இருக்க வேண்டும். மதத்தின் பெயரால் ஒரு கேவலமான செயல் நடந்தால், மதம் கேவலமடைகிறது. அடிப்படையில் ராஜீய காரணங்கள் இருந்தபோதிலும், இந்தத் துரதிருஷ்டமுள்ள நாட்டில் எல்லாக் கலகங்களும் மதத்தின் பெயராலேயே நடக்கின்றன. இப்போதுள்ள நிலைமை சகிக்க முடியாதது என்றே நான் முக்கியமாகச் சொல்ல விரும்புகிறேன். கோழைத்தனத்திற்குத் தேசீய அகராதியில் இடமே இருக்கக்கூடாது.

'ஹிஜ்ரத்'* செய்யும்படி யோசனை கூறியுள்ளேன். இதை மறுமுறையும் சொல்லுகிறேன். இது செய்ய முடியாததில்லை. மக்கள் அதன் மதிப்பை அறியவில்லை. உயர்ந்தவர்களும் வீரர்களும் முன்பு இதைக் கையாண்டிருக்கிறார்கள். திட்டம் போட்டு 'ஹிஜ்ரத்' செய்வதற்குத் தைரியமும் முன்யோசனையும் தேவை. பழைய ஏற்பாட்டில் இரண்டாம் புத்தகத்திற்குப் பெயர் யாத்திராகமம்; இது இஸ்ரேலியர்கள் திட்டமிட்டு ஓடிப் போனதை விவரிக்கிறது. அவர்கள் அவ்விதம் அஞ்ஞாத வாசம் செய்தபோது ராணுவ வாழ்க்கைக்குத் தங்களைப் பக்குவப்படுத்திக் கொண்டார்கள். தற்காலத்தில், கொடுமைக்குத் தப்பி ருஷ்யாவிலிருந்து வெளியேறி ஓடிய டௌகோபார்கள்† ஓர் உதாரணமாவர். இவர்கள் ராணுவ நெறியைப் பின்பற்றவில்லை. அகிம்சையைக் கையாண்டார்கள். ஆகவே, விரும்பி நாடு துறத்தலில் தவறு, மரியாதைக்கு இழுக்கு, பேடித்தனம் எதுவுமே இல்லை.

இந்தியா பரந்த நாடு. ஏழ்மை நாடேயாயினும் உள் நாட்டில் இடம் மாறிக் குடியேறுவதை, சிறப்பாகத் திறமைசாலிகள், உழைப்பாளிகள், உண்மையுள்ளவர்கள் குடியேறுவதைத் தாங்கும் சக்தியுடையது. சுக்கூர், ஷிகார்பூர் மக்களுக்கு இம் மூன்று குணங்களும் உண்டு. அவர்கள் அரசாங்கத்திற்கு முறையிட வேண்டும். அவர்களால் அதிக உதவி செய்ய முடியாது. ராஜீய ஒப்பந்தங்கள் ஒருபுறம் இருக்க, ஹிந்துக்களிலும் முஸ்லிம்களிலும் உள்ள உள்ளூர்த் தலைவர்கள் சந்தித்துப் பேசுவதால் பரஸ்பர நன்மை ஏற்படும். தம்முள் கொலையும், அதனால் ஏற்கெனவே இருக்கும் விரோதம் அதிகரிப்பதும் தனிப்பட்ட ஆளுக்கோ, கட்சிக்கோ நன்மை தருவதில்லை. ஆனால், உள்ளூரிலேயே ஒரு கௌரவமான ஒப்பந்தம் ஏற்படாவிட்டால்,

* 'ஹிஜ்ரத்' என்றால் ஓரிடத்தில் உள்ள மக்கள் அனைவரும் வெளியேறி மற்றோரிடத்திற்குக் குடியேறுவதாகும்.

† ஆன்மப் போரில் வல்லவர்களான டௌகோபார்களைப் பற்றிய குறிப்பை 'மகாத்மா காந்தி நூல்கள்' – 8-வது தொகுப்பு 39-ஆம் பக்கத்தில் காணலாம்.

பலாத்கார முறையிலோ, அன்பு நெறியிலோ தங்களையும் தங்கள் குடும்பங்கள், சொத்துக்களையும் காப்பாற்றிக்கொள்ள முடியாதென்று ஊர்வாசிகள் நினைத்தால், தங்கள் உயிருக்கும் தங்கள் பெண்களின் மானத்திற்கும் ஓயாது அஞ்சிக்கொண்டிருக்க வேண்டிய இடத்தைவிட்டு, அவர்கள் வெளியேறிவிட வேண்டும் என்பதே எனது நிச்சயமான அபிப்பிராயமாகும்.

—'ஹரிஜன்' - 6—1—1940

# 6

# சிந்து மக்களின் சோகம்-2

கேள்வி : 'சிந்து மக்களின் சோகம்' என்ற கட்டுரையில் சிந்து ஹிந்துக்கள் சிந்துவில் இருந்துகொண்டு தங்கள் கௌரவத்தையும் சுயமரியாதையையும் காத்துக்கொள்ள முடியாவிட்டால், 'ஹிஜ்ரத்' செய்ய யோசனை கூறியிருக்கிறீர்கள். அவர்கள் எங்கே போவார்களென எதிர்பார்க்கிறீர்கள்? அடைக்கலம் புகுமிடத்தில் யார் அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பார்கள்? 'ஹிஜ்ரத்' பரிகாரம் ஹிந்துக்களுக்கு மட்டுமா? காங்கிரஸ் மாகாணங்களில் "கொடுமை" என்று கூக்குரலிடும் முஸ்லிம்களுக்கு ஏன் அந்த யோசனை கூறவில்லை? இப்போதோ அவர்கள் சிறுபான்மையோராக இருக்கும் இடங்களில் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதிகப் பிரதிநிதித்துவமும், எண்ணிக்கையில் அதிகமாயிருக்கும் பஞ்சாபில் அளவுக்கு மேல் அதிகமாக, சட்டப்படி பெரும்பாலான பிரதிநிதித்துவமும் அளித்துள்ளீர்கள்.

**பதில் :** ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்களுடைய மரியாதையை இழக்காமல் வாழ முடியாதவர்கள், ஒடுக்கப்படுவதாக உணருபவர்கள் எல்லோருக்குமே வேறிடத்துக்குக் குடியேறும்படி நான் கூறியுள்ள யோசனை பொருந்தும். முஸ்லிம்கள் சிறுபான்மையோராக இருக்குமிடத்தில், அவர்கள் உண்மையிலேயே ஒடுக்கப்பட்டு, என்னிடம் யோசனைக்கு வருவார்களாயின், சிந்து ஹிந்துக்களுக்குக் கூறிய யோசனையையே அவர்களுக்கும் கூறுவேன். ஆனால், பொதுவாக அவர்கள் சிறுபான்மையோராக இருந்தாலும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுகின்றனர். மிகக் குறைந்த எண்ணிக்கையினரேயாயினும், தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் தீரமிருந்தால், தாங்கள் வசிக்கும் இடத்தைவிட்டு அகல வேண்டாம் என்று சிந்திகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறேன். சுயமரியாதை உணர்ச்சி இருந்த போதிலும், அகிம்சையினால் வரும் ஆற்றலோ, பதிலுக்குப் பதில் கொடுக்கும் திறமையோ இல்லாதவர்களுக்குத்தான் என் யோசனை பொருந்தும்.

அகதிகள் இடம் பெயர்ந்தபின் என்ன செய்வதென்னும் கேள்வி, இரண்டாந்தர முக்கியம் வாய்ந்தது தான். இந்தியாவைப் போன்ற பரந்த நாட்டில் சில ஆயிரம் அகதிகள் எளிதில் இடம்பெறலாம். சிந்திகள் விடா முயற்சியுடையவர்கள்; உலகமெங்கும் பரவியிருக்கின்றனர். பொதுவாக அவர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதற்குக்கூட அவசியமிருக்குமென நான் நினைக்கவில்லை. லிம்டியிலிருந்து வந்து தீரமாயும் மௌனமாயும் தமது அஞ்ஞாதவாசத்தைச் சகித்துவரும் அகதிகள் இருக்கின்றார்கள் என்பது அவர்களுக்குத் தெரியட்டும். கௌரவத்தைப் பற்றிய நுண்ணிய உணர்ச்சி ஒவ்வொரு துன்பத்தையும் இன்பமாக மாற்றுகிறது. ஆனால், இடம் பெயர வேண்டிய அவசியம் இராது போகலாம். முஸ்லிம் தலைவர்கள் தங்கள் பொறுப்பை உணருவதன் அறிகுறிகள் தென்படுகின்றன. சம்பந்தப்பட்ட ஹிந்துக்கள் தாங்கள் பத்திரமாக இருப்பதாக உணரும்படி செய்ய அவர்கள் முயற்சி எடுக்கின்றனர். இப்படி நடந்தால் அதுவே சரி.

நான் கிளப்பியுள்ள இப்பெரிய பிரச்னைக்கும், அலிசகோதரர்களுடன் நான் நட்புரிமை பூணுதற்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை. சமூக ஒற்றுமை சம்பந்தமாக நான் செய்த எதற்காகவும் நான் வருந்தவில்லை. அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் அப்படியே மறுமுறையும் செய்வேன். துரதிருஷ்டவசமாக, கிலாபத் நாட்களின் ஒற்றுமை தாற்காலிகமாகப் போய்விட்டபோதிலும், அதனால் எந்தச் சமூகத்திற்கும் நஷ்டமில்லை. சமூகத் தீர்ப்பிற்கு என்னை நீங்கள் பொறுப்பாக்குவது தவறு. நாம் அதன்கீழ் வாழ்கிறோம். அதை நீக்கிவிட்டு அந்த இடத்தில் எல்லோராலும் விரும்பி வைக்கத்தக்க பரிகாரம் ஒன்றை இன்னும் நாம் கண்டுபிடிக்கவில்லை என்கிற உண்மையைத் தவிர, அதில் எச் சமூகமும் பாராட்டத்தக்கது ஒன்றுமில்லை.

—'ஹரிஜன்' - 3—2—1940

# 7

# சிந்து காங்கிரஸ்வாதிகளின் கடமை

சிந்து காங்கிரஸ்காரர்களின் நிலைமை பொறாமைப் படத்தக்கதல்ல. அவர்களுக்கு இது வெகு கஷ்டமான காலம். அவர்களின் அகிம்சை, அது அவர்களிடத்தில் இருக்குமாயின், தங்கள் உயிருக்கு அஞ்சி வாழ்பவர்களுக்குப் பலனளிக்கவில்லை. வேறு யாரும் அவர்களுக்கு உதவவில்லை என்பது உண்மைதான். மற்றவர்களைப்போல் தங்களைத் தற்காத்துக் கொள்ளவோ, காங்கிரஸ்

காரர்களென எதிர்பார்க்கப்படும் முறையில் தங்களைக் காத்துக் கொள்ளவோ, கற்றுக்கொள்ளவேண்டுமெனத் துவக்கத்திலேயே அவர்களை எச்சரித்தேன். சில இடங்களில் தேசீயப் படைகள் அமைக்கின்றனர். அவ்வாறு செய்பவர்கள், காங்கிரஸ்வாதிகள் தங்களுக்குத் துணையாக இருந்து வழிகாட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஏனெனில், இவர்கள் இதுகாறும் அவர்களுக்குத் துணையாகவும், வழிகாட்டிகளாகவும் இருந்திருக்கின்றனர். தாங்கள் ஆயுதம் தாங்கும் உத்தேசம் இல்லாமலே மக்களுக்குத் தீரமூட்டி, ஆயுதத்துடனே, அது இல்லாமலோ, தற்காத்துக்கொள்ள அவர்களுக்குப் பயிற்சி அளிக்கலாமென சில காங்கிரஸ்வாதிகள் எண்ணுகின்றனர். இக் கேள்வி முக்கியமாகி விட்டது. எனவே, அதற்கு உடனே விடையளிக்க வேண்டும். சமீபத்தில் பூனாவில் நடந்த அ. இ. கா. கமிட்டி அவ் விஷயமாக மிகத் தெளிவாக ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதன்படி, அத் தீர்மானத்தை மீறாமல், எந்தக் காங்கிரஸ்வாதியும், நான்கணா அங்கத்தினர்கூட தற்காப்புப் படைகள் அமைக்கவோ, அமைப்பதில் உதவி செய்யவோ கூடாதென்பது மிகத் தெளிவாயிருக்கிறது. தற்காப்பில் ஈடுபட்டிருக்கும் கூட்டங்களுக்குத் துணை புரிய வேண்டுமென்று உணரும் திறமையுடைய காங்கிரஸ்காரர்களின் கடமை, அச்சத்தால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு விரைந்து சென்று உதவுவதேயாகும். காங்கிரஸிலிருந்து விலகிக்கொண்டு அவர்கள் இவ்வாறு செய்யலாம். இவ்வாறு செய்வதனால், அவர்கள் காங்கிரஸின் செல்வாக்கை அதிகரிப்பதுமல்லாமல், தாங்களும் அதிகமாகப் பயன்படுவார்கள். துணைபுரிய வேண்டுமென்ற உணர்ச்சியே அவர்களுடைய நடவடிக்கையின் போக்கை நிச்சயிக்கும்.

—'ஹரிஜன்' - 1—9—1940

# 8

# சிந்துவில் பொருள் சேதம்

ஸ்ரீ தாராசந்த் டி. கஜ்ராவும், ஸ்ரீ சி. டி. வலேசாவும் பின்வரும் அச்சிட்ட கடிதத்தைப் பலருக்கும் சுற்றறிக்கையாக அனுப்பியுள்ளார்கள்:

"'சிந்துவில் தற்போது நிலவும் கட்டுக்கடங்காத நிலைமையைப் பற்றி ஒரு குறிப்பு' என்ற எங்கள் முந்திய சுற்றறிக்கை கிடைத்திருக்கும் என்று நம்புகிறோம். 'சிந்துவில் கட்டுக்கடங்காத நெருக்கடியால் விளைந்த பொருள் அழிவு' என்ற மற்றொரு சுற்றறிக்கையை இத்துடன் அனுப்புகிறோம். பொது மக்களிடமிருந்தோ, அதிகாரிகளிடமிருந்தோ பண உதவி ஒன்றுமின்றி இடம் பெயர்ந்துகொண்டிருப்பவர்களின் மௌனமான துக்கத்தின் கதைதான்

இது. வேறு இடங்களில் இதைப்போன்ற சம்பவத்திற்கு உலகம் எங்கணு மிருந்தும் ஆதரவும் அனுதாபமும் கிடைத்திருக்கும். எங்கள் மாகாணத்தில் உங்களுக்கிருக்கும் அக்கறை வளர்ச்சி அடையுமென்று நம்புகிறோம்.''

கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அறிக்கையிலிருந்து பின்வரு வனவற்றை எடுத்துத் தருகிறேன்:

''சிந்துவில் இப்போதிருக்கும் கட்டுக்கடங்காத நிலைமை, மாகாணத்தின் பொருளாதார வாழ்க்கைக்குப் பெரும்கேடு விளைவித்திருக்கிறது. சிந்து கிராமங்களின் வாழ்வு அறவே அழியும் நிலையிலிருக்கிறது. குடியானவர்களின் சொத்தும் ஒரே ஆதரவும் எருதுகளும் கறவை மாடுகளும்தான். இவைகளைக் குடியானவர்கள் கொள்ளை கொடுத்துவிட்டு இரண்டுமற்று இருக்கின்றனர். ஆடுமாடுகளைத் திருடுதல் அளவுக்கு மீறிவிட்டது. பயிரிடுவோர் பகல் முழுதும் உழைத்து, இரவிலும் கண்ணுறக்கமின்றி மாடுகள் திருட்டுப் போய் விடாமல் காவல் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

''கிராமங்களிலிருக்கும் ஹிந்துக்களுக்குத் திருடர்களையும் கொள்ளைக் காரர்களையும் எதிர்க்கும் அளவுக்குப் பலம் இல்லை. ஆகையால், விவசாயிகள் சிறு ஊர்களிலிருந்து பெரிய ஊர்களுக்கும், பெரிய ஊர்களிலிருந்து பட்டணங்களுக்கும் குடியேறி வருகின்றனர்.

''இக்குடியெழுச்சி இயக்கத்தைச் சிறிது அறிந்துகொள்ள, சிந்துவின் 61 தாலுக்காக்களில் ஒன்ருகிய ஹைதராபாத் தாலுக்காவைப் பற்றிய விவரங்களைக் கீழே கொடுக்கிறோம். இவை, ஆசிரியர் கனஷியாம். எம். எல். ஏ. (காங்கிரஸ்–ஹைதராபாத் கிராமத் தொகுதி) அவர்களால் சேகரிக்கப்பட்டவை. சில ஊர்களில் அநேகமாக எல்லா ஹிந்துக் குடும்பங்களும் வெளியேறி விட்டன. மற்ற ஊர்களில் ஏறக்குறையப் பாதி ஹிந்துக்கள் வெளியேறி யிருக்கின்றனர்.''

பின்னர், ஹைதராபாத் என்னும் ஒரே தாலுக்காவின் 42 கிராமங்களிலிருந்து வெளியேறியவர்களின் விவரங்களைக் கொடுக்கின்றனர். 17 கிராமங்களில் ஹிந்துக் குடும்பங்கள் அனைத்தும் கிளம்பிவிட்டன. சில ஊர்களில் ஒரே குடும்பம் மிகுந் திருக்கிறது. மற்ற ஊர்களில் நூற்றுக்கு ஐம்பதுக்கு மேல் வெளியேறி யிருக்கின்றனர்.

அறிக்கை தயாரித்தவர்கள், எண்ணிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுவதாவது:

''மேலே கொடுத்துள்ள எண்களின் முழு அர்த்தத்தை அறிந்துகொள்ளுவதற்கு, மாகாணத்தில் மிகச் சிறப்பாக அமைந்துள்ள இடங்களில், ஹைதராபாத் தாலுக்கா ஒன்று என்பது நினைவில் இருக்க வேண்டும். இது ஜில்லாத் தலைநகரைச் சுற்றிலும் இருக்கிறது. ஹைதராபாத் ஜில்லாவே மாகாணத்தின் நடுப்பாகமாகும். கிழக்குப் பாலைவன எல்லையும் மலைப்பாங்கான மேற்கு எல்லையும் வெகு தூரத்தில் இருக்கின்றன. சமீபத்தில் அருவருக்கத்தக்க அட்டூழியங்கள் நடந்த சுக்கூர் ஜில்லாவும்கூட ஹைதராபாத்துக்கு வெகு தூரத்தில் இருக்கிறது. மாகாணத்தின் மிகவும் பத்திரமான பாகத்திலேயே நிலைமை இப்படி இருப்பின், தாடு, ஜகோபாபாத், லார்க்கானு,

சக்கூர் முதலிய ஜில்லாக்களிலுள்ள தாலுக்காக்களின் கிராமங்களிலிருந்து எத்தனை பேர்கள் இடம் பெயர்ந்திருக்க வேண்டும் என்பதை எளிதில் கற்பனை செய்துகொள்ளலாம்.''

அறிக்கையின் மற்றப் பகுதிகளை நான் இங்கே திருப்பி எழுத வேண்டியதில்லை. அது முழுதும் ஹிந்துக்களுக்கு நேர்ந்துள்ள பெரும் துயரத்தைப் பற்றிய கண்ணியமான, பாரபட்சமற்ற வரலாறே. இது முஸ்லிம்களையும் பாதிக்கத் துவங்கிவிட்டது என்பதை இவ்வரலாறு காட்டுகிறது. சிந்து ஹிந்துக்கள் தீவிர முயற்சியுடையவர்கள். அவர்கள், முஸ்லிம் விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்கின்றனர். இருவரும் நெருங்கி இணைக்கப்பட்டிருக்கின்றனர். கொடூரமான வகுப்புவாத மனப்பான்மை சமீப காலத்தில் முளைத்து வளர்ந்ததாகும். கட்டுப்பாடின்மை, பல முகங்களையுடைய கொடிய மிருகம். முடிவில், அதற்குக் காரணமாயிருந்தவர்கள் உள்பட அனைவருக்கும் இது தீங்கு இழைக்கிறது.

சிந்துவின் பெருந்துயரம் அகில இந்தியாவுக்கும் கவலையைக் கொடுக்கக் கூடிய விஷயம் என்று இக்கடிதத்தை எழுதியவர்கள் குறிப்பிடுவது மிகவும் சரியே. முஸ்லிம் லீக், ஹிந்து மகா சபையைப் போலவே காங்கிரஸும், சரியான மனப்பான்மையோடு நிலைமையைச் சீர்செய்ய வேண்டியது கடமையாகும். இந்நிலையை எவ்வாறு கையாளுகிறார்கள் என்பதைப் பொறுத்துத் தான் சிந்து அரசாங்கத்தை மதிப்பிட முடியும். வளம் பெருக்கும் சிந்து நதிப் பாய்ச்சல் உள்ள, புகழ் படைத்த நமது பண்டைக் காலத்தின் சின்னங்கள் நிறைந்த இந்தியாவின் ஒரு மாகாணம், கட்டுப்பாடின்மையால் பாழாக்கப்படுவதை மத்திய அரசாங்கமும் கவலையற்றுப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. உற்ற காலத்தில் அதை அடக்காவிட்டால், இவ்விஷயம் சிந்துவின் எல்லையையும் கடந்துவிடும். நல்லதோ, தீயதோ, இந்தியாவின் ஒரு பாகத்தில் நடப்பது முடிவில் தேசம் முழுவதையும் பாதிக்கவே செய்யும்.

—'ஹரிஜன்' – 15—9—1940

## 9

# சிந்து ஹிந்துக்கள்

சிந்துவின் நிலைமையைப் பற்றி ஸ்ரீ ஷாம்லால் கித்வானி எழுதிய கடிதத்திலிருந்து பின் வருவனவற்றைக் குறிப்பிடுகிறேன்:

''அகிம்சை சம்பந்தமாக நீங்கள் கூறிய யோசனையை, சிந்து ஹிந்துக்களில் நாங்கள் பலரும் பின்பற்ற இயலாதவர்களாக இருக்கிறோம். இது, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் உபதேசத்திற்கு முற்றிலும் முரணாக இருக்கிறது.

எங்களை நாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியாவிட்டால், வேறு எங்காவது இடம் பெயர்ந்து போகும்படியும் கூறுகிறீர்கள். பிரத்தியட்சக் காரணங்களுக்காக இந்த யோசனையையும் நாங்கள் பின்பற்றுவது, நடைமுறையில் சாத்தியமானதாகத் தோன்றவில்லை.

"அந்தக் காரணங்களில் பல உங்களுக்குத் தெரியும். சிலவற்றை 'ஹரிஜனி'ல் சமீபத்தில் எழுதிய உங்களுடைய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளீர்கள். அதை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம். சிந்துவில் நூற்றுக்கு 27 பேரே ஹிந்துக்கள். எனினும், நூற்றுக்கு ஐம்பது விகித நிலம் அவர்களிடம் இருக்கிறது. மாகாணம் முழுதும் நாங்கள் சிதறுண்டிருக்கிறோம். சில கிராமங்களில் எங்கள் ஜனத்தொகை நூற்றுக்கு இரண்டிலிருந்து பத்துவரை இருக்கிறது. மாகாணத்தின் வருமான வரியில் ஏறக்குறைய முழுவதையும் நாங்கள் கொடுக்கிறோம். நில வரியில் ஐம்பது சத விகிதமும், சுங்க வரியில் அநேகமாக முழுவதையுமே கொடுப்பது நாங்கள் தான். உங்கள் யோசனையைப் பின்பற்றினால், நாங்கள் கோழைகளாவதுமன்றி, நிலமும் தேசமும் அற்றவர்களாவோம். மற்ற மாகாணங்களுக்குக் குடி போவதும் அபாயமாகும். ஒரு சமூகம் ஆக்கிரமித்து எங்களைக் கொடுமைப்படுத்துவதைச் சரியென நினைக்கிறது. அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அரசாங்கத்தின் பாதுகாப்பும் எங்களுக்கு இல்லை. இந்நிலையில் நாங்கள் வேறு இடத்திற்குக் குடியேறுவது, எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்ள எங்களுக்குச் சக்தியில்லை என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுவதாகும். தவிர, அத்துடன் ஜனநாயக ஆட்சியின் தோல்வியையும் ஒப்புக்கொள்ளுவதாகும். இதற்கு மாறாக, சிந்து மக்களை, குறிப்பாக ஹிந்துக்களை ஆயுத உபயோகத்தில் நீங்கள் பயிற்சி செய்யச் சொல்லியிருந்தால், அவர்கள் தங்களைச் சிறந்த முறையில் பாதுகாத்துக்கொண்டிருப்பார்கள். சென்ற சில மாதங்களில் வேண்டுமென்றே பலவிடங்களிலும் ஹிந்துக்கள் படுகொலையுண்ட கோர நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட்டிருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்."

இக்கடிதம் வந்த அதே சமயத்தில், தங்களுடைய சாதாரண அலுவல்களில் ஈடுபட்டிருந்த ஐந்து ஹிந்துக்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர் எனப் பத்திரிகைகளில் வாசித்தேன். வழக்கம்போல் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவில்லை. இது, சிந்துவில் இருந்து ஹிந்துக்களை வெளியே விரட்டுவதற்கான பயங்கரத் திட்டமா? அல்லது அது வேறு ஏதாவதொரு திட்டமா? சிந்துவிலுள்ள யாராவதொருவர் அக்கேள்விக்கு விடையளிக்க வேண்டியது கடமையாகும்.

ஸ்ரீ கித்வானி அகிம்சை வழியை ஆதரிக்கவில்லை. என் யோசனை, கிருஷ்ண பகவானுடைய உபதேசங்களுக்கு முரணானது என அவர் நினைக்கிறார். அவருக்குச் சரியெனத் தோன்றும் காரணங்களால், ஹிந்துக்கள் அகிம்சை நெறியைக் கையாள முடியாது என்று எண்ணுகிறார். அவர்கள் வெளியேறி வேறு இடத்திற்குக் குடி போவது முடியாத காரியம் என்பதும் அவரது கருத்து. ஆனால், நான் அவர்களுக்கு, ஆயுதம் தாங்கி தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் யோசனையைக் கூற வேண்டும்

என்கிறார். இது இயற்கை வைத்திய நிபுணரை, ஆங்கில மருந்துகளை எழுதிக் கொடுக்கச் சொல்லுவது போலிருக்கிறது! அவர் சரியான மருந்துகளை எழுதித் தருவார் என்று நம்பலாமா? ஆயுதங்களை உபயோகிக்க எனக்கே சக்தி இராதபோது, என் யோசனைக்கு என்ன மதிப்பு இருக்க முடியும்? தன் தொழிலை நன்கு அறிந்த ஒரு வைத்தியரிடம் ஸ்ரீ கித்வானி போக வேண்டும். அவ் வைத்தியர் சரியான சந்தர்ப்பங்களில் விரைந்து சென்று உதவி அளிக்கவும், வேண்டிய பயிற்சியளிக்கவும் எப்போதும் தயாராக இருப்பார். அகிம்சையில் நம்பிக்கையற்றவர்களுக்கு ஆயுதந் தாங்கிய தற்காப்பே பரிகாரம் என்று நான் முன்பே கூறியுள்ளேன். அதை எப்படிச் செய்வது என்று கேட்டால், 'எனக்குத் தெரியாது' என்றுதான் நான் சொல்ல முடியும்.

அசாத்தியமான நிபந்தனைகளை விதித்து, அதன்படி நான் சிந்து ஹிந்துக்களுக்கு வழிகாட்டுமாறு, தாம் ஒன்றும் செய்யாத ஸ்ரீ கித்வானி, என்னை எதிர்பார்ப்பது சிந்துவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியுடன் விளையாடுவதாகும். அவர் சொல்லுகிற பரிகாரத்தில் அவருக்கே உண்மையான நம்பிக்கை யிருந்தால், தாமும் உடனே பயிற்சி பெற்று, பீதியடைந்துள்ள சிந்து ஹிந்துக்களை ஆயுதந் தாங்கிய தற்காப்பு வழியில் நடத்த வேண்டும். சிந்துத் தலைவர்கள் வெளியிலிருந்து உதவி எதிர்பார்ப்பது தவறாகும். இத்தகைய கடிதங்கள் எழுதுவதை அவர்கள் நிறுத்த வேண்டும். ஆழ்ந்து யோசித்துப் பலாத்கார முறையிலோ, அகிம்சை முறையிலோ ஒரு செயல் திட்டம் வகுத்து, அதை உறுதியாகவும் தீரமாகவும் பின்பற்ற வேண்டும்.

சிந்துவிலுள்ள பொறுப்புள்ள முஸ்லிம்களுக்கு, அவர்களுடைய நன்மதிப்புக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறதென்று நான் சொல்லத் துணிகிறேன். குற்றமற்ற மக்களின் மதியற்ற இக் கொலைகளை அவர்கள் நிறுத்த முடியாவிட்டால், சரித்திரம் அவர்களைக் குற்றவாளிகள் என்றே தீர்ப்பளிக்கும். இந்த அட்டூழியங்களை நிறுத்த அவர்களுக்கு ஆற்றல் இல்லை என யாரையும் நம்ப வைக்க முடியாது. கொலைகாரருடைய சொந்தச் சமூகத்தின் மௌனமான அனுதாபமின்றி இத்தகைய செயல்கள் நடைபெறுவது அசாத்தியமாகும்.

—'ஹரிஜன்'–6—10—1940

## 10

# மேலும் அவதூறு

**கேள்வி:** இந்தியாவின் மீது படையெடுத்து இங்கே முஸ்லிம் ராஜ்யத்தை ஏற்படுத்துவதற்காக அமானுல்லா கானை அழைக்க, அலி சகோதரர்கள் செய்த சதியில் சேர நீங்கள் தயங்க

வில்லை. அப்போதிருந்த அமீர் பிரிட்டிஷாருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டாம் என்று யோசனை கூறிய தந்தி ஒன்றை மௌலானு முகமது அலிக்காக நீங்கள் தயாரித்தீர்கள். காலஞ்சென்ற சுவாமி சிரத்தானந்தர் அதைப் பார்த்ததாகச் சொல்லுகிருர்கள். சிந்துவை பம்பாய் மாகாணத்தோடு திரும்பவும் பிணைத்தால்தான், மீண்டும் இங்கு சட்டபூர்வமான அமைதி நிலவும். இதைக் கேட்பதை விட்டுவிட்டு, சிந்து ஹிந்துக்கள் தங்கள் உடைமைகளையும் வீடுகளையும் தங்களை ஒடுக்கும் முஸ்லிம்களுக்குப் பரிசாக அளித்துவிட வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். அறிவும் முன்னேற்றமும் நிறைந்த இக் காலத்தில் சிறுபான்மையோர் தங்களுடைய உரிமைகளைச் செம்மையாகப் பாதுகாக்க விரும்புகின்றனரே யல்லாமல், பரிபூரண வாழ்வுக்குரிய வெறும் இதோபதேசங்களை விரும்பவில்லை. இது ஏன் உங்களுக்கு விளங்கவில்லை?

பதில்: இத்தகைய கடிதங்கள் பல எனக்கு வருகின்றன. இதுவரை நான் அவைகளைப் பொருட்படுத்தவில்லை. ஆனல், இப்போது செய்தியை ஹிந்து மகாசபைக்காரர்கள் திருத்தியமைத்து விரிவுபடுத்தி அச்சிட்டிருக்கிருர்கள் என்று அறிகிறேன். இவ்வளவு அதிகாரபூர்வமாகச் சொல்லுவதைத் தம்மைப் போன்றவர்கள் நம்பும்படி நேருமென்று கோபம் கொண்ட ஒருவர், கடிதத்தின் மூலம் பயமுறுத்துகிருர். ஆதலால், என் நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக இக் கேள்விக்கு நான் விடையளித்தாக வேண்டும். ஒவ்வொரு பொய் அறிக்கையையும், என் எழுத்துக்களைத் திரித்துக் கூறுதலையும் நான் மறுக்க வேண்டுமானல், எனது வாழ்க்கை ஒரு சுமையாகிவிடும். அத்தகைய மண்சுவர்ப் பாதுகாப்பை நாடும் புகழ் பயனற்றது. அமீரோடு சதி செய்தேன் என்ற குற்றச்சாட்டில் அணுவளவு உண்மையும் இல்லை. மேலும் இக்குற்றச்சாட்டை அலி சகோதரர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது, அவர்களும் அதைப் பலமாக மறுத்துவிட்டனர். நான் அவர்களை முற்றிலும் நம்புகிறேன். மௌலானு முகமது அலியின் சார்பாக அப்போது இருந்த அமீருக்கு எவ்விதத் தந்தியும் தயாரித்ததாக எனக்கு நினைவு இல்லை. இவர்கள் குறிப்பிடும் அத்தந்தி யாதொரு அபாயமுமற்றது. இவர்களின் யூகங்களுக்கு அதில் ஆதாரம் இல்லை. காலஞ்சென்ற சுவாமிஜி உறுதிப்படுத்த அதைப் பற்றி என்னை ஒரு போதும் கேட்டதில்லை. நிச்சயமாகத் தெரியாமலோ, விஷயத்திற்குப் பொருத்தமற்றோ, இறந்தவர்களைச் சம்பந்தப்படுத்திப் பேசுவது தவருகும். 'எங் இந்தியா'வில் நான் எழுதியதைக் கொண்டு* இக் கதை கட்டப்பட்டுள்ளது. அவற்றிலிருந்து செய்த யூகங்கள்

* 'எங் இந்தியா'வில் எழுதியதாக காந்திஜி மேலே குறிப்பிடும் கட்டுரைகளை இத்தொகுப்பின் முன் அத்தியாயங்களில் காணலாம்.

முற்றிலும் நியாயமற்றவை. ஆங்கிலேயரை விரட்டுவதற்காக, எந்த வல்லரசையும் இந்தியாவின்மேல் படை எடுக்கச் சொல்லி அழைக்கும் குற்றத்திற்கு நான் ஆளாகமாட்டேன். முதலில், அது என் கொள்கையாகிய அகிம்சை நெறிக்கே முரணுனது. வலிமையுள்ள பல வல்லரசுகள் சேர்ந்துகொண்டாலன்றி இந்தியாவை வெல்ல முடியாது என்று நினைக்கும் அளவுக்கு, நான் ஆங்கிலேயருடைய தீரத்திற்கும் ஆயுத பலத்திற்கும் மிகவும் மதிப்புக் கொடுக்கிறேன். எப்படி இருந்தாலும், பிரிட்டிஷ் ஆட்சிக்கு மாற்ருகப் பிறிதொரு அந்நிய ஆட்சியை நிறுவ எனக்கு ஆசையில்லை. நான் விரும்புவது கலப்பற்ற சுய ஆட்சியே. அது எவ்வளவு தரக் குறைவாக இருந்தாலும் நான் கவலைப்படவில்லை. இப்போது எனக்கு விரோதமாக உபயோகிக்க முயற்சி செய்யப்படுகின்ற கட்டுரைகளை 'எங் இந்தியா'வில் நான் எழுதியபோது எனது கொள்கையும் நிலைமையும் எப்படி இருந்தனவோ, அது போலவேதான் இன்றும் இருக்கின்றன. மேலும், எனக்கு ரகசிய முறைகளில் நம்பிக்கை இல்லை என்பதை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

சிந்துவைப் பொறுத்த அளவில் நான் கூறிய யோசனையில் யாதொரு மாறுதலும் இல்லை. சிந்துவைப் பம்பாய் மாகாணத்தில் சேர்ப்பது வேறு காரணங்களுக்காக நலமாயிருக்கலாம் அல்லது நலமின்றியும் போகலாம். ஆனல், உயிருக்கும் பொருளுக்கும் இன்னும் பாதுகாப்பு வேண்டும் என்ருல், அது நிச்சயமாக நல்லதல்ல. ஹிந்துவாயினும் முஸ்லிமாயினும், ஒவ்வொரு இந்தியரும் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளும் கலையைக் கற்க வேண்டும். இது தான் உண்மையான ஜனநாயக ஆட்சியின் நிபந்தனையாகும். ஆனல், எந்த அரசும், தங்களைப் பாதுகாக்கும் கடமையில் பங்கெடுக்க மறுப்பவர்களைக் காப்பாற்ற முடியாது.

—'ஹரிஜன்' - 10—2—1940

## 11

# நோவாகாலி ஹிந்துக்களுக்கு ஆலோசனை

நான் மாவி கந்தாவில் இருந்தபோது, மனேரஞ்சன் பாபுவும், பிற நண்பர்களும் நோவாகாலியிலிருந்து வந்து தங்கள் பிரதேசத்தில் உள்ள ஹிந்துக்கள் படும் துன்பங்களைப் பற்றி என்னிடம் பேச வந்தார்கள். இதைப் பற்றிச் சில காலமாக மனேரஞ்

சன் பாபு என்னுடன் கடிதப் போக்குவரவு வைத்துக்கொண்டிருந்தார். அவர்களுடைய துன்பங்களுக்கான காரணங்களை நான் ஆராயவில்லை. அவ்வாறு செய்ய எனக்கு நேரமும் இல்லை, விருப்பமும் இல்லை. அது முக்கியமாக மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் வேலையாகும். இறுதியில் அப் பொறுப்பு அகில இந்தியக் கமிட்டியையும் சாரும். ஆனால், பொதுவாக ஆலோசனை கூறுவதில் எனக்குச் சிரமம் இல்லை.

அவர்களின் நிலை சற்றேறக்குறைய சுக்கூரைப் போன்றது. எனினும், தரத்தில் இரண்டுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. நோவாகாலியில் இருப்பதாகச் சொல்லப்படும் மிகப் பரவிய குண்டர்களின் விஷமங்களை, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட எந்த அரசாங்கமும் வெற்றிகரமாக அடக்க முடியாது என்பது நிச்சயம். அது முக்கியமாக ஒரு தற்காப்புப் பிரச்னையாகும். தங்களுடைய சுயமரியாதையையும், கௌரவத்தையும் மற்றவர்கள் பாதுகாக்க முடியாது. அவை ஒவ்வொரு தனிப்பட்ட ஆடவரும் பெண்ணும் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டியவையாகும். அதிகமாகப் போனால், குற்றம் நடந்தபின் குற்றவாளிகளை அரசாங்கம் தண்டிக்க முடியும். தண்டனைப் பயம், குற்றம் செய்வோரைத் தடுக்கும் என்பதைத் தவிர அதைக்காட்டிலும் அதிகம் செய்வோமென அதிகாரிகளால் உறுதி கூற இயலாது. தற்காப்பு, பலாத்காரமாகவோ அல்லது அகிம்சையாகவோ இருக்கலாம். அகிம்சையால் காத்துக் கொள்ளும் ஆலோசனையையே நான் எப்போதும் வற்புறுத்தி வந்துள்ளேன். ஆனால், அதையும் பலாத்காரத்தைப் போலவே பயில வேண்டும். பலாத்காரப் பாதுகாப்பிற்கு வேண்டிய பயிற்சி வேறு, இதற்கு வேண்டிய பயிற்சி வேறு. ஆகையால், அகிம்சை நெறியில் தற்காப்பு செய்துகொள்ளும் திறமை இல்லையேல், பலாத்கார முறையை அனுசரிப்பதற்குத் தயங்கவேண்டியதில்லை. மனோரஞ்சன் பாபு பழைய காங்கிரஸ்காரர். ஆகையால், "தற்காப்புக்காகக்கூட திருப்பியடிக்கக்கூடாது என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார். "நிச்சயமாக அதுவே என் கருத்து" என நான் பதிலளித்தேன். "காங்கிரஸ்காரர்கள் தற்காப்பிற்காகப் பலாத்காரத்தை உபயோகிக்கலாம் என்று கயா காங்கிரஸில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதை நான் ஒரு போதும் சரியெனச் சொல்லவில்லை. தற்காப்புக்காகப் பலாத்காரத்தை உபயோகிக்கலாம் என்றால், அகிம்சைக்கு அர்த்தமில்லை. ஆக்கிரமிக்கும் தேசத்தை, தேசம் முழுதும் திரண்டு எதிர்ப்பது தற்காப்பில்லாமல் வேறென்ன? ஆகையால், நீங்கள் கூறுகின்ற சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தை உபயோகிக்க உத்தேசமிருப்பின், நீங்கள் காங்கிரஸில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்றே நான் ஆலோசனை கூறுவேன்."

"ஆனால், கயா தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, நான் துன்பத்தில் ஆழ்ந்துள்ள ஹிந்துக்களைக் காப்பாற்றினால் என்னை

வகுப்புவாத உணர்ச்சி உடையவன் என்று குற்றஞ் சாட்டு வார்களா?" என்று மனோரஞ்சன் பாபு கேட்டார்.

"நிச்சயமாக இல்லை" என நான் பதில் சொன்னேன். "நீங்கள் காங்கிரஸ்காரராக இருப்பதனால், நீங்கள் ஹிந்து அல்ல என்று கூறிவிட முடியாது. இருப்பினும், நியாய, அநியாயம் பாராமல் நீங்கள் ஹிந்துக்களைச் சார்ந்து பேசினால், வகுப்புவாத உணர்ச்சி யுள்ளவர் என்ற குற்றத்திற்கு ஆளாவீர்கள். குறிப்பிட்ட இச் சந்தர்ப்பத்தில் நீங்கள் ஹிந்துக்களை ஹிந்துக்கள் என்பதற்கா கப் பாதுகாக்கவில்லை. ஆனால், அவர்கள் துன்பத்தில் சிக்கிய வர்கள் என்பதற்காகவே காப்பாற்றுகிறீர்கள். முஸ்லிம்கள் ஹிந்துக்களால் துன்புறும் சமயத்தில், நீங்கள் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு அளிப்பீர்கள் என்று நான் எதிர்பார்ப்பேன். காங்கி ரஸ்காரருக்குச் சமூக வேற்றுமை இல்லை; இருக்கவும் கூடாது."

பிறகு பேட்டியாளர்கள், காங்கிரஸில் உள்ள பிளவுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். காங்கிரசின் உதவியில் நம்பிக்கை இழந்த பல ஹிந்துக்கள் ஹிந்து மகாசபையில் சேர்ந்துள்ள னர் என்றும், அவர்கள் அவ்விதம் செய்யலாமா என்றும் கேட்ட னர். கொள்கையளவில் அதை ஆட்சேபிப்பதற்கில்லை என்று நான் கூறினேன். மேலும் நான் கூறியதாவது:

"அப்பிரதேசத்தில் உள்ள நிலைமை காரணமாக அவர்கள் அவ்விதம் சேர்ந்தது நியாயமா, அல்லவா என்பது பற்றி நான் எதுவும் முடிவு கூற முடியாது. எனினும், நான் காங்கிரஸ்வாதி யாக இருந்து, அந்த முறையில் பலன் தரத்தக்க விதத்தில் நான் எதுவும் செய்ய முடியாவிடில், பிரயோஜனகரமான உதவி செய்யக்கூடிய ஒரு ஸ்தாபனத்தில் சேர நான் தயங்கக்கூடாது. ஆனால், காங்கிரஸ் ஸ்தாபனத்தில் பதவி வகிக்கும் ஒருவர், அதில் இருந்துகொண்டே ஹிந்து மகாசபையிலும் அங்கத்தின ராக இருக்கக் கூடாது. ஹிந்து மகாசபை பகிரங்கமாக ஒரு வகுப்புவாத ஸ்தாபனம் அல்லவா?

"இப்பிரச்னை முழுவதுமே சங்கடங்கள் நிறைந்தது. இதைச் சாந்தமாகவும், உண்மையாகவும், தைரியமாகவும் அணுக வேண்டும். காங்கிரஸ் பலன் தரத்தக்க விதத்தில் அகிம்சையை மேற்கொள்ளாவிடில், வகுப்புவாதம் வெற்றி பெற்றே தீரும். காங்கிரஸ் அகிம்சையுடன் விளையாட முற்படுமாயின், அது நடை முறையில் வகுப்புவாத ஸ்தாபனமாகி விடும். ஏனெனில், காங்கிரசில் உள்ளவர்களில் பெரும்பாலோர் ஹிந்துக்களே ஆவர்; அவர்கள் அகிம்சையின் பலன் தரத்தக்க உபயோ கத்தை அறிந்துகொள்ள முடியாவிடில் ஹிம்சை வழிக்குச் சென்றுவிடுவார்கள். காங்கிரஸ் எல்லா விஷயங்களிலும் உண் மையான அகிம்சையை மேற்கொண்டால் மாத்திரமே, அது வகுப்புவாதமற்ற ஸ்தாபனமாக இருக்க முடியும் என்பது எனது நிச்சயமான அபிப்பிராயமாகும். அது நம்மை ஆட்சி புரிவோ

ரிடம் மாத்திரம் அகிம்சையுடனிருந்துகொண்டு, மற்றவர்கள் விஷயத்தில் ஹிம்சையைக் கடைப்பிடிக்க முடியாது. அவ்விதம் செய்வது அவமானத்திலும் ஆபத்திலும் வந்து முடியும்.''

—'ஹரிஜன்' - 2—3—1940

# 12.

# எனது நிலை

காயிதே ஆஜமுக்கு நான் அளித்த விடையைக் குறை கூறி நவாப்ஜாதா லியாகத் அலிகான் சில கேள்விகள் கேட்டிருக்கிறார். அவற்றிற்கு நான் மகிழ்ச்சியுடன் விடை கூறுகிறேன். சமூகச் சிக்கலைப்பற்றி யாரிடமும் நான் ஒரு ஹிந்து என்ற முறையில் பேசியதில்லை என்று நான் ஏற்கனவே கூறியதையே வற்புறுத்துகிறேன். அப்படிப் பேச எனக்கு அதிகாரமும் கிடையாது. எவருடனும் நான் பேசியபோதெல்லாம் காங்கிரஸ்காரன் என்ற முறையிலேயே பேசியுள்ளேன். ஆனால், பெரிதும் தனிப்பட்ட முறையிலேயே பேசியிருக்கிறேன். எந்தக் காங்கிரஸ்காரரும், தலைவருங்கூட, எப்போதும் காங்கிரஸின் பிரதிநிதியாகப் பேசமுடியாது. பல்வேறு ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடி, தனிப்பட்ட முறையில் சாதாரணமாகக் கலந்து பேசியே இவ்வுலகில் பெரிய காரியங்களை எப்போதும் செய்திருக்கின்றனர். நான் சொல்லப் போகும் விடையும்கூட மற்றவர்களின் சார்பாக இராது; என் சொந்த முறையில்தான் சொல்லுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அநேகமாகக் காரியக் கமிட்டியில் உள்ள எந்தத் தனி அங்கத்தினரின் பிரதிநிதியாகக் கூட என்னால் பேசமுடியாது. சமாதானம் செய்கிறவனாக, முஸ்லிம்களின் நண்பனாக (சகோதரனாக என்று சொல்லலாமா?) விடையளிக்கிறேன்.

அகிம்சைவாதியாகிய நான், இந்திய முஸ்லிம்கள் உண்மையாக வற்புறுத்தினால், அவர்கள் உத்தேசத்திலிருக்கும் நாட்டுப் பிரிவினையைப் பலாத்காரமாக எதிர்க்க முடியாது. ஆனால், தேசத்தைத் துண்டாடுவதற்கு மனதார நான் ஒரு காலத்திலும் இசைய முடியாது. அதைத் தடுக்க அகிம்சை முறைகள் அனைத்தையும் கையாளுவேன். ஏனெனில், ஒரே தேச மக்களாய் வாழ, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக எண்ணிறந்த ஹிந்துக்களும் முஸ்லிம்களும் செய்த வேலையை இது அழிப்பதாகும். பிரித்தல் வெளிப்படையான பொய்மையே. ஹிந்து மதமும், இஸ்லாமும் இரு முரண்பட்ட பண்பாடுகளையும் கொள்கைகளையும் குறிக்கின்றன என்னும் கருத்தை, என் ஆன்மா அடியோடு எதிர்த்தெழுகின்றது. என் வரையில், அத்தகைய கொள்கைக்கு இசைவது கடவுளையே மறுப்பதாகும். குரானின் கடவுளே

கீதையின் கடவுள்; என்ன பெயரால் அழைக்கப்பட்டாலும், நாம் அனைவரும் ஒரே கடவுளின் குழந்தைகள் என்று என் முழு ஆன்மாவும் நம்புகிறது. அன்று ஹிந்துவாக இருந்த கோடிக் கணக்கான இந்தியர் இஸ்லாமைத் தங்களுடைய மதமாக ஏற்றுக்கொண்டதாலேயே, தங்களுடைய தேசீயத் தன்மையில் மாறிவிட்டனர் என்ற எண்ணத்தை நான் எதிர்க்க வேண்டும்.

ஆனால், அது எனது நம்பிக்கையாகும். தங்களை வேறு தேசீய இனமாக எண்ணும் முஸ்லிம்களின்மீது, நான் அந்த நம்பிக்கையைத் திணிக்க முடியாது. எனினும், எட்டுக் கோடி முஸ்லிம்களும் தங்களுக்கும், தங்களுடைய சகோதரர்களான ஹிந்துக்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையில் பொதுவானது எதுவுமே இல்லையென்று மறுத்துவிடுவார்கள் என்பதை நான் நம்பவே முடியாது. அந்தக் காரியத்திற்காக மட்டும் தெளிவாக அவர்களிடமிருந்து சர்வஜன வாக்கு எடுப்பதன்மூலம்தான் அவர்களின் கருத்தை அறியலாம். உத்தேசத்திலிருக்கும் அரசியல் நிர்ணய சபை எளிதாக அம்முடிவைச் செய்யும்.

இயற்கையாக, இத்தகைய விஷயங்களில் மத்தியஸ்தம் செய்ய முடியாது. இது முற்றிலும் அவர்களே முடிவு செய்ய வேண்டிய காரியமாகும். எட்டுக் கோடி முஸ்லிம்களின் மனத்தை அறிய வேறெந்த இறுதியான வழியும் எனக்குத் தெரியவில்லை.

நாம் கருதும் அரசியல் நிர்ணய சபையின் முக்கிய வேலை, ஓர் அரசியல் திட்டத்தை வகுப்பதேயாகும். சமூகப் பிரச்னை தீரும் வரையில், அது இதைச் செய்யமுடியாது.

சமூக ஒற்றுமையின்றிச் சுயராஜ்யம் இல்லை என்பதே இன்னும் எனது கருத்தாகும். எட்டுக் கோடி முஸ்லிம்கள் சமாதானமான விடுதலைக்கு நிச்சயமாக முட்டுக்கட்டை போட முடியும்.

தேசத்தின் மற்ற மக்களைப் போலவே, முஸ்லிம் பொது மக்களும் விடுதலையை விரும்புகிறார்களென நான் நம்புகிறேன். ஆதலால்தான் நான் இன்னும் சட்ட மறுப்பைப்பற்றிப் பேசுகிறேன். அவர்கள் விரும்பவில்லை என்று வைத்துக்கொண்டாலும், சட்ட மறுப்பு பொது மக்களுக்குள், ஹிந்து, முஸ்லிம், மற்ற எவர்களாயினும் சரி, அறிவைப் பரப்பும் ஆற்றல் நிறைந்த சாதனமாகும். அது உலக அபிப்பிராயத்தையும் உருவாக்கும். ஆனால், எண்ணத்திலும், செயலிலும் அகிம்சை நெறியைக் கையாளுவார்கள் என்று, மனிதனுடைய ஆற்றலுக்கு இயன்ற அளவு உறுதியாக நான் அறிந்துகொள்ளும் வரை, சட்ட மறுப்பை ஆரம்பிக்க மாட்டேன். சட்ட மறுப்பினால் பெறும் நற்பயன் எதுவும், அனைவருக்குமே உரித்தாகும் என்று நம்புவது நவாப் ஜாதாவுக்குக் கடினமில்லை என நினைக்கிறேன். தன் அரசியல் திட்டத்தைத் தானே வகுக்கும் உரிமை இந்தியாவிற்குக்

கிடைத்தபின், முஸ்லிம்களுக்குத் தங்களின் எதிர்காலத்தை முடிவு செய்ய நிச்சயமாக உரிமை கிடைக்கும். பெரும்பான்மையோருடைய வாக்குகளால் அதை முடிவு செய்ய முடியாது; செய்யவும் மாட்டார்கள்.

கடைசியாக, காங்கிரஸ் தலைவரைப்பற்றி நவாப்ஜாதா அதிக அவசரப்பட்டு எழுதிவிட்டாரென நான் அவருக்குச் சொல்ல வேண்டும். நமது தற்காலச் சரித்திரத்திற்கே அவை மாறானவை. "ஸ்ரீ காந்தியின் ஆதரவில் காங்கிரஸின் ஒரே நோக்கம், ஹிந்து மதத்தை ஊக்கி அதன் பண்பாடுகளைப் பல் வேறு மக்கள்மீதும் சுமத்துவதே" என்ற அவரது கூற்றும் அவசரப்பட்டு எழுதியதேயாகும். என் சொந்த நோக்கம், இக்கொடூரமான குற்றச்சாட்டைக் கண்டிப்பதல்ல. காங்கிரஸின் நோக்கம் முற்றிலும் அரசியல் சம்பந்தமானதேயன்றி, மத சம்பந்தமானதல்ல. நிரூபிக்க முடியாதவைகளைச் சொல்லுவதனால் யாதொரு லாபமும் ஏற்டாது. என் சொந்த நோக்கத்தைப் பொறுத்த மட்டில், என் வாழ்க்கையே திறந்த ஒரு புத்தகமாகும். அதில் ஒளிவு மறைவு எதுவும் இல்லை. என் மதம், அதற்கு என்ன பெயரிட்டாலும் சரி, எல்லாப் பண்பாடுகளையும் வாழ்க்கையில் ஏற்க வேண்டும் என்கிறது. ஆகவே, நான் எல்லாப் பண்பாடுகளுக்கும் பிரதிநிதி என்று உரிமை கொண்டாடுகிறேன். எல்லா மதங்களையும் என் மதத்தைப் போலவே நான் மதிப்பதால், எங்கே போனாலும் நான் என் சொந்த வீட்டில் இருப்பதுபோல் தோன்றுகிறது.

—'ஹரிஜன்' – 13—4—1940

# 13
# வீண் மனக் குழப்பம்

**கேள்வி:** சிறுபான்மையினருக்குப் 'பாதுகாப்புகள்' மட்டும் கொடுத்து, இந்தியாவில் பெரும்பான்மை ஆட்சியை நிறுவ நீங்கள் வற்புறுத்தினால் நீங்கள் மிகப் பெரிய அநீதி செய்தவர்களாவீர்கள். நாட்டின் அரசாங்கத்தில் சிறுபான்மையினருக்குப் பயன்தரத்தக்க பங்கு இருக்கவேண்டும்.

**பதில்:** ஹிந்துக்களின் பெரும்பான்மை நிலையை நீக்க முடியாதென்ற கருத்துடன், பெரும்பான்மை ஆட்சியை ஹிந்து ஆட்சியுடன் நீங்கள் குழப்புகிறீர்கள். உண்மையில், எல்லா மாகாணங்களிலும் பெரும்பான்மை என்பது கலப்பானதுதான். கட்சிகள் ஹிந்துக்களும் முஸ்லிம்களுமல்ல. அவை, காங்கிரஸ்காரர்கள், சுயேச்சை வாதிகள், முஸ்லிம் லீகர்கள், சுயேச்சை முஸ்லிம்கள், தொழில் கட்சியினர் முதலிய எல்

லோரும் சேர்ந்தவையே. எங்கும் காங்கிரஸ் பெரும்பான்மை கலப்பானதே. பிணக்கு இல்லாவிட்டால், காங்கிரஸ் எல்லோரும் அடங்கிய சீரான ஒரு கட்சியாக இருக்கும். இப்பிணக்கு ஒரு நோயாகும். இந்தியாவைப் போன்று வளரும் சமுதாயத்தில் இந்த நோய் நிலையாக இருக்க முடியாது. முஸ்லிம் லீகின் ஆர்ப்பாட்டமும், அதன் உரிமையும் என்னவாயினும், ஒரு நாளின்றி ஒரு நாள் இந்தச் சிக்கலுக்கு முடிவு ஏற்பட்டுத்தான் தீரும். ஒரு மாகாணத்திலாவது கலப்பற்ற முஸ்லிம் அல்லது கலப்பற்ற ஹிந்துப் பெரும்பான்மைக் கட்சி ஏற்படாது. ஜனநாயகம் நசுக்கப்பட்டு, அகில இந்தியாவிலும் கொடுங்கோன்மை ஓங்கி நின்றாலோ, இந்தியா இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாகங்களாகத் துண்டிக்கப்பட்டாலோ அன்றி, கட்சிகள் கலந்து பல்வேறு கொள்கைகளின்படியே அணிவகுத்து நிற்கும். என் வாதத்தைத் தொடர்ந்து வந்திருப்பீர்களாயின், காங்கிரஸைப் பொறுத்தமட்டில், எந்தக் கட்சிக்கும் கோஷ்டிக்கும் அதிகாரம் ஒரு காலத்திலும் மறுக்கப்படமாட்டாது என்பது உங்களுக்குத் தெளிவாக இருக்கும். சிறுபான்மையோர் பிறருடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டியிருக்கும் வரையில், அவர்களுடைய சிறப்பான உரிமைகள் கலப்படமாகி விடும். ஆபத்து இருப்பதால், அவர்களின் உரிமைகட்கு முழுப் பாதுகாப்பு இருந்தே தீர வேண்டும்.

—'ஹரிஜன்' - 6—4—1940

# 14

# திகைக்க வைக்கும் நிலைமை

கீழ் வருமாறு என்னைச் சிலர் ஒரு கேள்வி கேட்கின்றனர்.

"காயிதே ஆஜம் ஜின்னா ஹிந்துக்களுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் விடுத்து, இந்தியாவை இரண்டாக்க வேண்டுமென்று முஸ்லிம் லீக் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும்படி செய்திருந்தும்கூட, நீங்கள் பொதுச் சட்ட மறுப்பை ஆரம்பிக்க உத்தேசிக்கிறீர்களா? அப்படியானல், சமூக ஒற்றுமையின்றிச் சுயராஜ்யமில்லை என்று முன்பு நீங்கள் கூறியது என்ன ஆவது?"

முஸ்லிம் லீக் லாகூரில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை, திகைக்க வைக்கும் ஒரு நிலைமையை உண்டாக்கியிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனல், இது சட்டமறுப்பை அசாத்தியமாக்கும் அளவிற்குத்திகைப்பூட்டக்கூடியதல்ல. காங்கிரஸ் மிக மோசமான சிறுபான்மையினராகச் செய்யப்பட்டு விட்டாலுங்கூட, அப்போதும் சட்ட மறுப்புச் செய்யலாம். அப்போது, அப்படிச் செய்வது அதன் கடமையாகக்கூட ஆகலாம்.

ஆனால், அப்போராட்டம் பெரும்பான்மையோருக்கு எதிராக இராது; அது அந்நிய அரசாங்கத்தை எதிர்ப்பதாகவே இருக்கும். போர் வெற்றியடையுமானால், அதன் பயனைக் காங்கிரஸைப் போலவே அதை எதிர்த்த பெரும்பான்மையோரும் நுகருவார்கள். ஆனால், நான் கூறிய நிபந்தனைகள் நிறைவேறும் வரையில், சட்ட மறுப்பைத் தொடங்குவது எவ்விதத்திலும் முடியாத காரியம். இச்சந்தர்ப்பத்தில், ஏகாதிபத்திய அதிகார வர்க்கத்தினர் சந்தேகமற்ற முறையில் இதுவரை ஆளுபவரின் விருப்பப்படி ஆளப்பட்டது போல் இல்லாமல், இந்தியா இனிமேல் தன்னைத் தன் விருப்பப்படியே ஆட்சி புரிந்துகொள்ளும் என்று பிரகடனம் செய்வதைத் தடுக்க ஒன்றுமில்லை. முஸ்லிம் லீகோ, வேறெந்தக் கட்சியோ அத்தகைய பிரகடனத்தை எதிர்க்க முடியாது. தங்களுக்கு வேண்டியவற்றை அதிகாரத்துடன் கேட்க முஸ்லிம்களுக்கு உரிமை உண்டு. முஸ்லிம்கள் தங்களுடைய கட்டளைகளை வெளியிட முன்வந்தால், இந்தியா கொலையில் ஈடுபட விரும்பாவிடில், முஸ்லிம்களுக்குப் பணிந்தேயாக வேண்டும். ஏனைய இந்தியா எவ்வளவு சக்தி வாய்ந்த பெரும்பான்மையாக இருந்த போதிலும், அவர்கள் சொற்படி எட்டுக் கோடி முஸ்லிம்களைச் செய்ய வைக்க அகிம்சை நெறிப்படி எனக்கு வழி தெரியவில்லை. மற்ற இந்தியர்களுக்கு உள்ளது போலவே முஸ்லிம்களுக்கும் சுய நிர்ணய உரிமை வேண்டும். இப்போது நாம் ஒரு கூட்டுக் குடும்பம்; இதில் யாராவதொருவர் பாகப் பிரிவினை கோரலாம்.

என்னைப் பொறுத்த மட்டில், சமூக ஒற்றுமையின்றிச் சுயராஜ்ய மில்லை என்பது, 1919-இல் நான் முதன் முதலில் சொல்லியது போலவே இன்றும் உளது.

ஆனால், சட்டமறுப்பு வேறு காரியம். அழைப்பை உணர்ந்தால் ஒரு தனி நபர்கூட அதைச் செய்யலாம். காங்கிரஸுக்காக மட்டுமோ, வேறு குறிப்பிட்ட கட்சிக்காகவோ அது செய்யப்படாது. அதன் நற்பயன் எதுவெனினும், அது இந்தியா முழுமைக்கும் உரித்தாகும். தீமை எதுவாயினும் இருந்தால், அது சட்டமறுப்பு இயக்கக் கட்சியை மட்டும் சாரும்.

முடிவு செய்யும் சமயத்தில் உயிருடன் பிளக்க முஸ்லிம்கள் எக்காலும் சம்மதிப்பார்களென நான் நம்பவில்லை. அவர்களின் நல் அறிவு அவர்களைத் தடுக்கும்; தன்னலம் குறுக்கிடும். பிரிப்பதனால் உண்டாகும் தற்கொலையை அவர்களின் மதம் தடை செய்யும். இரு தேசிய இனங்கள் என்னும் கொள்கை பொய். இஸ்லாமுக்கு மாறியவர் அல்லது இவர்களின் வழி வந்தவர்கள் தான் இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர். மதம் மாறியவுடன் வேறு தேசீய இனமாகிவிடவில்லை. வங்காளி முஸ்லிம், வங்காளி ஹிந்து பேசும் மொழியையே பேசுகிறான். அதே உணவை அருந்துகிறான். தன் ஹிந்து அண்டை வீட்டுக்காரனுக்குள்ள அதே சுகபோகங்களை அனுபவிக்கிறான். இருவரும் ஒரே மாதிரி உடுத்து

கின்றனர். அநேக தடவைகளில் வங்காளி ஹிந்துவுக்கும், வங்காளி முஸ்லிமுக்கும் வெளித் தோற்றத்தில் வேறுபாடு காணமல் விழித்திருக்கிறேன். அநேகமாகத் தெற்கேயும், பொதுமக்களாகிய ஏழைகள் மத்தியிலும், இம் மாதிரியே காணலாம். முதல் தடவை சர் அலி இமாமை நான் கண்டபோது, அவர் ஹிந்துவல்ல என்று எனக்குத் தெரியவில்லை. யார் மத்தியில் அவரைக் கண்டேனே அந்த ஹிந்துக்களுடையவற்றைப் போலவே அவருடைய உடை, நடை, பாவனை, மொழி, உணவு முதலியன இருந்தன. அவர் பெயர் மட்டும்தான் அவரைக் காட்டிக்கொடுத்தது! காயிதே ஆஜம் ஜின்னவிடம் அதுவுமில்லை. ஏனெனில், எந்த ஹிந்துவும் அந்தப் பெயருடையவராக இருக்கலாம். நான் அவரை முதலில் கண்டபோது அவர் முஸ்லிம் என்று தெரியாது. அவருடைய முழுப் பெயரையும் கேட்ட பிறகுதான் அவருடைய மதம் எனக்குத் தெரிந்தது. அவரது முகத்திலும் நடையிலும் அவரது தேசீய இனம் தெற்றென விளங்கிற்று. பல நாட்கள்-ஏன், பல மாதங்கள் வரையில்-வித்தல் பாய் பட்டேலை முஸ்லிம் என்று நான் நினைத்தேன் என்பது வியப்பை உண்டாக்கலாம். அவருக்குத் தாடியும் துருக்கிக் குல்லாயும் உண்டு. பல முஸ்லிம் கூட்டத்தினரின் சொத்துரிமை விதிகள் ஹிந்துக்களுடையவையே. சர். முகமது இக்பால் பெருமையுடன் தமது பிராம்மண பரம்பரையைப் பற்றிப் பேசுவார். இக்பால், கிச்சலு என்ற பெயர்கள் ஹிந்து-முஸ்லிம் இருவருக்கும் பொது. இந்திய ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரு தேசீய இனங்களல்ல. கடவுள் ஒன்ருக ஆக்கியதை, மனிதன் ஒருக்காலும் பிரிக்க முடியாது.

மேலும், காயிதே ஆஜம் சொல்லுவதுபோல், இஸ்லாம் அவ்வளவு அலாதியான மதமா? இஸ்லாமுக்கும், ஹிந்து மதத்துக்கும், வேறெந்த மதத்துக்கும் பொதுவானது எதுவுமில்லையா? அல்லது இஸ்லாம் ஹிந்து மதத்தின் எதிரி மட்டுந்தான? அலி சகோதரர்களும் அவர்களின் தோழரும் இரு மதத்தவருக்குள்ளும் இருக்கும் ஏராளமான ஒற்றுமைகளைக் கண்டு, ஹிந்துக்களை உடன்பிறந்தோரெனக் கட்டி யணைத்தது தவரு? முஸ்லிம் நண்பர்களுக்கு ஏமாற்றம் அளித்திருக்கும் தனிப்பட்ட ஹிந்துக்களைப்பற்றி நான் இப்போது பேசவில்லை. காயிதே ஆஜம், ஒரு முக்கியமான வாதத்தைக் கிளப்பி யிருக்கிருர். அவர் சொல்லுவதாவது :

"இஸ்லாம், ஹிந்து மதம் இவற்றின் மெய்க் கருத்து ஏன் ஹிந்து நண்பர்களுக்கு விளங்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ளுவது மிகவும் கடினம். மதம் என்ற வார்த்தையின் சரியான அர்த்தப்படி அவை மதங்கள் அல்ல; வேறுபட்ட தனித் தனிச் சமூக அமைப்புக்கள் அவை. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கூடி ஒரு பொதுத் தேசீய இனமாவது வெறும் கனவு. ஒரு இந்திய தேசீய இனம் என்னும் தவருன கருத்து எல்லை மீறிவிட்டது. இதுதான் நமது பெரும்பாலான தொல்லைகளின் காரணம். தக்க சமயத்தில் நமது எண்

ணங்களைத் திருத்தியமைக்காவிட்டால், இந்தியாவைப் படுகுழியில் ஆழ்த்து வோம்.

"ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இரண்டு அலாதி மதத் தத்துவங்கள், சமூகப் பழக்க வழக்கங்கள், இலக்கியங்கள் உண்டு. அவர்களுக்குள் கொள்வினை, கொடுப்பினை இல்லை. அவர்கள் சேர்ந்து உண்பதில்லை,—உண்மையில், முரண்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட வேறுபட்ட பண்பாடுடையவர்கள். அவர்களின் வாழ்க்கையும் வாழ்க்கையைப் பற்றிய எண்ணங்களும் வேறுபட்டவை. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வெவ்வேறு சரித்திர மூலங்களிலிருந்து ஆர்வம் பெறுகின்றனர் என்பது தெளிவு. இதிகாசங்களும் வீரர்களும் வேறு வேறு; போற்றும் நிகழ்ச்சிகளும் வெவ்வேறானவை. அநேக சமயங்களில், ஒருவர் வணங்கும் வீரர் மற்றவரது எதிரி. அவர்களுடைய வெற்றிகளும், வீழ்ச்சிகளும் அவ்வாறே. இத்தகைய இரு தேசீய இனங்களை எண்ணிக்கையில் சிறுபான்மையோர் பெரும்பான்மையோர் என ஒன்று சேர்ப்பது அதிருப்தியை வளர்க்கும். இந்த அதிருப்தி அவ்வகைத் தேசத்தின் ஆட்சிக்கான அமைப்பையும் இறுதியில் கவிழ்த்துவிடும்."

சில ஹிந்துக்கள் கெட்டவர்களென அவர் சொல்லவில்லை. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவானவை ஒன்றுமில்லை என்கிறார். அவரும் அவரைப் போல் நினைப்பவர்களும் இஸ்லாமிற்குச் சேவை செய்யவில்லை: இஸ்லாம் என்ற சொல்லிலுள்ள செய்தியையே தப்பாகப் பொருள் படுத்துகின்றனர். முஸ்லிம் லீகின் பெயரைச் சொல்லி நடக்கின்றவை என்னை வருத்தத்தில் ஆழ்த்துகின்றமையால், நான் இவ்வாறு கூறுகிறேன். இந்தியாவிலுள்ள முஸ்லிம்களிடையே பரப்பப்படும் பொய்யைக் குறித்து நான் அவர்களுக்குச் சரியான காலத்தில் எச்சரிக்கை செய்யாவிட்டால், எனது கடமையிலிருந்து நழுவியவனவேன். இப்படி எச்சரிப்பது எனது கடமை. ஏனெனில், நான் அவர்களுக்கு மிக அவசியமாயிருந்த காலங்களில் உண்மையுடன் சேவை செய்திருக்கிறேன். அத்துடன் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை எனது வாழ்நாள் வேலையாகவும் இருந்தது, இருக்கிறது.

—'ஹரிஜன்' – 6—4—1940

# 15

# கலகங்களில் அகிம்சை நெறி

நண்பர் ஒருவர் பின் வருமாறு எழுதுகிறார்:

"கலகங்களில் அகிம்சை நெறி எவ்வாறு பயன்படும்? நம்மையே பலியிடுவதால், நாம் ஏற்கனவே யாருடன் நிலைத்த தொடர்பு கொண்டுள்ளோமோ, அவர்களைத்தான் திருத்த முடியும். கலகம் நடக்கும் சமயங்களில் அட்டூழியஞ் செய்யும் காலிகள், வெகுவாக வெளியிலிருந்து கூலிக்காக வந்த

வர்கள். தமக்கு முன்பின் தெரியாதவர்களையும், தாம் ஒரு பொருட்டெனமதி யாதவர்களையும் துன்புறுத்த இவர்கள் ஏன் தயங்குவார்கள்?''

இது ஆழ்ந்து யோசிக்கவேண்டிய கேள்வியாகும் இதைக் கேட்கும் நண்பர் தீரம் நிறைந்த ஊழியர். ஒரு கலகத்தில் தம் கடமையைச் செய்யும் முயற்சியில் தம் உயிரையும் இழக்க இருந் தவர். இதற்கு முன் அடிக்கடி இதைப்பற்றி நான் எழுதியுள் ளேன். இதில் பரிதாபமான தென்னவென்றால், காங்கிரஸ்காரர் கள் கலகங்களை அடக்குவதற்கு அகிம்சை வழி ஒன்று கண்டு பிடிப்பதைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கவில்லை. அவர்களுடைய அகிம்சை அதிகாரிகளோடு தீர்ந்துவிடுகிறது. எனது அபிப்பி ராயத்தில், அவ்வளவு தூரம் மட்டும் போய் மேல் செல்லாது நின்றுவிடும் அகிம்சை நெறிக்கு, அகிம்சை என்ற பெயர் தகாது. வேண்டுமானால், அதை ஆயுதமில்லாத எதிர்ப்பு என்று குறிப் பிடலாம். அரசாங்கத்தைத் திக்குமுக்காட வைத்த அளவுக்கு அது ஹிம்சை முறையைச் சேர்ந்ததே. கலகங்களை அகிம்சை நெறியில் அடக்க வேண்டுமானால், தவறிழைக்கும் காலிகளையும் அன்புடன் தழுவும் மெய் அகிம்சை ஒருவன் உள்ளத்தில் உறைய வேண்டும். இம் மனப்போக்கு பயில்வதற்கரியது. சமாதான காலங்களில் செய்யும் நீடித்த பொறுமையுள்ள முயற்சியினால் தான் அதைப் பெறலாம். சமாதானப் படையில் சேர விரும்பு பவர், சுற்றுப்புறத்திலுள்ள குண்டர்கள் என்று சொல்லப்படு பவர்களுடன் நெருங்கிப் பழகித் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு அனைவரையும் தெரிந்திருக்க வேண் டும். தன் அன்பு ததும்பும் தன்னலமற்ற சேவையால், எல்லோ டைய உள்ளங்களையும் கவர்ந்திருக்க வேண்டும். எப் பிரிவின ரும் பழகுவதற்குத் தகுதியற்ற அளவு கேவலமானவர் எனக் கருதுதல் கூடாது. குண்டர்கள் வானத்திலிருந்து குதிப்பதில்லை; பேய், பிசாசுகளைப் போல் பூமியிலிருந்து உதிப்பதுமில்லை. அவர் கள் சமூகக் கோளாறின் விளைவாக உருவானவர்களே. ஆகையால், அவர்கள் இருந்து வருவதற்குப் பொறுப்பு சமூகம் தான். வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் சமூகத்தில் உள்ள சீர்கேட்டின் அறிகுறியே. நோயை நீக்க, நாம் மூலகாரணத்தைக் காண வேண்டும். பின்பு பரிகாரந் தேடுவது எளிதாகும். இது வரை நாம் சரியான ஆரம்ப வேலை செய்யக்கூட முயலவில்லை. எனினும், காலம் கடந்துவிட வில்லை. முடிவில் இது தேவை என்று உணர்ந்ததே போதும். இப்போது தாமதிக்காது செயலில் இறங்க வேண்டும். அக்கறையுள்ள ஒவ்வொருவரும் தம் சுற்றுவட் டத்தில் உடனே தங்கள் அலுவல்களைத் தொடங்கவேண்டும். சரியான உணர்ச்சியுடன் நாம் முயன்று முன்சென்றால், கடிதம் எழுதியவர் குறிப்பிட்டுள்ள இடுக்கண் தானாகவே தீர்ந்துவிடும்.

## 16

# நான் கடவுளின் தூதனா?

முஸ்லிம் நண்பர் ஒருவர் எழுதிய நீண்ட கடிதத்தின் சாரத்தைக் கீழே கொடுத்திருக்கிறேன்:

"நேர் வழியில் சிந்திப்பதற்கு உங்களுக்கு முட்டுக்கட்டையாக இருப்பது, நீங்களாக வைத்துக்கொண்ட தத்துவங்களின்படியே நீங்கள் எல்லா விஷயங்களையும் அர்த்தப்படுத்திக்கொள்ளுவதேயாகும். இதனால் எவ்விஷயத்தையும், அது எவ்வளவு உயர்ந்த மதிப்பு வாய்ந்ததாயினும், திறந்த மனத்துடன் அதை நிதானிக்க முடியாத அளவுக்கு உங்கள் உள்ளம் கடினப்பட்டுவிட்டது.

"கடவுள் உங்களை அவரது தூதராக ஏற்படுத்தியிருக்காவிட்டால், உங்கள் பேச்சும் போதனையும் கடவுளின் வாக்கு என்று கூறிக்கொள்ள முடியாது. உண்மையும் அகிம்சை நெறியும் மெய்யாகவே தீர்க்கதரிசிகளின் போதனைகள் என்பதையும், உயரிய ஆன்மிக மதிப்புள்ளவை என்பதையும் யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், அவைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளவும், சாதனைக்குக் கொண்டு வரவும் கடவுளிடம் நேரடியான தொடர்புள்ளவர்கள் தேவை. சரீர இச்சைகளையும் தேவைகளையும் மட்டும் அடக்கித் தன் ஆன்மாவைப் பண்படுத்திக் கொண்டுவிட்ட எந்த மனிதனும் தீர்க்கதரிசியாகி விட முடியாது.

"நீங்கள் உலகத்தின் குருவைப் போல் இருக்கிறீர்கள். உலகத்தின் நோயைக் கண்டுபிடித்துவிட்டதாகக் கூறுகிறீர்கள். உலகத்தைத் துன்புறுத்தும் இன்னல்களுக்கெல்லாம் ஒரே பரிகாரம் அகிம்சைக் கொள்கையும், அதை செயலில் காட்டுவதும்தான் என்றும் பிரகடனம் செய்கிறீர்கள். இதிலிருந்தே நீங்கள் உண்மையைப் பற்றிச் சிறிதும் கவலைப் படவில்லை என்பதும், உண்மையைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதும் நன்கு வெளியாகிறது. நீங்கள் தவறுகள் செய்ததை நீங்களே ஒப்புக்கொள்ளுகிறீர்கள். உங்கள் அகிம்சை நெறி உண்மையில் மறைமுகமான பலாத்காரமே; அது மெய்யான ஆன்மிக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. கடவுளே உங்களை வழி நடத்துகிறார் என்பதற்கு அது ஓர் அடையாளமும் அல்ல.

"உங்கள் மனத்திலிருக்கும் சிக்கல்கள் அனைத்தையும் விலக்கிவிடுங்கள். கற்பிக்க விரும்பாமல், கற்க விரும்புகின்ற சாதாரண மனிதராக மாறுங்கள். மெய்யாகவே உண்மையை நாடுங்கள். கடவுளிடம் நம்பிக்கை உடையவன் என்ற முறையில், ஒவ்வொரு மனிதரும் உண்மையைப் பரவச் செய்யுமாறு ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கட்டளையிடும் இஸ்லாமின் போதனையின்படி நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுவது இதுதான்.

"உண்மையைக் காண விரும்பினால், குரானையும் நஷப்லி நவானியும் மௌலானா சுலைமான் நாத்வியும் எழுதியுள்ள முகமது நபியின் வாழ்க்கையையும் திறந்த மனத்துடன் படியுங்கள் என்று நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

"இந்தியாவிலுள்ள பல்வேறு சமூகங்களுக்குள் ஒரே தேசமென்ற முறையில் ஒருகாலும் ஒற்றுமை ஏற்படாது. தாராள மனப்பான்மையுடன் மதங்களையும் ஆசாரங்களையும் ஒருவருக்கொருவர் சகிக்க வேண்டும். தம் சொந்த வாழ்க்கை விதிகள், பண்பாடுகளுடன் முஸ்லிம்களை ஒரு தனித் தேசீய இனமாகப் பாவித்து, அரசியலில் அவர்களுக்குச் சம அந்தஸ்து அளிக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட வேண்டும். இதுதான் இந்தியாவில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் கொண்டுவரும்."

மேலே கண்ட கடிதம் எழுதியுள்ளவரின் வாதம் ஒன்றையும் நான் விட்டுவிடவில்லை.

என் உள்ளத்தை நான் கடினப்படுத்திக் கொண்டுவிடவில்லை. எல்லா மனிதருக்கும் உள்ளதைத் தவிர வேறு விதத்தில் நான் கடவுளின் தூதனுக உரிமை பாராட்டவில்லை. மற்றெவரையும் போலவே நானும் தவறக்கூடிய ஒரு மனிதனே. நான் என்னை ஒரு குரு என்றும் சொல்லிக்கொள்ளவில்லை. ஆனல், என்னைப் பழிப்பவர்கள் என்னைப் பலவிதமாகத் தூற்றி, நான் அறியாத பழிகளையெல்லாம் என் மேல் சுமத்துவதை நான் தடுக்க முடியாதது போலவே, என்னைப் பாராட்டுகிறவர்கள் என்னை குரு என்றும், மகாத்மா என்றும் அழைப்பதையும் என்னல் தடுக்க முடியவில்லை. புகழையும், குற்றச்சாட்டையும் எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளில் சமர்ப்பித்துவிட்டு, என் வழியிலேயே நான் போகிறேன்.

உயர்தரக் கல்விச்சாலை ஒன்றில் ஆசிரியராக இருக்கும் இவருக்குத் தெரிய வேண்டிய சில விவரங்களைச் சொல்லலாமென நினைக்கிறேன். இவர் கூறும் நூல்களையும் இஸ்லாமைப் பற்றி வேறு பலவற்றையும் நான் பயபக்தியுடன் படித்துள்ளேன். குரானைப் பல முறை வாசித்திருக்கிறேன். உலகத்தின் பெரிய மதங்கள் எல்லாவற்றிலுமுள்ள நன்மை அனைத்தையும் கற்றுச் சுவைக்க என் மதம் எனக்கு உதவுகிறது; என்னை நிர்ப்பந்தப்படுத்தவும் செய்கிறது. இதனல், இஸ்லாமிய நபியின் செய்தியையோ, அல்லது வேறு நபிகளின் செய்தியையோ கடிதம் எழுதியவர் பொருள் கொள்ளுவது போன்றே நானும் அர்த்தம் செய்துகொள்ள வேண்டும் என்பதில்லை. உலகத்தின் தீர்க்க தரிசிகள் மனிதருக்கு விட்டுப் போயிருக்கும் படிப்பினைகளை அறிந்துகொள்ள இறைவன் எனக்கு அருளியுள்ள கொஞ்ச அறிவை நான் உபயோகிக்க வேண்டும். குரான் உண்மையையும் அகிம்சை நெறியையும் கற்பிக்கிறதென இவர் கூறுவதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். நாம் அனைவரையும் போன்றே இவரும், இறைவன் நமக்கு அருளிய அறிவொளிக்கு இணங்க இக்கொள்கைகளை வாழ்க்கையில் நாள்தோறும் செயலில் காட்ட வேண்டும்.

கடிதத்தின் கடைசிப் பகுதி ஓர் ஆபத்தான தத்துவத்தை விதிக்கிறது. இந்தியா ஏன் ஒரே தேசீய இனமாக இல்லை? மொகலாயர் காலத்தில் அது ஒன்ருக இல்லையா? இந்தியா

இரண்டு தேசங்களா? அப்படியானல், ஏன் இரண்டாக மட்டும் இருக்க வேண்டும்? கிறிஸ்தவர்கள் மூன்ருவதாகவும், பார்சிகள் நான்காவதாகவும், இவ்விதமே ஒவ்வொரு சமூகமும் ஒரு தேசிய இனமாக இருக்கலாமே! சீனவிலுள்ள முஸ்லிம்கள் மற்றச் சீனர்களிடமிருந்து பிரிந்திருக்கின்றனரா? இங்கிலாந்திலுள்ள முஸ்லிம்கள் பிற ஆங்கிலேயரைப் பிரிந்து தனித் தேசிய இனமாக இருக்கின்றனரா? ஹிந்துக்கள், சீக்கியர்களைக் காட்டிலும் பஞ்சாப் முஸ்லிம்கள், எவ்விதத்தில் வேறுபட்டவர்கள்? அனைவரும் ஒரே நீரைப் பருகி, ஒரே காற்றைச் சுவாசித்து, ஒரே நிலத்தில் உயிர் வாழும் பஞ்சாபியர்கள் அல்லவா? தத்தம் மத ஆசாரங்களைப் பின்பற்றுவதைத் தடுப்பது எது? உலகம் எங்கும் முஸ்லிம்கள் தனித்தனித் தேசமாக இருக்கின்றனரா? அல்லது இந்திய முஸ்லிம்கள் மட்டுமே மற்றவர்களிடமிருந்து வேறுபட்டுத் தனித் தேசமாக வேண்டுமா? முஸ்லிம் இந்தியா என்றும், முஸ்லிம் அல்லாத இந்தியா என்றும் இரு பாகங்களாக இந்தியா உயிருடன் துண்டாடப்பட வேண்டுமா? மேலும் ஹிந்துக்கள் பெரும்பாலோராக இருக்கும் கணக்கற்ற கிராமங்களிலுள்ள கையளவு முஸ்லிம்களின் கதி என்ன? அது போலவே, எல்லைப்புற மாகாணம், சிந்து முதலிய இடங்களில் உள்ள கையளவினராக இருக்கும் ஹிந்துக்களின் நிலைமை என்ன ஆவது? எனவே, அக் கடிதம் எழுதியவர் காட்டுவது சண்டை சச்சரவு நிறைந்த வழியாகும். நீயும் வாழ்; மற்றவர்களையும் வாழ விடு. ஏனெனில், பரஸ்பரம் பொறுமையும் சகிப்புத் தன்மையுமே வாழ்க்கையின் விதியாகும். குரான், பைபிள், ஸெந்த் அவெஸ்தா, கீதை இவை அனைத்திலுமிருந்தும் நான் கற்ற பாடம் இதுவே.

—'ஹரிஜன்' - 28—10—1939

## 17

# பெரும்பான்மை என்ற கட்டுக்கதை

யுத்த லட்சியங்களை வெளியிட வேண்டும் என்று பொது நலனுக்காகக் காங்கிரஸ் யோசனை கூறியது. இதைத் தடை செய்வதற்காகப் பிரிட்டிஷ் பத்திரிகைகளும், பிரிட்டிஷாரும் சிறுபான்மையினரின் உரிமைகளை முன்னணிக்குக் கொண்டு வருவது மனதைப் புண்படுத்துகிறது. காங்கிரஸ் யோசனையின் சிறப்பை அதிகமாக உணர்ந்தாலொழிய, பிரகடனம் வெளிவராது. அது வராவிடில், காங்கிரஸ்காரர்கள் சோர்வுற வேண்டியதில்லை. நாம் தகுதியுள்ளவர்களாகும்போது சுயேச்சை அடைவோம். ஆனல், சிறுபான்மை வாதத்தை எளிதில் நம்பும் உலகத்தின் முன் அக்கூற்றைக் கொண்டு வராதிருப்பதுதான் பிரிட்டிஷாருக்கும் நேசக் கட்சியினருக்கும் நலமாகும். பிரிட்டிஷார் இந்தியாவை இன்னும் சில காலம் வைத்திருக்க விரும்புகின்றனர்

என்று சொல்லிவிடுவது நேர்மையாகும். அவ்வித ஆசையில் தவறு ஒன்றும் இல்லை. இந்தியா ஜெயிக்கப்பட்ட நாடு. ஒன்று ஜெயிக்கப்பட்டவர்கள் வெற்றிகரமாகப் புரட்சி செய்ய வேண்டும்; அல்லது வென்றவர் மனச்சாட்சி காரணமாக தமது வெற்றியைக் குறித்து மனம் வருந்த வேண்டும்; அல்லது வென்ற நாட்டில் இனி லாபம் இல்லை என்பதை வெற்றிபெற்ற நாடு உணர வேண்டும். அப்படியானால்தான் வெற்றி பெற்றவர்கள் தாம் வென்றவைகளைத் திரும்பித் தருவார்கள். பிரிட்டிஷார் தற்போதைய போரில் நடக்கும் ஏராளமான வெறி பிடித்த கொலையை வெறுப்பதால், யுத்தத்தில் சலிப்புற்று, இயன்ற அளவு சீக்கிரத்தில் யுத்தத்தை நிறுத்த விரும்புவார்கள்; அதற்காக எல்லாவிதத்திலும், இந்தியா சம்பந்தமாகவும், ஒளிவு மறைவின்றி நடந்துகொள்ளுவார்கள் என நம்பினேன்; இன்னும் நம்புகிறேன். எனினும், இந்தியாவை அடிமைத்தனத்தில் வைத்திருக்கும் வரை, அவர்கள் ஒளிவு மறைவின்றி நடந்து கொண்டவர்களாக மாட்டார்கள்.

இந்திய மக்கள் அனைவரையும் ஒன்ருகப் பாவித்து, அவர்களுக்காகக் காங்கிரஸ் மட்டும்தான் பேசக்கூடியது என்று உரிமை கொண்டாடுவதற்காக என்னுடன் பலர் கோபம் கொண்டுள்ளனர் என்பது எனக்குத் தெரியும். அது மமதையை அடிப்படையாகக் கொண்ட வேஷம் அல்ல. காங்கிரஸ் திட்டத்தின் முதற் பிரிவிலேயே இது வெளிப்படையாக இருக்கிறது. அது இந்தியா முழுவதற்கும் சுதந்திரம் விரும்புகிறது. அதற்காகவே உழைக்கிறது. பெரும்பான்மையோருக்காகவும் பேசுவதில்லை; சிறுபான்மையோருக்காகவும் பேசுவதில்லை. வேறுபாடின்றி எல்லா இந்தியர்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்க அது விரும்புகிறது. ஆகையால், சுதந்திரத்திற்கான உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டால், காங்கிரஸை எதிர்ப்பவர்களைப் பொருட்படுத்தக்கூடாது. இந்த உரிமையை ஆதரிக்கிறவர்கள் காங்கிரசிற்கு அதிகப் பலம் அளித்தவர்களாவார்கள்.

ஆட்சி புரிவதற்காகவும், போட்டிக் கட்சிகளுக்குள் மத்தியஸ்தம் செய்வதற்காகவும் பிரிட்டன் இந்தியாவில் இருக்க வேண்டுமென விரும்பும் இந்தியர்களை உலகின் முன் சுட்டிக் காட்டி, இதுவரை பிரிட்டன் இந்தியாவை ஆண்டு வந்தது. இத்தகைய இந்தியர்கள் எப்போதுமே இருந்துகொண்டுதான் இருப்பார்கள். இந்தியாவை அடிமையாக வைத்திருப்பதற்குக் காரணமாக, இங்கே கட்சிப் பிரதிகட்சிகள் இருப்பதை பிரிட்டன் எடுத்துக்காட்டுவது நேர்மையா? அல்லது பிரிட்டன் தன் தவறை உணர்ந்து, தன் அரசு முறையைத் தானே முடிவுசெய்து கொள்ள இந்தியாவை விட்டுவிட்டு வெளியேறிவிட வேண்டுமா? இதுதான் இப்போது கேள்வி.

சிறுபான்மையோர்தான் யார்? இவர்கள் மதம், ராஜீய சமூக சம்பந்தமானவர்கள். முஸ்லிம்கள் (மதம்), தாழ்த்தப்பட்டோர் (சமூகம்), மிதவாதிகள் (ராஜீயம்), சிற்றரசர்கள் (சமூகம்),

பிராம்மணர்கள் (சமூகம்), பிராம்மணரல்லாதார் (சமூகம்), லிங்காயத்துகள் (சமூகம்), சீக்கியர்கள் (சமூகம்?), கிறிஸ்தவர்கள் -புராடெஸ்டன்டுகளும் கத்தோலிக்கர்களும் (மதம்), ஜைனர்கள் (சமூகம்?), ஜமீன்தார்கள் (ராஜீயம்?). அகில இந்திய ஷியா மகாநாட்டுக் காரியதரிசி தனித்த வாழ்க்கைக்குத் தங்களின் உரிமையை நிலைநாட்டி ஒரு கடிதம் எழுதியுள்ளார். இக்குளறுபடியில் யார் பெரும்பான்மையோர்? துரதிருஷ்ட இந்தியாவின் தீவினைப்பயனால் முஸ்லிம்களுக்குள்ளும் கிறிஸ்தவர்களுக்குள்ளும் கூடப் பிரிவுகள் உள. சத்தம் போட்டுத் தொந்தரவு கொடுக்கும் எந்தக் கோஷ்டியையும் ஏற்றுச் சலுகை பாராட்டுவது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ராஜீய தந்திரமாகும். சிறுபான்மையோரைப் பற்றிக் கற்பனைச் சித்திரம் ஒன்றும் நான் வரையவில்லை. இதுதான் நடைமுறையில் உள்ள உண்மையாகும். நான் கூறியுள்ள ஒவ்வொரு பிரிவையும் காங்கிரஸே சமாளிக்கும்படியாக நேர்ந்துளது. நான் கொடுத்திருப்பது, பூர்த்தியான ஜாபிதா இல்லை. இது உதாரணத்திற்காகச் சொன்னதுதான். இதை எல்லையின்றி விவரித்துக்கொண்டு போக முடியும்.

ஹிந்துக்களைப் பெரும்பான்மையோரென்று கூறுவது, ஒரு நவீன சம்பிரதாயம் என்பது எனக்குத் தெரியும். ஹிந்து மதம் என்னும் சொல்லின் பொருள் விரிந்துகொடுக்கக் கூடியது; அதற்கு இலக்கணம் கூறுவது கடினம். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களைப்போல், ஹிந்துக்கள் ஒரே தொகுதியினர் அல்ல. எந்த மாகாணச் சட்டசபையிலும் உள்ள பெரும்பான்மையோரைப் பாகுபடுத்திப் பார்த்தால், அவர்கள் சிறுபான்மையோர் என்று சொல்லப்படுகின்றவர்களின் தொகுப்பு என்பது தெரியும். வேறு விதமாகச் சொன்னால், இந்தியாவில் ராஜீயக் கட்சிகள்தான் இருக்க முடியுமே யொழிய, பெரும்பான்மை, சிறுபான்மைச் சமூகம் என்றிருக்க முடியாது. எனவே, பெரும்பான்மையோரின் கொடுங்கோல் என்ற கூக்குரல் வெறும் கட்டுக் கதையாகும்.

காங்கிரஸ் அரசாங்கங்களுக்கு விரோதமாக முஸ்லிம் லீக் கூறியுள்ள குறைகளை, மத்தியஸ்தக் கழகத்தின்முன் கொண்டு போகலாம் என்று ராஜன் பாபு எழுதிய கடிதத்துக்கு விடையாக ஜனாப் ஜின்னா சாகிப் பின்வருமாறு கூறுகிறார்:

"ராஜப் பிரதிநிதிக்கும் மாகாண கவர்னர்களுக்கும் சிறுபான்மையோரின் உரிமைகளையும் நலத்தையும் பாதுகாக்கும் பொறுப்பைத் தெளிவாக அரசியல் சட்டம் ஒப்படைக்கிறது. ஆதலால், இதைப்பற்றித் தாமதமின்றி விசாரிக்கும்படி கவர்னர் ஜெனரலை ஏற்கெனவே கேட்டுக்கொண்டுள்ளேன்.

"மேன்மை தங்கிய அவரது ஆலோசனையில் அவ் விஷயம் இருந்து வருகிறது. எங்கள் தேவைகளை நிறைவேற்றி, காங்கிரஸ் மந்திரிகள் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் மாகாணங்களில் உள்ள முஸ்லிம்களுக்குத் திருப்தியையும், தாங்கள் பத்திரமாயிருக்கிறோம் என்கிற உணர்வையும் திரும்பவும் அளிக்கக்கூடிய நடவடிக்கைகள் எடுத்துச் சரிசெய்யக்கூடியவர் அவர் ஒருவரே."

ராஜன் பாபுவின் நியாயமான வழியை இவர் மறுத்துவிட்டது துரதிருஷ்டமாகும். இது நட்புக் கரத்தை ஏற்க மறுப்பதல்லவா? அது எப்படியிருந்தாலும், காங்கிரஸ் மந்திரிகளுக்கு விரோதமாக வந்துள்ள குற்றச்சாட்டுகளைச் சோதித்து, வைஸ்ராய் தீர்ப்புச் சொல்லுவதை யாரும் தடைசெய்ய முடியாது. அவர் சீக்கிரமாக அவ்விஷயத்தை யொட்டி விசாரணை நடத்துவார் என்று நம்புவோமாக. முஸ்லிம்கள் சிறுபான்மையோராயினும் இல்லாவிடினும், மதம், சமூகம், ஆசாரம், அரசியல் சம்பந்தமான மற்ற சமூகங்களின் உரிமைகளைப் போலவே, அவர்களுடைய உரிமைகளையும் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டியது புனிதமான பொறுப்பாகும். அவ்வுரிமைகளைப் பாதுகாப்பதால் இந்தியாவின் சுதந்திரம் பாதிக்கப்படமாட்டாது. உண்மையில், தேசத்தின் பிரதிநிதிகளால் விடுதலைச் சாசனம் தயாரிக்கப்படும்பொழுது முஸ்லிம்களும், உண்மையாகவோ, அல்லாமலோ சிறுபான்மையோராக இருக்கும் மற்றவர்களும் இன்னும் மேலாகப் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுடைய வார்த்தைக்கு அதிகமான மதிப்பு இருக்கும்.

ஆங்கிலேயர் திடீரென விலகிவிடுகிறார்கள் என்றும், அந்த இடத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி புரிய வேறொரு அந்நியரும் இல்லை என்றும் வைத்துக்கொள்ளுங்கள். இப்படி நடந்தால், என்ன நேரிடுமென்று கணப்பொழுது யோசித்துப் பாருங்கள். பஞ்சாபியர்தான், - அவர்கள் முஸ்லிம்களாயினும் சரி, சீக்கியர்களாயினும் சரி, அல்லது வேறு யாராயினும் சரி, - இந்தியாவைக் கைப்பற்றிவிடுவார்கள் எனலாம். கூர்க்கர்களும் பஞ்சாபியருடன் அநேகமாகச் சேர்ந்துகொள்ளுவார்கள். மேலும் பஞ்சாபியரல்லாத முஸ்லிம்களும் பஞ்சாபியரோடு சேர்ந்துகொள்ளுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அங்கிலையில் அதிகமான ஹிந்துக்களடங்கிய காங்கிரஸ் என்ன செய்யும்? அப்போதும் அவர்கள் உண்மையான அகிம்சை நெறியைப் பின்பற்றினல், போர் வீரர்கள் அவர்களைத் தொந்தரவு செய்யமாட்டார்கள். அவ்வீரர்களுடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ள காங்கிரஸ்காரர்கள் விரும்பமாட்டார்கள். ஆனல், நிராயுதபாணிகளான நம் நாட்டு மக்களை அந்தச் சூரர்கள் சுரண்ட இடம் கொடுக்கமாட்டார்கள். எனவே, வலியோரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பிரிட்டிஷ் அரசாட்சியை இங்கே வைத்திருக்க வேண்டியவர்கள் யாரேனுமிருப்பின், அவர்கள் காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஹிந்துக்களும் மற்றவர்களுமேயாவர். யார் அதிக எண்ணிக்கையுடையவர்கள் என்பது கேள்வியில்லை. யார் வலிமையுடையவர் என்பதுதான் கேள்வி. இதற்கு நிச்சயமாக ஒரே விடைதான் உண்டு. சிறுபான்மையோருக்கு ஆபத்து என்று கூச்சலிடுபவர்கள், பெரும்பான்மையோர் என்று சொல்லப்படுபவர்களுக்கு அஞ்ச வேண்டியதில்லை. அது வெறும் காகிதத்திலுள்ள பெரும்பான்மைதான். எந்த விதத்திலும் அது சக்தியற்றது. ஏனெனில், ராணுவ ரீதியாக அது பலவீனமானது. ஜனநாயக வேஷம்

போடுவதற்கு பிரிட்டிஷ் துப்பாக்கிகள், பலமற்ற பெரும்பான்மையோருக்கு உதவி செய்யும் வரைதான் சிறுபான்மை என்று சொல்லப்படுபவர்களின் அச்சத்திற்கு ஆதாரமிருக்கும். இது நம்ப முடியாததாகத் தோன்றியபோதிலும், இது வார்த்தைக்கு வார்த்தை அப்படியே உண்மையாகும். அதற்கு விருப்பமிருக்கும் வரையில், பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினர் கட்சிகளுக்குத் தாங்கள் விரும்பிய பெயர்களைச் சூட்டி, ஒன்றை மற்றொன்றுக்கு எதிராக வெற்றிகரமாய்க் கிளப்பிவிட்டு வேடிக்கைபார்ப்பார்கள். அது வஞ்சனையுள்ள வழியாக இருக்க வேண்டியதில்லை. எதிர்க் கட்சிகள் இருக்கும் வரை, அவர்களைச் சமநிலையில் வைத்திருப்பது தங்களுக்கு ஆண்டவன் இட்ட கட்டளை என்றும், அதற்காகத் தாங்கள் இந்தியாவில் இருந்தே தீர வேண்டுமென்றும் அவர்கள் உண்மையாக நினைக்கலாம். ஜனநாயக ஆட்சிக்கு இது வழியல்ல; ஆனல், 'வலிமைதான் நீதி' என்ற கொள்கையின் பல திறப்பட்ட உருவங்களான பாஸிசம், நாஸிசம், போல்ஷிவிசம் போன்றவைகளுக்குத்தான் இது வழியாகும். விஷயங்களின் தராதரங்களை இந்த யுத்தம் மாற்றிவிடும் என்ற நம்பிக்கையுடன் நான் இருக்கிறேன். எனினும், இந்தியா சுதந்திரமானதென்று ஒப்புக்கொண்டு, அப்படிப்பட்ட இந்தியா ராஜீயத் துறையில் கலப்பற்ற அகிம்சை நெறியைக் கையாண்டால்தான் இது நடக்கும்.

—'ஹரிஜன்' - 21—10—1939

# 18

# தேசீய ராணுவமே காங்கிரஸ்

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை எனில் சமூக ஒற்றுமையே. நம் முன் இவ்விஷயமாக ஒப்பந்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. முஸ்லிம் உரிமைகளைப் பாதுகாக்க ஜனப் ஜின்னு சாகிப் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் கையை எதிர்பார்க்கிருர். காங்கிரஸ் செய்யக்கூடியதோ, விட்டுக்கொடுக்கக் கூடியதோ ஒன்றும் அவருக்குத் திருப்தி அளிக்காது. எப்போதும் அவர் பிரிட்டிஷார் கொடுக்கக்கூடியதற்கு, அல்லது கொடுப்பதாக உறுதி கொடுப்பதற்கு மேல் அதிகம் கேட்கமுடியும். அவர் கருத்துப்படி இது சரியே. ஆகையால், முஸ்லிம் லீக் கேட்பதற்கு எல்லை இருக்க முடியாது. எல்லோரும் தேச சுதந்திரத்தை விரும்புகின்றனரென நம்புகிரேம். அந்த லட்சியத்திற்காகப் போராடுவதில் காங்கிரஸிற்குச் சமமான ஸ்தாபனம் வேறு எதுவுமில்லை. இந்தப் பொருளில் காங்கிரஸ் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கிறதே யல்லாமல், வேறெந்தப் பொருளிலும் காங்கிரஸ் ஹிந்துக்களுக்காகவோ, வேறொரு சமூகத்திற்காகவோ நிற்பதில்லை. உண்மையில் தேசத்திற்கு உள்ள ஒரே தேசீய ராணுவம் காங்கிரஸ்தான். அகிம்சை நெறியைக் கையாளுவதனுல்

அது ஒரு படை அல்ல என்று சொல்லிவிட முடியாது; அதுதான் உண்மையில் அதிக சக்தி பொருந்திய படையாகும். தேசீய நலனைத் தவிர வேறொன்றையும் எடுத்துச் சொல்ல மறுப்பது காங்கிரஸின் இடையருத சம்பிரதாயமாக இருந்து வந்திருக்கிறது. ஹிந்துக்கள் என்பதற்காக, அது எக்காலத்திலும் ஹிந்துக்களுக்கு பிரதிநிதித்துவம் வகித்ததில்லை. முஸ்லிம் லீக், முஸ்லிம்களின் நலன்களைக் காக்கத் தனி உரிமை கொண்டாடுவதுபோல், இவ் வேலையை ஹிந்து மகாசபை எடுத்துக்கொண்டுள்ளது.

காங்கிரஸ்காரர்கள் எச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, அவர்களுக்கு வழி காட்ட சமூக விஷயங்களில் தனது கொள்கைகளை விளக்குவதே காங்கிரஸ் செய்யக் கூடியதாகும். லீக் தனக்குக் கிடைக்கக்கூடியது அனைத்தையும் பிரிட்டிஷ் அதிகாரத்தின்மூலம் பெறுவதைக் காங்கிரஸ் எதிர்க்கக் கூடாது. பிரிட்டிஷ் வல்லரசை எதிர்த்துப் போரிடும் காங்கிரஸ் ஸ்தாபனம், முஸ்லிம்களுடன் சண்டையிடும் தவற்றை எக்காலத்திலும் செய்யாது.

—'ஹரிஜன்' - 4—11—1939

## 19

# ஊசலாட்டம் ஓய வேண்டும்

தமக்கும், ஸ்ரீ ராஜேந்திரப் பிரசாதுக்கும், ஜின்னு சாகிபுக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்துகளை வைஸ்ராய் வெளியிட்டிருக்கிருர். அதற்கு அவர் எழுதியுள்ள முன்னுரையையும், அவருடைய ஒலிபரப்பையும் தக்க கவனத்துடன் வாசித்தேன். அவர் தோல்வியுற மறுத்து, தீர்க்க முடியாததுபோல் தோன்றும் ஒரு பிரச்னைக்குப் பரிகாரம் காணக் கங்கணங்கட்டிக் கொண்டிருப்பதை வரவேற்கிறேன். பரிகாரம் காணுவதில் அவருக்குள்ள அவசரத்திலும் ஆர்வத்திலும் நான் முழுப் பங்கு எடுத்துக் கொள்ளுகிறேன். இவ்விரு பிரகடனங்களைப் பற்றிக் காங்கிரஸ் என்ன சொல்லப் போகிறதென்று காத்திராமல், முற்றிலும் பொதுநல முன்னேற்றத்துக்காகவே இதைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியா சம்பந்தமாக ஒத்துக்கொள்ளக்கூடிய யுத்த நோக்கங்களை வெளியிடா விட்டால் ஒரு பரிகாரமும் சாத்தியமில்லை. இதுவரை இந்தியாவிலும் பிரிட்டனிலும் வெளியிட்டவை பழம்போக்கானவை. சுதந்திர வாஞ்சையுள்ள இந்தியாவுக்கு அவற்றில் நம்பிக்கையில்லை; சந்தேகமே ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் உள்ள கடந்த காலத் தொடர்பு முற்றும் அற வேண்டும். புதுக் காலத்திற்கேற்ற பாஷையை பிரிட்டன் உபயோகிக்க வேண்டும். இந்த அடிப்படையான உண்மையை ஏற்றுக்கொள்ளக் காலம் இன்னும் வரவில்லை என்ருல், பரிகாரம் தேடும் முயற்சியை

நிறுத்தி வைக்கவே வற்புறுத்துவேன். இந்தியாவின் விருப்பம் எதுவாயிருப்பினும், இந்தியாவைப் பற்றிய பிரிட்டனின் நோக்கத்தை வெளியிடுவதே தற்சமயத் தேவை என்பதைப் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்கு நான் நினைவூட்டுகிறேன். அடிமைத் தனத்தை ஒழிக்க முடிவு செய்துள்ள முதலாளி ஒருவன், விடுதலை வேண்டுமா, வேண்டாமா என்று தன் அடிமைகளை யோசனை கேட்பதில்லை!

படிப்படியாக இல்லாமல் உடனடியாக இந்தியாவை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்வதாகப் பிரகடனம் செய்துவிட்டால், இடைக் கால ஏற்பாடு எளிதாகும். சிறுபான்மையினரின் உரிமைகளைக் காப்பது அப்போது சுலபமாகி விடும். ஊசலாட்டத்திற்கும் தகிடுதத்தத்திற்கும் ஒரு முடிவு ஏற்படும். சிறுபான்மையோர் பாதுகாப்புக்கு உரித்தானவர்களே. ஆனால், படிப்படியாக இல்லாமல் ஒரே தடவையில் அவர்களுக்கு முழுப் பாதுகாப்பும் அளிக்க வேண்டும். பெரும்பான்மையோருக்குக் கொடுக்கும் அளவுக்கு சிறுபான்மையோருக்கும் விடுதலை அளிக்காத எந்தச் சாசனமும் ஏறிட்டுப் பார்ப்பதற்குக்கூடத் தகுதியற்றது. அரசியல் திட்டம் வகுப்பதில் சிறுபான்மையோரும் முழு அதிகாரமும் உள்ள பங்காளிகளாக இருப்பர். அதற்கென்ன ஏற்பாடு செய்யலாம் என்பது, திட்டம் வகுக்கும் புனிதப் பொறுப்புடைய பிரதிநிதிகளின் ஞானத்தைப் பொறுத்தாகும். சிறுபான்மையோரைப் பெரும்பான்மையினர் எனப்படுவோருக்கு விரோதமாகத் தூண்டி விட்டுத்தான் - இது எந்த ஆதிபத்திய முறையிலும் தடுக்க முடியாதது - பிரிட்டன் இதுவரை ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது. ஆகவே, சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கிடையே ஒப்பந்தம் பெரிதும் அசாத்தியமாகி விட்டது. சிறுபான்மையோரின் பாதுகாப்புக்கு வழி கண்டுபிடிக்கும் சுமையை, கட்சிகளின் மீதே போட்டுவிட வேண்டும். இப்பொறுப்பை ஏற்பது தனது திருப்பணி எனக் கருதும்வரை, பிரிட்டன் இந்தியாவை அடிமை நாடாக வைத்திருக்க வேண்டும் என்றே நினைத்துவரும். விடுதலை வேட்கை கொண்ட தேச பக்தர்கள் போராடுவார்கள். நான் அவர்களை வழிநடத்த முடியுமானால், அது அகிம்சை நெறியில் இருக்கும். என் முயற்சியில் நான் தோல்வியுற்று உயிர் துறந்து விட்டால், பலாத்கார முறையிலும் நடத்தலாம். பிரிட்டன் இந்த யுத்தத்திற்கு நியாயம் காட்டவும், இதை சீக்கிரம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரவும் தேவையானது என்னவெனில், தொன்மை வாய்ந்த பெரிய தேசமாகிய இந்தியாவை விடுதலை செய்வது ஒன்றேயாகும். இதை உணர்ந்து கடவுளின் சாபமாகிய இப்போரை பிரிட்டன் ஒரு நற்பேருக மாற்றும் என்று நான் நம்பினேன், இன்றும் நம்புகிறேன்.

வைஸ்ராயின் நேர்மையில் எனக்கு நம்பிக்கை இருப்பதால், என் சக தொண்டர்களைப் பொறுமையை இழந்து விடாதிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். முதலாவதாக, வைஸ்ராய்

சமரசத்திற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறார். இரண்டாவதாக, முஸ்லிம் லீக் முட்டுக்கட்டை போடுகிறது. மூன்றாவதாக, காங்கிரஸ்வாதிகளிடையே ஒழுங்கின்மையும் ஒற்றுமையின்மையும் நிலவுகின்றன. இவை இருக்கும்வரையில் சட்டமறுப்புக்கு இடமில்லை.

இரண்டாவது நிபந்தனையைக் கண்டு முஸ்லிம்கள் கோபம் அடைய வேண்டியதில்லை. முஸ்லிம் லீகோடு செய்துகொள்ளக் கூடிய ஒரு ஏற்பாடு இல்லாதவரை, சட்டமறுப்பென்றால் முஸ்லிம் லீகையும் எதிர்ப்பதென்றுதான் ஆகும். எந்தக் காங்கிரஸ்காரரும் இதற்குச் சம்மதிக்க முடியாது. 'ஹரிஜனி'ல் நான் எழுதியது ஜின்னா சாகிபைத் திடுக்குறச் செய்ததென்பதைக் கவனித்தேன். அதற்காக விசனப்படுகிறேன். ஆனாலும், இக்கட்டத்தில் என்னைத் தற்காத்துக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. அவருக்கும் பண்டித நேருவுக்கும் இடையில் நடக்கும் பேச்சுகளை நான் கெடுக்க விரும்பவில்லை. சீக்கிரம் பேச்சுகள் தொடரும் என நம்புகிறேன். அவை சமூக ஒற்றுமைக்கு அடிகோல வேண்டும் என்பதே என் பிரார்த்தனையாகும்.

— 'ஹரிஜன்' - 11—11—1939

# 20

## சமூக நட்பின் பொருள்

நான் சொல்லுகிற சமூக நட்பு என்பதன் பொருள் என்ன? ஜின்னா - நேரு பேச்சுகள் முறிந்தபின் இதை எப்படி நிறுவலாம்? அவர்கள் தோல்வி அடையலாம், அடையாமலும் இருக்கலாம். ஒப்பந்தங்கள் பெரிய மனிதர்களுக்கானவை. சாதாரண மக்களை, நசுக்குண்டு கிடக்கும் கோடிக்கணக்கான மக்களை அவை பாதிப்பதில்லை. இவர்களிடையே நட்பை வளர்க்க, எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் எதுவும் தேவையில்லை. காங்கிரஸ்வாதிகள் ராஜீய நோக்கமின்றி எல்லோருடனும் நட்புக் கொள்ளுகின்றனரா? ரத்தக் கலப்புள்ள சகோதரருள் உள்ள சம்பந்தம் ஏதோ ரகசிய நோக்கத்தினால் தோன்றுவதல்ல. எனவே, அது இயல்பாகவும் நிலைத்ததாகவும் இருக்கிறது. அதுபோலவே, பொது மக்களிடையும் நட்பு அச்சத்தினாலோ அல்லது சுயநலத்தினாலோ உண்டாகாமல், இயல்பானதாக இருக்க வேண்டும். இந்த நட்பு ஹிந்து, முஸ்லிம்களுக்குள் மட்டுமின்றி, எல்லோருக்குள்ளும் இருக்க வேண்டும். நாம், நம்மிலும் மிகத் தாழ்ந்தோருக்கும் நட்புக் காட்ட வேண்டும்; ஆங்கிலேயரிடத்திலும் நட்புக் கொள்ள வேண்டும். ராஜீய எதிரிகளிடத்தும் இது செலுத்தப் பெறவேண்டும். ஆகவே, தீண்டாமையை ஒழிப்பதில் ஆழ்ந்த பொருள் இருக்கிறது. உயர்வு, தாழ்வு என்ற எண்ணமே ஹிந்துக்களிடமிருந்து வேருடன் பறிக்கப்பட வேண்டும். சாதிக்

கட்டுப்பாடு தேசியக் கட்டுப்பாட்டிற்கு இடமளிக்க வேண்டும். காங்கிரஸ்வாதிகளிடையே இவ்வேறுபாடுகள் ஒழிந்து, அவை பழங்கதைகளாகிவிட வேண்டும்.

— 'ஹரிஜன்' - 30—12—1939

# 21

# ஒற்றுமையும் நீதியும்-1

"சமூக ஒற்றுமை இன்றேல் சுயராஜ்யம் இல்லை என்று சொல்லி, இந்தியாவுக்குச் சீர்படுத்த முடியாத தீமையைச்செய்து விட்டீர்கள். இதற்குப் பதிலாக பல்வேறு சமூகங்களுக்குள்ளும், பல்வேறு சமூகங்கள் விஷயத்திலும் நீதியின்றி சுயராஜ்யம் கிடையாது என்று நீங்கள் சொல்லவேண்டும்" என ஒரு நாள் என்னிடம் வந்த ஒருவர் சொன்னார். அவரிடம் நியாயத்தை எடுத்துக்கூறி வாதித்தேன். ஆனால், அவருக்கு ஆறுதல் ஏற்படவில்லை. "முஸ்லிம் நண்பர்களின் தயவைச் சம்பாதிக்க உங்கள் ஆன்மாவை விற்றுவிட முனைந்துவிட்டீர்கள்" என்றார் அவர். நான் இதை மறுத்து, "இந்தியாவின் விடுதலையை வாங்கக்கூட என் ஆன்மாவை விற்க மாட்டேன் என்று உங்களுக்குத் தெரியும்; உலகத்திற்கும் தெரியும். முஸ்லிம்களின் நட்பை விரும்புவது என் சொந்தத் திருப்திக்காக அல்ல, இந்தியாவுக்காகவே. நீங்கள் எனக்கு அநீதி இழைக்கிறீர்கள்'' என்றேன். வந்தவர் சிறிது ஆத்திரத்துடன், "தேசத்தின்மீதுள்ள உங்கள் அன்பு எனக்குத் தெரியும்: தெரிந்திராவிட்டால், இதற்கென்று இங்கு வந்திருக்க மாட்டேன். உங்கள் அன்பே நீங்கள் செய்த, செய்யும் பிழையைக் காணவிடாமல் உங்களைக் கண்மூடியாக்கிவிட்டது. ஹிந்துக்கள் சொல்லுவதும் செய்வதும் உங்களுக்குத் தெரியாது. உங்களை அவர்கள் நம்புவதால் முஸ்லிம்களைப் புண்படுத்தாமல் தாங்கள் துன்பத்தை அனுபவிக்கின்றனர். ஒற்றுமை என்பதற்குப் பதிலாக நியாயம் என்று மாற்றும்படி உங்களைக் கெஞ்சுகிறேன்" என்று அவர் கூறினார். நண்பருடன் வாதிப்பதில் பயனில்லை; எனக்கு நேரம் இல்லை. இப் பத்திரிகையில் அதைப்பற்றி எழுதுவதாக உறுதி கூறினேன். அவ்வுறுதி அவருக்கு ஆறுதலளித்தது; எனது விடை ஆறுதலளிக்குமோ என்னவோ தெரியாது.

சமூக ஒற்றுமையில்லாமல் அகிம்சை நெறியினால் சுயராஜ்யம் பெற முடியாதென்ற என் நம்பிக்கையை யாரும் அசைக்க முடியாது. ஆனால், சமூகங்களிடையே நீதி இல்லாவிட்டால், ஒற்றுமை வராது. முஸ்லிம் அல்லது வேறு எவரது நட்பையும் லஞ்சத்தினால் பெறமுடியாது. லஞ்சமே கோழைத்தனம்தான். எனவே, அது பலாத்காரமேயாகும், ஆனால், கொடுக்க வேண்டியதற்குமேல் என் சகோதரனுக்கு நான் கொடுப்பது லஞ்சம் ஆகாது; அது நான் அநீதி இழைப்பதும் ஆகாது. பெருந்

தன்மையாக இருப்பதன்மூலமே நான் சந்தேகத்தைப் போக்க முடியும். பெருந்தன்மையற்ற நீதி எளிதில் ஷைலக்கின்* நீதியாகிவிடும். ஆனால், எந்த லட்சியத்திற்காகப் பெருந்தன்மையாக இருக்கிறேமோ, அந்த லட்சியம் வீணாகிவிடாதபடி நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஆகையால், ஒற்றுமை எண்ணத்தையும், அதற்காக முயற்சிப்பதையும் நான் விட்டுவிட முடியாது. இப்போது வேண்டியது நீதி அல்ல, நேர்மையான நடவடிக்கையே. எனினும், காயிதே ஆஜம் ஜின்னா முஸ்லிம்களின் மனதைப் பிரதிபலிக்கிறாரெனில், எனக்கு அவர் அளித்த பதில், ஒற்றுமையைப்பற்றிய நம்பிக்கையையே மண்ணோடு மண்ணாக்கிவிடுவதாக இருக்கிறது. பல்வேறு ராஜீய கோஷ்டிகளை அவர் ஒன்று சேர்த்ததற்கு நான் கொடுத்த இயல்பான விளக்கத்தை அவர் மறுத்தது, ஒரு புது நிலையை உண்டாக்கியுளது. மதவாரியாகத் தொகுக்கும் பல தேசீய இனங்கள் அடங்கிய கண்டம் என்று அவர் இந்தியாவைப் பாவிப்பது காரியத்தில் வருமானால், அரை நூற்றாண்டுக்கு மேலாகக் காங்கிரஸ் செய்து வந்த முயற்சியை அது பாழாக்கிவிடும். ஆஜம் ஜின்னாவின் கருத்துக்கள் முஸ்லிம் லீகின் சரித்திரத்தில் தாற்காலிகமான ஒரு நிலையென நம்புகிறேன். பல மாகாணங்களிலுள்ள முஸ்லிம்கள் தங்கள் ஹிந்து, கிறிஸ்தவ உடன்பிறந்தாரிடமிருந்து தங்களைத் துண்டித்துக்கொள்ள முடியாது. முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும், ஹிந்துக்களாக இருந்து மதம் மாறியவர்கள், அல்லது மதம் மாறியவரின் வம்சத்தார்களே ஆவர். மதம் மாறியதால் அவர்கள் தங்கள் தங்கள் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றாகிவிடமாட்டார்கள். இஸ்லாமைத் தழுவும் ஆங்கிலேயர் தம் தேசீய இனத்தை மாற்றிக்கொள்ளுவதில்லை. காயிதே ஆஜம் ஜின்னாவின் கருத்துக்கள், தமது தோழர்களின் தீர்க்காலோசனையுடன்கூடிய கருத்துக்கள் அல்ல என்றே நம்புகிறேன்.

—'ஹரிஜன்' – 27—1—1940.

---

* ஷைலக் என்பவன், உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றில் உள்ள பாத்திரம் ஆவான். கருமியான அவன், நற்குணம் உள்ள தனது விரோதியின் மீது வஞ்சம் தீர்ப்பதற்காக, தான் கடன் கொடுக்கும் தொகையை உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்காவிடில் அவரது உடலிலிருந்து ஒரு பவுண்டு மாமிசத்தை எடுத்துத் தர வேண்டும் என நிபந்தனை விதிக்கிறான். உரிய காலத்தில் தொகை திருப்பிக் கொடுக்கப்படவில்லை. எனவே, அவரது உடலிலிருந்து ஒரு பவுண்டு மாமிசமே தேவை என வற்புறுத்துகிறான், ஷைலக். அவனுக்குச் சேர வேண்டிய தொகைக்கு மேல் பன்மடங்கு தருவதாக எதிரியின் நண்பர் கூறியும் ஷைலக் அதை விரும்பாமல் எதிரியின் மாமிசமே தேவை என்று கத்தியைத் தீட்டுகிறான். சட்டப்படி அவன் கேட்பது நியாயமாகிறது. அதை மறுப்பதற்கில்லை. எனவே, நீதிபதி மகாபுத்திசாலித்தனமாக, எதிரியின் உடலிலிருந்து ஒரு பவுண்டு மாமிசத்தை வெட்டி ஷைலக் எடுத்துக்கொள்ளட்டும் என்றும், ஆனால் ஒரு பவுண்டுக்கு மேல் இம்மியளவும் வெட்டிவிடக்கூடாதென்றும், அதற்கு மேல் ஒரு சொட்டு ரத்தம்கூடச் சிந்தக்கூடாது என்றும் தீர்ப்புக் கூறுகிறார். இதைக் கேட்டதும் ஷைலக்கிற்கு இடி இடித்தாற் போலாகிவிடுகிறது. இறுதியில் அவனுக்குத் தான் கொடுத்த தொகை போனாலும் போகட்டும், தன்னை நீதிபதி விட்டுவிட்டால் போதும் என்றாகிவிடுகிறது!

# 22

# ஒற்றுமையும் நீதியும்-2

**கேள்வி :** 'ஒற்றுமையும் நீதியும்' என்ற கட்டுரையில் நியாயமாகக் கொடுக்க வேண்டியதற்குமேல் நீங்கள் உங்கள் சகோதரனுக்குக் கொடுத்தால் அது லஞ்சமுமில்லை, அநீதியுமில்லை என்று சொல்லுகிறீர்கள். "பெருந்தன்மையாக இருப்பதன் மூலமே சந்தேகத்தைப் போக்கலாம். பெருந்தன்மையற்ற நீதி எந்த லட்சியத்திற்காகச் செய்யப்படுகிறதோ அதையே கெடுத்துவிடும்" என்று கூறுகிறீர்கள். நீதியும் பெருந்தன்மையும் ஒன்று சேர முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். டிரைடன் * சரியாய்க் கூறியிருக்கிறுர் : "நீதிக்குக் கண்ணில்லை, எனவே அதனல் ஒருவரையும் காண முடியாது." மேலும், பலவீனர்களிடமும், பணிவும் அமைதியுமுள்ளவர்களிடமும் பெருந்தன்மையைக் காட்டலாம். தன் வலிமையைக் குறித்து இறுமாப்படைந்து உங்களைக் கட்டாயப்படுத்திச் சம்மதிக்கப் பண்ணுகிறவனிடம் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளக் கூடாது. அத்தகைய ஒருவனுக்கு, சேர வேண்டியதற்கு மேலே கொடுப்பது பெருந்தன்மையல்ல; கோழைத்தனமான பணிவேயாகும். எண்ணிக்கையில் அதிகம் இருப்பினும், நீங்கள் சுட்டிக் காட்டியபடி ஹிந்துக்களின் பெரும்பான்மை வெறும் கற்பனைதான்.† உண்மையில் அவர்கள் பலம் குறைந்தவர்கள். முஸ்லிம்களிடம் பெருந்தன்மையாக நடந்துகொள்ள வேண்டும் எனில், அதற்குத் தகுதி வாய்ந்தது ஹிந்துமகா சபைதான்.

**பதில் :** நீங்கள் குறிப்பிடும் கட்டுரையில் பொதுத் தத்துவங்களைப்பற்றியே பிரஸ்தாபித்துள்ளேன் ; குறிப்பிட்ட சிறுபான்மையோரைப்பற்றி அல்ல. நீதி, நீதியாக இருப்பதற்குப் பெருந்தன்மை வேண்டும். பெருந்தன்மை நியாயமானதாக இருக்க வேண்டுமாயின், கண்டிப்பான நீதிக்கு இணங்க இருக்க வேண்டும். அது எவருக்கும் தீங்கை விளைவிப்பதாக இருக்கக்கூடாது. எனவே, ஒரு சிறுபான்மையோருக்காகப் பிறிதொரு சிறுபான்மையோரையோ, பல சிறுபான்மையோர்களையோ பலியிடும் கேள்வியே எழுவதற்

---

* 'டிரைடன் (1631–1700) புகழ் பெற்ற பிரிட்டிஷ் கவியும் நாடகாசிரியரும் ஆவார். அவரது காலத்தில் இருந்த பிரபல ராஜதந்திரிகளைப் பற்றிய அவரது எழுத்தோவியம் போற்றத்தக்க அரசியல் இலக்கியமாகத் திகழ்ந்தது. அவர் பார்லிமெண்டில் அங்கத்தினராக இருந்ததுடன், 1670–இலிருந்து 1688 வரையில் பிரிட்டிஷ் அரசாங்கக் கவிஞராகவும் விளங்கினர்.

† 385–389–ஆம் பக்கங்களில் வெளியாகியுள்ள 'பெரும்பான்மை என்ற கட்டுக்கதை' என்ற கட்டுரையைப் பார்க்கவும்.

கில்லை. பலவீனர்களுக்கும் பணிவுடையோர்களுக்கும்தான் பெருந்தன்மை காட்டவேண்டும், துன்புறுத்துவோருக்குப் பெருந்தன்மை காட்டுவது தகாது என்று நீங்கள் சொல்லுவது சரிதான். இருப்பினும், அவரும் நீதி பெறுவதற்கு உரிமை உள்ளவரே. அவருக்கு நீதி வழங்காவிடில், அவர் பிறரைத் துன்புறுத்துவது சரி என்றாகிவிடும். ஆகவே, சிறுபான்மையினரின் தன்மையைக் கவனியாது, பெருந்தன்மையான நீதி எல்லோருக்கும் வழங்குவதே பத்திரமான வழியாகும். இதை உயர்ந்த வழி என்று சொல்ல வேண்டியதில்லை. எங்கே கண்டிப்பான நீதி இருக்கிறதோ அங்கே, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற கேள்வியே எழாது என்பது நிச்சயம். துன்புறுத்துவோர், சமூகத்திலுள்ள கோழைத்தனம் போன்ற நிலைக்கு ஓர் எச்சரிக்கையாகத் திகழ்கிறார். உதாரணமாக, கோழைத்தனம் அநீதியாக இருக்கலாம் என்பதை அடிக்கடி மறந்துவிடுகிறோம். கோழைகளுக்கு நீதி உணர்ச்சி கிடையாது. அச்சுறுத்தலுக்கும் பலாத்காரத்துக்குமேதான் அவர்கள் பணிகின்றனர். கோழைக்கும் துஷ்டனுக்கும் வித்தியாசமில்லை. ஒருவன் மற்றவனைப் போலவே கெட்டவன்தான். கோழை இருப்பதால்தான் துஷ்டன் தோன்றுவதற்கும் இடம் ஏற்படுகிறது.

முந்திய கட்டுரையொன்றில், ஹிந்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் சமரசம் செய்துகொள்ளத் தகுதியான ஸ்தாபனம் ஹிந்து மகா சபையோ, அது போன்ற வேறொன்றோதான் என்பதை நான் ஒத்துக்கொண்டுள்ளேன். காங்கிரஸ் எல்லாச் சமூகங்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்க முயலுகிறது. ஹிந்துக்களுக்கு மற்றவர்களைவிட ராஜீய உணர்ச்சி அதிகமாக இருப்பதால், காங்கிரஸில் அவர்கள் பெரும்பாலோராக இருக்கின்றனர். இது தற்செயலாக நேர்ந்ததேயன்றி, முன்னேற்பாடான விஷயம் அல்ல. சரித்திரம் காட்டுகிறபடி முஸ்லிம்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள், ஹிந்துக்கள் இவரனைவரும் சேர்ந்து ஆங்கிலேயரின் தலைமையில் நிறுவப்பட்டதுதான் காங்கிரஸ் ஸ்தாபனமாகும். இது ஆங்கிலேயருக்குப் பெருமை அளிக்கக்கூடியதே. எதிர்மாறாக யார் என்ன சொன்ன போதிலும், காங்கிரஸ் எல்லோரும் சேர்ந்த ஸ்தாபனமாகவே இருக்கிறது. இந்த நேரத்தில் யாரும் ஆட்சேபிக்காத நிலையில் காங்கிரஸ் தலைவராக இருப்பவர் ஒரு முஸ்லிம் பெரியாரேயாவர். அவர்* இரண்டாம் முறையாகவும் காங்கிரஸ் அக்கிராசனராக வருகிறார். பல சமூகங்களிலிருந்தும் எத்தனை பேரை அங்கத்தினர்களாகச் சேர்க்க முடியுமோ அத்தனை பேரையும் சேர்க்க, காங்கிரஸ் இடை

* 1923, 1940 இவ்விரண்டு ஆண்டுகளிலும் மௌலானா அபுல் கலாம் ஆஜாத் காங்கிரஸ் அக்கிராசனராக இருந்ததையே காந்திஜி குறிப்பிட்டுள்ளார்.

விடாமல் முயற்சித்து வருகிறது. ஆகையால்தான், தேசீயக் கட்டுப்பாடும் ஒழுங்கும் ஏற்படும்படி செய்வதற்காகக் காங்கிரஸ் பல சமூகங்களுடனும் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது. எனவே, ஹிந்து மகா சபை அல்லது அது போன்ற ஸ்தாபனம்தான் சமூக ஒப்பந்தங்கள் செய்யத் தகுதி வாய்ந்தது என்று நான் சொன்னபோதிலும், பொது மக்களின் நம்பிக்கை இருக்கும் வரையில் காங்கிரஸ் அரசியல் ஒப்பந்தங்கள் செய்யும் பொறுப்பை மறுக்க முடியாது, மறுக்கவும் கூடாது.

— 'ஹரிஜன்' - 24—2—1940

# 23

# கருத்துக்கள் வேறுபடும்

அலிகாரிலிருந்து எம். ஏ. பட்டதாரி ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்:

"புனித குரானைப் படித்ததிலிருந்து இஸ்லாம் தன்னைச் சேர்ந்தவர்களை அகிம்சை நெறியைக் கையாளும்படி கட்டளையிடுகிறது என்று பல சந்தர்ப்பங்களில் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மற்றும் பரிசுத்த நபியின் வாழ்க்கை வரலாறும் இதை உறுதிப்படுத்துகிறதென்றும் நீங்கள் கூறுகிறீர்கள். இங்கே நீங்கள் உங்கள் விருப்பத்தையே மனத்தில் முக்கியமாகக்கொண்டு வாசித்திருப்பீர்களென்று சொல்ல என்னை அனுமதியுங்கள். உண்மை என்னவென்றால், உங்கள் அகிம்சைத் தத்துவம் பலாத்காரத்தின் உபயோகத்தை அறவே விலக்கிவிடுகிறது. இதற்கு மாறாக, இஸ்லாம் சில சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தை அனுமதிக்கிறது. பேடர் என்ற இடத்தில் நபி நாயகம் பலாத்காரத்தைப் பலாத்காரத்தால் எதிர்க்கவில்லையா? உங்களுடைய விளக்கத்தைத் தவிர வேறெதையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டீர்களாதலால், நான் ஆதாரம் எதையும் எடுத்துக்காட்டத் துணியவில்லை. எனினும், முதலாவது ஒத்துழையாமை இயக்கச் சமயத்தில் நெடுநாட்களுக்கு முன் உங்களால் மயக்குண்ட மௌலானா சாகிபின் சொல்லிற்காவது நீங்கள் சற்று மரியாதை காட்டுவீர்களென நம்புகிறேன்.* நீதி மன்ற வாக்குமூலத்தில் அவர்,

---

* பின்வரும் பகுதி 1922 பிப்ரவரி 23-ஆம் தேதி 'எங் இந்தியா'வில் வந்த மௌலானா அபுல் கலாம் ஆஜாத்தின் நீதி மன்ற வாக்குமூலத்திலிருந்து எடுத்தது:

"காந்திஜியைப் போல், ஆயுதம் தாங்கிய பலாத்காரத்தை ஆயுதம் தாங்கிய பலாத்காரத்தால் எதிர்க்கக்கூடாது என்று நான் நம்புவதில்லை. அவ்வித பலாத்காரத்தை இஸ்லாம் அனுமதித்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது கடவுளின் இயற்கை விதிக்கு முற்றிலும் பொருந்தியிருக்கின்றது என்று நான் நம்புகிறேன். அதே சமயத்தில் இந்திய விடுதலை, தற்போதைய இயக்கம், இவை சம்பந்தமாக மகாத்மா காந்தி சொல்லுவது அனைத்தையும் நான் ஏற்கிறேன். அவரது நேர்மையில் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்தியா ஆயுதத்தால் வெற்றியடைய முடியாது. அம்முறை உசிதமல்ல என்பது என் உறுதியான முடிவு. பலாத்காரமற்ற கிளர்ச்சியால்தான் இந்தியா வெற்றியடைய முடியும். இந்தியாவின் வெற்றி நீதியின் வலிமைக்கு ஒரு நினைவூட்டத்தக்க உதாரணமாக விளங்கும்."

'எச்சந்தர்ப்பத்திலும் பலாத்காரத்தை உபயோகிக்கலாகாது என்று மகாத்மா காந்திஜி சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ளுவதில்லை. நான் முஸ்லிம்; ஆகையால், இஸ்லாம் குறிப்பிடும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தை உபயோகிக்கலாமென நான் நம்புகிறேன்' என்று கூறியுள்ளார். மறுபடியும் அவர் தனது விசாரணையின் போது நீதி மன்றத்தில் விடுத்த அதே அறிக்கையில் கூறியதாவது: 'முஸ்லிம் அல்லாத அரசாங்கங்களுக்கு எதிராக வாள், நீடித்த யுத்தம், கொலை இவற்றைத்தான் இஸ்லாம் விதிக்கிறது.' மௌலானா சாகிப் இதை இன்றும் மறுக்க முடியாது என்பது நிச்சயம்.

"இஸ்லாமின் அகிம்சை நெறி என்பது இத்துடன் நிற்கட்டும். முஸ்லிம்கள் ஒரு தனித் தேசீய இனமா என்கிற கேள்விக்கு இப்போது வருவோம். இஸ்லாம் உதித்ததிலிருந்தே முஸ்லிம் ஒரு தனித் தேசீய இனத்தினராக இருந்து வருகின்றனர் என்று சொல்லுவேன். முகமது-பின்-காஸிம் இந்தியாவில் கால் வைத்த காலத்திலும், மொகலாய சாம்ராஜ்யத்தின் போதும் அவ்வாறு இருந்தன, இன்றும் அப்படியே இருக்கின்றன. தங்கள் மதத்திற்கு உண்மையாக இருப்பின், என்றுமே அவ்வாறுதான் இருப்பார்கள். பொது மதத்தை மட்டுமல்ல, பொதுச் சமூக அமைப்பையும் உண்டாக்க அக்பர் முயன்றார். அவருடைய முயற்சி தோல்வி அடையவில்லையா? வேறு எந்தச் சமூகத்துடனும் இரண்டறக் கலக்க முடியாது என்ற அர்த்தத்தில் முஸ்லிம்கள் தனித் தேசீய இனத்தினரே. ஆனல், ஒற்றுமைக்காகப் பாடுபடுபவர்கள் இதைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. குறிப்பிட்ட இலக்கை அடைவதற்குக் குறிப்பிட்ட சில துறைகளிலே ஒத்துழைப்பது எப்போதும் சாத்தியம். ஒரே காற்றை சுவாசிப்பதும், ஒரே நிலத்தில் வசிப்பதும் ஒரு தேசீய இனத்தை உண்டாக்குவதில்லை. எண்ணத்தில் ஒற்றுமைதான் மிக முக்கியம். மனத்தை உருவாக்குவது மதம். முஸ்லிம் ஒருவர் ஒரு சீக்கியரின் அண்டை வீட்டுக்காரராக இருக்கலாம். ஆனல், அவர்களுடைய கருத்துக்கள், மனப்பான்மைகள், வாழ்க்கை முறைகள் வேறுபடும். பூமியைச் சுற்றிலும் ஒரே காற்றுத்தான். இங்கிலாந்தின் காற்று இந்தியாவின் காற்றிலிருந்து எந்த விதத்திலாவது வேறுபட்டிருக்கிறதா? இயற்கைச் சூழ்நிலைகள் இயற்கை அமைப்பைத்தான் பாதிக்கின்றன. மனத்தைப் பாதிப்பதில்லை. ஆம்; கிறிஸ்தவர்கள் தனித் தேசீய இனம்தான்; பார்சிகளும் அப்படியே. இந்தியா பல தேசீய இனங்கள் சேர்ந்தது. 'இந்திய தேசீயக் காங்கிரஸ், இந்திய தேசீய இனங்களின் ஐக்கியம்' என்று மாறுகிற நாள் இந்திய சரித்திரத்தில் ஒரு பெரிய சிறப்பான நாளாக இருக்கும்.

"ஆம், சீனவில் முஸ்லிம்கள் ஒரு தனித் தேசீய இனமே; அவர்கள் மற்றச் சீனர்களுடன் கலந்துவிட்டனர் என்று கூறுவதாயின், அது முழு இஸ்லாமிய உலகிற்கும் ஒரு பெரும் படிப்பினையாகும் என்றே நான் சொல்ல முடியும். இதே போக்கில் போனல், இஸ்லாமியச் சகோதரத்துவம் வெறும் பெயரளவில் மட்டும் எஞ்சும். முஸ்லிம்கள் ஆடையில்கூட வேற்றுமை காண்பிக்க வேண்டுமென்றும் இஸ்லாம் திட்டமாய் விதித்திருக்கிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர்களுள் மௌலானா சாகிப் தனியாக இலங்கவில்லையா?"

இக்கடிதம், படித்த பல முஸ்லிம்களின் இப்போதுள்ள மனப் போக்கைக் காட்டுகிறது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. குரானின் அர்த்தத்தைப்பற்றி நீண்ட வாதம் ஒன்றும் நான்

துவங்குவதாக இல்லை. நான் ஒரு முஸ்லிம் இல்லை. அதனால் எனக்கு குரானைப் பற்றி வற்புறுத்திக்கூற முடியாது. நான் ஒரு வாதத்தை எடுத்துரைத்தால் இயல்பாகவே, "முஸ்லிம் அல்லாத நீங்கள் எப்படி முஸ்லிம் வேதங்களுக்கு அர்த்தம் கூற முடியும்?" என்று கேள்வி போட்டுவிடுவார்கள். என் மதத்திடம் இருக்கும் பய பக்தியையே, நான் இஸ்லாமிற்கும் மற்ற மதங்களுக்கும் காட்டு கிறேன் என்று மறுமொழி கூறுவதால் பயன் ஒன்றும் ஏற் படாது.

பேடர் சண்டையும், நபியின் வாழ்க்கையில் இதுபோன்ற பிற சம்பவங்களும் என் நினைவில் இருந்தன என்பதை கடிதம் எழுதிய வருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் செய்யும் அர்த்தத் திற்கு மாறான வசனங்கள் குரானிலேயே இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். இருந்தபோதிலும், ஒரு புத்தகத்தின் அல்லது மனிதனது வாழ்க்கையின் படிப்பினை, அப்புத்தகத்தில் தனித்திலங்கும் வசனங்களோ, வாழ்க்கைச் சம்பவங்களோ எவ்வளவு அதிகமாயினும், இவற்றிலிருந்து வேறுபடலாம். மகா பாரதம் இரத்தப் பெருக்கெடுத்த ஒரு போரின் கதை. ஆனால் அதுவும், போரும் பலாத்காரமும் வீண் என்பதை நிலைநாட்ட எழுதியதுதான் என்று, வைதிக ஹிந்துக்களின் எதிர்ப்பையும் எதிர்த்து, நான் சாதித்திருக்கிறேன்.

மௌலானா சாகிபுக்காகப் பேச எனக்கு உரிமை இல்லை. தம்மைக் கவனித்துக்கொள்ள அவரால் இயலும். இங்கே எடுத் துக்காட்டப்பட்டுள்ள மாதிரி அறிக்கையை மௌலானா சாகிப் வெளியிட்டதாக நான் நினைவுகூற முடியவில்லை என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன். கடிதம் எழுதியவரின் உண்மைத் தன்மையை நான் சந்தேகிக்கவில்லை. ஆனால், புனித குரானின் முக்கிய படிப் பினையைப்பற்றி நான் பல ஆண்டுகளாக நினைத்திருப்பதை இந்த வாக்குமூலம் பாதிக்கவில்லை. உலகம் உள்ளளவும் கருத்துக்களில் வேறுபாடு இருக்கும்; பரஸ்பரம் பொறுமை காட்ட வேண்டு மென்றே நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

தேசீய இனங்களைப் பற்றி அவர் சொல்லுபவை திகைப் பூட்டுகின்றன. இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் ஒரு தனித்த தேசீய இனம் என்று வாதிப்பதற்கு ஆதாரங்கள் இருக்கலாம். ஆனால், உலகில் எத்தனை மதங்கள் இருக்கின்றனவோ அத்தனை தேசீய இனங்கள் இருக்கின்றன எனக் கூறுவதை நான் கேட்டதே யில்லை. அப்படி யென்றால், ஒருவன் மதம் மாறும் போது, தேசீய இனத்திலிருந்தும் மாறுகிறான். அவரது கருத்துப் படி ஆங்கிலேயர், எகிப்தியர், அமெரிக்கர், ஜப்பானியர் முதலிய வர்கள் தேசீய இனங்களல்லர்; ஆனால், எங்கே பிறந்திருப்பினும் முஸ்லிம்கள், பார்சிகள், சீக்கியர், ஹிந்துக்கள், கிறிஸ்தவர், யூதர், பௌத்தர் இவர்கள் பல்வேறு தேசீய இனங்கள் ஆகிவிடு கிறார்கள். அப்படித்தானே? மதங்களின்படி தேசீய இனங்கள் பிரிக்கப்படுகின்றன, அல்லது பிரிக்கப்பட வேண்டும் என்று

சாதிப்பதற்கு நிருபருக்குச் சரியான ஆதாரங்கள் இல்லை. ஆதார மற்ற ஒன்றை நிலைநாட்டும் ஆர்வத்தில் அவர் தேவைக்கு அதிக மாக நிருபிக்க முயற்சி செய்துவிட்டார்.

முஸ்லிம் அரசர்கள் இந்தியாவை இரு தேசங்களாகப் பிளந்தனர் என்பதை நான் மறுக்கவேண்டும். அக்பரின் உதார ணம் பொருத்தமற்றது. அவர் மதங்களை ஒன்றுபடுத்த முயன்றார், அது எய்த முடியாத ஒரு கனவு. மற்ற முஸ்லிம் சக்கரவர்த்தி களும் அரசர்களும் இந்தியாவைப் பிரிக்கமுடியாத முழு தேச மாகக் கருதினர் என்பது நிச்சயம். நான் சிறுவயதில் படித்த சரித்திரம் இதுவே.

ஹிந்துக்களும், முஸ்லிம்களும், பிறரும் ஜனநாயகத்தை வளர்க்க வேண்டுமானால், பரந்த வாக்குரிமையினால் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமும் தேசம் முழுவதும் நம் மனத்தை வெளியிடுவதன் மூலமும்தான் இது சாத்தியமாகும். இதை நாம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் துணை கொண்டோ, அல் லது அவர்களின் எதிர்ப்பையும் சமாளித்தோ செய்ய வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக வெளிவந்துள்ள அறிக்கை கள் அவர்களின் நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டவில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இன்னும் ஆண்மையுடன் இலங்குகிறது. சர் சாமுவேல் ஹோர் மறுத்தபோதிலும் அது அழிவது துர்லபம். இந்தியாவை உயிருடன் கூறுபோடும் யோசனை சாம்ராஜ்ய வளர்ச்சிக்கு உதவியாகும். பிரிட்டிஷ் துப்பாக்கி முனையின் உதவியினாலோ, கடூரமான உள்நாட்டுக் கலகத்தினாலோதான் அவ்வாறு கூறுபோட முடியும். காங்கிரஸ் இவ்விரண்டிலுமே பங்கு எடுத்துக்கொள்ளாதென நம்புகிறேன். இந்தியாவைப்பற்றி பிரிட்டனுக்குள்ள யுத்த நோக்கங்களை வெளியிடப் பிரிட்டன் மறுத்தது, ஒருவேளை மறைமுகமான நன்மையாக இருக்கலாம். இது காங்கிரஸை விலக்கி, முஸ்லிம் லீகிற்கு வழிவிட்டிருக் கிறது. எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் இருந்துவந்த தடை நீங்கியதால், இந்தியாவை உயிருடன் கூறு போடப் பிரிட்டிஷ் நுகத்தடியை நிலை நிறுத்துவதா, அல்லது பிளவுபடாத முழு இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடு வதா என்று முஸ்லிம் லீக் தன் விருப்பப்படி முடிவு செய்யலாம். முஸ்லிம் லீக் இந்தியாவை உயிருடன் கூறுபோட விரும்பாது என்றே நம்புகிறேன். எனது நிருபர் பெரும்பாலான முஸ்லிம் களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கவில்லை என்றும் நம்புகிறேன். சீக்கிரத்தில் ஜனுப் ஜின்னு சாகிபும், பண்டித ஜவாஹர்லால் நேருவும் தங்கள் பேச்சுக்களை மறுபடியும் துவக்குவார்கள். அதன் பலனுக, சமூகச் சிக்கலை அறுப்பதற்கு நிலையான ஒரு பரிகாரம் ஏற்படும் என நம்புவோம்.

—'ஹரிஜன்' - 29—9—1940

## 24

# எனக்குத் தெரியவில்லை!

"சில காலமாக, புனித குரானிலும் இஸ்லாமின் போதனைகளிலும் இருந்து அடிக்கடி நீங்கள் ஒருவிதத் தெளிவில்லாத மேற்கோள் காட்டி, அகிம்சை நெறிக்கான உங்கள் வாதத்திற்குப் பலம் தேடி வருவதாகத் தெரிகிறது. இதனால் முஸ்லிம்களின் நல்லெண்ணத்தைப் பெற நீங்கள் முயலுகிறீர்கள் என்பதுவெட்ட வெளிச்சமாகும். நீங்கள் போற்றும் கொள்கையைப் பரப்ப உங்களுக்கு இருக்கும் உரிமையை யாரும் ஆட்சேபிக்க முடியாது என்பதில் ஐயமில்லை. அவ்வாறே, ஐந்தாம் படை முஸ்லிம்களான கான் அப்துல் கபார் கானையும், அபுல் கலாம் ஆஜாதையும் நீங்கள் முதுகில் தட்டிக் கொடுப்பதும் அறிந்துகொள்ளக்கூடியதுதான். ஆனால், முஸ்லிம் அல்லாத ஒருவர் தம் சொந்தக் காரியத்துக்காக வேதத்தை மேற்கோளாக எடுத்துரைப்பதைவிட, முஸ்லிம்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்துவது வேறொன்றும் இல்லை என்பதை நீங்கள் உணர முடியாதா? சென்ற பதின்மூன்று நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள், குரான் என்ன கற்பிக்கிறதென்று அறிந்தும் அதன் உபதேசங்களை அனுசரித்தும் வருகிறார்கள். தங்கள் புனித நூலை விளக்குவதற்கு முஸ்லிம்களுக்கு ஒரு மகாத்மா தேவையில்லை. உங்கள் விருப்பப்படி அர்த்தம் பண்ணி மகிழ்வதைவிட, தங்கள் மதம் கற்பிப்பது என்று பதின்மூன்று நூற்றாண்டுகளாக முஸ்லிம்கள் நம்பி வருவதையே நீங்கள் எடுத்துக்கொள்ளுவது நலம். நீங்களும் உங்கள் முஸ்லிம் பக்த கோடிகளும் முஸ்லிம்களுடைய நம்பிக்கையை அறவே இழந்துவிட்டதை நன்கு உணருகிறீர்களென நம்புகிறேன். நீங்கள் குரானில் மேற்கோள் காட்டுவதால் முஸ்லிம்களுக்கு அதிகக் கோபமூட்டுவதைத் தவிர வேறொரு பயனுமில்லை. முஸ்லிம்கள் எப்போதும் தன்மதிப்பு உள்ளவர்களாக விளங்கி வந்திருக்கின்றனர். ஆகையால், முஸ்லிம் அல்லாதவர் தங்களுடைய வேதத்தை ஓர் கருவியாக உபயோகிக்க முஸ்லிம்கள் அனுமதிக்கமாட்டார்கள். இஸ்லாமைப் பற்றிய போலிப் புகழுரைகள் பயனற்றவை; நீங்கள் முஸ்லிம் அல்ல என்பது வெள்ளிடை மலை. ஆகையால், உங்கள் எண்ணங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் குரான் மூலகாரணமாக இருக்க முடியாது. அவைகளை முஸ்லிம்களிடையே பரப்புவதற்காகத்தான் குரானின் பக்கம் திரும்புகிறீர்கள். இனி மேல் குரானைப் பற்றிய பேச்சையே நிறுத்தி விடும்படி நேசப்பான்மையில் உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். அதற்கு முன், அபுல் கலாம் ஆஜாத் முஸ்லிம் இந்தியாவின் 'குவிஸ்லிங்' * காக இருக்கச் சம்மதிக்குமுன் எழுதியதை வாசிக்கும்படி நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

---

* 'குவிஸ்லிங்' (Quisling) என்ற சொல் தேசத் துரோகியை, விரோதிக்கு உடந்தையாக இருப்பவரை, ஐந்தாம் படை நபரைக் குறிக்கிறது. 1940-ஆம் ஆண்டில் நார்வே தேசத்தின் மீது ஜெர்மனி படையெடுத்து வெற்றி பெற்றபோது, நார்வேயைச் சேர்ந்த விட்கம் குவிஸ்லிங் என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு பொம்மை அரசாங்கத்தை அமைத்தது. தமது நாட்டை ஆக்கிரமித்துக்கொண்ட ஜெர்மனிக்கு உடந்தையாக இருந்த குவிஸ்லிங் தேசத் துரோகி என்று கருதப்பட்டார். அதிலிருந்துதான் துரோகியை 'குவிஸ்லிங்' என்று குறிப்பிடுவது உலகம் முழுவதும் வழக்கமாகிவிட்டது!

இக்கடிதம் அலிகாரைச் சேர்ந்த எம். ஏ. பட்டதாரி ஒருவர் எழுதியதாகும். இவர் முஸ்லிம் சர்வகலாசாலையில் ஆராய்ச்சியாளர். கடிதம் வந்து சில காலமாகிறது. அதைப் பிரசுரிப்பது ஒற்றுமைக்குச் சாதகமாக இருக்குமோ, இராதோ என்ற சந்தேகத்தினால், இதுவரை அதைக் கட்டிவைத்திருந்தேன். ஆனால், இதைவிடத் தாறுமாறான மற்றொரு கடிதம் அதே நண்பர் எழுதியிருக்கிறார். அலிகாரிலோ, வெளியிலோ இவரைப் போன்று நினைப்பவருடன் விவாதித்து விளக்க உதவியாக இருக்குமென நினைத்து, முந்திய கடிதத்தையே பிரசுரிக்க முடிவு செய்தேன்.

அலிகாரைப் பற்றிய இன்ப நினைவுகள் எனக்கு உண்டு. அப்பெரிய சர்வகலாசாலைக்கு நான் பல தடவைகள் சென்றிருக்கிறேன். இப்போதும் அதோடு எனக்குத் தொடர்பு உண்டு. அவர்களுடைய கழகத்தில் நான் கௌரவ அங்கத்தினன் என்று நினைக்கிறேன். காலஞ்சென்ற டாக்டர் சர். ராஸ் மஸூத் உப அத்தியட்சகராக இருக்கையில், அவர் கையிலிருந்து அந்தக் கௌரவத்தைப் பெற்றேன். புனித குரானைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். ஆப்பிரிக்காவிலுள்ள என் முஸ்லிம் கட்சிக்காரர்களும் நண்பர்களும் அதை நான் வாசிக்க வேண்டுமென விரும்பினர். அவர்கள் எனக்கு இஸ்லாமிய நூல்களையும் கொடுத்தனர். இந்தியா திரும்பியதும், முஸ்லிம் நண்பர்கள் புனித நூலின் மொழிபெயர்ப்புகளை அனுப்பிவைத்தனர். அனுப்பியவர்களில் டாக்டர் முகமது அலி ஒருவர். மற்றொருவர் காலஞ் சென்ற திரு. பிக்தால். இருவரும் அந்நூலைத் தனித்தனியே மொழிபெயர்த்தவர்கள் ஆவர். காலஞ்சென்ற ஹக்கீம் சாகிப் அஜ்மல்கான், மௌலானா ஷிப்லியின் மொழிபெயர்ப்பு ஒன்றை எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். இப்பொழுது என்னைப் போன்ற முஸ்லிமல்லாதவன் ஒருவன் குரானை வாசிப்பதோ, தனது கருத்துப்படி அர்த்தம் செய்யத் துணிவதோ, குற்றமாகிவிட்டது! நான் மாறிவிட்டேனா அல்லது காலம் மாறிவிட்டதா? நான் குரானின் உட்கருத்துப்படி நடப்பதோடு, நபியின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி அநேக முஸ்லிம்களைவிட அதிகம் அறிந்திருக்கிறேனாதலால், அவர்களைவிட நான் நல்ல முஸ்லிம் என்று பல முஸ்லிம் பக்தர்கள் கூறியிருக்கின்றனர். நான் யாருடைய சாட்சியத்தை ஏற்பது? இந்த முஸ்லிம் நண்பர்களுடையதையா, அல்லது ஆராய்ச்சியாளரும் அவரைப்போல் நினைப்பவர்களும் சொல்லுவதையா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை!

குரானில் எனது கருத்துக்களைக் காண விரும்புகிறேன் என ஆராய்ச்சியாளர் குத்திக் காட்டுவது நியாயமானதே. எழுதப்பட்டுள்ளதை ஒட்டி நின்று, பிரார்த்தனையுடனும் திறந்த மனத்துடனும் அப் பணியைச் செய்வதிலும் தீங்கில்லை. ஒரு வாழ்க்கையை அல்லது நூலைப்பற்றிய அர்த்தம் தலைமுறை தலைமுறையாக வந்திருப்பதாலேயே சரியாகிவிடாது என்பது ஆராய்ச்சியாளராக இருக்கும் என் நிருபருக்குத் தெரிய வேண்டும். குறிப்பிட்ட மனிதர்கள், குறிப்பிட்ட வருடங்களில், குறிப்பிட்ட தடவை

கள் திரும்பத் திரும்பச் செய்துள்ளதனாலேயே ஒரு தவறு தவறில்லை என்று ஆகிவிடாது. பைபிள் நூலில் உள்ள தவறுகளை இன்னும் திருத்திக்கொண்டே இருக்கின்ற மேல்நாட்டுக் கிறிஸ்தவ மதம், கிறிஸ்துவின் முக்கிய உபதேசங்களை மறுப்பதாகப் பல நல்ல கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். குரானைப் படிப்பதற்கும் விளக்குவதற்கும் இவ்வாராய்ச்சியாளர் கேட்கும் தகைமைப் பத்திரங்களும் அவருடைய சொந்த விளக்கமும் ஒருவேளை தவருக இருக்கலாம். நான் முஸ்லிமல்லாதிருப்பது, குரானை வாசித்து விளக்குவதற்குத் தடையாயில்லாமலும் இருக்கலாம். எனது விளக்கம் சரியாயிருப்பதும் அசாத்தியமல்ல. குறிப்பிட்ட மதப் பட்டயங்கள் அணிந்துள்ளவர்களே, மத நூல்களைப் படித்து விளக்க வேண்டும் என்று கட்டுப்பாடு செய்வது கெட்ட காலத்தையே குறிக்கும். இது கலப்பற்ற சகிப்பின்மை என்பதே எனது கருத்தாகும். இதைத் தவிர்க்கும்படி ஆராய்ச்சியாளரையும் அவரது தோழர்களையும் நண்பன் என்ற முறையில் கேட்டுக்கொள்ளுகிறேன். உண்மையைக் காண்பதில் தாங்கள் கோரும் உரிமையை மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும். உண்மை, யாருக்கும் ஏகபோக உரிமையல்ல. குற்றம் குறைகள் உள்ள மனிதர்களாகிய நாம் குறிக்கும் உண்மை எல்லாம் ஒன்றை ஒன்று ஒட்டியதேயாகும். நமக்குள்ள அறிவு ஒளியின் படியே நாம் ஒவ்வொருவரும் நடக்க முடியும். கடவுள் ஒருவரே உண்மையை அறிவார். ஆதலால், ஆராய்ச்சியாளர்களாவது அடக்கத்துடனும், சகிப்புத் தன்மையுடனும் இருப்பதே அழகாகும். மத வெறியும் சகிப்பின்மையும் ஆராய்ச்சி அலுவல்களுக்குப் பொருத்தமல்ல. அது, அவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் லட்சியத்தை அடைவதற்கும் உதவியாக இராது.

—'ஹரிஜன்' – 29—9—1940

# 25

# இஸ்லாம் இறைவன் அருளியதா?

இஸ்லாம் இறைவன் அருளிய மதம், முகமது கடவுளின் தீர்க்கதரிசி என நான் நினைத்தால், அந்த நம்பிக்கையை நான் வெளிப்படையாகப் பிரகடனம் செய்யவேண்டும்; அப்போதுதான் முஸ்லிம்களுடைய சந்தேகங்கள் தீரும்; ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிறுவுவது ஒருவேளை எளிதாகும் என்று முஸ்லிம் பத்திரிகையொன்றில் ஒரு நிருபர் கூறுகிறார். சுமார் ஒரு மாதத்திற்கு முன் இதை வாசித்தேன். விடை எழுத வேண்டும் என்று தோன்றவில்லை. முஸ்லிம்களுடைய எண்ணங்களைத் தெரிந்துகொள்ளுவதற்காக எத்தனை முஸ்லிம் பத்திரிகைகளை வாசிக்க முடியுமோ, அத்தனையையும் வாசிக்கிறேன். அவற்றில், விஷமும்,

அறிந்ததும் அறியாததுமான பொய்களும் நிறைந்திருக்கின்றன. ஆகையால், இது அனைவருக்கும் தெரிந்ததே யாயினும், மறு முறையும் நான் இஸ்லாமைப்பற்றி என்ன நினைக்கிறேன் என் பதை வெளியிடுவது அவசியம் என்று நினைக்கிறேன். இறைவ னருளிய மதங்களுள் இஸ்லாமும் ஒன்று. ஆதலால், திருக் குரான் இறைவன் அருளிய நூல் என்றும், தீர்க்கதரிசிகளில் முகமது நபி ஒருவர் என்றும் நிச்சயமாய் நான் மதிக்கிறேன். ஆனல், ஹிந்து மதம், கிறிஸ்தவ மதம், ஜொராஷ்டிரிய மதம் இவை அனைத்தையும் இறைவன் அருளிய மதங்களாகவே நான் கருதுகிறேன். அவற்றில் பலவற்றின் பெயர்களையும் மறந்து விட்டோம். ஏனெனில், அந்தத் தீர்க்கதரிசிகளும் அம் மதங் களும் தாம் உதவிய மக்களுக்கும், குறிப்பிட்ட அக்காலத்திற்கும் மட்டுமே சம்பந்தப்பட்டவர்கள். சில முக்கிய மதங்கள் இன்னும் எஞ்சியிருக்கின்றன. என்னல் இயன்ற அளவு இவற்றைப் படித்தபின், எல்லா மதங்களுக்கும் அடிப்படையாக உள்ள ஒற்றுமையைக் கண்டுபிடிப்பது தேவையானதும் சரியானதும் என்றால், அதற்கு ஒரு பொதுத் திறவுகோல் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். உண்மையும், அகிம்சை நெறியுமே அத் தகைய திறவுகோல். மதமாகிய பெட்டி ஒன்றை அதைக் கொண்டு திறக்கும்போது, அதற்கும் பிற மதங்களுக்கும் உள்ள ஒற்றுமையை எளிதில் காணலாம். ஒரு மரத்தின் பல இலைகள் என இம் மதங்களைப் பார்த்தால் வேறுபாடு தோன்றும்; ஆனல், அடி மரத்தில் அவை எல்லாம் ஒன்றே. இந்த அடிப்படையான ஒற்றுமையை உணராத வரையில், மதத்தின் பெயரால் நிகழும் சண்டைகள் ஓயா. இச் சண்டைகள் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்குமிடையே மட்டும் நடப்பவையல்ல. உலக சரித்திரத்தின் பக்கங்கள் மத சம்பந்தமான போர்களால் ரத்தம் தோய்ந்திருக் கின்றன. ஒரு மதத்தைப் பின்பற்றுகிறவர்களின் தூய்மையும் நற் செயல்களுமே அம் மதத்தைப் பாதுகாக்கும்; அவர்கள் பிற மதத்தினருடன் இடும் சண்டைகள் அல்ல.

—'ஹரிஜன்' - 13—7—1940

# 26

# முஸ்லிம்களுக்கு எதிராகப் பலாத்கார உபயோகம்

கேள்வி: பிரிட்டிஷாரிடமிருந்து பூரண சுயேச்சை பெறவேண் டும் என்று கூறுகிறீர்கள். அதே சமயத்தில் சிறுபான்மைப் பிரச்னையை அரசியல் நிர்ணய சபைமூலம் தீர்க்கவேண்டும் என்கிறீர்கள். அதாவது, முஸ்லிம்கள் நீங்கள் சொல்லு வதைக் கேட்காவிட்டால், அவர்களைப் பணியவைக்கப்

பிரிட்டிஷ் படைகளை உபயோகிக்க விரும்புவீர்கள் என்பது இதன் பொருளாகும்.

**பதில்:** இக் கேள்வி கேட்டிருப்பவர், என் நிலையையும், எனக்குத் தெரிந்த வரை காங்கிரஸ் நிலையையும் கவனித்த தாகத் தெரியவில்லை. நாட்டின் விடுதலையையும், பிரிட்டிஷ் படைகளின் உபயோகத்தையும் ஒரே சமயத்தில் காங்கிரஸ் விரும்ப முடியாது, இது மட்டுமல்ல. காங்கிரஸ், முஸ்லிம் களையாவது வேறு எந்த சிறுபான்மையோரையாவது கட்டா யப்படுத்தாது. அப்படிச்செய்வது அகிம்சை முறையாகாது. பலாத்கார முறைகளில் மிகப் பெரியது பிரிட்டிஷாரின் பலாத்காரம்தான். அந்த பலாத்காரத்தினின்றும் வெளி யேறவே காங்கிரஸ் அவசரப்படுகிறது. அரசியல் நிர்ணய சபையை விரும்புவதில் என் நம்பிக்கை இதுவே: முஸ்லிம் களுக்கு முஸ்லிம் லீக் மனப்பான்மையோ வேறெதுவோ இருப்பினும், அவர்களின் பிரதிநிதிகள் உண்மையை நேருக்கு நேர் காணும்போது, இந்தியாவை மதவாரியாகத் துண்டிக்க விரும்பமாட்டார்கள்; இந்தியாவைத் துண்டிக்க முடியாத முழுத் தேசமாகப் பாவித்து, முக்கியமான முஸ்லிம் சிக்கல்களுக்குக்கூடத் தேசீய, அதாவது இந்திய முறையில், பரிகாரம் கண்டுபிடிப்பார்கள். ஆனால், இந்த நம்பிக்கை சிதறுண்டால், இந்திய முஸ்லிம்களுடைய திட்ட மான விருப்பத்தைக் காங்கிரஸ் பலாத்காரமாக எதிர்க்க முடியாது. நாட்டைத் துண்டாடுவதைத் தடுக்க, காங்கிரஸ் ஒருகாலும் பிரிட்டிஷ் படைகளின் உதவியை நாடாது என் பதைச் சொல்லத் தேவையில்லை. முஸ்லிம்கள்தான், எதிர்க் காமலிருக்கும் இந்தியாவின்மேல் தாங்களாகவோ அல்லது பிரிட்டிஷ் படையின் உதவிகொண்டோ பலாத்காரமாகத் தங்களுடைய விருப்பத்தைச் சுமத்துவார்கள். என் சொற்படி காங்கிரஸைச் செய்ய வைக்க முடியுமானல், முஸ்லிம்களுக்கு அவர்கள் பலாத்காரத்தை உபயோகிக்கும் தொந்தரவு இராது. நான் அவர்களின் ஆட்சிக்கு உட்படு வேன்; ஏனெனில், அது இந்தியரின் ஆட்சியே அல்லவா? வேறு விதமாகச் சொன்னல், எழும்பும் ஒவ்வொரு சிக்கலி லும் இடைஞ்சலிலும் காங்கிரஸ் அகிம்சை நெறிப்படியே நடக்கும். ஆனல், அரசியல் நிர்ணய சபையில் உள்ள முஸ்லிம்கள், முஸ்லிம் லீகிற்கு மாறுன எண்ணமுடையவர் களாக இருக்கலாம்; அது போலவே, அதிலுள்ள பிறரும் காங்கிரஸ்வாதிகளாக இல்லாதிருக்கலாம். அப்படியானல், பிரிட்டிஷார் இந் நிலையிலேயே இருப்பார்கள். இரு கட்சியினரும் மாறி மாறி அவர்களின் தயவை நாடுவார்கள். அவர்கள் இந்தியாவின் விதியை நிர்ணயிக்கிற சிற்பி களாகவே இன்னும் இருப்பார்கள். அப்போது காங்கிரஸ் மறைவதுடன், அகிம்சை நெறியும் காற்றிலே பறந்துவிடும். எண்ணற்ற மடங்கு அதிகமான பிரிட்டனின் பலாத்காரம்,

அதன் தயவை நாடும் கட்சியின் மனமொத்த ஒத்துழைப் பைக்கொண்டு, எளிதாக இந்தியாவை ஆட்சிபுரியும். ஏனெனில், பிரிட்டனின் வலிமைக்கு எதிராக அணிவகுத்து நிற்பது காங்கிரசின் அகிம்சை நெறியின்-அது அரைகுறை யானதாக இருப்பினும்-வலிமை ஒன்றேயாகும்.

—'ஹரிஜன்' - 23—3—1940

# 27

# ஜனுப் ஜின்னுவிற்குப் பதில்

காயிதே ஆஜம் ஜின்னு பின்வருமாறு கூறியதாகத் தெரி கிறது:

"கடந்த இருபது ஆண்டுகளாக ஸ்ரீ காந்தி, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை யில்லாமல் சுயராஜ்யம் இருக்க முடியாது என்று கூறி வந்துள்ளார். ஸ்ரீ காந்தி அரசியல் நிர்ணய சபைக்காகப் போராடுகிறுர். ஸ்ரீ காந்தியும் காங்கிரஸும் நாங்கள் ஒத்துக் கொள்ளமுடியாத ஓர் அரசியல் நிர்ணய சபைக்காகப் போராடுகிறுர்களென நான் அவர்களுக்கு எடுத்துக் காட்டலாமா? அரசியல் நிர்ணய சபையைப்பற்றிய எண்ணம் காரியசாத்தியமானதல்ல; முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளவும் முடியாதது. ஸ்ரீ காந்திக்கு, முஸ்லிம்களின் எண்ணத்தைக் கண்டுபிடிப்பதற்காக அரசியல் நிர்ணய சபை வேண்டுமாம். சமரசம் ஏற்படா விட்டால், எல்லா நம்பிக்கையையும் இழந்து, பின் நாங்கள் சொல்லுவதற்கு உடன்படுவாராம். முஸ்லிம் லீகுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள உண்மை யான விருப்பம் இருந்தால், ஸ்ரீ காந்தி, நான் பல முறைசொல்லியிருப்பதுபோல் காங்கிரஸ் ஒரு ஹிந்து ஸ்தாபனம், அது ஹிந்துக்களின் தொகுதியைத் தவிர வேறென்றிற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கவில்லை என்று ஏன் கண்ணியமாக ஒத்துக்கொள்ளக் கூடாது? ஸ்ரீ காந்தி 'நான் ஒரு ஹிந்து. காங்கிரஸ் ஒரு ஹிந்து ஸ்தாபனம்' என்று சொல்லுவதில் ஏன் பெருமைகொள்ளக் கூடாது? நான் ஒரு முஸ்லிம்; முஸ்லிம் லீக் முஸ்லிம்களின் ஸ்தாபனம் என்று சொல்ல நான் வெட்கப்படுவதில்லையே. ஏன் இந்த ஜால வேலைகள், ஏன் இந்தச் சட்ட மறுப்பு மிரட்டல், அரசியல் நிர்ணய சபைக்காக ஏன் இந்தப் போராட்டம்? ஸ்ரீ காந்தி ஹிந்துக்களின் தலைவராக முன்வந்து, முஸ்லிம்களின் பிரதிநிதியாக நான் அவரைப் பெருமையுடன் சந்திக்க ஏன் இடம் கொடுக்கக் கூடாது?"

எனது நிலை அன்றும் இன்றும் தெளிவாகவே இருக்கிறது. நான் ஹிந்துவாக இருப்பது எனக்குப் பெருமையே. ஆனுல், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை நிறுவுவதற்காக யாரிடமும் நான் ஹிந்து என்கிற முறையில் சென்றதில்லை. என் ஹிந்து மதத்திற்கு ஒப்பந்தங்கள் தேவையில்லை. யாதொரு நிபந்தனையும் இன்றியே கிலாபத்தை ஆதரித்தேன். உலகம் ஏற்கும் பொருளில் நான் ஒரு ராஜீயவாதி அல்ல. காயிதே ஆஜமுடன் அல்லது மற்றவர்

களுடன் நான் பேசியது எதுவும் காங்கிரசின் சார்பில்தான். அது ஒரு ஹிந்து ஸ்தாபனம் அல்ல. ஒரு ஹிந்து ஸ்தாபனம், முஸ்லிம் மத குருவைத் தன் தலைவராகக் கொள்ளுமா? தன் காரியக் கமிட்டியில் உள்ள 15 பேரில் 4 முஸ்லிம்களை அங்கத்தின ராக வைக்க முடியுமா? ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின்றிச் சுய ராஜ்யமில்லை என்று இன்றும் சொல்லுகிறேன்.* முஸ்லிம் களையோ வேறு எந்தச் சிறுபான்மையினரையோ வலுக்கட்டா யப்படுத்துவதற்கு நான் இசையமாட்டேன். என் கருத்துப்படி அமைந்த அரசியல் நிர்ணயசபை யாரையும் கட்டாயப்படுத்தாது. சமூகச் சிக்கல்களுக்கு, யாவருக்கும் இசைந்த ஒரு பரிகாரம் காணுதலே அதன் முழு அதிகாரமுமாகும். இசைந்த ஒப்பந்தம் ஏற்படாவிட்டால், அரசியல் நிர்ணய சபை அதுவாகவே கலைந்து போகும். காங்கிரசின் பிரதிநிதித்துவ உரிமை ஆட்சேபிக்கப் பட லாம்; ஆட்சேபிக்கப்பட்டும் வருகிறது. ஆனால், தேர்ந்தெடுக்கப் பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினரின் பிரதிநிதித்துவத் தன்மையின் ஏகபோக உரிமையை யார் மறுக்க முடியும்? நாம் சொல்லும் அரசியல் நிர்ணய சபைக்குள்ள முஸ்லிம் எதிர்ப்பை நான் அறிந்து கொள்ள முடியவில்லை. முஸ்லிம் வாக்காளர்கள் முஸ்லிம் லீகைத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள் என்று எதிர்ப்ப வர்கள் பயப்படுகிறார்களா? முஸ்லிம் பிரதிநிதிகள் கேட்கும் எந்த முஸ்லிம் உரிமையையும் யாரும் மறுக்க முடியாதென்று அவர் களுக்குத் தெரியவில்லையா? இந்திய முஸ்லிம்களில் பெரும் பான்மையோர் தங்கள் சகோதரர்களாகிய ஹிந்துக்களுடனும் பிறருடனும் சேர்ந்து ஒரு தேசிய இனமென உணராவிட்டால்,

---

* ராம்கார் காங்கிரஸ் விஷயாலோசனைக் கமிட்டியில் பேசியபோது, சமூக ஒற்று மையைப் பற்றி காந்திஜி கூறியதாவது :

"நாம் அனைவரும் நம்மைப் படைத்தவர் முன் சமமே-ஹிந்து, முஸ்லிம், பார்சி, கிறிஸ்தவர் யாவரும் ஒரே கடவுளைத் தொழுகின்றார்கள். பின் ஏன் நமக்குள் சண்டை யிடுகிறோம்?

"நாம் அனைவரும் உடன்பிறந்தோர்–காயிதே ஆஜமும் என் சகோதரர். நான் அவரைப் பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையாகவே சொன்னேன். ஒருபோதும் அற்பத்தனமான பேச்சுக்கள் என் வாயிலிருந்து வெளிவந்ததில்லை. 'அவரை என் பக்கத்திற்கு இழுக்க விரும்புகின்றேன். நான் அவரைக் கவரும்வரை போராட்டத்தில் இறங்கமாட்டேன்' என்று இங்கே பேசிய ஒருவர் சொன்னார். அது சரியே. என்னை நம்பாத முஸ்லிமே இல்லாத காலம் ஒன்றிருந்தது. இன்று நான் அந்த நம்பிக்கையை இழந்துவிட்டேன். உருதுப் பத்திரிகைகள் பல, என்மீது வசை மாரி பொழிகின்றன. அதற்காக நான் வருத்தப்படவில்லை. முஸ்லிம்களுடன் உடன்படிக்கையில்லாமல், சுயராஜ்யம் இல்லை என்பதை அது உறுதிப்படுத்துகிறது.

"பின்பு, ஏன் போராட்டத்தைப் பற்றிப் பேசுகிறேன் என நீங்கள் கேட்கலாம். உடன்பாடும் தீர்ப்பும் கொண்டு வரும் அரசியல் நிர்ணய சபைக்காக நான் அப்படிச் செய்கிறேன். முஸ்லிம்களுக்கு அது வேண்டாம் என்றால், ஒப்பந்தம் இல்லை என்று நான் அறிந்துகொள்ளுவேன். அவர்களைப் போல் நானும் குரானை வாசிக்கிறேன். ஹிந் துக்களையும் முஸ்லிம்களையும் குரான் வேறுபடுத்தவில்லை என்பதை நான் அவர்களுக்குக் கூறுவேன். ஆனால், ஹிந்துக்கள் இல்லாத மோட்ச உலகமே அவர்களுக்கு வேண்டும் என்றால், நான் அதைக் குறித்துப் பெருமைப்படமாட்டேன்."

யார் அவர்களை எதிர்க்க முடியும்? ஆனால், எட்டு கோடி இந்திய முஸ்லிம்களுடைய உணர்ச்சிகளுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்க, காயிதே ஆஜம் கூறுவதற்குச் செவி சாய்த்த 50,000 முஸ்லிம்களுக்கு உரிமையுண்டா என்று விவாதிக்க நிச்சமாய் இடம் இருக்கிறது.

'ஹரிஜன்' – 30—3—1940

# 28
# கான்பகதூரின் கடிதம்

டில்லியிலிருந்து ஒரு கான்பகதூர் கீழ்வருமாறு எழுதுகிறார்:

''ஏப்ரல் 6 ஆம் தேதி 'ஹரிஜனி'ல் உள்ள உங்களுடைய கட்டுரையில் நீங்கள் பின்வருமாறு எழுதுகிறீர்கள்:

'''இந்தியாவில் முஸ்லிம்களிடையே பரப்பப்படும் பொய்யைக் குறித்து நான் அவர்களுக்குச் சரியான காலத்தில் எச்சரிக்கை செய்யாவிட்டால், எனது கடமையிலிருந்து தவறியவனாவேன். அவ்விதம் எச்சரிக்கை செய்ய வேண்டியது, எனது கடமையாகும். ஏனெனில், நான் அவர்களுக்கு அவசியமாக இருந்த காலங்களில் உண்மையுடன் சேவை செய்திருக்கிறேன். அத்துடன் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை எனது வாழ்க்கையின் லட்சியமாக இருந்து வந்திருக்கிறது, இன்றும் இருந்து வருகிறது.'

''ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை எங்களுடைய கண்ணோட்டத்திலிருந்து நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். முஸ்லிம் லீக்தான் இந்திய முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரே தனி ஸ்தாபனம் என்பதைக் காங்கிரஸ் ஏற்க மறுக்கிறது. சமூகச் சிக்கலைத் தீர்க்கும் வழியில் இதுதான் பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது. காங்கிரஸ், அகில இந்தியாவிற்காகவும் பேச உரிமை கொண்டாடுகிறது. தங்கள் பதிவுப் புத்தகங்களில் கவனிக்கத்தக்க அளவு முஸ்லிம்கள் இருப்பதாகவும் அது சொல்லுகிறது. காங்கிரஸ், ஸ்ரீ ஜின்னாவுடன் சமரசம் செய்து கொள்ளுவதற்குப் பல தடவைகள் முயன்றிருப்பதே, தான் முஸ்லிம்களின் பிரதிநிதி ஸ்தாபனம் என்பதில் அதற்கு முழு நம்பிக்கை இல்லை என்பதைக் காட்டுகிறது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு உண்மையான தடை, காங்கிரஸ் முஸ்லிம்கள்தான் என்று நீங்கள் உண்மையாக உணரவில்லையா? அவர்களால் தான் காங்கிரஸ் இப்பிரச்னையைத் தீர்க்க தீவிரமாக முயற்சிக்கவில்லை. என்னை நம்புங்கள்; காங்கிரஸில் இருப்பதாலேயே தங்களுக்கு இப்போது இருந்து வரும் அந்தஸ்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் சோம்பேறிகளே அவர்கள்.

''கல்கத்தாவில் பல ஆண்டுகளாக இவ்வழிபாட்டை நடத்திக்கொண்டு வந்த உங்கள் தலைவருக்கு முஸ்லிம் பொது மக்கள் என்ன செய்தார்களென உங்களுக்குத் தெரியும். முஸ்லிம்களைத் தங்கள் எண்ணத்திற்கு மாற்றுவதற்காக ஒரு முஸ்லிம் பொதுக்கூட்டம் நடத்த அவர்களுக்குத் தைரியமில்லை

என்றும் உங்களுக்குத் தெரியும். சிற்றரசர்களை, மிதவாதிகளை, என்னைப் போன்ற கான்பகதூர்களை உண்டாக்கியதற்காக நீங்கள் பிரிட்டிஷாரைக் குறை கூறுகிறீர்கள். இந்தியாவில் மற்றொரு 'அல்ஸ்டரை'* உண்டாக்க முயலுவதாகப் பிரிட்டிஷாரைக் குற்றஞ்சாட்டுகிறீர்கள். காங்கிரஸும் அதைப் போலவே, ஆஜாதுகளையும், ஆஸப் அலிகளையும், கித்வாய்களையும் உண்டாக்க வில்லையா? காங்கிரஸின் செயல் ஒரு 'முஸ்லிம் அல்ஸ்டரை'ச் சிருஷ்டிப்பதாக இல்லையா? டில்லி நகரசபைத் தேர்தலில் ஸ்ரீ ஆஸப் அலி வெற்றி பெற்றதை எடுத்துக்காட்டுவீர்கள். மாகாண லீகில் பிளவு ஏற்பட்டு, நிலைமையைச் சரியாகச் சமாளிக்க முடியாது போனதால் அவர் வெற்றி பெற்றார். இல்லையேல், இவர் ஒருகாலும் வெற்றி பெற்றிருக்கமாட்டார். இப்படி இருக்கும்போது கூட டில்லி காங்கிரஸ் ஒரு கட்சியாக நகரசபைத் தேர்தலில் போட்டியிட விரும்பியபோது, காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருக்கும் ஸ்ரீ ஆஸப் அலி, காங்கிரஸ் அபேட்சகராக நிற்க மறுத்துவிட்டார். ஆகையால், ஸ்ரீ ஆஸப் அலியின் தேர்தலை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியாது. ஸ்ரீ ஆஸப் அலி காங்கிரஸ் அபேட்சகராக இப்போது திரும்பவும் தேர்தலுக்கு நின்றால், எந்த லீக் அபேட்சகராலும் தோற்கடிக்கப்படுவார் என நிச்சயமாக எண்ணுகிறேன். முஸ்லிம்கள், உங்கள் வாழ்க்கையின் லட்சியமாகிய ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில் நம்பிக்கை இழந்த பின், முஸ்லிம் லீகின் லாகூர் தீர்மானம் உங்களுக்குத் திகைப்பூட்டியது என நீங்கள் சொல்லுவது நியாயமில்லை. ஆனால், கடந்த பத்து ஆண்டுகளில் காங்கிரஸின் முழு நோக்கம் முஸ்லிம்களைப் பிரித்தாளுவதுதான் என்பது முஸ்லிம்களுக்கு உறுதியாகிவிட்டது. லீகைப் பற்றிய உங்கள் நிலையைப் புனராலோசனை செய்யும்படி கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். காங்கிரஸ் முஸ்லிம்களை நம்பாதீர்கள். அவர்கள் எங்களிடையே உள்ள 'மீர்ஜாபர்கள்'. † அத்துடன், அவர்கள் ஹிந்து-முஸ்லிம் சமரசத்திற்கும் இந்திய விடுதலைக்கும் எதிரிகள்.''

முஸ்லிம் நண்பர்களின் எதிர்ப்புக் கடிதங்கள் இப்போது எனக்கு வந்து குவிகின்றன. அநேகர் வாதம் செய்வதே இல்லை; வசை மாரியுடன் திருப்தியடைகின்றனர். நாள்தோறும் வரும் கடிதங்களைப் பார்க்கும் பியாரிலால், நான் பார்க்க வேண்டுமென்று அவர் நினைப்பதைத்தான் என்னிடம் கொடுப்பார். இவைகளிலும், அவசியமானவற்றையே கவனிக்கிறேன். சில

---

* 'அல்ஸ்டர்' என்பது வட அயர்லாந்தைக் குறிக்கிறது. அயர்லாந்தில் இருந்த பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தும், அயர்லாந்திற்குச் சுதந்திரம் கோரியும் 1916-ஆம் ஆண்டில் கிளர்ச்சி ஏற்பட்டது. அந்தக் கிளர்ச்சி வெற்றி பெறவில்லை. பிறகு 1919-இல் ஐரிஷ் பார்லிமெண்டு மீண்டும் சுதந்திரம் கோரியது. அப்போது பிரிட்டிஷார், அயர்லாந்திற்கு டொமினியன் அந்தஸ்து அளித்தனர். 6 ஜில்லாக்கள் உள்ள வட அயர்லாந்தான அல்ஸ்டர் அதை அங்கீகரித்தது. 16 ஜில்லாக்கள் அடங்கிய தெற்கு அயர்லாந்து அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விதம் அயர்லாந்திலிருந்து பிரிட்டன் அல்ஸ்டரைப் பிரித்ததால், பிரிவினையையும் பிளவையும் குறிப்பதற்காக 'அல்ஸ்டர்' என்று கூறுவது வழக்கத்தில் இருந்து வருகிறது.

† 1757-இல் பிளாசியில் நடந்த யுத்தத்தின்போது மீர்ஜாபர் தனது நெருங்கிய உறவினரான வங்காள நவாபைப் பிரிட்டிஷாரிடம் காட்டிக் கொடுத்து துரோகம் செய்துவிட்டு, பிரிட்டிஷாரின் தயவினால் வங்காள நவாப் பதவிக்கு வந்தான். எனவே, அதிலிருந்து துரோகிகளை 'மீர்ஜாபர்கள்' என்று குறிப்பிடுவது வழக்கமாகிவிட்டது.

வற்றிற்குப் பிரத்தியேகமாக விடை எழுதுவேன். ஆகவே, 'ஹரிஜன்' மூலமாக அல்லது தபால்மூலமாக விடை கிடைக்காவிட்டால், எழுதியவர்கள் காரணத்தை அறிந்துகொள்ளுவார்கள்.

சில முஸ்லிம்கள் அனுதாபக் கடிதங்களும் எழுதியுள்ளனர். ஒருவர், தமது வீட்டில் என்னைப் பற்றிய வெகு மூர்க்கமான கண்டனங்களுக்கெல்லாம் அவர் செவி சாய்க்க வேண்டியிருப்பதாக எழுதுகிருர். எந்த அடைமொழியும் உபயோகிக்கத்தகாத தாக இல்லையாம். கண்டனங்களில் பெரும்பாலும் பொய் என்பது அவருக்குத் தெரியும். அங்கிலையில் தாம் என்ன செய்வது என்று கேட்கிருர். அவர் வீட்டைவிட்டுப் போய்விடுவதா, அல்லது முடிவற்ற வாதங்களில் ஈடுபட்டு வீட்டைச் சந்தைக் கடையாக மாற்றுவதா என்று கேட்கிருர். வீட்டை விட்டுப் போகவும் வேண்டாம், விவாதத்தில் ஈடுபடவும் வேண்டாம் என அவருக்கு யோசனை கூறியுள்ளேன். முடியுமானல் கலப்பற்ற பொய் கூறப்படும்போது, அதை அமைதியாக எதிர்த்து ஒரு வார்த்தை சொல்லலாம்.

இந்திய முஸ்லிம்களுக்கும் இஸ்லாமுக்கும் என்னை முக்கிய எதிரியாகக் கருதுகிருர்களென என்னிடமுள்ள கடிதப்போக்குவரத்துகளும், முஸ்லிம்களுக்குச் சொந்தமான உருதுப் பத்திரிகைகளின் கத்தரிப்புகளும் காட்டுகின்றன. ஒரு காலத்தில் அவர்களுடைய மிகப் பெரிய நண்பனுக வாழ்த்தப்பட்டு, அப் புகழைச் சகித்தேனென்ருல், இன்று பகைவனுகக் கருதப்படுவதையும் சகித்துத்தான் ஆக வேண்டும். கடவுளுக்குத்தான் உண்மை தெரியும். செயல், பேச்சு, நினைவு ஒன்றிலும் நான் அவர்களுடைய பகைவனுக இல்லை என்று உறுதியாகக் கூறுவேன். அவர்கள் எனக்கு ரத்தக் கலப்புள்ள சகோதரர்கள். அவர்கள் என்னை எவ்வளவு மறுத்தபோதிலும், நான் அவ்வாறே இருந்துவருவேன்.

இப்போது கான்பகதூரின் கடிதத்திற்கு வருகிறேன்.

முஸ்லிம்களின் அதிகாரமுள்ள ஒரே ஸ்தாபனம் என்று அகில இந்திய முஸ்லிம் லீகை காங்கிரஸ் ஒப்புக்கொள்ள வேண்டுமெனக் கேட்பதன் காரணம் எனக்கு விளங்கியதேயில்லை. ஏன் அப்படி ஒத்துக்கொள்ளும்படி கேட்க வேண்டும்? இதை ஏன் எதிர்பார்க்க வேண்டும்? உண்மையான ஒப்பந்த ஆர்வத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

காங்கிரஸ் எல்லோருக்கும் பிரதிநிதியாக இருக்க முயலுகிறது. ஆனல், அவ்வாறு ஒப்புக்கொள்ளவேண்டும் என்று யாரையும் கேட்டதில்லை. அகில இந்தியத் தன்மை தகுதியைப் பொறுத்தது. தகுதி இருந்தாலும் இல்லாவிடினும், ஒத்துக்கொள்ளுவது என்பது அனுவசியமாகும். இந்திய முஸ்லிம்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வகிப்பதாகக் காங்கிரஸ் எப்போதுமே கூறிக்கொண்டதில்லை. எந்தத் தனிச் சமூகத்திற்கும் முற்றிலும் தானே பிரதிநிதி என்று காங்கிரஸ் உரிமை கொண்

டாடியதில்லை. ஆனால், வகுப்பு, வர்ணம், சாதி, மதவேற்றுமை யின்றி ஒவ்வொரு தனித் தேசீய நலனுக்கும் தான் பிரதிநிதி ஸ்தா பனம் என்றே காங்கிரஸ் உரிமை கொண்டாடுகிறது. இதைக் கூட ஒத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஒவ்வொரு கட்சிக்கும், காங்கிரஸ் தன்னுடன் உறவாட விரும்பும் அளவுக்குத் தன்னைப் பொருட்படுத்துவதே திருப்தி அளிக்கவேண்டும்.

தனது பதிவுப் புத்தகத்தில் தான் விரும்பும் அளவுக்கு முஸ் லிம்களின் தொகை இல்லை என்று எப்போதும் நேர்மையுடன் காங்கிரஸ் ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், அநேக முக்கிய மான முஸ்லிம்கள் அதை ஆதரிப்பதைப்பற்றிப் பெருமை அடைந் திருக்கிறது. ஹக்கீம் அஜ்மல்கான் அவர்களுக்குள் மிகப் பெரிய வர். காயிதே ஆஜம்கூடப் பெரிய காங்கிரஸ்வாதியாக இருந்தார். ஒத்துழையாமைக்குப் பின்தான், வேறு சில சமூகங்களைச் சேர்ந்த காங்கிரஸ்வாதிகள் அநேகரைப்போல், அவரும் காங் கிரஸைவிட்டு விலகினார். இதற்குக் காரணம் ராஜீயம்தான். நேரடியான நடவடிக்கைகளை அவர்கள் விரும்பவில்லை.

காங்கிரஸில் சேர்ந்திருப்பதனாலேயே தேசீய முஸ்லிம்களை இழிவாகப் பேசுதல் தவறு. முஸ்லிம் லீகைச் சேர்ந்துவிட்ட மாத்திரத்திலேயே அவர்கள் மதிக்கத்தக்க முஸ்லிம்களாகி விடுவார்களா? காங்கிரஸ் முஸ்லிம்கள் ஒற்றுமையை நிறுவ எவ்வளவு முயல்கின்றனர் என்பது இவருக்குத் தெரியாது. மறுபடியும் ஒற்றுமை ஏற்பட்ட பிறகு—இது நடந்துதான் தீரும்—ஹிந்து, முஸ்லிம்கள் இருவரும் தேசீய முஸ்லிம்களைத் தகுந்தபடி மதித்து மரியாதை செய்வார்கள் என்பதில் சந்தேக மில்லை.

அவர்கள் அத்தனை பேர்களையும் மீர்ஜாபர்கள் என்று குறிப் பிடுவது உண்மையைச் சித்திரவதை செய்வதாகும். அவர்கள் இஸ்லாமையோ, இந்தியாவையோ காட்டிக் கொடுக்கவில்லை. முஸ்லிம் லீகினரைப் போலவே அவர்களும் தங்கள் அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையான முஸ்லிம்கள் ஆவர். பிரிட்டிஷ் முறையாகிய பிரித்தாளும் கொள்கையைக் காங்கிரஸ் பின்பற்று கிறது என்பதும் உண்மையைச் சித்திரவதை செய்வதாகும். காங்கிரஸ் ஒரே நோக்கமுள்ள ராஜீயக் கட்சி என்றும், காங் கிரஸுக்குக் கேவலமான நோக்கங்கள் இருப்பதாகவும் என்று ருசுப்படுத்தப்படுகிறதோ, அன்றுதான் இந்தியாவுக்குக் கெட்ட காலமாகும். முஸ்லிம்களின் நல்லெண்ணத்தை அதிக நேர்மை யான முறையில் கவர முயற்சிப்பது இழிவானதா? சரியோ, தவறோ, சமூக அடிப்படையைக் கொண்ட தனித் தனிப் பிரிவு களில் காங்கிரசிற்கு நம்பிக்கை இல்லை. மதத்தை அதன் மெய்த் தன்மைப்படி கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள ஒரு சொந்த விஷ யமாகக் கருதினால், வேற்றுமையின்றி பொதுவான வாழ்க்கைக் கும், பொதுவான நடவடிக்கைக்கும் இடம் ஏற்படும். மதங்கள் மனிதரைப் பிரிப்பதற்கு ஏற்பட்டவை யல்ல; அவர்களை இணைப்

பதற்கே ஏற்பட்டவையாகும். இன்று அவை, சச்சரவுகளுக்கும், பரஸ்பரம் படுகொலைகளுக்கும் காரணமாக இருக்கும் நிலைக்கு உருக்குலைக்கப்பட்டிருப்பது துரதிருஷ்டமேயாகும்.

ஆஸப் அலி சாகிபின் நிலையைப்பற்றி நான் ஏன் பேச வில்லை என்று இப்போது ஒருவேளை தெளிவாகியிருக்கலாம். லீகைச் சேர்ந்தவரும் அவரும் போட்டியிட்டால், அவர் தோல்வி அடைவார் என்றே வைத்துக்கொள்ளுவோம். மேலும், அத் தகைய போட்டிகள் அநேகம் அவ்வாறே முடியும் என்றும் வைத் துக்கொள்ளுவோம். அது எவ் வகையிலும் என் வாதத்தின் வலி மையைக் குறைக்காது. ஆனால், அது லீகின் சிறந்த ஸ்தாப னத் திறமையையும், முஸ்லிம்களிடையே அதன் செல்வாக் கையும் நிரூபிக்கும். இவற்றில் ஒன்றையாவது நான் சந்தேகித் ததில்லை. என் வாதம் நம்பமுடியாத அளவுக்கு எளிதாகும். லீகின்மூலம் ஒற்றுமை உண்டுபண்ணுவதைப்பற்றி நினைக்கு முன், லீகின் தன்மையைப்பற்றி நான் எதையும் ஒத்துக் கொள்ளும்படி கேட்கக்கூடாது. யார், எவ்வளவு அற்புதமாக அவர்களைப்பற்றி நினைத்த போதிலும், நான் தேசீய முஸ்லிம்க ளுக்குத் துரோகம் செய்யக்கூடாது. இக் கடிதத்தை எழுதிய கான்பகதூரை, இரு சமூகங்களையும் ஒன்றுபடுத்துவதில் தமது செல்வாக்கை உபயோகிக்கும்படி கேட்டுக்கொள்ளுகி றேன்.

—'ஹரிஜன்'– 8—6—1940

# 29

# ஓர் ஆங்கிலேயரின் யோசனை

ஆங்கில நண்பர் ஒருவர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

"பாகிஸ்தானைவிட மிகக் குறைவானதை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளு வார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் தற்போது நடவடிக்கைகளைக் கவனிப் பது நியாயமே. ஆனால், சமரசம் எதுவும் ஏற்படாமல் நாட்கள் சென்று கொண்டிருந்தால், பாகிஸ்தான் கூச்சல் அதிகமாக வலுக்கும். கடைசியில், உள்நாட்டுக் கலகம் அல்லது பிரிவினை இவ்விரு வழிகளில் ஏதாவது ஒன் றையே மேற்கொள்ள நேரும். செய்வதற்கு ஒன்றுமில்லை, சம்பவங்கள் நடக் கும் வரை காத்திருக்க வேண்டும் என்று சிலர் எண்ணுவது ஆபத்திற்கு இட மாகும். எனவே, தங்களின் ராஜதந்திரத்தையும், இணங்கச்செய்யும் திறமை யையும் உபயோகித்து இரு கட்சிகளையும் சமரசத்திற்கு வரும்படி கட்டாயப் படுத்துவது பிரிட்டிஷாருடைய வேலையாகும்.

" இந்திய சர்க்காரில் யார் ஆதிக்கம் வகிப்பது? ஹிந்துக்களா அல்லது முஸ்லிம்களா? இதுதான் இப்போது தீரவேண்டிய முக்கியமான விஷயமாகும்.

இது சம்பந்தமாகக் காங்கிரஸ் அதிகம் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். ஜனப்பிரதிநிதி சபைக் குடியாட்சி, பெரும்பான்மை அரசு முதலிய தத்துவங்களைத் தூக்கி எறிந்துவிட வேண்டும். முற்றிலும் வேறுபட்ட இரு நாகரிகங்கள் சேர்ந்து வாழவேண்டி யிருக்கையில், அவை பொருத்த மில்லை. பெரும்பான்மை ஆட்சி என்பது, ஒரு நாகரிகம் மற்றொரு நாகரிகத் தின்மீது ஆதிக்கம் செலுத்துவதேயாகும் என்று முஸ்லிம்கள் கருதுவார்கள். காங்கிரஸ் இதை அறிந்துகொள்ள வேண்டும். இல்லையேல் பிரிவினை, ஒரே வழியாகாவிடினும், உத்தமமான வழியாகிவிடும். அதிலிருந்து மற்ற வழிகள் எவ்வளவு கெடுதலானவை என்பதும் தெரியும்.

"காங்கிரஸ் இக்காரியத்தில் அதிகம் விட்டுக்கொடுக்க வேண்டும் என் பதை அறிந்துகொண்டால், சீக்கிரத்தில் ஒரு சமரச ஒப்பந்தத்துக்கு வரலாம் என்பது உறுதி. இதை நான் மிகவும் இன்றியமையாததாகக் கருதுகிறேன்."

பிரிட்டிஷ் அரசாங்கம் அதிகம் செய்ய முடியும். உண்மை தான். பிரிட்டிஷார் பலாத்காரத்தினால் எவ்வளவோ செய்திருக் கின்றனர். இரு சாராரையும் பிரிட்டிஷார் பலாத்காரத்தின் மூலம் ஒரு சமரச முடிவுக்கு வரும்படி செய்யலாம். ஆனால், அவர்கள் அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. இதுவரை அவர்கள் செய்துள்ளது, சரியான முடிவு எதுவும் ஏற்படாமல் தடுப்பதே யாகும்! நான் சொல்லுவதற்கு ஆதாரத்தை எனது நிருபர் 'ஹரிஜன்' கட்டுரைகளில் காணலாம். பிரிட்டிஷார் செய்ய வேண்டிய ஒரே காரியம், தங்களுடைய போக்கை மாற்றிக் கொள் ளுவதேயாகும். இதை அவர்கள் செய்வார்களா? பிரித்தாளும் கொள்கை ஒன்றால்தான், அவர்கள் இந்தியாவைத் தம் கைக்குள் வைத்திருக்க முடியும். முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் நிலைத்த ஒற்றுமை இருந்தால், அவர்கள் ஆட்சிக்கு ஆபத்துவரும்; அந்த ஆட்சி முடிவடைந்து விடும். ஆகையால், அவ்வாட்சி முடிவுற்றால்தான் நமக்குச் சரியான பரிகாரம் கிடைக்கும்.

ஹிந்து மதத்தின்படியோ அல்லது இஸ்லாமின்படியோ நான் குறுகிய போக்கில் நினைக்க முடியாது. ஒட்டுப் போட்ட பரிகாரத்தில் எனக்குச் சற்றும் அக்கறையில்லை. இந்தியா பெரிய நாடு; பல பண்பாடுகள் கலந்த பெரும் தேசம். இப் பண்பாடுகள் ஒன்றுக்கொன்று உதவி, மற்றவற்றைப் பூரணமாக்கும் நிலையிலி ருக்கின்றன. இப்போக்கு முற்றுப்பெறும்வரை காத்திருக்க வேண்டுமானால், நான் காத்திருந்துதான் ஆகவேண்டும். அது, என் காலத்துக்குள் பூர்த்தியாகாமல் போகலாம். காலம் உருவா கும்போது அதுவும் வரும் என்ற உறுதியில் உயிர் துறப்பது எனக்கு மகிழ்ச்சி தரும். போக்கைத் தடுக்க நான் ஒன்றும் செய்யவில்லை என்ற நினைவே எனக்கு இன்பம் அளிக்கும். இந்த உறுதியுடன் ஒற்றுமையை நிறுவ நான் எதுவும் செய்வேன். என் வாழ்க்கை முழுதும் நான் விட்டுக்கொடுத்தே வந்துள்ளேன். ஆனால், அப்படி விட்டுக்கொடுத்ததன் மூலம் நான் எனது லட்சி யத்தைப் பெரிதும் நெருங்கிச் செல்ல முடிந்திருக்கிறது.

பாகிஸ்தான் அந்நிய ஆதிக்கத்தைவிட மோசமல்ல. விருப்பமில்லாதபோதிலும், அந்நிய ஆதிக்கத்தின்கீழ் நான் வாழ்ந்திருக்கிறேன். இறைவனின் திருவுள்ளம் அதுவானால், என் கனவு அழிந்துபோவதை நான் செயலற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்படி நேரிடலாம். ஆனால், முஸ்லிம்கள் இந்தியாவைப் பிளக்க உண்மையாகவே விரும்புகிறார்களென நான் நம்பவில்லை.

— 'ஹரிஜன்' - 4—5—1940

# 30

# பிரிவினையும் முஸ்லிம் அல்லாதவர்களும்

**கேள்வி:** "எட்டு கோடி முஸ்லிம்கள் பிரிவினையை விரும்பினால், உலகில் ஒன்றும் அவர்களைத் தடுக்க முடியாது" என்று 'ஹரிஜனில்' கூறியிருக்கிறீர்கள். இருபத்தைந்து கோடி முஸ்லிம் அல்லாதாருக்கு இது சம்பந்தமாகத் தங்களுடைய கருத்தைக் கூற உரிமை உண்டு என்பது உங்களுக்குத் தோன்றவில்லையா? உங்களது அறிக்கை முஸ்லிம்களுக்கு அதிக மதிப்புக் கொடுப்பதாகவும், ஹிந்துக்களை இகழ்வதாகவும் இருக்கவில்லையா?

**பதில்:** நான் என் கருத்தைத்தான் வெளியிட்டுள்ளேன். எட்டு கோடி முஸ்லிம்களின் ஒழுங்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தெளிவான விருப்பத்தை ஹிந்து, கிறிஸ்தவ, சீக்கிய அல்லது பார்சிகள் முதலியோர் பிடிவாதமாக எதிர்த்தால், உள்நாட்டுக் கலக அபாயம்தான் ஏற்படும். இது பெரும்பாலோர், சிறுபாலோரைப் பற்றிய பிரச்னை அல்ல. நமது சிக்கல்களை அகிம்சை நெறியில் தீர்க்க வேண்டுமானால் வேறு வழியில்லை. எட்டு கோடியினர் முஸ்லிம்களாக இருப்பதால் நான் இப்படிச் சொல்லவில்லை. இந்த எட்டு கோடி, வேறு எந்தச் சமூகத்தினராக இருந்திருப்பினும், நான் இதையேதான் சொல்லி யிருப்பேன்.

—'ஹரிஜன்' - 25—5—1940

# 31

# தீண்டாமையின் சாபம்

பிரிவினைக்குச் சாதகமாகச் சொல்லப்படும் விவாதங்களைக் குறிப்பிடுவதையே பல அன்பர்கள் கண்டிக்கின்றனர். இஸ்லாம், சுயநலம் கொண்டதல்ல என்றும், அகில சகோதரத்துவம், சகிப்புத்தன்மை இவற்றை அது கற்பிக்கிறது என்றும் இவர்கள்

கூறுகின்றனர். இதை நான் ஒருகாலும் மறுத்ததில்லை. இஸ்லாமை அறிந்திருந்தமையால்தான், அதற்கு மாறான வாதங்களைப் பற்றி நான் வருத்தப்பட்டேன். இந் நாட்களில் நான் எந்த முஸ்லிம் எழுதியதைப் பார்த்தாலும், அது ஹிந்துக்களையும் ஹிந்து மதத்தையும் இழிவுபடுத்தியே கூறுகிறது. பிரிவினைக்கு ஆதாரம் வேண்டுமென்றால், அப்படி எழுதுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த முரண்பாட்டை எடுத்துக் காட்டினால், அன்பர்கள் கோபம் கொள்ளுகின்றனர். முக்கியமில்லாத முஸ்லிம்கள் அங்குமிங்கும் எழுதுவதிலிருந்து நான் அவசரப்பட்டு முடிவு கட்டிவிட்டேனென்று கூறுகின்றனர். துரதிருஷ்டவசமாக, நான் குறிப்பிட்ட வாதங்கள் முக்கியமான முஸ்லிம்களிடமிருந்து வந்தவையே.

அன்பர்கள், ஹிந்து தீண்டாமையைப் பற்றிக் கூறி என்னை மடக்குகின்றனர். அவர்கள் சொல்லுவதன் சாரம் இதுதான்: "முஸ்லிம் லீகிற்கு விரோதமாகத் தீண்டாமைக் குற்றத்தைக் கொண்டுவருவது உங்களுக்கு வெட்கமாக இருக்க வேண்டும். முஸ்லிமின் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க வருமுன், ஹிந்துவின் கண்ணிலுள்ள உத்தரத்தை எடுங்கள். ஆயிரம் ஆண்டுகள் வரை ஹிந்துக்கள் முஸ்லிம்களை முற்றிலும் பகிஷ்கரித்து ஒதுக்கி வைக்கவில்லையா? அவர்களுடன் உண்பதில்லை, குடிப்பதில்லை, கொள்வினை கொடுப்பினையும் இல்லை. வீடுகூட வாடகைக்கு விடுவதில்லை. ஹிந்துக்கள் செய்வதைவிட ஒரு சமூகத்தை ஒதுக்கி வைக்க அதிகத் தீவிரமான முறை வேறு ஏதாவது உண்டா? இப்போது முஸ்லிம்கள் திரும்பி, ஹிந்துக்கள் செய்ததற்குப் பிரதி செய்வது நியாயம் அல்லவா?"

நானும் இதை ஒத்துக்கொண்டுள்ளேன். பழிக்குப் பழியாக முஸ்லிம்கள் என்ன செய்தாலும் ஹிந்துக்களுக்கு அது தகும். நான் கேட்டதும், கேட்பதும், அவர்கள் அவ்வாறு செய்யவேண்டுமா என்பதே. மதக் குரோதங்களைக் கிளப்பி விடுதல் ஒரு பெரிய ராஜீயக் கட்சிக்கு ஏற்குமா?

முஸ்லிம் லீக் என்ன செய்தாலும், செய்யாவிட்டாலும், யோசனையுள்ள ஹிந்துக்கள் தங்களுக்கு ஏற்படும் பழிச்சொல்லைக் கவனித்து, தனித்து நிற்கும் வழக்கத்தை ஹிந்து மதத்திலிருந்து விலக்க வேண்டும். பண்டைக் கால ஹிந்து மதம், நமது அறிவு, இரண்டுமே ஏற்றுக்கொள்ளாத செயற்கைச் சுவர்களால் அதைக் காப்பாற்ற முடியாது. புகைவண்டி நிலையங்களில் ஹிந்து தண்ணீர், டீ, முஸ்லிம் தண்ணீர், டீ என்று கத்துவதைக் கேட்பது எவ்வளவு அருவருப்பாக இருக்கிறதென்று, அன்று மௌலானா அபுல் கலாம் ஆஸாத் கூறியது நியாயமே. இன்றைய ஹிந்து மதத்தில் 'என்னைத் தொடாதே' என்ற கொள்கை வெகு ஆழமாக வேரூன்றியிருப்பது எனக்குத் தெரியும். ஆனால், காங்கிரஸ்காரர்கள் அதைச் சகித்துக்கொள்ளக் காரணம் ஒன்றுமில்லை. தாங்கள் ஒழுங்காக நடந்துகொண்டால், ஹிந்து

சமூகத்தை முற்றிலும் சீர்திருத்துவதற்கு வழி செய்துவிடுவார்கள். தீண்டாமையைப் போக்குவதென்பது, தீண்டாதவர்களைத் தொடுவது மட்டுமல்ல; அதைவிட ஆழ்ந்த கருத்துள்ளது அது.

— 'ஹரிஜன்' - 1—6—1940

# 32

# பாகிஸ்தானும் அரசியல் நிர்ணய சபையும்

**கேள்வி:** இரு தேசீய இனத் தத்துவம், அதைப் போலவே பொருத்தமற்றதாகிய அரசியல் நிர்ணய சபையைத் தகர்ப்பதற்கான ஓர் எதிர் வெடியாகும். அரசியல் நிர்ணய சபையைப் பற்றிப் பேசுவோர், இப்போதுள்ள நிலைமைகளைக் கவனிக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. இந்தியாவில் நூற்றுக்கு 95 பேர் எழுத்தறிவற்றவர்கள். அநேகமாக நூற்றுக்கு நூறு பேரும் மதக் குரோதங்களால் ஆட்டிவைக்கப்படுகிறார்கள். இதைத் தவிர, மக்களிடையே லஞ்ச ஊழல்களும் இருக்கின்றன. சிறுபான்மையோருக்கு ஆதரவான பாதுகாப்புகளை அமலுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற உண்மையான ஆர்வம் பெரும்பான்மையோருக்கு இருந்தாலன்றி, எத்தகைய சிறந்த பாதுகாப்புகளும் போலிப் பாதுகாப்புகளாகவே முடியும். அரசியல் நிர்ணய சபைக்கு எதிராகக் கடுமையான ஆட்சேபணைக்கு அது தான் காரணமாகும்.

**பதில்:** உண்மையாகவே, நீங்கள் அரசியல் நிர்ணய சபையையும் பாகிஸ்தானையும் சம நிலையில் வைத்துப் பேச முடியாது. எவ்வழியில் பார்த்தாலும் பாகிஸ்தான் தவறாகும். அரசியல் நிர்ணயசபை என்ற கொள்கையில் யாதொரு பிழையுமில்லை. மிகவும் மோசமாகப் போனால், அதை அமைப்பதில் ஆபத்துக்கள் இருக்கலாம். ஒவ்வொரு பெரிய ஆராய்ச்சியிலும் ஆபத்துக்கள் நிறைந்தே இருக்கின்றன. இவற்றிற்குத் துணிந்துதான் ஆக வேண்டும். ஆபத்துக்களைக் குறைக்க எல்லா முயற்சிகளும் எடுக்க வேண்டும். பொது லட்சியத்தை அடைவதற்கு அரசியல் நிர்ணய சபையைப்போல வேறொன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எழுத்தறியாமையைப் பற்றிய இடைஞ்சலை ஏற்றுக்கொள்ளுகிறேன். உண்மையில், காலஞ்சென்ற அலி சகோதரர்கள் உட்பட்ட முஸ்லிம் தேசீயவாதிகளின் தூண்டுதலின் பேரில் தான், வயது வந்தவர் அனைவருக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட்டது. ஊழல் அபாயம் இருக்கத்தான் செய்கிறது. எனி

னும், ஸ்தாபனம் எவ்வளவுக்குப் பெரிதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு லஞ்ச ஊழல் குறைவாகிவிடுகிறது. ஏனெனில், அது பரவலாகச் சிதறிவிடுவதே அதற்குக் காரணம். காங்கிரஸில் ஊழலும் பொறுமையும் அதிகம் உண்டு. ஆனால், அது ஸ்தாபனத்தை இயக்கும் சிலருடன் நின்றுவிடுகிறது. பெரும்பாலான காங்கிரஸ்காரர்கள் அது செய்யும் நன்மையை நுகர்கிறார்களாயினும், இந்த ஊழல்கள் அவர்களைப் பாதிப்பதில்லை. பாதுகாப்புகளைப் பற்றி நீங்கள் சொல்லும் அபாயங்கள், அவை அரசியல் நிர்ணய சபை மூலம் வரும்போது, ஒன்றுமில்லாது தேய்ந்துவிடும். ஏனென்றால், வயது வந்த முஸ்லிம் மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் வகுக்கும் பாதுகாப்புகள், பெரும்பாலோரின் நல்லெண்ணத்தையோ, நேர்மையையோ பொறுத்தவை யல்ல; விழிப்படைந்துள்ள முஸ்லிம்களின் வலிமையைப் பொறுத்தவையே. பெரும்பான்மையோரைப் பற்றிய உங்களுக்குள்ள தப்பெண்ணத்தில்தான் உண்மையில் ஆபத்து இருக்கிறதேயன்றி அரசியல் நிர்ணய சபையில் அல்ல. பெரும்பாலோர் ஹிந்துக்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பொதுமக்களின் அரசியல் சபைகளில் கட்சிகள் கட்டாயமாக மதக் கருத்துகளை ஒட்டியே ஏற்படுவதில்லை; அரசியலிலும் பிற துறைகளிலும் உண்டாகும் கருத்துகளை ஒட்டியே அமைகின்றன. தனித் தொகுதிகளினால் வகுப்புவாத மனப்பான்மை என்னும் சாபம் வலுத்துவிட்டது. இதன் நேர் விளைவே பிரிவினைக் கூக்குரலாகும். அதே சமயத்தில், தனித் தொகுதிகளின் கண்டனத்திற்கும் இவையே காரணம்.

நமக்கு அறிவு வந்தபின், தனித் தொகுதிகளை இரு தேசீய இனங்கள் என்று யோசிக்கமாட்டோம். மனித சுபாவத்தின் இயல்பான நற்பண்பில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆகையால், அரசியல் நிர்ணய சபையைப் பற்றி எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. முஸ்லிம்களின் சிறப்பான நலன்களைப் பற்றி முஸ்லிம் வாக்காளர் முடிவு செய்வர். சமூக நன்மைகளை ஒட்டி யோசித்தால், அரசியல் நிர்ணய சபையைப் பற்றி அஞ்சவேண்டியவர்கள் ஹிந்துக்களே. ஏனெனில், முஸ்லிம் வாக்கு பிரிவினைக்குச் சாதகமாக இருந்தால், ஹிந்துக்கள் இரு பிரிவாக மட்டுமல்ல, பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லையேல், உள்நாட்டுக் கலகத்திற்குத் தயாராக இருக்க வேண்டும். இப்போதைய நிலைமைப்படி, தீர்மானங்களை நிறைவேற்றுவதோடும், தங்கள் பெயர்களை அச்சில் பார்ப்பதோடும் அனைவரும் திருப்தி யடைந்துவிடுகின்றனர். ஆனால், நடைமுறையில் நாம் அனைவரும் முன்னிருந்த அடிமை நிலையிலேயே இருக்கிறோம். அரசியல் நிர்ணய சபை உண்மையானது. அது விவாதிக்கும் அல்லது சட்டம் செய்யும் பொறுப்பற்ற ஸ்தாபனமாக இராது. தனது முடிவான

தீர்மானத்தைச் செய்வதன் மூலம் கோடிக்கணக்கான மக்களின் எதிர்காலத்தை முடிவு செய்யும். நீங்கள் அதை எதிர்க்கலாம். உங்கள் எதிர்ப்பு வெற்றி பெறுமானால், ஒழுங்கான உள்நாட்டுக் கலகமல்ல, பயங்கரமான அராஜகக் குழப்பமே ஏற்படும். இவ் வேதனை தரும் முட்டுக்கட்டையைத் தீர்ப்பதற்கு, அரசியல் நிர்ணய சபையைத் தவிர வேறொரு பரிகாரமும் எனக்குத் தோன்றவில்லை.

— 'ஹரிஜன்' - 29—6—1940

# 33

# பாகிஸ்தானும் அகிம்சையும்

**கேள்வி:** அகிம்சையிலும் பாகிஸ்தானிலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. என் லட்சியத்தை அடைவதற்கு அகிம்சைக் கொள்கையை எவ்வாறு உபயோகிப்பது?

**பதில்:** ஒரு குஜராத்தி முஸ்லிம் மேற்கண்ட கேள்வி கேட்டுள்ளார். அநீதியான லட்சியத்தை அகிம்சை நெறியால் அடைவது சாத்தியமில்லை. உதாரணமாக, அகிம்சை வழியில் திருட முடியாது. எனக்குத் தெரிந்த வரையில் பாகிஸ்தான் தகுந்த ஒரு லட்சியமல்ல. ஆனால், நீங்கள் அதை ஒரு தகுந்த லட்சியமாகக் கருதுவதால், கட்டாயமாக நீங்கள் அதற்காக அகிம்சை நெறியில் ஓர் இயக்கத்தை நடத்தலாம். அப்படியானால், நீங்கள் எப்போதும் உங்கள் எதிரிகளுடன் பொறுமையாக வாதித்து அவர்களுடைய மனத்தை மாற்ற முயற்சிப்பீர்கள். உங்கள் லட்சியத்தில் நீங்கள் தன்னலமின்றி ஈடுபடுவதால், யாவருடைய கவனத்தையும் இழுப்பீர்கள். எதிரிகள் சொல்லுவதை மரியாதையுடன் கவனித்து, அவர்கள் தவறாக இருப்பினும் பிழையை மரியாதையுடன் சுட்டிக்காட்டுவீர்கள். கடைசியாக, உங்கள் லட்சியம் முற்றிலும் சரியாக இருந்தும், முன் கொண்ட வெறும் எண்ணத்தாலும் மூடபக்தியாலும் மக்கள் உங்களுக்குச் செவிகொடுக்க மறுக்கின்றனரென உணர்ந்தால், அகிம்சை நெறியில் அவர்களுடன் சாத்விகமாக ஒத்துழையாதிருக்கலாம். ஆனால், யாரையும் துன்புறுத்தவோ, துன்புறுத்த முயலவோ கூடாது. உங்களுக்கேற்படும் கஷ்டத்தைப் பொறுமையுடன் சகிக்க வேண்டும். இரு பக்கத்திலும் பற்றற்ற நபர்கள் உங்கள் லட்சியத்தின் நீதியை ஒப்புக் கொண்டால், இவை அனைத்தையும் நீங்கள் செய்ய முடியும்.

— 'ஹரிஜன்' - 4—8—1940

# 34

# பாகிஸ்தான் அமைதியைக் கொடுத்துவிடாது

பார்லிமெண்டு முறையின் மூலம் விடுதலை வராது. ஆகையால், சமூக ஒப்பந்தங்கள் நன்றேயாயினும், இதய ஒற்றுமையின்றேல் அவற்றால் பலன் ஏற்படாது. இதய ஒற்றுமையின்றேல் நாட்டில் அமைதி இராது. இதய ஒற்றுமையின்றி, பாகிஸ்தான் அமைதியைக் கொண்டு வந்துவிடமுடியாது. பரஸ்பர ஊழியம், ஒத்துழைப்பு இவற்றால்தான் இவ்வொற்றுமை ஏற்படும்.

தனித் தொகுதிகள் உள்ளங்களைப் பிரித்துவிட்டன. ஒருவருக்கொருவர் ஐயமும், முரணான நலன்களும் இருப்பனவாகவே இவை முடிவு கட்டிக் கொண்டன. இவைகளால் சந்தேகம் அதிகரித்து வேறுபாடுகள் ஊன்றிவிட்டன. இச் சிக்கலிலிருந்து எவ்வாறு வெளியேறுவது என்பதுதான் கேள்வியாகும். முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக இருக்கும் நான்கு மாகாணங்களைப்பற்றி மட்டுந்தான் இப்போது பேச விரும்புகிறேன். நிரந்தரமான பெரும்பான்மையோர் சிறுபான்மையோரை ஆட்சி புரியலாம் என்ற அர்த்தத்தில் அங்கே இயற்கையான பாகிஸ்தான் உளது. மாறக்கூடிய மதத்திற்காக மனிதனை மனிதனிடமிருந்து பிரிப்பது முற்றிலும் தவறு என்று நான் கருதுகிறேன். வரி, சுகாதாரம், போலீஸ், நீதி, பொது சௌகரியங்களை உபயோகித்தல் முதலியவற்றில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் என்ன நல முரண்பாடு ஏற்பட முடியும்? வேறுபாடு, மத ஆசாரத்திலும் பழக்க வழக்கங்களிலும்தான் ஏற்படலாம். இவற்றைப்பற்றி மத சம்பந்தமற்ற லௌகிக அரசாங்கத்திற்கு அக்கறையில்லை.

காங்கிரஸ்காரர்கள், ஹிந்துக்களுக்குள் ஹிந்துக்களாகக் கலந்துவிடக் கூடாதெனின், தனித்தொகுதிகளைக் கொண்ட சட்ட சபைகளிலிருந்தும், ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்தும் கண்டிப்பாக விலகி நிற்கவேண்டும். இம் மாகாணங்களில், ஹிந்துக்களின் நலன் எனப்படுவதற்காக, ஹிந்துக்களுடைய கோரிக்கையின் பேரில் தனித் தொகுதிகளை நிறுவியதாக நினைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், காங்கிரஸ்காரரான ஹிந்துவுக்குத் தன் முஸ்லிம் சகோதரருக்கு இல்லாத நலன் தனியாக எதுவும் இல்லை. ஆகையால், ஹிந்து-முஸ்லிம் நலன்கள் தனித் தனியானவை, முரணானவை என்றுகூடத் தவறாக எண்ணும் தேர்தல் தொகுதிகளில் அவர் சேரலாகாது. சேருவதானால், பெரும்பான்மையோரைப் பிரிப்பதற்காக மட்டுமே சேர

லாம். அதாவது, ஏதாவதொரு முஸ்லிம் கட்சியுடன் சேரலாம். ஹிந்துக்கள் அனைவரையும் காங்கிரஸ் மனப்பான்மை உடையவராக ஆக்க என்னால் முடியுமானால், எல்லா ஹிந்துக்களையும் இத் தொகுதிகளிலிருந்து வெளியேற்றி, முஸ்லிம்களையே நம்பி விட்டுவிடுவேன். வெளியிலிருந்து அவர்களுடன் நட்புப் பூண்டு, தன்னலமற்ற பணி செய்வதால், அவர்களை மாற்ற முயலுவேன். எல்லா உத்தியோகங்களையும் அவர்களே வகிப்பதையும் நான் பொருட்படுத்த மாட்டேன். அதிகமாகப் போனாலும், மிக மிகக் குறைந்த அளவு விகிதமே அந்த உத்தியோகங்களில் பங்கு எடுத்துக் கொள்ள முடியும். மனிதனின் பெருமைகளையும் உரிமைகளையும் உணர்ந்து, அவற்றை வற்புறுத்த வழியறிந்த மக்களை இவ் வுத்தியோகங்கள் நசுக்க முடியும் என்பது மூட நம்பிக்கையாகும். முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக இருக்கும் மூன்று மாகாணங்களிலாவது, காங்கிரஸ்வாதிகளில் பலருக்குத் தங்களின் அகிம்சை நெறியின் பலம், தன்னலமின்மை, வகுப்புவாத உணர்ச்சி எள்ளளவும் இல்லாமை, முஸ்லிம்களின் ஆட்சிக்குப் பணிந்து நடக்கும் திறன் முதலியவற்றை அங்கே காட்ட அரிய சந்தர்ப்பம் உள்ளது. ஆத்திரத்துடன் இவ்வாறு செய்யக் கூடாது; உண்மையான தேசபக்தர்களாக, முஸ்லிம்களின் நண்பர்களாகவே இவ்வாறு செய்ய வேண்டும். ஹிந்துக்கள் வெளியே இருப்பதால், அநேகமாக மிக நன்றாக அவர்களுடைய பிற உரிமைகளை முஸ்லிம்கள் காப்பார்கள். ஹிந்து ஒருவர், தாம் பிற மதங்கள் எல்லாவற்றின் பிரதிநிதியாகவும் இருப்பதாக உரிமை கொண்டாடுவதாலேயே, அவர் ஹிந்து அல்ல என்றாகிவிடாது. அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், பல்வேறு மதங்கள் செய்யக்கூடிய பணியைவிட அது செய்யக் கூடியது குறைவாகும். அதன் பணி, மத வேறுபாடின்றி அனைவருக்கும் உரித்தாகும். ஆகையால், இம் மாகாணங்களில் மாசற்ற தேசீய உணர்ச்சியைக் காட்ட காங்கிரஸ்வாதிகளுக்கு அரிய சந்தர்ப்பம் உளது. அதே சமயத்தில், சரியான முறை தெரிந்தால், பெரும்பாலோரைக் கண்டு அஞ்சுவதற்குக் காரணமில்லை என்று மற்றச் சிறுபான்மையோருக்கு இவர்கள் விளக்குவர். மதத்தை அடிப்படையாகக் கொண்டு சிறுபான்மை, பெரும்பான்மை எனப் பிரிக்கும் நச்சுக் காற்றுச் சுழலிலிருந்து நாம் வெளியேற வேண்டும். அரசாங்கத்தைப் பொறுத்த அளவில், ஒரு பார்சியின் நலன், ஏன் ஹிந்து அல்லது முஸ்லிம் நலனிலிருந்து வேறுபட வேண்டும்? தாதாபாயும் பிரோஸ்ஷாவும் காங்கிரஸை ஆண்டது, அதன் தயவு அல்லது ஆதரவினால் அல்ல; தங்களுடைய ஊழியத்தினாலும் தகைமையினாலுமே அல்லவா? அவர்களது ஆட்சி, ஹிந்து நலனுக்கோ அல்லது முஸ்லிம் நலனுக்கோ தீங்கு விளைவித்ததா? இந் நலன்கள் காங்கிரஸ் மேடையில் என்றாவது முரண்பட்டிருந்தனவா? காங்கிரஸ் சுயேச்சையாக ஏற்பட்ட ஓர் அரசாங்கம் அல்லவா?

—'ஹரிஜன்' - 25—1—1942

35

# ஹிந்து-முஸ்லிம் புதிர்

**கேள்வி :** ஹிந்து-முஸ்லிம் புதிருக்கு நீங்கள் உத்தேசிக்கும் பரிகார முறைப்படி, எல்லா ஹிந்துக்களும் சட்டசபைகளிலிருந்து விலகி நிற்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா, அல்லது ஒரு பகுதியினர் மட்டுமா? ஒரு பகுதியினர் மட்டும் என்ருல், அதிகப் பிற்போக்கான ஹிந்துக்கள் உட்புகுந்து, நிலைமையை இன்னும் மோசமாக்கிவிட மாட்டார்களா? முஸ்லிம்களின் மனத்தைக் காங்கிரஸ்காரர்கள் வெளியிலிருந்து மாற்றக்கூடுமாளுல், உள்ளே சென்று அதே வேலையை இன்னும் அதிகத் திறமையுடன் செய்ய முடியாதா?

**பதில் :** ஹிந்துக்கள் அனைவரும் விலகி நிற்பர் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உள்ள ஸ்தானங்களைக் காங்கிரஸ் அல்லாத ஹிந்துக்கள் நிரப்பிவிடுவர் என்று எனக்குத் தெரியும். காங்கிரஸ் ஹிந்துக்கள் உட்சென்ருல், யாருக்கும் என்ன நன்மையும் செய்ய முடியாது; ஆனுல், வகுப்புவாத யந்திரத்தின் இரு கற்களுக்குமிடையில் அறைபட்டுவிடுவார்கள். ஹிந்து என்ற முறையில் இச் சிக்கலை நான் அணுகவில்லை. எல்லாச் சமூகங்களையும் சமமெனக் கருதும் ஒரு காங்கிரஸ்காரனுகவே நான் இதைப்பற்றி யோசிக்கிறேன். இந்திய சட்ட சபைகளின் அமைப்பில் இந்தச் செயற்கை முறை ஒன்றைப் புகுத்தியிராவிட்டால், சமூகங்களுக்குப் பிரதிநிதிகளாக இராமல் அங்கத்தினர்கள் தத்தம் கொள்கைகளின்படி வகுப்புவாதத் தொடர்பின்றி அமைந்த தொகுதிகளுக்குப் பிரதிநிதிகளாக இருப்பார்கள். எல்லாச் சமூகங்களுக்கும் பிரதிநிதி என்கிற முறையில், ஹிந்துக்களை மட்டுமல்ல, காங்கிரஸ் மனப்பான்மையுடைய முஸ்லிம்களையும் பிறரையும், சட்ட சபைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளிலிருந்தும் விலகி நிற்கும்படி நான் எதிர்பார்ப்பேன். விலகி நிற்போர், சமூகங்களிடையே வேற்றுமையின்றி நடுக்கண்ட நியாயமாக நின்று, வெளியிலிருந்து சட்ட சபைகளை இயக்குவிக்க முயல்வர். இவர்கள் பலராயினும் சிலராயினும், அறிவாளிகளாக நடந்துகொள்ளுவார்கள். நான் கூறுவதற்குச் செவிசாய்த்தால், நம்மிடையே உள்ள சமூகப் பிரச்னை மறைந்துபோகும். காங்கிரஸ் ஹிந்துக்கள் சட்ட சபைகளுக்குள் போவதால், அவர்கள் வேலையின்றித் தலையிடுவோராகி, எந்தக் கட்சியையாவது புண்படுத்திவிடுவோமோ என்ற அச்சத்தால், ஆண்மை குன்றி நடந்துகொள்ள வேண்டியிருக்கும். இப்போது சட்டசபைகள் யுத்த யந்திரத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றன. இருந்துதான் தீரவேண்டியிருக்கும்; வேறு வழியில்லை. யுத்த முயற்சிக்குத் தடை விளைவித்தால், சட்டசபைகளை அதி

காரிகள் வேலைசெய்ய விடமாட்டார்கள். யுத்தத்தை நடத்துவதில் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தியுள்ள ஆட்சியாளர்கள், வேறு என்ன செய்ய முடியும்?

கேள்வி: ஹிந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களிலும், சட்ட சபைகளிலிருந்து காங்கிரஸ்வாதிகள் வெளியேற வேண்டும் என்று ஏன் யோசனை சொல்லக் கூடாது?

பதில்: ஏனெனில், முஸ்லிம் அல்லாத சிறுபான்மையோர், தாங்கள் பெரும்பான்மையோர் என்று பாவித்து, இந்த மாகாணங்களில் ஆட்சி செய்வதை நான் விரும்பவில்லை. காங்கிரஸ் விலகினால், இது காங்கிரஸே சம்மதித்து உண்டாக்கும் ஒரு பொய் நிலையாகிவிடும். இம் மாகாணங்களில் காங்கிரஸ் சட்ட சபைகளிலிருந்து விலகி நிற்பதால், சமூகப் பிரச்னை தீர்ந்துவிடாது; அதன் விளைவாக நாம் நினைக்காத, விரும்பாத ஒரு நிலையேதான் ஏற்படும்.

—'ஹரிஜன்' - 15—2—1942

# 36

# ஜனப் ஜின்னாவிற்கு வேண்டுகோள்

முஸ்லிம் லீகிற்கு ஆதரவான ஆங்கில வாரப் பத்திரிகைகள் எனக்கு வருகின்றன. அவற்றை வேதனையுடன், ஆனால் ஒழுங்காக வாசித்து வருகிறேன். முஸ்லிம் லீக் இயக்குவிக்கும் முஸ்லிம்களின் மனத்தை அறிந்து கொள்ளுவதற்காகவே அவற்றை நான் வாசிக்கிறேன். இவ் வாரப் பத்திரிகைகள், உண்மையைத் திரித்துக் கூறி காங்கிரஸையும், காங்கிரஸ்காரர்களையும், ஹிந்துக்களையும் பற்றி அவதூறு செய்யாத வாரமே கிடையாது என்றே எனக்குத் தோன்றுகிறது. இப் பத்திரிகைகளில் ஒன்று, ஹிந்து மதத்தை மிகவும் கொடுமையாகத் தாக்கியிருப்பதைக் கண்டே நான் இவ் வரிகளை எழுதுகிறேன். அக் கட்டுரையின் ஒரு பகுதியை இதோ பாருங்கள்:

''ஹிந்து மதம் இந்தியாவின் மாபெரும் சாபத்திடாகும். அது சகிப்பின்மையையும் ஏற்றத்தாழ்வையும் அடிப்படையாகக் கொண்டது. ஒருவன் தன்னை ஹிந்து எனச்சொல்லிக்கொள்ளுவது, தான் பிற்போக்கானவன், குறுகிய மனம் உடையவன் என்று ஒத்துக்கொள்ளுவதாகும். யோக்கியப்பொறுப்பு, உண்மை, பண்பாடு, ஆழ்ந்த யோசனையுள்ள எம் மனிதனும், ஹிந்து மதம் என்ன, அது எதைக் குறிக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால், தன்னை ஹிந்து என்று சொல்லவோ, இப் பண்பாடற்ற பூர்வ காலக் காட்டுமிராண்டி மனிதரின் மதத்தைத் தழுவவோ மாட்டான். மதம் எனப்படும் இது, பண்பின்மையை அடிப்படையாகக் கொண்டது. இந்தத் தொண்ணூற்றேழு சத விகித மக்கள், மீதி

யுள்ள மூன்று சத விகிதத்தினருக்கும் பணி செய்ய மாத்திரமே தகுதியுள்ள வர்கள். இவர்கள் பரிசுத்தமற்றவர்கள், அழுக்கடைந்தவர்கள் என்று இவ் வரிய மதத்தின் தேவர்களாலும் தேவதைகளாலும் விதிக்கப்பட்டுள்ள நிலையை வேறு வார்த்தையால் விவரிக்க முடியாது....இந்தியாவின் நலனுக்கும் நல்வாழ் வுக்கும் ஆபத்தான ஹிந்து மதத்தை முழுதும் தகர்த்து நாசமாக்கத்தக்க குண்டுகளைத் தங்கள் மனமாகிய பட்டறைகளில் தயார் செய்யும்படி நாம் மாணவர்களுக்கு யோசனை கூறுகிறோம்."

இக் கட்டுரை வேறு பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட் டது என்று சொல்லமாட்டார்கள் என நம்புகிறேன். இது ஹிந்து மதத்தை இகழ்வதற்காக எழுதப்பட்டது. இப் பத்திரிகை, காயிதே ஆஜம் ஆரம்பித்ததாகும். லீகின் கௌரவ காரியதரிசி நவாப்ஜாதா லியாகத் அலிகானின் மேற் பார்வையில் இது நடந்து வருகிறது. எனினும், அவர்கள் இக் கட்டுரையைப் பார்த்திருக்கமாட்டார்கள் என்றே கற்பனை செய்துகொள்ளுகிறேன்.

பாகிஸ்தானில் ஹிந்துக்களுடைய நிலைமை எப்படி இருக் கும்? காட்டுமிராண்டி என்று அவர்கள் நசுக்கப்படுவார்களா? அப் பத்திரிகைகளில் மறு கட்சியைப் பற்றி நிதானமாகச் சிந்திக்க முயற்சியே எடுத்துக்கொள்ளப்படவில்லை. இம்மாதிரிக் கொள்கை இரு சமூகங்களுக்கிடையிலும் மனக்கசப்பையும் பகை யையுமே வளர்க்கும். வாதித்தும், இதமாகப் பேசியும் இசை யும்படி செய்யாமல் சண்டையினாலும் பலாத்காரத்தாலும் முடிவு செய்ய வேண்டும் என்றால், நான் சொல்லுவதற்கு ஒன்றுமே யில்லை. காயிதே ஆஜமின் சொற்பொழிவுகளிலிருந்து, ஹிந்துக் களுடன் அவருக்கு வருத்தம் ஒன்றுமில்லை என்று தெரிகிறது. அவர்களுடன் சமாதானமாக வாழவே அவர் விரும்புகிறார். அப்படியானால், முஸ்லிம் லீகின் கொள்கைகளையும், திட்டங்களை யும் பிரதிபலிக்கும் பத்திரிகைகளில், மனிதர்களையும் விஷயங் களையும் இன்னும் சற்று அதிக நீதியுடன் மதிப்பிடும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

— 'ஹரிஜன்' – 8—3—1942

# 37

# விஷம் நிறைந்த பதில்

நான் விடுத்த வேண்டுகோளுக்குக் காயிதே ஆஜம் கொடுத்த விடையை வாசித்தேன். அது என்னை ஆழ்ந்த வேத னைக்குள்ளாக்கியது. இதைவிடச் சிறந்த பதிலை அவரிடமிருந்து நான் எதிர்பார்த்தேன். அதைத் திரும்ப முழுவதும் இங்கு எழுதுவது இன்னும் அதிக மோசமாகிவிடும். அது முழுவதும் விஷமயமாக இருக்கிறது. தேவையான சந்தர்ப்பங்களில், எந்தக்

கட்சியையும், எந்த மனிதரையும் கண்டிக்க நான் தயங்குவதில்லை என்று காயிதே ஆஜமுக்குத் தெரியும். முஸ்லிம் அல்லாதவர்களின் பத்திரிகைகளில் வெளியான தகுதியற்ற கட்டுரைகளை, நான் பன்முறையும் கண்டித்திருக்கிறேன்.

துன்புறுத்தும் அக்கட்டுரையை எழுதியவர் யார் என்று எனக்குத் தெரியாது. அவர் ஹிந்துவானால், காயிதே ஆஜமுடைய ஆதரவு இன்னும் மோசமாகிறது. ஆதரவளிக்கத் தகாததற்கு ஆதரவு கொடுக்க, காயிதே ஆஜம் முன்வந்ததைக் குறித்து வருந்துகிறேன். ஆழ்ந்த உணர்ச்சிகளைப் புண்படுத்துவதற்காக எழுதிய கட்டுரை ஒன்றை, எதிர்பாராத விதத்தில் ஆதரிப்பது ஒரு நல்ல அறிகுறியல்ல.

—'ஹரிஜன்' – 22—3—1942

# 38

# சுழலும் ஆட்சி

**கேள்வி:** சமூகச் சிக்கலைத் தீர்க்க, ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்ட இரு பிரிவுகளாக ஏன் மக்களை பிரிக்கக்கூடாது? ஒன்றில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகளும், மற்றொன்றில் ஹிந்துக்கள், சீக்கியர், தாழ்த்தப்பட்டோரும் இருக்க வேண்டும். முதல் பிரிவினர் ஐந்தாண்டுகளுக்குத் தேர்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் ஆட்சி புரியட்டும். இரண்டாம் பிரிவினர் பின்பு ஆட்சி புரியட்டும். இப்போது இருக்கும் அவநம்பிக்கையை இது தீர்க்காதா? சிற்றரசர்களின் சமஸ்தானங்கள் சம்பந்தமாக, தேர்ந்தெடுத்த மன்னர் சபை ஒன்று எல்லாச் சுதேச நாடுகளையும் ஆளும் பொறுப்பை ஏற்கக்கூடாதா?

**பதில்:** காகிதத்தில் படிப்பதற்கு உங்கள் கேள்வி நன்றாக இருக்கிறது. ஆனால், அனுபவத்தில் உங்கள் யோசனை முறிந்துவிடும். ஆட்சி புரிவது, மனத்தில் நினைப்பதுபோல் அவ்வளவு எளிதானதல்ல. ஆயுதம் தாங்கிய அதிகாரத்தின் கையில் லகான் இருந்தால், உங்கள் யோசனை ஒரு விளையாட்டுக் கருவி போல் வேலை புரியலாம். அது, நமது ஆட்சியாக இராது. லகானை இழுப்பவர்தான் உண்மையில் ஆட்சி புரிவார்கள். அது பழைய முறை. நான் காட்டும் அகிம்சை நெறி அதைவிட மேலான முறையாகும். இரு முறைகட்கும் முதலில் அந்நிய ஆதிக்கத்தின் ஒவ்வொரு அறிகுறியும் ஒழிக்கப்பட வேண்டும். பின்புதான், நாம் நமது திறமையையும் திறமையின்மையையும் நன்கு அறிவோம். அந்நிய அல்லது பிற ஆதிக்கங்களின் விலங்குகளைக்

களைந்து சுதந்திரமாக இருக்கும்போது, அன்றுடம் கிளம்பும் பிரச்னைகளுக்கு என்ன செய்வதென்று நமக்குத் தெரியும். நீங்கள் சொன்ன சுத்தமான வழியில் நாம் ஆளப்படமாட்டோம். அப்போது வாளோ அல்லது பகுத்தறிவோதான் மத்தியஸ்தம் செய்து வைப்பதாக இருக்கும்

— 'ஹரிஜன்' - 10—5—1942

# 39

# முஸ்லிம் லீகின் முட்டுக்கட்டை

"முதலில் முஸ்லிம்களுடன் சமாதானம் செய்துகொள்ளாமல், விடுதலைக்காக ஒரு பொதுஜன இயக்கத்தை ஆரம்பிக்க நீங்கள் எப்படி நினைக்கலாம்?" என்று பல முஸ்லிம்கள் கேட்கின்றனர். அவர்களுடைய கடிதங்கள் என்னிடம் வந்து குவிந்திருக்கின்றன.

ஒரு காலத்தில் இந்த நிருபர்களைப் போல் நான் நினைத்தது உண்டு. ஆனால், முஸ்லிம்களின் மனத்தை நான் இச்சமயத்தில் கவரமுடியாது என்பதைக் காண்கிறேன். முஸ்லிம் லீக் எனக்குத் தடையாக இருக்கிறது. லீக் பத்திரிகைகளை வாசிக்க முயல்கிறேன். லீக் எண்ணத்தை பிரதிபலிக்கிற அளவுக்கு அவை அதை ஒருவாறு படம் பிடித்துக் காட்டுகின்றன. நான் முற்றிலும் நம்பத் தகுதியற்றவன் என்று அவை கருதுகின்றன. கிலாபத் நாட்களில் நான் செய்த பணிகூட அவர்களுக்கு விபரீதமான அர்த்தத்தைக் கொடுக்கிறது. இது நிலைக்காத, தாற்காலிகமான ஒரு நிலை என்பது எனது தெளிவான அபிப்பிராயமாகும். முஸ்லிம்களின் எந்த லட்சியத்திற்காவது அல்லது எந்த முஸ்லிமுக்காவது ஏதாவது ஒரு தீமையாவது விளைவித்ததாக எனக்கு நினைவில்லை. இன்னும் எனக்குப் பல முஸ்லிம் நண்பர்கள் இருக்கின்றனர் என்பதைக் குறித்து இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

முஸ்லிம்களின் நம்பிக்கையின்மையை எப்படி நீக்குவதென்று எனக்குத் தெரியவில்லை. என்னைக் குறை கூறுவோர், "பாகிஸ்தான் கொடுத்து விடுங்கள்" என்கிறார்கள். "கொடுப்பதற்கு அது என் கையில் இல்லை" என நான் பதில் கூறுகிறேன். பாகிஸ்தான் கோரிக்கை நியாயமானது என்பதில் எனக்குத் திருப்தி ஏற்பட்டால், லீகுக்குத் தோள் கொடுத்து அதற்காக நான் உழைப்பேன். ஆனால், எனக்கு அவ்விஷயமாகத் திருப்தி ஏற்படவில்லை. என் மனத்தை மாற்றக் கூடுமானால் நல்லதே. அதன் முழுக் கருத்துகளையும் ஒருவரும் இதுவரை எனக்குக் கூறவில்லை. பாகிஸ்தானை எதிர்க்கும் பத்திரிகைகள் விவரிப்

பவை, நினைப்பதற்கும் முடியாத அளவு பயங்கரமாக இருக்கின்றன. எனினும், அவற்றை எதிரிகளிடமிருந்து நான் ஏற்க முடியாது. ஆதரிப்பவர்களுக்குத்தான் அவர்களுடைய விருப்பமும், கருத்தும் தெரியும். நான் கோருவது அத்தகைய விளக்கமேயாகும். பகிஸ்தான்வாதிகள், எதிர்ப்பவர்களின் மனத்தை மாற்றவே விரும்புகின்றனர் என்பது நிச்சயமே; பலாத்காரமாகத் தங்கள் கோரிக்கையைத் திணிக்க விரும்பவில்லை. ஆனால், எதிர்க்கட்சியை நட்பு முறையில் சந்தித்து அவர்களுடைய மனத்தை மாற்ற எப்போதாவது முயன்றார்களா? என்னை விட்டுவிடுங்கள். காங்கிரஸ், தனக்குத் திருப்தி ஏற்படுமாயின் தன் மனத்தை மாற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்பது நிச்சயமாகும்.

ஆனால், இடைக் காலத்தில் நான் என்ன செய்வது? பிரிட்டிஷ் தளையினின்றும் விடுதலை பெற்றால், யுத்தத்தில் பயன்படத் தக்க வழியில் இந்தியா கலந்துகொள்ள இதுதான் சமயம் என்று நான் உணருகிறேன். மூன்று நூற்றாண்டுகளாக இன்பமான வேட்டை நிலமாயிருந்த இந்தியாவைக் கொடுத்துவிட பிரிட்டிஷாருடைய விருப்பமின்மையைத் தவிர, அத்தகைய விடுதலைக்கு வேறொரு தடையும் இல்லை என்பது உண்மை. ஏகாதிபத்தியவாதிகள், இந்தியாவை விட்டுவிட்டால், யுத்தத்தையே நிறுத்தி விடலாமே என்கின்றனர். விஷயம் அப்படியானால், இந்த யுத்தமெல்லாம் எதற்கு? சண்டையின் மூலகர்த்தாக்கள் ஜெர்மனியும் பிரிட்டனும்தான். இருவருக்குமிடையில் மறைவாக இருந்து வரும் இலக்கு இந்தியாவா? இதெல்லாம் வெறும் யூகம் என்பது எனக்குத் தெரியும். உண்மை சீக்கிரத்தில் வெளியாகும். சிந்திக்கும் இந்தியர்கள் தங்களுடைய காலத்தை வீணக்க முடியாது. அனைவரும் இல்லாவிட்டாலும் பெரும்பாலோராவது, எந்தத் துன்பத்தையும் சகிக்கத் தயாராக இருந்தால், பிரிட்டிஷ் உடைமையாக இந்தியாவை இனி வைத்திருக்க முடியாதென்பதை பிரிட்டிஷ் அதிகாரிகள் நன்கு உணர்ந்து கொள்ளுவார்கள். தேவையான அத்தனை பேர் இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களுடைய கொள்கை எதுவாக இருப்பினும், அவர்கள் அகிம்சை நெறியின்படி நடக்க வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. இந்தப் போர், இந்தியா முழுவதும் உள்ள மக்களின் நலனை அடிப்படையாகக்கொண்டது. பரம ஏழை இந்தியரைவிடப் போர் புரிபவர்களுக்கு அதிகம் ஒன்றும் கிடைக்காது. என்ன கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும், அந்நிய ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்றே அவர்கள் போர் புரிவர்; ஆதிக்கம் பெறுவதற்காக அல்ல.

பின்னர் என்ன நடக்கும்? அது, இங்கிலையை எப்போதாயினும் அடைந்தால், எல்லாம் வல்ல பிரிட்டன் போன பின் நாம் எப்படி நடந்துகொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்திருக்கும். நாம் நமக்குள் சண்டையிடலாம், அல்லது சச்சரவுகளை ஒழுங்கு செய்து, மக்களுக்குப் பொறுப்பான ஆட்சி நிறுவ ஒன்றுபட

லாம். அது குடியரசுத் திட்டமாகவோ, கலப்பற்ற கொடுங்கோன்மை ஆட்சியாகவோ, அல்லது ஒரு சிலரின் ஆட்சியாகவோ இருக்கலாம்.

அது எப்படியாயினும், பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளுவதென்ற பேச்சே இல்லை. முக்கியக் கட்சிகளுக்குள் உடன்படிக்கை ஏற்பட்டால்தான், முதற்படியாக காங்கிரஸுக்கும் லீகுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டால்தான், அத்தகைய ஆட்சிகளில் ஒன்று சாத்தியமாகும். ஆனால், நான் அறிந்தவரையில் அத்தகைய ஒப்பந்தம் ஏற்படுவதாகத் தெரியவில்லை.

ஆகையால், இந்தியாவை அதன் விதிக்கு விட்டுவிட்டு பிரிட்டிஷார் தங்களுடைய ஆட்சியை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற ஒன்றுதான், பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் நாம் செய்துகொள்ளக்கூடிய ஒப்பந்தமாகும். பிரிட்டிஷ்காரர்கள் போய்விடுகிறார்கள் என்று வைத்துக்கொண்டால், பிறகு அரசாங்கம் இராது. பிரிட்டிஷ் அல்லது பிற அரசியல் திட்டங்களும் இரா. ஆகையால், மத்திய அரசாங்கமும் இராது. ராணுவ சக்தி வாய்ந்த ஒரு கட்சி தன் ஆட்சியை அமைத்து, மக்கள் பணிந்துவிடுவார்களாயின் அதை இந்தியாவின் மேல் சுமத்தலாம். முஸ்லிம்களும் பாகிஸ்தானைப் பிரகடனம் செய்யலாம். எவரும் அவர்களை எதிர்க்காமல் இருக்கலாம். ஹிந்துக்களும் இவ்வாறே செய்யலாம். சீக்கியர், தாங்கள் வசிக்கும் இடங்களில் தங்களுடைய ஆட்சியை நிறுவலாம். இவை போன்ற சாத்தியக் கூறுகளுக்கு எல்லையே இல்லை. இவ்வளவு உதவாக் கற்பனைகளுடன் இன்னும் ஒரு யோசனையையும் கூறுகிறேன். நாட்டில் சிறந்த, கட்டுக்கோப்பான கட்சிகளான காங்கிரஸும் லீகும் ஒரு சமரசம் செய்துகொண்டு எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய தாற்காலிக அரசாங்கத்தை அமைக்கலாம். அதன் பின், ஒழுங்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை நிறுவப்படலாம்.

இந்த இயக்கத்தின் நோக்கம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, பிரிட்டிஷ் ஆதிக்கத்தை மாற்றுவதே. அவ்வின்ப நிகழ்ச்சி நேர்ந்து, உறுதியான ஆட்சியும் அதைத் தொடருமானால், அது கட்டாயமாக யுத்தத்தை அகிம்சை நெறியில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரும். எப்படியும், இந்த யுத்தத்தில் இந்தியா வேறு எந்தவிதமான பலத்தையும் காட்ட முடியாது. பாகிஸ்தானோடு சுயேச்சை இந்தியாவிலும் நம்பிக்கையுள்ள முஸ்லிம்கள் ஏன் அத்தகைய போராட்டத்தில் சேரக்கூடாது? இதற்கு மாறாக, பிரிட்டிஷாரின் உதவியினால், பிரிட்டிஷாரின் ஆதரவின் கீழ் பாகிஸ்தானைச் சிருஷ்டிப்பதில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தால், அது வேறு கதையாகும். எனக்கு அதில் இடமில்லை.

—'ஹரிஜன்' – 12—7—1942

# 40

# முதலில் இங்கிலீஷ்ஸ்தானை அகற்றுவோம்!

'ஹரிஜனி'ல் வந்த என் கட்டுரைக்குக் காயிதே ஆஜமின் பதிலைக் கவனத்துடன் வாசித்தேன். அவர் கூறுகிறபடி, இந்தியாவிலிருந்து ஒரு பகுதியைப் பிரித்தெடுத்து தனி ராஜ்யமாக உருவாக்குவதே பாகிஸ்தானமாகும். நேற்று பாகிஸ்தான் எந்த ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்ததோ, அதனுடன் இச்சுதந்திர ராஜ்யம் போருக்குப் போகலாம். மற்ற நாடுகளுடன் அது ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம். இவை எல்லாவற்றையும் அது செய்யலாம்; ஆனால், மற்றவர்கள் விரும்பிச் சம்மதித்ததனால் அல்ல.

எனினும், சம்மதத்தின் பேரில் இவையெல்லாம் நடக்க வேண்டும் என்று அவர் கருதுவதாகத் தெரியவில்லை. ஏனெனில், "பாகிஸ்தான் முஸ்லிம் இந்தியாவின் அசைக்க முடியாத நம்பிக்கை; அந்த லட்சியத்தை அடைவதற்கு நாங்கள் யாருடைய தயவையும் எதிர்பார்க்கவில்லை" என்று அவர் சொல்லுகிறார். இம்மாதிரி நிலையில், எப்படி ஒருவர் உதவி செய்கிறேன் என்று அவரிடம் சொல்ல முடியும்?

ஆனால், பின்னர் அவர் எனக்கு நம்பிக்கை ஏற்படும்படி செய்திருக்கிறார். "கௌரவமான ஒப்பந்தத்திற்கு உங்கள் உண்மையையும் கபடமின்மையையும் காட்டுங்கள்" என்கிறார் அவர். அவ்விரண்டையும் காட்டத்தான் நான் அந்தக் கட்டுரையை எழுதினேன். அதைக் காயிதே ஆஜம் எதிர்த்திருக்கிறார். தன் செயல், பேச்சு, எழுத்து இவை மூலமல்லாது, வேறு எப்படித்தான் ஒருவன் தன் நேர்மையையும் உண்மையையும் காட்ட முடியும்?

எனக்குள்ள எல்லைகளை நான் சொல்லுகிறேன். வெறும் ஹிந்து என்ற முறையில் மட்டும் நான் பேச முடியாது. என் ஹிந்து மதம் எல்லா மதங்களையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இந்தியன் என்ற முறையில்தான் நான் பேச முடியும். மேலே விவரித்தது போல பாகிஸ்தான், நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட அவரது கொள்கையாயின், அது போலவே பிரிக்கப்படாத இந்தியா, நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்ட எனது கொள்கையாக இருக்கிறது. அதனால்தான் இந்த முட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், இன்று பாகிஸ்தானுமில்லை, ஹிந்துஸ்தானுமில்லை; இங்கிலீஷ்ஸ்தானே இருந்து வருகிறது! ஆகையால், இந்தியா முழுவதற்கும் நான் கூறுவதும் இதுதான்: 'முதலில் இந்தியாவை ஆதியில் இருந்தபடி ஹிந்துஸ்தானக மாற்றுவோம்.

பிறகு, நம்மிடையுள்ள எல்லாப் போட்டி உரிமைகளையும் சரிப் படுத்திக்கொள்ளலாம்.' இது தெளிவாக இருக்கிறது அல்லவா? இந்தியாவை அதன் மக்களுக்குத் திருப்பிக் கொடுத்தபின், மத்திய அரசாங்கம் இராது. ஜனப்பிரதிநிதிகள் அதை உரு வாக்க வேண்டும். அது ஒரு ஹிந்துஸ்தானாகவும் இருக்கலாம், அல்லது பல பாகிஸ்தான்களாகவும் இருக்கலாம்.

காயிதே ஆஜம் உண்மையில் ஒப்பந்தம் செய்ய விரும்பி னல், நான் அதைவிட அதிகமாக விரும்புகிறேன். காங்கிரஸும் அவ்வாறே விரும்புகிறது. அவருடைய பதில், அவர் சமரசத்தை விரும்பவில்லை என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றது. இதைச் சொல்லுவதற்காக அவர் என்னை மன்னிக்க வேண்டும். அவர் சமரசத்தை விரும்பினல், காங்கிரஸ், லீக் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து யோசித்து முடிவு காணும் வரை பிரியலாகாது என்று காங்கிரஸ் தலைவர் சொல்லும் யோசனையை ஏன் ஏற்கக் கூடாது? இதில் எத்தகைய தவருவது, நேர்மைக் குறைவாவது இருக்கிறதா?

—'ஹரிஜன்' – 26—7—1942

பகுதி பன்னிரண்டு

# சுதந்திரத் தருவாயில்

[1942 ஆகஸ்டில் தலைவர்கள் யாவரும் சிறையில்] அடைக்கப்பட்டதன் காரணமாக நாடெங்கும் நடந்த போராட்டத்திற்குப் பிறகு, ஐரோப்பாவில் ஹிட்லர் படைகள் தோல்வியடைந்த பின்னர், அரசாங்கம் 1945-இல் எல்லாத் தலைவர்களையும் விடுதலை செய்தது. அப்பொழுது வைஸ்ராயாக இருந்த லார்டு வேவல், காங்கிரஸும் முஸ்லிம் லீகும் சேர்ந்த இடைக்கால சர்க்காரை அமைக்க சிம்லாவில் பேச்சு நடத்தினர். முஸ்லிம் லீக் தலைவர் ஸ்ரீ ஜின்னாவின் பிடிவாதப் போக்கினால் அப்பேச்சு முறிந்தது. முஸ்லிம் லீக், பாகிஸ்தான் வேண்டும் என்று கூறி முஸ்லிம்களிடையே வெறியையும் ஆவேசத்தையும் நாடெங்கும் பரப்பிவந்தது.

பின்னர் ஹிரோஷிமா, நாகசாகியில் அமெரிக்கர் அணுகுண்டு போட்டதால் போரில் ஜப்பான் சரணாகதியடைந்துவிட்டது. யுத்தம் முடிந்துவிட்ட போதிலும் பிரிட்டிஷ் ஆட்சி இனி மேலும் இந்தியாவில் தொடர்ந்து நடந்து வர முடியாது என்பதைப் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிந்துகொண்டது. அதனால், இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்கு என்று பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கோஷ்டி ஒன்றை லார்டு பெதிக் லாரன்ஸின் தலைமையில் இந்தியாவிற்கு அனுப்பினார்கள். டில்லியில் ராஜீயத் தலைவர்களுடன் இந்த கோஷ்டி பேச்சு நடத்தியது. இவர்கள் வெளியிட்ட திட்டத்தை, அதிக விவாதத்திற்குப் பிறகு காங்கிரஸும் லீகும் ஏற்றுக்கொண்டன. அதன்படி முழு அதிகார மாற்றத்திற்கு முன்னால் இடைக்கால தேசீய சர்க்காரை அமைப்பது என்பது பார்லிமெண்டு கோஷ்டியின் திட்டத்தின் முக்கியாம்சம். ஸ்ரீ ஜின்னாவும் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்ட போதிலும், பிறகு இடைக்கால சர்க்காரில் சேர முடியாது என்று மறுத்துவிட்டார். அதன் பேரில், திட்டத்தை ஏற்றுக்கொண்ட காங்கிரஸை, மந்திரி சபை அமைக்கும்படி வைஸ்ராய் அழைத்தார். அதன்படி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு, ஸ்ரீ ஜின்னாவுக்கு அழைப்பை அனுப்பினர். ஸ்ரீ ஜின்னா மறுத்துவிட்டார். ஆகவே, லீகும் தனது போக்கை மாற்றிக்கொண்டு வந்து சேரும் என்ற நம்பிக்கையில், அதற்கு இடம் வைத்து ஸ்ரீ நேரு மந்திரி சபையை அமைத்து, 1946 ஜூலையில் பதவி ஏற்றார்.

இது ஸ்ரீ ஜின்னாவுக்கு ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது. லீக் கவுன்ஸில் கூடி, 'நேரடி நடவடிக்கை' எடுப்பது என்று தீர்மானித்தது. ஆகஸ்டு 16-ஆம் தேதி 'நேரடி நடவடிக்கை' தினம் என்றும் பிறகு ஜின்னா அறிவித்தார். அச்சமயம் வங்காளத்தில் முஸ்லிம் லீக் மந்திரி சபை ஸ்ரீ சுஹ்ரவார்த்தியின் தலைமையில் இருந்தது. ஆகஸ்டு 16-ஆம் தேதி இந்தியாவுக்கே மகாபடுமோசமான நாளானதோடு, கல்கத்தாவில் எங்கும் படுகொலைகள் நடந்தன. நூற்றுக் கணக்கில் மாண்டார்கள்; பல்லாயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தார்கள். எங்கும் கொள்ளைகளும் தீயிட்டுப் பொசுக்குவதும் மிகுந்தன. கல்கத்தாவில்

மாத்திரமேயன்றி, இந்தியாவில் அநேக இடங்களில் இப்படுகொலைகளும் அட்டூழியங்களும் நடந்தன.

லீகின் 'நேரடி நடவடிக்கை' யினாலும், அதற்கு முன்பும் பின்பும் நடந்த கலவரங்களின் போது மனவேதனையுடன் மகாத்மா காந்தி பேசிய, எழுதியவையே இப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.]

# 1
# இ. தே. சே. யில் சமூக ஒற்றுமை

கிழக்கு ஆசியாவில் ஆஸாத் ஹிந்த் இயக்கம் பல பிரச்னைகளைத் தீர்த்துவிட்டது. அவைகளில் ஒன்று, மிகப் பெரியதும், சிக்கலானதுமான சமூக ஒற்றுமைப் பிரச்னை. 1942–இல் இந்த இயக்கம் ஆரம்பமான காலத்திலிருந்தே இதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வந்தபோதிலும், நேதாஜீ சுபாஷ் சந்திரபோஸ்* வந்த பிறகுதான் அது உண்மையில் நிறைவேறியது.

---

* நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்: (1896–1945)-1945-இல் ஜப்பானுடன் யுத்தம் முடிந்தவுடனேயே நேதாஜி போஸும் திடீரென மறைந்துவிட்டார். மலாயாவிலிருந்து ஜப்பானுக்கு அவர் சென்ற விமானம் விபத்துக்குள்ளாகி அதில் அவர் இறந்துவிட்டார் என்று கூறப்பட்டது. ஆனால், அவர் இறந்திருப்பார் என்பதை மக்கள் சுலபத்தில் நம்பிவிடவில்லை. எனினும், பின்னல் கிடைத்த ஆதாரங்களிலிருந்து அவர் இறந்தது உண்மையே என்ற முடிவுக்கு வர வேண்டியதாயிற்று. இந்திய மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருந்த தலைவரான ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் 1896-இல் கட்டாக்கில்,கல்வியறிவும் தெய்வ பக்தியும் மிகுந்த ஒரு குடும்பத்தில் பிறந்தார். 1913-இல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, ஆன்மிக ஞானம் பெறும் ஆர்வத்தில் ஹிமாலயத்திற்குப் போய் விட்டார். ஆயினும், திரும்பி வந்து மீண்டும் படிக்கலானார். இவர் சிறந்த அறிவாளியாக இருந்ததால் இவருடைய எதிர்காலத்தைக் குறித்துப் பெற்றோர்கள் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். ஐ. ஸி. எஸ். பரீட்சையில் தேறிவருவதற்காக இவரை இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். பரீட்சையில் தேறியபோதிலும் அதை ராஜிநாமாச் செய்துவிட்டு தாய்நாட்டின் பணியில் ஈடுபடுவதென்று இந்தியாவுக்குத் திரும்பினர். 1921–இல் மகாத்மா காந்தியைப் பம்பாயில் இவர் சந்தித்ததும் காந்திஜியின் சீடராகி விட்டார். சுபாஷ் போஸ் எரிமலை போன்ற தீவிரவாதி. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கம் இவரை நீண்ட காலம் விட்டுவைக்கவில்லை. இவரைக் கைது செய்து மாண்டலே சிறையில் அடைத்துவிட்டது. அங்கே நோயுற்று 1927–இல் விடுதலையானர். அரசாங்கத்துடன் நேரடி நடவடிக்கையில் காங்கிரஸ் இறங்கிவிட வேண்டும் என்று இவர் துடிதுடித்து வந்தார். 1931-இல் மீண்டும் கைதியானர். ஆனல், தேக நிலை மோசமாகி விடவே விடுதலைசெய்துவிட்டனர். பிறகு வியன்னவுக்குப் போய், அங்கே சிகிச்சை பெற்று வந்த ஸ்ரீ வித்தல்பாய் பட்டேலுடன் இவரும் இருந்தார். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் ஹரிபுரா காங்கிரஸுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சியை ஏற்றுக்கொண்டிருந்த சமயம் அது. பின்னர் இவருக்கும் காந்திஜிக்கும் அபிப்பிராய பேதம் உண்டாயிற்று. அடுத்த ஆகஸ்டு இவரே திரும்பவும் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், காந்திஜியின் கருத்தை அனுசரித்து தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். பிறகு காங்கிரஸிற்குள்ளேயே பார்வர்டு பிளாக் என்ற கட்சியை ஆரம்பித்தார்.

இவருடைய தீவிரப் போக்கினல் திரும்பவும் சிறைப்பட்டார். ஆனல், சாகும் வரையில் உண்ணவிரதம் இருக்கப் போவதாகக் கூறியதன் பேரில் இவரை விடுதலை

சின்ன விஷயமேயாயினும் அங்கிருந்த மற்றோர் பிரச்னை, தீண்டாமை. தென் கிழக்கு ஆசியாவில் தீண்டாமை, இந்தியாவில் இருந்ததைப் போன்று இருப்பதைப் போன்று அவ்வளவு கடுமையானதாக இல்லை. என்றாலும், நேதாஜி வந்த பிறகு, இந்திய தேசிய சேனை முகாம்களிலும் அலுவலகங் களிலும் இந்தியருக்கு அளித்த எல்லாப் பயிற்சிகளின் மூலம் இத்தீமைக்கும் பரிகாரம் தேடப்பட்டுவிட்டது.

இந்த நோக்கங்கள் நிறைவேறும்படிச் செய்வதற்கு மேற்கொண்ட வழிகளையும் முறைகளையும் கூறுவது பெரும் கதையாகும். எனினும், இந்நோக் கங்களில் வெற்றி பெற்றதற்கு மூன்று முக்கியமான காரணங்களைக் கூறலாம், முதலாவது காரணம், ஆளும் மூன்றாமவர் இல்லாதிருந்தது; இரண்டாவது, நேதாஜி இப்பிரச்னைகளில் நேரிடையாகக் காரியங்களைச் செய்தது; மூன்றாவது, இப்பிரச்னைகளை அலட்சியமாகக் கருதுவதாக நேதாஜி காட்டிக்கொண்டது.

சமூக ஒற்றுமையும் தீண்டாமை ஒழித்ததும் எவ்விதம் ருஜு வாயின என்பதை அறியவே இப்பொழுது மக்கள் விரும்புவார்கள். அதற்காக தீவிரமான ஆஸாத் ஹிந்த் ஸ்தாபனத்தைச் சேர்ந்த படை வீரர் பகுதியினர், மற்றவர்கள் ஆகியோரைப் பற்றிக் கூறுகிறேன்.

கிழக்கு ஆசியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி போய்விட்டதும், இந்திய ரிடையே இருந்த வகுப்பு வித்தியாசமும் மறைய ஆரம்பித்தது. சமூக ஒற்றுமை யின் முதல் காட்சி 1942 ஜூனில் பாங்காக்கில் காணப்பட்டது. கிழக்கு ஆசி யாவிலிருந்த இந்திய சமூகத்தின் பிரதிநிதிகள் 120 பேர் ஒரு மகாநாட்டிற்காக அங்கே கூடியிருந்தார்கள். இவர்களில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்தவர் ஆகியோர் இருந்தனர். இவர்கள் யாவரும் ஒன்றாகத் தங்கி யிருந்து, ஒன்றாகச் சாப்பிட்டு, இந்திய சமூகத்தை ஒரே கொடியின் கீழ் ஒரே ஸ்தாபனமாக அமைப்பதென்று ஒன்றுபட்டுத் தீர்மானித்தார்கள்.

பின்னர் 1943 பிப்ரவரியில் காந்திஜி தமது சரித்திரப் பிரசித்தி பெற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் பொதுக் கூட்டங்கள் நடந்தன. எல்லா மதங்களையும், சாதிகளையும், வகுப்புகளையும் சேர்ந்த ஹிந்துக்கள் அவற்றில் ஒன்று கூடி, மகாத்மாவை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டனர். காந்திஜி நீடு வாழ வேண்டும் என்று கோயில்கள், மசூதிகள், குருத்துவாரங்கள், சர்ச்சுகள் ஆகியவைகளிலெல்லாம் பிரார்த்தனைகள் நடந்தன. இது பரவசப்படுத்தும் அற்புதமான சமூக ஒற்றுமைக் காட்சியாக இருந்தது.

---

செய்து விட்டனர். எனினும், இவருக்குப் பலத்த போலீஸ் காவல் இருந்தது. இரண் டாவது யுத்தம் ஆரம்பமானதும் அந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள எண்ணினார். திடீரென்று வீட்டிலிருந்து மறைந்துவிட்டார். பிறகு ஜெர்மனியில் இருக்கிறார் எனத் தெரிந்தது. அங்கிருந்து ஜப்பானுக்குப் போய், பிறகு மலாயாவுக்குச் சென்று, இந்திய தேசிய சேனையைத் திரட்டினார். அப்படையைக்கொண்டு இந்தியாவை அந்நியரிடமிருந்து மீட்க என்று இந்திய எல்லையில் பிரிட்டிஷ் படைகளுடன் போராடி னார். அச்சமயம் ஜப்பான் தோல்வியடைந்துவிடவே இவரும் மலாயாவிலிருந்து ஜப்பானுக்குச் சென்ற வழியிலேயே விமான விபத்தில் காலமானார் எனக் கூறப்படு கிறது. நேதாஜி இவ்விதம் இந்திய விடுதலைக்கென்று திரட்டிய படையினரின் சாதனையைக் குறித்தே மேலே கண்ட கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது.

பிறகு நேதாஜி வந்து சேர்ந்தார். அவர் வந்ததால், சமூகத்திலும் ஸ்தாபனத்திலும் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. ஆயுதங்களைக் கொண்டு இந்தியாவின் விடுதலைக்காகப் போராடுவதற்கு எல்லோரும் படையில் சேர வேண்டும் என்று நேதாஜி கேட்டுக்கொண்டார். நேதாஜியின் இந்த அழைப்பை, ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்தவர், மற்றவர்கள் ஆகிய எல்லோரும் ஏற்றுக்கொண்டு முன்வந்தார்கள்; படையில் சேர்ந்து போரிடுவதற்கும், மற்ற சேவைகளுக்கும் தங்களைத் தொண்டர்களாகப் பதிவு செய்து கொண்டனர்.

இத்தொண்டர்களில் சிலர், ஆஸாத் ஹிந்த் படைக்குப் பின்பலமாக இருந்த ஆஸாத் ஹிந்த் சங்கத்திலும் ஆஸாத் ஹிந்த் அரசாங்கத்திலும் நியமிக்கப்பட்டனர்; மற்றவர்கள், தொண்டர்களில் பெரும்பாலானவர்கள் படையில் சேர்ந்தார்கள். இந்தச் சங்கத்திற்குக் கிழக்கு ஆசியா முழுவதிலும் கிளைகள் இருந்தன. ஒவ்வொரு கிளையிலும் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்தவர் ஆகிய எல்லோரும் ஒன்றுபட்டு வேலை செய்து வந்தனர். பாங்காக், சிங்கப்பூர், ரங்கூன், சைகோன், ஹாங்காங் போன்ற இடங்களில் ஊழியர்கள் அதிகமாக இருந்ததால் அங்கேயெல்லாம் பொதுவான சாப்பாடே இருந்தது. ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களுக்கு என்று தனிச் சாப்பாடு எதுவும் இல்லை. எல்லா மதங்களையும் சேர்ந்தவர்களுக்கும் பொதுவான ஒரே சமையலே இருந்தது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியரும், கிறிஸ்தவரும் ஒன்றாகவே வாழ்ந்து, ஒரே மேஜையில் சாப்பிட்டு, ஒன்றுகூடி வேலை செய்து வந்தனர்.

இந்திய தேசியப் படையிலும் இதேதான் நடந்து வந்தது. ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர், சீக்கியர் யாவரும் ஒரே பாசறைகளில்தான் இருந்தனர், பிராம்மணர்கள் இருந்தார்கள்; ஹரிஜனங்கள் இருந்தனர். மௌல்விகள் இருந்தார்கள்; அஹீர்களும் இருந்தனர். சாதி ஹிந்துக்களும் ஹரிஜனங்களும் ஒரே பாசறையில்தான் இருந்தனர். எல்லா சிப்பாய்களும் ஒன்றாகவே சாப்பிட்டனர். சிப்பாய்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒரேவிதமான சாப்பாடுதான் கொடுக்கப்பட்டது. ஆஸாத் ஹிந்த் சங்கம், ஆஸாத் ஹிந்த் படை ஆகியவைகளின் சாப்பாட்டு விடுதிகளில் மாட்டு மாமிசமும் பன்றி மாமிசமும் தடுக்கப்பட்டுவிட்டன. ஜாட்கா, ஹலால்* என்ற பிரச்னையே இல்லை.

— ராம் சிங் ரவால்.

[குறிப்பு: திரும்பக் கூறப்பட்டது நீக்கப்பட்டதைத் தவிர, மேலே கண்ட கடிதம் அப்படியே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தகவல் பல உண்மைகளை எடுத்துக் காட்டுவதாகவும் இருக்கிறது. இந்தச் சிப்பாய்கள் இந்தியாவுக்குத் திரும்பியிருக்கிறார்கள். அதே தோழமை அவர்களிடம் இன்னும் இருந்து வருமா? இதுவே இயல்பாக எழும் கேள்வி. அது தொடர்ந்து இருந்துவர வேண்டும் - மோ. க. காந்தி]

பம்பாய்: 14—3—'46 —'ஹரிஜன்' – 31—3—1946

* ஜாட்கா என்பது, உணவுக்குக் கொல்லப்படும் ஆடு மாடுகளை ஒரே வெட்டில் கொன்றுவிடுவது. ஹலால் என்பது, குரானில் சொல்லியிருக்கும் முறைப்படி கொன்று மாமிசம் தயாரிப்பது.

# 2

# புனித வாரம்

ஏப்ரல் 6-ஆம் தேதி மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி ஹிந்துஸ்தானியில் பேசியதன் ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

"இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னால், காலஞ்சென்ற சுவாமி சிரத்தானந்தஜி* உயிருடன் இருந்தபோது, ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம் இந்த நாளில்தான் ஆரம்பமாயிற்று. அதை அடுத்த வாரத்தில் ஒரு சரித்திரமே நடந்துவிட்டது. ஒரு கோடியிலிருந்து இன்னுமொரு கோடி வரையில் இந்தியாவின் மக்கள் எல்லோருமே, ஒரே மனிதராக எழுந்தனர். அது முற்றிலும் தானே ஏற்பட்ட ஓர் எழுச்சியாகும்.

"ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அப்போதைக்கு தங்களிடையே இருந்த பேதங்களையெல்லாம் மறந்திருந்த சமயம் அது. அலி சகோதரர்களும் நானும் உடன்பிறந்த சகோதரர்களே போன்று, ஒன்றாக இந்தியா முழுவதும் போய்க்கொண்டிருந்தோம். ஒரே விஷயத்தையே சொல்லிவந்தோம். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை, சுயராஜ்ய செய்தியை மக்களுக்கு அறிவித்தோம். பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பிரார்த்திப்பதற்குப் பதிலாக, கடவுள் ஒருவருக்கு மாத்திரமே எங்கள் பிரார்த்தனையைச் சொல்லிக் கொள்ளுவது என்ற தீர்மானத்திற்கு வந்தோம். ஆகவே, இந்தியாவில் சத்தியாக்கிரகம் பிறந்தது. தேசீய தினத்தில் விரதமிருந்து பிரார்த்தனை செய்வது என்ற வேலைத் திட்டத்தை, அலி சகோதரர்களும் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டனர். ஏப்ரல் 6-ஆம் தேதியும் 13-ஆம் தேதியும் மக்கள் சாப்பிடாமல்

---

*சுவாமி சிரத்தானந்தஜி (1856-1926): ஆரம்பத்தில் மோசமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த இவர், 1882-இல் பெரெய்லியில் சுவாமி தயானந்தரைச் சந்தித்ததிலிருந்து அடியோடு மாறிவிட்டார். அதன்பிறகு மிகச் சிறந்த துறவு வாழ்க்கையை நடத்தலானார். திக்கற்றவர்கள் ஆயிரக்கணக்கானவருக்கு உதவி செய்து வந்தார். சமூக சீர்திருத்தத்திற்காகவும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகவும், நாட்டின் விடுதலைக்காகவும் அல்லும் பகலும் பாடுபட்டு வந்தார். சுவாமிஜி, ஹிமாலயத்தில் காங்கிரி என்ற இடத்தில் 1902-இல் ஒரு குருகுலத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். ஆரம்பத்தில் 20 குழந்தைகளே அதில் இருந்தனர். பக்கத்தில் புலிகளின் நடமாட்டமும் இருந்து வரும். அந்தக் குருகுலம் இன்று பிரம்மாண்டமான கட்டிடங்களில் ஒரு சர்வகலாசாலையாக இருந்து வருகிறது. மகாத்மா காந்தி, அவருடைய சேவையையும், அவருடைய குருகுலத்தையும் எப்பொழுதும் போற்றிப் புகழ்வதுண்டு. 1926-இல் ஒரு நாள் அப்துல் ரஷீத் என்ற பைத்தியக்காரன் அவர் மீது மும்முறை சுட்டுக் கொன்றுவிட்டான். இவர் மரணத்தைக் குறித்து ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருமித்து வருந்தி துக்கப்பட்டனர். மற்ற விவரங்களைப் பகுதி 8-இல் காண்க.

விரதமிருந்தார்கள். தாங்கள் எல்லோரும் ஒரே கடவுளின் குழந்தைகள், தாங்கள் பிறந்த நாடான இந்தியாவில் எல்லோரும் ஒன்ருக இருந்து வாழ்ந்து ஒன்ருகச் சாக வேண்டியவர்கள் என்பதையும் உணர்ந்தார்கள். ஆயிரக்கணக்கில்கூட கோயில்களிலும், சர்ச்சுகளிலும், மசூதிகளிலும் பிரார்த்தனை செய்தார்கள். இந்த ஒற்றுமை டில்லியில் உச்சக் கட்டத்தை அடைந்தது. அங்கே ஹிந்துக்களும் முஸ்லிம்களுமாக ஏராளமானவர்கள் ஜும்மா மசூதியில் கூடினர். காலஞ் சென்ற சுவாமி சிரத்தானந்தர் அதில் பேசினர். இந்தியாவின் சரித்திரத்திலேயே அது மகத்தான நாளாகும். அந்நாளைப் பொக்கிஷமாக மதித்து நாம் எல்லோரும் மனத்தில் வைக்க வேண்டும்.

"இப்பொழுது கெட்ட காலத்தில் இருந்துகொண்டிருக்கிருேம். ஹிந்துக்கள், முஸ்லிம்களின் மனம் வேறுபட்டு, வகுப்புத் துவேஷம், சச்சரவு ஆகிய விஷம் எங்கும் பரவியிருக்கிறது. முஸ்லிம்களில் ஒரு பகுதியினர், தாங்கள் தனியான தேசீய இனம் என்று சொல்லிக்கொள்ளவும் ஆரம்பித்திருக்கிருர்கள். அவர்கள் இவ்வாறு கூறிக் கொள்ளுவதன் தத்துவத்தைக் குறித்து இப்பொழுது நான் ஆராயப் போவதில்லை. எனினும், இது என் பகுத்தறிவைத் திகைக்க வைக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்."

(ஸ்ரீ பியாரிலால் எழுதியது)

—'ஹரிஜன்' - 24—4—1946

## 3

# ஒரு புனித யாத்திரை

ஜாமியா மில்லியாவைச் சேர்ந்த பல மாணவர்களும் சில ஆசிரியர்களும், காந்திஜி டில்லியிலிருந்தபோது அவரிடம் வந்து, ஒரு நாளைக்கு தங்கள் ஸ்தாபனத்திற்கும் விஜயமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

இதற்கு காந்திஜி, "ஒரு நாளைக்கு என்பது இப்பொழுதே என்றுதான் ஆகும். இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு உங்கள் ஸ்தாபனத்திற்கு வராமல் நான் திரும்பிப் போய்விடக்கூடாது" என்ருர். ஜாமியா மில்லியாவிலிருந்து வந்திருந்த கோஷ்டியினர் அதிக ஆனந்தமடைந்தார்கள். காந்திஜி வருவதற்கு முன்னலேயே இந்தச் சந்தோஷ சமாசாரத்தைத் தங்கள் சகாக்களுக்குச் சொல்ல ஓடினர்கள். காந்திஜிக்கு வழிகாட்ட பெட்ரோமாக்ஸ் விளக்குகளையும் எடுத்து வந்தார்கள். எதிர்பாராத விதமாக காந்திஜி அங்கே சென்றதால் அங்கெல்லாம் ஒரே குதூகலமாக இருந்தது. அப்பொழுது டாக்டர் ஜாகிர் ஹுசேன்

அங்கே இல்லை; பவால்பூருக்குப் போயிருந்தார். ஆனால், மௌஜீப் சாகிபும் மற்ற ஆசிரியர்களும் இருந்தார்கள். புல் தரை மீது விரிப்புகளை விரித்தனர். திறந்த வெளியில் சந்தோஷ கரமான குடும்பக் கூட்டம் நடந்தது. ஜாமியா மில்லியா, 1920-இல் ஒத்துழையாமை இயக்க ஆரம்ப சமயத்தில் தொடங்கப் பட்டதாகும். அதன் வெள்ளி ஜூபிளி விழாவைச் சமீபத்தில் கொண்டாடப் போகிறார்கள். காலஞ் சென்ற ஹக்கீம் அஜ்மல் கான், டாக்டர் அன்சாரி, அலி சகோதரர்கள் ஆகியோர் நட்ட பதியன்களை, டாக்டர் ஜாகிர் ஹுசேனும் அவருடைய சகாக் களும் அன்போடு கவனித்து வளர்த்திருக்கின்றனர். அவை இப் பொழுது கம்பீரமான மரங்களாக வளர்ந்திருக்கின்றன. இப் பொழுது இந்த ஸ்தாபனத்தின் ஆரம்ப வகுப்புகளில் 200 மாண வர்களும், மத்திய தர வகுப்புகளில் 100 மாணவர்களும், கல்லூ ரியில் 28 பேரும் படிக்கிறார்கள். இவர்களல்லாமல், அறுபது உபாத்தியாயர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்த ஸ்தா பனம் ஒரு பகல் பள்ளிக்கூடத்தையும், பிரசுராலயத்தையும் கரோல் பாக்கில் நடத்தி வருகிறது.

எல்லோரும் அன்பு கனிய வரவேற்றதைக் கண்டு மகிழ்ந்த காந்திஜி, "இக் குடும்பத்தைச் சேர்ந்தவன் நான் என்று சொல் லிக்கொள்ளுகிறேன். முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் வந்த தன் மூலம் இதை நான் நிரூபித்துமிருக்கிறேன்" என்றார்.

ஒரு மாணவர், "ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக மாணவர் கள் செய்யக்கூடியது என்ன?" என்று கேட்டார். காந்திஜிக்கு அதிக விருப்பமான கேள்வி இது. அவர் கூறியதாவது: "இதற் குள்ள வழி மிக எளிதானது. ஹிந்துக்கள் எல்லோருமே காலி களாக மாறி உங்களைத் திட்டினாலும், அவர்களை உங்களின் உடன் பிறந்த சகோதரராக எண்ணுவதை மாத்திரம் நீங்கள் விட்டு விடக்கூடாது. முஸ்லிம்கள் அப்படித் திட்டினாலும், ஹிந்துக்கள் அவர்களை உடன்பிறந்த சகோதரர்களாகவே நினைக்க வேண் டும். இது அசாத்தியமானதா? இல்லை. இது சாத்தியமானதே. தனிப்பட்ட ஒருவருக்குச் சாத்தியமானது, பொது ஜனங்கள் எல்லோருக்கும் சாத்தியமானதே.

"சூழ்நிலை முழுவதும் இன்று விஷ மயமாக இருக்கிறது. பத்திரிகைகள் எல்லா வகையான வதந்திகளையும் பரப்பிக் கொண்டு வருகின்றன. மக்களும் அவற்றை ஆராய்ந்து பாராமல் நம்பி விடுகிறார்கள். இதன் பலனாக பீதி ஏற்படு கிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மனிதத் தன்மையையே மறந்துவிடுகின்றனர். ஒருவருக்கொருவர் காட்டு மிருகங்களைப் போன்று நடந்துகொள்ளுகிறார்கள். எதிர்த்தரப்பார் என்ன செய்தாலும், செய்யாது போனாலும் தான் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டியது மனிதனாக உள்ளவனின் பொறுப்பு. நியா யமாக நடப்பவரிடம் ஒருவர், பதிலுக்கு நியாயமாக நடப்பதாக இருந்தால் அது பேரம் செய்வதே ஆகும். திருடர்

களும் கொள்ளைக்காரர்களும்கூட இதைச் செய்கிறார்கள். ஆகவே, இதில் பெருமை எதுவும் இல்லை. மனிதத் தன்மை, லாப நஷ்டக் கணக்குப் போட்டுப் பார்ப்பதில்லை. தன்னளவில் ஒருவர் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும் என்றுதான் அது விதிக்கிறது. நான் கூறும் புத்திமதியை எல்லா ஹிந்துக்களும் கேட்டுக்கொள்ளுவதாக இருந்தால், அதில்லாவிடில் முஸ்லிம் களாவது நான் கூறுவதைக் கேட்பதாக இருந்தால், இந்தியா வில் அமைதி இருக்கும். கட்டாரிகளினாலோ, தடிகளினாலோ அந்த அமைதியைச் சிதறடித்துவிட முடியாது. பதிலுக்குப் பதில் செய்வது என்பதோ, பதிலுக்கு ஆத்திரமடைவது என் பதோ இல்லாது போய்விடும்போது, கத்தியால் குத்தும் துக்க கரமான வேலையைச் செய்யும் விஷமியும் தானே களைத்துச் சலிப் படைந்து விடுவான். கண்ணுக்குப் புலனாகாத ஒரு சக்தி, குத்து வதற்கு ஓங்கும் அவன் கையையும் தடுக்கும்; அவனுடைய தீய எண்ணத்திற்கு உடன்பட அக் கையும் மறுத்துவிடும். சூரியனை நோக்கி நீங்கள் குப்பைக்கூளங்களை எறியலாம். ஆனால், அத னால் சூரியனின் பிரகாசம் மங்கிப் போய்விடாது. வேண்டிய தெல்லாம், ஒருவரின் ஆன்மாவை நம்பிக்கையிலும் பொறுமை யிலும் வைக்க வேண்டியதே. கடவுள் நல்லவர். தீயவைகளை ஓர் அளவுக்கு மேல் போய்விட அவர் அனுமதிக்கமாட்டார்.

"இந்த ஸ்தாபனத்தை வளர்த்ததில் எனக்கும் ஒரு பங்கு உண்டு. ஆகையால், என் உள்ளத்தில் உள்ளதை உங்கள் முன் னால் பொழிந்துவிட முடிந்தது எனக்கு அதிக ஆனந்தத்தை அளிக்கிறது. ஹிந்துக்களுக்கும் இதையேதான் நான் கூறு கிறேன். உங்களுடைய காரியமே இந்தியாவுக்கும் உலகிற்கும் பிரகாசமான உதாரணமாக விளங்கட்டும்."

(ஸ்ரீ பியாரிலால் எழுதியது)

புது டில்லி, 23-4-'46 —'ஹரிஜன்' - 28—4—1946

## 4

# பெருமையை இழந்துவிட்டது

அகமதாபாத்தைக் குறித்து சர்தார் வல்லபபாய் பட்டேல் அதிகமாகப் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தார். அதன் நகர சபைக்கு அவர் எவ்வளவோ சேவை செய்திருக்கிறார். அந்த அக மதாபாத் இப்பொழுது அதன் பெருமையையெல்லாம் இழந்து விட்டது. கொஞ்ச காலமாக அங்கிருப்போருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாகவே தோன்றுகிறது. இதைக் குறித்து காந் திஜி அளவு கடந்த மனவேதனை அடைந்தார். "அகமதாபாத்தி லுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மனிதத் தன்மையையே அடியோடு இழந்தவர்களாகிவிட்டதாகத் தோன்றுகிறது" என்று

காந்திஜி ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறினர். "அகமதாபாத்தில் செத்திருப்பவர்களெல்லாம், கத்திக் குத்துப் போன்றவைகளினல் உயிர் இழந்துவிட்டவர்கள் அல்ல. தாங்கள் ஒருவர் மீது இன்னொருவர் பாய்ந்துவிடாமலிருப்பதைத் தடுப்பதற்காக அவர்கள், போலீஸ், ராணுவ உதவியைப் பெற வேண்டியிருந்ததுதான் வெட்கக்கேடு. ஒரு தரப்பினர் திருப்பித் தாக்காமல் இருந்துவிடுவார்களானல், கலவரம் தொடர்ந்து நடந்து வராது. இந்தியாவிலிருக்கும் நாற்பது கோடி மக்களில் சில லட்சம் பேர் நியாயமான வழியில் கொல்லப்பட்டு விடுவதானல் என்ன மோசம் வந்துவிடும்? பிறரைக் கொல்லாமல் தாம் சாவது என்பது, கர்ம பூமி-கடமை நாடாகிய-இந்தியாவின் புராணங்களிலும் சரித்திரத்திலும் போற்றப்பட்டு வந்திருக்கிறது. இந்தப் படிப்பினையை நாம் அறிந்து கொண்டுவிட்டால், இந்தியா, உலகத்தில் சுவர்க்கத்தின் பிம்பமாக விளங்கும். உள்துறை மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாய், அகமதாபாத்திற்குப் புறப்படுவதற்கு முன்னல் வந்து என்னைப் பார்த்தார். போலீஸ், ராணுவப் பாதுகாப்பு எதுவுமில்லாமல் கடவுள் ஒருவரின் பாதுகாப்பை மாத்திரம் கொண்டு அந்தத் தீச்சுவாலையைச் சமாளிக்க அவர் அங்கே போக வேண்டும் என்று கூறினேன். அவசியம் வந்தால், காலஞ்சென்ற ஸ்ரீ கணேச சங்கர் வித்தியார்த்தி செய்ததைப் போல, கலகங்களை அடக்கும் முயற்சியில் அத்தீயில் அவர் அழிந்து போகவும் வேண்டும். அகமதாபாத்தில் முஸ்லிம்கள், ஹிந்துக்கள், மற்றவர்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டத்தை ஸ்ரீ மொரார்ஜி கூட்டி, அவர்கள் விரும்பினல் போலீஸையும் ராணுவத்தையும் திருப்பி அழைத்துக்கொண்டு விடுவதாக அவர்களிடம் கூறினர். ஆனல், அவர்களோ, அந்த ஆபத்துக்கு உடன்பட தாங்கள் தயாராயில்லை என்று ஒருமித்துக் கூறிவிட்டனர். இதன் பலனக அங்கே போலீஸும் ராணுவமும் தொடர்ந்து இருந்து வருகிறது."

காந்திஜி அதிக மனவேதனையுடன் மேலும் கூறியதாவது: "கலவரங்கள் அங்கே தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனல், அகமதாபாத்தில் இன்று காணப்படும் அமைதி, மயானத்தின் அமைதியே ஆகும். யாரும் பெருமைப்பட்டுவிடக்கூடிய அமைதியல்ல அது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும், பரஸ்பரம் தாங்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளாமல் இருக்கத் தங்களுக்கு உதவி செய்வதற்காக போலீஸும் ராணுவமும் வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டும் என்றுதான் நான் ஆசைப்படுகிறேன். சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்குப் போலீஸ், ராணுவ உதவியை அவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் வரையில், உண்மையான சுதந்திரம் என்பது வெறும் பேச்சாகவே இருக்கும் என்பதை எச்சரிக்கை செய்கிறேன்."

[ஸ்ரீ பியாரிலால் எழுதியது]

புனு, 9—7—'46

—'ஹரிஜன்' – 14—7—1946

# 5

# மதத்தின் தினுசுகள்

பிரார்த்தனைக் கூட்டத்தில், அகமதாபாத் கலவரங்களைக் காந்திஜி குறிப்பிட்டுக் கூறியதாவது:

"அகமதாபாத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களுக்கு ஏற்பட்டுவிட்ட பைத்தியக்காரத்தனத்தை இன்னும் போக்கிக்கொண்டுவிடவில்லை. இஸ்லாம் என்பதற்கே அமைதி என்பதுதான் பொருள். ஹிந்துக்கள், அகிம்சை வழியைத் தாங்கள் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இருவருமே கடவுளிடம் பக்திகொண்டிருப்பதாகச் சொல்லிக்கொண்டு நடைமுறையில் சைத்தானைப் பின்பற்றி நடக்கின்றனர். ஒரு பாவமும் அறியாத ஹிந்துவை முஸ்லிம் குத்திவிட்டான்; ஒரு பாவமும் அறியாத முஸ்லிமை ஹிந்து குத்திவிட்டான். சில தினங்களுக்கு முன்னால் அகமதாபாத்தில் கொல்லப்பட்ட மூன்று தொழிலாளரில் ஒருவர் முஸ்லிம். ஒரு முஸ்லிமின் கட்டாரிதான் அவரைக் கொன்றது. அவர், ஹிந்துக்களுடன் இருந்தார். அவர் முஸ்லிம் என்பது யாருக்கும் தெரியாது. அவருடைய சகாவான வசந்தராவ் என்பவர் பிரபலமானவர், எல்லோருக்கும் தெரிந்தவர். ஹிந்துக்களிடத்திலும் முஸ்லிம்களிடத்திலும் அவருக்கு நல்ல மதிப்பு இருந்தது. சிறையில் இருந்தபோது அவருடைய முஸ்லிம் சகாக்களில் ஒருவர் உண்ணாவிரதம் இருந்தார். சத்தியாக்கிரகக் கைதிகளில் ஹிந்துக்களே மிக அதிகமாக இருந்தனர். அந்த முஸ்லிம் சகோதரருக்கும் தார்மிக ஆதரவை அளிக்க வேண்டும் என்று வசந்தராவ் எண்ணினார். அவரும் அனுதாப உண்ணாவிரதம் இருந்தார். அப்படி உண்ணாவிரதமிருக்க வேண்டாம் என்று தடுக்க அவருடைய முதிய சகாக்களெல்லாம் முயற்சி செய்தனர். 'எங்களையெல்லாம்விட நீங்கள் புத்திசாலியா? முஸ்லிம் நண்பரின் உண்ணாவிரதம் நியாயமில்லாதது என்பது உங்களுக்கே தெரியும். அது நியாயமானதாக இருந்தால் அவருடன் சேர்ந்து நாங்களும் உண்ணாவிரதம் இருந்திருப்போம்' என்றார்கள். இதற்கு வசந்தராவ், 'நான் அதிக புத்திசாலி என்று சொல்லிக்கொள்ளவில்லை. முட்டாளாக இருக்கத் தயாராயிருக்கிறேன். உங்கள் ஆசீர்வாதத்தையே நாடுகிறேன். சிறையில் ஹிந்துக்களாகிய நம் மத்தியில் இந்த முஸ்லிம் நண்பர் இறந்துவிடுவாரானால், வெளியிலிருக்கும் முஸ்லிம் நண்பர்களிடம் நான் எந்த முகத்துடன் போவது? ஆகையால், அவருடைய உண்ணாவிரதத்தின் பிரச்னை எதுவாக இருந்தாலும், அவருடன் நானும் சாகவே விரும்புகிறேன்' என்றார். முடிவில் இவர்களில் யாரும் சாகவில்லை. ஆனால், வசந்தராவ், தாம் உண்மையான ஹிந்துவாகவும், உண்மையான முஸ்லிமாகவும் இருப்பதைத் தமது செய்கையின் மூலம் நிரூபித்துவிட்டார்.

"இத்தகைய மனோபாவத்தை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அகமதாபாத்திலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நற்புத்தி ஏற்பட வேண்டும் என்று நீங்கள் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டால், உங்களுடைய பிரார்த்தனை வீண் போகாது என்பது நிச்சயம். உங்களுடைய பிரார்த்தனை, அங்கேயும் தாண்டிப்போய் தவறான வழியில் போய்க்கொண்டிருக்கும் அகமதாபாத் கலகக்காரர்களின் உள்ளத்தையும் உருக்காமற் போகாது."

பஞ்சகனி, 21—7—'46

—'ஹரிஜன்' – 28—7—1946

# 6

# அகமதாபாத்தில் படுகொலைகள்

அகமதாபாத்தில் பல நாட்களாகப் படுகொலைகள் நடந்து கொண்டு வருகின்றன. இது, இன்னாருடைய குற்றம் என்று நிர்ணயித்துவிடுவது கஷ்டம். யாரை யார் குத்தினார்கள் என்பதைப் பொது மக்கள் அறியச் செய்வதில்லை என்பது அரசாங்கத்தின் கொள்கை. இக்கொள்கையைக் காங்கிரஸ் அரசாங்கம் அனுசரித்து வருகிறது. ஆகையால், இப்படி மூடி மறைப்பதற்கும் நியாயமான காரணங்கள் இருக்கின்றன என்றே நாம் நம்பவேண்டும். தன் மகன் செய்யும் திருட்டை, ஒரு தாய் துயரத்துடன் மறைத்துவைப்பதற்கு ஒப்பானதாகவே இதுவும் இருக்கக்கூடும். அக்கிரமஞ் செய்திருப்பது யார், அதிகப்படியாகத் தவறு செய்திருப்பது யார் என்பது அகமதாபாத்தில் ஒவ்வொருவருக்கும் தெரிந்தே இருக்கும். அதைக் கண்டு பிடிப்பது அல்ல என் வேலை. இன்னும் அதிக சுலபமானது என் வேலை.

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் குத்திக் கொலை செய்து கொள்ளுகிறவர்களில் ஒரு தரப்பினர், அப்படிச் செய்யாமல் இருந்துவிடுவதுதான் இதில் பொன்னான வழி. அப்பொழுதுதான் உண்மையான அமைதி ஏற்பட்டு வெறித்தனமும் ஒழியும்.

இக்கலவரத் தீயை அணைப்பதற்கான முயற்சியில் மூன்று இளைஞர்கள் தங்கள் உயிரைப் பலி கொடுத்தார்கள் என்பது போதாதா? உயிர் கொடுத்த அம்மூன்று வீரர்களைப்பற்றி பல நண்பர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நாம் புத்திசாலித்தனமுள்ளவர்களாக இருந்தால், இந்தத் தியாகங்கள் அத்தீயை அணைத்திருக்கும். ஆனால், அப்படி நடந்துவிடவில்லை. வீணுக்குத்தான் தியாகங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதன்று அதன் பொருள். ஆனால், அத்தீயை அணைப்பதற்கு இன்னும்

அநேகர் தியாகம் செய்ய வேண்டும் என்பதுதான் அதன் பொருள்.

இவ்விதமில்லையானால் இதற்குள்ள மற்றோர் வழி, இரு தரப்பாரும் களைத்துப் போகவேண்டும்; போலீஸ் துப்பாக்கி வேட்டுக்குப் பலியாக வேண்டும். அமைதி ஏற்படுவதற்கு முன்னால் சிலர் சிறைக்கு அனுப்பப்படுவார்கள். சிலர் தூக்கு மேடை ஏறுவார்கள். இது தவறான வழி. இந்த வகையில் அணைக்கப்படும் கலவரத் தீ திரும்பவும் மூண்டுவிடும். இம் முறை, விஷத்தைக் குறைத்துவிடாது. அது அடக்கிவைக்கப் பட்டு மாத்திரமே இருந்துவரும். அது உடல் முழுவதிலும் பரவி அதிகக் கஷ்டத்தை விளைவித்துவிடும்.

போலீஸ் உதவியைக்கொண்டும், அதன் அண்ணாவான ராணுவத்தைக்கொண்டும் உண்டாக்கப்படும் அமைதி, நம் மீது அந்நிய அரசாங்கத்திற்கு இருக்கும் பிடிப்பை மேலும் வலுப் படுத்தி இன்னும் நம்மை அதிக சக்தியில்லாதவர்களாகவே ஆக்கிவிடும். கவி இக்பால் தமது சிரஞ்சீயான வாக்கியத்தில், "பரஸ்பரச் சச்சரவை சமயம் புகட்டவில்லை" என்கிறார். நமக் குள்ளே நாம் அடித்துக்கொண்டிருப்பதைவிட நமது கோழைத் தனத்திற்கு வேறு ருசு இருக்க முடியுமா?

ஒவ்வொன்றுக்கும், நமக்குள்ளேயே சச்சரவிட்டுக்கொள்ளு வதற்கும்கூட, ஒரு முறை இருக்கிறது. நாம் சண்டையிட்டுக் கொண்டுதான் ஆகவேண்டும் என்றால், போலீஸ், ராணுவ உதவியை நாம் நாடுவானேன்? அரசாங்கம் தெளிவாக ஒன்றைச் சொல்லிவிட வேண்டும். ராணுவம், அது இந்தியாவில் இருக்கும் வரையில், சுத்தமாக இருக்கும்படிச் செய்யவும், தரிசாகக் கிடக்கும் நிலத்தைச் சாகுபடி செய்வது போன்ற வேலை களுக்குமே உபயோகிக்கப்படும் என்று சொல்லிவிடவேண்டும். அசல் திருடர்களைப் பிடிக்கவே போலீஸ் உபயோகிக்கப்படும்; போலீஸ், ராணுவம் ஆகிய இரண்டுமே வகுப்புக் கலவரங்களை அடக்க உபயோகிக்கப்படா என்றும் சொல்லிவிடவேண்டும்.

போலீஸ், ராணுவ உதவி வேண்டாம் என்று நிராகரித்து விடும் வீரம் அகமதாபாத் மக்களுக்கு ஏற்படட்டும்; அவர்கள் கோழைகளாக இல்லாதுமிருக்கட்டும். கலகம் செய்கிறவர்கள் எல்லோரும் பெரும்பாலும் காலிகள்; இத் தீயச் செயல்களை இருட்டில் செய்து வருகிறார்கள். நடந்திருக்கும் கத்திக் குத்து களெல்லாம் பெரும்பாலும் முதுகிலேயே குத்தப்பட்டிருக் கின்றன என்று அறிகிறேன். மார்பில் குத்தப்பட்டவர்களே இல்லை. இப்படிப்பட்டவர்களைக் கண்டு அஞ்சுவானேன்? தியாகஞ் செய்வதனால் அவர்களுக்கு நற்புத்தியாவது ஏற்படும் என்ற நம்பிக்கையில் ஒருவர், அவர்கள் கையால் சாவதற்குத் தைரியமாக முன்வரவேண்டும். ஒருவருக்குச் சாவதற்குத் துணிவு ஏற்படவில்லையானால், போராடியாவது தன்னை அவர்

பாதுகாத்துக்கொள்ள வேண்டும். மறைந்திருந்து வந்து குத்தி விடுகிறவருடன் ஒருவர் எப்படி எதிர்த்துப் போராட முடியும் என்று கேட்கலாம். அப்படிப்பட்ட கத்திக் குத்துகளைத் தடுத்துவிடுவது சாத்தியமில்லாதிருக்கலாம். ஆனால், கத்தியால் ஒருவன் குத்துவதைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களும் அவனுக்கு உடந்தையாக இல்லாதிருந்தால், அவர்கள் வீரமில்லாதவர்களாகவும் இல்லாதிருந்தால், அக்குற்றவாளியை அவர்கள் பிடித்துப் போலீஸாரிடம் ஒப்படைக்கலாம்; அல்லது அவன் எந்தச் சமூகத்தினனோ அச்சமூகத்தினிடம் ஒப்படைக்கலாம். இல்லாவிட்டால் மக்களின் பஞ்சாயத்தின் முன்பும் அவனைக் கொண்டுவந்து நிறுத்தலாம். அவனைத் தாங்களே தண்டித்து விடுவது என்பதை மாத்திரம் செய்யக்கூடாது.

[ 'ஹரிஜன் பந்து'விலிருந்து எடுத்தது]

பஞ்சகனி, 22-7-'46 —'ஹரிஜன்' – 28—7—1946

# 7

# தனக்குத் தானே பரிகாரம் தேடுக

அகமதாபாத்தில் நடந்து வரும் படுகொலைகளைக் குறித்து ஒருவர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவருடைய கடிதத்திலுள்ள பொருத்தமான பகுதியைக் கீழே கொடுக்கிறேன் :

"கலவரங்களை அடக்குவதற்கு உபயோகிக்க வேண்டிய உபாயத்தைக் குறித்துத் தங்களுக்கு எழுத விரும்புகிறேன். 'அகிம்சை சேவாதள'த்தை (அகிம்சைத் தொண்டர் படை)க் குறித்து இரு மாதங்களுக்கு முன்பு ஒரு கட்டுரை எழுதியிருந்தீர்கள். ஆனால், நாட்டில் இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது அந்த யோசனை பயனில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து அகிம்சையைக்கொண்டு போராடுவது எப்படி என்பதை எங்களுக்கு நீங்கள் போதித்திருப்பதைப் போன்று, அகிம்சையைக்கொண்டு கலவரத்தை அடக்குவது எப்படி என்பதை, கலகம் நடக்கும் ஒரு பகுதிக்கு நீங்கள் போய் சொந்த உதாரணத்தைக்கொண்டு நீங்கள் எங்களுக்கு வழியைக் காட்ட வேண்டும். இன்று நீங்கள் அகமதாபாத்தில் இருந்து, கலகங்களை அடக்க வெளிவருவீர்களாயின், எண்ணற்ற தொண்டர்கள் உங்களுடன் சேர்ந்து கொள்ளுவார்கள். நமது காங்கிரஸ் ஊழியர்களில் இருவரான ஸ்ரீ வசந்தராவும், ராஜபாலியும் இத்தகைய முயற்சியில் இறங்கி குண்டர்களின் கத்திக்குப் பலியாகி விட்டனர். அவர்களிருவரும் ஒரு லட்சியத்தை அனுசரிப்பதில் உயிர்விட்டவர்களாகையால் எல்லாவித பாராட்டுக்கும் உரியவர்களாகின்றனர். ஆனால், அவர்களைப் பின்பற்றி நடப்பதற்கு வேண்டிய தைரியம் வேறு யாருக்கும் வரவில்லை. அவ்விருவருக்கும் இருந்த தன்னம்பிக்கை மற்றவர்களுக்கு இல்லை. அப்படி இருந்திருக்குமானால், கலவரங்களே இரா. அப்படியே இருந்தாலும், இன்றைய கலவரங்களின் அளவிலும், முறையிலும் அவை இருக்கவும் மாட்டா. ஆனால், அத்தகைய

நிலை இன்று வெறும் கற்பனை அளவில்தான் இருக்கிறது என்பதுதான் உண்மையாகும்.

"நீங்கள் வழிகாட்டுவதும், உங்கள் உதாரணமும், என்னைப்போன்ற அநேகருக்குத் தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் உண்டாக்கிவிடக் கூடும். வழியை ஒரு முறை நீங்கள் காட்டிவிடுவீர்களாயின், அவசியம் ஏற்படும் சமயத்திலெல்லாம், உள்ளூர் ஊழியர்கள் பின்பற்றியும் நடப்பார்கள். ஆகவே, நீங்கள் நடைமுறையில் செய்து காட்டினாலன்றி, அகிம்சை முறையில் சமூகத்தைப் பாதுகாப்பதற்கு, சாதாரண மக்களுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும்கூட, உங்கள் எழுத்துக்களாலும் பேச்சுகளாலும் ஒரு பயனும் ஏற்படாது என்றே எண்ணுகிறேன்."

மேலே கூறப்பட்டிருக்கும் யோசனை எனக்குப் பிடித்திருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக அகிம்சைப் போராட்டத்தை நடத்துவதில் என் யோசனையை மக்கள் பின்பற்றி நடந்தார்கள். ஏனெனில், ஏதாவது எதிர்ப்பைச் செய்ய அவர்கள் விரும்பினார்கள். ஆனால், அவர்களுடைய அகிம்சை, அவர்களுடைய கதியற்ற நிலைமையினால் ஏற்பட்டதாகும் என்பதை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். ஆகையால், அது பலவீனர்களின் ஆயுதம். இதனாலேயே இன்று நாம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸையும், அவருடைய ஆஸாத் ஹிந்த் படையையும் போற்றிப் பூஜிக்கிறோம். தம்முடைய சிப்பாய்கள் இந்தியாவுக்குப் போனதும் அகிம்சை வழியைத்தான் பின்பற்றவேண்டும் என்று நேதாஜியே அவர்களுக்குச் சொன்னதை நாம் மறந்துவிடுகிறோம். இந்திய தேசீயப் படையின் தலைவர்களே இதை என்னிடம் கூறினார்கள். நல்லது, கெட்டதை உணரும் பகுத்தறிவையே நாம் இழந்துவிட்டோம். இது திரும்பவும் நமக்கு ஏற்படும்படிச் செய்வதற்கு, இந்திய தேசீயப் படையினர், நேதாஜி தங்களுக்குக் கூறிய லட்சியத்தை அனுசரித்து நடக்க வேண்டும். பலாத்காரமே முற்றிலும் நிறைந்திருக்கும் இச் சூழ்நிலையில், அகிம்சையில் நம்பிக்கையிருப்பவர்களின் வேலை அதிகக் கஷ்டமானதாகிறது. ஆனால், பலாத்கார வழிக்குவேண்டியதைவிட அகிம்சை வழிக்குத் தைரியம் அதிகமாக வேண்டியிருக்கிறது. அத்தகைய அகிம்சைக்கு வேண்டிய ருசுவைக் காட்டுவதற்கு நம்மால் ஆகவில்லை. ஸ்ரீ கணேச சங்கர் வித்தியார்த்தி, ஸ்ரீ வசந்த ராவ், ஸ்ரீ ராஜபாலி ஆகியவர்களின் செயல்களை, வீரர்களின் அகிம்சைக்கு உதாரணங்களாக நாம் பார்க்க வேண்டும். ஆனால், வகுப்பு உணர்ச்சி உச்ச நிலைக்குப் போய்விடும்போது, மேலே சொன்ன தியாகங்களின் பலனைக் காட்ட நம்மால் முடியாமலிருக்கிறது. இதற்கு ஸ்ரீ கணேச சங்கர் வித்தியார்த்தியைப் போன்றவர்கள் அநேகர் உயிரைவிடத் தயாராக இருக்க வேண்டும். ஸ்ரீ வசந்த ராவ், ஸ்ரீ ராஜபாலி ஆகியவர்களின் உதாரணத்தைப் பின்பற்றி நடக்க அகமதாபாத்தில் வேறு யாரும் இல்லை என்பது, அகிம்சையோடு கூடிய செய்கையில் நம் உயிரையும் விடுவதற்கு வேண்டிய அளவிற்கு நம் தியாக உணர்ச்சியை நாம் இன்னும் வளர்த்துக்கொண்டு

விடவில்லை என்பதையே காட்டுகிறது. ஆகையால், மற்றவர்கள் என்னுடன் சேர்ந்தாலும் சேராவிட்டாலும், இந்த நிலைமையில் என் அளவில் நான் காரியத்தில் இறங்கவேண்டும் என்று இக் கடிதம் எழுதியிருப்பவர் சரியானபடியே கூறுகிறார். நான் வீட்டில் உட்கார்ந்துகொண்டு, மற்றவர்களைப் போய் உயிரைக் கொடுக்கும்படி சொல்லுவது என்னளவில் வெட்கக்கேடானதாகும். அப்படிச் செய்யும் காரியம் அகிம்சைக்கு அறிகுறியே ஆகாது. வகுப்புக் கலவரங்களைச் சமாளிப்பதில் என்னுடைய அகிம்சையைச் சோதிப்பதற்கான வாய்ப்பு எனக்கு இருந்தது இல்லை. என்னுடைய கோழைத்தனமே அத்தகைய ஒரு வாய்ப்பை நான் தேடிக்கொள்ளாதபடி தடுத்துவிட்டது என்றும் சொல்லப்படலாம். அது எப்படியானாலும், கடவுள் விருப்பம் இருந்தால் அத்தகைய வாய்ப்பு எனக்கு ஏற்படுவதோடு, என்னை அத்தீயிலும் போட்டுத் தீரும். கடவுள் என்னைப் புனிதனாக்கி அகிம்சை வழியைத் தெளிவானதாகவும் செய்வார். என் உயிரைத் தியாகம் செய்வது பலாத்காரத்தைத் தடுத்துவிடும் என்று யாரும் எண்ணிவிடக்கூடாது. எல்லா இடங்களிலும் பரவியிருக்கும் பயங்கரமான பலாத்காரம் நின்று, அந்த இடத்தில் அகிம்சை ஆட்சி பெற வேண்டுமானால், என் உயிரைப் போன்று இன்னும் அநேகருடைய உயிர்களையும் கொடுக்க வேண்டியிருக்கும். கவியும் வருமாறு பாடியிருக்கிறார்: "சத்திய வழி வீரர்களுக்கேயன்றி கோழைகளுக்கு அல்ல."

['ஹரிஜன் சேவக்'கிலிருந்து எடுத்தது]

பஞ்சகனி, 26–6–'46

—'ஹரிஜன்' – 4—8—1946

## 8

# கொலைக்கு நஷ்ட ஈடு

பாய் ராஜபாலி கொலையுண்டதற்குப் பணமாக நஷ்ட ஈட்டை அவருடைய சகோதரரோ அல்லது நெருங்கிய உறவினரோ அரசாங்கத்தினிடம் கேட்கலாமா என்று என்னைக் கேட்கிறார்கள். இத்தகைய ஒரு சாவை நஷ்டம் என்று இறந்த அவரே எண்ணியிருக்கமாட்டார். உண்மையில் இதைப்போன்ற கொலைகள்தான், பழிக்குப் பழி வாங்கப்படாதவைகளாக முற்றும் இருந்தால், முடிவில் கொலையே இல்லாதபடிச் செய்யும். ஆனால், நஷ்ட ஈடு கேட்கவோ, பழிக்குப் பழி வாங்கவோ முற்பட்டுவிடும்போது, விரும்பிச் செய்த தியாகத்தின் நன்மை அந்தக் கணத்திலேயே அழிந்துவிடுகிறது. அப்படியிருக்கும்போது இறந்தவரின் ஆன்மா எவ்விதம் சாந்தியடைய முடியும்?

கொலை செய்வதனாலோ, நஷ்ட ஈடு வாங்கிக்கொள்ளுவதனாலோ, கொலைக்கு பழிக்குப்பழி வாங்கிக்கொண்டுவிட என்றுமே

முடியாது. கொலைக்குப் பழி வாங்கிக்கொள்ளுவதற்குள்ள ஒரே வழி, திருப்பித் தாக்கும் விருப்பமே இல்லாமல் விரும்பித் தன்னையே பலியாக அளித்துக்கொண்டு விடுவதுதான். இந்த லட்சியத்தில் நம்பிக்கை இருக்கிறவர்கள், தங்களுக்கு அதிக அன்பானவர்கள் இறந்து விட்டதற்காக நஷ்ட ஈடு கேட்பதையோ, அதை வாங்கிக்கொள்ளுவதையோ கனவிலும் எண்ணமாட்டார்கள். இதற்கு மாருக, கொலைக்குக் கொலை செய்துவிடுவது என்ற கொள்கை, கொலைகள் அதிகமாகிவிடுவதிலேயே போய் முடியும். இது இன்று எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்ததே. பழி வாங்குவதோ, நஷ்ட ஈட்டைப் பெறுவதோ தனிப்பட்டவருக்குக் கொஞ்சம் திருப்தியை அளிப்பதாக இருக்கலாம். ஆனல், இது என்றுமே அமைதியை உண்டாக்காது, சமூகத்தையும் உயர்த்திவிடாது என்பதை நிச்சயமாகக் கூறுவேன்.

பழி வாங்கிக்கொள்ளுவது என்பதே விதியாக இருக்கும் ஒரு சமூகத்தில், தனிப்பட்டவர் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இதற்குப் பதில், உதாரணத்தில்தான் இருக்கிறதேயன்றி தரும சாத்திரத்தில் இல்லை. தவறு செய்யப்பட்டுவிட்டவர்கள் மாத்திரமே உதாரணமாக நடந்துகாட்ட முடியும். ஆகையால், கடைசியான முடிவுக்கு வர வேண்டியவர்கள் பாய் ராஜபாலியின் உறவினர்களே. நான் அறிந்த வரையிலான அகிம்சையின் வழியைச் சுட்டிக் காட்டுவது ஒன்றே என் கடமை.

['ஹரிஜன்பந்து'விலிருந்து எடுத்தது]

சேவா கிராமம் - 9—8—'46 —'ஹரிஜன்' – 18—8—1946

# 9

# குதூகலப்படும் நேரம் அல்ல

**1946** செப்டம்பர் 2-ஆம் தேதியைப் புனிதமான நாள் என்றும், இந்தியாவின் சரித்திரத்தில் மிகச் சிறந்த நாளான இதற்கு இந்தியா நீண்ட காலம் காத்திருந்திருக்கிறது என்றும் அன்று டில்லியில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறினர். அவர் கூறியதாவது:

" இந்த நாளில் ஆனந்தப்படுவதற்கோ, இதைக் குதூகலமாகக் கொண்டாடுவதற்கோ இல்லை என்பதை ஞாபகப்படுத்துகிறேன். இடைக் கால சர்க்காரில் முஸ்லிம் லீக் இல்லாமலேயே உங்கள் மந்திரிகள் தயக்கத்தின் பேரிலேயே பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். முஸ்லிம் லீக், முஸ்லிம்களின் பலமான ஸ்தாபனம் என்பதில் சந்தேகமில்லை. அரசாங்கத்திற்குள் வர லீக் மறுத்துவிட்டது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இந்

தியாவின் குழந்தைகள். நம்மைப் பெற்றெடுத்த தாயிடம் பக்தி செலுத்தவும் வணங்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அத்தகைய வணக்கம் நம் ஆன்மாவைப் புனிதமாக்குகிறது. அழிவே இல்லாத அத்தாயின் மார்பில் இருந்து சாகவும் வேண்டியவர்களாக இருப்பவர்கள் நாம். அப்படியிருக்க, அத் தாய்க்கு நம் பொதுவான விசுவாசத்தையும் பக்தியையும் காட்ட நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம்? இந்த நாட்டில் பிறந்து, இந்த நாட்டைத் தங்கள் தாய்நாடு என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் எல்லோரும், அவர்கள் ஹிந்துக்களாயினும் முஸ்லிம்களாயினும், பார்ஸி, கிறிஸ்தவர், ஜெயினர் அல்லது சீக்கியராயினும். இவர்கள் எல்லோரும் இத்தாயின் குழந்தை களே. ஆகையால், உடன் பிறந்த சகோதரர்களையும்விட பல மாகப் பந்தப்பட்டு ஒன்றுபட்ட சகோதரர்களே இவர்கள்.

"இன்று ஹிந்துக்களை முஸ்லிம்கள் விரோதமாக நினைக் கிறார்கள். ஹிந்துக்கள் தன்னைத் தட்டிக் கழித்துவிட்டார்கள், ஏமாற்றிவிட்டார்கள் என்று சரியாகவோ தப்பாகவோ முஸ்லிம் லீக் நம்புகிறது. ஆகையால், கோபப்படுகிறது. இந்த நாளை துக்க தினமாக முஸ்லிம்கள் கொண்டாடுகிறார்கள். இதனால் அவர்கள் உங்கள் சகோதரர்களல்லாது போய்விடவில்லை. சகோ தரன் கொண்டுவிடும் கோபத்திற்காக, ஒருவன் தானும் கோபங் கொண்டுவிடக்கூடாது. அவர்களுடைய துக்கத்தில் ஹிந்துக் களும் கலந்துகொண்டுவிட முடியாதுதான். என்றாலும் சாத்திய மான வரையில் அவர்களுடன் நெருங்கி வருவதற்கான முயற் சியை ஹிந்துக்கள் செய்யலாம். குதூகலமடைவது, கொண் டாட்டம் போன்றவைகளையும், விருந்துகள், தீபாலங்காரங்கள் போன்றவைகளையெல்லாம் செய்யாமல் முஸ்லிம்களுக்கு ஆத் திரத்தை மூட்டாமல் இருக்கலாம். குதூகலக் கொண்டாட் டங்கள், இப்புனிதமான சமயத்திற்குக் கொஞ்சமும் பொருந்தா தவை. புனிதமான நாட்களைக் கொண்டாடுவதற்குச் சரியான முறை, இஸ்லாம், கிறிஸ்தவம், ஹிந்து தருமம் ஆகியவை ஒரு மித்துக் கூறுவதைப் போன்று, விருந்துகள் வைப்பதற்குப் பதி லாகப் பட்டினி விரதம் இருப்பதுதான். நமக்குள்ளேயே ஆராய்ந்து, முஸ்லிம் சகோதரர்களுக்கு ஏதாவது அநீதியைச் செய்திருக்கிறோமா என்பதைக் கண்டுகொள்ள முயற்சிப்பதில் இந்தச் சமயத்தை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அநீதி ஏதாவது செய்திருந்தால் அதைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு அதற்குப் பரிகாரத்தையும் செய்ய வேண்டும்.

"இதே சமயத்தில், முஸ்லிம் லீகுக்கும் மரியாதையுடன் ஒன்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். பிரிட்டிஷாரையும் தனது எதிரியாக லீக் கருதுவதும், நேரடி நடவடிக்கை எடுப்பதாக அவர்களை மிரட்டுவதும் பொருத்தமானதோ, நியாயமானதோ அல்ல. இரண்டு குதிரைகளின் மீது அது ஒரே சமயத்தில் சவாரி செய்ய முடியாது. பிரிட்டிஷாருடன் லீக் ஒத்துழை

யாமை செய்வதானால், தங்களுக்குள்ளேயே அது ஒத்துழைத்தாக வேண்டும் என்கிறது. அப்படியிருக்க தங்கள் சொந்த சகோதரர்களுடன் லீக் ஒத்துழையாமை செய்வது ஏன்? முஸ்லிம்களுக்கு விரோதமாக பிரிட்டனுடன் காங்கிரஸ் என்றுமே ஒன்றுபட்டிருக்க முடியாது. எந்தத் தனிப்பட்ட பகுதியினர், சமூகத்தினருக்கு என்று இல்லாமல், முஸ்லிம் லீக் உள்பட எல்லோரும் சுதந்திரத்தை அடையச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தின் பேரிலேயே காங்கிரஸ் இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. மற்றவர்களின் நன்மைக்கு விரோதமாக ஒரு வகுப்பாரின் நன்மைக்காகப் பாடுபட என்றோ, ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்குத் தீமையைச் செய்வதற்கு என்றோ ஒரு மந்திரி, மந்திரி சபையில் சேர்ந்திருப்பாரானால், மந்திரியாக இருப்பதற்கு அவர் கொஞ்சமும் தகுதியில்லாதவர். ஹிந்துக்களை முஸ்லிம்கள் தங்களுடைய விரோதிகளாகக் கருதுவதோ, சிறந்த அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களாக அநேக நூற்றாண்டுகள் இவர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள், ஒரே நாட்டில் பிறந்தவர்கள், ஒரே மண்ணில் வளர்ந்தவர்கள், அதே மண்ணோடு மண்ணாகப் போய்விட வேண்டியவர்கள் என்பதை மறந்துவிடுவதோ தவறாகும். லீகின் போக்கு இஸ்லாமுக்கே விரோதமானது என்று சொல்லும் அளவுக்கும் நான் போவேன். அநீதி ஏதாவது இருக்குமானால் அதற்குப் பரிகாரம், இரு தரப்பாரும் நியாயத்தை எடுத்துக் காட்டி விவாதிப்பதுதான். பரஸ்பரம் சந்தித்துப் பேசியதில் முடிவு ஏற்படாது போனால், கடைசி வழியாக இத்தகராறை மத்தியஸ்தர் முடிவுக்கும் விடலாம்.

"சமூக ஒற்றுமை ஏற்படும்படிச் செய்வதே மந்திரிகள் முன்னாலிருக்கும் முக்கியமான வேலை. அரசாங்கம் உத்தரவு போடுவதனால் அதைச் செய்துவிட முடியாது. மந்திரிகள் அதற்காக வாழ்ந்து, அதற்காகவே சாகவும் வேண்டும். என் இஷ்டப்படி செய்ய முடிந்தால், உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்க இனி ராணுவம் உபயோகிக்கப்படமாட்டாது என்று உத்தரவிட்டு விடுவேன். இதன் சம்பந்தமாகப் போலீஸை உபயோகிப்பதையும் தடுத்துவிட வேண்டும் என்றே என்னைப் பொறுத்தவரையில் விரும்புவேன். சமூகங்கள் ஒன்றை ஒன்று கொலை செய்துகொள்ளுவதைத் தடுப்பதற்கு வேறு ஏதாவது வழியை மக்கள் கண்டுகொள்ள வேண்டும். மோசமாக இருக்கும் நிலைமை இன்னும் படுமோசமான நிலைமைக்கு வந்துவிடுவதாக இருந்தாலும், வெளியாரின் உதவியின்றி தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு முடித்துவிட வேண்டியதற்கான துணிச்சல் அவர்களுக்கு இருக்கவேண்டும். தங்கள் பாதுகாப்புக்குப் பிரிட்டிஷ் ஆயுத பலத்தின் உதவி அவர்களுக்குத் தேவைப்படும் வரையில், அவர்களின் அடிமைத்தனம் நீடித்துக்கொண்டு போகும்.

"இடைக் கால சர்க்கார், சரியான வழியைக் காட்டி, சத்தியம், புனிதம், உண்மையான சுயராஜ்யம் ஆகியவற்றின் வழி

யில் இந்தியாவை வைக்கும் என்றே நம்புகிறேன். இதற்காகச் செய்யும் முயற்சியில் எல்லா இந்தியரின் விசுவாசமுள்ள ஒத்துழைப்பும் இந்த அரசாங்கத்திற்கு இருக்கும் என்றும் நம்புகிறேன்."

[ஸ்ரீ பியாரிலால் எழுதியது]

புது டில்லி, 3—9—'46 —'ஹரிஜன்' - 8—9—1946

# 10

# சுதந்திரக் கொண்டாட்டங்கள்

எகிப்திலிருந்து ஓர் இந்திய நண்பர் கீழ்வருமாறு எழுதுகிறார்:

"இந்தியா, தனது சுதந்திரத்தை சீக்கிரத்தில் அடையப் போகிறது என்றும், இந்த வைபவத்தை இந்தியா முழுவதிலும் கொண்டாடப் போகிறார்கள் என்றும் ரேடியோ மூலமும், பத்திரிகைகள் மூலமும் அறிந்தோம். இங்கே உள்ள இந்திய சமூகமும் இந்தக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள விரும்புகிறது. ஆனால், நாடு உண்மையில் சுதந்திரம் அடைந்துவிட்டது என்பதில் உங்களுக்குத் திருப்தி இருந்தாலன்றி கொண்டாடுவதில் எங்களுக்குச் சிரத்தை இல்லை. உங்களிடமிருந்து பதிலுக்காகக் காத்திருப்போம்."

இதற்குக் காந்திஜி எழுதிய பதிலாவது:

"உங்கள் கடிதம் கிடைத்தது. பொறுத்திருப்பது என்று நீங்கள் செய்த முடிவு சரியானது. நாங்கள் உண்மையிலேயே சுதந்திரமடைந்துவிட்டாலன்றி கொண்டாடுவதற்கு என்ன இருக்கிறது? சுயராஜ்யத்திற்குக் கதவு திறக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் இன்று சொல்லக்கூடியதெல்லாம். ஆனால், இத்துடன் திருப்தியடைந்துவிடுவது முழுப் பைத்தியக்காரத்தனம். நமது நகரங்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சச்சரவிட்டுக்கொண்டு வருகின்றனர். இந்த நிலைமையில் வெளிநாட்டிலுள்ள இந்தியர், சுதந்திர வழியில் செய்யக்கூடிய சிறந்த உதவி, ஒற்றுமைக்காகப் பாடுபடுவதுதான். எகிப்தில் வசிப்பவர்களாகிய நீங்கள் இவ்விஷயத்தில் சிறந்த உதவியைச் செய்ய முடியும்."

('ஹரிஜன்பந்து'விலிருந்து எடுத்தது)

புது டில்லி, 8—9—'46 —'ஹரிஜன்' - 15—9—1946

# 11

# அந்தக் காலம் வருமா?

பம்பாயில் தொடர்ந்து வகுப்புக் கலவரங்கள் நடந்து வந்ததைத் குறித்து காந்திஜிக்கு இருந்த மனவேதனை கொஞ்சமல்ல. இதைக் குறித்து பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கூறியதாவது:

"யாரை யார் கொன்றார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், தங்களைக் கொன்றவர்களைத் திருப்பிக் கொல்லுவதற்கு வேண்டிய பலத்துடன் ஹிந்துக்கள் இருப்பதாகச் சொல்லி, சிலர் ஆனந்தப்படுவது அதிக துக்ககரமானதாகும். ஹிந்துக்கள் திருப்பித் தாக்காமல் சாக வேண்டும் என்றே நான் விரும்புவேன். ஏனெனில், இப்பொழுது இருக்கும் துவேஷத் தீயை அணைப்பதற்கு இருக்கும் ஒரே வழி அதுதான். ஆனால், இன்று அவர்களுக்கு அந்த வீரம் இல்லை; அவர்கள் உள்ளங்களில் அகிம்சையும் அன்பும் இல்லை. மேலும் மேலும் போலீஸ், ராணுவப் பாதுகாப்புகள் வேண்டும் என்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் கோரிக்கைகள் வந்த வண்ணமிருக்கின்றன. நமக்குள் சச்சரவிட்டுக்கொள்ளுவது மோசமானது. ஆனால், பிரிட்டிஷாரால் பயிற்சியளிக்கப்பட்டு, பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசம் தெரிவிக்கும் படையினரை உதவிக்கு அழைப்பது இன்னும் அதிக மோசமானது. ராணுவ, போலீஸ் உதவி வேண்டும் என்று மக்கள் அங்கே கேட்பதையும் நான் விரும்பவில்லை. அவர்கள் தங்களுக்குள் பலத்தை வளர்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி, வேறு யாரையும் நம்பி இருக்கக்கூடாது. சுதந்திரத்தை அதன் அடிப்படையிலேயே நெரித்துக் கொன்றுவிடுவதாக இருக்கும் இத்தகைய கோரிக்கையை மந்திரிகள் நிறைவேற்றிவைக்க வேண்டும் என்று மக்கள் வற்புறுத்துவார்களாயின், இதற்கு உடன்படுவதைவிட மந்திரிகள் ராஜிநாமாச் செய்துவிட வேண்டும். இதற்குப் பதிலாக மக்களும் அவர்களின் தலைவர்களும் தாங்களே விரும்பி அத்தீக்குள் பிரவேசித்து, ஹிந்து-முஸ்லிம் கௌரவத்திற்காக உயிரைக் கொடுக்கவும் தயாராயிருக்க வேண்டும். ராணுவத்தைப் பொறுத்த வரையில், அவர்களுக்குச் செய்யத் தெரிந்ததாக இருக்கும் ஆக்க வேலைகளுக்கு அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்காக உணவுப் பொருள்களை அவர்கள் அதிகமாக உற்பத்தி செய்யட்டும். செய்ய வேண்டியிருக்கும் மற்ற வேலைகளையும் அவர்கள் செய்யட்டும்."

வகுப்புத் துவேஷம், ஆத்திரம், பலாத்காரம் ஆகியவற்றின் அலைகள் நாட்டில் அதிக வேகமாகிக்கொண்டிருந்தன. இதன் பலனாக நாட்டில் பொய்ப் பிரசாரங்களும் அதிகமாயின.

எனவே மறுநாள் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி தமது மனதைத் திறந்து வருமாறு கூறினர்:

"காயிதே ஆஜமும் அவருடைய கட்சித் தலைவர்களும் சமீப காலமாகக் கூறிக்கொண்டு வருபவை என் மனத்தைப் புண் படுத்துகின்றன. பலாத்காரத்தைக்கொண்டு தாங்கள் விரும்பு வதை எடுத்துக்கொண்டுவிடப் போவதாக அவர்கள் கூறுகிறுர் கள். ஆட்சிக் கப்பலை இது எங்கே கொண்டு போய்ச் சேர்க்கும் என்பதைக் குறித்தே நான் ஆச்சரியப்படுகிறேன். ஆட்சி அதிகா ரம் காங்கிரஸ்காரர்கள் கையில் இன்று இருக்கலாம். இது அவர்களுடைய கடமையையும் பொறுப்பையும் பன்மடங்கு அதிகரித்துத்தான் இருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் போரா டிக்கொண்டிருந்தபோது, அவர்கள் அடிபட்டார்கள், கைது செய்யப்பட்டனர், தண்டிக்கப்பட்டனர், கொல்லப்பட்டார்கள். என்ருலும், இப்போதைக்கு அதெல்லாம் பழைய சங்கதிகள். காங்கிரஸ் பலாத்காரத்தில் இறங்கியிருக்குமானல், அது வீழ்ச்சி யடைந்திருக்கும். திருப்பித் தாக்காமலிருப்பது எதுவோ அது ஒன்றே உண்மையான தியாகம். அது ஒன்றினலேயே பலன் ஏற்படும். மேலும், இந்தியாவின் நாற்பது கோடி மக்கள், அதா வது கிராம மக்கள், பலாத்காரத்தை உபயோகிப்பதைக் குறித்து எண்ணவில்லை. அவர்கள் அடிமைகளாக இருந்தனர். மிகச் சிலரேயான பட்டணத்து வாசிகளின் உள்ளங்களில்தான் இன்று பலாத்காரம் இருந்துவருகிறது. நானும் கிராமவாசி என்ற வகையில், இந்திய மக்கள் சமுத்திரத்தில் நானும் ஒரு வனகிறேன். துன்பப்பட்டு வரும் இம்மக்களுக்காகவே காங் கிரஸ், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. நான் காங்கிரஸில் சேருவதற்கு முன்னலிருந்தே ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டுவந்திருக்கிறேன். சிறுவனகப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோதே எனக்கு முஸ் லிம் நண்பர்கள் பலர் உண்டு. என் சகோதரருடைய முஸ்லிம் நண்பர்களின் வழக்கைக் கவனிப்பதற்காகவே நான் தென்னப் பிரிக்காவுக்குச் சென்றேன். பிழைப்புக்குச் சம்பாதிப் பதற்காக நான் தென்னப்பிரிக்காவுக்குப் போனேன். ஆனல், உடனே சேவையை முதன்மையான தாகக் கொண்டுவிட்டேன். அங்கிருந்த என் தொழி லாளர் நண்பர்களுக்குச் சேவை செய்வதற்காக நான் 'கூலி' *பாரிஸ்டரானேன். நான் முஸ்லிம்களிடம் வேலை பார்த்ததால், உண்மையில் முஸ்லிம்களின் மூலம் ஹிந்துக்களுக்குச் சேவை செய்தேன். ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை, என் வாழ்வின் ஒரு பகுதியாயிற்று. அந்த நாட்களின் நினைவு, எனக்கு நறுமணம் கமழுவதாக இருக்கிறது. இன்று அங்கும்கூட வகுப்பு வித்தியா சம் தலையைத் தூக்கிவிட்டது வருந்தத்தக்கதேயெனினும், அவர்

*தென்னப்பிரிக்காவில் தொழிலாளர்கள் மாத்திரமேயன்றி இந்தியர் எல்லோரை யும் வெள்ளையர், 'கூலிகள்' என்றே வெறுப்புடன் சொல்லி வந்தார்கள். எனவே, காந்திஜியையும் 'கூலி' பாரிஸ்டர் என்று வெள்ளையர் சொன்னர்கள்

கள் எல்லோரும் ஒன்றுபட்டு நின்று இந்தியரின் உரிமைகளுக்காகப் போராடினர்கள். எத்தனையோ முக்கியமான முஸ்லிம்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் சேர்ந்தனர். சேத் கச்சாலியா, இப்பொழுது இறந்துவிட்டார். முக்கியமாக அவர், அடிமையாக இருப்பதைவிட சாகத் தயார் என்ருர். ஆகையால், ஹிந்துக்கள் தங்களுடைய விரோதிகள் என்று காயிதே ஆஜமும், அவரைப் பின்பற்றுகிறவர்களும் கூறுவதைக் கேட்டு நான் ஆச்சரியப்படுவதோடு மனவேதனையும் அடைகிறேன். நான் முஸ்லிம் அல்ல. என்ருலும் யாரையும் விரோதியாகக் கருதக்கூடாது என்றுதான் இஸ்லாம் போதிக்கிறது என்று கூறுவேன். நான் நம்பிக்கொண்டிருப்பதைப் போன்று நான் உண்மையான ஹிந்துவாக இருந்தால், அதே போன்றே நல்ல கிறிஸ்தவனுகவும், நல்ல சீக்கியனுகவும், நல்ல ஜெயினனுகவும் இருக்கிறேன். ஒருவர் மாறுபட்ட கருத்தைக்கொண்டிருப்பதற்காக, வேறு ஒரு மதத்தைப் பின்பற்றுகிருர் என்பதற்காக, சகோதர மனிதராகிய அவரைக் கொன்றுவிட வேண்டும் என்று எந்த மதமும் போதிக்கவில்லை. என்ருலும், இதுதான் நடந்துகொண்டு வருகிறது. முதலில் தனக்குத் தானே விரோதியானலன்றி யாரும் இன்னெருவரைத் தனக்கு எதிரியாக்க முடியாது. தங்கள் கோரிக்கைக்கு உடன்பட்டுவிடும்படி காங்கிரஸையும், ஹிந்துக்களையும், பிரிட்டிஷாரையும்கூட நிர்ப்பந்திக்கப்போவதாக முஸ்லிம் லீக் தலைவர்கள் பேசி வருகிருர்கள். நிச்சயமாக இது சரியான வழியே அல்ல. கிலாபத் நாட்களை எண்ணிப் பார்க்கும்போது பெருமையடைகிறேன். அலி சகோதரர்கள் ஆனந்தக் கண்ணீர் விட்ட ஒரு சம்பவத்தை இங்கே கூற விரும்புகிறேன். ஹிந்துக்களின் கூட்டம் ஒன்றில் நான் பேசிக்கொண்டிருந்தேன். 'பசுவை நீங்கள் பாதுகாக்க விரும்பினல், கிலாபத்தை நீங்கள் பாதுகாக்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால் அதற்காக நீங்கள் உயிரையும் விடவேண்டும்' என்று அக்கூட்டத்தில் சொன்னேன். நான் இவ்விதம் சொன்னதைக் கேட்டதும் அலி சகோதரர்கள் ஆனந்தக் கண்ணீர் விட்டுவிட்டார்கள். இன்று இருப்பது எவ்வளவு பெரிய துக்ககரமான மாறுதல்! ஹிந்துக்களும் முஸ்லிம்களும், ஒருவரையொருவர் கலந்தாலோசிக்காமல் எக்காரியத்தையும் செய்வதில்லை என்றிருந்த அந்தக் காலம் திரும்ப வராதா என்று ஏங்குகிறேன். அந்த நிலைமை திரும்பவும் ஏற்படும்படிச் செய்வதற்கு நான் என்ன செய்வது? இக்கேள்வியே சதா என்னைக் கவலைப்படும்படிச் செய்து வருகிறது. ஹிந்துவோ, முஸ்லிமோ இன்னெரு சமூகத்தை 'விரோதி' என்பது விசுவாசமில்லாததோடு, முட்டாள்தனமுமாகும் என்று துணிந்து கூறுவேன். ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து எந்நாளும் வைத்துக்கொண்டிருக்க முடியும் என எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம் என்று ஆங்கிலேயரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் அப்படி எண்ணுவார்களாயின், இந்தியவினிடமும் பிரிட்டனிடமும் அவர்கள் விசுவாசமில்லாதவர்களாவர். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றே. அவர்கள் ஒரே நாட்டில் பிறந்த

சகோதரர்கள். ஒரே மாதிரியான உணவை உண்டு, ஒரே தண்ணீரைப் பருகி, ஒரே மொழியில் பேசுகின்றவர்கள். அவர்கள் ஒன்றுயிருந்து வாழ்ந்தாக வேண்டியவர்கள். 'சிறுபான்மையோர் யாவரும் பாகிஸ்தானில் பத்திரமாக இருப்பார்கள்' என்று காயிதே ஆஜம் ஜின்னு கூறுகிருர். பஞ்சாபிலும், வங்காளத்திலும், சிந்துவிலும் இப்பொழுதே முஸ்லிம் ராஜ்யம் இருந்து வருகிறது. ஆனல், இந்த மாகாணங்களில் பயமுறுத்தப்படுகிற விதத்தில் காரியங்கள் நடப்பதாயிருந்தால், எதிர்காலத்தில் அமைதிக்கு அது நல்லதாக இருக்குமா? வாளைக்கொண்டு இஸ்லாமை உயிருடன் வைத்திருக்க முடியும் என்று முஸ்லிம் லீக் எண்ணுகிறதா? அப்படி எண்ணுவதாயின் பெரும் தவறையே செய்கிருர்கள். இஸ்லாம் என்ற சொல்லுக்கே சமாதானம் என்பதுதான் பொருள். அமைதி என்ற வகையைத் தவிர, வேறு எந்த வகையிலும் எந்தச் சிறந்த சமயமும் இருந்து வர முடியாது."

(ஸ்ரீ பியாரிலால் எழுதியது)

புதுடில்லி, 10—9—'46 —'ஹரிஜன்' – 15—9—1946

## 12

# சில கேள்விகளுக்குப் பதில்

**கேள்வி:** தேர்தலில் சிறுபான்மையினர் மிகச் சிலரே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். இதற்கு என்ன பரிகாரத்தை நீங்கள் கூறுகிறீர்கள்?

**பதில்:** சிறுபான்மையோராக இருப்பதனல் சிறுபான்மையினருக்குக் காங்கிரஸ் ஸ்தாபனங்களில் இயற்கையாகவே குறைவான ஸ்தானங்களே இருக்கும். அவர்களுக்கு இதனல் அதிருப்தி ஏற்பட்டிருக்குமானல், நான் செய்ததைப் போல காங்கிரஸ்காரராக இருந்துகொண்டே காங்கிரஸிலிருந்து அவர்கள் விலகி இருக்கலாம். காங்கிரஸில் நான்கணு சந்தா செலுத்திய சாதாரண அங்கத்தினனுகவும் நான் இல்லாதிருப்பதால், நான் அதிகமான காங்கிரஸ்காரனுக இருக்கிறேனேயன்றி குறைவாகிவிடவில்லை என்று நான் கூறிக்கொள்ளுகிறேன். பெயிஜ்பூர் காங்கிரஸில்,நானும் இருந்த ஒரு கூட்டத்தில் ஸ்ரீமதி அனுசூயாபாய் காலே இப்பிரச்னையை எழுப்பினுர். விசாரித்ததில் நான்கணு சந்தா செலுத்திய அங்கத்தினர்களின் தொகை மிகக் குறைவு என்பது தெரிந்தது. கூட்டத்தில் எத்தனை பேர் நான்கணு செலுத்தி அங்கத்தினர்களாகாதவர்கள் என்று கேட்டபோது, ஏராளமானவர்கள் கை தூக்கினுர்கள். இவர்கள்தான் எந்தச் சன்மானத்தையும் எதிர்

பாராத உண்மையான காங்கிரஸ்காரர்கள். ஆனால், இவர்கள் எப்பொழுதும் அதற்குச் சேவை செய்வதையே நாடுகிறார்கள். இவர்கள் இல்லாவிடில், காங்கிரஸ் தனிப்பட்ட சிலர் கூடிப் பேசும் ஒரு காட்சியாகவே முடிந்துவிடும். ஒரு காங்கிரஸ்காரருக்கு இருக்க வேண்டிய ஒரே சிறந்த நோக்கம், காங்கிரஸைக் கைப்பற்றி அதில் ஆதிக்கம் வகிப்பதாக இல்லாமல், முற்றிலும் காங்கிரஸையே சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பதே. இந்தச் சரியான போக்கை ஒவ்வொருவரும் கொண்டு விடுவாராயின், சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்பதே இராது. காங்கிரஸைக் 'கைப்பற்ற' முயற்சிப்பது என்பது, அதைக் கொன்று விடுவதாகும். யோக்கியமான ஒரு காங்கிரஸ்காரர், செத்தாலும் சாவாரே யன்றி அதைக் கொன்றுவிடும் குற்றத்தை மாத்திரம் செய்து விட மாட்டார்.

கே: ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைச் சமாளிப்பது எப்படி?

ப: இதில் என் தோல்வியை நான் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். இன்று நான் கூறுவதெல்லாம் வனாந்தரத்தில் எழுப்பும் ஒலியாகவே இருக்கிறது என்பதை அறிவேன். என்றாலும், நான் கூறுவது ஒன்றே அனுபவ சாத்தியமான பிரசாரம் என்றும் கூறுவேன். ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிலர், காருண்யமற்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதனால் அச்சமூகம் முழுவதையுமே கண்டித்து வெறுத்துத் தள்ளிவிட வேண்டும் என்ற கருத்தை நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ளவே முடியாது. ஹிந்துக்களை முஸ்லிம் லீக் தூஷிக்கலாம். இந்தியா, ஜிகாத் (மதப் போர்) சட்டம் வரும் தாருல் ஹார்ப் (போர்க்களம்) என்றும் லீக் கூறலாம். காங்கிரஸுடன் ஒத்துழைக்கும் முஸ்லிம்களெல்லாம் துரோகிகள், அவர்களை ஒழித்துவிட வேண்டியதே என்றும் சொல்லலாம். ஆனால், அவர்கள் இப்படியெல்லாம் மோசமாகப் பேசி வந்தாலும், எல்லா முஸ்லிம்களுடனும் சிநேகத்துடனிருந்து அவர்களை நமது அன்பின் கைதிகளாக நாம் இறுகப் பிடித்துக்கொண்டு விடுவதை மாத்திரம் நாம் விட்டுவிடக் கூடாது. லட்சக்கணக்கான ஹிந்துக்கள் திருப்பித் தாக்குவதோ, உள்ளத்தில் கோபமோ இல்லாமல், தாங்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்டுவிடுவதற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ளுவது இப்போதைக்குச் சாத்தியமானதாக இருக்க வேண்டும். அகிம்சை, ஒன்றுக்கும் உதவாதது, நடக்காத காரியம் என்று நியாயமாகவே ஏளனம் செய்யப்படுகிறது. என்றாலும், ஹிந்து தருமத்தை உயிரோடு வைத்திருப்பதற்கும், இந்தியா பிரிவினையாகாமல் இருப்பதற்கும் இது ஒன்றுதான் வழி என்று கூறுவேன். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கான காங்கிரஸ் சரித்திரம் இதை நமக்குப் போதித்

திருக்கவில்லையென்றால், அது நமக்கு எதையுமே போதிக்கவில்லை என்றே ஆகும்.

கே: காங்கிரஸைப் பகிரங்கமாக எதிர்த்துக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளைச் சமாளிப்பது எப்படி?

ப: ஹிந்து-முஸ்லிம் பிரச்னை சம்பந்தமாக நான் கூறியிருக்கும் கொள்கையே, கம்யூனிஸ்டுகள் விஷயத்திலும் பொருந்தும். 'முஸ்லிம்கள்' என்று நான் கூறுவது, முஸ்லிம் லீகையே. ஏனெனில், எல்லா முஸ்லிம்களும் முஸ்லிம் லீகர்கள் அல்ல. இந்திய முஸ்லிம்களான பத்து கோடிப் பேரும் இன்று மூழ்கடிக்கப்பட்டு அடியோடு நாசமாக்கப்பட்டுவிடும் அபாயத்தில் இருக்கிறார்கள் என்றும், தங்களுக்கென்று அவர்கள் தனி ராஜ்யத்தை அமைத்துக்கொண்டு விடாது போனால், அந்த ஆபத்திலிருந்து தப்ப முடியாது என்றும் முஸ்லிம் லீகர்கள் இன்று கோஷமிட்டு வருகிறார்கள். இந்தக் கோஷம், அசல் பீதியைக் கிளப்பிவிடும் வேலை என்றே கூறுவேன். இந்திய மக்களில் நான்கில் ஒரு பகுதியினர் முஸ்லிம்கள். அப்படியிருக்க இவர்களை யாரும் நிரந்தரமாக நசுக்கி அழித்துவிடுவார்கள் என்று கூறுவது மடத்தனமாகும். பாகிஸ்தான் வேண்டும் என்று கேட்பதில் நியாயம் இருக்கிறது, அதனால் இஸ்லாமுக்கு நன்மை உண்டு என்பதை நான் நிச்சயமாக அறிவேனாயின், பாகிஸ்தான் கோரிக்கைக்கு உடன்பட்டுவிட நான் தயங்கவேமாட்டேன். ஆனால், முஸ்லிம் லீக் கேட்கும் வகையிலான பாகிஸ்தான், இஸ்லாமுக்கே விரோதமானது என்பதை நான் நிச்சயமாக அறிகிறேன். எனவே, அது பாவமானது என்று சொல்ல நான் தயங்கவில்லை. மனித வர்க்கத்தின் ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையுமே இஸ்லாம் போதிக்கிறதேயன்றி, மனித குடும்பத்தின் ஒருமைப்பாட்டைக் குலைப்பதற்கு அது போதிக்கவில்லை. ஆகையால், இந்தியாவை ஒன்றுக்கொன்று போரிட்டுக்கொண்டிருக்கும் கோஷ்டிகளாகப் பிரிக்க விரும்புகிறவர்கள், இந்தியாவுக்கும் இஸ்லாமுக்கும் விரோதிகளே ஆவர். அவர்கள் என்னைத் துண்டு துண்டாக வெட்டிப் போடலாம்; ஆனால், தவறானது என்று நான் கருதும் ஒன்றை நான் ஏற்றுக்கொண்டுவிடும்படி அவர்கள் என்னைச் செய்துவிட முடியாது.

(ஸ்ரீ பியாரிலால் எழுதியது)

புது டில்லி, 30—9—'46 —'ஹரிஜன்' –6—10—1946

13

# இருண்டு வரும் நிழல்

கொல்லப்படுவது, கத்தியால் குத்தப்படுவது ஆகியவை எல்லா இடங்களிலும் நடந்து, இவ்வாரம் அடி வானம் அதிகமாக இருளடைந்துகொண்டு வருகிறது. காந்திஜி பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:

"அதிகச் சோதனையான சமயத்தில் நாம் இப்பொழுது இருந்துவருகிறோம். கத்திக் குத்துச் செய்திகள் கல்கத்தா, டாக்கா, அலகாபாத், பம்பாய் ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. இதில் அதிக மோசமானது என்னவெனில், இவையெல்லாம் மதத்தின் பெயரால் செய்யப்பட்டு வருவதுதான். ஒரு பாவமுமறியாதவர்களைக் கத்தியால் குத்துவதும், கொலை செய்வதும், தாக்கும் செயலாயினும் பதிலுக்குச் செய்யப்படுவதானாலும், எவ்விதத்தில் மதத்தின் லட்சியத்திற்கு உதவுவதாக முடியும் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. நாம் செய்யும் மிக மிகச் சிறு காரியத்திற்கும் கடவுளை சாட்சியாகக்கொள்ள வேண்டும் என்பதை மதம் அவசியமான தாக்குகிறது. சற்று நேரத்திற்கு முன்னால் பிரார்த்தனையின் போது பாடப்பட்ட மீராவின் கீதத்தில், தன் உதவிக்கு வந்து தன்னைத் துயரிலிருந்து காக்குமாறு பக்தை வேண்டுகிறாள். ஏனெனில், கடவுள் ஒருவரே காக்க முடியுமேயன்றி வேறு யாராலும் அது முடியாது. நமது பிரார்த்தனை மனப்பூர்வமானதாக இருக்குமாயின், அவரையே நாம் முற்றிலும் நம்பி வாளைத் தூரத்தில் வைத்துவிட வேண்டும். ஒரு கட்சியினர் இவ்விதம் செய்தால்கூட பலாத்காரம் நின்றுவிடும்.

''கல்கத்தாவில் சமீபத்தில் நடந்ததைப் போன்றதோர் நிலையில் தாங்கள் எப்படி நடந்துகொள்ளுவது என்பதைக் குறித்து, ஒரு முக்கியமான வங்காள நண்பர் என்னைச் சில கேள்விகள் கேட்டிருக்கிறார். ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு தரப்பினருமே தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்குக் கத்தியையும் தடியையும் உபயோகிப்பதை நிறுத்திவிட்டு, திருப்பித் தாக்காமல் துன்பத்தை அனுபவித்துக்கொள்ளுவது என்பதையே கேடயமாகக் கொண்டு விடுவார்களாயின் அவர்கள் பத்திரமாக இருப்பார்கள் என்பதுதான் அக்கேள்விகளுக்கு என் பதில். சில உறவினர்களோ, மற்றவர்களோ இறந்துவிட்டார்கள் என்று நண்பர்களிடமிருந்து தினமும் எனக்குக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவர்கள் இறந்துவிட்டதற்காகத் துக்கப்படக்கூடாது. அவர்களுடன் சேர்ந்து நானும் துக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது என எல்லோருக்கும் நான் எழுதினேன். கடவுளிடம் நமக்கு

திடமான நம்பிக்கை மாத்திரம் இருக்குமாயின், அழிவது பூத வுடலேயன்றி அதனுள் இருக்கும் ஆன்மா அல்ல என்பதை நாம் உணர்ந்துகொள்ளுவோம். மனிதன் இறப்பதற்கே பிறக்கிறுன். பிறப்பு எவ்விதம் இயற்கையானதோ, அது போன்று சாவும் இயற்கையானது. ஆகவே, கடவுள் நமக்கு இயற்கையான சாவை அளித்தாலும், ஒரு கொலேகாரனின் கத்தியால் மடிந்தாலும், முடிவை நாம் புன்முறுவலுடனேயே ஏற்க வேண்டும். அப்பொழுது, இன்று கத்திகளும் தடிகளும் எங்கும் காட்சியளிப்பதுபோல் காட்சியளிக்கமாட்டா. ஆகையால், வெளி உதவி எதையுமே எதிர்பாராமல் கடவுளின் பாதுகாப்பு ஒன்றிலேயே முற்றிலும் நம்மை ஒப்படைத்துக்கொள்ளும் உயிர் நம்பிக்கையை அளிக்குமாறு கடவுளேப் பிரார்த்தித்துக்கொள்ளுவீர்களா? பக்தர்களுக்கு அருள் புரிய ஆண்டவன் என்றும் தவறுவதில்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கட்டும்.''

[ஸ்ரீ பியாரிலால் எழுதியது]

புதுடில்லி, 1—10—1946 —'ஹரிஜன்' – 6—10—1946

## 14

# கருணையின் செயல்

நேதாஜி போஸின் இந்திய தேசீய ராணுவத்தில் முன்பு இருந்தவரான ஒரு பட்டாணியர் இப்பொழுது ஒரு தொழில் ஸ்தாபனத்தில் வேலே செய்து வருகிறுர். பத்து வயதுச் சிறுவன் ஒருவனேப் பாதுகாக்க அவர் முயற்சி செய்தார். அவர் என்ன சொல்லிப் பார்த்தும் முடியாது போயிற்று. தாக்க வந்தவர்கள் அச்சிறுவனேயும் பட்டாணியரையும் குத்திவிட்டார்கள். சிறுவன் மாண்டு போனுன்; பட்டாணியர் உயிருடன் இருக்கிறுர். இறந்து போன சிறுவனின் தந்தை, பட்டாணியரின் வீரத்திற்காக ரூ. 4,000 வெகுமதியளிக்க முன் வந்தார். ஆனல் அவரோ, தாம் கடமையையே செய்ததாகவும், அதற்காக எந்த வெகுமதியையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறி வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார். இத்தகைய சம்பவங்கள் பெருக்கப்படமாட்டாவா!

புதுடில்லி, 28—9—1946 —'ஹரிஜன்' - 6—10—1946

# 15

# "கருணை மழையாக வந்து பொழிக"

இந்தப் பைத்தியக்கார வெறித்தனம் என்று முடிவுறும்? கல்கத்தாவில் படுகொலைகளும் டாக்கா, ஆக்ரா, அகமதாபாத், பம்பாய் ஆகிய இடங்களில் கத்திக் குத்துகளும் நடந்துவருகின்றன. விஷமிட்டுக்கொல்லும் வித்தை நடந்து வருவதையும் இத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும். இழிச் செயலின் சிகரமான இக்காரியங்களை இந்தியா செய்துகொண்டிருக்க வேண்டுமா? ஊழல்கள் மிகுந்துவிடுவது, அவநம்பிக்கையும் குற்றங்களும் மிகவும் அதிகமாகிவிடுவதில்தான் போய் முடியும் என்பது இந்தியாவின் பழமையான பழமொழி. இந்தியாவின் கதி இதை எடுத்துக் காட்டுவதாகத்தான் இருக்கிறதா? ஆங்கிலப் பஞ்சாங்கத்தின்படி அக்டோபர் 2-ஆம் தேதி காந்திஜி பிறந்த தினம். அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் பேசியபோது, நடந்து வரும் மோசமான நிகழ்ச்சிகளைக் குறித்து தம் மனத்தில் இருந்த வேதனைகளையெல்லாம் கொட்டிவிட்டார். கவியின் கொள்ளுப் பேத்தியான ஸ்ரீமதி நந்திதா கிருபளானி, அப்பொழுதுதான் தமது இனிய தொனியில் கவியின் கீழ்க்கண்ட கீதத்தைப் பாடினர்:

கல்லாகி நெஞ்சம் வறண்டிடும் போதினில்
　　கருணை மழை பொழிய வாராய்
கனிவுநயம் என்வாழ்வில் காணாத வேளையில்
　　கானமாய்ப் பாய்ந்து வாராய்

ஆரவாரச் செய லெழுப்பிடும் இரைச்சலில்
　　அகப்பட்டுத் தவிக்கும் போது
அமைதியும் சாந்தமும் பொங்கவெனை நாடிவந்
　　தருளுவாய் மௌன குருவே.

ஏழ்மைக்கு இடமான என்னிதயம் மூலையில்
　　ஏங்கிக் கிடக்கும் போது
வாழ்வு தரும் மன்னனே மணிமகுடதாரியாய்
　　வாயிலைத் திறந்து வாராய்

மூடமதி ஆசையெனுந் தூசியால் குருடாகி
　　மோகத்தில் மூழ்கும் போது
மூடாத விழியுடைய புனிதனே மின்னலுடன்
　　முழங்குமிடி யாகி வாராய்

அந்தக் கீதத்தின் மீது காந்திஜி கூறியதாவது: "கடவுள் எனக்கும் உங்களுக்கும் இக்கவிதையின் மூலம் ஒரு விசேஷச் செய்தியை அனுப்பியிருப்பதைப் போன்றே இது இருக்கிறது.

வாழ்வின் ஊற்றே இன்று இந்தியாவில் வற்றிப் போய் விட்டது என்று தோன்றுகிறது. தலைமையில் காங்கிரஸ் மந்திரி சபை இருப்பதால் எல்லாம் சரியாகவே ஆகிவிடும் என்று நாம் நினைத்துவிடுவதானல் அது பைத்தியக்காரத்தனம். வெறும் பிரமையினலும் தாசியினலும் நம் மனமெல்லாம் குருடாகிக் கிடக்கும் இச்சமயத்தில் ஆண்டவன், தனது பயங்கரமான மின்னலினலும் இடியாலும் நம்மை எழுப்ப வந்திருப்பதைப் போன்றது இப்பொழுது இருக்கும் நிலைமை.

"வசைகள் நிறைந்த கடிதங்கள் எனக்கு வந்துகொண்டிருக்கின்றன. என்னுடைய அகிம்சைத் தத்துவம் ஹிந்துக்களைப் பேடிகளாக்கிவிட்டது என்றும், நான் மகாத்மா அல்ல என்றும், நான் ஹிந்துக்களுக்குத் தீமையை உண்டாக்கி அவர்களைத் தவருன வழியில் கொண்டு போகிறேன் என்றும் அக்கடிதங்களில் கூறியிருக்கிருர்கள். நான் மகாத்மா என்று எப்பொழுதுமே நான் சொல்லிக்கொண்டதில்லை. எல்லோரையும் போலவே நானும் ஒரு சாதாரண மனிதனே. நான் யாருக்கும் தீங்கு செய்ததில்லை என்றே நம்புகிறேன். நான் சொல்லுவதெல்லாம், உங்கள் நன்மைக்கும், எல்லோருடைய நன்மைக்குமேயாகும். அகிம்சையுடன் நடந்துகொள்ள உங்களால் முடியாவிட்டால், கோழைகளாக இருந்துவிடுவதைவிட பலாத்காரத்தைக்கொண்டு நீங்கள் உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்றுதான் உங்களுக்கு நான் சொல்லி வந்திருக்கிறேன். ஆனல், உடலாலும் மனத்தாலும் திருப்பித் தாக்காமல் புன்னகை தவழும் முகத்தோடு ஒரு சகோதரனின் கையால் மடியத் துணியும் ஆற்றல் மிக உயர்வான வீரமாகும். சண்டைக்கு என்றே சீர்கெடுத்துக் கொண்டுவிடுவது எந்தவிதத்திலும் சரியானதே அல்ல. அது தற்பாதுகாப்பும் ஆகாது. அது உங்களுக்கும் கெடுதல், நாட்டுக்கும் தீமை. உங்கள் தலைவர்களிடமும் இது விசுவாசமில்லாத செயலாகும். சுயராஜ்யத்தை நோக்கிப் போவதையும் இது தடைசெய்கிறது. இன்று விருந்துண்பதற்கோ, தேவைக்கு மேல் ஒரு கவளம் அதிகமாகச் சாப்பிடுவதற்கோ யாருக்கும் உரிமை இல்லை என்பதை வற்புறுத்திக் கூறுகிறேன். கட்டுப்பாடான வழியில் நீங்கள் நடந்துகொண்டால், இந்தியா வாழ முடியும். அவ்விதம் செய்யாது போனல், இந்தியா செத்துவிடும்; நீங்கள் தலை நிமிர்ந்து வாழவும் முடியாது."

விடியும் வேளை வரும் சமயத்தில்தான் இருள் அதிகமாக இருக்கிறது. விஷயம் சீர்பட்டு விடுவதற்கு முன்னல் அதிக மோசமாவதும் இயல்பு. இந்திய வானை இதுவரையில் இருள் மயமாக்கி வந்த இருண்ட மேகங்கள், செய்யப்பட்ட பிரார்த்தனைகளினலும், வேதனையடைந்த உலகின் நல்லாசியினலும், நீங்கிவிடப் போகின்றன என்றே தோன்றுகிறது. தேசீய இடைக்கால அரசாங்கத்தில் கடைசியாக இருந்து வந்த இடைவெளி, முஸ்லிம் லீகும் மந்திரி சபையில் வந்து கலந்துகொண்டு விடுவதன் மூலம் தீர்ந்துவிடும் என்பதற்கான அறிகுறிகள், இதை

எழுதும்போது இருந்துவருகின்றன. இன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில், திங்கட்கிழமையானதால் காந்திஜி பேசவில்லை. ஹிந்துஸ்தானியில் அவர் எழுதிய செய்தி கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. அதில் அவர் கூறியதாவது: "பேச்சு நடந்து வருகிறது. முஸ்லிம் லீகும் மந்திரி சபையில் சேரும் என்று நம்ப இடமுண்டாகியிருக்கிறது. *1916*-இலும், கிலாபத் இயக்கக் காலத்திலும் ஏற்பட்டதைவிட மிகவும் ஆழ்ந்ததாகவும், நீண்ட காலம் நீடிப்பதாகவும் இச்சமயம் காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீகுக்கும் ஏற்படப்போகும் ஒற்றுமை இருந்துவர வேண்டும் என்றும், சகோதரன் சகோதரனைத் தூஷிக்கவோ, கொல்லவோ மாட்டான், எல்லோரும் அமைதியாக வாழ வேண்டும் என்றும் நீங்கள் எல்லோரும் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறேன்."

[ஸ்ரீ பியாரிலால் எழுதியது]

புது டில்லி, 7—10—1946 —'ஹரிஜன்' - 13—10—1946

# 16

# காலித்தனத்தின் ஆவேசம்

ஜபல்பூரில் ஒரு கிறிஸ்தவப் பெண்கள் பள்ளிக்கூடத்தின் நிதிக்காக நடந்த ஒரு நிகழ்ச்சியின்போது ஹிந்துக்களில் ஒரு பகுதியினர் காட்டிவிட்ட காலித்தனத்தைக் குறித்து ஒருவர் எனக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் விவரித்திருக்கிறார். உண்மையில் ஒரு ஹிந்து நண்பர்தான் இக்காட்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். நடந்த சிறு நாடகத்தில் நடித்தவர்களெல்லோரும் அப்பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த பெண்கள். நிகழ்ச்சியின் முடிவில் ஒரு காட்சியில் ஒரு அனாதைப் பெண், உலகமே வெறுத்துப் போய் கடவுளைப் பிரார்த்திக்கிறாள். தேவகன்னிகைகள் பிரசன்னமாகின்றனர். அவளுடைய கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொள்ளும்படி அப்பெண்ணுக்கு உபதேசிக்கிறார்கள். ஏசுவைப் பாராட்டும் கீதம் பாடப்பட்டு அந்நிகழ்ச்சி முடிவடைகிறது. அமளிக்கு அதுவே சமிக்ஞையுமாகியிருக்கிறது. கலவரம் செய்த ஹிந்துக்கள், கிறிஸ்தவ சமயத்தை எதிர்த்துக் கூச்சல் போட்டு அமளி செய்திருக்கின்றனர். நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தவர் பேச முயன்றார். ஆனால், அவரைப் பேசவிடவில்லை. வாங்கிய டிக்கெட்டுப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஏசுவைப் புகழ்ந்து பாடியதற்குப் பதிலாக ஸ்ரீ கிருஷ்ணனைப் புகழ்ந்து பாடியிருந்தால், இந்த அமளி செய்யப்பட்டிருக்குமா என்று எனக்குக் கடிதம் எழுதியிருப்பவர் கேட்கிறார்.

இவர் எழுதியிருப்பது உண்மையாக இருக்குமானால், அதில் விவரிக்கப்பட்டிருக்கும் நடத்தை மகாமோசமானதாகும். சகிப்புத் தன்மை இல்லாது போனது, அளவுக்கும் மிஞ்சிப் போயிருக்கிறது என்பதையே இச்சம்பவம் காட்டுகிறது. தங்கள் போக்குக்குப் பிடித்தமில்லாத காரியங்களை விரும்பாதவர்கள், அக்காரியங்களுக்கு ஆதரவளிக்க வேண்டியதில்லை. ஆனால், காரியம் தங்களுக்குப் பிடித்தமானதாக இல்லை என்பதற்காக, மனிதர் செய்யக்கூடியதற்கும் கீழ்த்தரமான காரியங்களைச் செய்ய முற்பட்டுவிடுவது கண்ணியக் குறைவானதாகும்.

புது டில்லி, 5—10—'46 —'ஹரிஜன்' – 13—10—1946

# 17

# ஹிந்து தேநீர், முஸ்லிம் தேநீர் !

ரெயில்வே நிலையங்களில் ஹிந்து தேநீர், முஸ்லிம் தேநீர் விற்கப்படுகிறது. சில சமயங்களில் இந்த இரு சமூகத்தினருக்கும் தனித்தனி சாப்பாட்டு ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. ஆனால், ஹரிஜனங்களுக்கு எந்த ஏற்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. இவையெல்லாம் நமது பரிதாபகரமான நிலைமைக்கு அறிகுறியாவதோடு, இது பிரிட்டிஷ் நிர்வாகத்திற்கு ஓர் இழுக்காகவும் ஆகிறது. மத சம்பந்தமான விஷயங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் குறுக்கிடுவதில்லை என்பதை அறிய முடிகிறது. ஆனால், இரு சமூகத்தினருக்கும் தேநீரையும் தண்ணீரையும் கொடுப்பதற்குத் தனித்தனியான ஏற்பாட்டை அரசாங்கம் செய்வது என்பது, பிரிவினை செய்துவைப்பதற்கு அங்கீகார முத்திரையிட்டு விட்டதாகவே ஆகும். ரெயில்வேயும் ரெயில்வே போக்குவரத்தும் பொன்னான வாய்ப்பை அளிக்கின்றன. சமூக சீர்திருத்தம் செய்வதற்கும், சுத்தம், சுகாதாரம், நல்ல பழக்கம், சமூக ஒற்றுமை ஆகியவற்றைப் பொது ஜனங்கள் கற்றுக் கொள்ளுவதற்கும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தலாம். எனினும், இதற்கு மாறாக, இப்பொழுது வருந்தத்தக்க வகையில் இக்குறைபாடுகள் சம்பந்தமாக அசிரத்தையும் உதாசீனமுமே காட்டப்பட்டு வருகின்றன. ரெயில் பிரயாணம், தீய பழக்கங்களையும் கெட்ட வழக்கங்களையும் குறைப்பதற்குப் பதிலாகப் பலப்படுத்திக்கொண்டு வருகின்றன. முதல், இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளுக்கு அதிக வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து ஆடம்பரப் பழக்க வழக்கங்களை வளர்க்கிறார்கள். ரெயில்வே வருமானம் முக்கியமாக மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளிடமிருந்துதான் வருகிறது. ஆயினும், அவர்களுக்கு மிகச் சாதாரணமான வசதிகளும் மறுக்கப்படுவதோடு, எல்லா விதமான கஷ்டங்களுக்கும் அவர்கள் ஆளாக்கப்படுகின்றனர்.

இவ்விரு சாராருமே, அவர்களுடைய பலவீனத்தினால்தான் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர். இதுவும் போதாதென்று ரெயில்வே அதிகாரிகள் பிரிவினையையும் தீண்டாமையையும் அங்கீகரித்துவிடுவதென்றால் அதுவே முடிவானதாகிவிடுகிறது. யாராவது ஒரு பிரயாணி, தனக்குச் சில விலக்குகளை விதித்துக் கொள்ள விரும்புவாரானால், அவர் தமது சொந்த ஏற்பாட்டின் பேரில் அவ்விதம் செய்துகொள்ள அவருக்கு உரிமை உண்டு. சாப்பிடாமலும் தண்ணீர் குடிக்காமலும் அவர் கஷ்டப்பட்டுக் கொள்ளுவதைப்பற்றி யாருக்கும் கவலை இல்லை. ஆனால், ரெயில்வே அதிகாரிகள் தமக்கு விசேஷ வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று மாத்திரம் அவர் கேட்காமலிருக் கட்டும்.

சைவ உணவும், மாமிச சாப்பாடும் தனித்தனியாகப் பரிமாறியாக வேண்டியிருக்கிறது என்பது வேறு விஷயம். இது இப்பொழுதுதே செய்யப்பட்டு வருகிறது.

['ஹரிஜன் - சேவக்' பத்திரிகையிலிருந்து எடுத்தது.]

புனா, 7—3—'46 'ஹரிஜன்' – 17—3—1946

# 18

# அதிர்ச்சி தரும் வெட்கக்கேடு

இந்திய ரெயில்களில் புதிதாகப் பிரயாணம் செய்யும் அந்நியர் ஒருவர், ரெயில்வே நிலையங்களில் ஹிந்து நீர் அல்லது முஸ்லிம் நீர், தேநீர் என்று கூவப்படும் வெட்கக்கேட்டை தமது வாழ்க்கையில் முதன் முதலாக அறிந்து வருந்தி அதிர்ச்சியையே அடைந்துவிடுவார். தலைமையில் முற்றிலும் தேசீய மயமான அரசாங்கம் இருந்து வருகிறது. அதோடு மிகப் பிரபலமான ஆஸப் அலி சாகிப், போக்குவரத்து, ரெயில்வே மந்திரியாகவும் இருக்கிறார். ஆகவே, இப்பொழுது மேற்கண்டவாறு நடந்து வருவது அதிக வெறுக்கத்தக்கதாகவே இருக்கும். இந்தியாவுக்கே உரித்தானதாக இருக்கும் இந்த வெட்கக்கேடு, கடைசியானதாக இருக்கும் என்றே நம்ப வேண்டும். ரெயில் போக்குவரத்து ஒரு முஸ்லிமின் தலைமையில் இருக்கிறது என்றும், அதனால் ஹிந்துக்களுக்கு நியாயம் கிடைக்காது என்றும் யாரும் எண்ணிவிட வேண்டாம். தலைமை, மாகாண அரசாங்கங்களில், ஹிந்து-முஸ்லிம் அல்லது மற்ற வகுப்பு வித்தியாசங்கள் இல்லை; இருக்கவும் கூடாது. எல்லோரும் இந்தியர்களே. மதம், ஒருவரின் சொந்த விஷயம். மேலும் மந்திரி சபையில் இருப்பவர்கள் ஒரு நல்ல முறையை அனுசரித்து வருகிறார்கள். ஒரு நாளின் வேலை முடிந்ததும் எல்லா மந்திரிகளும் கூடி, ஒவ்வொரு மந்திரி

யும் என்ன வேலை செய்திருக்கிறார் என்பதைப் பார்த்துக் கொள்ளுவதுதான் அந்தமுறை. இவர்கள் ஒன்றுபட்டு வேலைகளைச் செய்துவருகின்றனர். மந்திரிகள், ஒருவர் செய்யும் வேலைக்கு மற்றவர்களும், கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். ஒரு விஷயம், ஒரு மந்திரி நிர்வகிக்கும் இலாகா சம்பந்தமான வேலையல்ல என்பதற்காக, அதற்குத் தாம் பொறுப்பில்லை என்று எந்த மந்திரியும் தட்டிக் கழித்துவிட முடியாது. ஆகையால், ரெயில்வே நிலையங்களில் ஒவ்வொரு சமூகத்திற்கும் எல்லாம் தனித்தனியாக இருப்பது என்ற அக்கிரமப் பழக்கம் ஒழிந்துவிடும் என்று நாம் எதிர் பார்க்க உரிமை உண்டு. யாருக்கும் அசிங்கமில்லாத வகையில் சுத்தமாக இருப்பது எல்லோருக்குமே விரும்பத்தக்கதே. நீர், தேநீர் போன்றவைகளைக் குழாய்மூலம் திருகிவிட்டு எடுத்துக் கொள்ளும் வகையில் வைத்துவிட்டால், அதிக வைதிகமாக இருப்பவர்கள் தாமே எடுத்துக்கொண்டு விடலாம். எளிதில் திருப்தியடைந்துவிட முடியாதவராக இருப்பவர், சொந்தத்தில் லோடாவோ, கோப்பையோ வைத்துக்கொண்டால் தமக்கு வேண்டிய பால், தேநீர், காப்பி, நீர் ஆகியவைகளைத் தாமே குழாயைத் திருகிவிட்டு எடுத்துக்கொள்ளலாம். மத விஷயத்தில் குறுக்கிடுவது என்பது எதுவும் இதில் இல்லை. ரெயில்வே நிலையங்களில் ஏதாவது வாங்கி சாப்பிட்டுதான் ஆகவேண்டும் என்று எவரையும் யாரும் கட்டாயப்படுத்தவில்லை. உண்மையில், பல வைதிகர்கள், பிரயாணத்தின்போது எதுவும் சாப்பிடாமல், நீரும் அருந்தாமல் பட்டினியாகவே இருந்து விடுகின்றனர். என்றாலும், நாம் ஒரே காற்றை சுவாசித்து ஒரே தாய் பூமியில்தான் நடமாடிக்கொண்டிருக்கிறோம்.

குறைந்த பட்சம் ரெயில் நிலையங்களிலாவது வகுப்புகளைக் குறிப்பிட்டுப் போடும் கூச்சல்கள் சட்ட விரோதமானவைகளாக வேண்டும்.

இப்பத்திரிகையில் அடிக்கடி நான் கூறிவந்திருப்பதைப் போல, பழுதற்ற சுத்தம், சுகாதாரம், சுக வழி, இந்தியாவிலிருக்கும் பல்வேறு சமூகத்தினரிடையே ஒற்றுமை ஆகியவற்றை லட்சக்கணக்கானவர்களுக்குப் போதிப்பதற்கு ஏற்ற சாதனங்களாக இருப்பவையே நமது ரெயில்களும் கப்பல்களும். மந்திரி சபையினருக்கு, அவர்களுடைய கொள்கையை அனுசரித்துக் காரியங்களைச் செய்யும் தைரியம் இருக்கும் என்று நம்புவோமாக. மிகவும் அவசியமானதான இந்தச் சீர்திருத்தம், முழு வெற்றியையும் அடைவதற்கு ரெயில்வே சிப்பந்திகளும் பொதுமக்களும் மனமார ஒத்துழைப்பை அளிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.

புது டில்லி,–12—10—'46 —'ஹரிஜன்' – 20—10—1946

## 19

# ஒரே மாதிரியான உடை பரிகாரமாகுமா?

**கேள்வி:** இந்தச் சென்ற நான்கு வாரங்களில் எவ்வளவோ ரத்தக் களரி நடந்திருப்பதையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் பார்த்துவிட்டேன். இதனால் எனக்கு அதிக வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. கலவரங்கள் ஆரம்பமானதிலிருந்து ஒவ்வொரு நாளும், அமைதியை நிலைநாட்டு வதற்கு முயற்சிக்கும் மாஜிஸ்டிரேட்டாக நான் இருந்து வந்திருக் கிறேன். ஒவ்வொரு இந்தியரும் ஒரே மாதிரியான தேசீய உடையை அணியவேண்டும் என்று வற்புறுத்தியாக வேண்டியது அவசியம் என் பதை, முன்பைவிட இப்பொழுது நான் அதிக பலமாக உணருகிறேன். இதே விஷயத்தை இதற்கு முன்பும் அறிவித்திருக்கிறேன் என்பது தங்களுக்கு நினைவிருக்கும். ஆனால், என் கருத்தை அப்பொழுது தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஷர்ட்டும் கால் சட்டையும் அணிந் திருப்பவர்கள் யாரும் கத்திக் குத்துக்கு ஆளாகாமல் தப்பியிருப்ப தற்கு என்ன காரணம்? உடை, மத வித்தியாசத்தை மிகைபடுத்தி விடுகிறது என்பதற்கு இது திட்டமான ஆதாரமாகும். எல்லோரும் ஒரே மாதிரியான உடையை அணிவதனால் வகுப்புக் கலவரங்கள் சீக் கிரத்தில் தீர்ந்துவிடும் என்று நானும், என்னைப் போன்று கருதுகிறவர் களும் எண்ணுகிறோம். இதற்கு உங்கள் பதிலை 'ஹரிஜன்' பத்திரிகை மூலம் அறிவித்தால் மகிழ்ச்சியடைவோம்.

**பதில்:** நன்கு விஷயமறிந்த, நல்லெண்ணமுள்ள ஒரு நண்பர் எழுதியுள்ள இக்கடிதத்தைப் பிரசுரிக்கிறேன். இம்மூன்று குணங்களும் சேர்ந்திருக்கின்றன என்பதனால் அவருடைய கருத்தும் தெளிவானதாகவே இருக்கும் என்பதில்லை. இப் பொழுது வேண்டியதெல்லாம், உள்ளத்தில் ஒருமைப்பாடே யன்றி உடையில் ஒருமைப்பாடு அல்ல. உடையில் ஒரே மாதிரியாக இருந்துவிடுவதனால், இப்பொழுது இருந்து வரும் நமது கஷ்டங்களெல்லாம் போய்விடும் என்ற கருத்து வீணானது என்பதை எடுத்துக்காட்டுவதற்கு, ஐரோப்பாவை நாம் பார்த்தாலே போதும். கெட்ட எண் ணம் கெட்ட காற்றைப் போன்றிருக்கிறது. அது போக வேண்டும். அதற்குப் பதிலாக நல்லெண்ணமாகிய சிறந்த இனிய காற்று வர வேண்டும்.

### ஏன் இந்த ரகசியம்?

**கே:** சகோதரன், சகோதரனைப் படுகொலை செய்துகொண்டு வரும்போது, எந்தச் சமூகத்தினன் எந்தச் சமூகத்தினனைக் கொன்றான் என்ற பெயரை மாத்திரம் வெளியிடாமல் மறைத்து வைத்திருப்பது ஏன் என்பதைக் கூறுவீர்களா?

**ப:** இதே கேள்வி, என் மனத்திலும் அடிக்கடி எழுந்தது உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இப்பொழுது அதிகா

ரத்திலிருக்கும் தேசீய அரசாங்கம், முன்னால் ஆட்சி நடத்தி வந்த அதிகார வர்க்க வழியிலேயே இது நடக்கிறது என்பதைத் தவிர இந்த மூடுமந்திரக் கொள்கைக்கு வேறு எந்த விதமான காரணமும் இருப்பதற்கில்லை என்றே நம்ப வேண்டியிருக்கிறது. யார், யாரைக் குத்திக் கொன்றான் என்பது யாருக்குத் தெரியக்கூடாதோ அவர்களுக்குத் தெரிகிறது. இது யாருக்குத் தெரிய வேண்டுமோ அவர்களுக்குத் தெரியாதிருக்கும்படி செய்யப்படுகிறது. தங்கள் மதத்தினிடம் அதிக பக்தியுள்ளவர்களாக இருந்தபோதிலும், முதலிலும் முடிவிலும் தாங்கள் இந்தியர்களே என்பதில் பெருமை கொள்ளுபவர்கள் பலர் ஹிந்துக்களிலும், முஸ்லிம்களிலும், மற்றச் சமூகங்களிலும்கூட இருக்கிறார்கள் என்பது நிச்சயம். கண்மூடித்தனமான மத வெறியர்கள் விஷமம் செய்யாமலிருக்கும்படி அவர்களைத் தூண்ட தங்களாலானதைச் செய்யவும் இவர்கள் விரும்புகிறார்கள். இத்தகையவர்கள் பலரை நான் அறிவேன். பத்திரிகைகளில் வருவதைத் தவிர, உண்மையைத் தெரிந்துகொள்ளுவதற்கு இவர்களுக்கு வேறு வழி இல்லை. இருள் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படட்டும். அப்பொழுது இது சீக்கிரத்தில் அகற்றப்பட்டுவிடும்.

புது டில்லி, 12—10—'46 — 'ஹரிஜன்' – 20—10—1946

# 20

# சாவில் தழுவினர்

அன்று ஒரு நாள் பம்பாயில் ஒரு ஹிந்து, ஒரு முஸ்லிம் நண்பருக்குப் புகலிடம் தந்தார். ஹிந்துக் கூட்டத்தினர் இதனால் ஆத்திரமடைந்தார்கள். தங்களுக்கு முஸ்லிம் நண்பரின் தலை வேண்டும் என்று ஆரவாரஞ் செய்தனர். அந்த ஹிந்து, தன் நண்பனை அவர்களிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டார். ஆகையால், அவ்விருவரும் சாவில் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டுவிட்டனர் என்றே சொல்ல வேண்டும். இதுவே எனக்கு ஆதாரபூர்வமாக விவரிக்கப்படுகிறது. இத்தகைய வெறிச் செயல்களுக்கு நடுவில் இது முதல் சம்பவமும் அன்று. சமீபத்தில் கல்கத்தாவில் நடந்த ரத்தக் களரி சமயத்தில், முஸ்லிம்கள் தங்கள் ஹிந்து நண்பர்களுக்குப் புகலிடம் கொடுத்துக் காத்ததும், ஹிந்துக்கள் தங்கள் முஸ்லிம் நண்பர்களுக்குப் புகலிடம் கொடுத்துக் காத்ததும் போன்ற சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன. மனிதனிடம் தெய்விகமும் இருக்கிறது என்பது எங்கோ, எப்பொழுதோ காட்டப்படாமலிருந்திருக்குமாயின், மனித வர்க்கம் செத்து ஒழிந்துவிடும்.

ஒரு முஸ்லிம் கூட்டத்தினரின் கோபாவேசத்தைத் தணிப்பதற்காக இரு இளைஞர்கள் துணிந்து சென்றனர். தாங்கள் சாவது நிச்சயம் என்று தெரிந்திருந்தும் சாகவும் துணிந்தார்கள். பம்பாய் பிரதமர் ஸ்ரீ பாலாசாகிப் கேர், இச்சம்பவத்தைக்குறித்து மிகப் புகழ்ந்து கூறுகிருர். அந்த இளைஞர்கள், சாவை உண்மையான நண்பனைக அடைந்தார்கள். இத்தகைய தியாகத்தில், புனிதமான செயலில் இருக்கும் ஒப்பற்ற மதிப்பை, பரிகசிப்பவர் யாரும், மறுத்துவிடமுடியாது. இத்தகைய முயற்சி ஒவ்வொன்றும், பேச்சளவில் மாத்திரமே வெற்றி என்பதில் முடிந்திருக்குமானல், அது போலித் தியாகமாகவே இருக்கும். இத்தகைய சம்பவங்கள் போதிய அளவுக்குப் பெருகிவிடுமானல், மதத்தின் பெயரால் ஒவ்வொரு தரப்பிலும் நடந்து வரும் மதிகெட்ட படுகொலைகள் நின்றுவிடும் என்பது இதிலிருந்து பெறும் நிச்சயமான படிப்பினை. ஆனல், இதில் ஏமாற்றுதல் இருக்கக் கூடாது, போலி வீரம் இருக்கக்கூடாது என்பதுதான் இதில் அத்தியாவசியமானதோர் நிபந்தனை. நாம் உண்மையில் எப்படி இருக்கிறேமோ, அப்படியே வெளிக்கும் தோன்றுவோமாக.

புது டில்லி, 15—10—'46

—'ஹரிஜன்' – 20—10—1946

# 21

# முஸ்லிம் லீகுக்கு ஒரு வார்த்தை

**பி**ரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது:

"தன் மனத்தைத் தானே சோதித்துக் கொள்ளும்படி முஸ்லிம் லீகைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்துகொள்ளுவது என்று முஸ்லிம் லீக் முடிவு செய்திருக்கிறது. சகோதரர்களாக இருந்து வேலை செய்வதற்கே அது வருகிறது என்று நம்புகிறேன். அவர்கள் அவ்விதம் செய்வார்களானல் எல்லாம் சரியாக இருக்கும். முஸ்லிம்களைக் கொல்ல வேண்டாம், அவர்கள் மீது கெட்ட எண்ணத்தை மனத்தில் வைக்க வேண்டாம் என்று ஹிந்துக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதேபோலவே முஸ்லிம்களையும் கேட்டுக் கொள்ளுறேன். பாகிஸ்தானுக்காகப் போராட முஸ்லிம்கள் விரும்பினலும், நியாயமான வழியில் சகோதரர்களாகப் போராடுங்கள். பாகிஸ்தானில் சிறுபான்மையினர் முற்றிலும் காப்பாற்றப்படுவார்கள், ஒவ்வொருவருக்கும் நியாயம் கிடைக்கும் என்று காயிதே ஆஜம் கூறியிருக்கிருர். அவர்கள் எங்கே பெரும்பான்மையினராக இருக்கிருர்களோ அங்கே அவர்கள் பாகிஸ்தானில் இருப்பதைப் போன்றதாகவே இருக்கும். ஆகையால், ஹிந்துக்களை உடன்பிறந்த சகோதரர்களாகப் பாவிப்பதோடு, தங்களுக்கு இவர்கள் எதிரிகள் என்று எண்ணவேண்டாம் என்று முஸ்லிம்

களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இனி நடக்கப் போவது என்ன என்பதையே கிழக்குப் பாகிஸ்தானில் இன்று நடந்து வருவது காட்டுவதாக இருக்குமாயின், பாகிஸ்தானின் தீமையையே அது காட்டுகிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் உத்தரவாதமாக இருந்துகொண்டு, தங்களிடையே இருக்கும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த யாருக்கும் கொஞ்சமும் தீமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப் பிரதிக்ஞை செய்து கொள்ளுவார்கள் என நம்புகிறேன். இதைச் செய்ய இவர்கள் கற்றுக்கொண்டாலன்றி, இவர்கள் ஆட்சி அதிகார லகானைப் பிடிக்க முற்பட்டிருப்பது வெறும் குருட்டுத்தனமானது என்றே கூறுவேன். வங்காளத்தில் இப்பொழுது நடந்துகொண்டு வருவது, மனிதராகப் பிறந்தவர்கள் செய்யக்கூடிய காரியமே அன்று. முதலாவதாக, மனிதராக இருப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்துகொள்ளுவது என்று முஸ்லிம் லீக் முடிவு செய்தது நற்சகுனமாக இருக்கக்கூடும் என்று நம்பினேன். ஆனால், முஸ்லிம் லீக் நியமிக்கக் கொடுத்திருக்கும் பெயர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பெயரையும் சேர்த்துக் கொண்டிருப்பது, அந்த நம்பிக்கைக்கு அதிர்ச்சியையே உண்டாக்குவதாகிறது.* ஹரிஜனுக்கு மந்திரி சபையில் இன்னுமொரு ஸ்தானமும் கிடைப்பதைக் குறித்து, என்னைப் போன்ற ஒருவர் சந்தோஷமே அடைவார் என்று கருதப்படலாம். ஆனால், அப்படி நான் மகிழ்ச்சியடைவேனாயின், என்னை நானே ஏமாற்றிக்கொள்ளுவதோடு காயிதே ஆஜம் ஜின்னாவையும் ஏமாற்றுவதாகும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித் தனி தேசீய இனத்தினர் என்று ஸ்ரீ ஜின்னா கூறி வந்திருக்கிறார். முஸ்லிம் லீக் முற்றிலும் சமூக ஸ்தாபனம். அப்படியிருக்க அது, தங்களுக்குப் பிரதிநிதி என்று ஒரு ஹரிஜனை எப்படி நியமிக்க முடியும்? அவர்கள் இடைக் கால சர்க்காரில் பிரவேசிக்கும் போக்கே நேர்மையானதாக இல்லை என்றே அஞ்சுகிறேன். லீகுக்கு என்று இருக்கும் ஐந்து ஸ்தானங்களில் ஹரிஜன் ஒருவ

---

* காங்கிரஸ் எல்லா மதத்தினருக்கும் பொதுவான ஸ்தாபனமாக இருந்தும், ஹிந்துக்களின் ஸ்தாபனமே அது என்று ஸ்ரீ ஜின்னா விதண்டாவாதம் பேசி வந்தார். இடைக்கால அரசாங்கத்திற்கு மந்திரிகளை நியமிக்க வேண்டி வந்தபோது காங்கிரஸ், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸி, கிறிஸ்தவர் ஆகியவர்களை மந்திரிகளாக நியமித்தது. பின்னர் இடைக்கால சர்க்காரில் சேர்ந்துகொள்ளுவது என்று முஸ்லிம் லீக் முடிவு செய்தபோது, ஸ்ரீ ஜின்னா, தம் கட்சியின் சார்பில் கொடுத்த பெயர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரான ஸ்ரீ ஜோகேந்திர நாத மண்டலையும் சேர்த்துக் கொண்டார். இவர் வங்காளத்தைச் சேர்ந்த ஹரிஜன். இதையே மேலே காந்திஜி குறிப்பிடுகிறார். காங்கிரஸ் மற்ற சமூகத்தினரை மந்திரிகளாக நியமித்ததால் தாமும் முஸ்லிமல்லாத ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற வீம்பில் ஸ்ரீ ஜின்னா இவ்விதம் செய்தார். ஆனால் காங்கிரஸ், ஹிந்துக்களையும், முஸ்லிம் லீக் முஸ்லிம்களையுமே நியமிக்க வேண்டும் என்று தாம் வற்புறுத்தி வந்ததற்கு இது மாறான காரியம் என்பதை ஸ்ரீ ஜின்னா மறந்துவிட்டார்.

ரையும் தங்கள் பிரதிநிதியாக லீக் நியமித்திருப்பது, முக்கியமாக வங்காளத்தில் நடந்து வருவதைப் பார்க்கையில், தாராள எண்ணத்தின் பேரில் செய்யப்பட்டிருப்பதாக நான் காண முடியவில்லை. ஆகவே, சண்டை போடுவதற்கு என்றே இடைக்கால சர்க்காருக்குள்ளும் வருகிறார்களோ என்றுதான் நான் நினைக்க வேண்டியிருக்கிறது. என்றாலும், நான் பயப்படுவதெல்லாம் தவறு, சகோதரர்களாக இருந்து நாட்டிற்குப் பொதுவாகச் சேவை செய்வதற்காகவே வருகிறார்கள் என்று நிரூபணமாகும் என நம்புகிறேன். ஹரிஜன மந்திரி, தாம் சிறந்தவர், இந்தியாவின் சேவகர் என்பதை நிரூபிப்பார் என்றும் நம்புகிறேன்."

புது டில்லி, 18—10—'46 —'ஹரிஜன்' - 27—10—1946

# 22

# சரியான நேரப் பேட்டி

[காந்திஜி, ஸ்ரீ பிரஸ்டன் குரோவருக்கு 1946 அக்டோபர் 21-ஆம் தேதி பேட்டியளித்தார். இந்தச் சந்திப்பு புது டில்லியில் தோட்டிகள் காலனியில் நடந்தது. இப்பேட்டி, அமெரிக்க அசோஸியேடெட் பிரஸ் வெளியிட்ட விதத்தில் கீழே கொடுக்கப்படுகிறது.]

கிழக்கு வங்காளத்தில் கலவரம் மூண்டுவிட்டது. இதில் சில ஆயிரம் பேர் தங்கள் வீடு வாசல்களிலிருந்து விரட்டப்பட்டு விட்டனர். பலர் கொல்லப்பட்டதுடன் அநேகர் தூக்கிச் செல்லப்பட்டு விட்டனர். இவர்களின் தொகை இன்னது என்பது சரியாகத் தெரியவில்லை. இதைக்குறித்து இன்று ஒரு பேட்டியில் காந்திஜி கூறுகையில், வங்காளத்திலிருக்கும் முஸ்லிம் லீக் மந்திரி சபைக்கு, கிழக்கு வங்காளத்தில் மூண்டிருக்கும் கலவரத்தை அடக்க முடியும் என்றார். வங்காளக் கலவரம் "உள்ளத்தைப் பிளப்பதாக இருக்கிறது" என்றும் கூறினார்.

மத்திய மந்திரி சபையில் முஸ்லிம் லீகும் வந்து சேர்ந்து கொண்டதால் ஏற்பட்டிருக்கும் நிலையைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி விவாதிக்கப் போவதால், அக்டோபர் 23-ஆம் தேதி அதனுடனும் பண்டித நேருவோடும் தாம் விவாதித்த பிறகு, வங்காளத்தில் கலகம் நடந்து வரும் பகுதிகளுக்குப் போக தாம் விரும்புவதாக காந்திஜி மீண்டும் தெரிவித்தார்.

"நான் அங்கே போவதனால் ஆன்மாவுக்குத் திருப்தி ஏற்படுவதோடு கொஞ்சம் பயனும் ஏற்படக்கூடும்" என்று காந்திஜி கூறினார்.

"நீங்கள் கூறுவதை முஸ்லிம்கள் கேட்டு நடப்பார்களா?" என்று ஸ்ரீ பிரஸ்டன் குரோவர் கேட்டார். இதற்குக் காந்திஜி

கூறியதாவது: "அது எனக்குத் தெரியாது. எதையும் எதிர் பார்த்து நான் அங்கே போகவில்லை. ஆனால், அதை எதிர் பார்க்க எனக்கு உரிமை இருக்கிறது. தனது கடமையைச் செய்யப்போகும் ஒருவர், தனது கடமையை நிறைவேற்று வதற்கு வேண்டிய பலத்தைக் கடவுள் அருளுவார் என்று மாத்திரமே எதிர்பார்க்கிறார்."

இம்மாதிரியான கலவரங்கள் இந்தியாவில் எப்பொழுது நிற்கும் என்று கேட்டதற்குக் காந்திஜி கூறியதாவது: "இவை நின்றுவிடும் என்று நீங்கள் நிச்சயமாக நம்பலாம். பிரிட்டிஷ் செல்வாக்கு வாபஸ் வாங்கப்பட்டு விடுமானால் கலவரங்கள் சீக்கிரத்தில் முடிந்து விடும். பிரிட்டிஷ் செல்வாக்கு இங்கே இருக்கும்போது, பிரிட்டிஷ் அதிகாரம் தங்களுடைய உதவிக்கு வர வேண்டும் என்று இரு தரப்பினரும் எதிர்பார்க்கிறார்கள். இதை ஒப்புக்கொள்ள வேண்டியிருப்பதற்காக வருத்தப்படுகிறேன்."

இடைக் கால அரசாங்கத்தில் இருந்து வரும் நிலைமையைப் பற்றிக் கூறுகையில், ராஜா கஜ்னபர் அலிகானின் அறிக்கையையும், இடைக்கால அரசாங்கத்திற்கு முஸ்லிம் லீக் செய்திருக்கும் நியமனத்தையும் குறித்து காந்திஜி வருத்தப்பட்டார். பாகிஸ்தானுக்காகப் போராடுவதற்காகவே முஸ்லிம் லீக் இடைக்கால சர்க்காருக்குப் போகிறது என்று ராஜா கஜ்னபர் அலிகான் கூறியிருப்பதைக் குறித்து காந்திஜி கூறியதாவது:

"இது, விசித்திரமான, முன்னுக்குப்பின் பொருத்தமில்லாத போக்காகும். இடைக்கால அரசாங்கம் இடைக்காலத்திற்கு மாத்திரமே; அது நீண்ட காலத்திற்கு நீடிக்காது. இந்த இடைக் கால அரசாங்கம் ஆட்சியிலிருக்கும்போது, தேசத்தின் முன்னுலிருக்கும் பட்டினி, கட்டத் துணி இல்லாமை, நோய், சரியான போக்குவரத்து இல்லாதிருப்பது, லஞ்ச ஊழல், படிப்பின்மை ஆகிய பிரச்னைகளை அது சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளி யாரையும் வாட்டிவிடுவதற்கு இதில் எந்த ஒரு பிரச்னையுமே போதுமானது. இவற்றில் ஹிந்து, முஸ்லிம் என்ற விஷயத்திற்கே இடமில்லை. ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இருவருமே கட்டத் துணியின்றி கஷ்டப்படுகிறார்கள். இருவரும் பட்டினி கிடக்கிறார்கள். படிப்பின்மைப் பிசாசையும், இந்தியாவுக்குப் பொருந்தாத படிப்பையும் விரட்டியடித்துவிட வேண்டும் என்று இருவரும் விரும்புகிறார்கள்.

"இந்த அரசாங்கத்திற்கும், அரசியல் நிர்ணய சபை அமைக்கப்போகும் அரசாங்கத்திற்கும் இடையே அதிக காலமும் இருக்கப் போவது இல்லை. அரசியல் நிர்ணய சபை செய்ய வேண்டிய வேலையை முடிப்பதில் இரு தரப்பினரும் உறுதியுடன் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களானால், இடையிலிருக்கும் காலம் இன்னும் அதிகமாகக் குறுகிவிடும்.

"அரசாங்க அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது அரசியல் நிர்ணய சபை. பாகிஸ்தான் என்ற கருத்தையே அந்த அறிக்கை அப்பால் எடுத்து வைத்துவிட்டது. மாகாணங்களை 'கோஷ்டி' சேர்க்கும் ஒரு முறையை* அந்த அறிக்கை சிபாரிசு செய்திருக்கிறது. அம்முறையைக் குறித்து காங்கிரஸ் ஒருவிதமாக வியாக்யானம் செய்கிறது; முஸ்லிம் லீக் இன்னொரு விதமாக விவரிக்கிறது. பிரிட்டிஷ் மந்திரிகள் கோஷ்டியினரோ, இன்னும் மற்றோர் வகையில் வியாக்யானம் செய்கிறார்கள். ஒரு சட்டத்தைச் செய்கிறவர் யாரும், அதற்கு அதிகாரபூர்வமான வியாக்யானத்தைக் கூறிவிட முடியாது. அதன் வியாக்யானத்தைக் குறித்துத் தகராறு பின்னால் ஏற்படுமானால், கோர்ட்டு ஒன்றே இதில் ஒரு முடிவைக் கூற வேண்டும்."

"ஆனால், கோர்ட்டு கூறும் வியாக்யானத்தை முஸ்லிம் லீக் ஏற்றுக்கொள்ளாது போய்விடுமானால். . . ?"

"தங்களுடைய வியாக்யானத்தை அவர்கள் மற்றவர்கள் மீது திணிக்கக்கூடாது. அப்படி அவர்கள் திணிக்க முயற்சிப்பார்களானால், அவர்கள் தவறு செய்பவர்களேயாவர். இது இல்லையென்றால், அதற்கு பதிலான வழி, அடித்துக்கொள்ளுவது. நாம் எல்லோருமே காட்டுமிராண்டிகள். சமரசத்திற்கு நாம் வராத போது ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ளுகிறோம். என்றாலும், நாம் எல்லோரும் கனவான்கள். அமெரிக்காவானாலும், ஐரோப்பாவானாலும் அங்கேயும் இப்படித்தான் நடக்கிறது."

—'ஹரிஜன்' – 3—11—1946

# 23

# இஸ்லாமுக்கு விரோதமானது

அகில இந்திய மஜ்லிஸ் - இ - அஹ்ராரின் முன்னாள் தலைவர் ஷேக் சாகிப் ஹிஸாமுதீன் கீழ்க்கண்ட அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருக்கிறார்:

---

* இந்தியாவின் ராஜீய விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கம் லார்டு பெதிக் லாரன்ஸின் தலைமையில் இந்தியாவுக்கு அனுப்பிய மந்திரிகள் தூதுகோஷ்டியினர் இந்திய விடுதலைக்கு வகுத்த திட்டத்தில், நாட்டை ஏ, பி, ஸி என்று மூன்று பிராந்தியங்களாகப் பிரிப்பது என்று முடிவு செய்தனர். இதனால், சிறுபான்மையினருக்கு அதிக உறுதியளித்ததாகும் என்று அந்த மந்திரி சபை கோஷ்டியினர் கருதினர். 'பி' பகுதியில் பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பிரிட்டிஷ் பலுசிஸ்தான் ஆகியவை இருக்கும். இது முஸ்லிம் பெரும்பான்மைப் பகுதியாக ஆகிவிடும். 'ஸி' பகுதியில் வங்காளமும் அஸ்ஸாமும் சேர்ந்திருக்கும். இதில் மற்றவர்களைவிட முஸ்லிம்கள் கொஞ்சம் அதிகப் பெரும்பான்மையினராக இருப்பார்கள். இந்த ஏற்பாடு முஸ்லிம் சிறுபான்மையினருக்குப் பூரண உத்தரவாதமளிப்பதாக இருப்பதோடு முஸ்லிம் லீகின் நியாயமான பயத்தைப் போக்குவதாகவும் இருக்கும் என்று பிரிட்டிஷ் மந்திரி சபை கோஷ்டியினர் கருதினார்கள்.

"கிழக்கு வங்காளத்தில் பயங்கரமான, மனிதத் தன்மையற்ற சம்பவங்கள் நடந்து வருவதைக் குறித்துச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இச்செயல்களைப் பாராட்டுதற்குரியவை என்றோ, இஸ்லாமுக்கு உகந்தவை என்றோ எந்த உண்மையான முஸ்லிமும் கருத முடியாது. இப்பகுதியிலிருக்கும் முஸ்லிம்களில் பெரும் பகுதியினரின் செயல்களை, முதல் கலிபாவானவர் மெதினாவிலிருந்து புறப்படுவதற்கு முன்னால் பிரதம தளபதிக்கு அளித்துச் சென்ற உத்தரவுகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அந்த உத்தரவுகளில், சாதாரணப் பொது மக்களின் பாதுகாப்பும், முஸ்லிமல்லாத பெண்களின் கற்புக்கு அளிக்க வேண்டிய மதிப்பும், கடவுள் வழிபாட்டுக்கான இடங்கள் விஷயத்தில் காட்ட வேண்டிய பக்தியும் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு மாறாக, படுகொலைகள், தீயிட்டுப் பொசுக்குதல், இளம் பெண்களைப் பலவந்தமாக மதம் மாற்றுவது, இவர்களை அந்தப்புரங்களில் அடைத்து வைப்பது போன்ற செயல்கள் ஏராளமாக நடப்பதை நாகரிகமுள்ள எந்த மக்களும் சகிக்க முடியாது. ராஜீய அயோக்கியத்தனம், செய்யும் தவறுகள் ஆகியவைகளின் விளைவாக இத்தகைய நிலைமை உண்டாகியிருப்பதைக் குறித்து உண்மையில் நான் மனமார துக்கமடைகிறேன். ஒரு குறிப்பிட்ட முடிவை அடைந்துவிட வேண்டும் என்பதற்காக மக்கள் ஆவேசம் கொள்ளும்படிச் செய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால், அந்த ஆவேசத்தை அடக்க வேண்டிய விஷயத்தில் இருக்கும் பொறுப்பு சம்பந்தமாகக் கண்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய ஒரு நிலைமை இருப்பதை எந்த அரசாங்கமும் அதிக காலத்திற்குச் சகித்துக் கொண்டிருந்துவிட முடியாது.

"இதற்குப் பரிகாரம், ராணுவம், போலீஸ் ஆகியவற்றின் பலம்தானா? அல்லது இந்நாட்டில் வசிக்கும் மக்களிடையே பரஸ்பரம் மரியாதையும் நம்பிக்கையும் ஒத்துழைப்பும் ஏற்படுவது பரிகாரமா? இந்த நிலைமையில் இக்கேள்வி எழுகிறது. வங்காளத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். ஆகையால், வங்காளத்தில் சமாதானமான, அமைதியான சூழ்நிலை ஏற்படுவதற்குப் பொதுவாக இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள், முக்கியமாக வங்காளத்திலுள்ள முஸ்லிம்கள் முன்வர வேண்டும் என்று நான் கருதுகிறேன். சிறுபான்மையினர் திருப்தியடையும்படிச் செய்வதும், கவலையோ, பரபரப்போ இல்லாத வாழ்க்கையை அவர்கள் நடத்துவதற்கு வழி செய்வதும் பெரும்பான்மையினரான முஸ்லிம்களின் முதல் கடமை.

"வங்காளத்தில் முஸ்லிம்களுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பு, ஒழுக்கத்தையும் கண்ணியத்தையும் பொருட்படுத்தாதவர்களின் கையில் போய் துரதிருஷ்ட வசமாகச் சிக்கிக்கொண்டிருக்கிறது. தவறான வழியில் நடத்திச் செல்லப்பட்டு, ஆவேசம் மூட்டப்பட்டிருக்கும் இஸ்லாம் மதத்திலுள்ள சகோதரர்களை, நல்ல, அனுதாபமுள்ள அக்கம்பக்கத்தினராக மாற்றுவதற்கு மற்ற முஸ்லிம்கள், இஸ்லாம் போதித்திருக்கும் பொன்னான கொள்கைகளை அனுசரித்து, எந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல் முன்வர வேண்டும். துப்பாக்கிகளையும் யந்திர பீரங்கிகளையும் தாராளமாக உபயோகிப்பதனாலோ, முஸ்லிமல்லாதவர்களின் வீடுகளைத் தற்பாதுகாப்பிற்குக் கோட்டைகளாகச் செய்துவிடுவதனாலோ இந்த வேலையை நிறைவேற்றிவிடமுடியாது என்று வற்புறுத்திச் சொல்லப்படுகிறது. குண்டர்களின்

ஆதிக்கத்திலிருந்து சாதாரண மக்களை விடுவித்தாக வேண்டும். நியாயத்தை எடுத்துக் கூறி, அம்மக்களின் உள்ளத்தில் கனிவு ஏற்படும்படிச் செய்து, அவர்கள் அமைதியாகவும் கண்ணியமாகவும் வாழ்க்கை நடத்தும்படியும் செய்ய வேண்டும். முஸ்லிம்களே இக்காரியத்தைச் செய்துகொண்டுவிட முடியும்.

"இதை முன்னிட்டு, பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளுக்குக் கட்டுதிட்டத்தோடுகூடிய தனது தொண்டர்களை உடனே அனுப்புவதற்கு அகில இந்திய மஜ்லிஸ்-இ-அஹ்ரார்-இ-இஸ்லாம் தயாராக இருக்கிறது; தவறான பாதையில் போய்க்கொண்டிருக்கும் தங்கள் சகோதரர்கள், சாத்தியமான அளவு சீக்கிரத்திலேயே நல்வழியில் செல்லும்படிச் செய்து மாகாணத்தில் நிரந்தரமான அமைதிக்கு அஸ்திவாரமிடுவதற்கும் தயாராக இருக்கிறது.

"இந்த வழியில், அநேக கஷ்டங்களைச் சமாளித்தாக வேண்டியிருக்கும் என்பதை அறிவேன். ஆனால், உண்மையான முஸ்லிம்கள், கடமையைச் செய்ய முற்படும்போது, கஷ்டங்களையோ துன்பங்களையோ பொருட்படுத்தியதில்லை; இப்பொழுதும் அவை தடைகளாக இருந்துவிடா. இதில் அவசியமான ஏற்பாடுகளைச் செய்வதற்காக, அகில இந்திய மஜ்லிஸ்-இ-அஹ்ரார் தலைவர் மௌலானா அதாவுல்லா ஷா புகாரி, மௌலானா அபுல் கலாம் ஆஜாத், அகில இந்திய ஜமெயதுல் உலாமா ஹிந்தின் தலைவர் மௌலானா ஹுஸேன் அகமது மத்னி ஆகியவர்களுடன் பேச்சு நடத்தி வருகிறேன். ஆண்டவன் அருளினால் முதல் கோஷ்டி வெகு சீக்கிரத்தில் டில்லியிலிருந்து புறப்படும்."

மௌலானா சாகிபும் நான்கு தினங்களுக்கு முன்னால் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:

"கல்கத்தாவில் நடந்த பயங்கரமான படுகொலை அபாயத்திலிருந்து வங்காளம் சீக்கிரத்தில் மீளும் என்றிருந்த நம்பிக்கையை, கிழக்கு வங்காளத்தில் இப்பொழுது நடந்து வரும் பயங்கரமான சம்பவங்கள் சிதறடித்துவிட்டன. தீயிடல், கொலைகள், கொள்ளைகள், அட்டூழியங்கள் ஆகியவைகளைப் பற்றி தனிப்பட்டவர்களிடமிருந்து கிடைத்து வரும் செய்திகள் கொடூரமானவைகளாக இருக்கின்றன. சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்பதை அரசாங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கையும் கூறுகிறது. ஆனால், தனிப்பட்டவர்களின் அறிக்கைகளில் கூறப்பட்டிருக்கும் விவரங்களையெல்லாம் அந்த அறிக்கை ஒப்புக்கொள்ளவில்லை.

"அரசாங்கம் கூறும் விவரமே, நிலைமை மோசமாக இருக்கிறது என்பதையே காட்டுகிறது. இந்த விவரங்கள் நிரூபிக்கப்பட்டுவிடுமானால், இந்த அட்டூழியங்களுக்குப் பொறுப்பாளர்கள் மீது இது பயங்கரமான குற்றச்சாட்டே ஆகும். சமூகத்தைச் சேர்ந்தவர்களின் உயிர், உடைமை, சமயம் ஆகியவைகளைப் பாதுகாப்பதையே எல்லா நாகரிக சமூகங்களும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. பெண்களின் மானத்தைப் பாதுகாக்க வேண்டிய விஷயத்தில் இது இன்னும் அதிகமாகப் பொருந்தும். பெண்களின் மானத்தை மதித்து நடக்கத் தவறிவிடுகிறவர், மிருகத்தனமானவர் என்று குற்றஞ்சாட்டப்பட தன்னையே உட்படுத்திக்கொண்டவராவார்.

இந்தப் பாதுகாப்புகளெல்லாம் தங்களுக்கு இருக்க வேண்டும் என்று கேட்க சிறுபான்மையினர் விசேஷ உரிமை பெற்றிருக்கின்றனர். சிறு பான்மையினருக்கு இருக்கும் பயங்களெல்லாம் போய்விடும் வகையில் நடந்துகொள்ள வேண்டியது பெரும்பான்மையினருக்கு இருக்கும் கடமை. பெரும்பான்மையினர், சிறுபான்மையினரைக் கொடுமைப்படுத்துவதில் வீரமோ, கௌரவமோ எதுவும் இல்லை.

''இதில் மிகவும் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், இந்த அட்டூழி யங்களைச் செய்வதில் மதத்தின் பெயர் இழுத்துவைக்கப்படுவதுதான். பல வந்தக் கல்யாணங்களும் பலவந்த மத மாற்றங்களும் நடந்திருக்கின்றன என்று செய்திகள் கிடைத்திருக்கின்றன. மத சம்பந்தமான காரியங்களில் பலமோ, பலாத்காரமோ உபயோகப்படுவதை எந்த மதமும், முக்கியமாக இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இஸ்லாத்தின் ஆதியான தூய முறையில் நடந்து வந்த வர்கள் ஆரம்ப கால கலிபாக்கள். அவர்கள் காலத்தில் யூதர்கள், கிறிஸ்த வர்கள் போன்ற சிறுபான்மையினரின் விஷயத்தில் ஒப்பற்ற வகையில் சகிப்புத்தன்மை காட்டப்பட்டது. அவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் பாதுகாப்பும் உத்தரவாதமும் அளிக்கப்பட்டிருந்தன. மத்திய காலங்களில் ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் யூதர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு வந்த நாட்களில், முஸ்லிம் ராஜ்யமாக இருந்த ஸ்பெயினிலும், பிறகு துருக்கியிலும் யூதர்களுக்கு அபாயமின்மையும் பாதுகாப்பும் இருந்தன.

''பலவந்தத்தையும் ஆயுத பலத்தையும் உபயோகித்ததுதான் இஸ்லாம் பிரமாதமாகப் பரவியதற்குக் காரணம் என்று இஸ்லாம்மீது அவதூறு பேச முற்பட்டவர்கள் சில சமயங்களில் கூறியிருக்கிறார்கள். ஆனால், மத விஷயத் தில் கட்டாயப்படுத்துவது என்பது கூடாது என்று திருக்குரான் சந்தேகத் திற்கு இடமின்றி தடை விதித்திருப்பது, அத்தகையவர்களின் கூற்றைப் பொய்யாக்கிவிட்டது. ஆகையால், குரானின் அந்த உபதேசத்திற்கு விரோத மாக நடப்பவர்கள், இஸ்லாமின், முஸ்லிம்களின் லட்சியத்திற்குப் படுமோச மான கெடுதலைச் செய்பவர்களேயாவர்.

''தங்கள் நாட்டின் மீதும், சமூகத்தின்மீதும் அன்பு கொள்ளும் முஸ்லிம் களும் ஹிந்துக்களும், இப்பொழுது இருக்கும் நிலைமையைக் குறித்து அமைதி யாகவும், விருப்பு வெறுப்பு இல்லாமலும் சிந்தித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இவர்கள், இந்நாட்டில் ஒன்றாக இருந்து வாழ்ந்தாக வேண்டியவர்கள். குழப்பங்களையும் அக்கிரமச் செயல்களையும் எந்த அரசாங் கமும் அதிக நாட்களுக்குச் சகித்துக்கொண்டிருக்க முடியாது. வகுப்புக் கலவரங்கள் நடந்தால், உடனேயோ கொஞ்சம் பொறுத்தோ, அரசாங்கம் போலீஸை உபயோகித்து, அவசியமானால் ராணுவத்தையும் உபயோகித்து அடக்கியே தீரும். ஆனால் இது, நோயைக் குறைக்குமேயன்றி அடியோடு போக்கிவிடாது.

''இத்தீமைகளை அடியோடு ஒழித்துவிடுவதற்குள்ள ஒரே வழி, ஒரு பகுதியிலுள்ள பெரும்பான்மை சமூகத்தினர், சிறுபான்மையினர் ஆபத்தில் லாமல் வாழ்வதற்கு உத்தரவாதம் செய்வதுதான். அதற்குப் பதிலாக, போலீஸும் ராணுவமும் வந்து பலாத்காரத்தைக் கொண்டு கலவரத்தை அடக்கட்டும் என்பதற்காகக் காத்துக்கொண்டிராமல், அப்பகுதியில் உள்ள பெரும்பான்மை சமூகத்திலிருக்கும் பொறுப்பு வாய்ந்தவர்கள் விஷமிகளுக்கு

எதிராக நின்று சிறுபான்மை சமூகத்தினரின் உயிர், உடைமை, மானம் ஆகிய வற்றைக் காப்பார்களாயின், நாட்டில் இப்பொழுது இருந்து வரும் நிலைமையே அடியோடு மாறிவிடும்.

"முக்கியமாக, கிழக்கு வங்காளத்திலிருக்கும் முஸ்லிம் சகோதரர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். அக்கம்பக்கத்தில் இருப்பவரைப் பாதுகாப்பதை ஒருவரின் மதக் கடமை என்று இஸ்லாம் விதிக்கிறது. நோவாகாலியிலும் கிழக்கு வங்காளத்தின் மற்ற மாவட்டங்களிலும் முஸ்லிம்கள் மிகப் பெரிய பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். இப்பகுதியில் நல்லெண்ணமுள்ளவர்களாக இருப்போர் ஒன்றுபட்டு, 'எங்கள் அக்கம் பக்கத்தினரான ஹிந்துக்களை நாங்கள் எங்கள் உயிரைக் கொடுத்தும் பாதுகாப்போம்; எங்களைக் கொன்றுவிட்டாலன்றி எந்த ஒரு ஹிந்துவுக்கும் தீமை விளைவிக்க நாங்கள் விடமாட்டோம்' என்று பறைசாற்றட்டும்."

இந்த அறிக்கைகளுக்குள்ள மதிப்பு, இவற்றை முஸ்லிம்களில் எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது அல்ல. ஆனால், இஸ்லாமில் சந்தேகத்திற்கிடமில்லாத பிரக்யாதியைப் பெற்றிருக்கும் இந்த முஸ்லிம்கள், கிழக்கு வங்காள முஸ்லிம்களின் இழிவான செய்கைகளைப் பலமாகக் கண்டிப்பதைப் பொறுத்தே அது இருக்கிறது. அச்செயல்களைச் செய்து வருகிறவர்கள், குண்டர்கள் என்று சொல்லிவிடுவது தவறு. இன்னும் நன்றாக விஷயங்களை அறிந்திருக்க வேண்டியவர்களாக இருப்பவர்களால் தவறான வழியில் செலுத்தப்பட்டுவிட்டவர்களே இக்காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்பாவிகளான முஸ்லிம்களின் ஏதும் அறியாத மூளைகளில் விஷம் புகுத்தப்பட்டு விட்டதனாலேயே அவர்கள் இந்த அட்டூழியங்களைச் செய்துவருகின்றனர் என்பதையும் மனத்தில் வைக்க வேண்டும்.

இத்தீமையைச் சமாளிப்பதற்கு, இஸ்லாமில் நிதானமாக இருப்பவர்கள், தாங்கள் இதைப் பற்றி நினைப்பது என்ன என்பதைப் பகிரங்கமாகச் சொல்லுவதோடு,அதன்படி துரிதமாகவும் நடந்துகொள்ள வேண்டும். விஷமத்தை அடக்குவதற்காக அகில இந்திய மஜ்லிஸ் அஹ்ராரின் முன்னாள் தலைவர் அனுப்ப யோசித்த தொண்டர் கோஷ்டியை அவரால் அனுப்ப முடிந்ததா என்பதை அறிவதும் முக்கியமாகும்.

புது டில்லி, 23—10—1946 'ஹரிஜன்' - 3—11—1946

## 24

# பலவந்த மணம், மத மாற்றம்

"தூக்கிச் செல்லப்பட்டிருப்பவர்கள், அவர்களுடைய இஷ்டத்திற்கு மாறாகப் பலவந்தப்படுத்தி மதம் மாற்றப்பட்டிருப்பவர்கள், விவாகஞ் செய்யப்பட்டுவிட்டவர்களின் கதி என்ன?" இக்கேள்வி ஆயிரக்கணக்கானவர்களின் மனத்தை வாட்டி வந்ததைப் போன்றே, காந்திஜியையும் தீவிரமாக இதைக் குறித்து சிந்திக்கும்படி செய்தது. சென்ற இருபத்து நான்கு மணி நேரத்தில் இது சம்பந்தமாக அவரிடம் கேட்கப்பட்டவைகளுக்கு, அக்டோபர் 20-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பதில் கூறினார். அவர் சொன்னதாவது:

"பலவந்தமாகச் செய்யப்படும் மத மாற்றம், மத மாற்றமே அல்ல. தூக்கிச் செல்லப்பட்டுவிடுவது, அப்படி தூக்கிச் செல்லப்பட்ட பெண் தனது வீட்டிற்குத் திரும்புவதற்கு ஒரு தடையாகவே ஆகாது. இதை எந்தவிதமான தயக்கமுமின்றி கூறுவேன். இந்தச் சம்பவங்கள் விஷயத்தில் அவர்களுக்கு எந்த விதமான சுத்தியோ, சடங்கோ அவசியமில்லை. அவ்விதம் மதம் மாற்றப்பட்டவர்கள், விவாகஞ் செய்யப்பட்டவர்கள் திரும்ப ஹிந்துக்களாவதற்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென்று விதிப்பது, ஹிந்து சமூகம் செய்யும் தவறாகும். அவர்கள் எந்தவிதக் குற்றமும் செய்துவிடவில்லை. முஸ்லிம்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் அநேக ஆண்டுகள் நான் சேர்ந்து வாழ்ந்திருக்கிறேன். மதத்தில் கட்டாயப்படுத்துவது என்பதே இல்லை என்று அவர்களெல்லோரும் என்னிடம் உறுதியாகக் கூறியிருக்கிறார்கள். வற்புறுத்தலை மேற்கொண்டவர்கள், மதத்தை அனுசரித்து நடப்பவர்களெனக் கருதத் தகுதியற்றவர்களாவர். ஒரு வகையில், நானும் இங்கே இருப்பவர்களும், கடவுள் ஒருவரேயன்றி பல்வேறு அல்ல என்று நம்புகிறோம். கடவுள் தூதர்களில் ஒருவர் முகமது நபி என்றும் நம்புகிறார்கள். ஆனால், கல்மாவை (முஸ்லிம்களின் பிரார்த்தனை முறையை) ஓதும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தினால் அதற்கு உடன்பட அவர்கள் கட்டாயமாக மறுத்துவிடுவதோடு அதனால் என்ன ஆபத்து வந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பார்கள்.

"கிழக்கு வங்காளத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படும் செயல்களை, நல்ல முஸ்லிம்கள் எல்லோரும் வெறுத்து எதிர்ப்பார்கள் என்று நம்புகிறேன்."

உணர்ச்சி வேகம் அதிகரித்துவிடும்போது ஆத்திரமும் அதிகமாகிவிடுவது இயற்கை. ஆனால், நமது வெறுப்பு எவ்வளவு

தான் நியாயமானதாக இருந்தபோதிலும், நமது தத்துவத்தையும் பகுத்தறிவையும் மீறிப் போய் முரணான பாதையில் கொண்டு போய் விட்டுவிடாமலிருக்கட்டும். சென்ற வியாழக்கிழமையன்று பிரார்த்தனைக் கூட்டம் நடப்பதற்குக் கொஞ்சம் முன்னால், தோட்டிகள் காலனியின் பிரார்த்தனைத் திடலில் ஆத்திரமடைந்திருந்த இளைஞர் கூட்டமொன்று படையெடுத்து வந்தது. பல வாசகங்களை எழுதிய அட்டைகளைச் சுமந்துகொண்டு கூச்சல் போட்டுக்கொண்டு வந்தார்கள். கிழக்கு வங்காளத்தில் நடக்கும் அக்கிரமங்களுக்குப் பரிகாரம் வேண்டும் என்று கோஷித்தார்கள். காந்திஜியின் அறையில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் நடந்தது. தங்களுடைய கோஷம் காரியக்கமிட்டி உறுப்பினர்களின் காதுகளில் விழ வேண்டும் என்றும் கூட்டத்தினர் விரும்பினர்கள். இவர்களுடைய கோஷம் அவர்கள் காதுகளுக்கு எட்டிவிட்டது என்று காந்திஜி இவர்களிடம் கூறினர். அவர் மேலும் கூறியதாவது : "நான் இருக்க வேண்டிய இடம் வங்காளமே என்பதை அறிவேன். கடவுள் நம்பிக்கையுள்ள ஒவ்வொரு ஆணின், பெண்ணின் உள்ளத்திலும் வங்காளத்திற்காக ரத்தம் கசிந்துகொண்டிருக்கிறது என்று உறுதியாகக் கூறுவேன். பிரார்த்தனை நேரத்தில் நீங்கள் குழப்பத்தை உண்டாக்குவது தவறு. அமைதியாக இருந்து பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

"எங்கள் வீடுகள் எரிந்துகொண்டிருக்கும்போது நாங்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்க முடியாது" என்று ஒருவர் கூச்சல் போட்டார். இதையே காந்திஜி தமது பிரார்த்தனைக் கூட்டப் பிரசங்கத்தின் விஷயமாக்கிக்கொண்டார். அவர் கூறியதாவது :

"வழக்கமான பிரார்த்தனை கீதங்கள் பாடப்படவில்லை. அதற்கு வேண்டிய மன அமைதி நமக்கு இல்லை. ராம பஜனை செய்தோம். வழக்கம் போல இது இங்கே கூடியிருந்தவர்களுக்கு மனச்சாந்தியை அளித்திருக்கிறது. வழக்கமான பிரார்த்தனை கீதங்கள் பாடப்படாவிட்டாலும் அவை என் உள்ளத்தில் இருக்கின்றன. இவை கடவுளிடம் போய்ச் சேரும் என்று நிச்சயமாக எண்ணுகிறேன்.

"வீடு எரிந்துகொண்டிருக்கும் சமயம் போன்றது இது என்று ஓர் இளைஞர் சொன்னர். வீடு தீப்பற்றி எரியும்போது அவ்வீட்டின் சொந்தக்காரர் அல்லது வேலைக்காரரின் கடமை என்ன? தீயை அணைப்பதில்தான் அவர் தம் முழு கவனத்தையும் செலுத்த வேண்டுமேயன்றி வெறி பிடித்துப் போய்விடக் கூடாது. தலைநகரம் தீப்பற்றி எரிகிறது என்று ஜனக மகாராஜாவிடம் வந்து சொன்னபோது அவர் பரபரப்பு அடைந்துவிடாமல் அமைதியாக இருந்தார். அந்த விபத்துக்கு முன்னலும் பின்னலும் செய்ய வேண்டிய சாத்தியமான எல்லாக் காரியங்களையும் அவர் செய்திருந்ததால், கடவுளிடம் நம்பிக்கையை வைத்து

அவர் நிம்மதியாக இருந்தார். அவரும் நிதானத்தை இழந்து தீப்பிடித்த இடத்திற்கு ஓடியிருப்பாரானல், தமது கவனத்தை அவர் சிதறடித்துவிட்டு தீக்குத்தான் அவர் உதவி செய்தவராக இருப்பார். கிழக்கு வங்காளத்தில் பெண்கள் அடைந்திருக்கும் துயரத்தைக் கேட்டு நீங்கள் மனவேதனை அடைந்து போயிருக்கிறீர்கள். இதனால் நீங்கள் நிதானத்தை இழந்து போய், பிரார்த்தனைக் கூட்டத்திலிருக்கும் பெண்களிடம் காட்ட வேண்டிய மரியாதையையும் மறந்து போயிருக்கிறீர்கள். தினமும் பெண்கள் உட்காரும் இடத்தில் இன்று நீங்கள் உட்கார்ந்துவிட்டீர்கள். மானபங்கம் செய்யப்பட்டிருக்கும் கிழக்கு வங்கப் பெண்கள் சம்பந்தமாக நீங்கள் இவ்வித விசித்திரமான வகையில் உங்கள் அனுதாபத்தைக் காட்டியிருக்கிறீர்கள். இதிலிருக்கும் வேடிக்கையையும் பொருத்தமின்மையையும் நீங்கள் கவனித்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

''நமது பெண்கள் வெகு எளிதில் நடுநடுங்கித் திகிலடைந்து விடுகிறார்கள். அநேகமாக உலகம் முழுவதிலுமே இப்படித்தான் இருந்து வருகிறது. வீரத்துடனிருக்க நம் பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கற்பழிக்கப் படுவதற்கு அனுமதிப்பதைவிட பெண்கள் தற்கொலை செய்து கொண்டு விடுவதே மேல் என்று பெண்களுக்கு நான் சொன்ன புத்திமதி, தப்பர்த்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் விரும்பினல், தற்காப்புக்காக அவர்கள் ஒரு கத்தி வைத்துக்கொள்ளலாம். ஆனல், எதிராளி அதிக பலவானுக இருந்தால் அப்பொழுது கத்தி பயன்படாது. ஆகையால், கற்பழிக்கப்படுவதற்கு உடன்பட்டுவிடுவதைவிட விஷமுண்டு செத்துப் போய் விடுவது மேல் என்று அவர்களுக்கு யோசனை கூறியிருக்கிறேன். தயாராயிருப்பதே அவர்களை வீரத்துடனிருக்கும்படிச் செய்ய வேண்டும். சாகத் துணிந்துவிடும் எந்தப் பெண்ணையும் எவனும் மானபங்கப்படுத்திவிட முடியாது. தற்காப்புக்கு அவர்களுக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. கொல்லுவது அல்லது கொல்லப்படுவது என்பது ஒரு வழி. கொல்லாமலேயே தான் செத்துப் போவது இரண்டாவது வழி. பெண்களுக்கு நான் இரண்டாவது வழியைத்தான் சொல்லிக் கொடுப்பேனேயன்றி முதல் வழியை அல்ல. எல்லாவற்றையும் விட அவர்கள் அஞ்சாமையுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். கோழைத்தனத்தைப் போன்ற பாவம் வேறு எதுவும் இல்லை.

"ஆனல், பலாத்காரத்தில் நம்பிக்கை இருப்பவர்களுக்கும் ஓர் ஒழுக்க நியதி உண்டு. கிழக்கு வங்காளத்தில் அனுசரிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படும் முறையை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நான் விரும்பவில்லை. மௌலானு சாகிபின் அறிக்கையையும், அகில இந்திய மஜ்லிஸ் அஹ்ராரின் முன்னாள் தலைவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையையும் நீங்கள் படித்திருப்பீர்கள் என நம்புகிறேன். பலவந்தமாக மதம் மாற்றுவதையோ, தூக்கிச்

சென்று விடுவதையோ, பெண்களின் கற்பை அழிப்பதையோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள்."

புது டில்லி 27—10—'46 'ஹரிஜன்' – 3—11—1946

# 25

# இருளடைந்த தீபாவளி

சென்ற திங்கட்கிழமை காந்திஜியின் மௌன தினமானதால், பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் எழுதியது வாசிக்கப்பட்டது. அதில் காந்திஜி கூறியிருந்ததாவது:

"துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மக்களுக்கு இப்பொழுது தீபாவளி பண்டிகை வந்திருக்கிறது. தீயிட்டுப் பொசுக்கல், கொள்ளை, உற்றார் உறவினர்களின் சாவு, இது போன்ற இன்னும் பல படுமோசமான காரியங்களினால் வங்காளத்தில் ஆயிரக்கணக்கான இல்லங்கள் இப்பொழுது இருள் மண்டிக் கிடக்கின்றன. சொந்த சகோதர சகோதரிகளைக் கொன்றுவிடுவது, மனிதத் தன்மை என்பதே ஒரு சிறிதுமில்லாத மிக இழிந்த நிலையை அடைந்திருக்கிறது. இவையெல்லாம் மதத்தின் பெயரால் செய்யப்படுவது நம்மை வெட்கத்தால் தலை குனியும்படிச் செய்வதாகிறது. மனித இயல்பிலேயே நம்பிக்கையற்றுப் போகும்படியும் நேருகிறது. அழுகுரலும், துக்கத்தால் புலம்பலும், திக்கற்றோர் தத்தளிப்பும், ஒரு பாவமும் அறியாதவர்கள் பலியாவதுமே எங்கும் நிறைந்திருக்கும்போது, விருந்துகளும் தீபாலங்காரங்களும் எப்படி இருக்க முடியும்? நாடெங்கும் பட்டினியும் கட்டத் துணியில்லாத தவிப்பும் மிகுந்திருக்கின்றன. இவையெல்லாம் போதாதென்று நாம் நமக்குள்ளேயே சச்சரவிட்டுக் கொண்டும் வருகிறோம். இது சம்பந்தமாக நான் எவ்வளவோ பேசியும் எழுதியும் இருக்கிறேன். என்றாலும், புனிதமானவர்களாக இருப்பவர்கள் இன்னும் அதிகப் புனிதமானவர்களாக வேண்டும். பாவஞ் செய்துவிட்டவர்கள், அப்பாவங்களைத் துடைத்துக்கொண்டுவிட வேண்டும் என்று மீண்டும் சொல்லாமல் நான் இருப்பதற்கில்லை. ஒவ்வொருவரும் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு உணவை மிச்சப்படுத்த வேண்டும். துணி அதிகமாக இருக்கும்படிச் செய்வதற்காக ஒவ்வொருவரும் முடிந்த வரையில் அதிகமாக நூற்க வேண்டும். உணவை உற்பத்தி செய்வது எவ்வளவு நல்லதோ, அவ்வளவு நல்லது உணவை வீணாக்காமல் மிச்சப்படுத்துவதும். நூற்பது, நாட்டில் கட்டத் துணியில்லாமலிருப்போர் துயரைக் குறைப்பதற்கு உதவுவதாகும். உண்மையுடனிருப்போர், உலகத்தை ஒரு படி முன்னுக்குக் கொண்டு வருபவர்களாவர். இக்காரியங்களில் நமது

முழு சக்தியையும் உபயோகிப்போமாக. பண்டிகைகள், கொண்டாடுவதற்கும், உல்லாசமாகக் குதூகலப்படுவதற்குமான நாட்கள் அல்ல என்பதும் நமக்குத் தெளிவாக விளங்க வேண்டும்."

இதைத் தொடர்ந்து காந்திஜி, வெள்ளிக்கிழமையன்று விடுத்த புத்தாண்டுச் செய்தியிலும் பின்வருமாறு கூறினர்: "அதிகக் கஷ்டமான நிலைமையில் இந்தியா இருந்து கொண்டிருக்கிறது. உண்மையில் உலகமே அதிகக் கஷ்டத்தில் இருந்து வருகிறது. எனவே, இந்தியா இதற்கு விலக்கு அல்ல.

"இந்த நெருக்கடியைச் சமாளித்துக்கொள்ளுவதற்கு நமக்கு வேண்டிய உதவி என்ன? கீதையின் உபதேசத்தின்படி ஆன்மிக சம்பந்தமான நடத்தைக்கு முதலில் வேண்டியது பயமின்மை. புத்தாண்டு தினத்தில் மக்கள் ஏதாவது சில நல்ல பிரதிக்ஞைகளைச் செய்துகொள்ளுகிறார்கள். பயத்தை விட்டு ஒழித்துவிடுவது என்ற பிரதிக்ஞையை நீங்கள் உறுதியுடன் செய்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். பயமின்மை இல்லாது போகுமானல் மற்ற நற்குணங்களெல்லாம் தூசுக்குத்தான் சமமாகி விடும். அஞ்சாமை இல்லையானல், சத்தியத்தையும் அகிம்சையையும் அடையவே முடியாது. அச்சமின்மை என்பது, அகம்பாவத்துடனிருப்பதோ, சண்டைக்குப் போவதோ அல்ல. அச்சமின்மை என்ருல், அதற்கு அமைதியாகவும் உள்ளத்தில் சாந்தியுடனும் இருக்க வேண்டியது அவசியம். இதற்குக் கடவுளிடம் மாருத நம்பிக்கை இருந்தாக வேண்டும். நம் முன்னல் பாடப்பட்ட கீதத்தில் அந்தப் பக்தர், தம்முள் கடவுள் இல்லையென்ருல் தாம் எப்பயனுமில்லாத வெறும் ஜந்துவே என்று கூறுகிருர். எப்பொழுதும் கடவுளே என் புகலிடமாக இருந்து வந்திருக்கிறது. ஆண்டவனிடம் புகலிடம் கொண்டுவிட்டவர்களுக்கு அஞ்சுவதற்கு எதுவுமே இல்லை."

நேற்று நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பிறகு காந்திஜி, அதே படிப்பினையைத் திரும்பவும் வற்புறுத்திக் கூறினர். அவர் கூறியதாவது:

"குருதேவரின் 'ஏக்லா சலோ ரே' என்ற கீதத்தை ஸ்ரீமதி நந்திதா கிருபளானி வெகு இனிமையாக நம் முன் பாடினர். கஷ்டங்கள் எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும் தன்னந்தனியே செல்லக்கூடிய பலம் பக்தனுக்கு இருக்க வேண்டும் என்பதே இக் கீதத்தின் பொருளாகும். கடவுள் எப்பொழுதும் தம்முடனேயே இருக்கிருர் என்பதை அவர் அறிந்துகொண்டு விடுவாரானல், தாம் தனித்திருப்பதாகவே அவர் எண்ணமாட்டார். பிரார்த்தனை கீதம், தீயவைகளைச் செய்வோருக்காக அன்று. அவர்கள் தன்னந்தனியே போகவே முடியாது."

புது டில்லி, 27—10—1946 —'ஹரிஜன்' – 3—11—1946

பகுதி பதின்மூன்று

# கலவரத் தீயை அணைக்க யாத்திரைத் தவம்

[கிழக்கு வங்காளத்தில் நோவாகாலியில் நிலைமை அதிக மோசமாகிக் கொண்டு வந்தது. அங்கே சிறுபான்மையோரான ஹிந்துக்கள் படுகொலை செய்யப்பட்டனர்; பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள்; வீடுகள் சூறையாடப் பட்டன. பலவந்த மதமாற்றங்கள், விவாகங்கள் பல. நோவாகாலியில் நடந்த அட்டூழியங்களைப் பற்றிய செய்தி பரவியதால் மற்ற இடங்களிலும் ஹிந்துக்களிடையே கொதிப்பு மிகுந்து வந்தது. இந்த நிலைமையில் காந்திஜி, 1946 அக்டோபர் 27-ஆம் தேதி புது டில்லியில் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில், மறுநாள் காலை தாம் கல்கத்தாவுக்குப் போகப் போவதாகக் கூறினர். அப்போது காந்திஜி கூறியதாவது :

"டில்லிக்குத் திரும்பவும் எப்பொழுது என்னைக் கடவுள் கொண்டுவரப் போகிறார் என்பது எனக்குத் தெரியாது. கல்கத்தாவிலிருந்து நோவாகாலிக் குப் போக விரும்புகிறேன். இது கஷ்டமான பிரயாணம்; என் தேக நிலையும் சரியாக இல்லை. ஆனல், வழியை எளிதானதாக்கிக்கொள்ளுவதற்கு ஒருவர், தம் கடமையைச் செய்து கடவுளிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். ஒருவர் போகும் வழியிலிருக்கும் கஷ்டங்களையெல்லாம் கடவுள் நீக்கிவிடுகிறார் என்பதல்ல. கஷ்டங்களையெல்லாம் சகித்துக்கொள்ளும் பலத்தை அவருக்குக் கடவுள் அருளுகிறார். யார் செய்தது தவறு, யார் செய்தது நியாயம் என்று யார் மீதும் தீர்ப்புச் சொல்லுவதற்காக நான் வங்காளத்திற்குப் போகவில்லை. மக்களின் சேவகனுகவே நான் அங்கே போகிறேன். ஹிந்துக்களையும் முஸ்லிம் களையும் அங்கே சந்திப்பேன். இன்று என்னை தங்கள் விரோதி என்று சில முஸ்லிம்கள் கருதுகிறார்கள். அவர்கள் எப்பொழுதுமே இப்படி என்னைப் பற்றி எண்ணியது இல்லை. ஆனல், அவர்களுடைய கோபத்தை நான் பொருட்படுத்தவில்லை. என் மதத்தினரே சில சமயங்களில் என் மீது கோபப்பட்டதில்லையா? எல்லா மனித வர்க்கமுமே, எத்தேசத்தினராயினும் எம்மதத்தினராயினும், எந்த நிறத்தினராலும் எல்லோரும் என் உற்றார் உறவினர்களே என்ற பாடத்தை என் பதினேழாம் வயதிலிருந்தே உணர்ந் திருக்கிறேன். அவர்கள் கடவுளின் சேவகராயிருந்தால், அவரால் படைக்கப் பட்டவர்களின் சேவகர்களாகவும் அவர்கள் ஆக வேண்டும்.

"அத்தகைய சேவகன் என்ற வகையிலேயே நான் வங்காளத்திற்குப் போகிறேன். ஹிந்துக்களும் முஸ்லிம்களும், ஒருவருக்கொருவர் என்றுமே விரோதிகளாக இருக்க முடியாது என்று அவர்களுக்குக் கூறுவேன். அவர்கள் இந்தியாவில் பிறந்து இந்தியாவில் வளர்ந்தவர்கள்; இந்நாட்டிலேயே வாழ்ந்து இங்கேயே சாக வேண்டியவர்கள். இந்த அடிப்படையான உண்

மையை மத மாற்றம் மாற்றிவிட முடியாது. மத மாற்றம், ஒருவருடைய தேசீய இனத் தன்மையையும் மாற்றிவிடுகிறது என்று சிலர் நம்புகிறார்கள் என்பதனல் கூட, அவர்கள் விரோதிகளாகிவிடுவதற்கில்லை. பெண்கள் படும் துயரம் எப்பொழுதுமே என் உள்ளத்தை உருக்கிவிடுகிறது. அவர்களுடைய கண்ணீரைத் துடைத்து அவர்கள் உள்ளத்தில் திடமுண்டாகும்படிச் செய்யவே நான் வங்காளத்திற்குப் போகிறேன்.''

அன்று காந்திஜி கூறியவாறே மறுநாள் காலையில் கல்கத்தாவிற்குப் புறப்பட்டார். ரெயில் பிரயாணம் அதிகக் கஷ்டமானதாக இருந்தது. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் காந்திஜி அந்த வழியாகப் பிரயாணம் செய்தார். ஆகவே, இயல்பாகவே வழியிலுள்ள எல்லாப் பெரிய ரெயில் நிலையங்களிலும் கூட்டம் ஏராளமாக இருந்தது. மக்கள் கூட்டத்தினர், வண்டியின் கூரை மீதும் ஏறிக்கொண்டார்கள்; ஜன்னல்களை யெல்லாம் நெருக்கி அடைத்துக்கொண்டனர்; ஜன்னல் கதவுகள், கண்ணாடிகளை உடைத்துவிட்டார்கள். காது செவிடுபடும்படி கூச்சலும் கோஷமும் போட்டார்கள். காந்திஜியைத் தரிசிக்க வேண்டும் என்பதற்காக அடிக்கடி ரெயில் சங்கிலியைப் பிடித்து இழுத்து ரெயிலை நிறுத்திவிட்டனர். இது அடிக்கடி நிகழ்ந்து ரெயில் அடிக்கடி நிற்க நேர்ந்ததால் அதன் பிறகு ரெயில் அந்தச் சங்கிலி வசதியில்லாமலேயே செல்ல நேர்ந்தது. கூச்சலைத் தாளமுடியாமல் காந்திஜி காதுகளில் விரலை வைத்துப் பொத்திக்கொண்டே வண்டியில் உட்கார்ந்திருந்தார். காந்திஜி சென்ற ரெயில் 5 மணி நேரம் தாமதமாக லீலுவா ஸ்டேஷனை அடைந்தது. அங்கே இறங்கி சோடேபூர் காதி பிரதிஸ்தான் ஆசிரமத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.]

(இந்த நோவாகாலி யாத்திரையின்போதும் அதற்கு முன்பும் ஹிந்து-முஸ்லிம் சச்சரவைப்பற்றி காந்திஜி பேசியவை, எழுதியவை சம்பந்தமான சில விஷயங்கள் 'மகாத்மா காந்தி நூல்கள்' 2–ஆம் தொகுப்பில் 'ஹிந்து-முஸ்லிம் சச்சரவில் அகிம்சை' என்ற பகுதியில் 738-ஆம் பக்கத்திலிருந்து 815-ஆம் பக்கங்கள் வரை பிரசுரமாகியிருக்கின்றன. அதில் பிரசுரமான கட்டுரைகள் இங்கே திரும்பக் கொடுக்கப்படவில்லை.—ப-ர்.)

## 1

# மங்கலான நம்பிக்கை ஒளிக் கதிர்

சமூகங்களுக்கிடையே சமாதானம் ஏற்பட்டுவிடக்கூடும் என்ற நம்பிக்கையின் ஒளிக் கதிர் மங்கலாகத் தமக்குத் தெரிவதாகக் காந்திஜி, தாம் வங்காளத்திற்கு வந்து சேர்ந்த மூன்றும் நாள் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் கூறியதாவது:

"கவர்னரையும் முதன் மந்திரியையும் இரு முறை சந்தித்தேன். அநேகமாக மரியாதைக்கு என்ற முறையிலேயே

கவர்னரைச் சந்தித்தேன். எனக்கு முக்கியமான வேலை முதன் மந்திரியிடம்தான். ஜன நடமாட்டமே இல்லாத தெருக்களில் சுமார் இரண்டடி உயரத்திற்கு நடைபாதைகளில் குப்பை குவிந்து கிடக்கிறது. பக்கத்துத் தெருக்களிலும் சந்துகளிலும் கண்களுக்கு எட்டிய வரையில் எரிந்து போன கடைகளின் வரிசையும், சாம்பலான வீடுகளுமே காட்சியளிக்கின்றன. இதையெல்லாம் பார்த்துக் கொண்டு போகும் ஒருவர், பொது ஜனப் பைத்தியக்காரத்தனம் மனிதனை எவ்வளவு தூரம் மிருகத்திலும் கேவலமாக்கிவிடும் என்பதை எண்ணி மனச்சோர்வு அடையாமலிருக்க முடியாது. இத்தகைய காரியங்கள், அவற்றின் இயல்பைக்கொண்டே, நீண்ட காலம் நீடித்து நடந்து வர முடியாது. மனித இயல்பு இவற்றைச் சகித்துக்கொண்டுமிராது. ஆப்ரகாம் லிங்கன்* சொன்னதைப் போன்று, 'எல்லா மனிதரையும் எல்லாக் காலங்களிலும் நீங்கள் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது.' ரத்தக்களரி, மிருகத்தனமான செயல்களின் வெறியாட்டத்தில் மக்கள் இப்பொழுதே அலுத்துப் போய்விட்டனர் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அவர்கள் ஒருவருக்கொருவர் காட்டு மிருகங்களைப் போன்று தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படி சண்டை போடுவது கல்கத்தாவிற்கோ, வங்காளத்திற்கோ, இந்தியாவிற்கோ, உலகத்திற்கோ நல்லதல்ல.

"சச்சரவிட்டுக்கொள்ளுகிறவர்களிடையே சமாதானத்தை உண்டாக்கி வைப்பதுதான் இளம் வாலிபப் பிராயத்திலிருந்து என் தொழிலாக இருந்திருக்கிறது. நான் வக்கீலாகத் தொழில் நடத்திக்கொண்டிருந்தபோதுகூட, கட்சிக்காரர்கள் இரு தரப்பாரையும் சமாதானம் செய்து வைத்துவிடவே முயன்று வந்திருக்கிறேன். இரு சமூகத்தினரையும் ஏன் ஒற்றுமைப்படுத்திவிடக்கூடாது? நான் எதிலும் நம்பிக்கை வைப்பவன்.

"உங்களிடமிருந்து இந்த உதவியையே நான் எதிர்பார்க்கிறேன்: இந்தப் பரஸ்பரப் படுகொலைகள் நிற்க வேண்டும்; இரு சமூகத்தினரும் உண்மையாக உள்ளத்தில் ஒன்றுபட வேண்டும் என்று நீங்கள் என்னுடன் சேர்ந்து பிரார்த்திக்க வேண்டும். இந்தியா பிரிக்கப்பட வேண்டுமா, அல்லது முழுவதாகவே இருக்க வேண்டுமா என்பதைப் பலாத்காரத்தைக்கொண்டு முடிவு செய்துவிட முடியாது. பரஸ்பரம் ஒத்துப் போவதன் மூலமே இதை அடைய முடியும். பிரிந்து போவதாக இருந்தாலும், ஒன்றாக இருப்பது என்றாலும், நல்லெண்ணத்தின் பேரிலும் ஒத்துப் போவதன் மூலமே இதைச் செய்ய வேண்டும்.

---

* ஆப்ரகாம் லிங்கன், அமெரிக்காவின் 16-ஆவது ஜனாதிபதியாக இருந்தவர். சிறு வயதில் வக்கீலாக இருந்தார். 1846-இல் அமெரிக்க காங்கிரஸிற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1861–இல் அமெரிக்க ஜனாதிபதியானார். அப்பொழுது அடிமைகளை வைத்திருப்பதை எதிர்த்து உலகப் பிரசித்தமான பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தினால் 1861-65-இல் அங்கே உள்நாட்டுப் போரே நடந்தது. 1864-இல் திரும்பவும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். ஆனால், ஜான்வில்கன் பூத் என்பவன் அவரைக் கொன்றுவிட்டான்.

"யாருக்கும் அவமானம் இழைத்தல், சுயமதிப்பை இழப்பது என்ற எந்தக் காரியத்திற்கும் நான் எப்பொழுதும் உடந்தையாக இருக்கவேமாட்டேன். ஆகவே, எந்தச் சமாதானமும் சரியானதாக இருப்பதற்கு, அது கௌரவமானதாக இருக்க வேண்டும்; மானத்தை இழந்து அடைந்ததாகவும் அது இருக்கக்கூடாது. இவ்விதம் நான் கூறுவது, என்னை வந்து பார்த்த பிரபலமான ஒரு முஸ்லிம் கூறியதையே எதிரொலிக்கிறேன். இந்த நண்பர் வருமாறு கூறினர்: 'எங்கள் லட்சியம் பாகிஸ்தானுகை இருந்தாலும், பிரிவினையாகாத இந்தியாவாக இருந்தாலும், அதை ரத்தக் களரியில்லாமலும் சண்டை போட்டுக்கொள்ளாமலும் நாம் அடைய முடியாது என்ருல், அது அடைவதற்குத் தகுதியானதே அன்று.'

சோடேபூர், 1—11—1946 —'ஹரிஜன்' - 10—11—1946

## 2

# ஒரு மனக் குழப்பம்

நோவாகாலிக்குக் காந்திஜி புறப்படுவதற்கு நான்கு நாட்கள் இருந்தன. நோவாகாலியில் நடந்து வந்த பயங்கரமான சம்பவங்களைப் பற்றிய செய்திகள் வர வர, முன்பே இங்கே (கல்கத்தாவில்) இருந்து வந்த பரபரப்பு மேலும் அதிகரித்தது. பக்ரீத் பண்டிகையும் சமீபித்துக்கொண்டிருந்தது. ஈத் பண்டிகை ஆபத்து இல்லாமல் முடிவடைகிற வரையிலாவது காந்திஜி தொடர்ந்து நகரிலேயே இருந்து வர வேண்டும் என்று வங்காள முதன் மந்திரியும் அவருடைய சகாக்களும் விரும்பினர்கள். சங்கடத்திற்கெல்லாம் வேர் கல்கத்தாவில்தான் இருக்கிறது என்றும் அவரிடம் எடுத்துச் சொன்னர்கள். நகரில் அமைதி ஏற்பட்டுவிடுமானல், மற்ற இடங்களிலெல்லாம் அதனல் நல்ல பலன் ஏற்பட்டுவிடும் என்ருர்கள். காந்திஜியும் இதற்கு இணங்கினர். சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியதாவது:

"இந்தியா முழுவதிலுமே கஷ்டமான நிலைமை இருந்து வருகிறது. வங்காளத்தின் நிலைமையோ இன்னும் அதிக மோசமானதாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பங்களில் தங்கள் கடமை என்ன என்று என்னைக் கேட்கிருர்கள். சாஸ்திரங்களின்படி அது தான் தருமம். மத நூல்களெல்லாம் அதையே தான் கூறுகின்றன. மகான்கள் இதையே அனுசரித்தும் வந்தார்கள். அறிஞர்கள் இதற்குத்தான் வியாக்யானம் கூறினர். எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்ததும் இதுதான். நான்காவது நிபந்தனை அமலுக்கு வருவதற்கு முன்னல் முதன் மூன்று காரியங்களையும் நிறைவேற்றியாக வேண்டும். இவ்விதம், ஒன்றும் தெரியாத

ஒருவன் அல்லது அயோக்கியன் கூறுவது மனதிற்குப் பிடித்த தாக இருந்தாலும் அதன்படி நடந்துவிட யாருக்கும் உரிமை இல்லை. நியதியை அல்லது தருமத்தை விதிப்பதற்கு வேண்டிய உரிமையை ஒருவர் அடைவதற்கு முன்னால் அவர் முதலில் செய்ய வேண்டியது, தீமை செய்யாதிருப்பது, விரோதம் கொள் ளாதிருப்பது, துறவு ஆகிய மதக் கோட்பாடுகளை அனுசரித்து நடப்பதேயாகும்.

"எது என் கடமை என்று நான் கருதுகிறேன் என்பதை உங்களுக்குக் கூறுகிறேன். ஆனால், உங்கள் கடமை என்ன என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். என்னை நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், உங்களைச் சூழ்ந்து கொண்டிருக்கும் இக்கஷ்டமான நிலைமையில் உங்கள் கடமை என்ன என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுவதற்கான வழியையே உங்களுக்குக் காட்டுகிறேன். கடவுள் அருளை எதிர்பார்த்து இருப்பீர்களாயின் உங்களுக்கு வழி தெரியும் என்று கீதை கூறுகிறது."

## மகிழ்ச்சிக்குரிய ஊக்கம்

இடைக் கால இந்திய அரசாங்கத்தின் மந்திரிகளில் நால்வர் கல்கத்தாவுக்கு வந்தார்கள். சமாதான முயற்சிக்கு மேலும் உதவி செய்வதற்காகவே இவர்கள் வந்ததால் மகிழ்ச்சிக்குரிய ஊக்கம் ஏற்பட்டது. இதனால் நல்ல பலனும் ஏற்பட்டது. தாற் காலிகமாகவேனும் ஒரு நெருக்கடி தவிர்க்கப்பட்டு விட்டது. இம் மந்திரிகள் வந்த அதே சமயத்தில் வைஸ்ராயும் வந்ததால், இதைக் குறித்து எல்லா வகையான யூகங்களும் எழுந்தன. இதில் தலையிட்டு வேண்டியதைச் செய்யுமாறு வைஸ்ராயைக் கேட்பார்களா? வங்க மந்திரி சபை மேலும் சரியான நட வடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்குக் கவர்னரிடம் வற்புறுத்து வார்களா? பிரார்த்தனைக்குப் பின்னர் காந்திஜி ஒவ்வொரு நாளும் பேசிய கூட்டங்களில், திருப்பித் தாக்கும் ஆர்வம் கொள் ளுவதும், வைஸ்ராயையோ, கவர்னரையோ, போலீஸையோ, ராணுவத்தையோ எதிர்பார்ப்பதும், எல்லோரும் எடுத்துக் கொண்டிருக்கும் சுதந்திரப் பிரதிக்ஞைக்கு எவ்விதம் முரண் பட்டவை என்பதை விளக்கிக் கூறினர். காந்திஜி கூறிய தாவது :

"வைஸ்ராயின் அதிகாரம் மந்திரி சபையிடமும், கவர்னரின் அதிகாரம் வங்காள மந்திரிகளிடமும் ஒப்படைக்கப்பட்டிருக் கின்றன. நிரந்தரமான சமாதானம் இருந்து வர வேண்டும் என்று மக்கள் விரும்பினால், அது மக்களின் உள்ளத்திலிருந்தே வர வேண்டும். உங்களுடைய உறுதியான உள்ளத்தைத் தவிர வேறு யாரும் உங்களைக் காப்பாற்றிவிடவே முடியாது என்று நான் பகிரங்கமாக உங்களுக்குச் சொல்லி வருகிறேன். வீர முள்ளவர்களை யாரும் அவமானப்படுத்திவிடவே முடியாது.

திருப்பித் தாக்குவது என்பது, தாக்கும் எண்ணத்தை வளர்த்துக்கொண்டே போவதாகும். திருப்பித் தாக்குவதை நீங்கள் விரும்புவீர்களானல், நீங்கள் சுதந்திரத்தை அடைய முடியாது. என்னை யாரோ ஒருவன் கொன்றுவிடுகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். இதற்காக நீங்கள் இன்னொருவனைக் கொன்று விடுவதனல் நீங்கள் அடையப் போகும் பலன் எதுவும் இல்லை. இதைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்ப்பீர்களாயின், காந்தியைத் தவிர வேறு யாரால் காந்தியைக் கொல்ல முடியும்? ஆன்மாவை யாராலும் அழித்துவிட முடியாது. ஆகவே, பழிக்குப் பழி வாங்குவது என்ற எண்ணத்தை நம் உள்ளங்களிலிருந்து போக்கி விடுவோமாக. இதைத் தெளிவாக நாம் தெரிந்து கொண்டு விடுவோமாயின், சுதந்திரத்தை நோக்கி நாம் வெகு கிட்டத்தில் போய்விட்டவர்களாவோம்."

## நிதானத்தை இழக்காதிருக்கக் கோரிக்கை

சரியான சமயத்திலேயே காந்திஜி எச்சரிக்கை செய்தார். பீகாரிலும் புயல் தோன்றி விடுவதற்கான அதிர்ச்சிகள் அப்பொழுதே இருந்து வந்தன. பழி வாங்க வேண்டும் என்ற கூக்குரல் எழுந்தது. இத்தகைய கூக்குரல் எவ்விதம் தவருனது, நியாயமற்றது என்பதைக் காந்திஜி பிரார்த்தனைக் கூட்டத்தில் எடுத்துக் கூறினர்:

"தவறு செய்தவர்களையல்ல, தவறை வெறுக்க என் சிறு பிராயத்திலிருந்தே நான் கற்றுக்கொண்டிருக்கிறேன். ஆகையால், முஸ்லிம்கள் ஏதாவது தவறு செய்துவிட்டாலும், அப்பொழுதும் அவர்கள் என் நண்பர்களாகவே இருக்கின்றனர். ஆனல், அவர்கள் செய்தது தவறு என்பதை அவர்களிடம் சொல்லிவிட வேண்டியது என் கடமை. இந்த நியதியையே எனக்கு மிகவும் நெருக்கமாக உள்ளவர்களிடத்திலும் உற்ருரிடமும் என் வாழ்நாளெல்லாம் அனுசரித்து வந்திருக்கிறேன். உண்மையான நட்பிற்கு இதையே நான் சோதனையாகக் கொள்ளுகிறேன். பழி வாங்குவது சமாதானத்திற்கு வழி அல்ல, மனிதத் தன்மையுமல்ல என்று நேற்று நான் உங்களுக்குக் கூறினேன். மன்னித்து விடுவதுதான் மிக உயர்ந்த நற்குணம் என்று ஹிந்து சாஸ்திரங்கள் போதிக்கின்றன. வீரனுக்கு அழகு மன்னித்து விடுவதே. நேற்று முன் தினம், கற்றறிந்த ஒரு முஸ்லிம் நண்பர் என்னைப் பார்க்க வந்தார். இதே போன்றுதான் குரானும் போதிக்கிறது என்று அவர் என்னிடம் சொன்னர். ஒரு பாவமும் செய்யாதவனை ஒருவன் கொன்றுவிடுவானயின், மனித வர்க்கம் முழுவதையுமே கொன்றுவிட்ட பாவத்தை அவன் தலை மீது சுமப்பவனகிறன். கொலை, தீயிட்டுப் பொசுக்குதல், பலவந்த மத மாற்றம், பெண்களைத் தூக்கிச் செல்வது போன்றவைகளை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை; இதற்குமாருக அவைகளைக் கண்டிக்கிறது.

“கன்னத்தில் அறைந்துவிட்டவனை மன்னித்துவிடும் அளவுக்கு உங்களுக்குத் தாராளம் இல்லையானால், அவனைப் பதிலுக்கு நீங்கள் அறைந்துவிடலாம். அப்படிச் செய்தால் அதை என்னால் புரிந்துகொள்ளவும் முடியும். ஆனால், அறைந்தவன் ஓடிவிட்டானானால், பதிலுக்குப் பதில் செய்ய வேண்டும் என்பதற்காக அடிபட்டவர், ஓடிவிட்டவனின் உறவினரையோ, அல்லது அவருடைய மதத்தைச் சேர்ந்த இன்னொருவரையோ அறைவாராயின் அது மனித கௌரவத்திற்கே இழிவானதாகும்.

“என் மகளை எவனாவது தூக்கிக்கொண்டு போய்விடுவானாயின், அதற்காகத் தூக்கிச் சென்றவனின் மகளையோ அல்லது அவன் நண்பனின் மகளையோ நான் தூக்கிச் சென்றுவிடுவதா? இது இழிவான செய்கை என்று நான் கருதுகிறேன். நோவாகாலியில் நடந்திருக்கும் இத்தகைய செய்கைகளை முஸ்லிம் நண்பர்கள் கண்டிக்கிறார்கள். ஆனால், என்னிடம் கூறப்படுவது உண்மையாக இருக்குமாயின், பீகாரைக் குறித்து நான் என்ன சொல்லுவது? பீகாரில் நடந்திருப்பதாகக் கூறப்படுகிறவைகளைக் குறித்து நான் அளவுகடந்த மனவேதனை அடைகிறேன். பீகாரிகளை நான் நன்றாக அறிவேன். ரத்தத்திற்கு ரத்தம் என்ற கூக்குரல் காட்டுமிராண்டித்தனமானது. நோவாகாலியில் நடந்தவைகளுக்காக அவர்கள் பீகாரில் வஞ்சந் தீர்த்துக்கொள்ளக் கூடாது. திகிலடைந்து ஓடிய முஸ்லிம்களை பீகாரி ஹிந்துக்கள் கொன்றுவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இதைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்து போனேன். இச்செய்தி உண்மையாக இருக்காது என்றே நம்புகிறேன். பதிலுக்குப் பதில் செய்யும் வழியை மகாபாரதம் உபதேசிக்கிறது என்று சொல்லப்படுகிறது. இத்தகைய வியாக்யானத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. வாளின் வெற்றி வெற்றியே அல்ல என்பதுதான் மகாபாரதம் போதிக்கும் படிப்பினை. பாண்டவர்கள் பெற்ற வெற்றி வெறும் சூன்யமானது என்பதையே அந்தக் காப்பியம் எடுத்துக் காட்டுகிறது.

“உங்கள் முதன் மந்திரி சாஹீத் சாகிபைச்* சந்தித்துப் பேசினேன். பல ஆண்டுகளுக்கு முன்னால் இவரை பரீத்பூரில்

---

* அச்சமயம் பிரிவினையாகாத வங்காளத்திற்கு முதன் மந்திரியாக இருந்த ஸ்ரீ சுஹ்ரவார்தியையே சாஹீத் சாகிப் என்று காந்திஜி கூறுகிறார். லீக் தலைவர்களில் அப்பொழுது முக்கியஸ்தராக விளங்கிய இவரே, முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கையை, கல்கத்தாவில் கலவரத்தையும் படுகொலைகளையும் தூண்டிவிட்டு ஆரம்பித்து வைத்தவர் என்று கூறப்படுவது உண்டு. ஹௌராவில் ஒரு முஸ்லிம் லீக் எம். எல். ஏ. யான ஷரீப்கான், சுஹ்ரவார்தியின் கையாள் என்று கூறப்பட்டது. அப்பகுதியிலிருந்த குண்டர்கள் இவர் ஆதிக்கத்தில்தான் இருந்தனராம். அவர்களுக்கு இவர் ஆயுதங்களை விநியோகித்தார். அப்பொழுது கல்கத்தாவின் முஸ்லிம் லீக் மேயரான முகமது உஸ்மான், கல்கத்தா முஸ்லிம் லீகின் காரியதரிசியுமாவார். இவரும் ஷரீப் கானுடன் ஹௌரா பகுதியில் சுற்றி முஸ்லிம் குண்டர்களைக் கலவரத்துக்குத் தூண்டி விட்டாராம். 1946 ஆகஸ்டு 16, 17, 18-ஆம் தேதிகளில் லீகின் நேரடி நடவடிக்கை ஆவேசம் கல்கத்தாவில் உச்ச நிலையில் இருந்தது. 15-ஆம் தேதி இரவிலிருந்து முஸ்லிம்

சந்தித்திருக்கிறேன். அப்பொழுது இவர், தாம் என் மகன் என்று சொல்லிக்கொள்ளுவதில் பெருமையடைந்தார். உங்கள் முதன் மந்திரி மீது உங்களுக்கு எவ்வளவோ குறைகள் இருக்கின்றன என்பதை அறிவேன். ஆனால், சமாதானத்தையே தாம் விரும்புவதாக அவர் எனக்கு உறுதிமொழி அளித்திருக்கிறார். ஹிந்து நண்பர்களை விரோதித்துக்கொள்ள நேர்ந்துவிட்டதைக் குறித்து அவர் வருத்தப்படுகிறார். இந்த வாக்குறுதி பொய்யானது என்று காண்பதற்கு முன்னால் அதை நான் நம்பாமல் இருப்பதற்கில்லை. வாக்குறுதியை அளித்ததன் மூலம் அவர் தம்மை சோதனைக்கு உட்படுத்திக் கொண்டிருக்கிறார். உலகத்திலுள்ள எல்லோருடனும் சிநேகமாக இருந்து, மனித சமுதாயத்தை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதுவது தான் பொன்னான வழி. தன் சொந்த குடும்பத்திற்கும் இன்னுமொரு குடும்பத்திற்கும் பாகுபாடு கற்பிக்க முற்படுவோர், தம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தவறான போதனையைச் செய்து, பகைமைக்கும் மத விரோதமான காரியங்களுக்கும் வழி செய்தவராகிறார்.''

## பீகாரில் குமுறல்

பீகாரில் கலவரங்கள் மூண்டிருக்கின்றன என்ற செய்தியைப் பத்திரிகையில் படித்ததும் முதன் மந்திரியின் மூலம் பண்டித ஜவாஹர்லால் நேருவுக்குக் காந்திஜி தந்தி கொடுத்தார். உடனே அவர் தமது மூன்று சகாக்களுடன் கல்கத்தாவிலிருந்து பாட்னாவுக்குப் புறப்பட்டுப் போனார். அங்கே பல பகுதிகளின் நிலைமை அதிக மோசமாகவும் ஆபத்தானதாகவும் இருக்கிறது என்றும்,

---

கூட்டத்தினர் ஆயுதங்களுடன் தெருக்களில் சுற்றி வந்து ஆவேசமாக கோஷித்தனர். 16-ஆம் தேதி காலையிலிருந்து காலிகள் அமளி ஆரம்பமாகிவிட்டது. கல்கத்தாவில் நடந்த கூட்டத்திற்கு ஹௌராவிலிருந்து முஸ்லிம் கூட்டம் வந்தது. அவர்கள் தடிகள், ஈட்டி, கத்தி ஆகிய ஆயுதங்களை வைத்திருந்தனர். ஹௌரா பாலத்திற்கு அருகில் ஓர் ஐரோப்பிய சார்ஜெண்டு கூட்டத்தை நிறுத்தி அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்தார். பறித்த ஆயுதங்கள் இரண்டு லாரி சுமை இருந்தன. அன்று மாலை சுஹ்ரவார்தியின் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்திலிருந்து கலைந்தவர்கள், தெருவெல்லாம் கடைகளைக் கொள்ளையடித்துத் தெருக்களில் எறிந்தனர். தனிப்பட்டவர்களின் மோட்டார்கள், டிராம் வண்டிகளைக் கொளுத்தினர். பாகிஸ்தான் கோஷம் செய்துகொண்டிருந்த காலிகளை ஏற்றிச் சென்ற முஸ்லிம் லீக் லாரிகளும் மோட்டார்களுமே தெருக்களில் போய்க்கொண்டிருந்தன. இவ்விதம் அமளி நடந்தும் முதன் மந்திரி சுகரவார்தி, அடக்க எதுவும் செய்யாமல் போலீஸ் 'கன்ட்ரோல்' அறையிலேயே இருந்துகொண்டு போலீஸார் கலவரத்தை அடக்க முடியாமல் உத்தரவிட்டுக்கொண்டிருந்தாராம். பின்னர் கல்கத்தாவில் ஹிந்துக்கள் கை ஓங்கிவிட்டதும் நோவாகாலியில் முஸ்லிம் அட்டூழியங்கள் அதிகமாயின. இதன்பேரிலேயே வஞ்சம் தீர்க்கும் வெறி மூண்டு பீகாரில் கலவரம் அதிகமாயிற்று.

பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு சுஹ்ரவார்தி கொஞ்ச காலம் அதன் பிரதம மந்திரியாகவும் இருந்தார். ஆனால், ஜெனரல் அயூப்கான் தலைமையில் அங்கே ராணுவ ஆட்சி ஏற்பட்ட பிறகு இவருடைய ராஜீய உரிமைகள் பறிக்கப்பட்டன. 1962 பிப்ரவரி ஆரம்பத்தில் இவரை அந்த ஆட்சி கைது செய்து சிறையில் வைத்தது.

ஆனல், கலவரங்களை அடக்கிவிடுவதற்கு அரசாங்கம் தன்னுலானதையெல்லாம் செய்து வருகிறது என்றும் பண்டித நேரு பதில் தந்தி கொடுத்தார். அவசியமாகும் வரையில் தமது சகா சர்தார் அப்துர் ராப் நிஷ்டாருடன் அங்கேயே இருப்பது என்று பண்டித நேரு முடிவு செய்தார். மௌன தினமான தால் அன்று பிரார்த்தனைக் கூட்டத்திற்குக் காந்திஜி எழுதிய பிரசங்கத்தில் கூறியதாவது:

"காங்கிரஸ், மக்களுக்குச் சொந்தமானது. முஸ்லிக் லீக், நமது முஸ்லிம் சகோதரர் சகோதரிகளுக்குச் சொந்தமானது. காங்கிரஸ் அதிகாரத்திலிருக்கும் இடத்தில் முஸ்லிம்களைப் பாது காக்க காங்கிரஸ்காரர்களால் முடியவில்லை யென்ருல், காங்கிரஸ் பிரதமரால் என்ன பயன்? அதே போல, லீகின் அதிகாரத்தி லிருக்கும் ஒரு மாகாணத்தில் ஹிந்துக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க லீக் பிரதமரால் முடியாது போனல், லீக் பிரதமர் எதற்காக அங்கே இருக்க வேண்டும்? இவர்கள் இருவரும், தங்கள் தங்கள் மாகாணங்களில் முறையே முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க ராணுவத்தின் உதவி யையே பெற வேண்டியிருக்கிறது என்ருல், நெருக்கடி ஏற்பட்டு விடும் சமயத்தில் சாதாரணப் பொது மக்களிடையே இவர்க ளுக்கு செல்வாக்கு இல்லை என்றே ஆகிறது. அதுதான் நிலைமை என்ருல், இந்தியாவின் மீது தங்கள் ஆதிக்கத்தைத் தொடர்ந்து வைத்திருக்குமாறு இருவருமே பிரிட்டிஷாரை அழைக்கிருர்கள் என்பதுதான் அதன் பொருள். நாம் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்தித்தாக வேண்டிய விஷயம் இது.

"குற்றங்களுக்கெல்லாம் குண்டர்கள்தான் பொறுப்பு என்று சொல்லிவிட்டு நாம் தப்பித்துக்கொண்டுவிடப் பார்க்கும் பழக் கத்தை நான் வெறுக்கிறேன். தவறுகளையெல்லாம் எப்பொழு துமே குண்டர்களின் தலையில் போட்டு விடுகிருேம். அவர்கள் உற்பத்தியாகி யிருப்பதற்கும், அவர்களுக்கு ஊக்கம் அளித்திருப் பதற்கும் உண்மையில் நாமே பொறுப்பாளிகள். ஆகையால், செய்யப்பட்டிருக்கும் தவறுகளை யெல்லாம் குண்டர்களே செய் தார்கள் என்று சொல்வது சரியல்ல."

இந்த எச்சரிக்கையை காந்திஜி மறுநாள் இன்னும் பலமாக வற்புறுத்திக் கூறினர். அவர் கூறியதாவது: "கலவரத்தை ஆரம் பித்தவர்கள் முஸ்லிம்கள் அல்லவா என்று ஹிந்துக்கள் சொல் லலாம். பதிலுக்குச் செய்வது என்ற ஆசைக்குப் பலியாகிவிட வேண்டாம். ஆனல், உங்கள் கடமை என்ன என்பதைச் சிந்தியுங் கள். நடந்தது எதுவானலும், நீங்கள் சச்சரவுக்குப் போகமாட்டீர் கள் என்று திடமான உறுதி கொள்ளுங்கள். இன்று என்னுடன் இருந்த முஸ்லிம்கள், அமைதியையே தாங்கள் விரும்புவதாக என்னிடம் உறுதியாகச் சொன்னர்கள் என்பதை உங்களுக்குக் கூறுகிறேன். அவர்களெல்லோரும் பொறுப்பு வாய்ந்தவர்கள். சண்டை போட்டுக்கொள்ளுவதால் பாகிஸ்தானை அடைந்துவிட


முடியாது என்று அவர்கள் தெளிவாகக் கூறினர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு வருவீர்களாயின், சுதந்திரம் மறைந்து போய்விடும். பிரிட்டனே அல்லது இன்னுமொரு மூன்ருவது நாடோ, இந்தியாவில் தன்னுடைய அதிகாரத்தை வேரூன்றிக்கொண்டுவிடும். இந்தியா பெரிய நாடு. இதில் ஏராளமான தாதுப் பொருள்களும், உலோகங்களும், வாசனைத் திரவியங்களும் இருக்கின்றன. இந்தியா உற்பத்தி செய்யாத எதுவும் உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை. நாம் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டே யிருந்தால், இந்தியாவை இந்தியரிடமிருந்து காப்பதற்கும், இதனுடைய சிறந்த வளங்களைப் பயன்படுத்திக்கொள்ளவும் எந்தப் பெரிய வல்லரசுக்கும் ஆசை பிறந்துவிடும்.

"சுதந்திரமடைய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். இந்தியாவிற்காக எவ்வளவோ சேவை செய்திருக்கும் காங்கிரஸுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யவும் நீங்கள் தயாராயிருக்கிறீர்கள். அறுபது ஆண்டுகளுக்கு அதிகமாகக் காங்கிரஸ் செய்திருப்பவைகளையெல்லாம் நீங்கள் கெடுத்துவிடப் போகிறீர்களா? அகிம்சையை அனுசரிக்கும் வீரம் உங்களுக்கு இல்லாது போகுமாயின், அடிக்கு அடி நீங்கள் திருப்பி அடிக்கலாம் என்று உங்களுக்குக் கூறியிருக்கிறேன். ஆனல், பலாத்காரத்தை உபயோகிப்பதற்கும் ஓர் ஒழுக்க நியதி உண்டு. அப்படியில்லையானல், பலாத்காரத் தீயை மூட்டியவர்களையே அத் தீ எரித்துச் சாம்பலாக்கிவிடும். அவர்களெல்லாம் அழிந்து போய்விடுவதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனல், இந்தியாவின் சுதந்திரம் நாசமாக்கப்பட்டு விடுவதை நான் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

"பீகாரில் நடந்திருப்பவைகளைக் குறித்து வரும் செய்திகள் உண்மையாக இருந்தால், அவை மிகவும் வெறுக்கத்தக்கவையாகும். அத்தகைய காட்டுமிராண்டித்தனத்தை மத்திய அரசாங்கம் சகித்துக்கொண்டிருக்காது என்று, அக்குற்றங்களைச் செய்தவர்களுக்கு பண்டித ஜவாஹர்லால் கூறினர். கலவரத்தை அடக்குவதற்கு, விமானங்களிலிருந்து குண்டுகளை வீசுவதையும் அவர்கள் உபயோகிப்பார்கள். ஆனல், அது பிரிட்டிஷாரின் வழி. காங்கிரஸ், மக்களின் ஸ்தாபனம். மக்களின் பிரதிநிதியாகக் காங்கிரஸ் இருந்தும் அம் மக்களின் மீது அது, அந்நிய முறையை மக்களை அழிப்பதற்கு உபயோகிப்பதா? ராணுவத்தைக் கொண்டு கலவரங்களை அடக்குவதானல், இந்தியாவின் சுதந்திரத்தையே நசுக்கி அடக்கிவிட்டதாகிவிடும். என்ருலும் மக்களை ஒழுங்குபடுத்த காங்கிரஸினல் முடியாது போனல், பண்டிதர் செய்ய வேண்டியது என்ன? நியாயத்திற்கும் கட்டுதிட்டத்திற்கும் அடங்கி நடக்க மக்கள் தவறிவிடுவார்களாயின், ஆட்சி அதிகாரத்தைக் கைவிட்டுவிடுவதுதான் காங்கிரஸ் உண்மையில் செய்யக்கூடிய சிறந்த காரியம். தவறு செய்கிறவர்கள் எம்



காந்திஜி நோவாகாலி போகும் வழியில் குஷ்டியா ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் அங்கே கூடியிருந்த மக்களுக்குப் பேசுகிறார்—1946 நவம்பர் 6-ஆம் தேதி.



நோவாகாலியில் காந்திஜி படகில் சாந்த்பூருக்குப் போய்க்கொண்டிருக்கிருர்—1946 நவம்பர்.

மதத்தினரோ அந்த மதத்தினரைப் பதிலுக்குத் தாக்குவது என்பது, கோழைத்தனமான செய்கையாகும்."

சாமுகானி, 8—11—'46 —'ஹரிஜன்' - 17—11—1946

# 3
# நோவாகாலி யாத்திரை

ரெயிலில் சாதாரண மூன்றும் வகுப்பிலேயே பிரயாணம் செய்து நோவாகாலிக்குப் போக காந்திஜி விரும்பினர். ஆனல், வங்காள அரசாங்கம், அவருக்கு விசேஷ ரெயிலை ஏற்பாடு செய்தது. வர்த்தக மந்திரி ஷம்ஸுதீன் சாகிப், முதன் மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசி நஸ்ருல்லா கான் சாகிப், அப்துல் ரஷீத் சாகிப் ஆகியவர்களும் காந்திஜியுடன் போக ஏற்பாடு செய்திருந்தனர். காந்திஜியின் சௌகரியங்களைக் கவனிப்ப தற்கும், அரசாங்கத்தின் உதவி வேண்டியிருக்கும்போது அது அவருக்குக் கிடைக்கும்படி பார்ப்பதற்கும் முதன் மந்திரியே கூடச் செல்வதற்கு விரும்பினர். ஆனல், அவர் கல்கத்தாவில் இருக்க வேண்டியதாகிவிட்டது. ஷம்ஸுதீன் சாகிபின் சொந்த ஊரான குஷ்டியாவிலும், ஹக்பூர், கொலாண்டோ ஆகிய ஊர் களிலும் ஏராளமானவர்கள் கூடியிருந்தார்கள். இந்த இடங் களிலெல்லாம் காந்திஜி தாம் வந்திருப்பதன் நோக்கத்தை விளக்கிச் சுருக்கமாகப் பேசினர். அவர் கூறியதாவது:

"என் வாலிபப் பருவம் முதற்கொண்டு நான் எல்லா சமூகத்தினருடனும் சிநேகமாக இருந்து வந்திருக்கிறேன். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள், மற்றவர்கள் என்று நான் பாகுபாடு செய்ததே இல்லை. சிறுவனுகை இருக்கும்போது ராஜ் கோட்டில் உயர்தரப் பள்ளியில் நான் படித்தபோது, பள்ளிக் கூடத்தில் எந்த முஸ்லிம் அல்லது பார்ஸிப் பையனுடனும் நான் சண்டையிட்டதாக எனக்கு நினைவு இல்லை. கிலாபத் கிளர்ச்சிக் காலத்தில், என்னை மௌலானு ஷவுகத் அலி தமது சட்டைப் பைக்குள் வைத்திருக்கிருர் என்று நான் கூறுவது உண்டு. சண்டை போட நான் விரும்பவில்லை. அதே சமயத்தில் கௌரவத்தையோ, சுயமதிப்பையோ விட்டுவிட்டு சமாதா னத்தை அடைவதற்கும் நான் சம்மதித்ததில்லை. இரு தரப்பா ருக்கும் கௌரவமான சமாதானத்திற்காகவே நான் பாடு பட்டேன். ஏதாவது ஒரு தரப்பினர் தவருக நடந்துகொண்டார் களானல், அவர்கள் செய்வது தவறு என்று அவர்கள் முன்னலேயே சொல்லிவிட நான் தயங்குவதும் இல்லை. இதுதான் சிநேகத்தின் கடமையும் உரிமையுமாகும். என் வாழ் நாளெல்லாம் போராடுபவனுகவே இருந்திருக்கிறேன். தவறு

செய்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, அக்கிரமத்தையும் தவறையும் எதிர்த்து என் கடைசி மூச்சு வரையில் நான் போராடுவேன்.

"கிலாபத் நாட்களில் நான் கிழக்கு வங்காளத்திற்கு வந்ததை இப்பொழுது ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறேன். ஹிந்து–முஸ்லிம் ஒற்றுமை இருந்து வந்தகாலம் அது. காங்கிரஸ் தங்களுடைய ஸ்தாபனம் என்று சொல்லிக்கொள்ளுவதில் அப்பொழுது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் போட்டி போடுவார்கள். ஆனால், இச்சமயம் காங்கிரஸ்காரன் என்ற முறையில் நான் கிழக்கு வங்காளத்திற்கு வரவில்லை. கடவுளின் சேவகன் என்ற வகையிலேயே நான் வந்திருக்கிறேன். நோவாகாலியில் கற்பழிக்கப்பட்டிருக்கும் பெண்களின் கண்ணீரைத் துடைத்துவிட என்னால் முடியுமானால், அதைக் கொண்டே நான் திருப்தியடைந்துவிடுவேன்.

"ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய எல்லோரும் இந்தியரே. சுதந்திர இந்தியாவில் அவர்கள் விரோதிகளாக வாழ முடியாது. அவர்கள் நண்பர்களாகவும், சகோதரர்களாகவுமே இருக்க வேண்டும். நோவாகாலியில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் உடன்பிறந்த சகோதரர்களாக இருந்தார்கள்; அவர்கள் அவ்விதமே இருந்தாக வேண்டும். நான் நோவாகாலிக்குப் போய், அவர்கள் திரும்பவும் சகோதரர்களாக வாழும் வரையில் இருப்பேன். என்னுடைய யாத்திரையினால் நல்ல பலன் ஏற்படும். கிலாபத் காலத்தில் இருந்த ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை திரும்ப ஏற்படும் என்ற நம்பிக்கையுடனிருக்கிறேன். இந்தியாவைப் பிரித்துவிட வேண்டும் என்பதைக் குறித்து கிலாபத் காலத்தில் யாரும் பேசவில்லை. இப்பொழுது அவ்வாறு பேசுகிறார்கள். ஆனால், பிரித்துவிடுவது விரும்பத்தக்கதாக இருந்தபோதிலும், இந்த வழியில் அதை அடைந்துவிடக் கூடாது. சம்பந்தப்பட்டவர்களின் நல்லெண்ணம் இருந்தாலன்றி, அடைந்ததைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது. பலாத்காரத்தைக்கொண்டு பாகிஸ்தானை அடைந்துவிட வேண்டும் என்று முஸ்லிம்கள் நம்பவில்லை என்று வங்காள மந்திரிகள் என்னிடம் உறுதியாகக் கூறுகின்றனர்."

கோலாண்டோவில் காந்திஜி கப்பலில் ஏறினார். நதியில் 80 மைல் பிரயாணம் செய்து, மாலையில் சாந்த்பூரை அடைந்தார். சாந்த்பூர், எண்பது வயதையும் தாண்டியவரான காலஞ் சென்ற பாபு ஹரிதயாள நாக் பிறந்த இடம். எனவே, பழைய சிறந்த நினைவுகளெல்லாம் வந்தன. முஸ்லிம் லீகர்களையும், ஹிந்துக்களையும் கொண்டவையான இரு தூது கோஷ்டிகள் இங்கே காந்திஜியைச் சந்தித்துப் பேசின. பகல் இரண்டு மணிக்குச் சாமுகானிக்குப் போய்ச் சேர்ந்தனர். அந்த இடத்தையே அப்போதைக்கு காந்திஜி தமது தலைமை ஸ்தானமாகக்கொண்டார்.

## சர்வரோக நிவாரணி

லக்ஷாமில் ஓர் அகதிகள் முகாம் இருக்கிறது. பிளாட்பாரத்தில் காந்திஜியைத் தரிசிப்பதற்கும், அவர் கூறுவதைக் கேட்பதற்கும் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் மூலம் அகதிகளுக்குக் காந்திஜி கூறியதாவது :

"புயல் வேகத்தில் பிரசாரம் செய்துகொண்டு போவதற்காக நான் இங்கே வரவில்லை. உங்களில் ஒருவராக இங்கே தங்குவதற்காகவே வந்திருக்கிறேன். என்னிடம் எந்த மாகாணப் பித்தும் இல்லை. நான் இந்தியன் என்று எண்ணிக்கொள்ளுகிறேன். ஆகையால், நான் குஜராத்தியாக இருப்பதைப் போன்று வங்காளியாகவும் இருக்கிறேன். இங்கேயே இருந்து, அவசியமானால் இங்கேயே சாவது என்று பிரதிக்ஞை கொண்டிருக்கிறேன். ஆனால், கத்தி இறுதியாகப் புதைக்கப்பட்டு, முஸ்லிம்களின் மத்தியில் தன்னந்தனியாக ஒரு ஹிந்துப் பெண் கூட பயமின்றி தாராளமாக நடமாட முடிகிற வரையில், நான் வங்காளத்தைவிட்டுப் போகமாட்டேன்.

"நீங்கள் எனக்குச் செய்யக்கூடிய பெரிய உதவி, உங்கள் உள்ளங்களிலிருந்து பயத்தை அடியோடு ஒழித்துவிடுவதுதான். உங்களுக்கு அதைச் செய்யக்கூடிய ரட்சை எது? எனக்கு என்றும் தவறாத் துணையாக இருந்து வரும் ராமநாமம்தான் அது. கடவுளிடம் நம்பிக்கை இல்லை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், அவன் அருளின்றி நீங்கள் ஒரு தடவையேனும் மூச்சு விடவும் முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். அவரை ஈஸ்வரன் என்றோ, அல்லா என்றோ, கடவுள் என்றோ, அஹுரா மஜாத் என்றோ அழையுங்கள். மனிதர் எண்ணற்றோர் இருப்பதைப் போன்றே அவர் நாமங்களும் எண்ணற்றவை. இன்னொருவர் என்பதில்லாதவர் அவர். அவர் காலமற்றவர், ரூபமில்லாதவர், நிறமற்றவர். அப்படிப்பட்டவர் என் ராமன். அவர் ஒருவரே என் கடவுள், என் எஜமான்."

பிறகு, தாம் சிறுவனாகி இருந்தபோது தமக்கு பயம் எவ்விதம் அதிகமாக இருந்தது என்பதையும், நிழலைக் கண்டாலும் எவ்விதம் பயந்து வந்தார் என்பதையும், இந்தப் பயத்தைப் போக்க மருந்தாக தமது தாதி ரம்பா தமக்கு ராமநாமத்தைச் சொல்லிக்கொடுத்ததையும் குறித்து காந்திஜி கேட்போர் மனம் உருகும் விதத்தில் எடுத்துக் கூறினார். "பயப்படும்போது ராம நாமத்தை உச்சரி; அவர் உன்னைப் பாதுகாப்பார்" என்று ரம்பா காந்திஜியிடம் கூறுவாராம். காந்திஜி மேலும் கூறியதாவது :

"அப்பொழுதிலிருந்து எல்லாவிதமான பயங்களுக்கும் ராம நாமம் எனக்குத் தவறாத புகலிடமாகவும் பாதுகாப்பாகவும் இருந்து வருகிறது. தூய்மையானவர்களின் உள்ளங்களில் அவர் எப்பொழுதும் உறைகிறார். வங்காளத்தில் ஸ்ரீ சைதன்யர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பெயர் ஒவ்வொருவருக்கும் தெரிந்த பெயராக எவ்விதம் இருந்து வருகிறதோ அதேபோல, பக்தர்களிலெல்லாம் பெரும் பக்தரான துளசிதாஸரின் பெயரும் காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரையில் எந்த ஹிந்து இல்லங்களிலும் பிரபலமான பெயராகும். அந்த ராம நாமத்தின் மகிமையைப்பற்றி அவர் தமது ராமாயணத்தில் நமக்குக் கூறியிருக்கிறார். அந்த நாமத்துக்குப் பயந்து நீங்கள் நடப்பீர்களாயின், இந்த உலகில் எவனுக்கும், அவன் மன்னனானாலும் ஆண்டியானாலும், நீங்கள் அஞ்ச வேண்டியதே இல்லை. 'அல்லாஹூ அக்பர்' என்ற கோஷத்தைக் கேட்டு நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்? இஸ்லாம் கூறும் அல்லா, நிரபராதிகளைப் பாது காப்பவர். நபிகள் உபதேசித்த இஸ்லாம் அனுமதிக்காத காரியங்களே கிழக்கு வங்காளத்தில் நடந்திருக்கின்றன.

"உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை மாத்திரம் இருந்துவிடுமானால், உங்கள் மனைவிகளையோ, குமாரிகளையோ மானபங்கப் படுத்திவிட எவனுக்குத் தைரியம் வரும்? ஆகையால், முஸ்லிம்களுக்கு பயப்படுவது என்பதை நீங்கள் விட்டுவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். ராம நாம பக்தி உங்களுக்கு இருந்தால், நீங்கள் கிழக்கு வங்காளத்திலிருந்து வெளியேறக் கூடாது. நீங்கள் எங்கே பிறந்து, எங்கே வளர்ந்தீர்களோ அங்கேயே வீரமுள்ள ஆண்களாகவும் பெண்களாகவும் இருந்து, அவசியம் வந்தால் அங்கேயே சாகவும் வேண்டும். ஆபத்தைச் சமாளிப்பதை விட்டுவிட்டு ஓடிப் போய்விடுவது, மனிதனிடமும் கடவுளிடமும் இருக்கும் நம்பிக்கையையும், தன்னில் உள்ள சக்தியையும் மறுக்கும் செயலாகும். அத்தகைய நம்பிக்கைச் சூன்யமே தாம் என்பதை ஒருவர் காட்டிக்கொண்டிருப்பதை விட அவர் மூழ்கி மாண்டுவிடுவதே மேல்.

"போலீஸ், ராணுவப் பாதுகாப்பில் மாத்திரம் பத்திரமாக இருப்பதாக நீங்கள் உணருவது ஏன்? ராணுவத்தினரைக் கேட்டால், 'எங்களைப் பாதுகாப்பவர் கடவுளே' என்று அவர்கள் கூறுவார்கள். 'எங்களுக்கு இனி போலீஸ், ராணுவப் பாதுகாப்பு வேண்டாம். அதை நீங்கள் வாபஸ் வாங்கிக்கொண்டு விடலாம். எல்லோரும் நாடுவதான ஆண்டவனின் பாதுகாப்பிலேயே நாங்கள் இருந்து வருவோம்' என்று சம்ஸுதீன் சாகிபிடம் கூறிவிட உங்களால் இயல வேண்டும் என்று விரும்புகிறேன்."

## செய்த பாவம் என்ன ?

சாமுகானியில் சாதாரணமாக 5,000 மக்களே வசித்து வந்தனர். காந்திஜி வந்த முதல் நாள் ஹிந்து வித்யா மந்திருக்கு முன் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு 15,000 பேருக்குமேல் வந்திருந்தார்கள். அவ்வூருக்குச் சுற்றிலுமுள்ள ஊர்களிலிருந்து ஏராளமானவர்கள் வந்திருந்தனர். இவர்களில் எண்பது சதவிகிதத்தினர் முஸ்லிம்கள். வகுப்புவாத அட்டூழியங்கள் சாமுகானி டவுனில் நடந்துவிடவில்லை. ஆனால், சுற்றிலுமுள்ள

ஊர்களில் அதிக அக்கிரமங்கள் நடந்துவிட்டன. பிரார்த்தனைக் குப் பிறகு அக்கூட்டத்தில் பேசிய காந்திஜி, அக்கூட்டத்தின ருக்கு, முக்கியமாக முஸ்லிம்களுக்கு, தம் உள்ளத்திலிருந்த வேதனைகளை இருபது நிமிடங்களுக்கு மேல் பொழிந்துவிட்டார். கிலாபத் நாட்களில் அலி சகோதரர்களுடன் கிழக்கு வங்கா ளத்தில் தாம் சுற்றுப் பிரயாணம் செய்த விவரத்தை எடுத்துக் கூறினர். அவர் மேலும் கூறியதாவது :

"அந்த நாட்களில் முஸ்லிம்கள், நான் சொல்வது யாவும் சரியானது என்று எண்ணினர்கள். அலி சகோதரர்கள் பெண்கள் கூட்டத்திற்குப் போகும்போது, தங்கள் கண்களைத் துணி போட்டுக் கட்டிக்கொண்டு போவார்கள். ஆனல், அப்படி யின்றி நான் சாதாரணமாக அக்கூட்டங்களுக்குப் போக அனு மதித்தார்கள். என் தாய்மார்களிடமும் சகோதரிகளிடமும் நான் போகும்போது, நான் ஏன் கண்களைப் பொத்திக்கொண்டு போக வேண்டும்? கோஷாப் பெண்களின் மத்தியில் போக எனக்கு விருப்பமில்லை. ஆனல், அவர்கள் கூட்டத்திற்கு நான் போக வேண்டும் என்று அலி சகோதரர்கள் என்னை வற்புறுத்தி னர்கள். என்னைச் சந்திக்க பெண்கள் அதிக ஆவலுடன் இருந்தனர். நான் கூறும் புத்திமதி அவர்களுக்கு நன்மையாக இருக்கும் என்று நிச்சயமாக அவர்கள் எண்ணினர்கள். தென் னப்பிரிக்காவில் முஸ்லிம் நண்பர்களின் மத்தியில் நான் இருபது ஆண்டுகள் வசித்திருக்கிறேன். தங்கள் குடும்பத்தில் ஒருவ னகவே அவர்கள் என்னை நடத்தினர்கள். என் விஷயத்தில் கோஷா முறையை அனுசரிக்க வேண்டியதில்லை என்று அவர்கள் மனைவிகளிடமும் சகோதரிகளிடமும் கூறினர்கள். நான் இங்கி லாந்தில் பாரிஸ்டரானேன். ஆனல், சாப்பாட்டு பாரிஸ்டராவதில் என்ன மதிப்பு உண்டு? என்னை உருவாக்கியதே தென்னப்பிரிக் காவும் அங்கே நடத்திய போராட்டமுமேயாகும். சத்தியாக் கிரகத்தையும் சாத்வீக சட்ட மறுப்பையும் அங்கேதான் நான் கண்டுகொண்டேன்.

"நான் துக்கத்தில் உங்களிடம் வந்திருக்கிறேன். தன் புத்திரர்களான ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ளுவதற்கு இந்தியத் தாய் என்ன பாவம் செய்து விட்டாள்? கிழக்கு வங்காளத்தின் சில பகுதிகளில் எந்த ஹிந்துப் பெண்ணும் ஆபத்தின்றி இருக்கமுடியாது என்று அறி கிறேன். நான் வங்காளத்திற்கு வந்ததிலிருந்து முஸ்லிம்களின் அக்கிரமங்களைக் குறித்து வெறுக்கத்தக்க கதைகளையெல்லாம் கேள்விப்பட்டு வருகிறேன். கேள்விப்படும் செய்திகளில் உண் மையும் உண்டு என்று உங்கள் முதன் மந்திரியும் ஷம்ஸுதீன் சாகிபும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களுடன் சண்டை போட ஹிந்துக்களுக்கு ஆவேசத்தைத் தூண்டிவிடுவதற்காக நான் இங்கே வரவில்லை. எனக்கு விரோதிகள் கிடையாது. என் வாழ்நாளெல்லாம் பிரிட்டிஷாருடன் போராடியிருக்கிறேன்.

என்றாலும், அவர்கள் என் நண்பர்கள். அவர்களுக்கு நான் என்றும் தீமை எண்ணியதில்லை.

“பலவந்தமாக மதம் மாற்றுகிறார்கள்; பலவந்தப்படுத்தி மாட்டிறைச்சி தின்னும்படி செய்கின்றனர்; பெண்களைத் தூக்கிச் சென்று பலவந்த விவாகஞ் செய்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். கொலைகள், தீயிடுதல், கொள்ளை ஆகியவைகளைக் குறித்துச் சொல்லவே வேண்டியதில்லை. கோவில் விக்கிரகங்களையும் உடைத்திருக்கிறார்கள். விக்கிரகங்களை முஸ்லிம்கள் கும்பிடுவதில்லை, நானும் கும்பிடுவதில்லை. ஆனால், விக்கிரகங்களைக் கும்பிட விரும்புகிறவர்கள் விஷயத்தில் நாம் குறுக்கிடுவானேன்? இந்தச் சம்பவங்களெல்லாம் இஸ்லாமுக்குக் களங்கத்தை உண்டாக்குபவை. குரானை நான் படித்திருக்கிறேன். இஸ்லாம் என்ற சொல்லுக்கே சமாதானம் என்பதுதான் பொருள். ஹிந்துவாக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் முஸ்லிம்கள் ‘சலாம் அலெய்கும்’ என்று கூறுவதும் அதே பொருளில்தான். நோவாகாலியிலும் திப்பேராவிலும் நடந்திருப்பவை போன்ற காரியங்களை இஸ்லாம் எந்த இடத்திலும் அனுமதிக்கவில்லை. என்னை கல்கத்தாவில் சந்தித்த சாஹீத் சாகிபும், எல்லா மந்திரிகளும், லீக் தலைவர்களும், இத்தகைய செயல்களைச் சந்தேகத்திற்கிடமின்றி கண்டிக்கிறார்கள். கிழக்கு வங்காளத்தில் முஸ்லிம்கள் மிகப் பெரும்பான்மையோராக இருக்கின்றனர். மிகச் சிறுபான்மையினராக இருக்கும் ஹிந்துக்களுக்கு இவர்கள் காப்பாளர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ‘நாங்கள் இருக்கும்போது கெட்ட எண்ணத்துடன் உங்களைப் பார்க்கவும் எவனும் துணிய முடியாது’ என்று ஹிந்துப் பெண்களுக்கு முஸ்லிம்கள் சொல்ல வேண்டும்.”

காந்திஜி தமது பேச்சை முடித்தபோது அது நமாஸ் ஓதும் நேரம். வழக்கம் போல அவர் பிரசங்கத்தை வாங்காளியில் எடுத்துச் சொல்ல ஆரம்பித்தபோது, கூட்டத்திலிருந்த முஸ்லிம்கள் ஒன்று கேட்டுக்கொண்டனர். வங்காளி மொழி பெயர்ப்பை தாங்கள் கேட்க விரும்புவதால் நமாஸை முடித்துக் கொண்டு வருவதற்குக் கொஞ்சம் அவகாசம் அளிக்கும்படி கேட்டார்கள். அதன்படி அவகாசம் அளிக்கப்பட்டது. அங்கே ஒரு மூலையில் நமாஸ் ஓதினார்கள். அதன் பிறகு எல்லோரும் வந்து காந்திஜி பேசியதை வங்காளியில் ஸ்ரீ சதீஷ் பாபு கூறியதைக் கேட்டனர்.

இரவு ஷம்ஸுதீன் சாகிப், கல்கத்தாவிலிருந்து வந்த தமது தோழர்களுடனும், உள்ளூரிலிருக்கும் பிரபல முஸ்லிம்களுடனும் வந்து காந்திஜியைப் பார்த்தார். அகதிகளைக் குறித்தும், முக்கியமாக அவர்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பி விடும்படி தூண்டுவதைப் பற்றியும் விவாதித்தனர். கிராமங்களுக்குத் திரும்பி வந்துவிடுமாறு முஸ்லிம்கள் விட்டிருக்கும் வேண்டு

கோளை, அகதிகளுக்கு நம்பிக்கை ஏற்படும்படிச் செய்வதற்காக, ஹிந்து தலைவர்கள் மீண்டும் வற்புறுத்திக் கூறுவது நல்லது என்று ஒரு நண்பர் யோசனை கூறினார். இதற்குப் பதிலளித்த காந்திஜி கூறியதாவது: "ஹிந்துக்களுக்குப் பயமும் அவநம்பிக்கையும் இருப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன. ஆகையால், அந்தப் பயத்தையும் அவநம்பிக்கையையும் போக்குவதற்கு இந்த யோசனை சரியான வழி அல்ல. அவர்களுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க கிராமத்திற்கு ஒரு நல்ல ஹிந்துவும், நல்ல முஸ்லிமுமாவது இருக்க வேண்டும். அவர்களுக்குக் கொஞ்ச அபாயம் ஏற்பட்டாலும் உயிரைக் கொடுத்து அவர்களைப் பாதுகாக்க அந்த நல்ல ஹிந்துவும் நல்ல முஸ்லிமும் தயாராக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டாலன்றி கிராமங்களுக்குத் திரும்பிவிடும்படி அகதிகளுக்குப் புத்திமதி கூற நான் தயாராக இல்லை. அவ்விதம் உத்தரவாதமளிக்க முன்வருவார்களா என்பதைச் சொல்ல அரசாங்க அதிகாரத்திலும் இருப்பவர்களான முஸ்லிம் லீக் தலைவர்கள்தான் முன்வர வேண்டும். எவ்வளவோ அக்கிரமங்கள் நடந்துவிட்ட பிறகு அகதிகளுக்கு நம்பிக்கை ஏற்படும்படிச் செய்ய இதைவிட வேறு வழியே இல்லை."

காந்திஜியின் யோசனையை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள். அதை அமலுக்குக் கொண்டு வருவதற்குத் தங்களாலானதைச் செய்வதாகவும் கூறினர்.

['வாரக் கடிதம்' என்ற தலைப்பில் பிரசுரமானது]

சாமுகானி, 10—11—1946 —'ஹரிஜன்' – 24—11—1946

# 4

# சமாதானத்திற்கு காந்திஜி பதில்

சாந்த்பூரிலும் காந்திஜி, கிழக்கு வங்காளத்தில் நடந்திருப்பவைகளைக் குறித்து உள்ளூர் முஸ்லிம்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதை நேரில் கேட்டுத் தெரிந்துகொண்டார். நவம்பர் 7-ஆம் தேதி சாமுகானிக்கு ரெயிலில் புறப்படுவதற்கு முன்னால் 'சிவி' என்ற கப்பலில் காந்திஜியை திப்பேரா ஜில்லாவைச் சேர்ந்த பிரபலமான முஸ்லிம் லீகர்கள் பலர் வந்து சந்தித்துப் பேசினர்.

அவர்களில் ஒருவர், சாந்த்பூர் சப் டிவிஷனில் கலவரம் எதுவும் நடக்கவில்லை என்றார். பொய்யான பத்திரிகைப் பிரசாரத்தினாலேயே பீதியடைந்து ஏராளமானவர்கள் சாந்த்பூருக்கு ஓடிவிட்டார்கள் என்றார். முஸ்லிம்களால் கொல்லப்பட்ட ஹிந்துக்களின் தொகை 15 என்றும், பெரும்பாலும் ஹிந்துக்களைக்

கொண்டதான ராணுவம் சுட்டதால் அதைவிட இரு மடங்கு முஸ்லிம்கள் மாண்டனர் என்றும் அவர் கூறினர்.

தூது கோஷ்டியைச் சேர்ந்த மற்ருெருவர் சட்டசபை உறுப்பினர். இவர், ஹிந்துக்கள் இன்னும் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர் என்றும், ஹிந்து ஊழியர்கள், அவர்கள் திரும்ப வந்து குடி புகுவதைத் 'தடுத்து' வருகிருர்கள் என்றும் கடுமையாகக் கூறினர். முஸ்லிம் லீக் அரசாங்கத்திற்கு அவமதிப்பு ஏற்படும்படிச் செய்து, நிர்வாகம் நடக்க முடியாதபடிச் செய்வதற்காகவே இவ்விதம் செய்கிருர்கள் என்றும் இவர் கூறினர்.

நாஸருல்லா சாகிப், அப்துல் ரஷீத் சாகிப் ஆகியவர்களுடன் ஷம்ஸுதீன் சாகிபும் அப்பொழுது அங்கே இருந்தார். அவர் குறுக்கிட்டு, ஜில்லாவின் மற்றப் பகுதிகளில் என்ன நடந்திருக்கிறது என்பதைக் கவனிக்காமல் சாந்த்பூர் சப் டிவிஷனைப் பற்றி மாத்திரம் பேசுவது சரியல்ல என்ருர். அதோடு ராணுவத்தினர் சுட்டதைப் பற்றிச் சொல்லுவதும் கொஞ்சம்கூட பொருத்தமில்லாதது என்ருர்.

அவர்களெல்லாம் தாங்கள் கூற வேண்டியதைச் சொல்லி முடித்ததும் காந்திஜி பின் வருமாறு பதில் சொன்னர்:

"நீங்கள் சொன்னதையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்ளுவதாயிருந்தால் அது இதுவேயாகும்: 'முஸ்லிம்கள் அக்கிரமமான காரியம் எதுவுமே செய்துவிடவில்லை. விஷமத்தைத் தூண்டிவிட்டதெல்லாம், போலீஸ், ராணுவத்தின் அக்கிரமமான செயல்களே. இவர்கள் முஸ்லிம்களைத் துன்பப்படுத்துகிருர்கள். ஆகையால், உண்மையான குற்றவாளிகள் இவர்களும் பீதியைக் கிளப்பிவிடும் ஹிந்துக்களுமே!' இவ்விதம் கூறப்படுவதை யாரும் எளிதில் ஏற்றுக்கொண்டுவிட முடியாது. கலவரமே நடக்கவில்லை என்ருல், ராணுவத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏன் வந்தது? இருபது அல்லது இருபத்தைந்து பேர் அடங்கிய ஒரு ஹிந்து தூது கோஷ்டியினர் இன்று காலை என்னைப் பார்த்தார்கள். திப்பேராவிலும் நோவாகாலியிலும் என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பயங்கரமான விவரங்களை அவர்கள் என்னிடம் சொன்னர்கள். நான் வங்காளத்தில் அடி வைத்தது முதல் இதே போன்ற கதைகள் என் காதுகளில் பொழிந்துகொண்டே இருக்கின்றன. மிகப் பயங்கரமான காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று முஸ்லிம் லீகர்களும் கூட ஒப்புக் கொண்டிருக்கிருர்கள். கூறப்படும் தொகைகளை அவர்கள் ஆட்சேபிக்கிருர்கள். அவை மிகைபடுத்திக் கூறப்பட்டிருக்கலாம் என்று அஞ்சுகிருர்கள். எண்ணிக்கையைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. பெண்கள் தூக்கிச் செல்லப் பட்டதும், பலவந்தமாக மதம் மாற்றியதும், பலவந்த விவாகமும் ஒன்றே ஒன்று நடந்திருந்தாலும், கடவுளுக்குப் பயப்படும்

ஆணும் பெண்ணும் வெட்கப்பட்டுத் தலை குனிவதற்கு அது ஒன்றே போதுமானது.

"எதையும் நான் ரகசியமாக வைத்திருக்கப் போவதில்லை. எனக்குக் கிடைக்கும் தகவல்களையெல்லாம் மந்திரிகளின் முன்னால் வைக்கப் போகிறேன். பரஸ்பர நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்குவதற்கே நான் வந்திருக்கிறேன். இதில் உங்கள் உதவி வேண்டும். போலீஸின், ராணுவத்தின் உதவியைக் கொண்டு சமாதானத்தை உண்டாக்க நான் விரும்பவில்லை. திணிக்கும் சமாதானம், சமாதானமே அல்ல. கிழக்கு வங்காளத்தில் தங்கள் வீடு வாசல்களை விட்டுவிட்டு மக்கள் ஓடிவிடுவதை ஊக்குவிக்கவும் நான் விரும்பவில்லை. அகதிகள் ஏராளமாக ஊரைவிட்டு ஓடுவது, முஸ்லிம் லீக் மந்திரி சபைக்குக் கெட்ட பெயரை உண்டாக்குவதற்கு என்று வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்படுவதாக இருந்தால், அப்படிச் செய்கிறவர்களுக்கே அது தீங்காக விளையும். ஆகையால், இப்படிக் கூறிவிடுவது கௌரவமானதாக எனக்குத் தெரியவில்லை. விஷயத்தை உள்ளது உள்ளபடி மனத்தைத் திறந்து சொல்லிவிடுவதே சரியான வழி என்று கூறுவேன். உங்களைச் சுட்டிக் காட்டி உலகம் உங்கள் மீது குற்றஞ் சாட்ட அனுமதிப்பதைவிட, உங்கள் தவறுகளை நீங்களே மிகைபடுத்தி உலகத்தின் முன்னால் கூறிவிடுவது எவ்வளவோ மேலானது. தீமை செய்வோரை, கடவுள் சும்மா விட்டுவிடுவதே இல்லை."

காந்திஜி இவ்விதம் கூறியதற்குப் பிறகு முதலில் பேசிய கனவான், தீயிட்டது, கொள்ளையடித்தது போன்ற சில சம்பவங்கள் நடந்ததாக தாம் கேள்விப்பட்டதாக ஒப்புக்கொண்டார். ஆனால் அவை, வீட்டிலிருந்தவர்கள் ஓடிப் போன பிறகு நடந்தவை என்றார். வீடுகளில் யாருமே இல்லாது போய்விட்டதால், காலிகளுக்குக் கொண்டாட்டமாகிவிட்டது என்றார். இதற்குக் காந்திஜி உடனே கேட்டதாவது:

"தங்கள் வீடு வாசல்களை விட்டுவிட்டு அவர்கள் ஓடுவானேன்? சாதாரணமாக மக்கள் இவ்விதம் ஓடிப் போய் விடுவதில்லை. வீடுகளில் யாரும் இல்லாவிட்டாலும், தக்க பாதுகாப்பும் இல்லாது போகுமாயின், யாராவது கொள்ளையிட்டுவிடுவது நிச்சயம் என்பது எல்லோருக்கும் தெரியும். லீகுக்கு அவமானத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காகத் தங்களிடமிருப்பவைகளையெல்லாம் இழந்துவிட யாராவது துணிவார்களா?"

நூற்றுக்கு ஒருவர் வீதம்தான் காலித்தனங்களில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள் என்று தூது கோஷ்டியில் மற்றொருவர் சொன்னார். மற்ற 99 சத விகிதத்தினர் நல்லவர்கள் என்றும், நடந்துவிட்ட காரியங்களுக்கு இவர்கள் எந்த விதத்திலும் பொறுப்பாளிகள் அல்ல என்றும் கூறினர். இதற்குக் காந்திஜி கூறிய பதிலாவது:

"விஷயத்தை அந்த வகையில் கவனிப்பது சரியானதே அல்ல. 99 சத விகிதத்தினர் நல்லவர்களாக இருந்து, நடந்த காரியங்களைத் தீவிரமாக வெறுத்து மிருப்பார்களாயின், அந்த ஒரு சத விகிதத்தினர் எதையும் செய்ய முடிந்திராது. அவர்களை எளிதில் கைது செய்து நடவடிக்கையும் எடுத்திருக்கலாம். நல்லவர்கள், நல்லவர்கள் என்ற பெயருக்கு உரியவர்களாக இருக்க வேண்டுமானல், தீமைகளை எதிர்த்துத் தீவிரமாகப் போராட வேண்டும். மதில்மேல் உட்கார்ந்து கொண்டிருப்பது நல்லதல்ல. அப்படிச் செய்ய அவர்கள் விரும்பவில்லை யென்றால், அதை அப்படியே சொல்லி, முஸ்லிம்கள் பெரும்பான்மையின ராயிருக்கும் பகுதிகளிலுள்ள ஹிந்துக்களிடம் வெளியேறிவிடும் படி பகிரங்கமாகச் சொல்லிவிட வேண்டும். ஆனல், நான் அறிந்த வரையில் அதுவல்ல அவர்களுடைய நிலைமை. பாகிஸ் தானிலிருக்கும் சிறுபான்மையினருக்குக் கலப்பில்லாத நீதி கிடைக்கும் என்று காயிதே ஆஜம் கூறுகிருர். அந்த நீதி எங்கே? பாகிஸ்தானில் தாங்கள் எதிர்பார்க்கக் கூடியது என்ன என்பதற்கு நோவாகாலி ஓர் அறிகுறியா என்று ஹிந்துக்கள் இன்று என்னைக் கேட்கிருர்கள். இஸ்லாமைக் குறித்து நான் படித்து ஆராய்ந்திருக்கிறேன். 'கல்மா ஓதி ஹிந்து தருமத்தை ஏன் மறந்துவிடக் கூடாது?' என்று தென்னப்பிரிக்காவிலிருந்த முஸ்லிம் நண்பர்கள் என்னைக் கேட்டு வந்தார்கள். 'நான் சந்தோஷமாக கல்மா ஓதுவேன்; ஆனல், ஹிந்து தருமத்தை நான் ஒரு நாளும் மறக்கமாட்டேன்' என்று அவர்களிடம் நான் கூறுவேன். ஹஜ்ரத் முகமதுவிடம் எனக்கு இருக்கும் பக்தியும் மரியாதையும் வேறு யார் மீதும் இருப்பதற்குக் குறைவானது அல்ல. ஆனல், யதேச்சாதிகாரம் செலுத்துவதும் பலவந்தப் படுத்துவதும் மதத்தைக் கெடுப்பதாகுமேயன்றி அதை உயர்த் துவதாகாது."

காந்திஜி கூறியதை ஷம்ஸுதீன் சாகிப் ஒப்புக்கொண்ட தோடு, மதத்தில் பலவந்தம் இருக்கக்கூடாது என்பதற்குக் குரானிலிருந்து ஒரு மேற்கோளையும் சொன்னர். பாகிஸ்தான் வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்பினல், சிறுபான்மை சமூகத் தினருக்கு நியாயத்தை வழங்கி அவர்களுடைய நம்பிக்கை யைப் பெற வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு தாம் கூறியிருப்ப தாகவும் சொன்னர். 'நீங்கள் செய்திருக்கும் காரியங்களைச் செய்ததால், பாகிஸ்தானை நீங்கள் கொன்றுவிடுவீர்கள்' என்று அவர்களிடம் கூறியிருப்பதாகச் சொன்னர்.

காந்திஜி மேலும் கூறியதாவது: "நோவாகாலி ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸ்ரீ மெக் இனர்னி ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளி யிட்டிருக்கிருர். அதில் அவர், 'வேறுவிதமாக நிரூபிக்கப்பட்டா லன்றி, சமீபத்தில் நடந்த கலவரங்கள் ஆரம்பமான பிறகு இஸ் லாம் மதத்தை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் எல்லோரும், பல வந்தமாக மதம் மாற்றப்பட்டிருப்பவர்கள், உண்மையில் அவர் கள் ஹிந்துக்களாகவே இருக்கிருர்கள் என்றே கொள்ளுவேன்'

என்று கூறியிருக்கிறார். இதை ஒப்புக்கொண்டு எல்லா முஸ்லிம்களும் கூறிவிடுவார்களாயின், பிரச்னையைத் தீர்ப்பதற்கு இதுவே அதிக தூரம் உதவியாக இருக்கும். கல்மா ஓதுவதற்கு ஒருவர் மனப்பூர்வமாகவே விரும்பியிருப்பாராயின், இதற்குப் பகிரங்கமாகச் சாட்சிகளெல்லாம் ஏன் இருக்க வேண்டும்? மனமார மதம் மாறுவதற்குக் கடவுளைத் தவிர எந்த சாட்சியமும் அவசியமில்லை. சாதாரணமான நேர்மைக்கு மாறான செயல்களை ஒருவன் தொடர்ந்து செய்துகொண்டிருக்கும்போது, கல்மாவை ஓதிவிடுவது என்பது, இஸ்லாமை இழிவுபடுத்துவதேயன்றி அது இஸ்லாம் ஆகாது. இது, பிளிமத் சகோதரர்களைப் பற்றி எனக்கு நினைவூட்டுகிறது. கிறிஸ்தவ மதத்தைத் தழுவுமாறு அவர்கள் என்னை அழைத்தார்கள். தன்னை ஏற்றுக்கொண்டு விட்டவர்கள் செய்யும் பாவங்களிலிருந்தெல்லாம் கிறிஸ்து நம்மை மீட்டுவிடுவாராகையால், கிறிஸ்து மதத்தில் சேர்ந்து விட்டால் நான் எதை வேண்டுமானாலும் தாராளமாகச் செய்யலாம் என்றும் அவர்கள் கூறினார்கள்.* ஆனால், இதற்கு நேர்மாறானதாக கிறிஸ்தவ புது ஆகமத்திலேயே ஒரு வாக்கியம் இருக்கிறது. "உதட்டில் மாத்திரமே 'ஆண்டவனே, ஆண்டவனே' என்று சொல்லிக்கொண்டிருப்பவர் ஒவ்வொருவரும் என்னை அடைந்துவிடுவதில்லை" என்பதே அது. ஆகையால், ஒரு முறையைப் பலவந்தப்படுத்தி உச்சரிக்கும்படிச் செய்வதனால் முஸ்லிமல்லாதவரை முஸ்லிமாக்கிவிட முடியாது என்பதைச் சொல்லியாக வேண்டியவர்கள் முஸ்லிம்களின் தலைவர்களே. இக்காரியங்கள் இஸ்லாமைத்தான் கேவலப்படுத்தும்."

"இவையெல்லாம் பொய்ப் பிரசாரங்களின் பலனாக நடந்தவை" என்று தூதுகோஷ்டியில் வந்தவர்களில் அதுவரை பேசாமலிருந்த ஒருவர் கூறினார். இதற்குக் காந்திஜி கூறியதாவது: "பொய்ப் பிரசாரத்தின் மீதே நாம் பழியையெல்லாம் போட்டுவிடக் கூடாது. நாம் ஒழுங்காக இருந்தால், பொய்ப் பிரசாரத்தினால் எதுவுமே செய்துவிட முடியாது."

சமாதானத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்க ஹிந்துத் தலைவர்களுடன் தாங்கள் போய் வேலை செய்யத் தயாராக இருப்பதாகவும், ஆனால், ஹிந்துத் தலைவர்கள் தங்கள் மீது அவநம்பிக்கை கொள்ளுகிறார்கள் என்றும் தூது கோஷ்டியில் வந்த ஒருவர் முடிவாகக் கூறினார்.

இதற்குக் காந்திஜி கூறிய பதிலாவது: "அதைப் பற்றிக் கவலையில்லை. நீங்கள் முன்வருவதாகக் கூறுவதை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுகிறேன். நீங்களும் நானும் உள் பிரதே

---

* பிளிமத் சகோதரர்கள் தம்மை மதம் மாற்ற முயன்றதைக் குறித்தும், அவர்களுடன் நடந்த மத சம்பந்தமான விவாதங்களைக் குறித்தும் காந்திஜி தமது 'சுயசரிதை'யில் விவரமாகக் கூறியிருக்கிறார். அதன் விவரத்தை 'மகாத்மா காந்தி நூல்கள்'—மூன்றும் தொகுப்பு 173 - 174–ஆம் பக்கங்களில் காண்க.

சத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் சமாதானத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்குவோம்."

தட்டப்பாரா, 15—11—'46 — 'ஹரிஜன்' - 24—11—1946

# 5

# வாரக் கடிதம்

இச்சமயத்தில் நோவாகாலியில் எங்கே போனாலும் மரகதம் போன்று தோன்றும் பசுமையான வயல்கள். சென்ற பன்னிரண்டு ஆண்டுகளில் என்றும் கண்டறியாத வகையில் இவ்வாண்டு நல்ல விளைச்சல். ஆனால், இயற்கை அளித்த ஏராளத்தையும் மனிதனின் கொலைக் கொடுமை அதிகமாகக் கெடுத்து விட்டதாக இருந்தது. பயிர்கள் கதிர் விட்டிருந்தன; முற்றி விடும் சமயம். ஆனால், அப்பயிரை விதைத்தவர்களில் அநேகர் அதை அறுவடை செய்து எடுத்துப் போவதற்கு அங்கே இல்லை. சிலர் கொல்லப்பட்டு விட்டனர். மற்றவர்களோ, ஆபத்துக்கு அஞ்சி ஓடி பல அகதிகள் முகாம்களிலும் இருந்தார்கள்.

அகதிகள் திரும்பி தங்கள் ஊர்களுக்குப் போய்விடும்படிச் செய்யும் பிரச்னையே அதிகாரிகளுக்கும், பல நிவாரண ஸ்தாபனங்களுக்கும் அதிகக் கவலை தருவதாக இருந்தது. அகதிகள் சீக்கிரத்தில் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போய்விட்டாலன்றி, நெல், பாக்கு மகசூல்களை, அவர்களில்லாத போது மற்றவர்கள் கொண்டு போய்விடுவார்கள். இப் பிரச்னையில் எத்தனையோ கஷ்டங்கள் இருந்தன. இருந்ததையெல்லாம் அவர்கள் இழந்துவிட்டார்கள். அவர்கள் போய் குடியிருப்பதற்கு வீடுகள் இல்லை. வயிற்றுக்கு வழி இல்லாமல், தங்குவதற்குத் தலைக்கு மேல் கூரையும் இல்லாமல் அவர்கள் எங்கே போவது? இதையே அவர்கள் கேட்கிறார்கள். எல்லாவற்றையும்விட அவர்கள் கிராமங்களுக்குத் திரும்பப் போவார்களானால், அவர்கள் அங்கே பத்திரமாக இருக்க முடியும் என்பதற்குத்தான் என்ன உத்தரவாதம் இருக்கிறது? பயங்கரச் சூழ்நிலையைப் போக்கி, பரஸ்பர நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் உண்டாக்குவதே பிரச்னைகளிலெல்லாம் பெரிய பிரச்னை.

## கோபயர்பாக்கில் அட்டூழியம்

சாமுகானியிலிருந்து 8-ஆம் தேதி காந்திஜி மோட்டாரில் கோபயர்பாக் என்ற கிராமத்திற்குச் சென்றார். அவருடன் பார்லிமெண்டரி காரியதரிசிகள் ஜனாப் நஸருல்லா சாகிப், அப்துர் ரஷீத் சாகிப், ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸ்ரீ மெக்இனர்னி,

போலீஸ் சூப்பரின்டெண்ட் ஆகியவர்களும் போனார்கள். இங்கே ஓங்கி வளர்ந்த தென்னை, பாக்கு மரங்களடர்ந்த தோட்டங்களுக்குள்ளே, ஹிந்துக் குடும்பங்கள் குடியிருந்த ஐந்து குப்பல் குடிசை வீடுகள், அதைவிட சுமார் ஐம்பது மடங்குக்கும் அதிகமான முஸ்லிம் வீடுகளுக்கிடையே இருந்தன. இந்த வீடுகளில் ஒன்று, கிராமாதிகாரியின் வீடு. நீலவானுக்கு அடியே பட்டுப் போன்று விளங்கிய வாழை இலைகள் படர்ந்து இருந்தன. பார்க்குமிடமெங்கும் இயற்கையின் அழகு அற்புதமாக இருந்தது. இன்பமான இனிய காற்றும் வீசிக்கொண்டிருந்தது. ஆனால், கண் முன்பு தென்பட்ட மனிதக் காட்சியோ பார்ப்போரின் ரத்தம் உறைந்து போய்விடும்படிச் செய்வதாயிருந்தது. கொலைகளும் வீடுகளுக்குத் தீயிட்டுப் பொசுக்கியதும் அங்கே நடந்திருந்தன. கோயில் ஆபாசப்படுத்தப்பட்டிருந்தது. கொல்லப்பட்டவர்களின் சவங்கள், வீட்டுக்கு முன்னால் ஒரு மூலையில் குவிக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டன. ஒரு சமயம் சதையாகவும் ரத்தமாகவும் இருந்த அச்சடலங்களில் எரிந்தது போக மீதமிருந்தவை, அங்கே எத்தகைய கொடூரம் நடந்திருக்கிறது என்பதற்குச் சாட்சியாகக் கிடந்தன. சில வீடுகளின் வாசற்படிகளில் ரத்தக் கறைகள் இருந்தன. பல வீடுகளின் உள் தரை தோண்டப்பட்டிருந்தது. பணமும் நகைகளும் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்பதற்காக தோண்டிப் பார்த்திருக்கிறார்கள். அங்கே சாவின் நாற்றம் அப்பொழுதும் இருந்து வந்தது. படுநாசத்தின் சித்திரமாகவும் அவ்விடம் இருந்தது. அந்த வீட்டிலிருந்து மூன்று பெண்கள் தூக்கிச் செல்லப்பட்டுவிட்டனர். இரு பெண்கள் இன்னும் அகப்படவில்லை.

## தட்டப்பாராவில்

மாலையில் அங்கிருந்து திரும்புகையில் காந்திஜி தட்டப்பாராவில் திவான்பாரியில் தங்கினார். கோபயர்பாக்கில் கிராமாதிகாரியின் குடும்பம் அடைந்த கதியை அடையாமல் திவான்ஜியின் குடும்பம் சாமர்த்தியம், சமயோசித புத்தி, நல்ல அதிருஷ்டம் ஆகியவைகளினால் தப்பியது. அந்த இடமே இப்பொழுது ஓர் அகதிகள் முகாமாகிவிட்டது. அங்கே அகதிகள் 6,000 பேர் இருந்தனர். அவரவர்கள் இடத்திற்கு அகதிகள் போகும்படிச் செய்வதைக் குறித்து காந்திஜி இங்கே ஜில்லா அதிகாரிகளுடன் விவாதித்தார். உள்ளூர் முஸ்லிம் லீக் உறுப்பினர் சிலரும் அழைக்கப்பட்டனர்; அவர்களும் விவாதத்தில் கலந்துகொண்டார்கள்.

மாலையில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அடங்கிய கூட்டத்தில் காந்திஜி பேசுகையில் கூறியதாவது: "ஹிந்துக்கள், அவர்கள் செய்திருப்பதைப் போன்று வீடு வாசல்களை விட்டு ஓடியிருப்பது, ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இருவருக்குமே அவமானமாகும். முஸ்லிம்களுக்குப் பயந்து ஹிந்துக்கள் ஓடியிருப்பது, முஸ்லிம்களுக்கு அவமானம். ஒரு மனிதனைப் பார்த்து இன்னொரு மனிதன் பயமடைந்து விடுவானேன்? தங்களுக்குப்

பயம் ஏற்பட்டுவிடுவதற்கு இடங்கொடுத்து விட்டது, ஹிந்துக்களுக்கும் அவமானமாகும். கடவுளைத் தவிர வேறு யாருக்கும் மனிதன் அஞ்சக்கூடாது என்று நான் அடிக்கடி கூறிவருகிறேன். ஓடி வந்துவிட்டவர்கள், தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பப் போய்விட வேண்டும் என்று என்னுடன் வந்திருக்கும் அரசாங்க அதிகாரிகள் அதிகக் கவலையுடனிருக்கிறார்கள். ஒரே இடத்தில் இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வயிற்றுக்குச் சோறும் கட்டத் துணியும் கொடுப்பது என்பது, அகதிகளுக்கு மாத்திரமேயன்றி அதிகாரிகளுக்கும் அதிகக் கஷ்டமானதாக இருக்கிறது. தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் இத்தகைய சம்பவங்கள் நடந்துவிட்டதற்காக அரசாங்க அதிகாரிகளும் வெட்கப்படுகிறார்கள். நோவாகாலியிலும் திப்பேராவிலும் நடந்துவிட்டவைகளையெல்லாம் நீங்கள் மறந்து மன்னித்துவிட வேண்டும். நீங்கள் கோழைகளாகிவிட வேண்டும் என்பதல்ல அதன் பொருள். ஆனால், நடந்துவிட்ட மோசமான சம்பவங்களை மறக்காமல் நினைவிலேயே வைத்துக்கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. இப்பகுதிகளிலிருக்கும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் திரும்பவும் நண்பர்களாகிவிடுவார்கள் என்று நம்புகிறேன். அதற்காகப் பிரார்த்திக்கிறேன். ஹிந்துக்கள் எவ்வளவோ துயரங்களை அனுபவித்திருக்கிறார்கள், இன்னும் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை அறிவேன். ஒரு நல்ல முஸ்லிமும் ஒரு நல்ல ஹிந்துவும் அவர்களுடன் போய், ஒவ்வொரு கிராமத்திலும் அவர்கள் பத்திரமாக இருப்பதற்கு உத்தரவாதமளிக்காத வரையில், ஹிந்துக்கள் அவர்களுடைய கிராமங்களுக்குத் திரும்பிப் போய்விடும்படி நான் யோசனை கூறமாட்டேன். அவசியமான இந்த உத்தரவாதத்தை அளிப்பதற்கு இப்பகுதியில் அநேக நல்ல முஸ்லிம்களும் நல்ல ஹிந்துக்களும் இருக்கிறார்கள் என்றும் நிச்சயமாக நம்புகிறேன்."

அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒரு முஸ்லிம் நண்பர், "நாங்கள் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுகிறோம் என்று ஹிந்துக்களுக்கு வாக்குறுதி அளித்துவிட்டோம். ஆனால், ஹிந்துக்கள் நாங்கள் கூறுவதைக் கேட்கவில்லை'' என்றார். இதற்குக் காந்திஜி, "ஹிந்துக்கள் நம்பாமலிருப்பதன் காரணத்தைப் புரிந்துகொள்ள நீங்கள் முயற்சிப்பதோடு அவர்களுக்கு இருக்கும் பயத்தையும் நீங்கள் போக்க வேண்டும்'' என்று பதில் கூறினர். உடனே ஒரு ஹிந்து அகதி எழுந்து கூறியதாவது: "இனியும் முஸ்லிம்களின் வாக்குறுதியில் நாங்கள் எவ்விதம் நம்பிக்கை வைக்க முடியும்? ஆபத்து ஏற்படும் போலிருந்த சமயத்தில், எங்களைப் பாதுகாப்பதாக அவர்கள் வாக்குறுதியளித்தார்கள். ஆனால், பிறகு எங்களைக் காப்பாற்றத் தவறிவிட்டார்கள். அதோடு நாங்கள் எங்கே போய்த் தங்குவது? எங்களுடையவை என்று இருந்தவைகளையெல்லாம் இழந்துவிட்டோம். நாங்கள் திரும்பிப் போய் காடுகளில் தங்

குவதா? கிராமத்திலிருந்த நல்ல முஸ்லிம்கள் ஐந்து பேர், முன்னால் எங்களைக் காப்பாற்றத் தவறியிருக்கும்போது ஒரு நல்ல முஸ்லிம் இப்பொழுது எங்களை எவ்விதம் காப்பாற்றி விடுவார்?" இதற்குக் காந்திஜி கூறியதாவது: "நீங்கள் உங்கள் ஊர்களுக்குத் திரும்பிப் போகும்போது, நீங்கள் குடியிருக்கக் குடிசைகளைக் கட்டிக் கொடுக்கவும், உங்களுக்கு உணவுக்கும் துணிக்கும் வகை செய்யவும் அதிகாரிகள் ஏற்பாடு செய்வார்கள். முன்னால் நடந்துவிட்டது எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு கிராமத்திலும் உங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக ஒரு நல்ல முஸ்லிமும் ஒரு நல்ல ஹிந்துவும் உத்தரவாதமளிப்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுடைய வாக்குறுதிக்கு அக்கிராமத்திலுள்ள எல்லா முஸ்லிம்களின் ஆதரவும் இருப்பதாகவும் நீங்கள் கொள்ள வேண்டும். அப்பொழுதும் நீங்கள் பயப்படுவீர்களாயின் நீங்கள் கோழைகள்; கோழைகளுக்குக் கடவுளும் உதவி செய்ய மாட்டார்."

மறுநாள் காந்திஜி, தமது முகாமை தட்டப்பாராவுக்கு மாற்றிக்கொண்டார். உள் பகுதிகளிலிருக்கும் பாதிக்கப்பட்ட கிராமங்களைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கட்டும் என்பதற்காகவே அவ்விதம் செய்தார். மாலை பிரார்த்தனைக்குப் பிறகு ஏராளமானவர்கள் வந்திருந்த கூட்டத்தில் பேசினார். வந்திருந்தோரில் 80 சத விகிதத்தினர் முஸ்லிம்கள். அவர் பேசியது, முஸ்லிம்களின் மனச்சாட்சிக்கு ஓர் உருக்கமான வேண்டுகோளாகும். கதைகளில் கூறப்படும் தத்துவ ஞானியின் மந்திரக் கல்லை விடக் கூட அதிக சக்தி வாய்ந்ததான, தூய்மைப்படுத்தும் பொன் செய்யும் மருந்தாகிய கடவுளின் திருநாமத்தைக் குறித்து காந்திஜி கூறினார். அவர் சொன்னதாவது: "ஹிந்துக்கள் திரும்பி வந்து, உங்கள் நண்பர்களாகவும் அக்கம் பக்கத்தாராகவும் வசிக்கட்டும் என்று உண்மையாகவே நீங்கள் விரும்புகிறீர்களா? உங்கள் மனத்தைச் சோதித்துப் பார்த்துக்கொண்டு எனக்குக் கூறுங்கள். அவர்கள் திரும்ப வந்துவிட வேண்டும் என்று விரும்புவீர்களானால், அவர்கள் ஆபத்தில்லாமல் வாழ்வதற்கும், சுயமதிப்புடன் இருப்பதற்கும் நீங்கள் உத்தரவாதம் அளிக்கிறீர்களா? அவர்களுடைய மகள்களும், சகோதரிகளும், தாய்மாரும், முஸ்லிம்களின் மகள்களையும், சகோதரிகளையும் தாய்மாரையும் போலவே கருதப்படுவார்கள் என்றும் நீங்கள் உறுதிமொழி அளிக்க வேண்டும். இப்படிச் செய்ய நீங்கள் தயாராக இல்லையானால், அதை மனம்விட்டு என்னிடம் சொல்லி விடுங்கள். இந்தத் துர்ப்பாக்கிய அகதிகளை, வேறு இடங்களுக்குப் போய் குடியேறிவிடுமாறு சொல்லிவிடுகிறேன் ஆனால், உங்கள் மனம் மாறும் வரையில் நான் மாத்திரம் இங்கேயே இருப்பேன். நீங்கள் எனக்குக் கொடுப்பதைக் கொண்டு இங்கேயே வாழ்ந்து, அவசியமாயின் இங்கேயே சாவேன்.*"

*இங்கே காந்திஜி பேசியதன் முழு விவரத்தையும் அடுத்து 'மனச்சாட்சிக்கு வேண்டுகோள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கும் அத்தியாயத்தில் காண்க.

கூட்டத்தின் முடிவில் பல கேள்விகளை எழுதி காந்திஜியிடம் கொடுத்தார்கள். 'எங்களைத் துன்பப்படுத்திய காலிகள் இன்னும் நடமாடிக்கொண்டிருக்கும்போது, கிராமங்களுக்குத் திரும்பிப் போய்விடலாம் என்ற நம்பிக்கை அகதிகளுக்கு எப்படி ஏற்பட முடியும்?' என்பது அக்கேள்விகளில் ஒன்று. இதற்குக் காந்திஜி கூறியதாவது: "காலிகளைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. ஆனால், அரசாங்கம் அதன் கடமையைச் செய்யட்டும் என்று விட்டுவிடும்படி அகதிகளுக்கு ஆலோசனை கூறுகிறேன். திரும்பி வந்துவிடுமாறு நல்ல முஸ்லிம்கள் உங்களை மனமார அழைப்பார்களாயின், நீங்கள் திரும்பிப் போய்விட வேண்டும்."

## மேலும் உள் கிராமங்களில்

*11*–ஆம் தேதி காந்திஜியின் மௌன விரத தினம். என்றாலும், நோவாகோலா, சோனைசக், கில்பாரா ஆகிய கிராமங்களுக்குச் சென்றார். இவை லக்கிம்பூர் தாணாவைச் சேர்ந்தவை. கொஞ்ச தூரம் மோட்டாரிலும் கொஞ்சம் படகிலுமாகக் காந்திஜி இந்த யாத்திரையை முடித்தார். கால்வாய்களில் நீர்ப் பூண்டுகள் அதிகமாக இருந்ததால், படகு தாராளமாகப் போகமுடியவில்லை. நோவாகோலாவில் 15 வயது பள்ளிச் சிறுவனுள்பட எட்டுப் பேர் கொலையுண்டனர் என்று கூறப்பட்டது. நான்கு மண்டை ஓடுகளும், மனித எலும்புகளும் அங்கே சிதறிக் கிடந்தன. அநேகமாக எல்லா வீடுகளுமே கொளுத்திச் சாம்பலாக்கப்பட்டு விட்டன. பள்ளிச் சிறுவன் கொலையுண்ட வீட்டில், அவனுடைய பள்ளிக்கூடப் புத்தகங்களும், புதிதாக எழுதப்பட்ட நோட்டுகளும் அங்குமிங்குமாகக் கிடந்தன. வீடுகளைச் சுற்றி இருந்த தென்னை, பாக்கு மரங்கள் எரிந்து கருகியிருந்தன. கொல்லப்படாமலோ, ஓடிவிடாமலோ இருந்தவர்கள் எல்லோரும் பலவந்தமாக மதம் மாற்றப்பட்டுவிட்டனர். இவ்விதம் மதம் மாற்றப்பட்டவர்களில் ஊமையனும் ஒருவன். அவன் பரிதாபகரமான வகையில் சமிக்ஞை செய்து, ஒரு துணியில் முடித்து வைத்திருந்த தனது உச்சிக் குடுமி மயிரைக் காட்டினான். அவன் உச்சிக் குடுமியை நறுக்கிவிட்டனர். என்றாலும், அவன் அதை விடாமல் பத்திரமாகத் துணியில் முடிந்து வைத்திருக்கிறான். அங்கே இன்னும் இருந்த சில பெண்கள், யார் உள்ளத்தையும் உருக்கும் வகையில் அழுது புலம்பிக்கொண்டிருந்தார்கள். சோனைசக் என்ற இடத்தில் கோயிலை ஆபாசப்படுத்திக் கொளுத்திவிட்டனர். கோயில் இடிந்து கிடந்ததோடு உள்ளிருந்த விக்கிரகங்கள் உடைந்து படிக்கட்டுகளில் கிடந்தன. இந்தக் கிராமத்திலும்கூட அதே அழுகுரலையும் புலம்பல்களையுமே காந்திஜி கண்டார்.

அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி எழுதிக் கொடுத்த செய்தி வாசிக்கப்பட்டது. தாம் அன்று கண்ட காட்சிகள் தமக்கு உண்டாக்கிவிட்ட மனவேதனையை அதில் அப்படியே பொழிந்திருந்தார்: "நான் சென்ற இடங்களி



நோவாகாலியில் காந்திஜி ஒரு கிராமத்திலிருந்து மற்ருேர் கிராமத்திற்குப் போய்க்கொண்டிருக்கிருர்.
ஆயுதம் தாங்கிய போலீஸார் கூடப் போகின்றனர்.



நோவாகாலியில் மூங்கில் தோப்புகளுக்கிடையே காந்திஜி வெறுங்காலுடன் போய்க்கொண்டிருக்கிறார்.

லெல்லாம் எரிந்து கிடக்கும் வீடுகளையே பார்க்கிறேன். கொள்ளை, கொலை, பலவந்த மத மாற்றம் ஆகியவை பற்றிய பயங்கர விவரங்களையும் கேள்விப்படுகிறேன். ஹிந்துப் பெண்கள் நெற்றியிலும் தலை மீதும் குங்குமத் திலகமோ, கைகளில் சங்கு வளையல்களோ இல்லாதிருக்கிறார்கள். ஹிந்துக்களெல்லாம் கிராமங்களுக்குத் திரும்பி வந்து, கலவரங்களுக்கு முன்னால் அவர்கள் வாழ்ந்ததைப் போன்று வாழும்படிச் செய்வதை முன்னிட்டு எல்லா முஸ்லிம்களும் ஒன்றுபட்டு அக்கிரமங்களைக் கண்டிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அவர்கள் திரும்பி வருவதற்கு முன்னால், அவர்களின் வீடுகளைத் திரும்பக் கட்டிக்கொடுக்கவேண்டும். இதில் முஸ்லிம்கள் உதவி செய்ய வேண்டும். திருக்குரான் இடும் ஆக்ஞையும் இதுதான் என்று நான் நம்புகிறேன்."

மறுநாள் மாலை பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி, பெரும்பாலும் அகதிகளே கூடியிருந்த கூட்டத்தில் பேசினார். அகதிகள், தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப் போய்விடும் பிரச்னையையே மீண்டும் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது: "எனக்கு முன்னால் உங்களிடம் பேசிய யூனியன் நெ. ஆறின் உப தலைவர் மௌல்வி சாகிப், உங்கள் வீடுகளுக்குத் திரும்பி வந்துவிடுமாறு, முஸ்லிம்களின் பெயரால் உங்களை அழைத்தார். ஆனால், பேச்சில் இருப்பதைப் போலச் செயலில் இக்காரியம் அவ்வளவு எளிதானது அன்று. இரு சமூகங்களும் திரும்பவும் அமைதியாகவும் நட்புடனும் இருப்பதைப் பார்க்க வேண்டும் என்பதில் ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். இதற்கு அவர்கள் ஒரே மதத்தினராக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நாசத்தின் பயங்கரமான காட்சிகளை நான் பார்த்தேன். கஷ்டமடைந்துவிட்டவர்களின் பயம் நிறைந்திருந்த முகங்களையும் பார்த்தேன். ஒரு முறை அவர்கள் பலவந்தமாக மதம் மாற்றப்பட்டுவிட்டதால், திரும்பவும் இதுவே நடக்குமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அந்தப் பயத்தை விட்டொழித்து விடும்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன். கடவுளின் நாமத்தை உச்சரிப்பதை விட்டுவிட எவன் ஒருவன் மறுத்துவிடுகிறானோ, அவன் ஒருவனே வாழ்வதற்குத் தகுதியுடையவன். ராம நாமத்தைச் சொல்லுவதை விடுவதைவிட சாவதற்கும் தயாராயிருப்பதற்கு நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ராணுவ, போலீஸ் உதவியைப்பற்றி நான் பெரிதாக நினைக்கவில்லை. திருடர்களையும் கொள்ளைக்காரர்களையும் கைது செய்வதுதான் போலீஸின் வேலை. வெளி ஆக்கிரமிப்பிலிருந்து நம்மைப் பாதுகாப்பது ராணுவத்தின் வேலை. நமக்குள் சண்டையிட்டுக்கொள்ளாமல் நாம் நண்பர்களாக வாழ வேண்டும் என்று ராணுவமும் போலீஸும் நமக்குச் சொல்லிக் கொடுக்க முடியாது. அகதிகள் திரும்ப அவரவர்களின் ஊர்களுக்குப் போகும்படிச் செய்ய திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அமைதி ஏற்பட வேண்டும் என்று முஸ்லிம் லீக் விரும்பி, ஒத்துழைத்தாலன்றி

இத்திட்டம் சரிவர வேலை செய்ய முடியாது. இரண்டு, மூன்று நாட்களில் ஷம்ஸுதீன் சாகிப் வருகிறார். லீக் அரசாங்கம் என்ன செய்ய விரும்புகிறது என்பதை அவர் உங்களுக்குச் சொல்லுவார்."

கோமடோலி, நந்தி கிராமம் ஆகியவைகளுக்கும் காந்திஜி சென்றார். அதோடு லக்கிம்பூர் தாணவில் அவருக்கிருந்த வேலைத் திட்டம் பூர்த்தியாகிவிட்டது. நோவாகோலாவிலும் கில்பாரா விலும் இருந்த அதே காட்சிகள்தான் நந்தி கிராமத்திலும் தென் பட்டன. சுமார் 600 வீடுகள் கொளுத்தப்பட்டிருந்தன. வீட்டுக் கூரையாகப் போடப்பட்டிருந்த தகடுகள், கருகி சுருண்டு, இடிந்த வீடுகளின் இடிபாடுகளில் கிடந்தன. ஒரு பள்ளிக்கூடக் கட்டிடமும், ஒரு மாணவர் விடுதியும், ஒரு ஆஸ்பத்திரியும்கூட எரிந்து சாம்பலாகியிருந்தன. தீயிடப்பட்ட பகுதியிலிருந்த தென்னை, பாக்கு மரங்களும் வெந்து கருகிப் போயிருந்தன. அக்கிராமத்தின் பெரிய குடும்பம் ஒன்றுக்குச் சொந்தமான கோயில், இங்கும் ஆபாசப்படுத்தப்பட்டிருந்தது.

## கொடுமையான வேடிக்கை

தட்டப்பாராவிலிருந்து காஜிர்கில்லுக்குக் காந்திஜி 14-ஆம் தேதி தமது முகாமை மாற்றினார். வழியில் ஷாக்பூரில் தங்கினார். அங்கே ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வூரிலிருந்து அதிகம் பேர் கூட்டத்திற்கு வருவார்கள் என்று காந்திஜியிடம் கூறியிருந்தனர். ஆனால், யாரோ ஒரு வதந்தி யைக் கிளப்பிவிட்டுவிட்டனர். காந்திஜியுடன் போலீஸ் சூப்பரின் டெண்டு, ஜில்லா மாஜிஸ்டிரேட், ஆயுதந் தாங்கிய போலீஸார் வருவார்கள், பலரைக் கைது செய்ய அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு விடுவார்கள் என்பதுதான் கிளப்பி விடப்பட்ட வதந்தி. காந்திஜி சென்ற கூட்டத்திற்கு இதனல் மிகச் சிலரே வந்திருந்தார்கள். அவர் பேசியதாவது:

"வதந்தியைக் கேட்டு பலர் கூட்டத்திற்கு வராமலிருந்து விட்டது கொடுமையானதோர் வேடிக்கையாகும். என்னைப் பொறுத்த வரையில் போலீஸோ, ஜில்லா அதிகாரிகளோ என்னுடன் வர வேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆனால், நான் பாதுகாப்பு இல்லாமல் அங்குமிங்கும் போவதால் எனக்கு ஏற்பட்டுவிடக்கூடிய ஆபத்திற்கு உடன்பட தாங்கள் தயாரா யில்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். திரும்பவும் அமைதி ஏற்பட வேண்டும் என்பதில் தாங்கள் அதிக ஆவலுடனிருப்ப தாக ஒவ்வோர் ஊரிலும் அங்குள்ள முஸ்லிம்கள் கூறுகின்றனர். ஆனால், முஸ்லிம் லீக் தலைவர்கள் சொன்னலன்றி இது சம்பந்த மாக எதையும் செய்யவோ, உத்தரவாதமளிக்கவோ தாங்கள் தயாராயில்லை என்கிறார்கள். பல இடங்களிலும் இது எனக்குக் கூறப்படுகிறது. இந்த யோசனை நியாயமானதே என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். காயிதே ஆஜம் ஜின்ன வெளியிட் டிருக்கும் அறிக்கையைக் கவனியுங்கள். இன்று காலையில்தான்

அதை நான் படித்தேன். அதில் இருப்பதையெல்லாம் நாம் விரும்பிவிடவில்லை. ஆனாலும், எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய சில விஷயங்களும் அதில் இருக்கின்றன. காயிதே ஆஜம் ஜின்னா கூறியிருப்பதாவது: 'முஸ்லிம்கள் நிதானத்தை இழந்து, வஞ்சந்தீர்த்துக்கொள்ளும், பதிலுக்குத் தாக்கும் உணர்ச்சிக்கு இடம் கொடுத்துவிடுவார்களானால், நமது உயர்வான மதமான இஸ்லாமின் உயர்ந்த ஒழுக்கத்திலும் போதனைகளிலும் நாம் தவறி நடந்துவிட்டவர்களாவோம். பாகிஸ்தான் கோருவதற்கு உங்களுக்குள்ள உரிமையை நீங்கள் இழந்தவர்களாகி, ரத்தக்களரியும் கொடுமைகளும் மேலும் மேலும் அதிகமாகிவிடும்படியும் செய்துவிடுவீர்கள். இதனால், நாம் சுதந்திரம் அடையும் நாளை ஒத்தி வைத்துவிடுவதோடு அடிமைப்பட்டு நாம் கட்டுண்டு கிடக்கும் காலத்தையும் நீடித்துவிடுவதற்கு உதவி செய்துவிட்டவர்களும் ஆவீர்கள்.' அவர் மேலும் கூறுவதாவது: 'நாம் வீரமுள்ளவர்கள், தயாளமுள்ளவர்கள், நம்பக்கூடியவர்கள்...பாகிஸ்தான் பகுதிகளில் முஸ்லிம்களைப் போலவே, அவர்களுக்கு அதிகமாகக்கூட, சிறுபான்மையினரின் உயிருக்கும் சொத்துக்கும் கௌரவத்திற்கும் அதிகப் பாதுகாப்பு இருக்கும் என்பதை ராஜீய ரீதியில் நாம் நிரூபிக்க வேண்டும்.' அந்த அறிக்கையைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். கொலை, கொள்ளை, தீயிடல், பெண்களைத் தூக்கிச் சென்றுவிடுவது, பலவந்த விவாகங்கள், பலவந்த மதமாற்றங்கள் ஆகியவை இந்தியாவின் அடிமைத்தனத்தை நீடிக்காது போகமாட்டா. உங்களுக்குள்ளே சண்டை போட்டுக்கொண்டே இருப்பீர்களாயின், போலீஸும் ராணுவமும் பாதுகாக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பீர்களானால், நம் மீது ஆட்சி நடத்தும்படி மூன்றாமவரை நாம் தூண்டிவிடுபவர்களே ஆவோம்."

## உள்ளத்தின் வேதனை

காஜிர்கிலில் ஒரு பக்கம் நாசமாக்கப்பட்டிருந்த ஒரு வீட்டிலேயே காந்திஜியின் முகாம் அமைக்கப்பட்டது. அந்த வீடு முழுவதையும் கொளுத்திவிட விஷமிகளால் முடியவில்லை. முன்னால் அவ்வூருக்குப் போய்ச் சேர்ந்த ஸ்ரீ சதீஷ் பாபுவின் ஆட்களில் சிலர், அவ்வீட்டைச் சுத்தம் செய்து தயாராக வைத்திருந்தார்கள். வீட்டின் முன்னால் நடந்த பிரார்த்தனைக்கு சிறு கூட்டத்தினர் வந்திருந்தார்கள். முதல் நாள் பிரார்த்தனைக்குப் பிறகு பேசிய காந்திஜி கூறியதாவது: "எனக்குச் சுற்றிலுமுள்ள இயற்கைக் காட்சிகளில் வருணிக்க முடியாத சிறந்த அமைதியைக் காண்கிறேன். ஆனால், அந்த அமைதி ஆண்கள், பெண்களின் முகங்களில் இல்லாதிருப்பதையும் பார்க்கிறேன். இவ்வளவெல்லாம் நடந்துவிட்ட பிறகு அவர்களிடம் அமைதி எப்படி இருக்க முடியும்? என்னையும் என் கோஷ்டியினரையும் பாதுகாப்பதற்குக் காவலர்கள் பலர் நிற்பதைப் பார்க்கிறேன். யாரிடமிருந்து என்னைப் பாதுகாப்பதற்கு அவர்கள் இருக்

கிறார்கள்? பந்தோபஸ்துடன் வெளியில் போகும் வழக்கம் எனக்கு இல்லை. வங்காளத்தில் இதற்கு முன்னால் பந்தோபஸ்து இல்லாமலேயே நான் பிரயாணம் செய்திருக்கிறேன். ஆனால், அவ்விதம் செய்ய இன்று அதிகாரிகள் என்னை அனுமதிக்க வில்லை. இது, நான் வருந்த வேண்டிய, வெட்கப்பட வேண்டிய விஷயம். என்னைவிட கிழக்கு வங்காள முஸ்லிம்களுக்கே இது அதிக வெட்கக்கேடு ஆக வேண்டும். பள்ளிக்கூடங்கள், கோயில் களும்கூட நாசமாக்கப்பட்டிருக்கின்றன. உங்கள் மந்திரி ஷம்ஸுதீன் சாகிப் இதை விரும்பவில்லை. கிழக்கு வங்காளத்தில் நடந்திருப்பவை அவருக்கு அதிக மனவேதனையை உண்டாக்கி யிருக்கின்றன. மக்களின் மனத்திலிருந்து துவேஷத்தைப் போக்கியாக வேண்டும். இதற்கு முஸ்லிம்களின் உதவியும் ஒத்துழைப்பும் தேவை.

## இந்தச் சகோதரக் கொலைகள்

"இந்தச் சகோதரப் படுகொலைகள், என் வாழ்க்கையில் மற்றெல்லாவற்றையும்விட மிக மிகப் பயங்கரமானவை. தென் னாப்பிரிக்காவில் 20 ஆண்டுகளும், இந்தியாவில் 30 ஆண்டுகளும் கடுமையான போராட்டத்தை நடத்தியிருக்கிறேன். என்றாலும், இந்தப் பரஸ்பரப் படுகொலை எனக்குச் சோர்வை உண்டாக்கி விட்டது. இரு சமூகத்தினரும் திரும்ப அமைதியோடும் அன் யோன்யமாகவும் வாழும்படிச் செய்வது எப்படி என்பது எனக்குத் தெரியவில்லை. இப்பிரச்னைக்குப் பரிகாரம் காணவே நான் வங்காளத்திற்கு வந்திருக்கிறேன். வங்காளம் பெரிய மாகாணம். வகுப்புப் பிரச்னையை இங்கே தீர்த்துவிட்டால் மற்ற இடங்களிலும் அதைத் தீர்த்துவிட முடியும். இங்கே நான் வெற்றி பெற்றுவிடுவேனாயின், இன்னும் அதிக ஆயுளுடன் நான் வங்காளத்திலிருந்து போவேன். அப்படி வெற்றி பெறவில்லை யானால், இப்பூமியிலிருந்து கடவுள் என்னைக் கொண்டுபோய்விட வேண்டும் என்றே விரும்புகிறேன். வெறுங் கையுடன் வங்கா ளத்திலிருந்து போக நான் விரும்பவில்லை. 'நம்பிக்கையின்மை' என்ற சொல் என் அகராதியிலேயே இல்லை.

"முஸ்லிம்கள், ஹிந்துக்களைக் கொன்றார்கள். கொலையை விட இன்னும் மோசமான காரியங்களை வங்காளத்தில் செய் தார்கள். முஸ்லிம்களைப் பீகாரில் ஹிந்துக்கள் படுகொலை செய் கின்றனர். இரு தரப்பினரும் கேவலமான காரியங்களையே செய்து வரும்போது, இதில் ஒப்பிட்டுக் கூறுவதிலோ, கேவல மான செயலில் ஒரு தரப்பினர் இன்னொருவரைவிடக் குறைவாக நடந்துகொண்டனர் என்று சொல்லுவதிலோ, கலவரத்தை ஆரம்பித்தது இன்னார்தான் என்று கூறுவதிலோ ஒரு பயனும் இல்லை. வஞ்சந் தீர்த்துக்கொள்ள நீங்கள் விரும்பினால், அந்தக் கலையை நீங்கள் என்னிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். நானும் பழிவாங்கினேன். ஆனால், அது வேறு வகையில். நான் சிறுவனாக இருந்தபோது ஒரு குஜராத்தி கீதத்தைப்படித்தேன்.

'அருந்த ஒரு டம்ளர் நீர் கொடுத்தவனுக்கு இரண்டு டம்ளர் நீரை நீ கொடுத்துவிடுவதில் பெருமை எதுவும் இல்லை. உனக்குத் தீங்கு செய்பவனுக்கு நன்மையையே நீ செய்துவிடுவதில்தான் உண்மையான பெருமை உண்டு' என்பதே அந்தக் கீதம். அதுவே பெருமையோடுகூடிய பழிவாங்குதல் என்று நான் கருதுகிறேன்.

"ஆரம்ப கால கலீபாக்களில் ஒருவரின் கதையையும் நான் படித்திருக்கிறேன். கலீபாவை ஒருவன் வாளால் தாக்கினன். தாக்கியவனின் கைகளிலிருந்த வாளை கலீபா பறித்துக்கொண்டு அவனைக் கொல்லப் போனர். அப்பொழுது அவன் கலீபாவின் முகத்தில் துப்பிவிட்டான். உடனே கலீபா அவனை விட்டு விட்டார். ஏனெனில், அடைந்த அவமதிப்பு அவரைக் கோபமடைந்தவராக்கிவிட்டது. கலீபா இவ்விதம் செய்துவிட்டது, தாக்க வந்தவன் மனம் மாறும்படிச் செய்துவிட்டது. அவன் இஸ்லாம் மதத்தைத் தழுவிவிட்டான். பலவந்தமாக இஸ்லாமில் மதம் மாற்றப்பட்டவன், மனிதனே அல்லாதவனுகிருன். பயத்தினல் கல்மாவை ஓதுவது அர்த்தமற்றது."

## உள்ளத்தைச் சோதித்துக்கொள்க

ராம்கஞ்சில் பிரார்த்தனைக் கூட்டம் 15-ஆம் தேதி ஒரு பள்ளிக்கூடத்தின் முன்னுலிருந்த மைதானத்தில் நடந்தது. பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி பேசியபோது, முந்திய நாள் அவர் விடுத்த கோரிக்கையையே திரும்பவும் வற்புறுத்திச் சொன்னர். அவர் கூறியதாவது: "துயரம், துன்பம் ஆகியவற்றைத் தவிர இந்த நாட்களில் உங்களிடம் நான் பேசுவதற்கு வேறு எதுவும் இல்லை. நான் போகுமிடங்களிலெல்லாம் நாசத்தின் பயங்கரக் காட்சியையே காண்கிறேன். என் கண்களில் கண்ணீர் இல்லை. கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பவன், மற்றவர்களின் கண்ணீரைத் துடைக்கமுடியாது. ஆனல், என் உள்ளம் அழுகிறது. முஸ்லிம்களுடன் மனம்விட்டுப் பேசலாம், தாங்கள் செய்துவிட்ட தீயச் செயல்களுக்காக அவர்கள் மனம் வருந்துவார்கள், வீடு வாசல்களைவிட்டுப் போகவேண்டாம் என்று ஹிந்துக்களைக் கேட்டுக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையில் நான் இங்கே வந்திருக்கிறேன். செய்துவிட்டதற்காக மனம் வருந்துவது உண்மையானதாக இருக்குமானல், நல்லெண்ணத்தை ஹிந்துக்கள் உணர்வார்கள், இழந்துவிட்ட நம்பிக்கையையும் திரும்பப் பெறுவார்கள். ஆனல், கிழக்கு வங்காளத்தின் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டிருக்கின்றனர் என்பதை நான் காண்கிறேன். இதன் காரணத்தைப்பற்றி நான் கூறப்போவதில்லை. ஆனல், கிழக்கு வங்காளத்தைப் பொறுத்த வரையில் முஸ்லிம்களே அக்கிரமங்களைச் செய்திருக்கிருர்கள் என்று நான் கூறுவதை முஸ்லிம் சகோதரர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். முஸ்லிம்களைக் கண்டு ஹிந்துக்கள் நடுங்குகிருர்கள். சாமுகானி

யில் என் கூட்டத்திற்கு ஹிந்துக்களைவிட முஸ்லிம்கள் அதிக மாக வந்திருந்தார்கள். தட்டப்பாராவில் முதல் கூட்டத்திற்குப் பிறகு அவர்கள் ஏன் வரவில்லை என்பது தெரியவில்லை. இது மனத்திற்குக் கஷ்டமாக இருந்தது. இதை மற்ற முஸ்லீம் களுக்குக் கூறும்படி கூட்டத்திற்கு வந்திருந்த ஒரு சில முஸ்லிம்களைக் கேட்டுக்கொண்டேன். ஒரு முஸ்லிம் சகோதரி, பல ஊர்களுக்கும்போய் முக்கியமான முஸ்லிம்களைச் சந்தித்துப் பேசி வந்தார். ஹிந்துக்களுடன் சிநேகமாக இருப்பதாக வாக் குறுதியளிப்பதற்கோ, காந்திஜியின் கூட்டங்களுக்குப் போவ தற்கோ தங்களுக்கு முதலில் முஸ்லிம் லீக் தலைவர்களின் உத்தரவு வேண்டும் என்று முஸ்லிம்கள் அச்சகோதரியிடம் கூறினார்களாம். ஹிந்துக்களின் வெளியேற்றம் இன்னும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. 'நீங்கள் எங்களுடன் வாழ்கிறவர்கள், நண்பர்கள், சகோதரர்கள், ஒரே மண்ணில் பிறந்து, ஒரே காற்றைச் சுவாசித்து, ஒரே நீரைப் பருகி வருபவர் கள். எனவே, ஹிந்துக்கள் பயப்பட வேண்டியதில்லை' என்று முஸ்லிம்கள் அவர்களுக்கு உறுதி கூறுவார்களாயின், வெளி யேறுவது நின்றுவிடும். வீடு வாசல்களை விட்டுவிட்டுப் போய் விட்டவர்களும் திரும்பி வந்துவிடுவார்கள். அன்போடு இருப்ப வர்களிடம் மிருகங்களும் நட்புடன் இருக்கின்றன. ஆனால் மனிதனோ, கடவுள் சொரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பவன். இந்தப் படைப்பை நியாயமானதாக்குவதற்கு மனிதன், தீமைக்குப் பதிலாக நன்மையையே செய்ய வேண்டியவனாகிறான். தவறு செய்துவிட்டவர்கள் எவராயினும், இந்த உண்மை இரு தரப்பாருக்கும் பொருந்தும். லீகிலிருந்து உத்தரவு வர வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்புகிறார்கள். இதை நான் புரிந்துகொள்ளுகிறேன். இந்த மாகாணத்தில் லீக் அரசாங்கம் இருக்கிறது. ஆனால், லீகில் இல்லாதவர்களுக்கு விரோதமாக இந்த அரசாங்கம் இருக்க வேண்டும் என்று பொருள்படாது.

"காயிதே ஆஜம் ஜின்னாவின் செய்தியை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று மீண்டும் கூறுகிறேன். உங்கள் உள்ளங்களைப் பரிசோதித்துக்கொள்ளுங்கள். அந்தச் செய்தியில் கண்டதற்கு ஏற்ப நீங்கள் நடந்துகொண்டிருக்கிறீர்களா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். பலவந்த மதமாற்றத்தையோ, பெண்களை மானபங்கப்படுத்துவதையோ, நான் அறிந்த வரையில், இஸ்லாம் அனுமதிக்கவில்லை. ஒருவனுடைய உள்ளம் இஸ்லாமை ஏற்றுக்கொள்ளாதபோது, வெறும் கல்மாவை ஓதி விடுவதனால் மாத்திரம் என்ன நன்மை? ஆகையால், ஹிந்துக் களுடன் சிநேகமாக இருப்பதா, அல்லது அவர்களுக்கு விரோதி களாக இருப்பதா என்று உங்கள் தலைவர்களைக் கேட்டுவிட்டு என்னிடம் சொல்லுங்கள். விரோதிகளாக இருக்கவே நீங்கள் விரும்புவீர்களானால், கிழக்கு வங்காளத்திலிருந்து வெளியேறி விடுமாறு ஹிந்துக்களிடம் கூறிவிட வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் இரு தரப்பாருக்கும் சமரசம் ஏற்படும்

வரையில் கிழக்கு வங்காளத்தில் இருந்துவிடுவது என்றே நான் இங்கே வந்திருக்கிறேன்."

காஜிர்கில், 17—11—'46 —'ஹரிஜன்' - 1—12—1946

# 6

# மனச்சாட்சிக்குக் கோரிக்கை

தட்டப்பாராவில் நவம்பர் 10–ஆம் தேதி பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி ஹிந்துஸ்தானியில் செய்த பிரசங்கத்தின் முழு விவரம் கீழே கொடுக்கப்படுகிறது:

நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாது போயினும் சரி, ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சாராருக்கும் நான் சேவகன் என்று உறுதி கூற விரும்புகிறேன். பாகிஸ்தானை எதிர்த்துச் சண்டை போட நான் இங்கே வரவில்லை. பிரிக்கப்பட்டு விடுவதுதான் இந்தியாவின் விதியாக இருக்குமாயின், நான் அதைத் தடுத்துவிட முடியாது. ஆனால், பாகிஸ்தானைப் பலாத்காரத்தைக்கொண்டு அடைந்துவிட முடியாது என்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன். கொஞ்சம் முன்பு உங்கள் முன்னால் பாடப்பட்ட பிரார்த்தனை கீதத்தில், தத்துவ ஞானியின் மந்திரக் கல்லுக்குக் கடவுளை கவி ஒப்பிடுகிறார். அந்த மந்திரக் கல், இரும்பையும் தங்கமாக்கிவிடுமாம். இது எப்பொழுதுமே விரும்பத்தக்கது அன்று. அக்கல்லினால் தொட்டதும் ரெயில் பாதையின் தண்டவாளங்களெல்லாம் தங்கமாகிவிடுகின்றன என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுது அந்தத் தண்டவாளங்களின்மீது ரெயில் வண்டிகள் ஓட முடியாது. ஆனால், கடவுளின் பரிசம் பட்டதும் ஆன்மா தூய்மையாகிவிடுகிறது. இது எப்பொழுதும் விரும்பத்தக்கது.

அந்த மந்திரக் கல் நம் எல்லோருடைய உள்ளத்திலும் இருக்கிறது. என் முஸ்லிம் சகோதரர்களுக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம், அவர்கள் ஒரே மக்களாக வாழ்ந்தாலும், இரண்டாக வாழ்ந்தாலும், ஹிந்துக்களுடன் நண்பர்களாக அவர்கள் வாழ வேண்டும் என்பதே. அவ்வாறு வாழ அவர்கள் விரும்பவில்லையானால், அதை அவர்கள் மனம்விட்டுச் சொல்லிவிடவேண்டும். அப்பொழுது நான் தோல்வியடைந்துவிட்டதாக ஒப்புக்கொண்டுவிடுவேன். அகதிகள் என்றுமே அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்க முடியாது. அரசாங்கம் இவர்களுக்கு என்றும் சாப்பாடு போட்டுக்கொண்டிருப்பதும் முடியாது. அவர்களுக்கு எந்த மாதிரியான சாப்பாடு கிடைக்கிறது? திடகாத்திரமுள்ள ஒருவர் வாழ்வதற்கு எவ்வளவு வேண்டுமோ அதில் பாதி தானியங்களைத் தினமும் பங்கீடில் கொடுக்கிறார்கள்.

மீன் இல்லை; காய் கறிகளும் இல்லை. இந்தப் பற்றுக்குறை சாப்பாட்டை ஈடு செய்துகொள்ளுவதற்கு வேறு எதுவுமே இல்லை. இதே விதத்தில் அகதிகள் அதிக காலம் உயிர் வாழவும் முடியாது. ஆகையால், தங்கள் கிராமங்களுக்கு அகதிகள் திரும்பி வருவதை முஸ்லிம்கள் விரும்பவில்லையானால், அவர்கள் வேறு எங்காவது போகவேண்டியதுதான்.

ஆனால், கிழக்கு வங்காளத்திலிருக்கும் ஹிந்துக்களெல்லாம் வெளியே போய்விட்டாலும்கூட, அப்பொழுதும் கிழக்கு வங்காள முஸ்லிம்களின் மத்தியில் நான் இருந்து வருவதோடு அவர்கள் கொடுப்பதைத் தின்று வாழ்ந்துவருவேன். அவர்கள் கொடுப்பதில் சாப்பிட எனக்கு எது நியாயமானதோ அதைச் சாப்பிடுவேனேயன்றி வெளியிலிருந்து எதையும் தருவித்துக்கொள்ள மாட்டேன். மீனோ, மாமிசமோ எனக்குத் தேவையில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் பழமும் கறி காயும் கொஞ்சம் ஆட்டுப் பாலும். ஆட்டுப் பாலும் தானியங்களும் சம்பந்தப்பட்ட வரையில், அவற்றை நான் சாப்பிடலாம் என்று கடவுள் எப்பொழுது விரும்புகிறாரோ அப்பொழுதே சாப்பிடுவேன். இவற்றைச் சாப்பிடுவதை விட்டுவிட்டேன். பீகாரில் தாங்கள் செய்துவிட்ட காரியங்களுக்காக ஹிந்துக்கள் வருந்தும் வரையில் அவற்றைத் திரும்பவும் சாப்பிடமாட்டேன்.

ஆயிரம் ஹிந்துக்கள் நூறு முஸ்லிம்களையும், ஆயிரம் முஸ்லிம்கள் நூறு ஹிந்துக்களையும் வளைத்துக்கொண்டு துன்பப் படுத்துவது கோழைத்தனமேயல்லாமல் வீரமன்று. நியாயமான சண்டை என்றால், சண்டை போடுகிறவர்களின் தொகை இரு தரப்பிலும் சமமாக இருக்கவேண்டும்; சண்டைக்கு முன்னறிவிப்பும் இருக்கவேண்டும். சண்டை போட்டுக்கொள்ளுவதை நான் அங்கீகரிக்கிறேன் என்பதல்ல இதன் பொருள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் நண்பர்களாக இருந்து ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. அதை நான் நம்பும்படி யாரும் செய்துவிட முடியாது. ஆனால், அதுதான் உங்கள் நம்பிக்கை என்றால் அதையும் சொல்லிவிடுங்கள். அப்பொழுது ஹிந்துக்கள் தங்களுடைய வீடு வாசல்களுக்குத் திரும்ப வேண்டாம் என்று சொல்லிவிடுகிறேன். அவர்கள் கிழக்கு வங்காளத்தை விட்டுப் போய்விட வேண்டும். அப்படி அவர்கள் போவது, முஸ்லிம்கள், ஹிந்துக்கள் ஆகிய இருவருக்குமே அவமானம். இதற்கு மாறாக, ஹிந்துக்கள் உங்களுடன் வந்து வசிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களானால், அவர்கள் ராணுவப் பாதுகாப்பை எதிர்பார்க்க வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக தங்கள் முஸ்லிம் சகோதரர்களின் பாதுகாப்பை எதிர்பார்க்க வேண்டும் என்று நீங்கள் ஹிந்துக்களுக்குச் சொல்லவேண்டும். அவர்கள் பெண்களும் மனைவிகளும், சகோதரிகளும் உங்கள் சொந்தப் பெண்களும் மனைவிகளும் சகோதரிகளும் போல. உங்கள் உயிரைக் கொடுத்தும் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அகதிகள் முகாமில் நேற்று

அவர்கள் கூட்டத்தில் பேசினேன். 'மனித வர்க்கம் முழுதுமே ஆதம், ஏவாளின் சந்ததியினர்; எனவே, மனிதரின் இனமும் மதமும் எதுவாக இருந்தாலும் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள்' என்று ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸ்ரீ மெக்இனர்னி அவர்களுக்குச் சொன்னார். ஆகையால், எல்லோரும் ஒன்றுபட்டு உறவினர்களாக வாழ வேண்டும்."

"பிரார்த்தனைக் கூட்டம் முடிந்த பிறகு ஒருவர், தம் கிராமத்திற்குத் திரும்பிப் போனாராம். தம் வீட்டை முஸ்லிம்கள் சூழ்ந்து கொண்டிருந்ததைக் கண்டாராம். தமது சொத்தை எடுத்துக் கொள்ள அவரை அந்த முஸ்லிம்கள் அனுமதிக்கவில்லை. இது உண்மையாக இருக்குமானால், இந்த நிலைமையில், ஊருக்குத் திரும்பிப் போகும்படி யாருக்கும் நான் எப்படிச் சொல்ல முடியும்? நான் சொன்னதையெல்லாம் நீங்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். உங்கள் விருப்பம்தான் என்ன என்பதைச் சொல்லுங்கள். அதன்படி ஹிந்துக்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்.

"அநேக நல்ல முஸ்லிம்கள், ஹிந்துக்களை வரவேற்கத் தயாராக இருக்கிறார்கள் என்றும், ஆனால், காலிகள் வழி மறிக்கிறார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். இதை நான் நம்புகிறேன். உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நல்ல முஸ்லிம்கள் ஒன்றுபட்டு ஒரே முகமாகத் தங்கள் கருத்தை வெளியிட்டு, அதன்படியும் நடந்து கொள்ளுவார்களாயின், காலிகள் என்று சொல்லப்படுகிறவர்கள் வலிவிழந்து போய்விடுவார்கள்; அவர்களும் திருந்திவிடுவார்கள்."

காஜிர்கில், 16—11—'46 —'ஹரிஜன்' - 1—12—1946

# 7

# அச்சமின்மை போதனை

சாந்தபூரில் ஹிந்து ஊழியர்களின் கோஷ்டி காந்திஜியைச் சந்தித்துப் பேசியபோது, அச்சமின்மை சம்பந்தமாக அவர் அங்கே போதனையை ஆரம்பித்தார். அந்தப் போதனையைச் சாமுகானியிலும் மற்ற இடங்களிலும் இன்னும் அதிக சக்தி வாய்ந்த பாஷையில் தொடர்ந்து செய்து வந்தார். உண்மையில் காந்திஜி இவ்விஷயத்தையே முக்கிய பொருளாகக்கொண்டு பேசி வரலானார். சாமுகானியில் காந்திஜியைச் சந்தித்துப் பேசிய ஒரு நண்பரிடம் அவர் கூறியதாவது: "இத்தனை முஸ்லிம்கள் வெறி கொண்டவர்களாகிவிட்டதுகூட இதில் அவ்வளவு துக்ககரமானது அல்ல. ஆனால், கிழக்கு வங்காளத்தில் இத்தனை ஹிந்துக்கள் இக்கொடுமைகளைப் பார்த்துக்கொண்டு இருந்

திருப்பதுதான் அதிக துக்ககரமானது. கிழக்கு வங்காளத்தி லிருக்கும் எல்லா ஹிந்துக்களுமே கொல்லப்பட்டிருந்தால்கூட நான் பொருட்படுத்தி யிருக்கமாட்டேன். ரஜபுத்திரர்கள் என்ன செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? போர்க்களத் தில் தங்களைப் பலியிட்டுக்கொள்ள அவர்கள் சென்றபோது, தங்கள் பெண்களையெல்லாம் கொன்றுவிட்டுப் போனார்கள். மீத மிருந்த பெண்கள், கோட்டை எதிரியிடம் பிடிபடுவதற்கு முன்னால், எதிரிகளிடம் தாங்கள் பிடிபட்டு மானமிழப்பதைவிட சாவதே சரி என்று கருதி தீயை வளர்த்து அதில் குதித்துச் சாம்பலாகிவிட்டார்கள். ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள், தங்கள் மத்தியிலிருக்கும் ஒரு சில ஹிந்துக்களைக் கொன்று விடுவதில் வீரம் எதுவும் இல்லை. ஆனால், தங்கள் பெண்கள் தூக்கிச் செல்லப்படுவது, கற்பழிக்கப்படுவது, பலவந்தமாக மதம் மாற்றப்படுவது, பலவந்தமாக மணம் செய்யப்படுவது போன்றவை நடந்ததைப் பார்த்துக்கொண்டிருக்கும் அளவுக்கு ஹிந்துக்கள் அவ்வளவு கோழைகளாக இருந்திருப்பதுதான் உள்ளம் பதறும்படிச் செய்கிறது.''

''பத்திரமாக இருக்கிறோம் என்ற உணர்ச்சியையும், தன்னம் பிக்கையையும் நாம் எப்படி உண்டாக்குவது?'' என்று அந்த நண் பர் கேட்டார். அதற்குக் காந்திஜி கூறியதாவது: ''வீரத்துடன் சாகக் கற்றுக்கொள்ளுவதனாலேயே அது முடியும். போலீஸுக் குப் பதிலாக ராணுவத்தை வைப்பதிலோ, முஸ்லிம் போலீஸுக் குப் பதிலாக ஹிந்து போலீஸாரைக்கொண்டு வருவது என் பதிலோ எனக்குச் சிரத்தை கிடையாது. இவையெல்லாம் பய னற்றவை.''

''நாங்கள் யாரிடம் உதவிக்கு வேண்டிக்கொள்ளுவது? காங் கிரஸினிடமா, லீகினிடமா அல்லது பிரிட்டிஷ் அரசாங்கத் தினிடமா?''

''அவர்கள் யாரிடமும் அல்ல. உங்களிடமே. அதன் மூலம் கடவுளிடம் உதவியைக் கோரிக்கொள்ளுங்கள்.''

''நாங்கள் சதையினாலும் ரத்தத்தினாலுமான மனிதர்களே. உருவான உதவி எங்களுக்கு ஏதாவது தேவை'' என்று முடி வாக அந்நண்பர் கேட்டார். இதற்குக் காந்திஜி, ''அப்படியானால் உங்கள் சொந்த சதை, ரத்தத்தினிடமே கோரிக்கொள்ளுங்கள். எல்லா அழுக்குகளையும் போக்கி அதைத் தூய்மையாக்கிக் கொள்ளுங்கள்'' என்றார்.

## பயத்தின் உடற்கூறு

காஜிர்கில்லில் 18-ஆம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத் திற்கு காந்திஜி எழுதி அனுப்பிய செய்தியில், பயத்தின் உடற் கூறு என்ன என்பதை நுட்பமாக விவரித்திருந்தார். உண்மை யில் அவருடைய பிரசங்கங்களிலெல்லாம் இதுவே முக்கியமான

விஷயமாகவும் இருந்தது. காந்திஜி கூறியதாவது: "இப்பகுதிகளில் நான் அதிகமாகப் போகப் போக, நான் அதிகமாக ஒன்றைக் காண்கிறேன். உங்களுக்கு மிக மோசமான எதிரி பயம்தான் என்பதே நான் காண்பது. இந்தப் பயம், பயப்படுகிறவர்கள், கொடுமைகளைச் செய்கிறவர்கள் ஆகிய இரு தரப்பாரின் சக்திகளையெல்லாம் தின்றுவிடுகிறது. அக்கிரமம் செய்கிறவன், அக்கிரமத்திற்குத் தான் ஆளாக்கியவனிடமுள்ள ஏதோ ஒன்றைக் குறித்து அஞ்சுகிறான். அது அவனுடைய மதத்திற்கு மாறுபட்டதாக இருக்கலாம், அல்லது அவன் செல்வமாக இருக்கலாம், அவன் பயப்படுகிறான். பேராசை என்று சொல்லப்படுவதுதான் இரண்டாவது வகையான பயம். போதிய அளவு ஆராய்ந்து பார்த்தால், பேராசையே ஒரு வகையான பயம்தான் என்பதை நீங்கள் காணலாம். உள்ளத்திலிருந்து பயம் என்பதையே அடியோடு போக்கிக்கொண்டு விட்டவரை எவராலும் பயமுறுத்திவிட முடிந்ததில்லை; முடியவும் முடியாது. அச்சமென்பதே இல்லாதவரை ஏன் யாரும் பயமுறுத்திவிட முடிவதில்லை? அஞ்சா நெஞ்சமுள்ளவர்கள் பக்கத்தில் கடவுள் எப்பொழுதும் இருந்து வருவதை நீங்கள் காண்பீர்கள். ஆகையால், நாம் கடவுள் ஒருவருக்கே அஞ்சி அவருடைய பாதுகாப்பு ஒன்றையே நாட வேண்டும். பிறகு மற்ற அச்சங்களெல்லாம் தாமே மறைந்து போய் விடும். அஞ்சாமையை மக்கள் வளர்த்துக்கொண்டாலன்றி இப்பகுதியிலிருக்கும் ஹிந்துக்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ என்றுமே அமைதி என்பது இருக்கவே முடியாது."

காப்ரான் சாகிப் பேசிய பிறகு கூட்டத்தில் பேசிய காந்திஜி, சில தினங்களுக்கு முன்னால் சாமுகானியில் ஷம்ஸுதீன் சாகிப் பேசியதைப் பற்றிக் குறிப்பிட்டார். காந்திஜி கூறியதாவது: "இப்பொழுது காப்ரான் சாகிப் பேசியதைக் கேட்டீர்கள். நீங்கள் ஒன்றாக, நண்பர்களாக வாழவேண்டும் என்று மந்திரிகள் விரும்புகிறார்கள். போலீஸும் ராணுவமும் உங்களைப் பாதுகாக்க முடியாது. கடவுள் ஒருவரே உங்களைப் பாதுகாக்க முடியும். ஆகையால், உங்கள் பாதுகாப்புக்கு, நீங்கள் ஒருவருக்கொருவர்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். ஹிந்துக்கள் கிழக்கு வங்காளத்திலிருந்து போய்விட வேண்டும் என்று அரசாங்கம் விரும்பவில்லை என்று காப்ரான் சாகிப் உங்களுக்குக் கூறுகிறார். வெறுக்கத் தக்க காரியங்கள் நடந்துவிட்டன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நடந்தது நடந்து விட்டது என்று நீங்கள் மறந்துவிட வேண்டும். புதிய ஏட்டைப் புரட்ட வேண்டியதுதான். நீங்கள் அடைந்திருப்பதைப் போன்ற கஷ்டங்களை அனுபவித்திருக்கும் ஒருவருக்கு, சந்தேகமே அதிகமாக இருப்பது சகஜமே. ஆனால், அதைச் சமாளித்துக்கொண்டாக வேண்டும். கூட்டத்திலிருக்கும் ஒருவர், காப்ரான் சாகிபின் பிரசங்கத்தின் மீது தாம் பேச ஐந்து நிமிஷ அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும், அவர்

பேசியதில் பல இடங்களில் தவறுகள் இருக்கின்றன என்றும் கூறுகிறார். ஆனால், இக்கூட்டத்தைப் பொது விவாத மேடையாகச் செய்துவிடக் கூடாதாகையால் அவர் பேச அனுமதிக்க முடியாது என்றே அஞ்சுகிறேன். கூட்டத்தில் கூறப் பட்டதெல்லாம் நல்லெண்ணத்தின் பேரிலும், அவருடைய வேலையைச் செய்வதற்குமே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், சம்பந்தப்பட்ட நண்பர், தாக்குதல் எதுவுமில்லாமல் எனக்குக் கடிதம் எழுதுவாரானால், அதை காப்ரான் சாகிபுக்கு அனுப்புகிறேன். இக்கூட்டத்திலிருக்கும் முஸ்லிம்கள் நமாஸ் தொழுது கொண்டிருந்தபோது மற்றவர்கள் நிசப்தமாக இருக்கத் தவறி விட்டதைக் கண்டிக்கிறேன். மற்றவர்கள் பிரார்த்தனை செய்யும் போது நிசப்தமாக இருக்க வேண்டியது நல்ல பண்பிற்கும் பழக்கத்திற்கும் அவசியம். ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதையும் இருக்க வேண்டும். அவரவர்கள் மதம் எதுவானாலும் எல்லோரும் ஒரே கடவுளையே வணங்குகிறார்கள். பிரார்த்தனை நடந்த இடத்தில் காங்கிரஸ் கொடியும் லீக் கொடியும் சேர்த்துப் பறக்கவிடப்பட்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். இரண்டிலும் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. காயிதே ஆஜம் ஜின்னா சாகிப் கூறியிருப்பதைப் போன்று, நீங்கள் உங்களுக்குள்ளே தொடர்ந்து சண்டை போட்டுக்கொண்டிருப்பீர்களாயின், நம் நாடு அடிமை நாடாகவே இருந்துவிடுவதோடு பாகிஸ்தான் என்பதும் காற்றோடு காற்றாக மறைந்து போய்விடும். எனக்கு மிரட்டல் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. தங்களை நசுக்குவதற்காகவே நான் இங்கே வந்திருக்கிறேன் என்று சில முஸ்லிம்கள் அஞ்சுகிறார்கள். என் வாழ்நாளில் நான் யாரையுமே நசுக்கியதில்லை என்று உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். நான் ஏன் பீகாருக்குப் போகவில்லை என்று அவர்கள் கேட்கிறார்கள். பீகார் தனது வெறித்தனத்தைக் கைவிடாவிடில் உண்ணாவிரதம் இருப்பேன் என்று நான் அறிவித்திருக்கிறேன். பீகாருடன் இடைவிடாமல் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறேன். நான் அங்கே வர வேண்டிய அவசியம் இல்லை என்று பண்டித ஜவாஹர்லாலும், டாக்டர் ராஜேந்திர பிரஸாதும், மற்றவர்களும் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். பீகாரில் இப்பொழுது அமைதி நிலவுகிறது என்றே அறிகிறேன். இன்னும் பரபரப்பு இருந்து வருகிறது என்றாலும் அது போய்க்கொண்டிருக்கிறது. முஸ்லிம்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். வீடுகளை இழந்துவிட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அங்கிருக்கும் ஹிந்துக்களும் கோபத்துடன் எனக்குத் தந்திகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். வங்காளத்தில் நடந்திருப்பவைகளுக்காக முஸ்லிம்களை எதிர்த்து நான் ஏன் உண்ணாவிரதமிருக்கவில்லை என்று என்னைக் கேட்கிறார்கள். இன்று நான் அவ்விதம் செய்ய முடியாது. நான் தங்களுடைய நண்பன் என்பதை முஸ்லிம்கள் ஒப்புக்கொண்டு விடுவார்களானால், அப்பொழுது அவர்களையும் எதிர்த்து உண்ணாவிரதமிருக்க

எனக்கு அதிகாரமிருக்கும். கிழக்கு வங்காளத்திலிருந்து நான் புறப்படுவதாக இருந்தால், ஹிந்துக்கள், முஸ்லிம்களின் மனத்தில் அமைதி நிலவினால் மாத்திரமே நான் போவேன். அப்படியில்லையானால், அதற்குப் பிறகும் உயிர் வாழும் விருப்பம் எனக்கு இல்லை."

காந்திஜி 17-ஆம் தேதி காஜிர்கில்லுக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள தாஸ்காரியா என்ற கிராமத்திற்குச் சென்றார். அங்கே ஏராளமான பெண்கள் அவரைச் சந்தித்தனர். இவர்களெல்லோரும் பலவந்தமாக மதம் மாற்றப்பட்டு இப்பொழுது மீண்டும் தங்கள் மதத்திற்குத் திரும்பியிருப்பவர்கள். காந்திஜி கூறியதாவது: "பலவந்தமாக மதம் மாற்றப்பட்டது, அதாவது பயமுறுத்தி மதம் மாற்றப்பட்டிருப்பது சட்டப்படி அங்கீகரிக்கப்படமாட்டாது என்று ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்தரவு வெளியிட்டு விளம்பரப்படுத்தி யிருக்கிறார். பலவந்தமாக மதம் மாற்றப்பட்டவர்கள் எல்லோரும் திரும்பவும் ஹிந்துக்களாகி விட்டனரா என்பது எனக்குத் தெரியாது. இல்லையானால், திரும்பவும் ஹிந்துக்களாகிவிட வேண்டும். இப்பொழுது இருந்துவரும் மனக்கசப்பு மாறித் திரும்பவும் நட்பு ஏற்பட வேண்டுமானால் இது அவசியம்.

"தூக்கிச் செல்லப்பட்ட பெண்களில் சிலர் இன்னும் காணப்படவில்லை. மேலும் எவ்வித காலதாமதமுமின்றி அவர்களைக் கொண்டுவந்து விடவேண்டும். ஒரு வண்ணார், இன்று பிற்பகல் தனது ஒரு வயது மகளை என்னிடம் கொண்டு வந்தார். இக்குழந்தையை அவர் போலீஸ் உதவியைக்கொண்டு ஒரு முஸ்லிமிடமிருந்து மீட்டிருக்கிறார். இத்தகைய காரியங்களை இனி செய்யாமலிருக்க வேண்டியது முஸ்லிம் சகோதரர்களின் கடமை. முன்பு செய்துவிட்ட தவறை மனம் விட்டு அவர்கள் ஒப்புக்கொண்டு இனி அப்படிச் செய்வதில்லை என்று உறுதி கூற வேண்டும். செய்துவிட்ட தவறை மறைத்துக்கொள்ளுபவன் அதைத் திருத்திக்கொள்ளவே முடியாது. நான் சத்தியத்தை உபாசிக்கிறவன். நான் வக்கீலாக இருக்கும்போதுகூட, கட்சிக்காரர்கள் அவர்கள் வழக்கை நான் நடத்தவேண்டும் என்று விரும்பினால் உண்மையை என்னிடம் சொல்லிவிட வேண்டும் என்று கூறிவிடுவேன். பொய் வழக்கை நான் நடத்தமாட்டேன். இதன் பலனாக உண்மையான, நியாயமான வழக்குகள் மாத்திரம் என்னிடம் வரலாயின. வக்கீல் தொழிலை நான் விட்டு அதிகக் காலமாகிறது. ராஜ நிந்தனைக் குற்றம் செய்துவிட்டேன் என்று வக்கீல்கள் பட்டியலிலிருந்து என் பெயரையும் நீக்கிவிட்டார்கள். என்றாலும், அதே கொள்கையையே நான் அனுசரித்து வருகிறேன். தங்களிடமிருக்கும் எல்லாத் தீமைகளையும் போக்கிக்கொள்ள வேண்டும் என்பதே ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நான் கூறும் புத்திமதி. அவ்விதம் செய்யாவிடில் அமைதியாக வாழ்வதோ, ஒருவரிடம் மற்றொருவருக்கு மரியாதை இருப்பதென்பதோ முடியாதுபோகும்."

பிரார்த்தனைக் கூட்டத்தில் காப்ரான் சாகிப் கூறியதைப் பற்றி காந்திஜி கூறிய அபிப்பிராயத்தினால் சில விசித்திரமான விளைவுகள் ஏற்பட்டன. 17-ஆம் தேதி மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பெண்களே வரவில்லை. ஹிந்துக்களும் மிகச் சிலரே வந்திருந்தனர். பெரும்பாலும் முஸ்லிம்களே வந்திருந்தார்கள். பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி பேசியதாவது: "காப்ரான் சாகிப் பேசியதற்கு அங்கேயே பதிலளிக்க விரும்பிய ஒருவரை நான் அனுமதிக்காததனால் ஹிந்துக்கள் கோபமடைந்து இக்கூட்டத்தைப் பகிஷ்காரம் செய்துவிட்டார்கள் என்று அறிகிறேன். நான் செய்ததைக் குறித்து வருந்தவில்லை. மற்றவர்களுக்குத் திருப்தி உண்டாக வேண்டும் என்பதற்காக நான் என்றும் எதையும் சொன்னதோ, செய்ததோ இல்லை. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் நம் கடமையைச் செய்துகொண்டு போகவேண்டும் என்று நான் எப்பொழுதும் போதித்து வந்திருக்கிறேன். தனக்குச் சரியெனத் தோன்றுவதைச் செய்துகொண்டு போகிறவர்கள் எவரும் பயந்ததே இல்லை."

உள்ளூர் நிவாரண சங்கத்தின் காரியதரிசி பிறகு காந்திஜியிடம் வந்து, ஹிந்துக்கள் பகிஷ்கரிக்கவில்லை என்றும், அன்று ஞாயிற்றுக்கிழமையாவதோடு சந்தை நாளாகவும் இருப்பதால் குண்டர்களுள்பட முஸ்லிம்கள் அதிகமாக இருப்பார்கள் என்று பயந்துகொண்டு பெண்கள் வெளியே வரவில்லை என்றும் கூறினார்.

மதுபூரில் 19-ஆம் தேதி மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியதாவது: "கூட்டத்திற்கு வராமலிருந்துவிட்டதற்குக் கூறப்பட்ட சமாதானம் உண்மையானது அல்ல என்று ஒரு நண்பர் என்னிடம் சொன்னார். அவர்கள் கூட்டத்தைப் பகிஷ்கரித்திருப்பார்களானால், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அதற்காக அவர்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியதுமில்லை. பயத்தினாலேயே அவர்கள் கூட்டத்திற்கு வராமலிருந்திருப்பார்களாயின், நிச்சயமாக அவர்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதே இல்லை. ஆனால், பயந்துகொண்டிருப்பது அவர்களுக்கே மானக்கேடு. ஆண்களும் பயத்தினால் கூட்டத்திற்கு வராமலிருந்திருப்பார்களானால், அவர்களும் கோழைகள்தானா? முஸ்லிம்கள் அவர்களைக் கடித்துத் தின்றுவிடப் போகிறார்களா? அவர்கள் இப்படிப்பட்ட கோழைகளாக இருப்பார்களானால், இந்நாட்டில் வாழ்வதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள். மதுபூரில் பெண்கள் கூட்டமொன்றை நடத்த வேண்டும் என்று என்னைக் கேட்க என்னிடம் இன்று காலையில் வந்த சகோதரி, என்னை மூன்று கேள்விகள் கேட்டார். எவ்வளவு முயற்சி செய்தும், தூக்கிச் செல்லப்பட்ட பெண்களில் சிலரை இன்னும் மீட்க முடியவில்லை என்பதைப் பற்றியது முதல் கேள்வி. இதற்கு நான், இது பற்றி

எனக்குக் கடிதம் எழுதும்படியும், அதை ஷஹீத் சுஹ்ரவார்திக்கு அனுப்புவதாகவும் சொன்னேன். பிரதம மந்திரிக்கும் நான் நேரே எழுதலாம். இது கொஞ்சமும் தாமதிக்க முடியாத விஷயம். இரண்டாவதாக, கிராமங்களில் வெளியேறிவிட வேண்டும் என்று விரும்பும் சில பெண்கள் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் ராணுவ உதவி வேண்டும் என்கிறார்கள் என்றும் அவர் சொன்னார். இதற்கு நான் எப்பொழுதும் உடந்தையாக இருக்க முடியாது. என்னைப் பொறுத்தவரையில், போலீஸும் ராணுவமும் அவசியம் என்று நான் கருதவே இல்லை என்றும், எப்பொழுது வேண்டுமானாலும் அவர்களைப் போகச் சொல்லிவிடலாம் என்றும் பிரதம மந்திரியிடம் கூறினேன். ஹிந்துக்களும் முஸ்லிம்களும், அவர்கள் விரும்பினால், ஒருவருக்கொருவர் மண்டையை உடைத்துக் கொள்ளுவதற்கும் சுயேச்சையுடன் இருக்கவேண்டும். அதையும் நான் சகித்துக்கொள்ளுவேன். ஆனால், அவர்கள் தொடர்ந்து போலீஸ், ராணுவத்தின் உதவியையே எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்களாயின், என்றைக்கும் அவர்கள் அடிமைகளாகவே இருப்பார்கள். சுதந்திரத்தைவிட பாதுகாப்பே போதும் என்று எண்ணுகிறவர்கள், வாழ உரிமையற்றவர்களாவர். பெண்கள் வீரமுள்ளவர்களாக வேண்டும் என்று விரும்புகிறேன். பலாத்காரத்திற்குப் பயந்து ஒருவர் மதம் மாறிவிடுவது, கோழைத்தனமேயன்றி மத மாற்றம் அல்ல. கோழையான ஆணோ, பெண்ணோ, எந்த மதத்திற்குமே வெறும் சுமையேயாகும். பயத்தின் காரணமாக இன்று நீங்கள் முஸ்லிம்களாகலாம். நாளை கிறிஸ்தவர்களாகலாம்; அதற்கும் மறுநாள் இன்னுமொரு மதத்தினராகிவிடலாம். மனிதத் தன்மையுள்ளவர்களுக்கு இது பெருமையானது அல்ல. தாங்கள் துணைக்கு வருவதாகவும், உயிரைக் கொடுத்தும் காக்க தாங்கள் தயாராயிருப்பதாகவும் பெண்களுக்குச் சொல்லவேண்டியது ஆண் ஊழியர்களின் கடமை. அப்பொழுதும் வருவதற்குப் பெண்கள் அஞ்சுவார்களானால், அப்படிப்பட்டவர்களுக்கு வேறு உதவியே இல்லை. பெண்கள் வீரத்துடன் இருக்கவேண்டும், இல்லாவிடில் சாக வேண்டும் என்று பகிரங்கமாகச் சொல்லுவதற்கே நான் வந்திருக்கிறேன். பயமாகிய பேயைத் தங்களிடமிருந்து விரட்டிவிடுவதற்கு, அவர்கள் அனுபவித்திருக்கும் துன்பங்களைப் பெண்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். கடைசியாக இந்தச் சகோதரி, 'தங்கள் வீடுவாசல்களுக்குத் திரும்பிப் போய்விடும்படி அகதிகளுக்கு எப்படி யோசனை கூறுவது?' என்று கேட்கிறார். போலீஸ், ராணுவப் பாதுகாப்புடன் திரும்பிப் போகவேண்டாம் என்றுதான் அவர்களுக்கு நான் யோசனை கூறுவேன். முஸ்லிம்களுக்குப் பயந்துகொண்டு அவர்கள் ஓடி வந்திருக்கிறார்கள். ஆகையால், 'உங்களை எங்கள் சொந்தத் தாய்மார்களாகவும், சகோதரிகளாகவும், பெண்களாகவும் பாவித்துப் பாதுகாக்கிறோம். நீங்கள் பயப்படாமல் வாருங்கள்' என்று முஸ்லிம்கள்தான் முன்வந்து அவர்களுக்கு உறுதிமொழி அளிக்க வேண்டும். பிறருடைய குறுக்கீடு இல்லாமல் தன்

மதத்திலேயே தான் இருந்து வருவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. பெயரில் வித்தியாசம் இருந்தாலும் எல்லோரும் ஒரே கடவுளைத்தான் வணங்குகிறார்கள். என் கடவுள் இந்த மரத்தில்தான் இருக்கிறார் என்று நான் எண்ணி வணங்கினால், முஸ்லிம்கள் இதை ஏன் ஆட்சேபிக்க வேண்டும்? இன்னொருவரின் கடவுளைவிட தன் கடவுளே உயர்வு என்று ஒருவர் சொல்லுவது தவறாகும். எல்லோரின் கடவுளும் ஒருவரே. இதனாலேயே ஒவ்வொரு கிராமத்திலும் யாருக்கும் ஆபத்து இல்லாமல் அமைதி நிலவுவதற்கு ஒரு நல்ல ஹிந்துவும் நல்ல முஸ்லிமும் உத்தரவாதமாக இருக்க வேண்டும் என்ற என் முறையைக் கூறுகிறேன். அப்பொழுதுதான், அப்பொழுது மாத்திரமே, அகதிகளை வீடு வாசல்களுக்குத் திரும்பிப் போகுமாறு நான் கூறுவேன். என் யோசனையை மந்திரிகளும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்."

['வாரக் கடிதம்' என்ற தலைப்பில் வெளியானது]

காஜிர்கில், 24—11—'46 — 'ஹரிஜன்' · 8—12—1946

# 8

# வீரம் இன்றியமையாதது

ஸ்ரீராம்பூர் என்ற சிறு கிராமத்தில் நவம்பர் 26-ஆம் தேதி பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. காந்திஜி அப்பொழுது அங்கே தங்கியிருந்தார். காந்திஜி கூறியதாவது:

"முஸ்லிம்களையே கொண்ட தன் கிராமத்திற்கு ஓர் அகதி தன்னந்தனியாகத் திரும்பிப் போக வேண்டியிருந்தாலும், நான் கொஞ்சமும் தயக்கமின்றி அவரைப் போகச் சொல்லுவேன். ஆண்களாயினும், பெண்களானாலும், தீரமுள்ளவர்களாக அவர்கள் ஆக வேண்டுமானால் இந்தத் தைரியம் அவர்களுக்கு இன்றியமையாதது. எனக்கு ஏராளமான கடிதங்கள் வந்திருக்கின்றன. இப்படி நம்பிக்கை வைப்பது விவேகமாகுமா என்று அவற்றில் என்னைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சுயமதிப்புள்ள நாட்டு மக்களாக வேண்டுமாயின் இது அவசியம் என்றே நான் கருதுகிறேன். ஆணுக்கும் பெண்ணுக்கும் இதில் நான் வித்தியாசத்தைக் காணவில்லை. ஆண்களைப் போன்றே தாங்களும் சுயேச்சையானவர்கள் என்று பெண்கள் உணர வேண்டும். வீரம், ஆணின் ஏகபோக சொத்து அல்ல. வெளி உதவியையெல்லாம் விலக்கிவிட்டதே தற்பாதுகாப்புக் கலை. தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக மக்கள் தங்கள் சுயமரியாதையையே மறந்துவிடுகிறார்கள் என்பதையே நான் பார்த்தவையும், நான் கேள்விப்படுகிறவையும் காட்டுகின்றன. தங்கள் மானத்தைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்காக,

தங்களையே, தங்கள் உடைமைகள் எல்லாவற்றையுமே தியாகம் செய்துவிடவும் தயாராக இல்லாத மக்களுக்குச் சுய தேசமோ, சுயராஜ்யமோ இல்லை. 'அகதிகள்' அவர்களுடைய கிராமங்களுக்குத் திரும்பிப் போய்விட வேண்டும். அங்கே வசிக்கும் பெரும்பான்மையான முஸ்லிம்களுக்கு மத்தியில் இவர்கள் பத்திரமாகவும் சௌக்கியமாகவும் வாழ்ந்து வருவதாக அவர்கள் உணரவேண்டும். 'எங்கள் கௌரவத்திற்கும் இஸ்லாமின் செல்வாக்கிற்கும் இது அவசியம்' என்று நோவாகாலிக்கு வந்திருக்கும் மந்திரிகளும் பார்லிமெண்டரி காரியதரிசிகளும் சொல்லுகிறார்கள் என்பதை இக் கூட்டத்திலிருக்கும் நீங்கள் அறிவீர்கள். உறுதியாகக் கூறும் அவர்கள் வார்த்தையை நம்பி அப்படியே செய்யுங்கள் என்று அகதிகளுக்கு யோசனை கூறுவதில் எனக்கு எவ்விதமான தயக்கமும் இல்லை. நம்புகிறவர்களுக்கு எப்பொழுதும் நஷ்டமில்லை; ஏமாற்றுகிறவர்களே நஷ்டமடைவார்கள். எந்த மதத்திலும், இஸ்லாமாக இருந்தாலும் ஹிந்து சமயமாயினும், குண்டர்கள் இருந்து வருவதற்கு அவற்றில் இடமே இல்லை. ஆண்டவன் எனக்குச் சக்தியை மாத்திரம் அளிப்பாரானால், கிழக்கு வங்காளத்தின் மக்கள் மத்தியில் வாழ்ந்து, அதே மாதிரி செய்யவேண்டும் என்று அவர்களைத் தூண்டுவதற்காக நானும் வங்காளியாகிவிடுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்."

ஸ்ரீராம்பூர், – 28—11—'46 — 'ஹரிஜன்' - 5—1—1947

## 9

# கடவுளையே நம்புங்கள்

பிரார்த்தனைக்குப் பிறகு பேசிய காந்திஜி, சிறிது நேரத்திற்கு முன்னால் நடந்த பஜனையில் பாடப்பட்ட ஒரு கீதத்தில் அடங்கிய கதையையே முக்கிய பொருளாகக் கொண்டு பேசினார். அவர் கூறியதாவது:

"யானைகளின் அரசனான கஜேந்திரன், நீர் பருகுவதற்கு ஆற்றிற்குச் சென்றான். அவன் காலை ஒரு முதலை பிடித்துக் கொண்டது. அதன் பிடியிலிருந்து மீட்டுக்கொண்டு வர எவ்வளவோ போராடிப் பார்த்தான். கஜேந்திரனுக்கு அதிக பலமிருந்தும் பயனில்லை. முதலை அவனை ஆழமான நதிக்குள் இழுத்துக்கொண்டு போய்விட்டது. மூழ்கி மாண்டுவிடும் தறுவாயிலிருந்த கஜேந்திரன், தனக்கு இருந்த பெரும் பலத்தினால் ஒரு பயனுமில்லை என்பதை உணர்ந்துகொண்டான். தன்னைக் காப்பாற்றுமாறு கடவுளைப் பிரார்த்தித்தான். திக்கற்றவர்களுக்குத் துணையான கடவுள், உடனே உதவிக்கு வந்து மரணத்தின் வாயிலிருந்து யானைகளின் ராஜனைக் காப்பாற்றினார்.

"இக்கதையின் படிப்பினை முக்கியமானதாகும். கடவுளின் உதவி இல்லாதபோது, பலசாலியின் பலமும் பயன்படாமல் போய்விடுகிறது. ஆகையால், வெளி உதவிக்கு நம்பிக்கொண்டிருக்காமல், உங்களுடைய உள்ளுக்குள்ளேயே இருக்கும் பலத்தையே நம்பியிருக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மனப்பூர்வமாக அந்தப் பலத்தை நாடுவோருக்கெல்லாம் அது கடவுளிடமிருந்து கிடைக்கிறது. இதுதான் நோவாகாலியிலுள்ள மக்கள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினையாகும்."

ஸ்ரீராம்பூர், 2—12—'46 —'ஹரிஜன்' - 5—1—1947

# 10

# மதத்தின் சாரம்

பிரார்த்தனை ஆரம்பமாவதற்குக் கொஞ்சம் முன்னால், பக்கத்து கிராமங்களைச் சேர்ந்தவர்கள், மத்தளம், கர தாளம் ஆகியவைகளுடன் நாம சங்கீர்த்தனம் பாடிக் கொண்டு வந்தார்கள். பிரார்த்தனையின் போது ராம பஜனை நடந்தது. அதில் அவர்கள் மத்தளம் வாசித்து கர தாளமும் போட்டார்கள். இது இன்பகரமான அனுபவமாக இருந்தது. காந்திஜி பேச ஆரம்பித்ததும்,பாடகர்களைப் பாராட்டினார். அவர் கூறியதாவது:

"வங்காள மிருதங்கத்தை, இந்தக் கூட்டத்தில் வாசித்ததைப் போன்று இவ்வளவு நன்றாக வாசித்ததை நான் இதற்கு முன்னால் கேட்டதே இல்லை. அதை நன்றாக வாசிக்கும்போது அதில் முழு இனிமையும் இருக்கிறது. நாம சங்கீர்த்தனமும் நன்றாக இருந்தது. ஆனால், அது தொண்டையிலிருந்து மாத்திரம் வருவதாக இல்லாமல் உள்ளத்திலிருந்து வருவதாக இருக்க வேண்டும். எஜமான் சொல்லிக் கொடுப்பதை ஒரு கிளியும் திரும்பச் சொல்லும். நாம் பத்திரமாக வாழ்ந்துகொண்டிருக்கும்போது கடவுளின் நாமத்தை உச்சரிப்பதில் பெருமை எதுவும் இல்லை. ஆனால், ஆபத்திலிருக்கும் போது உச்சரிக்கையில்தான் அது உண்மையானதாகிறது.

"ஒரு ஹிந்து, விரும்பி முழு மனத்துடன் கல்மா ஓதுவதைக் குறித்து நான் கவலைப்படவே மாட்டேன். ஆனால், தன் உயிரோ, சொத்தோ போய்விடுமே என்பதற்காகப் பயந்துகொண்டு அவன் அதை ஓதுவானாயின், அப்பொழுது அவன் கடவுளின் நாமத்தை வீணுக்கு உச்சரித்தவனே ஆவான். ஏனெனில், அப்பொழுது அவன் வாயிலிருந்து வந்த தொனி சைத்தானின் தோனியே. இஸ்லாமை நான் அறிந்த வரையில், பலாத்காரத்தைக்கொண்டு அது என்றும் பிரபலமானதில்லை; ஆகவும் முடி

யாது. இந்த வழியில் இஸ்லாமுக்குச் சேவை செய்வதாகக் கூறுகிறவன், அந்த உயர்ந்த மதத்திற்குக் கெடுதியைச் செய்பவனே ஆகிறான்.

"இன்று ஒவ்வொரு மதத்திலும் விரும்பத்தகாத புல்லுருவி வளர்ச்சிகள் இருந்து வருகின்றன. ஹிந்து சமயத்தில், நமது சகோதரர்களில் ஏராளமானவர்களைத் தீண்டாதாராகக் கருதி நடத்தி வருகிறோம். செய்துவிட்ட அந்த பாவத்தின் வினையையே இப்பொழுது விசனத்துடன் அனுபவித்து வருகிறோம் என்பதில் சந்தேகமில்லை.

"ஈசோபநிஷத்தின் முதல் சுலோகத்தில் ஹிந்து சமயத்தின் ஆன்மிக அனுபவம் முழுதும் அடங்கியிருக்கிறது என்பது என் அபிப்பிராயம். பிரபஞ்சத்தில் இருப்பவை யாவும் கடவுளாலேயே வியாபித்து அவனுடையவே இருக்கின்றன என்பது அந்தச் சுலோகத்தின் கருத்து. ஆகையால் எவரும், எதையும் தன்னுடையது என்று கூறிக்கொள்ளுவதற்கில்லை. உடலையும், மனத்தையும், வைத்திருப்பவை எல்லாவற்றையும் நாம் கடவுளுக்கே அர்ப்பணம் செய்துவிட்டு அவன் அருளால் கிடைப்பதை மாத்திரமே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒருவருடைய சொத்தை, அது எந்த உருவில் இருப்பதாயினும், உயிரானாலும், கௌரவமானாலும், மதமானாலும் அதை நாம் பறித்துவிடக் கூடாது என்பதுதான் அந்தச் சுலோகத்தின் படிப்பினை. இந்த உண்மையில் நம்பிக்கையுள்ள ஒருவர், அதன்படி வாழும்போது, எல்லா பயங்களையும் விட்டொழித்துவிட்டுப் பூரணமான அமைதியுடன் வாழ்கிறார்.

"ஸ்ரீமத் பகவத் கீதையின் (அத். 2 — சுலோகம் 54 — 72) சுலோகங்கள்* ஆசிரமத்தின் பிரார்த்தனை கீதங்களில் சேர்க்கப்

---

* 'பகவத் கீதை'யின் இரண்டாவது அத்தியாயமான ஸாங்கிய யோகத்தில் கூறப்பட்டிருக்கும் சுலோகங்களில் 54 முதல் 72 வரையிலுள்ள சுலோகங்களையே காந்திஜி இங்கே குறிப்பிடுகிறார். அந்தச் சுலோகங்களின் தமிழாக்கம் வருமாறு :

அர்ஜுனன் சொன்னது :

"கேசவா, ஸமாதியில் நிலைத்த நிறை ஞானியின் லக்ஷணம் யாது? உறுதியான அறிவுடையவன் எதைப் பேசுகிறான், எப்படி அமர்கிறான், எவ்வாறு நடக்கிறான் ?"—54

ஸ்ரீ பகவான் சொன்னது :

"பார்த்தா, மனதிலெழுகின்ற ஆசைகளையெல்லாம் அகற்றி ஆன்மாவில் ஆன்ம திருப்தியடைந்திருப்பவன் ஸ்திதப்பிரக்ஞன் என்று சொல்லப்படுகிறான்." —55

"துன்பத்தில் துடியாத, இன்பத்தில் நாட்டமில்லாத, பற்று, அச்சம், சினமற்ற உறுதியான உள்ளத்தையுடையவன் முனி எனப்படுகிறான்."—56

"எவன் எங்கும் பற்றிலனாய், நலம் தருவதை அடைந்து மகிழாமலும், கேடு தருவதை அடைந்து நொந்துகொள்ளாமலும் இருக்கிறானோ அவன் அறிவு உறுதி பெறுகிறது."—57

பட்டிருக்கின்றன. ஞானத்தை அடைந்து, புலன்களை முற்றிலும் அடக்கியவனின் தன்மைகளைக் குறித்து இந்தச் சுலோகங்கள் விவரிக்கின்றன. பகவத் கீதையின் போதனைகள், உலகத்தைத் துறந்துவிட்டவர்களுக்கு அல்ல, பிறப்பும் அந்தஸ்தும் எதுவானாலும், இல்லறத்திலுள்ள எல்லோருக்கும் சொல்லப்பட்டிருக்கும் போதனையே அது. அதில் விவரித்திருக்கும் நிலையை அடைய வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. அச்சமின்மை என்ற பாறையின் மீது வாழ்க்கையைக் கட்டினால் மாத்திரமே அதைச் செய்ய முடியும்.

---

''ஆமை தன் அவயவங்களை அடக்கிக்கொள்வதுபோல் பொருள்களிடத்திலிருந்து புலன்களை முழுதும் உள்ளிழுக்க வல்லவனுக்கு நிறை ஞானம் நிலைபெறுகிறது.''—58

''புலன்களைத் தடுத்து வைப்பவனுக்கு விஷயானுபவங்களில்லை; ஆசையுண்டு. பரமாத்மாவைத் தரிசித்த பின் அவனுடைய ஆசையும் அழிகிறது.''—59

''நெறி நிற்கும் நல்லறிஞனுடைய மனதையும் கொந்தளிப்புள்ள புலன்கள் பலவந்தமாகப் பற்றியிழுக்கின்றன.''—60

''யோக நிஷ்டன் அவைகளை யெல்லாம் அடக்கி என்னையே கதியாகக் கொண்டிருக்கிறான். புலன்களை வசமாக்கியவனுக்கு அறிவு நிலை பெறுகிறது.''—61

''பொருள்களை நினைப்பதால் பற்றுண்டாகிறது. பற்று ஆசையாகப் பரிணமிக்கிறது. ஆசை சினமாக வடிவெடுக்கிறது.''—62

''சினத்தால் மனக்குழப்பம்; குழப்பத்தால் நினைவின்மை; நினைவு நாசத்தால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் மனிதன் அழிகிறான்.''—63

''விருப்பு வெறுப்பற்றனவும், ஆன்ம வசப்பட்டனவும் ஆகிய புலன்களால் விஷயங்களில் உலவுகின்ற மனத்தை அடக்கியவன் மனத் தெளிவடைகிறான்.''—64

''மனவமைதியில் மனிதனது துன்பங்களனைத்தும் ஒழியும். ஏனெனில் மன அமைதியுடையவனுக்கு அறிவு விரைவில் ஆன்ம சொருபத்தில் நிலைபெறுகிறது.''—65

''மனமடங்காதவனுக்கு ஆன்ம போதமுமில்லை, ஆன்ம பாவனையுமில்லை. ஆன்ம தியானமில்லாதவனுக்கு சாந்தி கிடையாது. சாந்தியில்லாதவனுக்கு இன்பமேது?''—66

''நீர் மேல் கப்பலைக் காற்றானது கவர்வது போன்று, அலைகின்ற புலன்களைப் பின்தொடரும் மனது அவனது விவேகத்தை அரிக்கிறது.''—67

''ஆகையால், ஆற்றலுடையாய்! யாருடைய புலன்கள் ஆசைகளினின்று பிரிக்கப்பட்டிருக்கின்றனவோ அவனது அறிவு நிலைபெற்றுள்ளது.''—68

"உயிர்களனைத்துக்கும் எது இரவோ அதில் யோகி விழித்திருக்கிறான். உயிர்களெல்லாம் விழித்திருக்கும் நிலை தத்துவ ஞானிக்கு இரவு.''—69

''அசைவற்ற நிறை கடலில் ஆறுகள் சென்றடங்குவதுபோல் எந்த முனிவன்பால் ஆசைகளனைத்தும் சென்று ஒடுங்குகின்றனவோ அவனே சாந்தியடைகிறான். ஆசையுள்ளான் சாந்தியடையான்.''—70

''எவன் ஆசைகளை அறவே அகற்றி, பற்றற்று, அகங்கார மமகாரமின்றி நடமாடுகிறானோ அவன் சாந்தியடைகிறான்."—71

"பார்த்தா, இதுவே பிரம்ம நிலை பேறு ஆகும். இதை அடைபவனுக்கு மோகமில்லை. இறுதிக் காலத்திலாவது இதில் நிலைத்திருப்பவன் பிரம்ம ஐக்கியத்தை அடைகிறான்."—72

"ஒரு முஸ்லிம் எழுதியிருப்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சுயமரியாதைக்காகவும் மதத்திற்காகவும் சாகவோ, தன்னுடைய எல்லாவற்றையும் இழந்துவிடவோ கடவுளின் மனிதன் ஒரு நாளும் அஞ்சுவதே இல்லை என்று அவர் சரியாகவே எழுதியிருக்கிறார். கடவுள் நமக்கு உயிரைக் கொடுத்திருக்கிறார்; எப்பொழுதும் அதை அவர் எடுத்துக்கொண்டு போய்விடுவார். இந்த உபதேசம் பிரபஞ்சம் முழுமைக்குமானது. ஹிந்துக்களுக்கேயன்றி முஸ்லிம்களுக்கும், எல்லோருக்குமே இது பொருந்தும். கடவுள் ஒருவரையே அடைக்கலமாகக் கொண்டுவிட்டவர்கள், எல்லா பயங்களையும் விட்டொழித்துவிடுகிறார்கள். அப்பொழுது ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நிரந்தரமான நட்பு இருந்து வரும். என் பிரசங்கத்திற்கு வருகிறவர்களுக்கெல்லாம் இப்படிப்பினையை இடைவிடாது சொல்லிக் கொண்டு வருகிறேன். நான் கூறுவதை முஸ்லிம்களும் கேட்டுக் கொண்ட சமயம் ஒன்று உண்டு. ஆனால், இப்பொழுது நிலைமை மாறிப்போய்விட்டது என்று தோன்றுகிறது. ஹிந்துக்களிலும் கூட என் புத்திமதியைக் கேட்டு நடப்பவர் அதிகம் பேர் இல்லை. ஆனால், நான் நிச்சயமாக ஒன்றைக் கூறுவேன். மனிதர், எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயினும், கடவுளிடம் கொள்ளும் தெய்விக பயத்தைத் தவிர வேறு எந்தப் பயத்திற்கும் பணிந்துவிட மறுத்தாலன்றி நிரந்தரமான அமைதி என்பது இருக்கவே முடியாது."

—'ஹரிஜன்' – 5—1—1947

# 11

# ஸ்ரீராம்பூர் நாட்குறிப்பு

[பல பத்திரிகைகளிலும் வெளியான செய்திகளிலிருந்து சேகரித்துள்ள விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.]

ஸ்ரீராம்பூரில் காந்தியுடன் தங்கியிருந்த பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குக் காந்திஜி, "ஜனத்தொகையை பரிவர்த்தனை செய்துகொள்ளுவது என்பது எண்ணவே முடியாதது, நடைமுறை சாத்தியமில்லாதது" என்றார். அவர் மேலும் கூறியதாவது: "இப்பிரச்னை என் மனத்தில் எழுந்ததே இல்லை. ஹிந்துவானாலும் முஸ்லிமாயினும், வேறு எந்த மதத்தினராயினும், ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொருவரும் இந்தியரே. பாகிஸ்தான் முற்றிலும் அமைந்துவிட்டாலும் அதிலும் வேறுவிதமாக இருக்க முடியாது. என்னைப் பொறுத்த வரை, ஜனத்தொகையைப் பரிவர்த்தனை செய்துகொண்டுவிடுவது என்பது, இந்திய ஞான சூன்யத்தையோ, ராஜதந்திரமின்மையையோ, இரண்டையுமோ காட்டுவதாகவே தோன்றுகிறது. இத்தகைய காரியத்தைச் செய்வதனால் ஏற்படக்கூடிய விளைவு, எண்ணிப்

பார்க்கவும் அதிக பயங்கரமானதாகும். இந்தியாவைப் பல மதப் பிராந்தியங்களாகப் பிரித்துவிடுவதாக இது ஆகாதா?"

அமைதியே இல்லாத நிலை இருந்து வருவதால், வெளியேறி விடும்படிச் செய்யும் கொள்கையை அனுசரிப்பது நல்லதாக இராதா என்று கேட்டதற்குக் காந்திஜி, "அத்தகைய கொள்கைக்கு அவசியம் எதுவும் இருப்பதாக நான் காணவில்லை. வேறு எதுவுமே வழியில்லையெனும்போது மனம் சோர்ந்து செய்யும் காரியம் அது. ஆகையால், ஏதோ சில சமயங்களில், எதுவும் வழியில்லாமல் கடைசிக் காரியமாக இது செய்யப்படுகிறது" என்றார்.

## நோவாகாலிக்குச் செய்தி

அடுத்த கேள்வியாவது: "கிழக்கு வங்காளத்தில் நீங்கள் எவ்வளவு காலம் தங்குவீர்கள் என்பதற்கு ஓர் எல்லையே இல்லை என்று சில தினங்களுக்கு முன்னால் நீங்கள் கூறினீர்கள். நீங்கள் ஸ்ரீராம்பூரிலேயே இருந்து வருவதால், நோவாகாலியின் மற்ற கிராமங்களுக்கும் உங்கள் செய்தியை அனுப்பிவிட முடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?"

காந்திஜி கூறிய பதிலாவது: "உண்மையில் நான் அதிக காலம் ஸ்ரீராம்பூரிலேயே தங்கியிருந்துவிடவில்லை. இங்கே நான் சும்மாவும் இல்லை. சுற்றுப்புற கிராமங்களில் இருப்பவர்களையும் மற்றவர்களையும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். விஷயங்களை ஆராய்ந்து வரும் அதே சமயத்தில் இழந்துவிட்ட உடல்பலத்தையும் பெற்று வருகிறேன். சாத்தியமும் அவசியமுமாகும்போது கிராமம் கிராமமாக நடந்தே போய், அகதிகளைத் திரும்பி வந்துவிடும்படி தூண்டுவது என்பதே எனது முடிவான நோக்கம். நானே விஷயங்களை நன்றாகக் கவனித்துக்கொண்டுவிட்ட பிறகு தான் இதை நான் சரியானபடி செய்ய முடியும். வெறும் வார்த்தைகளினால் மாத்திரம் அதிக பலனில்லை என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. வேண்டுகோள் நுழைய முடியாத வகையில் அவநம்பிக்கை அவ்வளவு ஆழமாகப் பதிந்துவிட்டது."

## 'இருள் என்னுள்ளேயே'

மற்றொரு கேள்வியாவது: "இருளில் இருந்து வருவதாக நீங்கள் எண்ணுகிறீர்கள் என்று செய்தி வெளிவந்தது. இந்த இருள் உங்களுக்கு ஏன், எப்பொழுது ஏற்பட்டது? அதிலிருந்து ஏதாவது விடுதலையைக் காண்கிறீர்களா?"

காந்திஜி கூறிய பதிலாவது: "அச்செய்தி உண்மையானதாகவே இருக்கிறது என்று அஞ்சுகிறேன். வெளிச் சந்தர்ப்பங்கள் என்னை என்றும் ஆட்கொண்டு விட்டதே இல்லை. இப்பொழுது இருக்கும் இருளுக்குக் காரணம் என்னுள்ளேதான் இருக்கிறது. ஹிந்து-முஸ்லிம் உறவு பற்றிய விஷயத்தில் என்

னுடைய அகிம்சை பலனளிப்பதாகத் தோன்றவில்லை. நோவாகாலியில் நடந்திருக்கும் சம்பவங்களை நான் அறிந்தபோது இது பலமாக என் மனத்தில் பட்டது. பலவந்தமாக மதம் மாற்றப்பட்டனர் என்பதும், வங்காள சகோதரிகள் அனுபவித்திருக்கும் துன்பங்களும் என் உள்ளத்தை உருக்கிவிட்டன. பேனுவினுலோ, பேச்சினுலோ நான் எதுவும் செய்துவிட முடியாது. என்னை எந்தத் தத்துவம் இதுவரை நிலைபெற்றிருக்கச் செய்திருக்கிறதோ, வாழ்க்கையை வாழத்தக்கதாக எது செய்திருக்கிறதோ அந்தத் தத்துவம் சரியானதுதானு என்பதைச் சோதித்துப் பார்த்துவிடும் நடவடிக்கைக்கான இடத்திலேயே நான் இருக்க வேண்டும் என்று என்னுள்ளேயே நான் விவாதித்துக் கொண்டேன்.

"என்னைக் குறை கூறுவோர் அடிக்கடி சொல்லி வருவதைப் போன்று இது பலவீனர்களின் ஆயுதந்தானு? அல்லது உண்மையில் இது பலமுள்ளவர்களின் ஆயுதமா? ஆத்திரத்திற்கு அப்படிப்பட்ட அறிகுறியாக இருந்துவரும் நோவாகாலிக்கு என்னிடம் தயாராக எந்தவிதமான பரிகாரமும் இல்லாதபோது இந்தக் கேள்வி என்னுள் எழுந்தது. ஆகவே, என்னுடைய வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு என் நிலை என்ன என்பதைக் காண்பதற்காக நான் நோவாகாலிக்கு விரைந்தோடி வந்தேன். நிச்சயமாக அகிம்சை சரியான ஆயுதம் என்பதை நான் அறிவேன். என் கையில் அது சரியானபடி பயன்படவில்லையே என்ருல், குறைபாடு என்னுள்தான் இருக்கிறது. நான் அனுசரித்த முறை தவருனது. இத்தவறைத் தூரத்தில் இருந்து கொண்டு நான் கண்டு பிடித்துவிட முடியாது. எனவே, அதைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதற்காக இங்கே வந்திருக்கிறேன். ஆகையால், ஒளியைக் காணும் வரையில், இருளில் நான் இருப்பதாகவே ஒப்புக்கொள்ள வேண்டும். ஒளி என்று தோன்றும் என்பது கடவுள் ஒருவருக்கே தெரியும். இதற்குமேல் நான் சொல்ல முடியாது."

## 'என் அகிம்சைக்குச் சோதனை'

ஒரு சென்னைப் பத்திரிகையின் நிருபர் கேட்ட கேள்விக்குக் காந்திஜி பதிலளிக்கையில் கூறியதாவது: "அவநம்பிக்கையும் சந்தேகமுமே நிறைந்திருக்கும் இச்சூழ்நிலையில், என்னுடைய அகிம்சையைச் சோதித்துப் பார்த்துவிடுவதற்காகவே நான் இங்கே வந்திருக்கிறேன்."

நிருபர் கேட்ட கேள்வியாவது: "நீங்கள் இங்கே தங்கியிருப்பதே தங்களுக்குச் சங்கடமானது என்றும், அகதிகளைக் கொண்டுபோய் திரும்பக் குடியேற்றுவதற்கு நியாயமானவை என்று தாங்கள் கருதிச் செய்யும் காரியங்களெல்லாம், நீங்கள் இங்கே இருப்பதனுல் ஏற்படும் வற்புறுத்தலினுலேயே செய்யப்

படுகின்றன என்று வெளி உலகம் கருத நேரும் என்றும் வங்காள மந்திரிகள் கருதமாட்டார்களா?"

இதற்குக் காந்திஜி கூறிய பதிலாவது: "முதலாவதாக, நீங்கள் அவ்வாறு எண்ணிக்கொள்ளுவது கொஞ்சமும் காரணமில்லாதது. ஆனால், காரணமில்லாதது அல்ல என்றால், உண்மைகளை அனுசரித்தே நீங்கள் அவ்வாறு எண்ணுகிறீர்கள் என்றால், நீங்கள் செய்துகொள்ளும் முடிவு சரியானது; நான் இங்கே தங்கியிருப்பது அகிம்சைக்குப் பொருத்தமானதும் ஆகாது.

"இப்பகுதியிலிருக்கும் ஹிந்துக்களுக்கு நான் எவ்வாறு நண்பனோ அதே போல முஸ்லிம்களுக்கும் நண்பன் என்ற முறையிலேயே நான் இங்கே வந்திருக்கிறேன் என்று எண்ணிக் கொள்ளுகிறேன். நான் தாய்நாட்டிற்குத் திரும்பி வந்த ஆரம்ப காலத்தில் சம்பாரணுக்கு நான் போனதைக் குறித்து நீங்கள் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். அந்த இடத்தைவிட்டுப் போய் விடவேண்டும் என்றுகூட எனக்கு உத்தரவு பிறப்பித்தார்கள். அப்பொழுது வைஸ்ராயாக இருந்தவரின் உத்தரவின்பேரில், எனக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனை ரத்தாயிற்று. தனித்த முறையில் நான் நடத்திக்கொண்டிருந்த விசாரணையை அனுமதிப்பதோடு அதற்கு உதவி செய்யுமாறும் ஜில்லா மாஜிஸ்டிரேட் அறிவிக்கப்பட்டார். இதன் பலனாக, அரசாங்கம் ஸ்லை என்பவரின் தலைமையில் நியமித்த விசாரணைக் கமிஷனில் நானும் அங்கத்தினனானதோடு ஒரு நூற்றாண்டாக இருந்துவந்த தவறுகளும் போக்கப்பட்டன."

—'ஹரிஜன்'—19—1—1947

## 12

# இனாம் பெறுவது இழுக்கு

[காந்திஜி டிசம்பர் 21-ஆம் தேதி பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியதை 'இந்திய அசோஸியேடட் பிரஸ்' என்ற செய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருந்தது. அவ்விஷயமே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:]

"தருமம் செய்வது சம்பந்தமாக எனக்கு உறுதியான கருத்துகள் உண்டு. இனாமாகக் கொடுக்கப்படுவதை வாங்கிக் கொள்ளுவதும், இனாமாகக் கொடுப்பதும் தவறாகும். நம்நாட்டில் மதத்திற்கு விரோதமான காரியங்கள் மதத்தின் பெயரால் அடிக்கடி நடமாடிக்கொண்டு வருகின்றன. இந்தியாவில் மத சம்பந்தமான சன்னியாசிகள் என்போர் 56 லட்சம் பேருக்குமேல் இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் தகுதியானவர்கள் என்று எந்தவிதத்திலும் கருத முடியாதவர்கள். துக்ககரமான இந் நாட்டில், தீண்டாமையை அனுசரிப்பது என்ற வெறுக்கத்தக்க



நோவாகாலியில் கிராமவாசிகள் பலர் தம்முடன் வர காந்திஜி கிராமந்தோறும் நடந்தே சென்றார்.



சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவிட்ட நோவாகாலி பெண்கள், காந்திஜியைக் கண்டு தங்கள் சோகக் கதைகளைக் கூறுகின்றனர்.

பழக்கத்திற்கும் மதத்தின் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"அகதிகளுக்கு நிவாரணமளித்து அவர்களைத் திரும்பக் கொண்டுபோய் குடியேற்றுவது என்பது, அதிகக் கஷ்டமான பிரச்னையாகி யிருக்கிறது. நோவாகாலியில் துன்பப்பட்டிருக்கும் இவர்களுக்குப் பணத்தையும் எல்லாவகையான இனங்களையும் கொடுக்க இந்தியா முழுவதிலும் அநேகர் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். ஆகையால், இந்த அகதிகள், பொதுஜன உதவியை நம்பி வாழ விரும்பும் மனோபாவத்தைப் பெற்றுவிடக்கூடிய சந்தர்ப்பமும் இருந்து வருகிறது. இத்தகைய மனப்பான்மை ஏற்படுவதையும், தருமம் செய்துவிடுவதால் புண்ணியம் வந்துவிடும் என்று பலர் தாங்களே எண்ணிக்கொண்டுவிடுவதையும் எதிர்த்துப் போராட வேண்டியதாகிறது.

"அகதிகளின் விஷயத்தில் பொதுஜன தரும ஸ்தாபனங்கள் கொள்ளும் போக்கு வேறு, அரசாங்கம் கொள்ள வேண்டிய போக்கு வேறு. அகதிகள் முகாம்களில் வந்து சேர்ந்திருக்கும் மக்கள், அவர்கள் செய்துவிட்ட தவறால் அங்கே வந்துவிட்டவர்கள் அல்ல என்பது உண்மை. அவர்களுடைய வீடுகள் கொளுத்தப்பட்டுவிட்டதால் அவர்களுக்குக் குந்தக் குச்சிலும் இல்லை. மற்றவர்களோ, அவர்களுடைய குடிசைகள் இன்னும் இருந்து வந்தாலும், அவர்களிடம் இருந்தவை முழுதும் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன. மூன்றாவது தரத்தினரோ, தங்கள் கிராமத்தில் இருப்பது ஆபத்து என்று பயந்து வெளியேறிவிட்டவர்கள். ஆகவே, ஒவ்வொருவர் விஷயத்தையும் அதற்கு ஏற்ற வகையில் கவனித்துப் பரிகாரம் தேடி, இனி ஆபத்து இல்லை என்ற நம்பிக்கையுடன் அம்மக்கள் திரும்பவும் கிராமங்களுக்குப் போக உதவிபுரிய வேண்டியது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்.

"இதற்கு அவசியமான ஒரு நிலைமையை உண்டாக்குவதற்கு முன்னால், அகதிகள் தங்கள் குடும்பத்தினர் எல்லோரையும் அழைத்துக்கொண்டு கிராமங்களுக்குப் போய்விட்டாலன்றி, பங்கீட்டில் உணவு கொடுத்து வருவதை அரசாங்கம் நிறுத்திவிடுவது சரியல்ல. எந்தக் கஷ்டங்களுக்கும் துணிந்துவிட வேண்டும் என்று அகதிகள் எதிர்பார்க்கப்படுவார்களானால், தங்கள் வீடு வாசல்களுக்கும் திரும்பிப் போய்விடுவதில் சாவுக்கும் அவர்கள் துணிந்துவிடுவார்களாயின், அப்பொழுது அரசாங்கத்தின் உதவி தேவையில்லை. விவேகமுள்ள அராஜகத்தின் ஒரு நிலையாக அது இருக்கும். அப்பொழுது, ஒவ்வொருவரும் எவ்வளவு பெரிய ஆபத்துக்கள் வந்தாலும் தம் சொந்த பலத்தைக் கொண்டே தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுபவராக இருப்பார். ஆனால், விஷயங்கள் இன்று இருந்துவரும் நிலைமையில் சமூக சேவை சம்பந்தமான அவசியமான அநேக வேலைகளை அரசாங்கத்தின் ஸ்தாபனங்களே செய்ய வேண்டியிருக்கின்றன.

## போதிய பாதுகாப்பு வேண்டும்

"திரும்பும் அகதிகளுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கவேண்டும். அதோடு அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் வேலைகளை மீண்டும் தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கும் இடங்களில் அதற்கு வேண்டிய சூழ்நிலையையும் உண்டாக்கவேண்டும். இதற்கு வேண்டிய காரியங்கள் செய்யப்படாமலிருக்கும் வரையில் அகதிகளின் நிவாரணத்திற்கான உதவிகள் தொடர்ந்து நடந்து வர வேண்டும்.

"ஆனல், பொதுஜன தரும ஸ்தாபனங்களின் விஷயம் முறறிலும் வேருனதாகும். பொதுஜன உதவியைக்கொண்டே யாரும் வாழ்ந்துகொண்டிருப்பது என்பது தவருகும். தென்னுப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் நடந்துகொண்டிருந்த காலத்தில், சத்தியாக்கிரகிகளுக்கு வேண்டிய செலவுகளுக்காகப் பெருந்தொகையைப் பொது ஜனங்கள் கொடுத்தார்கள். டிரான்ஸ்வாலில் லாலிக்கு அருகில், சத்தியாக்கிரகிகளின் குடும்பங்களும் அவர்களை எதிர்பார்த்து வாழ்ந்தவர்களும் இருப்பதற்காக டால்ஸ்டாய் பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. அதில் அவர்கள் தங்களுடைய ஜீவனத்திற்காகத் தங்களால் இயன்ற வரையில் வேலை செய்தார்கள். இதனல், சத்தியாக்கிரகப் போராட்டத்தின் முடிவில் ஏராளமான தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட சத்தியாக்கிரக ஸ்தாபனத்தினல் முடிந்தது.

"இங்கே வேலை செய்துவரும் தரும ஸ்தாபனங்கள் அதே கொள்கையை அனுசரிக்க வேண்டும். யோக்கியமான உழைப்பு இல்லாமல் ஒரு வேளை உணவைச் சாப்பிடுவதும் மானக்கேடானது என்பதை ஒவ்வொருவருக்கும் தெளிவாகச் சொல்லிவிடவேண்டும். உழைப்பதில் இருக்கும் வெறுப்பை நாம் போக்கிக்கொண்டு விடுவோமானல், எதிர்பாராது ஏற்பட்டுவிட்ட நம் கதிக்கு ஏற்ற வகையில் நம்மை மாற்றிக்கொண்டு விடுவதாயின், அச்சமின்மையை அடைந்துவிடுவதில் நாம் வெகு தூரம் முன்னேறியவர்களாகி விடுவோம். இதனல், நமது தேசீய நடத்தையையும் அதிக அளவு மேன்மைப்படுத்திக் கொண்டவர்களாவோம்.

"அகதிகளுக்கு இன்னுமொன்றும் துணிந்து கூறுவேன். ஏழைகளாக இருந்தாலும், பணக்காரர்களாக இருந்தாலும், அரசாங்கத்தினிடமிருந்து உதவி பெற்று வாழ்வது மனிதனுக்கே கௌரவக் குறைவானது என்று தாங்கள் கருதுவதாக அதிகாரிகளிடம் அவர்கள் சொல்லிவிட வேண்டும். ஏழையானலும் பணக்காரராயினும், இவர்களிடம் இப்பொழுது மிஞ்சியிருப்பது எதுவுமே இல்லை. உணவு, துணி, இருக்க இடம், வைத்திய உதவி ஆகியவை இவர்களுக்குத் தேவை. வாழ்க்கைக்கு முக்கிய தேவைகளான இவற்றிற்கு அரசாங்கம் வழி செய்யவேண்டுமென்று கேட்க இவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனல்.

ஆரோக்கியத்துடனிருக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும், சிறுவர் சிறுமியரும், தங்கள் சக்திக்கு முடிந்த வரையில் உழைக்காமல் அரசாங்கத்தின் உதவியை ஏற்றுக்கொண்டிருப்பது, சமூகத்திலிருந்து திருடுவதாகவே ஆகும். ஆகையால், இவர்களால் செய்ய முடிந்த, சமூகத்திற்கும் பயனுள்ளதான வேலைகளை இவர்கள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும்.''

டிசம்பர் 24–ஆம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியதாவது:

''குற்றங்களைச் செய்தவர்கள் தாராளமாக நடமாடிக்கொண்டிருப்பதால், பயத்தை விட்டொழித்துவிட மக்களால் முடியாமலிருக்கிறது என்ற புகார்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. இது உண்மையாக இருக்கலாம். என்றாலும், துணிந்து தங்கள் வீடு வாசல்களுக்கு இவர்கள் திரும்பிவிட வேண்டும் என்பதே இப்பொழுதும் நான் சொல்லும் புத்திமதி. திரும்பவும் வீடுகளைக் கட்டிக்கொள்ளுவதற்கு அரசாங்கம் கொடுக்கும் பணம், எந்தக் குடிசையையும் போட்டுக்கொள்ளுவதற்குப் போதுமானதாக இல்லை என்றும் பலர் புகார் கூறுகிறார்கள். அகதிகள் திரும்பவும் கிராமங்களுக்குப் போய்விடும்படிச் செய்வது என்பதில் அரசாங்கம் உறுதியுடனிருக்கிறது. ஆகையால், கொடுக்கும் உதவித் தொகையை அதிகமாக்குவார்கள் என்றே நான் நிச்சயமாக நம்புகிறேன்.

"ஆனால், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைத் தாங்களே சமாளித்துக் கொண்டு விடுகிறவர்களாக அகதிகள் இருக்க வேண்டும் என்றுதான், என்னைப் பொறுத்தவரை, நான் கருதுகிறேன். தனக்கு என்று பிச்சை எடுக்காமல், தன் பாதுகாப்பிற்கு வெளியாரை எதிர்பார்க்காமல் இருப்பவரையே நான் கௌரவிப்பேன். இதற்காக யாராவது என்னை நம்பியிருப்பாரானால் அவர், பயனில்லாததை நம்பியிருப்பவரே ஆவார். உள்ளிருக்கும் பலத்தை, அதாவது கடவுளை நம்புவதனாலேயே உண்மையான பாதுகாப்பு ஏற்படும். கொடுமைக்கு ஆளாகிறவர்கள், அக்கொடுமைக்கு உடன்பட்டுவிடும் போதுதான் கொடுமை வளருகிறது என்ற ரகசியத்தை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டும். உள்ளத்திலிருந்து பயத்தைப் போக்கிக்கொண்டு விடுவீர்களாயின், யாரும் உங்களைக் கொடுமைப்படுத்த மாட்டார்கள்; கொடுமைப்படுத்தவும் முடியாது."

## நோவாகாலியில் தங்கும் நோக்கம்

டிசம்பர் 23–ஆம் தேதி திங்கட்கிழமை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியதாவது:

"வங்காள முஸ்லிம் லீக் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரை உண்டாக்க வேண்டும் என்பதே என் நோக்கமாம். நான்

தொடர்ந்து நோவாகாலியில் இருந்துகொண்டு வருவது ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே சிநேக பாவம் மீண்டும் ஏற்படுவதற்கு இடையூருக இருந்து வருகிறதாம். இத்தகைய அபிப்பிராயத்தை எனக்குக் கடிதம் எழுதியிருக்கும் சிலர் தெரிவித்திருப்பதோடு, இதே கருத்து சில பத்திரிகைகளிலும் வெளியாகி இருக்கிறது. நோவாகாலியில் விரிவான வகையில் சத்தியாக்கிரக இயக்கத்தை நடத்துவதற்கு நான் ரகசியமாகத் திட்டம் போட்டுவருகிறேன் என்று கிளம்பிய வதந்தியை இரு தினங்களுக்கு முன்னல் மறுத்தேன். ரகசியத்தில் நான் எதையும் செய்யமாட்டேன் என்பதை முன்பே கூறியிருக்கிறேன். ரகசியம், பொய்மை ஆகியவைகளை மேற்கொண்டுவிட்டால் சத்தியாக்கிரகம், துராக்கிரகமாகத் தாழ்ந்து போய்விடும்.

"என்மீது கூறப்படும் இரண்டாவது குற்றச்சாட்டுக்கு இன்று பதில் சொல்லுவது அவசியம் என்று கருதுகிறேன். இந்தக் குற்றச்சாட்டு என்ன என்பதை ஆரம்பத்தில் கூறியிருக்கிறேன். ஒருவருக்கொருவர் விரோதிகளாகியிருக்கும் இரு சமூகங்களுக்கு மிடையே உள்ளத்தில் ஒற்றுமையை உண்டாக்கும் ஒரே காரியத்திற்காகவே நான் வங்காளத்திற்கு வந்திருக்கிறேன் என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த நோக்கம் திருப்திகரமாக நிறைவேறிவிடுமானல், அதற்குப் பிறகு நான் இங்கே தங்குவதை நீடிப்பதற்குக் கொஞ்சமும் அவசியம் இல்லை.

"வங்காளத்திலிருக்கும் லீக் அரசாங்கத்திற்குச் சங்கடத்தை உண்டாக்குவது, என்றும் எனது நோக்கமாக இராது. இதற்கு மாருக, மந்திரிகளுக்கும், அதிகாரிகளுக்கும், எனக்குமிடையே நல்ல உறவு இருந்து வருகிறது. நான் இங்கே செய்து வரும் சமாதான வேலையை அவர்கள் ஆதரிக்கிருர்கள் என்பதுதான் அவர்களிடமிருந்து நான் கொண்டிருக்கும் அபிப்பிராயம். நான் இங்கே இருப்பது எவருக்காவது சங்கடத்தை உண்டாக்குகிறது என்பதற்கான அறிகுறி எதையும் நான் இதுவரை காணவும் இல்லை. நான் தவறு செய்கிறேன் என்று அரசாங்கம் நிச்சயமாக அறிந்தால், என்னுடைய தவறை எனக்கு எடுத்துக் காட்டும்படி மாஜிஸ்டிரேட்டிடமும், போலீஸ் சூப்பரின்டெண்டிடமும் அரசாங்கம் சொல்லியிருக்கலாம். அப்படி எதையும் அவர்கள் இதுவரை சொல்லவில்லை. என்னளவில் நான் ஏதாவது தவறு செய்துவிட்டதாக நிச்சயமாக அறிவேனுயின், நான் இங்கிருந்து போய்விடுவேன்.

"மற்ற இடங்களில் நான் செய்தாகவேண்டிய வேலைகள் அதிகமிருக்கின்றன; அவற்றை நான் கவனித்தாக வேண்டியும் இருக்கிறது. இயற்கை வைத்திய சிகிச்சை ஆராய்ச்சி செய்யப்படும் உருளி-கஞ்சன், சேவா கிராமம் ஆகியவை இருக்கின்றன. டில்லி வேறு இருக்கிறது. அங்கேயும் நான் கொஞ்சம் சேவை செய்ய முடியும். என்னைக் கலந்தாலோசிப்பதற்காக, எங்கோ தூரத்தில் ஒரு முடுக்கில் இருக்கும் இந்த இடத்திற்கு வரும்

சங்கடத்தைத் தலைவர்களுக்குக் கொடுக்காமலிருக்கவும் நான் விரும்புகிறேன். ஆனல், நான் இங்கே மேற்கொண்டிருக்கும் வேலை, அகில இந்தியாவுக்கும் மிக மிக முக்கியமானது என்று நான் உறுதியாக நம்புகிறேன். நான் இப்பொழுது செய்துவரும் இப்பணியில் வெற்றிபெற்றுவிடுவேனுயின், எதிர்கால இந்தியாவுக்கு இதனல் மகத்தான நன்மைகள் உண்டாகும். அகிம்சையில் இருக்கும் நம்பிக்கையைச் சோதிப்பதாக இது இருப்பதால், உலகத்தின் எதிர்கால அமைதிக்குக்கூட இது அதிகப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் கூறுவேன்.

''பீகாரில் நடந்திருக்கும் அட்டூழியங்களைக் குறித்து பீகார் மாகாண முஸ்லிம் லீக் தயாரித்திருக்கும் அறிக்கையின் பிரதி ஒன்றை எனக்கு அனுப்பியிருக்கிருர்கள். அதை நான் கவனமாகப் படித்துப் பார்த்தேன். சில இடங்களில் மிகைபடுத்திக் கூறப் பட்டிருக்கிறது என்றே கருதினேன். என்றுலும், அந்த அறிக்கையின் அடிப்படையில் விசாரித்து வருகிறேன். பீகாரில் எவ்வளவோ நடந்திருக்கின்றன; அவை மிருகத்தனமானவை, கடுமையாகக் கண்டிக்கத்தக்கவை அவை என்பது மாத்திரம் நிச்சயமான உண்மை. மிகைபடுத்திக் கூறப்படுவது, உண்மையில் நடந்திருப்பதன் கோரத்தை மங்கலாக்கிவிடுகிறது. அங்கே அமைதி உண்டாகும்படி செய்யப்பட்டிருக்கிறது என்று எனக்கு உறுதியளிக்கிருர்கள். அந்த உறுதிமொழியின் பேரிலேயே நான், வழக்கமாகச் சாப்பிடும் ஆகாரத்தைச் சாப்பிட்டு வருகிறேன்.

''தூரத்தில் இருந்துகொண்டே பீகாரில் என்னுடைய சொந்த செல்வாக்கைச் சரியானபடி உபயோகிக்க முடியும் என்பதுதான் நான் பீகாருக்குப் போகாமல் இருப்பதற்குக் காரணம். ஆனல், லீகின் அறிக்கையில் கண்டிருக்கிறபடி அங்கே காரியங்கள் தொடர்ந்து நடந்துகொண்டு வருகின்றன; என் நண்பர்கள் எனக்குத் தவருன உறுதிமொழியைக் கூறி நான் தவருக எண்ணிக்கொள்ளும்படி செய்து விட்டார்கள் என்று சந்தேகிப்பதற்கு எனக்கு ஏதாவது காரணம் இருந்துவிடுமானல், பிறகு நான் இருக்க வேண்டிய இடம் நிச்சயமாக அந்த மாகாணமாகவே இருக்கும். இப்பொழுதுள்ள இந்த உடலில் இருக்கும் உயிர் முடிந்துவிட்டது, நான் வாழும் நாட்டில் இனி எனக்கு இடமில்லை என்றே ஆகும் என்பதையும் அப்பொழுது நான் ஒப்புக்கொண்டுவிடுவேன்.

"ஆனல், ஓர் எச்சரிக்கையைச் செய்யாமல் நான் இருப்பதற்கில்லை. பொதுஜனத் தலைவர்களுக்கு மிகக் கடுமையான பொறுப்பு இருக்கிறது என்பதே அது. இவர்கள் சொல்லுவதை, சூதுவாதறியாத மக்கள் நம்பிக்கொண்டு விடுவார்கள். இதன் விளைவுகள் யாவை என்பதும் இவர்களுக்குத் தெரியும்.

காங்கிரஸைச் சேர்ந்த தலைவர்களாயினும், முஸ்லிம் லீக் தலைவர்களாயினும் எல்லோருக்குமே இந்த எச்சரிக்கையைச் செய்கிறேன்."

—'ஹரிஜன்' – 19—1—1947

# 13

# நான் மேற்கொண்டிருக்கும் பணி

டிசம்பர் 26-ஆம் தேதி பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி பேசுகையில் கூறியதாவது:

"பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறியே ஆக வேண்டும் என்பதில் என் மனத்தில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஆனால், இந்தியர் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டிருக்கும் அளவுக்கு முட்டாள்தனமாக நடந்து வருவார்களானால், இந்தியா முழுவதன் கதியும் அப்பொழுது எதுவாக இருக்கும் என்பதையும் நான் ஊகித்துக்கொள்ள முடிகிறது. இந்தியா, ஐக்கிய நாடுகள் சங்கத்தின் கீழ் வைக்கப்பட்டுவிடக் கூடும். அதனால் நமக்கு ஒருவரல்ல, பலர் எஜமானர்களாகிவிடுவார்கள். எனவே, சுதந்திரம் என்பதும் இல்லாது போய்விடும்.

"வங்காளத்தில் நான் மேற்கொண்டிருக்கும் பணி மிகவும் கஷ்டமானது. இங்கே, முன்னால் என்னை தனது நண்பன் என்று கருதி வந்த சமூகம், இப்பொழுது என்னை விரோதி என்று எண்ணுகிறது. நான் முஸ்லிம்களின் உண்மையான நண்பன் என்பதை நிரூபிக்கவே முயன்று வருகிறேன். ஆகையால், முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கும் ஓர் இடத்தை, இப்பெரும் சோதனைக்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறேன்.

"என் பணி நிறைவேறுவதற்கு, கிராமப் புறங்களில் மாத்திரமே நான் பிரயாணம் செய்து வருவதே போதுமானது. வெளியிலிருந்து வரும் ஊழியர்கள் என் ஆலோசனையையும், வழிகாட்டும்படியும் கேட்டுவிடுவதால், நான் மேற்கொண்டிருக்கும், இப்பொழுதே அதிக சிக்கலானதாக இருக்கும் வேலையின் சிக்கலைத் தீர்ப்பதற்கு எனக்கு உதவி செய்வதற்குப் பதிலாகப் புதிய பிரச்னைகளை உண்டாக்கி விடுகிறார்கள். நோவாகாலி மக்களுக்குச் சேவை செய்வதில் உண்மையாகவே சிரத்தையுள்ளவர்கள், வங்காள மந்திரிகளை நேரில் அணுகி, தங்களுடைய வேலை முறையை அவர்களுக்கு அறிவித்து, அதைச் செய்து கொண்டு போவதற்கு அம்மந்திரிகளின் அனுமதியைப் பெறுவதோடு அத்திட்டத்திற்கு அவர்கள் அங்கீகாரத்தையும் பெறுவார்களானால்,

தவறான அபிப்பிராயத்தை எவ்வளவோ போக்கிக்கொண்டுவிட முடியும்."

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருக்கும் அகதிகளுக்கு வைத்திய உதவி செய்வதற்கென்று பம்பாயிலிருந்து வந்திருக்கும் சில டாக்டர்களுக்குக் காந்திஜி நேற்று சில யோசனைகளைக் கூறினர். நோவாகாலியில் சேவை செய்ய வருவதற்குத் தயாராக இருப்பதாகச் சிலர் காந்திஜிக்குக் கடிதம் எழுதியிருந்ததோடு தந்தியும் கொடுத்திருந்தார்கள். இவர்களுக்குக் காந்திஜி அனுப்பிய பதிலில், அவர்களெல்லோரும் தாங்கள் இருக்கும் இடத்திற்குச் சுற்றுப்புறங்களிலேயே நிர்மாண வேலைகளைச் செய்து வருவார்களானல், அதுவே லட்சியத்திற்காகச் சிறந்த சேவை செய்ததாகும் என்று கூறியிருந்தார். நோவாகாலியில் சிறந்த வகையில் எப்படி சேவை செய்யலாம் என்று கேட்டிருந்தோருக்குக் காந்திஜி, "நானே இருளில் தடுமாறிக்கொண்டிருக்கிறேன். குருடன் சரியான வழி காட்டியாக இருக்க முடியாது" என்று கூறினர்.

நோவாகாலியில் சேவை செய்யத் தயாராக இருப்பதாகக் கூறி வந்திருந்தோர் சிலரைக் காந்திஜி, "நான் இங்கிருந்து போன பிறகும், அவசியமானல் வாழ்நாள் முழுதும், இங்கிருந்து தொடர்ந்து சேவை செய்துவருவீர்களா?" என்று கேட்டார். ஆனல், இதை உறுதியாகச்சொல்ல அவர்கள் தயங்கினர்கள். அதன் பேரிலே, வேலை செய்ய வரும் ஊழியர்களைக் குறித்துக் காந்திஜி தமது பிரசங்கத்தில் கீழே கண்டவாறு சொன்னர்: "இங்கே வந்து, என் கவனத்தைக் கவரும் வகையில் வேலை செய்ய மாத்திரமே விரும்புகிறர்கள் என்று அவர்கள் தயக்கத்திலிருந்து நான் நம்ப வேண்டியதாகிறது. இப்படிப்பட்டவர்கள் சேவைக்காகச் சேவை செய்வது என்பதில் சிரத்தையுடன் இல்லை."

—'ஹரிஜன்'–26—1—1947

# 14

# இருளில் தவிக்கிறேன்

டிசம்பர் 27-ஆம் தேதி பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது.

"என்னைச் சுற்றிலும் இருள் சூழ்ந்திருக்கிறது என்று நான் கூறியது அநேகருக்கு அதிகக் குழப்பத்தை உண்டாக்குவதாக இருக்கிறது என்று ஒரு நண்பர் என்னிடம் சொல்லிக்கொண்டிருக்கிறர். என்னுடைய வேலை முறையினல் ஒளி ஏற்பட்டு வருகிறது என்றும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் நம்பிக்கை திரும்பவும் மெள்ள ஏற்பட்டு வருகிறது என்று தூரத்திலிருப்பவர்கள்

காண்கிறார்கள் என்றும் அந் நண்பர் எண்ணுகிறார். நண்பரும், அவரைப் போன்று எண்ணுகிறவர்களும் நான் கூறியதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே அவர்களுக்குக் கூறுவேன். இதற்கு முன்னால் நான் என்றுமே சமாளிக்க வேண்டியிராத, அத்தகைய தன்மையுள்ள இருள் இப்பொழுது என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. என்னுடைய அகிம்சை இப்பொழுது முக்கியமான சோதனையில் இருந்து வருகிறது என்பதே உண்மை. லட்சியத்தை அடைந்துவிடுவதற்கு முன்னால், இதில் வெற்றி பெற்றுவிட்டேன் என்று சொல்ல என்னால் முடியாது.

"விடிவதற்கு முன்னால் இரவு அதிக இருட்டாக இருக்கிறது என்பது உண்மை. இதை நானே உணருகிறேன். விடிவதன் ஒளியைத் தூரத்திலிருப்போர் காண முடிந்தாலும், என்னை முழு இருள்தான் சூழ்ந்திருக்கிறது என்றே நான் உணருகிறேன்.

"அநேக ஆண்டுகளுக்கு முன்பு என் நண்பர் ஒருவர், பதஞ்சலின் யோக சூத்திரத்தை எப்பொழுதும் தம் சட்டைப் பைக்குள் வைத்திருப்பார். எனக்கு சமஸ்கிருதம் தெரியாது என்றாலும் அவர் அடிக்கடி என்னிடம் வந்து சில சூத்திரங்களுக்குப் பொருளைக் கேட்டுப் போவார். அந்தச் சூத்திரங்களில் ஒன்றில், அகிம்சை பூரணமாக அமைந்துவிட்டதும் அது, சுற்றிலுமுள்ள விரோத சக்திகளையும் தீமைகளையும் அடியோடு போக்கி விடுகிறது என்று கூறப்படுகிறது. என்னைச் சுற்றிலுமுள்ள பகுதிகளில் அந்த நிலைமை இன்னும் ஏற்பட்டுவிடவில்லை என்பதை உணருகிறேன். ஆகையால், இப்பொழுது நடந்து வரும் சோதனையில் அகிம்சை இன்னும் வெற்றி பெற்றுவிடவில்லை என்ற முடிவுக்குத்தான் நான் வர வேண்டியிருக்கிறது. சுற்றிலும் இருள் சூழ்ந்த நிலையில் இருக்கிறேன் என்று நான் கூறுவதற்கு இதுதான் காரணம்.

"இந்தப் பிரயாணத்தில் மிகக் குறைந்த அளவு சகாக்களுடன் போவது, முஸ்லிம் நண்பர்களின் வீடுகளிலேயே தங்கப் பார்ப்பது என்பது என் திட்டம். என் தேவைகளையெல்லாம் குறைத்துக்கொண்டு விட்டேன். மிகுந்த ஏழைகளாக இருக்கும் கிராமவாசிகளாலும் இந்த என் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட முடியும். முஸ்லிம்களிடம் அன்பையும் நட்பையும் தவிர என் உள்ளத்தில் வேறு எதுவும் இல்லை என்பதை நிரூபிப்பதற்காக, எந்தவிதமான பாதுகாப்புமின்றி போவதையே நான் விரும்புகிறேன்."

—'ஹரிஜன்' - 26—1—1947

# 15

# ஒன்றுபட்டு வேலை செய்யுங்கள்

பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் காந்திஜி கூறியதாவது: "காங்கிரஸ், ஹிந்துக்களின் ஸ்தாபனம் அன்று. மற்ற சமூகங்களின் நன்மையைக் கவனிக்காமல் அது ஹிந்துக்களின் நன்மைக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கவும் இல்லை."

வந்திருந்த தலைவர்களைக் கூட்டத்தினருக்கு அறிமுகப் படுத்தி வைத்துவிட்டு, காந்திஜி மேலும் கூறியதாவது:

"ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் நோக்கத்திலிருந்தல்ல, ஆனால், முற்றிலும் வகுப்புவாதமற்ற நோக்குடன் பிரச்னைகளை அணுக இங்கே நான் மேற்கொண்டிருக்கும் பணி, சகோதர சமூகங்களிடையே சிநேகத்தை உண்டாக்குவதற்கேயன்றி ஒரு சமூகத்தை இன்னொரு சமூகத்திற்கு எதிராகக் கிளப்பி விடுவதற்காக அன்று. இதுவரையில் அனுசரிக்கப்பட்டு வந்த அகிம்சை, பலவீனர்களின் அகிம்சையாக இருந்து வந்தது. ஆனால், நான் இப்பொழுது மேற்கொண்டிருக்கும் சோதனையில் இருப்பது, பலமுள்ளவர்களின் அகிம்சை. இது வெற்றியடைய வேண்டுமானால், என்னைச் சுற்றிலுமுள்ள இரு சமூகத்தினரிடையேயும் ஒழுக்கச் சூழ்நிலையை உண்டாக்குவதில் இது வெற்றி பெறவேண்டும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும், பயத்தையும் பரஸ்பர சந்தேகத்தையும் போக்கிக்கொண்டு விடும்பொழுதே உண்மையான மன ஒற்றுமை வர முடியும். இவர்கள் மனம் ஒன்றாக இருப்பதால், சச்சரவுக்கு எந்தக் காரணமுமே இருக்கக்கூடாது.

"கிராமப் புனருத்தாரண வேலையைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். கிழக்கு வங்காளம் பொன் விளையும் பூமி. ஆனால், துரதிருஷ்டவசமாக, மக்களின் வாழ்க்கை எவ்விதம் இருக்க வேண்டுமோ அவ்வாறு இல்லை. குளங்களில் இருக்கும் நீர் ஆபாசமாக இருப்பதால் அதில் என் கைகளைக் கழுவுவதற்கும் என்னால் துணிய முடியவில்லை. கிராமங்களும் சுத்தமாகவே இல்லை. பணக்காரர்கள், பணக்காரர்களாக வளர்ந்துகொண்டே போகிறார்கள்; ஏழைகள், இன்னும் அதிக ஏழைகளாகிக் கொண்டிருக்கின்றனர். அவ்விதம் இருக்கும்படி இயற்கை நம்மைக் கட்டாயப்படுத்தி வைத்திருக்கவில்லை. சைத்தான் வைத்திருக்கும் நிலைமையே இது. ஆனால், சமூக ஏற்பாடு சைத்தான் ஏற்பாடாகவே இருந்தபோதிலும், தனிப்பட்டவர்கள் அவ்விதம் இல்லை. தனிப்பட்டவர்கள் தங்கள் ஸ்தாபனங்களை உயர்த்தி, சமத்துவம், தோழமை ஆகியவை சம்பந்தமான புதிய கருத்துகளுக்கு ஏற்ற வகையில் அவற்றை உருவாக்கிக் கொண்டுவிட வேண்டும்.

"என்னைப் பொறுத்த வரையில், 125 வயது வரை உயிரோடு இருக்கவே விரும்புகிறேன். நாட்டு மக்களுக்கும் மனித வர்க்கத்திற்கும் சேவை செய்ய முடிவதற்காக, மருந்துகளின் உதவியைக் கொண்டல்ல, இயற்கை வழியிலேயே அவ்விதம் உயிர் வாழ விரும்புகிறேன்.

"கிராம வாழ்க்கையையும், உங்களுடைய பொருளாதார நிலையையும் விருத்திசெய்துகொள்ளும் உயர்ந்த பணியில் ஈடுபடுமாறு எல்லா ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமத் தொழில்களின் மூலம் பொதுவான நன்மைக்கு ஒன்றுபட்டு வேலை செய்வதை நீங்கள் காணலாம். உங்களிடையே அதனால் ஒற்றுமையும் வளரும். எனது பதினெட்டு அம்ச நிர்மாண வேலைத் திட்டத்தை நிறைவேற்றும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது, கிராமப் புறங்களிலெல்லாம் உயிரளிக்கும் சக்தியாகப் பரவும்."

—'ஹரிஜன்' – 26—1—1947

# 16

# கடவுளுக்குச் சேவை

ஜனவரி 5-ஆம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது:

"நான் இருக்க வேண்டிய இடம் இப்பொழுது பீகாரேயன்றி இங்கே அல்ல என்று எனக்கு அடிக்கடி எடுத்துக் கூறப்படுகிறது. பீகாரில் இன்னும் அதிக மோசமான காரியங்கள் நடந்து வருகின்றன என்றும் சொல்லுகிறார்கள். பீகாரிலிருக்கும் பொதுஜன அரசாங்கத்துடன் நான் நெடுகக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும், நான் இங்கே இருந்தபடியே சாத்தியமான என் எல்லாச் செல்வாக்கையும் உபயோகித்து வருகிறேன் என்பதையும் நீங்கள் அறிய வேண்டும். ஆனால், நோவாகாலியில் என் வேலை முற்றிலும் வேறான வகையில் இருப்பதால் இங்கிருந்து போய்விட நான் விரும்பவில்லை. ஹிந்துக்களுக்கோ அல்லது வேறு எந்தச் சமூகத்தினருக்கோ நான் நண்பனாக இருப்பதைப் போன்றே, முஸ்லிம்களுக்கும் நான் நண்பன் என்பதை அவர்களுடன் வசித்து நான் நிரூபிக்க வேண்டும். தூரத்திலிருந்துகொண்டோ, வார்த்தைகளினாலோ இதைச் செய்துவிட முடியாது.

"நேற்று என்னிடம் வந்த ஒரு பீகார் மந்திரியும், பொறுப்பு வாய்ந்த பல அதிகாரிகளும், தாங்கள் அறிந்த எல்லா உண்மை

களையும், எதையும் மறைக்காமல் என்னிடம் சொன்னார்கள். மோசமான ஒரு வார காலத்தில் மிருகத்தனமான காரியங்கள் அங்கே நடந்துவிட்டன என்பதை ஒப்புக்கொண்டார்கள். இதற்காகத் தங்கள் மீது சுமத்தும் நியாயமான கண்டனங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளவும் தாம் தயாராயிருப்பதாகவும் கூறினர். பொதுஜனங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் தங்களுக்குள்ள பொறுப்பை அவர்கள் அறிவார்கள். உடந்தையாக இருந்தனர், மனித சாத்தியமானதையெல்லாம் செய்யத் தவறிவிட்டார்கள் என்று தங்கள் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை மறுக்கிறார்கள். தாங்கள் நிரபராதிகள் என்பதை நிரூபிப்பதற்கு எந்தக் கஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ளவும் தாங்கள் தயார் என்கின்றனர். அவர்கள் மீது முஸ்லிம் லீக் கூறிய குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லவே அவர்கள் முயன்றனர். என்னைப் பொறுத்த வரையில், பீகார் விஷயத்தில் எனக்குத் திருப்தி ஏற்படும் வரையில், மனித சாத்தியமான எல்லாம் செய்யப்படும் வரையில், நான் அயர்ந்து இருந்துவிடமாட்டேன் என்று இக்கூட்டத்திலிருப்போருக்கு உறுதி கூறுகிறேன்.

“பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும் ஹிந்துக்கள், முஸ்லிம்களின் தொகை குறைந்துகொண்டே போகிறது. ஒரு நாளைக்கு நான் பேசுவதைக் கேட்க யாருமே இருக்கமாட்டார்களோ என்றுகூட எண்ணுகிறேன். அப்பொழுதும்கூட, மனஞ்சோர்ந்து நான் மேற்கொண்டிருக்கும் பணியைக் கைவிட்டு விடுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. அப்பொழுது என் ராட்டையைத் தூக்கிக்கொண்டு கிராமம் கிராமமாகச் சுற்றி வருவேன். என்னளவில் இது கடவுளுக்குச் செய்யும் சேவை. தன்னலமற்ற மனத்துடன் மேற்கொள்ளும் அத்தகைய வேலை, என்னைச் சுற்றிலுமுள்ளவர்களுக்கு அதுவே தெளிவாக விளங்கிவிடுவதாக இருக்கும். கிராமம் கிராமமாகப் போய், கிராமங்களிலுள்ள குட்டைகளைச் சரியானபடி சுத்தம் செய்துகொள்ளுவது எப்படி என்பதைச் சொல்லிக் கொடுத்து, கிராமவாசிகளின் வாழ்க்கையைச் செழுமைப்படுத்தும் கலையையும் தொழிலையும் போதித்து வரும் ஒரு ஊழியர், தன்னை வெறுப்பதற்குப் பதிலாகத் தான் இவர்களுடன் இருக்க வேண்டும் என்று கிராம மக்கள் எண்ணும்படி செய்வதாக இருக்க வேண்டும்.

“அகதிகளில் அதிகம் பேர் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் குடியமைக்கும் பிரச்னை அதிகக் கஷ்டமாகி வருகிறது என்று இப்பொழுதுதான் எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. எந்தக் கஷ்டத்தையும் சமாளிக்கத் துணிந்து தங்கள் கிராமங்களுக்குச் சீக்கிரம் திரும்பிப் போய்விட வேண்டும் என்பதுதான் அகதிகளுக்கு நான் கூறும் யோசனை. நாசமாக்கப்பட்டுவிட்ட தங்கள் வீடுகளையும், தங்கள் சொந்த வாழ்க்கையையும் தங்களுடைய உழைப்பைக்கொண்டே

திரும்ப அமைத்துக்கொள்ளுவது என்று அகதிகள் துணிந்து விட வேண்டும். அவசியமான உதவிகளையெல்லாம் அரசாங்கமும் செய்ய வேண்டும். அகதிகளும் உதவிக்கு அரசாங்கத்தை நாட வேண்டும். நிவாரண சங்கங்கள் பல, அகதிகளுக்குப் பணத்தினாலும் மற்றவைகளினாலும் உதவி செய்வதற்குத் தயாராயிருக்கின்றன என்பதை அறிவேன். மக்களினாலேயே அமைக்கப்பட்டிருக்கும் ஓர் அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையை நிவாரண சங்கங்கள் செய்ய முன்வருவானேன்? சீக்கிரமாகவோ, திருப்தியான வகையிலோ உதவி செய்ய அரசாங்கம் தவறிவிடும்போதுதான், இதைச் சொல்லி, மக்களைத் திரும்பவும் குடியமைப்பதற்குப் பொதுஜன ஸ்தாபனங்களிடமிருந்து மேற்கொண்டும் வேண்டியிருக்கும் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், இந்த ஏற்பாடுகளெல்லாம் என்ன வகையில் அமைவதாக இருந்தாலும், ஆபத்துக்களும் கஷ்டங்களும் இருந்தாலும், தங்கள் வீடு வாசல்களுக்குத் திரும்பிப் போய்விட அகதிகள் தயாராக இருக்க வேண்டும்."

—'ஹரிஜன்' - 26—1—1947

# 17

# கடவுளே காப்பார்

சண்டிபூர் - சந்திரிகான் கிராம சேவா சங்கத்தின் உறுப்பினர்கள் ஜனவரி 6-ஆம் தேதி காந்திஜியைச் சந்தித்துப் பேசினர். "பெரும்பான்மை சமூகத்தினரின் ஆக்கிரமிப்புப் புத்திப் போக்கை சரிக்கட்டிக்கொண்டு போவதற்குச் சங்கம் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டதற்குக் காந்திஜி கூறியதாவது: "சரிக்கட்டிக் கொண்டு போவது என்ற சொல் துர்நாற்றமுடையது. மானத்தை இழந்துவிட்டு சரிக்கட்டிக் கொண்டு போவது என்பது எதிலும் கூடாது. பயத்தை விட்டொழித்து விடுவதும், என்னவாயினும் நியாயமானதைச் செய்வது என்பதுமே உண்மையில் சரிக்கட்டிக்கொண்டு போவதாகும்."

தாற்காலிகமான குடிசைகளைப் போட்டுக்கொள்ளுவதற்குக் கூடப் போதுமானதாக இல்லாமல் அரசாங்கம் கொடுக்கும் பண உதவி இருந்தாலும், அரசாங்கத்தின் பண உதவியை அகதிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்று கேட்டதற்குக் காந்திஜி கூறியதாவது: "தாற்காலிகமாக மிகக் குறைந்த அளவு குடிசை போட்டுக்கொள்ளுவதற்கு எவ்வளவு தொகை வேண்டும் என்று அகதிகள் யோக்கியமாகக் கணக்குப் போட வேண்டும். அரசாங்கம் கொடுக்கும் உதவி, அகதிகளின் அடிப்படைத் தேவைக்குப் போதுமானதாக இல்லை என்றால், அப்பொழுது அந்தப் பணத்தை வாங்கிக்கொள்ள அகதிகள் மறுத்துவிட

வேண்டும். ஆனால், அந்நிலைமையில் அவர்கள் திறந்த வெளியிலேயே தங்க நேருவதாக இருந்தபோதிலும், அகதிகள் கிராமங்களுக்குத் திரும்பிவிட வேண்டும். மனத்தில் எந்தத் துவேஷமும் இல்லாத வகையில் இதைச் செய்ய வேண்டும்."

**கே:** திரும்பக் குடியமைக்கும்போது, ஆபத்தில்லாமல் இருப்பதை முன்னிட்டு, சிறுபான்மை சமூகத்தினரில் போதிய தொகையினர் ஒரே இடத்தில் தங்கும்படிச் செய்ய வேண்டுமா?

**ப:** இவ்விதம் மக்களை ஓர் இடத்தில் சேர்த்து வைப்பதென்பது எண்ணவும் முடியாத ஒரு யோசனை. இதனால் நாடு முழுவதையும் விரோதமானவர்களைக் கொண்ட பகுதிகளாகப் பிரித்து வைப்பதாகும். ஒரு வேளை இப்பகுதிகள் ஒரு வகை ஆயுத அமைதியை அனுபவிப்பதாகவும் ஆகலாம். இதில் மனிதத் தன்மையுள்ளவர்கள் செய்யக்கூடிய காரியம் என்னவென்றால், எந்த வகுப்பினராக இருந்தாலும், சிறுவராயினும் வயதானவராயினும், கடவுளிடமிருந்து வருவதான உள் பலத்திலிருந்து பாதுகாப்பைப் பெறுவதுதான்.

**கே:** பாதிக்கப்பட்ட பகுதிகளில் விஷமிகள் தாராளமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அகதிகளின் பாதுகாப்புக்கு என்ன ஏற்பாடுகளைச் செய்யலாம்?

**ப:** விஷமிகள் இல்லாத பகுதி இன்று உலகத்தில் எதுவுமே இல்லை. எனவே, கிராமவாசிகள் தங்கள் பாதுகாப்புக்குத் தங்களுடைய சொந்த பலத்தையே நம்பியிருக்க வேண்டும். அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பை அளிக்கக்கூடிய பலம், உள்ளத்தின் பலமே. தம்மைப் பாதுகாப்பவர் கடவுளே என்று இருப்போருக்கு, விஷமிகள் நடமாடிக்கொண்டிருந்தால் என்ன? தமக்கு எது சரியானது என்று தோன்றுகிறதோ, அதை மக்கள் செய்ய வேண்டும்; மற்றதையெல்லாம் கடவுளுக்கு விட்டுவிட வேண்டும்.

—'ஹரிஜன்' – 26—1—1947

# 18

# யாத்திரையின் நோக்கம்

ஜனவரி 6–ஆம் தேதி திங்கட்கிழமை காந்திஜிக்கு மௌன விரத தினமாகையால் அவர், பிரார்த்தனைக் கூட்டத்தில் படிக்கும்படிச் செய்ய கீழ்க்கண்ட பிரசங்கத்தை எழுதினார். அது 'ஹரிஜன்' பத்திரிகையின் வங்காளிப் பதிப்பில் 12–ஆம் தேதி பிரசுரமாயிற்று. பிறகு அதை ஸ்ரீ நிர்மல குமார போஸ் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அந்தப் பிரசங்கமே கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

எனது வார மௌன விரதம் இரவு 7 மணிக்கு முன்னல் முடியாததால், இந்தப் பிரசங்கத்தை எழுதியிருக்கிறேன். நேற்று நான் ஆரம்பித்த யாத்திரை, மத்தியில் எந்தத் தடையுமின்றி முடிவு வரையில் நடந்து, நோக்கம் நிறைவேறுவதில் வெற்றியும் அடைய வேண்டும் என்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். நீங்களும் என்னுடன் சேர்ந்து பிரார்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனல், அப்படி நீங்கள் பிரார்த்திப்பதற்கு முன்னல் யாத்திரையின் நோக்கத்தை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நான் ஒரே ஒரு நோக்கத்தையே கொண்டிருக்கிறேன். அது மிகவும் தெளிவான ஒன்று. ஹிந்து, முஸ்லிம்களின் உள்ளத்தைக் கடவுள் தூய்மைப் படுத்த வேண்டும்; இவ்விரு சமூகங்களும் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் பயத்தையும் சந்தேகத்தையும் விட்டொழித்து விடவேண்டும் என்பதுதான் அந்த நோக்கம். தயவு செய்து இதை என்னுடன் சேர்ந்து பிரார்த்தியுங்கள். 'கடவுளே நம் இரு சமூகத்தினருக்கும் தெய்வம். அவர் நமக்கு வெற்றி அளிப்பார்' என்றும் கூறுங்கள்.

நீங்கள் என்னைப் பின்வருமாறு கேட்கலாம்: இக்காரியத்திற்காக ஒரு யாத்திரையை மேற்கொள்ள வேண்டியது ஏன் அவசியமாகிறது? அல்லது, உள்ளத்தில் தானே தூய்மையாக இல்லாத ஒருவர், மற்றவர்களைத் தூய்மையாகுமாறு எப்படிக் கேட்கலாம்? அல்லது, தானே பயங்காளியாக இருக்கும் ஒருவர், மற்றவர்களுக்குத் தைரியத்தை அளிக்க முடியுமா? ஆயுதம் தாங்கியவர்களின் பந்தோபஸ்தில் போய்க்கொண்டிருக்கும் ஒருவர், தங்களிடமிருக்கும் ஆயுதங்களை எறிந்துவிடும்படி மற்றவர்களை எப்படிக் கேட்க முடியும்? இந்தக் கேள்விகளெல்லாம் பொருத்தமானவையே. என்னை இக்கேள்விகள் கேட்டிருக்கிருர்கள்.

இவற்றிற்கு என் பதில் இதுதான்: யாரிடத்திலும் எனக்குக் கொஞ்சமேனும் கெட்ட எண்ணம் இல்லை என்பதை, என் பிரயாணத்தின்போது, என் சக்திக்கு முடிந்த வரையில், கிராமவாசிகளுக்கு உறுதியாகக் கூற வேண்டும் என்று விரும்புகிறேன். யார் என்னை நம்பவில்லையோ அவர்களுடன் வாழ்ந்து, அவர்களிடையே நடமாடுவதன்மூலம் மாத்திரமே நான் இதை நிரூபிக்க முடியும். மூன்ருவது கேள்வி, நான் பதில் சொல்லுவதற்குக் கொஞ்சம் கஷ்டமான கேள்வியே என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஏனெனில், ஆயுதப் படையின் பாதுகாப்பில்தான் நான் போய்க்கொண்டிருப்பவனுக இருக்கிறேன். என்னைச் சுற்றிலும் ஆயுதம் தாங்கிய போலீஸும் ராணுவமும் இருந்து வருகின்றன; எல்லாவித அபாயங்களிலிருந்தும் என்னைப் பாதுகாப்பதற்கும் அதிக உஷாராக இருந்து வருகின்றன. இது, அரசாங்கம் செய்திருக்கும் ஏற்பாடாகையால் இதில் நான் எதுவும் செய்ய முடியாதவனுக இருக்கிறேன். அரசாங்கம், மக்களுக்குப்

பொறுப்பு வாய்ந்ததாக இருப்பதால், எனக்கு போலீஸ், ராணுவப் பாதுகாப்பை வைக்க வேண்டியது தன் கடமை என்று கருதுகிறது. அரசாங்கம் இவ்வாறு செய்வதை நான் எப்படி தடுக்கமுடியும்? இப்படிப்பட்ட நிலைமையில், ‘கடவுள் பாதுகாப்பைத் தவிர வேறு எந்தப் பாதுகாப்பும் எனக்கு வேண்டியதில்லை’ என்று சொல்லால் மாத்திரமே நான் கூற முடியும். நான் சொல்லும் இதை நீங்கள் நம்புகிறீர்களா என்பதும் எனக்குத் தெரியாது. ஒருவர் மனத்தில் இருப்பதைக் கடவுள் ஒருவரே அறிவார். கடவுள் பக்தியுள்ள ஒருவரின் கடமை, அவருடைய அந்தராத்மா காட்டும் வழியில் நடந்துகொண்டு போவதுதான். அவ்வாறே நான் நடந்து வருகிறேன் என்று சொல்லுவேன்.

என்னுடன் சீக்கியர்கள் வருகிறார்களே, அதற்காவது எந்த விதமான காரணமும் இல்லையல்லவா என்று இப்பொழுது நீங்கள் கேட்கலாம். அவர்களை என்னுடன் வருமாறு அரசாங்கம் ஏற்பாடு செய்யவில்லை. என்னுடன் வந்துகொண்டிருப்பதற்கு இவர்கள் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை முதலில் உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன். இங்கே சச்சரவை உண்டாக்குவதற்காக அவர்கள் வரவில்லை. இதற்குச் சாட்சியாக, அவர்கள் எப்பொழுதும் வழக்கமாக வைத்திருக்கும் கிர்பான்களும் இல்லாமல் வந்திருக்கிறார்கள். இரு சமூகத்தினருக்கும் பாரபட்சமின்றி சேவை செய்வதற்கே இவர்கள் வந்திருக்கின்றனர். இந்திய தேசீய ராணுவத்தின் சிப்பாய்களுக்கு, நேதாஜி சொல்லிக் கொடுத்த முதல் பாடம், ‘ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள் முதலிய யாவரும் இந்தியாவைத் தங்கள் பொதுவான தாய்நாடாகக் கருத வேண்டும், தாய் நாட்டிற்காக எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்பதன் மூலம் இதை யாவரும் நிரூபிக்க வேண்டும்’ என்பதாகும். இங்கிருக்கும் சீக்கியர்கள், நான் காட்டும் வழியில் இரு சமூகத்தினருக்கும் சேவை செய்ய விரும்புகிறார்கள். அப்படியிருக்க, இத்தகைய நண்பர்களை, எப்படி, எந்த ஆதாரத்தின் பேரில் நான் போகச் சொல்லிவிட முடியும்? வெளிக்கு ஆடம்பரமாகக் காட்டிக்கொள்ளுவதனால் அல்ல, ஆனால், உண்மையான சேவை உணர்ச்சியின்மூலம் இவர்கள் எனக்குச் சிறந்த உதவியாக இருந்து வருகிறார்கள். இந்தச் சேவையை ஏற்றுக்கொள்ள நான் மறுத்துவிடுவேனாயின், என் மதிப்பை நானே இழந்துகொண்டு விடுவதோடு கோழை என்று என்னை நானே நிரூபித்துக்கொண்டு விட்டவனும் ஆவேன். இவர்களை நம்புங்கள், உங்கள் சகோதரர்கள் என்று இவர்களைக் கருதுங்கள், இவர்களுடைய சேவையை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிக உதவிகளைச் செய்யும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு; இது போன்ற வேலைகளில் இவர்களுக்கு அனுபவமும் ஏராளமாக இருக்கிறது. இவர்களுக்கு உடல் வலிவையும் நம்பிக்கையையும் கடவுள் அருளியிருக்கிறார்.

இவர்களைப்பற்றி நான் சொன்னவை சரியானவையல்ல என்று காண்பேனாயின், அவர்கள் திரும்பிப் போய்விடுவார்கள். இதற்கு மாறாக, ஏதோ தந்திரமான நோக்கத்துடன் இவர்களை நான் என்னுடன் வைத்திருப்பேனாஞல், என்னுடைய சோதனை தோல்வியில் முடிவதோடு மாத்திரமில்லாமல் என்னுடைய அழிவிலுமே அது முடியும்.

என்னுடைய பிரயாணத்தின்போது உங்களுக்கு நான் அளிக்க நினைக்கும் குறிப்பிடத்தக்க போதனை, கிராமத்து நீரையும் உங்களையும் எப்படி சுத்தமாக வைத்திருப்பது என்பதைச் சொல்லிக் கொடுப்பதே. நம் உடலும் மண்ணாலானது. இந்த மண்ணை நீங்கள் எப்படி சரியானபடி பயன்படுத்திக்கொள்ளலாம்; நம் தலைக்கு மேல் பரந்திருக்கும் நிரந்தரமான ஆகாயத்திலிருந்து உயிர்ச் சக்தியை நீங்கள் எவ்விதம் அடையலாம்; காற்றிலிருந்து உங்கள் ஜீவ சக்தி அதிக பலம் பெறும்படி எப்படி செய்யலாம்; சூரிய வெளிச்சத்தை நீங்கள் சரியானபடி எவ்விதம் பயன்படுத்திக்கொள்ளலாம் ஆகியவை குறித்தும் உங்களுக்குப் போதிக்க எண்ணுகிறேன். அதாவது, நம்மைச் சுற்றிலுமுள்ள பல இயற்கை சக்திகளையும் சரியானபடி பயன்படுத்தி, ஏழ்மை மிகுந்திருக்கும் நம் நாட்டை பொன் கொழிக்கும் நாடாகச் செய்வதற்கு உங்களுக்குச் சொல்லிக் கொடுக்க முயற்சி செய்வேன். நான் மேலே சொன்ன வகையில் உங்களுக்குச் சேவை செய்வதில் வெற்றி பெற வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.


—'ஹரிஜன்' – 26—1—1947

# 19

# இரவுக்கு ஒரு கிராமம் யாத்திரை

காந்திஜியின் 'இரவுக்கு ஒரு கிராமம் என்ற யாத்திரை', ஜனவரி 7-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாயிற்று. அன்று சண்டிபூரிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள மாசிம்பூருக்குப் புறப்பட்டார். "என் யாத்திரையின்போது, எனக்குக் கிடைப்பதைச் சாப்பிட்டுக்கொள்ளுவேன். பால் இல்லாமல் இருக்கக்கூட தயாராயிருக்கிறேன்" என்று காந்திஜியைக் கண்டு பேசிய ஒருவரிடம் அவர் கூறினார்.

தமது 'ஸ்தல யாத்திரை'யின்போது எந்தக் கஷ்டமான வாழ்க்கைக்கும் காந்திஜி தயாராக இருந்தார். 'தினத்திற்கு ஒரு கிராமம்' என்ற யாத்திரைக் காலத்தில், தமது கடிதப் போக்குவரத்து முதலிய வேலைகளைக் கவனிப்பதற்கென்று உடனிருந்தவர்களையும் கூட அனுப்பிவிடுவார். அவர் அப்பொழுது யாருக்கும் பேட்டியளித்துப் பேசவும் மாட்டார். ஹிந்துக்களையும்



உள்ளத்தில் வேதனை நிறைந்திருந்தும், நோவாகாலியில் தம்மை பார்க்க வரும் கிராமவாசிகளுக்கு அன்புடன் வணக்கம் தெரிவித்தார் காந்திஜி.



நோவாகாலியில் உண்ணாவிரதமிருந்த அப்துஸ் சலாமுக்கு அவ்விரத முடிவில் காந்திஜி ஆரஞ்சுப்பழரசம் கொடுக்கிறார்.—1947, ஜனவரி 20.

முஸ்லிம்களையும் சந்திப்பது, நாசமாக்கப்பட்டிருக்கும் வீடுகளுக்குப் போவது, கிராமங்களின் சமூக, பொருளாதார நிலையைப்பற்றிய விவரங்களைச் சேகரிப்பது ஆகியவைகளிலேயே தமது நேரத்தைச் செலவிடுவார். காந்திஜி மேலும் கூறியதாவது:

"நான் போகுமிடங்களிலெல்லாம், சமாதானமாக வாழும்படியும், கடவுளைத் தவிர வேறு யாருக்கும் அஞ்ச வேண்டாம் என்றும் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுவேன். தங்கள் நேரத்தைத் திருத்தியமைத்துக்கொண்டு, புனருத்தாரண வேலைகளிலும், நிர்மாண வேலைகளிலும் நேரத்தைச் செலவிடும்படியும் கேட்டுக்கொள்ளுவேன். என்னுடைய பிரயாணத்தின்போது, ஹிந்துக்கள், முஸ்லிம்கள், பெண்களின் தூதுகோஷ்டிகளைத் தனித்தனியாக ஏற்றுப் பேசுவேன். என்னிடம் மூட்டை முடிச்சுகள் மிகச் சொற்பமாக இருக்கும். அகலம் அதிகமில்லாத என் துப்பட்டி, படுக்கை, அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான சில சாமான்கள், என் பெட்டி ராட்டை ஆகியவை என்னுடன் இருக்கும். கீதை, குரான், பைபிள் உள்பட எனக்கு விருப்பமான சில புத்தகங்களையும் என்னுடன் வைத்திருப்பேன். நடக்கும் சமயத்தில் எனக்குத் தோழனாக இருப்பது என் கைத்தடிதான்."

இவ்விதம் காந்திஜி கிராமம் கிராமமாக நடந்தே போவார். ஒரு கிராமத்தில் ஓர் இரவுதான் தங்குவார்.

மாசிம்பூருக்கு வந்ததும் அவ்வூர் கிராம சேவா சங்கத்தில் காந்திஜி பேசுகையில் கூறியதாவது: "வெளி வேஷங்களில் காலத்தை வீணாக்காமல் மக்கள், தூய்மையாவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். ஆரிய சமாஜம், ஒவ்வொருவரும் பூணூல் அணிய வேண்டும் என்று கூறுகிறது என்றும், இதைக் குறித்து என் கருத்து என்ன என்றும் கேட்கிறார்கள். விருப்பமுள்ளவர்கள் பூணூல் அணிந்துகொள்ளுங்கள். ஆனால், இதற்காக ஓர் இயக்கமோ, பிரசாரமோ இருக்கக்கூடாது. பூணூலை அணிந்துகொண்டு விடுவதனால் மாத்திரம் எந்த விதமான நன்மையும் உண்டாகிவிடாது. ஏனெனில், ஹிந்து மதத்திலிருக்கும் குறைகளைப் பூணூல் போக்கிவிடாது."

—'ஹரிஜன்' — 26—1—1947

## 20

# சில முஸ்லிம்களின் கேள்விகள்

காந்திஜியை பாதியால்பூரில் சந்தித்த சில முஸ்லிம் வாலிபர்கள், "பீகாரில் நடந்திருக்கும் சம்பவங்களைப் பார்த்த பிறகும் தனி முஸ்லிம் ராஜ்யம் ஏற்படுவதை நீங்கள் ஆட்சே

பிப்பது ஏன்?" என்று கேட்டார்கள். இதற்குக் காந்திஜி கூறிய பதிலாவது :

"தனி முஸ்லிம் ராஜ்யம் எற்படுத்துவதை நான் ஆட்சேபிக்கவில்லை. உண்மையில் வங்காளம் அதே போலவே இருக்கிறது. ஆனால், தனி முஸ்லிம் ராஜ்யத்தின் தன்மை எப்படி இருக்கும் என்பதுதான் விஷயம். முஸ்லிம் ராஜ்யம், மொத்தத்தில் நாட்டுக்கு ஆபத்தாகும் வகையில் ஓர் அந்நிய அரசாங்கத்துடனும் ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமையையும் பெற்றிருக்குமா? இது வரையில் இதைக் குறித்துத் தெளிவாக எதுவும் கூறப்படவில்லை. தனக்கே விரோதமான காரியங்களைச் செய்யும் உரிமையை மற்றவர்களுக்கு அளிக்கும் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும்படி யாரும் ஒருவரைக் கேட்க முடியாது. சுதந்திரம் என்பது, பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைவது மாத்திரமல்ல, எல்லா அந்நிய ஆட்சியிலிருந்தும் சுதந்திரம் என்றே நான் கருதுகிறேன்."

"இப்பொழுது பாகிஸ்தானும் இல்லை, அமைதியும் இல்லை. இதற்குக் காந்திஜி கூறும் பரிகாரம்தான் என்ன?" என்பது முஸ்லிம் இளைஞர்கள் கேட்ட கடைசிக் கேள்வி. இதற்குக் காந்திஜி கூறியதாவது: "நான் இங்கே இருப்பதும், நோவா காலியில் நான் கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருப்பதும் அதே பரிகாரத்தைத்தான். நான் அதைக் கண்டுகொண்டுவிட்டதுமே உலகத்திற்குப் பிரகடனம் செய்துவிடுவேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்."

'ஹரிஜன்' — 2—2—1947

# 21

# நபிகளும் கோஷா முறையும்

**நா**ராயண்பூரில் பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசுகையில் கூறியதாவது: "என் நடை யாத்திரையில் மற்றோர் இரவிலும் ஒரு முஸ்லிம் நண்பரின் வீட்டில் இருக்க முடிந்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடன் வருபவர்களின் தொகையைக் குறைத்துக்கொண்டுவிட நான் முயற்சி செய்து வந்தபோதிலும், இதில் நான் இன்னும் வெற்றியடைந்துவிட முடியவில்லை. என்றாலும், எனக்குத் தங்க இடமளித்தவர் அதற்கும் தயாராகவே இருந்தார். என் கோஷ்டியில் இருந்தவர்களின் தொகையைக் கண்டு அவர் பிரமித்துவிடவில்லை.

"கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கோஷாப் பெண்களை நான் சந்திக்க வேண்டும் என்று வீட்டிலிருந்த பெரியவர்கள் விரும்பினார்கள்.

இதற்கு நான் முயன்றேன்; ஆனால், வெற்றியடையவில்லை. பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு ஹிந்துப் பெண்கள் ஏராளமாக வருகிறார்கள் என்பது உண்மை. இவ்விஷயத்தில் அவர்கள் அதிக முற்போக்கை அடைந்திருக்கிறார்கள். ஆனால், இந்த முன்னேற்றத்தை அவர்கள் அடைந்திருக்கும் வகையில் அவர்கள் முஸ்லிம் பெண்களுடன் சிநேகம் செய்துகொள்ளுவதும், கோஷா முறை என்ற அடிமைத்தனத்திலிருந்து முஸ்லிம் பெண்கள் விடுதலை பெறப் பாடுபட வேண்டியதும் ஹிந்துப் பெண்களின் கடமை. அக்கம்பக்கத்தாருக்குச் செய்ய வேண்டிய இக்கடமையிலிருந்து அவர்கள் தவறிவிடுவார்களானால், அவர்களிடம் ஏதோ குறைபாடு இருக்கிறது என்றுதான் ஆகும்.

"சுதந்திரமடைந்துவிடவேண்டும் என்று இந்தியா முயன்று வருகிறது. ஆனால், இந்திய மக்களில் பாதிப் பேர் முடங்கிக் கிடக்கும் நிலையில் இருந்து வருவார்களானால், மக்கள் அடையும் சுதந்திரம் சரியானதாகவே இருக்க முடியாது. ஆகையால், இக்கூட்டத்திலிருக்கும் முதியவர்கள், கோஷா முறையின் தீமையைக் குறித்து நன்றாகச் சிந்திப்பதோடு, எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதை ஒழித்து விடுமாறு மீண்டும் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில், இந்த முறை முகமது நபிகள் உபதேசித்ததற்கு முற்றிலும் விரோதமானது என்பதும் என் அபிப்பிராயம்."

—'ஹரிஜன்' – 2—2—1947

# 22

# மோசமான சகிப்பின்மை

ஹிராப்பூர் பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசுகையில், சென்னை, பம்பாய் ஜெமியத்-உல்-உலேமா-யி-இஸ்லாமிடமிருந்து தமக்கு வந்துள்ள இரு தந்திகளைக் குறிப்பிட்டுச் சொன்னதாவது :

"நான் இஸ்லாமை நம்பாதவனாகையால் இஸ்லாமின் சட்டங்களில் தலையிட எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்கிறார்கள். உண்மைகளை அறிந்துகொள்ளாத அடிப்படையில் இந்தத் தந்திகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மத அனுஷ்டானத்தில் நான் கொஞ்சமும் தலையிடவே இல்லை. அவ்விதம் செய்ய எனக்கு உரிமையும் இல்லை, விருப்பமும் இல்லை. ஆனால், நான் முயற்சி செய்திருப்பதெல்லாம், நபிகளின் உபதேசங்கள் முதலியவைகளை நான் படித்திருப்பதை அடிப்படையாகக் கொண்டு புத்திமதி

சொல்லுவதே. அதோடு, பண்பு மிக்க பல முஸ்லிம்களின் குடும்பங்களில், இன்று அனுசரிக்கப்படுவதைப் போன்ற கோஷா முறை கைவிடப்பட்டிருப்பதையும் நான் கவனித்திருக்கிறேன். உள்ளத்தில் கோஷா முறை இருக்க வேண்டும் என்பதையே இஸ்லாம் உண்மையில் நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்பது என் கருத்து. ஆனால், இன்று அனுசரிக்கப்படும் வகையில் வெளி கோஷா முறையை நீக்கிவிடுவது, உள் கோஷா முறையைக் குறைத்து அனுசரிப்பதாகக் காட்டாது. அது எப்படியானாலும் சரி, இங்கே என் பிரசங்கத்தைக் கேட்கும் முஸ்லிம்கள், நான் கூறிய யோசனை இஸ்லாமின் தருமத்திற்கு விரோதமானதாக இருப்பதாக எண்ணினால், என் ஆலோசனையை நிராகரித்துவிட அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு. என் மீது குறை கூறி எனக்கு வந்திருக்கும் தந்திகள், தாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்திற்கு மாறான கருத்துடையவர்களிடம் எவ்வித மோசமான வகையில் சகிப்புத் தன்மையே இல்லாது அவர்கள் இருக்கிறார்கள் என்பதையே பகிரங்கப்படுத்துகின்றன. பிரிவி கவுன்ஸில் உள்பட கோர்ட்டுகள், அநேகமாக முஸ்லிம்களல்லாதவர்களையே கொண்டவைகளாக இருந்தும், இஸ்லாமிய சட்டத்திற்கு வியாக்கியானம் கூறி, அந்த வியாக்கியானங்களை முஸ்லிம் உலகம் ஏற்றுக்கொள்ளும்படியும் செய்கின்றன. என்னைக் குறை கூறி தந்தி அடித்திருப்போர் இதை மறந்துவிட வேண்டாம். குறை கூறுவார்களே என்று பயந்துகொண்டோ, உடலுக்குத் தண்டனையும்கூட கிடைத்துவிடலாம் என்று அஞ்சியோ நான் என் கருத்தைக் கூற முடியவில்லை என்றால், அகிம்சைக்கும் சத்தியத்திற்கும் நான் தகுதியற்ற பிரதிநிதியே ஆவேன்."

—'ஹரிஜன்' - 9—2—1947

# 23

# இரு சமூகங்களின் நண்பன்

நாராயண்பூரில் காந்திஜியிடம் கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டனர்: "நீங்கள் இரு சமூகங்களுக்கும் நண்பர் என்று சொல்லிக்கொள்ளுகிறீர்கள். ஆனால், சென்ற இரண்டு மாத காலமாக நோவாகாலியில் உங்கள் சொந்த சமூகத்தையே திரும்பப் பேணி வளர்த்து வருகிறீர்கள். பீகாரில் தங்களுடைய சகலத்தையும் இழந்து தவிக்கும் முஸ்லிம்களின் நிலைமை என்ன?"

இக்கேள்விக்குக் காந்திஜி கூறிய பதிலாவது: "உண்மைகளைக் கவனிக்க மறுத்து இக்கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. நான் என் சமூகத்தைத் திரும்பப் பேணி வளர்த்துக்கொண்டிருக்கவில்லை. நான் எல்லாச் சமூகங்களையும் சேர்ந்தவன் என்ற

பொருளில் எனக்குச் சொந்தமானது என்று எந்தச் சமூகமும் இல்லை. நான் இதுவரை செய்து வந்திருப்பவையே இதை நிரூபிக்கும். நோவாகாலியிலிருக்கும் ஹிந்துக்களுக்குச் சௌகரியங்களை உண்டாக்க நான் முயன்று வருகிறேன் என்பதைப் பகிரங்கமாகச் சொல்லி வருகிறேன். ஆனால், முஸ்லிம்களுக்கு அசௌகரியம் செய்து அதைச் செய்ய நான் விரும்பவில்லை. என் குடும்பத்தில் ஒருவர் நோயுற்றிருந்தால், அவரையே நான் கவனிப்பதாகத் தோன்றும். ஆனால், மற்றவர்களையெல்லாம் அதனால் நான் கவனிக்காது இருந்துவிட்டேன் என்று நிச்சயமாய் பொருள்படாது.

"நான் இப்பொழுது இருக்க வேண்டிய இடம் பீகாரே என்று முஸ்லிம் நண்பர்கள் திரும்பத் திரும்ப, விடாமல் எனக்குப் புத்திமதி சொல்லி வருகிறார்கள். நோவாகாலியில் கஷ்டங்களை அடைந்திருக்கும் ஹிந்துக்களின் தொகையைவிட பீகாரில் துன்பங்களை அடைந்திருக்கும் முஸ்லிம்களின் தொகை அதிகம் என்றும் எனக்குக் கூறுகின்றனர். பீகாரில் துன்பமடைந்திருக்கும் முஸ்லிம்களின் சார்பில் அங்கிருக்கும் ஹிந்துக்களுக்குப் போதிய கஷ்டத்தைக் கொடுத்திருக்கிறேன். என்னைக் குறை கூறும் முஸ்லிம்கள் இதைக் காணும்படிச் செய்வதில் நான் இது வரையில் தவறியே இருப்பதற்காக வருந்துகிறேன். என்னுடைய பகுத்தறிவுக்கு எதிராக, என்னைக் குறைகூறும் முஸ்லிம்களின் யோசனையைக் கேட்டுக்கொண்டு நான் பீகாருக்குப் போய்விடுவேனாயின், முஸ்லிம்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக அவர்களுக்கு நான் தீமையையே செய்துவிட்டவனாகக்கூடும்.

"ஓர் உதாரணத்தையும் கூறுகிறேன். பீகார் ஹிந்துக்கள் மீதும் பீகார் அரசாங்கத்தின் மீதும் கூறப்படும் அநேக குற்றச்சாட்டுகளுக்குப் பொருத்தமான ஆதாரங்களை நான் காணவில்லை. என்றாலும், இதைச் சொல்ல என்னால் முடிய வேண்டும் என்பதற்காக, சிறந்ததான முறையை நான் ஏற்றுக்கொண்டேன். பீகார் அரசாங்கம், வங்காள அரசாங்கத்துடன் சேர்ந்தோ அல்லது தான் மாத்திரமோ, பாரபட்சமற்ற விசாரணைக் கமிஷனை நியமிக்க வேண்டும் என்று யோசனை கூறினேன். பீகார் அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது."

—'ஹரிஜன்' – 2—2—1947

# 24

# வாழ்க்கைக் கலை

பதால்கோட்டுக்குப் போகும் வழியில் காந்திஜி 18-ஆம் தேதி ஒரு முஸ்லிம் நண்பரின் வீட்டில் தங்கினார். பிரார்த்தனை ஆரம்பமாவதற்குச் சற்று முன்னால் அந்த நண்பர் காந்திஜியிடம் வந்து, "ஸ்ரீ ஜின்னாவுக்கும் உங்களுக்கும் ஒரு சமரச முடிவு ஏற்படுமானால், நாட்டில் சமாதானம் உண்டாகும்" என்றார். இதற்குக் காந்திஜி கூறிய பதிலாவது: "என்னிடம் மயக்கும் பகட்டுகள் எதுவும் இல்லை. எனக்கு எந்த அபூர்வ சக்திகள் இருப்பதாகவும் நான் எண்ணிக்கொண்டதும் இல்லை. ஸ்ரீ ஜின்னாவை நான் பல தடவைகள் சந்தித்துப் பேசியிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். எங்கள் சந்திப்பில் சிநேகத் தன்மையைத் தவிர வேறு எதுவுமே இருந்தது இல்லை. அப்படியிருந்தும் பலன்தான் சூன்யம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

"உண்மை என்ன என்றால், பின்பற்றுவோர் எவ்விதம் இருப்பார்களோ அவ்வாறே அவர்கள் தலைவரும் இருப்பார். பொது மக்களிடையே என்ன அபிலாஷைகள் பிரதானமாக இருக்கின்றனவோ, அவற்றைத் தெளிவாகப் பிரதிபலிப்பவராகவே தலைவர் இருப்பார். இந்தியாவில் மாத்திரமல்ல, உலகம் முழுவதும் இவ்விதமே இருக்கும். ஆகையால் ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சாராருக்குமே நான் சொல்வது என்னவென்றால், தங்களுடைய அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குக் காங்கிரஸையோ, முஸ்லீம் லீகையோ, ஹிந்து மகாசபையையோ எதிர்பார்க்க வேண்டாம் என்பதே. அவ்விஷயமாக உதவிக்குத் தங்களையே தாங்கள் எதிர்பார்த்துக்கொள்ளவேண்டும். இதை ஹிந்துக்களும் முஸ்லிம்களும் செய்வார்களாயின், அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் சமாதானமாக வாழ வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகி, அதே ஆர்வம் அவர்களுடைய தலைவர்களிடமும் பிரதிபலிக்கும். ராஜீய ஸ்தாபனங்கள் திட்டமாக ராஜீய விஷயங்களைக் கவனித்துக்கொண்டிருக்கட்டும் என்று விட்டுவிட வேண்டும். ஆனால், தனிப்பட்டவர்களின் அன்றாடத் தேவைகளைக் குறித்து ராஜீய ஸ்தாபனங்களுக்கு என்ன தெரியும்? அடுத்த வீட்டுக்காரருக்கு நோய் என்றால், என்ன செய்வது என்பதைக் கேட்க காங்கிரஸினிடமோ, லீகினிடமோ ஓடுவீர்களா? அப்படி ஓடுவது என்பது எண்ணவும் முடியாத காரியம்.

"படிப்பின்மையிலிருந்து பெண்களைத் துரிதமாக விடுவித்தாக வேண்டும் என்று ஸ்ரீ ஜின்னா ஆலோசனை கூறியிருப்பதை நேற்று மாலை சொன்னேன். ஆனால், அது மாத்திரம் போதாது.

படிக்காதவர்களின் நிலைமையைவிட படித்தவர்களின் நிலைமை நன்ருக இருக்கிறதா? ராஜீய உலகத்தின் போக்குக்கு அடிமைப் பட்டவர்களாக அவர்கள் இருந்துவரவில்லையா? அதிக காலம் ஹிட்லரின் காலடியில் கிடந்து வந்த ஜெர்மனி, நான் கூறுவதை நிரூபிக்கிறது. அந்த ஜெர்மனி இன்று விசனிக்கத்தக்க நிலைமை யில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மனிதனைச் சிறந்தவனுக்குவது படிப்பு அல்ல. உண்மையான வாழ்க்கைப் படிப்பே மனிதனைச் சிறந்தவனுக்கும். நமக்கு எல்லாம் தெரிந்திருந்தும் அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் சகோதரத் தன்மையுடன் வாழ நமக்குத் தெரியவில்லையென்ருல் என்ன பயன்?

“தங்களுடைய அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் நடந்து கொள்ளுவதில் சிலர் மோசமான தவறுகளைச் செய்திருப்பார் களானுல், அதற்காக அவர்கள் வருந்த வேண்டும்; கடவுளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். கடவுள் மன்னித்தும் உலகம் மன்னிக்கவில்லை என்ருல், கடவுளையே நம்பியிருக்கக் கற்றுக்கொண்டுவிட்ட மனிதனுக்கு அப்பொழுதுகூட அதைப் பற்றிக் கவலை இல்லை. உலகம் அளிக்கும் தண்டனையைப் பெருந் தன்மையுடன் ஏற்றுக்கொள்ளுவது ஒரு மனிதனை மேன்மைப் படுத்துவதற்கு உதவுகிறது. எந்தத் தவறையும் திருத்திக் கொள்ளாமல் மனிதன் விட்டுவைத்துவிடக் கூடாது என்று, நபி களின் உபதேசங்களடங்கிய ஒரு நூலில் நான் படித்திருக்கி றேன். விட்டுவைத்துவிடுவார்களானுல், இறுதித் தீர்ப்பளிக்கப் படும் நாளில் அவர்கள் பிடிபட்டுவிடுவார்கள்; கடவுளின் பார் வையில் அவருக்குச் சலுகை இருக்காது.

“படிப்பது, எழுதுவது முதலியவைகளில் ஆற்றலைப் பெற் ருல் மாத்திரம் போதாது. ஆனுல், அக்கம்பக்கத்தாருடன் சிநேகமான முறையில் வாழும் ஆற்றலை அவர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம். நம்மில் பாதிப் பேர் பெண்கள் இருக் கிருர்கள். அறியாமை, மூடநம்பிக்கை ஆகியவைகளின் அடிமை களாக இருப்பதிலிருந்து இவர்களை மீட்க வேண்டும். ஆண்கள் ஒத்துழைத்து வாழ்வதோடு பொதுவான நன்மைக்காகப் பாடு பட வேண்டும். இதற்கு வழிகாட்ட மக்கள் தங்கள் ஆன்மா வையோ, கடவுளையோதான் எதிர்பார்க்க வேண்டுமேயன்றி ராஜீயக் கட்சிகளை எதிர்பார்த்திருக்கக்கூடாது.

“என்னைப் பொறுத்த வரையில், இப்பணிக்கே நான் என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன். மேற்கொண்ட வேலை முற்றிலும் நிறைவேருதிருக்குமாயின் இப்பகுதியிலிருந்து நான் உயிருடன் திரும்பிப் போய்விடமாட்டேன். என் முஸ்லிம் நண் பர்களின் அவநம்பிக்கையைப் போக்கிவிடுவதில் நான் வெற்றி பெற்றுவிடுவேனுயின், நான் குறிப்பிட்ட அன்ருட வாழ்க்கை யின் காரியங்கள் முக்கியமேயன்றி மற்றவையல்ல என்பதை நிலை

நாட்டுவதிலும் நான் வெற்றி பெற்றுவிடில், இதன் பலனை நாட்டின் இப்பகுதியில் மாத்திரமேயன்றி இந்தியா முழுவதிலும் அறிய முடியும். அதோடு இது உலகத்தின் எதிர்கால சமாதானம் சம்பந்தமாகவும் ஆழ்ந்த பலனை உண்டாக்கக்கூடும்."

—'ஹரிஜன்' - 2—2—1947

# 25

# ஸ்ரீ ஜின்னுவின் புத்திமதி

பார்கோட்டில் ஜனவரி 17–ஆம் தேதி காந்திஜி, காயிதே ஆஜம் ஜின்னு செய்திருந்த ஒரு பிரசங்கத்தைப் படித்திருந்தார். தம்முடைய சகோதரி கன்னி பாதிமா ஜின்னு, பெண்களின் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு அஸ்திவாரமிட்டபோதே ஸ்ரீ ஜின்னு பேசியிருந்தார். அன்று மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசிய பிறகு காந்திஜி, ஸ்ரீ ஜின்னுவின் பிரசங்கத்தின் ஒரு பகுதியை மொழிபெயர்த்துக் கூறினர். "பொறுப்பு, நீதி, யோக்கியத் தன்மை ஆகியவைகளில் முஸ்லிம்கள் உயர்ந்த உணர்ச்சியை வளர்த்துக்கொள்ள வேண்டும். பிறர் தவறு செய்வதைப் பார்த்து அதே போல நாமும் செய்துவிடக்கூடாது. ஒருவர், தாம் செய்ய எண்ணிய காரியம், மனச்சாட்சியுடன் நன்ருகச் சிந்தித்த பிறகு, தவருனது என்ற முடிவுக்கு வருவாராஞல், சந்தர்ப்பமோ, அதற்கான தூண்டுதலோ எதுவாக இருந்த போதிலும், அக்காரியத்தைச் செய்யவே கூடாது. இந்த விதியின்படி மக்கள் நடந்துகொள்ளுவார்களாஞல், நாம் பாகிஸ்தானை அடைந்துவிடுவதைத் தடுத்துவிட யாராலும் முடியாது" என்று ஸ்ரீ ஜின்னு சொல்லியிருந்தார். இதைக் குறிப்பிட்டு விட்டு காந்திஜி கூறியதாவது:

"இங்கே பலாத்காரம் என்ற பேச்சே இல்லையாகையால், ஒழுக்கத்தின் சிறந்த தன்மைகளைக்கொண்டே பாகிஸ்தான் அமைக்கப்படப் போகிறது என்ருல், அந்த ராஜ்யம் என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், அப்படிப்பட்ட ராஜ்யத்தை எல்லோரும் வரவேற்பார்கள். காயிதே ஆஜம் ஜின்னுவின் புத்திமதியை நீங்கள் நினைவில்வைத்து அதன்படி நடந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அத்தகைய புத்திமதி, குறிப்பிட்ட ஒரு சமூகத்தோடு மாத்திரம் நின்றுவிடாமல் பிரபஞ்சத்திற்கே முக்கியமானதாக இருக்கிறது. விருத்தி செய்துகொள்ள வேண்டும் என்று மக்களுக்குக் கூறியிருக்கும் தன்மைகள், சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்களாக இருக்க வேண்டும் என்பது அல்ல. ஆஞல், நீதி, சத்திய உணர்ச்சியை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்கிருர். நீதிக்கு அபாயம் ஏற்

படும்போது, தகராறு தனிப்பட்டவர் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், பொதுஜன சம்பந்தமுடையதாயினும், மிருகத்தனமான முறைகளைக்கொண்டு அத்தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளுவதற்குப் பதிலாக நியாயத்தை எடுத்துக் கூறி தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதே ஸ்ரீ ஜின்னா கூறுவதன் பொருள்."

—'ஹரிஜன்' - 9—2—1947

# 26

# நபிகளின் சில உபதேச மொழிகள்

அன்று காந்திஜியின் மௌன விரத தினம். எனவே, சில துண்டுக் காகிதங்களில் அவர் கீழே வருமாறு எழுதினார்:

"இந்த நாட்களில் நான் எதையெல்லாம் சொல்ல முயன்று வருகிறேனே அவை யாவும் நபிகளின் உபதேசங்களில் அடங்கியிருக்கின்றன. நம் நன்மைக்காக அவற்றிலிருந்து கீழ்க்கண்டவைகளை எடுத்துச் சேகரித்திருக்கிறேன்:

'தனக்கு என்ன வேண்டுமென்று விரும்புகிறானோ அதே தன் சகோதரனுக்கும் வேண்டும் என்று அவன் விரும்பினாலன்றி, எந்த மனிதனும் உண்மையான கடவுள் நம்பிக்கையுள்ளவனாக மாட்டான்.'

'தனக்காகவோ, மற்றவர்களுக்காகவோ வேலை செய்யாதவன் ஆண்டவனின் சன்மானத்தைப் பெறமாட்டான்.'

'பேசும்போது பொய்யைப் பேசுகிறவன், வாக்குறுதியளித்து வாக்குறுதியை மீறி நடப்பவன், தன்மீது பிறர் நம்பிக்கை வைத்திருக்கும்போது அந்த நம்பிக்கையில் தவறிவிடுகிறவன் என்னைச் சேர்ந்தவன் ஆகமாட்டான்; ஆனால், உள்ளத்தில் அவன் ஒரு துரோகியே.'

'தம்மிடம் வைத்த நம்பிக்கையை நிறைவேற்றி, அளித்த வாக்கில் தவறிவிடாமல், வைத்த நம்பிக்கைப்படி நடப்பவர்களே முஸ்லிம்களாவர்.'

'ஆண்டவனால் படைக்கப் பெற்றிருப்பவைகளிடம் யார் அன்புடனிருக்கிறார்களோ, அவர்களிடம் ஆண்டவன் அன்புடனிருக்கிறார்.'

'யாருடைய நாவினாலும், கைகளினாலும் மனித வர்க்கம் ஆபத்தின்றி இருக்கிறதோ அவரே சரியான முஸ்லிமாவார்.'

'கெட்டவைகளை அறிந்திருப்பவன் மோசமான மனிதன்; நல்லவைகளை அறிந்திருப்பவன் சிறந்த மனிதன்.'

'மனிதன் பிற பெண்ணுடன் விபசாரம் செய்யும்போது இமான் (உண்மை) அவனை விட்டுப் போய்விடுகிறது.'

'பிற பெண்களைச் சோரம் செய்பவனோ, திருடுபவனோ, மது பானம் செய்பவனோ, கொள்ளையடிப்பவனோ, மோசடி செய்கிறவனோ மோமின் (நல்ல முஸ்லிம்) அல்ல. உஷார், உஷார்.'

'தன்னைத்தானே வெல்லுவதுதான் மிக மிக உயர்ந்த மதப் போர்.'

'முஸ்லிமானாலும், முஸ்லிமல்லாதவரானாலும், பிறரால் நசுக்கப்பட்டிருப்பவர்கள் யாராயினும் அவர்களுக்கு உதவி செய்.'

'பட்டினி விரதமும் புலனடக்கமுமே என்னைப் பின்பற்றுவோர் அனுசரிக்கும் முறை.'

'ஆண்களின் இரட்டைப் பாதியாக இருப்பவர்களே பெண்கள்.'

'தாங்கள் கற்றபடி நடப்பவர்களே கல்வியறிவுள்ளவர்கள்.'

'பத்தினிப் பெண்ணே உலகத்தில் மிகச் சிறந்த பொருள்.'

'உன் மனைவிக்கு நல்ல யோசனைகளைச் சொல்லு; அவள் நல்லவளாக இருந்தால், அந்த யோசனைகளை அவள் உடனே ஏற்றுக்கொள்ளுவாள்; தவறான எண்ணங்களையெல்லாம் விட்டுவிடு; உன் கண்ணியமான மனைவியை அடிமையாகக் கருதி அடிக்காதே.'

— 'ஹரிஜன்' - 9—2—1947

# 27

# முஸ்லிம் லீகர்களின் கேள்விகள்

பானியாலாவில் 26-ஆம் தேதி மாலை ஒரு கூட்டம் நடந்தது. அக்கூட்டம் அமைதியானதாக இருந்தது என்பது மாத்திரமல்ல; காந்திஜி கிராமம் கிராமமாக யாத்திரை செய்ய ஆரம்பித்த பிறகு அவர் கண்ட பெரிய கூட்டமும் அதுவேயாகும். ஐயாயிரம் பேருக்குமேல் அங்கே கூடியிருந்தார்கள். சில வாரங்களுக்கு முன்னால் அக்கிராமவாசிகள் எல்லா சமூகத்தினரும் கலந்த ஒரு விருந்து நடத்தினார்கள். அதில் தீண்டாதாருள்பட ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலந்துகொண்டார்கள். அங்கே நடந்த கூட்டத்தில் பேசியபோது காந்திஜி கூறியதாவது:

"அந்த விருந்து வைபவத்திலேயே நானும் கலந்துகொள்ளுவது என்றுதான் எண்ணியிருந்தேன். வர முடியாது போனதால் நான் கலந்துகொள்ள முடியாது போயிற்று. ஆகையால், கடைசியாக பானியாலா கிராமத்திற்கு இப்பொழுதாவது வர முடிந்ததைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், இது மாத்திரம் போதாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களுக்குள் ஒற்றுமையையும் நட்பையும் உறுதிப்படுத்திக் கொண்டுவிடுவதில் வெற்றி பெற்றுவிடுவார்களானால், நான் இன்னும் அதிக மகிழ்ச்சியை அடைவேன்.

"சமீப காலமாக ஒரு பிரச்னை எனக்கு அதிகக் கவலையைக் கொடுத்து வருகிறது. கலவரத்தில் தங்களுக்கிருந்த சகலத்தையும் இழந்துவிட்ட குடும்பங்களைப் பற்றியதே அந்த என் கவலை. குடும்பத்தில் சம்பாதிப்பவர்களாக இருந்தோரை இழந்துவிட்ட குடும்பங்கள் பல. இக்குடும்பங்களில் தப்பிப் பிழைத்திருப்பவர்களைப் பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இவர்களுடைய குழந்தைகளுக்குப் படிக்க வகை செய்து கொடுத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும். இது அரசாங்கத்தின் கடமை என்பதில் சந்தேகமில்லை. உங்களுக்கும் எனக்கும் மனச்சாந்தி ஏற்பட வேண்டுமானால், இப்பிரச்னையை நாம் இன்னும் விரிவான நோக்குடன் பார்க்க வேண்டும். எங்கெங்கே முஸ்லிம்கள் தவறு செய்திருக்கிறார்களோ அங்கெல்லாம், மேலே கண்டவைகளுக்கு நியாயமான ஏற்பாடுகளை அக்கம்பக்கத்திலுள்ள முஸ்லிம்களே செய்யவேண்டும் என்பதுதான் என் பணிவான அபிப்பிராயம்.

"அரசாங்கம், பலத்தினால் மாத்திரம் காரியத்தைச் செய்ய முடியும். ஆனால், சாதாரண மக்களோ, மனம் மாறும்படிச் செய்வதனாலும் மனம் ஒப்பியும் காரியத்தைச் செய்யலாம். மனிதருக்குள் நல்ல உறவு ஏற்படும்படிச் செய்வதன்மூலம், சமூக அமைப்புக்கு ஏற்படவிருக்கும் ஆபத்துக்களைச் சமாளித்துக் கொண்டுவிட மக்கள் முயற்சி செய்ய வேண்டும். மேலே சொன்ன காரியங்களை நிறைவேற்றுவதற்கு, ஆயுத பலத்தையே அடிப்படையாகக்கொண்டிருக்கும் அரசாங்கம் போன்ற ஒரு ஸ்தாபனத்தை நம்பிக்கொண்டிருப்பது நல்லதல்ல.

"இன்னும் இரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். தொண்டர்களின் கடமை, கிராமத் தொழிலாளிகளைத் திரும்பக் குடி புகுத்துவது ஆகியவையே அவை. தொண்டர்களைப் பொறுத்த வரையில் நான் சொல்லும் புத்திமதி இது தான்: ஒரு ரகக் கடமைக்கும் இன்னுமொரு ரகக் கடமைக்கும் அவர்கள் பாகுபாடு செய்யவே கூடாது. அதைச் செய்வோம், இதைச் செய்ய முடியாது என்று அவர்கள் இருக்கக்கூடாது. தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதாக இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது கடமையைச் செய்து வரவேண்டும். ஒழுங்காகத் திட்டமிட்டுச் செய்யும் வேலையில், சிறந்த கட்டுதிட்டமும் தியாகமுமே, சின்ன காரியத்தையும் பெரியவைகளாக்கி விடுகின்றன. கிராமத் தொழிலாளிகளை இனி கவனிப்போம். இவர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைச் சமாளித்துக்கொள்ளுவதில் இவர்கள் தங்கள் சொந்த முயற்சியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல், தருமம் என்னதான் நல்ல நோக்கத்துடன் செய்யப்படுவதாக இருந்தாலும், அதை நம்பி வாழ்வது என்று இவர்கள் இருந்து விடக்கூடாது. என்னுடைய இந்தக் கருத்தை உலக தரும சாஸ்திரங்களும் ஆதரிக்கின்றன. தான் பெறும் உணவுக்கு ஏற்றபடியான உடலுழைப்பைத் திருப்பி அளிக்காமல் சாப்பிடு

கிறவன் திருடனே தவிர வேறு அல்ல என்று அவை கூறு கின்றன. பொதுவில் அளிக்கப்படும் உழைப்பின் பந்தம், சமூகத்திலுள்ள பல பகுதிகளையும் ஒன்றுபடுத்தினாலன்றி உலகத்தில் நிரந்தரமான சமாதானம் ஏற்பட முடியாது.''

பிரார்த்தனைக் கூட்டம் மழையினால் கலைந்து போக நேருமோ என்ற பயம் ஒரு சமயம் இருந்தது. ஆனால், மழை நின்றுவிட்டது; கூட்டமும் தொடர்ந்து நடந்தது. முஸ்லிம் லீகர்கள் வங்காளியிலும் ஆங்கிலத்திலும் கேட்டிருந்த கேள்வி களுக்குக் காந்திஜி பதில் கூறினார்.

**முதல் கேள்வியாவது:** முஸ்லிம்களே பெரும்பான்மையின ரான மாகாணங்கள், அவை விரும்பியிருந்தால் முன்பே பாகிஸ்தான் வந்திருக்கும் என்று நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் அவ்வாறு சொன்னதன் பொருள் என்ன ?

**காந்திஜி கூறிய பதிலாவது:** நான் சொல்லியதை நன்றாக அறிந்தே சொன்னேன். அந்நிய ஆட்சி ஒன்று இந்தியாவை ஆண்டுகொண்டிருக்கும்போது நாம் அடிமையாக இருப்பது ஒன்றுதான் நம் கதியேயன்றி பாகிஸ்தானும் இல்லை, ஹிந்துஸ்தானும் இல்லை. தாம் அனுபவித்து வரும் மாகாண சுயாட்சி, சுதந்திரத்திற்குச் சமமானதே என்று யாராவது சொல்லுவதாக இருந்தால், அப்படிப்பட்டவர்கள் சுதந்திரம் என்பது இன்னது என்பதையே அறியாதவர்களாவர். பிரிட்டிஷ் ஆட்சி போய்விடப் போவது நிச்சயம் என்பது உண்மைதான். ஆனால், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்கள் சண்டைகளை நிறுத்தி ஒன்றுபடாது போனால், ரத்தக்களரியில்தான் இருந்துகொண்டிருப்பார்களாயின், பல வல்லரசுகளின் கூட்டு ஒன்று நம்மை நிச்சயமாக அடிமையாக வைத்துக்கொண்டு விடும். இந்தியாவைப் போன்ற இவ்வளவு ஏராளமான ஜனத்தொகையையும் இயற்கை வசதிகளையும் கொண்ட ஒரு நாடு, உள்ளுக்குள் இருந்து வரும் சச்சரவுகளினால் நாசமாவதை அந்த வல் லரசுகளும் சகித்துக்கொண்டிருக்க மாட்டா. ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுக்காக வாழ்ந்தாக வேண்டும். கிணற் றுத் தவளைபோல் வாழ்ந்துகொண்டிருக்கலாம் என்ற காலம் போய்விட்டது. அகிம்சையோடு கூடிய ஒத்துழையாமையை இந்தியா முழுவதற்குமான ஒரு கொள்கையாக இந்தியா மேற்கொள்ளுவதற்கு முன்னாலேயே, அதாவது 1920-ஆம் ஆண்டிற்கு முன்னாலேயே, இந்த ஒத்துழையாமைக் கொள் கையை அனுசரித்து ஒரு தீர்மானம், காலஞ்சென்ற அப்பாஸ் தயாப்ஜி சாகிபின் தலைமையில் குஜராத்தில் நிறை வேறியது. ஒரு மாகாணம் மாத்திரமேயாயினும், அது தனது நிலைமையை வெளியிட்டு, பிரிட்டிஷ் அதிகாரத்தி லிருந்து ஒதுங்கி சுயேச்சையாக இருக்கலாம் என்று அப்பொழுது நான் கூறினேன். இவ்விதம் அதே முறையை

அனுசரித்து வங்காளம் மாத்திரம் உண்மையாகவே முற்றிலும் சுதந்திரமானதாகிவிடுமானால், அப்பொழுது நான் கூறிய விளக்கப்படி வங்காளத்தில் பூரணமான பாகிஸ்தான் ஏற்பட்டதாகிவிடும். பூரண ஜனநாயகத்தை விளக்க வில்லையானால், இஸ்லாம் ஒன்றுமே இல்லை. ஆகையால், எந்த மதத்தினராயினும், ஒரு ஆணுக்கு ஒரு வோட்டும், ஒரு பெண்ணுக்கு ஒரு வோட்டும் இருக்கும். அப்பொழுது இயற்கையாகவே இம்மாகாணத்தில் உண்மையான முஸ்லிம் பெரும்பான்மை இருக்கும். பாகிஸ்தானில் சிறு பான்மையினர், சாத்தியமானால், பெரும்பான்மையினரை விட சௌக்கியமாகவே இருப்பார்கள் என்று ஜின்னா சாகிப் சொல்லியிருக்கவில்லையா? ஆகையால், கஷ்டப்படுகிறவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள். பாகிஸ்தான் என்பது இதைவிட வேறு ஏதாவதா என்பது எனக்குத் தெரியாது. அப்படி வேறு ஏதாவதாக இருக்குமானால், எனக்குத் தெரிந்தவரை, என் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் அது இருக்காது.

**இரண்டாவது கேள்வி :** உங்கள் அகிம்சை பீகாரில் எவ்விதம் வேலை செய்துவருகிறது?

**காந்திஜியின் பதில் :** அங்கே அகிம்சை வேலை செய்யவே இல்லை. பரிதாபமான வகையில் அது தவறியிருக்கிறது. ஆனால், பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து எனக்கு வந்திருக்கும் விவரங்களை நம்புவதானால், நடந்துவிட்ட தவறுகளுக்குப் பீகார் அரசாங்கம் முழு பரிகாரத்தையும் தேடி வருகிறது. அம்மாகாணத்தின் சில பகுதிகளில் ஏராளமான பீகார் மக்கள் படுமோசமான குற்றங்களைச் செய்துவிட்டார்கள் என்பதைப் பீகார் பொது மக்கள் இப்பொழுது உணர்ந்து வருகின்றனர்.

**மூன்றாவது கேள்வி :** அஸ்ஸாம் அரசாங்கம் வங்காளிகளை வெளியேற்றி வருவதைக் குறித்து நீங்கள் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?

**காந்திஜி கூறிய பதில் :** வேண்டுமென்று நான் மௌனமாக இல்லை. இப்பிரச்னை எனக்குப் புதியது அல்ல. சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் அஸ்ஸாமுக்குச் சென்றிருந்தபோது, மிமின்சிங்கிலிருந்து முஸ்லிம்கள் வந்து குடியேறி தரிசாகக் கிடந்த நிலத்தை ஆக்ரமித்துக்கொண்டிருந்த இடத்திற்கே என்னை அழைத்துப் போய்க் காட்டினார்கள். அப்பொழுதே என் அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறேன். அதேதான் இன்றும் என் கருத்து. தரிசாக இருக்கும் நிலம், தங்கள் சொந்த மாகாணத்திலிருந்தாலும், வேறு எங்கே இருந்தாலும், அதை ஆக்ரமித்துக்கொண்டு விடுவது சரியல்ல என்பதே என் கருத்து. எனக்கு அது ஹிந்து-முஸ்லிம்

பிரச்னை அல்ல. நான் எல்லோருக்கும் பொதுவான கருத்தையே கூறினேன். சட்டப்படி நியாயமாக நிலம் வைத்திருப்பவர்களை அந்த நிலத்திலிருந்து வெளியேற்ற அஸ்ஸாம் முயற்சி செய்துவருமானால், மனித வர்க்கத்திற்கே கெடுதி செய்த குற்றத்திற்கு அது உட்பட்டதாகும். நான் கேள்விப்பட்டது இதற்கு நேர் மாருனதாகும். சட்ட விரோதமாக வெளியேற்றி வருமானல் அஸ்ஸாம் அரசாங்கத்தின்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். வெளியேற்றப்பட்டிருக்கும் வங்காளிகள் இங்கே முஸ்லிம்களாக இருப்பதால், அவர்களுடைய நியாயத்தை வங்காள அரசாங்கம் வெளிப்படுத்தவும் முடியும்.

**அடுத்த கேள்வியாவது:** வகுப்புக் கலவரங்களுக்குக் காரணம் என்ன என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

**காந்திஜியின் பதில்:** இரு சமூகங்களின் முட்டாள்தனத்தினலேயே கலவரங்கள் ஏற்படுகின்றன என்பது என் கருத்து.

**கேள்வி:** தலைமையில் சமாதானம் ஏற்படாமல் நோவாகாலியில் சமாதானம் ஏற்படும்படிச் செய்வதில் வெற்றி பெற்றுவிட முடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

**காந்திஜியின் பதில்:** தலைமையில் சமாதானம் என்பது, முஸ்லிம் லீகின் தலைவர் ஜின்னு சாகிபுக்கும் இந்திய தேசீய காங்கிரஸின் தலைவர் ஆச்சாரிய கிருபளானிக்கும் ஏற்படும் சமரச ஒப்பந்தம் என்றே பொருள்படுமானல், நோவாகாலியிலிருக்கும் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே சமரசமான நிலைமை ஏற்படுவதற்கு அத்தகைய ஒப்பந்தம் அவசியமில்லை என்றே நிச்சயமாக நான் கருதுகிறேன். காங்கிரஸ் தலைவரோ, முஸ்லிம் லீகின் தலைவரோ, நான் அறிந்த வரையில், இரு சமூகங்களுக்குமிடையே சச்சரவு இருக்க வேண்டும் என்று விரும்பவில்லை. ஆனல், வங்காளத்திலோ, பீகாரிலோ, வேறு இடங்களிலோ நடக்கும் கலவரங்கள் முட்டாள்தனமானவை; அரசியல் முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடியவை. ஆகையால், நோவாகாலியில் இருக்கும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மனிதர்களாக நடந்துகொண்டு, தங்களுக்குள் சமாதானமான உறவை வளர்த்துக்கொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன்.

**கடைசி கேள்வியாவது:** நோவாகாலியில் ஹிந்துக்களையும், ஹிந்துக்களின் சொத்துக்களையும் காப்பாற்றியவர்கள் யார் என்பது உங்கள் கருத்து? அக்கம்பக்கத்திலிருக்கும் முஸ்லிம்களே அவர்களைக் காப்பாற்றியிருக்கிருர்கள் என்று நீங்கள் எண்ணவில்லையா?

**காந்திஜியின் பதிலாவது:** மறைவான அகந்தை இக்கேள்வியில் தொனிக்கிறது. கொள்ளையடித்தல், தீயிடல், கொலைகள், பலவந்தமாக மதம் மாற்றுவது போன்றவைகளில் ஈடுபடும் அளவுக்குப் போய்விடுவதற்கு நோவாகாலியில் முஸ்லிம்கள் பலர் இருந்திருப்பதைக் குறித்து வருந்தி, அடக்கம் தெரிவிக்கும் உணர்ச்சிதான் இப்பொழுது வேண்டும். விஷமம் இன்னும் அதிகமாக நடந்துவிடவில்லையானல், அதற்குக் கடவுளுக்குத்தான் நன்றி செலுத்த வேண்டுமேயன்றி மனிதனுக்கு அல்ல. ஆனல், அதே சமயத்தில், ஹிந்துக்களுக்குப் பாதுகாப்பளித்த கௌரவம் முஸ்லிம்களுக்கும் உண்டு என்பதைத் தாராளமாக ஒப்புக்கொள்ளவும் தயாராக இருக்கிறேன்.

— 'ஹரிஜன்' - 9—2—1947

## 28

# பிபி அம்துல் சலாமின் உண்ணுவிரதம்

பிபி அம்துல் சலாம், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகவே அநேக ஆண்டுகள் பாடுபட்டிருக்கிருர். இவர், பஞ்சாபில் பாடியாலா சமஸ்தானத்தில் பிரபலமான ஒரு முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனல், பிறப்பினல் தமக்கு இருந்த வாழ்க்கைச் சௌகரியங்களையெல்லாம் அவர் துறந்துவிட்டு 1930–இல் காந்திஜியின் ஆசிரமத்தில் சேர்ந்தார். அது முதல் காந்திஜி கூறி வந்த கொள்கைக்கு ஏற்ற வகையில் தமது வாழ்க்கையை உருவாக்கிக்கொள்ளவும் முயன்று வந்திருக்கிருர். சிறு பிராயத்தில் இவருக்குப் பிரம்மஞ்ஞான சங்கச் செல்வாக்கு இருந்திருக்கிறது. ஆகையால், இவர் தன்னளவில் திடமான முஸ்லிமாக இருந்து வந்தபோதிலும், எல்லா மதங்களையும் சமமாக மதிக்கும் தன்மையையும் வளர்த்துக்கொண்டிருந்தார். சமூக ஒற்றுமையில் இவருக்கு இருந்த ஆர்வத்தின் காரணத்தால் 1942–இல் சில காலம் 'இட்டேஹாத்' என்ற உருது வாரப் பத்திரிகைக்கு ஆசிரியராகவும் இருந்தார். ஆனல், பல காரணங்களை முன்னிட்டு அப்பத்திரிகையை இவர் நிறுத்திவிட வேண்டியதாயிற்று.

வங்காளப் பஞ்ச காலத்தில் இவர் கிழக்கு வங்காளத்திற்குப் போய் திப்பேரா ஜில்லாவில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மிகச் சிறந்த சேவை செய்தார். ஆனல், அவர் திடமான உள்ளம் படைத்தவராக இருந்தபோதிலும் அவருடைய உடல் அதிக பலவீனமானது. எனவே, உடல் நிலையைத் தேற்றிக்கொள்ளுவதற்காக அவர் சேவா கிராமத்திற்குப் போக

வேண்டியதாயிற்று. வங்காளத்தில் கலவரம் மூண்டது. நோவா காலியில் நடந்தவைகளைப் பற்றிய செய்திகள், அவர் மன நிம்மதியுடன் இருக்க முடியாதபடிச் செய்துவிட்டன. அவர் வங்காளத்திற்கு வந்தார். காந்திஜி, சாமுகானிக்கு வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னால் அவர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று வேலை செய்ய ஆரம்பித்தார்.

அவர் கண்டவை, அவரை மனம் சோரும்படிச் செய்தன. முதலில் தஸ்காரியா என்ற இடத்தில் வேலை செய்தார். மிகுந்த தெய்வ பக்தியுள்ளவராகையால், மக்களுக்கு மதம் அளிக்கும் ஆறுதலும் பறிக்கப்பட்டிருப்பதை அவரால் சகிக்க முடியவில்லை. பிறகு ஸ்ரீரந்தி என்ற கிராமத்திற்குப் போனார். அங்கே அவருக்கு 104 டிகிரி சுரமிருந்தும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். இதற்குக் காரணம் என்ன என்பதைக் குறித்துச் சொல்ல வேண்டியதில்லை.

உண்ணாவிரதத்தின் ஒன்பதாம் நாளன்று அவர் என்னிடம் ஓர் அறிக்கையை எழுதிக்கொள்ளச் சொன்னார். அதில் தமது உண்ணாவிரதத்தின் கருத்தை விளக்கினார். அதைப் பற்றிய விவரத்தை இப்பொழுது நான் கூறுவதற்கில்லை. ஒன்றை மாத்திரம் சொல்லிக்கொள்ளுகிறேன். செய்துவிட்ட தவறுக்காக உண்மையிலேயே வருந்தும் உணர்ச்சியைத் தமது மதத்தினரிடம் உண்டாக்கவேண்டும் என்பதற்காகவே அவர் பட்டினி கிடந்தார். உண்ணாவிரதம் நீடித்துக்கொண்டே போயிற்று. அவர் உயிருக்கு இருந்த ஆபத்தைக் குறித்து எனக்குக் கவலை அதிகமாயிற்று.

என்ன செய்வது என்பதே எங்களுக்கெல்லாம் புரியவில்லை. பிபி அம்துல் சலாம் மாத்திரமே சாந்தமாக இருந்தார். கடவுள் இஷ்டம்போல் நடக்கட்டும் என்று விட்டுவிட்டார்; சாகவும் தயாராயிருந்தார். நம்பிக்கைக்கு அது ஒரு சோதனை. கடைசி வாரத்தில் தனக்கு இருந்த சுரத்தின் அளவைப் பார்க்கவும் அவர் அனுமதிக்கவில்லை. அவருடைய மூத்திரத்தைச் சோதித்துப் பார்க்க விரும்பினோம். இதையும் அவர் ஆட்சேபித்தார். அதனால் என்ன நன்மை? அதிகக் கவலையையே அது உண்டாக்கும். தூரத்திலிருந்தும் சமீபத்திலிருந்தும் நண்பர்கள் வந்து அவரைப் பார்த்தார்கள். துன்பத்தை வீரமாக அவர் சகித்துக்கொண்டு வருவதைக் கண்டு திகைத்துப் போயினர். தினமும் குரானையும் கீதையையும் படிக்கச் சொல்லிக் கேட்பார். இது அவருக்கு மனச்சாந்தியை அளித்தது. ஒரு டாக்டர் நண்பர் அவரிடம் வந்து, "சகோதரி, உங்கள் உயிர் உங்களுக்குச் சொந்தமானது அல்ல; குளுகோஸ் இன்ஜக்ஷன் உங்களுக்குக் கொடுக்க என்னை அனுமதிக்கமாட்டீர்களா? நீங்கள் பிரக்ஞையற்றிருக்கும் போதாவது அதைச் செய்ய தயவுசெய்து எனக்கு அனுமதி கொடுங்கள்" என்று எவ்வளவோ கேட்டுக்கொண்டார். அவர் கண்ணைத் திறந்து பார்த்து சிரமத்தின் பேரில் பேசினார். அவர்

குரலில் சப்தமே இல்லை; என்ருலும், தெளிவாகவும் நிதான மாகவும் பேசினர்: "என் உயிரை நான் ஆண்டவனிடம் ஒப்படைத்துவிட்டேன். அவர் இஷ்டம் எதுவோ அது நடக்கும். நான் உயிருடனிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினல், நான் சாகமுடியாது. நான் இன்ஜக்ஷன் போட்டுக்கொள்ள முடியாது. உண்ணுவிரதம், அதன் நோக்கம் நிறைவேறும் வரையில் தொடர்ந்து நடக்கவேண்டியதே."

போலீஸாருக்கும் உள்ளூர்த் தலைவர்களுக்கும் கூட அதிகக் கவலையாகிவிட்டது. அவர்களாலான வரையில் முயற்சி செய்து பார்த்தார்கள். அவர்கள் காந்திஜியிடம் சென்று, எப்படியாவது உண்ணுவிரதம் முடியும்படிச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதை அவர் செய்யமுடியாது. அச் சகோதரி தம் இஷ்டப்படியே உண்ணுவிரதத்தை மேற்கொண்டிருந்தார். விரதத்தை நிறுத்தும்படி கட்டாயப்படுத்துவதில்லை என்றும் காந்திஜியிடம் வாக்குறுதி வாங்கிக்கொண்டிருந்தார். காந்திஜி தமது யாத்திரையில் ஜனவரி 20-ஆம் தேதி ஸ்ரீரந்திக்குப் போகத் திட்டமிட்டிருந்தார். அந்நாள், பிபி அம்துல் சலாமின் உண்ணுவிரதத்தின் 25-ஆம் நாள். அத்தனை நாள் அவர் உயி ரோடிருப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. எனவே, காந்திஜி முன்னடியே வரவேண்டும் என்று விரும்பினேம். அவர் ஸ்ரீரந்தியில் இருந்தால், வேறு எதனலும் ஏற்படாததை அடையமுடியும், உண்ணுவிரதமும் வெற்றிகரமான முடிவை அடையக்கூடும் என்று கருதினேம். தமது பிரயாணத் திட்டத்தை மாற்றிக்கொள்ள காந்திஜி விரும்பவில்லை. பிபிக்கும் இதில் விருப்பம் இல்லை. "அவர் மடியிலேயே நான் உயிர்விட வேண்டும். எனவே, என் முடிவான கட்டத்தில் அவர் வரட்டும்" என்ருர். எனவே, காந்திஜி 20-ஆம் தேதி ஸ்ரீரந்திக்கு வந்தார். நோயுற்று அதிகப் பலவீனமான நிலைமையில் பிபி இருந்தும், காந்திஜி வந்து தங்குவதற்கான ஏற்பாடுகளையும் அவரே கவனித் தார். காந்திஜியிடம் அவருக்கு அவ்வளவு பக்தி. தம்மால் நடக்கமுடியாததால், காந்திஜியை வரவேற்க என்னையும் அபா காந்தியையும் அனுப்பினர்.

பிற்பகல் 3 மணிக்கு ஒரு முஸ்லிம் தூதுகோஷ்டியினர் வந்து காந்திஜியைப் பார்த்தனர். நடந்துவிட்டவைகளுக்காக அவர்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள். பிபி உண்ணுவிரதத்தை நிறுத் தும்படிச் செய்யவேண்டும் என்று அவர்கள் காந்திஜியைக் கேட்டுக் கொண்டனர். இதற்குக் காந்திஜி கூறிய பதிலாவது:

"ஹிந்துக்களின், முஸ்லிம்களின் நண்பன் என்ற முறையி லேயே நான் இங்கே வந்திருக்கிறேன். என் உள்ளத்தைப் பிளந்து நீங்கள் பார்ப்பீர்களாயின் அன்பைத் தவிர வேறு ஒன்றையும் அங்கே காணமுடியாது. பிபி அம்துல் சலாம் எனக்கு மகளைவிட மேலானவர். அவரை இழந்துவிட நான் விரும்ப

வில்லை. என் பராமரிப்பிலிருக்கும் முஸ்லிம் சிறுவர்களுக்கு, அவர்கள் தங்கள் மதத்தில் உறுதியுடன் இருக்கவேண்டும் என்று போதித்து வருகிறேன். அவர்கள் நமாஸ் ஓதும்படியும், ரம்ஜான் அனுசரிக்குமாறும் பார்த்துவருகிறேன். தமது முஸ்லிம் சகோதரர்கள் மத விஷயத்தில் கொஞ்சமும் சகிப்புத்தன்மை யின்றி நடந்துகொண்டதைச் சகிக்க முடியாமலேயே பிபி உண்ணவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார். இஸ்லாமினிடம் அவருக்குப் பக்தி உண்டு; ஆனால், ஹிந்துக்களை அவர் வெறுக்க வில்லை. உண்ணவிரதம் இருப்பதற்கு அவர் என்னிடம் அனுமதி பெறவில்லை. அவருடைய நம்பிக்கையை நான் அலட்சியம் செய்துவிடமாட்டேன். உண்ணவிரதத்தின் நோக்கம் நிறை வேறியாக வேண்டும். தாங்கள் செய்துவிட்ட தவறுகளை முஸ்லிம்கள் உணர்ந்து அதற்காக வருந்தவேண்டும் என்பதற் காகவே அவர் உண்ணவிரதமிருக்கிறார். முஸ்லிம்கள், செய்து விட்ட தவறுகளுக்காக உண்மையிலேயே வருந்துவார்களாயின், இனி அதுபோல் நடக்காது என்று உறுதி கூறுவார்களானால், உண்ணவிரதத்தை நிறுத்திவிடுமாறு அவரைக் கேட்டுக்கொள்ளு கிறேன். மனிதன் என்ன பெயர்கொண்டு அழைத்தாலும் கடவுள் ஒருவரே.

"பாகிஸ்தானைப் பலாத்காரத்தைக் கொண்டு ஏற்படுத்தி விடமுடியாது என்று காயிதே ஆஜம் ஜின்னா கூறினார் என 'மார்னிங் நியூஸ்' பத்திரிகையில் படித்தேன். பாகிஸ்தானில் சிறுபான்மையினருக்குப் பூரண சுதந்திரமும் பாதுகாப்பும் இருக் கும் என்றும் அவர் சொல்லுகிறார். ராஜீய வேலைக்காக நான் கிழக்கு வங்காளத்திற்கு வரவில்லை. ஜீவகாருண்யப் பணிக் காகவே நான் வந்திருக்கிறேன். ஹிந்துக்கள் கிழக்கு வங்காளத் திலிருந்து போய்விடவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அதைப் பகிரங்கமாகச் சொல்லிவிட வேண்டும். அப்படியில்லை யென்றால், நடந்துவிட்ட தவறுகளுக்குப் பரிகாரத்தைத் தேடி, இனி இவ்வாறு நடக்காது என்றும் உறுதிமொழி அளிக்க வேண்டும். அப்பொழுது உண்ணவிரதத்தை நிறுத்திவிடும்படி பிபி அம்துல் சலாமை நிச்சயமாக நான் வற்புறுத்துவேன். ஆனால், நீங்கள் மனத்தில் ஒன்று வைத்துக்கொண்டு பேச்சில் இன்னுமொன்றைக் கூறுவீர்களானால், அளித்த வாக்குறுதியை மீறிப் பின்னால் நடந்துவிடுவீர்களாயின், அம்துல் சலாமின் உண்ணவிரதத்திற்குப் பதிலாக என்னுடைய உண்ணவிரதத் தைப் பார்க்க வேண்டியவர்களாகிவிடுவீர்கள். ஜில்லா முழுவ தற்கும் உங்களையே பொறுப்பாக நான் கொள்ளமுடியாது. ஆனால், உங்கள் பகுதியில் அமைதி நிலவுவதற்குப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்விதம் நீங்கள் செய்வீர் களானால், நோவாகாலி முழுமைக்கும் மாத்திரமல்ல, கிழக்கு வங்காளத்தின் அமைதிக்கே நீங்கள் அஸ்திவாரமிட்டவர்களா வீர்கள்."

பிறகு தூதுகோஷ்டியினர் தங்களுக்குள் கலந்தாலோசித்துக் கொண்டு ஒரு முறையை வகுத்துக்கொண்டார்கள். இதுவரை நடந்துவிட்டவைகளுக்குத் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டதோடு, ஸ்ரீரந்தி கிராமத்திலும் பக்கத்து நான்கு கிராமங்களிலும் ஹிந்துக்களுக்கு மத சுதந்திரத்தைப் பாது காப்பது என்றும் உத்தரவாதம் அளித்தார்கள்.

இந்த உறுதி மொழிப் பத்திரத்தில் மேலே கண்ட ஐந்து கிராமங்களின் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டார்கள். ஒப்பந்தம் முடிவாவதற்கு இரவு 9 மணிக்கு மேல் ஆகிவிட்டது. முஸ்லிம் நண்பர்கள் குரான் ஓதிய பிறகு காந்திஜி, பிபி அம்துல் சலாமுக்கு ஒரு கோப்பை ஆரஞ்சுப் பழ ரசத்தைக் கொடுத்தார்.

[எஸ். என். எழுதியது.]

—'ஹரிஜன்' - 6—4—1947

# 29

# சாத்தியமில்லாத யோசனை

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது : "நான் ஒரு முஸ்லிமின் வீட்டில் தங்கியிருப்பதைக் குறித்து அதிக மகிழ்ச்சியடைகிறேன். என்னையும் என் கோஷ்டியினரையும் நன்ருகக் கவனித்து வருகிருர்கள். சாத்தியமான வரையில் அதிகம் பேர் கூடுவதற்கான ஒரு மைதானத்தைக் கண்டு பிடிக்கும் அளவுக்கு முஸ்லிம்கள் உதவி செய்தார்கள். என் யாத்திரையில் நடந்த கூட்டங்களையெல்லாம்விட இது பெரிய கூட்டமாகவும் ஆகிவிட்டது. பிபி அம்துல் சலாமின் உண்ணு விரதமே இவ்வளவு பெரிய கூட்டத்திற்குக் காரணம். அப்துல்லா சாகிபின் முயற்சியினுலும் அவருடைய உதவியினுலும், சம்பந்தப் பட்ட கிராமங்களிலுள்ள முக்கியமான முஸ்லிம்களின் உதவி யாலும் உண்ணுவிரதம் ஆனந்தமான வகையில் முடிவுற்றது. இந்த என்னுடைய ஊகம் சரியானதாக இருந்தாலும், இல்லாது போனுலும், நான் இங்கே தெரிவித்திருக்கும் நம்பிக்கையைக் கொண்டு என்னையே பாராட்டிக்கொள்ளுகிறேன்.

"சில பத்திரிகைகள் பொது மக்களிடையே விஷத்தை ஊட்டி வருவதைக் குறித்து வருந்துகிறேன். பைபிள், குரான், கீதை முதலிய மற்ற சமய நூல்களுக்குப் பதிலாக இன்று பத்திரிகை கள் புகுந்திருக்கின்றன. இது தவறு என்ருலும் உண்மை நிலைமை யைச் சமாளித்தே ஆக வேண்டும். இந்நிலைமை இருக்கும்போது வாசகர்களுக்கு உண்மையைத் தவிர வேறு எதையும் கொடுத்து விடாமலிருப்பது பத்திரிகையாளர்களின் கடமை. ஒரு மாகா ணத்திலிருக்கும் சிறுபான்மையினரை, அவர்கள் பெரும்பான்மை

யினராக இருக்கும் மாகாணங்களுக்கு அனுப்பிவிடலாம் என்பது சாத்தியமில்லாத யோசனை. காலஞ் சென்ற இரு இமாம் சகோதரர்களும், காலஞ் சென்ற மஜ்ஹாருல் ஹக் சாகிபும் இரு சமூகங்களுக்கும் தலைமை வகித்து நடத்திய காலத்தை அறிவேன். காலஞ் சென்ற பிரிஜ்கிஷோர் பிரசாத், டாக்டர் ராஜேந்திர பிரஸாத் போன்ற முக்கியமான ஹிந்து தலைவர்கள் அப்பொழுது அவர்களின் கீழிருந்து மகிழ்ச்சியுடன் வேலை செய்து வந்தார்கள். அந்தப் பீகாரின் முஸ்லிம்கள், பீகாரை விட்டு வெளியேறக்கூடாது. சில பீகார் ஹிந்துக்கள் மிருகத் தனமாக நடந்துவிட்டார்கள் என்பது உண்மை. தங்கள் வீடு வாசல்களில் இருந்து வருவதற்கு முஸ்லிம்களுக்கு உரிமை உண்டு. அப்படியிருக்க, நடந்துவிட்ட அக்கிரமங்களுக்காக, வீரத்துடன் தங்கள் வீடு வாசல்களில் இருந்தாக வேண்டிய கடமையிலிருந்து முஸ்லிம்கள் மாறிவிடக்கூடாது. வெறி கொண்ட ஹிந்துக்கள் செய்துவிட்ட தவறுகளுக்கெல்லாம் பீகார் ஹிந்துக்கள் பரிகாரம் தேடியாகவேண்டும். நோவாகாலி ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இதையே கூறுவேன். நான் தங்குவதற்கு இடம் கொடுக்க இக்கிராமத்தில் முஸ்லிம்கள் இருப்பது நல்ல சகுனமே. தனி ஒரு ஹிந்துவும் தங்கள் மத்தியில் பத்திரமாக இருக்கும்படிப் பார்ப்பது முஸ்லிம்களின் கடமை. ஹிந்துக்களும் நோவாகாலியிலேயே இருப்பதற்கு வேண்டிய நம்பிக்கையும் இருக்க வேண்டும்."

— 'ஹரிஜன்' - 9—2—1947

# 30

## சுதந்திர தினம்

பன்ஸா என்ற கிராமத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத் தன்று சுதந்திர தினம். எனவே, அக்கூட்டத்தில் பேசிய காந்திஜி, சுதந்திரப் பிரச்னையைப் பற்றியே பேசினர். அன்று பாடிய கீதம், காலஞ்சென்ற ரவீந்திரநாத டாகுர் இயற்றிய பாடலாகும். சுதந்திர இயக்கத்தின் சரித்திரத்தைக் காந்திஜி சுருக்கமாக எடுத்துக் கூறினர். அவர் சொன்னதாவது :

"இந்தியாவின் சுதந்திர இயக்கம், காங்கிரஸ் தோன்றிய பிறகு திட்டமான உருவுக்கு வந்தது. 1916-ஆம் ஆண்டு முதல் இந்த இயக்கம் கிராமங்களிலும் பரவியது. அதன் பிறகு முடிவாகக் காங்கிரஸ் சுதந்திரத் தீர்மானத்தைப் பிரகடனம் செய்தது. அதிலிருந்து ஜனவரி 26-ஆம் தேதியை இந்தியா முழுவதிலும் சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகிருர்கள். விடுதலை இயக்கத்தில் லட்சக்கணக்கானவர்கள் பங்குகொண் டிருக்கிருர்கள். இந்தியாவின் விதி அதற்கு விரோதமானதாக

இல்லாதிருக்குமானால், உள்ளுக்குள் இந்நாடு பிளவுபடாமலிருந் திருக்குமானால், நம் மத்தியில் இக்கூட்டத்தில் மூவர்ணக் கொடி கம்பீரமாகப் பறப்பதைப் பார்த்திருப்போம். ஆனால், நம்முள் பிளவு இருந்து வருவதால் அக்கொடியை இங்கே பறக்கவிட வேண்டாம் என்று நண்பர்களிடம் கூறிவிட்டேன். அக்கொடி, இந்தியா முழுமைக்குமான கொடி. ஆனால், துரதிருஷ்டவசமாக நம் முஸ்லிம் சகோதரர்கள் இக்கொடி சம்பந்தமாகப் பெருமைப் படவில்லை. இதை வெறுத்தும் வருகின்றனர். அவர்கள் முகத்தின் முன்பு இக்கொடியை நான் பெருமையுடன் வீச முடியாது. பழம் அநேகமாக நம் கைக்கு எட்டியதாக இருக் கிறது. முடிவாக எல்லா இந்தியரும் சுதந்திரமடைய விரும்ப வில்லை என்றால், சுதந்திரத்திற்காகப் போராடத் தயாராக இல்லை என்றால், சுதந்திரத்தை வெளியிட அரசியல் நிர்ணய சபையினாலும் முடியாது. ஒரு மாகாணம்கூட சுதந்திரத்தை எடுத்துக்கொண்டுவிட முடியும் என்பது உண்மை. ஆனால், இந்தியா முழுமைக்குமான சுதந்திரமே என் மனத்தில் இருந்து வருகிறது. எனவே, இந்தியா முழுவதும் ஒரே மனத்தோடு சுதந்திரத்தைப் பெற ஆர்வங்கொண்டு அதற்காகப் பாடுபடும் என்று நம்புகிறேன். கொடி, இக்கூட்டத்தில் பறக்காவிட்டாலும் நான் தங்குவதற்கென்றுள்ள இடத்தில் இன்று காலை அக்கொடி ஏற்றப்பட்டது. சுதந்திரத்திற்கான மகத்தான வேலையில் தங்கள் வாழ்வையே அர்ப்பணம் செய்திருந்த பெரியாரான நேதாஜி யையும் மற்றவர்களையும் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்."

—'ஹரிஜன்' - 9—2—1947

# 31

# நடை யாத்திரை ஆரம்பம்

ஜனவரி 27-ஆம் தேதி திங்கட்கிழமை காந்திஜியின் மௌன விரத தினம். ஆகவே, அன்று பல்லாவில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி எழுதியிருந்த பிரசங்கம் படிக்கப்பட்டது. அதில் அவர் கூறியதாவது :

"ஒரு நெசவாளி நண்பரின் வீட்டில் நான் தங்கியிருப்பதைக் குறித்து முதலில் என் திருப்தியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். பெருஞ் சுவர்களைக் கொண்ட சிறை போன்ற அரண் மனைகளைவிட வங்காளத்தின் குடிசைகளில் வசிப்பது எனக்குப் பிரியமாக இருக்கிறது. அன்பு ஆட்சி புரியாத அரண்மனையை விட, அன்பு முற்றிலும் நிறைந்திருக்கும் வீடு எவ்வளவோ உயர் வானதாகும். நான் இன்று வசிக்கும் குடிசைகளில், நிறைய வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்கிறது. நாட்டின் நாற்புறங்

களிலும் இயற்கை பொழியும் வளமும் இருக்கிறது. ஆனால், இத்தகைய அழகான, வளம் மிக்க இப்பகுதியில் எனக்குத் துக்கத்தை அளித்து வருவதெல்லாம், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் விரோதிகளாக இருந்து வருவதே. நமது பொதுவான ஜீவகாருண்யத்தைக் கெடுத்து விடுவதற்கு மத வித்தியாசமே போதுமானதாகுமா? மாறுபட்ட சக்திகளையெல்லாம் முடிவில் முறியடிப்பதற்கு, அடிப்படையான பகுத்தறிவின் சக்தி பயன்படவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

"என்னுடைய இப்புனித யாத்திரையில், நாசமாக்கப்பட்டு பாழடைந்து கிடந்த வீடுகளையும், யாருமே இல்லாத கடைத் தெருக்களையும், பள்ளிக்கூடங்களையும் பார்த்தேன். அதோடு இரு சமூகங்களைச் சேர்ந்தவர்களும், ஒருவருக்கொருவர் ஒத்துழையாதாராக இருந்துவரும் நிலையையும் கண்டேன். இவையெல்லாம் யாருக்கு லாபம்? ஹிந்துக்களுக்கா, முஸ்லிம்களுக்கா? விவசாயம் ஒழுங்காக கவனிக்கப்படவில்லை; பஞ்சப் பிசாசு புகுந்துவிடும் நிலையும் இருந்துவருகிறது. கிராமங்களெல்லாம் ஆபாசமாக இருக்கின்றன. நீரும் சுத்தமில்லாதிருக்கிறது. புதிய, விரிவான கல்வித்திட்டம் ஒன்றே, வெகு நீண்ட காலமாகத் தூங்கிக் கொண்டிருந்துவிட்ட மக்களைத் தட்டி எழுப்ப முடியும். இந்தப் பிரச்னைகளையெல்லாம் சமாளிக்கக்கூடிய சக்தியையும் புத்திசாலித்தனத்தையும் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அளிக்கவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். அரசாங்கத்தை கஷ்டப்படுத்தாமல் இப்பிரச்னைகளையெல்லாம் தீர்த்துக் கொள்ளுவதில் நீங்கள் வெற்றி பெற்று விடுவீர்களானால், இன்று காணும் துவேஷ சக்திகளை அதிக தூரம் வென்றுவிட்டவர்களாவீர்கள்."

# 32

# விரிவான மதம்

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசுகையில், சில முஸ்லிம் நண்பர்கள் கேட்ட ஒரு கேள்விக்கு முதலில் பதிலளித்தார். அவர் கூறியதாவது: "என்னுடைய பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு முஸ்லிம்கள் வரவேண்டும் என்று விரும்புகிறேனா என்று கேட்கிறார்கள். ஹிந்துக்களோ, முஸ்லிம்களோ என் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரவேண்டும் என்று நான் விரும்பவில்லை என்பதுதான் அக்கேள்விக்கு என் பதில். அத்தகைய கூட்டங்களுக்கு முஸ்லிம்கள் வரவேண்டும் என்று நான் விரும்புவேனா என்பதே கேட்கப்பட்ட கேள்வியின் பொருளாக இருக்குமானால், அவர்கள் வரவேண்டும் என்று நிச்சயமாக விரும்புவேன் என்று

கொஞ்சமும் தயக்கமின்றிக் கூறுவேன். உண்மை என்னவென்றால், அநேக ஆண்டுகளாக நடந்துவரும் பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு ஏராளமாக முஸ்லிம்கள் வந்திருக்கிறார்கள். இன்னுமொரு கேள்வியும் கேட்கின்றனர். முஸ்லிமல்லாத நான், குரானிலிருந்து சிலவற்றை ஓதுவதும், ராமா, கிருஷ்ணா என்பதும், ரஹீமையும் கரீமையும் சேர்த்துச் சொல்லுவதும் தவறு என நான் கருதவில்லையா என்று கேட்கிறார்கள். இவ்விதம் நான் கூறுவதைக் கேட்பது முஸ்லிம்களுக்கு வெறுப்பாக இருக்கிறது என்கின்றனர். இந்த ஆட்சேபம், எனக்கு வேதனையையும் ஆச்சரியத்தையுமே தருகிறது. இவ்விதம் ஆட்சேபிப்பதால், இவர்கள் தங்களுடைய குறுகிய புத்தியையே வெளிப்படுத்திக் கொள்ளுகின்றனர் என்றும் கருதுகிறேன். பக்தியுள்ள முஸ்லிமும் மதப்பற்று மிகுந்தவருமான பிபி ராய்ஹனா தயாப்ஜியின் மூலமே குரானிலிருந்து பிரார்த்தனையில் சேர்த்தேன் என்பது உங்களுக்குத் தெரியவேண்டும். இவ்வாறு செய்ததில் ராஜீய நோக்கம் எதுவும் எனக்கு இல்லை. சிலர் சொல்லுவது போன்று நான் அவதார புருஷன் அன்று. மிகத் தாழ்வான ஆணையோ, பெண்ணையோவிடவும் இன்னும் தாழ்வான, கடவுளின் மனிதன் என்றே நான் என்னைக் கருதிக்கொள்ளுகிறேன். முஸ்லிம்கள், நல்ல முஸ்லிம்களாக வேண்டும், ஹிந்துக்கள், நல்ல ஹிந்துக்களாகவேண்டும், கிறிஸ்தவர்கள், நல்ல கிறிஸ்தவர்களாக வேண்டும், பார்சிகள், நல்ல பார்சிகளாக வேண்டும் என்பதே எப்பொழுதும் எனது நோக்கம். எந்த ஆணோ, பெண்ணோ தனது மதத்தை மாற்றிக்கொள்ளும்படி நான் என்றும் சொன்னதில்லை. ஆகையால், உலகத்தின் சமய நூல்களிலிருந்தெல்லாம் எடுத்துச் சேர்த்துக்கொள்ளும் அளவுக்கு என் மதம் அதிக விசாலமானது என்பதைக் கண்டு, கேள்வி கேட்டவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நம்புகிறேன்.

"குற்றங்களைச் செய்திருக்கும் முஸ்லிம்களின் பேரில் ஹிந்துக்கள் வழக்குகளைத் தொடுத்திருப்பது, இரு சமூகங்களுக்குமிடையே சமரசம் செய்து வைப்பதற்கு இடையூறாக இருக்கிறது என்று சில நண்பர்கள் சொல்லுகிறார்கள். இது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. குற்றவாளிகள் மீது வழக்கு நடப்பதற்கும் கனவான்களுக்குள் அமைதி இருப்பதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? பொய் வழக்குகளை வாபஸ் வாங்கிக்கொண்டு விடவேண்டும் என்பதே இந்த ஆட்சேபத்தின் பொருள் எனில், அதை நான் புரிந்துகொள்ள முடியும். அப்பொழுது ஆட்சேபிப்பவர்களை முழு மனத்துடன் ஆதரிப்பேன். அப்படி பொய் வழக்குத் தொடர்ந்திருப்பவர்கள் மீது பொய் சாட்சியம் கூறியதற்காக வழக்குத் தொடரவேண்டும் என்று கூட நான் கூறுவேன். கோர்ட்டு நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்குச் சரியான வழி ஒன்று இருக்கிறது. குற்றஞ் செய்துவிட்டவர்கள், பணிவுடன் பகிரங்கமாகத் தங்கள் குற்றத்தை ஒப்புக்

கொண்டு மக்களின் தீர்ப்புக்கு உட்படவேண்டும். இத்தகைய ஏற்பாட்டுக்கு மகிழ்ச்சியுடன் நான் உதவி செய்வேன்.

"இங்கிலாந்து, ரஷ்யா முதலிய நாடுகளில், ஒவ்வொரு குடும்பமும், திடமுள்ள ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் நாட்டின் பாதுகாப்புச் சேவைக்காக அனுப்பியிருக்கிறது. உலகில் இந்த வகையில் உள்ளத்தில் ஒற்றுமை நடைமுறையில் பெறப்படுகிறது. உள்ளத்தில் ஒற்றுமை இல்லையானால் வாழ்வே வீண். ஆகையால் நம் நாட்டில், சிறு சுயநல எண்ணங்களையெல்லாம் விட்டுவிட்டு மன ஒற்றுமையை ஏற்படுத்திக்கொள்ள நம்மால் முடியவேண்டும் என்று நம்புகிறேன்."

—'ஹரிஜன்' - 23—2—1947

# 33

# முஸ்லிம்களின் ஹிந்து பகிஷ்காரம்

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது: "இக்கூட்டத்திற்கு நீங்கள் ஏராளமாக வந்திருப்பதோடு பிரார்த்தனையின்போது முழு அமைதியுடன் இருந்ததற்காக முதலில் உங்களைப் பாராட்டுகிறேன். கோஷா முறையைக் குறித்தும், இஸ்லாம் சம்பந்தமான மற்றவைகளைப் பற்றியும் கூற எனக்கு இருக்கும் உரிமையை ஆட்சேபித்துச் சிலர் கூறியது சம்பந்தமாக எனக்கு ஆறுதல் கூறி முஸ்லீம்கள் இரு கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். இவர்கள் குரானிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் கூறி, அது விசாலமான அடிப்படையைக் கொண்டது என்றும், விசேஷ சகிப்புத்தன்மை வாய்ந்தது என்றும் சொல்லியிருக்கிறார்கள். குறை கூறுவதை அது வரவேற்கிறது என்றும், குரானைப் படித்துப் பார்க்கும்படி உலகத்தை அழைத்திருக்கிறது என்றும் கூறுகின்றனர். இவர்களில் ஒருவர், ஒரு தீர்க்க தரிசியோ, உபதேசகரோ இல்லாது எந்தக் கோஷ்டியினரும், நாட்டினரும் இருந்தது இல்லை என்றும் சொல்லுகிறார். நான் கருதுவதை, சகிக்க முடியாத கருத்துக்கள் என்று எல்லா முஸ்லிம்களுமே ஒப்புக்கொள்ளவில்லை என்பதைக் காட்டுவதற்காகவே அக்கடிதங்களைப் பற்றி இங்கே சொன்னேன். இவற்றை எழுதியவர்கள் துவேஷ மனப்பான்மையுள்ளவர்கள் அல்ல. ஆகையால், முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இக்கூட்டத்தினர், கடிதம் எழுதியிருக்கும் இருவரின் சாட்சியத்தைப் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

"சில ஊழியர்கள் என்னிடம் ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஹிந்து தொழிலாளிகளை (தச்சர், கொல்லர் போன்றவர்களை) முஸ்லிம்கள் பகிஷ்காரம் செய்வதால் அவர்கள், மீன்

பிடிப்பது, வெற்றிலை பயிரிடுவது போன்ற வேலைகளைச் செய்து வருகிறார்கள். இரு சமூகங்களுக்குமிடையே ஒற்றுமையை உண்டாக்க முயன்றுவரும் ஊழியர்கள், இந்த நிலைமையில் தாங்கள் செய்யவேண்டியது என்ன என்று கேட்கிறார்கள். இச்செய்தி மிகைபடுத்திக் கூறப்படும் செய்தி, இந்தப் பகிஷ்காரம் மிகச் சொற்ப முஸ்லிம்களிடமே இருந்துவருகிறது என்று நம்புகிறேன். இந்தப் பகிஷ்காரம் நீடித்து நடந்து வரமுடியாது என்றும் எண்ணுகிறேன். இது நடந்து வருமானால், இதன் பலனை ஹிந்துக்கள், முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட மாகாணங்களிலிருந்து வெளியேறிப் போய்விடுவதிலேயே முடியும். இது நடப்பதை எந்த ஒரு தலைவரும் ஆதரிப்பதாகவோ, இப்படி நடக்கவேண்டும் என்று எண்ணுவதாகவோ நான் கேள்விப்படவும் இல்லை. இத்தகவலை என்னிடம் கூறுகிறவர்கள், இதை அதிகாரிகளிடம் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லுவது பகிஷ்கரிப்பவர்களை அதிகாரிகள் தண்டிக்கவேண்டும் என்பதற்காக அல்ல; ஆனால், அவர்களிடமிருந்து அதிகார பூர்வமான அறிவிப்பு வெளிவரட்டும் என்பதற்காகவே ஆகும். இரு சமூகத்தினருக்கும் நல்ல புத்தி உண்டாகவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொள்ளுமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

—'ஹரிஜன்' - 23—2—1947

# 34

# ஏன் இந்தக் குறுகிய புத்தி?

கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த நோவாகாலி ஜில்லாவில் காந்திஜி 1947 பிப்ரவரி மாதம் பாத யாத்திரை செய்தவண்ணம் கிராமம் கிராமமாகச் சென்று மக்களுக்கு அன்பையும் அமைதியையும் போதித்து வந்தார். அப்போது ஒரு கிராமத்தில் நடந்த கூட்டத்திற்கு, அதற்கு முன் எங்கும் கண்டிராத விதத்தில் ஏராளமான முஸ்லிம்களும், ஹிந்துக்களும் வந்திருந்தார்கள். எனவே, கூட்டத்தில் சந்தடி அதிகமாக இருந்தது. அப்போது காந்திஜி பேசியதாவது :

உலகில் எந்த இடத்தில் கூட்டம் நடந்தாலும், அதற்குப் பொதுவான விதி ஒன்று உண்டு. அதாவது, கூட்டத்திற்கு விஜயம் செய்வோர், எவ்வளவு திரளான மக்கள் வந்திருந்தாலும், முற்றிலும் அமைதியாகவும், சந்தடியின்றி மௌனமாகவும் இருக்க வேண்டும்.

நேற்று மாலை நடந்த கூட்டம் ஒன்றில் ஒரு மௌல்வி சிறிது நேரம் பேச விரும்பினார். அவர் என்ன பேச விரும்புகிறார் என்பதை நான் ஊகித்துக்கொண்டேன். அவர் சரியாக ஐந்து நிமிஷங்களே பேச விரும்பியதால், வழக்கத்திற்கு விரோதமாக

அவரை நான் பேச அனுமதித்தேன். மௌல்வி சாகிப் மூன்று நிமிஷங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளவில்லை. அதற்குள்ளேயே அவர் விரும்பியதைப் பேசிவிட்டார். வங்காளத்தில் வழக்கத்தில் இருந்து வரும் கோஷா முறையைப் பற்றி நான் கூறியதைக் கோபத்துடன் கண்டித்தார். இஸ்லாமிய சட்டத்தைப்பற்றிப் பேச எனக்கு உரிமையில்லை என்றார். இது, இஸ்லாமைப்பற்றிய குறுகிய நோக்கமாகும் என்றே எண்ணுகிறேன். இஸ்லாம் மத உபதேசங்களை ஆராய்ச்சி செய்து, விளக்கம் கூற எனக்கு உரிமை உண்டு. ஸ்ரீ ராமனை ரகீமுடனும், ஸ்ரீ கிருஷ்ணனை கரீமுடனும் ஒப்பிடுவதைக் குறித்தும் மௌல்வி சாகிப் கோபம் கொண்டார். ஸ்ரீ ராமன் இளைஞனை ஒரு மன்னனே என்றும், ஆனால், ரகீம் கடவுளின் பெயர் என்றும் அவர் குறிப்பிட்டார். இதுவும் இஸ்லாமைப் பற்றிய குறுகிய நோக்கமேயாகும். இஸ்லாம், பெட்டிக்குள் அடைத்து வைத்துப் பாதுகாக்கும் ஒரு கொள்கை அல்ல. இஸ்லாமின் கொள்கைகளைப் பரிசீலனை செய்யவும், அவற்றை அங்கீகரிக்கவும் அல்லது நிராகரிக்கவும் மனித வர்க்கத்திற்கு உரிமை உண்டு. இஸ்லாமைப் பற்றிய இந்தக் குறுகிய நோக்கத்தில், வங்காளத்திலும், இந்தியாவிலும் கூட உள்ள முஸ்லிம்களுக்குப் பங்கு இராது என்றே நம்புகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில், சங்கிர்கானில் டாக்டர் சுசீலா நய்யார் செய்து வரும் தொண்டை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சேவா கிராமத்தில் உள்ள ஆஸ்பத்திரியின் நிர்வாகப் பொறுப்பு அவரைச் சார்ந்தது. எனவே, அவர் சேவா கிராமத்திற்குச் செல்ல விரும்பினர். ஆனால், அவரிடம் சிகிச்சை பெற்று வரும் முஸ்லிம் நோயாளிகள், தங்களுடைய உடல் நிலை குணமாகும் வரையில் அவரைச் சேவா கிராமத்திற்குச் செல்லவிடவில்லை. சென்ற அக்டோபர் மாதம் நடந்த கொள்ளையில் பங்கு எடுத்துக்கொண்டோர், கொள்ளையடித்த சொத்துக்களில் சிலவற்றைத் தாங்களாக வலுவில் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்து வருகிறார்கள் என்றும் டாக்டர் நய்யார் கூறினர். இது மகிழ்ச்சி அளிக்கும் ஒரு நற்சகுனம் என்பதே எனது கருத்தாகும். கொள்ளையடித்த சாமான்களைத் திருப்பிக் கொடுக்கும் எண்ணம் பரவுமாயின், பின்னர் பொது மக்களின் கொள்ளை சம்பந்தப்பட்ட வரையில் கோர்ட்டுகளுக்கு வேலை இராது. கொள்ளையடித்த சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்தவர்கள் மீது வழக்குத் தொடரக்கூடாது என்றே நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுவேன். ஆனால், குற்றம் செய்தவராயினும் சரி அல்லது பொது மக்களாயினும் சரி, சாமான்களைத் திருப்பிக் கொடுப்பது மனப்பூர்வமானதாக இருக்க வேண்டும்; வழக்கைத் தவிர்ப்பதற்கு அவ்விதம் செய்வதாக இருக்கக்கூடாது. எனது குறிக்கோள் என்னவெனில், இதய மாற்றம் ஏற்படவேண்டும்; ராணுவத்தினலோ அல்லது போலீசாலோ திணிக்கப்பட்ட சமரசமாக இருக்கக்கூடாது

என்பதே. பொது மக்களின் மந்திரி சபை தனது விருப்பத்தை மக்களின்மீது திணிக்க முடியாது.

—'ஹரிஜன்' – 23—2—1947

# 35

# உள்ளங்கள் ஒன்றுபட வேண்டும்

[நோவாகாலியைச் சேர்ந்த சாதர்கில் என்ற கிராமத்தில், அந்த ஊரின் பிரபல தலைவரான சலி முல்லா சாகிபின் விசேஷ அழைப்பிற்கிணங்க அவரது பங்களாவின் காம்பவுண்டிற்குள் ஒரு பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. கைத் தாளம் போட்டு ராம பஜனை செய்வதில் தமக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று அவர் உறுதி கூறியிருந்தார். காந்திஜி பேசத் தொடங்கும் சமயத்தில் சில முஸ்லிம் நண்பர்கள் அவருக்கு வங்காளியில் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க விரும்பினார்கள். நண்பர்களுக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தால் அப்படியே செய்யலாம் என்றார் காந்திஜி. மசூதி களின் எதிரில் கொட்டு முழக்கம், பசு வதை போன்ற விஷயங்களைப் பற்றி அந்த உபசாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. காந்திஜி அப்போது பேசிய விவரங்களைக் கீழே காணலாம்:]

மசூதிகளின் எதிரில் மேளம் வாசித்தல், பசு வதை போன்ற பிரச்னைகளைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. அவை சட்ட சம்பந்தமான பிரச்னைகளாகும். உங்கள் உள்ளத்தைக் கவர்ந்து, எல்லோரையும் ஒன்றாகப் பிணைக்கவே நான் விரும்புகிறேன். இந்த லட்சியம் நிறைவேறினால், மற்றவையெல்லாம் தானாகச் சரியாகிவிடும். உங்களிடையே இதய ஒற்றுமை ஏற்படா விட்டால், எதுவும் சரியாக முடியாது. பின்னர் அடிமைத்தனமே உங்களுடைய துரதிருஷ்டமான விதியாகிவிடும். எல்லாம் வல்ல இறைவனை நாம் என்ன பெயரிட்டு அழைத்தாலும், அவரது அடிமைகளாக இருப்பதை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். அப்படியாயின், நீங்கள் எந்த மனிதருக்கோ அல்லது மனிதர் களுக்கோ முழந்தாளிட வேண்டியதில்லை. சாதாரண மனிதரான ஸ்ரீ ராமனை நான் கடவுளாக எண்ணிப் பேசுகிறேன் என்று கூறுவது அறியாமையாகும். எனது ராமன் கடவுள் போன்ற வரே என்று நான் அடிக்கடி தெளிவாகக் கூறியிருக்கிறேன். எனது ராமன் முன்பும் இருந்தார், இன்றும் இருக்கிறார், இனி எப்போதும் இருந்து வருவார். அவர் பிறவாதவர்; சிருஷ்டிக்கப் படாதவர். எனவே, நீங்கள் பல்வேறு மதங்களையும் சகித்துக் கொள்ள வேண்டும்; அவற்றை மதித்தும் நடக்க வேண்டும்.

நான் விக்கிரக ஆராதனையை எதிர்ப்பவன். அப்படி யிருந்தும் விக்கிரக பக்தர்கள் எனப்படுவோரிடம் சமமான

மரியாதை எனக்கு உண்டு. விக்கிரகங்களைப் பூஜை செய்வோரும், மண்கட்டியிலும், கிள்ளி எறியப்பட்ட நகத்திலும், எந்த இடத்திலும் வியாபித்திருக்கும் அதே கடவுளையே பூஜிக்கிறார்கள். ரகீம், ரஹ்மான், கரீம் என்ற பெயர்கள் உள்ள முஸ்லிம் நண்பர்கள் எனக்கு இருக்கிறார்கள். அவர்களைக் குறிப்பிடும்போது, அவர்களுடைய பெயர்களுடன் கடவுள் என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளலாமா?

நோவாகாலியிலோ அல்லது சுற்றுப்புறங்களிலோ எல்லாம் சரியாக இருந்து வருவதாக நீங்கள் எண்ணிவிட வேண்டாம் என்று எச்சரிக்கிறேன். எனக்குக் கிடைத்து வரும் செய்திகள் உண்மையாயின், இன்னும் அமைதியான நிலைமை ஏற்படவில்லை. அவ்விஷயங்களைப் பற்றியோ, அவற்றால் ஏற்படும் நாசத்தைப்பற்றியோ நான் குறிப்பிடுவதில்லை. ஏனென்றால், நான் மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட விரும்பவில்லை.

பதிலுக்கு அடி கொடுப்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. நான் பட்டாணியர்களுடன் வசித்திருக்கிறேன். தலைமுறை தலைமுறையாக பதிலுக்கு அடி கொடுக்கும் வழக்கத்தில் சலிப்படைந்த பாட்ஷா கான் (கான் அப்துல் கபார்கான்) அகிம்சையின் பெருமையைத் தெரிந்து கொண்டுள்ளார். அகிம்சை நெறியில் தாம் பூரணத்துவம் பெற்றுவிட்டதாக அவர் கூறிக்கொள்ளவில்லை. அவருக்குக் கோபம் உண்டாகும்படி செய்யமுடியும். எனினும், பழி வாங்கும் ஆசையை அடக்கிக்கொள்ளும் விவேகம் அவருக்கு உண்டு என்றே கூற விரும்புகிறேன். நோவாகாலியிலும் அத்தகைய மனநிலை ஏற்படவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். சமூகங்களுக்கிடையே உண்மையான அமைதி ஏற்பட்டாலொழிய, பாகிஸ்தானுக்கோ அல்லது ஹிந்துஸ்தானத்துக்கோ வழியில்லை என்பதில் நமக்கு மனப்பூர்வமான நம்பிக்கை ஏற்பட்டாலன்றி, அடிமைத்தனம்தான் நம்முடைய கதியாக இருக்கும்.

இளைஞர்களான நான்கு முஸ்லிம் நண்பர்கள் என்னை வந்து பார்த்தார்கள். நோவாகாலியிலும், பக்கத்தில் உள்ள பிரதேசங்களிலும் நிகழ்ந்த கொலைகளின் எண்ணிக்கையைப் பற்றி நான் மிகைபடக் கூறியிருந்ததைத் திருத்திக்கொள்ளவில்லை என்று அவர்கள் வருந்தினார்கள். நான் அவ்விதம் செய்யவில்லை. ஏனெனில் நான் கண்ணால் பார்த்ததை யெல்லாம் வெளியிட நான் விரும்பவில்லை. ஆதாரபூர்வமாகத் தெரிந்தால், ஆயிரம் பேர்கள் கொலையுண்டனர் என்பதற்கு ஆதாரம் இல்லை என்று நான் தங்கு தடையின்றிப் பிரகடனம் செய்வேன். ஆனால், அந்த எண்ணிக்கை மிகக் குறைவான மதிப்பேயாகும். எனினும், பீகார், கொலைகளின் எண்ணிக்கையிலும், காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளிலும் நோவாகாலியையும் மிஞ்சிவிட்டது என்பதை நான் ஒத்துக்கொள்ளவேண்டும். நான் இதை ஒத்துக்கொள்ளுவதன் அர்த்தம், நான் பீகாருக்குச் செல்லவேண்டும்

என்பதல்ல. இங்கே செய்வதைக் காட்டிலும் பீகாருக்குச் சென்ருல் அதிக தொண்டு செய்யமுடியுமா என்பது எனக்குத் தெரியாது. என் மனத்திற்கு உறுதியாகத் தெரிந்தாலன்றி, யாரோ கூறுகிருர்கள் என்பதற்காக நான் பீகாருக்குச் செல்லுவதால் யாதொரு பலனும் ஏற்படாது. நோவாகாலியை விட பீகாரில் தான் நான் அதிகத் தொண்டு செய்வதற்கு இடமிருக்கிறது என்பதை நான் உணர்ந்த உடனேயே நான் பீகாருக்குச் செல்லுவேன். அவ்விதம் செல்ல, என்னை யாரும் தூண்டவேண்டிய அவசியமில்லை.

—'ஹரிஜன்' - 23—2—1947

# 36

# முஸ்லிம் லீகும் அரசியல் நிர்ணய சபையும்

*பிரார்த்தனைக்குப் பிறகு நடந்த கூட்டம் ஒன்றில் காந்திஜி, அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக முஸ்லிம் லீக் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பற்றித் தயக்கத்துடன் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது :*

காங்கிரசின் தீர்மானம் யோக்கியப் பொறுப்பற்றதென முஸ்லிம் லீக் கருதுகிறது. அரசியல் நிர்ணய சபையின் தேர்தல்களும், அதன் மற்ற நடவடிக்கைகளும் சட்ட விரோதமானவை என்றும் கூறப்படுகிறது. ஒரு கட்சி மற்றொரு கட்சியை, யோக்கியப் பொறுப்பற்றதென்று குற்றஞ் சாட்டுவது கூடாது. காங்கிரசும் சரி, முஸ்லிம் லீகும் சரி, இரண்டும் பெரிய ஸ்தாபனங்களே. அப்படியிருக்க, ஒன்றன்மீது மற்றொன்று குற்றஞ் சாட்டுவது நன்மை அல்ல. அவ்விரண்டும் ஒன்றையொன்று விரோதியாகக் கருதுவதற்குக் காரணமே இல்லை. அந்த வழக்கம், அவர்களுக்குச் சுதந்திரத்திற்கு வழிகாட்டிவிடாது. அரசியல் நிர்ணய சபையின் தேர்தல்களும் நடவடிக்கைகளும் சட்டவிரோதமாயின், அவற்றை ஆட்சேபித்துக் கோர்ட்டில் வழக்குத் தொடரவேண்டும். அவ்விதமின்றேல் குற்றச்சாட்டிற்கு அர்த்தமில்லை. நான் 1920-இல் செய்ததுபோல் அவர்கள் கோர்ட்டுகளை அங்கீகரிக்க விரும்பாவிடில், சட்ட விரோதமானது என்ற பேச்சு நின்றுவிட வேண்டும்.

முஸ்லிம் லீக், அச்சபைக்குச் சென்று, தன் கட்சியையும் எடுத்துக் கூறி அதன் நடவடிக்கைகளைத் தன் விருப்பப்படி மாற்ற முற்பட வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் அவ்விதம் செய்யாவிடில், அரசியல் நிர்ணய சபையின் அந்தரங்க சுத்தியைப் பரிசோதனை செய்யும்படியும், முஸ்லிம்

பிரச்னையை அது எப்படி சமாளிக்கிறது என்பதைப் பார்க்கும்படியும் நான் லீகிற்கு ஆலோசனை கூறுகிறேன். வாள் பலத்தை நம்ப முஸ்லிம்கள் விரும்பவில்லை என்பது நிச்சயம். வாள் பலத்தை அவர்கள் நம்பிக்கொண்டிருந்தாலொழிய, அவர்களுக்கும் தேசத்தில் உள்ள மற்றவர்களுக்கும் அரசியல் நிர்ணய சபையில் கலந்துகொள்ள உரிமை உண்டு. சாதி ஹிந்துக்களுக்கு மாத்திரமே அச்சபை பிரதிநிதி ஸ்தாபனமாக விளங்குவதாக லீக் கூறியிருக்கிறது. அச்சபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், கிறிஸ்தவர்கள், பார்சிகள், ஆங்கிலோ-இந்தியர்கள், தாங்கள் இந்தியாவின் புதல்வர்கள் என்று கருதும் எல்லோரும் இருக்கிறார்கள். அதில் டாக்டர் அம்பேத்காரைத் தவிர, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மற்றும் ஏராளமானவர்களும் இருக்கிறார்கள். அச்சபையில் சீக்கியர்களும் இருக்கிறார்கள். எனவே, அச்சபைக்குள் இருந்துகொண்டு போராட முஸ்லிம் லீகிற்கும் உரிமை உண்டு.

அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிடவேண்டும் என்று லீக் கூறுகிறது. எனினும், சபை தயாரிக்கும் அரசியல் தஸ்தாவேஜை பிரிட்டிஷார் யோக்கியப் பொறுப்புடன் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கையில் எனக்கு இருந்த உறுதி ஓரளவு தளர்ந்திருக்கிறது என்பதையும் நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அரசியல் ஆட்சி அறிக்கையின்படி ஒரு சில மாகாணங்கள் தங்களுடைய சுயேச்சையை ஸ்தாபித்துக்கொள்ள விரும்பினாலும்கூட, பிரிட்டிஷ் அரசாங்கம் அந்த அறிக்கையின்படி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இந்தியாவுடன் யோக்கியமாக நடந்துகொள்ள விரும்புகிறார்கள் என்ற பெருமையைப் பிரிட்டிஷார் அடியோடு இழந்துவிடமாட்டார்கள் என நம்புகிறேன்.

லீகின் ராஜீயப் போக்கை குறிப்பிடும்படியான அவசியம் எனக்கு ஏற்பட்டதைக் கொண்டு, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை யொருவர் பகைவர்களாகக் கருதவேண்டுமென்று ஊகித்துக்கொள்ளவேண்டாம். இது எனது எச்சரிக்கையாகும். லீகும் அவ்விதம் அறிவிக்கவில்லை. ராஜீயச் சச்சரவுகள் மேலேயுள்ள ராஜீயவாதிகளுடன் நின்றுவிடட்டும். அந்தச் சச்சரவுகள் கிராமங்களுக்கும் பரவுவது ஆபத்தாகும். இந்தியாவின் சுயேச்சைக்கு வழி வாளில் இல்லை; பரஸ்பரம் நட்பிலும், அனுசரித்துப் போவதிலும்தான் இருக்கிறது. உண்மையான பாகிஸ்தான் என்றால் என்ன என்பதை விளக்கிக் காட்டவே நான் நோவாகாலிக்கு வந்துள்ளேன். அதை நிரூபித்துக் காட்டக் கூடிய மாகாணம் வங்காளம் ஒன்றுதான். திறமை வாய்ந்த ஹிந்துக்களையும் திறமை வாய்ந்த முஸ்லிம்களையும் வங்காளம் உற்பத்தி செய்திருக்கிறது. தேசீயப் போராட்டத்திலும் வங்காளம் பேருதவி புரிந்திருக்கிறது. எனவே, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் எவ்விதம் நண்பர்களாகவும், சகோதரர்களாகவும்

வாழமுடியும் என்பதை இப்போது வங்காளம் காட்டவேண்டியது பொருத்தமேயாகும். மற்றும், வங்காளம் வருமானத்தைக் காட்டிலும் அதிக செலவு செய்யவேண்டிய ஒரு மாகாணமாக இருக்கக் காரணமில்லை. அது சீரும் செழிப்பும் வாய்ந்த மாகாணமாக இருக்கவேண்டும்.

—'ஹரிஜன்' - 23—2—1947

# 37
# எதிர்கால அரசியல் திட்டம்

மாபெரும் கூட்டம் ஒன்றில் கேட்கப்பட்ட முக்கியமான ஒரு கேள்விக்குக் காந்திஜி பதில் அளித்தார். கேள்வியின் விவரம் வருமாறு:

**கேள்வி:** அவசியமான துணிவு உள்ள மாகாணங்கள் தங்கள் சொந்த அரசியலைத் தயாரித்து, தாங்கள் சுயேச்சை பெற்றதற்கு அறிகுறியாகத் தங்கள் பிரதேசத்திலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று பிரிட்டிஷ் ராணுவத்தைக் கேட்கவேண்டும் என நீங்கள் கூறியிருக்கிறீர்கள். சுதந்திரம் அடைந்த அந்த மாகாணங்களில் எந்த அடிப்படையைக் கொண்டு வாக்குரிமை அளிக்கவேண்டும் என்பது உங்கள் அபிப்பிராயமாகும்? சட்டசபைகளில், வகுப்புவாரித் தேர்தல் தொகுதிகளுக்குப் பதிலாகத் தொழில்வாரித் தொகுதிகள் இருக்க வேண்டுமா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாகத் தொழில்வாரிப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமா? சிறுபான்மை வகுப்பினருக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்களுடன் கூட்டுத் தொகுதிகள் இருக்க வேண்டுமா, அல்லது தொழிலை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகளுக்கு அத்தகைய கூட்டுத் தொகுதிகள் இருக்க வேண்டுமா? தாற்காலிகமாக எந்தக் கோஷ்டிகளுக்காவது பிரதிநிதித்துவத்தில் சலுகை இருக்க வேண்டுமா? இருக்க வேண்டுமாயின், எந்தக் கோஷ்டிக்கு அவ்விதம் இருக்கவேண்டும்? நம்மிடையே கூட்டுத் தொகுதிகளும், வயது வந்தவர் எல்லோருக்கும் பூரண வாக்குரிமையும் இருக்க வேண்டுமா?

**பதில்:** ஒரே ஒரு மாகாணம்கூட தன் சொந்த அரசியலைத் தயாரித்து அதை அமலுக்குக் கொண்டு வர முடியும். ஆனால், அந்த அரசியல் திட்டம் ஒரே ஒரு வாக்கு அதிகமாகப் பெற்று நிறைவேறியதாக இருக்கக்கூடாது. மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் நிறைவேறியதாக இருக்க வேண்டும். எதிராளிகளைக் கொல்லாமல், அவர்களால் கொல்லப்படுவதற்குத் தயாராக இருக்கும் சுதந்திரப் பிரியர்களை, உலகில் உள்ள எந்தச் சக்தியும் எதிர்த்து நிற்க

முடியாது. இந்த அபிப்பிராயமே ஒரு காலத்தில் நான் கொண்டிருந்தேன். அதற்குப் பின் இன்று நாம் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம்.

மந்திரி சபைத் தூது கோஷ்டியின் அறிக்கையை* நான் ஆதரிக்கிறேன். நான் அறிந்த வரையில், ஒரு மாகாணத்தின் உறுதியான விருப்பத்தை நாம் எதிர்க்கமுடியாது. ஒரு மாகாணத்தின், உதாரணமாக வங்காளத்தின் விஷயத்தில் அது உண்மையாயின், சந்தேகமின்றி அரசியல் நிர்ணய சபையைப் பிரதிநிதி ஸ்தாபனமாகக் கொண்டிருக்கும் பல மாகாணங்கள் விஷயத்தில் அது முற்றிலும் உண்மை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந்தியாவின் சுயேச்சையைக் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்பதை நான் பொருட்படுத்தவில்லை. அது மக்களின் அபிப்பிராயத்தைப் பொறுத்ததேயன்றி, அந்நிய வல்லரசு எதையும் பொறுத்ததல்ல. பிரிட்டிஷ் மந்திரி கோஷ்டியின் அறிக்கை வாபசாகிவிட்டால், இந்தியா என்ன செய்யும் என்ற கேள்விக்கு இடமில்லை. இந்தியாவிற்கு, திக்குத் திசை தெரியாத துன்ப வாழ்க்கையில் பழக்கம் உண்டு. பண்டித நேருவும், அவரது நண்பர்களும் மந்திரி பதவிகளை ஏற்றுக்கொண்டபோது, அப்பதவி ரோஜா மலர்களாலான படுக்கை அல்ல என்றும், முட்கள் நிறைந்த படுக்கையே என்றும் நேருஜி கூறினர். நமது லட்சியம் விடுதலையே. என்ன நேர்ந்தாலும் நாம் விடுதலை அடைந்தே தீருவோம்.

சந்தேகத்திற்கு இடமின்றி அகிம்சையையே மக்கள் உறுதியான கொள்கையாக மேற்கொள்ளும் பொழுது,

---

* மேலே குறிப்பிட்டுள்ள மந்திரி சபைத் தூது கோஷ்டியைப் பற்றிய முழு விவரம் வருமாறு :

1946-ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூது கோஷ்டியினர் முதன் முதலாக ஏப்ரல் மாதம் இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். லார்டு பெதிக் லாரென்ஸ், சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஸ்ரீ ஆல்பர்ட் அலெக்சாண்டர் முதலிய மூன்று பிரிட்டிஷ் மந்திரிகளும் அக் கோஷ்டியில் இருந்தனர். மே 4-ஆம் தேதி காந்திஜி விடுத்த ஓர் அறிக்கையில், பிரிட்டிஷ் தூது கோஷ்டியினர் இந்தியாவில் தங்களுக்குள்ள ஆட்சி அதிகாரத்தை விட்டுவிட உறுதி கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களுடைய வார்த்தையைத் தாம் நம்புவதாகவும், மக்களும் அதை நம்ப வேண்டும் என்றும் கூறினர். மே 18-ஆம் தேதி பிரிட்டிஷ் கோஷ்டியின் அறிக்கை வெளியாயிற்று. அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்த யோசனைகளைக் காந்திஜி வரவேற்றார். ஒரு சுதந்திரத் தனி ராஜ்யமாகப் பாகிஸ்தானை ஸ்தாபிக்கும் யோசனையைத் தூது கோஷ்டியார் நிராகரித்தனர். மாகாணங்களும், சமஸ்தானங்களும் அடங்கிய ஐக்கிய சுதந்திர இந்தியாவை அவர்கள் ஆதரித்தனர். இந்த யோசனைகளை மாற்றுவது, திருத்துவது. நிராகரிப்பது முதலிய சகல பொறுப்புகளையும், உத்தேசிக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் பொறுப்பில் விட்டனர். கூடிய சீக்கிரத்தில் அரசியல் நிர்ணய சபையை அமைக்கவும், இடைக்கால அரசாங்கத்தை நிறுவவும் வேண்டும் என்றும் அக் கோஷ்டியினர் தங்களுடைய அறிக்கையில் வற்புறுத்தினர்கள்.

இயல்பாகவே நான் நம்பிக்கையுடன் பேச முடியும். அதற்கு மாருக, வாளினல் ஆங்கிலேயர்களை விரட்டிவிடலாமென மக்கள் நினைத்தால், அவர்கள் பெரும் தவறு செய்தவர்கள் ஆவார்கள். ஆங்கிலேயர்களின் உறுதியையும், தைரியத்தையும் மக்கள் அறியமாட்டார்கள். வாளின் பலத்திற்கு ஆங்கிலேயர்கள் பணிந்துவிடமாட்டார்கள். மரணத்திற்குப் பதில் மரணம் என்ற கொள்கையை வெறுக்கும் அகிம்சையின் சக்தியை அவர்களால் எதிர்த்து நிற்க முடியாது. அகிம்சையைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்தது எதுவும் இல்லை என்பதை நான் அறிவேன். இன்னும் நமக்கு உண்மையான சுயேச்சை கிடைக்கவில்லை எனில், மக்கள் போதிய அகிம்சையை அபிவிருத்தி செய்துகொள்ளாதது தான் அதற்குக் காரணம் என்பதே எனது நிச்சயமான அபிப்பிராயமாகும். அது எப்படியாயினும், இதுவரை இந்தியா அபிவிருத்தி செய்துகொண்டுள்ள அகிம்சையின் சக்திக்குப் பதிலாகவே, நாம் பிரிட்டிஷ் மந்திரி கோஷ்டியின் அறிக்கையைப் பெற முடிந்தது என்று நான் கருதுகிறேன்.

சென்ற யுத்தத்தை நீங்கள் ஆராய்ந்து பார்ப்பீர்களாயின், ஒரு விஷயத்தை நீங்கள் தெளிவாகக் காண்பீர்கள். அதாவது, விரோதி நாடுகள் என்று கூறப்படும் தேசங்கள் படுதோல்வி அடைந்தனவென்ருலும், நேச தேசங்கள் பெற்ற வெற்றி, யாதொரு லாபமும் இல்லாத வெறும் வெற்றியாகவே முடிந்தது. வேண்டுமென்றே கொடூரமாக மனிதர்கள் பலி கொடுக்கப்பட்டதுடன், உலகத்தின் உணவுச் சாதனங்களையும் உடைகளையும் காலி செய்வதில் நேச நாடுகளும் விரோதி நாடுகளும் வெற்றி பெற்றன. நேச நாடுகளுக்கு மனிதத் தன்மையே அற்றுப் போய்விட்டது போல் தோன்றியது. அவை, பகைவர்களை அடிமைத்தனத்தில் ஆழ்த்திவிடலாமென வீண் நம்பிக்கை கொண்டன. அதன் சம்பந்தமாக, யார்மீது பரிதாபம் கொள்ளுவது? நேச தேசங்களின் மீதா அல்லது பகை நாடுகளின் மீதா என்ற நிலை ஏற்பட்டது! எனவே, நான் மக்களைக் கேட்டுக் கொள்ளுவது என்னவெனில், ஒரு கண்ணியமான கொள்கையான அகிம்சையால் எழும் நம்பிக்கையில் உறுதி கொண்டு, என்ன நேர்ந்தாலும் அதைத் தைரியமாகச் சமாளிக்க வேண்டும் என்பதேயாகும்.

21 வயதுக்கு மேற்பட்ட, 18 வயதுக்குக்கூட மேற்பட்ட ஆண், பெண் எல்லோருக்கும் வாக்குரிமை அளித்தே தீரவேண்டும். என்னைப் போன்ற வயோதிகர்களுக்கு வாக்குரிமை அளிப்பதை நான் தடுத்துவிடுவேன். வாக்காளர்கள் என்ற முறையில் அவர்களால் பலனில்லை. இந்தியாவும் உலகத்தில் உள்ள மற்ற நாடுகளும், சாகும் தறுவாயிலிருக்கும் வயோதிகர்களுக்குச் சொந்தமானவை அல்ல.

அவர்களுக்குச் சொந்தமானது மரணம்தான். இளைஞர்களுக்குத்தான் வாழ்வு சொந்தமானது. எனவே, குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாக்குரிமை கூடாது என்று நான் தடுத்துவிடுவேன். ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களுக்கும் வாக்குரிமை அளிப்பதை நான் ஆதரிக்க மாட்டேன். அது போலவே, சித்த சுவாதீனமற்றவர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் வாக்குரிமை அளிக்கக் கூடாது.

சுதந்திர இந்தியாவில், நான் வகுப்புவாரி வாக்குரிமையை மனத்தால் நினைப்பதற்கும் இல்லை. கூட்டுத் தேர்தல் தொகுதிகள்தான் இருக்கவேண்டும். வேண்டுமாயின், குறிப்பிட்ட வகுப்பினருக்கு ஸ்தானங்களை ஒதுக்கி வைக்கலாம். யாருக்கும், உதாரணமாக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள் என்ற காரணத்துக்காகச் சலுகைகள் காட்டுவதையும் நான் சிறிதும் ஆதரிக்க முடியாது. சலுகை காட்டுவதாயின், நான் குஷ்டரோகிகளுக்கு மாத்திரம் சலுகை காட்டுவேன். அவர்கள், சமுதாயம் செய்யும் குற்றங்களின் விளைவாகத் திகழ்கிறார்கள். ஒழுக்கத்தில் குஷ்டரோகிகளாக இருப்போர் தங்களுக்குத் தாங்களே தடை விதித்துக்கொள்ளுவார்களாயின், உடலில் குஷ்டரோகிகளாக இருப்போரைக் காணவே முடியாது. பாவம், உடல் குஷ்டரோகிகள் நவீன சமுதாயத்தைக் கண்டு நடுங்கி, வாக்குரிமை கோரவே முன்வருவதில்லை. அவர்களுக்கு உண்மையான கல்வி அளித்தால், அவர்கள் உதாரணப் பிரஜைகளாக விளங்குவார்கள்.

அது எப்படியாயினும், வயது வந்த ஆண், பெண் எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கும் அதே சமயத்தில், அவ்விதம் அளிப்பதற்கு முன்புகூட, சர்வ ஜனக் கல்வி அளிக்க வேண்டுமென்று நான் கோருவேன். அந்தக் கல்வி மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமேயன்றி, இலக்கியக் கல்வியாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆங்கிலக் கல்வி நமது மன வளர்ச்சியைத் தடுத்து விட்டது; நம்மைப் பலவீனர்களாகச் செய்துவிட்டது; நம்மை அது தைரியசாலிகளான பிரஜைகளாக விளங்குவதற்கு ஒரு காலத்திலும் தயார் செய்யவில்லை. எந்த நாடும் பெருமை அடையக்கூடிய இந்த நாட்டில் உள்ள வளம் மிக்க மொழிகளில், எல்லோருக்கும் போதிய அளவு அறிவு ஏற்பட நான் வழிவகை செய்வேன். எல்லோரும் யோக்கியப் பொறுப்புடனும் மனப்பூர்வமான அக்கறையுடனும் இருப்பார்களாயின், பிரஜா உரிமைகளை அறிந்து கொள்ளுவதற்கான கல்வியை மிகக் குறைந்த காலத்தில் பெற்றுவிடலாம்.

—'ஹரிஜன்' – 2—3—1947

# 38

# நான்கு கேள்விகள்

**கேள்வி:** ஹிந்துக்களை முஸ்லிம்கள் பகிஷ்காரம் செய்து வருகிறார்கள். எனவே, தங்களுக்குத் தாங்களே உழுது பயிரிடுவதைக் காட்டிலும் அதிக நிலம் வைத்துக்கொண்டிருக்கும் ஹிந்துக்கள் மிகவும் சங்கடமான நிலையில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன? அவர்கள், தாங்களே கலப்பையைக் கைக்கொள்ள முற்பட்டால்கூட, தாங்கள் உழைப்பதற்கு இயலாத உபரி நிலத்தை என்ன செய்வது?

**பதில்:** ஹிந்துக்களை முஸ்லிம்கள் பகிஷ்கரிப்பதைப் பற்றி நானும் கேள்விப்பட்டேன். இவ்விஷயமாக முந்திய கூட்டங்களிலும் நான் ஏதோ குறிப்பிட்டுள்ளேன். நோவாகாலி ஜில்லா முழுவதும் அத்தகைய பகிஷ்காரம் இல்லை என்று நம்புகிறேன்; இல்லை என்பதையும் அறிவேன். ஒரு சிலர் தான் பகிஷ்காரம் செய்து வருகிறார்கள். சிலராயினும் பலராயினும், பகிஷ்காரம் செய்வது தவறு என்பதில் சந்தேகம் இல்லை. பகிஷ்காரம் செய்வோர் அதனால் பலனடையமாட்டார்கள்; பகிஷ்காரத்திற்கு உட்படுவோரும் அதனால் பலனடைய முடியாது. இந்த அபிப்பிராயம் சென்ற பல வருடங்களாக, அதாவது அறுபது ஆண்டுகளாக எனக்கு இருந்துவருகிறது.

ஒரு நிலையில் அத்தகைய பகிஷ்காரம் சாத்தியமாகலாம். அதாவது, முஸ்லிம்கள் ஹிந்துக்களைத் தங்களுடைய விரோதிகளாகக் கருதி, நோவாகாலியில் அவர்கள் இருப்பதைத் தவிர்க்க விரும்பினால் அவ்விதம் செய்யலாம். ஆனால், அவ்வாறு செய்வது, ஹிந்துக்களின் மீது யுத்தப் பிரகடனம் செய்வதாகும். அத்தகைய நிலை ஒவ்வொரு இந்தியரையும் அஞ்சி நடுங்கும்படி செய்யும். தனிப்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்ட வரையில், எனது உறுதியான அபிப்பிராயம் இதுதான்: அதாவது, பகிஷ்காரம் செய்யப்படும் ஹிந்து, ஆஸ்திரேலியர்களைப் போல் உபரி நிலத்தைத் தரிசாகப் போட்டுவிட வேண்டும்; அல்லது உபரி நிலத்தை அவர் விற்றுவிடவேண்டும். தாம் உபயோகிக்க முடிந்ததைக் காட்டிலும் அதிக நிலத்தை ஒருவரும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பதுதான் மிக மிகச் சிறந்ததாகும். அந்த லட்சியத்தை அடைய சமூகம் முயற்சிக்கவேண்டும்.

**கே:** இங்கே நீங்கள் சென்ற மூன்று மாதங்களாகத் தொண்டு புரிந்து வருகிறீர்கள். ஹிந்துக்களின் மனப்பான்மையில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதா?

ப: இந்தக் கேள்விக்கு, சம்பந்தப்பட்ட ஹிந்துக்கள் விடையளிப்பதுதான் சிறந்தது. ஹிந்துக்கள் தாற்காலிகமாகவாவது தங்களுடைய கோழைத்தனத்தை ஓரளவு உதறித் தள்ளியிருக்கிறார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை நான் பெருமையாகச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

கே: முஸ்லிம்களிடையே சமாதானத்தை விரும்பும் பிரிவினர் நிச்சயமாக இருக்கிறார்கள். அவர்களிடையே நீங்கள் வந்த பிறகு, உங்களுடைய செல்வாக்கு அவர்களுடைய மனத்தை, அவர்களுடைய சொந்த சமூகத்திலேயே உள்ள மோசமான பேர்வழிகளை எதிர்த்துத் தங்களுடைய அபிப்பிராயத்தை வற்புறுத்தக் கூடிய அளவுக்கு மாற்றியிருக்கிறதா?

ப: நோவாகாலி முஸ்லிம்களிடையே சமாதானத்தை விரும்பும் பிரிவினர் இருக்கிறார்கள் என்பதை, கேள்வி கேட்டுள்ள இவர் ஒத்துக்கொள்ளுகிறார் என்பதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அவ்விதப் பிரிவினர் இராவிடில், அது ஒரு பயங்கரமான நிலையாக இருக்கும். முஸ்லிம் சமூகத்தில் உள்ள தீய, விஷமத்தனமான பிரிவினரை எதிர்த்து நிற்கும் தைரியத்தை அபிவிருத்தி செய்துகொண்டிருந்தாலும், இராவிடினும், நான் இரண்டாவது கேள்விக்குக் கூறிய அதே பதிலையே கூறியிருப்பேன். இதற்கு முஸ்லிம் நண்பர்கள் தான் நிச்சயமாக பதில் கூறமுடியும். பல முஸ்லிம் நண்பர்கள் அத்தகைய தைரியத்தை அபிவிருத்தி செய்துகொண்டிருக்கிறார்கள் என்றே நம்புகிறேன். இது வீண் பெருமையாக இருக்கலாம். உதாரணமாக, பாடியால்பூரில் நாசம் செய்யப்பட்ட கோயிலை நான் திறந்துவைத்தபோது, இனி அது அவ்விதம் நாசமாகாமல் தங்கள் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவதாக முஸ்லிம்கள் கூறினர். இதுபோல் ஆறுதலை அளிக்கும் இன்னும் பல சம்பவங்கள் எனது யாத்திரையின்போது நிகழ்ந்தன.

கே: உங்கள் கட்டளைக்கு இணங்க, பல ஊழியர்கள் கிராம முன்னேற்ற அலுவல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அலுவல்கள், உள்ளூர் ஹிந்து அல்லது முஸ்லிம் மக்களின் மனத்தில் என்ன அபிப்பிராயத்தை உண்டாக்கியிருக்கின்றன? நீங்கள் இங்கே வந்திராவிடில், தற்போதைய அளவுக்கு அந்த ஊழியர்களுடைய செல்வாக்கு பலனைக் கொடுத்திருக்குமா? உங்களுடைய தொண்டர்களின் தற்போதைய செல்வாக்கு நீடித்து இருக்குமா?

இந்த நான்காவது கேள்விக்குக் காந்திஜி கீழ்வருமாறு பதிலளித்தார்:

நான் தூய்மையாக இருந்து, மனத்தில் இருப்பதையே வெளிப்படையாகக் கூறுபவனாகவும் இருந்தால், எனது

தொண்டு என் மரணத்திற்குப் பிறகும் நிலைத்து நிற்கும். சொந்த நடத்தைக்கும், பொதுஜனத் தொண்டில் அனுசரிக்கும் நடத்தைக்கும் குற்றம் குறையற்ற ஒன்றிப்பு இருக்க வேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகும். அதுபோலவே, எனது சகாக்கள் மாசற்ற தொண்டு உணர்ச்சியால் தூண்டப்பட்டு, உள்ளும் புறமும் தூய்மையாக இருந்தால், அவர்களைச் சுற்றிலும் உள்ள பகட்டுகளுக்குப் பணிந்து விடாமல் இருந்தால், அவர்கள் குன்றாத உற்சாகத்துடன் தொண்டு புரிந்து வருவார்கள். அவர்களுடைய கூட்டுத் தொண்டு நாளாவட்டத்தில் மிகுந்த பலனைக் கொடுக்கும். எந்த நல்ல தொண்டும், அதைச் செய்யும் தொண்டரின் மரணத்துடன் மறைந்துவிடும் என்ற மூட நம்பிக்கையை நான் ஒருபோதும் ஆதரித்ததில்லை. அதற்கு மாறாக, உண்மையான, உருவான தொண்டு அதன் கர்த்தாவை, அவரது மரணத்திற்குப் பிறகும் அவரது தொண்டு நிலைப்பதன் மூலம் அமரராகச் செய்துவிடுகிறது.

—'ஹரிஜன்' – 2—3—1947

# 39

# மற்றும் பல கேள்விகள்

*மாலைப் பிரார்த்தனைக்குப் பின், முஸ்லிம் நண்பர்கள் காந்திஜியைப் பல கேள்விகள் கேட்டனர். அக்கேள்விகளும் பதில்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:*

**காந்திஜி:** ஒரு முஸ்லிம் வியாபாரி ஒழுங்கான திராசுகளை வைத்துக்கொண்டிருப்பதாகவும், ஹிந்து வியாபாரி ஒழுங்கற்ற திராசுகளை வைத்துக் கொண்டிருப்பதாகவும் ஒரு நண்பர் என்னிடம் கூறினார். எனவே, முஸ்லிம் வியாபாரிகள் யோக்கியர்கள் அல்லவா என்றும், ஹிந்து வியாபாரிகள் அயோக்கியர்கள் அல்லவா என்றும் அவர் என்னைக் கேட்டார். அவ்விதம் ஊகிப்பது முற்றிலும் தவறு என்பது நிச்சயம். குற்றம் குறைகள் உள்ள இந்த உலகத்தில் எந்தச் சமூகமும் முற்றிலும் யோக்கியமானதென்றோ, அல்லது முற்றிலும் அயோக்கியமானதென்றோ கூறமுடியாது. தம்மிடம் சாமான்கள் வாங்குவோரை, போலித் திராசுகளைக் கொண்டு ஏமாற்றுபவர் தண்டனைக்கு உரிய ஒரு குற்றவாளியே என்று மாத்திரம் நான் கூறமுடியும். எனினும், ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் செய்த குற்றத்திற்காக, நான் அந்தச் சமூகத்தையோ அல்லது கோஷ்டியையோ கண்டிக்க மாட்டேன்.

**கேள்வி:** ஹிந்து – முஸ்லிம் சமூகங்களிடையே பூரண அமைதியையும் அந்நியோன்னியத்தையும் நிலைநிறுத்தும் வரையில்

தாங்கள் இங்கே இருக்கப் போவதாகவும், அவசியமாயின் இங்கேயே இறக்கப் போவதாகவும் நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அவ்வளவு நீண்ட காலம் நீங்கள் இங்கே தங்குவது, இந்தியாவும் உலகமும் நோவாகாலியின் மீது இடைவிடாது கவனம் செலுத்தும்படி செய்யும் என நீங்கள் நினைக்கவில்லையா? அதன் விளைவாக, இங்கே இன்னும் அக்கிரமங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று மக்கள் எண்ணுவதற்கு இடம் கொடுக்கும் அல்லவா? அதற்கு மாறாக, முஸ்லிம்கள் சிறிது காலமாக கண்ணியமற்ற நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடவில்லை.

பதில்: பாரபட்சமற்ற எவரும் நான் இங்கே இருப்பதைப்பற்றி அவ்விதம் விஷமத்தனமாக ஊகித்துக்கொள்ளமாட்டார். முஸ்லிம்களின் நண்பனாகவும் ஊழியனாகவுமே நான் இங்கே இருக்கிறேன். நான் இங்கே வந்திருப்பது, நோவாகாலி ஓர் அழகான இடம் என்பதை விளம்பரப்படுத்தியிருக்கிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இதயபூர்வமான நட்புடன் இருந்தால், இது பூமியிலேயே ஒரு சுவர்க்கமாக இருக்கும். எனது வாழ்க்கையின் முடிவில், நான் அகிம்சையைப் பற்றி மிகக் குறைவாகவே அறிந்தவன் என்றும், அவ்விஷயத்தில் நான் தோல்வியடைந்து விட்டேன் என்றும் குறிப்பிடப்படலாம். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இதயபூர்வமான நட்பு ஏற்பட்டுள்ளது என்ற திருப்தி எனக்கு உண்டாகிவிடுமாயின், நான் நோவாகாலியில் தங்கியிருப்பது முடியாத காரியமாகிவிடும். எனினும், நிலைமை எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இன்னும் முன்னேற்றம் அடையவில்லை என்பதை ருசுப்படுத்தும் சாட்சியம் என்னிடம் இருக்கிறது என்பதை உங்களிடம் கூற நான் வருந்துகிறேன்.

கே: முஸ்லிம்கள் நல்லவிதமாக நடந்துகொள்ளுவதாய் உறுதி கூறியும்கூட, ஹிந்துக்கள் மீண்டும் தங்கள் வீடு வாசல்களுக்குத் திரும்பி வராமல் இருப்பதன்மூலம், இன்னும் நெருக்கடி தீராதது போன்ற செயற்கை நிலையை உண்டாக்கி வருகிறார்கள் என்று நீங்கள் நினைக்கவில்லையா? சந்தர்ப்பம் அளிக்கப்பட்ட இடங்களில் முஸ்லிம்கள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றியும் இருக்கிறார்கள்.

ப: பல ஹிந்துக்களும், வேண்டுமென்றே தங்கள் வீடுவாசல்களுக்குத் திரும்பி வர மறுக்கிறார்களென நான் நினைக்கவில்லை. கவர்ச்சியான தூண்டுதல்கள் இல்லாமல் எவரும் வீடுவாசல்களுக்கு வராமல் தூரத்தில் ஒதுங்கி நிற்கமாட்டார்கள். அத்தகைய கவர்ச்சியான தூண்டுதல்கள் எதுவும் இருப்பதாக நான் கேள்விப்படவில்லை. பீதியும், ஜீவனத்திற்கு வழியிராததுமே அவர்கள் திரும்பி வர முடியாததற்குக் காரணங்கள் என்பதை நான் அறிவேன். இருந்தாலும்,

திரும்பி வருவோரின் தொகை திருப்திகரமாக இருக்கிறது என்று அதிகாரிகள் எனக்கு உறுதி கூறியிருக்கிருர்கள். அதிகத் தொகையினரைச் சமாளிக்க அவர்களால் முடியவில்லை. ஹிந்துக்கள் திரும்பி வராததற்குத் தெளிவான இக்காரணங்கள் எல்லாம் இருக்கும்போது, நிரூபிக்க முடியாத, இயற்கைக்கு விரோதமான ஊகங்களுக்குச் சந்தர்ப்பமே இல்லை. அவர்களைத் திரும்பிச் செல்ல வேண்டாமென்று தூண்டுவோர் இருந்தால், அவர்களைத் தண்டிக்கச் சட்டம் இருக்கிறது. பெரும்பாலான முஸ்லிம்களும், உண்மையாகவே அகதிகள் திரும்பிவர வேண்டுமென விரும்பினல், அவர்கள் மகிழ்ச்சியுடன் திரும்பி வருவார்கள் என்பது நிச்சயம். ஆனல், இக்கேள்வியைக் கேட்டவர் சித்திரித்தது போல், நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை.

கே: எல்லோரிடமும் அகிம்சையுடனும் நட்புடனும் நடந்து கொள்ளுவதாயின், முஸ்லிம்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டியது அல்லது நிறுத்திவிட வேண்டியது அவசியமென நீங்கள் நினைக்கவில்லையா?

ப: இப்போது அதிகமாக அகிம்சை நிலவி வருகிறதா என்பது எனக்குத் தெரியாது. அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட நடத்தைகூடச் சட்டத்தின் போக்கைத் தடுத்து விட முடியாது. குற்றவாளிகள் தங்களுடைய குற்றத்தைப் பிரகடனம் செய்து வருந்திஞல்தான், பயத்திற்கும் துன்பத்திற்கும் உள்ளானவர்களின் அகிம்சைப் போக்கு செயல்படுவதாகக் கருத முடியும். ஆனல், உண்மை என்னவெனில், குற்றவாளிகள் வருந்தாதது மாத்திரமல்ல, தலைமறைவாகப் பதுங்கியும் வருகிருர்கள். ஜனங்களைக் கூட்டாகக் கைதுசெய்வதை நான் வெறுக்கிறேன். எனினும், வழக்குகளை ஜோடித்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்டால், அத்தகையோருக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

கே: பிரிட்டிஷ் மந்திரி சபைக் கோஷ்டியின், 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற கொள்கையே, லீகிற்கும் காங்கிரசுக்கும் இடையேயும், முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் இடையேயும் தற்போது ஏற்பட்டுள்ள தகராறுக்கு மூல காரணம் அல்லவா?

ப: பிரிட்டிஷ் மந்திரி சபைக் கோஷ்டி அவ்விதக் கொள்கை உடையதென்று நான் குற்றம் சாட்டமாட்டேன். பிரச்னையைத் தீர்க்க அவர்கள் நேர்மையுடன் ஒரு யோசனை கூறியிருக்கிருர்கள். அந்த யோசனை நியாயமானது என்பதே அவர்களுடைய அபிப்பிராயம். அந்த அறிக்கையில் உள்ள அழகு, அதில் எவ்வித நிர்ப்பந்தமும் இல்லை என்பதே.

இயற்கையாக, அந்த அறிக்கையை ஒப்புக்கொண்டு விட்டால், அதை அங்கீகரிக்கும் கட்சி அதன் ஷரத்துக்களையும் ஒப்புக்கொண்டதாகிறது. எனினும், எந்தக் கட்சியும் அந்த அறிக்கையை அங்கீகரிக்க மறுக்கலாம். கிழக்கே அஸ்ஸாமும், மேற்கே பலுஜிஸ்தானமும் இணைப்பு முறையை நிராகரித்துவிடுமாயின், உலகத்தில் உள்ள எந்தச் சக்தியும் அவற்றை நிர்ப்பந்தப்படுத்த முடியாது. பிரிட்டிஷ் மந்திரி கோஷ்டியின் அறிக்கையை ஒரு பொறி என்றே வைத்துக்கொண்டாலும், காங்கிரசும் லீகும் அந்தப் பொறியில் ஏன் விழ வேண்டும்?

கே: பாகிஸ்தான் என்றால், முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக உள்ள மாகாணங்களில் முஸ்லிம்களுக்குப் பூரண சுயேச்சை என்பதும், ஹிந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களில் ஹிந்துக்களுக்குச் சுயேச்சை என்பதுமே அர்த்தமாகும். பின்னர் ஏன் காங்கிரஸ் அதை ஆட்சேபிக்கிறது?

ப: இதற்கு விடை மிகவும் எளிதாகும். முஸ்லிம் பெரும்பான்மையோராக உள்ள மாகாணங்களில் முஸ்லிம்களுக்கு மாத்திரம் சுயேச்சை, ஹிந்துக்கள் பெரும்பான்மையோராக உள்ள மாகாணங்களில் ஹிந்துக்களுக்கு மாத்திரம் சுயேச்சை என்பது பாகிஸ்தான் என்பதற்குப் பொருள் எனில், அது உடனடியாக நிராகரிக்கப்பட வேண்டியது தான். ஒரு முஸ்லிம் தலைவர்கூட பாகிஸ்தானுக்கு அத்தகைய பொருள் கூறவில்லை. நிச்சயமாக, காயிதே ஆஜமும் அத்தகைய பொருள் கூறவில்லை. பீகாரில் உள்ள ஹிந்துக்கள் சுயேச்சையாகவும், முஸ்லிம்கள் அடிமைகளாகவும் இருப்பதா? அல்லது வங்காளத்தில் முஸ்லிம்கள் சுயேச்சையாகவும், ஹிந்துக்கள் அடிமைகளாகவும் இருப்பதா? நான் அதை நம்பவில்லை.

கே: எந்த இடத்திலும் காங்கிரஸ்-லீக் வேற்றுமைகள் தான் எல்லாத் தகராறுகளுக்கும் ஆணி வேராக இருக்கின்றன. எனவே, இந்நிலையில் இங்கே ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை ஸ்தாபிப்பதற்கு ஏதாவது நம்பிக்கை இருக்க முடியுமா? அப்படியே ஸ்தாபித்தாலும், அந்த ஒற்றுமை எவ்வளவு காலம் நீடித்திருக்க முடியும்?

ப: காங்கிரஸ்-லீக் வேற்றுமைகள் இருக்கும்போது, ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை நீடித்திருக்க முடியாது என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். கட்சி ராஜீய விஷயங்கள் ஒருபுறமிருக்க, நோவாகாலியில் உள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் காலம் கடவாமல் உண்மையான நண்பர்களாக நடந்துகொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் அகில இந்தியாவுக்கும், குறிப்பாக லீகிற்கும் காங்கிரசுக்கும்

உதாரணமாகத் திகழ வேண்டும். எப்படியாயினும், என்னை நோவாகாலிக்குக் கொண்டு வந்த லட்சியம் அதுதான். மாசற்ற அகிம்சைப் பரீட்சையில் தேற நான் விரும்புகிறேன். எனது அகிம்சை தூய்மையாக இருக்குமாயின் அது, நான் மனத்தில் விரும்பும் அந்த நட்பை நிலைநிறுத்துவதில் முடியும். எனவே, அந்த நட்பு நிலைநிறுத்தப்படாவிடில், தோல்வி என்னைச் சார்ந்ததாக இருக்கும். அகிம்சைக்கு, தோல்வி என்பதே கிடையாது. அதனால்தான் நான், வெற்றியடைவேன் அல்லது நோவாகாலியில் மரணம் அடைவேன் என்று கூறினேன். எனவே, இந்தக் கேள்வி கேட்டவரும், அவரைப் போன்ற கருத்து உடையவர்களும், அம்முயற்சி வெற்றி பெற உதவி புரிவார்களாக.

—'ஹரிஜன்' – 29—3—1947

# 40

# அது மதம் அல்ல

**கேள்வி:** முஸ்லிம் மக்கள் எல்லா விதத்திலும் ஹிந்துக்களைப் பகிஷ்காரம் செய்யவேண்டும் என்று நோவாகாலி ஜில்லாவெங்கும் பேச்சு இருந்துவருகிறது. சமீபத்தில் ஹிந்துக்களுக்காகத் தொண்டு செய்த முஸ்லிம்களும், கலகங்கள் நடந்தபோது ஹிந்துக்களுக்கு உதவி புரிந்த முஸ்லிம்களும் தங்களை மற்ற முஸ்லிம்கள் பகிஷ்காரம் செய்யப் போவதாகப் பயமுறுத்தி வருகிறார்கள் என்று கூறுகின்றனர். இந்நிலைமையில், உண்மையாகவே சமாதானத்தை விரும்பும் முஸ்லிம்களின் கடமை என்ன?

**பதில்:** பகிஷ்காரத்தைப் பற்றி நான் முன்பே கேள்விப்பட்டேன். எனினும், பரந்த முறையில் பகிஷ்காரம் எதுவும் இராதென நம்புகிறேன். மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முன் அத்தகைய பகிஷ்கார சம்பவம் ஒன்றை, குஜராத்திலிருந்து என்னைப் பார்க்க வந்த ஒரு முஸ்லிம் பிரயாணி என் கவனத்திற்குக் கொண்டுவந்தார். என்னைப் பார்க்கத் துணிந்ததற்காக அவரைக் கண்டித்தார்களாம். ஆனால், அந்தப் பிரயாணி உறுதியாக நின்று, அவர்களிடமிருந்து சமாளித்துக்கொண்டார். இன்று வந்துள்ள மற்றொரு ஏழை முஸ்லிமை, என்னைப் பார்க்க வந்தால் கடுமையான தண்டனை விதிப்பதாகப் பயமுறுத்தினார்கள். இதில் எல்லாம் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. முஸ்லிம் லீக் கட்சியின் பெயரில், முஸ்லிம்களைக் கண்டித்து அவர்களால் அச்சிட்ட துண்டுப் பிரசுரங்களை ஒட்டியிருக்கிறார்கள். எனவே, அந்தப் புகார்

கள் உண்மையாக இருக்கலாம் என்று நினைக்க இடம் ஏற்பட்டிருக்கிறது.

நான் முஸ்லிம் நண்பர்களுக்குக் கூறுவது என்னவெனில், அத்தகைய விஷயங்களைக் கண்டு அவர்கள் அஞ்சவோ, மனக்கலக்கம் அடையவோ கூடாது என்பதுதான். அத்தகைய சம்பவங்கள் அங்கே ஒன்றும் இங்கே ஒன்றுமாக இருக்குமாயின், அவற்றை முஸ்லிம் நண்பர்கள் பொருட்படுத்த வேண்டியதில்லை. பரந்த அளவில் அவை நடைபெறுமாயின், அரசாங்கம் அந்த நிலைமையைச் சமாளிக்கும். துரதிருஷ்டவசமாக, பகிஷ்காரம் அரசாங்கத்தின் கொள்கையாகிவிடுமாயின், அது கவலையைக் கொடுக்கக் கூடியதுதான்.

அகிம்சை ரீதியில் மாத்திரமே நான் சிந்திக்கமுடியும். அரசாங்கம் நியாயமான ஈடு கொடுத்தால், அதை அங்கீகரிக்கும்படியே நான் ஆலோசனை கூறுவேன். ஆனால், அரசாங்கம் பறிமுதல் செய்ய முற்படுமாயின், உறுதியாக நின்று, மரணம் நேருவதாயினும் தங்கள் வீடு வாசல்களை விட்டுச் செல்ல மறுத்துவிட வேண்டும். எல்லா மாகாணங்களுக்கும், அவற்றில் முஸ்லிம்கள் பெரும்பான்மையோராயினும், ஹிந்துக்கள் பெரும்பான்மையோராயினும், நான் அதே யோசனைதான் கூறுவேன். ஈடுத் தொகை கொடுத்தோ அல்லது கொடுக்காமலோ, எந்த அரசாங்கமும் பகிஷ்காரக் கொள்கையை ஆதரிக்கும் அளவுக்கு அவ்வளவு வெறி பிடித்ததாக இராது என்றே நம்புகிறேன். எவ்வளவோ காலமாக ஓரிடத்தில் வாழ்ந்துவருவோரை, அவர்கள் சிறுபான்மையோர் என்ற காரணத்துக்காக அவர்களுடைய வீடு வாசல்களை விட்டுப் போகும்படிச் செய்வது கூடாது. அவ்விதம் செய்வது ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதம் அல்ல, அல்லது வேறு எந்த மதமும் அல்ல.

—'ஹரிஜன்' - 9—3—1947

# 41

# முஸ்லிம் தலைவரின் கூற்றுக்குப் பதில்

[காந்திஜி தமது பிரார்த்தனைக் கூட்டப் பிரசங்கத்தில், வங்காளத்தின் முன்னாள் முதல் அமைச்சர் மௌல்வி பஸ்லுல் ஹக்கின் சொற்பொழிவைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். பஸ்லுல் ஹக் பேசிய விவரம் பின்வருமாறு: "காந்திஜி ஒரு முஸ்லிம் அல்ல. எனவே, இஸ்லாமைப் பற்றி அவர் உபதேசிக்கக் கூடாது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குப் பதிலாக அவர் இரு சமூகங்களுக்குள்ளும் துவேஷத்தையே உண்டாக்கி வருகிறார். பாரிசாலுக்கு அவர் வந்திருந்தால், அவரை விரட்டியிருப்பேன். இவ்வளவு காலம்

காந்திஜி இருப்பதை நோவாகாலி, திப்பேரா முஸ்லிம்கள் எப்படி சகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது."

பஸ்லுல் ஹக்கின் மேற்கண்ட கூற்றை மறுத்து காந்திஜி பேசிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது: ]

**ப**ஸ்லுல் ஹக் அவ்விதம் பேசியதாகக் கூறும் செய்தி உண்மையா என்பதைக் குறித்து நான் மிகவும் சந்தேகப்படுகிறேன். அது அவரது பிரசங்கத்தின் உண்மையான சாரமாக இருப்பின், அது மிகவும் துரதிருஷ்டகரமானது என்றே நான் கருதுவேன். மௌல்வி பஸ்லுல் ஹக் சாகிப் பொறுப்புள்ள ஸ்தானத்தை வகித்துவருகிறார். முஸ்லிம் லீக் தலைவர் பதவி வகிக்கவும் ஆர்வம் கொண்டு முயற்சித்து வருகிறார். இரு சமூகங்களுக்கும் இடையே மனக்கசப்பை உண்டாக்க நான் எதுவும் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. இஸ்லாம் மதத்தை உபதேசிப்பதாக நான் எக்காலத்திலும் கூறியதில்லை. நபி நாயகத்தின் உபதேசங்களை விளக்குவதற்கு மாத்திரமே நான் எனது பிரசங்கங்களின்போது முற்பட்டது உண்டு. நான் கூறும் விளக்கத்தை அங்கீகரிக்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.

அதே பிரசங்கத்தில் பஸ்லுல் ஹக் சாகிப் மற்றொரு விஷயத்தையும் கூறியிருக்கிறார்.

நான் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்தபோது இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி என்னை பஸ்லுல் ஹக் கேட்டாராம். கொள்கை சம்பந்தப்பட்ட வரையில் நான் ஓர் உண்மையான முஸ்லிம் என்றே நான் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதைப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்யும்படி அவர் என்னைக் கேட்டுக்கொண்டதாகவும், ஆனால், நான் அவ்விதம் செய்ய மறுத்துவிட்டதாகவும் பஸ்லுல் ஹக் கூறியுள்ளார்.

பஸ்லுல் ஹக்கிற்கும் எனக்கும் அத்தகைய சம்பாஷணை எதுவும் நடந்ததாக எனக்கு ஞாபகமில்லை. நான் அந்தரங்கமாகக் கூறிய எதையும் பகிரங்கமாகக் கூற மறுக்கும் வழக்கம் எனக்கு ஒருகாலத்திலும் இருந்ததில்லை. நான் ஒரு நல்ல ஹிந்துவாக இருப்பதுபோல் ஒரு நல்ல முஸ்லிமும்தான் என்று, நான் இந்த ஜில்லாவில் பல பிரசங்கங்களிலும் கூறியிருப்பதைப் பொதுமக்கள் அறிவர். அதுபோலவே, என்னை ஒரு நல்ல கிறிஸ்தவனாகவும் பார்சியாகவும் கருதுகிறேன் என்றும் கூறியிருக்கிறேன். நான் ஒரு நல்ல முஸ்லிம் என்றும், அதுபோலவே நான் உலகத்தில் உள்ள மற்ற எல்லா மதங்களையும் சேர்ந்தவன் என்றும் தென்னாப்பிரிக்காவில் நான் உரிமை பாராட்டியது உண்டு. பஸ்லுல் ஹக்கின் பிரசங்கம் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன். அவரிடமிருந்து அவர் நிகழ்த்திய பிரசங்கத்தின் சரியான விவரங்களை வரவேற்கிறேன்.

— 'ஹரிஜன்' - 9—3—1947

## 42

# சரமாரியான கேள்விகள்

**கேள்வி :** லீக் அரசாங்கமோ அல்லது பெரும்பான்மையோரான முஸ்லிம் சமூகமோ எங்களுக்கு ஈடுத் தொகை கொடுத்துவிட இசைந்தால், பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து ஹிந்துக்கள் வெளியேறுவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

**பதில் :** அகிம்சைக் கொள்கையை அனுசரித்து நான் அந்த யோசனையை ஆதரிக்கிறேன். பெரும்பான்மையோர் ஹிந்துக்களாயினும் அல்லது முஸ்லிம்களாயினும், எல்லா மாகாணங்களுக்கும் அது பொருந்தும். மிகவும் விரோதத்துடன் பெரும்பான்மையோர் சமூகம் சிறுபான்மையோர் தங்களிடையே இருப்பதைச் சகிக்காவிடில், அரசாங்கம் என்ன செய்ய முடியும்? பெரும்பான்மையோர் சமூகத்தை வற்புறுத்திப் பணியும்படி செய்வது ஒழுங்கற்றதென்பது எனது அபிப்பிராயமாகும். துப்பாக்கி முனையில் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு அளிப்பதும் முடியாத காரியம். உதாரணமாக, பெரும்பான்மையோர் சமூகம் ராம பஜனையையோ அல்லது கர தாளத்தையோ சகிக்கவும், ஸ்ரீ ராமன் மனிதன் அல்ல, கடவுள் என்று கருதவும் மறுக்கிறார்கள் என்றும், பஜனையிலும் கர தாளத்திலும் ஹிந்துக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் வைத்துக்கொள்ளுவோம். அங்கிலையில், போதிய ஈடுத் தொகை கொடுத்தால், சிறுபான்மையோர் சமூகம் அந்த இடத்தைக் காலி செய்துவிட்டுப் போய்விட வேண்டும் என்று நான் தயக்கமின்றிக் கூறுவேன்.

**கே :** மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குமுன் இங்கே வந்த தொண்டர்கள் மிகுந்த மனவேதனையையும் சரீரக் கஷ்டத்தையும் அனுபவிக்க நேர்ந்தது. அவர்கள் பெரும்பாலும், வழிகாட்டுவதற்கு உயர்தரத் தலைவர்களின்றியே தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டியிருந்தது. இப்போது போக்குவரத்து நிலைமை சௌகரியமாகிவிட்டதால், அவர்களை நடத்திச் செல்ல விரும்புவோர், அவர்களைப் பல்வேறு திசைகளில் இழுக்கின்றனர். இந்நிலையில் அவர்கள் வெவ்வேறு தலைவர்களுடைய வெவ்வேறு யோசனைகளுக்கு இணங்கும்படி நேராமல் எவ்விதம் தவிர்ப்பது? இந்நிலையில் அவர்கள் தங்களுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை எவ்விதம் திறமையுடன் கவனிக்க முடியும்?

**ப :** கஷ்டமான நிலையில் தொண்டு புரிந்து சோர்வடைந்தவர்களுக்கு, ஓய்வு எடுத்துக்கொள்ள பூரண உரிமை உண்டு.

வெவ்வேறு தலைவர்கள் முரண்பாடான யோசனைகளைக் கூறுவதற்கு உட்படும்படி நேருவதைத் தவிர்க்க வேண்டுமாயின், தொண்டர்களே தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் கூறும் யோசனைகளை மாத்திரமே பின்பற்றவேண்டும். அதுவும், தலைவர் கூறும் யோசனை தங்கள் இதயத்திற்கும் அறிவுக்கும் இசைந்ததாக இருக்கும்போதுதான், அவ்விதம் பின்பற்றுவது விரும்பத்தக்கதாகும். தலைவரின் யோசனை முரண்பாடானதாகத் தோன்றுமாயின், தைரியமாகத் தங்களுடைய உள்ளத்தையும், அறிவையுமே பின்பற்றி நடக்க வேண்டும். எல்லா மதங்களின் கட்டளைகளும் இதுதான். மத விஷயங்களிலேயே அவ்விதமாயின், லௌகிக விஷயங்களில் அவ்விதம் பின்பற்றுவது இன்னும் அதிக முக்கியமாகும். இரு சமூகங்களுக்கும் ஒன்றுக்கொன்று பகையை உண்டுபண்ணுவதல்ல, இரு சமூகங்களையும் ஒன்று சேர்ப்பதே அவர்களுடைய மூலாதாரமான கடமையாக இருக்க வேண்டும்.

கே: சாதி ஒழிய வேண்டும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். எனவே, நீங்கள் கலப்பு மணங்களை ஆதரிக்கிறீர்கள் என்று நாங்கள் கருதலாமா? தற்போது பல தொழில்கள், குறிப்பிட்ட சாதிகளின் ஏகபோக உரிமைகளாக இருந்து வருகின்றன. இந்த உரிமைகள் ரத்து செய்யப்பட வேண்டாமா?

ப: நிச்சயமாக, நான் கலப்பு மணங்களை ஆதரிக்கிறேன். சாதிகளே இராவிட்டால், இந்தக் கேள்வியே எழாது. ஆனந்தமான அத்தகைய நிலை ஏற்படும்போது, தொழில்களில் உள்ள ஏகபோக பாத்தியம் மறைந்துவிடும்.

கே: ஒரே கடவுள்தான் என்றால், உலகில் ஒரே மதம்தான் இருக்க வேண்டும் அல்லவா?

ப: இது விசித்திரமான ஒரு கேள்வியாகும். ஒரே மரத்தில் லட்சக்கணக்கான இலைகள் இருப்பது போலவே, கடவுள் ஒருவராயினும், ஆடவர்களும் பெண்களும் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை மதங்களும் இருக்கின்றன. எனினும், அவர்கள் ஒரு கடவுளிடம் உறுதியான பக்தி கொண்டிருக்கின்றனர். ஆனால், இந்தத் தெளிவான உண்மையை அவர்கள் அறிவதில்லை. ஏனெனில், அவர்கள் பல்வேறு தீர்க்கதரிசிகளின் பக்தர்களாக இருப்பதுடன், பல்வேறு தீர்க்கதரிசிகள் இருப்பது போலவே பல்வேறு மதங்களும் இருப்பதாகக் கருதுகின்றனர். உண்மையில், நான் ஓர் ஹிந்து என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. எனினும், யாராவது ஒருவரைப் போலவோ அல்லது எல்லோரையும் போலவோ அவர்கள் அனுசரிக்கும் முறையில் நான் கடவுளை வணங்குவதில்லை என்பதை நான் அறிவேன்.

கே: சாதிகளுக்குள் கலப்பு மணத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்கள். பல்வேறு மதங்களைச் சார்ந்த இந்தியர்களுக்குள்ளேயும் கலப்பு மணங்கள் இருக்க வேண்டுமென நீங்கள் கூறுகிறீர்களா? அவ்விதம் கலப்பு மணம் செய்துகொள்ளுவோர், தாங்கள் எந்த மதத்தையும் சேர்ந்தவர்கள் அல்ல என்று பிரகடனம் செய்ய வேண்டுமா? அல்லது அவர்கள் பண்டைய மத வழக்கங்களை அனுசரித்துக்கொண்டே கலப்பு மணம் செய்துகொள்ளலாமா? அப்படியாயின், எந்த முறையில் திருமணச் சடங்கு நடைபெற வேண்டும்? அது கலப்பற்ற 'சிவில்' வைபவமாக இருப்பதா அல்லது மத சம்பந்தமான வைபவமாக இருப்பதா? மதம் முற்றிலும் தனி நபரைப் பொறுத்த விஷயமென நீங்கள் கருதுகிறீர்களா?

ப: பல்வேறு மதத்தினருக்குள் கலப்பு மணங்கள் நடைபெற வேண்டும் என்பது எப்போதும் என் கருத்து அல்லவெனினும், அவ்விதத் திருமணம் எங்கேயாவது நடைபெற்றால் அது வரவேற்கத்தக்கதே என்ற முடிவிற்கு நான் நீண்ட காலத்திற்கு முன்பே வந்துள்ளேன். அத்தகைய திருமணத்திற்கு நான் விதிக்கும் நிபந்தனை என்னவெனில், அது சிற்றின்ப இச்சையை அடிப்படையாகக் கொண்டிருக்கக் கூடாது என்பதே. திருமணம், புனிதத் தன்மை பொருந்திய ஒரு வழக்கம் என்பதே எனது அபிப்பிராயமாகும். எனவே, அவ்விஷயமாக இரு சாராருக்கும் பரஸ்பர நட்பு இருக்க வேண்டும்; ஒருவர் மற்றவருடைய மதத்திற்குச் சமமான மரியாதை கொடுக்க வேண்டும். இதில் மத மாற்றம் என்ற கேள்வியே இல்லை. எனவே, திருமணச் சடங்கை, இரு மதங்களையும் சேர்ந்த புரோகிதர்களே நடத்திவைக்க வேண்டும். சமூகங்கள் பரஸ்பரம் பகைமையை விட்டு, உலகத்திலுள்ள எல்லா மதங்களுக்கும் மதிப்புக் கொடுக்கும்போதுதான், மகிழ்ச்சியைக்கொடுக்கும் அச்சம்பவம் நடைபெற முடியும்.

கே: அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்று, பள்ளிக்கூடப் பாடங்களில் மத போதனையும் ஒன்றாக இருக்க வேண்டுமா? மத போதனை அளிப்பதற்கு வசதியாக ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் தனிப் பள்ளிக்கூடம் இருக்க வேண்டும் என்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? அல்லது மத போதனையைத் தனித்த ஸ்தாபனங்களின் பொறுப்பில் விட்டுவிட வேண்டுமா? அப்படியாயின், அத்தகைய ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் நிதி உதவி புரிவது நியாயம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

ப: சமூகம் ஒரே மதத்தைச் சார்ந்ததாக இருந்தாலும்கூட, அரசாங்கம் மத சம்பந்தமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளு

வதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அரசாங்கம் அதில் தலையிடுவது ஒரு போதும் வரவேற்கத்தக்கதல்ல. மதம், முற்றிலும் சொந்த விஷயமாகும். உண்மையில், எத்தனை இதயங்கள் இருக்கின்றனவோ, அத்தனை மதங்களும் இருக்கின்றன. ஒவ்வொருவரின் இதயமும், ஒவ்வொரு விதமாகக் கடவுளை உருவகப்படுத்திக்கொள்ளுகிறது. மத ஸ்தாபனங்களுக்கு ஓரளவோ அல்லது முற்றிலுமோ அரசாங்கம் உதவி அளிப்பதையும் நான் எதிர்க்கிறேன். தன் சொந்த மத போதனைக்குத் தேவையான நிதியைச் சமாளிக்க முடியாத ஒரு ஸ்தாபனத்தையோ அல்லது கோஷ்டியினரையோ, உண்மையான மதத்தை அறிந்துகொள்ளாதவர்கள் என்றே கூற வேண்டும். எனினும், அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் ஒழுக்க போதனை கூடாது என்பது அதன் அர்த்தமல்ல. மூலாதாரமான ஒழுக்க விதிகள், எல்லா மதங்களுக்கும் பொதுவானவையே.

**கே:** பல்வேறு மதத்தினருக்குள்ளும் கலப்பு மணம் நடைபெற வேண்டும் என்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்கள். அதே சமயத்தில், மணமகனும் மணமகளும் அவரவர் மதத்திலேயே இருக்க வேண்டும் என்றும் நீங்கள் கூறுகிறீர்கள். அதன் காரணமாகவே, சிவில் திருமணங்களை நீங்கள் சகிப்பதாகவும் கூறுகிறீர்கள். திருமணம் செய்துகொண்ட தம்பதிகள் தங்கள் வாழ்க்கையின் இறுதிவரையில் அவரவர் மதத்தையே அனுசரித்து வந்ததற்கு உதாரணங்கள் இருக்கின்றனவா? சிவில் திருமண முறை, மதத்திற்கே விரோதமானது அல்லவா? மதப்பற்று குறைவதற்கு அது இடம் அளிக்கிறதல்லவா?

**ப:** இந்தக் கேள்விகள் பொருத்தமானவையே. மரணம் வரையில் தம்பதிகள் அவரவர் மதத்தை உறுதியுடன் பற்றிக் கொண்டிருந்ததற்கு நான் உதாரணங்கள் காட்டுவதற்கில்லை. ஏனெனில், நான் அறிந்த அத்தகைய நண்பர்கள் இன்னும் வாழ்ந்துவருகிறார்கள். ஆடவர்கள் ஒரு மதத்தையும், பெண்கள் மற்றொரு மதத்தையும் சேர்ந்த பல தம்பதிகளை நான் கவனித்து வருகிறேன். அவர்கள் அவரவர் சொந்த மதத்தில் சிறிதும் தளர்வின்றி உறுதியுடன் இருந்து வருகிறார்கள். சென்ற கால உதாரணங்களுக்காக நாம் காத்திருக்கவேண்டிய அவசியம் இல்லையென்றுகூட நான் கருதுவேன். நாம் புதிய உதாரணங்களைச் சிருஷ்டிக்க வேண்டும். அப்படியானால்தான், கோழைகள் தங்களுடைய கோழைத்தனத்தை உதறித் தள்ளுவார்கள். சிவில் விவாகங்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், மிக மிகத் தேவையான சீர்திருத்தம் என்ற முறையில் நான் அம்முறையை வரவேற்கிறேன்.

—'ஹரிஜன்' - 16—3—1947

# 43

# ஸ்ரீ அட்லியின் அறிக்கை


இந்தியா விஷயமாக பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ அட்லி பார்லிமெண்டில் விடுத்த அறிக்கை பற்றிக் காந்திஜி தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தார். அதையொட்டி காந்திஜிக்குத் தந்திகளும் கடிதங்களும் வந்து குவிந்தன. அவற்றைக் குறிப்பிட்டு காந்திஜி பின் வருமாறு கூறினர்:

காங்கிரசும், லீகும், மற்ற ஸ்தாபனங்களும் ஸ்ரீ அட்லியின் அறிக்கை சம்பந்தமாக ஆதாரபூர்வமான அபிப்பிராயங்களைக் கூறமுடியும். பல்வேறு கட்சியினர் மீதும், தங்களுக்குச் சிறந்ததென்று தோன்றுவதைச் செய்யும் பொறுப்பை அவ்வறிக்கை சுமத்தியிருக்கிறது என்று மாத்திரம் நான் கூற விரும்புகிறேன். 1948 ஜூன் மாதத்திலோ அல்லது அதற்கு முன்பேயோ, பிரிட்டிஷ் ஆட்சி முடிவடையும் என்று அது பிரகடனப்படுத்தியிருக்கிறது. அந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்ளுவதோ அல்லது சீர்குலையச் செய்வதோ கட்சிகளைப் பொறுத்திருக்கிறது. அவைகளின் ஒருமித்த விருப்பத்தை, உலகத்தில் உள்ள எந்தச் சக்தியினலும் புறக்கணிக்க முடியாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களுடைய வேற்றுமைகளை மறந்து, வெளியாரின் வற்புறுத்தலின்றி ஒன்றுபடுவார்களாயின், அவர்கள் தங்களுடைய அரசியல் நிலையை அபிவிருத்தி செய்துகொள்ளுவது மாத்திரமல்ல, அகில இந்தியாவிலும், அநேகமாக உலகத்திலும் மாறுதலை உண்டாக்கியவர் ஆவார்கள்.

'ஹரிஜன்' – 16—3—1947



நோவாகாலியில் தட்டப்பாரா என்ற கிராமத்தில் படுநாசம் செய்யப்பட்டிருந்த இடத்தை காந்திஜி பார்க்கிறார்—1946 நவம்பர் 12-ஆம் தேதி.



பீகாரில் வகுப்பு வெறியினல் பாதிக்கப்பட்டிருந்த பேலா பகுதியை அப்துல் கபார்கானுடன்
காந்திஜி சுற்றிப் பார்த்தார்—1947 மார்ச், 28.

பகுதி பதினான்கு

# பீகார் யாத்திரை

[நோவாகாலியிலும், கல்கத்தா பகுதிகளிலும் யாத்திரை செய்தபின், பீகாரில் நடந்த வகுப்புக் கலகங்களால் திடுக்கிட்ட காந்திஜி, மக்களுக்குப் புத்திமதி கூறி அங்கே சமாதானம் நிலவும்படி செய்வதற்காக, 1947 மார்ச்சு மாதத்தில் பீகாருக்கு விஜயம் செய்தார். 1940–இல் காந்திஜி பீகாருக்கு விஜயம் செய்ததை மக்கள் மறக்கவில்லை. ஏழு ஆண்டுகளுக்குப் பின், காந்திஜி மீண்டும் தங்கள் மாகாணத்துக்கு விஜயம் செய்வதை மக்கள் குதூகலத்துடன் வரவேற்றார்கள். மார்ச்சு மாதம் 5–ஆம் தேதி பாட்னாவில் உள்ள பிரபல மைதானத்தில் நடந்த மாபெரும் பிரார்த்தனைக் கூட்டத்தில், ஜனங்கள் பிரார்த்தனையின்போது அமைதியாகவும் மௌனமாகவும் இருந்ததைக் காந்திஜி மிகவும் பாராட்டினார். பீகாருக்குத் தாம் வந்துள்ள நோக்கத்தையும் கூட்டத்தில் குறிப்பிட்டார். வங்காளத்தில் முஸ்லிம்கள் செய்த அக்கிரமங்களால் கொதிப்படைந்த பீகார் ஹிந்துக்கள், முஸ்லிம்களுக்கு விரோதமாக அத்து மீறிய செயல்களில் ஈடுபட்டதே பீகார் கலவரங்களுக்குக் காரணமாகும். டாக்டர் சையது முகமது தமது அந்தரங்கக் காரியதரிசியின் மூலம் அனுப்பி யிருந்த கடிதத்திற்கு இணங்கவே தாம் பீகாருக்கு வந்திருப்பதாகக் கூறினார். காந்திஜி அப்போது நிகழ்த்திய பிரசங்கத்தின் முழு விவரமே கீழே கொடுக் கப்பட்டிருக்கிறது:]

## 1

## எது மனிதத் தன்மை?

பீகாருக்கு நான் முன்பு என்னால் இயன்ற தொண்டைச் செய்திருப்பதால், பீகாரை 'எனது பீகார்' என்று சொல்லிக் கொள்ள எனக்கு உரிமை உண்டு. எனவே, நான் பீகாருக்கு வரவேண்டிய அவசியமே இராது என்று நம்பிப் பெருமைப் பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால், இங்கே நிலைமை எவ்வாறு இருக்கவேண்டுமோ அவ்வாறு இல்லை என நான் நினைக்கும்படி டாக்டர் சையது முகமதுவின் கடிதம் செய்திருக்கிறது. பீகார் ஹிந்துக்கள் தங்களுடைய சகோதரர்களான முஸ்லிம்களுக்குச் செய்துள்ளவை, நோவாகாலி முஸ்லிம்கள் செய்தவற்றைவிட மிகவும் மோசமாகிவிட்டன. சாத்தியமான வரையில் ஹிந்துக்கள் எல்லா விதத்திலும் ஈடு செய்தனர், ஈடு செய்தும் வருகிறார்கள் என நம்புகிறேன். அவர்கள் செய்த குற்றம் எவ்வளவு பெரிதோ, அதுபோல் அவர்கள் செய்யும் ஈடும் மகத்தானது என்று நம்பு

கிறேன். ஹிந்துக்கள் தாங்கள் செய்த குற்றத்திற்காக உண்மை யிலேயே வருந்துவார்களாயின், "பாவம் செய்தவர் எவ்வளவுக் கெவ்வளவு பெரியவரோ, அவ்வளவுக்குப் பாவமும் பெரிய தாகும்" என்ற உயர்ந்த பழமொழியின் உண்மையை நிரூபிக்க வேண்டும். திடீரென்று வெறி பிடித்துத் தாங்கள் மனிதர்கள் என்பதை மறந்த பீகார்வாசிகள் குண்டர்களின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்றும், அதற்குக் காங்கிரஸ்காரர்கள் பொறுப் பாளிகள் அல்லவென்றும் கூறும் குற்றத்திற்குப் பீகார் ஹிந்துக் கள் ஆளாகமாட்டார்களென்று நம்புகிறேன். தாங்கள் நீதியுட னும் நேர்மையுடனும் நடந்துகொள்ளுபவர்களைப் போல் அவ் விதம் கூறினால், காங்கிரசை அவர்கள் துரதிருஷ்டம் வாய்ந்த ஒரு கட்சியின் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டவர் ஆவார்கள். ஏனெனில், காங்கிரஸ்வாதிகளுக்கும், காங்கிரஸ் அனுதாபிகளுக் கும் மாத்திரமல்ல, காங்கிரசின் விரோதிகளுக்கும்கூடப் பிரதி நிதித்துவம் வகிப்பதாயும், எல்லா மக்களுக்கும் தொண்டு செய்வதாகவும் காங்கிரஸ் உரிமை கொண்டாடுகிறது. இந்தியா வில் உள்ள ஸ்தாபனங்களிலெல்லாம் காங்கிரஸ் ஒன்றுதான், தான் அகில இந்தியாவிற்கும் பிரதிநிதி ஸ்தாபனம் என்று நியாயமாகவே உரிமை கொண்டாடுகிறது. என நான் லண்டன் வட்ட மேஜை மகாநாட்டில் அடிக்கடி வற்புறுத்திக் கூறினேன். எனவே, எல்லாச் சமூகங்களும், எல்லாப் பிரிவினரும் செய்யும் தவறான நடவடிக்கைகளுக்குக் காங்கிரஸ்தான் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

இந்தியா முழுவதும் உள்ள மக்களின் தார்மிக, லோகாயத மான, சரீர சம்பந்தமான நிலையை அபிவிருத்தி செய்து, அது சிறப்புற்று விளங்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது காங் கிரசின் பெருமைப்படத்தக்க உரிமையாக இருக்கவேண்டும். அப்படியானால்தான், காங்கிரஸ் ஸ்தாபனம் ஆரம்பமானதி லிருந்து அது கொண்டாடிவரும் உரிமைக்கு அது தகுதி வாய்ந்த தாக இருக்கமுடியும். உண்மையில், வெறி பிடித்த எழுச்சியில் ஒரே ஒரு காங்கிரஸ்காரர்கூட சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று வாயால் சொல்லுவதுகூட தவறாகும். தங்களுடைய முஸ்லிம் நண்பர்களின், முஸ்லிம் சகோதரர்களின் உயிர்களைக் காப்பாற்று வதற்காகப் பல காங்கிரஸ்வாதிகள் தங்களுடைய உயிர்களைப் பணயம் வைக்கத் துணிந்தார்கள். எனினும், அந்த உண்மை, கோபம் கொண்ட, துன்பத்திற்கு உள்ளான முஸ்லிம்கள் பீகார் ஹிந்துக்களின் மீது நியாயமாகச் சுமத்தியுள்ள குற்றச்சாட்டிற் குப் பதிலாகிவிடாது. பீகாரில் நடந்த அக்கிரமங்களுக்குச் சரித்திரத்திலேயே உவமையில்லை என்று வருணிக்க முஸ்லிம் கள் தயங்கவில்லை. நான் விரும்பினால், பீகார் ஹிந்துக்களைக் காட்டிலும் படுமோசமான அட்டூழியங்கள் புரிந்த மனித அரக்கர் களின் உதாரணங்கள் சரித்திரத்தில் காணப்படுகின்றன என் பதைக் காட்டமுடியும். ஆனால், அவற்றையும் இவற்றையும் ஒப்பிட்டுக் கூறும் குற்றத்திற்கு ஆளாக நான் விரும்பவில்லை

குற்றங்களில் எவை பெரியவை என்பதைத் தங்கத் தராசில் வைத்து நிறுக்கவும் நான் விரும்பவில்லை. மாறாக, தான் செய்த தற்கு உண்மையில் வருந்தும் மனிதன், முன்பு செய்தவர்களைக் காட்டிலும் தான் கெட்டவன் அல்ல என்று மனத்தில் எண்ணிக் கூடப் பெருமைப்பட்டுக்கொள்ள விரும்பமாட்டான். நல்லதைச் செய்வதில்தான் போட்டிக்கு நியாயமான இடம் உண்டு. முந்தியவர்களைக் காட்டிலும் அதிக நன்மை செய்வதில் போட்டி போடலாம். எனவே, நோவாகாலியைப் போல் சட்ட விரோத மான காரியங்கள் நடைபெறாமல் பீகார் தடுத்துவிட்டதென்று' இந்தியா முழுவதும் உள்ள, சிந்திக்கும் சக்தியற்ற ஹிந்துக்கள் கொண்டிருக்கும் போலி நம்பிக்கை எனக்குத் துக்கத்தைக் கொடுக்கிறது. அத்தகைய மனப்போக்கு, அழிவிற்கும் அடிமைத் தனத்திற்கும் வழிகோலுமேயன்றி, விடுதலைக்கும் வீரத்தனத்திற் கும் வழி செய்யாது என்பதை வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன். நாம் கண்ட இந்தக் காட்டுமிராண்டித்தனத்தினால் ஒரு நாகரிகத் தையோ, ஒரு மதத்தையோ அல்லது சுதந்திரத்தையோ பாது காக்க முடியுமென மனிதன் நம்புவது கோழைத்தனமாகும். ஒரு புறத்தில் கோழைத்தனம் இருக்குமாயின், மற்றொரு புறத்தில் கொடுமை இருக்கிறது என்பதை, நான் சமீபத்தில் பெற்ற நேரடியான அனுபவத்திலிருந்து கூறுகிறேன். எனவே, நோவா காலியில் நிகழ்ந்த சம்பவங்களுக்குப் பழி வாங்கும் வழி, நோவாகாலி செய்யமுடிந்த காட்டுமிராண்டித்தனமான செய்கை களை 'காப்பி' அடிப்பதல்ல; ஆனால், காட்டுமிராண்டித்தனத்திற் குப் பிரதியாக மனிதத் தன்மையைக் காட்டுவதேயாகும். மனிதத் தன்மை என்பது, தனது கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படா மலும், திருப்பி அடிக்கும் எண்ணம்கூட இல்லாமலும் சாகத் துணிவதுதான். எல்லா அம்சங்களிலும் இந்தியா சுதந்திரமாகத் திகழ்வதைக் காண நாம் உண்மையில் விரும்பினால், நாம் காட்டு மிராண்டித்தனமான முறைகளைப் பின்பற்றக்கூடாது. இவ்வாறு உங்களையும், உங்கள் மூலம் இந்தியா முழுவதையும் நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

—'ஹரிஜன்' - 23—3—1947

## 2

# பீகாருக்கு வந்ததேன்?

பிரார்த்தனைக்குப் பின் காந்திஜி, தமக்கு வந்த கடிதங்களிலிருந்து ஒரே ஒரு கண்டனக் கடிதத்தை மாத்திரம் குறிப்பிட்டு, அதற்குப் பதிலாகக் கூறியதாவது :

இந்தக் கடிதம் முற்றிலும் அறியாமையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. டாக்டர் சையது முகமதுவின் தூண்டு

தலுக்கு இணங்க நான் நோவாகாலியை விட்டு வந்ததும், டாக்டர் சையது முகமதுவின் விருந்தாளியாக இருக்கத் துணிந்ததும் விவேகம் ஆகுமா என்று இக்கடிதம் எழுதியவர் சந்தேகப்படுகிருர். டாக்டர் முகமது எனது நண்பர் என்பதையும், பூஜ்யரான காலஞ்சென்ற பிரிஜ் கிஷோர் பிரசாதையோ அல்லது டாக்டர் ராஜேந்திரப் பிரசாதையோ அறிவதற்கு முன்பே டாக்டர் முகமதுவின் மாமனாரை எனக்குத் தெரியும் என்பதையும் கடிதம் எழுதியவர் மறந்துவிட்டார். என்னை பீகாருக்கு வரும்படி செய்ததன் மூலம், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் டாக்டர் முகமது ஒரு சிறந்த தொண்டு செய்துள்ளார். இந்தியா முழுவதும் வெறி பிடித்திருக்கையில் பீகார் மாத்திரம் வெறியின்றி விவேகத்துடன் நடந்துகொள்ளுமாயின், உலகத்தின் முன் இந்தியாவின் மதிப்பு உயரும்படி பீகார் செய்யும்; சுற்றிலும் வெறி பிடித்திருக்கையில், தான் மாத்திரம் நிதானத்தை இழந்துவிடாமல் இருந்ததற்கு பீகார் உலகத்தில் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழும். பீகாருக்கு நான் தொண்டு புரிந்தவன் என்ற முறையில் பீகாரிடமிருந்து இதை நான் எதிர்பார்ப்பதற்கு உரிமை உண்டு. தவிர, பீகார் ஹிந்துக்கள் எவ்வளவு எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயினும், அவர்கள் உலகத்தில் எல்லா நற்குணங்களும் வாய்க்கப் பெற்ற கடவுளின் அவதாரமான ஸ்ரீராமனின் பக்தர்கள் ஆவர். சிற்சில சமயங்களில் தீமையே உலகத்தை ஆட்சி புரிவதுபோல் தோன்றினாலும், ஒரே ஒருவராவது நல்ல மனிதராக இருக்கும் வரையில் உலகம் இயங்கி வரும் என்பது நிரந்தரமான உண்மையாகும். மனத்தை மயக்கும் தீமைக்கிடையே பீகார் நற்பண்புடன் இருக்குமாயின், அதனால் பீகாருக்கும் நன்மை, இந்தியா முழுவதற்குமே நன்மையாகும். நோவாகாலி முஸ்லிம்கள் என் கட்டுப்பாட்டிற்கு அடங்காமல் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுவதற்காக, நோவாகாலியிலிருந்து என்னை இங்கே இழுத்துள்ளனர் என்று குத்தலாகக் கூறுவது கவைக்குதவாத பேச்சாகும். நான் பீகாரில் பூரண வெற்றி அடைவேனுயின், நோவாகாலி முஸ்லிம்கள் வெறிகொள்ளுவார்கள் என்பது நடக்கக்கூடாத விஷயமாகும். ஏனெனில், பீகாரில் நான் பெறும் வெற்றி, நோவாகாலி முஸ்லிம்கள் வெட்கமடைந்து திருந்தும்படி செய்துவிடும்.

—'ஹரிஜன்' - 4—5—1947

# 3

# தகாத நடவடிக்கைகளும் பிராயச்சித்தமும்

இன்று பிரார்த்தனை மைதானத்திற்குப் புறப்படு முன், நான் சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டேன். பல முஸ்லிம், ஹிந்து நண்பர்கள் கூறிய விவரங்களைக் கேட்பதிலேயே இன்று முழுதும் என் நேரம் கழிந்தது. இங்கே எல்லாம் முற்றிலும் சகஜ நிலைக்கு வந்துவிட்டன என அவர்களில் ஒருவராலும் எனக்கு உறுதி கூற முடியவில்லை. இதனால் என் மனத்திற்கு மிகுந்த சோர்வு ஏற்பட்டது. நான் தேவையான ஓய்வு எடுத்துக் கொண்டதற்கு அதுதான் காரணம்.

கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் வருணிக்கப் பட்டுள்ள ஸ்திதப்ரக்ஞனின் (நிலை பெற்ற அறிவு உடையவனின்) லட்சியம் எப்போதும் என்முன் இருந்து வருகிறது. அந்த லட்சியத்தை அடைய நான் இடைவிடாது முயற்சித்து வருகிறேன். மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன கூறினாலும், அந்த லட்சியத்திற்கு வெகு தொலைவில் நான் இருக்கிறேன் என்பதை அறிவேன். ஒருவர் உண்மையிலேயே அத்தகைய நிலையை அடையும்போது, அவர் மனத்தில் ஏற்படும் எண்ணம்கூட ஒருவித சக்தியைப் பெற்றுவிடுகிறது. அந்தச் சக்தி சுற்றிலும் உள்ளவர்களின் நிலையை மாற்றிவிடுகிறது. என்னிடத்தில் இப்போது அந்தச் சக்தி எங்கே இருக்கிறது? எனவே, நான் ஒரு சாதாரண மனிதன் என்று மாத்திரமே கூற முடியும். மற்றவர்கள் ஆக்கப் பட்டுள்ள மண்ணாலேயே நானும் ஆக்கப்பட்டிருக்கிறேன். ஆனால், மனித வர்க்கம் அனைத்திற்கும் கீதை காட்டியுள்ள மகோன்னதமான லட்சியத்தை அடைய நான் இடைவிடாது முயற்சித்து வருகிறேன்.

நோவாகாலியில் செய்ததுபோல் இங்கேயும், கிராமம் கிராமமாக யாத்திரை செய்யலாமா என்பது பற்றி நான் தீவிரமாக யோசித்து வருகிறேன். தங்களுடைய சகோதரரான முஸ்லிம்களுக்குத் தவறு இழைத்த தொலைவில் உள்ள கிராமவாசிகள் விஷயத்தில் என் எண்ணங்களின் சிறிதளவு சக்தியை நேரடியாக உபயோகிக்க விரும்புகிறேன்.

பீகார், துளசிதாசரின் ராமாயணம் பிறந்த இடமாகும். ஒரு பீகார்வாசி எவ்வளவு கல்வியற்றவராக இருந்தாலும், எவ்வளவு ஏழையாக இருந்தாலும், அவரது வாயில் அந்த மகத்தான இதிகாசத்தின் இனிய கீதம் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கும். பாவம் என்றால் என்ன, புண்ணியம் எதைக் குறிக்கிறது என்பதை அவர் அறிவார். அவர்களின் கையினால் செய்யப்

பட்ட அக்கிரமங்களின் அளவு பயங்கரமானதாக இருக்கிறது. எனவே, அவர்கள் செய்ய வேண்டிய பிராயச்சித்தமும் மகத்தானதாக இருக்க வேண்டாமா? 'பாவம் செய்தவர் பெரியவராக இருப்பதற்குத் தகுந்தவாறு பாவமும் பெரியதாகிவிடுகிறது' என்று ஒரு பழமொழி உண்டு. இந்த மன நிலையில் அவர்கள், தங்களால் துன்புறுத்தப்பட்டவர்களை அணுகி, அவர்களுக்கு நீதி செய்ய முயற்சிக்க வேண்டும்.

இப்போதுகூட ஹிந்துக்களின் வீடுகளில் முஸ்லிம் பெண்கள் அடைபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது என்றும், அவர்களை அவர்களுடைய வீடுகளுக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்றும் நேற்று மாலை கூறினேன். குற்றம் செய்தவர்கள் தைரியமாக முன்வந்து, தாங்கள் செய்த பாவங்களை ஒப்புக்கொள்ள வேண்டும்; அதன் விளைவாக அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய எல்லாத் தண்டனையையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்க வேண்டும். அவ்விதம் செய்வதுதான் தைரியமாகும். அவர்களுக்கு அத்தகைய தைரியம் இல்லையாயின், அந்தப் பெண்களை அவர்கள் என்னிடமாவது கொண்டு வந்து ஒப்புவித்துவிடலாம். அதனால் தங்களுக்கு ஏதாவது அபாயம் நேருமோ என்று அவர்கள் பயப்பட வேண்டியதில்லை.

இன்னும் ஒன்றை அவர்கள் செய்ய வேண்டும் என்பது எனது விருப்பமாகும். சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன, அல்லது நாசம் செய்யப்பட்டன என்று கூறப்படுகிறது. சரியான தொகை என்ன என்பதுபற்றிக் கவலையில்லை. ஒருவரிடம் இரண்டே ரூபாய் மாத்திரம் இருந்து, அவர் அதையும் பறிகொடுத்துவிட்டால், அவர் தனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் இழந்தவராகிவிடுகிறார். எனவே, இந்த மாகாணத்தின் எந்த இடத்தில் கொள்ளை நடந்திருப்பினும், கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களைத் திருப்பிக்கொடுத்து நஷ்டஈடு செய்யவேண்டியது, ஒவ்வொரு ஹிந்துவின் கடமையாகியிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் உயிருடன் இல்லாவிடில், கொள்ளையிட்ட சொத்தையோ அல்லது ஈடுத் தொகையையோ உயிருடனிருக்கும் உறவினர்களிடமாவது சேர்ப்பித்துவிட வேண்டும்.

ராமாயணம் பிறந்த இடத்தில் வாழ்பவர்களும், அந்த மகோன்னதமான நூலின் உபதேசங்களின்படி தங்களுடைய வாழ்க்கையைச் சீராக்க முயற்சிப்பவர்களுமான பீகார் வாசிகளிடமிருந்து, இவ்வளவாவது நான் நிச்சயமாக எதிர்பார்க்க முடியும்.

— 'ஹரிஜன்' - 23—3—1947

# 4

# காமன் பண்டிகையை கொண்டாடுவது எப்படி?

*பிரார்த்தனைக் கூட்டத்தின்போது, மறுநாள் காமன் பண்டிகை என்பதைக் காந்திஜிக்கு நினைவூட்டியதுடன், அது எவ்விதம் கொண்டாடப்பட வேண்டும் என்பது பற்றி அவரது அபிப்பிராயத்தைக் கேட்க மக்கள் விரும்புகின்றனர் என்றும் எழுதப்பட்ட ஒரு குறிப்பைக் காந்திஜியிடம் கொடுத்தனர். அவ்விஷயமாகக் காந்திஜி பேசியதாவது:*

காமன் பண்டிகையைப் போன்ற மத சம்பந்தமான ஒரு வைபவம், மனம் போனபடி குடிப்பதற்கும் கூத்தாடுவதற்கும் காரணமாகிவிடக்கூடாது. ஆனால், கடவுளுடன் ஒவ்வொருவரும் தொடர்பு கொள்ளுவதற்கான கட்டுப்பாடான முயற்சிக்குக் காரணமாக இருக்கவேண்டும்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அண்டை அயலாராக அமைதியுடன் வாழ்ந்த காலம் உண்டு. ஆனால், இன்றோ ஒருவரை ஒருவர் நண்பர்களாகக் கருதமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நண்பர்களாகக் கருதாவிட்டாலும், பகைவர்களாகக் கருதாமலாவது இருக்கலாம் அல்லவா? காமன் பண்டிகையின் போது தாங்கள் மீண்டும் தாக்கப்படலாம் என்ற பயம் முஸ்லிம்களிடையே இருந்துவருகிறது. நோவாகாலியிலும், திப்பேராவிலும் உள்ள ஹிந்துக்கள் என்னிடம் என்னென்ன கூறினார்களோ, அதையெல்லாம் இங்கேயுள்ள முஸ்லிம்களிடமிருந்து நான் கேள்விப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. நோவாகாலியில் ஹிந்துக்களிடமிருந்து கேட்ட கதைகளை, இப்போது பாட்னாவில் முஸ்லிம்களிடமிருந்து கேட்பது எனக்கு வெட்கமாக இருக்கிறது. எனவே, நோவாகாலியில் உள்ள ஹிந்துக்களுக்கு நான் என்ன கூறினேனோ அதையே, பீகாரில் உள்ள முஸ்லிம்களுக்கு நான் கூறத் துணிகிறேன். அதாவது, இவர்கள் மனிதரைக் கண்டு பயப்படுவதை அறவே ஒழித்துவிட்டு, கடவுளை நம்பவேண்டும் என்பதே. எனினும், இது குற்றம் குறையற்ற பூரண நிலையைக் குறிக்கிறது என்பதை நான் அறிவேன்.

'வந்தே மாதரம்', 'ஜேய் பாரத்', 'ஜேய் ஹிந்த்' போன்ற கோஷங்கள் இன்று முஸ்லிம்களுக்குப் பீதியை உண்டாக்குகின்றன. 'பாரத்கி ஜேய்' (இந்தியாவிற்கு வெற்றி) என்ற கோஷத்திற்கு 'முஸல்மான்கி க்ஷய்' (முஸ்லிம்களுக்கு நாசம்) என்று அர்த்தமா? இல்லை. எனினும், இன்று இவ்வித நிலைமை ஏற்பட்டிருப்பது வெட்கக்கேடாகும். பல முஸ்லிம் லீக் நண்பர்களை நான் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் தங்க

ளுடைய உள்ளத்தை எனக்குத் திறந்து காட்டியுள்ளனர். அதாவது, பீகாரைப் போன்ற ஒரு மாகாணத்தில் இருக்க முஸ்லிம்கள் உண்மையில் அனுமதிக்கப்படமாட்டார்களா என்று கேட்கின்றனர். டாக்டர் சையது முகமதுவைப் போல் காங்கிரசில் உள்ள நண்பர்களும், தற்போதைய நிலைமையைக் குறித்துத் தங்களுடைய கலக்கத்தைத் தெரிவித்துள்ளனர். இவ்விதம் சகோதரரைச் சகோதரர் பயமுறுத்திக் கலங்கும்படி செய்வது உண்மையாயின், அது என்னால் சகிக்க முடியாததாகும். வெறி பிடித்த ஒரு செயலுக்குப் பிரதியாக, நாமும் உண்மையில் வெறி பிடித்து மற்றொரு செயலில் ஈடுபட்டு வருகிறோமா? அப்படியாயின், இந்தியா ரத்தக் கடலில் மூழ்கவேண்டியதுதான்.

இந்தியாவுக்கு அத்தகைய கதி நேரக்கூடாது என்பதில் நாம் உறுதி கொள்ளுவோமாயின், நமக்கு ஒருபோதும் அக்கதி நேரமுடியாது என்பது எனது திட்டமான அபிப்பிராயமாகும். பெண்குலத்தினிடமே நான் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறேன். பெண்கள்தான் அகிம்சையும் தன்னலத் தியாகமும் உருவானவர்கள் என்று நான் எப்போதுமே உறுதியாகக் கூறிவந்திருக்கிறேன். தன்னலத் தியாகமின்றி, ஒருகாலத்திலும் அகிம்சை உண்மையானதாக முடியாது.

எனவே, ஹிந்துக்கள் தாங்கள் செய்த காரியங்களுக்காக மிகவும் வருந்துவதோடு மட்டுமின்றி, முன்னரைக் காட்டிலும் அதிகமாகத் தங்கள்மீது அன்பு கொண்டுள்ளனர் என்று ஒவ்வொரு முஸ்லிமும் நினைக்கக்கூடிய விதத்தில், ஒவ்வொரு ஹிந்துவும் காமன் பண்டிகையைக் கொண்டாட வேண்டுமென்று விரும்புகிறேன். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பழைய நட்பு உறவு மீண்டும் ஏற்படுமாயின், அப்போதுதான் காமன் பண்டிகை உண்மையான மத சம்பந்தமான கொண்டாட்டமாக இருக்கும்.

என் குரல் எட்டும் இடமெல்லாம் நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையில், இந்தக் கூட்டத்தில் உள்ளவர்களுக்கு இன்னும் ஒன்று கூறவிரும்புகிறேன். ஹிந்துக்களின் வீடுகளில் இப்போது கூட முஸ்லிம் பெண்கள் பலாத்காரமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று என்னிடம் கூறப்படுகிறது. அது உண்மையாயின், அத்தகைய பெண்கள் யாவரையும் மீண்டும் அவரவர் வீடுகளில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடவேண்டும் என்றே நான் எதிர்பார்ப்பேன். குற்றம் செய்தவர்கள் உண்மையாக வருந்தவேண்டும். தாங்கள் செய்த அக்கிரமங்களுக்காக வருந்துவதாகவும், அவற்றிற்கான தண்டனையை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் முஸ்லிம்களின் மனத்தில் படும்படி செய்ய வேண்டியதை, ஒவ்வொரு ஹிந்துவும் தமது கடமையாகக் கருதவேண்டும். அவ்வளவிற்கு அவர்களால் இயலாவிடில், அத்தகைய பெண்களை முற்றிலும் ஜாக்கிரதையாக அவர்கள் என்னிடமாவது அல்லது ராஜேந்திரபாபுவிடமாவது ஒப்புவிக்க வேண்டுமென நான் எதிர்பார்க்கிறேன்.

ஹிந்துக்கள் வாயளவில் வருத்தம் தெரிவிப்பதோ அல்லது துன்பத்திற்கு உள்ளானவர்களுக்கு ஈடுத் தொகை கொடுத்து விடுவதோ மாத்திரம் போதாது. உண்மையில் அவசியமாகச் செய்யவேண்டியது என்னவெனில், அவர்களுடைய உள்ளங்கள் தூய்மை அடையவேண்டும்; அவர்களிடையே தாண்டவமாடும் துவேஷமும் அசிரத்தையும் ஒழிந்து அந்த ஸ்தானத்தில் அன்பு ஏற்படவேண்டும். அந்த அன்புச் சுடரின் கீழ் ஒவ்வொரு முஸ்லிம் ஆடவரும், பெண்ணும், குழந்தையும் தாங்கள் முற்றிலும் பத்திரமாக இருக்கிறோம் என்பதையும், யாதொரு தடையுமின்றி தங்கள் விருப்பப்படி தங்களுடைய மத சம்பிரதாயங்களை அனுசரிப்பதற்குச் சுதந்திரம் இருக்கிறது என்பதையும் உணர வேண்டும். இரு சமூகங்களுக்கும் இத்தகைய உறவு ஏற்படுவதற்கு காமன் பண்டிகை ஒரு சந்தர்ப்பமாக இருக்கவேண்டுமென்று நான் பிரார்த்தனை செய்கிறேன்.

—'ஹரிஜன்' – 23—3—1947

# 5

# தியாகத்தின் இறுதி நிலை

**கேள்வி:** தங்கள் வியாபாரத்தை யெல்லாம் இழந்தவர்களுக்கு நீங்கள் கூறியுள்ள புத்திமதி என்னவெனில், அவர்கள் தாங்களாக வலுவில் தொழிலாளர்களாக மாறிவிடவேண்டும் என்பதே. அப்படியானால் கல்வி, வர்த்தகம் போன்ற துறைகளை யார் கவனித்துக்கொள்ளுவார்கள்? அவ்விதம் தொழிலின் பாகுபாட்டை நீங்கள் ஒழித்துவிட்டால், நாகரிக வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படாதா?

**பதில்:** நான் கூறியதன் அர்த்தத்தை அறிந்துகொள்ளாததே இந்தக் கேள்விக்குக் காரணமாகும். ஒரு மனிதர் தமக்குச் சொந்தமான வியாபாரத்தை இழந்துவிட்டால், அவர் தொழிலாளராக வேண்டும் என்பதில்லை. ஆனால், உடல் உழைப்பை, உதாரணமாக தோட்டி அல்லது கல் உடைக்கும் வேலையை மேற்கொள்ளும்படியான நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டு விடுகிறது. தொழில்களை அல்லது வேலைகளைப் பாகுபாடு செய்வதில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனால், சம்பளம் எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்பதையே நான் வற்புறுத்துகிறேன். ஒரு தோட்டிக்கு என்ன சம்பளமோ, அதே சம்பளம்தான் வக்கீலுக்கோ, டாக்டருக்கோ இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், தொழிற் பாகுபாடு தேசத்தையோ, உலகத்தையோ உயர்ந்த நிலையை எய்தும்படி செய்யும். உண்மையான நாகரிகத்திற்கோ அல்லது சந்தோஷ வாழ்

விற்கோ ராஜபாட்டை வேறு எதுவும் இல்லை. யானை முகம் உடைய கணபதியை ஒரு ராக்ஷசப் பிறவி என்றே சொல்ல வேண்டும். ஆனால், ஓம் என்பதன் பிரதிமை என்ற முறையில் கணபதி மகோன்னதமான சின்னமாகத் திகழ்கிறார். பத்து தலைகள் உள்ள ராவணன் கதையில் காணப்படும் ஒரு முட்டாள்; ஆனால், அவன் கோபம், காமம் போன்ற நிலையற்ற மன எழுச்சிகளால் ஆட்டி வைக்கப்படும் அறிவற்ற ஒரு மனிதனுயின், அவனை பல தலைப் பிசாசு என்றே கூற வேண்டும்.

கே: மத்திய அரசாங்கத்தில் எல்லாம் தவருகப் போய்க் கொண்டிருக்கையில், ஒற்றுமை ஏற்படும்படி செய்ய சாதாரண மக்கள் என்ன உதவி புரிய முடியும்?

ப: ஏககாலத்தில் இரண்டு சக்திகள் வேலை செய்கின்றன என்பது விஞ்ஞானத்தின் விதியாகும். அதாவது, ஒன்று மையத்தை நாடிச் செல்லுவது, மற்றென்று மையத்திலிருந்து விலகிச் செல்லுவதாகும். நான் வாழ்க்கையிலும் இந்த விதியைக் கையாள விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் நம் எல்லோரையும் கவர்கின்றது. அது நல்ல அரசாங்கமாக இருக்குமாயின், அதன் சக்திக்கு நாம் இசைந்து கொடுக்கிறோம். அதுபோலவே, ஹெயிம்சார் கிராமவாசிகளான நாம் மையத்திலிருந்து பிரிந்து விரியும் சக்திக்கு இணங்க மத்திய அரசாங்கத்தைக் கவர்கிறோம். எங்கே இந்த இரு சக்திகளும் சரிவர வேலை செய்கின்றனவோ, அங்கே மையத்திலும் மற்ற விடங்களிலும் அரசாங்கம் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெறும். மத்திய அரசாங்கம் தவறுன வழியில் செல்லுமாயின், பின்னர் ஏழு லட்சம் கிராமங்களில் அது ஆதிக்கம் செலுத்துவது என்பது அர்த்த மற்ற விஷயமாகும். கிராமவாசிகள் புத்திசாலிகளாக இருப்பார்களாயின், அவர்கள் மத்திய அரசாங்கத்தையும் அதன் 'உயர்ந்த' ராஜீய விவகாரங்களையும் எக்கேடு கெட்டாவது போகட்டும் எனத் தனியே விட்டுவிட்டு, தாங்கள் முற்றிலும் அந்நியோன்னியமாக வாழ்ந்து வருவார்கள்.

கே: ஒருவர் தம்முடைய சமூகத்திற்காகத் தமது சுயநலத்தைத் தியாகம் செய்வாராயின், அவ்வளவுக்கு அவர் சுயநல மற்றவராகிறார். எனினும், அவர் தேசத்தின் நலன்களுக்காகத் தமது சமூகத்தின் நலன்களைத் தியாகம் செய்யும்படியாக அவரது மனம் எவ்வாறு மாற முடியும்?

ப: ஒரு மனிதருடைய தியாக உணர்ச்சி அவரது சொந்த சமூக எல்லைக்கு அப்பால் செல்லவில்லையாயின், அவர் தாம் சுயநலவாதியாவதுடன், தமது சமூகத்தையும் சுயநலம் கொண்டதாகச் செய்து விடுகிறார். தனி நபர் தமது சமூகத்திற்காகத்

தம்மைத் தியாகம் செய்யவேண்டும்; ஜில்லாவுக்காக சமூகம் தன்னைத்தியாகம் செய்ய வேண்டும்; மாகாணத்திற்காக ஜில்லா தியாகம் செய்யவேண்டும்; தேசத்திற்காக மாகாணம் தியாகம் செய்யவேண்டும்; உலகத்திற்காக தேசம் தியாகம் செய்யவேண்டும். இதுதான் நியாயமாகத் தியாகத்தின் இறுதி நிலை என்பது எனது அபிப்பிராயமாகும். மகா சமுத்திரத்திலிருந்து தெறித்த ஒரு துளி எவ்வித நன்மையும் செய்ய முடியாமல் அழிந்து விடுகிறது. அதே துளி சமுத்திரத்திலேயே கலந்திருக்குமாயின், மகா வல்லமை பொருந்திய பல கப்பல்களைச் சுமக்கும் பெருமையில் அந்தத் துளியும் பங்கு கொள்ளுகிறது.

**கே:** சுதந்திர இந்தியாவில் யாருடைய நலனுக்கு மிக உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்படும்? அண்டையில் உள்ள ஒரு ராஜ்யம் கஷ்ட நிலையில் இருக்குமாயின், அப்போது சுதந்திர இந்தியா என்ன செய்யவேண்டும்?

ப: உண்மையான சுதந்திர இந்தியா, கஷ்டத்தில் இருக்கும் அடுத்துள்ள ராஜ்யங்களுக்கு உதவி அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அடுத்துள்ள ராஜ்யங்களுக்கு உதாரணமாக ஆப்கானிஸ்தானம், இலங்கை, பர்மா முதலியவற்றைக் கூறலாம். இன்னும், அந்த மூன்று நாடுகளை அடுத்துள்ள ராஜ்யங்களையும் இந்தியாவை அடுத்துள்ள ராஜ்யங்களாகவே கருதவேண்டும். எனவே, தனி நபரின் தியாகம் ஜீவ சக்தியுடன் விளங்க வேண்டுமாயின், அது மானிட வர்க்கம் முழுவதையுமே வியாபித்திருக்கவேண்டும்.

—'ஹரிஜன்' – 23—3—1947

# 6

# மதமும் அரசாங்கமும்

வர்தா ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஈ. டபிள்யூ. அரியநாயகத்திற்கு, காந்திஜி எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியில் மத போதனையைப் பற்றித் தமது அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டிருந்தார். அதன் முக்கியமான பகுதி கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

மதக் கல்வியில் அரசாங்கம் அக்கறைகொள்ள முடியும் என்றோ அல்லது அதைச் சமாளிக்க முடியும் என்றோ நான் நம்பவில்லை. மதக் கல்வி, மதச் சங்கங்களின் முழுப் பொறுப்பாக இருக்கவேண்டும். மதத்தையும் ஒழுக்க விதிகளையும் கலந்து குழப்பாதீர்கள். மூலாதாரமான ஒழுக்கங்கள், எல்லா மதங்களுக்கும் பொதுவானவை என்பதே எனது நம்பிக்கையாகும்.

மூலாதாரமான ஒழுக்கங்களைக் கற்பிக்க வேண்டியது, அரசாங்கத்தின் கடமைகளில் ஒன்று என்பதில் ஐயமில்லை. மதம் என்னும்போது, மூலாதாரமான ஒழுக்கங்களைப்பற்றி நான் எண்ணுவதில்லை; மதப் பிரிவுகளின் பெயர்களே என் மனத்தில் எழுகின்றன. அரசாங்கத்தின் உதவிபெற்ற மதத்திலும், அரசாங்க சர்ச்சிலும் நாம் போதிய அளவு துன்பப்பட்டுவிட்டோம். தன்னுடைய மதம் வாழ்வதற்கு ஒரு சமூகமோ அல்லது கோஷ்டியோ, ஓரளவோ அல்லது முழுவதுமோ அரசாங்கத்தை நம்பிக் கொண்டிருக்குமாயின், அத்தகையோர் மதத்தைக் கடைப்பிடிப்பதற்குத் தகுதியுள்ளவர்கள் அல்ல; அவர்களுக்கு மதம் எதுவும் இல்லை என்றும் சொல்லலாம். இந்த உண்மை எனக்குத் தெளிவாகப் புலனாகின்றது. எனவே, இதற்கு ஆதரவாக நான் உதாரணங்கள் எதுவும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

—'ஹரிஜன்' - 23—3—1947

# 7

# ஹிந்துக்களின் கடமை

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது:

எந்தப் பிரச்னை காரணமாக நான் பீகாருக்கு வந்தேனோ, அதே பிரச்னையைப்பற்றி மாத்திரமே நான் அடிக்கடி பேசுவதைக் குறித்து கூட்டத்தில் உள்ள மக்கள் மன்னிப்பார்கள் என்று நம்புகிறேன். தினந்தோறும் முஸ்லிம்கள் கூறும் சோகக் கதைக்குச் செவிசாய்க்க வேண்டியது எனது கடமையாகியிருக்கிறது. இரண்டு நாட்களுக்குமுன்கூட முஸ்லிம்களின் வீடுகளிலிருந்து சாமான்கள் களவாடப்பட்டதாக, என்னைக் காண வந்த முஸ்லிம்களில் ஒருவர் புகார் கூறினார். நிலைமை அவ்விதமாயின், அது மிகவும் துரதிருஷ்டகரமானதாகும். அத்தகைய சம்பவங்கள் பொதுவாக இருந்து வருவதாயின், ஹிந்துக்கள் தாங்கள் செய்ததைக் குறித்து அதிகமாக வருந்தவில்லை என்றே ஆகும். அவ்விதம் ஹிந்துக்கள் வருந்தவில்லை எனில், பீகாரிலும், இந்தியா முழுவதிலும்கூட இரு சமூகங்களுக்கும் அந்நியோன்னியம் ஏற்படுவது முடியாத காரியம்.

இங்கிலையில், என்னை எச்சரித்து ஒரு தந்தி வந்திருப்பதைக் குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன். பீகாரில் உள்ள ஹிந்துக்களை நான் கண்டிக்கக்கூடாதென்றும், அவர்கள் தங்கள் கடமையையே செய்துள்ளனர் என்றும் அந்தத் தந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தந்தியை அனுப்பியவர் அவ்விதம் எச்சரித்திருப்பதன்மூலம் இந்தியாவிற்கோ அல்லது ஹிந்து மதத்திற்கோ நன்மை செய்யவில்லை என்பதை நான் தயக்க

மின்றிக் கூறுவேன். ஒரு ஹிந்து என்ற முறையில் நான் என் சொந்த மதத்தில் நிரந்தரமான நம்பிக்கை உடையவன். நான் ஒரு ஹிந்துவாயினும், நான் ஒரு நல்ல முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி அல்லது யூதர் என்று உரிமை கொண்டாடுவதன் மூலம் நான் ஒரு சிறந்த ஹிந்துவாகிறேன். இந்த உணர்ச்சி உங்களில் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும் என்று கோருகிறேன். எனவே, தவறு செய்யும் சக ஹிந்துக்களுக்கோ அல்ல வேறு எவருக்கோ சப்பைக்கட்டு கட்டி அவர்களை ஆதரிக்க முற்படு வேனுயின், நான் ஒரு ஹிந்து என்று கூறிக்கொள்ளும் உரிமையை இழந்தவனுவேன்.

அவர்கள் செய்த தவறுகளைக் குறித்து அவர்களது கண்கள் திறக்கும்படி செய்வதன்மூலம், நான் அவர்களுக்குத் தொண்டு செய்தவனுகிறேன். உதாரணமாக, அவர்கள் தங்கள் மனத்தைப் பறிகொடுத்து பஞ்சாபில் நடந்துவருவதுபோன்ற விஷமத்தில் ஈடுபட்டுவிடக்கூடாது. சுதந்திர இந்தியாவில் சுதந்திரப் பிரஜை களாக விளங்குவதற்கு அவர்கள் பயிற்சிபெற்று வருவார்க ளாயின், இந்தியாவின் மற்றவிடங்களிலோ அல்லது வேறெங் கேயோ நடைபெற்றுவரும் தவறுகளைப்போல் தாங்களும் தவறு செய்ய முற்பட்டுவிடவேண்டாம். எந்த விடத்திலிருந்தாலும் நல்லதைப் பின்பற்ற வேண்டியதே அவர்களுடைய கடமை யாகும்; என்னுடைய கடமையும் அதுதான்.

சென்ற நான்கு நாட்களாக நான் உங்களிடையே இருந்து வருகிறேன். எனவே, நீங்கள் செய்யவேண்டிய கடமையைக் குறித்து உங்களுடைய கவனத்தை இழுக்க விரும்புகிறேன். அது நீங்கள் உங்களுக்கும், துன்பத்திற்கு உள்ளான முஸ்லிம் களுக்கும் செய்யவேண்டிய கடமையாகும். அதாவது, துன்பத் திற்குள்ளானவர்களின் கஷ்ட நிவாரணத்திற்காக உங்களால் இயன்றதைக் கொடுக்கவேண்டும் என்பதேயாகும். தங்க ளுடைய வருத்தத்தைத் தெரிவிப்பதற்கு அறிகுறியாக அவர்கள் தங்களால் இயன்றதைக் கொடுக்க வேண்டுமென்று அவர்களை அழைக்கின்றேன். இந்தத் தெளிவான விஷயத்தை அவர்களுக்கு நான் நினைவூட்ட வேண்டியிருப்பது துரதிருஷ்டமாகும். நோவா காலியில் துன்பத்திற்கு உள்ளானவர்களுக்காக பல ஹிந்துக்கள் சற்றேறக்குறைய மூன்று லட்சம் ரூபாய் வரையில் எனக்கு நன் கொடை அனுப்பியுள்ளனர். அவ்விஷயத்தை எனக்கு மீண்டும் நினைவூட்டியிருக்கிருர்கள். எனவே, நீங்கள் கணிசமான நன் கொடை அளிப்பீர்கள் என்று நம்புகிறேன். இயற்கையாக, செலவாகும் ஒவ்வொரு பைசாவிற்கும் கணக்கு காட்டப்படும். இப்போது ஜனப் பிரதிநிதி அரசாங்கம் இருப்பதால், நிதி சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் வேண்டியதை யெல்லாம் செய்வார்கள் என்று நம்பி மக்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது.

ஓர் அரசாங்கம் எவ்வளவுக்கு அதிக ஜனநாயக அரசாங்கமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு, பொது நிதியை உபயோகிக்கும் விஷயமாக அது அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. எனவே, ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ள சமூகத்தில், அரசாங்கம் நியாயமான எல்லைகளுக்கு மேல் செல்ல முடியாது. அப்போது, பொதுமக்கள் புத்திசாலித்தனமான நன்கொடைகளை அளிப்பதன் மூலமே தேவைகளைச் சமாளிக்க முடியும்.

—'ஹரிஜன்' – 30—3—1947

## 8

# மந்திர்களும் மசூதிகளும்

பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுப் போகப் போவது நிச்சயமாகும். அப்படிப் போகும்போது, இந்தியர்கள் செய்ய வேண்டிய கடமை என்ன? நமக்குள்ளேயே நாம் அடிக்கு அடி கொடுத்து, நமது அடிமைத்தனம் நிரந்தரமாக இருக்கும்படி செய்வதா? அதைத் தொடர்ந்து நமது தாய் நாட்டை, ஹிந்துஸ்தான், பாகிஸ்தான், பிராம்மணஸ்தான், அச்சுதிஸ்தான் (தீண்டாதார் ராஜ்யம்) என்று பல துண்டுகளாகப் பிய்த்து விடுவதா? வங்காளத்திலும் பீகாரிலும் நடந்ததைக் காட்டிலும், பஞ்சாபிலும் எல்லை மாகாணத்திலும் நடந்து வருவதைக் காட்டிலும், மிகப் பெரிய பைத்தியக்காரத்தனம் வேறு என்ன இருக்க முடியும்?

நாம் நமது மனிதத் தன்மையை மறந்து அடிக்கு அடி கொடுக்க வேண்டுமா? தவறான வழியில் செலுத்தப்பட்ட ஒருவர் கோவிலையோ, விக்கிரகத்தையோ உடைக்க முற்படுவாராயின் அதற்குப் பிரதியாக ஒரு ஹிந்து மசூதியை அசுத்தப்படுத்த வேண்டுமா? அவ்விதம் செய்வது, கோவிலைப் பாதுகாப்பதற்கோ அல்லது ஹிந்து மதத்தை ரட்சிப்பதற்கோ உதவியாக இருக்குமா? என் வரையில் நான் விக்கிரக ஆராதனை செய்பவன்; விக்கிரகத்தை உடைப்பவனும்கூட. இக்கூட்டத்தில் உள்ள யாவரும், அவர்கள் ஹிந்துக்களாயினும், முஸ்லிம்களாயினும் அல்லது வேறு எவராயினும், அவர்கள் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் என் போன்றவர்களே. மனித வர்க்கம் சின்னத்தில் ஆர்வம் கொள்ளும் இயல்பு உடையதென்பதை நான் அறிவேன். மசூதிகளும், சர்ச்சுகளும் உண்மையில் மந்திர்களைப் (ஹிந்து ஆலயங்கள்) போன்றவைதான் அல்லவா? கடவுள் எங்கும் இருக்கிறார்; தூணிலும் இருக்கிறார், கல்லிலும் இருக்கிறார், மனிதனின் உடலில் உள்ள ஒவ்வொரு ரோமத்திலும் இருக்கிறார். ஆனால். எங்கும் இருப்பினும் குறிப்பிட்ட இடங்களிலும், சாதனங்களிலும் மனி

தர்கள் அதிகமாக தெய்வத் தன்மையை இணைக்கின்றார்கள். மற்றவர்களுக்கும் உள்ள அந்தச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தாத வரையில், அவ்விதம் தெய்வத் தன்மையைக் காணும் உணர்ச்சி மரியாதைக்கு உரியதே. எங்கேயாவது நிர்ப்பந்தம் இருந்தால், அந்த நிர்ப்பந்தத்திற்கு உட்பட சாந்தமாக, ஆனால் உறுதியாக மறுத்துவிட வேண்டும். விக்கிரக ஆராதனையில் எனக்கு உள்ள சுதந்திரத்திற்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகளைச் சகிப்பதைக் காட்டிலும், அந்த விக்கிரகத்தைக் காப்பாற்ற அதைத் தழுவிக் கொண்டு என் உயிரையும் விடுவேன். இவ்விதம் செய்வதற்கு, பலாத்காரமாக எதிர்ப்பதைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த, அதிகமான தைரியம் தேவையாகும்.

இத்தகைய தைரியத்திற்கு பாதுஷா கான் (கான் அப்துல் கபார்கான்) உதாரணமாவார். பாதுஷா கான் மலைசாதியினரின் வழிவந்தவர். அடிக்கு அடி கொடுப்பதே அந்தச் சாதியினரின் சம்பிரதாயமாகும். அவர்களுடைய ரத்தப் பகை பரம்பரையாக நீடித்து வருவது உண்டு. முடிவற்ற அத்தகைய போட்டி, பட்டாணியர்களின் அடிமைத்தனத்தையே நிரந்தரமாக்குகிறது என்று பாதுஷா கான் கருதினார். அவர் அகிம்சைக் கொள்கையை மேற்கொண்டபோது, பட்டாணியர்களிடையே ஒருவித மாறுதல் ஏற்பட்டு வருவதை அவர் உணர்ந்தார். அன்பினாலும் தொண்டினாலும் ஒவ்வொருவருடைய உள்ளத்தையும் பாதுஷா கான் கவர்ந்திருப்பதால், அவரை எல்லோரும் பக்கிரி (முஸ்லிம் துறவி) என்று அன்புடன் அழைக்கிறார்கள். எனினும், ஒவ்வொரு பட்டாணியரின் மனமும் மாறிவிட்டது என்றோ அல்லது பாதுஷா கான் அகிம்சையின் உன்னத சிகரத்தை எட்டிவிட்டார் என்றோ அர்த்தமல்ல. எனக்குத் தெரிந்த வரையில், பாதுஷா கான் ஒவ்வொரு நாளும் அதிகமாக லட்சியத்திற்கு அருகில் வந்துகொண்டிருக்கிறார். அகிம்சையின் உண்மைத் தத்துவத்தை அவர் உணர்ந்திருப்பதே அதற்குக் காரணமாகும். இத்தகைய தைரியசாலிகளின் அகிம்சையையே, இக்கூட்டத்தில் உள்ளவர்கள் பின்பற்ற வேண்டுமென நான் விரும்புகிறேன்.

பீகார் மக்கள் வெறி பிடித்து எவ்வளவு தூரம் தாழ்ந்துவிட்டார்கள் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளும்படி செய்வதற்காகவே, நான் பீகாருக்கு வந்திருக்கிறேன். தாங்கள் செய்ததற்கு வருந்தும்படியும், தாங்கள் செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்யும்படியும் பீகார் மக்களைத் தூண்டவேண்டும் என்பதே எனது நோக்கமாகும். முஸ்லிம் குடும்பங்களின் நாசமாக்கப்பட்ட வீடுகளை நான் இப்போதுதான் பார்த்துவிட்டு வந்தேன். அவற்றைக் கண்டபோது என் கண்களில் நீர் ததும்பியது. எனினும், நான் என் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு, ஹிந்துக்கள் தங்களுடைய முஸ்லிம் சகோதரர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை அவர்களுக்குப் போதிக்க இங்கே வந்துள்ளேன். தாங்கள் செய்த தவறுகளைக் குறித்து உண்மையில்

வருந்துவதற்கு உண்மையான தைரியம் வேண்டும். சம்பாரணில் சத்தியாக்கிரகம் நடந்தபோது பீகார் மகோன்னத நிலையை எட்டியது. புத்த பிரான் சுற்றி அலைந்து மக்களுக்குப் போதித்த இடமும் பீகார்தான். எனவே, அப்படிப்பட்ட பீகார் மறுபடியும் உயர்ந்த நிலைக்கு எழும் சக்தி வாய்ந்ததென்பது நிச்சயம். அந்த நிலையை அடையும் பீகாரின் பெருமை, இந்தியா முழுவதும் ஒளி வீசித் திகழும். கலப்பற்ற அகிம்சை மாத்திரமே பீகாரை அத்தகைய நிலைக்கு உயர்த்த முடியும்.

1942-இல் சிற்சில சமயங்களில் மக்கள் நேர் பாதையான அகிம்சையிலிருந்து விலகியதே, அவர்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்குக் காரணமாகும். அப்போது சட்ட வரம்பை மீறிக் காரியங்களைச் செய்யும் நோய் மக்களைப் பற்றிக் கொண்டது. அதன் விளைவாக, மக்கள் டிக்கெட்டுகள் வாங்காமல் ரெயிலில் பிரயாணம் செய்யவும், சட்ட விரோதமாகச் சங்கிலிகளை இழுக்கவும், அறிவிழந்து வஞ்சம் தீர்க்கவும், ஜமீந்தார்களுக்குச் சொந்தமான பயிர்களையும் உடைமைகளையும் எரிக்கவும் துணிந்தனர். ஜமீந்தாரி முறையை நான் விரும்புகிறவன் அல்ல. அதை எதிர்த்து நான் அடிக்கடி பேசியிருக்கிறேன். எனினும், நான் ஜமீந்தார்களுக்கு விரோதி அல்ல என்பதைப் பட்டவர்த்தனமாக ஒப்புக்கொள்ளுகிறேன்.

எனக்கு விரோதிகள் இல்லை. பொருளாதார, சமூக முறைகளில் பல தீமைகள் இருக்கின்றன என்பது உண்மையே. எனினும், அம்முறைகளைச் சீர்திருத்துவதற்கான மிகச் சிறந்த வழி, தாமே துன்பத்தை அனுபவிக்கும் ராஜபாட்டையே ஆகும். அதிலிருந்து எவ்விதத்தில் வழுவினாலும் பலன் ஏற்படாது. அது பலாத்காரமாக ஒழிக்க முற்படும் தீமையின் உருவத்தை மாற்றுவதில் வந்து முடியுமேயன்றி, அத்தீமையை அகற்றிவிடாது. தீமையை வேருடன் களைந்து அழிக்க, பலாத்காரத்திற்குச் சக்தியில்லை.

—'ஹரிஜன்' – 30—3—1947

## 9

# தற்கொலை மனப்போக்கு

பாசா கிராமத்தில் முஸ்லிம்களின் வீடுகள் இடித்துத் தகர்க்கப்பட்டிருந்தன. அதைக் காந்திஜி நேரில் பார்த்த பின், எப்பாதுலா சவுக்கத்தில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்தார். கிராமத்தில் தாம் கண்ட கோரக் காட்சியைக் குறிப்பிட்டு காந்திஜி பேசியதாவது:

அமைதியாக வாழும் பீகார் வாசிகளின் தாற்காலிகமான பைத்தியக்காரத்தனத்தைக் குறித்து நான் ஆச்சரியப்படு

கிறேன். நோவாகாலியில் முஸ்லிம்கள் செய்த தவறுகளுக்காக பீகார் வஞ்சம் தீர்த்ததாக யாராவது கருதுவார்களாயின், வஞ்சம் தீர்க்கும் வழி இது அல்ல என்றே நான் உறுதியாகக் கூறுவேன். இந்தியர்களில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரைப் பகைவர்களாகக் கருதுவது தற்கொலை செய்துகொள்ளுவதாக ஆகும். அது, நமது அடிமைத்தனத்தை நிரந்தரமாக்குவதற்கு அடிகோலிவிடும். இறுதியில் அத்தகைய மனப்போக்கு ஒரு வரை, தான் வசிக்கும் குறுகிய பிரதேசத்தின் நலனில் மாத்திரம் அக்கறை கொள்ளும்படி செய்துவிடும். அப்போது அவர் எல்லாவற்றையும்விடத் தமது சொந்தக் கிராமத்தின் சுதந்திரம் தான் பெரிதென்று கருதுவார். ஆனால், நான் உண்மையில் விரும்புவது என்னவெனில், இந்தியாவில் எந்த இடத்தில் ஒரு தீய செயல் நடந்தாலும், இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் அதற்குத் தாமே பொறுப்பாளி என்று கருத வேண்டும் என்பதே. ஒவ்வொருவரும் அதற்குத் தாமே சொந்தத்தில் பொறுப்பாளி என்று எண்ணி, தவறைச் சீர்திருத்தும் பொறுப்பில் தாமும் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். வேறு எவ்வித நடவடிக்கையும், இன்று பஞ்சாபில் காணப்படும் நிகழ்ச்சிகளைப் போன்ற சம்பவங்களுக்குக் காரணமாகிவிடும்.

மக்களின் பிரதிநிதிகளிடம் பீகாரை ஒப்புவித்து விட்டு, சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காகப் பஞ்சாபிற்கு வரும்படி எனக்கு அழைப்புகள் வந்திருக்கின்றன. என்னால் எல்லா இடத்திலும் தொண்டு புரிய முடியும் என்ற வீண் டம்பம் என்னிடம் கிடையாது. என்னை, கடவுளின் தாழ்மையான ஒரு கருவியாகவே நான் கருதுகிறேன். பீகாரிலும் வங்காளத்திலும் உள்ள சகோதர சமூகங்களுக்கிடையே சமாதானமும் நட்பும் ஏற்படும்படி செய்யும் முயற்சியில் வெற்றி பெறவேண்டும் அல்லது மடிய வேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகும். இரு சமூகங்களும் பரஸ்பரம் நட்புக்கொண்டு, எனது தொண்டு அவர்களுக்குத் தேவையில்லை என்ற நிலைமை ஏற்பட்டால்தான் நான் பீகாரை விட்டுச் செல்ல முடியும். பஞ்சாபிற்கு நான் செல்ல முடியாவிட்டாலும், அந்த மாகாணத்தில் உள்ள ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் முதலியோருக்கு எனது குரல் எட்டுமென்று நம்புகிறேன். மிருகத்தனம் அவர்களைப் பற்றிக் கொண்டிருக்கிறது. அறிவற்ற அந்த காட்டுமிராண்டித்தனத்திற்கு ஒரு முடிவுகட்ட அவர்கள் முயற்சிக்க வேண்டும்.

—'ஹரிஜன்' - 30—3—1947

# 10

# உல்லாச யாத்திரை அல்ல

மசூர்ஹி கிராமத்தில் நடந்த கூட்டத்திற்கு முப்பதாயிரம் மக்களுக்குமேல் வந்திருந்தனர். தமது பீகார் யாத்திரை உல்லாச யாத்திரை அல்ல என்றும், மனக்கலக்கத்தைக் கொடுக்கும் நிகழ்ச்சிகளே தமது யாத்திரைக்குக் காரணம் என்றும் அப்போது காந்திஜி கூறினர். முஸ்லிம்கள் துன்பத்திற்கு உள்ளான இடங்களுக்குத் தாம் விஜயம் செய்யப் போவதாகவும் குறிப்பிட்டார். தகுந்த, கண்ணியமான நடவடிக்கைகளின் மூலம் ஹிந்துக்கள் தங்களுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். காந்திஜி மேலும் பேசியதாவது:

சென்ற நவம்பர் மாதம் வெறிபிடித்த மக்கள், பெண்களையும் குழந்தைகளையும் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்தார்கள். நோவாகாலி நிகழ்ச்சிகளை அற்பமாகச் செய்யுமாறு ஆடவர்களும் அடித்துக் கொல்லப்பட்டார்கள். நோவாகாலியிலும் கோரமான சம்பவங்கள் நிகழத்தான் செய்தன. பீகார் ஹிந்துக்கள் தாங்கள் செய்த தவறுகளுக்கு உண்மையாகவே வருந்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்கள் 'காந்திக்கு ஜே' என்று உரக்கக் கத்துவது மாத்திரம் போதாது. கஷ்ட நிவாரண நிதிக்கு அவர்கள் தாராளமாகப் பண உதவி செய்வது மாத்திரம் போதாது; அவர்கள் செய்த தவறுகளை என்னிடமாவது ஒப்புக்கொள்ள முன்வரவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். இவ்விதம் செய்தால்தான் எனக்கு உண்மையான மன அமைதி ஏற்படும்.

பலவிடங்களிலிருந்தும் செய்திகளை அனுப்பும்படி நான் கேட்டிருக்கிறேன். முதன் முதலில் முஸ்லிம்கள்தான் தாக்குதலில் இறங்கினர்கள் என்று அச்செய்திகளில் ஒன்று கூறுகிறது. கலவரம் உண்மையில் எப்படி ஆரம்பமாயிற்று என்பதைக் குறித்து எனக்கு அக்கறை இல்லை. இங்கே ஹிந்துக்கள் மிகப் பெரும்பான்மையோராக உள்ளனர். அப்படியிருக்க, அவர்கள் நிரபராதிகளைக் கொலை செய்யும் இழிவான நிலைக்கு எப்படித் தங்களைத் தாழ்த்திக்கொண்டார்கள் என்பதே பிரச்னையாகும். உண்மையான மனவருத்தமும், அதைத் தொடர்ந்து கஷ்ட நஷ்டங்களுக்கு ஈடுசெய்யும் நடவடிக்கைகளுமே, இரு சகோதர சமூகங்களிடையே நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

முஸ்லிம்களால் கஷ்டத்திற்கு உள்ளான ஹிந்துக்கள் விஷயத்தில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்றும் ஒரு செய்தி அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகிறது. முஸ்லிம்

களின் புகார்களை அரசாங்கம் சட்டை செய்யவில்லை என்று முஸ்லிம் வட்டாரங்களிலிருந்து வந்த செய்திகள் கூறுகின்றன. இரு செய்திகளையும் நம்ப நான் தயங்குகிறேன். சமூக நலன் களில் அக்கறை காட்டாத அல்லது பாரபட்சத்துடன் நடக்கும் அரசாங்கம், அதிக காலத்திற்கு வாழ முடியாது. தாங்கள் சீக்கி ரத்தில் எல்லாப் புகார்களையும் விசாரிக்கவும், பயங்கரமான கலவரங்களுக்குக் காரணங்களைப் பரிசீலனை செய்யவும், அத்த கைய கோர நிகழ்ச்சிகள் இனி நடைபெறுமல் இருப்பதற்கான வழிவகைகளைக் கண்டு பிடிக்கவும், பாரபட்ச மற்ற ஒரு கமிஷனை நியமிக்கப் போவதாக அரசாங்கம் முன்னரே பிரகடனம் செய்திருக்கிறது. துன்பத்திற்கு உள்ளானவர்களுக்குச் செய்ய வேண்டிய நஷ்ட ஈடு பற்றியும் அக்கமிஷன் ஆலோசனை கூறும். எனவே, எனக்குக் கடிதம் எழுதியிருப்பவர்கள், கமிஷன் முன்னி லையில் சாட்சியம் கொடுப்பதற்குத் தயாராக இருப்பார் களாக. நீதிபதியாகவோ அல்லது அரசாங்க வக்கீலாகவோ இருப்பது என் வழியல்ல. எனது தாழ்மையான வழி, சீர்திருத்த வாதியாகவும் ஜீவகாருண்யத்துடனும் நடப்பதேயாகும். எனவே, நான் செய்ய வேண்டியது தெரிந்த உண்மைகளைப் பரிசீலனை செய்வதும், தங்களுடைய மதியீனமான நடவடிக்கை களைக் குறித்து வருந்தும்படி குற்றம் செய்தவர்களை அழைப்ப துமேயாகும்.

— 'ஹரிஜன்' – 6—4—1947

## 11

# என் இடைவிடாப் பிரார்த்தனை

**கா**ந்திஜி, மசூர்ஹியில் தாம் கண்ட கோரக் காட்சியைப் பற்றி உணர்ச்சி வசப்பட்டுக் கூறியதாவது:

மசூர்ஹியில் நிகழ்ந்த சம்பவங்களைப்பற்றி நான் முஸ்லிம் லீக் செய்தியைப் பார்த்தேன். அதை, மிகைபடக் கூறியிருப்ப தாகவே முதலில் நினைத்தேன். ஆனல், மசூர்ஹிக்கு நான் நேரில் சென்று பார்த்தபோது, அச் செய்திகளில் கண்ட விவரங் கள் எல்லாம் உண்மையானவை என்பது தெரிந்தது. நோவா காலி தினத்தைக் கொண்டாடியதால் ஏற்பட்ட பரபரப்பே அங்கே நடந்த கோர நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்று கூறப் படுகிறது. 23-ஆம் தேதி பஞ்சாப் தினத்தை அனுசரிக்கப் போவ தாகப் பேச்சு இருந்து வருகிறது. அதனல் பீகார் முஸ்லிம்கள் கலக்கம் அடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது. அது உண் மையில் ஆதாரமற்ற ஒரு வதந்தி என்றே நம்புகிறேன். அவ்வித தினத்தை அனுசரிப்பது, சகோதரர்களிடையே பரஸ்பரம் படு கொலை செய்யும்படி அழைப்பதற்கு ஒப்பாகும். பீகாரில் அத்த கைய துரதிருஷ்டமான சம்பவம் நிகழுமாயின், நான் அந்த

ஜ்வாலையில் அழிந்துவிடவே விரும்புவேன் என்று முஸ்லிம் நண்பர்களிடம் நான் கூறியுள்ளேன். அத்தகைய பயங்கரமான, வெட்கக்கேடான காட்சியைக் காண என்னைக் கடவுள் உயிருடன் வைத்திருக்கக் கூடாது என்பதே எனது இடைவிடாத பிரார்த்தனையாகும்.

செயின், பார்னி என்ற இரு கிராமங்களிலிருந்து எனக்கு இரண்டு கடிதங்கள் வந்திருக்கின்றன. அங்கேயுள்ள ஹிந்து, முஸ்லிம் கிராமவாசிகளிடையே நட்பு உணர்ச்சி நிலவுவதாக அக்கடிதங்களில் வருணிக்கப்பட்டுள்ளன. எல்லா இடங்களிலும் அத்தகைய நட்பு உணர்ச்சி நிலவவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

—'ஹரிஜன்' – 6—4—1947

# 12

# படுகொலைகளை அனுமதிக்கும் மதம் உண்டா ?

கராஹ்வான் கிராமத்திற்கு நான் சென்றிருந்தபோது, ஆடவர்களும், பெண்களும், குழந்தைகளும் அங்கே படுகொலை செய்யப்பட்டதைத் தெரிந்துகொண்டேன். எனவே, அங்கே மாண்டவர்களுக்கு அனுதாபமாக சிறிது நேரம் துக்கத்துடன் மௌனமாக இருக்கும்படி இங்கே கூடியுள்ள உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நிரபராதிகளான ஆடவர்களும், பெண்களும், குழந்தைகளும் ஏன் கொல்லப்பட்டார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்படி உங்களைக் கேட்கிறேன். எந்த மதத்தையாவது காப்பாற்றுவதற்காக அப்படிச் செய்யப்பட்டதா? தமது அண்டை வீட்டுக்காரர்களைக் கொல்லும்படி எந்த மதமும் போதிக்கவில்லை. அது மூர்க்கத்தனமான நாச வேலையே ஆகும்.

சில மாதங்களுக்கு முன் சுறுசுறுப்புடனும், ஜீவகளையுடனும் விளங்கிய வீடுகள், இன்று பாழாகிக் கிடப்பதை எல்லோரும் அறிவர். ஆனல், அடுத்தபடியாகச் செய்ய வேண்டியது என்ன? தங்களுடைய பாவங்கள் கழுவப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையுடன் ஜனங்கள் கங்கையில் ஸ்நானம் செய்கிருர்கள். திக்கற்ற பெண்கள், குழந்தைகள் விஷயத்தில் நீங்கள் செய்த பாவத்தை, உங்கள்முன் உள்ள பாழான வீடுகள் நினைவூட்டவேண்டும். அந்தப் பாவத்திற்கு எவ்விதத்தில் ஈடு செய்யலாம் என்பதுபற்றி நீங்கள் சிந்திப்பதன்மூலம், அதற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ள முற்படவேண்டும். மேலும் நீங்கள் பாழான வீடுகளைச்

சுத்தம்செய்து, அவை துப்புரவாகவும் வசிப்பதற்குத் தகுதியுள்ளனவாகவும் இருக்கும்படி செய்யவேண்டும். நிகழ்ந்துவிட்ட சம்பவங்களைக் குறித்து நீங்கள் உங்களுடைய முஸ்லிம் சகோதரர்களுக்கு உங்கள் வருத்தத்தைத் தெரிவிப்பதுடன், அவர்களை மீண்டும் கிராமங்களுக்குத் திரும்பி வரும்படி கேட்டுக்கொள்ள வேண்டும்; அவர்கள் திரும்பி வந்தால்தான் தங்களுக்கு மனச்சாந்தி ஏற்படும் என்றும் அவர்களிடம் கூறவேண்டும். தங்களுடைய உற்றாரும் உறவினரும் கொல்லப்பட்ட வீடுகளுக்குத் தாங்கள் எப்படித் திரும்பி வந்து வசிக்கமுடியும் என்று முஸ்லிம்கள் திருப்பிக் கேட்பது சாத்தியமே. அவ்விதம் அவர்கள் கேட்பதில் நியாயமும் உண்டு. ஆனால், குற்றம் செய்தவர்களோ அல்லது அவர்களின் உறவினர்களோ உண்மையில் வருந்தும் உள்ளங்களுடன் முஸ்லிம்களிடம் சென்று, நடந்தது நடந்துவிட்டதென்றும், இனி அத்தகைய சம்பவங்கள் ஒரு போதும் நடைபெறாவென்றும் உறுதி கூறினால், கல்நெஞ்சமும் கரைந்துவிடும் என்பது எனது நிச்சயமான அபிப்பிராயமாகும்.

இந்த வெறி பிடித்த எழுச்சியினிடையே, பாலைவனத்தில் உள்ள பூஞ்சோலையைப்போல சில மனிதர்கள் இருக்கத்தான் செய்தனர். அவர்கள், வெறிபிடித்த பலாத்காரக் கூட்டத்தினரிடமிருந்து பல முஸ்லிம்களுடைய உயிர்களையும், சொத்துக்களையும் காப்பாற்றினர். அத்தகையோருக்கு வாழ்த்துக்கள் எதுவும் தேவையில்லை. எனினும், அவர்கள் வாழ்த்துக்களுக்கு உரியவர்கள் என்பதில் ஐயமில்லை.

அந்தக் கலவரங்களில் ஹிந்துக்களும் துன்பத்திற்கு உள்ளானார்கள் என்று என்னிடம் கூறுகிறார்கள். அவ்விதமாயின், அவர்களுக்கும் உதவி அளிக்க வேண்டியது அவசியமாகும். கஷ்ட நிவாரணம் அளிக்கப்பட வேண்டியவர்களின் ஜாபிதாவில் அவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

கலவர வழக்குகளில் சம்பந்தப்பட்டுத் தலைமறைவாக இருந்த சுமார் ஐம்பது நபர்கள், நான் வந்த ஒரு நாளுக்குப் பிறகு சரண் அடைந்தார்கள். இதை நான் வரவேற்கிறேன். கலவரங்களில் பங்கு எடுத்துக்கொண்ட மற்றவர்களும் உரிய அதிகாரிகளிடம் சரண் அடைந்து, தாங்கள் செய்த குற்றங்களை பட்டவர்த்தனமாக ஒத்துக்கொண்டு, தங்களுக்குக் கிடைக்கும் தண்டனைகளையும் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். அதிகாரிகளிடம் சரண் அடைய அவர்களுக்குத் தைரியமில்லையேல், அவர்கள் என்னிடமோ, பாட்ஷா கானிடமோ அல்லது மேஜர் ஜெனரல் ஷா நவாஸிடமோ வந்து தாங்கள் செய்த குற்றங்களை ஒத்துக்கொள்ளலாம்.

23-ஆம் தேதி முஸ்லிம்கள் பாகிஸ்தான் தினம் கொண்டாட உத்தேசித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். எனவே, அதைக் கண்டு நோவாகாலி ஹிந்துக்களுக்குப் பீதி

ஏற்பட்டிருக்கிறது. நோவாகாலியில் நிலைமை மோசமாகி வருகிற தென்று, அங்கே இருந்து வந்துள்ள நண்பர் ஒருவரும் கூறுகிறார். தற்போது நான் பீகாரைவிட்டு வர இயலாதென்று அவருக்கு நான் கூறியுள்ளேன். ஏனெனில், பீகாரில் எனது முயற்சி வெற்றி பெறுமாயின் அதன் பலனை வங்காளத்திலும், ஒருவேளை இந்தியா முழுவதிலும்கூடக் காணலாம் என்பது எனது நம்பிக்கையாகும். வகுப்புவாதிகளிடமிருந்து உயிரும் உடைமைகளும் காப்பாற்றப்படுவதற்கு, என்னை ஜாமீனாக பீகார் முஸ்லிம்களும் வங்காள ஹிந்துக்களும் ஒப்புக்கொள்ளவேண்டும். எனது லட்சியத்தை நிறைவேற்றவோ அல்லது இறக்கவோ நான் இங்கே வந்திருக்கிறேன். எனவே, ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எனது தொண்டு தேவையில்லை என்று அவர்கள் எனக்கு உறுதி அளிக்கும் வரையில், நான் எனது கடமையைக் கைவிட்டுவிட்டுப் போவதென்ற பேச்சுக்கே இடமில்லை.

—'ஹரிஜன்' – 6—4—1947

# 13

# பகிஷ்காரத்திற்கு இடமேயில்லை

இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் சிறிதும் சந்தடியின்றி அமைதி நிலவியதால், அதற்காக காந்திஜி கூட்டத்தில் இருந்தவர்களைப் பாராட்டிவிட்டுப் பேசியதாவது :

முஸ்லிம்களை ஹிந்துக்கள் பகிஷ்காரம் செய்துவருவதாக நான் கேள்விப்பட்டேன். அது உண்மையாயின், அது ஒரு கெட்ட சகுனமாகும். தாங்கள் செய்த தவறுகளுக்கு உண்மையாக வருந்துவதாயின், உண்மையான நட்பைக் காட்டவேண்டும். உண்மையான நட்பு இருக்குமாயின், பகிஷ்காரத்திற்கு இடமேயில்லை. எனவே, ஹிந்துக்கள் உண்மையாகவே வருந்துவார்களாயின், அவர்கள் முஸ்லிம்களைப் பகிஷ்காரம் செய்யக் கூடாது.

முஸ்லிம் லீக் நண்பர்கள் என்னை வந்து பார்த்தார்கள். இடம் பெயர்ந்த முஸ்லிம்களை மீண்டும் அவரவர் சொந்த இடங்களில் ஸ்தாபிக்கும் விஷயமாக ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக அவர்கள் என்னிடம் கூறினர். பீகாரில் உள்ள முஸ்லிம் லீக் நண்பர்களின் ஒத்துழைப்பின்றி, நட்பு ஏற்படுவது முடியாத காரியமாகும். பரஸ்பரம் நல்லெண்ணத்தினால்தான் நட்பு ஏற்படவேண்டுமேயன்றி, துப்பாக்கி முனையினால் ஏற்பட்டு விடாது.

நோவாகாலியிலிருந்து நான் புறப்பட்டு வந்த பிறகு அங்கே நிலைமை மோசமாகிவிட்டதாக, அங்கேயிருந்து வந்துள்ள நண்பர்

ஒருவர் கூறுகிறார். பீகாரில நான் செய்துவரும் முயற்சியின் பலனாக, நோவாகாலி நிலைமையிலும் முன்னேற்றம் ஏற்படலாம். அங்கே நிகழும் தவறான செயல்களை உரிய அதிகாரிகளிடம் தெரிவிக்கும்படி, நோவாகாலி நண்பருக்கு நான் கூறியிருக்கிறேன். என் பார்வைக்கு வந்த எந்தத் தகவல்களையும் நான் நம்பிக்கையுடன் அதிகாரிகளுக்குத் தெரிவித்துவிடுவேன். எப்படியிருந்தாலும், கடவுளிடம் நம்பிக்கைவைத்து, அமைதியாகவும் தைரியமாகவும் இருக்கும்படி நான் நோவாகாலியில் உள்ளவர்களுக்கு யோசனை கூறுகிறேன். கடவுள் ஒருவர்தான் உண்மையான உதவி அளிக்கமுடியும்.

—'ஹரிஜன்' - 6—4—1947

## 14

# அரசாங்கமும் ஈடுத் தொகையும்

*பீகாரில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றில் காந்திஜி பேசிய விவரங்கள், 1947 மார்ச் 30-ஆம் தேதி பாட்னா 'ஸர்ச் லைட்' பத்திரிகையில் வெளியாகியிருந்தன. அப்போது அகதிகளின் பல்வேறு கோரிக்கைகளுக்கும் காந்திஜி பதில் அளித்தார். மீண்டும் சமாதானம் ஏற்படும்படியும், இரு சமூகங்களும் அந்நியோன்னியமாக இருக்கும்படியும் செய்வதில் காந்திஜி கொண்டிருந்த கருத்துக்களை சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாக்கும் அகதிகளின் அந்தக் கூட்ட நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:*

முஸ்லிம் அகதிகளின் முகாம் ஒன்றில் இன்று காலை தங்களுடைய குறைகள் அடங்கிய பல மகஜர்களை முஸ்லிம்கள் காந்திஜியிடம் சமர்ப்பித்தனர். அவற்றிற்குப் பதிலளிக்கையில் காந்திஜி குறிப்பிட்டதாவது :

"எனது பிரசங்கங்களில், நோவாகாலி சம்பவங்களைப் பற்றிக் குறிப்பிடுவதை நான் சாத்தியமான வரையில் தவிர்த்து வந்திருக்கிறேன். நோவாகாலியைப்பற்றிப் பேசவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோதெல்லாம், நான் மிகவும் சாந்தமாகப் பேசி வந்திருக்கிறேன். நோவாகாலியில் முஸ்லிம்கள் புரிந்த பாவங்களைப்பற்றிப் பேசக்கூடாது என்றும், பீகாரில் ஹிந்துக்கள் செய்த பாவங்களைப்பற்றி மாத்திரமே பேசவேண்டும் என்றும் முஸ்லிம்கள் விரும்புகிறார்களா? அவ்விதம் நான் செய்தால், நான் ஒரு கோழையாவேன். என் சம்பந்தப்பட்ட வரையில், நோவாகாலி முஸ்லிம்கள் செய்த பாவங்களும், பீகார் ஹிந்துக்கள் செய்த பாவங்களும் மகத்தானவையே. இரு சாராரின் செயல்களும் ஏற்றத்தாழ்வின்றி கண்டிக்கத்தக்கவையே யாகும்."

நோவாகாலி சம்பவங்களைப்பற்றி காந்திஜி தமது பிரசங்கங்களில் குறிப்பிடுவது, பீகாரில் உள்ள ஹிந்துக்களின் உணர்ச்சிகளைத் தணிப்பதற்குப் பதிலாகத் தூண்டிவிடும் என்று ஒரு மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக காந்திஜி கூறியதாவது:

"இன்று முஸ்லிம்கள் என்னைத் தங்களுடைய விரோதியாகக் கருதுவதால், வாய்விட்டுப் பேச முடியாமல் மிகவும் அடக்கிப் பேசவேண்டியவனுக இருக்கிறேன். பஞ்சாபில் படுமோசமான சம்பவங்கள் நிகழ்ந்துவருகின்றன. அவற்றைப் பற்றி பத்திரிகைகளில் வெளியான செய்திகளை முதலில் நான் நம்பவில்லை. பிறகு விசாரித்ததிலிருந்து, பத்திரிகைகளில் வெளியானவற்றைக் காட்டிலும் அதிக அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன என்பது தெரிந்தது. அவை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுல் செய்யப்பட்டன என்பதற்காக நான் அவற்றைப் பற்றிப் பேசக் கூடாதா? அவ்விதம் மறைத்துப் பேசுவதால், நான் இங்கே வந்துள்ள லட்சியம் வெற்றிபெற முடியாது."

மற்றொரு மகஜரில் கையெழுத்திட்டிருந்தவர்கள், தற்போதைய மந்திரிசபையில் தங்களுக்கு நம்பிக்கையில்லை என்று கூறியிருந்தார்கள். அதற்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது:

"ஸ்ரீ ஷஹீத் சுஹ்ரவார்தியிடம் நம்பிக்கையில்லை என்று நோவாகாலி ஹிந்துக்களும் என்னிடம் கூறினுர்கள். அவர் தனித் தொகுதி முறையினுல் அதிகாரத்திற்கு வந்திருப்பதால், அவரை மந்திரி சபையிலிருந்து அகற்ற முடியாதென்று நான் அவர்களுக்குக் கூறினேன். அவர் பிரதிநிதித்துவம் வகிக்கும் சமூகத்தின் நம்பிக்கை அவருக்கு இருக்கும் வரையில் அவரை அகற்றமுடியாது என்றும் கூறினேன். அதுபோலவே, ஹிந்து வாக்காளர் தொகுதியினர் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ள மந்திரிகளை நீங்கள் எப்படி அகற்ற முடியும்? வகுப்புவாரித் தொகுதி முறையினுலேயே இந்த துரதிருஷ்டவசமான நிலைமை சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையை எப்போதும் நான் கண்டித்துவந்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். அன்றொரு நாள் டாக்டர் கான் சாகிபும் இதையேதான் சொன்னுர். அவர் பட்டாணியர்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையில், அவர் ராஜிநாமா செய்வதென்ற பேச்சிற்கே இடமில்லை. தவிர, மந்திரிசபை போய்விட்டால் என்ன நேரும்? பின்னர் மீண்டும் பொறுப்பற்ற அதிகார வர்க்க அரசாங்கத்தின் ஆட்சி ஏற்பட்டுவிடும். அதைத் தவிர, தற்போதுள்ள மந்திரிகளுக்கும் எனக்கும் நட்பு உறவு இருந்துவருகிறது. எனவே, அவர்கள் நல்ல காரியங்களை நிறைவேற்றும்படி நான் செய்ய முடியும்."

புதிய போலீஸ் ஸ்டேஷன்களில் உள்ள அதிகாரிகளும் கான்ஸ்டேபிள்களும் ஐம்பது சத விகிதமாவது முஸ்லிம்களாக

இருக்கவேண்டும் என்ற கோரிக்கைக்குக் காந்திஜி அளித்த பதில் பின்வருமாறு :

“நோவாகாலி ஹிந்துக்களின் அதே கோரிக்கையை நான் ஆதரிக்கவில்லை. எனது சமாதான லட்சியத்தையே இது தகர்ப்பதாக இருக்கிறது. இதை ஒத்துக்கொண்டால் பின்னர் பல சிறிய பாகிஸ்தான்களும், பீகார் பிரிவினையும் ஏற்பட்டு விடும். நீங்கள் எங்கே வசித்தாலும், உங்களைச் சுற்றியுள்ளவர்களுடன் பரஸ்பரம் நல்ல எண்ணத்தையும் நட்பு உறவையும் வளர்த்தே நீங்கள் வாழவேண்டியவர்களாக இருக்கிறீர்கள். பாகிஸ்தான் பிரதேசங்களில் உள்ள பெரும்பான்மையோர் சிறு பான்மையோரின் நம்பிக்கையைப் பெறும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்று காயிதே ஆஜம்கூட ஒரு சமயம் கூறியுள்ளார். அது போலவே, உங்களுடைய நம்பிக்கையைப் பெறும்படி இங்கே உள்ள ஹிந்துக்களை நான் வற்புறுத்தி வருகிறேன். பாகிஸ்தானோ அல்லது ஹிந்துஸ்தானோ எதுவாயினும், அது நீதியையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்படவேண்டும்.”

சில பிரத்தியேகமான பிரதேசங்களில் மீண்டும் ஸ்தாபிக்க முஸ்லிம்கள் அனுமதிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்குப் பதிலாக காந்திஜி பின்வருமாறு கூறினர் :

“சில பிரத்தியேகமான பிரதேசங்களில் உங்களை வைக்கும்படி நீங்கள் அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்த முடியாது. நோவாகாலி ஹிந்துக்கள் விஷயமாக நான் ஷஹீத் சாகிபிற்கு அவ்வித யோசனையைக் கூற முடியுமா? அவ்விஷயமாக நோவாகாலி ஹிந்துக்களுக்கு நான் ஒருபோதும் உற்சாகம் அளிக்கவில்லை. ‘உங்களுக்குப் பயமாக இருந்தால், உங்களுக்கு ஈடுத் தொகையும் கிடைத்தால், நீங்கள் எங்கே வேண்டுமாயினும் போகலாம்’ என்று நான் நோவாகாலி ஹிந்துக்களுக்குக் கூறினேன். அரசாங்கத்திற்குச் சொத்துக்கள் கிடைக்கும்போது, அவர்கள் ஏன் ஈடுத் தொகை கொடுக்கக் கூடாது? உங்களுக்குப் போதிய ஈடுத் தொகை கிடைத்துவிட்டால், நீங்கள் எங்கே வேண்டுமாயினும் போகலாம் என்று உங்களுக்கு நான் கூறுவேன். எனினும், அது என் மனப்பூர்வமான விருப்பம் அல்ல என்பதை உங்களுக்கு நான் கூறவேண்டும். அத்தகைய நிலைமையில், நீங்கள் வீடு வாசல்களைவிட்டுப் போவது, கோழைத்தனத்தைத் தவிர வேறு எதுவுமில்லை. அரசாங்கம் ஈடுத் தொகை கொடுக்க மறுக்க முடியாது. அவ்விதம் கொடுக்க மறுப்பது அரசாங்கத்திற்குக் கண்ணியமாகாது. ஹிந்துக்களின் வாக்குகளைக் கொண்டு பதவிக்கு வந்துள்ள மந்திரிகள், தங்களுடைய கட்டுப்பாட்டிற்கு ஹிந்துக்கள் அடங்காமற்போய்விட்டார்கள் என்று கூறுவார்களாயின், அவர்கள் (மந்திரிகள்) பதவிகளில் தொடர்ந்து இருந்துவருவதைக் காட்டிலும் ஹிந்துக்களின்

ஆத்திரத் தீயில் குதித்துச் சாம்பலாகி விடுவதே சிறந்ததாகும். அரசாங்கம் நீதி வழங்கியே தீரவேண்டும்; எவ்விதத்திலும் அநீதிக்கு இடம் கொடுப்பது தகாது.”

பீகார் கலவரங்களை விசாரிப்பதற்காக நீதிபதி ஸ்ரீ ரூபென் நியமிக்கப்படலாம் என்ற செய்தி தங்களுக்கு அதிருப்தியைக் கொடுத்திருப்பதாக முஸ்லிம்களின் மகஜர் கூறியதைக் குறித்து காந்திஜி சொன்னதாவது :

“ஸ்ரீ ரூபெனிடம் முஸ்லிம்களுக்கு நம்பிக்கை இல்லை என்று மகஜர் கூறுகிறது. ஆனால், தாங்கள் விரும்புவது யார் என்று அவர்கள் கூறவே இல்லை. நாம் முஸ்லிம் அல்லாத ஒருவரிடம் நம்பிக்கை வைக்கவேண்டும். ஸ்ரீ ரூபென் முஸ்லிம் அல்ல. ஒரே மனிதர் அடங்கிய கமிஷனை நியமிப்பதில் அபாயம் எதுவும் இல்லை. முஸ்லிம்கள் விரும்பினால், தங்களுக்குத் திருப்தியான சில பெயர்களைக் கொடுத்து, அவர்கள் அடங்கிய கமிட்டி நியமிக்கப்பட வேண்டும் என்று கூறலாம். பிறகு நான் அவர்களுடைய விருப்பத்தை அதிகாரிகளுக்கு அறிவிக்க முடியும்.”

கடத்தப்பட்ட பெண்களைக் கண்டுபிடித்து, அவரவர் குடும்பங்களில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை சம்பந்தமாகக் காந்திஜி கூறியதாவது :

“கடத்தப்பட்ட பெண்களைப் பற்றி என்னிடம் கூறும் முஸ்லிம்களிடம், அந்தப் பெண்களின் பெயர்களையும், அவர்களுடைய குடும்ப விவரங்களையும் கூறும்படி, பீகாருக்கு வந்ததிலிருந்து நான் கேட்டு வருகிறேன். ஆனால், இதுவரையில் அப்படிப்பட்ட ஒரு பெண்ணின் பெயர்கூட எனக்குக் கொடுக்கப்படவில்லை. எனவே, துரதிருஷ்டசாலிகளான அந்தப் பெண்களின் பெயர்களைக் கொடுக்கும்படி மீண்டும் நான் கேட்கிறேன்.”

—‘ஹரிஜன்’ – 13—4—1947

# 15

# பிரார்த்தனைக்கு ஆட்சேபணை!

[1947 ஏப்ரல் 1-ஆம் தேதி காந்திஜி டில்லியில் நடந்த ஆசியா நாடுகள் மகாநாட்டிற்காக பீகாரிலிருந்து புறப்பட்டுச் சென்று, அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்தார். அங்கே நடந்த பிரார்த்தனைக் கூட்டங்களில் சமூக ஒற்றுமையின் அவசியத்தை வற்புறுத்தி காந்திஜி பேசிய விவரங்களே இந்த அத்தியாயத்திலிருந்து தொடர்ச்சியாகக் கொடுக்கப்பட்டுள்ளன :]

**கா**ந்திஜி இன்று டில்லியில் பிரார்த்தனையை ஆரம்பிக்கு முன், அவருக்கு ஒரு கடிதம் வந்தது. ஒன்று அவர் குரானி

லிருந்து ஓதுவதை நிறுத்திவிடவேண்டும், இல்லாவிடில் வால்மீகி ஆலயத்திலிருந்து வெளியேறிவிடவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. காந்திஜி அந்தக் கோவிலில்தான் தங்கியிருந்தார். பிரார்த்தனையின்போது குரானிலிருந்து ஓதுவதை ஆட்சேபிப்பவர்கள் அந்தக் கூட்டத்தில் யாராவது இருக்கிறார்களா என்று காந்திஜி கேட்டபோது, பலர் 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத் தங்களுடைய கைகளைத் தூக்கினர். குரானிலிருந்து ஓதுவதைத் தாங்கள் அனுமதிக்க முடியாது என்றும் அவர்கள் கூறினர். எனவே, அன்று பிரார்த்தனையை நடத்துவதில்லை என்று காந்திஜி தீர்மானித்தார்.

பிறகு காந்திஜி தமது பிரசங்கத்தில் கூறியதாவது:

எனது கடமை என்று தோன்றுவதைச் செய்யாமல் தவிர்ப்பவன் நான் அல்ல. எனினும், நான் பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவதை ஒரு சிறு பையன் ஆட்சேபித்தால் கூட, அதை நடத்தமாட்டேன். எனது அகிம்சை எனக்கு இடும் கட்டளை அதுதான். எனினும், இதை கோழைத்தனம் என்று யாரும் அர்த்தம் செய்துகொள்ள வேண்டாம். விவாதத்தையும் பலாத்காரத்தையும் தடுப்பதற்காக நான் பிரார்த்தனை நடத்தவில்லை. பலாத்காரம், சைத்தானின் வேலையாகும். அதை எதிர்த்தே என் வாழ்க்கை முழுவதும் நான் போராடியிருக்கிறேன்.

நான் பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவதை எதிர்ப்பவர்களை, கூட்டத்திற்கு வர வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படியே வந்தாலும், அவர்கள் மாத்திரம் வந்து, விரும்பினால் என்னைக் கொன்றுவிடட்டும். நான் கொல்லப்பட்டாலும்கூட ராமா, ரகீம் என்ற பெயர்களை அடிக்கடி உச்சரிப்பதை நான் விடமாட்டேன். எனக்கு, அவ்விரண்டும் ஒரே கடவுளின் பெயர்கள்தான். இந்தப் பெயர்களை உச்சரித்துக் கொண்டே நான் சந்தோஷமாக இறப்பேன்.

ராமா, ரகீம் என்ற பெயர்களை உச்சரிப்பதை நான் தவிர்ப்பேனாயின், நோவாகாலி ஹிந்துக்களையோ அல்லது பீகார் முஸ்லிம்களையோ நான் எந்த முகத்தைக் கொண்டு பார்க்க முடியும்?

பிரார்த்தனை நடைபெற வேண்டுமென்று விரும்புவோர், அதைத் தடுப்பவர்களிடம் கோபமோ, விரோதமோ கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு மாறாக அவர்கள், தடுப்போர் விஷயத்தில் அனுதாபம் கொள்ளவேண்டும். கோபம் கொள்ளுவதோ, வஞ்சம் தீர்க்க விரும்புவதோ, ஹிந்து மதத்திற்குத் தொண்டு செய்வதாகாது.

— 'ஹரிஜன்' - 20—4—1947

## 16

# உண்மையான ஹிந்துவின் கடமை

ஒரு ஹிந்து ஆலயத்தில் குரான் ஷரீப்பில் உள்ள வரிகளை ஓதுவதற்கு ஒரே ஒருவர்தான் தமது ஆட்சேபணையைத் தெரிவித்தார். அந்த இடத்தில் உள்ள ஹரிஜனங்கள்தான் அந்த ஆட்சேபணையை எழுப்ப முடியுமென்று காந்திஜி கூறவே, ஆட்சேபித்தவர் தமது ஆட்சேபணையை வாபஸ் வாங்கிக்கொண்டார். பிறகு காந்திஜி பேசியதாவது:

சென்ற மூன்று நாட்களாக நடந்த சம்பவங்கள், இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஹரிஜனங்களுக்கு வருத்தத்தைக் கொடுத்திருக்கின்றன. அவர்கள் எனது இளைய சகோதரர்கள் ஆவர். நான் ஒரு தோட்டி. உடலின் அழுக்கை மாத்திரமல்ல, உள்ளத்தின் அசுத்தத்தையும் சுத்தம் செய்ய வேண்டியது ஓர் உண்மையான தோட்டியின் கடமையாகும். எனவே, அது ஓர் உண்மையான ஹிந்துவின் கடமையாகும். உண்மையான ஹிந்து ஒவ்வொரு மதத்திலும் உண்மையைக் காண்கிறான். குரானில் உள்ள சுலோகத்தின் சாரம் ஒவ்வொரு மதத்திலும் அடங்கியிருக்கிறது.

வேதங்கள் அனாதி காலந்தொட்டு இருந்து வருகின்றன. உபநிடதங்களும் அப்படியே. ஆனால், அவை பூரணமாக அறிந்து கொள்ளப்படவில்லை. வேத நூல்களில் ஏதாவது அசுத்தம் புகுந்து கொண்டிருக்குமாயின், அதற்குக் காரணம் அவை பல ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்டதேயாகும். ஹிந்து மதம் ஒரு மாபெரும் மதம். அதற்கு எல்லையற்ற சகிப்புத்தன்மையும் தன்னுள் ஐக்கியப்படுத்திக்கொள்ளும் சக்தியும் இருக்கிறது. கடவுள் எங்கும் இருக்கிறார். மனிதனின் உள்ளங்களை ஆட்சி புரிபவர் அவர்தான். ஒருவர் கடவுளை எந்த உருவத்திலும் பூஜிக்கலாம்; எந்தப் பாஷையிலும் வணங்கலாம். ஆனால், மனத்தை அலையவிடாமல் கடவுளிடம் மாத்திரமே செலுத்திப் பூஜிக்க வேண்டும். கடவுள் விரும்புவது இதுதான். எனவே, குரான் ஷரீப்பில் உள்ளவற்றை ஓதுவதற்கு ஆட்சேபணை செய்வது ஹிந்துவிற்கு உகந்ததல்ல; அது மத விரோதமும் ஆகும்.

பிறகு முழுப் பிரார்த்தனையும் நடந்தது. பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி பேசியதாவது:

சென்ற மூன்று நாட்களாக நாம் பிரார்த்தனையை நடத்த முடியவில்லை. இதை நினைக்கும்போது என் மனம் மிகவும் புண்படுகிறது. விவேகமற்ற ஒரு சிலர் ஆட்சேபித்தார்கள் என்பதற்காக, நூற்றுக்கணக்கானவர்கள் பிரார்த்தனையில் கலந்து

கொள்ள முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர். எனினும், அவர்களுடைய உள்ளங்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்திருக்குமாயின், அவர்கள் உண்மையில் பிரார்த்தனை செய்யத் தவறியவர்களாக மாட்டார்கள்.

நான் அந்த ஆட்சேபணைவாதிகளுக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். ஏனெனில், அவர்கள் என் உள்ளத்தைச் சோதனை செய்துகொள்ள நிறைய சந்தர்ப்பம் அளித்தனர். அவர்களை அமைதியாக இருக்கும்படி செய்ய என்னால் முடியவில்லை அல்லவா? ஆனால், அவர்கள் மீது என் உள்ளத்தில் கோபமோ, விரோதமோ ஏற்பட்டதா? இந்தக் கேள்வியை நான் என்னையே கேட்டுக்கொண்டேன். இன்று நடந்த பஜனையின் உள் அர்த்தத்தை நீங்கள் நன்கு அறிந்து கொண்டிருந்தால், கடவுளிடமிருந்து கிடைக்கும் எதுவும் நாம் பெறும் வெகுமதியே என்று கருதுவதுதான் சரி என்பதை உணர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

இந்தச் சோதனையில் நான் நிறைவேறிவிட்டேன் என்று மகிழ்ச்சி அடைகிறேன். ஒரே மூச்சில் நான் ராமன், ரகீம் என்ற பெயர்களைச் சொன்னால் என்னைக் கொன்றுவிடுவதாக மூன்று அல்லது நான்கு பேர் கூறினால்கூட, அந்தப் பெயர்களை உச்சரித்துக்கொண்டே புன்முறுவலுடன் நான் இறப்பேன் என்று நம்புகிறேன்.

நோவாகாலியிலும் ராம பஜனை செய்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. எனினும், தினசரிப் பிரார்த்தனையை அங்கேகூட நான் நடத்திக் கொண்டுதான் வந்தேன். நமது உள்ளங்களில் கோபமோ அல்லது துவேஷமோ இல்லாவிடில், எல்லாம் சரியாகத்தான் இருக்கும். அராபிய பாஷையில் கடவுளின் பெயரைக் கூறுவது எவ்விதம் பாவமாக இருக்க முடியும்? எனவே, அழிவற்ற வேத நூல்களைச் சரியாக அறிந்து கொள்ளாததன் மூலம் ஹிந்து மதத்தை இழிவுபடுத்த வேண்டாமென உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவரவருடைய விருப்பம் போல் பிரார்த்தனை செய்ய ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும். இங்கே மகத்தான காரியங்களில் நான் ஈடுபட்டுவிட்டதாகவும், துன்பத்திற்குள்ளான மக்கள் வாழும் பிரதேசங்களை மறந்துவிட்டதாகவும் சிலர் கற்பனை செய்துகொள்ளுகின்றனர். எனது உள்ளம் எப்படி அழுது புலம்புகிறது தெரியுமா? நோவாகாலியிலும், பீகாரிலும், இப்போது பஞ்சாபிலும் மக்களின் வெறித்தனமான காரியங்களைக் கண்டு நான் என்ன வேதனைப்படுகிறேன் என்பது தெரியுமா? இதையெல்லாம் கடவுள்தான் அறிவார். நான் எங்கே இருந்தாலும் அந்தப் பிரதேசங்களில் உள்ள மக்களின் துன்பம் தீர நான் உழைத்து வருகிறேன் என உறுதி கூறுகிறேன். வைஸ்ராயுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போதுகூட, நான் அப்பிரதேசங்களை

மறக்கவில்லை. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக முயற்சி செய்வதைக் காட்டிலும் பெரிய கடமை எனக்கு வேறு எதுவும் இல்லை. நோவாகாலி, பீகார் அல்லது பஞ்சாப் எதை மறந்தாலும் நான் இந்தியாவிற்குத் தொண்டு செய்ய முடியாது. நான் கடவுளின் ஓர் ஊழியன். கடவுளின் கட்டளையின்றி நான் சாப்பிடுவதோ, தண்ணீர் குடிப்பதோ அல்லது வேறு ஏதாவது செய்வதோ இல்லை. நான் செய்துள்ள வேலையைக் காலம் வரும்போது நன்கு அறிந்துகொள்ளுவார்கள். அதன் மத்தியில் நான் கடவுள் என்னை எங்கே அழைத்தாலும் அங்கே சென்று என் கடமையைச் செய்ய வேண்டும்.

—'ஹரிஜன்' – 20—4—1947

# 17

# எரிமலை அணையவேண்டும்

காந்திஜி பிரார்த்தனையைத் தொடங்குமுன், தாம் வழக்கமாக நடத்தும் பிரார்த்தனையை விரும்பாதவர் யாராவது கூட்டத்தில் இருக்கிறாரா என்று கேட்டார். அதை யாரும் ஆட்சேபிக்காததால் காந்திஜி மகிழ்ச்சியடைந்தார். அவர் கூறியதாவது :

ஒரு மதத்தைக் காட்டிலும் மற்றொரு மதம் சிறந்தது என்று கருதுவது மடத்தனம் என்பதை நான் மறுபடியும் நினைவூட்ட விரும்புகிறேன். இன்று நாடெங்கும் நிலவி வரும் துவேஷமே, சமீப நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்பது எனது நிச்சயமான அபிப்பிராயமாகும். புயலுக்கிடையே நீங்கள் அமைதியாக இருந்தால் மாத்திரமே, உங்களுடைய பலம் வளர்ச்சியடையும். கிலாபத் இயக்கம் நடந்த அந்த நன்னாட்களில், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தோளோடு தோள் நின்று போராடினார்கள். ராட்டினந்தான் நமது மகாவலிமை பொருந்திய ஆயுதம் என்றும், கதர் நூல் சுற்றிய கூரிய வடிவமுள்ள கட்டைதான் மிகவும் சக்தி வாய்ந்த தோட்டாக்கள் என்றும் மௌலானா முகமது அலி அப்போது கூறுவது வழக்கம். சாத்விகமாகப் போராடுவதாக இருந்தால்தான் கிலாபத் இயக்கத்தில் காங்கிரஸ் கலந்து கொள்ள முடியும் என்று கூறினோம். அந்த நிபந்தனை அல்லாவின் பெயரால் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த சாத்விகப் போராட்டத்தின் பலனாகவே இன்று இந்தியா, சுதந்திரத்தின் வாயிற்படியில் இருந்து வருகிறது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் மூலமும், ராட்டினத்தின் மூலமுமே சுயராஜ்யம் பெறுவதற்காக அந்த நாட்களில் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இன்றோ, ஹிந்து-முஸ்லிம்-சீக்கியர் ஒற்றுமைக்கு அறிகுறியாக இருக்கும் காங்கிரசின் மூவர்ணக் கொடியையும், ராட்டினத்தையும் என் குடிசையைத் தவிர வேறு எந்த இடத்

திலும் காண்பதே அரிதாக இருக்கிறது. உள்நாட்டுப் பகை என்ருல் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்து, நடந்தவைகளை மறந்து மன்னித்து விடும்படியும், நோவாகாலியிலும், பீகாரிலும், பஞ்சாபிலும் நிகழ்ந்த கோரமான, மிருகத்தனமான நிகழ்ச்சிகளுக்காக உங்கள் மனத்தில் துவேஷம் கொள்ளவேண்டாம் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ராட்டினம் அகிம்சையின் மிக உண்மையான சின்னம் என்ற எனது நம்பிக்கை, முன்னரைவிடப் பன்மடங்கு அதிக உறுதியாகியிருக்கிறது. அதனுடைய இனிய கீதத்தின் மூலம் மனத்திற்கு ஆறுதலையும், கலங்கிய உள்ளத்திற்கு அமைதியையும் அளிக்க ராட்டினம் ஒருபோதும் தவறியதில்லை. துவேஷ எரிமலை இன்று விஷக் குழம்பைக் கக்கிவருகிறது. எனவே, அந்த எரிமலையை அணைக்க நீங்கள் விரும்பினுல், என்னுடன் உண்ணுவிரதத்தை நீங்கள் உண்மையான உள்ளத்துடன் மேற்கொள்ள வேண்டும். ஊர்வலங்கள், கொடியேற்ற வைபவங்கள் முதலியவற்றைக் காட்டிலும் அதிக ஆழ்ந்த தத்துவத்தை உண்ணுவிரதம் குறிக்கிறது.

ஒவ்வோர் இந்தியரையும் சகோதரராகக் கருதினுல், இந்தியா முழுவதும் பாகிஸ்தானுக இருக்க முடியும். ஹிந்துஸ்தான் ஹிந்துக்களுக்கு மட்டிலுமான, பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கு மட்டிலுமான தேசம் எனில், பின்னர் பாகிஸ்தானும் ஹிந்துஸ்தானும் விஷம் வழிந்தோடும் தேசங்களாகிவிடும். ஆனுல், நான் கனவுகாணும் நாடு, அன்பு நதிகள் வழிந்தோடும் நாடாகும்.

—'ஹரிஜன்' - 20—4—1947

# 18

# துவேஷ உணர்ச்சியும் வஞ்ச புத்தியும்

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி, அன்று நடந்த வங்காளி பஜனையையும், ராம பஜனையையும் குறிப்பிட்டுப் பேசியதாவது:

இந்தப் பஜனைகளில் ராமன் - ரகீம், கிருஷ்ணன் - கரீம் என்ற பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பஜனை கீதங்கள் பாடப்பட்ட போது, என் கண்களின் முன் நோவாகாலியின் காட்சிகள் தோன்றின. இந்தக் கீதங்கள் அங்கே அடிக்கடி பாடப்பட்டன. கிராமம் கிராமமாக நாங்கள் நடந்து சென்றபோது ராம பஜனையும் செய்துகொண்டு சென்ருேம்.

இது, தேசீய வாரத்தின் முதல் நாளாகும்; உண்ணுவிரதமும் பிரார்த்தனையும் நடைபெறவேண்டிய நாளாகும். இன்று மாலை 3 மணியிலிருந்து 4 மணி வரையில் நூற்பு யக்ஞமும் நடைபெறும்.

அதில் காங்கிரஸ் அக்கிராசனர், அவரது மனைவி, ஜவாஹர்லால்ஜி முதலிய மற்றும் பல தலைவர்கள் கலந்துகொள்ளுகிறார்கள். உண்ணுவிரதம் சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும். எனினும், ராமன், ரகீம் என்ற பெயர்களும் பஜனையின் உபதேசமும் இந்த நாளின் ஞாபகார்த்தமாக நம் உள்ளத்தில் என்றென்றும் பதிந்துவிடுமாயின் எவ்வளவு நன்மை ஏற்படும்!

சிலர் என்னைத் தூஷிக்கிறார்கள். நான் மிகப் பெரிய மனிதனாகிவிட்டேன்; அதனால்தான் அவர்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதில்கூட அனுப்புவதில்லை என்று சிலர் எண்ணுகின்றனர். பஞ்சாப் பற்றியெரிந்துகொண்டிருக்கும்போது, நான் டில்லியில் ஆனந்தமாக இருந்து வருவதாக என்மீது குற்றஞ் சாட்டுகின்றனர். நான் எங்கே இருப்பினும், இராப் பகலாக அவர்களுக்காகவே தொண்டு புரிந்து வருகிறேன் என்பதை அவர்கள் எப்படி அறிந்து கொள்ள முடியும்? அவர்களுடைய கண்ணீரை நான் துடைக்க முடியாது. கடவுள் ஒருவரால்தான் அது முடியும். எனினும், பஞ்சாபிலிருந்து அழைப்பு வந்ததும் நான் உடனே அங்கே செல்லுவேன். தற்போது நிலவி வரும் துவேஷ உணர்ச்சியும் வஞ்ச புத்தியும் எனக்கு மிகுந்த துக்கத்தை உண்டுபண்ணுகின்றன. எனவே, நீங்கள் சாந்தமடைந்து, உங்களுடைய உள்ளங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டாலன்றி, நீங்கள் நாடெங்கும் பெருந்தீயை மூட்டிவிட்டவராவீர்கள். அந்தத் தீ இறுதியில் நம்மெல்லோரையுமே எரித்துவிடும்.

இச்சந்தர்ப்பத்தில் மகாபாரதக் கதையை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அது இந்தியாவின் சரித்திரம் அல்ல, மனிதனின் சரித்திரமே. அது, நற்குணங்களே உருவெடுத்த ராமனை வணங்கியவர்களுக்கும், தீய குணங்களே உருவெடுத்த ராவணனை வணங்கியவர்களுக்கும் நடந்த போராகும். ரத்த சகோதரர்களான பாண்டவர்களும் கௌரவர்களும் போராடினார்கள். அதன் பலன் என்ன? தீமை தோல்வியுற்றது உண்மைதான். ஆனால், வெற்றி பெற்றவர்களில் அந்தக் கதையைக் கூற ஏழு பேர்களே பாக்கியிருந்தார்கள். இது போலவே, நம் தேசத்தின் இன்றைய நிலை இருந்து வருகிறது.

தைரியசாலியான பழம் பெரும் தேசீய முஸ்லிமான குவாஜா அப்துல் மஜீத் இன்று என்னைப் பார்க்க வந்தார். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இதய ஒற்றுமை நிலவிய அந்த நன்னாட்கள் மீண்டும் வருமா? இன்று பீகாரில் தேசீய முஸ்லிம்கள் ஹிந்துக்களால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இஸ்லாமின் ஹிந்து நண்பர்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எனவே, மக்கள் தங்களின் தற்போதைய போக்கை நிதானித்துச் சிந்திக்க வேண்டும். முஸ்லிம்கள் ஹிந்துக்களை அழித்துவிட விரும்பினால்கூட, முஸ்லிம்களுக்கு விரோதமாக தங்களுடைய உள்ளத்தில் கோபம் கொள்ள வேண்டாமென் நான் ஹிந்துக்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யாரும் சாவைக் கண்டு அஞ்ச வேண்டாம். ஒவ்வொரு மனிதருக்கும் மரணம் தவிர்க்க முடியாததாகும். நீங்கள் புன்முறுவலுடன் மடிந்தால், ஒரு புதிய வாழ்க்கையை மேற்கொண்டவர்களாவீர்கள்; ஒரு புதிய ஹிந்துஸ்தானத்தைச் சிருஷ்டித்துக் கொண்டவர்களாவீர்கள். கடவுளிடம் பயபக்தியுள்ள ஒரு மனிதன் எவ்விதம் வாழ வேண்டும், எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும், தனது வாழ்க்கையை எவ்வாறு உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்பது, கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் உள்ள கடைசி சுலோகங்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுலோகங்களை வாசித்து, ஐயமறக் கற்று, ஒவ்வொரு சுலோகத்தின் பொருளையும் எல்லோரும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நீங்கள் உங்களுடைய லட்சியங்கள் என்ன என்பதையும், அந்த லட்சியங்களிலிருந்து இன்று எவ்வளவு தூரம் கீழே வீழ்ச்சி அடைந்திருக்கிறீர்கள் என்பதையும் நீங்கள் உணர்ந்துகொள்ள முடியும். சுதந்திரம் வரப் போகும் இச்சமயத்தில், நீங்கள் அதற்குத் தகுதி வாய்ந்தவர்களா என்றும், அதை நிலைத்திருக்கும்படி செய்ய முடியுமா என்றும் உங்களை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டியது கடமையாகும்.

—'ஹரிஜன்'–20—4—1947

## 19

# வஞ்சம் கடவுளைச் சார்ந்தது

**நா**ன் ஜின்னா சாகிபின் அடிமையாகிவிட்டதாகவும், நான் ஒரு ஐந்தாம் படை * நபராக இருந்து வருவதாகவும் குற்றம் சாட்டி எனக்குக் கடிதங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. அத்தகைய கண்டனங்களுக்கு நான் அசைந்துகொடுப்பவன் அல்ல. தினந்தோறும் நாம் செவி கொடுத்துக் கேட்கும் கீதையின் சுலோகங்கள் என் மனத்தில் எப்போதும் இருந்து, எனக்குப் பலம் அளித்து வருகின்றன. என் மீது குற்றஞ் சாட்டியுள்ளவர்களுக்கு அந்தச் சுலோகங்களைப் பற்றித் தெரியாது என்பதும், அவற்றை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதும் நிச்சயமாகும்.

நான் ஒரு சனாதனி ஹிந்துவாக இருப்பதால்தான், என்னை நான் ஒரு கிறிஸ்தவன், ஒரு பௌத்தன், ஒரு முஸ்லிம் என்றெல்

*ஸ்பெயின் சர்வாதிகாரியான ஜெனரல் பிராங்கோ, ஸ்பானிஷ் குடியரசுக்கு விரோதமாக 1936-இல் புரட்சி செய்து நான்கு படைப் பிரிவுகளுடன் ஸ்பெயின் தலைநகரான மாட்ரிடைத் தாக்கினர். அப்போது முற்றுகையிடும் தங்களுக்கு உதவியாக நகருக்குள் பாசிஸ்டு கட்சியினர்அடங்கிய ஐந்தாவது படை கோஷ்டி வேலை செய்து வருவதாக ஜெனரல் பிராங்கோ கூறினர். எனவே, போராடும் ஒரு கட்சிக்கு இடையே விரோதிகளுக்குச் சாதகமாக இருக்கும் உளவாளிகளை ஐந்தாம் படை நபர்கள் என்று கூறுவது அதிலிருந்து வழக்கத்தில் வந்துவிட்டது.

லாம் கூறிக்கொள்ளுகிறேன். குரானிலிருந்து அராபிய சுலோகங்களை வாசிக்க எனக்கு உரிமையில்லை என்று சில முஸ்லிம் நண்பர்களும் கருதுகிறார்கள். உண்மையான மதம் இதற்கெல்லாம் அப்பாற்பட்டது என்பது அத்தகையோருக்குத் தெரியாது. நான் ஏன் கல்மா ஓதக் கூடாது, ஏன் அல்லாவைப் புகழக் கூடாது, முகமது நபியைக் கடவுளின் தீர்க்கதரிசி என்று நான் ஏன் பிரகடனம் செய்யக்கூடாது? ஒவ்வொரு மதத்தையும் சேர்ந்த தீர்க்கதரிசிகளிடமும் முனிவர்களிடமும் எனக்கு நம்பிக்கை உண்டு. என்மீது குற்றஞ்சாட்டுவோர் மீது கோபம் கொள்ளாமல் இருப்பதற்கும், அவர்களுக்கு எவ்விதத் தீங்கும் நினையாமல் அவர்களுடைய கையால் இறப்பதற்குத் தயாராக இருக்கவும் எனக்குப் பலத்தைக் கொடுக்கும்படி நான் கடவுளைத் தொடர்ந்து பிரார்த்தித்து வருவேன். இந்தக் கொள்கைகளிலிருந்து வழுவாமல் நான் வாழ்ந்து வருவேனாயின், நான் ஹிந்து மதத்திற்கு மாத்திரமல்ல, இஸ்லாமுக்கும் தொண்டு செய்தவனாவேன்.

ராவல்பிண்டியிலிருந்து துக்ககரமான செய்திகள் வந்திருக்கின்றன. என்னையும் அலி சகோதரர்களையும் அன்புடன் உபசரிப்பதில் ராவல்பிண்டி ஹிந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும் போட்டி போட்டது என் நினைவில் இருக்கிறது. அப்படிப்பட்ட ராவல்பிண்டியில் இன்று முஸ்லிம் அல்லாதார் வசிப்பதே அபாயமாகி விட்டது துக்ககரமான நிலையாகும். பஞ்சாபில் உள்ள ஹிந்துக்களின் உள்ளத்தில் கோபத் தீ கொழுந்து விட்டெரிந்து வருகிறது. தங்களுக்கு வாளின் உபயோகத்தைக் கற்பித்த குரு கோவிந்த சிங்கிற்குத் தாங்கள் சீடர்கள் என்று சீக்கியர்கள் கூறுகின்றனர். எக்காரணம் கொண்டும் திருப்பித் தாக்கக்கூடாதென்றே நான் அவர்களைத் திரும்பத் திரும்ப மன்றாடிக் கேட்டுக்கொள்ளுவேன். ஹிந்துக்களும் சீக்கியர்களும் திருப்பித் தாக்காமல் முஸ்லிம் சகோதரர்களுடைய கையால் இறந்தால் கூட, அவ்விதம் இறந்த ஹிந்துக்களும் சீக்கியர்களும் ஹிந்து மதத்தையும் சீக்கிய மதத்தையும் மாத்திரமல்ல, இஸ்லாமையும் உலகத்தையும்கூடக் காப்பாற்றியவராவார்கள் என்று நான் கூறத் துணிகிறேன்.

சத்தியம், அகிம்சைத் தத்துவங்களை சென்ற முப்பது ஆண்டுகளாக நான் எடுத்துக் கூறி வருகிறேன். தென்னாப்பிரிக்காவில் இருபது ஆண்டுகள் வரையில் அவற்றைப் பிரகடனம் செய்து வந்தேன். நான் கூறியதைப் பின்பற்றியதால் தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் அதிக நன்மையையே அடைந்தார்கள். இங்கேயும் உண்மையையும் அகிம்சையையும் பின்பற்றியவர்கள் எதையும் இழந்துவிடவில்லை. நிரந்தரமான உண்மைக்காக நிலையற்ற பொய்யை விட்டுவிட வேண்டுமென்று மக்களுக்குக் கற்பிப்பதே எனது தொழிலாக இருந்து வருகிறது. நான் பஞ்சாபிற்குச் சென்றால், அது 'வஞ்சம் தீர்த்துக்கொள்ளுங்கள்' என்று உபதேசம் செய்வதற்காக இருக்க முடியாது. அவ்விதம் உபதேசம்

செய்வது, ஹிந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும், முஸ்லிம்களுக்கும்கூடத் தீங்கு செய்வதாகும். வஞ்சம் கடவுளைச் சார்ந்தது என்று பைபிள் உபதேசிப்பது முற்றிலும் சரியே. முஸ்லிம் அல்லாதார் அமைதியாகவும். பாதுகாப்புடனும் வாழ முடியாத பாகிஸ்தானையோ, அல்லது முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு இல்லாத ஹிந்துஸ்தானையோ நான் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் பீகாருக்குச் சென்று ஹிந்துக்களின் கோபத்தைத் தடுத்து, முஸ்லிம்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படி செய்ய முயற்சித்தேன். அங்கே ஹிந்துக்கள் ஏழை முஸ்லிம்களுக்கு இழைத்த பயங்கரமான தவறுகளைச் சீர்படுத்த மந்திரிகள் ஆர்வம் கொண்டுள்ளனர். ராஜேந்திர பாபு பீகாரின் முடிசூடா மன்னராக இருந்து வருகிறார். காங்கிரஸ் ஆட்சியில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமமாகக் கருதப்பட வேண்டும். காங்கிரஸ் ஆட்சியின் கீழ் தாங்கள் பத்திரமாக இருக்க முடியாது என்று முஸ்லிம்கள் கருதுவார்களாயின், காங்கிரஸ் ஆட்சி உண்மையான தேசீய ஆட்சியாக இருக்க முடியாது. எனவே, ஹிந்துக்கள் செய்த வெட்கக்கேடான காரியங்களைக் குறித்து தாங்கள் வருந்துவதாகவும், இனி அத்தகைய செயல்கள் நடைபெறுதென்றும் பீகாரில் உள்ள பல ஹிந்துக்கள் பகிரங்கமாக உறுதி கூறியிருப்பதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அது போலவே, நான் முஸ்லிம் தலைவர்களையும் ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்களில் இருக்கும் முஸ்லிம் அல்லாதாரைத் துடைத்தொழித்துவிட முயற்சிக்க வேண்டாமென்று முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். பஞ்சாபில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் கோபமூட்டத்தக்க விதத்தில் பேசினார்கள் என்று என்னிடம் கூறப்பட்டது. அப்படியே அவர்கள் பேசியிருந்தாலும், அதற்காக முஸ்லிம்கள் தாங்கள் பெரும்பான்மையாக இருக்கும் இடங்களில் வெறிபிடித்துப் போய் அட்டூழியங்களைச் செய்திருக்க வேண்டாம்.

நோவாகாலியிலிருந்து, குறிப்பாக சென்ற இரண்டு தினங்களாகக் கெட்ட செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. சதீஷ் பாபுவும், அவரது மனைவியும், அவரது கோஷ்டியினரும் கிழக்கு வங்காளத்தில் இருந்து வருகிறார்கள். அவர்களில் யாராவது அங்கே மூண்டிருக்கும் தீயில் அழிந்தாலும், நான் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடமாட்டேன். நோவாகாலியில் கொள்ளையும், தீ வைத்தலும் மீண்டும் தலைதூக்கி வருகின்றன என்று தோன்றுகிறது. அவ்விஷயமாக, எனது நண்பரான வங்காள முதல் மந்திரிக்குத் தந்தி அனுப்பியுள்ளேன். அதன் காரணமாக, அந்த நடவடிக்கைகள் நின்றுவிடுமென நம்புகிறேன்.

ராணுவ அல்லது போலீஸ் பாதுகாப்பைக் கோருவது, தவறும் கோழைத்தனமுமாகும் என்பதை மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன். மரணத்தைக் கண்டு அஞ்சாத அகிம்சையின்

தைரியம் அவர்களுக்கு இருக்க வேண்டும். அது இல்லாவிடில் வீடு வாசல்களை விட்டுவிட்டு ஓடுவதைத் தவிர, வேறெதுவும் செய்வதற்கில்லை. ஆனால், அவ்விதம் ஓடுவது தீரமாகாது.

அபாயங்கள் ஏற்படும்போது அழுதுகொண்டிருப்போர் அடிமைகளாவர். அச்சந்தர்ப்பங்களில் ராணுவ உதவியை நாடுவோர், அடிமைகளாக இருக்க நேரும். உள்நாட்டுக் கலகம் ஏற்படுவதையோ அல்லது அடிமைகளாக இருப்பதையோ மக்கள் விரும்பமாட்டார்கள் என்று நம்புகிறேன். உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டால் இந்தியா தன் அழிவிற்கு மாத்திரமல்ல உலகத்தின் அழிவிற்கும் உதவி புரிந்ததாகும். என்றும் அழிவற்ற இமய மலையை எல்லையாகக் கொண்டதும், நோய் தீர்க்கும் கங்கைத் தண்ணீர் பாய்வதுமான இந்தியா, பலாத்காரத்தின் மூலம் அழிவை நாடிச் செல்லப் போகிறதா? எனவே, பிரம்மாண்டமான ராணுவத்தை வைத்துக்கொள்ளும் எண்ணத்தையே இந்தியா விட்டுவிடுமென நான் உறுதியாக நம்புகிறேன். அந்த ராணுவத்தினால் இந்தியாவுக்குக் கதிமோட்சம் ஏற்படாது. அப்படிப் பெறும் சுதந்திரம் பலன்தரத்தக்கதாகவும் இராது.

—'ஹரிஜன்' – 27—4—1947

# 20

# வகுப்புவாதத் தீயில் மடிந்தால்...

இப்போதெல்லாம் நான் ஒரே விஷயத்தைப் பற்றி, அதாவது உங்களுடைய துக்ககரமான நிலைமையைப் பற்றி மாத்திரமே பேச வேண்டியிருக்கிறது. நான் தினந்தோறும் கூறும் வார்த்தைகள் உங்களுடைய உள்ளங்களில் பதிந்து, உங்கள் மனத்தில் பரஸ்பரம் உள்ள கோபத்தைக் கழுவி சுத்தம் செய்யுமென நம்புகிறேன். நோவாகாலியிலிருந்து வந்துள்ள மனவேதனையைக் கொடுக்கும் செய்திகளைப் பற்றி நேற்று முன் தினம் குறிப்பிட்டேன். அங்கேயிருந்து வந்த தந்திகளும், அவற்றிற்கு நான் அளித்துள்ள பதிலும் இன்றைய காலைப் பத்திரிகைகளில் வெளியாகி யிருக்கின்றன. இன்று சதீஷ் பாபுவிடமிருந்து மேற்கொண்டு ஒரு தந்தி வந்தது. நிலைமை மேற்கொண்டு மோசமாகி வருவதாக அவர் தந்தியில் குறிப்பிட்டுள்ளார். எனினும், நான் நோவாகாலிக்குத் திரும்பி வர வேண்டாம் என்றும், ஹிந்துக்கள் தைரியமாக இருந்து வருகிறார்கள் என்றும், அவசியமாயின் பிறரைக் கொல்லாமல் தாங்கள் சாக அவர்கள் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்றும் எனக்கு சதீஷ் பாபுவும் அவரது சக தொண்டர்களும் உறுதி கூறியிருக்கிறார்கள். சென்ற சில மாதங்களாக அவர்கள் செய்துள்ள முயற்சியின் பலனே இது என்று அவர்கள் கருது

கிறார்கள். இந்தத் தொண்டர்கள் யாவரும் பல்வேறு கிராமங்களில் வசித்து வருகிறார்கள். சதீஷ் பாபு, அவரது மனைவியார், பியாரிலால், ஹரன் பாபு, அப்துல் சலாம், சுசீலா பாய், அபா, கனு காந்தி, சுசீலா நய்யார் முதலிய பலரும் சிறிதும் அச்சமின்றி தங்கள் கடமைகளைச் செய்து வருகிறார்கள். தங்களைக் கொலை செய்யும் அளவுக்கு நோவாகாலி முஸ்லிம்கள் அவ்வளவு இரக்கமற்றவர்களாக இருப்பார்கள் என்று நம்ப அவர்கள் மறுக்கின்றனர். இந்த ஊழியர்கள் செய்துள்ள தன்னலமற்ற தொண்டு, பலாத்காரத்தினால் பாகிஸ்தான் பெற முடியாது என்பதை மிகவும் மூர்க்கத்தனமுள்ள முஸ்லிம்களுக்குக்கூடக் கற்பிக்குமென அஞ்சுகிறேன். பலாத்காரத்தினால் பெற்ற எதுவும் ஒரு காலத்திலும் ஜீரணமாகாது. இந்தத் தொண்டர்களில் எவராவது வகுப்புவாதக் கோபாவேசத் தீயில் அழிந்து விடுவாராயின், அதற்காக ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடமாட்டேன் என்பதை மறுபடியும் வற்புறுத்திக் கூறுகிறேன். அப்போது அவர்களின் தொண்டுதான், ஹிந்து மதத்திற்கு மாத்திரமல்ல, இஸ்லாமுக்குக்கூடச் செய்த மிகச் சிறந்த, முற்றிலும் உண்மையான தொண்டாக இருக்கும்.

கலகம் ஏற்பட்டுள்ள அந்தப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு, கடவுள் விவேகத்தையும் தைரியத்தையும் அளிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டியது, ஒவ்வொருவருடைய கடமையுமாகும். அப்படியானால்தான், கலகப் பிரதேசங்களில் உள்ளவர்கள், பலாத்காரம் முட்டாள்தனமானது என்பதை உணரமுடியும். என்னுடைய சக ஊழியர்களில் எவரும் அங்கே தங்கியிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், இனி அங்கே உள்ள ஹிந்துக்கள் பத்திரமாக இருப்பார்கள் என்றும், நோவாகாலி முஸ்லிம்கள் எனக்குக் கடிதம் எழுதும் நன்னாளை நான் ஆர்வத்துடன் எதிர்பார்த்து வருகிறேன்.

பிரார்த்தனை நடக்கும்போது என் ஜாகையில் போலீசார் காவல் புரிவதைக் குறித்து நான் வெட்கமடையவில்லையா என ஒரு நண்பர் கேட்டிருக்கிறார். அதைக் குறித்து நான் வெட்கம் அடைகிறேன். ஆனால், நான் ஒரு சாதாரண பிரஜையே. அரசாங்கத்தின் சட்ட விதிகளில் தலையிட எனக்கு அதிகாரம் இல்லை. என் ஜாகையில் போலீஸ் காவலை அகற்ற விரும்புவோர், உள்நாட்டு மந்திரி சர்தாரிடம் செல்ல வேண்டும்.

ஹிந்து மதத்தில் அகிம்சையை நான் எங்கிருந்து தேடிக் கண்டுபிடித்தேன் என்றும் கேட்டிருக்கிறார்கள். ஹிந்து மதத்தில் அகிம்சை இருக்கிறது; கிறிஸ்தவ மதத்திலும் இஸ்லாமிலும் அது இருக்கிறது. நீங்கள் நான் கூறுவதை ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும், நான் உண்மை என்று நம்புவதைப் பிரசாரம் செய்ய வேண்டியது எனது முழு முதற் கடமையாகும். அகிம்சை எவரையும் கோழையாகச் செய்ததில்லை என்பதும் எனது உறுதியான அபிப்பிராயமாகும்.

—'ஹரிஜன்' – 27—4—1947

# 21

# மீண்டும் பீகாருக்குப் புறப்பாடு

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியபோது, தாம் சனிக்கிழமை மாலை பீகாருக்குப் புறப்பட்டுச் செல்லப் போவதாக அறிவித்தார். அச் செய்தியைக் கேட்ட எல்லோருடைய முகத்திலும் வருத்தம் தென்பட்டது. காந்திஜி கூறியதாவது:

அந்தராத்மாவின் அழைப்புக்கு இணங்க நான் நோவாகாலிக்குச் சென்றிருந்தேன். அங்கேயுள்ள ஹிந்துக்களிடையே மீண்டும் ஓரளவு நம்பிக்கை ஏற்படும்படி செய்ததன் மூலம், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும்கூட தொண்டு புரிந்ததாகக் கூறிக்கொள்ளுகிறேன்.

அதுபோலவே, நான் பீகாருக்குச் சென்றேன். அங்கே வகுப்பு ஒற்றுமை நிலவும்படி செய்வதில் வெற்றி பெறுவேன் அல்லது இறப்பேன் என்று சொல்லியிருந்தேன். இரு இடங்களிலும் என் அலுவல்கள் முடிவடைந்து விடவில்லை. இந்த இரண்டு இடங்களிலும் உள்ள ஹிந்துக்களும், முஸ்லிம்களும், அவர்கள் எவ்வளவு சிறு தொகையினராயினும், முற்றிலும் அமைதியுடனும் பாதுகாப்புடனும் வாழ முடிந்தால் மாத்திரமே நான் திருப்தியடைய முடியும்.

இந்த இரண்டு இடங்களைப் போல் பஞ்சாபும் துன்பத்திற்குள்ளாகியது; இன்றும் துன்பத்திற்குள்ளாகி வருகிறது. அப்படியிருக்க, நான் ஏன் பாஞ்சாபிற்குச் செல்ல வில்லை என்று நீங்கள் கேட்கலாம். கட்டளை வரும்போது நான் பஞ்சாபிற்குச் செல்லுவதை யாரும் தடுக்க முடியாது. இப்பொழுது அங்கே செல்ல வேண்டாமென தலைவர்கள் எனக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்கள். இப்போது அங்கே பிரிட்டிஷ் அரசாங்கமே இருந்து வருகிறது; இந்திய அரசாங்கம் இல்லை. காங்கிரஸ் அரசாங்கத்தைப் போல லீக் அரசாங்கமும் இந்திய அரசாங்கமே அல்லவா?

ஹிந்து அரசாங்கம் என்றும், முஸ்லிம் அரசாங்கம் என்றும் நாம் நினைக்கத் தொடங்கிய அந்த விநாடியே நாம் தவறு செய்தவர்களாகி விடுகிறோம். அவ்விதம் நினைப்பது அபாயமானது. உண்மையான பாகிஸ்தானில் (புண்ணிய பூமி) போராட்டம் இருப்பதற்கில்லை. அங்கே ஒவ்வொரு விஷயமும் பலாத்காரத்தின் மூலம் அல்ல, பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டே நடைபெற வேண்டும்.

இங்கேயிருந்தே நான் பஞ்சாப் மக்களுக்குக் கூறுகிறேன். பஞ்சாப் மாகாணத்திற்கும், பஞ்சாப் மக்களுக்கும் நான் புதியவன் அல்ல. சில காங்கிரஸ்காரர்கள் பலாத்காரத்தில்

ஈடுபட்டுத் தவறு செய்திருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால், பொதுவாக இயக்கம் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டிருந்ததாலேயே, பிரிட்டிஷாருக்கு எதிராகக் காங்கிரஸ் நடத்திய போராட்டம் வெற்றியடைந்திருக்கிறது.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் அனுசரித்த சத்தியாக்கிரகம் சரித்திரத்தில் என்றென்றும் அழியாமல் இருந்துவரும். இந்தியர்கள் தங்கள் கொள்கையில் உண்மையாக நடந்துகொண்டதே அதற்குக் காரணமாகும். தென்னாப்பிரிக்க இந்தியர்களின் சார்பில் நான் இரு முறை இங்கிலாந்திற்குச் சென்றேன். ஆயினும், எனக்குச் சத்தியாக்கிரகத்தின் பலம் இராவிடில் நான் வெற்றி பெற்றிருக்க முடியாது. எனவே, பஞ்சாபில் உள்ள ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் நான் கேட்டுக் கொள்ளுவது என்னவெனில், பிறரைக் கொல்லாமல் நீங்கள் கொல்லப்படுவதற்கு உறுதி கொள்ளுங்கள் என்பதேயாகும். அவர்கள், பாகிஸ்தான் தங்கள்மீது திணிக்கப்படுவதைச் சத்தியாக்கிரகத்தின் ஈடு இணையற்ற பலம் முழுவதையும் உபயோகித்து எதிர்க்க வேண்டும்.

எனது லட்சியத்தை நிறைவேற்றும் பணியில் நான் இறக்க வேண்டும் என்பது எனது விதியாயின், அதற்கு நான் அஞ்சவில்லை. நாம் இன்று கேட்ட மாலைப் பிரார்த்தனை கீதத்தில் உள்ளபடி, விதிக்கப்பட்ட காலத்திற்கு மேல் தமது நோயாளி உயிர் வாழும்படி செய்ய எந்த டாக்டராலும் முடியாது. ஹிந்துக்களும் சீக்கியர்களும் அகிம்சையைக் கடைப்பிடித்தால், பாகிஸ்தானை பலாத்காரமாகப் பெற முயற்சிக்கும் முஸ்லிம்களின் நடவடிக்கையை உலகம் கண்டிக்கும். அது உலகம் முழுவதற்குமே ஓர் அற்புதமான படிப்பினையாக இருக்கும்.

டில்லியில் தாற்காலிகமாக எனது வேலை முடிந்துவிட்டதால், நான் பீகாருக்குத் திரும்பிச் செல்லுகிறேன். வைஸ்ராய், பண்டித நேரு இவ்விருவருடைய கைதி நான் என்று உங்களுக்குக் கூறியுள்ளேன். வைஸ்ராயுடன் நான் நடத்திய பேச்சுக்கள் தாற்காலிகமாக முடிவடைந்துவிட்டன. என் கடமை எங்கே இருக்கிறது என்று நான் நினைக்கிறேனோ அங்கே செல்ல, தாராள நோக்கம் கொண்ட ஜவாஹர்லால்ஜி என்னைத் தடுக்கமாட்டார். நான் கீதையை வணங்குகிறவன். ஒருவர், தமது சொந்தத் துறைக்கு வெளியே எவ்வளவு பெரிய காரியமாகத் தோன்றினாலும் அதைக் காட்டிலும், எக்காலங்களிலும் தமது சொந்தத் துறையிலேயே தமது கடமையைச் செய்வதுதான் சிறந்தது என்று கீதை கூறுகிறது.

— 'ஹரிஜன்' - 27—4—1947

## 22

# உபநிடதமும் குரானும்

காந்திஜி பேசுகையில், ஜாலியன்வாலா பாக்கில் நடந்த அட்டுழியங்களைக் குறிப்பிடும் தேசீய வாரத்தில், பல்வேறு சமூகத்தினரும் ஒருவரையொருவர் எதிர்த்துச் சண்டையிடுவதில்லை என்று உறுதி கொள்ள வேண்டுமென்று கூறினர். அவர் மேலும் பேசியதாவது:

இந்தியாவில் நடைபெறும் வகுப்புக் கலவரங்களைப் பற்றி அந்நிய நாட்டினர் என்னைக் கேட்கும்போது, நான் வெட்கத்தினல் தலை குனிய வேண்டியிருக்கிறது. எல்லோரும் அவ்விதம் வெறி கொண்டு விடவில்லை என்று மாத்திரமே, நான் அவர்களுக்குப் பதில் கூற முடிகிறது. வெறி பிடித்த அட்டுழியங்கள் ஒரு சிலரின் வேலையாகும். காலம் செல்லச் செல்ல எல்லாம் சரியாகி விடுமென நம்புகிறேன். சமூகங்களுக்குள் இதய ஒற்றுமை ஏற்படும்படி செய்வதில் டில்லி மக்கள் முழுப் பங்கு எடுத்துக் கொள்ளுவார்கள் என்றும் நம்புகிறேன்.

எனக்கு இரண்டு நல்ல கடிதங்கள் வந்திருக்கின்றன. குரானில் உள்ள வாக்கியத்தைப் பற்றி ஒரு ஹிந்து நண்பரும், ஒரு முஸ்லிம் நண்பரும் எழுதியிருக்கிறார்கள். குரான் வாக்கியத்திலும் உபநிடத வாக்கியத்திலும் மொழியைத் தவிர, அதாவது குரான் அராபிய மொழி, உபநிடதம் சமஸ்கிருத மொழி என்பதைத் தவிர, கருத்தில் எவ்வித வேற்றுமையும் இல்லை என்று ஒரு நண்பர் எழுதுகிறார். எந்த மொழியிலும் கடவுளை வணங்க எனக்கு உரிமை உண்டு என்றே நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

டில்லியிலிருந்து உங்களிடம் விடை பெற்றுக்கொள்ளுகிறேன். நான் இங்கே இல்லாதபோதும் நீங்கள் பிரார்த்தனையில் கலந்துகொண்டு, அதிக பலத்தைத் தேடிக்கொள்ளுவீர்கள் என்றும் நம்புகிறேன்.

—'ஹரிஜன்' – 27—4—1947

## 23

# காந்திஜி - ஜின்னு கூட்டு அறிக்கை

ஏப்ரல் 15–ஆம் தேதி காந்திஜியும் ஜின்னுவும் கையெழுத்திட்ட ஒரு வேண்டுகோள் டில்லியிலிருந்து வெளியிடப்பட்டது. அரசியல் காரணங்களுக்காக எக்காலத்திலும் பலாத்காரத்தை

உபயோகிக்கக்கூடாது என்றும், பலாத்காரத்திலும் ஒழுங்கற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என்றும் எல்லா சமூகங்களையும் கேட்டுக்கொண்டு தாங்கள் வெளியிட்ட வேண்டுகோளைபற்றி, பாட்னுவில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியதாவது :

நான் டில்லியில் இருந்தபோது வைஸ்ராயின் யோசனைக்கு இணங்க ஓர் அறிக்கையில் கையெழுத்திட்டேன். அதில் காயிதே ஆஜம் ஜின்னுவும் கையெழுத்திட்டார். பண்டித ஜவாஹர்லால் நேருவும், காரியக் கமிட்டியில் உள்ள மற்ற அங்கத்தினர்களும் இதற்குச் சம்மதித்தனர். அந்த அறிக்கையின் விவரம் வருமாறு :

"சமீபத்தில் நிகழ்ந்த சட்ட விரோதமான, பலாத்காரமான நடவடிக்கைகளைக் குறித்து நாங்கள் ஆழ்ந்த வருத்தம் அடைகிறோம். அவை, இந்தியாவின் நற்பெயருக்கு மகத்தான அவமானத்தை உண்டாக்கியிருக்கின்றன. கொடுமை இழைத்தவர்கள் யாராயினும், கொடுமைக்கு உள்ளானவர்கள் யாராயினும், அவை நிரபராதிகளான மக்களுக்கு மகத்தான துன்பத்தைக் கொடுத்திருக்கின்றன.

"அரசியல் நோக்கங்களுக்காகப் பலாத்காரத்தை உபயோகிப்பதை நாங்கள் எக்காலத்திலும் கண்டிக்கிறோம். பலாத்காரமான, ஒழுங்கற்ற நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்கும்படியும், அத்தகைய நடவடிக்கைகளைத் தூண்டுவதாக இருக்கும் எந்த வார்த்தையையும் பேச்சிலும் எழுத்திலும் தவிர்க்கும்படியும், சாதி, மத பேதமின்றி இந்தியாவில் உள்ள எல்லா சமூகங்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம்."

அந்த அறிக்கையில் உள்ள என் கையெழுத்திற்கு அதிக மதிப்பு இல்லை. ஏனெனில், நான் எக்காலத்திலும் பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்ததில்லை. ஆனல், அதில் காயிதே ஆஜம் ஜின்னு கையெழுத்திட்டிருப்பதுதான் குறிப்பிடத்தக்கதாகும். அதில் கையெழுத்திட்டிருப்பவர்கள் அதனுடைய உட்கருத்தை உறுதியுடன் அனுசரிப்பார்களாயின், எல்லாக் கஷ்டங்களும், ரத்தக் களரிகளும் நின்றுவிடும் என நம்பலாம். அதன் பலனுக நான் பீகாரிலிருந்து புறப்பட்டுச் சென்று வேறு அலுவல்களில் ஈடுபடுவதற்குச் சாத்தியமாகலாம்.

தனிச் சிறப்பு வாய்ந்த இந்த தஸ்தாவேஜியின் மூலகர்த்தாவான வைஸ்ராய் வாழ்த்துக்கு உரியவராகியிருக்கிறார். வெளியார் எவருடைய தலையீடும் இல்லாமல் காங்கிரசிற்கும் முஸ்லிம் லீகிற்கும் இடையே அத்தகைய தஸ்தாவேஜு கையெழுத்திடப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனினும், இந்த இரு ஸ்தாபனங்களுக்கிடையே இனியாவது ஒத்துழைப்பு இருந்து வருமென நம்புகிறேன்.

—'ஹரிஜன்' – 4—5—1947

# 24

# வேண்டுகோள் வீணுயிற்று

ஏப்ரல் 30-ஆம் தேதி பீகாரிலிருந்து டில்லிக்குப் புறப் பட்டுச் சென்ற காந்திஜி, மே 1-ஆம் தேதி அங்குள்ள வால்மீகி கோவிலில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசினுர்.

எல்லைப்புற மாகாணம், பஞ்சாப் முதலிய மற்ற இடங் களிலும் நிலவி வரும் பலாத்காரத்தைக் குறிப்பிட்டுவிட்டுக் காந்திஜி கூறியதாவது :

தேசத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றும், அரசியல் நோக்கங்களில் வெற்றி பெறுவதற்காகப் பலாத்காரத்தை உப யோகிப்பதை நிரந்தரமாக விட்டொழித்துவிட வேண்டும் என்றும் நானும் ஜனுப் ஜின்னுவும் சேர்ந்து வேண்டுகோள் விடுத்தும்கூட, அதனுல் ஏன் யாதொரு பலனும் ஏற்படவில்லை என்று இக்கூட்டத்தில் இருப்போர் கேட்கலாம். வீணுகிவிட்ட இந்த வேண்டுகோளில், அதன் காரண கர்த்தாவான வைஸ்ரா யின் கௌரவமும், அதில் கையெழுத்திட்ட காயிதே ஆஜம் ஜின்னுவின் கௌரவமும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. தம்மைப் பின்பற்றுவோர், தமது வேண்டுகோளுக்குச் செவி கொடுக்க வில்லை என்று ஜின்னு சாகிப் காரணம் கூறிவிட முடியாது. அவர் அவ்விதம் செய்வது, தம்மைத் தாமே மறுத்துக்கொண்ட தாக முடியும். ஏனெனில், அகில இந்திய முஸ்லிம் லீகின் தனிப் பெரும் தலைவராக அவர் இருக்கிருர். இந்தியாவில் உள்ள பெரும் பாலான முஸ்லிம்களின் பிரதிநிதி ஸ்தாபனமாகத் தான் விளங்குவதாக லீக் கூறுகிறது. பாகிஸ்தான் என்ற சொல்லில் அடங்கியுள்ள தங்களுடைய அரசியல் நோக்கத்தை நிறைவேற் றிக்கொள்ளுவதற்காக முஸ்லிம்கள் பலாத்காரத்தில் ஈடுபடுவ தெனில், பின்னர் லீகின் அதிகாரம் எங்கே இருக்கிறது? பகுத் தறிவைவிட ஆதயுங்களின் சக்திக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் விட்டுக்கொடுக்க வேண்டுமா?

அந்த வேண்டுகோளில் உள்ள வார்த்தைகளில், அதில் கையெழுத்திட்ட இருவருக்கும் பூரண நம்பிக்கை இருந்தா லன்றி, அதை வெளியிடுவது விவேகமாகுமா என நான் முதலி லேயே என் சந்தேகத்தைத் தெரிவித்தேன்.

—'ஹரிஜன்' – 11—5—1947

# 25

# மதங்களின் ஆணி வேர்

மே 2-ஆம் தேதி காந்திஜி பிரார்த்தனைக்காக வெளியே வருமுன், வால்மீகி ஆலயத்திற்கு வெளியே பாகிஸ்தான் எதிர்ப்பு கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீ தாட்டே கைதியானார். பிரார்த்தனைக் கூட்டத்தில் குரானிலிருந்து பிரார்த்தனை செய்வதைத் தாம் ஆட்சேபிக்க உத்தேசிப்பதாக அவர் அன்று காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

வழக்கம்போல் பிரார்த்தனைக் கூட்டம் ஆரம்பமாயிற்று. குரானிலிருந்து பிரார்த்தனை செய்யப்பட்டபோது, அதைக் கூட்டத்திலிருந்து இருவர் ஆட்சேபித்து, 'ஹிந்து தருமத்திற்கு ஜே' என்ற கோஷம் செய்தனர். அவர்களைப் போலீசார் கைது செய்யவே, அவர்களை விடுதலை செய்யும்படி போலீசாரைக் காந்திஜி கேட்டுக் கொண்டார். பிறகு அவர் பேசியதாவது :

ஜனங்களின் இத்தகைய குறுகிய மனநிலையைக் குறித்து மிகவும் வருந்துகிறேன். சுலோகங்களைக் கோஷிப்பதால் மாத்திரம் ஹிந்து மதம் உயர்ந்துவிடாது. பிரார்த்தனையின் போது நான் குரானிலுள்ள வாக்கியங்களை வாசிப்பதை, சில ஹிந்துக்கள் ஏன் ஆட்சேபிக்கிறார்கள்? இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சில இடங்களில் முஸ்லிம்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொள்ளவில்லை எனில், அதற்குப் பிரதியாக ஹிந்துக்கள் குரானிலிருந்து வாசிப்பதை ஆட்சேபிக்க வேண்டும் என்பதில்லை.

குரானிலிருந்து இங்கே வாசிக்கப்படும் வரிகள், கடவுளைப் போற்றும் ஒரு மகத்தான பிரார்த்தனையாகும். அராபிய மொழியில் இந்தப் பிரார்த்தனையைச் செய்வதால், அது ஹிந்து மதத்திற்கு எவ்விதம் அபாயத்தை உண்டாக்கிவிடும்? அபாயத்தை உண்டாக்கும் என்று கூறுபவர் அவரது மதத்தைப் பற்றியோ, அவரது கடமையைப்பற்றியோ எதுவும் அறியார் என்றுதான் கூறவேண்டும். இந்தப் பிரார்த்தனையை ஒரு கோவிலிலும் செய்யலாம்.

இதே அர்த்தமுள்ள பிரார்த்தனை யஜுர் வேதத்தில் காணப்படுகிறது என ஒரு நண்பர் என்னிடம் சொன்னார். ஹிந்து வேத நூல்களை ஆராய்ந்தவர்கள், 108 உபநிஷத்துகளில் அல்லோபநிஷத் என்பதும் ஒன்று என்பதை அறிவார்கள். அதை எழுதியவருக்குத் தம்முடைய மதம் என்ன என்பது தெரியாதா? குரு நானக் * தமது மத சஞ்சாரங்களின்போது, உண்மையைக்

---

*குரு நானக் தேவ் - (1469–1538) குரு நானக் அவரது காலத்தில் ஒரு மகானாக விளங்கினார். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர் செய்த பரந்த யாத்திரை

கண்டுபிடிப்பதற்காக அரேபியாவுக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

சுய துன்பத்திற்கு இலக்காகாமல் உலகில் எந்த மதமும் உயிர் வாழ முடிந்ததில்லை. சமயத்திற்காக மக்கள் தங்களுடைய உயிரைத் தியாகம் செய்ய ஆர்வம் கொள்ளும்போதுதான், அதற்குப் பலம் ஏற்படுகிறது. வாழ்க்கை விருட்சம் தியாகிகளின் ரத்தமாகிய தண்ணீரைக்கொண்டுதான் வளர வேண்டியிருக்கிறது. அந்தத் தியாகிகள் தங்களுடைய எதிரிகளைக் கொல்லாமலும் அல்லது அவர்களுக்கு எவ்விதத் தீங்கும் எண்ணாமலும், தங்களுடைய உயிரைக் கொடுத்தவர்களாவர். அத்தகையோரின் தியாகம்தான் ஹிந்து மதத்திற்கும், மற்றெல்லா மதங்களுக்கும் ஆணிவேர் ஆகும்.

இப்போது நாம் கண்ட காட்சி, இந்தியாவைப் பற்றிக் கொண்டிருக்கும் நோயின் அடையாளமாகும். சகிப்பின்மை, பொறுமையின்மை, அடிக்கு அடி கொடுத்தல் முதலியவை தாண்டவமாடி வருகின்றன. சர்வ ஜன ராணுவப் பயிற்சி பற்றியும்கூட நாம் சிந்தித்து வருகிறோம். இந்தியா ஒரு போதும் ராணுவ தேசமாகிவிடாமல் கடவுள் காப்பாராக. இந்தியா ராணுவ நாடாகிவிடுவது உலக அமைதிக்கே ஆபத்தாகும். எனினும், நாம் இப்போது செய்வதைப்போல் காரியங்களைச் செய்து வருவோமாயின், இந்தியாவிற்கோ, உலகத்திற்கோ என்ன நம்பிக்கை இருக்கிறது? எல்லைப்புற மாகாணம், பஞ்சாப்,

---

அவரது சலியாத உழைப்பிற்கும், ஊக்கத்திற்கும், உள்ள வலிமைக்கும் சிறந்த உதாரணமாகும். சாதாரண மக்களுக்கும் எளிதில் புரியும்படி அவர் வாழ்க்கையின் உயர்ந்த தத்துவங்களையும் உண்மைகளையும் விளக்கியதால், குறிப்பாக வட இந்தியாவில் அவரைப் பற்றி அறியாதவர் யாருமே இல்லை எனலாம். தால்வண்டி என்ற இடத்தில் காளு என்ற ஒரு கடைக்காரருக்கு குரு நானக் புதல்வராகப் பிறந்தார். அந்த ஊர் இன்று மேற்கு பாகிஸ்தானில் இருக்கிறது. குரு நானக் குழந்தையாக இருந்தபோது, கடவுளை அறியத் தொடங்கியது பற்றிய பல கதைகள் வழங்கி வருகின்றன. குரு நானக்கின் மனத்தைத் துறவு வாழ்க்கையிலிருந்து திருப்ப அவரது தந்தை எவ்வளவோ முயற்சித்தும் அது நிறைவேறவில்லை. நானக் துறவு வாழ்க்கையை மேற்கொள்ளுவதற்கு முன் கூட, அவரது வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாகக் கூறுகிறார்கள். குரு நானக், இராக், ஈரான் முதலிய முஸ்லிம் நாடுகளில் யாத்திரை செய்ததுடன், முஸ்லிம்களின் புண்ணிய ஸ்தலமான மெக்காவுக்கும் சென்றார்! அப்போது முஸ்லிம்கள், அவர் ஒரு பெரிய மகான் என்பதை அங்கீகரித்தனர். குரு நானக் தம்முடைய வாரிசாக தமது புதல்வரை நியமிக்கவில்லை. தமது சீடரான குரு அங்கதையை சீக்கியர்களின் இரண்டாவது குருவாக நியமித்தார். குரு அங்கத், குரு நானக்கின் நூல்களைத் தொகுத்ததுடன், குருமுகி லிபியையும் உருவாக்கினார். 1538–இல் கர்த்தர்பூரில் குரு நானக் காலமானபோது, அவரது ஹிந்து சீடர்களுக்கும் முஸ்லிம் சீடர்களுக்கும் ஈமக் கடன்களைச் செய்வதன் சம்பந்தமாகத் தகராறு ஏற்பட்டது. குரு நானக்கின் உடலை மூடியிருந்த போர்வையை அகற்றியபோது, அங்கே அவரது உடல் இல்லை, அது மாயமாக மறைந்துவிட்டது! அந்த இடத்தில் புஷ்பங்கள்தான் குவிந்திருந்தன. அந்த புஷ்பங்களை ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பங்கிட்டுக்கொண்டு, அந்தந்த சமூகத்தின் சம்பிரதாயப்படி ஈமக்கடன்களைச் செய்து முடித்தனர். சீக்கியர்களின் புனித வேத நூலாகத் திகழும் குரு கிரந்த் சாகிப், குரு நானக் இயற்றியதாகும்.

சிந்து முதலிய மற்ற இடங்களிலும் நடந்து வருவது போன்ற பயங்கர நடவடிக்கைகளால் பாகிஸ்தானை எட்டிப் பிடித்துவிட முடியுமா?

எல்லாம் சரியாகிவிடும் என்றும், முஸ்லிம் பெரும்பான்மையோராக உள்ள மாகாணங்களில் இருக்கும் முஸ்லிமல்லாதாருக்கு விசேஷ சலுகை காட்டப்படாவிடினும், அவர்களை முஸ்லிம்களுக்குச் சமமாக நடத்துவார்கள் என்றும் பலர் கூறுகிருர்கள். அது அசாத்தியமான ஒரு கனவு என்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். பாகிஸ்தான் ஏற்படாதபோது மக்கள் வேறுவிதமாகப் போதிக்கப்பட்டு வருவார்களாயின், பாகிஸ்தான் நிரந்தரமான உண்மையான பின் அவர்கள் சரிவர நடந்துகொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பாகிஸ்தானில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள மாகாணங்களிலோ, பகுதிகளிலோ உள்ள சிறுபான்மையோரின் மனத்தில் நம்பிக்கை ஏற்படும்படி செய்ய வேண்டியது காயிதே ஆஜம், அவரது சகாக்கள் முதலியோரின் கடமையாகும். அப்படியாயின், பாகிஸ்தானைக் கண்டோ, பிரிவினையைக் கண்டோ பயம் எதுவும் இராது.

—'ஹரிஜன்'–11—5—1947

# 26

# பாகிஸ்தான் என்ருல் என்ன ?

சில தினங்களே சென்ற பிறகு காந்திஜி இரண்டாவது தடவையாக டில்லிக்கு விஜயம் செய்ததன் பலனாக, டில்லிவாசிகளுக்கு மீண்டும் தினந்தோறும் மாலையில் காந்திஜியின் பிரசங்கத்தைக் கேட்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போதும் எங்கும் பீதியும், நம்பிக்கையின்மையும், துவேஷமும், மனச்சோர்வும் குடிகொண்டிருந்தன. எனவே, அந்த நிலைமையில் காந்திஜியின் பிரசங்கத்தைக் கேட்டு ஆறுதல் அடைவதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் வந்ததில் ஆச்சரியமில்லை. அப்படியிருந்தும், இந்தத் தடவைகூட பிரார்த்தனைகள் அனுமதிக்கப்படாதது மிகவும் துக்ககரமான விஷயமாகும். குரான் ஷரீப்பிலிருந்து பிரார்த்தனை ஆரம்பமானதும், ஓர் ஆட்சேபணைக் குரல் எழும்பும். அந்த ஒருவரின் விருப்பத்துக்குத் தலை வணங்கும்படி காந்திஜி ஆயிரக்கணக்கான மக்களையும் கேட்டுக்கொள்ளுவார். ஒரு நபரின் முடத்தனத்திற்காக, பிரார்த்தனையில் கலந்துகொள்ள ஆர்வத்துடன் வந்த எல்லோருமே அந்த உரிமையை இழக்க வேண்டியிருந்தது. காந்திஜியின் பிரசங்கத்தைக் காட்டிலும் ராம பஜனையில் அதிக ஈடுபாடுள்ள ஏராளமான பெண்களும் பிரார்த்தனை செய்ய முடியாமற் போனது எல்லோருக்கும் வருத்தமாக இருந்தது. எனினும், காந்திஜியின் கட்டளைக்கு இணங்க எல்லோரும் சகிப்புத் தன்மையைக் காட்டி அமைதியாக இருந்தனர்.

பாகிஸ்தான் ஒப்புக்கொள்ளப்பட்டால், அது பிறகு இயற்கையாகவே செத்துவிடுமா என்று ஒரு நண்பர் கேட்ட கேள்விக்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது:

"பாகிஸ்தான் என்ன என்பதை விளக்கி நீங்கள் எனக்குக் கூற முடியுமா? தெரிந்துகொள்ள முடியாத ஒரு யோசனையைக் குறித்து என்ன பதில் கூறுவது? பாகிஸ்தான் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ள நான் முயற்சித்தேன். ஆனால், எனது முயற்சி வெற்றி பெறவில்லை. வங்காளமும் பஞ்சாபும் பாகிஸ்தானத்தின் எல்லைகள் எனில், அது ஒரு போதும் ஏற்பட முடியாது. இந்தியாவைப் பிரிக்கும் விஷயமாக என் அபிப்பிராயத்தில் எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை, இந்தியா, ஐக்கிய இந்தியாவாக இருக்க வேண்டும் என்பதே எப்போதும் போல் எனது உறுதியான அபிப்பிராயமாக இருந்துவருகிறது. பிரிட்டிஷார் தங்கள் அதிகாரத்தை விட்டுவிட்டுப் போனபின்தான், பிரிவினை அல்லது மாகாணங்களின் பங்கீடு முதலியவற்றைப் பற்றி மக்களே தங்களுக்குள் இறுதியாக முடிவு செய்துகொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் பிரிட்டிஷ் ஆட்சி பீடத்தையே எதிர்பார்ப்பது நமது வாழ்க்கையில் மோசமான சீர்குலைவை உண்டாக்கும் ஒரு விஷயமாகும்."

"மதத்திற்குச் சாவு உண்டா?" என்று அதே நண்பர் காந்திஜியைக் கேட்டார்.

இந்தக் கேள்விக்கு, காந்திஜியிடமிருந்து மின்னல் போல் பளீரென்று உடனே பதில் வந்தது:

"மதம் செத்தால், பின்னர் இந்தியாவும் செத்துவிடும். இன்று ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மதத்தின் சாரத்தை விட்டுவிட்டு அதன் மேல்பட்டையையே பற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. இரண்டு நதிகளின் தண்ணீர் சந்திக்கும்போது நுரை ஏற்படுவது போல், இதெல்லாம் நுரையே. மேலே எல்லாம் கலங்கலாகத் தோன்றுகிறது. ஆனால், அடியில் தெளிவாக இருக்கிறது. மேலே தெரியும் நுரையும் அழுக்கும் ஓடிக் கடலில் கலக்கின்றன; பின்னர் நதிகளின் தெளிவான, சுத்தமான தண்ணீர் ஒன்றாகச் சேருகிறது."

அதே நண்பரிடம் மேலும் காந்திஜி கூறியதாவது:

"ஒரு காலத்தில் பிரிட்டன் யாரும் ஆட்சேபிக்க முடியாத கடல் ராணியாக விளங்கியது. இன்று பிரிட்டன் இந்தியா விஷயத்தில் உண்மையாக நடந்து கொண்டால், அது உலகத்தின் நீதிக்கும் ஒழுக்கத்திற்குமே ராணியாக விளங்கமுடியும். பின்னர் அது, உலகத்தின் விதியையும் நிர்ணயிக்க முடியும். அந்தச் சக்தி பிரிட்டனுக்கு உண்டு என்றே நம்புகிறேன். நான் பிரிட்டனை நன்கு அறிவேன். எனினும், அந்த உயர்ந்த நிலையை பிரிட்டன் இனிமேல்தான் அடைய வேண்டும்."

புதுடில்லி, 10—5—'47

—'ஹரிஜன்' – 18—5—1947

# 27

# வைஸ்ராயின் நேர்மை

இன்று நான் வைஸ்ராயை (லார்டு மௌண்ட் பாட்டன்) பேட்டி கண்டு அவருடன் ஒன்றரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். தப்பெண்ணத்தை உண்டாக்கும் பத்திரிகைச் செய்திகளையும் தலைப்புகளையும் பற்றி அவர் புகார் கூறினர். இந்தியர்களிடம் அமைதியாக ஆட்சி அதிகாரத்தை ஒப்புவிக்கவே தாம் இங்கே வந்திருப்பதாகக் கூறினர். *1948* ஜூன் மாதம் *30*-ஆம் தேதிக்குள், இங்கே இருக்கும் பிரிட்டிஷ் ஆட்சியின் அறிகுறிகள் யாவும் அடியோடு மறைந்துவிடும் என்றும் கூறினர். இந்தியா ஐக்கிய இந்தியாவாக விளங்க வேண்டும் என்பதும், இந்தியர்கள், எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயினும் அந்நியோன்னியமாக வாழவேண்டும் என்பதுமே தமது விருப்பம் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியர்கள் பழைய விஷயங்களையெல்லாம் மறந்து, பிரிட்டிஷாரின் யோக்கியப் பொறுப்பில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதும் அவரது விருப்பமாகும். சாத்தியமாயின், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே சமரச ஒப்பந்தம் ஏற்படும்படி செய்ய வேண்டும் என்பதே பிரிட்டிஷாரின் விருப்பம் என்றும் வைஸ்ராய் அறிவித்தார். சமூகத் துவேஷம் தொடர்ந்து இருந்து வருவது, இந்தியாவின் கௌரவத்திற்கோ அல்லது பிரிட்டனின் கௌரவத்திற்கோ ஏற்றதல்ல என்றும் அவர் கூறினர்.

வைஸ்ராய் ஒரு பிரபல கடற்படை தளபதி. அவருக்கு அகிம்சையில் நம்பிக்கை இல்லை. எனினும், தமக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கை உண்டு என்றும், எப்போதும் தமது மனச்சாட்சிக்கு முரணின்றியே தாம் நடக்க முயற்சிப்பதாயும் அவர் அடிக்கடி உறுதி கூறினர். எனவே, அவரது முயற்சிக்கு இடையூறு விளைக்க வேண்டாமென நான் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். பிரிட்டிஷ் அதிகாரத்தை ரத்து செய்யும் இடைக் காலத்தில், அவரது சிறந்த முயற்சியையும் மீறி சமூகப் பகை தொடர்ந்து வருமாயின், அதை அடக்க, அவர் மனமின்றியும் வருத்தத்துடனும்,ராணுவத்தை உபயோகிக்கத் தயங்கமாட்டார். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியது இடைக்கால இந்திய அரசாங்கத்தின் பொறுப்பாயினும், இந்திய பூமியில் பிரிட்டிஷ் சிப்பாய்கள் இருக்கும் வரையில் அமைதியை நிலைநிறுத்தும் இறுதிப் பொறுப்பு இந்திய அரசாங்கத்தைப் போல் தமக்கும் உண்டென்று அவர் கருதுகிறார். வைஸ்ராய் என்னுடன் மிகவும் மரியாதையுடனும் மனப்பூர்வமாகவும் பேசினர். எல்லாச் சமூகங்களும் கட்சிகளும் தம்முடைய நேர்மையை உணர்ந்து, பொதுவான நோக்கத்தை நிறைவேற்றும் விஷய

மாகத் தம்முடன் ஒத்துழைக்குமாயின், தமது கஷ்டமான கடமை எளிதாகிவிடும் என்பது அவரது கருத்தாகும்.

இரு சமூகங்களிடையேயும் சமாதானம் ஏற்படும்படி செய்யும் நோக்கத்துடன் விடுத்த அறிக்கையில் காயிதே ஆஜம் மனப்பூர்வமாகக் கையெழுத்திட்டிருப்பாராயின், பஞ்சாபிலும் எல்லைப்புற மாகாணத்திலும் நடைபெற்று வரும் கொடுமைகள் நின்றுவிடும்.

—'ஹரிஜன்' - 18—5—1947

# 28

# ஜின்னாவுடன் பேசியது தவறா?

காயிதே ஆஜம் ஜின்னாவைத் தாம் கண்டு பேசியதைக் குறித்து, பங்கி காலனியில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியதாவது:

இந்தியா பிரிவினை சம்பந்தமாக எனக்கும் ஜனாப் ஜின்னாவிற்கும் ஒரு காலத்திலும் சமரசம் ஏற்பட முடியாதெனினும், நாங்கள் இருவரும் சிநேக பாவத்துடனேயே பேசிக்கொண்டிருந்தோம். இந்தியாவைப் பிரிப்பது தவறு என்பதே எனது உறுதியான அபிப்பிராயமாகும். எனவே, பிரிவினை சம்பந்தமான எத்திட்டத்திலும் நான் கையெழுத்திடுவதென்பது முடியாத காரியம். இந்தியாவைப் பிரிப்பது ஹிந்துக்களுக்கு மாத்திரம் அல்ல, முஸ்லிம்களுக்குக்கூடத் தீமையையே விளைவிக்கும்.

நான் ஜின்னா சாகிபைக் கண்டு பேசுவதற்காகச் சென்றதைப் பலரும் எதிர்க்கிறார்கள். எனினும், அதனால் எவ்விதத் தீங்கும் ஏற்பட்டுவிடாது. நாம் எல்லோரும் இந்தியர்களே. ஜின்னா சாகிப் உள்பட எல்லோரும் இந்த நாட்டிலேயே வசித்துத் தீர வேண்டியவர்கள் அல்லவா?

ஒரு பிரபல ஹிந்து மகாசபை அங்கத்தினரின் மனைவியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. குரானிலிருந்து பிரார்த்தனை செய்வதை, வழக்கமான காரணங்களைக் கூறி அவர் ஆட்சேபித்திருக்கிறார். ஒரு பெண்மணியிடமிருந்து அந்த ஆட்சேபணை வந்திருப்பதைக் குறித்து என் மனம் வருந்துகிறது. ஆடவர்களைக் காட்டிலும் பெண்களிடமிருந்து அதிகமான அன்பையும் சகிப்புத் தன்மையையும் நான் எதிர்பார்க்கிறேன். பெண்களின் உள்ளத்தில் துவேஷம் ஊடுருவியிருக்குமாயின், அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு என்ன நற்போதனை செய்ய முடியும்?

வங்காளத்திலும் பஞ்சாபிலும் வெறி பிடித்த சில முஸ்லிம்கள் தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்காக, குரான் ஷரீப் கெட்டது என்று கூறும் வாதத்தை நான் நிராகரிக்கிறேன். பீகாரில் ஹிந்துக்கள் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டார்கள். அதனால், கீதையின் பெருமை குறைந்துவிடவில்லை. குரானிலிருந்து பிரார்த்திப்பதை துவேஷம் காரணமாக ஆட்சேபிப்பது உண்மையான மதத்திற்கு விரோதமாகும். அத்தகைய ஆட்சேபணை, ஹிந்து மதத்தைக் காப்பாற்றுவதற்கான வழி அல்ல, அழிப்பதற்கான வழியே ஆகும்.

ஒரு மசூதியில் நான் கீதையை வாசிக்க முடியாது என்றும், எந்த முஸ்லிமும் தங்களுடைய வேத நூலில் உள்ளதைத் தவிர வேறு எதையும் வாசிக்கமாட்டார் என்றும் கூறுகிறார்கள். அது தவறாகும். நோவாகாலியில் நான் முஸ்லிம்களின் வீடுகளிலும், ஒரு மசூதியின் மதிலுக்கு உள்ளேயும் பிரார்த்தனை நடத்தினேன். அதை முஸ்லிம்கள் ஆட்சேபிக்கவில்லை. கடவுளை ராமா என்றும், ரகீம் என்றும் குறிப்பிடுவது முற்றிலும் நியாயமானது என்றே கூறினார்கள்.

— 'ஹரிஜன்' - 18—5—1947

# 29

# இப்போதே வெளியேறுங்கள்

[மே மாதம் 5-ஆம் தேதி ராய்ட்டரின் விசேஷ நிருபரான ஸ்ரீ டுன் காம்பெல் காந்திஜியை புது டில்லியில் பேட்டி கண்டு பேசினார். அப்போது அவர், இந்தியப் பிரச்னைகள் பற்றியும் உலகப் பிரச்னைகள் பற்றியும் பல கேள்விகள் கேட்டார். இந்தியப் பிரச்னைகள் சம்பந்தமாக அவர் கேட்ட கேள்விகளும், அவற்றிற்குக் காந்திஜி அளித்த பதில்களும் மாத்திரமே கீழே கொடுக்கப்பட்டுள்ளன:]

**கேள்வி:** *வகுப்புவாரியாக இந்தியாவைப் பிரிப்பது தவிர்க்க முடியாததா? அவ்விதம் பிரிப்பதால் சமூகப் பிரச்னை தீர்ந்துவிடுமா?*

**பதில்:** அந்த இரண்டு கேள்விகளுக்கும் 'இல்லை' என்று எப்போதுமே பதில் கூறியிருக்கிறேன். இப்போதும்கூட 'இல்லை' என்றே பதில் கூறுகிறேன்.

**கே:** *1948 ஜூன் மாதத்திற்குள் முக்கியமான ஹிந்து-முஸ்லிம் வேற்றுமைகள் தீர்க்கப்படாவிடில், பிரிட்டன் இந்தியாவில் நீடித்துத் தங்கியிருப்பதே நீதியும் நியாயமும் ஆகும் என்ற அபிப்பிராயத்தைத் தாங்கள் ஆதரிக்கிறீர்களா?*

ப: இந்தக் கேள்வி இதற்கு முன் என்னிடம் கேட்கப்பட்டதே இல்லை. இன்றே பிரிட்டன் இந்தியாவிலிருந்து வெளியேறி விடுவதுதான் நன்மையாகும். இன்னும் பதின்மூன்று மாதங்கள் பிரிட்டிஷார் இங்கே தங்குவது விஷமத்திற்கே இடமாகும். பிரிட்டிஷ் பிரகடனத்தின் சிறப்பை நான் மறுக்கவில்லை. வைஸ்ராயின் அந்தரங்க சுத்தியையும் நான் ஆட்சேபிக்கவில்லை. எனினும், பிரிட்டிஷ் மந்திரி சபையோ, எவ்வளவு சிறந்தவராயினும் வைஸ்ராயோ உண்மை நிலையை மாற்றிவிட முடியாது. உண்மை என்னவெனில், எதற்கும் பிரிட்டிஷ் அதிகாரத்தின் உதவியையே நாடும்படி இந்தியா பயிற்சி அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே, திடீரென்று அந்த நிலையிலிருந்து இந்தியாவின் மனத்தைத் திருப்புவது சாத்தியமன்று. இந்தியாவிலிருந்து வெளியேறுவதற்குத் தயாராக, பிரிட்டனுக்குப் பல மாதங்கள் தேவையாக இருக்கும் என்ற வாதத்தை நான் ஒரு போதும் ஆதரித்ததில்லை. அந்தக் கெடு வரையில், எல்லாக் கட்சிகளும் பிரிட்டிஷ் மந்திரி சபையையும் வைஸ்ராயையுமே எக்காரியத்திற்கும் எதிர்பார்த்து வரும். நாங்கள் ஆயுத பலத்தால் பிரிட்டிஷாரைத் தோற்கடித்துவிடவில்லை. தார்மிக சக்தியினாலேயே இந்தியா வெற்றி பெற்றிருக்கிறது.

பிரிட்டன் அளித்துள்ள வாக்குறுதி வார்த்தைக்கு வார்த்தை நிறைவேற்றப்படுமாயின், அது பிரிட்டனின் மகோன்னதமான ஒரு தீர்மானம் என்று சரித்திரத்தில் இடம்பெறும். எனவே, பிரிட்டிஷ் அதிகாரமும் பிரிட்டிஷ் ராணுவமும் இங்கே பதின்மூன்று மாதங்கள் வரையில் இருப்பது இந்தியாவிற்கு உதவியாக இராது, இடையூறாகவே இருக்கும். ஏனெனில், ஒவ்வொருவரும் மகத்தான பிரிட்டிஷ் ராணுவ யந்திரத்தின் உதவியையே நாடிக்கொண்டிருப்பார்கள். அத்தகைய நிலைதான் வங்காளம், பீகார், பஞ்சாப், எல்லைப்புற மாகாணம் முதலிய இடங்களில் ஏற்பட்டது. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் மாறி மாறி பிரிட்டிஷ் துருப்புகளின் உதவியையே நாடினார்கள். அது மானக்கேடான ஒரு காட்சியாகும்.

இந்தியாவில் குழப்பமும் அராஜகமும் ஏற்படுவதாக இருப்பினும் பிரிட்டன், இந்தியாவை விட்டுவிட்டு வெளியேறி விடவேண்டும். இதை நான் முன்பு பல தடவைகளிலும் கூறியிருக்கிறேன். எனினும், அடிக்கடி அவ்விதம் கூறுவதால் அதன் வேகம் குன்றிவிடவில்லை. நான் அவ்விதம் திரும்பக் கூறும் ஒவ்வொரு தடவையிலும் அதற்குப் புதிய பலமே ஏற்பட்டு, அதன் பலம் வளருகிறது. இங்கே நீங்கள் காணும் சமூகப் பகைமைக்குக் காரணம், பிரிட்டிஷார் இங்கே இருந்து வருவதுதான் என்பதே எனது அபிப்

பிராயமாகும். பிரிட்டிஷார் இங்கே இராவிட்டாலும்கூட, நாங்கள் அந்தத் தீயினூடே செல்லத்தான் வேண்டியிருக்கும். இருந்தாலும், அந்தத் தீ எங்களைத் தூய்மைப்படுத்தி விடும்.

—'ஹரிஜன்' – 18—5—1947

# 30

# இரண்டு கேள்விகள்

காந்திஜியைக் கேட்ட இரண்டு முக்கிய கேள்விகளுக்கு அவர் அளித்த பதில் பின் வருமாறு :

**கேள்வி :** ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு நாளுக்குநாள் அதிகமாகி வருகிறது. இந்நிலையில் அவ்விரு சாராரும் நண்பர்களாவது சாத்தியமா?

**பதில் :** பகை நிச்சயமாக என்றும் நிலைத்திருக்க முடியாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்கள். தாற்காலிகமான பைத்தியக்காரத்தனத்திற்கு அவர்கள் ஆளாகி விட்டனர் என்றாலும், அவர்கள் என்றென்றும் சகோதரர்களாக இருந்துதான் தீர வேண்டும். இரண்டு தனி நபர்களைப் போல் இரண்டு சமூகங்களுக்குள்ளும் நிரந்தரமான பகை இருந்துவருவது சாத்தியமே. எனினும், அவ்வித நிலை ஏற்படாதென நம்புகிறேன். அப்படி ஏற்படுமாயின், அவர்கள் இந்தியாவில் இரு மதங்களையும் குழி தோண்டிப் புதைத்தவராவார்கள். அற்ப பலனுக்காகத் தங்களுடைய சுதந்திரத்தையே விற்றவராவார்கள்.

**கே :** வங்காளப் பிரிவினைக்கு ஆதரவாக ஹிந்துக்களின் அபிப்பிராயம் உருவாகி வருவதால், அதை இனி தவிர்க்க முடியுமா?

**ப :** அந்த அபிப்பிராயத்தின் பலத்தை நான் உணருகிறேன். வங்காளம் பிரிக்கப்படுமாயின், அதற்கு முஸ்லிம் பெரும்பான்மையோரே பொறுப்பாளியாக இருப்பார்கள் என்று நான் துணிந்து கூற முடியும்; அங்கே அதிகாரத்தில் இருக்கும் முஸ்லிம் அரசாங்கமே அதற்குப் பொறுப்பாளியாக இருக்கும் என்றும் கூறுவேன். நான் வங்காளத்தின் முதல் மந்திரியாக இருப்பேனாயின், பழைய நிகழ்ச்சிகளை மறந்துவிடும்படி நான் ஹிந்து சகோதரர்களை வேண்டிக்கொள்ளுவேன். மதத்தில் உள்ள வேற்றுமைகள் இரு சாராரையும் பிரித்துவிட முடியாது. நாமும் அவர்களும் ஒரே பாஷையே

பேசுகிறோம்; ஒரே பண்பாட்டின் வழியே வந்திருக்கிறோம்; வங்காளத்திற்குச் சொந்தமானதெல்லாம் இருவருக்கும் பொதுவானவை; அதைக் குறித்து இருவரும் பெருமை அடைய வேண்டும்; வங்காளம் வங்காளமே; அது பஞ்சாபோ அல்லது பம்பாயோ அல்லது வேறு மாகாணமோ அல்ல. இத்தகைய மனப்போக்கு வங்காள முதல் அமைச்சருக்கு இருக்குமாயின், நான் அவருடன் ஒவ்வோரிடமாகச் சென்று, கூட்டங்களுக்கு வரும் ஹிந்துக்களுக்குப் புத்திமதி கூறத் தயாராக இருக்கிறேன். அவ்விதம் செய்தால், வங்காளத்தின் ஐக்கியத்திற்கு ஓர் ஹிந்து எதிரிகூட இருக்க மாட்டார் என்று தைரியமாகக் கூறுகிறேன். அந்த ஐக்கியத்திற்காகத்தான் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அக்காலத்தில் அவ்வளவு ஒற்றுமையுடனும், தைரியத்துடனும் போராடினர்கள்; லார்டு கர்ஸானைப் போன்ற சக்தியும் செல்வாக்கும் உள்ள ஒரு வைஸ்ராயின் "முடிவு செய்யப்பட்ட உண்மை" என்ற வங்காளப் பிரிவினைக் கூற்றைத் தகர்த்து விட்டார்கள்.* நான் ஜனப் சுஹ்ரவார்தியாக இருந்தால், வங்காளத்தைப் பிளக்க எண்ணுவதற்கு முன் என் உடலைப் பிளந்துவிடுங்கள் என்று ஹிந்துக்களிடம் கூறுவேன். வங்காளத்தினிடமும், வங்காளிகளிடமும், அவர்கள் ஹிந்துக்களாயினும் சரி, முஸ்லிம்களாயினும் சரி, அவருக்கு அவ்வளவு உறுதியான அன்பு இருந்தால், அந்த அன்பு ஹிந்துக்களின் கல் நெஞ்சையும் கரைத்து விடும். முஸ்லிம்களுடைய மனத்திலிருந்து எல்லா பீதியையும் சந்தேகத்தையும் அகற்ற வேண்டுமென நான் பீகார் ஹிந்துக்களை வற்புறுத்தத் தயங்கவில்லை. சாதி, சமய வேற்றுமை பாராட்டாத அன்புநெறியின் மகோன்னதமான விதியில் எனக்கு நம்பிக்கை உண்டு.

—'ஹரிஜன்' – 25—5—1947

# 31

# ஹிந்து பகுதி, முஸ்லிம் பகுதி!

கேள்வி: கல்கத்தா, ஹிந்து பகுதி என்றும், முஸ்லிம் பகுதி என்றும் பிரிந்திருக்கிறது. எனவே, இந்த விபரீதம் மறைந்து, மீண்டும் சகஜ நிலைமை ஏற்பட கல்கத்தாவாசிகள் என்ன செய்ய வேண்டும்?

பதில்: அதற்கு ஒரே வழி என்னவெனில், ஒரு சாராராவது முற்றிலும் உண்மையாகவும், அகிம்சை நெறியுடனும் இருக்க

* வங்காளப் பிரிவினை பற்றிய பழைய நிகழ்ச்சிகளை இந்தத் தொகுப்பின் 10, 11-வது பக்கங்களில் வெளியாகியுள்ள குறிப்பில் காணலாம்.

வேண்டும். அப்படியாயின், அவர்கள் கடவுளைத் தவிர வேறு எவருக்கும் பயப்படமாட்டார்கள். அத்தகையோர் தான் தைரியசாலிகள் ஆவர். அவர்களை எல்லாக் கட்சியினரும் நண்பர்களாகக் கருதுவார்கள். அவர்களின் முன்னிலையில் குண்டர்கள்கூட தங்களுடைய துஷ்டத்தனத்தை விட்டுவிடுவார்கள். இதைக் காட்டிலும் சிறந்த வழி எனக்குத் தெரியவில்லை. பெரும்பான்மையோராக இருக்கும் முஸ்லிம்கள் இவ்விஷயத்தில் வழிகாட்ட முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கே:** குரானையும் ஆராய்ச்சி செய்யும்படி நீங்கள் ஹிந்துக்களை ஏன் கேட்கிறீர்கள்? அவர்கள், அவர்களுடைய சொந்த மதத்தை ஆராய்ச்சி செய்தால் போதாதா?

**ப:** ஒவ்வொருவரும் தமது சொந்த மதத்தைத் தவிர பிற மதங்களின் நூல்களையும் ஆராய்ச்சி செய்ய வேண்டியது கடமையாகும். அவ்விதம் செய்வது, தங்கள் மதத்தைத் தூய்மையாகவும், மாசுகள் இன்றியும் வைத்துக்கொள்ள உதவியாக இருக்கும். தவிர, நம்மிடையே கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பார்சிகள் முதலிய மற்ற மதத்தினரும் இருக்கிறார்கள். ஹிந்துக்கள் அவர்களைத் தங்களுடைய சகோதரர்களாகக் கருதினால், அவர்களுடைய மத நூல்களையும் ஆராய்ச்சி செய்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

—'ஹரிஜன்' – 25—5—1947

# 32

# மிருக பலத்துக்கு விட்டுக் கொடுப்பதா?

நீங்கள் பிரார்த்தனையின்போது போற்றத்தக்க விதத்தில் அடக்கத்துடனும் கவனத்துடனும் இருந்ததால், என் உள்ளத்தை உங்களுக்குத் திறந்து காட்ட முடிந்திருக்கிறது. இந்திய பூமியில் பிறந்தவர்களென்று தங்களைக் கூறிக்கொள்ளுவோர் நன்ருகச் சிந்தனை செய்து, தைரியத்துடன் நடந்துகொள்ள வேண்டும். இப்போது அவ்விதம் நடந்துகொள்ளுவது கஷ்டமாகும். ஏனெனில், தீ வைத்தல், கொலைகள் முதலிய மடத்தனமான செயல்களைப் பற்றிய பயங்கரமான விவரங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டு வருவதே அதற்குக் காரணமாகும். வாளுக்குப் பதில் வாளை உபயோகிப்பதிலும், தீ வைத்தலுக்குப் பதில் தீ வைத்தலிலும் ஈடுபடும்படி ஹிந்துக்களை நான் கேட்டுக் கொண்டாலன்றி காட்டுக்குச் சென்று வாழும்படி சிலர் எனக்குக் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். அவர்களுக்கு நான் இணங்கி நடப்பது, என் வாழ்க்கை முழுவதையுமே நான் மறுப்

பதாகும்; மனித வர்க்க சட்டத்தின் ஸ்தானத்தில், காட்டு மிராண்டி சட்டத்தைக் கைக்கொள்ளும்படி உபதேசிக்கும் குற்றத்திற்கு நான் ஆளாகும்படி நேரும். அதற்கு மாருக, சகல கட்சிகளின் தலைவர்களையும் நான் வேண்டிக்கொள்ளுவது என்னவெனில், மிருக பலத்துக்கு விட்டுக் கொடுக்க மறுத்துவிடும் தைரியத்தையாவது காட்டுங்கள் என்பதேயாகும்.

சாசுவதமான அன்பு நெறியில் எனக்கு நம்பிக்கை உண்டு. எனினும், அதைப் பற்றி இப்போது நான் சிந்திக்கவில்லை. அகில இந்தியாவும் அதை ஒப்புக்கொண்டு விட்டால், பின்னர் அது யாரும் ஆட்சேபிக்க முடியாதவாறு உலகம் முழுவதற்குமே தலைமை வகிக்கும். இங்கே நான் கூறுவது என்னவெனில், பகுத்தறிவைத் தவிர வேறு எதற்கும் அடிபணிந்துவிடக் கூடாது என்பதேயாகும்.

விடுதலை பெறுவதற்காக நாம் கடுமையாக உழைத்திருக்கிரோம். மகாவல்லமை பொருந்திய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் துப்பாக்கிகளையும் தைரியமாக எதிர்த்து நின்றிருக்கிரோம். அப்படியிருக்க, இப்போது நாம் ஏன் தடுமாற வேண்டும்?

நமது சொந்த நாட்டின் நலனையே நாம் முக்கியமாகக் கருதினல், முதலில் தேசத்தில் அமைதியை ஸ்தாபிக்க நாம் இசைய வேண்டும். மே மாதம் 16-ஆம் தேதி அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அரசியல் நிர்ணய சபை நடந்து வருகிறது. அதிகாரத்தை மக்களிடத்தில் ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிட வேண்டியது, பிரிட்டன் செய்ய வேண்டிய கடமையாகும். அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்பட்ட அரசியலின் கீழ் அமைக்கப்படும் சுதந்திர இந்திய அரசாங்கம் இந்தியாவை ஒன்ருக வைத்துக்கொள்ளட்டும்; அல்லது அதை இரு பிரிவுகளாகவோ, பல பிரிவுகளாகவோ பிரித்துக்கொள்ளட்டும்.

மக்கள் முணுமுணுத்து வருவது என்ன என்பதைப் பிரிட்டிஷ் அதிகாரிகள் அறிய வேண்டும். கலகங்களுக்குப் பிரிட்டிஷாரின் சூழ்ச்சியே காரணம் என்று பலரும் நம்புகிருர்கள். எனினும், சந்தேகத்திற்கு இடமின்றி அந்தக் கடுமையான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டாலன்றி, நான் அதை நம்ப மறுத்து விடவேண்டும்.

—'ஹரிஜன்' - 8—6—1947

# 33

# காபிர்கள் யார்?

காபிர்களை, அதாவது நம்பிக்கையில்லாதவர்களைக் கொன்று விடவேண்டும் என்று குரான் உபதேசிக்கிறது என்பதை நிரூபிப்பதற்காக, ஒரு நண்பர் சில பிரசுரங்களை அனுப்பியுள்ளார். நான்

என் வாழ்க்கை முழுவதும் முஸ்லிம்களிடையே இருந்து வந்துள்ளேன். என்னைக் காபிர் என்று கூறி, என்னைக் கொன்றுவிட வேண்டும் என்றும் யாரும் கூறியதில்லை. நோவாகாலியில் மௌல்விகளுக்கு இடையே நான் இருந்தேன். நம்பாதவர்களைக் கடவுள் கவனித்துக்கொள்ளுவார் என்பதுதான், குரானில் உள்ள குறிப்பிட்ட அந்த வாக்கியத்தின் அர்த்தமாகும் என்று அறிஞர்களான முஸ்லிம்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். ஆனால், நம்பிக்கையில்லாத முஸ்லிம்களையும் கடவுள் கவனித்துக் கொள்ளுவார் அல்லவா? நம்முடைய செயல்களைக் கொண்டு தான் கடவுள் நம்மைத் தீர்மானித்துக் கொள்ளுவாரேயன்றி, நமது வார்த்தைகளைக் கொண்டு அல்ல. பாகவதத்திலும், மனுஸ்மிருதியிலும், வேதங்களிலும் பயங்கரமான தண்டனைகளைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எனினும், ஹிந்து மதத்தின் மூலாதாரமான உபதேசம் இதுதான்: "இரக்கம் அல்லது அன்புதான், எல்லா மதங்களின் சாரமுமாகும்." துளசிதாஸ் உபதேசித்த கீழ்க்கண்ட வாக்கியங்களை எல்லோரும் மனத்தில் இறுத்திக்கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன்:

"நல்லவர்களாயினும், கெட்டவர்களாயினும், எல்லா மனிதர்களும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவர்களே. பாலையும் தண்ணீரையும் கலந்து அதனிடம் வைத்தால், அன்னப் பட்சி பாலை மாத்திரம் குடித்துவிட்டு, தண்ணீரை ஒதுக்கிவிடும் சக்தி பெற்றிருக்கிறது. அது போலவே, தெய்வ நம்பிக்கையுள்ள மனிதன் கெட்டதை உதறித் தள்ளிவிட்டு நல்லதை மாத்திரம் தேர்ந்தெடுத்துக்கொள்ளுகிறான்."

—'ஹரிஜன்' – 8—6—1947

பகுதி பதினைந்து

# பாகிஸ்தான் உண்மையாகியது!

[1947 ஜூன் மாதம் 3-ஆம் தேதி, வைஸ்ராய் லார்டு மௌண்ட்பாட்டன் அகில இந்தியா வானொலி மூலம் பேசினார். அவரைத் தொடர்ந்து பண்டித ஜவாஹர்லால் நேரு, காயிதே ஆஜம் ஜின்னா, சர்தார் பலதேவ் சிங் முதலிய மூவரும் வானொலி மூலம் இந்திய மக்களிடம் பேசினர். இந்தியாவைப் பிரிக்கும் விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கம் விடுத்த பிரகடனம் பலருக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது; மற்றும் பலருக்குத் துக்கத்தைக் கொடுத்தது. அதைக் குறித்துப் பெரும்பாலான ஹிந்துக்கள் துக்கம் அடைந்தனர். வானொலியில் நேருஜியின் பேச்சு மனத்தை உருக்குவதாக இருந்தது. இந்தியா பிளக்கப்படுவதை எல்லோரும் வெறுத்தனர். எனினும், இடைவிடாது கொட்டிக் கொண்டிருக்கும் இந்தியாவின் உதிரத்தைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியமாகியது. எனவே, அங்கிலையில் ரண சிகிச்சை செய்து தீர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

இந்தியாவைப் பிரிக்க வேண்டுமென்ற பிரகடனத்தினால் மகிழ்ச்சியடைந்த முஸ்லிம்கள் லாரிகளில் ஏறிக்கொண்டு, ஜின்னா சாகிபின் ஜாகைக்குச் சென்று 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று உரக்கக் கத்திக் கொண்டிருந்தார்கள். அந்தப் பிரகடனத்தினால் வருத்தமடைந்த ஏராளமான முஸ்லிம்கள் காந்திஜியின் ஜாகைக்குச் சென்று தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தார்கள். பஞ்சாபிலும், வங்காளத்திலும் உள்ள ஏராளமான முஸ்லிம்கள், இந்தியா பிளக்கப்படுவதைக் குறித்து அதிருப்தி அடைந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரகடனத்தைக் குறித்து காந்திஜி பேசிய விவரங்களே கீழே கொடுக்கப்பட்டுள்ளன:]

## 1

## இனி பலாத்காரம் நின்றுவிடுமா?

பலாத்காரத்திற்கு ஓர் அங்குலம் விட்டுக் கொடுப்பது கூடத் தவறு என்று நான் அடிக்கடி கூறி வந்திருக்கிறேன். தாங்கள் ஆயுத பலத்திற்குப் பணிந்து விடவில்லை என்றும், ஆனால், சந்தர்ப்பங்களின் வற்புறுத்தலுக்கே தாங்கள் விட்டுக் கொடுக்க நேர்ந்துளது என்றும் காங்கிரஸ் காரியக் கமிட்டியினர் கூறுகின்றனர். விருப்பமில்லாத பங்காளிகளை, பெரும்பான்மையான காங்கிரஸ் வாதிகளும் விரும்பவில்லை. அகிம்சையே

அவர்களுடைய கொள்கையாகும். எனவே, அவர்கள் யாரையும் கட்டாயப்படுத்துவதென்ற பேச்சிற்கே இடமில்லை. எனவே, மூலாதாரமான பிரச்னைகளை யொட்டிய சாதக பாதகங்களை மிகக் கவனத்துடன் சீர்தூக்கிப் பார்த்த பிறகு, அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்காரம் செய்திருக்கும் பிரதேசங்கள் இந்தியா விலிருந்து பிரிந்து விடுவதற்கு அவர்கள் வருத்தத்துடன் இசைந்தனர்.

முஸ்லிம் லீகின் இந்தத் தவறான கொள்கையைக் குறித்து நான் வருந்துகிறேன். ஹிந்துக்களின் ஆதிக்கம் ஏற்பட்டு விடுமோ என்று அவர்கள் பயந்தனர். அவர்கள் தவருக நினைக்கும் தங்கள் 'சொந்த நாட்டை' ஆட்சிபுரிய விரும்பினர். உண்மை யில், இந்தியாவில் பிறந்து வளர்ந்த சகலருக்கும் இந்தியா தான் சொந்த நாடாகும். முஸ்லிம் நாடு தனித்து வாழ முடியுமா? பஞ்சாபைச் சேர்ந்த ஹிந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், பார்சிகள் எல்லோருக்கும் பஞ்சாப் சொந்தம் அல்லவா?

இப்போது என்ன நேர்ந்துளதோ அதைக் குறித்து நான் வைஸ்ராயைக் குற்றம் கூற முடியாது. அது, காங்கிரஸின், லீகின் நடவடிக்கையே யாகும். தாம் ஐக்கிய இந்தியாவையே விரும்புவதாகவும், எனினும் முஸ்லிம்களின் நிலையைக் காங்கிரஸ் வருத்தத்துடனாயினும் அங்கீகரிப்பதால், தாம் சக்தியற் றிருப்பதாயும் வைஸ்ராய் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

தைரியசாலிகளான சீக்கியர்களின் தலைவர்கள் என்னைக் காணவந்தார்கள். ஒரு சீக்கியர் $1\frac{1}{4}$ லட்சம் நபர்களுக்குச் சம மானவர் என நான் கூறியதன் பொருள் என்ன என்பதை அவர்களுக்கு விளக்கினேன். $1\frac{1}{4}$ லட்சம் நபர் எதிர்த் தாலும் தங்கள் கொள்கையில் உறுதியாக நிற்க சீக்கியர்களுக்கு உள்ள தைரியத்தையே நான் குறிப்பிட்டேன் என்று கூறினேன். அதுதான் மகோன்னதமான, தூய்மையான தைரியமாகும். அவர்களுக்கு அகிம்சையிலிருந்து பிறந்த அந்த நம்பிக்கையும் தைரியமும் இருக்குமாயின், கல்ஸா என்ற பெருமை வாய்ந்த பெயருக்கு அவர்கள் தகுதிவாய்ந்தவர்களாவர். கிரந்த் சாகிப் நூலிலிருந்தும் கல்ஸா சரித்திரத்திலிருந்தும் நான் கற்றுக் கொண்ட பாடம் அதுதான்.

பிரிட்டிஷ் மந்திரிசபைத் தூது கோஷ்டி மே 16-ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையை மக்கள் உறுதியுடன் ஆதரிக்கும்படி செய்ய என்னால் இயன்றதையெல்லாம் செய்தேன். ஆனால், எனது முயற்சி வெற்றிபெறவில்லை. இந்தியாவைப் பிரிப்பதென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகிவிட்டது. இந்நிலையில் என் னுடைய கடமையும், உங்களுடைய கடமையும் என்ன? நான் காங்கிரசின் ஊழியன்; ஏனெனில், நான் தேசத்தின் ஊழியன் அல்லவா? எனவே, ஒரு காலத்திலும் காங்கிரசினிடமோ,

தேசத்தினிடமோ நான் விசுவாசமற்றவனாகிவிடமுடியாது. யார் மீதும் எதுவும் அவரது விருப்பத்திற்கு விரோதமாகத் திணிக்கப் படவில்லை என்று நேருஜியும் வைஸ்ராயும் கூறியுள்ளனர்.

பிரிட்டிஷ் அறிக்கையில் அடங்கியுள்ள சமரசம், கட்சிகள் தாங்களாக வலுவில் முன்வந்து செய்துகொண்டதே. பரஸ்பர சம்மதத்தின்மீது அதை எச்சமயத்திலும் அவர்களால் மாற்றிக் கொள்ளமுடியும். இப்போது முஸ்லிம் லீகின் ஆசை நிறைவேறி விட்டதால், அதை ஒன்று வேண்டிக்கொள்ளுகிறேன். அதாவது, கட்சிகளுக்கு இடையே வைஸ்ராய் மத்தியஸ்தராக இருக்கும் கஷ்டமான கடமையிலிருந்து அவரை விடுவித்துவிட வேண்டும் என்பதே.

அது, கட்சிகளுக்குள் ஓர் இறுதியான ஒப்பந்தம் என்றே நம்புகிறேன். எனவே, இனி எல்லா பலாத்காரமும் நின்றுவிட வேண்டும். இதற்குமேல் உள்ள கட்டங்களில் நடந்துகொள்ளு வதற்கான சிறந்த வழி என்ன என்பதுபற்றி விவாதிக்க ஜின்னு சாகிப், காங்கிரஸ் தலைவர்களை அழைக்கவேண்டும். உதாரண மாக, அவர்கள் பரஸ்பர ஒப்பந்தத்தின்மீது பஞ்சாப், வங்கா ளத்தின் எல்லைகளை ஏன் நிர்ணயிக்கக் கூடாது?

—'ஹரிஜன்' – 15—6—1947

## 2

# 'உண்ணுவிரதம் இருப்பீர்களா?'

பிரிவினையை எதிர்த்து தேசம் முழுவதும் மக்களிடையே உணர்ச்சி பொங்கியது. அப்போது காந்திஜி நிகழ்த்திய பிரசங் கங்கள், பிரிவினைத் தீமை தவிர்க்கப்படலாம் என்ற நம்பிக் கையை உண்டாக்கின. 'இந்தியா பிரிவினையை ஒப்புக்கொள் ளுவதென்று காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானித்திருப்பதை யொட்டி, இறக்கும்வரை உண்ணுவிரதத்தை மேற்கொள்ளுவீர் களா?' என்று சிலர் காந்திஜியைக் கேட்டனர். ஏனெனில், பாகிஸ்தான் கோருவது ஒரு பாவம் என்றும், தாம் ஒருபோதும் அதில் பங்கு எடுத்துக்கொள்ள முடியாது என்றும் காந்திஜி கூறியிருந்தார். எனவே, சிலர் கேட்ட அக்கேள்விக்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது:

"பிறருடைய கட்டளைக்காக நான் உண்ணுவிரதம் இருப்பது முடியாத காரியமாகும். அத்தகைய உண்ணுவிரதங்களை அலட் சியமாக மேற்கொண்டுவிட முடியாது. கோபம் காரணமாகவும் உண்ணுவிரதத்தைக் கைக்கொள்ளக் கூடாது. கோபம், அரை குறையான பைத்தியக்காரத்தனமேயாகும். என்னுள் இருக்கும்

சிறிய குரல் எனக்கு அவ்விதம் கட்டளையிட்டால் மாத்திரமே, நான் உண்ணுவிரதம் இருக்க முடியும். நான் தேசத்தின் ஊழியன்; ஆதலால் காங்கிரசின் ஊழியனும் ஆவேன். எனவே, காங்கிரசின் கருத்து என் கருத்துக்கு மாருக இருக்கிறது என்பதற்காக நான் உண்ணுவிரதம் இருக்கலாமா? நான் பொறுமையுடன் இருக்கவேண்டும். பொறுமை யிழப்பதற்குப் போதிய சந்தப்பங்கள் உண்டு. பல கைத்தொழில் திட்டங்களில் காங்கிரஸ் நம்பிக்கை வைத்திருக்கிறது. அத்திட்டங்களிஞல் நசுக்கும் வறுமையிலிருந்து பாமர மக்கள் விடுதலை பெறுவார்களென எனக்குத் தோன்றவில்லை. மில்களில் உற்பத்திசெய்யப்பட்ட துணிகளில் எனக்கு நம்பிக்கை இராததுபோல, மில்களால் உற்பத்தி செய்யப்படும் நாகரிகத்திலும் எனக்கு நம்பிக்கை இல்லை.

"தேசத்தின் உண்மையான விடுதலைக்குத் தடையாக உள்ள ஆபத்தை அகற்றுவதற்கும் ராணுவத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. இவை போன்ற இன்னும் பல விஷயங்களை நான் கூற முடியும். இவற்றை யெல்லாம் குறித்துப் பொறுமையிழந்து நான் இறக்கும் வரையில் உண்ணுவிரதம் இருப்பேனுயின், அது நியாயமாக இருக்கும். என்னைச் சுற்றிச் சீறிவரும் நெருப்பு ஜ்வாலைகளுக்கு நடுவே நான் உறுதியாக நிற்கவேண்டும் என்று கருதுகிறேன். அப்போது தான், உண்மை இறுதியில் வெற்றிபெறும் என்பதில் எனக்கு உள்ள நம்பிக்கையை நான் நிரூபிக்க முடியும்."

—'ஹரிஜன்' – 15—6—1947

## 3

# ஜனுப் ஜின்னுவின் கடமை

காயிதே ஆஜம் விரும்பியது இப்போது அவருக்குக் கிடைத்துவிட்டதால், அவர் பாகிஸ்தானின் உருவம் என்ன என்பதை உலகத்திற்கு எடுத்துக்கூறி, அதைக் கவர்ச்சிகரமானதாகச் செய்யவேண்டியது கடமையாகும். முஸ்லிம் அல்லாதாரை யெல்லாம் அவர் அழைத்து, பாகிஸ்தானில் முஸ்லிம்களைப் போல் அவர்களும் சந்தோஷமாக இருப்பார்கள் என்று உறுதி கூறவேண்டியது அவரது கடமையல்லவா? எல்லைப்புற மாகாணத்தின் நிலைமை என்ன? அது காங்கிரஸ் மாகாணமாக இருக்கிறது. அது பாகிஸ்தானைச் சேரவேண்டுமாயின், பட்டாணியர்கள் இந்தியாவில் இருப்பதைப்போல் பாகிஸ்தானிலும் சௌக்கியமாக இருப்பார்கள் என்று அவர்களுக்குத் திருப்தி ஏற்படும்படி செய்யவேண்டும். இச்சமயத்தில் சர்வஜன வாக்கு எடுப்பதென்பது அபாயகரமான ஒரு முறையாகும். எனவே, அன்பிஞலும், அவர்களுடைய அறிவுக்கு நியாயம் என்று தோன்

றும் வகையிலும் அவர்களைக் கவர்வதே தகுந்த முறையென நான் யோசனை கூறுகிறேன்.

எதிர்காலத்தில் செய்யவேண்டியது என்னவெனில், மக்களுக்கு நன்மை செய்வதில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றுக்கொன்று போட்டி போடவேண்டும். பாகிஸ்தான் அதிகச் சிறந்த முறையில் நடந்துகொள்ளுமாயின், இந்தியா முழுவதும் பாகிஸ்தானுகிவிடும். அப்போது பெரும்பான்மையோர் என்றும், சிறுபான்மையோர் என்றும் இருக்கமாட்டார்கள்; எல்லோரும் சமமாக இருப்பார்கள். நான் முஸ்லிம் லீகின் அக்கிராசனராக இருந்தால், நான் பாகிஸ்தானை முன்னணிக்குக் கொண்டு வந்து, அதை இணையற்ற வனப்பு வாய்ந்ததாகவும், கவர்ச்சியானதாகவும் செய்துவிடுவேன். பாகிஸ்தான் அந்நிலையை அடையுமாயின், நான் எல்லோருக்கும் முன்னதாக என் தவறை உணர்ந்து, எல்லோருக்கும் அதைச் சிறந்த உதாரணமாகக் கூறுவேன். ஆனல், ஜின்னுசாகிப் அவ்விதம் செய்வாரா ?

—'ஹரிஜன்' – 15—6—1947

# 4

# ஐக்கிய வங்காள முயற்சி

சிறிது காலமாக ஐக்கிய வங்காளத்தைப்பற்றிய பேச்சு பத்திரிகைகளில் அடிபட்டு வருகின்றது. வங்காளம் ஒரு பொதுவான பண்பாட்டையும், ஒரு பொது மொழியையும் உடையதென்று அத்திட்டத்தின் கர்த்தாக்கள் கூறுகின்றனர். தங்களுடைய மாகாணம் இரண்டாகப் பிளக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் யாவரும் ஒன்ருக இருக்கிருர்கள்; ஒன்ருகவே வாழ்ந்து, ஒன்ருகவே இறக்கவும் விரும்புகிருர்கள். வங்காளத்தைப் பிரித்து லார்டு கர்ஸான் வகுத்த திட்டத்தை, மக்கள் வீரத்துடன் எதிர்த்துத் தகர்த்துவிட்டார்கள். அவர்கள் அவ்விதம் செய்து அதிககாலம் ஆகிவிடவில்லை. இவ்விதமெல்லாம் வாதிப்பதை எதிர்த்து நான் எதுவும் கூறுவதற்கில்லை. உண்மையில், அந்த வாதம் இந்தியா முழுவதற்குமே பொருந்தும். எந்தத் தனி மாகாணமும் நியாயமான காரியத்தைச் செய்ய விரும்பினல் அதை நான் எதிர்க்கமாட்டேன்.

ஐக்கிய வங்காளத்தை அமைக்கும் முயற்சி அபாயகரமானதென்று என்னிடம் சிலர் கூறியுள்ளனர். ஹிந்துக்கள் சலித்துப் போய்விட்டார்கள் ; கிழக்கு வங்காளத்திலிருந்து மேற்கு வங்காளத்தைப் பிரித்துவிடவே அவர்கள் விரும்புகிருர்கள். வங்காள முஸ்லிம் லீகும் ஐக்கிய வங்காளத்திட்டத்தை நிராகரித்துளது. அப்படியிருந்தும், சிலர் அதை இன்னும் வற்புறுத்தி வருகிருர்கள். அம்முயற்சிக்கு நான் மறைமுகமாக ஆதரவு அளிப்

படுதே அதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. ஆட்சேபகரமான எந்த நடவடிக்கையையும் நான் ஒருகாலத்திலும் ஆதரிக்க முடியாது என்பதைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். ஐக்கிய வங்காளத்திற்கு ஆதரவாக வோட்டுகளை வாங்குவதற்கு, தண்ணீரைப்போல் பணத்தைச் செலவழித்து வருவதாகவும்கூட என்னிடம் கூறுகிறார்கள். நான் ஐக்கியத்தை, ஒற்றுமையைப் பாராட்டுகிறேன். எனினும், மானத்தையும், நீதியையும் புறக்கணித்துவிட்டு ஒற்றுமையை உண்டாக்க நான் விரும்பவில்லை.

சரத்பாபுவை நான் ஆதரிப்பதற்காக என்னைக் கண்டிக்கிறார்கள். சந்தேகமின்றி சரத்பாபு எனது நண்பரேயாவார். அவருடன் நான் கடிதப் போக்குவரத்து நடத்திவருகிறேன். எனினும், பகிரங்கமாகவும் நேர்மையுடனும் ஆதரிக்க முடியாத எதையும் நான் ஆதரிக்கும் குற்றத்திற்கு எக்காலத்திலும் ஆளாகமாட்டேன். எந்த இடத்திலும் என் வழக்கம் அதுதான். உயர்ந்த லட்சியத்தை அடைவதற்காகக்கூட, ஆட்சேபகரமான முறைகளைக் கைக்கொள்ளுவதில் எனக்கு நம்பிக்கையில்லை.

புதுடில்லி, 9—6—47 ‘ஹரிஜன்’ - 15—6—1947

# 5

# ஹிந்துக்களின் கடமை என்ன?

*12-6-47 மாலையில் நடந்த, பிரார்த்தனைக்குப் பின் காந்திஜி கூறியதாவது:*

இந்தியாவின் பூகோளத்தை மாற்றி அமைப்பது, இந்தியா இரு தேசங்கள் என்பதைக் காட்டுகிறதா? இந்தியாவின் பிரிவினை ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டதால், ஐக்கிய பாவம் ஏற்படுவது ஓரளவு கஷ்டமாகியிருக்கிறது. இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள், தங்களை ஒரு தனி தேசீய இனம் என்று கருதுவார்களாயின், முஸ்லிம் அல்லாதார் அதற்கு இணங்கினலொழிய அவர்கள் (முஸ்லிம்கள்) தனி தேசீய இனமாகிவிட முடியாது.

தாங்கள் பெரும்பாலோராக இருக்கும் பிரதேசங்களை முஸ்லிம்கள் பாகிஸ்தான் என்று குறிப்பிட்டால், மீதியுள்ள இந்தியாவின் பெரும் பகுதியில் உள்ளவர்கள் தாங்கள் இருக்கும் பிரதேசங்களை ஹிந்துஸ்தான் என்று குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. அது, பாகிஸ்தானுக்கு எதிர்மாருக ஹிந்துக்கள் வாழும் இடம் என்ருகிவிடும். ஆனல், ஹிந்துக்களின் உணர்ச்சி அவ்விதம் இருக்கிறதா? இந்தியாவில் பிறந்த பார்ஸிகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், தோல் வெள்ளையாக இராத ஆங்கிலோ—இந்தியர்கள் முதலியோருக்கு இந்தியாவைத் தவிர வேறு

தாயகம் இருக்கிறதா? தாற்காலிகமாக நான் முஸ்லிம்களைவிட்டு விடுகிறேன். பாகிஸ்தான் அல்லாத பிரதேசங்களை ஹிந்துஸ் தான் என்று குறிப்பிட நேருஜி மறுப்பதற்கு அதுதான் காரணம் என்று நினைக்கிறேன். இந்திய யூனியன் குடியரசு என்றே அவர் குறிப்பிட விரும்புகிறார். இந்திய யூனியனிலிருந்து, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள சில பிரதேசங்கள் பிரிந்து சென்றுள்ளன என்பதே அவரது கருத்தாகும்.

ஆடம்பரமான பெயர்கள், அவற்றை வைத்துக் கொண்டிருப்போருக்குப் பெருமை அளித்துவிடுவதில்லை என்பதைச் சரித்திரம் காட்டுகிறது. மனிதர்களோ, கோஷ்டிகளோ அவர்களுடைய செயல்களைக் கொண்டே பெருமை அடைகிறார்கள். எனவே, இந்த யூனியன் எப்படி நடந்துகொள்ளப் போகிறது? எப்போதும் அவதூறுக்கு ஆளாகும் சாதி ஹிந்துக்கள் மிக மிகச் சிறுபான்மையோர் என்பதை நான் முன்பே எடுத்துக் கூறியிருக்கிறேன். அவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒதுக்கித் தள்ளிவிடுவார்கள் என்று இப்போதே குத்திக் காட்டத் தொடங்கிவிட்டார்கள். அப்படியாயின், இந்திய யூனியனில் மற்ற சிறுபான்மையோரின் கதி என்ன? எனவே, சாதி ஹிந்துக்கள் எனக் கூறப்படுவோருக்கு இது ஒரு சோதனைக் காலமாகும். எவ்வளவு தாழ்ந்தவர்களாயினும், அவர்களும் மகோன்னதமான அந்தஸ்தை அடைவதற்கான சகல வசதிகளையும் அளிப்பதன் மூலம், சாதி ஹிந்துக்கள் தங்களுடைய கடமையைச் செய்வார்களா? அவர்கள், முஸ்லிம் சிறுபான்மையோரிடம் எப்படி நடந்து கொள்ளுவார்கள்? அவர்களை அந்நியர்களாக சாதி ஹிந்துக்கள் கருதுவார்களா? அல்லது இந்திய யூனியன் தங்களுடைய சொந்த நாடு என்று முஸ்லிம் சிறுபான்மையோர் கருதும்படி நடந்து கொள்ளுவார்களா? மற்றும் அவர்களுக்கு, இங்கே மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்குக் கிடைக்கும் சகல வசதிகளும் கிடைக்கும்படியும் சாதி ஹிந்துக்கள் செய்வார்களா? ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித் தனியான இரு தேசீய இனங்களாவர் என்ற ஜனப் ஜின்னுவின் சித்தாந்தம் ருசுவாகும்படி சாதி ஹிந்துக்கள் நடந்துகொண்டுவிடாமல் இறைவன் பாதுகாப்பாராக.

—'ஹரிஜன்' - 22—6—1947

# 6

# பிரிவினையில் சகோதர உணர்ச்சி

பிரிவினை சகோதர பாவத்துடன் நடைபெற வேண்டுமென, பிரிவினைக் கமிட்டியில் உள்ள முஸ்லிம் லீக் அங்கத்தினர்களும் காங்கிரஸ் அங்கத்தினர்களும் வைஸ்ராயின் முன்னிலையில் ஒப்

புக்கொண்டதாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

அத்தகைய ஒப்பந்தம் ஏற்படும்படி வைஸ்ராய் செய்திருப்பது நல்ல காரியம்தான். எனினும், இனிமையான பேச்சினுல் மாத்திரம் காரியம் நிறைவேறிவிட முடியாது. தடபுடலான பேச்சுகளையும், எழுத்துக்களையும் கண்டு உலகம் அலுத்துப் போய்விட்டது அவை மிதமிஞ்சிப் போய்விட்டன. காய்ந்து கருகியதாயினும் ஒரு ரொட்டித் துண்டுதான் பசியைத் தணிக்குமேயன்றி, தேனெழுகும் உறுதிமொழிகளால் பசி தணிந்துவிடாது.

காந்திஜியைப் பார்க்கவந்த குவாஜா சாகிப் அப்துல் மஜீத், தேசீய முஸ்லிம்களை காங்கிரஸ் அசட்டை செய்துவிடாதென்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார். காந்திஜியைப் போலவே தாம் ஒரு நல்ல ஹிந்து என்றும், ஆகையால் தாம் ஒரு நல்ல முஸ்லிம், ஒரு நல்ல பார்சி என்பதிலும் சந்தேகமில்லை என்றும் குவாஜா சாகிப் தம்மைப் பற்றிக் கூறிக்கொண்டார். அவருக்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது:

“அதன் பொருள் என்னவெனில், கடவுளிடம் பயமுள்ள மனிதருக்கு எல்லா மதங்களும் நல்ல மதங்களே, சமமானவையே என்பதுதான். பல்வேறு மதங்களையும் சேர்ந்தவர்கள், ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொள்ளுவதன் மூலம் தங்களுடைய சொந்த மதத்தை மறுப்பவராகின்றார்கள். இந்திய யூனியனில் உள்ளவர்கள், தங்கள் தங்கள் மதங்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களாக விளங்குவார்கள் என்றும், தாங்கள் ஒரே நாட்டின் புதல்வர்கள், புதல்விகள் என்று கூறிக் கொள்ளுவதில் பெருமையடைவார்கள் என்றும் நம்புகிறேன். சட்டத்தின் முன்பும் அவர்கள் எல்லோரும் முற்றிலும் சம அந்தஸ்து உடையவர்களே. ஒருவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதற்கு, அவரது மதம் அத்தாட்சி அல்ல. மதம், கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள சொந்த விஷயமாகும். அவர்கள் எந்த மதத்தினராயினும், அவர்கள் முதலாவதாகவும், கடைசியாகவும் இந்தியர்களே.”

இந்திய யூனியனில் தேசீய முஸ்லிம்களின் விதியைக் குறித்து தமது பீதியைத் தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்த ஒருவருக்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது:

“பாகிஸ்தான் மாகாணங்களில் என்ன நடந்தாலும், இந்திய யூனியன் மாகாணங்கள் அங்கேயுள்ள முஸ்லிம் சகோதரர்கள் விஷயத்தில் கண்டிப்பான நேர்மையுடனும் நீதியுடனும் நடந்துகொள்ள வேண்டும். பாகிஸ்தானெவெனில், அங்கே உள்ள முஸ்லிம்களை அது எப்படிக் கருதுகிறதோ, அதுபோலவேயே மற்றச் சிறுபான்மையோரையும் கருதவேண்டும்; சிறு

பான்மையோர் விஷயத்தில் எவ்வித வேற்றுமையும் காட்டக் கூடாது.''

—'ஹரிஜன்' - 29 – 6 – 1947

# 7

# பட்டாணியர்ஸ்தான்

பட்டாணியர்ஸ்தான் என்ற பெயருடன் சுதந்திர எல்லைப் புற மாகாணம் ஒன்றை அமைப்பதற்கான இயக்கத்தைக் குறிப் பிட்டு காந்திஜி கூறியதாவது:

அது உறுதியான அடிப்படையைக் கொண்ட ஓர் இயக்க மாகும். அது ஓர் இந்திய எதிர்ப்பு இயக்கமாக இருக்குமா யின், அது தீங்கை விளைவிக்கக் கூடியதென்றும், விஷமத்தன மானதென்றும் கூறவேண்டும். பட்டாணியரின் வாழ்க்கையை யும் பண்பாட்டையும் பாதுகாப்பதற்காக எனில், அந்த இயக் கம் எவ்வித ஆதரவுக்கும் உரியதாகும். அதுதான் இயக்கத்தின் நோக்கம் என்பதே எனது அபிப்பிராயமுமாகும். பூகோள ரீதி யாகப் பார்த்தால், அது இந்தியாவின் மிகச் சிறிய ஒரு பகுதியே. இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்களுடன் ஒப்பிடும் போது, பட்டாணியர்கள் எண்ணிக்கையிலும் மிகச் சிலரே யாவர். எனினும், அவர்களுடைய போர்க் குணங்களும் இந்தியா வின் படத்தில் அவர்களுடைய நிலையும், அவர்களுக்கு விசேஷ முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றன. எல்லைப்புற மாகாணம், ஒரு காங்கிரஸ் மாகாணமாகும். காங்கிரஸ் கானக வாழ்க்கையை மேற்கொண்டிருந்தபோதும், அது ஒரு காங்கிரஸ் மாகாண மாகவே இருந்தது. காங்கிரஸ் அரசாங்க அதிகாரத்தை மேற் கொண்டுள்ள இச்சமயத்திலும், அது காங்கிரஸ் மாகாணமாகவே இருந்துவருகிறது. அரசியல் நிர்ணய சபையிலும் அது பிரதி நிதித்துவம் வகித்துவருகிறது. ஆனல், இப்போது அது ஒரு தருமசங்கடமான நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. உடனடியாக அங்கே சர்வஜன வாக்கு எடுக்க வேண்டியதாக இருக்கிறது. காங்கிரசும் லீகும் அம்முறையை ஒப்புக்கொண்டு, வாக்குறுதியும் அளித்திருக்கிறது. இனி அந்த விதிகளை எந்த ஒரு கட்சியும் மாற்ற முடியாது.

பாகிஸ்தாளு அல்லது ஹிந்துஸ்தாளு என்ற பிரச்னையே தீர்க்கப்பட வேண்டும். பட்டாணியர்கள், ஹிந்துக்களுடன் இருப்பதா, அல்லது முஸ்லிம்களுடன் இருப்பதா? காங்கிரஸ் ஒரு ஹிந்து ஸ்தாபனம் அல்ல. அது ஒரு காலத்திலும் ஹிந்து ஸ்தா பனமாக இருந்ததில்லை; இனி எக்காலத்திலும் அது ஹிந்து ஸ்தாபனமாக இராது என்றே நம்புகிறேன். எனினும், நாளுக்கு

நாள் குழப்பம் அதிகமாகிவரும் இக்காலத்தில் பட்டாணியரின் மனம் அந்த வேற்றுமையை யெல்லாம் எப்படி அறிந்துகொள்ள முடியும்? எனவே, தன்னுடைய நிலையைச் சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாக்குமாறு நான் காங்கிரசுக்கு யோசனை கூறுகிறேன்; அதுபோலவே முஸ்லிம் லீகிற்கும் நான் யோசனை கூறுகிறேன். இரு ஸ்தாபனங்களும் பட்டாணியரின் உணர்ச்சியைக் கௌரவிக்க வேண்டும்; உள்நாட்டு நிர்வாக விஷயமாக பட்டாணியர்கள் தங்கள் சொந்த அரசியலை வகுத்துக் கொள்ளுமாறு விட்டுவிட வேண்டும். அவ்விதமாயின் பட்டாணியர்களிடையே ஒற்றுமை வளரும்; உள்நாட்டுப் பகை தவிர்க்கப்படும்; புஷ்டு பண்பாடும் புஷ்டு மொழியும் பாதுகாக்கப்படும். அவ்விதம் அவர்கள் செய்ய முடியுமாயின், பின்னர் அவர்கள் பாகிஸ்தானுடனோ அல்லது இந்திய யூனியனுடனோ ஐக்கிய உணர்ச்சியுடன் கலந்துகொண்டு சமஷ்டி அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருப்பது சாத்தியமாகும்.

—'ஹரிஜன்' - 29—6—1947

# 8

# சுதந்திர மசோதா

மிகவும் விரிவாக உள்ள சுதந்திர மசோதாவில் இருக்கும் இருபது பிரிவுகளை நான் விவரமாகப் பரிசீலனை செய்ய உத்தேசிக்க வில்லை. அந்த மசோதாவில் அபாயமும் சூழ்ச்சியும் அடங்கியிருப்பதாகப் பலர் கூறுவதையும் நம்ப நான் விரும்பவில்லை. ஒரு இந்தியா இருந்த இடத்தில் இரண்டு இந்தியாக்கள் இருப்பதே மோசமான ஒரு நிலையாகும். எனவே, இதற்குமேல் அபாயமும் ஏற்படுவதற்கு என்ன இருக்கிறது? இரு இந்தியாக்களுக்கும் சம அந்தஸ்து உண்டு. நேற்று அசாத்தியமானது என்று தோன்றிய ஒரு நிலை, இன்று உண்மையாகிவிட்டது. இந்தப் பெருமைக்கு முஸ்லிம் லீகும், காயிதே ஆஜம் ஜின்னுவுமே முற்றிலும் உரியவர்களாவர். பிரிட்டிஷ் மந்திரி சபைத் தூது கோஷ்டி உலகமறிய விடுத்த பிரகடனத்தை, முஸ்லிம் லீகும் ஜின்னு சாகிபும் தகர்த்து விட்டனர். அவர்கள், இந்தியாவின் பிரிவினைக்கு காங்கிரசிடமிருந்தும் சீக்கியர்களிடமிருந்தும் சம்மதமும் பெறுவதில் வெற்றியடைந்துவிட்டார்கள். சம்பந்தப்பட்ட கட்சியினர் வெவ்வேறு காரணங்களுக்காக சம்மதம் அளித்து விட்டார்கள் என்பதற்காக கெட்டது நல்லதாகி விடாது. காயிதே ஆஜம் விரும்பிக் கேட்டதெல்லாம் கிடைத்து விடவில்லை என்பது ஆறுதலை அளிக்கக் கூடிய விஷயம் அல்ல. அவர் ஒரு தனி ராஜ்யம் வேண்டும் என்று விரும்பினர். அவரது விருப்பம் பூரணமாக நிறைவேறிவிட்டது. இந்தியாவைப் போல் பாகிஸ்தானுக்கும் சம அந்தஸ்து உண்டு.

மசோதாவை நான் திரும்பத் திரும்ப வாசித்ததில் ஒரு விஷயம் எனக்குத் தெரிந்தது. அதாவது, அம்மசோதாவின் விளைவாக மூன்று சாரார் தெரிந்தோ, தெரியாமலோ பொது மக்களின் தீர்ப்புக்கு இலக்காகியிருக்கிறார்கள்.

பிரிட்டிஷார் தங்களுடைய அதிகாரத்தை யெல்லாம் விட்டு விட்டுப் போகிறார்கள் என்பது உண்மையே. ஆனால், அவர்களும் பிரிவினைக்கு இசைந்த கட்சிகளில் ஒருவராவர். முரண்பாடான கொள்கைகளும் நலன்களும் உள்ள இரண்டு புதிய அங்கத்தினர்கள் (பாகிஸ்தானும் இந்தியாவும்) காமன்வெல்த் நாடுகள் அடங்கிய குடும்பத்தில் சேருவார்கள். அவ்விரு அங்கத்தினர்களும் பிரிட்டனுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் வரையில், பிரிட்டனின் பெருந்தன்மையும், நீதியும், பேச்சைக் கொண்டு அல்ல, பிரிட்டனின் நடவடிக்கையைக் கொண்டே நிர்ணயம் செய்யப்படும்.

புது டில்லி, 6—7—'47 — 'ஹரிஜன்' – 13—7—1947

# 9

# நோவாகாலியிலிருந்து அழைப்பு

ஆகஸ்டு *15*-ஆம் தேதிக்குள் நான் நோவாகாலிக்கு மீண்டும் திரும்பி வராவிட்டால், நான் பின்னர் அதைக் குறித்து வருந்த வேண்டியிருக்கும் என்று, நோவாகாலியிலிருந்து ஒரு நண்பர் எனக்கு எழுதியுள்ளார். இந்தியாவின் பிரிவினைக்கும், பிரிட்டிஷாரின் கையிலிருந்து இந்தியர்களிடம் அரசாங்க அதிகாரத்தை மாற்றுவதற்கும் அன்றுதான் கெடு வைக்கப்பட்டிருக்கிறது. உண்மையில், பிரிவினை முடிவாகத் தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு திட்டமாகும். எனினும், மனிதரின் திட்டங்களைக் கடவுள் சீர்குலைத்து விடமுடியும். குறிப்பிட்ட தினத்திற்குமுன் ஒரு பூகம்பம் ஏற்பட்டு இந்தியா முழுவதையும் அழித்துவிடக் கூடும். மனிதரின் அழகான, அற்பத் திட்டங்களை, அந்நியரின் படையெடுப்பு கவிழ்த்துவிடலாம்.

எனினும், மனிதரால் வகுக்கப்பட்டுள்ள திட்டத்திற்கிணங்க ஆகஸ்டு *15*-ஆம் தேதியன்று பாகிஸ்தான் சட்ட பூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட ஓர் உண்மையாகிவிடும்.

பீகாருக்குச் செல்லுவதற்காக நான் நோவாகாலியிலிருந்து புறப்பட்டேன். பீகாரில் முஸ்லிம் சகோதரர்களுக்கு உதவியாக நான் எவ்வளவோ செய்துள்ளேன். பீகாரில் ஏற்பட்ட சாவுகள் நோவாகாலியில் ஏற்பட்டதைக் காட்டிலும் மிகமிக அதிகமாகும். பீகாரில் சுமார் *10,000* பேர் மாண்டனர்; நோவாகாலியில் இறந்

தவர்களின் தொகை 500-க்கும் குறைவாகும். பீகாரிலிருந்து அழைப்பு வந்தபோது, நான் அங்கே சென்றேன். எனவே, நோவாகாலிக்குச் செல்லும் வழியில் நான் பீகாருக்கும் செல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அங்கே செல்லவேண்டும் என்பதே எனது ஆர்வமாகும். டில்லி எனக்குப் பொருத்தமான இடமாகத் தோன்றவில்லை. ஆனால், பீகாரும் நோவாகாலியும் அப்படியல்ல. கூடிய சீக்கிரம் நான் நோவாகாலிக்குத் திரும்பிச் சென்று எனது வாக்குறுதியை நிறைவேற்ற அருள்புரியும்படி நீங்கள் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

புது டில்லி, 12—7—'47

—'ஹரிஜன்' – 20—7—1947

# 10

# இந்தியா எல்லா இந்தியர்களுக்கும் தாயகம்

பாகிஸ்தானில் உள்ள ஹிந்துக்கள், சீக்கியர்கள் முதலிய முஸ்லிமல்லாதார் என்ன செய்வது? தங்களுக்குத் தீங்கு ஏற்படலாம் என்று பயந்துகொண்டு அவர்கள் வீடுவாசல்களை விட்டு விட்டுப் போய் விடக்கூடாது. அங்கே உள்ள முஸ்லிம்கள் நேர்மையுடனும் மனிதத்தன்மையுடனும் நடந்து கொள்ளுவார்கள் என்றே எண்ணுகிறேன். பாகிஸ்தான் பிரதேசங்களில் கோவில்களும் குருத்வாரங்களும் இருக்கின்றன. அவற்றை இடித்து விடுவதா? ஹிந்துக்கள், சீக்கியர் முதலியோர் அவற்றிற்குள் பிரவேசிக்கக் கூடாதென்று தடுத்துவிடப் போகிறார்களா? அத்தகைய பீதிக்கு நான் இடம் கொடுக்க முடியாது. அதற்கு மாறாக, இந்தியாவில் உலகிலேயே அருமையான ஜும்மா மசூதி இருக்கிறது; தாஜ்மஹால் இருக்கிறது; அலிகார் சர்வகலாசாலை இருக்கிறது. இவைபோன்ற இன்னும் பலவிடங்களுக்கும் முஸ்லிம்கள் செல்லும் விஷயமாக, பிரிவினையால் ஏதாவது இடையூறு நேருமென்று நான் நினைக்கவில்லை.

உண்மையான அல்லது கண்ணுக்குத் தெரியாத பயம் காரணமாக பாகிஸ்தானில் உள்ள ஹிந்துக்கள் தங்கள் வீடுவாசல்களில் தங்க முடியாது என்ற பிரச்னையும் இருந்துவருகிறது. அவர்களுடைய வியாபாரங்கள் அல்லது நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டாலும், அவர்களுடைய சொந்த மாகாணங்களில் அவர்கள் அந்நியர்களாகக் கருதப்பட்டாலும் ஹிந்துக்கள் அவ்விதம் தங்க முடியாது. அத்தகைய அகதிகளை இந்திய யூனியன் மாகாணங்கள் அன்புடன் மனப்பூர்வமாக வரவேற்று, அவர்களுக்கு நியாயமான எல்லா வசதிகளும் செய்து கொடுக்க

வேண்டும். ஏதோ ஓர் அந்நிய நாட்டிற்கு வந்திருப்பதாக அவர்கள் கருதும்படி நேரக்கூடாது. ஒவ்வொரு இந்தியருக்கும், அவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும், இந்தியா தாய் நாடாகும்.

—'ஹரிஜன்' - 20—7—1947

## 11

# பயமின்றி வாழ வகைசெய்ய வேண்டும்

பத்திரிகைப் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் ஜின்னு சாகிப் பேசிய போது, பாகிஸ்தானில் உள்ள எல்லா சிறுபான்மையோருக்கும், மத சம்பந்தமாகவும், பிரார்த்தனை சம்பந்தமாகவும் பூரண சுதந்திரம் அளிக்கப்படும் என்று உறுதி கூறியிருக்கிருர். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. சகல சிறுபான்மையோரின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் உறுதி கூறியிருக்கிருர். ஒரு விஷயத்தை எந்தத் தலைவரும் மனப்பூர்வமாகவே கூறலாம். ஆனுல், அவரது யோசனையை மக்கள் பின்பற்றி நடப்பார்கள் என்பதற்கில்லை; பிரிவினையில் லீக் வெற்றி பெற்றும்கூட, பலவிடங்களிலிருந்து கத்திக் குத்துகள், கொலைகள், கொள்ளைகள், தீவைத்தல் முதலியவை பற்றிய செய்திகள் வந்தவண்ணமாக இருக்கின்றன. எனக்குத் தெரிந்த பல சிந்தி ஹிந்து நண்பர்கள், தங்கள் வீடுவாசல்களை விட்டு விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிருர்கள்.

கராச்சி, பாகிஸ்தானின் தலைநகராக இருக்கப் போகிறது. எனவே, சிந்துவில் உள்ள ஹிந்துக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு ஜின்னு சாகிப் ஆகஸ்டு 15-ஆம் தேதி வரையில் காத்துக் கொண்டிருக்கப் போகிருரா? நான் ஜின்னு சாகிபின் ஸ்தானத்தில் இருந்தால், தனக்கு நீதி கிடைக்காதென்று பயந்து எந்த ஹிந்துவும் பாகிஸ்தானிலிருந்து வெளியேறுவது, எனக்கு எல்லையற்ற துக்கத்தை உண்டாக்கும்.

காயிதே ஆஜம் பாகிஸ்தானின் கவர்னர் ஜெனரலாக இருக்கப்போவதால், மந்திரிகளின் ஆலோசனையைக் கேட்காமல் அவர் எதுவும் செய்ய முடியாது என்பது உண்மையே. எனினும், அவருக்கு லீகின் மீது உள்ள பிடியை அவர் தளர்த்தி விடப் போவதில்லை. அதற்கு மாருக, அவரது அதிகாரம் அதிகமாகிவிடும். எனவே, சிந்துவிலும் பாகிஸ்தானின் மற்றவிடங்களிலும் நேர்ந்துவரும் நிகழ்ச்சிகளைத் தடுக்க வேண்டியது அவருடைய கடமையாகும். ஒரு தேசத்தைச் சேர்ந்த மனிதரையோ அல்லது அரசாங்கத்தையோ, பேச்சைக் கொண்டு

அல்ல, செயல்களைக் கொண்டுதான் நிர்ணயிக்க முடியும். இதே வாதம் முற்றிலும் இந்தியாவுக்கும் பொருந்தும். இந்தியாவில் உள்ள முஸ்லிம்களும் பயமின்றி வாழ்வதற்கான சகல பாதுகாப்புகளும் அளிக்கப்பட வேண்டும்.

### ராணுவப் பிரிவினை

ராணுவப் பிரிவினை பற்றியும் காந்திஜி ஆழ்ந்த உணர்ச்சியுடன் பேசினார். அவர் கூறியதாவது:

ராணுவத்தைக்கூட ஏன் பிரிவினை செய்ய வேண்டும்? அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நின்று சமாளிக்க ராணுவம் ஏன் ஐக்கியமாக இருக்கக் கூடாது என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. தற்போதைய பிரிவினை முறை, இரண்டு படைகளுக்குமிடையே போட்டியையும் போரையும் உண்டாக்கிவிடலாம். அத்தகைய நிலை படுமோசமானதாகும். உண்மையில், படைகளின் பிரிவினை தேசத்தின் தற்காப்பை பலவீனப் படுத்திவிடும். இதை ஆழ்ந்து யோசிக்க வேண்டியது, சம்பந்தப்பட்டவர்களின் கடமையாகும். சென்ற முப்பது வருட காலத்தில் நீங்கள் அகிம்சைப் படிப்பினையைக் கற்றுக் கொள்ளாவிட்டாலும், பிரிட்டிஷாருக்கு மாத்திரமல்ல, யாருக்குமே அடிமைகளாக வாழக்கூடாது என்ற படிப்பினையைக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிக் கற்றுக்கொண்டிருந்தால், பின்னர் எந்த இடத்திலும் படைகள் இருக்க வேண்டிய அவசியம் ஏது? இந்தப் படிப்பினையைத்தான், நோவாகாலியில் உள்ள ஹிந்துக்களுக்கும் பீகாரில் உள்ள முஸ்லிம்களுக்கும் நான் கற்றுக் கொடுக்க முயற்சித்து வருகிறேன். அவர்களுக்கு மனத்தில் தைரியம் இருந்தால், அவர்கள் தாங்கள் துன்புறுத்தப்படுவதை பலாத்காரத்தினால் எதிர்ப்பதைக்கூட நான் பொருட்படுத்தமாட்டேன். எனினும். நான் எப்போதும் சாத்விகமாக எதிர்க்க வேண்டும் என்றே கேட்டுக்கொள்ளுவேன். ஏனெனில் சாத்விகமாக எதிர்ப்போருக்கு, கடவுள் முற்றிலும் பாதுகாப்பாளராகி விடுகிறார். பலாத்காரமான எதிர்ப்புக்கு வாளின் உதவி தேவையாகிறது. வாள் ஒரு சிறந்த தற்காப்பு ஆயுதம் அல்ல.

புது டில்லி, 14—7—'47 'ஹரிஜன்' – 27—7—1947

## 12

# சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு

"இந்திய யூனியனில் உள்ள முஸ்லிம்கள் பலவிடங்களில் அட்டூழியங்களைப் புரிந்துள்ளனர். நாங்கள் சந்திக்கும் முஸ்லிம்களை நம்புவதே கஷ்டமாக இருக்கிறது. பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம் அல்லாதாருக்கு எப்படிப் பாதுகாப்பு அளிப்பது?"

இந்தக் கேள்விக்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது:

"ஹிந்துக்களைப் போல் இங்கே வாழும் ஹிந்துக்கள் அல்லாதாருக்கும் இந்தியா தாயகமாகும். இப்போது எல்லா மதங்களுக்கும் சோதனைக் காலம் ஏற்பட்டிருக்கிறது. ஹிந்துக்கள் தங்களுடைய கோழைத்தனத்தை விட்டுவிட்டால், அவர்களுடைய தைரியத்தை முஸ்லிம்கள் உணர்ந்து, அவர்களைத் தொந்தரவு செய்வதை நிறுத்திவிடுவார்கள். அகிம்சைதான் அத்தகைய தைரியத்தைக் கொடுக்க வல்லது. இந்திய யூனியனில் சாதி, மத பேதம் எதுவுமின்றி எல்லோரும் சமமாக நடத்தப்படவேண்டும்.

"பிரிவினையானது ராணுவத்தைப் பலவீனமானதாகச் செய்திருக்கிறது. அந்நியர் படையெடுப்பைச் சமாளிப்பதற்குப் போதிய பலம் அதற்கு இராது. எனவே, நாம் மிக்க ஜாக்கிரதையாக இராவிடில், இந்தியா ராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் இருக்கும்படியான நிலைமைகூட ஏற்படலாம். ஒரு கையால் பெற்ற சுதந்திரத்தை மற்றொரு கையால் இழக்கும்படியாக இந்தியாவின் விதி இருக்கப் போகிறதா? டச்சுக்காரர்கள், இந்தோனேஷியாவின் சுதந்திரத்தை அபகரித்துவிட முயற்சித்து வருகிறார்கள். ஏற்கனவே, பிரிட்டிஷார் மீது எத்தனை குற்றங்கள் இருப்பினும், அவர்கள் தாங்களாகவே வலுவில் முன்வந்து இந்தியாவைவிட்டு வெளியேறப் போகிறார்கள். பெற்ற சுதந்திரத்தை நாம் இழப்போமாயின், பின்னர் சகோதரனை சகோதரன் கொல்லும் உள்நாட்டுக் கலகம்தான் ஏற்பட்டுத் தீரும். இந்திய யூனியனில் நாம் அப்பழுக்கின்றி நடந்துகொண்டால், பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம் அல்லாதாரின் தொகை எவ்வளவு அற்பமாயினும், அவர்களைத் தொட யாரும் துணியமாட்டார்கள். எனவே எல்லைக் கமிஷனின் முடிவு எப்படியிருந்தாலும், அதைத் தாங்கள் ஒப்புக்கொள்ளுவதாக இரு சமூகங்களின் தலைவர்களும் அறிக்கை வெளியிட்டிருப்பது ஒரு நல்ல அறிகுறியே ஆகும். இந்தியா, பாகிஸ்தான் இரு பாகங்களிலும் சிறுபான்மையோரும், இதற்கு முன் ராஜீய விரோதிகளாக இருந்தவர்களும்கூட பத்திரமாக இருப்பார்கள் என்றும் அந்தத் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் கூறியிருப்பதை, அதற்கு மாறாக ருசுவாகும் வரையில், நாம் நம்ப வேண்டும். அதுதான் ஒழுங்கான போக்காகும்.

—'ஹரிஜன்' - 10—8—1947

பகுதி பதினாறு

# வெறியைத் தணிக்க உண்ணாவிரதம்

## 1

## கல்கத்தாவில் கலவரத் தீ

**கா**ந்திஜி ஏற்கனவே வாக்குறுதி அளித்திருந்ததற்கு இணங்க, புது டில்லியிலிருந்து நோவாகாலிக்குப் புறப்பட்டார். வழியில் ஸோட்பூரில் தங்கிய காந்திஜி, அங்கே நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியதாவது :

நான் நோவாகாலிக்குச் செல்ல வேண்டுமென்றே புறப்பட்டேன். எனினும், இன்று முழுதும் கல்கத்தா படும் துன்பங்களைப் பற்றிய புகார்களுக்கே நான் செவி கொடுக்க வேண்டியிருந்தது. கல்கத்தா ஹிந்துக்களுக்கு வெறி பிடித்து விட்டதாக, சில முஸ்லிம் நண்பர்களும், ஹிந்து நண்பர்களும்கூட என்னிடம் புகார் கூறினார்கள். அங்கே முஸ்லிம் போலீசாரையும், போலீஸ் அதிகாரிகளையும் வாபஸ் செய்துவிட்டு, ஹிந்து போலீஸ் அதிகாரிகளை நியமித்துள்ளனர். எனவே, லீக் மந்திரி சபையின் கீழ் முஸ்லிம்கள் தங்கள் மனம் போனபடி நடந்து கொண்டது போல, ஹிந்துக்கள் இப்போது தங்கள் மனம் போனபடி நடக்க முற்பட்டிருக்கிறார்கள். லீக் மந்திரி சபையின் கீழ் என்ன நடந்தது என்பதை நான் இப்போது பரிசீலனை செய்யப் போவதில்லை. எனது சகாவான டாக்டர் கோஷின் மந்திரி சபை இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுவதே எனது நோக்கமாகும். கல்கத்தாவில் முஸ்லிம்கள் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையா? அது உண்மையாயின், அத்தகைய நிலைமை காங்கிரஸ் மந்திரி சபைக்கே ஒரு பெரும் இழுக்காகும். நோவாகாலிக்கு நான் செல்லுமுன் கல்கத்தாவில் சில நாட்கள் தங்கியிருந்து, 'கல்கத்தாவை எரித்துக்கொண்டிருக்கும் தீயில் ஒரு பானை தண்ணீரைக் கொட்டிவிட்டுச் செல்லுங்கள்' என்று என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது நியாயமான கோரிக்கையே ஆகும். கல்கத்தாவில் எழுந்துள்ள பொதுஜன வெறியைத் தணிப்பதற்கு எனது உயிரைக் கொடுக்க வேண்டியது அவசியமாயின், நான் மகிழ்ச்சியுடன் அவ்விதமே செய்யத் தயாராக இருக்கிறேன். பூரண நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளப்

போகும் இச்சமயத்தில், வெட்கக்கேடான இந்தக் காட்சிக்குக் கல்கத்தா இடம் கொடுக்காதென நம்புகிறேன்.

நான் மறுநாள் திங்கட்கிழமையன்று நோவாகாலிக்குப் போவதாக இருந்தேன். ஆனால், என்னைக் கண்டு பேசிய பல முஸ்லிம்களின் வற்புறுத்தலுக்கு இணங்க நான் கல்கத்தாவிலேயே தங்கத் தீர்மானித்துள்ளேன். இந்தியாவின் முதல் நகரான கல்கத்தாவில் வெறி தணிந்து, மக்களுக்கு சித்தசுவாதீனம் ஏற்பட என் பங்கைச் செய்ய முடியுமா என்பதைப் பார்க்க உத்தேசித்திருக்கிறேன்.

நான் இன்று மந்திரிகளையும் மற்றவர்களையும் பார்த்தேன். ஹிந்துக்களால் நாசம் செய்யப்பட்ட இடங்களையும் நான் நேரில் பார்க்க விரும்புகிறேன். கல்கத்தாவில் ஏற்கனவே ஹிந்துக்கள் வசித்து வந்த பல முஸ்லிம் பகுதிகளுக்கு இப்போது அவர்களால் போக முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதை நான் தெரிந்துகொண்டேன். அது போலவே முஸ்லிம்கள் வசித்து வந்த பல ஹிந்துப் பகுதிகளுக்கு இப்போது முஸ்லிம்களும் போக முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மனிதனின் காட்டுமிராண்டித்தனத்தை விளக்கும் இந்தச் சம்பவங்களைக் கேட்டு வெட்கத்தினால் தலை குனிந்தேன். அந்தப் பகுதிகளுக்குச் சென்று, என்னிடம் கூறப்பட்ட விவரங்கள் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நான் நேரில் பார்க்க விரும்புகிறேன்.

கல்கத்தாவில் உள்ள மொத்த ஜனத்தொகையில் 23 சதவிகிதத்தினர்தான் முஸ்லிம்கள் என்று கூறப்படுகிறது. எனவே, அவ்வளவு சிறுபான்மையோர் பெரும்பான்மையோரைத் துன்புறுத்தியதற்கு அரசாங்கத்தின் தூண்டுதலோ அல்லது திறமையின்மையோதான் காரணமாக இருக்கவேண்டும். அது போலவே, அரசாங்க நிர்வாகக் கலையை அறிந்த ஓர் அரசாங்கம் அதிகாரத்தில் இருக்கும்போது, பெரும்பான்மையோர் சிறுபான்மையோரைத் துன்புறுத்த முற்பட்டிருப்பது நினைக்க முடியாததாக இருக்கிறது. முன்பு முஸ்லிம் போலீசார் என்ன செய்தார்களோ, அதையே இப்போது ஹிந்து போலீசார் செய்து வருவதாகவும் என்னிடம் கூறுகிறார்கள். காங்கிரஸ் மந்திரிகள் பாரபட்சத்துடன் நடந்துகொள்ளுவதாகவும் கூறுகிறார்கள். இத்தகைய ஈனத்தனமான வகுப்புவாத உணர்ச்சி போலீஸ் படையினரிடையும் வியாபித்துவிட்டதெனில், எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிவிடும். போலீசார் தங்கள் தொழிலின் கௌரவத்தையும் பெருமையையும் உணர்ந்துகொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

ஸோட்பூர், 10—8—'47

—'ஹரிஜன்' - 24—8—1947

# 2

# ஆகஸ்டு 15

இந்தியாவின் சரித்திரத்தில் ஆகஸ்டு 15-ஆம் தேதி ஓர் எல்லைக் கல்லாக இருக்கும். அன்றுதான் இந்தியா, அந்நிய ஆதிக்க நுகத்தடியிலிருந்து விடுதலை பெற்று, ஒரு சுதந்திர நாடாக விளங்கப் போகிறது. அந்த நாளை, கல்கத்தா முஸ்லிம்கள் ஒரு துக்க தினமாகக் கொண்டாடப் போகிறார்கள் என ஓர் அறிக்கை வெளியாகியிருக்கிறது. அது உண்மையாக இராது என்றே நம்புகிறேன். அத்தினத்தைக் குறிப்பிட்ட விதத்தில் தான் கொண்டாடவேண்டும் என்று யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. அதையொட்டிய நடவடிக்கைகள், மக்கள் தாங்களாகவே மனப்பூர்வமாகக் கைக்கொள்ளுவதாக இருக்க வேண்டும். விடுதலையைக் குறித்து துக்கம் கொண்டாட வேண்டாமென நான் நம் நாட்டில் உள்ள முஸ்லிம்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தற்போதைய வகுப்புவாத நோய் ஒழிய வேண்டும். பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம்கள் என்ன செய்வது? பாகிஸ்தானில் மக்கள் எல்லோரும் சாதி, மத வேற்றுமையின்றி சமமாகக் கருதப்படுவார்கள் என்பதை பாகிஸ்தான் கொடி குறிக்குமாயின், அந்தக் கொடியை ஹிந்துக்கள் வணங்க வேண்டும்.

முஸ்லிம் நண்பர்களின் விருப்பத்திற்கிணங்க, நான் கல்கத்தாவில் இன்னும் மேற்கொண்டு இரண்டு நாட்கள் தங்கியிருக்கப் போகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஷஹீத் சாகிப் சுஹ்ரவார்தி நேற்றிரவு என்னைப் பார்க்க வந்தார். கல்கத்தாவில் பயங்கரமான வகுப்புக் கலவரங்கள் நடந்து வருகையில் நான் புறப்பட்டுச் செல்லுவது, எனது வழக்கத்திற்கு முரணானது என்று அவர் குறிப்பிட்டார். உண்மையான சமாதானம் ஏற்படும் வரையில் நான் நகரிலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் அவர் யோசனை கூறினார். கலவரம் நேர்ந்துள்ள பகுதிகளில், நானும் அவரும் சேர்ந்து ஒரே வீட்டில் வசிக்க வேண்டுமென அவருக்குப் பதில் கூறினேன். போலீஸ் அல்லது ராணுவப் பாதுகாப்பு எதுவும் இல்லாமல் அவ்விதம் வசிக்க வேண்டும் என்றும் அவருக்குக் கூறினேன். சகோதர உணர்ச்சியுடன் மக்களை அணுகி, சமரச ஒப்பந்தத்தின்மீது பிரிவினை ஏற்பட்டுவிட்டதால், இனி சச்சரவிற்கே காரணமில்லை என்பதை எடுத்துக் கூற வேண்டும் என்றும் குறிப்பிட்டேன். இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் எல்லைக் கமிஷனின் தீர்மானம் அறிவிக்கப்பட்டுவிடும். எனவே, எல்லாக் கட்சிகளும் கண்ணியமாக அந்த முடிவிற்குக் கட்டுப்பட வேண்டும்.

சோட்பூர், 12—8—'47 —'ஹரிஜன்' - 24—8—1947

# 3

# காந்திஜியும் சுஹ்ரவார்தியும்

காந்திஜி கூறிய யோசனை, அதாவது காந்திஜியும் சுஹ்ரவார்தியும் கலவரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு வீட்டில் சேர்ந்து வசித்துக்கொண்டு, மக்களை அணுகி சமாதானம் ஏற்படும்படி செய்ய வேண்டும் என்ற யோசனை மிகவும் முக்கியமானதால், சுஹ்ரவார்தி சாகிப் உடனே பதில் கூற முடிய வில்லை. வயோதிகரான அவரது தந்தை, மகள் முதலியோரைக் கலந்தாலோசித்து, ஒரு முடிவிற்கு வரும்படி காந்திஜி அவரிடம் கூறினர்.

சுஹ்ரவார்தி, காந்திஜியின் யோசனைக்கு இணங்கிவிட்டதாக, அன்று மாலை கல்கத்தா முன்னுள் மேயரான ஸ்ரீ உஸ்மான் காந்திஜியிடம் வந்து அறிவித்தார்.

எனவே, அதற்கிணங்க காந்திஜியும் சுஹ்ரவார்தியும் பெலியகட்டா என்ற இடத்தில் ஒரே வீட்டில் வசித்தனர். அங்கே நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வேற்றுமையை அறவே மறந்து ஒன்று கூடினர். மூவர்ணக் கொடியேற்ற வைபவத்தில் எல்லோரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டார்கள். ஹிந்துக்கள், மசூதிகளில் அனுமதிக்கப் பட்டனர். முஸ்லிம்கள், கோவில்களில் அனுமதிக்கப்பட்டனர். இந்தக் காட்சியைக் கண்டு காந்திஜி ஆனந்தம் அடைந்தார். கலகமாகிற விஷ பானத்தை அருந்திய ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட அந்நியோன்னியம் அமுதத்தைப் போல் இனிமையாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை என்று காந்திஜி குறிப்பிட்டு, ஹிந்து, முஸ்லிம்களைப் பெரிதும் பாராட்டினர். எனினும், லாகூர், சிட்டகாங் முதலிய இடங்களில் அப்போதும்கூட நடந்து கொண்டிருந்த வகுப்புக் கலவரங்கள் காந்திஜிக்கு மிகுந்த மன வேதனையைக் கொடுத்தன.

ஆனல், காந்திஜியும் சுஹ்ரவார்தியும் ஒரே வீட்டில் தங்கியிருந்ததன் பலனை, கல்கத்தாவைச் சேர்ந்த பல பிரதேசங்களிலும் ஹிந்து-முஸ்லிம்களிடையே மீண்டும் நட்பும் நல்லுறவும் நிலவத் தொடங்கின. ஒவ்வொரு நாளும் கல்கத்தாவிலுள்ள ஒவ்வோரிடத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. அதன் பலனை ஹிந்து-முஸ்லிம் உறவு திருப்திகரமாகி வந்தது. அத்தகைய கூட்டங்களில் அலிப்பூரில் நடந்த கூட்டமும் ஒன்ருகும். அங்கே பிரார்த்தனை முடிந்த பின் காந்திஜி பேசியதாவது:

ஷஹீத் சாகிபை நம்புவதற்கில்லை என்றும், அவரது மந்திரி சபை ஆட்சி புரிந்தபோதுதான் ஹிந்துக்கள் மகத்தான கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாயினர் என்றும் என்னிடம் பலர் புகார் கூறுகின்றனர்; அவ்விதம் பல கடிதங்களும் வந்திருக்கின்றன. அந்தப் புகார் புதிதல்ல. நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து சமாதான யாத்திரையைத் தொடங்குமுன்பே அத்தகைய புகார்கள் வந்தன. எங்களுடைய யாத்திரை எதிர்பாராதவிதமாகப் பலனைக் கொடுத்து வருகிறது. அந்தப் புகாரைக் குறித்து என் நண்பருடன் விவாதிக்க எனக்கு நேரமில்லை. பிறரை நம்பு

வதே எனது சுபாவம். அவ்விதம் நம்புவதன் விளைவாக, எனக்கு ஒருபோதும் எவ்வித நஷ்டமும் ஏற்பட்டதில்லை. சுஹ்ரவார்தி சாகிப் செய்த குற்றத்திற்கு அவர் அவரது சிருஷ்டிகர்த்தாவின் முன்னிலையில் பதில் சொல்லியாக வேண்டும். நாங்கள் சென்ற சில நாட்களாக ஒன்று சேர்ந்து யாத்திரை செய்து வருகிறோம். அவரது நட்பைக் குறித்து வருந்தும்படியான சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டதில்லை. ஹிந்து-முஸ்லிம்களிடையே சமாதானம் நிலவுவதற்கு, அவரது தொடர்பின்றி நான் எதுவும் செய்திருக்க முடியாது என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

பஞ்சாபி நண்பர்கள் ஒரு கோஷ்டியாக வந்து என்னைக் கண்டு பேசினார்கள். பஞ்சாபில் நிகழ்ந்து வரும் சம்பவங்களை அவர்கள் பயங்கரமாகச் சித்தரித்துக் கூறினார்கள். எனவே, நான் உடனே பஞ்சாபிற்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். பஞ்சாபில் நடந்துள்ள கொலைகளையும், தீ வைக்கும் கொடுமைகளையும் எண்ணும்போது, வங்காளத்தில் நிகழ்ந்தவை மிக அற்பமானவை என்றும் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். லாகூரில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் அநேகமாக இல்லை என்றே அவர்கள் கூறினர். அது போலவே அமிருதசரஸில் முஸ்லிம்கள் அநேகமாக இல்லை என்றே சொல்லலாம் என்றும் அறிவித்தார்கள். இதெல்லாம் மிகைபடுத்திக் கூறப்பட்டிருக்க வேண்டும் என்றே நம்புகிறேன். கல்கத்தாவில் உள்ள பஞ்சாபிகள், பஞ்சாபில் நிலவும் நிலைமையை அறிந்துகொள்ள முடியாது. அது எப்படியாயினும், கல்கத்தாவில் உள்ள ஹிந்துக்களும், சீக்கியர்களும், முஸ்லிம்களும், அவர்களிடையே ஏற்பட்டுள்ள நட்பு உண்மையாயின், பஞ்சாபில் உள்ள தங்கள் சகாக்களுக்கு எழுத வேண்டும். பரஸ்பரம் படுகொலை செய்துகொள்ளாமல் இருக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இன்று என்னை தேசீய முஸ்லிம்களும் வந்து பார்த்தார்கள். நான் முஸ்லிம் லீகிற்கு முக்கியத்துவம் அளித்து, தேசீய முஸ்லிம்களை அலட்சியம் செய்துவிட்டதாக என் மீது புகார் கூறினார்கள். அந்த இரு குற்றச்சாட்டுகளையும் நான் ஒப்புக்கொள்ள முடியாது. என்னுடைய உதவியோ அல்லது காங்கிரசின் உதவியோ இல்லாமலேயே, அது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அது பெரிதாகிவிட்டதற்குக் காரணம், சரியாகவோ தவறாகவோ அது முஸ்லிம்களின் மனத்தைக் கவர்ந்திருப்பதேயாகும். பம்பாயில் நான் காயிதே ஆஜம் ஜின்னாவைப் பதினெட்டு தடவை கண்டு பேசியதைக் குறித்து நான் வருந்தவில்லை. ஷஹீத் சாகிப், உஸ்மான் சாகிப் முதலிய மற்ற முஸ்லிம் லீக் அங்கத்தினர்கள் இல்லாமல், நான் மாத்திரம் எதுவும் செய்திருக்க முடியாது என்பதைத் தேசீய முஸ்லிம்களான எனது நண்பர்கள் அறிந்துகொள்ள வேண்டும். தேசீய முஸ்லிம்களை

நான் அலட்சியம் செய்வதென்ற பேச்சிற்கே இடமில்லை. ஒரு மனிதனின் தேசீய உணர்ச்சிக்குத் தனி மதிப்பு உண்டு. அதைப் பிறர் அங்கீகரிக்க வேண்டும் என்பதில்லை. தேசீய முஸ்லிம்கள் எப்போதும் போல் இருந்துகொண்டு, தங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் தைரியத்தையும், சுயத் தியாகத்தையும், உண்மையான அறிவையும் வெளிப்படுத்தி வருவார்களாக. தேசீய முஸ்லிம்கள், லீகிற்கு உள்ளே வந்தாலும் அல்லது வெளியே இருந்தாலும், அவர்களை நண்பர்களாகவே கருதும்படி லீக் நண்பர்களுக்கு நான் ஆலோசனை கூறுகிறேன்.

அலிப்பூர், 23-8-'47 —'ஹரிஜன்' -31—8—1947

# 4

# நாம் கடவுளின் சிப்பாய்கள்

இன்று எனது மௌன தினமானதால், நான் உங்கள் கூட்டத்தில் பேசமுடியாது. எனவே, நான் கூற விரும்பியதை எழுதி, பிரார்த்தனைக் கூட்டத்தில் வாசிக்கும்படி செய்துள்ளேன்.

இன்று மாலை நான் சில்ஹெட்டைப் (கிழக்குப் பாகிஸ்தான்) பற்றியே பேச விரும்புகிறேன். சில்ஹெட்டில் மூண்டுள்ள கலகங்களைக் கண்டு பதறி எனக்குத் தந்திகள் வந்துள்ளன. கலகங்களுக்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. நான் இப்போது சில்ஹெட்டிற்குச் செல்ல முடியாததற்காக வருந்துகிறேன். நான் அங்கே சென்றால், உடனே பொதுஜன வெறி தணிந்துவிடும் என்றும் நான் பெருமைப்பட்டுக்கொள்ளவில்லை. தற்போது நான் மேற்கொண்டுள்ள கடமையை விட்டுவிடுவதும் முடியாத காரியம். ரட்சண்ய சேனையைச் சேர்ந்தவர்களின் பாஷையை உபயோகிப்பதாயின், நாம் எல்லோரும் கடவுளின் சிப்பாய்களே ஆவோம். நாம் கண்டிப்பான அகிம்சையையும் உண்மையையும் கருவிகளாகக் கொண்டு, தவறை எதிர்த்துத் தரும யுத்தம் புரிந்து வருகிறோம். சில்ஹெட்டில் துன்பத்திற்கு ஆளானவர்களிடமிருந்து வந்துள்ள அவசர அழைப்பிற்கு இணங்க என்னால் இயலாவிடினும், நான் பொதுவாக கிழக்கு வங்காள அதிகாரிகளுக்கும், குறிப்பாக சில்ஹெட் அதிகாரிகளுக்கும் வேண்டுகோள் விடுக்க முடியும். கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவாக அதிகாரிகள் சிறந்த முயற்சியெடுத்து, துஷ்டர்கள் விஷயத்தில் கண்டிப்பாக நடந்துகொள்ளவேண்டும். இப்போது ஹிந்து-முஸ்லிம்களிடையே சமாதானம் நிலவுவதால், கோரமான அந்தக் கலகங்களை அதிகாரிகள் விரும்பமாட்டார்கள் என்பதே எனது நிச்சயமான அபிப்பிராயமாகும். பெரும்பான்மையோரைப் போல் தாங்களும் மதிப்பு வாய்ந்த

பிரஜைகள் என்ற உணர்ச்சி சிறுபான்மையோருக்கு ஏற்படும்படி செய்ய வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும். வங்காளத்தின் இரு பிரிவுகளையும் சேர்ந்த முதல் மந்திரிகள் அடிக்கடி சந்தித்து, மக்களிடையே அமைதியைப் பாதுகாப்பதற்கான முறைகளைக் கைக்கொள்ளுவார்களாக.

கல்கத்தா, 26—8—'47 —'ஹரிஜன்' - 7—9—1947

# 5

# வகுப்புத் தீயைத் தணிக்க உண்ணுவிரதம்

கல்கத்தாவில் ஆச்சரியகரமான விதத்தில் ஹிந்து-முஸ்லிம்களிடையே அந்நியோன்னிய பாவம் நிலவியதெனினும், காந்திஜியின் மனத்தில் மாத்திரம் அமைதி ஏற்படவில்லை. பஞ்சாபிலிருந்து மனக்கலக்கத்தைக் கொடுக்கும் செய்திகள் வந்துகொண்டிருந்தன. அப்படியிருந்தும் காந்திஜி நோவாகாலிக்குப் புறப்படுவதென்று தயக்கத்துடனேயே தீர்மானித்தார். "நான் நாளை காலையில் புறப்படட்டுமா, அல்லது அதற்கு மறுதினம் புறப்படட்டுமா?" என்று தம்மைச் சுற்றியிருந்தவர்களைக் காந்திஜி கேட்டார். கடைசியில் அதற்கு மறுதினமே புறப்படுவதென்று நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், அன்று மாலையே காந்திஜியைக் கடவுள் எச்சரிப்பதுபோல், சம்பவங்கள் நிகழலாயின. "நோவாகாலிக்குச் செல்லுவதென்ற எனது தீர்மானம், இன்றைய மாலை நிகழ்ச்சிகளுக்குப் பிறகு சீர்குலைந்துவிட்டது. கல்கத்தா பற்றியெரிந்துகொண்டிருக்கையில் நான் நோவாகாலிக்கோ, வேறிடத்திற்கோ செல்லுவது முடியாத காரியம்" என்று அன்றிரவு காந்திஜி கூறினார். கல்கத்தாவில் மீண்டும் பீறிட்டெழுந்த கலகங்களைப் பற்றிக் காந்திஜி கூறியதாவது:

"எனக்கு, இன்றைய நிகழ்ச்சி கடவுளிடமிருந்து வந்த ஓர் அடையாளமாகும், ஓர் எச்சரிக்கையுமாகும். கல்கத்தாவில் மூண்டுள்ள தீ பரவுமாயின், உண்ணுவிரதம் இருப்பதைத் தவிர எனக்கு வேறு ஒரு வழியும் இல்லை. எனக்காக மற்றோர் உண்ணுவிரதம் காத்துக்கொண்டிருக்கிறது என்று நான் அடிக்கடி கூறிவரவில்லையா?"

மறுநாள் காந்திஜியின் மௌன தினமாகும். கலகங்களைப் பற்றிய கோரமான செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. வகுப்புத் தீயை அணைக்க என்ன செய்வது என்பதுபற்றி காந்திஜியுடன் கலந்தாலோசிப்பதற்காக நாள் முழுதும் கோஷ்டி கோஷ்டியாகப் பலர் வந்தனர். அவர்களிடம் காந்திஜி கீழ்வருமாறு கூறினார்:

“கலகக்காரர்களின் மத்தியில் சென்று, வெறி பிடித்த காரியங்களைச் செய்யாமல் தடுக்க முற்படுங்கள், அல்லது அம்முயற்சியில் கலகக்காரர்கள் உங்களைக் கொல்ல விட்டுவிடுங்கள். ஆனால், தோல்வியை அறிவிப்பதற்காக உயிருடன் திரும்பி வராதீர்கள். தற்போதைய நிலைமை உயர்தரத் தலைவர்களின் தியாகத்தையே கோருகிறது. இதுவரையில் கணேச சங்கர் வித்தியார்த்தி ஒருவரைத் தவிர, யாரும் அறியாத, பெயர் தெரியாதவர்களே வகுப்பு வெறித் தீயைத் தணிக்கும் முயற்சியில் உயிர் துறந்திருக்கிறார்கள். அது போதாது.”

கலகக்காரர்களின் மத்தியில் சென்று கலகத்தை அடக்க காந்திஜியை யாரும் விடமாட்டார்கள் என்பதையும், தமக்கு யாதொரு அபாயமும் நேராமல் தம்மைப் பாதுகாத்து நிற்பார்கள் என்பதையும் காந்திஜி அறிவார். எனவே, அந்த முயற்சியில் அவர் ஈடுபட விரும்பவில்லை. ஆகையால் வகுப்பு வெறித் தீயை அடக்குவதற்கான ஒரே வழி உண்ணாவிரதத்தை மேற்கொள்ளுவதுதான் என்று முடிவு செய்தார். உண்ணாவிரதத்தைத் தடுக்க காந்திஜியின் சகாக்கள் எவ்வளவோ முயற்சி செய்தனர். ஆனால், அவர்களுடைய முயற்சி வீணாகியது.

“நீங்கள் இந்த நிலையில் உண்ணாவிரதம் இருக்கவேண்டுமா? காத்திருந்து பிறகு அவ்விஷயமாக யோசிக்கக்கூடாதா?” என்று கேட்டார் ஒரு நண்பர்.

அதற்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது: “இப்போதே உண்ணாவிரதம் இருக்க வேண்டும். பின்னர் உண்ணாவிரதம் இருப்பதற்குக் காலம் கடந்துவிடலாம். சிறுபான்மையோரான முஸ்லிம்களை ஆபத்தான நிலையில் விட்டுவிடக்கூடாது. எனது உண்ணாவிரதத்தால் ஏதாவது நன்மை ஏற்பட வேண்டுமாயின், அது சிறுபான்மையோரான முஸ்லிம்களுக்கு விரோதமாக இங்கே எதுவும் ஏற்பட்டு விடாமல் தடுப்பதாக இருக்க வேண்டும்.”

**கேள்வி:** உண்ணாவிரதத்தின் விளைவாக நீங்கள் இறந்துவிட்டால், வகுப்பு வெறித் தீ இன்னும் படுமோசமாகிவிடும் அல்லவா?

**பதில்:** அதைப் பார்க்க நான் உயிருடன் இருக்கமாட்டேன். ஏதோ என்னாலியன்றதை நான் செய்தவனாவேன். மனிதன் பிரமாதமாக எதுவும் செய்துவிட முடியாது.

**கே:** நீங்கள் முற்றிலும் உங்களைக் கடவுளின் கையில் ஒப்படைத்துக் கொள்ளுவதாயின், உண்ணாவிரதத்தின்போது தண்ணீருடன் எலுமிச்சம்பழ ரசத்தை ஏன் சேர்த்துக்கொள்ளுகிறீர்கள்?

ப: நீங்கள் சொல்லுவது சரியே. அது எனது பலவீனத்தையே காட்டுகிறது. அவ்விதம் சேர்த்துக்கொள்ளுவதென்பது எனக்கும் வெறுப்பையே கொடுக்கிறது. ஒரு சத்தியாக் கிரகி, தனது நிபந்தனை உற்ற சமயத்தில் நிறைவேறுவதன் மூலமே உயிர் வாழ்வதில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

இவ்விதமாக, உண்ணுவிரதத்தின்போது தண்ணீருடன் எலுமிச்சம்பழ ரசத்தைக் கலந்து சாப்பிடுவதையும் விட்டு விட்டார்.

அச்சம்பவம் திங்கட்கிழமை இரவு நிகழ்ந்தது. இரண்டு தினங்கள் கழித்து, கல்கத்தா முஸ்லிம் லீகைச் சேர்ந்த பிரபல தலைவர் காந்திஜியைக் கண்டு உண்ணுவிரதத்தை விட்டுவிடும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டார். "நீங்கள் எங்களிடையே இருப் பதே எங்களுக்கு ஒரு பெரும் சொத்தாகும். எங்களுடைய பாதுகாப்பிற்கும் அது உத்தரவாதமாக இருக்கிறது. எனவே, நாங்கள் அதை இழக்கும்படி செய்து விடாதீர்கள்" என்று கூறினர்.

அவருக்குக் காந்திஜி அளித்த பதில் இதுதான்: "அன் ெருரு நாள் காலிகள் என் எதிரிலேயே அட்டகாசம் செய்தார் கள். அதை நான் தடுக்க முடியவில்லை. அவர்கள் சம்பந்தப் பட்ட வரையில் என் வார்த்தை அடியோடு சக்தியை இழந்து விட்டது போல் தோன்றியது. கலவரத் தீ அணைந்து, சென்ற பதினைந்து நாட்களாக நிலவிய அமைதி மறுபடியும் ஏற்பட்டால் தான் நான் உண்ணுவிரதத்தை நிறுத்துவேன். முஸ்லிம் களுக்கு உண்மையிலேயே என் மீது அன்பும், நம்பிக்கை யும் இருக்குமாயின், கல்கத்தா முழுவதும் வெறி கொண்டுவிட்டால்கூட அவர்கள் வஞ்சம் தீர்ப்பதையும், திருப் பித் தாக்குவதையும் விட்டுவிட வேண்டும். அது வரையில் என் உண்ணுவிரதம் தொடர்ந்து நடந்து வர வேண்டும்."

இதைக் கேட்ட முஸ்லிம் லீக் பிரமுகர் மன வருத்தத் துடன் திரும்பிச் சென்ருர். அவர் சென்ற பிறகு காந்திஜி கூறிய தாவது:

"தீங்கு செய்வோர் தங்களுடைய தீய நடவடிக்கைகளை நிறுத்திவிட வேண்டும். என் உயிரைப் பாதுகாப்பதற்காக அல்ல, அவர்களுக்கு உண்மையான மனமாற்றம் ஏற்பட வேண் டும். வெறும் பகட்டு அமைதி எனக்குத் திருப்தியை அளித்து விடாது என்பதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். மீண் டும் இதைக் காட்டிலும் மோசமான தீ பீறிட்டெழுவதற்கு முன் நிலவும் தாற்காலிக அமைதியை நான் விரும்பவில்லை. அவ்விதம் மறுபடியும் தீ மூண்டால், நான் யாதொரு நிபந்தனையுமின்றி இறக்கும் வரையில் உண்ணுவிரதம் இருக்க நேரும்."

இதன் பிறகுதான் கல்கத்தாவில் அந்த அதிசயம் ஏற்பட்டது. நேரம் போய்க்கொண்டிருந்தது. உண்ணுவிரதம் இருந்த காந்திஜியின் நிலையும் சிறிது சிறிதாக அதிக பலவீனமாகி வந்தது. அவரது நிலை மக்களின் உள்ளத்தைக் கிளறியது. அவர்கள் முன்வந்து காந்திஜியிடம் தாங்கள் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டார்கள். காந்திஜியின் உயிரைப் பாதுகாப்பதற்காக ஹிந்துக்களும் முஸ்லிம்களும் முன்வந்து தங்களால் இயன்ற முயற்சிகளைச் செய்தனர். கல்கத்தா நகரில் மீண்டும் அமைதி ஏற்படும்படி செய்வதற்காக எல்லா சமூகத்தினரும் அடங்கிய ஊர்வலங்கள், கலவரம் நடந்துகொண்டிருந்த பிரதேசங்களில் தெருத் தெருவாகச் சென்றன. கலகக்காரர்களை அடக்கும் சக்தியுள்ளவர்கள் என்று கூறப்படும் சுமார் ஐம்பது நபர்கள் 4-ஆம் தேதி காந்திஜியைக் கண்டு, கலகக்காரர்களை உடனே தாங்கள் அடக்கிவிடுவதாக உறுதி கூறினர். அதற்கு முந்திய ஞாயிற்றுக்கிழமை காந்திஜியின் முகாமில் காலித்தனம் செய்த கலகக்காரர்கள் காந்திஜியிடம் சரண் அடையவும், அவர் விதிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள் என்றும் கூறினர். "உங்களுடைய உண்ணுவிரதத்தை நிறுத்த என்ன நிபந்தனை விதிக்கிறீர்கள்?" என்றும் அவர்கள் காந்திஜியைக் கேட்டனர். அவர்களுக்குப் பதிலாகக் காந்திஜி கூறியதாவது:

"மேற்கு வங்காளம் முழுவதும், இந்தியா முழுவதும் வகுப்புக் கலகத் தீ ஜ்வாலை விட்டெரிந்தால்கூட, கல்கத்தா நகரில் இனி ஒருபோதும் வகுப்புவாத வெறி மறுபடியும் தலை காட்டாதென நீங்கள் கூற வேண்டும். முஸ்லிம்களே என்னிடம் வந்து, தாங்கள் பத்திரமாகவும் பீதியின்றியும் இருப்பதாகவும், எனவே நான் உண்ணுவிரதத்தை நீடிக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் கூறவேண்டும்."

காந்திஜியின் நிபந்தனையைத் தாங்கள் நிறைவேற்ற முடிந்தாலன்றி, உண்ணுவிரதத்தை நிறுத்தும்படி அவரைக் கேட்பது நியாயம் அல்ல என்று கருதி அக்கோஷ்டியினர் திரும்பிச் சென்றுவிட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை காந்திஜியின் முகாமில் அமளி செய்தவர்கள், பின்னர் தாங்களாக முன்வந்து தங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்து காந்திஜி விதிக்கும் தண்டனையையும் ஏற்கத் தயாராயிருப்பதாகக் கூறினர்.

அன்று மாலை ஷஹீத் சாகிப், ஸ்ரீ என். ஸி. சாட்டர்ஜி, சர்தார் நிரஞ்சன் சிங் தலீப் முதலிய எல்லா சமூகங்களையும் சேர்ந்த தலைவர்கள் காந்திஜியைக் கண்டு நீண்ட நேரம் பேசினர். கல்கத்தாவில் கலவரங்கள் நடந்த இடங்களுக்கெல்லாம் தாங்கள் சென்றிருந்ததாயும், எல்லா இடங்களிலும் அமைதி ஏற்பட்டுவிட்டதாயும் கூறினர். இதன் மத்தியில், ஒரு மோட்டார் நிறைய கை வெடிகுண்டுகளும், துப்பாக்கிகள் முதலிய

ஆயுதங்களும் வந்திறங்கின. அவற்றைக் கொண்டு வந்தவர்கள், அந்த ஆயுதங்களுடன் காந்திஜியிடம் சரண் அடைந்தார்கள்.

தலைவர்கள், காந்திஜியின் நிபந்தனைகளுக்கு இணங்கி, இனி வகுப்பு வெறி தலைகாட்டாமல் இருக்கும் பொறுப்பை தாங்கள் ஏற்றுக்கொள்ளுவதாக உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட பிறகுதான், காந்திஜி ராம பஜனையுடனும் பிரார்த்தனையுடனும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டு, ஆரஞ்சுப் பழ ரசத்தை அருந்தி, எல்லாச் சமூகத்தினரையும், எல்லாச் சமூகப் பிரதிநிதிகளையும் மகிழ்வித்தார்.

கல்கத்தாவில் காந்திஜியின் உண்ணாவிரதம் 1947 செப்டம்பர் 1–ஆம் தேதி இரவு 8-15 மணிக்கு ஆரம்பமாகி, செப்டம்பர் 4-ஆம் தேதி இரவு 9-15 மணிக்கு முடிவடைந்தது. பிரபல டாக்டரும், நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் சகோதரருமான டாக்டர் சுனீல் போஸ், காந்திஜி உண்ணாவிரதம் இருந்தபோது அவரைக் கவனித்து வந்தார்.

கல்கத்தா, 5—9—'47 —'ஹரிஜன்' - 14—9—1947

பகுதி பதினேழு

# டில்லியில் பட்டினித் தவமும் பிறகும்

[1947 செப்டம்பரில் கல்கத்தாவில் காந்திஜி உண்ணாவிரதம் மேற்கொண்டதால் கல்கத்தா மக்களுக்கு நற்புத்தி பிறந்தது. ஓராண்டு காலமாக அங்கே நடந்து வந்த ஹிந்து-முஸ்லிம் கலவரமும் ஒருவாறு நின்றது. அச்சமயம் பஞ்சாபில் கலவரங்கள் மிகுந்திருந்தன. அங்கே மக்களின் உள்ளத்தில் தூங்கிப் போய்விட்ட மனித அன்பைத் தட்டி எழுப்பி, கலவரங்கள் நிற்கும்படிச் செய்யலாம் என்ற எண்ணத்தோடு பஞ்சாபிற்குப் போக காந்திஜி கல்கத்தாவிலிருந்து புறப்பட்டார். வழியில் டில்லிக்கு வந்தார். டில்லி, 'செத்தவர்களின் நகரமாகவே' இருந்ததைக் கண்டார். ஸ்ரீ வல்லபபாய் பட்டேலும் மற்றவர்களும் காந்திஜியை வரவேற்க ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தனர். அவர்களின் முகங்களில் துக்கம் தேங்கியிருந்தது. டில்லி நகரில் முதலில் அமைதியை உண்டாக்கப் பாடுபடுவது என்று காந்திஜி தீர்மானித்துக்கொண்டார். பாகிஸ்தானிலிருந்து ஏராளமான ஹிந்து, சீக்கிய அகதிகள் டில்லிக்கு வந்து குவிந்திருந்தனர். அநேக முஸ்லிம்கள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்குப் போனார்கள். முஸ்லிம் வெறியர்களிடம் படாத பாடு பட்டு, தங்களுடைய சொத்து, குடும்பம் முதலிய யாவற்றையும் இழந்து பாகிஸ்தானிலிருந்து வந்து குடியேறிய ஹிந்து, சீக்கியர்கள் அதிக ஆத்திரமடைந்திருந்தார்கள். அதோடு இந்த அகதிகள் பட்டினியாலும் பசியாலும் தவித்தார்கள். ரத்தக்களரி வேண்டாம் என்று மக்களுக்கு உபதேசித்தார். காந்திஜி ஒவ்வோர் பகுதிக்கும் போய் மக்களைச் சமாதானப்படுத்த முயன்றார். ஆனால், என்ன முயன்றும் கலவரம் அடங்குவதாகத் தெரியவில்லை. "டில்லியின் மீதுள்ள பிடிப்பை மெள்ள மெள்ள இழந்துகொண்டு வருகிறோம்; டில்லி போய்விடுமானால், அதோடு இந்தியாவும், உலக சமாதானத்திற்கு இருந்த கடைசி நம்பிக்கையும் போய்விடும்" என்று மகாத்மா அதிக மன வேதனையுடன் கூறினார். 1948 ஜனவரி 12-ஆம் தேதி உண்ணாவிரதமிருப்பதென்று முடிவு செய்தார். விரதம் ஆரம்பமாகி ஆறு நாட்களாகிவிட்டன. காந்திஜியின் தேக நிலை கவலைக்கிடமானதாகி வந்தது. அப்பொழுது காங்கிரஸ் அக்கிராசனராக இருந்த டாக்டர் ராஜேந்திர பிரஸாதின் முயற்சியினால் ஹிந்து, முஸ்லிம் பிரதிநிதிகள் கூடிப் பேசினர். இனி கலவரங்களுக்கு இடமளிப்பதில்லை என்று ஒரு பிரதிக்ஞையில் கையெழுத்திட்டனர். அதன் பேரில் காந்திஜி உண்ணாவிரதத்தை நிறுத்தினார். சமூக அமைதியும் டில்லியில் ஏற்பட்டது.

காந்திஜி கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு வந்ததிலிருந்து கொடிய வெறியனால் அவர் சுட்டுக் கொல்லப்பட்ட வரையில், சமூக ஒற்றுமையைக் குறித்து அவர் பேசியவை, எழுதியவை இப் பகுதியில் திரட்டிக் கொடுக்கப்படுகின்றன:]

# 1

# 'நான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது'

'நாம் ஒன்று நினைக்க கடவுள் வேறு ஒன்று நினைத்துவிடுகிறார்' என்பது பலருக்கும் ஏற்பட்டிருக்கும். என் வாழ்க்கையிலும், இதுவே எனக்கும் அடிக்கடி நேர்ந்திருக்கிறது. சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று நான் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டபோது, டில்லியில் இத்தகைய துக்ககரமான நிலைமை இருந்து வருகிறது என்பது எனக்குத் தெரியவே தெரியாது. ஆனால், டில்லிக்கு வந்ததும், டில்லி இன்று இருந்து வரும் மோசமான நிலைமையைப் பற்றிய கதையை நான் முழுதும் கேட்டுக்கொண்டிருந்தேன். பல முஸ்லிம் நண்பர்களையும் பார்த்தேன். பரிதாபகரமான கதையை அவர்கள் சொன்னார்கள். டில்லி முன்பு இருந்த நிலைமைக்குத் திரும்புவதற்கு முன்னால் பஞ்சாபிற்குச் சொல்லுவதற்காக நான் டில்லியிலிருந்து போய்விடக்கூடாது என்று என்னை எச்சரிக்கை செய்வதற்குப் போதுமான விஷயங்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கொதிப்படைந்திருக்கும் சூழ்நிலை குளிரும்படிச் செய்வதற்கு என்னாலியன்ற முயற்சியை நான் செய்தாக வேண்டும். 'செய், இல்லையானால் செத்துப்போ' என்ற பழைய முறையை இந்தியாவின் தலைநகருக்கு நான் உபயோகித்தாக வேண்டும். நடந்து கொண்டிருக்கும் புத்திகெட்ட நாசத்தை, டில்லி மக்கள் விரும்பவில்லை என்று சொல்ல என்னால் முடிந்திருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். அகதிகளை விதி, மேற்கு பஞ்சாபிலிருந்து விரட்டிவிட்டது. அவர்களுக்குக் கோபம் இருப்பதைப் புரிந்துகொள்ள நான் தயாராக இருக்கிறேன். ஆனால், அந்தக் கோபம் குறுகிய பைத்தியக்காரத்தனமே. இது எல்லா வகையிலும் நிலைமையை இன்னும் அதிக மோசமாக்கியே தீரும். ஆகையால், புத்திகெட்டுச் செய்யப்படும் கொலைகள், தீயிடல், கொள்ளை ஆகியவைகளில் ஈடுபட்டிருப்போரை, அவற்றை இனிச் செய்யாதிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மத்திய அரசாங்கத்தில், இந்த யூனியனில் கிடைக்கக்கூடிய மிகத் திறமை வாய்ந்தவர்கள், மிகுந்த வீரமுள்ளவர்கள், தன்னலத்தியாகிகள் இருந்துவருகின்றனர். இந்தியாவின் சுதந்திரம் பிரகடனமான பிறகு இவர்கள் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து இன்னும் ஒரு மாதம்கூட ஆகவில்லை. எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவதற்கு இவர்களுக்குச் சந்தர்ப்பங்கூடக் கொடுக்காமலிருப்பது பெரும் குற்றமாவதோடு, தற்கொலைக்கும் சமமாகும். உணவு பற்றாக்குறை இருந்து வருகிறது என்பதை நான் நன்றாக

அறிவேன். பொதுஜனக் கூட்ட அட்டகாசம், உணவுப் பொருள் விநியோகத்தை அசாத்தியமாக்குவதற்கு வேண்டியதை யெல்லாம் செய்து வருகிறது. சீர்கெட்டுப் போயிருக்கும் டில்லியில் அமைதியை உண்டாக்க கடவுளைப் பிரார்த்திக்கிறேன். நான் புறப்படுவதற்கு முன்னால் கல்கத்தா எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கும் என்றே நம்புகிறேன். வெறியாட்டம் சூழ்ந்திருப்பதற்கு நடுவே, அந்த நம்பிக்கையே நான் உயிர் வைத்திருக்கும்படிச் செய்து வருகிறது.

புது டில்லி — 9—9—47

## 2

# அகதிகள் முகாம்களின் சுகாதார நிலை

இன்று ராஜ்குமாரி அமிர்த கௌர், என்னையும் டாக்டர் சுசீலா நய்யாரையும் இர்வின் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்றார். சாதி மத வித்தியாசமில்லாமல் காயமடைந்தவர்கள் எல்லோருக்கும் சிகிச்சை செய்யும் பணியையே அந்த ஆஸ்பத்திரி மேற்கொண்டிருக்கிறது. அங்கே சிகிச்சை பெற்று வருவோரில் ஒரு குழந்தையையும் பார்த்தேன். அதற்கு ஆறு வயதுகூட இராது. இக் குழந்தை துப்பாக்கி குண்டுபட்டு காயமடைந்திருந்தது. டாக்டர்களும் நர்ஸுகளும் அதிகக் கஷ்டப்பட்டு வேலை செய்து வருகிறார்கள். சிகிச்சைக்கு வந்த ஹிந்து, சீக்கியர் வேறு ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு போகப்பட்டுவிட்டதால், இங்கே பெரும்பாலும் முஸ்லிம்களே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அகதிகள் முகாம்களில் கக்கூசுகளைச் சுத்தம் செய்வதற்கும், மற்ற சுகாதார வேலைகளைக் கவனிப்பதற்கும் தோட்டிகளை அனுப்புவது என்பது கொஞ்சமும் சாத்தியமில்லை என்று ராஜ்குமாரி கூறுவதிலிருந்து அறிகிறேன். காலரா போன்ற தொத்து நோய்கள் ஏற்பட்டுவிடக்கூடும். என்றாலும், தங்கள் முகாம்களிலிருக்கும் கக்கூசுகளைச் சுத்தம் செய்துகொள்ளுவதுள்பட சுகாதார அலுவல்களை அகதிகளே பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. முகாம் சூப்பரின்டெண்டின் அங்கீகாரத்தின் பேரில் அகதிகள் ஏதாவது பயனுள்ளதான வேலைகளையும் செய்து வரவேண்டும். உடலால் உழைப்பதற்கு முடியாதவர்களாக இருப்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு இந்த விதியிலிருந்து விலக்கு இருக்க முடியாது. எல்லா முகாம்களும் சுத்தத்திற்கும், எளிய வாழ்வுக்கும், உழைப்பிற்கும் உதாரணங்களாக விளங்க வேண்டும்.

இன்று பாகிஸ்தான் ஹை கமிஷனர் வந்து என்னைப் பார்த்தார். வகுப்பு அமைதியிலும் நட்பிலும் அவருக்கு உற்சாகமான

நம்பிக்கை இருக்கிறது. இன்று இரு முறை சீக்கிய நண்பர்களும் என்னை வந்து பார்த்தார்கள். கிர்பான் சம்பந்தமாக அரசாங்கம் பிறப்பித்திருக்கும் உத்தரவைக் குறித்து அவர்கள் மனம் வருந்துகிறார்கள். அரசாங்கத்துடன் நான் பேசுவதற்கு முன்னால், தங்களுடைய தேவைகளை எழுத்து மூலம் என்னிடம் கொடுப்பதாக உறுதி கூறியிருக்கிறார்கள். அதோடு, தங்கள் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகள் கொஞ்சமும் உண்மையில்லாதவை என்றும் சொன்னார்கள். முஸ்லிம்களுடனே, இந்திய யூனியனிலுள்ள வேறு எந்தச் சமூகத்துடனே தங்களுக்கு எந்தச் சச்சரவும் இருப்பதற்கில்லை என்றும் கூறினர். நாட்டின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடக்கும் மக்களாக இருக்க வேண்டும் என்பதிலேயே தாங்கள் சிரத்தையுடனிருப்பதாகவும் கூறினர்.

புது டில்லி, – 11—9—'47 —'ஹரிஜன்' – 21—9—1947

# 3

# அகதிகள் பிரச்னை

**கா**ந்திஜி, பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில், டில்லியில் வழக்கமாக தாம் வசிக்கும் இடத்தை மாற்றிக்கொண்டிருப்பதன் காரணத்தைக் கூறினார். அவர் சொன்னதாவது:

"நான் வழக்கமாக பங்கி காலனியில்தான் இருந்து வந்தேன். ஆனால், அந்த இடம் இப்பொழுது அகதிகளுக்காக உபயோகிக்கப்பட்டு வருகிறது. என் தேவையைவிட அவர்களுடைய தேவை முக்கியமானது. அகதிகள் பிரச்னை என்ற ஒன்று இருப்பது, ஒரு நாட்டின் மக்கள் என்ற வகையில் நமக்கு அவமானம் அல்லவா? சிறுபான்மையினர், அந்தந்த டொமினியனில், பெரும்பான்மையினருக்குள்ள உரிமைகளுடன் நடத்தப்படுவார்கள் என்று பண்டித நேருவும் சர்தார் பட்டேலும் கூறுவதைப் போன்றே, காயிதே ஆஜம் ஜின்னாவும் லியாகத் சாகிபும் சொல்லுகிறார்கள். இனிமையான சொற்களைப் பேசி உலகத்தை உற்சாகப்படுத்த ஒவ்வொருவரும் இவ்வாறு சொல்லி வருகிறார்களா? அல்லது சொல்லுகிறபடி நடக்கப் போகிறோம், அந்தச் சொல்லை நிறைவேற்றுவதற்குச் செய்யும் முயற்சியில் சாவதற்கும் தயாராக இருக்கிறோம் என்பதை உலகிற்குக் காட்டுவதற்காகச் சொல்லுகிறார்களா? இதுதான் உண்மை என்றால், ஹிந்துக்கள், சீக்கியர், கௌரவம் மிக்க அமில்கள், பாய்பந்துகள் ஆகியோர் அவர்களுடைய சொந்த வீடான பாகிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருப்பது ஏன்? குவெட்டா, நவாப்ஷா, கராச்சி ஆகிய இடங்களில் நடந்திருப்பது என்ன? மேற்கு பாகிஸ்தானில் நடந்திருப்பவைகளைக் குறித்து கேள்விப்படுபவையும் படிப்பவையும் உள்ளத்தைப் பிளப்பனவாக

இருக்கின்றன. இதில் தாங்கள் எதுவுமே செய்ய முடியாதவர்களாக இருப்பதாகவும், எல்லாம் காலிகளின் வேலை என்றும் இதில் எந்தத் தரப்பினரும் சொல்லிவிட முடியாது. தனது டொமினியனில் வசிப்பவர்கள் செய்திருக்கும் காரியங்களுக்குப் பொறுப்பை ஒவ்வொரு டொமினியனும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஏகாதிபத்தியத்தின் நசுக்கும் பளுவின் கீழ் இருந்துகொண்டு அதிகாரமற்றவைகளாக இந்த டொமினியன்கள் இன்னும் இருந்து வரவில்லை. ஆனால், உலகத்தின் கண் முன்பு நியாயமான நாடாகத் தோன்ற வேண்டுமானால், சட்டத்தின் ஆட்சிக்கு இப்போது இடமில்லை என்ற நிலை ஒருபோதும் ஏற்பட்டுவிடக் கூடாது. டில்லியின் மக்களோ, அகதிகளோ, மகிழ்ச்சியுடனும் விரும்பியும் சட்ட விதிகளுக்கு உடன்படமாட்டார்கள் என்று யூனியன் மந்திரிகள் உலகத்தின் முன்பு ஒப்புக்கொண்டு தங்கள் திறமையின்மையை பிரகடனம் செய்வதா? மக்களை அவர்களுடைய வெறித்தனத்திலிருந்து விலக்கும் முயற்சியில் மந்திரிகள் வளைந்து கொடுப்பதைவிட முறிந்து போவதே மேல் என்று கூறுவேன்."

காந்திஜியின் குரல் நெடுகவும் கம்மியிருந்தது. எனினும், 'செத்தவர்களின் நகரம்' போல் தோன்றிய டில்லியைத் தாம் சுற்றிப் பார்த்த விவரங்களை அவர் சொல்லிக்கொண்டே போனார். அவர் கூறியதாவது: "நான் வசித்த வீட்டில்கூட பழமோ, கறிகாயோ கிடையாது. கறிகாய்மண்டியில் யாரோ சில முஸ்லிம்கள் யந்திர பீரங்கியினாலோ, வேறு எதனாலோ சுட்டார்கள் என்பதனால் கறி காயே கிடைக்கவில்லை என்பது வெட்கக்கேடு அல்லவா? நான் சுற்றிப் பார்த்து வந்தபோது, அகதிகள் பங்கீடு உணவும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று புகார் கூறப்பட்டதைக் கேட்டேன். பங்கீட்டில் கொடுக்கப்பட்டதும் தின்பதற்கு ஏற்றதாக இல்லை. நிர்வாகத்தின் தவறுதான் இதற்குக் காரணம் என்றால், அவசியமான நடவடிக்கைகளும் முடியாதவாறு செய்துவிட்ட அகதிகளும் இதற்குப் பொறுப்பாளிகளாவர். தங்களுக்கே தீம்பு விளைவித்துக்கொள்ளுகின்றனர் என்பதை அவர்கள் ஏன் உணரவில்லை? தங்களுக்குள்ள நியாயமான குறைகளுக்கெல்லாம் அரசாங்கம் பரிகாரத்தைத் தேடும் என்று நம்பிக்கை வைத்து, சட்டத்திற்கு உடன்பட்டு நடக்கும் மக்களாக நடந்துகொண்டு வருவார்களானால், அகதிகளின் அநேக கஷ்டங்கள் தீர்ந்துவிடும் என்பதை நான் அறிவேன்; இதை அவர்களும் அறிய வேண்டும்."

—'ஹரிஜன்' - 21—9—1947

# 4

# பைத்தியக்காரத்தனமே கோபம்

எல்லைப்புற மாகாணத்திலிருந்து வந்துகொண்டிருக்கும் கவலைக்கிடமான செய்திகளைக் குறித்துத் தமது மன வருத்தத்தைத் தெரிவித்து, இன்று மாலை காந்திஜி தமது பிரார்த்தனைக் கூட்டப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். அவர் கூறியதாவது:

"அந்த மாகாணத்தை நான் நன்ருக அறிவேன். பல வாரங்கள் அங்கே சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறேன். கான் சகோதரர்களின் வீட்டில் பத்திரமாகவும் வசித்திருக்கிறேன். ஆகையால், மாஜி மந்திரியான ஸ்ரீ கிர்தாரி லால் பூரியின் தந்தி ஒன்று எனக்குக் காட்டப்பட்டபோது நான் அளவு கடந்த மன வேதனையை அடைந்தேன். அவர் மனைவியும் சிறந்த ஊழியர். தம்மையும் தம் மனைவியையும் உடனே மீட்டு ஆக வேண்டும் என்று அவர் தமது தந்தியில் கேட்டுக்கொண்டிருக்கிருர். இத்தகைய செய்தி, வெட்கத்தால் நான் தலைகுனியும்படிச் செய்கிறது. முஸ்லிம்களைப் போலவே, எல்லா ஹிந்துக்களும் சீக்கியர்களும் பத்திரமாக இருக்கும்படி அங்கே அதிகாரத்திலிருக்கும் அரசாங்கமும் காயிதே ஆஜமும் பார்க்க வேண்டும்.

"வட மேற்கு எல்லைப்புற மாகாணத்தில் நடந்து வருபவைகளுக்காக நான் மிகவும் வருந்துகிறேன். என்ருலும், கோபம் உங்களை எங்கும் கொண்டுபோய்விடப் போவதில்லை என்பதை நீங்கள் அறிய வேண்டும். கோபத்திலிருந்து, பழிக்குப் பழி வாங்கும் எண்ணம் பிறக்கிறது. இங்கேயும் மற்ற இடங்களிலும் இன்று நடந்து வரும் பயங்கரமான காரியங்களுக்கெல்லாம் இந்தப் பழி தீர்க்கும் உணர்ச்சியே காரணம். டில்லியில் நடந்திருப்பவைகளுக்காகப் பழிக்குப் பழி தீர்த்துக்கொள்ளுவதால், முஸ்லிம்களுக்கு என்ன நன்மை? எல்லைப்புறத்திலும் மேற்கு பஞ்சாபிலும் தங்கள் மதத்தினருக்கு இழைக்கப்பட்டிருக்கும் கொடுமைகளுக்குப் பழிக்குப் பழி தீர்த்துவிடுவதால் ஹிந்துக்களுக்கோ, சீக்கியருக்கோ என்ன நன்மை? ஒருவனே, அல்லது ஒரு கோஷ்டியினரோ வெறி பிடித்துப் போய்விட்டார்கள் என்பதற்காக எல்லோருமே வெறிபிடித்தவர்களாகிவிட வேண்டுமா? கொல்லுவதாலும், கொள்ளையடிப்பதாலும், தீயிட்டுப் பொசுக்குவதாலும் உங்கள் மதங்களைத்தான் நீங்கள் நாசமாக்கிக் கொள்ளுகிறீர்கள் என்று ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் எச்சரிக்கை செய்கிறேன். மதத்தைக் குறித்து நான் நன்ருகப் படித்திருக்கிறேன். வெறித்தனத்தை எந்த மதமும் போதிக்கவில்லை என்பதை அறிவேன். இதில் இஸ்லாமும் விலக்கானது அல்ல. பைத்தியக்காரத்தனமான செய்கைகளை உடனே விட்டுவிடுமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளு

கிறேன். உங்களுக்கு அனுபவிக்கத் தெரியாததால் இனிமையான சுதந்திரத்தை நீங்கள் இழந்துவிட்டீர்கள் என்று உங்கள் வருங் கால சந்ததியினர் சொல்லாமலிருக்கட்டும். இந்த வெறித் தனத்தை நீங்கள் நிறுத்தாது போனால், இந்தியாவின் பெயர் உலகத்தின் கண்ணில் வெறும் மண்ணாகத்தான் தோன்றும் என்பது உங்களுக்கு நினைவிருக்கட்டும்.''

—'ஹரிஜன்' – 21—9—1947

# 5

# நடந்ததை மறந்துவிடுக

"அழகான ஜும்மா மசூதிக்குச் சென்றிருந்தேன். உலகத்தில் வேறு எந்த மசூதிக்கும் இது இரண்டாவதானது அல்ல. முஸ்லிம் ஆண்களும் பெண்களும் அங்கே ஆழ்ந்த துயரத்தில் இருந்ததைப் பார்த்து என் மனம் வேதனைப்பட்டது. சாவு எல்லோருக்கும் வந்தே தீரும் என்று அவர்களிடம் கூறி அவர் களுக்கு ஆறுதலை உண்டாக்க முயன்றேன். இறந்துவிட்டவர் களுக்காக அழுது பயனில்லை. அழுவதால் இறந்தவர்கள் திரும்பி வந்துவிடப் போவது இல்லை. இந்த மகத்தான நாட் டைப் பாதுகாக்க வேண்டியது எல்லோருடைய கடமையாகும். நாள்தோறும் என்னைப் பார்க்க பல முஸ்லிம் நண்பர்கள் வரு கிறார்கள். தங்கள் நிலையை மனம் விட்டு முழுவதும் சொல்லி விடுமாறு அவர்களுக்கு யோசனை கூறுகிறேன். டில்லியிலோ, இந்தியாவின் எப்பகுதியிலோ முஸ்லிம்களின் உயிருக்கு ஆபத்து இருப்பதைக் குறித்து வருந்துகிறேன். இது சகிக்க முடியாத பெரிய அக்கிரமம். எனது நீண்ட வாழ்நாளில் நான் எத் தனையோ அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். ஆகையால், இக் கிழவன் சொல்லுவதைக் காது கொடுத்துக் கேட்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தீமைக்குப் பதிலாகத் தீமையைச் செய்வதால் நன்மையே இல்லை என்பதை நான் முற்றிலும் அறிந்திருக்கிறேன். நல்லதற்கு நல்லதைச் செய்து விடுவது என்பதில் பெருமை எதுவும் இல்லை. தீமை செய்த வருக்கும் நன்மையையே செய்வது என்பதுதான் உண்மையான வழி. அநேக முஸ்லிம் நண்பர்கள் உதவி செய்ய விரும்புவார்கள். ஆனால், டில்லியில் இன்று அவர்களுடைய தீவிரமான சேவை யைப் பெறுவது அசாத்தியமானதாக இருக்கிறது.

"நடந்துவிட்டதை மறந்துவிடும்படி சீக்கியர், ஹிந்துக்கள், முஸ்லிம்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பட்ட கஷ்டங்களையே நினைத்துக்கொண்டிருக்க வேண்டாம். ஆனால், சகோதரத்துவ வலக் கரத்தை ஒருவருக்கொருவர் அளித்து, ஒருவரோடொருவர் சமாதானமாக வாழ்வது என்று உறுதிகொள்ளுங்கள். இந்திய

யூனியனைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக முஸ்லிம்கள் பெருமைப் படவேண்டும். மூவர்ணக் கொடியை அவர்கள் வணங்கவேண்டும். அவர்கள் தங்கள் மதத்தினிடம் பக்தி விசுவாசத்துடனிருப்பார் களானால், எந்த ஹிந்துவும் அவர்களுக்கு விரோதிகளாக இருக்க முடியாது. அதே போல ஹிந்துக்களும் சீக்கியரும், சமாதா னத்தை விரும்பும் முஸ்லிம்களைத் தங்கள் மத்தியில் வரவேற் றுக்கொள்ள வேண்டும். இங்கே இருக்கும் முஸ்லிம்கள் ஆயுதங் களை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவற்றை முஸ்லிம்கள் உடனே அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆயுதங்களை வைத்திருந்ததற்காக அவர்கள் மீது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஹிந்துக்களும் சீக்கியரும் அதே போன்றே செய்ய வேண்டும். மேற்கு பஞ்சாப் அரசாங்கம், முஸ்லிம்களுக்கு ஆயுங்களைக் கொடுத்து வருகிறது என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையாக இருக்குமானால், இது முற்றிலும் தவறானது; நாளா வட்டத்தில் இது அவர்களுடைய நாசத்தில்தான் போய் முடியும். எனவே, இது உடனே நிற்க வேண்டும். லைசென்ஸ் பெறாத ஆயுதம் எதையும் யாரும், எங்கும் வைத்திருக்கக்கூடாது.

"கிழக்கு பஞ்சாபுக்கும் மேற்கு பஞ்சாபுக்கும் நான் போவது சாத்தியமாவதை முன்னிட்டு, டில்லியில் சீக்கிரத்தில் அமைதியான நிலைமை ஏற்படும்படிச் செய்யுமாறு எல்லோரையும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் மேற்கொண்டிருக்கும் பணி ஒன்றே ஒன்றுதான். ஒவ்வொருவருக்கும் நான் சொல்லு வதும் ஒன்றே ஒன்றுதான். டில்லிவாசிகள் தாற்காலிகமாக வெறி பிடித்துப் போய்விட்டார்கள், ஆனால், அவர்களுக்குப் புத்தி வந்துவிட்டது என்று உங்களைப்பற்றிச் சொல்லுவது சாத்திய மாகட்டும். உங்கள் பிரதம மந்திரியும், துணைப் பிரதம மந்திரியும் திரும்பவும் தலை நிமிர்ந்து நிற்க அனுமதியுங்கள். இன்று அவர்கள் வெட்கத்தினாலும் துக்கத்தினாலும் தலை குனிந்து இருக்கின்றனர். விலை மதிக்க முடியாத பாரம்பரியம் அவர் களிடம் இருக்கிறது. அது உங்களுக்கும் சொந்தமானது என்பது உங்களுக்கு நினைவு இருக்கட்டும். அதைப் பாதுகாத்து, அது மாசுபட்டுவிடாமல் வைத்திருக்க வேண்டியது உங்கள் கடமை.

"*1915*-இல், காலஞ் சென்ற பிரின்ஸிபால் ருத்திராவின் வீட்டில் நான் தங்கியிருந்தேன். அவர், இந்தியாவின் மகனாக இருந்ததைப் போன்றே தீவிரமான கிறிஸ்தவர். காலஞ் சென்ற ஹக்கீம் சாகிபுடனும் டாக்டர் அன்சாரியுடனும் எனக்குப் பழக்கத்தை உண்டாக்கி வைத்தவர் ஸ்ரீ ருத்திராவே. அவர்களிரு வரும், முஸ்லிம்களிடமும் ஹிந்துக்களிடமும் மற்ற இந்திய ரிடமும் ஒரேவிதமான அன்பையும் மரியாதையையும் காட்டு பவர்கள். ஹக்கீம் சாகிபிடம் ஆயிரக்கணக்கான ஏழை ஹிந் துக்கள் இலவசமாக வைத்தியம் செய்துகொண்டு போனதை அறிவேன். அவர் சந்தேகத்திற்கு இடமின்றி டில்லி முழுமையும்

அன்பு செலுத்திய சர்தாராக இருந்தார் என்பதில் சந்தேகமில்லை. இப்படிப்பட்டவர்களை யெல்லாம் தகுதியற்றவர்கள் என்று சொல்லிவிடுவதா? டாக்டர் அன்சாரியின் மகள் ஜோராவும் அவருடைய கணவர் டாக்டர் ஷவுகதுல்லா கானும், ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் பயந்துகொண்டு வீடுவாசலை விட்டு விட்டு ஹோட்டலில் வசிக்க நேர்ந்திருப்பது வெட்கப்பட வேண்டிய விஷயமாகும். இத்தகைய உயர்ந்த மனிதர்களை உற்பத்தி செய்திருக்கும் முஸ்லிம்கள், முழுப் பாதுகாப்புடன் யூனியனில் வாழ முடியவில்லை என்றால், உயிர் வாழ்வதில் எல்லாச் சிரத்தையையும் நான் இழந்துவிட்டவனாகிறேன் என்பதைத் தாராளமாக ஒப்புக்கொள்ளுகிறேன். முஸ்லிம்களெல்லோரும் யூனியனில் ஐந்தாம் படையினராக இருக்கிறார்கள் என்று எனக்குச் சொல்லுகிறார்கள். ஒரேயடியாக எல்லோரையும் இவ்விதம் கூறி விடுவதை நம்புவதற்கு நான் மறுக்கிறேன். யூனியனில் நாலரை கோடி முஸ்லிம்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே அப்படி மோசமானவர்களாக இருப்பார்களாயின், இஸ்லாமுக்கு இவர்கள் சவக் குழியைத் தோண்டி விட்டவர்களாவார்கள். யூனியனில் இருக்கும் முஸ்லிம்கள், யூனியனிடம் பக்தி விசுவாசத்துடனிருக்கவேண்டும் என்று காயிதே ஆஜம் கேட்டுக் கொண்டிருக்கிறார். துரோகிகளை அரசாங்கம் சமாளித்துக் கொள்ளும் என்று மக்கள் நம்பி இருப்பார்களாக. தாங்களே சட்டத்தை நிறைவேற்றுவதாக மக்கள் கிளம்பிவிடக் கூடாது.''

## எல்லோருக்கும் க்டவுளே புகலிடம்

ஒரே ஒரு அகதிகள் முகாமுக்கு, அதுவும் பழைய டில்லியில் இருப்பதற்கு மாத்திரமே காந்திஜி போய்ப் பார்க்க முடிந்தது. அதில் முஸ்லிம் அகதிகள் பலர் இருந்தனர். காந்திஜி சென்ற மோட்டார், கூட்டத்தின் நடுவே போய்க் கொண்டிருந்தபோது, இன்னும் அநேக அகதிகள் வந்து கொண்டிருந்தனர் எனத் தெரிந்தது. கூட்டம் பெரியதாக இருந்தபோதிலும், முகாமின் தளபதி அப்பொழுதில்லாத போதிலும், அகதிகளுக்கு ஆறுதல் அளிக்கச் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுத்தான் போவது என்று காந்திஜி வற்புறுத்தினர். உட்காரும்படியும், காந்திஜி கூறுவதைப் பொறுமையாக இருந்து கேட்டுக் கொள்ளுமாறும் முஸ்லிம் ஊழியர்கள், கூட்டத்தினரைக் கேட்டுக் கொண்டனர். அவர்கள் எல்லோரும் உட்கார்ந்துவிட்டார்கள். ஓரத்தில் இருந்தவர்கள் மாத்திரமே நின்றார்கள். அவர்களுடைய பார்வையில் கோபம் இருந்தது. ஏதேதோ சொல்லிக் கொண்டேயிருந்த கூட்டத்தினரை முஸ்லிம் தொண்டர்கள் சமாதானப் படுத்தி அமைதியாக இருக்கும்படிச் செய்தனர். காந்திஜி அதிகமாகப் பேசுவதற்கு எதுவும் இல்லை. திவான் சமன்லாலின் தோளின்மீது சாய்ந்து கொண்டே காந்திஜி கூறிய சில வாக்கியங்களைக் கூட்டத்தினருக்கு அவருடைய உரத்த குரலில்

கூறும்படி கேட்டுக் கொண்டார். காந்திஜி மெல்லிய குரலிலேயே பேசினார். காந்திஜி கூறியதாவது: "அமைதியாக இருப்பதோடு கோபத்தை விட்டுவிடுமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். மனிதன் என்னதான் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவனாயினும், நம் எல்லோருக்கும் கடவுளே புகலிடமேயன்றி மனிதன் அல்ல. மனிதன் கெடுத்துவிட்டதை கடவுள் ஒழுங்காக்கிவிடுவார். என்னைப் பொறுத்தவரையில் உங்களுக்கு ஒரு வாக்குறுதியளிக்கிறேன். டில்லியில் இரு சமூகங்களையும் சேர்ந்த அநேகர் இப்பொழுது வெறி பிடித்தவர்களாகி விட்டார்கள். ஆனால், முன்னாலிருந்ததைப்போன்று டில்லியில் திரும்பவும் அமைதி ஏற்படும் வரையில் நான் ஓய்ந்திருக்க மாட்டேன் என்பது உறுதி."

அன்று பல முஸ்லிம், ஹிந்து நண்பர்களை காந்திஜி சந்தித்துப் பேசினார். கஷ்டப்பட்டுவிட்ட ஹிந்துக்களோ, முஸ்லிம்களோ, எல்லோருமே அதே பழைய சோகக் கதைகளையே சொன்னார்கள். காந்திஜி கூறியதாவது: "இந்த நிலைமை இரு சமூகத்தினருக்குமே வெட்கக்கேடானதாகும். நான் எல்லோருக்கும் சமமான சேவகன். ஜனத்தொகை பரிவர்த்தனை என்பது படுமோசமான ஒரு பொறி என்பதை இரு சமூகத்தினரும் ஒன்றுபட்டு முடிவு செய்து கொண்டுவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இன்னும் அதிகத் துயரத்தை உண்டாக்குவதைத் தவிர அது வேறு எதுவும் அல்ல. இரு சமூகத்தினரும் அவர்கள் வாழ்ந்து வந்த இடங்களிலேயே அமைதியோடும் நட்புடனும் வாழ்வது ஒன்றிலேயே இப்பிரச்னைக்குப் பரிகாரம் இருக்கிறது. இப்பொழுது இருந்துவரும் மனக் கசப்பை நிரந்தரமான விரோதமாக்கி விடுவது மடத்தனமே ஆகும். தங்கள் சிறுபான்மையினருக்குப் பூரணமான பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டியது இரு டொமினியன்களின் கடமையாகும். இரு டொமினியன்களும் இப் பிரச்னையில் தங்களுக்குள் பேசி ஒரு சமரச முடிவுக்கு வரட்டும். அல்லது அவசியமானால் இதற்காக இரண்டும் போராடி உலகம் தங்களைப் பார்த்து சிரிக்கும்படி செய்து கொள்ளட்டும். இந்திய யூனியனிலிருந்து வரும் முஸ்லிம் அகதிகளுக்காகப் பண உதவி செய்யும்படி காயிதே ஆஜம் ஜின்னா தீவிரமாக வேண்டுகோளை விடுத்து வருகிறார். ஆனால், பாகிஸ்தானில் முஸ்லிம்கள் செய்யும் அக்கிரமங்களைக் குறித்து அவர் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. இரு டொமினியன்களும், தங்கள் பெரும்பான்மையினர் செய்திருக்கும் அக்கிரமங்களை மனம்விட்டு பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

புதுடில்லி, 14-9-'47

—'ஹரிஜன்' - 21—9—1947

# 6

# அரசாங்கங்கள், மக்கள் கடமை

பிரார்த்தனைக்குப் பிறகு கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது :

"நாட்டின் அபிவிருத்தியைத் தடைப்படுத்தும் வகையில் சங்கடங்கள் ஏற்பட்டிருப்பதன் காரணம் என்ன என்பதிலேயே என் எண்ணமெல்லாம் இப்பொழுது இருந்து வருகிறது. மேற்கு பாகிஸ்தானின் மாகாணங்களிலிருந்து வெளியேறி இத்தனை ஹிந்துக்களும் சீக்கியரும் ஏன் வந்து கொண்டிருக்கிறார்கள்? ஹிந்துவாகவோ. சீக்கியராகவோ இருப்பது ஒரு குற்றமா? அல்லது தவறான போக்கினால்தான் இவர்கள் வெளியேறி வந்து கொண்டிருக்கிறார்களா? அல்லது கிழக்கில் இருக்கும் இவர்களுடைய மதத்தினர் செய்துவிட்டதற்கு இது தண்டனையா? பிறகு இந்திய யூனியனை எண்ணிப் பார்க்கிறேன். டில்லியிலிருக்கும் முஸ்லிம்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேறும் அளவுக்கு ஏன் பயமடைகிறார்கள்? இரு அரசாங்கங்களுமே முறிந்து போய்விட்டனவா? பொதுமக்கள் தங்கள் அரசாங்கத்தை ஏன் அலட்சியம் செய்கிறார்கள்? லைசென்ஸ் பெறாத ஆயுதங்களை முஸ்லிம்கள் வைத்திருக்கிறார்கள். சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போரிடமிருந்து அவைகளை எடுத்துக் கொண்டுவிடவே அரசாங்கம் இருக்கிறது. அரசாங்கத்திலிருப்பவர்கள் கையாலாகாதவர்களாக இருந்தால், தக்கவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டு அவர்கள் போய் விடவேண்டும். தாங்களே தண்டித்து விடுவது என்று தனிப்பட்டவர்கள் புறப்பட்டுவிடுவது தவறு மாத்திரமல்ல, ஜனநாயகத்திற்கும் விரோதமாகும். இத்தகைய சட்ட விரோதமான காரியங்கள் பாகிஸ்தானிலோ, யூனியனிலோ எங்கே அதிகமாக நடந்தாலும் இவை இந்தியாவுக்கு நல்லவை அல்ல. 'செய்வது, இல்லையேல் சாவது' என்ற முடிவின் பேரிலேயே நான் டில்லியில் இருக்கிறேன். மடத்தனமான இச் சகோதரக் கொலைகளையும், இந்த தேசீய தற்கொலையையும், தங்கள் அரசாங்கத்திற்கே துரோகம் செய்யப்படுவதையும் பார்த்துக் கொண்டு இருந்து விட நான் விரும்பவில்லை. இழந்துவிட்ட புத்தியை இவர்கள் திரும்பப் பெறுவதற்கு கடவுள் இவர்களுக்கு அருள் புரிவாராக!"

'ஹரிஜன்' – 21—9—1947

# 7

# யூனியனிலுள்ள முஸ்லிம்களுக்கு

1947 செப்டம்பர் 19-ஆம் தேதியன்று, தார்யாகஞ்ச் பகுதியில் முஸ்லிம்களின் கூட்டத்தில் காந்திஜி பேசினர். அக்கூட்டத்தின் நடவடிக்கைகளும் காந்திஜி அங்கே பேசியதுமே கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன :

டில்லி நகரில் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளுக்கு வர வேண்டும் என்று சில முஸ்லிம் நண்பர்கள் காந்திஜியைக்கேட்டுக் கொண்டிருந்தனர். இன்னும் அப்பகுதியில் வசித்து வந்த முஸ்லிம்கள், பயந்துகொண்டு வெளியேறிவிடாமலிருக்க வேண்டும் என்பதற்காகவே அங்கே காந்திஜி வரவேண்டும் என்று கேட்டிருந்தனர். இதற்கு காந்திஜி உடனே ஒப்புக்கொண்டார். இன்று மாலை தார்யாகஞ்ச் பகுதிக்கும் சென்றார். வீடுகளிலும் கடைகளிலும் யாருமே இல்லாத தோற்றமே இருந்தது. அவைகளில் சில கொள்ளையிடப்பட்டிருந்தன. இக்காட்சி காந்திஜிக்கு அதிக மன வருத்தத்தை உண்டாக்கியது. ஆஸப் அலி சாகிபின் வீட்டில் சுமார் நூறு முஸ்லிம்கள் கூடியிருந்தார்கள். இந்தியாவில் யூனியனின் விசுவாசமுள்ள பிரஜைகளாக இருந்து வாழ தாங்கள் விரும்புவதாக இந்த முஸ்லிம்கள் காந்திஜியிடம் கூறினர். ஆனால், பத்திரமாக வாழ முடியும் என்பதற்கு, முக்கியமாக முஸ்லிம்களிடம் துவேஷமாக நடந்து கொள்ளும் போலீஸார் சம்பந்தமாக, தங்களுக்கு உத்தரவாதம் வேண்டும் என்று கேட்டார்கள். சிலர், தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களை அழுது கொண்டே சொன்னார்கள். பாகிஸ்தானில் முஸ்லிம்கள் செய்த காரியங்கள் சரி என்று இவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், இன்னொருவர் செய்துவிட்ட தவறுக்கு, நிரபராதிகளானவர்களைத் துன்பப்படுத்தக் கூடாது என்றார்கள்.

## கடவுளையே நம்புக

இவர்களுக்கு காந்திஜி கூறியதாவது : "நீங்கள் வீரத்துடன் இருக்க வேண்டும். என்ன நடந்தாலும் சரி, வீடுவாசல்களை விட்டுவிட்டுப் போய்விடுவதில்லை என்று நீங்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். நீங்கள் பத்திரமாக இருப்பதற்கும், உங்கள் பாதுகாப்புக்கும் கடவுளைத் தவிர வேறு எவரையும் நம்பியிருக்கக் கூடாது. என்னால் முடிந்ததையெல்லாம் செய்வதற்காகவே நான் இங்கே இருக்கிறேன். நோவாகாலியிலும், பீகாரிலும், கல்கத்தாவிலும் 'செய்வது அல்லது சாவது' என்ற பிரதிக்ஞை செய்துகொண்டேன். அதையே இப்பொழுது டில்லி விஷயத்தில் செய்துகொண்டிருக்கிறேன். உண்மையான அமைதி ஏற்பட்டு, போலீஸ், ராணுவ உதவியில்லாமல் ஹிந்துக்களும், சீக்கியரும், முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ ஒப்புக்கொள்

ளுவதற்கு முன்னல், திரும்பி வந்துவிடுமாறு வெளியேறிவிட்டவர்களுக்கு நான் சொல்ல மாட்டேன்.

"ஹிந்துக்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் நண்பனும் சேவகனுமாவது போன்றே, நான் முஸ்லிம்களுக்கும் நண்பன், சேவகன். யூனியனின் விசுவாசமுள்ள பிரஜையாக வாழ விரும்பும் இந்த யூனியனைச் சேர்ந்த எல்லா முஸ்லிம்களும் தமது வீடு வாசல்களுக்குத் திரும்பிவந்து சமாதானத்தோடும் பத்திரமாகவும் வாழும் வரையில், ஹிந்துக்களும் சீக்கியரும் தங்கள் வீடு வாசல்களுக்குத் திரும்பிப் போகும் வரையில் நான் ஓய்ந்து இருந்துவிட மாட்டேன். தென்னப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் வாழ்நாளெல்லாம் முஸ்லிம்களுக்காக நான் சேவை செய்திருக்கிறேன். கிலாபத் நாட்களில் இருந்த ஒற்றுமையை நான் மறந்துவிட முடியாது. அது நீடித்து நிற்கவில்லை என்ருலும், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நட்பு நிரந்தரமாக இருக்க முடியும் என்பதற்கான சாத்தியத்தை அது எடுத்துக் காட்டிவிட்டது. இதற்காகவே நான் வாழ்ந்து, வேலையும் செய்துவருகிறேன். பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்டுவிட்ட ஹிந்துக்களும் சீக்கியரும் தங்கள் வீடுவாசல்களுக்குத் திரும்பிப்போய், அங்கே அவர்கள் மானத்தோடும் பத்திரமாகவும் வாழப் பார்ப்பதற்காக நான் பஞ்சாபுக்குப் போக இருந்தபோது வழியில் டில்லிக்கு வந்தேன். ஆனல், வழியில் நான் டில்லியில் இருந்து தீரவேண்டியவனுகி விட்டேன். தலைநகரில் உண்மையான அமைதி ஏற்படுவதற்கு முன்னல், நான் இங்கிருந்து போய்விட முடியாது. அவ்வாறு சொல்லுபவன் நான் ஒருவனே என்றிருந்தாலும், தங்கள் வீடுவாசல்களை விட்டுப் போய்விட வேண்டாம் என்றுதான் நான் முஸ்லிம்களுக்குக் கூறுவேன். சட்டத்திற்கு உடன்பட்டு நடக்கும், யோக்கியமான, இந்தியாவிடம் விசுவாசமுள்ள பிரஜைகளாக அவர்கள் வாழ்வார்களானல், யாரும் அவர்களைத் தொட்டுவிட முடியாது. நான் அரசாங்கம் அல்ல; என்ருலும், அரசாங்கத்தில் இருப்பவர்களிடம் எனக்குச் செல்வாக்கு உண்டு. அவர்களுடன் நீண்ட நேரம் பேசியுமிருக்கிறேன். இந்தியாவில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்பதையோ, முஸ்லிம்கள் இந்தியாவில் இருக்க விரும்பினல் ஹிந்துக்களுக்கு அடிமையாகவே அவர்கள் வாழ முடியும் என்பதையோ அரசாங்கத்திலிருப்பவர்கள் நம்பவே இல்லை. முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்குப் போய்விடுவதை சர்தார் பட்டேல் ஆதரிக்கிருர் என்று சிலர் சொல்லுகிருர்கள். இந்த யோசனையையே சர்தார் வெறுக்கிருர். ஆனல், இந்தியாவிலிருக்கும் முஸ்லிம்களில் பெரும்பான்மையினர் இந்தியாவிடம் விசுவாசமாக இல்லை என்று தாம் சந்தேகிப்பதற்குக் காரணங்கள் இருக்கின்றன என்று அவர் என்னிடம் கூறினர். அப்படிபட்டவர்கள் பாகிஸ்தானுக்குப் போய்விடுவது தான் நல்லது. ஆனல், சர்தார் செய்யும் காரியங்களை இந்த சந்தேகம் எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. இந்திய யூனியனின் பிரஜைகளாக இருக்க விரும்பும் முஸ்லிம்கள், மற்றெல்லாவற்றை

யும்விட முதலில் யூனியனிடம் விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; தங்கள் நாட்டிற்காக உலகம் முழுவதையும் எதிர்த்தும் போராடத் தயாராயிருக்க வேண்டும் என்பதும் நிச்சயம். பாகிஸ்தானுக்குப் போய்விட விரும்புகிறவர்கள் தாராளமாகப் போய்விடலாம். ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் பயந்து கொண்டு, முஸ்லிம்களில் ஒருவர்கூட யூனியனை விட்டுப்போய் விடக் கூடாது என்றே விரும்புகிறேன். டில்லியிலிருக்கும் முஸ்லிம்கள், தாங்கள் இந்திய யூனியனின் விசுவாசமுள்ள பிரஜைகள் என்று என்னிடம் உறுதிமொழி எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். என் வார்த்தையை மற்றவர்கள் நம்ப வேண்டும் என்று நான் விரும்புவதைப் போன்றே, அவர்கள் வார்த்தையை நான் நம்புகிறேன். எனவே அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. என்னைப் பொறுத்த வரையில், இதை நான் அடையாவிடில் உயிரோடிருக்க நான் விரும்பவில்லை. தவறு எங்கே நடந்திருந்தாலும் அதற்குப் பரிகாரம் தேடியாக வேண்டும். தூக்கிச் சென்றுவிட்ட பெண்களைத் திரும்பிக் கொண்டு வந்து ஒப்படைத்துவிட வேண்டும். பலவந்தமாகச் செய்த மத மாற்றம் செல்லாதது என்று கருத வேண்டும். பாகிஸ்தானைச் சேர்ந்த ஹிந்துக்களும் சீக்கியரும், கிழக்கு பஞ்சாபைச் சேர்ந்த முஸ்லிம்களும் தங்கள் வீடுவாசல்களுக்குத் திரும்பிப் போய்விடச் செய்ய வேண்டும். ஒரு சிறு பெண்கூட, அவள் எந்த மதத்தைச் சேர்ந்தவளாயினும், தான் பத்திரமாக இருப்பதாக அவள் உணரக்கூடிய நிலையை பாகிஸ்தானிலும், யூனியனிலும் உண்டாக்க வேண்டும். காலிகுஜமான் சாகிப், முஜாபர்நகர் முஸ்லிம்கள் ஆகியோரின் அறிக்கையைப் படித்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், நான் பாகிஸ்தானுக்குப் போவதற்கு முன்னால், டில்லியிலிருக்கும் தீயை அணைக்க நான் முயற்சி செய்ய வேண்டும். இந்தியாவும் பாகிஸ்தானும் நிரந்தரமான விரோதிகளாக இருந்து ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக் கொள்ளுமானால். அது இரு டொமினியன்களையும் நாசமாக்கி விடும்; கஷ்டப்பட்டுத் தேடியிருக்கும் சுதந்திரத்தையும் இழந்துவிட நேரும். அந்த நாளைக் காண்பதற்கு உயிரோடிருக்க நான் விரும்பவில்லை."

லைசென்ஸ் இல்லாமல் வைத்திருக்கும் ஆயுதங்களை ஒப்படைத்துவிடுமாறு மௌலானா அகமது சையது, முஸ்லிம்களைக் கேட்டுக்கொண்டார். அந்த இடத்திலிருந்து காந்திஜி புறப்படுவதற்கு முன்னால், அவரை சில கோஷாப் பெண்களிடம் அழைத்துச் சென்றார்கள். தாங்கள் காந்திஜியிடமே எல்லா நம்பிக்கையையும் வைத்திருப்பதாக அப்பெண்கள் கூறினர். கடவுள் ஒருவரிடமே அவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என்று காந்திஜி சொன்னார். தம்மால் இயன்றதைச் செய்ய முயன்று வருவதாகவும் கூறினார்.

—'ஹரிஜன்' – 28—9—1947

# 8

# மனச் சோதனை

இரவில் மிருதுவான, உயிரளிக்கும் மழை பெய்யும் சப்தம் கேட்டது. அந்த சப்தம் மன ஆறுதலையே அளித்திருக்க வேண்டும். ஆனால், என் மனமெல்லாம், டில்லியில் திறந்த முகாம்களில் கிடந்த ஆயிரக்கணக்கான அகதிகள்பால் சென்று விட்டது. நாற்புறமும் நல்ல பாதுகாப்புள்ள தாழ்வாரத்தில் நான் தூங்கிக்கொண்டிருந்தேன். தன் சகோதரனுக்கு எதிராக மனிதன் கொடிய காரியத்தைச் செய்யாதிருந்திருப்பானாயின், இந்த ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தங்க வீடில்லாமலும், அநேகர் விஷயத்தில் உணவில்லாமலும் இப்படிக் கிடந்திருக்கமாட்டார்கள். சில இடங்களில் முழங்கால் அளவு நீரில் இருப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை. இவையெல்லாம் தவிர்க்க முடியாதனவா? 'இல்லை' என்பதே உள்ளுக்குள்ளிருந்து வரும் உறுதியான பதில். இப்பொழுது நம் சுதந்திரம் ஒரு மாதக் குழந்தையே. இந்தச் சுதந்திரத்தின் முதல் பலன் இதுதானா? சென்ற இருபது மணி நேரமாக இதே எண்ணமே எனக்கு இடைவிடாது தோன்றி வருகிறது. என் மௌனம் நல்லதாகப் போயிற்று. எனக்குள்ளேயே ஆராய்ந்து பார்த்துக்கொள்ள என்னால் முடிந்தது. டில்லி மக்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? கருணை என்பது அவர்கள் உள்ளத்தில் கொஞ்சமேனும் எஞ்சி இருக்க வில்லையா? தேசத்தினிடமும் அதன் சுதந்திரத்தினிடமும் பக்தி என்பதும் அவர்கள் புத்தியில் படவில்லையா? முதல் குற்றத்தை ஹிந்துக்களின் மீதும் சீக்கியர்களின் பேரிலும் நான் சுமத்துவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். துவேஷ அலையைத் தடுப்பதற்குப் போதிய மனிதராக அவர்கள் இருக்கக்கூடாதா? 'பயத்தையெல்லாம் விட்டுவிடுங்கள், கடவுளை நம்புங்கள், உங்களிடம் ஆயுதங்களிருப்பதாக ஹிந்துக்களும் சீக்கியரும் பயப்படுவதால் உங்களிடமிருக்கும் ஆயுதங்களையெல்லாம் தேடி எடுங்கள்' என்று முஸ்லிம்களை வற்புறுத்திக் கூறுவேன். ஹிந்து, சீக்கியரிடமும் ஆயுதங்களே இல்லை என்பதல்ல. அதிகமா, குறைவா என்ற அளவைப் பற்றிய விஷயமே இது. சிறுபான்மையினர் கடவுளிடமும், அவருடைய சிருஷ்டியான மனிதன் நியாயத்தையே செய்வான் என்பதிலும் நம்பிக்கை வைப்பதா, அல்லது தாங்கள் நம்பமுடியாதவர்களாக இருப்போரிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளுவதற்குத் துப்பாக்கிகளை நம்பியிருப்பதா என்பதே கேள்வியாகும்.

### அரசாங்கத்தை நம்புக

திட்டமாகவும் உறுதியுடனும் இருக்குமாறு ஆலோசனை கூறுகிறேன். இதனால் நன்மை அதிகமுண்டு. தவறு செய்கிறவர்

களிடம் எவ்வளவுதான் பலமான ஆயுதங்களிருந்தாலும், அவர்களிடமிருந்து எல்லோரையும் அரசாங்கம் பாதுகாக்கும் என்று நம்புங்கள். மேலும், சிறுபான்மையினர் ஒவ்வொருவரிடமிருந்தும் பறிக்கப்பட்டுவிட்ட சொத்துக்களுக்கு ஈட்டைக் கேட்டுப் பெறுவதற்கும் அரசாங்கத்தை நம்புங்கள். செத்துவிட்டவர்கள் உயிர் பெறும்படிச் செய்வது ஒன்றுதான் அரசாங்கத்தினல் முடியாதது. பாகிஸ்தான் அரசாங்கம் நியாயத்தைச் செய்தாக வேண்டும் என்று கேட்பதை டில்லி மக்கள் கஷ்டமானதாக்கி விடுவார்கள். நீதி வேண்டும் என்பவர்கள் நீதியாக நடந்து கொள்ளவும் வேண்டும்; தாங்கள் தவறு செய்யாமலும் இருக்க வேண்டும். ஹிந்துக்களும் சீக்கியர்களும் நியாயமான வழியில் நடந்து, வீடுவாசல்களிலிருந்து விரட்டப்பட்டுவிட்ட முஸ்லிம்களைத் திரும்ப வருமாறு அழைக்கட்டும். எல்லா வகையிலும் மேற்கொள்ளுவதற்குச் சிறந்ததான இக்காரியத்தை அவர்கள் தைரியமாகச் செய்வார்களாயின், அகதிகள் பிரச்னையை மிக எளிதானதாக அவர்கள் செய்துவிடுபவர்களாவர். பாகிஸ்தானிடமிருந்து மாத்திரமல்ல, உலகம் முழுவதிலிருந்தும் அவர்கள் போற்றப்படுவர். டில்லியையும் இந்தியாவையும் அவமானத்திலிருந்தும் நாசத்திலிருந்தும் காத்தவர்களுமாவார்கள். லட்சக் கணக்கில் ஹிந்துக்களையும் சீக்கியரையும் முஸ்லிம்களையும் பரிவர்த்தனை செய்துகொள்ளுவது, என்னைப் பொறுத்தவரை, எண்ணியும் பார்க்க முடியாதது. அது தவறுமாகும். மக்களைப் பரிவர்த்தனை செய்வதில்லை என்று திடமாகக்கொண்டு விடும் நியாயம், பாகிஸ்தான் தவறு செய்ய முடியாதபடிச் செய்து விடும். இதற்குச் சாதகமாக எழும் குரல், என் குரல் ஒன்ருகவே இருந்தாலும், இதை எதிர்த்து நிற்கும் தீரம் எனக்கு இருக்கும் என்றே நம்புகிறேன்.

புதுடில்லி, 17—9—'47 —'ஹரிஜன்' – 28—9—1947

# 9

# ராஷ்டிரீய சேவா சங்கத்தினருக்கு

**16**-ஆம் தேதி 'பங்கி காலனி'யில் கூடியிருந்த 500 ராஷ்டிரீய சேவா சங்க உறுப்பினருக்குக் காந்திஜி கூறியதாவது:

"உங்கள் சங்கத்தை ஸ்தாபித்தவரான ஸ்ரீ ஹெட்ஜ்வார் உயிருடனிருந்தபோது, பல ஆண்டுகளுக்கு முன்னல், வர்தாவுக்கு அருகிலிருந்த ராஷ்டிரீய சேவா சங்க முகாமுக்கு நான் வந்திருக்கிறேன். காலஞ் சென்ற ஸ்ரீ யமுனலால் பஜாஜ் என்னை அங்கே அழைத்துச் சென்ருர். அவர்களிடமிருந்த கட்டுதிட்டம், தீண்டாமையை அடியோடு அவர்கள் ஒழித்திருந்தது, அவர்களுடைய கண்டிப்பான எளிமை ஆகியவை என்னை அதிகமாகக்

கவர்ந்தன. அதன் பிறகு சங்கம் வளர்ந்திருக்கிறது. சேவை, தன்னலத் தியாகம் ஆகியவைகளைக் கொண்ட எந்த ஸ்தாபனமும் பலமுள்ளதாக வளர்ந்தே தீரும் என்பதை நான் நன்ருக அறிவேன். ஆனல், அந்த ஸ்தாபனம் உண்மையிலேயே பலமுள்ளதாக இருப்பதற்கு, தன்னலத் தியாகத்துடன், நோக்கத்தின் தூய்மையும், உண்மையான அறிவும் கலந்திருக்க வேண்டியது அவசியம். இந்த இரண்டும் இல்லாத தியாகம், சமூகத்தின் நாசமாகவே முடிகிறது என்பது நன்ருகத் தெரிந்திருக்கிறது.

## சனதனி ஹிந்து

"ஆரம்பத்தில் பாடப்பட்ட பிரார்த்தனை கீதம், இந்தியத் தாயையும், ஹிந்து கலாச்சாரத்தையும், ஹிந்து மதத்தையும் போற்றுகிறது. நான் சனதனி ஹிந்து என்று கூறிக்கொள்ளுகிறேன். சனதன என்ற சொல்லின் மூலப் பொருளை நான் எடுத்துக்கொள்ளுகிறேன். ஹிந்து என்ற சொல் எப்படி வந்தது என்பது யாருக்கும் தெரியாது. இப்பெயர் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. நாமும் அதை வைத்துக்கொண்டிருக்கிருேம். உலகத்தின் எல்லா மதங்களிலும் காணும் சிறந்தவைகளையெல்லாம் ஹிந்து மதம் கிரகித்துக்கொண்டிருக்கிறது. இந்த வகையில் பார்த்தால், இது தனித்ததான மதமே அல்ல. எனவே, துரதிருஷ்டவசமாக இன்று இருந்து வருவதைப் போன்று, இஸ்லாமிடமோ, அதைப் பின்பற்றுகிறவர்களிடமோ ஹிந்து மதத்திற்கு எந்தச் சச்சரவும் இருப்பதற்கில்லை. தீண்டாமை என்ற விஷம் ஹிந்து மதத்தில் புகுந்துவிட்ட போதே, அதற்குச் சரிவும் ஆரம்பமாகிவிட்டது. ஒன்று மாத்திரம் நிச்சயம்; அதை நான் பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டும் வருகிறேன். தீண்டாமை உயிருடனிருக்குமானல், ஹிந்து சமயம் செத்துத்தான் ஆகவேண்டும். அதே போல, இந்தியாவில் ஹிந்துக்களைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை என்று ஹிந்துக்கள் நினைப்பதாயிருந்தால், ஹிந்துக்களல்லாதவர்கள், முக்கியமாக முஸ்லிம்கள் இங்கே வாழ விரும்பினல் ஹிந்துக்களின் அடிமைகளாகத்தான் அவர்கள் வாழவேண்டும் என்று நினைத்தால், ஹிந்துக்கள் ஹிந்து மதத்தையே கொன்றுவிடுவார்கள். இதே போன்று பாகிஸ்தானில் முஸ்லிம்களுக்கு மாத்திரமே நியாயமான உரிமை உண்டு என்று பாகிஸ்தான் நம்பினல், முஸ்லிம் அல்லாதவர்கள் தங்களுக்குத் தாழ்ந்தவர்களாகவும் தங்கள் அடிமைகளாகவுமே வாழ முடியும் என்றும் நம்பினல், இந்தியாவில் இஸ்லாமுக்குச் சாவு மணி அடித்துவிட்டதாகவே ஆகும்.

"இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது என்பது துரதிருஷ்டமான உண்மை. இதில் ஒரு பகுதி வெறி பிடித்துப் போய் ஆபாசமான செய்கைகளைச் செய்து வருமானல், அதனல் இன்னுமொரு பகுதியும் அதே போலச் செய்ய வேண்டுமா? தீமை செய்தவர்களுக்குத் திருப்பி தீமையையே செய்துவிடு

வதில் லாபம் எதுவும் இல்லை. தீமை செய்தாருக்கும் நன்மையே செய்யுமாறு மதம் நமக்குப் போதிக்கிறது.

"உங்கள் குருஜியைச் சில நாட்களுக்கு முன்னால் பார்த்தேன். சங்கத்தைக் குறித்து கல்கத்தாவிலும் டில்லியிலும் என்னிடம் கூறப்பட்ட பல புகார்களைப் பற்றி அவரிடம் சொன்னேன். குருஜி என்னிடம் ஒரு உறுதிமொழி கூறினார். சங்கத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒழுங்காகவே நடந்துகொண்டு வருவதாக தாம் உறுதி கூற முடியாவிட்டாலும், ஹிந்துக்களுக்கும் ஹிந்து சமயத்திற்கும் சேவை செய்வதுதான் கொள்கை என்றும், அப்படி சேவை செய்வது இன்னொருவருக்குத் தீமை செய்வது அல்ல என்றும் அவர் என்னிடம் கூறினார். ஆக்ரமிப்பில் சங்கத்திற்கு நம்பிக்கை இல்லை. அகிம்சையிலும் அதற்கு நம்பிக்கை இல்லை. தற்காப்புக் கலையை அது போதிக்கிறது. திருப்பித் தாக்க அது போதிப்பதே இல்லை என்றார்.

"இன்று இந்தியக் கப்பல், கொந்தளிப்பு மிகுந்திருக்கும் கடலில் போய்க் கொண்டிருக்கிறது. இந்தியாவின் மிகச் சிறந்த தலைவர்கள் அரசாங்கத்தை நடத்தி வருகிறார்கள். இவர்களிடம சிலர் அதிருப்தியடைந்துள்ளனர். உங்களால் முடிந்தால் இவர்களைவிடச் சிறந்தவர்களைக் கொண்டுவாருங்கள்; தங்களை விட மேன்மையானவர்களிடம் கடிவாளத்தைக் கொடுத்துவிடுமாறு இவர்களுக்கு நான் ஆலோசனை கூறிவிடுகிறேன். சர்தாரோ கிழவராகிவிட்டார். பண்டித ஜவாஹர்லால் வயதில் கிழவரல்லவெனினும், அவர் சுமந்துவரும் பளுவினால் கிழவராகவும் களைத்தவராகவும் தோன்றுகிறார். மக்களுக்குச் சேவை செய்ய தங்களால் முடிந்த வரையில் இவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். ஆனால், இவர்களுக்குத் தோன்றுகிற வழியில்தான் இவர்கள் எதையும் செய்ய முடியும். ஹிந்துக்களில் ஏராளமானவர்கள், ஒரு குறிப்பிட்ட வழியில்தான் தாங்கள் செல்ல வேண்டும் என்று விரும்புவார்களானால், அந்த வழி தவறானதாகவே இருந்தாலும், அவர்களை யாரும் தடுத்துவிட முடியாது. ஆனால், அவர்கள் போகும் வழி தவறானது என்று சொல்லவும், அவர்களை எச்சரிக்கை செய்யவும் ஒரு தனி நபருக்கும் உரிமை உண்டு. இதையே நான் செய்துகொண்டிருக்கிறேன். நான் முஸ்லிம்களின் நண்பன் என்றும், ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் விரோதி என்றும் என்னைச் சொல்லுகிறார்கள். பார்சிகளுக்கும் மற்றவர்களுக்கும் நண்பனாக இருப்பதைப் போன்றே முஸ்லிம்களுக்கும் நான் நண்பன் என்பது உண்மை. இதில் நான் என் பன்னிரண்டாவது வயதில் இருந்ததைப் போன்றே இன்றும் இருக்கிறேன். ஆனால், என்னை ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் விரோதி என்று சொல்லுகிறவர்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் மாத்திரமல்ல, யாருக்குமே எதிரியாக நான் இருக்க முடியாது.

"பாகிஸ்தான் விடாமல் தவறுகளையே செய்துகொண்டு போகுமானால், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் உண்

டாகும். என் இஷ்டம் போல் நடக்க முடிந்தால், ராணுவத்தை வைத்துக்கொள்ளமாட்டேன்; போலீஸுங்கூட இருக்காது. ஆனால், இதெல்லாம் வீணான பேச்சுக்கள். அரசாங்கம் நான் அல்ல. ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் பாகிஸ்தான் எடுத்துக் கூறி, வீடு வாசல்களை விட்டு வெளியேற வேண்டாம் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டு, எல்லா வகையிலும் அவர்கள் பத்திரமாக வாழும்படி ஏன் செய்யக்கூடாது? இந்திய யூனிய னில் இருப்பவர்கள், ஒவ்வொரு முஸ்லிமுக்கும் பாதுகாப்பு இருக்கும்படி ஏன் செய்யக்கூடாது? இன்று இரு தரப்பாரும் பைத்தியம் பிடித்துப் போய்விட்டவர்களாகவே தோன்றுகின்ற னர். இதன் பலன் நாசத்தையும் துயரத்தையும் தவிர வேறு எதுவும் அல்ல.

"சங்கம் ஒழுங்கான அமைப்பையுடையது; கட்டுப்பாட்டோடு கூடிய ஸ்தாபனம். அதன் பலத்தை இந்தியாவின் நன்மைக் காகவோ, இந்தியாவுக்கு எதிராகவோ உபயோகிக்க முடியும். சங்கத்தின் மீது கூறப்படும் புகார்களில் ஏதாவது உண்மையும் உண்டா என்பது எனக்குத் தெரியாது. குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை ஒரே மாதிரியான தனது நடவடிக்கை களின் மூலம் நிரூபிக்க வேண்டியது சங்கத்தின் பொறுப்பு."

காந்திஜி முடிவில் கேள்வி கேட்பவர்கள் கேட்கலாம் என் றார். தீமை செய்பவரைக் கொன்றுவிட ஹிந்து தருமம் அனு மதிக்கிறதா என்று ஒருவர் கேட்டார். இதற்குக் காந்திஜி கூறியதாவது: "அனுமதிக்கிறது, அனுமதிக்கவுமில்லை. தீமை செய்யும் ஒருவர் இன்னொருவரை தண்டிக்க முடியாது; தண்டிப் பது என்பது அரசாங்கத்தின் வேலையேயன்றி மக்களின் வேலை அல்ல."

—'ஹரிஜன்' –28—9—1947

# 10

# கோபத்தை அடக்குக

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது:

"இன்று மிக மிக முக்கியமானதாக இருந்துவரும் பிரச் னைக்கு வருகிறேன். உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பை யும், அதனால் உண்டாகியிருக்கும் ஆத்திரத்தையும் புரிந்து கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், நீங்கள் அடைந்திருக் கும் சுதந்திரத்திற்கு நீங்கள் தகுதியானவர்களாக இருக்கவேண் டுமானால், உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பை நீங்கள் அடக்கிக் கொள்ளவும், அரசாங்கம் சிறந்ததையே செய்யும் என்று நம்பிக்கை வைக்கவும் நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

என் அகிம்சை வழியை உங்களுக்குச் சொல்லவே நான் மிகவும் விரும்புவேன். ஆனால், அதற்கான கட்டத்தில் நான் இப்பொழுது இல்லை என்பதை அறிவேனுகையால், என் அகிம்சை வழியை நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்ல வரவில்லை. ஜனநாயக நாட்டு மக்கள் அனுசரித்து வந்திருக்கும் வழியை நீங்கள் அனுசரிக்க வேண்டும் என்றுதான் கூறுகிறேன். ஜனநாயகத்தில் தனிப்பட்டவரின் இஷ்டம் என்பது, சமூகத்தின் விருப்பத்தினுல் அமைந்த அரசாங்கத்தினுல் ஆளப்பட்டுக் கட்டுப்படுத்தப்படுகிறது. அந்த அரசாங்கம் ஜனநாயகத்தினுல், ஜனநாயகத்திற்காக ஆளப்படுகிறது. தனிப்பட்ட ஒவ்வொருவரும் தன்னிஷ்டம் போல் அதிகாரஞ் செலுத்துவது என்று கிளம்பிவிட்டால், அப்பொழுது அரசாங்கமே இல்லை என்ருகும். அது அராஜகமாகும்; அதாவது சமூகச் சட்டமோ, அரசாங்கமோ இல்லை. சுதந்திரத்தின் நாச வழிதான் அது. ஆகையால், நீங்கள் உங்கள் கோபத்தை அடக்கிக்கொண்டு, நியாயத்தை அரசாங்கம் செய்யட்டும் என்று விடவேண்டும். அரசாங்கம் தனது கடமையைச் செய்ய விடுவீர்களாயின், எல்லா ஹிந்து, சீக்கிய அகதிகளும் கௌரவமாகவும், மதிப்போடும் வீடு வாசல்களுக்குத் திரும்புவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை என்பதே என் கருத்து. பாகிஸ்தானில் அவர்கள் அளவு கடந்த துன்பங்களை அனுபவித்திருக்கிருர்கள், அவர்களுடைய வீடுகள் நாசமாக்கப்பட்டிருக்கின்றன, எத்தனையோ பேர் செத்திருக்கிருர்கள், பெண்களைத் தூக்கிச் சென்றுவிட்டார்கள், பலவந்தமாக மதம் மாற்றியிருக்கின்றனர் என்பதையெல்லாம் நான் தாராளமாக ஒப்புக்கொள்ளுகிறேன். உங்களுக்குத் தன்னடக்கம் இருந்தால், உங்களுடைய பகுத்தறிவைக் கோபம் கெடுத்துவிட அனுமதிக்காமலிருப்பீர்களாயின், பெண்கள் ஒப்படைக்கப் படுவார்கள், பலவந்த மதமாற்றம் செல்லாததாகிவிடும், உங்கள் சொத்துக்களும் உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிடும். ஆனுல், நீங்கள் நீதியின் முறையில் வீணில் குறுக்கிட்டு அதனுல் உங்கள் நியாயத்தைக் கெடுத்துக்கொண்டு விடுவீர்களாயின், மேலே சொன்னவை யாவும் நடவாது போய்விடும். உங்கள் முஸ்லிம் சகோதரர்களையும் சகோதரிகளையும் இந்தியாவிலிருந்து விரட்டியடித்துவிட விரும்புவீர்களானுல், அக்காரியங்களை நீங்கள் எதிர்பார்க்க முடியாது. அத்தகைய யோசனை எதையும் அக்கிரமமானது என்றே கருதுவேன். ரொட்டி கையில் அப்படியே இருக்கவும் வேண்டும், அதைத் தின்னவும் வேண்டும் என்று இரண்டுக்கும் ஆசைப்பட்டு பயனில்லை. பாகிஸ்தானில் சிறுபான்மையினரான ஹிந்துக்களும் சீக்கியரும் கொடுமையாக நடத்தப்படுகின்றனர் என்பது உண்மை. கிழக்கு பாஞ்சாலத்தில் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் அதே போல அக்கிரமமாக நடத்தப்படுகின்றனர் என்பதும் உண்மையாகும். குற்றத்தைத் தங்கத் தராசு கொண்டு நிறுத்துவிட முடியாது. இரு தரப்புக் குற்றங்களையும் நிறுத்துப் பார்க்க என்னிடம் எம் முறையும்

இல்லை. இரு தரப்பிலும் குற்றஞ் செய்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகப் போதுமானது. ஒழுங்குபடுத்திக் கொள்ளுவதற்குச் சரியான முறை, இரு தரப்பினரும் குற்றங்களை மனம்விட்டு முழுதும் ஒப்புக்கொண்டு, சமரச முடிவுக்கு வருவதுதான். சமரசம் ஏற்படாவிட்டால் வழக்கமான முறையில் மத்தியஸ்தரின் முடிவுக்கு விட்டுவிட வேண்டும். மற்றொரு முரட்டுத்தனமான முறை, யுத்தம். இந்த எண்ணத்தையே நான் வெறுக்கிறேன். ஆனால், சமரசமோ, மத்தியஸ்த முடிவோ இல்லை என்றால், இதிலிருந்து தப்புவதற்கு வேறு வழி இல்லை. இதற்கு மத்தியில் நல்ல புத்தி ஏற்பட்டு, தாங்களாகவே விரும்பி, பாகிஸ்தானுக்குக் குடி போய்விட்ட முஸ்லிம்களை, பத்திரமாக வாழலாம் என்ற முழு உணர்ச்சியுடன் திரும்பி வந்துவிடுமாறு அவர்களுக்கு அக்கம்பக்கத்தில் வசித்தவர்கள் அழைப்பார்கள் என்று நம்புகிறேன். ராணுவத்தின் உதவியால் இது நடந்துவிடாது. சம்பந்தப்பட்டவர்கள் நிதானமான புத்தியை அடைந்தால்தான் இது முடியும். முடிவாக என்ன செய்வது என்பதைத் தீர்மானித்துக்கொண்டு விட்டேன். சகோதரப் படுகொலைகளின் மூலம் இந்தியா நாசமாவதைப் பார்த்துக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. இந்த நல்ல நாட்டிற்கு அத்தகைய ஆபத்து எதுவும் ஏற்பட்டுவிடுவதற்கு முன்னால், என்னை அழைத்துக்கொண்டுவிட வேண்டும் என்றே நான் இடைவிடாது கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு வருகிறேன். இதற்காக என்னுடன் சேர்ந்து பிரார்த்திக்குமாறு இக்கூட்டத்திலிருக்கும் உங்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்'"

பிர்லா மாளிகை,
புது டில்லி, 18—9—'47

—'ஹரிஜன்' - 28—9—1947

# 11

# வீரத்துடன் இருங்கள்

மாலை 5 மணிக்குக் காந்திஜி புறப்பட்டார். திட்டாக ஹிந்துக்கள் தங்கியிருந்த குச்சா தாராசந்துக்குச் சென்றார். அங்கே நடந்த பெரிய கூட்டத்தில் பேசிய ஹிந்துக்களின் பிரதிநிதி, அந்த இடம் நாற்புறமும் முஸ்லிம்களால் சூழப்பட்டிருக்கிறது என்றார். ஹிந்துக்கள் அனுபவித்துவரும் அவதிகளை மிகவும் அதிகப்படுத்திக் கூறினார். சுற்றிலும் லீகர்களான முஸ்லிம்கள் ஏராளமாக நிறைந்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் ஹிந்துக்களுக்கு எதிராக ஆவேசத்துடன் கிளர்ச்சி செய்தவர்கள் என்றும் அவர் சொன்னார். பாகிஸ்தானில் முஸ்லிம்கள் என்ன செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதோ அதே போலவே இங்கிருக்கும் ஹிந்துக்களும் செய்ய வேண்டும் என்றார். இதற்குக் காந்திஜி கூறிய பதிலாவது :

"முஸ்லிம்களல்லாதவர்களை பாகிஸ்தான் விரட்டியடித்து வருவதைப் போன்று, இந்தியாவிலிருக்கும் முஸ்லிம்களைப் பாகிஸ்தானுக்கு விரட்டியடித்துவிட வேண்டும் என்று சொல்லப்படுவதை நான் ஒத்துக்கொள்ளவே முடியாது. இரண்டு தப்பான காரியங்கள் சேர்ந்தால் ஒரு நல்ல காரியமாகிவிடாது. ஆகையால், நான் கூறும் புத்திமதியைக் கேட்டு வீரத்துடனும் அச்சமின்றியும் நடந்து, ஏராளமான முஸ்லிம்களுக்கு மத்தியில் வாழ்வதில் பெருமைப்படும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

பிறகு காந்திஜி, பட்டாடியிலுள்ள அனுதாலய விடுதிக்குச் சென்று, பயந்துகொண்டு அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்ட அனுதைக் குழந்தைகளைத் திரும்பக் கொண்டு வந்துவிடுமாறு, அதற்குப் பொறுப்பு வாய்ந்தவர்களிடம் கூறினர். பக்கத்திலிருக்கும் முஸ்லிம் வீடுகளிலிருந்து துப்பாக்கித் தோட்டாக்கள் மழை போல் பொழிந்தன என்றும், ஒரு குழந்தை இறந்துவிட்டதோடு மற்ருேர் குழந்தை காயமடைந்தது என்றும் காந்திஜியிடம் கூறினர். செப்டம்பர் 7–ஆம் தேதி வாக்கில் இது நடந்தது. காந்திஜியுடன் சென்ற மௌலானு அகமது சையதும் மற்ற முஸ்லிம் நண்பர்களும், அனுதாலயத்தில் இருப்பவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாதவாறு பக்கத்திலிருக்கும் முஸ்லிம்கள் பார்த்துக் கொள்ளுவார்கள் என்று உறுதி கூறினர்.

அடுத்தபடியாக காந்திஜி ஸ்ரீ பார்கவாவின் வீட்டிற்குச் சென்ருர். அங்கே முஸ்லிம்களின் நடுவில் வசித்த ஒரே ஹிந்து அவர்தான். அவர் வீட்டில் முஸ்லிம்கள் நிறைய இருந்தார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மற்றவர்களும் ஒன்றுபட்டுச் சகோதரர்களாகவும் நண்பர்களாகவும் வாழவேண்டுமென்று பன்னிரண்டு வயதுச் சிறுவனுக இருந்தபோது தாம் கண்டு வந்த கனவு நனவாகும்படி முஸ்லிம்கள் செய்வார்கள் என்று நம்புவதாகக் காந்திஜி கூறினர். அன்று பிர்லா மாளிகையில் நடந்த கூட்டத்தில் காந்திஜி இந்த உண்மைகளையெல்லாம் கூறிவிட்டு மேலும் சொன்னதாவது:

"அந்தக் கனவு நிறைவேற கடவுள் அருள வேண்டும்; இல்லையாஞல், இந்தியாவின் ஒரு பகுதியில் முஸ்லிம்கள் மாத்திரமே இருப்பது, இன்னெரு பகுதியில் ஹிந்துக்கள் மாத்திரமே இருப்பது என்ற பயங்கரத்தை நான் காணுமல் என்னை அவர் கொண்டு போய்விட வேண்டும். கடவுளிடம் நான் செய்து கொள்ளும் இந்தப் பிரார்த்தனையில் நீங்களும் கலந்துகொள்ளுங்கள்."

பிர்லா மாளிகை,
புதுடில்லி, 20--9--'47

—'ஹரிஜன்' - 28—9—1947

# 12

# கடவுளே கதி என்றிருங்கள்

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது:

"டில்லியிலிருக்கும் முஸ்லிம்களை, ஹிந்துக்களும் சீக்கியரும் இன்று பயமுறுத்திக்கொண்டிருக்கிருர்கள். பயம் என்பதே இராமல் தாங்கள் இருக்க வேண்டும் என்றிருப்பவர்கள், மற்றவர்கள் உள்ளத்தில் பயத்தை உண்டாக்காமல் இருக்க வேண்டும். எல்லைப்புற மாகாணத்தில் பானு என்ற நகரில் ஒரு முஸ்லிம் நண்பரின் வீட்டில் நான் வசித்திருக்கிறேன். பானுவிலிருந்து வந்திருக்கும் சிலர் என்னிடம் வந்து, அங்கிருந்து தாங்கள் உடனே வெளியேற்றப்படாவிட்டால் கொல்லப்பட்டு அழிந்து விடுவோம் என்கிருர்கள். அங்குள்ள முஸ்லிம் நண்பர் எப்பொழுதும் போல் உறுதியுடன்தான் இருக்கிருராம். அவர் ஹிந்துக்களைக் காப்பாற்ற முயற்சி செய்வாரெனினும் தன்னந்தனியாக அவரால் எதுவும் செய்துவிட முடியாது. மற்ற முஸ்லிம்கள், எல்லையிலிருந்தும் ஏராளமாக வந்து, அவர்களுக்கு அதிக திகில் ஏற்படும்படிச் செய்து வருகிருர்கள். ஆகையால், தங்களை உடனே மீட்டாக வேண்டும் என்று கேட்கின்றனர். இதற்கு வேண்டிய சக்தி எனக்கு இல்லை. இவ்விவரத்தை பண்டிட்ஜியிடமும் சர்தாரிடமும் தெரிவித்துவிடுகிறேன். நம் சொந்த ராணுவம் வந்து தங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நண்பர்கள் கேட்கிருர்கள். என்ருலும், நான் அடிக்கடி கூறிவருவதைப் போன்று இவர்களிடம், 'கடவுளைத் தவிர வேறு யாரும் உங்களைக் காப்பாற்ற முடியாது. எந்த மனிதனும் இன்ெனாரு மனிதனைக் காக்க முடியாது' என்று சொல்லி வருகிறேன். அடுத்த நாள், ஒரு நிமிடத்திற்குப் பிறகும்கூட தாம் உயிரோடிருக்கப் போவதாக எந்த மனிதனும் சொல்ல முடியாது. என்றும் இருந்தவர், இருப்பவர், இருக்கப் போகிறவர் கடவுள் ஒருவரே. ஆகையால், அவரை வேண்டிக்கொண்டு அவரையே நம்பி இருப்பது மனிதனின் கடமை. என்ருலும், தீமைக்குப் பதில் தீமையைச் செய்வது என்பதை எதிலும், எப்பொழுதும் யாரும் செய்யக் கூடாது.

"சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று காயிதே ஆஜம் ஜின்னுவே வாக்குறுதி அளித்திருந்தும், பாகிஸ்தானில் ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் பயம் ஏற்பட்டிருப்பது விசனிக்கத்தக்க வகையில் அங்கிருக்கும் அரசாங்கத்திற்கே இழுக்காகும். இந்திய யூனியனிலிருக்கும் பெரும்பான்மையினரைப் போன்றே பாகிஸ்தானிலிருக்கும் பெரும்பான்மையினர், அவரவர்களின் நாட்டிலிருக்கும் சிறுபான்மையினரின் கௌரவமும், உயிரும், சொத்துக்களும் தங்கள் கைகளிலேயே இருப்ப

தால், அச் சிறுபான்மையோரைக் காப்பது அவர்களுடைய கண்டிப்பான கடமையாகும். சகோதரர்களாக வாழ்ந்து வந்தவர்கள், ஜாலியன்வாலாபாக் படுகொலேயில் கலந்து ரத்தஞ் சிந்தியவர்கள், இன்று ஏன் விரோதிகளாக இருக்கிருர்கள் என்பது என்னைத் திகைக்க வைக்கிறது. இப்படி இருக்கவே கூடாது என்று என் உடலில் உயிர் இருக்கும் வரையில் சொல்லிக்கொண்டுதான் இருப்பேன். என் அளவு கடந்த மனவேதனையில் தினமும், மணிக்கு மணி, சமாதானம் ஏற்படச் செய்யுமாறு கடவுளிடம் கதறிக்கொண்டிருக்கிறேன். சமாதானம் ஏற்படாது போனுல் என்னை அழைத்துப் போய்விடுமாறும் கடவுளிடம் பிரார்த்தித்து வருகிறேன்.

"மேற்குப் பஞ்சாபிலிருந்து 57 மைல் நீளத்திற்குப் பெரும் ஜனத்திரளாக ஹிந்துக்களும் சீக்கியரும் கிழக்குப் பஞ்சாபுக்கு வந்துகொண்டிருக்கிருர்கள் என்று அறிகிறேன். இது எப்படி என்று எண்ணும்போது என் தலையே சுற்றுகிறது. உலக சரித்திரத்தில் இதுபோல என்றுமே நிகழ்ந்தது இல்லை. இது, உங்களைச் செய்வதைப் போன்றே என்னையும் வெட்கத்தால் தலை குனியும்படிச் செய்கிறது. தவறை அதிகமாகச் செய்தது யார், குறைவாகச் செய்தவர்கள் யார் என்று கேட்டுக்கொண்டிருக்க இது சமயம் அல்ல. இந்த மதிகெட்ட போக்கை நிறுத்தியாக வேண்டிய சமயமே இது.

"இந்தியாவிலிருக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் பாகிஸ்தானிடம் விசுவாசமாக இருக்கிருரேயன்றி, இந்நாட்டினிடம் விசுவாசமாக இல்லை என்று சிலர் என்னிடம் சொல்லுகிருர்கள். முஸ்லிம்கள் ஒருவர் பின் மற்ருெருவராக என்னிடம் வந்து, இதற்கு மாருக என்னிடம் கூறிவருகிருர்கள். எப்படியானுலும், இங்கிருக்கும் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைக் குறித்து பயந்துவிட வேண்டியது இல்லை. எப்படியும் இந்தியாவில் மொத்தத்தில் நாலரைக் கோடி முஸ்லிம்கள், இந்நாட்டில் எங்கும் சிதறி இருந்து வருகிருர்கள். கிராமங்களில் இருக்கும் முஸ்லிம்கள், சேவா கிராமத்திலிருக்கும் முஸ்லிம்களைப் போன்று, ஒரு தீமையுமில்லாத ஏழைகளாக இருந்து வருகின்றனர். பாகிஸ்தானைப்பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை. அவர்களை ஏன் விரட்டிவிட வேண்டும்? துரோகிகள் விஷயத்தில், அப்படி யாராவது இருந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். ஸ்ரீ அமெரியின் மகன் விஷயத்தில் நடந்திருப்பதைப் போல, துரோகிகள் எப்பொழுதும் சுடப்படுகின்றனர். ஆனல், அதுவல்ல என் சட்டம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். இந்தியாவிலிருக்கும் முஸ்லிம்களெல்லாம் பாகிஸ்தானிடம் விசுவாசமுள்ளவர்களாக இருக்கும்படிப் பார்த்துக்கொள்ளுவதற்காகச் சில முஸ்லிம் அதிகாரிகள் இங்கேயே விட்டுவைக்கப்பட்டிருக்கின்றனர் என்று மற்றவர்கள் கூறுகின்றனர். எல்லா ஹிந்துக்களையும் காபிர்களாக

முஸ்லிம்கள் கருதுகிறார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். இது முற்றிலும் தவறானது என்று அறிவாளிகளான முஸ்லிம்கள் என்னிடம் கூறியிருக்கின்றனர். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் எப்படியோ அப்படியே ஹிந்துக்களும் தெய்விக வேதங்களைப் பின்பற்றுகிறவர்கள். எப்படியானாலும், முஸ்லிம்களைப்பற்றிய பயத்தை மனத்திலிருந்து போக்கிவிடுமாறும், அவர்களிடம் அன்பாக இருக்கும்படியும், அவர்களுடைய வீடு வாசல்களுக்குத் திரும்பி வந்துவிடும்படி அவர்களை அழைக்குமாறும், எந்தத் தீமையும் வராது என்று அவர்களுக்கு உத்தரவாதமளிக்க வேண்டும் என்றும் ஹிந்துக்களையும் சீக்கியரையும் கேட்டுக் கொள்ளுகிறேன். பாகிஸ்தானிலிருக்கும் முஸ்லிம்களிடமிருந்தும், எல்லையைத் தாண்டி இருப்பவர்களிடமிருந்துங் கூட, நீங்கள் விரும்பும் மனமாற்றம் இந்த வழியில் நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன். இந்தியாவில் அமைதியும் நல்வாழ்வும் இருப்பதற்கு இதுதான் வழி. இந்தியாவிலிருந்து எல்லா முஸ்லிம்களையும், பாகிஸ்தானிலிருந்து எல்லா ஹிந்துக்களையும் சீக்கியரையும் விரட்டிவிடுவது என்றால், அது யுத்தத்திலும், நாட்டின் நிரந்தரமான நாசத்திலும்தான் முடியும். தற்கொலைக்குச் சமமான இத்தகைய கொள்கையை இரு நாடுகளும் அனுசரிப்பதாயின், பாகிஸ்தானிலும் இந்திய யூனியனிலும் இஸ்லாமுக்கும், ஹிந்து மதத்திற்கும் அழிவாகவே அது ஆகும். நல்லதிலிருந்து மட்டுமே நல்லது பிறக்க முடியும். அன்பிலிருந்து அன்பு பிறக்கும். வஞ்சம் தீர்த்துக்கொள்ளுவதைப் பற்றிய வரையில், தீமை செய்பவனை கடவுள் பார்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடுவதே மனிதனுக்கு உகந்தது. இதைத் தவிர வேறு வழி எனக்குத் தெரியாது.”

—‘ஹரிஜன்’ – 28–9–1947

## 13

# அரசாங்கத்திற்கு வாய்ப்பை அளியுங்கள்

பழிக்குப் பழி வாங்குவது, திருப்பித் தாக்குவது என்ற உணர்ச்சியே சூழ்நிலை முழுவதிலும் நிறைந்திருக்கிறது. டில்லியிலிருக்கும் ஹிந்துக்களும் சீக்கியரும், முஸ்லிம்கள் இங்கே இருப்பதை விரும்பவில்லை. தாங்கள் பாகிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருக்கும்போது, இந்திய யூனியனில், அதுவும் டில்லியில் முஸ்லிம்கள் ஏன் இருக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். இந்தக் கஷ்டத்தை முதலில் உண்டாக்கியதே முஸ்லிம் லீக்தான், ‘போராடிப் பாகிஸ்தானை எடுத்துக்கொள்ளுவோம்’ என்ற கோஷத்தை முஸ்லிம் லீக் கிளப்பியது தவறு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட காரியம் நடந்துவிடும் என்று நான் நம்பவேயில்லை. உண்மையில் பலாத்

காரத்தைக் கொண்டு நாட்டைத் துண்டாக்கிவிட அவர்களால் முடிந்திருக்காது. காங்கிரஸும் பிரிட்டிஷாரும் ஒப்புக்கொண்டிராது போனால், இன்று பாகிஸ்தான் ஏற்பட்டிருக்காது. அது கூடாது என்று இப்பொழுது யாரும் மறுத்துவிட முடியாது. பாகிஸ்தானின் முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தானைப் பெற உரிமை உண்டு. சுதந்திரம் எப்படி கிடைத்தது என்பதை ஒரு கணம் அவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். சுதந்திரத்திற்காக முக்கியமாகப் போராடியது காங்கிரஸ். சாத்விக எதிர்ப்பே அதற்காக உபயோகித்த ஆயுதம். இந்தியாவின் சாத்விக எதிர்ப்புக்குப் பிரிட்டிஷார் விட்டுக் கொடுத்து வெளியேறினர்கள். பலாத்காரத்தைக்கொண்டு பாகிஸ்தான் இல்லாதபடி செய்துவிடுவது, சுயராஜ்யமே இல்லாதபடிச் செய்துவிடுவதாகும். இந்தியாவில் இரு அரசாங்கங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு அரசாங்கங்களும் தங்களுக்குள் தகராறைத் தீர்த்துக்கொள்ளும்படி விட்டுவிட வேண்டியது. மக்கள் கடமை. தினந்தோறும் பலர் கொல்லப்பட்டு வருவது அக்கிரமமான வீண்வேலை என்பது மாத்திரமல்ல, யாருக்கும் நல்லதல்ல, நிச்சயமாகத் தீமையே.

மக்கள் சட்ட விரோதமாக நடந்து, தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ளுவார்களானல், சுதந்திரத்தை ஜீரணித்துக் கொள்ள அவர்களால் முடியவில்லை என்பதை நிரூபித்துக் கொண்டவர்களே ஆவார்கள். ஒரு டொமினியன் நெடுகவும் நியாயமாகவே நடந்துகொண்டு வருமானல், அதே மாதிரி நடந்துகொள்ள இன்னுமொரு டொமினியனையும் கட்டாயப் படுத்தியதாகும். முழு உலகத்தின் ஆதரவும் அதற்கு இருக்கும். காங்கிரஸின் சரித்திரத்தை வேறுவிதமாக மாற்றி எழுதி, மற்ற எந்த மதத்திற்கும் இடமில்லாத ஹிந்து ராஜ்யமாக இந்த யூனியனைச் செய்துவிட நிச்சயமாக நீங்கள் விரும்பமாட்டீர்கள். அந்தக் கேவலமான முறைக்கு உங்களை ஆளாக்கிக்கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 24-9-'47

—'ஹரிஜன்' – 5—10—1947

# 14

# யூனியன் அரசாங்கத்தின் கடமை

பிரார்த்தனை ஆரம்பமாவதற்கு முன்னல் ஒருவர் ஒரு சீட்டில் எழுதி அதை காந்திஜியிடம் அனுப்பினர். 'பாகிஸ்தான் அரசாங்கம், ஹிந்துக்களையும் சீக்கியரையும் பாகிஸ்தானிலிருந்து விரட்டிக்கொண்டிருக்கிறது. இந்திய யூனியனில் முஸ்லிம்கள் சமத்துவமான பிரஜைகளாக இருந்து வரட்டும் என்று நீங்கள் கூறி வருகிறீர்கள். யூனியன் அரசாங்கம் இந்த இரட்

டைச் சுமையை எப்படித் தாங்க முடியும்?' என்று அவர் அச் சீட்டில் எழுதிக் கேட்டிருந்தார். பிரார்த்தனைக்குப் பிறகு இக் கேள்விக்குப் பதிலளித்து காந்திஜி கூறியதாவது :

"பாகிஸ்தானில் ஹிந்துக்களும் சீக்கியரும் கொடுமைப்படுத்தப்படுவதைக் குறித்து இந்திய யூனியன் அரசாங்கம் அலட்சியமாக இருந்துவிட வேண்டும் என்று நான் கூறவில்லை. அவர்களைக் காப்பதற்குத் தங்களால் ஆனதையெல்லாம் செய்தே ஆக வேண்டும். ஆனால், முஸ்லிம்களை இந்திய யூனியன் விரட்டியடித்து, பாகிஸ்தான் அனுசரிக்கும் முறைகளையே இங்கும் செய்ய வேண்டும் என்பது நிச்சயமாக பதிலே ஆகாது. தாங்களாக பாகிஸ்தானுக்குப் போய்விட விரும்புபவர்களைப் பத்திரமாக எல்லைக்குக் கொண்டுபோய் விட்டுவிட வேண்டும். பாகிஸ்தானிலிருக்கும் ஹிந்துக்களும் சீக்கியரும் ஆபத்தில்லாமல் இருக்கப் பார்க்க வேண்டியது இந்திய யூனியன் அரசாங்கத்தின் கடமை. ஆனால், இதற்கு இந்த அரசாங்கம் தன்னிஷ்டப்படி நடந்து கொள்ள அனுமதிப்பதோடு ஒவ்வொரு இந்தியரும் உண்மையான முழு ஒத்துழைப்பையும் அதற்கு அளிக்க வேண்டும். மக்கள் இஷ்டம் போல் தாங்களே நடவடிக்கை எடுத்துக்கொண்டு விடுவது என்பது ஒத்துழைப்பு ஆகாது. நமது சுதந்திரம், இப்பொழுது ஒரு மாதம் பத்து நாளான சிசு. திருப்பித் தாக்கும் பைத்தியக்காரத்தனமான வேலையைத் தொடர்ந்து செய்துவருவீர்களாயின், சுதந்திரத்தை அதன் குழந்தைப் பருவத்திலேயே கொன்றுவிட்டவர்களாவீர்கள்.

"ராமாயணக் கதையை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். ராவணன் அதிக பலம் பொருந்தியவன். ராமரோ, வனவாசம் செய்துகொண்டிருந்தவர். என்றாலும், கண்டிப்பான வகையில் தருமத்தை அனுசரித்து நடந்ததனாலேயே ராவணனை வென்றுவிட ராமரால் முடிந்தது. இருவருமே அதர்ம வழியில் நடந்து கொண்டிருந்தால், இதில் யார் மீது குற்றஞ் சொல்லியிருக்க முடியும்? யார் செய்தது அதிகம், குறைவு என்பதோ, ஆரம்பித்தது யார் என்பதோ, நம் நடத்தை சரியானது என்றாக்கிவிடாது. நீங்கள் வீரமுள்ளவர்கள். அதிக பலம் பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து நின்று போராடியிருக்கிறீர்கள். அப்படியிருக்க இன்று ஏன் இப்படி பலவீனமாகிவிட்டீர்கள்? வீரமுள்ளவர்கள் கடவுளைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சுவதில்லை. முஸ்லிம்கள் துரோகிகளாக இருந்தால், அவர்களுடைய துரோகமே அவர்களைக் கொல்லும். எந்த நாட்டிலும் இந்தத் துரோகம் மிகப் பெரிய குற்றம். துரோகிகளை எந்த அரசாங்கமும் வைத்துக்கொண்டிருக்காது. ஆனால், சந்தேகத்தின் பேரில் மனிதரை விரட்டுவது என்பது யோக்கியமானது அல்ல.

"ராணுவமும் போலீஸும் இந்திய யூனியனில் ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் ஆதரவாகவும், பாகிஸ்தானில் முஸ்லிம்

களுக்கு ஆதரவாகவும் நடந்துகொண்டு வருகின்றன என்று கேள்விப்படுகிறேன்; இதை அறிந்து நான் அதிக மனவேதனை அடைகிறேன். இவர்கள் அந்நிய எஜமானர்களுக்குக் கீழே இருந்த போது, தங்களால் செய்ய முடிந்தது என்ன என்பதைக் குறித்து பயனுள்ள வகையில் எண்ணுவதற்கு அவர்களால் முடியாது. இன்று பிரிட்டிஷ் அதிகாரிகள் உள்பட அவர்கள், நாட்டு மக்களின் சேவகர்கள். ஆகையால் ஊழலோ, பாரபட்சமோ இன்றி அவர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர். போலீஸுக்கும் ராணுவத்திற்கும் பயப்பட வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த விசாலமான நாட்டிலிருக்கும் மக்களோடு ஒப்பிட்டால் அவர்கள் மிகச் சிலரே. கோடிக்கணக்கான மக்கள் யோக்கியமாக நடந்து கொள்ளுவார்களானால், போலீஸும் ராணுவமும் அதே போலவே நடந்து கொள்ளுவதைத் தவிர வேறுவிதமாக நடக்க முடியாது."

பிர்லா மாளிகை,
புது டில்லி,–25—9—'47

–' ஹரிஜன் ' – 5—10—1947

## 15

# இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர்

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியதாவது :

"எல்லாவித யுத்தங்களுக்குமே நான் விரோதமானவன். ஆனால், பாகிஸ்தானிடமிருந்து நியாயம் கிடைப்பதற்கு வேறு வழி இல்லை என்றால், நிரூபிக்கப்பட்டிருக்கும் தவறுகளைக் காண பாகிஸ்தான் பிடிவாதமாக மறுத்து அதை அலட்சியமாகவும் கருதிவருமானால், பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய யூனியன் அரசாங்கம் போருக்குப் போக வேண்டியிருக்கும். யுத்தம் ஒரு தமாஷ் அல்ல. யுத்தத்தை யாரும் விரும்பவில்லை. அதில் நாசமே உண்டு. ஆனால், அநீதியைச் சகித்துக்கொண்டிருந்து விடும்படி யாருக்கும் நான் ஆலோசனை கூறமாட்டேன். நியாயமான ஒரு லட்சியத்திற்காக எல்லா ஹிந்துக்களுமே அடியோடு அழிந்து போவதாக இருந்தாலும், அதற்காகக் கவலைப்படமாட்டேன். யுத்தம் மூண்டால், பாகிஸ்தானிலிருக்கும் ஹிந்துக்கள் அங்கே ஐந்தாம் படையினராக இருக்க முடியாது. அதை யாரும் சகிக்கமாட்டார்கள். பாகிஸ்தானிடம் விசுவாசமாக அவர்களால் இருக்க முடியவில்லையென்றால், அங்கிருந்து அவர்கள் வந்துவிட வேண்டும். அதே போல பாகிஸ்தானிடத்திலேயே விசுவாசம் வைத்திருக்கும் முஸ்லிம்கள் இந்திய யூனியனில் இருக்கக்கூடாது. ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் நியாயம் கிடைக்கும்படிப் பார்க்க வேண்டியது பாகிஸ்தான் அர

சாங்கத்தின் வேலை. தங்கள் இஷ்டப்படி அரசாங்கம் நடக்கு மாறு மக்கள் செய்ய முடியும். என்னைப் பொறுத்த வரையில் என் வழி முற்றிலும் வேருனது. சத்தியமும் அகிம்சையுமேயான கடவுளை நான் வழிபட்டு வருகிறேன்.

"நான் சொல்லுவதை இந்தியா கேட்டு வந்த சமயம் ஒன்று இருந்தது. இன்று நான் பழசாகப் போய்விட்டேன். யந்திரங்கள், கடற்படை, விமானப்படை முதலிய எத்தனையோ தங்களுக்கு வேண்டியிருக்கும் இப்புதிய முறையில் எனக்கு இடமே இல்லை என்கிருர்கள். அதற்கெல்லாம் நான் உடன்பட்டு இருக்கவே முடியாது. எந்தச் சக்தியைக்கொண்டு சுதந்திரத்தை அடைந்தார்களோ அதே சக்தியைக் கொண்டு சுதந்திரத்தைக் காப்பாற்றியும் கொள்ளுவோம் என்று சொல்லக் கூடிய தைரியம் உங்களுக்கு இருந்தால், அப்பொழுது நான் உங்கள் மனிதனே. என் உடலின் பலவீனமும் மனச்சோர்வும் அப்பொழுது கண நேரத்தில் மறைந்துவிடும். 'சிரித்துக்கொண்டே பாகிஸ்தானை எடுத்துக்கொண்டோம்; போராடி ஹிந்துஸ்தானை எடுத்துக்கொண்டுவிடுவோம்' என்று முஸ்லிம்கள் கூறுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. என் இஷ்டப்படி எல்லாம் நடப்பதாக இருந்தால், ஆயுத பலத்தைக்கொண்டு இதை அவர்கள் அடைந்துவிட நான் விடவேமாட்டேன். இந்தியா முழுவதிலும் இருப்போரை இஸ்லாமுக்கு மதம் மாற்றிவிடலாம் என்று சிலர் கனவு காண்கிருர்கள். யுத்தத்திஞல் அது என்றும் நடந்துவிடாது. ஹிந்து சமயத்தை பாகிஸ்தான் என்றும் அழித்துவிடவே முடியாது. தங்களையும் தங்கள் மதத்தையும் ஹிந்துக்களால் மாத்திரமே அழித்துக்கொண்டுவிட முடியும். அதே போல, இஸ்லாம் நாசமாக்கப்படுமெனில், அது பாகிஸ்தானிலிருக்கும் முஸ்லிம்களால் நாசமாக்கப்படுமேயன்றி ஹிந்துஸ்தானிலுள்ள ஹிந்துக்களால் அல்ல."

—'ஹரிஜன்' - 5—10—1947

## 16

# நம்பிக்கை பலவீனமாகிவிட்டதா?

போரைக் குறித்து காந்திஜி கூறியதைப் பத்திரிகைகள் பிரமாதப்படுத்திப் பிரசுரித்துவிட்டன. எனவே, 'யுத்தம் வேண்டும் என்று சொல்ல உண்மையில் ஆரம்பித்துவிட்டீர்களா?' என்று கல்கத்தாவிலிருந்து ஒருவர் காந்திஜியைக் கேட்டிருந்தார். பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசும்போது காந்திஜி இதற்குக் கூறிய பதிலாவது:

"நான் என்றுமே அகிம்சையுடன் இணைந்துபோய்விட்டவன். ஆகவே, யுத்தம் வேண்டும் என்று நான் சொல்ல முடியாது.

நான் நடத்தும் அரசாங்கத்தில் போலீஸும் ராணுவமும் இருக்க மாட்டா. ஆனால், இந்திய யூனியனின் அரசாங்கத்தை நான் நடத்திக் கொண்டிருக்கவில்லை. இருக்கும் பல சாத்தியங்களைப் பற்றி மாத்திரமே நான் குறிப்பிட்டேன். இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்குள்ளிருக்கும் வேறுபாடுகளையெல்லாம் பரஸ்பரம் கலந்தாலோசிப்பதன் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும்; அது முடியாது போனால் மத்தியஸ்தர் முடிவுக்கு விட்டுவிட வேண்டும். இதில் ஒரு தரப்பார், பிடிவாதமாகத் தவறுகளைச் செய்துகொண்டே போய், மேலே சொன்ன இரு வழிகளையும் ஒப்புக் கொள்ளவுமில்லை என்றால், மிஞ்சியிருக்கும் ஒரே வழி போர்தான். எந்தச் சந்தர்ப்பத்தில் நான் இதைச் சொல்ல வேண்டியிருந்தது என்பதையும் நீங்கள் அறிய வேண்டும். தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் வேலையை மக்களே எடுத்துக் கொண்டு விட வேண்டாம், நீதி கிடைக்கும்படி அரசாங்கமே செய்ய விடுங்கள் என்று டில்லியில் நடந்த பிரார்த்தனைக் கூட்டம் ஒவ்வொன்றிலும் நான் மக்களுக்குச் சொல்ல வேண்டியிருந்தது. மக்களே உயிருடன் கொளுத்திவிடும் சட்டமல்லாத மற்ற நியாயமான முறைகளை மக்களுக்குக் கூறி வந்தேன். மக்களே படுகொலைகளில் இறங்கிவிடுவது என்பது, நியாயமான ஆட்சி அசாத்தியம் என்றாக்கிவிடும். அகிம்சையில் எனக்குள்ள நம்பிக்கை சிறிதளவும் பலவீனமாகிவிட்டது என்றாகாது."

பிர்லா மாளிகை,
புது டில்லி, 27—9—'47

—'ஹரிஜன்' – 5—10—1947

# 17

# சகோதரப் படுகொலைகள் வேண்டாம்

இரு சகோதர டொமினியன்களுக்குமிடையே போர் ஏற்படக் கூடும் என்று நான் குறிப்பிட்டது மேற்கத்திய நாடுகளில் பீதியை உண்டாக்கிவிட்டது என்று என்னிடம் சொல்லுகிறார்கள். பத்திரிகை நிருபர்கள் வெளிநாடுகளுக்கு என்ன செய்தியை அனுப்பினார்கள் என்பது எனக்குத் தெரியாது. செய்திச் சுருக்கங்கள், பேசியவரின் கருத்தை உள்ளபடி எடுத்துக் கூறுவதாக இல்லாது போனால், அவை அதிக ஆபத்தை உண்டாக்கி விடுவனவாகும். தென்னாப்பிரிக்காவைக் குறித்து 1896-இல் நான் எழுதிய துண்டுப் பிரசுரத்தைப் பற்றி அனுப்பப்பட்ட அவசியமில்லாத செய்திச் சுருக்கம், என் உயிருக்கே ஆபத்தை உண்டாக்குவதாகிவிட்டது. அச்சுருக்கம் அவ்வளவு படுமோசமானதாக இருந்தது. என்னைக் கொல்லப் பார்த்த இருபத்து நான்கு மணிநேரத்திற்குள், தென்னாப்பிரிக்க ஐரோப்பியப் பொதுஜன அபிப்பிராயம் கோபத்திலிருந்து அனுதாபமாகமாறிவிட்டது. ஒரு பாவமும் அறியாத நான், நான் செய்யாத குற்றத்திற்காக

அனுவசியமாக அவதிப்பட நேர்ந்ததைக் குறித்து வருத்தப்பட ஆரம்பித்தனர். ஒருவர் சொல்லாததற்கு, செய்யாததற்கு அவரைப் பொறுப்பாளியாக்கக்கூடாது என்ற படிப்பினையை மேலே சொன்ன சம்பவத்திலிருந்து எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

போர் என்பதையே சொல்லியிருக்கக்கூடாது என்று வேண்டுமானுல் சொல்லலாம். அதைத் தவிர, பாகிஸ்தானுக்கும் இந்திய யூனியனுக்கும் யுத்தத்தைத் தூண்டிவிடுவதாகவோ, யுத்தத்தை அங்கீகரிப்பதாகவோ, என் பேச்சுக்களில் யுத்தத்தைப் பற்றி நான் கூறியதில் ஒன்றையும் பொருள்படுத்திக் கொள்ள முடியாது என்று கூறுவேன். பாம்பு என்று வீட்டில் ஒரு குழந்தை கூறிவிட்டாலும், பாம்பு வந்து விடுவது நிச்சயமாகிவிடும் என்ற ஒரு மூடநம்பிக்கை நம்மிடம் இருக்கிறது. போர் சம்பந்தமாக இத்தகைய மூடநம்பிக்கை இந்தியாவில் யாருக்கும் இல்லை என்றே நம்புகிறேன்.

இப்பொழுது இருந்து வரும் நிலைமையைப் பரிசீலனை செய்து, இந்த இரு ராஜ்யங்களுக்குமிடையே போருக்கான காரணம் எப்பொழுது ஏற்படும் என்பதை நான் திட்டமாகக் கூறியதன்மூலம், இரு சகோதர ராஜ்யங்களுக்கும் நான் சேவை செய்திருக்கிறேன் என்று கூறுவேன். இதை நான் செய்தது சாத்தியமானவரையில் போரைத் தவிர்ப்பதற்கேயன்றி அதைத் தூண்டிவிடுவதற்காக அன்று. புத்தி கெட்ட முறையில் கொலைகளும், கொள்ளைகளும், தீயிட்டுப் பொசுக்குவதும் தொடர்ந்து நடந்துகொண்டு வருமானுல், அவர்களுடைய அரசாங்கங்களைக் கட்டாயப்படுத்திவிட்டதாகும் என்பதை எடுத்துக்காட்டவும் முயன்றேன். ஒன்றின்பின் ஒன்ருகத் தவிர்க்க முடியாத வகையில் ஏற்படும் நடவடிக்கைகளைக் குறித்து பொதுஜனங்களுக்கு எடுத்துக்காட்டுவது தவரு? போரில் போய் முடிவதாக இருக்கும் சகோதரப் படுகொலையைத் திட்டமாகத் தவிர்ப்பதற்காக என் சக்தி முழுவதையும் நான் செலவிட்டு வருகிறேன் என்பதை இந்தியா அறியும்; உலகமும் அறிந்திருக்க வேண்டும். அகிம்சையே மனிதரெல்லோரையும் ஆட்கொள்ளும் தருமமாக இருக்க வேண்டும் என்ற விரதத்தைக் கொண்டிருக்கும் ஒருவர், போரைப் பற்றிக் குறிப்பிடுகிருர் என்ருல், அதைத் தடுப்பதற்கு எல்லா முயற்சியையும் செய்வதற்காக மாத்திரமே அவ்விதம் குறிப்பிட்டிருக்க முடியும். இதுதான் என் அடிப்படையான நிலைமை. நான் சாகும் நாள் வரையில் இதிலிருந்து என்றும் தவறிவிடமாட்டேன் என்றும் நம்புகிறேன்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 29—9—'47

— 'ஹரிஜன்' 12—10—1947

# 18

# ஒரு புதிர்

ஒரு நண்பர் கீழே வருமாறு எழுதுகிறார்:

"இந்த இரண்டு நாடுகளுக்குமிடையே போர் ஏற்படக் கூடும் என்று வேடிக்கைக்காகவும் கூட விவாதிக்காமலிருப்பதுதான் நல்லது. ஆனால், நீங்களோ, இரு நாடுகளுக்குமிடையே யுத்தம் மூண்டால் இந்திய யூனியனிலிருக்கும் முஸ்லிம்கள் பாகிஸ்தானிலிருப்பவரை எதிர்த்துப் போராட வேண்டும் என்று யோசனை கூறும் அளவுக்கு நீங்கள் உங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கின்றீர்கள். ஹிந்துக்களும் மற்ற முஸ்லிமல்லாதவர்களும் இதே போலவே செய்ய வேண்டும் என்று இதிலிருந்து ஏற்படவில்லையா? இப்பொழுது வகுப்புப் பிரச்னையின்மீது அத்தகையதோர் போர் மூளுமானால், பாகிஸ்தானிலிருப்போரை இந்திய யூனியனிலிருக்கும் முஸ்லிம்கள் எதிர்த்துப் போராடும்படியோ, அதேபோல பாகிஸ்தானிலிருக்கும் ஹிந்துக்களும் சீக்கியரும் போராடும்படியோ எந்த விவாதமும் செய்துவிடுவதற்கில்லை. என்றாலும், வகுப்புக் காரணமில்லாமல் வேறு ஏதாவது காரணத்தினால் இவ்விரு நாடுகளுக்குமிடையே யுத்தம் வந்தால், பாகிஸ்தானிலிருக்கும் ஹிந்துக்களும், யூனியனிலிருக்கும் முஸ்லிம்களும் பாகிஸ்தானோடு போராட வேண்டும் என்று நீங்கள் சொல்லமாட்டீர்கள்."

இரு நாடுகளுக்குமிடையே போர் உண்டாகும் என்று வேடிக்கைக்காகவும்கூட பேசக்கூடாது என்பது சந்தேகத்திற்கிடமின்றி உண்மையே ஆகும். 'கூட' என்ற எச்சம் பொருத்தமானதாக இல்லை. ஏனெனில். சாத்தியம் என்பது உண்மையாக இருக்குமாயின், அதைப்பற்றி விவாதிக்க வேண்டியது ஒரு கடமை ஆகும். அப்படிச் செய்யாததுதான் தவறாக ஆகும்.

யூனியனைச் சேர்ந்த முஸ்லிம்களின் விஷயத்தில் என்ன விதி பொருந்துமோ அதே விதி, அதே சந்தர்ப்பத்தில் பாகிஸ்தானிலிருக்கும் ஹிந்துக்களுக்கும் முஸ்லிமல்லாதாருக்கும் பொருந்தும் என்பது என் திடமான கருத்து. பிரார்த்தனைக்குப் பிறகு செய்த என் பிரசங்கங்களிலும், இங்குள்ள நண்பர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோதும் இதே கருத்தைத் தெரிவித்துமிருக்கிறேன். உண்மையில் இந்த என் கருத்திற்கு அநேக காரணங்களும் இருக்கின்றன. உத்தரவுபோட்டு விசுவாசமாக இருக்கும்படிச் செய்துவிட முடியாது. சந்தர்ப்பம் அவசியமானதாக இருந்தாலன்றி, இதை அடைவது அசாத்தியம் என்றே சொல்லலாம். இத்தகைய உண்மையான விசுவாசம் இருப்பது சாத்தியம் என்பதை நம்பாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எனவே, என் கருத்தைக் குறித்துச் சிரிக்கிறார்கள். அத்தகைய சாத்தியமும் உண்டு என்று எண்ணுவதில் உண்மையில் சிரிப்புக்கு எதுவுமே இல்லை. பாகிஸ்தானில் இருப்பவர்களோடு சண்டை போடுவது

தங்கள் கடமை என்று இந்திய யூனியனிலிருக்கும் முஸ்லிம்கள் கருதினால், அதாவது தாங்கள் யூனியனில் நியாயமாக நடத்தப் படுகிறார்கள், பாகிஸ்தானிலிருக்கும் முஸ்லிமல்லாதவர்கள் அவ்விதம் நியாயமாக நடத்தப்பட வில்லை என்பது அவர்களுக் குத் தெளிவாகத் தெரிந்தால், யூனியனிலிருக்கும் முஸ்லிம்கள் பாகிஸ்தானிலிருப்பவரோடு சண்டை போடுவார்கள். இத் தகைய ஒரு நிலை, சாத்தியம் என்பதற்கு அப்பாற்பட்டது அல்ல.

அதே போலவே, பாகிஸ்தானிலிருக்கும் முஸ்லிமல்லாதவர் கள், தாங்கள் பாகிஸ்தானில் நியாயமாக நடத்தப்படுகிறார்கள் என்றும், பத்திரமாகத் தாங்கள் அங்கே வாழ முடியும் என்றும், ஆயினும் யூனியனிலிருக்கும் ஹிந்துக்கள்தான் சிறுபான்மை யோரை அக்கிரமமாக நடத்துகிறார்கள் என்றும் தெளிவாக உணர்ந்தால், இயற்கையாகவே அவர்கள் யூனியனிலிருக்கும் பெரும்பான்மையினருடன் போராடுவார்கள். பிறகு சிறுபான் மையினர் தங்கள் கடமையைச் செய்யும்படி தூண்டுவதற்கு எந்த விவாதமும் தேவையில்லை.

நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது நம் துரதிருஷ்ட மாகும். மத சம்பந்தமான பிளவினாலேயே இந்தப் பிரிவினையை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. இதில் பொருளாதார, மற்ற காரணங்களும் இருக்கலாம். ஆனால், பிளவை அவை உண்டாக்கியிருக்க முடியாது. எங்கும் இன்று விஷம் நிறைந் திருப்பதற்கும் அதே வகுப்புப் பிரச்னைதான் காரணம். மத விரோதமான காரியங்கள் மதம் என்ற வேஷத்தில் நடந்துவரு கின்றன. வகுப்புப் பிரச்னையே இல்லாதிருந்தால் நன்றாக இருந் திருக்கும் என்று சொல்லுவது காதுக்கு இனிமையாகத்தான் இருக்கிறது. ஆனால், உண்மையை எப்படிப் போக்கிவிட முடியும்?

இரு நாடுகளுக்குமிடையே யுத்தம் மூண்டால் யூனியனி லிருக்கும் முஸ்லிம்கள் பாகிஸ்தானிலிருக்கும் முஸ்லிம்களை எதிர்த்தும், பாகிஸ்தானிலிருக்கும் ஹிந்துக்கள் யூனியனிலிருக் கும் ஹிந்துக்களை எதிர்த்தும் போராடுவார்களா என்று திரும்பத் திரும்ப என்னைக் கேட்கிறார்கள். அப்படி நடக்கப் போவதில்லை என்று இப்போதைக்குத் தோன்றிய போதிலும், இவ்விதம் கருதுவதில் அசாத்தியமானது என்பது இயல்பாக எதுவுமே இல்லை. விசுவாசமாக இருப்பார்கள் என்று நம்பி, அப்படி நம்புவதிலிருக்கும் ஆபத்தைத் தைரியமாகச் சமாளிப்பதை விட, விசுவாசமாக இருப்பார்களா என்பதில் அவநம்பிக்கை வைப்பதில் எப்பொழுதும் ஆபத்து அதிகம். இந்தப் பிரச் னையைக் கீழே கண்ட விதத்தில் கேட்டுவிடுவதே இன்னும் அதிகத் தெளிவானதாக இருக்கும். உண்மைக்காகவும் நீதிக் காகவும் ஹிந்துக்கள் ஹிந்துக்களை எதிர்த்தும், முஸ்லிம்கள் தங்கள் மதத்தினரை எதிர்த்தும் என்றைக்காவது போராடு

வார்களா? பதிலுக்குக் கேள்வி போடுவதன் மூலம் இதற்குப் பதில் சொல்லிவிடலாம்: சரித்திரத்தில் இதற்கான உதாரணங்கள் இல்லையா?

இந்தப் புதிரைத் தீர்ப்பதற்கான வழியில் பெரிய முட்டுக் கட்டையாக இருந்து வருவது, உண்மைக்கு மதிப்பில்லாமலிருப்பதுதான். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் முழுப் படுநாசத்தில், சத்தியம் வெற்றி பெறும் என்பதில் திடமாக நிற்கக் கூடியவர்கள் கொஞ்சம் பேராவது இருப்பார்கள் என்று நம்புவோமாக.

[குஜராத்தி மூலத்திலிருந்து மொழிபெயர்ப்பு]

புது டில்லி, 17—10—'47

— 'ஹரிஜன்' – 26—10—1947

# 19

# சமாதானத்திற்கு நிபந்தனைகள்

பாபா பச்சிதர் சிங் கூட்டிய டில்லிப் பிரமுகர்களின் கூட்டத்திற்குக் காந்திஜி சென்றிருந்தார். அக் கூட்டத்தில் பண்டித ஜவாஹர்லால் நேரு பேசுவதாக இருந்தது. ஆனால், தம்முடன் கலந்து பேசுவதற்காக லியாகத் அலி சாகிப் வந்திருந்ததாலும், மாலை 4 மணிக்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டமும், 5 மணிக்கு மந்திரி சபைக் கூட்டமும் இருந்ததாலும், தாம் வர முடியவில்லை என்று அவர் அறிவித்து விட்டார். ஆகையால், அக்கூட்டத்தில் பேசுமாறு பாபா பச்சிதர் சிங், காந்திஜியைக் கேட்டுக் கொண்டார். அவரும் சம்மதித்தார். சுருக்கமாகத் தம்மைக் கேள்விகள் கேட்கலாம் என்றார் காந்திஜி. ஒரு நண்பர் எழுந்து ஒரு பிரசங்கத்தையே செய்துவிட்டார். அதன் சாராம்சம் இதுதான்: 'முஸ்லிம்கள் யூனியனுக்கு விசுவாசமாக இருப்பதோடு லைசென்ஸ் இல்லாமல் அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்களையும் ஒப்படைத்துவிடுவார்களாயின், டில்லி மக்கள் அவர்களுடன் சமாதானமாக வாழத் தயாராக இருக்கிறார்கள்.' இதற்குக் காந்திஜி கூறியதாவது:

"தாங்கள் அனுசரிக்கும் மதம் எதுவாக இருந்தாலும் யூனியனில் வாழ விரும்புகிறவர்கள் யூனியனிடம் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதில், யாருக்கும் மாறுபட்ட அபிப்பிராயம் இருப்பதற்கில்லை. அதோடு அவர்கள் தங்களிடமிருக்கும் லைசென்ஸில்லாத ஆயுதங்களையெல்லாம், கேட்காமலேயே கொண்டுவந்து ஒப்படைத்துவிட வேண்டும். ஆனால், நண்பர் சொன்ன இரு நிபந்தனைகளுடன் மூன்றாவதாக இன்னொரு நிபந்தனையையும் அவர் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளை அமலுக்குக் கொண்டு வரும் வேலையை அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை.

"புராண கிலாவில் 50,000 முஸ்லிம் அகதிகள் இருக்கின்றனர். ஹுமாயூன் சமாதி மைதானத்தில் இன்னும் கொஞ்சம் அதிகமாக இருக்கிறார்கள். அங்கும் வாழ்க்கை நிலைமை நன்றாக இல்லை. பாகிஸ்தானிலும் இந்திய யூனியனிலும்கூட இருக்கும் ஹிந்து, சீக்கிய அகதிகளின் துயரத்தோடு இவர்களுடைய கஷ்டங்களை ஒப்பிட்டு நியாயம் பேசுவது தவறாகும். ஹிந்துக்களும் சீக்கியரும் துயரங்களை, அதிகமான துயரங்களை அடைந்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்யவேண்டியது இந்திய யூனியன் அரசாங்கத்தின் வேலை. கல்வி ஸ்தாபனங்களுக்குப் பெயர் போனது லாகூர். தனிப்பட்டவர்களின் முயற்சியால் ஆரம்பமானவை அவை. பஞ்சாபிகள் கஷ்டப்பட்டு பாடுபடுகிறவர்கள். எப்படிப் பணம் சம்பாதிப்பது, எப்படி அதைத் தருமத்திற்குச் செலவிடுவது என்பவை அவர்களுக்குத் தெரியும். லாகூரில் ஹிந்துக்களும் சீக்கியரும் முதல் தரமான ஆஸ்பத்திரிகளையும் அமைத்திருக்கிறார்கள். அந்த ஸ்தாபனங்களையும், தனிப்பட்ட சொத்துக்களையும் நியாயமான சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும். தனிப்பட்டவர்கள் வஞ்சந் தீர்த்துக் கொள்ளுவதால் நியாயம் கிடைக்கும்படி செய்துவிட முடியாது. யூனியன் நியாயமாக நடந்து கொள்ளும்படி பார்க்கவேண்டியது எப்படி பாகிஸ்தானின் கடமையோ, அதேபோன்று பாகிஸ்தான் அரசாங்கம் தனது கடமையைச் செய்யும்படி பார்க்க வேண்டியது யூனியன் அரசாங்கத்தின் கடமை. இன்னொருவரின் தீய முறைகளை நாமும் அனுசரிப்பதனால் நாம் நியாயத்தை அடைந்துவிட முடியாது. இருவர் குதிரைகள் மீது ஏறிச் சவாரி செய்யும்போது ஒருவர் விழுந்து விட்டார் என்றால், மற்றொருவரும் விழுந்துவிடுவதா? அப்படிச் செய்தால் இருவரும் எலும்பை முறித்துக் கொள்ளுவதில்தான் முடியும். முஸ்லிம்கள் யூனியனிடம் விசுவாசமாக இருக்க மாட்டார்கள், தங்களிடமிருக்கும் ஆயுதங்களையும் ஒப்படைத்து விடவில்லை என்று வைத்துக்கொள்ளுவோம். இதற்காக ஒரு பாவமுமறியாத ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் நாம் கொன்றுகொண்டே போவதா? துரோகிகளின்மீது சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் வேலை. காட்டுமிராண்டித்தனமாகக் காரியங்களைச் செய்ய முற்பட்டதன் மூலம் இரு நாடுகளிலுமுள்ள மக்கள், உலகத்தில் இந்தியாவுக்கு இருந்த நற்பெயருக்கு இழுக்கை உண்டாக்கிவிட்டார்கள். இதன் மூலம் அடிமைத்தனத்திற்கும், தங்கள் சிறந்த மதங்களின் நாசத்திற்கும் பேரம் பேசுபவராகவும் ஆகிவிட்டனர். தங்களிஷ்டம் போல் செய்து கொள்ள இம்மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால், இந்தியாவின் சுதந்திரத்திற்காக தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்திருப்பவர்கள், இந்த நாசத்தை உயிருடனிருந்து பார்த்துக்கொண்டிருக்க விரும்பவில்லை. 'இந்தத் தீயை அணைப்பதற்கு வேண்டிய பலத்தை எனக்கு அளிக்கவும்; இல்லையானால், இப்பூமியிலிருந்து

என்னை அகற்றிவிடுக' என்று என் ஒவ்வொரு மூச்சிலும் நான் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்.

"அம்மனிலும் மத்திய கிழக்கில் இருக்கும் மற்றேரிடத்திலுமுள்ள முஸ்லிம் நண்பர்கள் எனக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது இந்தியாவில் நடந்துவரும் சகோதரப் படுகொலைகள் தாற்காலிகமானவையே என்றும், இந்தியா திரும்பவும் தனது பழைய கீர்த்தியை அடையும் என்றும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ்வார்கள் என்று நம்புவதாகவும் அத்தந்திகளில் அவர்கள் கூறியிருக்கிறார்கள்."

பிர்லா மாளிகை,
புது டில்லி, 2—10—'47

-- 'ஹரிஜன்' - 12—10—1947

# 20

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது:

"என் பிறந்த நாளை முன்னிட்டு இன்று முழுதும் ஓயாமல் அநேகர் என்னை வந்து பார்த்தார்கள். வெளிநாட்டு ஸ்தானிகர்களும் லேடி மவுண்ட்பாட்டனும் வந்திருந்தனர். எனக்கு வாழ்த்துக் கூறுவதற்காக அவர்கள் வந்திருந்தார்கள். உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் எனக்கு ஏராளமான தந்திகளும் வந்திருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் பதில் எழுதுவது என்பது முடியாத காரியம். ஆனால், 'வாழ்த்துக் கூறுவதற்கு எங்கே இடமிருக்கிறது? துக்கச் செய்தி அனுப்பினால் அதிகப் பொருத்தமாக இருக்குமல்லவா?' என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். அகதிகளிடமிருந்து மலர்களும் எனக்கு வந்திருக்கின்றன. பணத்தின் மூலமும், நல்லாசி மூலமும் அநேகர் வாழ்த்துகிறார்கள். என்றாலும் என் மனத்தில் வேதனையைத் தவிர இன்று வேறு எதுவும் இல்லை. நான் என்ன சொன்னாலும் மக்கள் பின்பற்றிய காலம் ஒன்றிருந்தது. இன்று என் குரலோ, தனித்த குரலாக இருக்கிறது. 'முஸ்லிம்களை இந்திய யூனியனில் இருக்க அனுமதிக்க மாட்டோம்' என்பது ஒன்றையே அவர்கள் கூற இன்று நான் கேட்கிறேன். இன்று முஸ்லிம்களுக்கு எதிராக இந்த கோஷம் என்றால், நாளைக்கு பார்சிகள், கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர்களின் கதிகூட என்ன? நான் 125 வயது வரையில் உயிரோடிருப்பேன் என்று அநேக நண்பர்கள் நம்பியிருந்தார்கள். '125 வயது வரையில் மாத்திரமல்ல, நீண்ட நாள் உயிர் வாழும் ஆசையே எனக்குப் போய்விட்டது. என்மீது பொழியப்பட்டிருக்கும் வாழ்த்துக்களில் எதற்கும் நான் கொஞ்சமும்

அருகதையாவதற்குத் தகுதியுடையவன் அல்ல. துவேஷமும் கொல்லுவதும் சூழ்நிலையைக் கெடுத்துக் கொண்டிருக்கும்போது நான் உயிர் வாழ முடியாது. ஆகையால் இப்பொழுது இருந்து வரும் வெறித்தனத்தை விட்டுவிடுமாறு உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்."

பிர்லா மாளிகை,
புதுடில்லி, 3—10—'47

—'ஹரிஜன்' – 12—10—1947

# 21

# மனச் சோர்வு இல்லை

கீழே கொடுத்திருப்பது, எனக்கு வந்திருக்கும் பல பிறந்த நாள் வாழ்த்துச் செய்திகளில் ஒன்றிலிருந்து எடுத்தது :

"இப்பொழுது இருக்கும் நிலைமை உங்களுக்கு மனச்சோர்வை உண்டாக்கிவிடக் கூடாது என்று நான் யோசனை கூறலாமா? உலகின் துயருக்கு அகிம்சை வழியில் பரிகாரம் தேட இந்தியா உதவிய தெய்விகமான திட்டத்தைக் கெடுப்பதற்குத் தீய சக்திகள் செய்யும் கடைசி முயற்சியே இது என்பது என் கருத்து. தெய்விக காரியத்தை மேற்கொண்டு செய்வதற்கு உலகில் ஒரே கருவியாக இருப்பது இன்று நீங்கள் ஒருவரே."

விஷயத்தை அறிந்திருப்பதைவிட என் மீதிருக்கும் அதிக அன்பினாலேயே அனுப்பப்பட்டிருக்கும் தந்திதான் இது. இதைப் பார்ப்போம்.

எனக்கு இன்றிருந்துவரும் மனோநிலையை, மனச்சோர்வு என்று விவரிப்பது ஒரு வேளை தவறாக இருக்கலாம். உண்மையைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். என்னைக் கொண்டு தான் தெய்விக காரியம் நிறைவேற முடியும் என்று எண்ணிக் கொள்ளுவதற்கு, நான் அவ்வளவு அகம்பாவமுள்ளவன் அல்ல. அதை நிறைவேற்றுவதற்கு ஓர் அதிகத் தகுதியான கருவி உபயோகிக்கப்படும்; பலவீனமான ஒரு நாட்டிற்குப் பிரதிநிதியாக இருக்க நான் தகுந்தவனேயன்றி பலமுள்ள நாட்டுக்கு அல்ல என்பது சரியாகவும் இருக்கலாம், இல்லாதுமிருக்கலாம். இறுதியான நோக்கத்திற்கு இன்னும் அதிகத் தூய்மையான, இன்னும் அதிக தீரமுள்ள, அதிக முன்யோசனையுள்ளவர் தேவை என்றும் இருக்கலாமல்லவா? இவையெல்லாம் ஊகங்களே. கடவுளை மதிப்பிடுவதற்கான ஆற்றல் யாருக்கும் இல்லை. எல்லையற்ற அந்தக் கருணைக் கடலில் நாமேல்லோரும் சில துளிகளே.

125 வயது வரை வாழ வேண்டும் என்று ஆசைப்படாமல் இருப்பதோ. இப்பொழுதே சாக வேண்டும் என விரும்பாமலிருப்பதோ சிறந்த லட்சியம் என்பதில் சந்தேகம் இல்லை. எல்

லாவற்றையும் கடவுள் இஷ்டத்திற்கு ஒப்படைத்துவிட்டு இருக்க வேண்டியதே என் நிலையாக இருக்க வேண்டும். லட்சியம் நிதர்சனமாகி விடும்போது, அது லட்சியமாக இல்லாது போகிறது. சாத்தியமானவரையில் அதன் கிட்டத்தில் போக முயற்சிப்பது ஒன்றே நாம் செய்ய முடிவதெல்லாம். என் உதவிக்கு நான் பெற முடிந்த முழு சக்தியையும் கொண்டு இதை நான் செய்து வருகிறேன்.

125 வயது வரையில் வாழ விரும்புகிறேன் என்று பகிரங்கமாகச் சொல்லும் அதிகப் பிரசங்கித்தனம் எனக்கு இருந்தது என்றால், மாறுபட்ட நிலைமையில் அந்த ஆசையை பகிரங்கமாக விட்டுவிடும் பணிவும் எனக்கு இருக்க வேண்டும். இதற்குமேல் அதிகமாகவோ, குறைவாகவோ நான் எதையும் செய்துவிடவில்லை. மனம் சோர்ந்துவிட்ட உணர்ச்சியுடன் இதை நான் செய்யவுமில்லை. மனிதன் தன்னை முஸ்லிம் என்றோ ஹிந்து என்றோ கூறிக் கொள்ளத் துணிந்தாலும், அவன் மிருகமாகிச் செய்துவரும் படுகொலைகளைத் தடுக்க எதுவும் செய்யக் கையாலாகாதவனாகப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட இக் 'கண்ணீர் ஆற்றி'லிருந்து என்னைக் கொண்டு போய்விடுமாறே எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருளை, இந்த மனோநிலையில் நான் சதா வேண்டிவருகிறேன். என்றாலும், 'என் இஷ்டமல்ல. உன் இஷ்டமே நடக்கும்' என்றும் நான் கதறி வருகிறேன். அவன் விரும்பினால் என்னை இந்தப் பூமியில் இன்னும் கொஞ்ச காலத்திற்கு வைத்திருப்பான்.

புது டில்லி, 5—10—'47 — 'ஹரிஜன்' - 12—10—1947

# 22

# அக்கிரமமான உதாரணம்

ஒருவர் கீழ்வருமாறு ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். அவர் பெயரிலிருந்து அவர் தாய்மொழி ஹிந்தியாக இருக்கும் என்று தெரிகிறது.

"முஸ்லிம்களைச் சகோதரர்களாகப் பாவித்து நடத்த வேண்டும் என்றும், இங்கிருந்து அவர்கள் பாகிஸ்தானுக்குப் போய்விடாமலிருப்பதற்காக அவர்கள் பத்திரமாயிருக்கலாம் என்று உத்தரவாதம் அளிக்கும்படியும் அநேக கோரிக்கைகளை நீங்கள் தொடர்ந்து விடுத்துவருவதைக் குறித்தே இதை எழுதுகிறேன்... 'அதிகக் குளிராக இருந்த ஒரு நாள் ஒருவன் நடந்து போய்க் கொண்டிருந்தான். வழியில் ஒரு பாம்பு குளிரில் விறைத்துப் போய்க் கிடந்ததைப் பார்த்தான். அந்தப் பாம்பினிடம் அவனுக்கு இரக்கம் உண்டாயிற்று. அதை எடுத்து, அதற்குக் கொஞ்சம் உஷ்ணம் கொடுப்பதற்காக அதைத் தனது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான். அவன் உஷ்ணத்

தில் பாம்புக்கு உயிர் வந்துவிட்டது. அது செய்த முதல் காரியம், தன்னைக் காப்பாற்றியவரைக் கடித்து அவரைக் கொன்றுவிட்டதுதான்'.''

அக்கிரமமானதோர் உதாரணத்தைக் கூறும்படி கோபம், இக் கடிதம் எழுதியவரைச் செய்திருக்கிறது. மனிதன் ஒருவன் என்னதான் படுமோசமானவனாக இருந்தாலும், காருண்யமில்லாக் காரியம் நியாயம் என்று காட்டுவதற்காக, அவனை பாம்புக்கு ஒப்பிடுவது நிச்சயமாகக் கேவலமான காரியமே. ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த ஒரு சிலரோ, பலரோ செய்துவிட்ட தவறுக்காக கோடிக்கணக்கான மனிதரை இழிவாகக் கூறுவது, பைத்தியக்காரத்தனத்தின் சிகரம் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்கள் விஷயத்தில் இதே உதாரணத்தையே அதிக வெறி பிடித்த முஸ்லிம்கள் கூறி வருகிறார்கள் என்பதை நான் அறிவேன் என்பதையும் கடிதம் எழுதியிருப்பவர் கவனத்தில் வைக்க வேண்டும். பாம்பாகக் கருதப்படுவதை எந்த ஹிந்துவும் விரும்பமாட்டார்.

ஒருவரை சகோதரனாக பாவிக்க வேண்டும் என்றால், சகோதரனாக இருக்க அவன் தகுதியற்றவனாகிவிட்ட பிறகும் அவனை நம்ப வேண்டும் என்பதல்ல. நம்ப முடியாதவர்களாகி விடக் கூடும் என்று பயந்து கொண்டு ஒருவனையும் அவன் குடும்பத்தையும் கொன்றுவிடுவது கோழைத்தனத்திற்கு அடையாளமல்லவா? தனக்குப் பக்கத்திலிருப்பவன் மீது தீர்ப்புக் கூற ஒவ்வொருவரையும் அனுமதித்துவிடும் சமூகம் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். என்றாலும், இந்தியாவில் சில பகுதிகளில் இத்தகைய இழிவான நிலைக்கே நாம் தாழ்ந்து போயிருக்கிறோம்.

கடைசியாக, பாம்பு இனத்தை முன்னிட்டு, பொதுவாக இருந்துவரும் ஒரு தவறான கருத்தைத் திருத்த விரும்புகிறேன். 80 சத விகிதம் பாம்புகள் கொஞ்சமும் தீங்கற்றவை; அவை இயற்கையில் பயனுள்ள சேவைகளைச் செய்தும் வருகின்றன.

புது டில்லி, 3—10—'47

—'ஹரிஜன்' – 12—10—1947

# 23

# முட்டாள்தனமான ஒரு எண்ணம்

ஹிந்துக்களும் சீக்கியரும் திருப்பித் தாக்காமல் இருந்திருந்தால், நான்கூட இன்று உயிரோடு இருந்திருக்க மாட்டேன் என்று கூறும் தந்தி ஒன்று எனக்கு வந்திருக்கிறது. இந்த எண்ணம் முட்டாள்தனமானது என்று நான் கருதுகிறேன். எல்

லோருடைய உயிரும் கடவுளின் திருக்கரத்தில் இருப்பது போன்றே என் உயிரும் இருக்கிறது. அவர் அனுமதிக்கும் வரையில் அதை யாரும் போக்கிவிட முடியாது. என் உயிரைக் காத்துவிடுவதோ, வேறு யார் உயிரைக் காத்துவிடுவதோ மனிதரால் ஆகக் கூடியது அன்று. முஸ்லிம்களில் 98 சத விகிதத் தினர் துரோகிகள் என்றும், சமயம் வரும்போது பாகிஸ்தானுக்குச் சார்பாக துரோகம் செய்துவிடுவார்கள் என்றும் அத் தந்தி கூறுகிறது. இதை நான் நம்பவில்லை. கிராமங்களிலிருக்கும் முஸ்லிம் பொதுமக்கள் துரோக எண்ணமுள்ளவர்களாக இருக்க முடியாது. இருப்பார்கள் என்று வைத்துக்கொண்டால் அவர்கள் இஸ்லாமை அழித்துவிடுவார்கள். சொல்லப்படும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவருக்கொருவர் தொடர்ந்து எதிரிகளாக இருந்து வருவார்களானல், அதனல் இரு டொமினியன்களுமே அழிந்துவிடும் என்பது நிச்சயம். எங்கிருப்பவராயினும், எம் மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், தன்னை நாடுவோர் யாவருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. முடிவாக ஒருவருடைய மதத்திற்குப் பாதுகாப்பு அவரிடம்தான் இருக்கிறது.

**பிர்லா மாளிகை,**
**புது டில்லி, 5–10–'47** 'ஹரிஜன்' – 12—10—1947

# 24

# கசப்பான ஒரு கடிதம்

ஒரு முஸ்லிம் நண்பர் கீழே வருமாறு எழுதுகிருர்:

"தேசீய கருத்துக்களைக் கொண்ட ஒரு முஸ்லிம் நான். என் வாழ்நாள் முழுவதிலும், நான் வாழ்ந்திருக்கும் இருபத்தோரு ஆண்டுகளில், ஹிந்து, முஸ்லிம் என்ற முறையில் எண்ணுவதற்கு என்னல் முடிந்ததே இல்லை. அந்த வகையில் நான் எண்ணும்படிச் செய்ய என்னுடைய மூத்த சகோதரரும், தந்தையும், மற்ற உறவினர்களும் எவ்வளவோ முயன்று பார்த்துவிட்டார்கள். என் சமூகத்தில் நான் குவிஸ்லிங்காக இருந்ததால் ஜலந்தர் இஸ்லாமியக் கல்லூரி இயற்கையாகவே என்னைச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டது.

"என் தந்தையார், மற்ற உறவினர்களுடன் ஏப்ரலில் ஜலந்தரை விட்டுப் போய்விட்டார். ஆனல், அவர்களுடன் நான் போகவில்லை. ஏனெனில், கிழக்கு பஞ்சாபும், அதேபோல இந்தியாவும், இன்னெரு மதத்தைச் சேர்ந்த என் நண்பர்களுக்கு எப்படி அவர்கள் நாடோ அதேபோலவே என் நாடுமாகும். ஆனல், ஆகஸ்டில் நடந்துவிட்ட மிருகத்தனமான காரியங்கள், நான் அதிக தூரம் ஏமாற்றமடையும்படிச் செய்துவிட்டன. இந்திய தேசீய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் மீது வழக்கு விசாரணை நடந்தபோது, 1946 ஜனவரியில் என்

ளேடு சேர்ந்து ஊர்வலம் ஏற்பாடு செய்த பையன்களே என்னைக் கொன்று விட விரும்பினார்கள். என்னவானாலும் அவர்களுக்கு நான் ஒரு முஸ்லிமே. என்னைக் கொன்று அதன் மூலம் தங்கள் சொந்த சமூகத்தின் பாராட்டுக்களைப் பெற அவர்கள் விரும்பினார்கள். எனவே, உயிருக்குப் பயந்து நான் டில்லிக்கு ஓடிவந்துவிட நேர்ந்தது. பாகிஸ்தானைவிட ஐக்கிய இந்தியா வேண்டும் என்று நம்பியவர்கள் இங்கே அவ்விதம் நடத்தப்படமாட்டார்கள் என்று எண்ணினேன். ஆனால், இங்கே நிலைமை இன்னும் அதிக மோசமாக இருக்கிறது. நான் எந்த நண்பர்களுடன் தங்கியிருக்கிறேனே அவர்களும் என்னைச் சந்தேகத்துடனேயே பார்க்கின்றனர்.

"இப்பொழுது நான் மேற்கு பாகிஸ்தானிலிருக்கும் என் பெற்றோரிடம் போய், என் மனச்சாட்சிக்கு விரோதமாக வாழ்நாளெல்லாம் அவர்களுடைய தாக்குதலுக்கு இலக்காக இருந்து வருவதா? அல்லது காருண்யமற்ற என் மதத்தினர் செய்துவிட்ட குற்றங்களுக்காக என் உயிரைப் போக்கிவிட எப்பொழுதும் தேடப்பட்டு வரும் பணயமாக நான் இந்தியாவில் இருந்து வருவதா? என் அருமை சுதந்திர, சமத்துவ தூதரே! இப்பொழுது சொல்லுங்கள்."

மேலே கண்ட கடிதத்தைக் கொஞ்சம்தான் சுருக்கியிருக்கிறேன். அதிலிருக்கும் கசப்பை நான் தொடவில்லை. இக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பவை உண்மையானவை என்று வைத்துக் கொண்டால், இந்தக் கசப்புக்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றன. என்றாலும், ஒருவருடைய தகுதி, அதிகச் சங்கடமான சந்தர்ப்பத்திலேயே சோதிக்கப்படுகிறது. நல்ல காலத்தில் கூடியிருக்க வரும் நண்பர்கள் அநேகர். ஆனால், அவர்களெல்லாம் தகுதியற்றவர்கள். கஷ்டத்தில் உதவி செய்ய வரும் நண்பனே உண்மையான நண்பன். இப்பொழுது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் செய்துகொண்டிருப்பதைப் போன்று, ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டு வருவதில்லையா? இத்தனை வருடங்களாக துவேஷப் பாட்டையே எவ்விதமான தடையுமின்றிப் பிரசாரம் செய்து வந்துவிட்ட பிறகு, சாதாரண மனிதரிடமிருந்து வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? இக்கடிதத்தை எழுதியிருப்பவர் தமது தேசீயம் நியாயமானதே என்று சொல்லுவதாயிருந்தால், இந்த நெருக்கடியான சமயத்தில் தன்னையே அவர் மறுத்துக் கொண்டுவிடக் கூடாது. ஜுடாஸ் இஸ்காரியட்டைப் * போல நடந்துகொண்டு விடுவதை நாம் தவிர்க்க வேண்டும். ஆகையால் இக்கடிதம் எழுதியிருப்பவருக்குத் தயக்கமின்றி ஒரு யோசனை கூறுவேன். இதுவரையில் அவருக்கு நண்பர்களாக இருந்தவர்கள் தம்மைத் துண்டு துண்டாக வெட்டிப் போட்டாலும் அவர் ஜலந்தரிலுள்ள தம் வீட்டுக்கே திரும்பிப் போய்விடவேண்டும். லட்சியத்திற்காக உயிர்த் தியாகம் செய்யும் இத்தகையவர்களே ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையைக் காத்தவர்களாவர். அவர் சொல்லுவதைப் போன்றே நடத்தையிலும் நிரூபிப்பாரானால், அவர்களுடைய

* ஏசுநாதரின் சீடனாக இருந்தும் சமயத்தில் அவரைத் துரோகம் செய்து விட்டவன்.

பெற்றோர்கள் அன்போடு அவரை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று முன்கூட்டியே கூறுவேன். குற்றஞ் செய்தவர்களுக்காக ஒரு பாவமும் அறியாதவர்கள் கஷ்டப்படுவது மனிதப் பிறவிகளான நம் விதியல்லவா? அப்படி இருப்பதும் ஒரு விதத்தில் நல்லது தான். ஒரு பாவமும் செய்யாதவர்கள் துன்பப்படுவதனாலேயே உலகம் மேன்மையானதாகவும் சிறந்ததாகவும் ஆகிறது. இந்தத் தெளிவான உண்மையை மீண்டும் வற்புறுத்திக் கூறுவதற்கு 'சுதந்திர, சமத்துவ தூதனாக' நான் இருக்க வேண்டும் என்பதில்லை.

புது டில்லி, 13-10-'47 —'ஹரிஜன்' - 19—10—1947

# 25

# பாகிஸ்தானில் சிறுபான்மையோர்

பாகிஸ்தானில் ஹிந்துக்களும் சீக்கியரும் பயங்கரமான அவதியில் இருந்து வருகிறார்கள். அவர்கள் வெளியேறி வருவது கஷ்டமான காரியமாக இருக்கிறது. வழியில் அநேகர் மடிந்தாக வேண்டும். அவர்கள் எல்லையைத் தாண்டி இந்திய யூனியனுக்குள் வந்த பிறகும் அகதிகள் முகாம்களில் அவர்கள் நிலைமை மோசமாகவே இருக்கிறது. குருக்ஷேத்திரத்தில் ஓர் அகதிகள் முகாம் இருக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கானவர்கள் ஆகாசத்தின் கீழேதான் இருந்து வருகிறார்கள். வைத்திய வசதி போதுமானதாக இல்லை. சத்துள்ள உணவும் இல்லை. அரசாங்கத்தின் மீது குற்றம் சொல்லுவது தவறு. மக்களுக்கு நான் என்ன புத்திமதி கூறுவது? மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்த சில நண்பர்கள் இன்று என்னைப் பார்த்தார்கள். தாங்கள் அனுபவித்த துயரக் கதைகளை என்னிடம் சொன்னார்கள். இன்னும் அங்கே இருப்பவர்களை சீக்கிரத்தில் வெளியேற்றிக் கொண்டு வந்துவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். நான் அரசாங்கம் அல்ல. ஆனால், இத்தகைய அசாதாரண சந்தர்ப்பத்தில், செய்ய வேண்டும் என விரும்பப்படுகிறவைகளையெல்லாம், உலகத்தின் எல்லா உறுதியையும் கொண்டுங்கூட எந்த அரசாங்கமும் செய்துவிட முடியாது. கிழக்கு வங்காளத்திலும் மக்கள் ஓட ஆரம்பித்துவிட்டார்கள் என்று அங்கேயிருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. காரணம் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. காதிப் பிரதிஸ்தானைச் சேர்ந்த சதீஷ் பாபுவும் மற்றவர்களும், பியாரிலால்ஜி, கனுகாந்தி, அம்துல் சலாம் பென், சர்தார் ஜீவன் சிங்ஜி ஆகிய என் சக ஊழியர்கள் இன்னும் அங்கே இருந்து வருகின்றனர். நானே நோவாகாலியில் சுற்றுப்பிரயாணம் செய்து, பயத்தை விட்டொழித்துவிடும்படி மக்களைச் செய்வதற்காக முயன்றேன். மக்களின், அரசாங்கத்தின் கடமையைக் குறித்து எண்ணும்படி

இது செய்கிறது. பயந்துகொண்டு ஒரு டொமினியனிலிருந்து வெளியேறுகிறவர்கள், மற்றோர் டொமினியனில் நிலைமை நன்ருக இருக்கும் என்று ஊகிக்கின்றனர். ஆனால், அவர்கள் நினைப்பது தவறு. எவ்வளவுதான் உறுதியுடன் முயன்றாலும் இவ்வளவு அதிக அகதிகளை வைத்துக்கொண்டு சமாளிக்க அதிகாரிகளால் முடியாது. முன்னிருந்த நிலைமையை உண்டாக்கிவிட அவர்களால் ஆகாது. ஆகையால் இருக்கும் இடத்திலேயே இருந்து வருக, உங்கள் பாதுகாப்புக்கு கடவுளைத் தவிர வேறு யாரையும் எதிர்பார்க்க வேண்டாம் என்பதே மக்களுக்கு நான் சொல்லக்கூடிய ஒரே புத்திமதி. அவர்கள் சாகவேண்டியே வந்தாலும், அவர்களுடைய வீடு வாசல்களிலேயே வீரத்துடன் அவர்கள் சாக வேண்டும். சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்க வேண்டியது இயற்கையாகவே மற்றொரு அரசாங்கத்தின் கடமை. நியாயமாகவும் ஒத்துழைத்தும் நடந்துகொள்ள வேண்டியது இரு அரசாங்கங்களின் கடமை. விரும்பத்தக்க இக்காரியம் நடவாது போகுமாயின், இதன் பலனாக ஏற்படக்கூடிய இயல்பான முடிவு போரே. போர் வேண்டும் என்று நான் சொல்லவே மாட்டேன். ஆனால், ஆயுதங்களையும் ராணுவங்களையும் வைத்திருக்கும் அரசாங்கங்கள் வேறு விதமாக நடந்துகொள்ள முடியாது என்பதையும் நான் அறிவேன். இத்தகைய முறை எதுவும் அழிவில்தான் முடியும். மக்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ளும் முறையினால் ஏற்படும் சாவு யாருக்கும் நன்மை அல்ல. இப் பரிவர்த்தனையால் நிவாரணம், குடியமைப்பு போன்ற பிரமாதமான பிரச்னைகள் எழுகின்றன.

## ஹரிஜனங்களுக்கு அடையாளச் சின்னங்கள்

ஹரிஜனங்கள், தாங்கள் 'தீண்டாதார்' என்பதைக் காட்டும் அடையாளச் சின்னங்களை அணிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர் என மண்டல் சாகிபும் பாகிஸ்தான் அரசாங்கத்தின் மற்ற உறுப்பினர்களும் முடிவு செய்திருக்கிறார்கள் என்று வெளியாகியுள்ள ஓர் அறிக்கையை நேற்று பார்த்தேன். அந்தச் சின்னத்தில் பிறையும் நட்சத்திரமும் இருக்க வேண்டும். மற்ற ஹிந்துக்களிலிருந்து ஹரிஜனங்கள் இன்னார் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கே இந்தச் சின்னம். பாகிஸ்தானிலேயே தங்கிவிடும் ஹரிஜனங்கள் முடிவில் இஸ்லாமைத் தழுவிவிட வேண்டியிருக்கும் என்பதுதான் இதனால் உண்டாகப்போகும் விளைவு என்பது என் கருத்து. மனமாரக் கொள்ளும் நம்பிக்கையினாலும் ஆன்மிக ஆர்வத்தினாலும் ஏற்படும் மத மாற்றத்திற்கு எதிராக நான் சொல்லக் கூடியது எதுவும் இல்லை. விரும்பி நானே ஹரிஜனனாகியிருப்பதால் ஹரிஜனங்களின் உள்ளம் இன்னது என்பதை நான் அறிவேன். அந்த ரகத்தில் சேர்ந்துவிடக்கூடிய ஹரிஜன் இன்று ஒருவர்கூட இல்லை. இஸ்லாமைக் குறித்து அவர்கள் என்ன தெரிந்துகொண்டிருக்கிறார்கள்?

ஹிந்துக்களாக ஏன் இருக்கிருர்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. எல்லா மதங்களைப் பின்பற்றுவோர் விஷயத்திலும் இதுதான் உண்மையான நிலைமை. ஒரு குறிப்பிட்ட மதத்தில் பிறந்துவிட்டதனுல், எப்படி இருக்கின்றனரோ அப்படியே இருந்து வருகிருர்கள். இவர்கள் மதம் மாறுகிருர்கள் என்ருல், கட்டாயப்படுத்தப்படுவதனுலோ, மதம் மாறுவதற்குப் பதிலாகக் கொடுப்பதாகக் காட்டும் ஆசைகளுக்காகவோ தான் அவ்விதம் செய்கின்றனர். இப்பொழுது இருந்து வரும் சூழ்நிலையில், விரும்பி மதம் மாறுவது எதுவும் செல்லுபடியானதாக ஆகாது. உயிரினும் அருமையானதாக மதம் இருக்க வேண்டும். ஹிந்து சாஸ்திரங்களை எவ்வளவுதான் ஒருவர் படித்திருந்தாலும் நெருக்கடி வரும் சமயத்தில் அவருடைய நம்பிக்கை திடமாக இல்லை என்ருல், அவரைவிட சத்தியத்தை அனுசரித்து நடப்பவரே சிறந்த ஹிந்து ஆவார்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 11—10—'47

—'ஹரிஜன்' · 19—10—1947

# 26

# அரசாங்கத்தை பலவீனமாக்கிவிட வேண்டாம்

அரசாங்கம், சிலரைக் கைது செய்திருக்கிறது. இதை ஆட்சேபித்துக் கிளர்ச்சி செய்கிருர்கள். கைது செய்வதற்கு அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. எந்தக் குற்றமும் செய்யாதவர்களை நம் அரசாங்கம் வேண்டுமென்று கைது செய்யாது. தவறு செய்துவிடுவது மனித இயல்பு. தவருக சில நிரபராதிகளும் கஷ்டப்பட நேர்ந்துவிடவும் கூடும். இத்தகைய தவறுக்கு அரசாங்கம்தான் பரிகாரம் செய்ய வேண்டும். தவறு ஏதாவது நடந்திருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு ஒரு ஜனநாயகத்தில் மக்கள் திருப்தியடைந்துவிட வேண்டும். மக்கள் விரும்பினுல் அந்த அரசாங்கத்தை நீக்கிவிடலாம். ஆனுல், அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து அது செய்யும் காரியத்தைத் தடுக்கக்கூடாது. தனது ஆதரவுக்கு மகத்தான ராணுவத்தையும் கடற்படையையும் வைத்துக் கொண்டிருக்கும் ஓர் அரசாங்கம் அல்ல நம் அரசாங்கம். தனது பலத்தை அது மக்களிடமிருந்தே பெற வேண்டியதாக இருக்கிறது.

உண்மையான அமைதியை எப்படி உண்டாக்க முடியும்? டில்லியில் திரும்பவும் அமைதி ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுவதைக் குறித்து நீங்கள் திருப்தியடைந்திருப்பீர்கள். ஆனுல்,

நானும் திருப்தி அடைந்து விடுவதற்கில்லை. ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவர்மீது ஒருவர் துவேஷம் கொண்டிருக்கின்றனர். முன்பும் அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டு வந்தார்கள். ஆனால், அந்தச் சண்டை ஒன்று, இரண்டு நாட்களே இருந்தது; பிறகு அதைப் பற்றி மறந்துபோய் விட்டோம். இன்றோ அவர்கள் அதிக மனக் கசப்பை அடைந்திருக்கிறார்கள்; தாங்கள் ஒருவருக்கொருவர் பழைய விரோதிகள் என்று உணருகிறார்கள். இந்த உணர்ச்சியை பலவீனம் என்று நான் சொல்லுகிறேன். அதை நீங்கள் விட்டொழித்துவிட வேண்டும். அப்பொழுதுதான் நாம் பெரிய வல்லரசாக முடியும். நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடிய இரண்டு விஷயங்கள் உங்கள் முன்னால் இருக்கின்றன. பெரிய ராணுவ வல்லரசாக நீங்கள் ஆகலாம். அல்லது நீங்கள் என் வழியைப் பின்பற்றுவதானால் பெரிய அகிம்சை வல்லரசாக, யாராலும் வென்றுவிட முடியாத வல்லரசாக ஆகலாம். இதில் எதை நீங்கள் அடைய விரும்பினாலும், இதற்கு முதல் நிபந்தனை, எல்லா பயங்களையும் நீங்கள் விட்டொழித்துவிட வேண்டும்.

மற்றொரு தரப்பினர் செய்திருக்கும் தவறுகளை ஒவ்வொருவரும் மறந்துவிட வேண்டும். தான் செய்துவிட்ட தவறே அதிகம் என்று எண்ணவும் வேண்டும். ஒருவருக்கொருவர் நெருங்கி வருவதற்கு இது ஒன்றே வழி. ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் என் முழு சக்தியையும் கொண்டு நான் இதைச் சிபாரிசு செய்துவருவதைப் போன்றே, முஸ்லிம்களுக்கும் இந்த வழியைச் சிபாரிசு செய்கிறேன். தங்கள் குற்றத்தை மாத்திரம் மனம்விட்டு ஒப்புக்கொண்டு விடுவார்களானால், நேற்று விரோதிகளாக இருந்தவர்கள் இன்று நண்பர்களாகிவிட முடியும். பதிலுக்குப் பதில் செய்வது என்ற கொள்கை நட்புக்கு உகந்தது அன்று. நான் கூறும் புத்திமதியின்படி மனப்பூர்வமாக நீங்கள் நடப்பதாயிருந்தால், டில்லியிலிருந்து நான் புறப்பட்டுப் போய் பாகிஸ்தானில் என் பணியை நான் தொடர்ந்து செய்துவர முடியும்.

பிர்லா மாளிகை,

புது டில்லி, 14—10—'47

—'ஹரிஜன்' - 26—10—1947

# 27

# வெளியேறிவிட நிர்ப்பந்தமா?

**யூ**னியனில் புராதனமாக இருந்துவரும் தங்கள் வீடு வாசல்களை விட்டு பாகிஸ்தானுக்குப் போய்விடுமாறு முஸ்லிம்கள் நிர்ப்பந்தம் செய்யப்படுகிறார்கள் என்று அடிக்கடி புகார்கள் சொல்லப்படுகின்றன. முஸ்லிம்கள் வீடுகளைக் காலி செய்யும்

படியும், ரெயில் மூலமோ அல்லது நடையாகவோ அனுப்பப்படு வதற்காக முகாம்களில் போய் தங்கும்படியும் பல வழிகளில் கட்டாயப்படுத்தப்படுவதாகவும் கூறுகின்றனர். இப்படிப்பட்ட காரியம் மந்திரி சபையின் கொள்கை அல்ல என்பதை நான் நிச்சயமாக அறிவேன். இதைக் குறித்து வரும் புகார்களைப் பற்றி மந்திரி சபையினரிடம் நான் சொல்லும்போது, அவர்கள் சிரிக்கிறார்கள். எனக்கு வந்திருக்கும் தகவல்கள் பொய்யாக இருக்க வேண்டும் அல்லது அதிகாரிகள் அரசாங்கத்தின் கொள் கையை நிறைவேற்றாமல் இருக்க வேண்டும் என்றும் எனக்கு பதில் கூறுகின்றனர். எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் சரி யானது என்பதை அறிவேன். அப்படியானால் அதிகாரிகள் துரோகமாக நடந்து கொள்ளுகிறார்களா? அப்படி இல்லை என்றே நம்புகிறேன். என்றாலும், இப்புகார் எங்கும் இருந்து வருகிறது. துரோகமாக நடந்து கொள்ளுவதாகச் சொல்லப்படுவதற்குப் பலவிதமான காரணங்களும் கூறப்படுகின்றன. ராணுவமும் போலீஸும் வகுப்பு அடிப்படையில் பிரிக்கப்பட்டன. ஆகை யால், அவற்றிலிருப்பவர்கள் இப்பொழுது இருந்துவரும் துவேஷங்களைக் கொண்டிருக்கின்றனர் என்று சொல்லப்படு கிறது. இது மிகவும் சாத்தியமான காரணமே. இது சம்பந்த மாக என் அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறேன். சட்டத்தை யும் அமைதியையும் நிலைநாட்டும் பொறுப்பைப் பெற்றிருக்கும் இவர்கள், வகுப்புவாதக் கறைபட்டுப் போயிருப்பார்களானால், ஒழுங்கான ஆட்சிக்குப் பதிலாக குழப்பமான ஆட்சியே இருக் கும். குழப்பமான ஆட்சி தொடர்ந்து இருக்குமாயின், சமூகமே சீர்குலையும். உத்தியோகங்களில் மேல் தளத்தில் இருப்பவர்கள் வகுப்புவாதத்திற்கு அப்பாற்பட்டவர்களாகி, அதே உணர்ச்சி கீழ்த்தளத்தில் இருப்போருக்கும் உண்டாகும்படிச் செய்ய வேண்டியது அவர்கள் கடமை.

பாதிக்கப்பட்டிருக்கும் யூனியன் பிரஜைகளின் கடமை என்ன? குடியிருக்கும் இடத்திலிருந்து வெளியேறும்படி யாரை யும் கட்டாயப்படுத்திவிட எந்தச் சட்டமும் இல்லை என்பது தெளிவானது. மேலே சொல்லப்பட்டிருப்பதைப் போன்ற உத்தரவுகளை அதிகாரிகள் பிறப்பிப்பதற்கு அவர்க ளுக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். நான் அறிந்த வரையில், அத்தகைய எழுத்து மூலமான உத்தரவு எதுவும் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. இந்த விஷயத்தில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வாய் உத்தரவு கொடுக்கப்பட் டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. உத்தியோகத் தனி உடை அணிந்தவர்கள் இடும் எந்த உத்தரவுக்கும் பயந்து பணிந்து விடுகிறவர்கள் விஷயத்தில் எதுவும் செய்வதற்கில்லை. அப்ப டிப்பட்டவர்களுக்கெல்லாம் நான் சொல்லும் புத்திமதி, எழுத்து மூலம் உத்தரவைக் கொடுக்கும்படி அதிகாரிகளை அவர்கள் கேட்க வேண்டும் என்பதுதான். அப்பொழுது அது சம்பந்த மாக மேலதிகாரிகளுக்கு முறையிட்டுக் கொள்ளுவதால், திருப்தி

கரமான முடிவு ஏற்படவில்லையாயின், நியாயஸ்தலங்களில் வழக்குத்தொடுத்து உத்தரவு செல்லுமா என்பதைப் பார்த்து விடலாம்.

இவ்விஷயத்தில் பெரும்பான்மை சமூகத்தினரான பொது மக்கள், தாங்களே தண்டிக்கக் கிளம்பிவிடுவதிலிருந்து கண்டிப்பாக தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இவர்கள் அவ்விதம் செய்யவில்லையானல், தாங்கள் உட்கார்ந்திருக்கும் கிளையைத் தாங்களே வெட்டி வீழ்த்திக்கொண்டு விட்டவர்களாவார்கள். இதில் வீழ்ந்துவிடுவார்களாயின் திரும்ப எழுவது அதிகச் சிரமம். இன்னும் காலங் கடந்து போய்விடாமலிருக்கும் இப்பொழுதே இவர்களுக்குப் புத்திசாலித்தனம் உண்டாகட்டும். ஆபாசமான சம்பவங்களைக் குறித்து வரும் செய்திகள் உண்மையாகவே இருந்துவிட்டாலும், அதனல் ஆவேசமடைந்து விடாமலும் இவர்கள் இருக்கட்டும். நியாயம் கிடைக்கும்படிச் செய்வதற்குத் தங்கள் பிரதிநிதிகளான மந்திரிகள் வேண்டியதைச் செய்வார்கள் என்றும் இவர்கள் நம்பவேண்டும்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 27—10—'47

—'ஹரிஜன்' – 9—11—1947

# 28

# காஷ்மீரின் வேதனை

[காஷ்மீர் மீது பாகிஸ்தானின் தூண்டுதலாலும் உதவியாலும் படையெடுப்பு நடந்ததும், இந்திய யூனியனில் சேர்த்துக்கொள்ளும்படி காஷ்மீர் மகாராஜா இந்திய கவர்னர் ஜெனரலைக் கேட்டுக்கொண்டதன் பேரில் அதை ஏற்றுக்கொண்டு இந்திய அரசாங்கம் காஷ்மீருக்குப் படைகளை அனுப்பியது. இதைக் குறித்து பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியவைகளே கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:]

காஷ்மீர் மகாராஜா தம்முடைய துயரமான நிலைமையில் இந்திய யூனியனுடன் சேர்ந்துகொண்டுவிட விரும்பினர். அவ்விதம் சேர முன்வந்ததைக் கவர்னர் ஜெனரல் நிராகரித்துவிட முடியாது. அவரும் அவருடைய மந்திரி சபையினரும், காஷ்மீருக்கு விமானத்தின் மூலம் துருப்புகளை அனுப்பினர்கள். காஷ்மீர் யூனியனில் சேர்ந்தது தாற்காலிகமானது என்றும், மதம் எதுவானலும் எல்லா காஷ்மீரிகளின் பாரபட்சமற்ற பொதுஜன வாக்கெடுப்பை நடத்தி இதில் பிறகு முடிவு செய்ய வேண்டும் என்றும் மகாராஜாவிடம் கூறப்பட்டது. மகாராஜா, புத்திசாலித்தனமாக ஷேக் அப்துல்லாவைத் தமது மந்திரியாக நியமித்து, மந்திரிக்குரிய எல்லா அதிகாரங்களையும் அவருக்கு அளித்திருக்கிறார். ஷேக் அப்துல்லாவும் அழைப்பை மனமார ஏற்றுக்

கொண்டிருக்கிருர் என்பதைப் பத்திரிகைகளில் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். நிலைமை என்ன? ஆபிரிதிகள் முதலியவர்களைக் கொண்ட கலக ராணுவம், திறமை வாய்ந்த அதிகாரிகளின் தலைமையில் ஸ்ரீநகரை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறது. வழியிலுள்ள கிராமங்களைக் கொளுத்திக் கொள்ளையிட்டு வருகின்றனர். மின்சார நிலையத்தையும் நாசப்படுத்தி விட்டார்கள். இதனால் ஸ்ரீநகர் இருளடைந்ததாகிவிட்டது. பாகிஸ்தான் அரசாங்கத்திடமிருந்து ஏதாவது ஒரு வகையில் ஆதரவு இல்லாமல் இந்தப் படை புகுந்திருக்க முடியும் என்று நம்ப முடியவில்லை. இது எவ்வளவு தூரம் சரியாக இருக்கும் என்பதில் ஒரு முடிவுக்கு வருவதற்குப் போதுமான ஆதாரங்கள் என்னிடம் இல்லை. என் காரியத்திற்கு இது தேவையும் இல்லை. துருப்புகள் கொஞ்சமேயானாலும், யூனியன் அரசாங்கம் ஸ்ரீநகருக்கு அதை அனுப்பியது சரியானது என்பதை மாத்திரம் நான் அறிவேன். ஷேக் சாகிபை மக்கள் 'காஷ்மீரின் சிங்கம்' என்று அன்புடன் அழைக்கிருர்கள். இவருக்கும் காஷ்மீரிகளுக்கும் நம்பிக்கை அளிக்கும் அளவுக்கு இந்திய சிப்பாய்கள் நிலைமையைச் சமாளிக்க வேண்டும். முடிவு கடவுளின் கையில் இருக்கிறது. செய்வதோ அல்லது சாவதோ தான் மனிதனல் முடியும். இந்திய யூனியனின் சிறு படை, காஷ்மீரை வீரமாகப் பாதுகாப்பதில் ஸ்பார்டானியரைப்போல் அடியோடு நிர்மூலமாகி விட்டால், அதற்காக நான் ஒரு சொட்டுக் கண்ணீரும் விடமாட்டேன். ஷேக் சாகிபும், அவருடைய முஸ்லிம், ஹிந்து, சீக்கியத் தோழர்களும், ஆண்களும் பெண்களும் காஷ்மீரைக் காக்கும் போரில் போர்க்களத்திலேயே மாண்டு போனலும் நான் கவலைப்படமாட்டேன். இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்கு இது கீர்த்தி வாய்ந்த உதாரணமாக இருக்கும். இத்தகைய வீரமான யுத்தம், இந்தியா முழுமைக்கும் வீரத்தை உண்டாக்குவதோடு, ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சீக்கியரும் விரோதிகளாக இருந்தது உண்டு என்பதையும் மறந்துவிடுவார்கள். அப்பொழுது எல்லா முஸ்லிம்களும் ஹிந்துக்களும் சீக்கியரும் நண்பர்கள் என்பதையும் உணர்ந்துகொள்ளுவோம். எல்லா மதங்களிலும் இனங்களிலும் நல்லவர்களான ஆண்களும் பெண்களும் சிலர் இருக்கிருர்கள். நல்லவர்களான ஆண்களினலும் பெண்களினலுமே பிரபஞ்சம் இருந்துகொண்டிருக்கிறது. உண்மையில் கலக ராணுவத்திற்கும் நல்ல புத்தி ஏற்படுமானல்கூட நான் ஆச்சரியப்படப் போவதில்லை. 'எப்பெயர் கொண்டு அவனை நாம் வணங்கினலும் நாம் எல்லோரும் அந்த ஒரே கடவுளிடமிருந்து வந்தவர்களே' என்று பஜனையில் பாடிய பாடலை எல்லோரும் நினைவில் வையுங்கள்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 29—10—'47

— 'ஹரிஜன்' - 9—11—1947

# 29

## மீண்டும் காஷ்மீர்

காஷ்மீரில் ஏற்பட்ட தொல்லையைக் குறித்து மீண்டும் காந்திஜி பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது:

"இந்திய யூனியன், காஷ்மீருக்குத் துருப்புகளையும் மற்ற அவசியமான உதவிகளையும் தொடர்ந்து அனுப்பிக்கொண்டிருக்கிறது. அரசாங்கத்தினிடம் விமானங்கள் இல்லை. ஆனால், தனிப்பட்ட ஸ்தாபனங்கள் தங்கள் விமானங்களை அரசாங்கத்தின் உபயோகத்திற்குக் கொடுத்திருக்கின்றன என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். ஒழுங்கான படைகளுக்கும் ஒழுங்கான அரசாங்கத்திற்கும் சாதகமாகக் காலம் இருப்பதோடு, கலகப் படையினருக்கு எதிரானதாகவும் இருந்து வருகிறது. என்றாலும், காஷ்மீரைத் தாக்கி வரும் கலகப் படையினருக்கு ஆஜாத் ஹிந்த்படையின் முன்னாள் அதிகாரிகளில் இருவர் தலைவர்களாக இருந்து நடத்திச் செல்லுகின்றனர் என்பதை அறிந்து விசனிக்கிறேன். ஆஜாத் ஹிந்த் படை, திறமை மிக்க காலஞ் சென்ற ஸ்ரீ சுபாஷ் போஸின் தலைமையில் போராடியதாகும். அப்படையில் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் முதலியவர்கள் இருந்தனர். அவர்கள், அவரவர் மதத்தைவிட வில்லை. ஆனால், அவர்களிடம் சாதி, இன வேற்றுமை இல்லை. நட்பு, சகோதரத்துவ பந்தத்தில் அவர்கள் ஒன்றாக இணைந்திருந்தார்கள். இந்தியர்களாக இருப்பதிலும் பெருமை கொண்டனர். அவர்களை (அவர்களே இவர்கள் எனின்) டில்லி கோட்டையிலும், அவர்கள் விடுதலையான பிறகு வெளியிலும் சந்தித்திருக்கிறேன். கலகக்காரர்கள் படையினருக்கு அவர்கள் ஏன் தலைமை வகித்துச் செல்லுகிறார்கள். கிராமங்களைக் கொளுத்துவதிலும், கொள்ளை அடிப்பதிலும், ஒரு பாவமும் அறியாத ஆண்களையும் பெண்களையும் கொல்லுவதிலும் ஏன் சம்பந்தப்படுகிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. செய்யக்கூடாத காரியங்களைச் செய்ய உற்சாகமளிப்பதன் மூலம் ஆபிரிதிகளுக்கும் மற்ற மலைச் சாதியினருக்கும் அவர்கள் தீமையையே செய்துவருகின்றனர். அவர்கள் இடத்தில் நான் இருந்தால், மலைச் சாதியினரைத் தவறான போக்கிலிருந்து தடுத்திருப்பேன். ஷேக் அப்துல்லா சாகிப் இஸ்லாமுக்கோ, இந்தியாவுக்கோ தீமை செய்வதாக அவர்கள் எண்ணினால் அவரை சந்தித்துப் பேசியிருக்கலாம். என்னுடைய வேண்டுகோள் அந்த அதிகாரிகளுக்கும் மலைச் சாதியினருக்கும் எட்டி, அவர்கள் மேற்கொண்டிருக்கும் காரியத்திலிருந்து பின்வாங்குவார்கள் என்றே நம்புகிறேன்.

"இந்தப் படையெடுப்பை பாகிஸ்தான் அரசாங்கம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஊக்குவித்து வருகிறது என்ற முடி

வுக்கு நான் வராமலிருப்பதற்கில்லை. எல்லைப்புற மாகாண பிரதம மந்திரி, இப்படையெடுப்பைப் பகிரங்கமாக ஊக்குவித்து வருவதோடு, இஸ்லாமிய உலகம் உதவி செய்ய வேண்டும் என்று கோரியுமிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. காஷ்மீருக்கு உதவி அனுப்பியதில் பண்டித நேருவின் அரசாங்கம் மோசடி செய்திருக்கிறது என்றும், காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்துவிடுவதற்குச் சில காலமாகச் சதி நடந்திருக்கிறது என்றும் குற்றஞ் சாட்டப்படுகிறது என்பதைப் பத்திரிகைகளில் பார்த்தேன். ஒரு சகோதர டொமினியன் மீது ஒரு பாகிஸ்தான் மந்திரி இவ்விதம் பொறுப்பில்லாமல் குற்றஞ் சாட்டுவதைக் கண்டு நான் திகைத்தே போனேன். நண்பர்களிடமிருந்து எனக்கு நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. அதை உங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே என் பேச்சில் காஷ்மீரத்தையும் கொண்டு வந்தேன். இந்திய யூனியன் பாகிஸ்தானின் விரோதி என்று காயிதே ஆஜம் ஜின்னா கூறியிருக்கிறார். எனக்குக் கிடைத்திருக்கும் செய்தி அவர் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை. கராச்சியிலிருந்து வந்திருக்கும் ஒரு ஹிந்துவும், லாகூரிலிருந்து வந்திருக்கும் மற்றொருவரும் என்னைப் பார்த்தார்கள். சில நாட்களுக்கு முன்னிலிருந்ததைவிட இப்பொழுது நிலைமை சீர்பட்டிருக்கிறது என்றும், மேற்கொண்டும் சீர்பட்டு வருகிறது என்றும் அவர்கள் கூறினர். ஒரு முஸ்லிம் குடும்பமாவது ஒரு சீக்கிய நண்பருக்குப் புகலிடம் கொடுத்து, அந்தச் சீக்கியரின் மதக் கிரந்தமான கிரந்த் சாகிபை மரியாதையாக வைப்பதற்கென்று அவருக்கு ஒரு தனி அறை ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது என்றும் கேள்விப்பட்டேன். முஸ்லிம்களுக்குச் சீக்கியரும் ஹிந்துக்களும் புகலிடம் கொடுத்ததும், அதே போல ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் முஸ்லிம்கள் புகலிடம் கொடுத்ததும் போன்ற சம்பவங்கள் பல உண்டு. ஏராளமாக, அக்கிரமமாக மக்கள் பரிவர்த்தனை செய்துகொள்ளப்படுவதைக் குறித்து என்னோடு சேர்ந்து வருந்தும் சில முஸ்லிம் நண்பர்களும் இருக்கிறார்கள். இந்திய யூனியனுக்குள் வரும் ஹிந்து, சீக்கிய அகதிகளைப் போன்றே முஸ்லிம் அகதிகளும் பாகிஸ்தானில் அதிகக் கஷ்டப்படுகிறார்கள் என்று அவர்கள் என்னிடம் கூறுகிறார்கள். சொந்த வீடுவாசல்களிலிருந்து பெயர்த்து ஏராளமானவர்களை அரசாங்கத்தின் தலைமீது சுமத்திவிட்டால், அப்படிப்பட்ட நிலைமையை எந்த அரசாங்கமும் எளிதில் சமாளித்துவிட முடியாது. திடீரென்று வெள்ளப் பெருக்கு வந்துவிடுவதைப் போன்றது இது. இந்தப் பைத்தியக்காரத்தனமான ஓட்டத்தையும் நிறுத்திவிட முடியாதா? இவ்விதம் நண்பர்கள் கேட்கிறார்கள். சந்தேகத்தையும் குற்றஞ் சாட்டிக்கொள்ளுவதையும் (ஆதாரமில்லாதவை என எண்ணுகிறேன்) முற்றிலும் மனப்பூர்வமாக நிறுத்திவிட்டால், மக்கள் குடிபெயர்ந்து போவதை நிறுத்திவிடலாம் என்பதில் சந்தேகமில்லை. இத்துர்ப்பாக்கிய நாட்டிற்கு நற்புத்தி ஏற்

படச் செய்ய வேண்டும் என்று என்னோடு சேர்ந்து பிரார்த்திக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

பிர்லா மாளிகை,
புது டில்லி, 2—11—'47

—'ஹரிஜன்' - 9—11—1947

# 30

# புத்தித் தெளிவும் பைத்தியமும்

'காஷ்மீர சிங்கம்' என்று அன்போடு அழைக்கப்படுபவரான ஷேக் அப்துல்லா வந்து என்னைப் பார்த்தார். ஹிந்துக்களும் சீக்கியரும் காஷ்மீரில் மிகச் சிலரே இருந்தபோதிலும் அவர்களைக் கஷ்டப்பட்டு ஷேக் அப்துல்லா தம்முடன் கொண்டு செல்லுகிறார். ஜம்முவுக்கும் அவர் போயிருந்தார். அங்கே நடந்திருப்பது, ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் மிகவும் அவமானகரமானதாகும். ஆனால், அதனையெல்லாம் ஷேக் சாகிப் தமது நிதானத்தை இழந்துவிடவில்லை. அவர் ஜம்முவுக்குப் போனதினாலும் நல்ல பயன் ஏற்பட்டது. இப்பொழுது ஏற்படுவதாகத் தோன்றும் ஒற்றுமை தொடர்ந்து இருந்துவருமானால், இந்தியா முழுமைக்கும் சமூக ஒற்றுமைக்கு இது ஒரு படிப்பினையாக இருக்கும்.

காஷ்மீர் மலைகள் மிகுந்த நாடு. குளிர் காலத்தில் அங்கே வாழ்க்கை அதிகக் கஷ்டமானது. அதற்குப் பல பாதைகள் பாகிஸ்தான் வழியாகப் போகின்றன. என்றாலும், ஒரு குறுகலான பாதை காஷ்மீரத்தையும் கிழக்குப் பஞ்சாபையும் இணைக்கிறது. ஆனால், ஹிந்துக்களும் சீக்கியரும் போவதற்கோ, வசிப்பதற்கோ மேற்குப் பாஞ்சாலமும் வடமேற்கு எல்லைப்புற மாகாணமும் எவ்விதம் ஆபத்தான இடங்களாக இருக்கின்றனவோ, அதே போன்று முஸ்லிம்கள் வருவதற்கும் வசிப்பதற்கும் கிழக்குப் பஞ்சாப் கஷ்டமானதாக இருக்கிறது. இந்த நிலைமையில் இந்திய யூனியனுடன் காஷ்மீர் எப்படி வியாபாரத்தை நடத்த முடியும்? கிழக்குப் பஞ்சாபில் பைத்தியக்காரத்தனமான வெறிச் செயல்கள் தொடர்ந்து நடந்துகொண்டு வருமானால், காஷ்மீர் யூனியனில் சேர்ந்தது பயனில்லாததாகிவிடும். கிழக்குப் பஞ்சாபுக்கு இந்த ஞானம் பிறக்கும் என்று நம்புகிறேன். காஷ்மீரில் தயாராகும் கம்பளத் துணிகளும் மற்றவைகளும் பழங்களும் முன்போல யூனியனுக்குத் தாரளாமாக வந்துகொண்டிருப்பதற்குக் காஷ்மீருக்கும் யூனியனுக்குமிடையே பத்திரமான தரை மார்க்கம் இருக்கும்படி பார்ப்பது மத்திய அரசாங்கத்தின் கடமை.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 27—11—'47

—'ஹரிஜன்' - 7—12—1947

# 31

# காஷ்மீரும் ஜம்முவும்

இன்று மாலை பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி பேசுகையில், காஷ்மீரத்தைக் குறித்துச் சொன்னார். அவர் கூறியதாவது :

காஷ்மீர் பிரச்னையில் ஒரு முடிவுக்கு வர மத்தியஸ்தத்திற்கு விடவேண்டும் என்று யோசனை கூறப்படுவதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். தங்கள் தகராறைத் தீர்த்துவைப்பதற்கு மூன்றாவது நபரை யூனியனும் பாகிஸ்தானும் எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதா? எவ்வளவு நாளைக்குத்தான் இவை சச்சரவிட்டுக்கொண்டே இருக்க முடியும்?

காஷ்மீரைப் பிரிவினை செய்துவிடுவது என்ற ஒரு பேச்சும் இருந்து வருகிறது. இது பைத்தியக்காரத்தனமானது. இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பது ஒன்றே போதும். கடவுள் ஒன்றாக வைத்திருக்கும் ஒரு நாட்டை, இரண்டாக மனிதன் பிரித்துவிடுவது என்பது முடியாத காரியம் என்றுதான் எல்லோரும் எண்ணியிருப்பார்கள். என்றாலும், பிரிவினை நடந்துவிட்டது. வெவ்வேறான காரணங்களை முன்னிட்டு என்றாலும் காங்கிரஸும் லீகும் பிரித்துவிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டன. ஆனால், இப்படிப் பிரிவினை செய்வதை விசாலப்படுத்திக் கொண்டே போகவேண்டும் என்பது அதன் அர்த்தமாகாது. காஷ்மீரைப் பிரித்துவிட வேண்டும் என்றால், ஏன் மற்ற சமஸ்தானங்களையும் பிரிக்கக்கூடாது? இந்தக் காரியம் எங்கே போய் முடியும்?

மலைச் சாதியினர் காஷ்மீரைத் தாக்குகிறார்கள் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால், இந்தத் தாக்குதலில் பாகிஸ்தான் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பது நாளாகவாக வெளியாயிற்று. உருது தினப் பத்திரிகையான 'ஜமீன்தாரி'ல் எழுதியிருந்த ஒரு விஷயத்தை இன்று எனக்குப் படித்துக் காட்டினார்கள். படையில் சேரும்படியும், இம்மதப் போரில் கலந்துகொள்ளுமாறும் முஸ்லிம்கள் அதில் பகிரங்கமாக அழைக்கப்பட்டிருக்கின்றனர். வசைமாரியும் பொழியப்பட்டிருக்கிறது. மௌலானா ஜாபர் அலிகானை கிலாபத் நாட்களில் நான் அறிவேன். அந்த நாட்களில்கூட அவருக்கு நாவை அடக்குவது கஷ்டம். இப்பொழுதோ, அவருடைய நாவுக்கோ, பேனாவுக்கோ கட்டுதிட்டம் என்பது எதுவுமே இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சீக்கியரும் நிரந்தரமான விரோதிகளாக இருந்துவர வேண்டும் என்று அவர் எண்ணுகிறாரா? ஆத்திரத்தை மூட்டும் காரியங்கள் என்ன நடந்தாலும்,

எதையும் திருப்பிச் செய்ய வேண்டாம் என்று ஹிந்துக்களையும சீக்கியரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காஷ்மீர்த் தாக்குதலுக்குப் பாகிஸ்தான் ஏற்பாடு செய்திருக்கிறது என்பதுதான் உண்மை என்று தெரிகிறது. அந்த அழகான பள்ளத்தாக்கைக் காப்பதற்கு உதவி செய்யவேண்டும் என்று காஷ்மீர் மக்களும் மகாராஜாவும் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்திய யூனியன் துருப்புகள் அங்கே போயிருக்கின்றன. ஷேக் அப்துல்லாவே காஷ்மீருக்கு உண்மையான தலைவர் என்று நான் கருதுகிறேன். முஸ்லிம் பொது மக்களிடமும் அங்கிருக்கும் சில முஸ்லிமல்லாதவர்களிடமும் அவருக்கு இருக்கும் இணையற்ற ஆதரவைக் குறித்து காஷ்மீருக்குச் சென்றிருப்பவர்களெல்லாம் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் காலத்தில் ஒரு இந்திய ராஜா, பிரிட்டிஷ் மன்னரைப் போன்று பெயரளவில் தான் ராஜாவாக இருக்க முடியும்.

ஜம்முவில் அநேக முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாகவும், பல பெண்கள் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் கேள்விப்பட்டேன். இதற்கு மகாராஜா சாகிப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். டோக்ரா துருப்புகள் அவருடைய நேர் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றன. மகாராஜா, இன்னும் வெறும் ராஜ்யத் தலைவர் என்ற நிலைக்கு வந்துவிடவில்லை. ஆகையால், நடந்திருக்கும் செயல்களுக்கு, நல்லவையாயினும் கெட்டவையானாலும் அவர் ஆட்சியில் மக்கள் செய்திருப்பவைகளுக்கு, அவரையே பொறுப்பாளியாகக் கொள்ளவேண்டும். ஷேக் அப்துல்லா ஜம்முவுக்குச் சென்று ஆவேசத்தைத் தணிக்க முயன்றார். ஜம்முவில் நடந்திருப்பவைகளை முன்னிட்டு, தமது மந்திரிகளுடன் மகாராஜா விலகிக்கொண்டு, நிலைமையைச் சமாளிப்பதற்கான முழு வாய்ப்பையும் ஷேக் அப்துல்லாவிடமும் காஷ்மீர் மக்களிடமும் ஒப்படைத்துவிடுமாறு மகாராஜாவுக்கு நான் ஆலோசனை கூறுகிறேன். இந்தியாவின் மிகப் பெரிய, முக்கியமான சமஸ்தானத்தின் அதிபதியான அவர் அவ்விதம் செய்துவிடுவதே அவருக்கு உகந்த பெருமையாகும்.

உலகில் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு என்று கூறி பாகிஸ்தான் பெருமைப்படுகிறது. ஆனால், அந்நாட்டிலிருக்கும் ஒவ்வொரு தனி ஹிந்து, சீக்கியருக்கும் நீதி நிச்சயமாகக் கிடைக்கும்படி செய்தாலன்றி பாகிஸ்தான் பெருமைப்பட்டுக் கொள்ளுவதற்கில்லை. பாகிஸ்தான் சிறந்த நாடாக வேண்டும் என்றால், மற்றும் அநேக காரியங்களில் செய்துகொண்டிருப்பதைப் போன்று காஷ்மீர் விஷயத்திலும் யூனியனின் பிரதிநிதிகளுடன் உட்கார்ந்து தீர்த்துக்கொள்ளட்டும். அப்படிச் செய்ய அவர்களால் முடியாது என்றால், தங்கள் காரியத்தை நடத்திச் செல்ல தங்களிடமிருந்தே நல்லவர்களையும் உண்மையானவர்களையும் ஏன் அவர்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ளக்கூடாது? இதற்குச் செய்ய வேண்டிய முதற் காரியம், செய்துவிட்ட தவறு

களை மனமாரப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு விடுவதே. செய்த தவறுக்கு மனமார வருந்துவது, குற்றத்தின் கூர்ப்பை முறித்து விஷயத்தைச் சரியாக அறிந்துகொள்ளுவதற்கு வழிசெய்கிறது. மக்களுக்கு எதிராக மன்னருக்குக் காங்கிரஸ் அரசாங்கம் உதவி செய்யாது. சுதேச மன்னர்களை, அவர்களுடைய மக்களின் தருமகர்த்தாக்கள் என்ற வகையில்தான் அது கவனிக்கமுடியும்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 25—12—'47

—'ஹரிஜன்' - 4—1—1948

# 32

# வழிகாட்டும் தீபம் காஷ்மீர்

காஷ்மீரைக் குறித்தும், மகாராஜா சாகிபைப் பற்றியும் நான் கூறியவைகளுக்காக என்னைக் கண்டிக்கிறார்கள். அப்படிக் கண்டிக்கிறவர்கள் என் அறிக்கையைக் கவனமாகப் படிக்கத் தவறிவிட்டார்கள் என்பதே தெளிவாகிறது. மிகச் சாதாரண மானவரும் செய்யக்கூடியதான ஆலோசனையையே நான் கூறியிருக்கிறேன் என்று கருதுகிறேன். அப்படிக் கூறவேண்டியது சில சமயங்களில் கடமையாகிறது. நான் கூறியதும் அதற்காகவே. நான் சொன்னது எதற்காக? என் யோசனை ஏற்றுக் கொள்ளப்படுமானால், அவருடைய சொந்த நாட்டிலும் உலகத்திலும் மகாராஜாவின் மதிப்பு உயரும். அவர் மதிப்பும் அவருடைய ராஜ்யத்தின் மதிப்பும் இன்று பொருமைப்பட வேண்டாத நிலையில் இருக்கின்றன. அவர் ஒரு ஹிந்து மன்னர். அவர் ஆட்சியின் கீழ் இருக்கும் மக்களில் மிகப் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள். படையெடுத்திருப்பவர்கள், அது தெய்விகப் போர் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஹிந்துக்களின் கொடிய ஆட்சியின் கீழ் நசுக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களைப் பாதுகாக்க இப்படையெடுப்பு என்றும் கூறிக்கொள்ளுகின்றனர்! மிகவும் நெருக்கடியான சமயத்தில் தம் வேலையைச் செய்யும்படி ஷேக் அப்துல்லாவை மகாராஜா அழைத்திருக்கிறார். இந்த வேலைக்கு ஷேக் அப்துல்லா புதியவர். அவர் அவ்வேலைக்குத் தகுதி வாய்ந்தவர் என்று மகாராஜா நினைத்தால், அவருக்குரிய எல்லா ஆதரவையும் அளிக்க வேண்டும். முஸ்லிம்களையும் சிறுபான்மை சமூகத்தினரையும் ஒற்றுமையாக வைத்திருப்பதற்கு ஷேக் அப்துல்லா செய்துவரும் முயற்சி தவறிவிடுமானால், படையெடுப்பாளர்களான மலைச்சாதியினரிடம் காஷ்மீர் பிடிபட்டுவிடும் என்று எனக்குத் தெரிவதைப் போன்று வெளியாருக்கும் தெரிந்தே இருக்கிறது. யூனியனின் ராணுவம் இதைத் தடுத்துவிடும் என்று நினைப்பது தவறு. மகாராஜா சாகிபும் ஷேக் சாகிபும் சேர்ந்து அழைத்ததன் பேரில், தாக்குதலைச் சமாளிப்பதற்கு உதவுவதற்காக யூனியன் படைகள் அங்கே

போயிருக்கின்றன. ஆகையால், நிலைமைக்கு உகந்த வகையில் நடந்துகொண்டு, இங்கிலாந்தின் மன்னரைப் போன்று தாமும் ஆகி, ஷேக் சாகிபும் அவருடைய அவசரக் கால மந்திரி சபையும் கூறும் ஆலோசனையை ஏற்றுக் கண்டிப்பாகத் தாமும் தம் முடைய டோக்ரா ராணுவமும் நடந்து கொள்ளும்படி மகாராஜா வுக்கு நான் யோசனை கூறுவதில் என்ன அதிசயம் இருக்கிறது? யூனியனுடன் சேரும் ஒப்பந்தம் அப்படியே இருந்து வருகிறது. மன்னருக்கு, மன்னருக்காகச் சில உரிமைகளை அது ஒதுக்கி யிருக்கிறது. அந்த உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டும், அல்லது குறைத்துக்கொண்டு, ஒரு ஹிந்து மன்னரின் அதிகாரத் திற்குரிய கடமையைச் செய்ய வேண்டும் என்று யோசனை கூறவே, தனிப்பட்டவன் என்ற முறையில் நான் துணிந்தேன். உண்மை என நான் கொண்டவை தவருனவையாக இருந்தால் என்னைத் திருத்த வேண்டும். ஹிந்து சமயத்தைக் குறித்தும், ஹிந்து மன்னரின் கடமையைப் பற்றியும் நான் கொண்டிருக்கும் கருத்தில் நான் தவறு செய்பவனுயின், நான் கூறுவதைக் கேட்டுக்கொள்ள வேண்டாம். மந்திரி சபையின் முதல்வர் என்ற வகையிலோ, பக்தியுள்ள முஸ்லிம் என்ற முறையிலோ ஷேக் அப்துல்லா தமது கடமையைச் செய்வதில் தவறிவிடுவாராஞல், நிச்சயமாக அவர் விலகிக்கொண்டு இன்னும் மேலான ஒருவருக்கு இடங் கொடுத்துவிட வேண்டும். இஸ்லாமும் ஹிந்து தருமமும் காஷ்மீர் மண்ணில் மதிப்பிடப்பட்டு வருகின்றன. இரு தரப் பாரும் ஒரே திக்கில் சரியானபடி நடந்துகொள்ளுவார்களாஞல், இதில் முக்கியமான பங்கு கொள்ளுகிறவர்கள் பெருங் கீர்த்தி யைப் பெறுவார்கள்; கூட்டாகப் பெறும் கௌரவத்திலிருந்து அவர்களை எதுவும் அசைத்துவிட முடியாது. இருள் சூழ்ந் திருக்கும் இந்த உப கண்டத்திற்கு வழிகாட்டும் தீபமாகக் காஷ் மீர் ஆக வேண்டும் என்பது என் நம்பிக்கையும் பிரார்த்தனையு மாகும்.

மகாராஜா சாகிபையும் ஷேக் சாகிபையும் குறித்து நான் சொல்ல வேண்டியது அவ்வளவுதான். பாரபட்ச மற்ற இந்தியாவின் உதவியைக் கொண்டு பாகிஸ்தான் அரசாங் கமும் ஒன்றுபட்டு சமரசமான ஓர் ஏற்பாட்டிற்கு வரக்கூடாதா? அல்லது பாரபட்சமின்மை என்பதுதான் இந்தியாவிலிருந்து பறந்தோடி விட்டதா? பறந்தோடிவிடவில்லை என்பது நிச்சயம்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 29—12—'47

—'ஹரிஜன்' - 11—1—1948

# 33

# காஷ்மீர் போரின் விளைவு

ஞாயிற்றுக்கிழமையன்று பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி பேசியபோது கூறியதாவது:

காஷ்மீரப் படையெடுப்பைக் குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முன்னால் முறையிட்டுக்கொள்ள இந்திய யூனியனுக்கு இருக்கும் உரிமையையும், காஷ்மீர் மீது நடந்த மலைச்சாதியினர் படையெடுப்பிற்கும் பாகிஸ்தானுக்கு சம்பந்தமிருக்கிறது என்று கூறுவதையும் பாகிஸ்தான் அரசாங்கம் ஆட்சேபிப்பதைப் பார்த்து வியப்படைகிறேன். தாக்கும் படையினரை விரட்டுவதற்கு உதவி புரிய வேண்டும் என்று காஷ்மீர் நாடியபோது, காஷ்மீரைக் காப்பாற்றப் போக வேண்டியது இந்திய யூனியனின் கடமையாயிற்று. அப்பொழுது இந்திய யூனியனுடன் ஒத்துழைக்க வேண்டியது பாகிஸ்தானின் கடமை. ஆனால், ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகப் பாகிஸ்தான் சொல்லிக்கொண்டபோதிலும், இதற்காகத் திட்டமாக எதுவும் செய்யவில்லை. நாட்டின் பிரிவினை ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. எனவே, விரோதம் இருப்பதற்கு எந்த நியாயமும் இல்லை. பாகிஸ்தான் தலைவர்கள் இதை உணர வேண்டும் என்று விரும்புகிறேன். மத, வகுப்பு அடிப்படையில் பிரிவினை வேண்டும் என்று கேட்கப்பட்டது. ஆகையால் பாகிஸ்தான், அதன் பெயருக்கு ஏற்ற வகையில், தான் செய்யும் காரியங்களில் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். ஹிந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சாராருமே கொடுமையான செயலில் ஈடுபட்டு படுமோசமான தவறுகளைச் செய்துவிட்டார்கள். ஆனால், பைத்தியக்காரத்தனமான இப்போட்டி தொடர்ந்து நடந்து போராக முடிய வேண்டும் என்றாகிவிடக் கூடாது. யுத்தம், இரு டொமினியன்களையும் மூன்றாவது ஒரு வல்லரசின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு போய்விடும். இதைவிட மோசமானது வேறு எதுவும் இல்லை. ஆகையால், ஐக்கிய நாடுகள் சபைக்கு யூனியன் அரசாங்கம் செய்து கொண்டிருக்கும் முறையீட்டை கௌரவத்துடன் வாபஸ் பெறுவது முடியும் வகையில் ஒற்றுமையும் நல்லெண்ணமும் ஏற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஐக்கிய நாடுகள் சபையே இதை வரவேற்கும். இந்த என் பிரார்த்தனையில் எல்லோரும் கலந்துகொள்ளுங்கள். என்றாலும், சமரசம் உண்மையானதாக இருக்க வேண்டும். உள்ளுக்குள் துவேஷத்தை வைத்துக் கொண்டிருப்பது போரையும்விட மோசமானது.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 4—1—'48

—'ஹரிஜன்' - 11—1—1948

# 34

# ஜுனகாத், காஷ்மீர், ஹைதராபாத்

பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசுகையில் காந்திஜி கூறியதாவது:

ஜுனகாத் பிரதம மந்திரி, துணைப் பிரதம மந்திரி ஆகியவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஜுனகாத் சமஸ்தானத்திற்குள் தாற்காலிக அரசாங்கம் பிரவேசித்திருப்பதைப் பற்றிய செய்தியை நேற்று உங்களுக்குச் சொன்னேன். ஒரு பக்கம் ஆச்சரியத்தின் பேரிலும், மற்றோர் பக்கம் ஆனந்தத்தோடுமே நான் அந்தச் செய்தியை உங்களுக்கு கூறினேன். ஏனெனில், ஜுனகாத் மக்களின் சார்பாக நடந்த போராட்டம், மகிழ்ச்சிக்குரிய முடிவு என்று தோன்றும் இந்த வகையில் தீர்ந்துவிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால், ஜுனகாத் அதிகாரிகளின் கோரிக்கை காயிதே ஆஜம் ஜின்னாவின் அங்கீகாரத்தைப் பெறாததாக இருக்குமானால், அடைந்த மகிழ்ச்சி அவசரப்பட்டு விட்டதாகவும் ஆகிவிடலாம் என்ற பயம் இருக்கிறது. விவசாயிகளின் சார்பாக தாற்காலிக அரசாங்கம் ஜுனகாத்தில் பிரவேசித்திருப்பதைப் பாகிஸ்தான் அதிகாரிகள் வெறுக்கிறார்கள். "சமஸ்தானத்திலிருந்து இந்தியப் படைகள் வெளியேறி, நியாயமான அரசாங்கத்தினிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்படுவதோடு இந்திய யூனியனிலிருந்து வரும் மக்களின் பலாத்காரத்தையும் படையெடுப்பையும் நிறுத்த வேண்டும்" என்றும் பாகிஸ்தான் அதிகாரிகள் கேட்கின்றனர். ஆகையால், மனவேதனையுடன் யாரும் வருத்தப்படாமலிருப்பதற்கில்லை. மேலும், தாற்காலிகமானதாயினும் நிரந்தரமானதாயினும், இந்திய டொமினியனுடன் பேசி ஒரு சமரச முடிவுக்கு வருவதற்கு ஜுனகாத் மன்னருக்கோ, திவானுக்கோ சட்டப்படி அதிகாரம் இல்லை என்றும் கூறுகிறார்கள். இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கை, "பாகிஸ்தான் பகுதியில் தெளிவான வகையில் பிரவேசித்திருப்பதாவதோடு சர்வதேச சட்டத்தை மீறியதும் ஆகும்" என்று வாதிக்கிறார்கள்.

நேற்று முன்தினம் பத்திரிகைகளில் வெளியான அறிக்கைகளிலிருந்து, சர்வ தேச சட்டம் மீறப்பட்டிருப்பதாகவோ, இந்திய யூனியன் அரசாங்கத்தின் படைகள் ஆக்ரமித்துக்கொண்டிருக்கின்றன என்றோ நான் காணவில்லை. ஜுனகாத் மக்களின் சார்பாக தாற்காலிக அரசாங்கத்தின் முழு நடவடிக்கைகளையும் பற்றிய வரையில், நான் அறிந்த மட்டில், சட்ட விரோதமானது எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. முழு கத்தியவாரின் பாதுகாப்பையும் முன்னிட்டு கத்தியவார் மன்னர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் யூனியன் அரசாங்கத்தின் படைகள் அவர்களின் உபயோகத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது

உண்மை. ஆகையால், இக்காரியம் முழுவதிலும் சட்ட விரோதமானது எதையும் நான் காணவில்லை. அதோடு ஜுனகாத் பிரதம மந்திரியைப் பொறுத்த வரையில் அவர் அடித்திருப்பதாக எனக்குத் தோன்றும் பல்டிக்கு எந்த நியாயமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இக்காரியம் முழுவதையும் நான் பார்க்கும் விதம் இதுதான்: ஜுனகாத் சமஸ்தான மக்களில் 85 சத விகிதத்தினர் ஹிந்துக்கள்; அப்படியிருக்க அம்மக்களின் சம்மதமில்லாமல் தம் சமஸ்தானத்தைப் பாகிஸ்தானுடன் இணைத்துவிட நவாப் சாகிபுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. புனிதஸ்தலமான கிர்னார் மலையும் அதிலிருக்கும் எல்லாக் கோயில்களும் ஜுனகாத்தைச் சேர்ந்தவை. இவற்றிற்காக ஹிந்துக்கள் ஏராளமான பணம் செலவழித்திருக்கிறார்கள். இந்தியா முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான யாத்திரீகர்கள் அங்கே போய் தரிசித்து வருகின்றனர். அஜாத் ஹிந்தில் அது முழுவதும் மக்களுக்குச் சொந்தமானது. அதில் எதுவும் ராஜாக்களுக்குத் தனிப்பட்ட முறையில் சொந்தமானது அல்ல. மக்களின் தரும கர்த்தாக்களாக அவர்கள் இருந்து, அதனால் ஒவ்வொரு காரியத்திலும் மக்களின் அதிகாரத்தைக் காட்டி வந்தார்கள் என்ற வகையில் மாத்திரம் அவர்கள் அதற்கு உரிமை கொண்டாடலாம். தங்களுடைய பிரதிநிதித்துவத் தன்மையை அவர்கள் அறிந்துகொண்டுவிடவில்லை. ஒரு சிலரைத் தவிர, சமஸ்தானங்களின் விவசாயிகள் தாங்கள் வசிக்கும் சமஸ்தானங்களுக்குத் தாங்களே சொந்தக்காரர்கள் என்பதை மொத்தத்தில் அவர்கள் இன்னும் அறிந்துகொண்டுவிடவில்லை என்பது, நான் எடுத்துக்காட்டிய தத்துவத்திற்கு விரோதமானதாக ஆகாது. ஆகையால், இரு டொமினியன்களில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்துகொள்ளுவதற்கு முடிவு செய்யும் அதிகாரம் சட்டப்படி யாருக்காவது உண்டு என்றால், அது சம்பந்தப்பட்ட சமஸ்தானத்தின் விவசாயிகளுக்குத்தான் உண்டு. தாற்காலிக அரசாங்கம் என்றுவது ஜுனகாத் விவசாயிகளின் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இல்லாது போகுமாயின், அது அதிகாரத்தை அக்கிரமமாகப் பறித்துக்கொண்டதாகும். இரு டொமினியன்களும் அதை விரட்டியடித்துவிடலாம். ஒரு மன்னர் தமது சொந்த முறையில் ஒரு டொமினியனுடன் சேருவது நியாயம் என்று எந்த டொமினியனும் உலகத்தின் முன்னால் சொல்லிவிட முடியாது. இந்தக் கருத்திலேயே, ஜுனகாத் நவாப் சாகிப் தமது சமஸ்தானம் பாகிஸ்தானுடன் சேர்ந்துவிட்டதாகக் கூறினாலும், ஜுனகாத் விவசாயிகளின் அங்கீகாரம் அதற்கு இருந்தாலன்றி நவாபின் முடிவு செல்லுபடியாகாது என்று கூறுகிறேன். ஜுனகாத் முடிவாக எந்த டொமினியனுடன் சேருவது? இதில் தகராறு ஏற்படுமாயின், பலாத்காரத்தை உபயோகிக்காமலோ, அதைக் காட்டாமலோ, சரியானபடி நடத்தும் பொதுஜன வாக்கெடுப்பின் மூலம் இதை முடிவு செய்ய வேண்டும். பாகிஸ்தான் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் போக்கும், இப்பொழுதும்கூட ஜுனகாத் பிரதம மந்திரியின் போக்கும் விசித்திரமான நிலைமையை உண்டாக்

குகிறது. பாகிஸ்தான் விஷயத்திலோ, இந்திய யூனியன் சம்பந்த மாகவோ எது சரி, எது தவறு என்பதை யார் முடிவு செய்வது? வாளைக் கேட்டுக்கொள்ளுவது என்பது எண்ணக் கூடாதது. சாதாரண முறையில் மத்தியஸ்தத்திற்கு விடுவது என்ற பழைய வழியே இதற்குச் சிறந்ததாகும். பளுவைத் தாங்கிக்கொள்ளு வதற்குப் போதுமான ஆண்களும் பெண்களும் இந்தியாவில் இருக்கிறார்கள். என்றாலும், இந்தியரைக்கொண்டு மத்தி யஸ்தம் செய்துகொள்ளுவதற்கு இரு தரப்பாரும் ஒப்புக் கொள்ளாது போனால், உலகத்தின் எப்பகுதியிலிருக்கும் பார பட்சமற்ற ஒருவரின் மத்தியஸ்தத்திற்கு விடுவதில் எனக்கு எந்த ஆட்சேபமும் இல்லை.

முடிவாக, ஜுனாகாத் விஷயத்தில் நான் என்ன கூறினேனோ அதுவே காஷ்மீர், ஹைதராபாத் விஷயத்திலும் பொருந்தும். மக்களின் சம்மதத்தைத் தெரிந்துகொள்ளாமல் காஷ்மீர் மகா ராஜா சாகிபோ, ஹைதராபாத்தின் மேன்மை தங்கிய நிஜாமோ எந்த டொமினியனுடனும் சேர்ந்துகொள்ள எந்தவிதமான அதி காரமும் உள்ளவர்களாகமாட்டார்கள். இது, நான் அறிந்த வரையில், காஷ்மீர் விஷயத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக் கிறது. இந்திய யூனியனுடன் சேர்ந்துகொள்ள மகாராஜா மாத்திரம் விரும்பியிருப்பாராயின், அதை நான் ஆதரித்திருக்க மாட்டேன். காஷ்மீர், ஜம்மு மக்களின் சார்பாகப் பேசும் மகா ராஜாவும் ஷேக் அப்துல்லாவும் இந்திய யூனியனுடன் சேர விரும்பியதால், அப்படிச் சேருவதை யூனியன் அரசாங்கம் தாற் காலிகமாக ஒப்புக்கொண்டிருக்கிறது. ஷேக் அப்துல்லா, முஸ்லிம்களுக்கு மாத்திரமேயன்றி, ஜம்முவிலும் காஷ்மீரிலும் உள்ள எல்லா மக்களின் பிரதிநிதியே தாம் என்று உரிமை கொண்டாடுவதால் அவர் இதில் சம்பந்தப்படுகிறார்.

காஷ்மீர் இரண்டாகப் பிரிக்கப்படும் என்றும், ஜம்மு ஹிந்துக்களுக்கும், காஷ்மீர் முஸ்லிம்களுக்கும் போகும் என்றும் வதந்திகள் இருப்பதை அறிகிறேன். அவ்விதம் விசுவாசம் பிளக்கப்படுவதையோ, இந்திய சமஸ்தானம் பல பாகங்களாகப் பிரிக்கப்படுவதையோ நான் நினைக்கவும் முடியாது. ஆகையால், திக்கற்ற அகதிகளாகும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருக்கும் லட்சக்கணக்கான இந்தியரை முன்னிட்டாவது மோசமான நிலைமை ஏற்படுவது சீக்கிரத்தில் தவிர்க்கப்படுவதோடு இந் தியா முழுவதிலும் புத்திசாலித்தனம் ஆட்சி புரியும் என்றே நம்புகிறேன்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 11—11—'47

—'ஹரிஜன்' – 23—11—1947

# 35

## ராம்பூர் சமஸ்தானம்

பிரார்த்தனைக்குப் பிறகு காந்திஜி பேசியபோது ராம்பூர் சமஸ்தானத்தைப் பற்றிக் கூறினர். அவர் சொன்னதாவது :

ராம்பூர் சமஸ்தானதிபதி ஒரு முஸ்லிம். அதனல் அந்த சமஸ்தானம் முஸ்லிம் சமஸ்தானமாகவே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்னல் அலி சகோதரர்கள் என்னை அங்கே அழைத்துச் சென்றார்கள். அங்கே அவர்கள் வீட்டில் தங்கியிருந்தேன். அப்பொழுது இருந்த நவாப் சாகிபைச் சந்திக்கும் நல்வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. ஏனெனில், அப்பொழுது இருந்த பிரபலமான தேசீய முஸ்லிம்களுக்கு அவர் நண்பர். காலஞ் சென்ற ஹக்கீம் சாகிப் அஜ்மல்கான், காலஞ்சென்ற டாக்டர் அன்சாரி ஆகியவர்களுக்கு அவர் நண்பர். அப்பொழுது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமாதானமாகவும் சிநேகமாகவும் வாழ்ந்து வந்தார்கள். ஆனல், அங்கேயிருந்து வந்து சென்ற ஞாயிற்றுக்கிழமை என்னைப் பார்த்த ஹிந்து நண்பர்கள், இப்பொழுது வேறுவிதமான கதையைக் கூறுகிறார்கள். அந்தச் சமஸ்தானம் இந்திய யூனியனுடன் சேர்ந்திருந்தபோதிலும், அங்கே முஸ்லிம் லீகின் விஷமச் செல்வாக்கு இருந்துகொண்டு வருகிறது. இது ஒன்றே முட்டுக்கட்டையாக இருந்திருக்குமானல், வெகு எளிதில் இதை அவர்கள் சமாளித்துக்கொண்டிருக்கலாம். ஆனல், ராஷ்டிரீய சேவா சங்க ஆட்களின் உதவியைப் பெற்றிருக்கும் ஹிந்து மகாசபையும் அங்கே இருக்கிறது. யூனியனிலிருந்து எல்லா முஸ்லிம்களையுமே இல்லாமல் செய்துவிடுவது என்பதுதான் இவர்களின் ஆசை.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 16—11—'47

—'ஹரிஜன்' - 23—11—1947

# 36

## உண்மையாயின் பயங்கரமானது

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜி கூறியதாவது:

'டான்', 'பாகிஸ்தான் டைம்ஸ்' பத்திரிகைகளைச் சில சமயங்களில் நான் பார்ப்பது உண்டு. இவை அதிக செல்வாக்குள்ள பாகிஸ்தான் தினப் பத்திரிகைகள். இவை கூறுவதை யாரும் அலட்சியம் செய்து விடுவதற்கில்லை. கத்தியவாரிலிருக்கும்

இத்தகைய காரியத்திற்கு ஜுனகாத் சமஸ்தான நிதியிலிருந்தோ, மத்திய நிதியிலிருந்தோ தம்படியும் செலவழிக்கப்படாது என்று அவர் கூறினர். சோமநாத் கோயிலைப் புதுப்பிக்கும் வேலை, புதுப்பிப்பதில் சிரத்தையுள்ள ஹிந்துக்களும் மற்றவர்களும் கொடுக்கும் பணத்தைக்கொண்டே நிறைவேற்றப்படும். இந்திய யூனியன் மதச் சார்பற்ற அரசாங்கமே யன்றி மதச் சார்புடையது அன்று. ஜுனகாத் தாற்காலிக அரசாங்கத்தின் தலைவராக இருக்கும் ஸ்ரீ சாமளதாஸ் காந்தி, தாம் வசூலித்திருக்கும் பொது நிதியிலிருந்து ஐம்பதாயிரம் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார். ஜாம் சாகிப் ஒரு லட்ச ரூபாய் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்.

முஸ்லிம்களுக்கு விரோதமாகக் கத்தியவாரில் நடப்பதாகப் பத்திரிகைகளில் நான் படித்ததை நேற்று உங்களுக்குக் கூறினேன். அங்கே நடப்பதாகக் கூறப்படும் கொள்ளை, தீயிடல், கொலைகள், கடத்தல்கள் ஆகியவைகளைப் பற்றி ஏதாவது தெரியுமா என்று சர்தார் பட்டேலைக் கேட்டேன். தாம் அங்கே போவதற்கு முன்னால் சில கொள்ளைகளும் தீயிடல்களும் நடந்திருந்தன என்றும், விசுவாசமாக இருக்கும் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் எனத் தாம் உறுதி கூறியிருப்பதாகவும் அவர் சொன்னார். கொள்ளையும் தீயிடல்களும் துரிதமாக அடக்கப்பட்டுவிட்டன. அவர் அறிந்த வரையில் முஸ்லிம்கள் கொல்லப்படவில்லை; முஸ்லிம் பெண்கள் கடத்திச் செல்லப்படவும் இல்லை. உண்மையில் காங்கிரஸ்காரர்கள், முஸ்லிம்கள் உயிரையும் சொத்துக்களையும் காப்பதற்காகத் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் வேலை செய்திருக்கிறார்கள். அச் செய்திகள் மறுக்கப்படுவதைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு அச்செய்திகளைச் சொன்னவர்கள் பகிரங்கமாகத் தங்களைத் திருத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். என்றாலும், சர்தாருக்கும் விஷயம் தெரியாதிருந்தால், நடந்திருப்பதாகக் கூறப்படும் பெரும் குற்றச்சாட்டுக்கு ஆதாரபூர்வமான சாட்சியத்தை அவர் கேட்கிறார்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 28—11—'47

— 'ஹரிஜன்' — 7—12—1947

## 38

# கத்தியவார் செய்திகள்

கத்தியவாரைக் குறித்து எனக்குப் பல தந்திகள் வந்திருக்கின்றன. கத்தியவாரில் நடந்திருப்பதாகக் கூறப்பட்டவைகளைக் குறித்து முன்பே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். பாகிஸ்தான் பத்திரிகைகள் எழுதுவதைக் குறித்து நான் அலட்சியமாக இருந்துவிட முடியாது. ஆயிரக்கணக்கானவர்கள் அப்பத்திரி

கைகளைப் படித்து அவற்றில் வெளிவரும் செய்திகளை நம்புகிறார்கள். ஆகையால், செய்திகளைப் பற்றிப் பரிசீலனை செய்து பார்ப்பதற்கு முன்னாலேயே உங்களிடம் சொன்னேன். அச் செய்திகள் உண்மையல்ல என்றால், அது அப்பத்திரிகைகள் வெட்கப்பட வேண்டிய விஷயம். அச்செய்திகள் உண்மை என்றால், அதற்காகக் கத்தியவார் மக்கள் வெட்கப்பட வேண்டும். சர்தார் பட்டேல் இதைப்பற்றி என்ன சொன்னார் என்பதை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இன்றும் அவர் என்னைப் பார்த்தார். கத்தியவாரில் எல்லாம் சரியாகவே இருக்கிறது என்று அவர் இன்றும் எனக்கு உறுதி கூறினார். ராஜ்கோட்டிலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. ஒரு கட்டத்தில் சில ஹிந்துக்கள் நிதானமிழந்து போய் சில முஸ்லிம்களின் வீடுகளைக் கொளுத்தி நாசப்படுத்திவிட்டார்களாம். ஆனால், அரசாங்கத்தின் உதவியைப் பெற்று காங்கிரஸ்காரர்கள், தங்கள் உயிருக்கு நேரக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல் நிலைமையை உடனே சமாளித்து அமைதியை உண்டாக்கிவிட்டார்கள். பிரபல வக்கீலும் ராஜ்கோட் தலைவருமான ஸ்ரீ தேபர் பாயைக் கூட்டத்தினர் தாக்கியிருக்கிறார்கள். சில காங்கிரஸ்காரர்கள் காயமடைந்தார்கள். இவ்விதம் பொதுக் கூட்டத்தின் கோபம் காங்கிரஸ்காரர் மீது திரும்பியபோதிலும், முஸ்லிம்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர். நான் மனவருத்தமடைந்ததைக் குறித்து அவர்கள் விசனப்படுகின்றனர். கத்தியவாரில் அமைதியான வாழ்க்கை இருந்து வருகிறது என்று மீண்டும் உறுதி கூறுகிறார்கள். மற்ற இடங்களைக் குறித்தும் விசாரித்து வருகிறார்கள். முடிவை எனக்கு அறிவிப்பார்கள். ராஷ்டிரீய சேவா சங்கத்தினரும் ஹிந்து மகாசபையினருமே தாக்குவதற்குத் திட்டம் போட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், முடியவில்லை. காங்கிரஸ்காரர்கள் தங்களுக்காகச் செய்திருக்கும் சேவைகளுக்கு முஸ்லிம்கள் நன்றி தெரிவித்து மற்றொரு தந்தியையும் எனக்கு அனுப்பியிருக்கின்றனர். பம்பாயிலிருந்து சில முஸ்லிம்கள் எனக்கு அனுப்பியிருக்கும் தந்தியில், இவ் விஷயத்தை வெளிப்படுத்தியதற்காக என்னைப் பாராட்டுகின்றனர். கத்தியவார் முஸ்லிம்கள் கொள்ளையடிக்கப்பட்டனர், பயமுறுத்தப்பட்டனர் என்கிறார்கள். நல்ல வேளையாக கொலை, கடத்தல் புகார் இல்லை. பல முஸ்லிம்கள் கத்தியவாரிலிருந்து போய்விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அளிக்கப்பட்டிருக்கும் வாக்குறுதிகள் நம்பக்கூடியவைகளாக இருப்பின், அகதிகள் தங்கள் வீடுவாசல்களுக்குத் திரும்ப வேண்டும். ஆதாரமில்லாத, மிகைபடுத்தப்படும் செய்திகளைப் பரப்புவதைக் குறித்து மனிதரையும் பத்திரிகையையும் எச்சரிக்கை செய்கிறேன். தங்கள் நண்பர்களை ஏமாற்றுவதனால் எந்த நன்மையும் இல்லை. பவநகர் மகாராஜாவும் நம்பிக்கையளிக்கும் தந்தியைக் கொடுத்திருக்கிறார். ராஜ்கோட்டிலிருந்து ஐந்து முஸ்லிம்கள் கொடுத்திருக்கும் தந்தியில், பதின்மூன்று கடைகள் கொள்ளையிடப்பட்டன, ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறைவான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது

என்றும், அரசாங்கமும் காங்கிரஸ்காரர்களும் அமைதியை உண்டாக்கிவிட்டனர் என்றும் அந்தத் தந்தி கூறுகிறது. நான் பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் புறப்பட்டபோது ஜூனாகாத்திலிருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது. நான் சென்ற வெள்ளிக்கிழமை கூறிய பயங்கரமான செய்தியை இது உறுதிப்படுத்துவதோடு விசாரணை நடத்த வேண்டும் என்றும் கேட்கிறது. விசாரணை என்பதை அளிப்பதற்கு எனக்கு அதிகாரமே இல்லை. கத்தியவாரிலிருந்து மேற்கொண்டும் தந்தியை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். உத்தியோக விசாரணையைவிட முழு வாக்குறுதியே சிறந்ததாக இருக்கக்கூடும். ஆகவே, அந்த வாக்குறுதி கிடைத்தாலன்றி நான் திருப்தியடையமாட்டேன்.

ஹிந்து மகாசபையும் ராஷ்டிரீய சேவா சங்கமும் ஹிந்து ஸ்தாபனங்கள். நன்றாகப் படித்தவர்கள் பலர் அவற்றில் இருக்கின்றனர். அவர்கள் செய்துகொண்டிருப்பதாகக் கூறப்படுபவைகளைச் செய்யாதிருக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆட்சேபகரமான முறைகளைக்கொண்டு மதத்தைப் பாதுகாத்துவிட முடியாது. தவறுகளை ஒழுங்குபடுத்தி, தீமை செய்வோரைத் தண்டிக்க அரசாங்கத்தை அவர்கள் விட்டுவிட வேண்டும்.

## மசூதியில் விக்கிரகங்கள்

கோயில்களாக மாற்றப்பட்டிருக்கும் மசூதிகளிலிருக்கும் விக்கிரகங்களை அப்புறப்படுத்திவிட வேண்டுமென்று ஏழு நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியாகியிருக்கிறது. இதன்படி அப்புறப்படுத்தாவிடில் போலீஸார் விக்கிரகங்களை அப்புறப்படுத்துவர். மசூதிகளுக்கு நேர்ந்திருக்கும் சேதத்தை அரசாங்கம் பழுது பார்க்கும் என்று சர்தார் சொன்னார். இதைப் பொது மக்கள் செய்ய வேண்டும் என்பதே என் கருத்து. தகுதி வாய்ந்த பக்தர்கள், புனிதமான இடத்தில் அமைக்காத ஒரு விக்கிரகத்திற்கு மதிப்பே இல்லை. மசூதியைப் பலவந்தமாக ஆக்கிரமித்துக்கொள்ளுவது, ஹிந்து, சீக்கிய மத தருமத்திற்கே அவமானம். மசூதிகளிலிருந்து விக்கிரகங்களை நீக்கிவிட்டு மசூதிகளைப் பழுது பார்க்க வேண்டியது ஹிந்துக்களின் கடமை. எந்த மசூதியும் குருத்துவாரமாக மாற்றப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படவில்லை. குரு கிரந்த் சாகிபைச் சீக்கியர்கள் வணங்குகிறார்கள். அதை ஒரு மசூதியில் வைப்பது கிரந்த் சாகிபையே அவமதிப்பதாகும்.

பாதி எரிந்துபோன குரானை ஒரு முஸ்லிம் என்னிடம் கொண்டு வந்தார். அதை அவர் ஒரு துணியில் சுற்றி வைத்திருந்தார். கண்களில் நீர் ததும்ப அதை என்னிடம் காட்டிவிட்டு எதுவும் பேசாமல் போய்விட்டார். இவ்விதம் குரானை

அவமதிக்க முற்பட்டிருப்பவன் தன் மதத்தையே அவமதித்திருக்கிருன். தங்கள் நாட்டிற்கும் மதங்களுக்கும் நாசத்தைத் தேடிக்கொள்ளாதிருக்குமாறு ஹிந்துக்களையும் சீக்கியரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிர்லா மாளிகை,
புதுடில்லி, 29—11—'47 —'ஹரிஜன்' – 7—12—1947

# 39

# சமூகங்களைப் பற்றிக் காங்கிரஸ் கொள்கை

நடக்கப்போகும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முன்பு வைப்பதற்காகக் காரியக் கமிட்டி திட்டமான தீர்மானம் எதையும் தயாரிக்கவில்லை. எனினும், காரியக் கமிட்டி உறுப்பினர்களும் விசேஷ அழைப்பின் பேரில் வந்திருந்தோரும், ஏகோபித்த அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். காங்கிரஸ், அதன் ஆரம்பத்திலிருந்து அறுபது ஆண்டுகளாக, பூரணமான சமூக ஒற்றுமைக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறது. அடிக்கடி இதில் எத்தனையோ கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டி வந்த போதிலும், விடாமல் அனுசரித்து வந்திருக்கும் இந்த முழு ஒற்றுமையிலிருந்து காங்கிரஸ் பின்வாங்கிவிடுவதற்கில்லை. இந்தக் கருத்தை அவர்கள் தெரிவித்ததோடு இன்னுமொரு விஷயத்திலும் தெளிவாக இருக்கிருர்கள். இப்போதைக்குக் காங்கிரஸ்காரர்கள் சிறுபான்மையினராக இருப்பதாகத் தெரிந்தாலும், இப்பொழுது இருந்துவரும் வெறித்தனத்திற்குப் பலியாகிவிடுவதைவிட எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அவற்றை உற்சாகத்துடன் சமாளித்தாக வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிருர்கள்.

எச்சாதியினர், மதத்தினராயினும், எல்லோருக்கும் சமத்துவமில்லாத சுதந்திரம், காங்கிரஸ் வகிப்பதற்குத் தகுதியான சுதந்திரம் அல்ல. அதாவது, காங்கிரஸ் முழுதும் ஜனநாயக, பொதுஜன ஸ்தாபனமாக இருந்துவரவேண்டும். அதில் ஒவ்வொரு தனிப்பட்டவரும் அரசாங்கத்தின் குறுக்கீடு எதுவுமில்லாமல் தமக்கு இஷ்டமான மதத்தைத் தழுவுவதற்கு உரிமை பெற்றிருக்க வேண்டும். ஒரே நாட்டில், ஒரே கொடியின் கீழ், அதனிடம் ஒரேவிதமான விசுவாசத்துடன் இருக்கும் மக்களிடையே பொதுவான அம்சங்கள் எவ்வளவோ இருக்கின்றன. மனிதனுக்கு மனிதன் பொதுவாக உள்ளவையும் எத்தனையோ இருக்கின்றன. மதத்தை ஆதாரமாகக் கொண்டு இவர்களுக்குள் சச்சரவு இருப்பதற்கே இல்லை. ஒரே மாதிரியான முறைகளையே

அனுசரிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் கொள்கையோ, தருமமோ, மதம் என்று சொல்லுவதற்கே அருகதை இல்லாத தாகும். ஏனெனில், மதம் என்று சொல்லக்கூடிய எதுவும் பலவந்தப்படுத்துவதை அங்கீகரிக்கவில்லை. பலவந்தமாகச் செய்யும் எக்காரியத்திற்கும் அற்பாயுளே இருக்கும். அது செத்தே தீரும். இணையற்ற ஒரு ஸ்தாபனம் நம்மிடையே இருக்கிறது. இது, மதச் சார்புள்ள ஆட்சி முறையை வெறுக்கிறது. அதோடு, தான் எண்ணும் அரசாங்கம் மதச் சார்பற்றதாகவும், நாட்டைச் சேர்ந்த பல்வேறுன பகுதிகளுக்கு மிடையே பூரணமான சமரசம் கொண்ட ஜனநாயக அரசாங்க மாகவும் இருக்க வேண்டும் என்று நம்பி, அதற்காகப் பாடுபட் டும் வந்திருக்கிறது. ஆகையால், நான்கணு சந்தா செலுத்தும் காங்கிரஸ் உறுப்பினராயினும், இல்லாதிருந்தாலும், காங்கிரஸைக் குறித்து எல்லோரும் பெருமைப்படவேண்டும். யூனியனில் இருக்கும் முஸ்லிம்களின் கஷ்டத்தைக் குறித்து நான் எண்ணும்போது, பல இடங்களில் அவர்களுக்குச் சாதா ரண வாழ்க்கை எவ்வளவு சங்கடமானதாகியிருக்கிறது என் பதை நினைக்கும்போது, யூனியனிலிருந்து முஸ்லிம்கள் வெளி யேறுவது தொடர்ந்து நடந்து வருதைப் பார்க்கும்போது, இத் தகைய நிலைமை உண்டாவதற்குக் காரணமாயிருப்பவர்கள் காங் கிரஸிற்கு பெருமை அளிக்கக்கூடியவர்களாக என்றுவது இருக்க முடியுமா என்று அதிசயிக்கிறேன். புத்தாண்டு இப்பொழுது ஆரம்பமாகியிருக்கிறது. இதில் ஒவ்வொரு முஸ்லிமும், சிறுவனும் சிறுமியும், மிக உயர்ந்த நிலையிலிருக்கும் ஹிந்துவையும் சீக்கி யரையும் போன்று தாங்களும் பத்திரமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறோம் என்று எண்ணும்படிச் செய்யும் வகையில் ஹிந்துக் களும் சீக்கியரும் நடந்துகொள்ள வேண்டும்.

அடுத்த சனிக்கிழமை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடக்கப் போகிறது. காங்கிரஸின் சிறந்த சம்பிரதா யத்தை அனுசரித்து உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றுவ தோடு, ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும். மன்னர்களுக்கும், விவசாயிகளுக்கும் நலனை வளர்க்கும் வகையில் அத்தீர்மானம் இருக்கும் என்றும் நம்புகிறேன். அப்பொழுதுதான் காங்கிரஸ் இந்தியாவின் கௌரவத்தை உயர்த்த முடியும். இதை உயர்த் துவது காங்கிரஸின் பொறுப்பு. இந்தக் கௌரவம், உலகத்தி லிருக்கும் சுரண்டப்பட்ட எல்லா நாட்டு மக்களின் உரிமையை யும் கௌரவத்தையும் காக்க வல்லதாக இந்தியாவைச் செய்யும்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 13—11—'47

—'ஹரிஜன்' - 23—11—1947

## 40

# வர்த்தகத்தில் வகுப்புவாதம் கூடாது

கல்கத்தா முஸ்லிம் வர்த்தக சங்கம் ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. முஸ்லிம் வர்த்தக சங்கத்திற்கு அளித்திருந்த அங்கீகாரத்தை ரத்துச் செய்துவிட மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று அச்சங்கக் காரியதரிசி புகார் கூறியிருக்கிறார். முஸ்லிம் வர்த்தக சங்கம் மாத்திரமே இவ்விதம் செய்யப்பட்டிருக்குமாயின், புகார் கூறுவது சரியானதாகும். ஆனால், ஐரோப்பிய, மார்வாரி வர்த்தக சங்கம் போன்றவைகளின் அங்கீகாரமும் ரத்துச் செய்யப்பட்டிருக்குமானால், ரத்துச் செய்திருப்பது நியாயம் என்றே கூறுவேன். மதச் சார்பு இல்லாத ஒரு ஆட்சியில், உள் சீர்திருத்தத்திற்காக அல்லாமல், தனி வகுப்பு ஸ்தாபனங்கள் இருப்பதற்கு இடமே இல்லை. ஐரோப்பிய வர்த்தக சங்கத்திற்கு அந்நிய ஆட்சியின்கீழ் அதிகப்படியான சலுகைகள் இருந்தன. அதன் வருடாந்தரக் கூட்டம் மிக முக்கியமான சம்பவமாகவும் இருந்து வந்தது. வைஸ்ராய்கள், முக்கியமான விஷயங்களை அக்கூட்டத்தின்போது வெளியிட்டு வந்தார்கள். அந்தச் சபைக்கு அப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்படாது என்றே நம்புகிறேன். பெரிய ஐரோப்பிய ஸ்தாபனத்தினர், உள்நாட்டு மக்களின் நலனுடனும் ஒன்றுபட்ட முழு இந்தியாவுடனும் சேர்ந்து ஒன்றாக முன்னேற்றமடையப் பார்ப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். தனித்து தாங்கள் வைத்திருக்கும் சபையைக் கலைப்பதன் மூலம் அவர்கள் வழிகாட்ட வேண்டும் என்றும் யோசனை கூறுகிறேன். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்தவர், பார்சிகள் ஆகியோர், முதலிலும் முடிவிலும் இந்தியராகவே இருக்க வேண்டும். மதம், ஒவ்வொரு தனிப்பட்டவரின் சொந்த விஷயம். ராஜீயத்திலோ, தேசீய காரியங்களிலோ அதைக்கொண்டுவந்து கலக்கக் கூடாது.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 28—11—'47

—'ஹரிஜன்' - 7—12—1947

## 41

# வகுப்புவாத வர்த்தக சபைகள்!

வகுப்புவாத வர்த்தக சபைகளைக் குறித்து மார்வாரி வர்த்தக சபையினர் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு வகுப்புப் பெயர் இருந்தபோதிலும் அதில் மற்றவர்களும் அங்கத்தினராகலாம் என்று அதில் கூறியிருக்கிறார்கள். மார்வாரிகளல்லாதவர்கள் எத்தனை பேர் அதில் உறுப்பினர்களாக

இருக்கிறார்கள் என்று அவர்களைக் கேட்டிருக்கிறேன். ஐரோப்பிய, முஸ்லிம் வர்த்தக சபையினரும் இதே காரணத்தைக் கூறக்கூடும். முறைக்காக வெளியார் சிலரை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டுவிடுவதால் அவர்கள் கூறுவது நியாயமாகிவிடாது. வகுப்பு உணர்ச்சியே அதில் இல்லை என்றால், தனி வர்த்தக சபைகள் ஏன் இருக்க வேண்டும்? ஐரோப்பியர், இந்தியராக இந்நாட்டில் தங்கி, இந்தியாவின் நன்மைக்கு அவர்கள் வேலை செய்வதாக இருந்தால், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. அவர்களில் சிலர் நிபுணத்துவம் வாய்ந்த வர்த்தகர்கள். சேவை உணர்ச்சியின் மூலம் அவர்கள் தங்கள் ஆற்றலை இந்தியாவுக்கு அளிக்கலாம். சுரண்டுகிறவர்களால் பயனில்லை.

மார்வாரி வர்த்தக சபையின் கடிதமும் அறிக்கையும் ஆங்கிலத்தில் இருக்கின்றன. உரிய இடத்தில் ஆங்கிலம் சரிதான். ஆனால், அதற்குரியதல்லாத இடத்தில் அது ஆக்கிரமித்திருப்பது என் மனதைப் புண்படுத்துகிறது. தனது சொந்த மொழியை விட தனக்கு ஆங்கிலம் அதிகமாகத் தெரியும் என்று யாராவது நினைப்பதானால் அது, இந்தியன் என்ற முறையில் நான் வெட்கப்படச் செய்கிறது. எழுதியவருக்கு ஹிந்துஸ்தானி தெரிந்திருந்தும் அவர் எனக்கு ஆங்கிலத்தில் கடிதம் அனுப்புவது முற்றிலும் வீணானதாகும். மார்வாரி வர்த்தக சபையின் உறுப்பினர்களில் பெரும்பாலோர் ஆங்கிலேயராகவோ, ஆங்கிலம் தெரிந்தவர்களாகவோ இருந்தால், அறிக்கை ஆங்கிலத்தில் இருப்பதற்கு நியாயம் உண்டு. இச்சபை முற்றிலும் மார்வாரிகளையே கொண்டதாக இருப்பினும், இந்திய நலன்களுக்கு அது பிரதிநிதித்துவம் வகிப்பதாக இருந்தால், அந்த அறிக்கை ஆங்கிலத்தில் இருப்பதற்கு நியாயமில்லை என்றே நம்புகிறேன். நான் எந்த உணர்ச்சியின் பேரில் இவ்விதம் கூறுகிறேனே அதே உணர்ச்சியுடனேயே நான் கூறுவதை மார்வாரிகள் வர்த்தக சங்கம் ஏற்றுக்கொள்ளும் என நம்புகிறேன். பொதுவான உண்மையை எடுத்துக்காட்டவே இச்சம்பவத்தை உபயோகித்திருக்கிறேன்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 4—12—'47

—'ஹரிஜன்' - 14—12—1947

# 42

# கடத்தப்பட்ட பெண்கள்

## 1

எனக்கு வந்திருக்கும் சில கடிதங்கள் எனக்கு மனவேதனையை உண்டாக்குகின்றன. பாகிஸ்தானில் பல பெண்கள் கடத்தப்பட்டிருக்கின்றனர். இவர்களில் சிலர் கொடுமையாகப் பலவந்தம் செய்யப்பட்டு மானபங்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வளர்க்கப்பட்டிருக்கும் முறையின் காரணமாக, மீட்கப்பட்டிருக்கும் அப்பெண்கள் வெட்கப்படுவதோடு சமூகமும் அவர்களைக் கேவலமாக எண்ணுகிறது. அவ்விதம் செய்வது மிகக் கொடுமையாகும். சீதையைப் போன்ற தூய்மையும் தேஜஸுமுள்ள ஒரு பெண்ணை எவனும் தீண்டிவிட முடியாது என்பது உண்மை. ஆனால், இந்தக் காலத்தில் ஒரு சீதையைக் காண்பது அரிது. ஒவ்வொரு பெண்ணும் அந்த உயர்ந்த நிலையை எய்திவிடுவதும் முடியாதது. பலவந்தமாகக் கற்பழிக்கப்பட்டுவிட்ட ஒரு பெண், அதற்காக வெட்கப்பட வேண்டியது எதுவுமில்லை. அவள் எந்த விதத்திலும் கற்பிழந்தவளோ, ஒழுக்கங் கெட்டவளோ ஆகமாட்டாள். ஒழுக்கங் கெட்ட ஆண்களும் பெண்களும் தண்டிக்கப்படாமல் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். உயர் வகுப்புகளிலிருக்கும் சில ஆண்களும் பெண்களும் செய்யும் தவறுகள் வெளிக்கு வருவதே இல்லை. அப்படியிருக்க மிருகத்தனத்திற்குப் பலியான ஒரு பாவமும் அறியாதவர்களை முறை கெட்டு, சாதிப் பிரஷ்டம் செய்வது விசித்திரமாகவே இருக்கிறது. இத்தகைய மனப்போக்கு எனக்கு வேதனையளிக்கிறது. என்னுடைய மகளோ, மனைவியோ, இத்தகைய தீய செயலுக்கு ஆளாகி, தப்பி வந்திருந்தாலோ, விடுவிக்கப்பட்டிருந்தாலோ அவளைக் கேவலமாக எண்ணவேமாட்டேன். இத்தகைய ஹிந்து, முஸ்லிம் பெண்களை நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லை என்றும் அவர்களுக்குக் கூறியிருக்கிறேன்.

பிர்லா மாளிகை,
புதுடில்லி, 26—11—'47

— 'ஹரிஜன்' – 7—12—1947

## (2)

கடத்திச் செல்லப்பட்ட பெண்கள் எவ்வளவு கோரமான கஷ்டங்களுக்கு ஆளாகின்றனர் என்பதைக் கடவுளே அறிவார். யூனியனிலிருக்கும் ஹிந்துக்களும் சீக்கியரும் ஒழுங்காக நடந்து கொண்டுவிடவில்லை. கடத்திச் செல்லப்பட்ட முஸ்லிம் பெண்களை, அவர்களை அடைத்து வைத்திருக்கும் காம வெறியர்கள், சொல்லொணாத வகையில் துன்பப்படுத்தியிருக்கிறார்கள் என

அறிகிறேன். அடைபட்டிருக்கும் ஒவ்வொரு பெண்ணையும் கிழக்குப் பஞ்சாப் அரசாங்கமும் அதிகாரிகளும் மீட்டாக வேண்டும். பெண்களைக் கடத்தியது, பிடித்துவைத்திருப்பது சட்ட விரோதமான காரியம் என்று இரு அரசாங்கங்களும் கருத வேண்டும். இத்தகைய பெண்களை மீட்டு அந்தந்த அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கும் வரையில் இரு அரசாங்கங்களும் இடைவிடாது பாடுபட வேண்டியது அவற்றின் தலையாய கடமை. சம்பந்தப்பட்ட பெண், விரும்பி மதம் மாறினள், விரும்பி சேர்ந்திருக்கிருள் என்று இருப்பதற்கே இல்லை.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 29—11—'47

— 'ஹரிஜன்' - 7—12—1947

## (3)

முஸ்லிம் பெண்களுடன் கூடிப் பேசுவதற்காக யூனியனிலிருந்து சில ஹிந்துப் பெண் ஊழியர்கள் லாகூருக்குப் போயிருந்தார்கள். அக்கூட்டத்தில் ராஜா கஜ்னபர் அலியும் மற்றும் சிலரும் இருந்தார்கள். பாகிஸ்தானில் 25,000 ஹிந்து, சீக்கியப் பெண்கள் கடத்தப்பட்டனர் என்றும், கிழக்குப் பஞ்சாபில் 12,000 முஸ்லிம் பெண்கள் கடத்தப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. தொகை அவ்வளவு அதிகம் அல்ல என்று சிலர் சொல்லுகிருர்கள். என்னைப் பொறுத்தவரையில், ஒரு பெண் மாத்திரமே கடத்தப்பட்டிருந்தாலும் அது தீச்செயல் என்பதற்குப் போதுமானது. மனிதன் எவ்விதம் இவ்வளவு இழிவாகிவிட முடியும்! குறைந்த தொகை இரு மாகாணத்திற்கும் 12,000 என்ருலும், அதுவே மிக அதிகம் தான். இப்பெண்களையெல்லாம் மீட்டு அவர்களின் பெற்ருேரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று அக்கூட்டம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த அக்கிரமத்தினல் இரு டொமினியன்களும் அவமானமடைந்திருக்கின்றன என்று ராஜா கஜ்னபர் அலி கூறியிருக்கிருர். இப்பெண்களைத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்பதை இரு தரப்பாரும் ஒப்புக்கொள்ளும்போது, அதிகத் தீமையைச் செய்தது யார், இதை ஆரம்பித்தது யார் என்பவை பொருத்தமில்லாத கேள்விகள். நடந்துவிட்ட தீமைக்குப் பரிகாரம் என்ன என்பதே முக்கியமானது.

அக்கூட்டம் செய்த வேலைகளைக் குறித்து ஸ்ரீமதி ராமேஸ்வரி நேருவும் ஸ்ரீமதி மிருதுலா சாராபாயும் சுருக்கமாக எனக்கு அறிவித்திருக்கிருர்கள். சில பெண்கள் பாகிஸ்தானுக்கும், சில பெண்கள் கிழக்குப் பஞ்சாபுக்கும் போய், போலீஸ், ராணுவ உதவியைக்கொண்டு பெண்களை மீட்கும் வேலையில் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் யோசனை கூறுகின்றனர். இந்த முறை வெற்றி பெருது என்பது என் கருத்து. சில இடங்களில் கடத்தப்பட்ட பெண்கள், திரும்பி வர விரும்பவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்கள் மதம் மாறி மணம் செய்து

கொண்டிருக்கின்றனராம். இதை நான் நம்பவில்லை. அத்தகைய விவாகங்களையும் மத மாற்றங்களையும் செல்லாதவைகளாகக் கருத வேண்டும். இப்பெண்களில் ஒவ்வொருவரையும் அவரவர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டியது இரு அரசாங்கங்களின் கடமை. அக்குடும்பங்கள் அப்பெண்களை அன்போடு ஏற்றுக்கொள்ள வேண்டும். தீயவர்களிடம் சிக்கிவிட்டார்கள் என்பதற்காக, அவர்களை சாதிப் பிரஷ்டம் செய்துவிடுவது மன்னிக்க முடியாத கொடுமை.

25,000 பெண்களை, குறைந்தது அதே தொகையினரான ஆண்களே கடத்திச் சென்றிருப்பார்கள். இவர்கள் எல்லோருமே காலிகள்தானா? காலிகள்தான் என்று நான் நம்ப முடியாது. நல்லவர்கள் என்று நடமாடிக்கொண்டிருந்தோரும் தங்களைத் தாங்களே அவமானப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிதானத்தையெல்லாம் இழந்து, நியாய புத்தியையும் இழந்திருக்கிறார்கள். இப்பெண்கள் திரும்ப ஒப்படைக்கப்படுவதற்குச் சாதகமான பொதுஜன அபிப்பிராயத்தை வளர்க்க வேண்டும். இப்பெண்களை மீட்பதில் இரு அரசாங்கங்களும் தங்கள் எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். மற்ற தனிப்பட்டவர்கள், ஸ்தாபனங்களின் உதவியை அவர்கள் கோரலாம். ஆனால், இப்பிரச்னை மிகப் பெரிதாகையால் அரசாங்கத்தைத் தவிர வேறு யாரும் இதைத் தீர்த்துவிட முடியாது.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 7—12—'47 —'ஹரிஜன்' - 14—12—1947

## (4)

பல்லாயிரக்கணக்கான ஹிந்து, சீக்கியப் பெண்களை முஸ்லிம்கள் கொண்டு போயிருக்கிறார்கள். சிலர் எங்கிருக்கிறார்கள் என்பது தெரிந்திருக்கிறது. ஆனால், மிகப் பெரும்பாலான பெண்கள் எங்கிருக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சில பெண்களைச் சந்தித்துக் கேட்டபோது, தாங்கள் திரும்ப விரும்பவில்லை என்று அவர்கள் சொன்னார்களாம். தங்கள் சமூகம் தங்களைத் திருப்பி ஏற்றுக்கொள்ளாது என்று அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்களுடைய கணவன்மார்களும், பெற்றோரும், நண்பர்களும் அவர்களைக் கேவலமாக மதிப்பார்கள் என்று எண்ணுகிறார்கள். அப்பெண்களைச் சமூகம் திரும்பவும் வரவேற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். சில பெண்கள் கர்ப்பவதிகளாக இருக்கிறார்கள். இது அவர்கள் குற்றம் அல்ல. அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை மற்ற குழந்தைகளைப் போன்றே மதித்து கௌரவிக்க வேண்டும். தாயின் மதமே அக்குழந்தைகளின் மதமாக வேண்டும். வளர்ந்த பிறகு அவர்கள் விரும்பினால் மதத்தை மாற்றிக்கொள்ளலாம். அத்தகைய பெண் யாராவது என்னிடம் வந்தால், என் கோஷ்டியிலிருக்கும் மற்றப் பெண்

களைப் போன்றே அவளும் நடத்தப்படுவாள். சில ராட்சதர்களின் காம வெறிக்குப் பலியாகிவிட்டதற்காக இப்பெண்களை வெறுத்துத் தள்ளுவது காருண்யமற்ற செய்கை. அப்பெண்களுக்கு எந்தவித அவமானமும் ஏற்பட்டு விடவில்லை.

பாடியாலாவிலும் காஷ்மீரிலும் மற்ற இடங்களிலும் பல முஸ்லிம் பெண்களை ஹிந்துக்களும் சீக்கியரும் கடத்திச் சென்று விட்டார்கள் என்று எனக்கு அறிவிக்கின்றனர். இப்பெண்களில் சிலர், பிரபலமான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இப்பெண்கள் இருக்கும் இடங்களுக்கு என் குரல் எட்டுவதாக இருந்தால், அப்பெண்களைத் தாமதமின்றி திருப்பி அனுப்பிவிடுமாறு குற்றஞ் செய்திருப்போருக்குக் கூறுவேன். அப்பெண்களின் குடும்பத்தினர் அவர்களைத் திரும்ப ஏற்றுக்கொண்டுவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு முஸ்லிம் பீரிடம் சில ஹிந்து, சீக்கியப் பெண்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்குத் தவறு இழைக்கப்பட மாட்டாது என்றும், ஆனால், முஸ்லிம் பெண்கள் திருப்பி அனுப்பப்படும் வரையில் இப்பெண்களைத் தாம் திருப்பி அனுப்பப் போவதில்லை என்றும் அவர் கூறுகிறாராம். இத்தகைய விஷயத்தில் பேரம் பேசுவதா? இன்னொரு தரப்பார் என்ன செய்தாலும் அதைக் கவனிக்காமல், கடத்தப்பட்ட பெண்களைச் சீக்கிரத்தில் மீட்டுத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். அப்பொழுதுதான் மதிக்கத்தக்க, மதிக்கப்படும் பிரஜைகளாக நாம் வாழ முடியும் இல்லையானால், நாற்பது கோடி காலிகளைக் கொண்ட ஒரு நாட்டினராகவே நாம் ஆவோம். இத்தகைய குற்றங்களைச் சகித்துக்கொள்ளும் ஒரு சமூகம், அதன் காலிகளின் தரத்தைக் கொண்டே மதிப்பிடப்படும்.

பிர்லா மாளிகை
புது டில்லி, 26—12—'47

— ஹரிஜன்' - 4—1—1948

# 43

# சிந்துவிலுள்ள ஹரிஜனங்கள்

சிந்துவிலிருக்கும் ஹரிஜனங்களின் துக்ககரமான நிலைமையைக் குறித்து ஒரு வைத்திய நண்பர் சிந்துவிலிருந்து எழுதியிருக்கிறார். சாதி ஹிந்துக்கள் வெளியேறிப் போய், சிந்துவில் ஹரிஜனங்கள் மாத்திரமே மீதமாக இருப்பதானால், அடியோடு அழிவது ஒன்றே அவர்களுக்குக் காத்துக்கொண்டிருக்கிறது என்று அவர் கூறுகிறார். அவர்கள் அங்கே வாழ்வதற்குள்ள ஒரே நிபந்தனை, பூரணமான அடிமைகளாக இருந்து முடிவில் இஸ்லாமைத் தழுவிவிடுவதே. பாகிஸ்தான் அரசாங்கம் எத்

தனையோ சொல்லியது. ஆனால், அதிகாரிகள் அவற்றை நிறைவேற்றவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிலைமை. முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும், பயந்துகொண்டு யூனியனை விட்டு ஒரு முஸ்லிமும் வெளியேறிவிடுவதைத் தாங்கள் விரும்பவில்லை என்றும் இந்திய யூனியனிலும் பண்டித ஜவாஹர்லால்ஜியும் சர்தார் பட்டேலும் கூறியிருக்கிறார்கள். பானிபட்டில் நடந்ததைப் பற்றி நேற்று உங்களுக்குச் சொன்னேன். அளித்த வாக்குறுதியை அவர்கள் முற்றிலும் நிறைவேற்றிவிடவில்லை என்பதையே அது காட்டுகிறது. யூனியனில் இருக்கும் நிலைமை இது என்றால், பாகிஸ்தானைக் குறித்து நான் என்ன சொல்ல முடியும்? சிந்துவிலிருக்கும் ஹரிஜனங்கள் புறப்பட்டுப் போய்விட விரும்புகிறார்கள் என்றும், ஆனால், அவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்றும் அறிகிறேன். தோட்டி வேலைசெய்து பழக்கமில்லாவிட்டாலும் தோட்டி வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்களாம். இது உண்மையானால், இது முற்றிலும் தவறாகும். சீக்கியர், ஹிந்துக்களின் மனத்தில் நிரந்தரமான புண் இருந்துவரும் வகையில் பாகிஸ்தான் அரசாங்கம் நடந்து கொள்ளக்கூடாது. சிந்துவை விட்டுப் போய்விட விரும்பும் ஹரிஜனங்களுக்கு அதற்கு வேண்டிய வசதிகளை அளிக்க வேண்டும். தோட்டி வேலை செய்ய யாரையும பலவந்தப்படுத்தக்கூடாது. இன்று ஹரிஜன் தான் விரும்பும் எத்தொழிலையும் செய்யலாம். ஹரிஜனங்கள் பாகிஸ்தானிலிருந்து வந்துவிட வேண்டும் என்று ஸ்ரீ ஜெகஜீவன்ராம் கூறியிருக்கிறார். ஆனால், அவர்கள் அங்கே இருக்கும்போது கௌரவமாக வாழ அவர்களை அனுமதிக்க வேண்டும். விரும்பிச் செய்துகொண்டது என்று கூறப்பட்டாலும் எல்லா மத மாற்றங்களும் செல்லாதவை என்று இரு டொமினியன்களும் செய்துவிட வேண்டும்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 3—12—'47

—'ஹரிஜன்' - 14—12—1947

# 44

# யூனியன் முஸ்லிம்களின் கடமை

சமீபத்தில் முஸ்லிம் லீக் கூட்டம் கராச்சியில் நடந்து சில முடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மௌலானா அபுல் கலாம் ஆஜாதின் யோசனையின் பேரில் லட்சுமணபுரியில் முஸ்லிம்கள் கூட்டம் நடக்கவிருக்கிறது. இவற்றை முன்னிட்டு முஸ்லிம் நண்பர்கள் என்னைச் சில கேள்விகள் கேட்டுவருகிறார்கள். 'நாங்கள் முஸ்லிம் லீக் உறுப்பினர்களாக இருந்தால் லட்சுமணபுரி கூட்டத்திற்கு வரலாமா? சென்னையில் நடக்கும் லீக் உறுப்பினர்கள் கூட்டத்திற்கும் போக வேண்டுமா? எப்படியானாலும் யூனியனிலிருக்கும் முஸ்லிம் லீக் உறுப்பினர்களின் போக்கு

ஏதுவாக இருக்க வேண்டும்?' என்று கேட்கிறார்கள். முக்கியமாகவோ, பகிரங்கமாகவோ அவர்கள் அழைக்கப்படுவார்களானால், லட்சுமணபுரி கூட்டத்திற்கும், பின்னால் நடக்கப் போகும் சென்னைக் கூட்டத்திற்கும் அவர்கள் போக வேண்டும் என்பதில் எனக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. ஒவ்வொரு கூட்டத்திலும் அவர்களின் கருத்தைப் பயமில்லாமல் மனம் விட்டுச் சொல்ல வேண்டும். முஸ்லிம்கள் சென்ற முப்பது ஆண்டுகளாக அகிம்சை முறையை அனுசரித்து வந்திருப்பார்களானால், பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம் பெரும்பான்மையின் பாதுகாப்பு இல்லாமல் இந்தியாவிலிருக்கும் முஸ்லிம்கள் இருப்பது தங்களுக்கு வசதிக் குறைவானது என்பதைக் காணவேண்டியிராது. ஒரு சிறுபான்மையினர், என்னதான் கொஞ்சத்தொகையினராக இருந்தபோதிலும், தங்கள் கௌரவத்தையும், மனிதனுக்கு நெருங்கியவையாக, அருமையானவையாக இருப்பவைகளையும் பாதுகாத்துக்கொள்ள பயப்படுவதற்குக் காரணமே இல்லை என்பதைப் புரிந்துகொள்ளுவதற்கு, அகிம்சையில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும் என்பதும் அவசியம் அல்ல. தன்னைப் படைத்தவனும் தானும் அவன் உருவிலேயே படைக்கப்பட்டிருப்பதையும், தன்னைத் தவிர உலகிலுள்ள வேறு எந்தச் சக்தியும் தனது சுயமரியாதையை அபகரித்துவிட முடியாது என்பதையும் அறியும் வகையிலேயே மனிதன் ஆக்கப்பட்டிருக்கிறான். பலம் பொருந்திய டிரான்ஸ்வால் அரசாங்கத்துடன் நான் போராடிக்கொண்டிருந்த சமயத்தில், அன்பான ஓர் ஆங்கில நண்பர், சிறுபான்மையினரின் லட்சியத்தையே தம் லட்சியமாக எப்பொழுதும் தாம் கொள்ளுவதாக என்னிடம் கூறினார். ஏனெனில், அவர்கள் அநேகமாகத் தவறு செய்துவிடுவதில்லை என்றும், அப்படியே தவறு செய்துவிட்டாலும் அவர்களைச் சுலபத்தில் தவறிலிருந்து மாற்றிவிடலாம் என்றும், ஆனால் பெரும்பான்மையினரோ, அதிகாரம் அவர்களுக்கு அளிக்கும் போதையினால் அவர்கள் அவ்வாறு இருக்க முடிவதில்லை என்றும் அவர் சொன்னார். பெரும்பான்மையினர் என்பதோடு மனிதருக்கு ஏகபோகமாக வைத்திருக்கும் நாசஞ் செய்யவல்ல ஆயுதங்கள் அளிக்கும் சக்தியையும் கொண்டு பார்த்தால், அந்த நண்பர் மிகப் பெரிய உண்மையையே சொன்னார். இந்தியரிடம் ஆயுதங்கள் இல்லை. அப்படியே அவர்களிடம் இருந்தாலும் அவற்றை எப்படி உபயோகிப்பது என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே, ஆயுதங்களை வைத்திருந்ததனால் ஒரு சில ஆங்கிலேயர்கள் கோடிக்கணக்கான இந்தியரைத் தங்கள் காலடியில் எப்படி அடக்கிவைத்திருந்தார்கள் என்பதை நாம் அனுபவித்து இருக்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சி நம் நாட்டில் நடந்து வந்தபோது ஹிந்துக்களோ, முஸ்லிம்களோ இப்படிப்பினையை அறிந்து கொள்ளத் தவறிவிட்டது மிக மிகப் பரிதாபமாகும். மேற்கிலும் கிழக்கிலும் முஸ்லிம் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள் என்று தவறாக பெருமைப்பட்டுக் கொண்டிருந்த கொடுமையிலிருந்து இந்திய யூனியன் முஸ்லிம்கள் இப்

பொழுது விடுபட்டிருக்கிறார்கள். சிறுபான்மையினராக இருப்பதிலுள்ள நன்மையை அவர்கள் இப்பொழுது அறிந்துகொண்டால், இஸ்லாமிலிருக்கும் மேன்மைகளைத் தங்கள் வாழ்க்கையிலேயே இப்பொழுது காட்டமுடியும் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள். மெக்காவில் முகமது நபியின் மந்திரி சபை இருந்தபோதுதான் இஸ்லாம் அதன் சிறப்புகளை அளிக்க முடிந்தது என்பதை ஞாபகத்தில் வைப்பீர்களா? கான்ஸ்டன்டைன் சக்கரவர்த்தி வந்த பிறகு கிறிஸ்தவ மதம் குன்றியது. ஆனால், இந்த வாதத்தை நான் இங்கே மேற்கொண்டும் சொல்லிக்கொண்டு போவதற்கில்லை. என்னுடைய ஆலோசனை, அதில் எனக்குள்ள திடமான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால், இந்த நம்பிக்கை எந்த முஸ்லிம் நண்பருக்காவது இல்லையானால், அவர்கள் என் ஆலோசனையை நிராகரித்து விடுவதே சரியாக இருக்கும்.

## காங்கிரஸ்காரராக இருங்கள்

காங்கிரஸில் சேருவதற்கு முஸ்லிம்கள் தயாராக இருக்க வேண்டும். ஆனால், அன்போடு, முற்றிலும் சமத்துவமான முறையில் அவர்கள் அழைக்கப்படுவதற்கு முன்னால் அவர்கள் சேர்ந்துவிடக்கூடாது என்பது என் கருத்து. கொள்கையளவிலாவது, பெரும்பான்மை, சிறுபான்மை சமூகங்கள் என்பதே காங்கிரஸுக்கு இல்லை. மனித வர்க்க மதம் என்பதைத் தவிர அதற்கு வேறு மதமும் இல்லை. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மற்றவர்களைப் போன்றே காங்கிரஸுக்குச் சமமே. அது, முற்றிலும் சமயச் சார்பு அற்ற, ராஜீய, தேசீய ஸ்தாபனம். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், கிறிஸ்தவர்கள், பார்சிகள், யூதர்கள் ஆகிய எல்லோரும் அதில் சமம். காங்கிரஸ் அது கூறிக்கொண்டு வருவதைப் போன்று எப்பொழுதுமே நடந்துவர முடியாது போனதால், அது பெரும்பாலும் சாதி ஹிந்துக்களையே கொண்டதான ஸ்தாபனம் என்று பல முஸ்லிம்களுக்குத் தோன்றியிருக்கிறது. எப்படியும் பரபரப்பு நீடித்து வரும்வரையில் முஸ்லிம்கள் கௌரவமாக ஒதுங்கியிருந்தே வரவேண்டும். அவர்களுடைய சேவையை காங்கிரஸ் விரும்பும்போது அவர்கள் காங்கிரஸில் இருப்பார்கள். இதற்கு மத்தியில் அவர்கள் நான் இருப்பதைப் போன்று காங்கிரஸைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். காங்கிரஸில் நான்கணா அங்கத்தினனாகக்கூட இல்லாமலிருந்தும் அதனிடம் எனக்குச் செல்வாக்கு இருக்கிறது. ஏனெனில், தென்னாப்பிரிக்காவிலிருந்து 1915-இல் நான் இந்தியாவுக்குத் திரும்பியதிலிருந்து அதற்கு விசுவாசத்துடன் சேவை செய்து வந்திருக்கிறேன். ஒவ்வொரு முஸ்லிமும் இப்பொழுதிலிருந்தே அவ்விதம் செய்யலாம். என் சேவையைப் போன்றே அவர் சேவையும் மதிக்கப்படுவதை அவர் காண்பார். இன்று ஒவ்வொரு முஸ்லிமும் லீகர். ஆகவே காங்கிரஸுக்கு விரோதி என்று கருதப்படுகிறார். லீகின் உபதேசம் அத்தகைய துர்ப்

பாக்கியமானதாகிவிட்டது. இப்பொழுது விரோதத்திற்குக் கொஞ்சங்கூட காரணம் இல்லை. வகுப்புவாத விஷம் நீங்கிவிடுவதற்கு நான்கு மாதங்கள் மிகக் குறைவான காலம். இந்த நாட்டின் துரதிருஷ்டம், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வகுப்புவாத விஷத்தை அமிர்தம் என்று கருதிவிட்டனர். ஆகையால், அவர்கள் இந்திய முஸ்லிம்களின் எதிரிகளாகிவிட்டதோடு திருப்பித் தாக்கித் தங்களுக்கு அவமானத்தையும் தேடிக்கொண்டுவிட்டனர். பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்களைப் போலவே இவர்களும் ஆகிவிட்டனர். ஆகையால், விஷமுள்ள சூழ்நிலையைக் கடந்து மேம்பட்டவர்களாகும்படி முஸ்லிம் சிறுபான்மையினரை வற்புறுத்துகிறேன். யூனியனில் வாழ்வதற்கு ஒரே கௌரவமான வழி, மனத்தில் வேறு எதையும் மறைத்துவைக்காமல் பூரணமான பிரஜைகளாக இருப்பதே என்பதைத் தங்களுடைய சிறந்த நடத்தையினால் முஸ்லிம்கள் நிரூபிக்க வேண்டும். இதன் மூலம், அறிவற்ற துவேஷத்தைப் போக்கவும் வேண்டும். அப்பொழுது, ஹிந்து மகாசபையோ, சீக்கிய சபையோ, பார்சிகள் சபையோ ராஜீய ஸ்தாபனங்களாக இருக்க முடியாததைப் போன்றே, முஸ்லிம் லீகும் ராஜீய ஸ்தாபனமாக இருக்க முடியாது. உள்ளுக்குள் மத சீர்திருத்தங்களைச் செய்துகொள்ளுவதற்கும், தங்கள் மதங்களிலுள்ள சிறந்தவைகளைக் கண்டுபிடித்து அவற்றிற்கு ஏற்ப வாழ்வதற்கும் அவை மத ஸ்தாபனங்களாக இருக்கலாம். அப்பொழுது சூழ்நிலையிலுள்ள விஷத்தையெல்லாம் போக்கி அவை சுத்தப்படுத்தப்படுவதோடு சிறந்ததைச் செய்ய அவை ஒன்றுக்கொன்று போட்டி போடவும் செய்யும். அவை ஒன்றுக்கொன்று நட்புடனிருந்து அந்த விதத்தில் ராஜ்யத்திற்கு உதவி செய்யும். அவர்கள் காங்கிரஸில் இருந்தாலும் இல்லாவிடினும், அவர்களுடைய ராஜீய அபிலாஷைகள் காங்கிரஸின் மூலமே நிறைவேற்றப்படும். காங்கிரஸ் தனக்குள் உள்ளவர்களை மாத்திரமே கவனித்தால் அது ஒரு தனிப்பட்ட கட்சியாகவே இருக்கும். இன்றும்கூட அப்படிப்பட்டவர்கள் காங்கிரஸில் மிகச் சிலரே இருக்கிறார்கள். இப்பொழுதும் காங்கிரஸ் இணையில்லாத ஒரு நிலைமையிலேயே இருக்கிறது. ஏனெனில், யாரையும் விடாமல் முழு இந்தியாவிற்கும் பிரதிநிதியாக இருக்க அது பாடுபட்டுவருகிறது. 'கடையனும்கூட கதி மோட்சமடைய'ச் சேவை செய்ய அது முயற்சிக்கிறது.

பிர்லா மாளிகை

புது டில்லி, 29—12—'47

—'ஹரிஜன்' - 11—1—1948

# 45

# யூனியன் முஸ்லிம்களுக்குப் புத்திமதி

பல முஸ்லிம்கள், முக்கியமாக தபால், ரெயில்வே இலாக்காக்களில் இருப்போர், பிரசாரத்திற்காகவே பாகிஸ்தான் போக விரும்பியதாகத் தாங்கள் தெரிவித்ததாகச் சொல்லுகிருர்கள். ஆகவே, தங்கள் கருத்தைத் திரும்ப யோசிக்க இப்பொழுது அவர்கள் விரும்புகிருர்கள். ஹிந்துக்களுக்கு விரோதமான துவேஷம் இருக்கிறது என்ற சந்தேகத்தின் பேரில் உத்தியோகத்திலிருந்து அனுப்பப்பட்டுவிட்ட முஸ்லிம்கள் அவர்கள் எனக் கருதுகிறேன். இப்படிப்பட்டவர்களுக்காக அனுதாபப்படுகிறேன். ஆனால், தனிப்பட்டவர்கள் விஷயத்தில் நியாயமில்லாததாக இருந்தாலும், மன்னிக்கத்தக்க சந்தேகத்தை வெறுக்காமலிருப்பதே சரியான முறை என்று எண்ணுகிறேன். எனது பழைய, நன்கு பரிசீலித்ததான பரிகாரத்தையே இதற்கு நான் சொல்ல முடியும். பல அரசாங்க இலாக்காக்களிலும் ஒரு சிலருக்கே வேலை கொடுக்க முடியும். அரசாங்க உத்தியோகத்தில் இருப்பது என்பது எப்பொழுதும் வாழ்க்கையின் லட்சியமாக இருக்கக்கூடாது. யோக்கியமாக வாழ்வது என்பது ஒன்றே சிறந்த நோக்கம். கிடைக்கும் எந்த உழைப்புக்கும் ஒருவர் தயாராக இருக்கும்போதுதான் இந்தச் சிறந்த லட்சியம் எப்பொழுதும் நிச்சயமாக நிறைவேறும். மிகுந்திருக்கும் வகுப்பு விஷம் அடியோடு நீங்கும் வரையில், சர்க்கார் உத்தியோகத்தில் வரும் ஊதியத்தை நோக்கமாகக் கொள்ளாதிருப்பதே முஸ்லிம்களுக்கு அவசியமானதும் கௌரவமானதும் என்று கருதுகிறேன். மனப்பூர்வமான தொண்டிலிருந்தே அதிகாரம் வருகிறது. எனினும், உண்மையில் அதிகாரத்தை அடைந்துவிடுவது, அநேகமாக அடைந்துள்ளவரைக் கேவலமாக்கிவிடுகிறது. அதற்காகப் போராடுவது கண்ணியமற்றது. அதே சமயத்தில், எத்தனை பேராயிருந்தாலும், வேலையில்லாமலிருக்கும் ஆண்கள், பெண்கள் எல்லோரும் பிழைப்பிற்கான உழைப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டியது ஒரு அரசாங்கத்தின் கடமை. வேலையில்லாமலிருப்பவர்கள், உழைக்கத் தகுதியுள்ளவர்களாகவும், வேலை செய்யாமல் தட்டிக் கழிப்பவர்களாக இல்லாமல் விரும்பி உழைப்பவர்களாகவும் இருந்தால், புத்திசாலித்தனமான வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது அரசாங்கத்திற்கு நஷ்டத்திற்குப் பதிலாக லாபமாகவே இருக்கும்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 29—12—'47

— 'ஹரிஜன்' - 11—1—1948

# 46

## பஞ்சாயத்தின் கடமை

சனிக்கிழமை மாலை பிரார்த்தனைக் கூட்டம், சம்மால்கா என்ற கிராமத்தில் நடந்தது. அங்கே ஒரு பஞ்சாயத்து விடுதி கட்டப்பட்டிருக்கிறது. கிராமத்தில் பிரவேசிக்கும்போது காந்திஜிக்கு மாலைகள் சூட்டினார்கள். வரவேற்புப் பத்திரமும் வாசித்தளித்தனர். பிரார்த்தனைக்குப் பிறகு அங்கே நடந்த கூட்டத்தில் காந்திஜி பேசியதாவது:

இக்கூட்டம் பிரார்த்தனைக்காக நடந்தது. இத்தகைய கூட்டத்தில் மாலை போடுவது, வரவேற்பு அளிப்பது, கோஷிப்பது ஆகியவை பொருத்தமில்லாதவை. இவைகளை நீக்கியிருந்தால் நான் அதிக மகிழ்ச்சியடைந்திருப்பேன். உங்கள் வரவேற்புப் பத்திரத்தில் சத்தியம், அகிம்சை ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த நற் காரியங்களை நீங்கள் அனுசரிக்க வில்லையென்றால் அவற்றைப்பற்றிப் பேசுவதில் பயனில்லை. இதற்கு மாறாக அவற்றைச் சொல்லுவது தீமையுமாகும். நான் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பியதிலிருந்து பல்லாயிரக்கணக்கான கிராமங்களுக்குப் போயிருக்கிறேன். இத்தகைய வரவேற்பு எவ்விதம் தயாரிக்கப்படுகின்றன என்பதையும் அறிவேன். யாரோ ஒருவர் அதை எழுதுகிறார்; யாரோ இன்னொருவர் கிளிப்பிள்ளை போல அதைப் படித்துவிடுகிறார். விஷயம் அத்தோடு முடிந்துவிடுகிறது. ஒருவருடைய எண்ணத்திற்கும் சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் இருக்க வேண்டும். சிறுபான்மை சமூகத்தினரை விரட்டியடிப்பதோ, அவர்களைக் கஷ்டப்படுத்துவதோ அகிம்சையை அனுசரிப்பது என்பதற்குப் பொருந்தமாட்டா. மக்கள் தங்கள் இஷ்டம் போலெல்லாம் நடக்கலாம் என்பதல்ல சுதந்திரத்திற்குப் பொருள். கொலைகளைச் செய்வதற்கும் பொய்களைச் சொல்லுவதற்கும் சுதந்திரம் வேண்டும் என்பதற்காக எவனாவது பிரார்த்தனை செய்து அதற்காகப் பாடுபட முடியுமா? அப்படிச் செய்வது, கடவுளுக்குப் பதிலாகச் சைத்தானிடம் சரணாகதியடைவதே ஆகும்.

இங்கே சினிமா கொட்டகை இல்லை என்றே நம்புகிறேன். கல்வி அறிவுக்குச் சரியான உபாயம் சினிமாவாக இருக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். ஒரு காலத்தில் அது உண்மையாக ஆகலாம். ஆனால், இப்பொழுது சினிமா எவ்வளவு தீமையைச் செய்து வருகிறது என்பதைக் காண்கிறேன். நம் சொந்த விளையாட்டுகள் எத்தனையோ இருக்கின்றன. போதை தரும் பானங்களையும் அபின் போன்றவைகளையும் நம்மிடையே இருந்து நீக்க வேண்டும். உங்கள் கிராமத்தில் தீண்டாமையின் சாயல் இனியும் ஒரு சிறிது இருந்தாலும், அதை ஒழிப்பீர்கள் என்றே நம்பு

கிறேன். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர், பார்சிகள், கிறிஸ்தவர் ஆகிய எல்லோரும் சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் வாழவேண்டும். நான் கூறிய இவைகளையெல்லாம் நீங்கள் அடைந்து விடுவீர்களானல், உண்மையான சுதந்திரத்தை நீங்கள் நடைமுறையில் காட்டியவர்களாவீர்கள். இந்தியா முழுவதிலும் இருக்கும் மக்கள், உதாரணமாக விளங்கும் உங்கள் கிராமத்தைப் பார்க்க வருவதோடு உங்களிடமிருந்து உற்சாகத்தையும் பெறுவார்கள். உங்கள் முயற்சி வெற்றியடைய கடவுள் அருள் வாராக.

—'ஹரிஜன்' . 4—1—1948

# 47

# எல்லாவற்றிற்குமாக உண்ணாவிரதம்

இந்திய யூனியனில் உள்ள முஸ்லிம்கள் காங்கிரசில் சேருவதற்கு எவ்வளவு ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை, முஸ்லிம் லீகைச் சேர்ந்த இரண்டு பிரமுகர்கள் காந்திஜியிடம் விவரித்துக் கொண்டிருந்தார்கள். இது காந்திஜிக்கு மனவேதனையாக இருந்தது. "காங்கிரசில் சேர வேண்டும் என்ற இந்தப் போட்டா போட்டியையும், அவசரத்தையும் நான் விரும்பவில்லை. அவர்கள் காங்கிரசில் சேரத்தான் வேண்டும். காங்கிரசில் சேருவது அவர்களுடைய உரிமையாகும். ஆனல், இதற்கு இன்னும் காலம் வரவில்லை என்பதே எனது அபிப்பிராயமாகும். காங்கிரஸ் அவர்களை அன்புடன் வரவேற்கத் தயாராக இருக்கும் வரையில், அவர்கள் காத்திருப்பதையே நான் விரும்புவேன். இன்று அந்த அன்பு தேவையாக இருக்கிறது. இந்நிலைமையில், அவர்கள் நான் செய்து கொண்டிருப்பதுபோல, காங்கிரசிற்கு வெளியிலிருந்து தொண்டு செய்வதே சிறந்ததாகும்" என்று அவர்களிடம் காந்திஜி கூறினர்.

மற்றொரு முஸ்லிம் நண்பரிடம் காந்திஜி கூறியதாவது: "சமஸ்தானங்கள் யாவும் பாகிஸ்தானுடன் சேர்ந்துவிட்டால் கூட நான் கவலைப்பட மாட்டேன். இந்தியா அளவில் குறைந்துவிட்டாலும், அதன் அழுக்காறுகள் களையப்பட்டு அது தூய்மையாக இருக்குமாயின், அது தைரியசாலிகளின் அகிம்சைக்கு நாற்றங்காலாக இருக்கும்; அது தார்மிக வழியில் உலகத்தின் தலைமைப் பதவியையும் வகித்து, நசுக்கப்பட்டவர்களுக்கும் சுரண்டப்பட்டவர்களுக்கும் நம்பிக்கையையும் விடுதலையையும் கொண்டு வரும். ஆனல், பரந்த நிலப்பரப்புள்ள, ஆன்மிகப் பெருமையற்ற இந்தியா மேற்கத்திய ராணுவ நாடுகளைக் காப்பியடிக்கும் மூன்றாந்தரமான நாடாகவே விளங்கும்; அவற்றின் பலாத்காரத்



காந்திஜியின் கடைசி உண்ணுவிரதத்தின்போது எடுத்த படம்—1948 ஜனவரி 17.



படுபாவி சுட்டுக் கொல்லுவதற்கு முதல் நாள், 1948 ஜனவரி 29-ஆம் தேதி பிரார்த்தனைக் கூட்டத்திற்கு காந்திஜி போய்க்கொண்டிருந்தபோது எடுத்த படம்.

தாக்குதலை எதிர்த்து நிற்கும் சக்தியையும் அறவே இழந்து விடும்."

டில்லியில் நிலவிவரும் வகுப்பு வேற்றுமையைக் குறித்து தமது கவலையைத் தெரிவித்து மற்றொரு நண்பரிடம் காந்திஜி கூறியதாவது: "டில்லியில் நமக்குள்ள பிடிப்பு சிறிது சிறிதாகத் தளர்ந்து வருகிறது. டில்லியில் நமது பிடிப்பு போய்விட்டால், இந்தியாவிலும் நமக்குள்ள பிடிப்பு போய்விடும். பின்னர், அத்துடன் உலக அமைதியில் உள்ள இறுதி நம்பிக்கையும் போய்விடும். உதாரணமாக, டாக்டர் ஜாகிர் ஹுசேனையும், ஷஹீத் சுஹ்ரவார்தியையும் போன்றவர்கள் என்னைப் போல் சுதந்திரமாகவும் பத்திரமாகவும் டில்லியில் நடமாட முடியாமல் இருப்பது எனக்குச் சகிக்க முடியாததாக இருக்கிறது. டில்லி முஸ்லிம்களின் தூதுகோஷ்டி ஒன்று என்னைக் கண்டு பேசிய போது, அவர்களுடைய கஷ்டங்களை என்னிடம் தெரிவித்தனர். உடனே நான் என் முன்னிலையில் அவர்களும் முக்கிய மந்திரிகளும் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்தேன். பின்னர் போலீஸ் இலக்காதலைவரும் அவர்களைக் கண்டு, அவர்களுக்கு பூரண பரிகாரம் அளிப்பதாக உறுதிமொழி கூறினர். எனினும், என் மனவேதனை இன்னும் நீடித்தே வருகிறது. இதிலிருந்து, பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மையோரின் துன்பங்களைக் குறித்து நான் அக்கறை கொள்ளவில்லை என்று பொருள் கொள்ள வேண்டாம். அதற்கு மாறாக, அவர்களுடைய துன்பங்கள் என் வேதனையை இன்னும் அதிகமாக்கியிருக்கின்றன. சிந்து, மேற்கு பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் முதலியவிடங்களில் உள்ள சிறுபான்மையோருக்குத் துணைபுரிய நான் செல்லவே விரும்புகிறேன். எனினும், டில்லி முஸ்லிம்களுக்குப் பூரண உத்தரவாதம் அளிக்க என்னால் முடியாமல் இருக்கும் போது, எந்த முகத்துடன், என்ன நம்பிக்கையுடன், நான் அவ்விடங்களுக்குச் செல்ல முடியும்? எனவே, நான் திக்கற்ற நிலையில் இருப்பதாக உணருகிறேன். எனது வாழ்க்கையில் நான் ஒருபோதும் திக்கற்ற நிலையைச் சகித்துக்கொண்டிருந்ததில்லை."

எனவே, காந்திஜி உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்ததற்கு அவரது ஆழ்ந்த வேதனையே காரணமாகும். இந்த உண்ணாவிரதம், இதற்கு முன் அவர் மேற்கொண்ட உண்ணாவிரதங்களைப் போன்றதன்று; இது எல்லாவற்றிற்குமாகச் சேர்ந்து மேற்கொண்ட உண்ணாவிரதமாகும். அவர் ஏற்கனவே கூறியதைப்போல், அது அவரது உள்ளத்திலிருந்து திடீரென்று மின்னலைப்போல் உதித்தது. அவ்விஷயமாக வாதத்திற்கே இடமில்லை. நேற்று காந்திஜி உண்ணாவிரதத்தைப் பற்றி அறிவிப்பதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்தான் சர்தார் பட்டேலும், நேருஜியும் அவரைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போதுகூட காந்திஜி தம் மனத்தில் ஊசலாடிக் கொண்டிருந்ததை அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை.

காந்திஜி உண்ணுவிரதம் இருக்கத் தீர்மானித்துள்ளார் என்ற செய்தியைக் கேட்டதும் ஓர் அன்பர் காந்திஜிக்கு எழுதியதாவது: "இந்த உண்ணுவிரதத்திற்கு எதிராக நான் எவ்வளவோ கூறமுடியும். நீங்கள் பொறுமையிழந்து அவசரப்பட்டுவிட்டீர்கள் என்பதே நான் கூறுவதாகும். நீங்கள் மேற்கொண்டுள்ள லட்சியத்திற்கு முக்கியமாக எல்லையற்ற பொறுமை தேவை. உங்களுடைய சோர்வற்ற, பொறுமையான தொண்டினுல் நீங்கள் எத்தகைய மகத்தான வெற்றி பெற்றீர்கள் என்பதை நீங்கள் அறியவில்லை என்று தோன்றுகிறது. அதன் பலனுக, லட்சக்கணக்கானவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டது. இன்னும் நீங்கள் ஏராளமானவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும். ஆனுல், திடீரென்று உங்களுடைய பொறுமை தகர்ந்துவிட்டது போல் தோன்றுகிறது. உங்களுடைய உயிரைக் காப்பாற்றுவதால் நீங்கள் என்ன சாதிக்க முடியுமோ, அதை நீங்கள் இறப்பதன்மூலம் சாதித்துவிட முடியாது. எனவே, எனது வேண்டுகோளுக்கு இணங்கி, உண்ணுவிரதத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

அக்கடிதத்திற்குக் காந்திஜி அளித்த பதில் பின்வருமாறு: "உண்ணுவிரதம் இருக்க நான் அவசரப்பட்டுத் தீர்மானித்துவிடவில்லை. நான் பொறுமையை இழந்து விடவில்லை. நீங்கள் என்னுடைய நண்பர் என்பதில் சந்தேகமில்லை. அதிலும் உயர்ந்த உள்ளம் படைத்த நண்பர். எனவே, என் விஷயத்தில் உங்களுக்கு ஏற்பட்டுள்ள கவலை இயல்பேயாகும். அதற்கு நான் மதிப்புக் கொடுக்கிறேன். இருந்தாலும் உங்களுடைய வாதம், உங்களுடைய பொறுமையின்மையையும், மேலெழுந்தவாரியான சிந்தனையையுமே வெளிப்படுத்துகிறது. எந்த நோக்கத்திற்காகப் பொறுமை காட்டுகிறேமோ, அந்த நோக்கத்தையே கொன்றுவிடுவது பொறுமையா அல்லது மடத்தனமா?

"நான் டில்லிக்கு வந்ததிலிருந்து அடைந்த பலன்களைக் குறித்து நான் பெருமை அடையக் கூடாது. அவ்விதம் செய்வது என்னை நானே ஏமாற்றிக்கொள்ளுவதாகும். எனது தொண்டினுல் எத்தனை உயிர்கள் உண்மையாகவே காப்பாற்றப்பட்டன என்பதை மனிதர் முடிவுசெய்துவிட முடியாது. எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் பார்க்கும் கடவுள் மாத்திரமே அதைச் செய்ய முடியும். சென்ற செப்டம்பர் மாதத்திலிருந்து பொறுமையே உருவானவனைப் போல் நடந்துகொண்டு வந்திருக்கும் ஒருவன் திடீரென்று பொறுமையை இழந்துவிட்டதாகக் கூறுவது அறியாமை அல்லவா?

"மனித சாத்தியமான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டபின், எனது திக்கற்ற நிலைமையை நான் உணர்ந்தபோதுதான், கடவுளின் மடியில் நான் சரணம் அடைந்தேன். எனது உண்ணுவிரதத்தின் உட்கருத்தும் தத்துவமும் அதுதான். எனவே, உங்கள் ஆலோசனையை நான் ஏன் ஏற்க முடியாது என்

பதை இப்போது நீங்கள் அறிந்துகொள்ளுவீர்கள். கடவுள் எனக்கு உண்ணாவிரதத்தை அனுப்பினர். அவர் விரும்பினல், அவர் விரும்பும்போது அதை முடிக்க வேண்டியவரும் அவர்தான். அவர் என் உயிரைப் பாதுகாத்தாலும் அல்லது முடித்துவிட்டாலும் எல்லாம் நன்மைக்கே என்ற நம்பிக்கையுடன் நாம் நடந்து கொள்ளுவதுதான் சிறந்ததாகும். எனவே, உண்ணாவிரதத்தின் போது எனக்கு கடவுள் ஆன்ம பலத்தை அளிக்க வேண்டும் என்பதொன்றே நமது பிரார்த்தனையாக இருக்கவேண்டும். ஏனெனில், உலகில் வாழவேண்டும் என்ற ஆசையானது, நான் அவசரப்பட்டோ, உற்ற காலத்திற்கு முன்போ உண்ணாவிரதத்தை முடித்துவிடும்படி என்னை மயக்கிவிடக் கூடாது அல்லவா?

"என்னுடைய உண்ணாவிரதம் குறிப்பாக எந்த ஒரு கட்சிக்கோ, கோஷ்டிக்கோ அல்லது நபருக்கோ எதிராக மேற்கொள்ளப்பட்டதன்று. எனினும், இதிலிருந்து யாரும் விலக்கு அல்ல. இது எல்லாருடைய மனச்சாட்சியையும், பாகிஸ்தானில் உள்ள பெரும்பான்மையோரின் மனச் சாட்சியையும் தூண்டுவதற்கேயாகும். எல்லோருமோ அல்லது ஏதாவதொரு கோஷ்டியோ பூரணமாக மனமாற்றம் அடைந்தால், அற்புதம் சாதிக்கப்பட்டதாகிவிடும் என்பதை நான் அறிவேன். உதாரணமாக, எனது வேண்டுகோளுக்கு சீக்கியர்கள் ஒருமித்து இசைவார்களாயின், நான் திருப்தி அடைந்துவிடுவேன். நான் பஞ்சாபிற்குச் சென்று அவர்களிடையே வசிப்பேன். அவர்கள் தைரியசாலிகள். எனவே, எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக இருக்கக் கூடிய தைரியசாலிகளின் அகிம்சைக்கு அவர்கள் உதாரணமாக விளங்க முடியும்."

புது டில்லி. 14—1—'48 —'ஹரிஜன்' — 18—1—1948

# 48

# டில்லி யாருக்குச் சொந்தம்?

குஜராத்திலுள்ள ஆடவர்களுக்கும், பெண்களுக்கும்,

நான் படுக்கையிலிருந்து கொண்டே குஜராத் மக்களுக்கு குஜராத்தியில் சில வார்த்தைகள் கூறத் தீர்மானித்துள்ளேன். இதை நான் ஒரு சாதாரண உண்ணாவிரதமாகக் கருதவில்லை. ஆழ்ந்து யோசித்த பின்பே இதை நான் மேற்கொண்டிருக்கிறேன். நான் அறிவைக் கொண்டு ஆராய்ந்து இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவில்லை. மனிதரின் அறிவையும் ஆட்சிபுரியும் கடவுளின் சித்தமே இதற்குக் காரணம். இவ்வார்த்தைகளை நான் கூறும்போது என் மனத்தில் கோபத்தின் அறிகுறியோ அல்லது பொறுமையின்மையின் சாயலோ அணுவளவுகூட இல்லை. ஒவ்வொரு

விஷயத்திற்கும் ஒரு நேரம் உண்டு, ஒரு சந்தர்ப்பம் உண்டு. அந்த நேரத்தையும் சந்தர்ப்பத்தையும் தவறவிட்டால், பின்னர் ஒரு காலத்திலும் அது திரும்பி வருவதில்லை. இந்த உணர்வே என் உண்ணாவிரதத்திற்குப் பின்னணியாக அமைந்திருக்கிறது. எனவே, இந்த நேரத்தில் ஒவ்வோர் இந்திய ஆடவரும் பெண்ணும் தமது கடமை என்ன என்பதைப் பற்றி மாத்திரமே சிந்திக்க வேண்டும். குஜராத்தியர் இந்தியர்களே ஆவர். எனவே, நான் குஜராத்தியில் என்ன எழுதினாலும், அது இந்தியாவில் உள்ள எல்லா மக்களுக்குமே பொருந்தும்.

டில்லி, இந்தியாவின் தலைநகரமாகும். இரு தேசக் கொள்கையை உண்மையிலேயே நம் உள்ளத்தில் நாம் ஆதரிக்காவிடில், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் வெவ்வேறான இரு தேசீய இனங்களாவர் என்று நாம் கருதாவிடில், இந்தியாவின் தலைநகர் எப்படி இருக்கவேண்டுமென நாம் உள்ளத்தில் சித்திரித்து வந்தோமோ அப்படி இன்று இல்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். டில்லியின் முன்னோடிகளான இந்திரப்ரஸ்தத்திலும் ஹஸ்தினபுரத்திலும் உள்ள இடிந்து தகர்ந்த கட்டிடங்கள் சாட்சியம் கூறுவதுபோல், டில்லி ஆதி அந்தமற்ற நகராகும். அது ஹிந்துக்களுக்கோ அல்லது சீக்கியர்களுக்கோ மாத்திரம் தான் சொந்தம் என்று அறிவற்றவன் தான் எண்ணுவான். கன்யாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலும், கராச்சிலிருந்து அஸ்ஸாமிலுள்ள திப்ருகார் வரையிலும், இந்தப் பரந்த உப கண்டம் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் எல்லோருக்கும் அருமையான தாய் நாடாகும். அதில் எல்லோருக்கும் சம உரிமைகள் உண்டு. அது பெரும்பான்மை சமூகத்திற்குத்தான் சொந்தமானது, சிறு பான்மையோர் அவர்களுக்குக் கீழேதான் வாழ வேண்டும் என்று கூற யாருக்கும் உரிமையில்லை. தூய்மையான பக்தியுடன் யார் இந்தியாவுக்குத் தொண்டு செய்கிறார்களோ, அவர்கள் தான் முதல் உரிமைக்குத் தகுதி வாய்ந்தவர்கள் ஆவர். எனவே, எல்லா முஸ்லிம்களையும் டில்லிக்கு வெளியே விரட்டிவிட வேண்டும் என்று கருதுவோரை, நாட்டின் முதல் நம்பர் விரோதி என நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். நாம் கோரமான அபாயத்தை நோக்கித் தலைகுப்புறச் சென்று வருகிறோம். அதைத் தவிர்ப்பதில் தன் பங்கைச் செய்ய வேண்டியது, ஒவ்வொரு இந்திய ஆடவர், பெண்ணின் இன்றியமையாத கடமையாகும்.

அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? நமது கனவாகிய பஞ்சாயத்து ராஜ்யம், அதாவது உண்மையான ஜனநாயகம் அமலுக்கு வரவேண்டும். அது அமலுக்கு வந்தால், இந்தியாவிலுள்ள மிக மிக உயர்ந்தவரைப் போல் மிக மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவருக்கும் சம உரிமைகள் உண்டு, அவரும் இந்த நாட்டு மன்னர் என்று நாம் கருதுவோம். இதற்குப் பூர்வாங்கமாக, எல்லோரும் தூய்மையானவர்களாக இருக்கவேண்டும்

என்று ஏற்படுகிறது. அறிவுடன் தூய்மையும் சேர்ந்திருக்க வேண்டும். அப்படியானால்தான், சமூகங்களுக்குள்ளும் சாதிகளுக்குள்ளும் யாரும் எவ்வித வேற்றுமையும் பாராட்டமாட்டார்கள். எல்லோரும் தமக்குச் சமம் என்று ஒவ்வொருவரும் கருதுவார்கள். அன்பாகிய பட்டு வலையில் எல்லோரும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருப்பார்கள். எவரும் மற்றொருவரைத் தீண்டாதாராகக் கருதமாட்டார்கள். உழைக்கும் தொழிலாளியும் செல்வத்தில் புரளும் முதலாளியும் சமமானவர்கள் என்றே நாம் கருதுவோம். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து நேர்மையான வாழ்க்கையை நடத்துவதற்குச் சம்பாதிப்பது எப்படி என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொண்டிருப்பார். உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்கும் எவரும் வேற்றுமை பாராட்டமாட்டார். விவேகமுள்ள எவரும் கஞ்சா, சாராயம் போன்ற போதை வஸ்துக்களைத் தொடமாட்டார். எல்லோரும் சுதேசிக் கொள்கையையே வாழ்க்கையின் விதியாகக் கொண்டு, தன் மனைவியல்லாத வேறு எந்தப் பெண்ணையும் அவரவர் வயதிற்குத் தகுந்தவாறு தாயாகவோ, சகோதரியாகவோ அல்லது மகளாகவோ கருதுவார். மற்றப் பெண்களிடம் அவர்களுக்கு ஒருபோதும் கெட்ட இச்சை ஏற்படாது. சந்தர்ப்பம் ஏற்படும்போது அவர் தன் உயிரை அர்ப்பணம் செய்யத் தயாராக இருப்பாரேயன்றி, எக்காலத்திலும் பிறருடைய உயிரை அபகரிக்க விரும்பமாட்டார். இந்தியாவின் அத்தகைய புதல்வருக்கு, தற்போது தமது கடமை என்ன என்பதைப் பிறர் எடுத்துக் கூறும்படியான அவசியமே ஏற்படாது.

புது டில்லி, 14—1—'48 உங்கள்
'ஹரிஜன்' 18—1—1948. மோ. க. காந்தி

## 49

# டில்லியின் பரிதாப நிலை

ஒருவர், ஆரோக்கிய விதிகளுக்கு இணங்க தமது ஆரோக்கியத்திற்காக உண்ணாவிரதம் இருக்கலாம்; தவறு இழைக்கப்பட்டதற்காகவும், தவறு இழைக்கப்பட்டதாகத் தாம் கருதுவதற்காகவும் ஒரு தவமாக உண்ணாவிரதம் இருக்கலாம். இத்தகைய உண்ணாவிரதங்களில், உண்ணாவிரதம் இருப்போர் அகிம்சையில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால், ஓர் அகிம்சை வாதிக்கு, சமூகத்திற்கு இழைக்கப்பட்ட தவறைக் கண்டித்து உண்ணாவிரதத்தை மேற்கொள்ளும்படியான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அந்நிலைமையில் அவருக்கு உண்ணாவிரதத்தைத் தவிர வேறு வழியிராமற் போய்விடுகிறது. எனக்கு இப்போது அத்தகைய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

செப்டம்பர் 9-ஆம் தேதி நான் கல்கத்தாவிலிருந்து டில்லிக்குத் திரும்பி வந்தபோது, நான் மேற்கு பஞ்சாபிற்குச் செல்லுவதாக இருந்தேன். ஆனல், அது நடைபெறவில்லை. உல்லாசமான டில்லி, செத்தவர்கள் அடங்கிய நகரம்போல் தோன்றியது. நான் ரெயிலிலிருந்து இறங்கியபோது, நான் பார்த்த ஒவ்வொருவருடைய முகத்திலும் வேதனை ததும்பி நின்றது. நகைச்சுவையும், அதனல் ஏற்படும் மகிழ்ச்சியும் ஒரு போதும் கைவிடாத சர்தார்கூட அந்த நிலைக்கு விலக்காக இல்லை. அதற்குக் காரணம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. என்னை வரவேற்பதற்காக வந்திருந்த அவர், தலைநகரில் ஏற்பட்டுள்ள கலகங்களைப் பற்றிய சோககரமான செய்திகளைச் சிறிதும் தாமதமின்றி எனக்கு அறிவித்தார். நான் டில்லியிலேயே இருந்து தீரவேண்டும்; ஒன்று சமாதானம் நிலவ வேண்டும், இல்லாவிடில் நான் சாகவேண்டும் என்பதை உடனே நான் உணர்ந்துகொண்டேன். உடனடியாக ராணுவமும் போலீசும் நடவடிக்கை எடுத்துக்கொண்டதால், அமைதி நிலவுவதுபோல் தோன்றுகிறது. எனினும், உள்ளூற புயல் குமுறிக் கொண்டிருக்கிறது. எந்தச் சமயத்திலும் அது பீறிட்டெழலாம். இந்த நிலைமையை, என் பிரதிக்ஞை நிறைவேறியதாக நான் கருத முடியாது. என் பிரதிக்ஞை நிறைவேறினல்தான், இணையற்ற நண்பனை மரணம் என்னை ஆட்கொள்ளாமல் இருக்க முடியும். ஹிந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்களுக்கிடையே மனப்பூர்வமான நட்பு நிலவ வேண்டும் என்றே நான் ஏங்கிக் கொண்டிருக்கிறேன். அன்று அவர்களிடையே அத்தகைய நட்பு நிலவியது. ஆனல், அந்த நட்பு இன்று இருக்குமிடம் தெரியவில்லை. இந்திய தேசபக்தர் எவரும் இந்த நிலையை அமைதியுடன் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. என்னுள்ளே இருக்கும் குரல் நீண்ட காலமாக எனக்கு சமிக்ஞை செய்து வருகிறதெனினும், அதற்கு நான் செவிகொடுக்கவில்லை. அது ஒருவேளை சைத்தானின் குரலாக, அதாவது எனது பலவீனம் காரணமாகத் தோன்றும் குரலாக இருக்கலாமென நினைத்தேன். வாளின் ஸ்தானத்தில் ஒரு சத்தியாக்கிரகியின் கடைசியான ஆயுதம் உண்ணாவிரதம்தான். தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தினந்தோறும் என்னைப் பார்த்துக் கேட்கும் முஸ்லிம் நண்பர்களுக்கு நான் என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. எனது சக்தியற்ற நிலை என்னை அரித்துத் தின்று வருகிறது. உண்ணாவிரதத்தை மேற்கொண்ட உடனடியாக அது போய்விடும். சென்ற மூன்று நாட்களாக நான் அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இறுதியான முடிவு என் மனத்தில் மின்னல்போல் தோன்றியது. அது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. தூய்மையான ஒரு மனிதனிடம், கொடுப்பதற்கு உயிரைக் காட்டிலும் அதிக மதிப்புள்ள பொக்கிஷம் எதுவுமில்லை. எனவே, இத்தகைய ஒரு முறையை நியாயமாகக் கைக்கொள்ளுவதற்கான தூய்மை என்னிடத்தில் இருக்கிறது என்றே நம்புகிறேன்.

## ஆசி கூறுங்கள்

எனது முயற்சிக்கு ஆசி கூறும்படியும், எனக்காகவும், என்னுடனும் பிரார்த்திக்கும்படியும் உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்ளுகிறேன். நாளை முதலாவது வேளை ஆகாரத்திலிருந்து உண்ணாவிரதம் ஆரம்பமாகிறது. இந்த உண்ணாவிரதத்திற்குக் காலவரையறை இல்லை. உப்புடனே அல்லது உப்பில்லாமலோ தண்ணீரும் எலுமிச்சம்பழ ரசமும் நான் சாப்பிடலாம். வெளியாரின் வற்புறுத்தலின்றியும், விழிப்படைந்த கடமை உணர்ச்சி காரணமாகவும் எல்லா சமூகங்களின் உள்ளமும் ஒன்றுபடும்போது, ஒன்றுபட்டுள்ளது என்ற திருப்தி எனக்கு ஏற்படும்போது உண்ணாவிரதம் முடிவடையும். குன்றிவரும் இந்தியாவின் கௌரவத்தை மீண்டும் பெறுவதும், ஆசியாவிலும் அதன் மூலம் உலகிலும் சிதைந்துவரும் அதன் மகோன்னத சக்தியை மீண்டும் பெறுவதும்தான் உண்ணாவிரதத்தின் பலனாக எனக்குக் கிடைக்கும் வெகுமதியாக இருக்கும். இந்தியா தன் ஆன்மாவை இழப்பது, வேதனையினாலும், சூறாவளியினாலும், பட்டினியினாலும் துன்பப்படும் உலகமே நம்பிக்கையை இழப்பதாகும். எந்த நண்பரும், விரோதி இருந்தால் எந்த விரோதியும், என்மீது கோபம் கொள்ளவேண்டாம். மனித உள்ளத்தைச் சீர்திருத்துவதற்கு உண்ணாவிரத முறையில் நம்பிக்கையில்லாத நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்னிடம் பொறுமை காட்டி, அவர்கள் தங்கள் விருப்பப்படி நடந்துகொள்ளுவதற்குக் கோரும் அதே சுதந்திரத்தை எனக்கும் அளிப்பார்களாக. எனக்கு மகோன்னதமான ஒரே ஆலோசனை கர்த்தா கடவுள் தான். எனவே, வேறு எந்த ஆலோசகரையும் நாடாமல் நான் முடிவு செய்துகொள்ள வேண்டும். நான் தவறு செய்து அதைக் கண்டு பிடித்தேனாயின், எல்லோரும் அறிய அதை நான் பிரகடனம் செய்யவும், எனது தவறான போக்கிலிருந்து பின்வாங்கவும் நான் தயங்க மாட்டேன். இவ்விஷயமாக எவ்வித வாதமும் இருக்கக் கூடாது என்றும், நான் எடுத்துக்கொண்டுள்ள முறையை அங்கீகரிக்கும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேன். எனது நோக்கத்தை நிறைவேற்ற இந்தியா முழுவதும் முன்வருமாயின், குறைந்தபட்சம் டில்லியாவது முன்வருமாயின், உண்ணாவிரதம் சீக்கிரத்தில் நின்றுவிடலாம்.

## தயவு தாட்சண்யம் கூடாது

உண்ணாவிரதம் சீக்கிரம் முடிவடைந்தாலும், தாமதித்து முடிவடைந்தாலும் அல்லது ஒரு போதும் முடிவுறாவிட்டாலும், நெருக்கடி என்று குறிப்பிடக்கூடிய இந்த நிலைமையைச் சமாளிப்பதில் தயவு தாட்சண்யம் எதுவும் இருக்கக்கூடாது. எனது முந்திய உண்ணாவிரதங்களில் சில நிர்ப்பந்தப்படுத்துவதாக இருந்தன என்றும், உண்ணாவிரதங்களால் ஏற்பட்ட வற்புறுத்தல் இராவிடில் தீர்ப்பு எனக்கு விரோதமாக இருந்திருக்கும் என்றும் கண்டனவாதிகள் கூறுகின்றனர். நோக்கம்

சரியாக இருக்குமாயின், விரோதமான தீர்ப்புக்கு என்ன மதிப்பு இருக்க முடியும்? கடமையைப் போல், தூய்மையான உண்ணு விரதத்திற்கு வெகுமதி உண்ணுவிரதமேதான். பலன் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் உண்ணுவிரதம் இருக்கவில்லை. நான் உண்ணுவிரதம் இருப்பதற்குக் காரணம் உண்ணுவிரதம் இருந்து தீரவேண்டும் என்பதுதான். எனவே, பாரபட்சமின்றி இந்த நோக்கத்தை ஆராய்ச்சி செய்யும்படி ஒவ்வொருவரையும் வற்புறுத்துகிறேன். நான் இறக்க வேண்டுமாயின், அமைதியாக இறக்கும்படி என்னை விட்டுவிடுங்கள். இந்தியா, ஹிந்து மதம், சீக்கிய மதம், இஸ்லாம் மதம் முதலியவற்றின் அழிவை திக்கற்ற நிலையில் பார்த்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் மரணம் எனக்கு மகிமையுடன் கூடிய விடுதலையை அளிக்கும். உலகத்தில் உள்ள பல்வேறு மதங்களையும் சேர்ந்த பாகிஸ்தான் மக்களின் அந்தஸ்து, உயிர், உடைமை முதலியவற்றை பாகிஸ்தான் சமமாகக் கருதாவிட்டாலும், அதே முறையை இந்தியா பின்பற்றினாலும் மேலே குறிப்பிட்ட அழிவு நிச்சயம்தான். அப்போதுதான் இரண்டு இந்தியாக்களிலும் உள்ள இஸ்லாமும் செத்துவிடும். எனினும், அதன் விளைவாக உலகத்திலுள்ள மற்ற நாடுகளில் இஸ்லாம் செத்துவிடாது. ஆனால், ஹிந்து மதமும், சீக்கிய மதமும் இந்தியாவிற்கு வெளியில் இல்லை.

அருமை இந்தியாவில் ஏற்பட்டுள்ள சீர்குலைவைச் சிறிது யோசித்துப் பாருங்கள். அவ்விதம் யோசித்துப் பார்த்தால், திருப்திகரமான இந்த முறையைக் கைக்கொள்ளுவதற்கான பலமும் தூய்மையும் உள்ள இந்தியத் தாயின் தாழ்மையான புதல்வன் ஒருவன் இருப்பதைக் குறித்து நீங்கள் ஆனந்தம் அடைவீர்கள். எனக்கு அந்தத் தூய்மையோ, பலமோ இராவிடில், நான் பூமிக்கு ஒரு சுமையே ஆவேன். அத்தகைய ஒருவன் எவ்வளவுக்கு சீக்கிரமாக மறைந்து, இந்தியாவின் பாரத்தை அகற்றுகிறானோ அவ்வளவுக்கு, அவனுக்கும் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நன்மையாகும்.

பிர்லா மாளிகைக்கு ஓடிவந்து, உண்ணுவிரதத்தை மேற்கொள்ளாதிருக்கும்படி என்னைத் தடுக்க முயற்சிக்கவோ அல்லது எனக்காகக் கவலைப்படவோ வேண்டாம் என்று எல்லா நண்பர்களையும் நான் வேண்டிக்கொள்ளுகிறேன். நான் கடவுளின் கையில் இருந்துவருகிறேன். அவர்கள் எல்லோரும் ஆராய்ச்சி தீபத்தைத் தமக்குள்ளேயே திருப்பிக் கொள்ளுவார்களாக. இது முக்கியமாக எல்லோருக்கும் ஒரு சோதனைக் காலமாகும். தங்களுடைய கடமையில் நிலைத்து, அதை அக்கறையுடனும் சரியாகவும் செய்வோர், எனக்கும் லட்சியத்திற்கும் எல்லா விதத்திலும் உதவி புரிந்தவர்கள் ஆவார்கள். உண்ணுவிரதம் தன்னைத் தூய்மையாக்கிக் கொள்ளும் ஒரு முறையேயாகும்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 12—1—'48

—'ஹரிஜன்' · 18—1—1948

# 50

# சைத்தானை அப்புறப்படுத்துங்கள்

**கா**ந்திஜி பிரார்த்தனைக்கு வழக்கம்போல் இன்று மாலை நடந்தே வந்தார். அதைப் பற்றி அவர் கூறியதாவது: "வழக்கம்போல் நான் பிரார்த்தனை மைதானத்திற்கு வருவதைக் குறித்து யாரும் ஆச்சரியம் அடைய வேண்டாம் என்று எச்சரிக்கிறேன். சாப்பாட்டிற்குப் பிறகு முதல் இருபத்து நான்கு மணி நேரத்திற்கு உண்ணாவிரதம் யாருக்கும் பலவீனத்தை உண்டாக்குவதில்லை. எப்போதாவது இருபத்துநான்கு மணி நேரம் உண்ணாவிரதம் இருப்பவர் ஒவ்வொருவருக்கும் அது பொதுவாக நன்மையையே செய்கிறது. ஆனால், நாளைக்கு நான் பிரார்த்தனை மைதானத்திற்கு வருவது கஷ்டமாக இருக்கலாம். எனினும், நீங்கள் பிரார்த்தனைக்கு வர ஆர்வமுடையவர்களாக இருந்தால், நீங்கள் வரலாம். நான் வராவிட்டால் உங்களுடன் சிறுமிகள் பிரார்த்தனை செய்வார்கள்.

உண்ணாவிரதம் இருக்கும்படி நேர்ந்ததற்கு யார் குற்றவாளி என்று கேட்கப்பட்ட கேள்விக்குக் காந்திஜி அளித்த பதிலாவது: "இதற்காக நான் எந்த நபரையும், எந்தச் சமூகத்தையும் குறை கூறவில்லை. டில்லியிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்ற வேண்டுமென ஹிந்துக்களும் சீக்கியர்களும் வற்புறுத்தினால், அவர்கள் இந்தியாவிற்கும், தங்கள் சொந்த மதங்களுக்கும் துரோகம் செய்தவராவார்கள். அத்தகைய நிலைதான் என் மனத்தைப் புண்படுத்தி விட்டது.

"முஸ்லிம்களிடம் மாத்திரமே எனக்கு அனுதாபம் உண்டு என்றும், அவர்களுக்கு ஆதரவாகவே நான் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருப்பதாயும் சிலர் என்னை நையாண்டி செய்கிறார்கள். அவர்கள் கூறுவது சரியே. சிறுபான்மையோருக்காகவும், தேவைப்படுவோருக்காகவுமே என் ஆயுள் முழுதும் நான் ஆதரவு அளித்து வந்திருக்கிறேன்; ஒவ்வொருவரும் அப்படித்தான் அளித்து வரவேண்டும். இந்திய யூனியன் முஸ்லிம்களின் பெருமையையும், சுயநம்பிக்கையையும் அபகரிப்பதில் பாகிஸ்தான் முடிந்திருக்கிறது. இதைக் குறித்து நான் வருந்துகிறேன். சுயநம்பிக்கையை இழந்த எந்த வகுப்பினரையும் வைத்திருப்பதால், ஒரு தேசம் பலவீனம் அடைந்து விடுகிறது. என் உண்ணாவிரதம் முஸ்லிம்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டதேயாகும். ஏனெனில், ஹிந்து, சீக்கிய சகோதரர்களை தைரியமாக எதிர்த்து நின்று முஸ்லிம்கள் சமாளிக்க வேண்டும் என்பதே எனது அபிப்பிராயமாகும். முஸ்லிம் லீகர்கள் ஒரே நாளில் நண்பர்களாகிவிட மாட்டார்கள் என்று சர்தார் பட்டேல் கூறியதைக் குறித்து, அவரைச் சிலர் குறை கூறுகிறார்கள். ஆனால், பெரும்

பாலான ஹிந்துக்களின் அபிப்பிராயம் அதுதான். முஸ்லிம் லீகர்கள், தங்களுடைய வாய்ப் பேச்சினால் அல்ல, நடத்தையின் மூலம் சர்தார் பட்டேல் கூறியது தவறு என நிரூபிக்க வேண்டும். இந்திய யூனியன் எல்லாச் சமூகத்தினருக்கும் சொந்தமானது. அவ்விதம் எல்லோரும் கருதுவதற்குக் குறைந்த எந்த நிலைக்காகவும் நான் உண்ணாவிரதத்தை முடிக்க முடியாது. எல்லாச் சமூகத்தினரும் தங்கள் உள்ளத்தில் உள்ள சைத்தானை அப்பால் தள்ளிவிட்டு, ஆண்டவனை அரியாசனத்தில் அமர்த்த வேண்டும்.

## ஹிந்துக்கள், சீக்கியர்களின் கடமை

"ஹிந்துக்கள், சீக்கியர்களின் கடமை என்ன? குருதேவரின் மிகப் பிரியமான கீதத்தை இப்போதுதான் கேட்டீர்கள். "உங்கள் அழைப்பிற்கு யாரும் செவி கொடுக்காவிடில், தனியே நடந்து செல்லுங்கள், தனியே நடந்து செல்லுங்கள்." இந்த கீதம் எனக்கு மிகவும் பிரியமானது. பாகிஸ்தானில் என்ன நேர்ந்தாலும், யூனியனில் உள்ள ஒரு முஸ்லிமிற்கு எதிராகக் கூட ஹிந்துக்களும், சீக்கியர்களும் தங்கள் விரலையும் தூக்காத அளவுக்குத் தைரியமாக இருக்க வேண்டும் என்று நான் கடைசி மூச்சு உள்ளவரையில் திரும்பத் திரும்பக் கூறுவேன். எவ்வளவு அதிகமாகக் கோப மூட்டப்பட்டாலும், ஹிந்துக்களும், சீக்கியர்களும் கோழைத்தனமான நடவடிக்கைகளில் இனி எக்காலத்திலும் ஈடுபடக் கூடாது.

## டில்லிக்குச் சோதனை

"டில்லியில் உண்மையான அமைதி ஏற்பட்டால், நான் உண்ணாவிரதத்தை முடித்துவிடுவேன். டில்லி இந்தியாவின் தலைநகரானதால், டில்லியின் அழிவையோ அல்லது வீழ்ச்சியையோ இந்தியாவின் அழிவாகவும் பாகிஸ்தானின் அழிவாகவுமே நான் கருதுவேன். எல்லா முஸ்லிம்களுக்கும், குண்டர்களுக்கெல்லாம் தலைவராகக் கருதப்படும் ஷஹீத் சுஹ்ரவார்திக்கும்கூட டில்லி பத்திரமான இடமாக இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். நிரூபிக்கப்பட்ட குண்டர்களையெல்லாம் கைது செய்துவிடவேண்டும். கல்கத்தாவில் அமைதி ஏற்படுவதற்கு ஷஹீத் சாகிப் மனப்பூர்வமாக உழைத்தார் என்பதற்கு நான் சாட்சியாக இருக்கிறேன். ஹிந்து வீடுகளை பலாத்காரமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்த முஸ்லிம்களையெல்லாம் அவர்தான் வெளியே இழுத்துத் தள்ளினார். நான் அவருடன்தான் வசித்துக்கொண்டிருந்தேன். அவர் பிரார்த்தனையில் கலந்து கொள்ளவும் விருப்பம் உடையவராக இருந்தார். ஆனால், அவர் கூட்டத்தில் அவமதிப்பிற்கு உள்ளாவதை நான் விரும்பவில்லை. ஹிந்துக்களில் மிக உயர்ந்தவரும் டில்லியில் எவ்வளவு பத்திரமாக இருப்பார்களோ அதுபோல், ஷஹீத் சாகிப் உள்பட ஒவ்வொரு முஸ்லிமும் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

"உண்மையான அமைதி ஏற்பட எவ்வளவு காலம் ஆகும் என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அதற்கு ஒரு நாள் சென்றாலும் அல்லது ஒரு மாதம் சென்றாலும் அது முக்கியமல்ல. ஆனால், அமைதி ஏற்படுவதற்கு முன் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி என்னை யாரும் மயக்கிவிட வேண்டாம். என் உயிரைக் காப்பாற்றுவது அல்ல, இந்தியாவையும் இந்தியாவின் கௌரவத்தையும் காப்பாற்றுவதே நோக்கமாக இருக்கவேண்டும். சமீப கால நிகழ்ச்சிகளால் இந்தியாவின் பெருமை குன்றியதுபோல் இனியும் குன்றாமலிருந்தாலே நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவேன்."

பிர்லா மாளிகை,
புது டில்லி, 13—1—'48

— 'ஹரிஜன்' – 18—1—1948

# 51

# என் கனவு

டாக்டர் ஆட்சேபித்தும்கூட இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்திற்கு நான் வந்திருக்கிறேன். ஆனால், நாளை முதல் நான் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு நடந்துவர இயலாமற் போகும். இன்று என் உடலில் பலம் இருக்கிறது. அந்த பலத்தைப் பாதுகாக்கும்படி டாக்டர் கூறியும்கூட அந்த பலத்தை நான் உபயோகித்துவிட்டேன். நான் இறைவனின் கையில் இருக்கிறேன். நான் உயிர் வாழ வேண்டும் என்பது அவரது விருப்பமாயின், நான் இறக்கமாட்டேன். கடவுளிடம் எனக்குள்ள நம்பிக்கை குன்றுவதை நான் விரும்பவில்லை.

## தந்திகளின் குவியல்

உள்நாட்டிலிருந்தும் தொலைவில் உள்ள வெளிநாடுகளிலிருந்தும் தந்திகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் சில மதிப்பிற்கு உரியவை என்பது என் அபிப்பிராயம். எனது தீர்மானத்திற்காக என்னை வாழ்த்தியிருப்பதுடன், கடவுளிடம் என்னை ஒப்படைத்திருப்பதாகவும் சில தந்திகள் கூறுகின்றன. உண்ணாவிரதத்தைக் கைவிடும்படியும், சாதி, மத பேதமின்றி அயலாருடன் தாங்கள் நட்புறவு கொள்ளுவதாக மற்றும் பலர் மிகவும் சிநேகமான முறையில் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் முதலிய மற்றும் பல சமூகத்தினரிடமிருந்தும் தந்திகள் வந்திருக்கின்றன. அவர்களில் சிலர், சங்கங்கள், கோஷ்டிகள் முதலியவற்றின் பிரதிநிதிகளாவர். எனக்கு உறுதிமொழி கூறியுள்ள அவர்கள் அதை மனப்பூர்வமாக நிறைவேற்றுவார்களாயின், உண்ணாவிரதம் முடிவடைவதை அவர்கள் துரிதப்படுத்தியவர்களாவார்கள். லாகூரில்

உள்ள ஸ்ரீமதி மிருதுளாபென் பாகிஸ்தான் அதிகாரிகளுடனும், சாதாரண முஸ்லிம்களுடனும் தொடர்பு வைத்துக் கொண்டுள்ளார். அவர் கூறியதாவது: "காந்திஜியின் உடல் நிலையைக் குறித்து மிகவும் கவலை கொண்டுள்ள நண்பர்கள் இங்கே இருக்கிறார்கள். ராஜீயக் கட்சிகளிலும், அரசாங்க உத்தியோகங்களிலும் உள்ளவர்கள் உள்பட பாகிஸ்தான் முஸ்லிம்கள் என்ன செய்ய வேண்டுமென காந்திஜி எதிர்பார்க்கிறார் என்பதையும் அறிய ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள்."

இதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். உண்ணாவிரதம் தன்னைத் தானே தூய்மைப்படுத்திக் கொள்ளும் ஒரு நடவடிக்கையாகும் என்பதைக் கூற விரும்புகிறேன். உண்ணாவிரதத்தின், லட்சியத்தில் அனுதாபம் உள்ள எல்லோரையும், அவர்கள் பாகிஸ்தான் அரசாங்கத்தில் இருந்தாலும் சரி, ராஜீயக் கட்சிகளிலோ அல்லது ஸ்தாபனங்களிலோ இருந்தாலும் சரி, இந்த சுயத் தூய்மை நடவடிக்கையில் பங்கு எடுத்துக் கொள்ளலாமென அழைக்கவே இந்த உண்ணாவிரதம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

## பாகிஸ்தானுக்கு ஒரு வார்த்தை

கராச்சியில் சீக்கியர்களை முஸ்லிம்கள் கோழைத்தனமாகத் தாக்கியதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நிரபராதிகளான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்; அவர்களுடைய உடைமைகள் கொள்ளையிடப்பட்டன; மற்றவர்களும் உயிருக்குப் பயந்து ஓடும்படி நேர்ந்திருக்கிறது. குஜராத்தில் அகதிகள் சென்ற ஒரு ரெயில் வண்டி தாக்கப்பட்டதாக இப்போது செய்தி வந்திருக்கிறது. எல்லைப்புற மாகாணத்திலிருந்து முஸ்லிம் அல்லாத அகதிகள் ரெயிலில் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் கொல்லப்பட்டனர். பெண்களையும் தூக்கிச் சென்றுவிட்டார்கள். அச்சம்பவம் என்னை மிகுந்த வேதனைக்கு உள்ளாக்குகிறது. அத்தகைய நிகழ்ச்சிகளை இந்தியா எவ்வளவு காலம் சகித்துக் கொண்டிருக்க முடியும்? ஹிந்துக்கள், சீக்கியர்களின் பொறுமை தகர்ந்துவிடாமல் நான் எவ்வளவு காலம் தடுத்து வைத்திருக்க முடியும்? எனவே, இந்த அவல நிலைமை நீடிக்காமல் பாகிஸ்தான் தடுத்தாக வேண்டும். பாகிஸ்தான் மக்கள் தங்களுடைய உள்ளங்களைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். ஹிந்துக்களும், சீக்கியர்களும் மீண்டும் பாகிஸ்தானுக்குத் திரும்பிவந்து வாழ்வது சாத்தியமாகும் வரையில் தாங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்றும் பாகிஸ்தான் மக்கள் பிரதிக்ஞை செய்துகொள்ள வேண்டும்.

இந்தியா முழுவதும் சுயத் தூய்மை முறையைக் கைக்கொள்ளுவதாக வைத்துக் கொள்ளுவோம். அப்போது பாகிஸ்தான் பாக் (தூய்மை) ஆகிவிடும். பின்னர் அங்கே பழைய தவறுகளை

யெல்லாம் மறந்துவிடுவார்கள்; பழைய வேற்றுமைகள் எல்லாம் புதைக்கப்பட்டுவிடும்; பாகிஸ்தானில் உள்ள மிகச் சிறிய மனிதருக்குக்கூட, ஜின்னு சாகிபிற்கு உள்ள அதே மதிப்பும், அவரது உயிருக்கும் உடைமைக்கும் உள்ள அதே பாதுகாப்பும் இருக்கும். அத்தகைய பாகிஸ்தான் ஒரு காலத்திலும் சாக முடியாது. அப்போதுதான், அதற்கு முன்பு அல்ல, நான் பாகிஸ்தான் ஒரு பாவம் என்று கூறுவதைக் குறித்து வருந்துவேன். காகிதத்திலோ, பாகிஸ்தான் பிரசங்கிகளின் பேச்சிலோ அல்ல, பாகிஸ்தானில் உள்ள ஒவ்வொரு முஸ்லிமின் தினசரி வாழ்க்கையிலும் பாகிஸ்தானைக் காண நான் விரும்புகிறேன். அப்படியாயின், பாகிஸ்தானுக்கும் தங்களுக்கும் பகைமை இருந்தது என்பதையே இந்திய யூனியன் மக்கள் மறந்துவிடுவார்கள். அப்போது இந்தியா பெருமையுடன் பாகிஸ்தானைப் பின்பற்றி நடக்கும். அவ்வமயம் நான் உயிருடன் இருந்தால், மக்களுக்கு நன்மை செய்வதில் பாகிஸ்தானை மிஞ்சும்படி நான் இந்தியாவைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அத்தகைய நிலைமை ஏற்பட வேண்டும் என்பதே இந்த உண்ணுவிரதத்தின் நோக்கமாகும். ஆனல், யூனியனில் உள்ள நாம் உற்சாகத்துடன் பாகிஸ்தானின் தீயவழிகளைப் பின்பற்ற முற்பட்டுவிட்டது வெட்கக்கேடாகும்.

என் இளம் வயதில், ராஜீய விஷயங்களைப் பற்றி எனக்கு எதுவுமே தெரிவதற்குமுன், பல்வேறு சமூகங்களுக்குள்ளும் இதய ஒற்றுமை ஏற்பட்டிருப்பதாக நான் கனவு கண்டேன். எனது அந்திய காலத்தில், இந்த ஜன்மத்திலேயே அத்தகைய கனவு நிறைவேறினல், அதைக் கண்டு ஒரு குழந்தையைப் போல் குதிப்பேன். ஒரு மனிதரின் பூரண ஆயுள் 125 வயதென்று பண்டை ரிஷிகள் நிர்ணயித்துள்ளனர். அந்தக் கனவு நிறைவேறினல், பூரண ஆயுள்வரை இந்த உலகில் வாழவேண்டும் என்ற ஆசை எனக்கு மீண்டும் ஏற்படும், அத்தகைய ஒருகனவு நிறைவேறுவதற்காக யார்தான் உயிரைத் தியாகம் செய்யமாட்டார்கள்? அப்போதுதான் நாம் உண்மையான சுயராஜ்யம் பெற்றவர்களாவோம். அப்போதுதான், சட்டபூர்வமாகவும் பூகோள ரீதியாகவும் நாம் இரு தேசங்களாக இருந்தாலும், தினசரி வாழ்க்கையில் நாம் தனித்தனியான தேசங்களைச் சேர்ந்தவர்கள் என யாரும் நினைக்கமாட்டார்கள். அத்தகைய நிலைமை ஏற்பட எவ்வளவு காலம் அவசியமோ அவ்வளவு காலம் வரையில் காத்திருக்க நான் தயாராக இருக்கிறேன். எனவே, இந்த உண்ணுவிரதத்தைக் கடவுளே கட்டளையிட்டிருக்கிறார் என்று நான் கூறுகிறேன். ஆகையால், அவர் விரும்பும்போதுதான் உண்ணுவிரதம் முடிவடையும். தெய்வத்தின் கட்டளையில் இதுவரை யாரும் குறுக்கிட்டதில்லை, இனி எக்காலத்திலும் எவரும் குறுக்கிடவும் முடியாது.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 14—1—'48

—'ஹரிஜன்' - 18—1—1948

# 52

# உண்ணாவிரதத்திற்குத் தகுதியான பதில்

பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜியின் செய்தியை வாசிக்குமுன், அவர் படுக்கையிலிருந்துகொண்டே ஒலிபெருக்கியின் மூலம் சில வார்த்தைகள் கூறினார். அவர் கூறியதாவது: "நான் இன்று உங்களிடம் பேசமுடியும் என்று எதிர்பார்க்கவில்லை. என் குரலில் நேற்றிருந்த சோர்வு இன்று இராததைக் குறித்து நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள். இதை நான் கடவுளின் அருள் என்பதைத் தவிர வேறு விதத்தில் விளக்க முடியாது. இதற்கு முன் நான் மேற்கொண்ட எந்த உண்ணாவிரதத்திலும், உண்ணாவிரதம் ஆரம்பித்த நான்காவது நாள் நான் இவ்வளவு தெம்பாக இருந்ததில்லை. சுயத் தூய்மை நடவடிக்கையில் நீங்கள் எல்லோரும் தொடர்ந்து பங்கு எடுத்துக்கொண்டு வந்தால், ஒரு வேளை நான் இறுதிவரையில் உங்களுடன் பேசுவதற்கு எனக்குப் பலம் இருக்கலாம். உண்ணாவிரதத்தை முடிக்க வேண்டும் என்ற அவசரம் எதுவும் எனக்கு இல்லை. அவசரம் விஷயங்களைக் கெடுத்துவிடும். நடவடிக்கைகள் அரைகுறையாக இருக்கும்போது, எல்லாம் சரியாகி விட்டதாக என்னிடம் வந்து யாரும் கூறுவதை நான் விரும்பவில்லை. டில்லியில் உண்மையாகவே அமைதி ஏற்பட்டுவிடுமாயின், அதன் பலன் தேசம் முழுவதும் எதிரொலிக்கும். பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் அமைதி நிலவினாலன்றி, நான் உயிர் வாழ விரும்பவில்லை."

பிரார்த்தனைக் கூட்டத்தில் வாசிக்கப்பட்ட காந்திஜியின் செய்தி பின்வருமாறு:

தீர்க்காலோசனையுடன் முடிவு செய்யப்பட்ட ஒரு கொள்கையை மாற்றுவதென்பது, பொறுப்பு வாய்ந்த எந்த மந்திரி சபைக்கும் எக்காலத்திலும் எளிதான விஷயம் அல்ல. அப்படியிருந்தும்கூட, எல்லா அம்சங்களிலும் பொறுப்பு வாய்ந்த நமது மந்திரி சபையினர் அதே தீர்க்காலோசனையுடனும், தாமதமின்றியும் தாங்கள் முடிவு கட்டிய விஷயத்தை மீண்டும் மாற்றிவிட்டார்கள்.* எனவே, காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலும்

* இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட நிதி ஒப்பந்தம் காஷ்மீர் பிரச்னை தீர்ந்தால்தான் அமலுக்குக் கொண்டு வரப்படும் என்று சுதந்திர இந்தியா மந்திரிசபை தீர்மானித்திருந்தது. இந்தத் தீர்மானம் பாகிஸ்தானுக்கு மிகுந்த எரிச்சலை உண்டாக்கியது. ஆனால், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நட்பு ஏற்படும்படிசெய்வதற்காகக் காந்திஜி மேற்கொண்ட உண்ணாவிரதத்தை முன்னிட்டும், பாகிஸ்தானுக்குத் தங்களுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காகவும் இந்தியா மந்திரி சபை தனது தீர்மானத்தை மாற்றி, பாகிஸ்தானின் விருப்பப்படியே நிதி ஒப்பந்தத்தை உடனே அமலுக்குக் கொண்டு வருவதாக அறிவித்து, அப்படியே செய்தது.

கராச்சியிலிருந்து அஸ்ஸாம் எல்லை வரையிலும் தேச மக்கள் யாவருடைய நன்றிக்கும் அவர்கள் உரியவர்களாகியிருக்கிறார்கள். நம்முடைய மந்திரி சபையைப் போன்ற பரந்த உள்ளம் படைத்த மந்திரி சபையே அத்தகைய சமிக்ஞையைக் காட்ட முடியுமென உலகத்தில் எல்லா நாடுகளும் பிரகடனம் செய்யும் என்பதை நான் அறிவேன். இது முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுத்து அவர்களைச் சமாதானப்படுத்தும் கொள்கை அல்ல. இது தம்மைத் தாமே சமாதானப்படுத்திக் கொள்ளும் கொள்கையாகும். மனித வர்க்கத்தின் பெரும் பகுதியினருக்குப் பிரதிநிதிகளாக இருக்கத் தகுதியுள்ள எந்த மந்திரி சபையும், யோசனையற்ற பொது மக்களின் கண்மூடித்தனமான கரகோஷத்தைப் பெறுவதற்காக மாத்திரம் எந்த முறையையும் கைக்கொண்டுவிட முடியாது. நாலாபுறங்களிலும் வெறி தாண்டவமாடி வருகையில், நமது தலை சிறந்த பிரதிநிதிகள் நிதானத்தை இழக்காமல் இருக்க வேண்டாமா? தங்கள் நிர்வாகத்தில் உள்ள அரசாங்கக் கப்பல் பாறையில் மோதிக்கொண்டு விடாமல் தைரியமாகத் தடுக்க வேண்டாமா? அவர்களை அவ்விதம் செய்யத் தூண்டிய நோக்கம் என்ன? எனது உண்ணுவிரதம்தான். அது மனப் போக்கையே அடியோடு மாற்றிவிட்டது. உண்ணுவிரதம் ஏற்பட்டிராவிடில், சட்டம் எதை அனுமதிக்கிறதோ, அவர்கள் எதைச் செய்ய வேண்டும் என்று சட்டம் கோருகிறதோ அதற்கு மேல் அவர்களால் சென்றிருக்க முடியாது. இந்திய அரசாங்கத்தின் தற்போதைய சமிக்ஞை, கலப்பற்ற அதன் நல்லெண்ணத்தைக் காட்டுவதாகும். அது, பாகிஸ்தான் அரசாங்கத்தைக் கௌரவமாக நடந்துகொள்ளும்படி செய்திருக்கிறது. காஷ்மீர் பிரச்னையை மாத்திரமல்ல, இரு நாடுகளுக்கும் உள்ள எல்லா வேற்றுமைகளையும் கௌரவமாகச் சமரசம் செய்து கொள்ளுவதற்கு அது வழி காட்டும்.

தற்போதுள்ள விரோதத்தின் ஸ்தானத்தில் நட்பு ஏற்பட வேண்டும். சட்டம், தரும நியாயத்திற்கு இடம் கொடுத்தாக வேண்டியிருக்கிறது. எனவே, இந்திய அரசாங்கத்தின் நடவடிக்கை முற்றிலும் நியாயம் என்பதை ஆட்சேபிப்பதற்கே இடமில்லை. இதற்கு முன்னுதாரணம் தேவையாயின், மெக்டொனால்டு தீர்ப்பு என்ற பிரபல தீர்ப்பைக் குறிப்பிடலாம்.* அந்தத் தீர்ப்பு, உண்மையில் பிரிட்டிஷ் மந்திரி சபை அங்கத்தினர்களின் ஏகோபித்த தீர்மானம் மாத்திரம் அல்ல, இரண்டாவது லண்டன் வட்ட மேஜை மகாநாட்டு அங்கத்தினர்களில் பெரும்பாலோருடைய தீர்மானமும் ஆகும். எரால்டா சிறையில் மேற்கொண்ட உண்ணுவிரதத்தின் பலனாக, அந்தத் தீர்ப்பு ஒரே நாளில் ரத்தாகியது.

இந்திய அரசாங்கத்தின் இந்த மகத்தான செயல் காரணமாக உண்ணுவிரதத்தை விட்டுவிடும்படி என்னைக் கேட்கிறார்

* மெக்டொனால்டு தீர்ப்பைப் பற்றிய குறிப்பை, மகாத்மா காந்தி நூல்கள் 7-ஆவது தொகுப்பு, 134-ஆம் பக்கத்தில் காண்க.

கள். விட்டுவிடும்படி என்னை நான் சமாதானப்படுத்திக் கொள்ளவே விரும்புகிறேன். மிகுந்த தியாக உணர்ச்சியுடன் தாங்களாக முன் வந்து என்னை மிக்க அக்கறையுடன் பரிசோதனை செய்து வரும் டாக்டர்களான நண்பர்களும் உண்ணாவிரதம் நீடிப்பதன் காரணமாக அதிகக் கவலை கொண்டிருக்கிறார்கள். டாக்டர்கள் எவ்வளவு நிபுணர்களாயினும், அவர்களைக் கலந்து கொண்ட பின் நான் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவில்லை. எனக்கு ஒரே ஒரு வழிகாட்டியும், சர்வாதிகாரியும், ஒரு காலத்திலும் தவறாத, சர்வ வல்லமை பொருந்திய கடவுளேயாவார். என்னுடைய இந்த மெலிந்த உடலுக்கு ஏதாவது உபயோகம் இருந்தால், டாக்டர்கள் எவ்வளவு எச்சரிக்கை செய்தாலும் அவர் இதைக் காப்பாற்றுவார். சாவைக் கண்டோ, அல்லது நான் உயிர் பிழைத்தாலும் பின்னர் என் உடலுக்கு ஏற்படக் கூடிய நிரந்தரமான தீங்கைக் குறித்தோ நான் அஞ்சவில்லை. தேசத்திற்கு என்னால் ஏதாவது உபயோகம் இருக்குமாயின், வைத்திய நண்பர்களின் எச்சரிக்கை, மக்கள் தங்களுக்கு உள்ள வேற்றுமைகளை உடனடியாகக் களையும்படி செய்யும் என்று கருதுகிறேன். மிகவும் கஷ்டப்பட்டு நாம் அடைந்துள்ள சுதந்திரத்தின் கீழ் நாம் தைரியசாலிகளான ஆடவர்களையும் பெண்களையும் போல், நமது விரோதிகள் என்று நாம் சந்தேகப்படுகிறவர்களையும் கூட நம்பவேண்டும். அவநம்பிக்கை கொள்ளுவதை தைரியசாலிகள் வெறுப்பார்கள். அதிருஷ்டவசமாக இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள மக்கள், உண்ணாவிரதத்திற்குத் தகுந்த பதில் இரு நாடுகளிலும் உள்ளவர்கள் பரஸ்பரம் முற்றிலும் நண்பர்களாக விளங்க வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். எல்லா சமூகங்களையும் சேர்ந்தவர்கள் யாதொரு பலமுமின்றி இரு நாடுகளுக்கும் இஷ்டப்படி செல்லுவது சாத்தியமாக இருக்க வேண்டும். இதற்கு குறைந்த எதையும் கொண்டு மக்கள் தம்மைத் தாமே தூய்மை செய்து கொண்டதாகக் கருத முடியாது. பலாபலன்களைக் கவனியாமல் நமது அரசாங்கம் மக்களின் பெயரால் தாராளமான ஒரு முறையைக் கைக்கொண்டிருக்கிறது. இதற்குப் பிரதியாக பாகிஸ்தானின் சமிக்ஞை என்ன? மனமிருந்தால், பல வழிகள் இருக்கின்றன. அங்கே மனம் இருக்கிறதா?

பிர்லா மாளிகை,
புது டில்லி, 16—1—'48

— 'ஹரிஜன்' – 25—1—1948

# 53

# உள்ளம் சுத்தமாக வேண்டும்

நான் முன்னர் கூறியதையே மறுபடியும் திருப்பிக் கூறுகிறேன். அதாவது உண்ணாவிரதத்தின் நிர்ப்பந்தத்திற்காக எதுவும் செய்வதாக இருக்கக் கூடாது. உண்ணாவிரதத்தின்

நிர்ப்பந்தத்திற்காகச் செய்யப்பட்ட காரியங்கள், உண்ணாவிரதம் நின்ற பின் சீர்குலைந்துவிட்டன என்பதை நான் முன்பே கூறியிருக்கிறேன். அத்தகைய நிலைமை ஏற்படுமாயின், அது மிகவும் கோரமானதாக இருக்கும். உள்ளம் சுத்தமாக வேண்டும் என்பதே தார்மிக உண்ணாவிரதத்தின் நோக்கமாகும். நேர்மையான விதத்தில் உள்ளம் சுத்தமடையுமாயின், சுத்தமடைவதற்குக் காரணமாக இருந்த விஷயம் அகன்றுவிட்டாலும் உள்ளத் தூய்மை மறைந்துவிடாது. சுவர்கள் சுத்தம் அடைவதற்காகச் சுண்ணம்பு அடிக்கிறோம். சிறிது காலத்திற்குப் பிறகு மறுபடியும் அழுக்கு போவதற்காக சுண்ணம்பு அடிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், உள்ளத் தூய்மை அப்படியல்ல. ஒருவன் உள்ளம் ஒரு தடவை தூய்மை அடைந்து விட்டால், அவன் மரணம் அடையும் வரையில் அது நிலைத்திருக்கிறது.

## பாகிஸ்தானிலிருந்தும் தந்திகள்

ராஜாக்களிடமிருந்தும், மகாராஜாக்களிடமிருந்தும், சாதாரண மக்களிடமிருந்தும் வரும் தந்திகள் தொடர்ந்து அதிகமாகி வருகின்றன. பாகிஸ்தானிலிருந்தும் தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நல்ல தந்திகள் என்றுதான் சொல்ல வேண்டும். பாகிஸ்தானில் உள்ளவர்களுக்கும், பாகிஸ்தானின் விதியை உருவாக்குவோருக்கும் நான் ஒரு நண்பன், அவர்களின் நலனை நாடுவோன் என்ற முறையில் ஒன்று கூற விரும்புகிறேன். அதாவது, அவர்களுடைய மனச்சாட்சி துரிதமாக வேலைசெய்யாவிடில், பாகிஸ்தான் பொறுப்பாளியாக உள்ள தவறுகளை அவர்கள் ஒப்புக்கொள்ளாவிடில், பாகிஸ்தானை நிரந்தரமானதாகச் செய்வதில் அவர்கள் தோல்வியடைந்துவிடுவார்கள்.

எனினும், அவர்கள் தாங்களாக விரும்பி இந்தியாவுடன் ஐக்கியம் அடைவதை நான் விரும்பவில்லை என்பது அவ்விதம் கூறுவதன் அர்த்தமல்ல. ஆயுத பலத்தைக்கொண்டு பாகிஸ்தானை மீண்டும் இந்தியாவுடன் ஐக்கியப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை எதிர்க்கவும், அதை அகற்றவும் நான் விரும்புகிறேன். உண்மையில் நான் மரணப் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும்போது, இந்த முரண்பாடான கருத்தை வெளியிடுவதாக யாரும் தப்பெண்ணம் கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன். பலவீனம் காரணமாகவும், அவர்களுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்த பயந்துகொண்டும் எனது உண்மையான கருத்தைப் பாகிஸ்தானிகளுக்கு எடுத்துக் கூற நான் தவறிவிடுவேனாயின், அவர்களிடத்திலும் எனக்குள்ளும் நான் உண்மையாக நடந்துகொண்டவனாக மாட்டேன். எனது மதிப்பீடு தவறாக இருக்குமாயின், அதை ஒளிவு மறைவின்றி எனக்கு எடுத்துக் கூறவேண்டும். அதைக் குறித்து எனக்குத் திருப்தி ஏற்படுமாயின், இங்கே நான் கூறியதை வாபஸ் செய்துகொள்ளுவதாக உறுதி கூறுகிறேன். எனக்குத் தெரிந்த வரையில், அந்தக் கருத்தில் ஆட்சேபணைக்கு இடம் இல்லை.

### உண்ணுவிரதத்தில் மகிழ்ச்சி

எனது உண்ணுவிரதத்தை எந்தவிதத்திலும் ராஜீய நோக்கம் கொண்டதென்று யாரும் எண்ணிவிட வேண்டாம். எனது மனச்சாட்சியின், கடமையின் கண்டிப்பான கட்டளைக்கு இணங்கியே நான் உண்ணுவிரதத்தை மேற்கொண்டுள்ளேன். அதற்கு என் மனவேதனையே காரணமாகும். டில்லியில் உள்ள எனது ஏராளமான முஸ்லிம் நண்பர்களே அதற்குச் சாட்சி யாவார்கள். அன்றாட நிகழ்ச்சிகளை எனக்கு அறிவிப்பதற்காக, அவர்களுடைய பிரதிநிதிகள் அநேகமாக தினந்தோறும் என்னைச் சந்திக்கிறார்கள். புனிதமான இச்சமயத்தில், என்னை உண்ணுவிரதத்தை நிறுத்தும்படி செய்வதற்காக, ராஜாக்களோ, மகாராஜாக்களோ, ஹிந்துக்களோ, சீக்கியர்களோ அல்லது மற்றவர்களோ என்னை ஏமாற்றுவார்களாயின், அவர்கள் தங்களுக்கோ அல்லது இந்தியாவிற்கோ நன்மை செய்தவராகமாட்டார்கள். ஆன்மிக பலத்திற்காக நான் உண்ணுவிரதம் இருக்கும்போது எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியைப்போல் வேறொரு சமயத்திலும் அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுவதில்லை என்பதை அவர்கள் அறியவேண்டும். இதற்குமுன் இருந்ததைக் காட்டிலும் அதிக ஆனந்தத்தை இந்த உண்ணுவிரதம் எனக்கு அளித்திருக்கிறது. தமது யாத்திரையில் சைத்தானை அடையும் பாதையிலிருந்து திரும்பி கடவுளை நோக்கிச் செல்லும் பாதையில் நிச்சயமாகத் தாம் செல்லத் தொடங்கியிருப்பதாக நேர்மையுடன் யார் கூற முடியுமோ அவரைத் தவிர வேறு எவரும் எனது இந்த ஆனந்த நிலையைக் கலைத்துவிட வேண்டாம்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 17—1—'48

—' ஹரிஜன் '— 25—1—1948

## 54

# சமூகப் பிரதிநிதிகளின் பிரதிக்ஞை

ஜனவரி மாதம் 18-ஆம் தேதி மத்தியானம் 12-45 மணிக்குக் காந்திஜி உண்ணுவிரதத்தை முடித்தார் என்ற செய்தியைக் கேட்டதும் இந்திய மக்கள் யாவரும் பெரும் கவலையிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சி அடைந்தனர். நாடு முழுவதையும் சூழ்ந்திருந்த அந்தகாரம் மறைந்ததுபோல் தோன்றியது. டில்லி நகரத்தில் உள்ள எல்லா ஸ்தாபனங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் அன்று காலையில் ராஜேந்திரப் பிரசாதின் தலைமையில் கூடினர். அகதிகளின் பிரதிநிதிகளும், டில்லியில் படுமோசமான வெறிக்கு இலக்கான கரோல் பாக், சப்ஜிமண்டி, பாகர் கஞ்ச் முதலிய மூன்று பகுதிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளும் மற்றவர்களுடன் கலந்துகொண்டார்கள். அவர்கள் யாவரும் பாபு

ராஜேந்திரப் பிரசாதின் ஜாகையில் கூடி, ஏழு ஷரத்துக்கள் அடங்கிய ஒரு பிரகடனத்தில் * கையெழுத்திட்டனர். உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்காகக் காந்திஜி விதித்த நிபந்தனைகள் அதில் அடங்கியிருந்தன. காந்திஜி பிரத்தியேகமாக வற்புறுத்தியதன்மீது பிரதிக்ஞை தஸ்தாவேஜு பர்ஸிய, தேவநாகரி லிபிகளிலும் தயாரிக்கப்பட்டது.

அக்கூட்டத்திற்கு மௌலானா அபுல் கலாம் ஆஸாதும், மேஜர் ஜெனரல் ஷா நவாஸ்கானும் வந்திருந்தனர். டில்லி முஸ்லிம்களின் சார்பிலும், ராஷ்டிரீய சேவா சங்கம், ஹிந்து மகாசபை முதலிய ஸ்தாபனங்களின் சார்பிலும், சீக்கிய ஸ்தாபனங்களின் சார்பிலும் நூறு பிரதிநிதிகளுக்குமேல், உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி காந்திஜியை வேண்டிக்கொள்ளுவதற்காக பிர்லா மாளிகையில் உள்ள அவரது அறையில் கூடியிருந்தனர். பாகிஸ்தான் ஹைகமிஷனரும் அங்கே வந்திருந்தார்.

---

* உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி காந்திஜியைக் கேட்டுக் கொள்ளுவதற்காகக் கூடிய டில்லி சமாதானக் கமிட்டியினர் கையெழுத்திட்ட உறுதிமொழிப் பிரகடனத்தின் விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

ஹிந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும், மற்ற சமூகங்களைச் சேர்ந்தவர்களும் மீண்டும் டில்லியில் சகோதரர்களைப் போலவும், முற்றிலும் அந்நியோன்னியமாகவும் வாழ வேண்டும் என்பதே எங்களுடைய இதயபூர்வமான ஆர்வம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். முஸ்லிம்களின் உயிரையும், உடைமைகளையும், மதத்தையும் நாங்கள் பாதுகாப்பதுடன், டில்லியில் நடந்த சம்பவங்கள் இனி மறுபடியும் நேரா என்றும் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுகிறோம்.

முந்திய ஆண்டுகளைப் போல் இந்த ஆண்டிலும் குவாஜா குதாப்-உத்-தீன் மஜாரில் வருடாந்திர விழா நடைபெறும் என்று நாங்கள் காந்திஜிக்கு உறுதி கூற விரும்புகிறோம்.

சப்ஜி மண்டி, கரோல் பாக், பாகர்கஞ்ச் முதலிய மற்றவிடங்களிலும் முஸ்லிம்கள் முன்பெல்லாம் யாதொரு பீதியுமின்றி நடமாடியது போல், இனியும் நடமாட முடியும்.

முஸ்லிம்கள் விட்டுச் சென்ற, இப்போது ஹிந்துக்கள், சீக்கியர்களின் வசத்தில் இருந்துவரும் மசூதிகள் முஸ்லிம்களிடம் திருப்பிக் கொடுத்துவிடப்படும். முஸ்லிம்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களை வேறு யாரும் பலாத்காரமாக ஆக்கிரமித்துக்கொள்ள மாட்டார்கள்.

இங்கேயிருந்து வேறிடங்களுக்கு வெளியேறிய முஸ்லிம்கள் மீண்டும் டில்லிக்குத் திரும்பி வர விரும்பினால், அவர்கள் திரும்பி வருவதை நாங்கள் ஆட்சேபிக்க மாட்டோம். முஸ்லிம்கள் முன்னரைப் போலவே தங்கள் வியாபாரங்களை நடத்திச் செல்ல யாதொரு தடையும் இராது.

இவையெல்லாம், போலீஸ் அல்லது ராணுவத்தின் உதவியினால் அல்ல, எங்களுடைய சொந்த முயற்சியினால் நிறைவேற்றப்படும் என்று உறுதி கூறுகிறோம்.

எனவே, எங்கள் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து உண்ணாவிரதத்தைக் கைவிடும்படியும், இது வரையில் எங்களை நடத்தி வந்ததுபோல் இனியும் நடத்தி வர வேண்டும் என்றும் மகாத்மாஜியை நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம்.

அங்கே எல்லோரும் கூடியிருக்கும் காரணத்தை பாபு ராஜேந்திரப் பிரசாத் காந்திஜியிடம் விவரித்துக் கூறினர். தங்கள் மனத்தில் இருந்த சந்தேகங்கள் தீர்ந்த பிறகே, எல்லோரும் பிரதிக்ஞையில் கையெழுத்திட்டதாகக் காந்திஜிக்கு அறிவித்தார். தாங்கள் பிரதிக்ஞையை நிறைவேற்ற முடியும் என்பதில் எல்லோருக்கும் பூரண நம்பிக்கை இருப்பதாகவும், அவர்கள் தங்கள் முழுப் பொறுப்பையும் நன்கு உணர்ந்திருப்பதாகவும் ராஜேந்திர பாபு காந்திஜிக்கு எடுத்துக் கூறினர். இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளும் அந்த தஸ்தாவேஜியில் கையெழுத்திட்டனர். பிரதிக்ஞையை நிறைவேற்ற பல கமிட்டிகளை நியமிக்கத் தீர்மானித்திருப்பதாகவும், எனவே, காந்திஜி தமது உண்ணாவிரதத்தை முடித்துவிடுவார் என்று தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

அன்று காலை நிகழ்ந்த, மனத்தை உருக்கிய சில காட்சிகளை ஸ்ரீ தேசபந்து குப்தா காந்திஜிக்கு விவரித்துக் கூறினர். அன்று காலை சப்ஜிமண்டியில் 150 முஸ்லிம்கள் அடங்கிய ஓர் ஊர்வலம் நடந்தது. அப்போது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் அன்புடன் தழுவிக்கொண்டார்கள். முஸ்லிம்களை அப்பிரதேசத்தில் உள்ள ஹிந்துக்கள் சந்தோஷ ஆரவாரத்துடன் வரவேற்று, அவர்களுக்குப் பழங்களும் பலகாரங்களும் வழங்கினர். ஸ்ரீ குப்தாவிடமிருந்து இவ்விவரங்களையெல்லாம் கேட்ட காந்திஜி கூறியதாவது :

"நீங்கள் கூறிய விவரங்கள் என் மனத்தை மிகவும் உருக்கிவிட்டன. நான் கேட்டதையெல்லாம் நீங்கள் கொடுத்துவிட்டீர்கள். டில்லியில் வகுப்பு ஒற்றுமையும் அமைதியும் நிலவும்படி செய்வது மாத்திரமே தங்களுடைய பொறுப்பு என்றும், மற்ற விடங்களில் என்ன நேர்ந்தாலும் அதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் நீங்கள் நினைத்தால், உங்களுடைய உத்தரவாதம் கவைக்கு உதவாததாகிவிடும். பின்னர், நான் உண்ணாவிரதத்தைக் கைவிட்டது மாபெரும் தவறு என்பதை நான் உணரும்படி நேரும்; அது பெரும் தவறு என்பதை நீங்களும் ஒரு நாள் உணர்ந்துகொள்ளுவீர்கள். உதாரணமாக, அலாகாபாத்தில் நிகழ்ந்துள்ள சம்பவங்களைக் குறிப்பிடுகிறேன். அவை பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. ஏழு ஷரத்துப் பிரதிக்ஞையில் ராஷ்டிரீய சேவா சங்கமும், ஹிந்து மகாசபைப் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். பிரதிக்ஞைப் பத்திரத்தில் அடங்கியுள்ள நிபந்தனைகளை அவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளுவதாயின், டில்லியைத் தவிர மற்ற இடங்களிலும் பீறிட்டெழும் பைத்தியக்காரத்தனமான செயல்களைக் குறித்து அவர்கள் அசட்டையாக இருக்க முடியாது. அவர்கள் அசட்டை செய்தால், அது கடவுளை ஏமாற்றுவதாகும். டில்லி இந்தியாவின் இருதயமாக இருக்கிறது. இங்கே கூடியுள்ள பிரதிநிதிகள் இந்நகரின் சிறந்த மனிதர்கள் ஆவர். ஹிந்துக்கள், சீக்

கியர்கள், முஸ்லிம்கள் யாவரும் சகோதரர்கள் என்பதை இந்தியா முழுவதும் உணரும்படி செய்ய உங்களால் முடியவில்லையாயின், பின்னர் அது இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளுக்கும் மோசமான எதிர்காலத்தையே குறிப்பதாகும். அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு வந்தால், ஹிந்துஸ்தானத்தின் கதி என்னவாகும்?"

இச்சந்தர்ப்பத்தில் காந்திஜிக்கு உணர்ச்சிப் பெருக்கினால் சிறிது நேரம் பேச முடியவில்லை. மெதுவாக அவர் மேற்கண்டபடி கூறியதை நானும், ஒரு பகுதியை டாக்டர் சுசீலா நய்யாரும் உரக்க எடுத்துக் கூறினோம்.

சிறிது நேரம் கழித்து காந்திஜி மீண்டும் தொடர்ந்து பேசியதாவது:

"உங்களுடைய இதயங்களை நன்றாகச் சோதித்துப் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில், இப்போது நீங்கள் கைக்கொள்ளும் முறையினால். பிறகு நீங்கள் வருந்தும்படி நேர்ந்துவிடக் கூடாது அல்லவா? இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் இணையற்ற தைரியத்தைக் காட்ட வேண்டும். உங்கள் பிரதிக்ஞையில் அடங்கியுள்ள பொறுப்புகளை நீங்கள் தெளிவாக உணர வேண்டும். டில்லியில் நீங்கள் என்ன சாதித்திருக்கிறீர்களோ அது, இந்தியா முழுவதும் சாதிக்கப்பட வேண்டும் என்பதுதான் அதன் அர்த்தமாகும். எனினும், அந்த லட்சியத்தை ஒரே நாளில் நிறைவேற்றிவிட முடியும் என்பது அதன் கருத்து அல்ல. ஆனால், அதன் பொருள் இதுதான்: இதுவரை உங்களுடைய முகத்தை நீங்கள் சைத்தானை நோக்கித் திருப்பிக்கொண்டிருந்தீர்கள்; இப்போது அதைக் கடவுளை நோக்கித் திருப்பிக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறீர்கள். உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள விஷயங்களை நீங்கள் மனப்பூர்வமாக அங்கீகரிக்காவிட்டாலோ அல்லது அவை உங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டவை என்று நீங்கள் எண்ணினாலோ, அவ்விதம் நீங்கள் ஒளிவு மறைவின்றி என்னிடம் கூறிவிட வேண்டும்.

"ஹிந்துஸ்தான் ஹிந்துக்களுக்கு மாத்திரமே சொந்தமானது; அதில் முஸ்லிம்களுக்கு இடமில்லை; அது போலவே பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கு மாத்திரமே சொந்தமானது; அதில் ஹிந்துக்கள், சீக்கியர்கள் முதலியோருக்கு இடம் இருக்க முடியாது என்றெல்லாம் நீங்கள் கருதினால் அதைக் காட்டிலும் பெரிய தவறு இருக்க முடியாது. நான் கூறியுள்ள யோசனையின்படி, டில்லியில் எல்லாம் சரியாகி விட்டால், பாகிஸ்தானில் நிலைமை சீர்பட்டுவிடும் என்பதை அகதிகள் அறிந்துகொள்ள வேண்டும். நான் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவோ அல்லது என்னை நானே ஏமாற்றிக் கொண்டு அவசரப்பட்டு உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாகவோ நான் பின்னர் அறிந்து கொண்டால், மற்றொரு உண்ணாவிரதம் இருப்பதற்குத் தயங்குகிறவன் நான் அல்ல என்பதை உங்களுக்கு

ஞாபகமூட்டுகிறேன். எனவே, நீங்கள் ஜாக்கிரதையாகவும், நூறு சத விகிதம் அந்தரங்க சுத்தியுடனும் நடந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் இங்கே வந்து என்னை அடிக்கடி சந்தித்து வருகிறார்கள். நான் உண்ணாவிரதத்தைக் கைவிடும் அளவுக்கு டில்லியில் நிலைமை சீர்பட்டுவிட்டது என்பதில் முஸ்லிம்களுக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கிறதா என்பதைக் கூறும்படி முஸ்லிம் களின் பிரதிநிதிகளை அழைத்திருக்கிறேன்."

காந்திஜி பிறகு முஸ்லிம்களுக்கு என்று சில வார்த்தைகள் கூறினார். அவர் பேசியதாவது: "இந்தியாவைத் தங்களுடைய நாடாக முஸ்லிம்கள் கருதவில்லை என்ற சந்தேகம் எழுந்திருக் கிறது. அதற்கு ஆதாரம் உண்டா என உங்களைக் கேட்கி றேன். முஸ்லிம்கள் வேறு வழி இல்லாததால் ஹிந்துக்களி டையே வசித்து வருகிறார்கள் என்றும், எனினும் ஒரு நாள் அவர் கள் பிரிந்து போய்விடுவார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்தச் சந்தேகம் ஆதாரமற்றது என்றே நம்புகிறேன். அது போலவே, முஸ்லிம்களை யவனர்கள் (காட்டுமிராண்டிகள்) என்றோ அல்லது கடவுளை அறிய முடியாத அசுரர்கள் என்றோ ஒரு ஹிந்து கருது வாராயின், அவர் படுமோசமான அபசாரம் செய்தவராகிறார். இப்போது நீங்கள் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தத்தில் அதற்கு இடம் இருக்க முடியாது.

"பாட்னாவில் ஒரு முஸ்லிம் நண்பர் எனக்கு அன்புடன் ஒரு புத்தகத்தைப் பரிசளித்தார். குரானில் கூறியுள்ளபடி காபிர் கள் (ஹிந்துக்கள்) விஷப் பாம்புகளைவிட மோசமானவர்கள் என் றும், அவர்களை ஒழித்துவிட வேண்டியதுதான் நியாயமென்றும் அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்: அவர்களை ஒழிக்க எத்தகைய பலாத்காரத்தைக் கைக்கொண்டாலும், எவ் வளவு மோசடி செய்தாலும் பாவமில்லை என்பது மாத்திரமல்ல, ஆண்டவன் அதை மகத்துவம் வாய்ந்த ஒரு செயலாகக் கருது வார் என்றும் அந்த ஆசிரியர் கூறுகிறார். கடவுளிடம் பயமுள்ள எந்த முஸ்லிமும் அக்கொள்கையை ஆதரிக்கவோ அல்லது அக் கொள்கை விஷயத்தில் ரகசியமாக அனுதாபம் கொள்ளவோ முடியாது என்பது எனது நிச்சயமான அபிப்பிராயமாகும். ஹிந் துக்கள் விக்கிரக ஆராதனை செய்பவர்கள் என்று சிலர் குறை கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் பூஜிப்பது கல் உருவத்தை அல்ல, அதற்குள் இருக்கும் இறைவனையே. அவனின்றி ஓர் அணுவும் இந்த உலகத்தில் இல்லை அல்லவா? ஒரு விக்கிரகத்தில் பக்தர் ஒருவர் கடவுளைக் காண்பாராயின், அது எவரும் ஏளனம் செய்வதற்குரிய விஷயம் அல்ல. அவரது நம்பிக்கையை வீண் மயக்கம் என்றே வைத்துக்கொண்டாலும்கூட, அது அவரைத் தான் மயக்குகிறது, வேறு யாரையும் இல்லை. மற்றவர்களின் மதக் கொள்கைகளையும் வழக்கங்களையும் அறிந்து கொள்ளுவதற் குப் பெருந்தன்மையும் பரந்த நோக்கமும் வேண்டும். குரானையோ அல்லது கிரந்த் சாகிபையோ (சீக்கியரின் வேத நூல்) கடவுளாக நீங்கள் கருதினால், அதெல்லாம் ஒன்றுதான்.

"உங்கள் பிரதிக்ஞையில் உள்ள உட்கருத்துக்களை நீங்கள் பூரணமாக அங்கீகரித்தால், என்னை நீங்கள் டில்லியிலிருந்து விடுதலை செய்துவிட வேண்டும். அப்போதுதான் என் இஷ்டப்படி நான் பாகிஸ்தானுக்குச் செல்ல சௌகரியமாக இருக்கும். நான் இங்கே இராதபோது, பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகள் திரும்பத் தங்களுடைய வீடுவாசல்களுக்குச் செல்ல விரும்பினால், அதை நீங்கள் வரவேற்க வேண்டும். இந்தியாவில் உள்ள கைத்தொழில் நிபுணர்களான முஸ்லிம்களை ஹிந்துக்கள் இழக்க விரும்பாதது போலவே, பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்களும் தொழில் துறைகளில் நிபுணர்களான ஹிந்துக்களை இழக்க விரும்பவில்லை. அவ்விதம் இழப்பதால் இரு சாராருக்கும் நஷ்டமாகும். அவ்வாறு நீடிப்பதை புத்தி சுவாதீனம் உள்ள எவரும் விரும்பமாட்டார்கள்.

"எனவே, ஆராய்ச்சி தீபத்தை உள்ளத்தை நோக்கித் திருப்பும்படி உங்களை மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் கூறியதை உங்கள் உள்ளம் அங்கீகரிக்காவிடில், உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி என்னைக் கேட்பதன் மூலம் நீங்கள் உங்களையோ அல்லது பிறரையோ ஏமாற்றுகிறீர்கள்."

பிறகு மௌலானா அபுல் கலாம் ஆஸாத் பேசுகையில், காந்திஜி குறிப்பிட்ட முஸ்லிம் நண்பரின் கூற்று இஸ்லாமையே அவதூறு செய்வதாகும் என்றார். சாதி, மத, வருண பேதமின்றி மனித வர்க்கத்தைச் சேர்ந்த யாவரும் சகோதரர்கள் என்று குரானில் கூறப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டினார். முஸ்லிம் நண்பரின் கூற்று இஸ்லாமின் உபதேசங்களுக்கே முற்றிலும் முரணாகும் என்றும் குறிப்பிட்டார்.

மௌலானா ஹிப்சூர் ரஹ்மான் சாகிப் பேசுகையில், தேசீய முஸ்லிம்கள் இந்தியாவையே தாய்நாடாகக் கொண்டிருப்பதாயும், இந்தியப் பிரஜைகளாக இந்தியாவில் யாருடைய தயவையும் நாடாமல் சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும் வாழவே தாங்கள் விரும்புவதாகவும், அவ்விதம் வாழ விரும்பாத முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்குப் போய்விடலாம் என்றும் கூறினார். இந்தியா தாக்கப்பட்டால், முஸ்லிம்கள் அதைத் தங்களுடைய தேசமாகக் கருதி கடைசி முஸ்லிம் வரையில் எதிர்த்து நின்று பாதுகாப்பார்கள் என்றும் கர்ஜித்தார்.

பிறகு பல்வேறு ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், உறுதிமொழிப் பத்திரத்தில் கண்டுள்ள ஷரத்துக்களைத் தாங்கள் நிறைவேற்றுவதாக ஏகமனதாக உறுதி கூறினார்கள்.

இவ்விதம் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று எல்லோரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, காந்திஜியும் அதற்குச் சம்மதித்தார். பின்னர் ஜப்பானிய, முஸ்லிம், பார்சி வேத நூல்களிலிருந்து பிரார்த்தனை கீதங்கள் பாடப்பட்டன.

"பொய்யிலிருந்து உண்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், மரணத்திலிருந்து அழிவின்மைக்கும் எனக்கு வழிகாட்டிச் செல்லுக" என்ற மந்திரத்தை ஜபித்த பின், ராம பஜனை நடந்தது. பிறகு,மௌலானா சாகிப் ஒருடம்ளர் பழரசத்தைக் காந்திஜியிடம் கொடுத்தார். அங்கே கூடியிருந்த எல்லோருக்கும் பழங்கள் வழங்கப்பட்டு, அவர்கள் அவற்றைச் சாப்பிட்ட பின் காந்திஜியின் உண்ணாவிரதம் முடிவடைந்தது.

(ஸ்ரீ பியாரிலால் எழுதியது)

புது டில்லி, 18—1—'48 —'ஹரிஜன்' - 25—1—1948

# 55

# சந்தோஷ தினம்

ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5-20 மணிக்குக் காந்திஜி ஒலிபெருக்கியின் மூலம் பேசியதாவது:

எனக்கும், இங்கே கூடியுள்ள எல்லோருக்கும் இது ஒரு சந்தோஷ தினமாகும். உங்கள் அன்பு காரணமாக, குரு கோவிந்த சிங்கின் ஜெயந்தி தினமான இந்தச் சுப தினத்தில் நான் உண்ணாவிரதத்தை முடிப்பது சாத்தியமானதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். டில்லியில் வாழும் மக்கள், பாகிஸ்தான் அகதிகள், அரசாங்கம், நிர்வாக அதிகாரிகள் முதலிய யாவரும், உண்ணாவிரதம் ஆரம்பமானதிலிருந்து என் மீது அன்பைச் சொரிந்து வந்தார்கள். இதை நான் ஒருபோதும் மறக்க முடியாது. கல்கத்தாவிலும் நான் அதே அன்புக்குப் பாத்திரமானேன். கல்கத்தாவில் அமைதி ஏற்படுவதற்கு ஷஹீத் சாகிப் செய்த உதவியை நான் மறக்க முடியாது. அவரது உதவியின்றேல், நான் கல்கத்தாவில் தங்கியிருக்கமாட்டேன். ஷஹீத் சாகிபின் நல்லெண்ணத்தில் இன்னும் மக்களுக்குச் சந்தேகம் இருந்து வருகிறது. அவர்கள் சென்றதை மறந்துவிட்டு, எல்லோருடனும் நட்பு உணர்ச்சி கொள்ள வேண்டிய கடமையைக் கற்றுக்கொள்ள வேண்டும். கோடிக்கணக்கான முஸ்லிம்களில் எல்லோரும் தேவர்களாக இருக்க முடியாது. ஹிந்துக்களும் சீக்கியர்களும்கூட அப்படித்தான். எல்லா சமூகங்களிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கிறார்கள். அவர்களிடையே உள்ள குற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எனப்படுவோரிடத்தில்கூட நாம் நட்பு உணர்ச்சியின்றி இருக்கலாமா?

முஸ்லிம்கள் ஏராளமானவர்கள் அடங்கிய ஒரு சமூகமாகும். அவர்கள் உலகம் முழுவதும் பரவலாக இருக்கிறார்கள். அகில உலகத்துடனும் நட்பு உரிமை கொண்டாடும் நாம், முஸ்லிம்களுடன் ஏன் நண்டர்களாக இருக்கக்கூடாது? நான் ஒரு

ஜோசியன் அல்ல. எனினும், கடவுள் எனக்கு அறிவைக் கொடுத்திருக்கிறார். ஏதோ காரணத்தினால் நாம் இந்தியாவில் உள்ள முஸ்லிம்களுடைய நண்பர்களாக இருக்க முடியாவிட்டால், நாம் உலகத்தில் உள்ள முஸ்லிம்களையே விரோதித்துக் கொண்டவர்கள் ஆவோம்; அதன் விளைவாக இந்தியாவையும் நாம் இழந்து விடுவோம் என்பதை அறிந்துகொள்ளும் சக்தியையும் கடவுள் எனக்குக் கொடுத்திருக்கிறார். அவ்விதமாயின், இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளிலும் அந்நியரின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடும்.

ஏராளமான ஆடவர்களும் பெண்களும், எனக்கு வாழ்த்துக்களும் ஆசிகளும் அனுப்பியிருக்கிறார்கள். டில்லியில் வசிக்கும் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பார்சிகள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் முதலிய மற்றவர்களும் சகோதரர்களைப் போல் வாழ்வதாகவும், இனி சண்டை போடுவதில்லை என்றும் எனக்கு உறுதி கூறியிருக்கிறார்கள். இது அற்ப விஷயம் அல்ல. அவர்களிடம் இந்த மன நிலை தொடர்ந்து இருக்குமாயின், இந்தியாவிலும், பிறகு பாகிஸ்தானிலும் அமைதி ஏற்பட்டுத்தான் தீரும். இது ஒருவர் செய்யக்கூடிய காரியமல்ல. இளைஞர்கள், வயோதிகர்கள், ஆண்கள், பெண்கள் எல்லோரும் மனப்பூர்வமாக ஒத்துழைத்துச் செய்ய வேண்டிய முயற்சியாகும். இல்லாவிடில், நான் உண்ணாவிரதத்தை நிறுத்தியது சரியல்ல என்றாகிவிடும். இந்தியாவில் அமைதி ஏற்பட்டால், அது உலகத்திலேயே அமைதி உண்டாவதற்கு வழிகாட்டியதாகும். இதைத் தவிர, வேறு எக்காரணத்திற்காகவும் நான் உயிர் வாழ விரும்பவில்லை.

இனி எக்காலத்திலும் சச்சரவிட்டுக்கொள்ளுவதில்லை என்று ஹிந்துக்கள் தீர்மானம் செய்துகொள்ளுவார்களாக. குரானை வாசிக்கும்படி ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும், கீதையையும் கிரந்த் சாகிபையும் வாசிக்கும்படி முஸ்லிம்களுக்கும் நான் ஆலோசனை கூறுகிறேன். அவர்கள் தாங்கள் வாசித்தவற்றின் பொருளை அறிந்துகொண்டு, எல்லா மதங்களையும் சமமாகக் கருத வேண்டும். பாகிஸ்தானில் ஹிந்துக்களும் சீக்கியர்களும் பத்திரமாக இருக்கும்படியான நிலைமை ஏற்பட வேண்டும்; பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகள் கௌரவத்துடனும், கண்ணியத்துடனும் திரும்பித் தங்கள் வீடு வாசல்களுக்குச் செல்ல வழி பிறக்க வேண்டும்; பாகிஸ்தானுக்குச் சென்றுள்ள முஸ்லிம்களும் இந்தியாவில் உள்ள தங்கள் வீடு வாசல்களுக்குக் கௌரவத்துடன் திரும்பி வர வழி பிறக்க வேண்டும். அவ்வித நிலைமை ஏற்பட்டாலன்றி, ஒரு காலத்திலும் நான் அமைதியாக வாழ முடியாது.

பிரார்த்தனைக் கூட்டத்தில் வாசிப்பதற்காக எழுதி அனுப்பியிருந்த செய்தியில் காந்திஜி குறிப்பிட்டிருந்ததாவது:

சத்தியத்தின் பெயரிலேயே நான் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தேன். சத்தியத்தின் பெயர் கடவுளே. உண்மையின் ஜீவ

சக்தி இன்றேல், கடவுள் இல்லை. கடவுளின் பெயராலேயே நாம் பொய்கள் கூறியுள்ளோம்; மக்களைப் படுகொலை செய்துள்ளோம். கொலையுண்ட மக்கள் நிரபராதிகளா அல்லது குற்றவாளிகளா, ஆடவர்களா அல்லது பெண்களா, பாலர்களா அல்லது பச்சிளம் குழந்தைகளா என்பதைப் பற்றிக்கூட நாம் கவலைப்படவில்லை. பெண்களைத் தூக்கிச் செல்லுதல், பலாத்காரமாக மத மாற்றம் செய்தல் முதலிய அக்கிரமங்களிலும் நாம் வெட்கமின்றி ஈடுபட்டோம். இவற்றையெல்லாம் சத்தியத்தின் பெயரால் யாராவது செய்தாரா என்பது எனக்குத் தெரியாது. சத்தியத்தின் பெயரைக் கூறிக்கொண்டே நான் உண்ணாவிரதத்தை முடித்துள்ளேன்.

நமது மக்களின் வேதனை சகிக்க முடியாதது. டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் இங்கே நூற்றுக்கு மேற்பட்டவர்களை அழைத்து வந்தார். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், ஹிந்து மகாசபை, ராஷ்டிரீய சேவா சங்கம், பஞ்சாப், எல்லைப்புற மாகாணம், சிந்து முதலிய பிரதேசங்களைச் சேர்ந்த அகதிகள் முதலியோரின் பிரதிநிதிகளே அவர்கள். பாகிஸ்தான் ஹைகமிஷனர், டில்லி பிரதம கமிஷனர், இந்திய தேசீயப் படையின் (ஆஸாத் ஹிந்த் பௌஜ்) பிரதிநிதியான ஜெனரல் ஷாநவாஸ்கான் முதலியோரும் அவர்களிடையே இருந்தனர். ஜவாஹர்லால் நேரு சிலையைப்போல் உட்கார்ந்திருந்தார். மௌலானா சாகிபும்கூட இருந்தார். இந்தப் பிரதிநிதிகள் எல்லோரும் கையெழுத்திட்ட ஹிந்துஸ்தானி தஸ்தாவேஜியை டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் வாசித்தார். உண்ணாவிரதத்தை முடித்து தங்களுடைய வேதனையைத் தீர்க்க வேண்டும் என்று அதில் என்னைக் கேட்டுக்கொண்டிருந்தனர். அவ்விதமே வற்புறுத்தி, பாகிஸ்தானிலிருந்தும் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் தந்தி மேல் தந்திகள் வந்து குவிந்துகொண்டிருந்தன. இந்த நண்பர்கள் எல்லோருடைய யோசனையையும் நான் எதிர்த்து நிற்க முடியவில்லை. என்ன நேர்ந்தாலும், ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், யூதர்கள் முதலியோரிடையே பூரண நட்பு நிலவும் என்றும், அந்த நட்பு முறிந்து விடாது என்றும் அவர்கள் கூறிய உறுதிமொழியை நான் நம்பாமல் இருக்க முடியவில்லை. அந்த நட்பை முறிப்பது தேசத்தையே முறிப்பதாகும்.

நான் இதை எழுதும்போதே, எனக்கு ஆறுதல் கூறி தந்திகள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. மானிட வர்க்கத்திற்குத் தொண்டு புரிவதற்குப் போதிய புத்தி சுவாதீனத்தையும், உடல் தகுதியையும் எனக்குக் கடவுள் அருள்புரிய வேண்டுமென விரும்புகிறேன். இன்று ஆண்டவன் சாட்சியாக அவர்கள் செய்த பிரதிக்ஞை நிறைவேற்றப்படுமாயின், நான் பூரண ஆயுள் வரை வாழ்ந்து மனித வர்க்கத்திற்குத் தொண்டு புரிய வேண்டும் என்று நான் மிகுந்த ஆர்வத்துடன் கடவுளைப் பிரார்த்திப்பதற்கு இரட்டிப்பு பலம் ஏற்படுமென உறுதி கூறு

கிறேன். பூரண ஆயுள் என்பது 125 வருடங்கள் என்று நிபுணர்கள் கருதுகிருர்கள்; 133 வருடங்கள் என்றும் சிலர் கூறுகிருர்கள். ஹிந்து மகாசபை, ராஷ்டிரீய சேவா சங்கத் தலைவர்கள் உள்பட டில்லி பிரஜைகள் யாவருடைய நல்லெண்ணத்தினுலும், எனது பிரதிக்ஞை எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமாக நிறைவேறியிருக்கிறது. நேற்றிலிருந்து ஆயிரக்கணக்கான அகதிகளும் மற்றவர்களும் உண்ணுவிரதம் இருந்து வரும்போது, முடிவு வேறுவிதமாக இருக்க முடியாது. உலகம் முழுவதுமிருந்தும் தந்திமூலம் ஆசிச் செய்திகள் வந்துள்ளன. எனது இந்த நடவடிக்கையில் கடவுளின் அருள் இருக்கிறது என்பதற்கு இதைக் காட்டிலும் சிறந்த அறிகுறி வேறு என்ன இருக்க முடியும்?

இந்தியாவில் சமூக ஒற்றுமை ஏற்பட்டால், அதைத் தொடர்ந்து, தாஞகவே பாகிஸ்தானிலும் சமூக ஒற்றுமை ஏற்பட்டுவிடும். இந்தியாவில் இருள் நிலவும்போது, பாகிஸ்தானில் ஒளியை எதிர்பார்ப்பது மடத்தனமாகும். இந்தியாவில் சந்தேகத்திற்கு இடமின்றி இருள் அகற்றப்பட்டுவிட்டால், பாகிஸ்தானிலும் இருள் அகன்றுவிடும். அதற்கான அறிகுறிகளும் இல்லாமலில்லை. பாகிஸ்தானிலிருந்தும் ஏராளமான செய்திகள் வந்துள்ளன. அவற்றில் ஒன்றுகூட எதிர்ப்பில்லை. சென்ற ஆறு நாட்களாக வெளிப்படையாக நமக்கு வழிகாட்டியதுபோல், சத்தியமாகிய கடவுள் இனியும் நமக்கு வழிகாட்டுவாராக.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 18–1–'48

—'ஹரிஜன்' - 25–1–1948

# 56

# டில்லி உண்மையாக நடந்து கொண்டால்...

ஒரு மகத்தான காரியத்தை டில்லி செய்திருக்கிறது. சமாதானப் பிரதிக்ஞையில் கையெழுத்திட்டிருப்பவர்கள், சத்தியத்தின் உருவிலான கடவுள் சாட்சியாகக் கையெழுத்திட்டிருக்கிருர்கள் என்றே நம்புகிறேன். ஹிந்து மகாசபை அதிகாரி ஒருவரின் சார்பில் அந்தப் பிரதிக்ஞை மறுக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன். டில்லி வாழ் மக்களும், இங்கே உள்ள அகதிகளும், மற்றவிடத்தில் நிகழும் சம்பவங்களைக் கண்டு மனம் தடுமாருமல் உறுதியுடன் இருப்பார்களாயின், அவர்கள் இந்தியாவையும், பாகிஸ்தானையும் கூடக் காப்பாற்றியவராவார்கள். டில்லி உண்மையுடனும் அகிம்சை வழியிலும் செயல் புரியுமாயின், அதன் பலன் உலகம் முழுவதும் உணர்ச்சியை உண்டாக்கும். பம்பாயில் சர்தார் நிகழ்த்திய பிர

சங்கத்தை நீங்கள் கவனத்துடன் வாசிப்பீர்களாயின், நான், சர்தார், நேருஜி இம்மூவருக்கிடையே யாதொரு கருத்து வேற்றுமையும் இல்லை என்பதை உணர்ந்துகொள்ளுவீர்கள். எங்களது விளக்கம் வெவ்வேருக இருப்பினும், நாங்கள் ஒரே லட்சியத்திற்காகவே வேலை செய்துவருகிருேம். எங்களில் எவரும் முஸ்லிம்களின் விரோதி அல்ல. முஸ்லிம்களிடம் விரோத பாவம் கொள்ளுவது இந்தியாவினிடம் விரோத பாவம் கொள்ளுவதேயாகும். உங்களிடம் குறைந்தது நான் எதிர்பார்ப்பது என்னவெனில், சட்டங்களை நீங்களே நிறைவேற்ற முற்பட்டு, மனிதத் தன்மையற்ற காரியங்களைச் செய்யத் தொடங்கிவிடாதீர்கள் என்பதே. அவ்விதம் செய்வதால் சமூகமே மறைந்தொழிந்து விடும். கண்ணியமும், மதிப்பும் வாய்ந்த பிரஜைகள் என்ற முறையில், நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள அரசாங்கத்தினிடம் நீதி நிர்வாகத்தை விட்டுவிடவேண்டும். விசாரணையின்றியே நீக்ரோக்களைக் கொல்லும் அமெரிக்கர்களின் கொடுமைகளை, காட்டுமிராண்டித்தனமானவை என்று நீங்களும் உங்களுடைய பத்திரிகைகளும் அலுப்பு சலிப்பின்றிக் கண்டித்து வருவதைப் பார்க்கிருேம். ஆனல், நம்மிடையே நடக்கும் அதே போன்ற நடவடிக்கைகள் காட்டுமிராண்டித்தனத்தில் குறைவாகிவிடுகின்றனவா?

தாம் பாகிஸ்தானுக்குப் புறப்படலாம் என்று ஏற்கனவே தாம் குறிப்பிட்டதைக் குறித்து காந்திஜி கூறியதாவது: "நான் சமாதானத்தையே நாடுபவன் என்றும், முஸ்லிம்களின் நண்பன் என்றும் பாகிஸ்தான் அரசாங்கம் நிச்சயமாக நம்பி, நான் பாகிஸ்தானுக்குச் செல்லுவதை விரும்பினல்தான், நான் அங்கே போவது சாத்தியமாகும். எப்படியாயினும், அந்த யாத்திரையை மேற்கொள்ள எனக்குச் சக்தி ஏற்பட்டுளது என்று டாக்டர்கள் கூறும் வரையில் நான் காத்திருந்துதான் தீர வேண்டும். என் உடல் நிலையில் அபிவிருத்தி ஏற்பட குறைந்தது இரண்டு வாரங்கள் செல்லும் என்று டாக்டர்கள் கூறியிருக்கிருர்கள்.

## பிரதம மந்திரியின் பெருந்தன்மை

"அகதிகளுக்கு விரைவில் நிவாரணமளிப்பதற்கான சகலமுறைகளையும் பண்டித ஜவாஹர்லால் நேரு கைக்கொண்டு வருகிருர். அகதிகளுக்காக நேருஜியின் உள்ளத்திலிருந்து உதிரம் வழிந்துகொண்டிருக்கிறது. துன்பத்தில் இருக்கும் ஒருவருக்குத் தமது படுக்கையையே கொடுத்துவிட்டு, குளிரிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்காக இரவு முழுதும் அங்குமிங்கும் நடந்துகொண்டிருக்கும் பண்பு உள்ளவர் நேருஜி. இந்தியாவின் பிரதம மந்திரி என்ற முறையில் அவர், இந்தியர்களும், வெளிநாட்டினருமான விருந்தாளிகளை உபசரிக்க இடம் கொடுக்க வேண்டியவராக இருக்கிருர். அப்படியிருந்தும், தமது ஜாகையில் உள்ள ஒன்றிரண்டு அறைகளை அகதிகளுக்குக் கொடுக்க விரும்புவதாக அவர் கூறியுள்ளார். மற்ற மந்திரிகளும், அதிகாரிகளும், வசதி

யுள்ளவர்களும் நேருஜியின் உதாரணத்தைப் பின்பற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்தியாவின் தலைசிறந்த தலைவரின் தியாகத்தை உலகம் முழுதும் பாராட்டும் என்றும், வீடு வாசல் இல்லாத அகதிகளின் துன்பங்கள் விரைவில் தீர வழி பிறக்கும் என்றும் நிச்சயமாகக் கருதுகிறேன்."

## காஷ்மீர் பிரச்னை

பிறகு காந்திஜி, லாகூரிலிருந்து தமக்குக் கிடைத்த ஒரு தந்தியைப்பற்றிக் குறிப்பிட்டார். அந்தத் தந்தியில், 'தலைவர், காஷ்மீர் விடுதலைச் சங்கம்' என்று கையெழுத்திடப்பட்டிருந்தது. தந்தியின் விவரம் வருமாறு:

"ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக உங்களுடைய பெருந்தன்மையான போக்கை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். தற்போதைய நெருக்கடிக்கு மூல காரணம் காஷ்மீர் பிரச்னைதான். எத்தகைய சமரசமும் ஏற்படுவதற்கு அதுதான் தடையாக இருந்து வருகிறது. உண்மையில் சமாதானத்தை விரும்பினால், முதன் முதலாக காஷ்மீர் பிரச்னை கவனிக்கப்பட வேண்டும். ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருக்கும் இந்தியத் துருப்புகளை காஷ்மீரிலிருந்து வாபஸ் செய்துகொள்ள வேண்டும். காஷ்மீர் நியாயமாக யாருக்குச் சொந்தமோ அவர்களிடம் அதை ஒப்புவித்துவிட வேண்டும். இது ஒன்றுதான் அப்பிரச்னை திருப்திகரமாகத் தீருவதற்கான வழியாகும்."

இந்தத் தந்தியைக் குறித்து காந்திஜி கூறியதாவது: "இது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. காஷ்மீர் பிரச்னை தீராவிடில், ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் தங்களுடைய விரோதிகளாக முஸ்லிம்கள் கருத வேண்டுமா? அது போலவே முஸ்லிம்களை, ஹிந்துக்களும் சீக்கியர்களும் தங்களுடைய விரோதிகளாகக் கருத வேண்டுமா? இந்திய யூனியனின் படைகள் தாங்களாக வலுவில் சென்று காஷ்மீருக்குள் பிரவேசிக்கவில்லை. எனக்குத் தெரிந்த வரையில், காஷ்மீர் சமஸ்தானாதிபதியின் அழைப்பிற்கு இணங்கவும், காஷ்மீர் முஸ்லிம்களின் தலைவருடைய அழைப்பிற்கு இணங்கவுமே இந்தியப் படைகள் அங்கே சென்றிருக்கின்றன. காஷ்மீர் மீது படையெடுத்தவர்களும், மற்றவர்களும் வாபஸாகி, வெளியாரின் உதவி எதுவுமின்றி பூஞ்சில் உள்ள கலகக்காரர்களிடமும், காஷ்மீரில் உள்ள மற்றவர்களிடமும் பிரச்னை விட்டுவிடப்படுமாயின், அப்போதுதான் இந்திய யூனியனை அதன் துருப்புகளை வாபஸ் செய்துகொள்ளும்படி கூறலாம். காஷ்மீர் நியாயமாக யாரைச் சேர்ந்ததோ, அவர்களிடம் அது போக வேண்டும் என்ற யோசனை முற்றிலும் உண்மையானதே. ஆனால், காஷ்மீரின் நியாயமான சொந்தக்காரர்கள் யார்? காஷ்மீர் மகாராஜாவை இந்திய யூனியன் அரசாங்கம் சட்டை செய்யாமல் இருந்துவிட முடியாது. இறுதியாக, தங்கள் சொந்த விதியைத் தங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டியவர்கள் காஷ்மீர் மக்களே யாவர்."

### குவாலியர் முஸ்லிம்கள்

அடுத்தபடியாக. ரட்லாமிலிருந்து குவாலியர் முஸ்லிம் ஒருவர் தமக்கு அனுப்பியிருந்த தந்தியைக் காந்திஜி வாசித்துக் காட்டினார். அந்தத் தந்தி கூறியதாவது:

"15, 16 தேதிகளில் ஹிந்துக்கள் அடங்கிய கோஷ்டியினர் எங்கள் கிராமத்தைச் சூழ்ந்துகொண்டு எங்களைக் கடுமையாக அடித்துவிட்டார்கள் என்பதை குவாலியர், உஜ்ஜயினி ஜில்லா, ஜஹாங்கிர்பூரைச் சேர்ந்த முஸ்லிம்களான நாங்கள் மதிப்பு வாய்ந்த உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அதனால் பலர் காயம் அடைந்தனர், ஒருவர் மாண்டார். எங்களுடைய பயிர்களும். வீடுகளும் அழிக்கப்பட்டு விட்டன. அரசாங்க அதிகாரி யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. நாங்கள் அபாய நிலையில் இருக்கிறோம். அன்புடன் அவசரமாக ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்."

இந்தச் செய்தி உண்மையாயின், இது நமக்குத் துக்கத்தைக் கொடுக்கும் விஷயமாகும். இந்தியாவின் எந்த மூலையில் சமூக அமைதிக்குக் குந்தகம் ஏற்பட்டாலும், அது நம்மையும் நமது அரசாங்கத்தையும் வெட்கித் தலைகுனியும்படி செய்வதாகும்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 20—1—'48 —'ஹரிஜன்' – 1—2—1948

# 57

# பிரார்த்தனையில் வெடிகுண்டு

புதன்கிழமை மாலைப் பிரார்த்தனைக்குப் பின் காந்திஜி பேசியபோது, முதல் நாள் பிர்லா மாளிகையின் வெளிப்புறச் சுவருக்கு உள்ளே வெடிகுண்டு வெடித்ததைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:

வெடிகுண்டு விபத்தைக் குறித்து கவலையுடன் விசாரித்து எனக்குச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அப்போது நான் கலக்கமடையாமல் சாந்தமாக இருந்ததைக் குறித்து என்னைப் புகழ்ந்திருக்கிறார்கள். அது ராணுவப் பயிற்சி என்றும், எனவே, அலட்டிக்கொள்ளுவதற்கு எதுவும் இல்லை என்றும் நான் நினைத்தேன். ஆனால், அது வெடிகுண்டு விபத்து என்பதும், அது என்னைக் குறித்தே வீசப்பட்டது என்பதும் பிரார்த்தனையெல்லாம் முடிந்த பிறகுதான் எனக்குத் தெரியவந்தன. என்னை நோக்கி எறியப்பட்ட வெடிகுண்டே வெடித்தது என்பதை நான் அறிந்திருந்தால், நான் எப்படி நடந்துகொண்டிருப்பேன் என்பதைக் கடவுளே அறிவார். எனவே, அதன் சம்பந்தமான புகழுரைக்கு நான் உரியவன் அல்ல. அந்த வெடி விபத்

தின் விளைவாக நான் வீழ்ச்சியுற்று, அப்போதும் எனக்கு வெடி குண்டை எறிந்தவர் மீது துவேஷமின்றி என் முகத்தில் புன் முறுவலும் தவழுமாயின், அப்போதுதான் நான் நற்சாட்சிப் பத்திரத்திற்கு உரியவனுவேன். நான் கூற விரும்புவது என்ன வெனில், தவருன வழி காட்டப்பட்டு வெடிகுண்டை எறிந்த இளைஞன் மீது யாரும் வெறுப்புக் கொள்ள வேண்டாம் என்பதே யாகும். என்னை ஹிந்து மதத்தின் விரோதி என்று அவன் ஒரு வேளை கருதியிருக்கலாம். மதத்தைப் பாழ்படுத்தும் ஒரு துஷ் டன் ஏற்படும்போதெல்லாம், அவனை அழிக்கக் கடவுள் யாரை யாவது அனுப்புகிருர் என்று கீதை கூறவில்லையா? புகழ்பெற்ற அந்தச் சுலோகத்திற்கு ஒரு விசேஷ அர்த்தம் இருக்கிறது. தனக்கு மாறுபட்ட கருத்துள்ளவர்கள் தீயவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை அந்த இளைஞன் உணர்ந்துகொள்ள வேண்டும். தாம் அணுவளவும் அப்பழுக்கற்றவர் என்றும், தீங்கு செய்வோரைத் தண்டிப்பதற் குத்தான் தம்மைக் கடவுள் அனுப்பியிருப்பதாகவும், எந்த ஆடவரோ, பெண்ணே நம்ப வேண்டாம். இந்த இளைஞன் தம்மைக் கடவுள் அவ்விதமே அனுப்பி யிருப்பதாகப் பெருமைப் படுவதுபோல் தோன்றுகிறது.

## பாதுகாக்க அது வழியல்ல

தான் தங்குவதற்கு வேறு இடமில்லாததால் இந்த இளைஞன் அனுமதியின்றி ஒரு மசூதியில் தங்கினுன் என்றும், இப்போது மசூதிகளையெல்லாம் காலி செய்துவிட வேண்டும் என்று போலீஸ் கட்டளையிட்டு வருவதால் அந்த இளைஞனுக்குக் கோபம் ஏற்பட்டுவிட்டது என்றும் நான் கேள்விப்பட்டேன். முதலாவதாக, இளைஞன் மசூதியை ஆக்கிரமித்துக்கொண்டது தவருகும். மசூதியைக் காலி செய்யும்படி கூறிய அதிகாரிகளுக் குக் கீழ்ப்படியாதது இரட்டிப்புக் குற்றமாகும்.

அத்தகைய நடவடிக்கைகளைத் தவிர்க்கும்படி, அந்த இளை ஞனுக்குப் பக்கபலமாக இருப்போரை நான் கேட்டுக்கொள்ளு கிறேன். ஹிந்து மதத்தைப் பாதுகாப்பதற்கு அது வழியல்ல. நான் கூறும் வழியை அனுசரித்தால் மாத்திரமே ஹிந்து மதத் தைக் காப்பாற்ற முடியும். சிறு வயதிலிருந்தே நான் ஹிந்து மத முறைகளைப் பயின்று வந்திருக்கிறேன். பின்னர் கிறிஸ் தவர்கள், முஸ்லிம்கள் முதலிய மற்ற மதத்தினருடனும் நான் தொடர்பு கொண்டேன். மற்ற மதங்களை ஓரளவு நன்கு ஆராய்ந்த பின், ஹிந்து மதத்திலேயே உறுதியுடன் இருந்துவருகிறேன். எனது குழந்தைப் பருவத்தில் எனக்குள்ள நம்பிக்கை எவ்வளவு உறுதியாக இருந்ததோ அவ்வளவு உறுதியாக இன்றும் இருந்துவருகிறது. நான் நேசிக்கும், போற்றிப் பேணும், நடை முறையில் அனுசரித்து வரும் மதத்தைப் பாதுகாப்பதற்கு கடவுள் என்னை ஒரு கருவியாகச் செய்வாரென நான் நம்புகி றேன். எனினும், கடவுளின் கருவியாவதற்கான யோக்கியதாம்

சங்களைப் பெறுவதற்கு முன், மதத்தின் மூலாதாரமான கொள்கைகளை அறிந்து இடைவிடாது அவற்றை அனுசரித்து வந்திருக்க வேண்டும்.

## அனுதாபம் கொள்ள வேண்டும்

வெடிகுண்டை வீசியதில் சீக்கியர்களுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சில சீக்கிய நண்பர்கள் இங்கே வந்து என்னிடம் கூறினர்கள். அந்த இளைஞன் சீக்கியர் வகுப்பைச் சேர்ந்தவன் அல்ல என்பதை நான் அறிவேன். அவன் ஒரு சீக்கியராக, ஹிந்துவாக, முஸ்லிமாக, அல்லது யாராக இருந்தாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. குற்றம் செய்தவர்கள் யாரும் நன்ருக இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். அந்த இளைஞனை எந்த விதத்திலும் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் கூறியிருக்கிறேன். அவன் நியாயமான முறையில் சிந்திக்கும்படியும், நியாயமான காரியங்களைச் செய்யும்படியும் அவனது மனத்தை அவர்கள் மாற்ற வேண்டும். இளைஞனும், அவனது வழிகாட்டிகளும் தங்களுடைய தவறை உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் செய்த தவறு ஹிந்து மதத்திற்கும் தேசத்திற்கும் விரோதமாகும். அதே சமயத்தில், எதிரியின் மீது யாரும் கோபம் கொள்ளக் கூடாது என்றும் நான் எச்சரிக்கை செய்கிறேன். தான் எதுவும் தவறு செய்வதாக அந்த இளைஞன் அறியான். நீங்கள் அவன் மீது அனுதாபம் கொள்ளவேண்டும். நீங்கள் எனது உண்ணுவிரதத்திற்கு எதிராகக் கோபம் கொண்டு இருந்தாலும் தேசத்தின் ஒரு வயோதிக ஊழியனைக் காப்பாற்றுவதற்காகச் சமாதானத்தை நிலை நிறுத்துவதாகப் பிரதிக்ஞை செய்கொண்டிருப்பீர்களாயின், அந்தக் குற்றம் உங்களுடையதேயன்றி, வெடிகுண்டை எறிந்த இளைஞனுடையது அல்ல. அதற்கு மாருக, நீங்கள் மனப்பூர்வமாகப் பிரதிக்ஞையில் கையெழுத்திட்டிருப்பீர்களாயின், அந்த இளைஞனைப் போன்றவர்களின் மனம் உங்கள் வழிக்கு மாறிவிடும்.

வெடிகுண்டுகள் வெடித்தாலும் அல்லது தோட்டாக்கள் மாரியாகப் பொழிந்தாலும், நீங்கள் பிரார்த்தனையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றே நான் எதிர்பார்க்கிறேன். அந்தத் தீய காரியத்தைச் செய்தவன் கைதியானதற்கு, எழுதப் படிக்கத் தெரியாத ஓர் ஏழைப் பெண் காரணமாக இருந்தார் என்பதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன். நல்ல உள்ளமும், நேர்மையான எண்ணமும் இருக்குமாயின், எழுதப் படிக்கத் தெரியாதது ஒரு குறையாகிவிடாது. படிக்கத் தெரியாத அந்தச் சகோதரியின் கள்ளம் கபடமற்ற தைரியத்தைக் குறித்து அவரை வாழ்த்துகிறேன்.

## பவல்புரியும் சிந்துவும்

பவல்புரியில் துன்பத்திற்கு உள்ளானவர்களை நான் மறந்து விடவில்லை. நவாப் சாகிபிடமிருந்து இன்றுகூட எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. தமது சமஸ்தானத்தில் உள்ள முஸ்லிம் அல்லாதாரின் நலனுக்காகத் தம்மால் இயன்றதையெல்லாம் செய்துவருவதாக நவாப் சாகிப் தந்தியில் குறிப்பிட்டுள்ளார். எனவே, அவ்விஷயத்தை எனக்கே உரித்தான வழியில் நான் கவனித்து வருகிறேன்.

பம்பாயில் உள்ள சிந்தி, சீக்கிய அகதிகளிடமிருந்து எனக்கு ஒரு தந்தி கிடைத்திருக்கிறது. 'சிந்துவில் பரவலாக இருக்கும் 15,000 சீக்கியர்களும் அடியோடு அழிந்து போகும் அபாயத்தில் இருந்துவருகிறார்கள்; அவர்களுடைய உயிர், மதம், பண்பாடு எல்லாவற்றிற்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது; எனவே, அவர்களை அங்கிருந்து அவசரமாக வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்' என்று அந்தத் தந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சீக்கியர்கள் அழிக்கப்படுவதை நான் ஒருபோதும் சகித்துக்கொண்டிருக்க முடியாது. ஒரு மனிதனால் எவ்வளவு சாத்தியமோ, அதையெல்லாம் நான் அவர்களுக்காகச் செய்வேன். பண்டித ஜவாஹர்லால் நேருவின் அரசாங்கமும் அவ்விஷயத்தில் தங்களுடைய பொறுப்பைப் பூரணமாக உணர்ந்திருக்கிறது. தங்கள் சொந்த உயிரைக் கொடுத்தாவது அங்கே உள்ள சீக்கியர்களைக் காப்பாற்றுவதாக உறுதி கூற வேண்டுமென நான் சிந்து அரசாங்கத்தையும் பாகிஸ்தான் அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்ளுகிறேன். சீக்கியர்களின் பாதுகாப்பிற்கு அந்த அரசாங்கங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாவிடில், அவர்களை ஓரிடத்தில் கொண்டுவந்து சேர்த்து, அவசரமாகவும் பத்திரமாகவும் அவர்களை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளையாவது செய்ய வேண்டும். சீக்கியர்களின் சமூகம், தைரியம் வாய்ந்த ஒரு சமூகமாகும். எனவே, ஒவ்வொருவரின் மானமும் மதமும் அவரவர் கையில்தான் இருக்கிறது என்பதைச் சீக்கியர்கள் அறிந்துகொள்ளவேண்டும். அவ்விரண்டில் எதையும் வேறு யாரும் திருடிக்கொண்டு போய்விடமுடியாது. எனது பார்ஸி நண்பர்கள் இன்று சிந்துவிற்குச் சென்றிருக்கிறார்கள்.

## தவறான உவமை

உண்ணாவிரதத்தின் போது தமக்கு வந்த ஒரு கடிதத்தைப் பற்றி பின்னர் காந்திஜி குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:

1942-இல் நான் சிறையில் இருந்தபோது தேசத்தில் ஓரளவு பலாத்கார நடவடிக்கைகள் ஆரம்பமாயின என்று கடிதம் எழுதியவர் குறிப்பிட்டிருந்தார். எனவே, உண்ணாவிரதத்தின் விளைவாக நான் இறந்தால், பின்னர் மானிட வர்க்கத்தையே திகைக்க வைக்கும் அளவுக்கு இந்தியாவில் பலாத்காரம் பொங்கி

யெழும் என்றும், மானிட வர்க்கத்தின் நலனை உத்தேசித்தாவது நான் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்றும் அவர் வாதித்திருந்தார். நான் சிறையில் அடைபட்டிருந்தபோது, மக்கள் பலாத்காரத்தில் ஈடுபட்டது உண்மையே. எனினும், உண்ணாவிரதம் காரணமாக ஏற்படும் எனது மரணம் அவர் அஞ்சும் விபரீதத்தில் வந்து முடியும் என்று நான் எண்ணவில்லை. உண்ணாவிரதத்தை ஆரம்பிக்குமுன், தேசம் முழுவதும் பரந்த முறையில் சகோதரக் கொலைகள் ஏற்படலாம் என்ற சாத்தியக் கூறைப் பற்றி நான் சிந்தித்துப் பார்த்தேன். ஸ்ரீ கிருஷ்ண பகவானின் மரணத்திற்கு முன், யாதவர்கள்* ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு அழிந்தார்கள். ஆனால், அத்தகைய பேராபத்தை உண்டாக்கக் கூடிய அளவுக்கு நான் மகத்துவம் வாய்ந்தவன் அல்ல; நான் அற்ப மனிதனே. எனினும், யாதவர்களைப் போல் மக்கள் அவ்வளவு சோம்பேறிகளாகவும், துஷ்டர்களாகவும் இருந்து, அவர்களை அழிப்பதைத் தவிர வேறு ஒரு வழியுமில்லை என்று கடவுள் கருதுவாராயின், அவர் என்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதனைக்கூட அத்தகைய பேராபத்தை உண்டாக்குவதற்கான கருவியாகச் செய்துவிடலாம். நான் என்னையே கடவுளிடம் அர்ப்பணம் செய்துகொண்டுவிட்டதால், பலாபலன்களைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. எனினும், உண்ணாவிரதத்தின்போது நான் என்ன கண்டேனோ அது, அத்தகைய அழிவு இந்தியாவின் கதியாக இராது என்ற நம்பிக்கையையும் தைரியத்தையும் எனக்குக் கொடுத்திருக்கிறது.

கடைசியாக, டில்லியில் முஸ்லிம்கள் தங்கள் விருப்பப்படி நடமாடிவரும் விதமானது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. தங்களைத் தாங்களே தூய்மையாக்கிக்கொள்ளும் நடவடிக்கைகளை நீங்கள் தொடர்ந்து கைக்கொண்டு வரவேண்டும் என்றும், உங்களுடைய உள்ளங்களைச் சத்தியமாகிய உயிர்க் கடவுளின் ஆலயங்களாக மாற்ற வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 21—1—'48

—'ஹரிஜன்' - 1—2—1948

---

* யாதவர்களைப் பற்றி இங்கே காந்திஜி குறிப்பிட்டிருப்பது, மகா பாரதத்தின் இறுதிப் படலத்தில் உள்ள ஒரு சம்பவமாகும். பயங்கரமான குருக்ஷேத்திர யுத்தம் முடிந்த பின், ஸ்ரீ கிருஷ்ண பகவான் துவாரகையைப் பல ஆண்டுகள் வரையில் ஆட்சி புரிந்து வந்தார். ஸ்ரீ கிருஷ்ணனின் குலத்தைச் சேர்ந்த யாதவர்கள் கட்டுதிட்டமற்ற போக வாழ்க்கையிலும் கூத்தாட்டங்களிலும் ஈடுபட்டு வந்தனர். அவர்களிடம் ஒழுங்கு, அடக்கம், பணிவு எதுவும் இல்லை. இந்நிலையில் ஒரு சமயம் துவாரகைக்குச் சில ரிஷிகள் விஜயம் செய்தார்கள். மமதை கொண்ட யாதவர்கள் அந்த ரிஷிகளை வரவேற்று மரியாதை செய்யாததுடன், அவர்களை அவமதிக்கவும் முற்பட்டார்கள். தங்களைச் சேர்ந்த ஓர் இளைஞனுக்கு அவர்கள் பெண் வேஷம் போட்டு, ரிஷிகளின் எதிரில் கொண்டு போய் நிறுத்தி, "எல்லாம் அறிந்த மகாரிஷிகளே! இந்தப் பெண்ணுக்குப் பிள்ளைக் குழந்தை பிறக்குமா, அல்லது பெண் குழந்தை பிறக்குமா?" என்று கேட்டார்கள்.

# 58

## ‘என்னை விடுதலை செய்யுங்கள்’

காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வரும் ஜனங்களின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகி வந்தது. சென்ற இரண்டு நாட்களாக மேலும் அதிகமாகிவந்த ஜனக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமையானதால், அசாதாரணமான அளவை எட்டியது. அப்போது காந்திஜி பேசியதாவது :

டில்லியில் எல்லாம் திருப்திகரமாக இருக்கிறது என்றும், நகரில் சமூக நிலைமை சம்பந்தப்பட்ட வரையில் கவலைப்படுவதற்கு எதுவும் இல்லை என்றும் உறுதிகூறி செய்திகள் வந்து குவிந்த வண்ணமாக இருக்கின்றன. சமூகங்களுக்குள் மீண்டும் இதய ஒற்றுமை ஸ்தாபிக்கப்பட்டு வருவதாகவும், தங்களுக்குள்ளேயே தொடர்ந்து சண்டையிட்டுக்கொண்டு வந்தால், தங்களுடைய சகஜமான தொழில்களைக் கவனிக்க முடியாமற் போய்விடும் என்ற உண்மையை மக்கள் உணர்ந்து வருவதாகவும், ஹிந்து, முஸ்லிம் நண்பர்கள் என்னிடம் கூறுவது என் உள்ளம் ஆனந்தம் அடையும்படி செய்திருக்கிறது. நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதைக் கருதி நான் ஒரு யோசனை கூறுகிறேன். ஒவ்வொரு ஹிந்துவும் சீக்கியரும், தங்களுடன் குறைந்தது ஒரு முஸ்லிமையாவது பிரார்த்தனைக் கூட்டத்திற்கு அழைத்துவர வேண்டும் என்பதுதான் அந்த யோசனையாகும்.

நாளைய தினத்திலிருந்து மேஹ்ராலியில் உள்ள பாக்தியார் சிஷ்டி தர்க்காவில் உர்ஸ் பண்டிகை நடக்கப் போகிறது. சமூகக் கலவரங்கள் நடந்தபோது, துஷ்டர்களால் தர்க்கா சேதப்படுத்தப்பட்டுள்ளது. சென்ற சில நாட்களாக சாத்தியமான

---

இந்தக் குறும்பை ஞானதிருஷ்டியால் அறிந்த ரிஷிகள் கோபம்கொண்டு, “இந்தப் பெண்ணுக்கு பிள்ளைக் குழந்தையும் பிறக்காது, பெண் குழந்தையும் பிறக்காது; ஆனால், உங்கள் யாதவ குலத்தையே அடியோடு அழித்து அதோகதியாக்கும் கோடரிக் காம்பு தான் பிறக்கும்’’ என்று சாபம் கொடுத்துவிட்டார்கள். தாங்கள் செய்த வேடிக்கை இவ்விதம் வினையாக முடிந்ததைக் குறித்து யாதவர்கள் கலக்கம் அடைந்தார்கள். பெண் வேஷம் பூண்ட இளைஞனுக்கு மறுநாள் பிரசவ வேதனை ஏற்பட்டு, அவன் வயிற்றிலிருந்து உண்மையிலேயே ஒரு கோடரிக் காம்பு பிறந்தது!

யாதவர்கள் கூட்டம் கூடி யோசித்து, அந்தக் கோடரிக் காம்பை பொடிப் பொடியாக நொறுக்கிக் கடலில் எறிந்துவிட்டார்கள். சிறிது காலம் சென்ற பின் அந்தப் பொடிகள் கடற்கரையோரமாக ஏராளமான கோரைகளாக முளைத்துவிட்டன. ஒரு சமயம் அவ்விடத்தில் யாதவர்கள் வேடிக்கையாகக் கூடி, குடியிலும், கூத்தாட்டங்களிலும் ஈடுபட்டுச் சந்தோஷமாகப் பொழுதுபோக்கினார்கள். அப்போது அவர்களுக்குள் ஏற்பட்ட சிறிய சண்டை குடிபோதை காரணமாகப் பெரும் போராகிவிடவே, யாதவர்கள் அங்கே மண்டியிருந்த தடிக்கோரைகளைப் பிடுங்கிக்கொண்டு, ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளலாயினர். ஒவ்வொரு கோரையும் அவர்களுடைய கையில் ஒரு குண்டாந்தடியாகியது! எனவே, அந்தப் போரில் ஒருவர்கூட பாக்கியின்றி எல்லோரும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு மாண்டனர்!

வரையில் அதைப் பழுது பார்ப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. முஸ்லிம்களும் ஹிந்துக்களும் விஜயம் செய்து, உர்ஸ் பண்டிகையில் பங்கு எடுத்துக்கொள்ளுவது வழக்கம். இன்றும் அதே சமாதான உணர்ச்சியுடனும், பக்தியுடனும் ஹிந்துக்கள் அங்கே செல்லக்கூடுமாயின், அது பெரிய காரியம் தான். அதில் பங்கு எடுத்துக்கொள்ள விரும்பும் முஸ்லிம்களுக்குப் பூரண பாதுகாப்பும், அவர்களுக்கு அவமதிப்போ அல்லது தொந்தரவோ ஏற்படாமல் இருப்பதற்கான உத்தரவாதமும் அளிப்பதாக உறுதி கூறப்படுமென்று நம்புகிறேன். அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விஷயத்தில், நீங்கள் எல்லோருமே போலீசாராக மாற வேண்டும்.

உலகம் முழுவதும் உள்ள மக்களின் கண்கள் நம்மீது இருந்துவருகின்றன. உலகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் தந்திகள் வந்து குவிந்த வண்ணமாக இருக்கின்றன. டில்லியில் நாம் செய்ததைக் குறித்துப் பாராட்டியும், ஆச்சரியத்தைத் தெரிவித்தும் சீனு, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களிலிருந்து தந்திகள் வந்திருக்கின்றன. சாத்விக எதிர்ப்புப் போராட்டத்தின் பலனுக ஆகஸ்டு 15-ஆம் தேதி நம் கைக்கு அதிகாரம் மாறியது, உலக சரித்திரத்திலேயே அசாதாரணமான ஒரு சம்பவமாகும். எனினும், நாம் அந்த உன்னத நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்தோம். ஹிந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும் ஒருவருக்கொருவர் காட்டுமிராண்டிகளைப்போல் நடந்துகொண்டார்கள். எனினும், அது தாற்காலிகமாக ஏற்பட்ட வக்கிர புத்தி என்பதைத் தவிர வேறென்றும் அல்ல என்றே நம்புகிறேன். உங்களுடைய உள்ளங்கள் சரியான நிலையில்தான் இருக்கின்றன. வக்கிர புத்தியை உதறித் தள்ளுவதற்கு உண்ணாவிரதம் உதவியாக இருந்ததென்றே தோன்றுகிறது. இந்தப் பரிகாரம், மீண்டும் நோய் திருப்பிக்கொண்டு விடாமல் நிரந்தரமாகத் தடுத்துவரும் என்றே நம்புகிறேன்.

எனவே, இப்போது நான் வர்தாவுக்குச் செல்லுவதற்கு நீங்கள் என்னை விடுதலை செய்வீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய பணியைச் செய்யவே நான் அங்கே செல்லுகிறேன். டாக்டர் ராஜேந்திரப் பிரசாதும் அங்கே வருவார். உங்களுடைய ஆசிகளுடனும், நான் இராதபோது எல்லாம் சரியாக நடைபெற்று வரும் என்ற உங்களுடைய புனிதமான உத்தரவாதத்துடனும் மாத்திரமே நான் செல்ல முடியும். பாகிஸ்தானுக்கும் செல்ல நான் விரும்புகிறேன். இப்போது பாகிஸ்தான் சட்டபூர்வமாக ஓர் அந்நிய நாடானதால், பாகிஸ்தான் அரசாங்கத்தின் அழைப்பு இல்லாவிடினும் அவர்களுடைய அனுமதியின் மீதும், சம்மதத்தின் மீதும் மாத்திரமே நான் அங்கே செல்ல முடியும்.

**பிர்லா மாளிகை,**
**புது டில்லி, 25- 1—'48**

**—'ஹரிஜன்' - 1—2—1948**

# 59

# பூரண சுயேச்சை தினம்

இன்று ஜனவரி 26-ஆம் தேதி. இது பூரண சுயேச்சை தினம் ஆகும். நாம் பார்க்காத, அனுபவிக்காத சுயேச்சைக்காக நாம் போராடிக்கொண்டிருந்தபோது, சுயேச்சை தினத்தை அனுஷ்டிப்பது முற்றிலும் பொருத்தமாக இருந்தது. இப்போதோ! அதை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். நமக்கு அதிவிருந்த மயக்கம் தீர்ந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. உங்கள் மயக்கம் தீராவிடினும், என் வரையிலாவது மயக்கம் தீர்ந்துவிட்டது.

இன்று எதை நாம் கொண்டாடிக்கொண்டிருக்கிறோம்? நிச்சயமாக, மயக்கம் தீர்ந்த நமது நிலையைக் கொண்டாடவில்லை. படுமோசமான நிலையை நாம் தாண்டியாகிவிட்டது என்ற நம்பிக்கையைக் கொண்டாட நாம் உரியவர்களே. சுயேச்சை என்றால், மிக மிகத் தாழ்ந்த கிராமவாசியும் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார் என்றே அர்த்தமாகும். இந்தியாவின் நகரங்களுக்கு ஊழியம் செய்வதற்காகப் பிறந்த அடிமை அவர் அல்ல; ஆனால், தீர்க்காலோசனையுடன் கூடிய தனது ஊழியத்தின் பலன்களை விளம்பரப்படுத்துவதற்கு நகரவாசிகளை உபயோகித்துக்கொள்ளவே அவர் பிறந்திருக்கிறார். இந்திய பூமியின் சாரம் அவர்தான்; சுயேச்சை என்பது சகல வகுப்பினருக்கும், பல்வேறு கொள்கைகள் உடையவருக்கும் சம அந்தஸ்து இருப்பதே; சிறுபான்மையோர் தொகையிலோ, செல்வாக்கிலோ எவ்வளவு குறைவாக இருப்பினும் அவர்கள் மீது பெரும்பாலோர் ஆதிக்கம் செலுத்துவது என்பது ஒரு காலத்திலும் சுயேச்சையின் அர்த்தமல்ல; இதையெல்லாம் கிராமவாசிகளுக்கு எடுத்துக்காட்டும் பாதையில் நாம் சென்று வருகிறோம். இந்த நம்பிக்கையை நாம் ஒத்திப்போட்டு, உள்ளம் சோர்வடையும்படி செய்துகொள்ள வேண்டாம்.

எனினும், இப்போது நடந்துவரும் வேலை நிறுத்தங்களும் பல்வேறுவித சட்ட விரோதமான காரியங்களும், நம்பிக்கையை ஒத்திப் போடுவதல்லாமல் வேறு என்ன? இவையெல்லாம் நமது நோயின், பலவீனத்தின் அறிகுறிகளாகும். தொழிலாளர்கள், தங்களுடைய கண்ணியத்தையும், சக்தியையும் உணர்ந்துகொள்ளட்டும். தொழிலுடன் ஒப்பிடும்போது, மூலதனத்திற்குக் கண்ணியமோ அல்லது சக்தியோ இல்லை. சரியான, ஒழுங்கான, ஜனநாயக சமூகத்தில் சட்ட விரோதமான செயல்களுக்கோ அல்லது வேலை நிறுத்தங்களுக்கோ இடமும் இல்லை, சந்தர்ப்பமும் இல்லை. அத்தகைய சமூகத்தில், நீதியை நிலைநிறுத்துவதற்குச் சட்டபூர்வமான வழிகள் ஏராளமாக இருக்கின்றன. மறைமுகமாகவோ அல்லது பகிரங்கமாகவோ பலாத்காரம்

தவிர்க்கப்பட வேண்டும். கான்பூரிலோ, நிலக்கரிச் சுரங்கங்களிலோ அல்லது வேறிடங்களிலோ ஏற்படும் வேலை நிறுத்தங்களால், வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்கள் உள்பட சமூகம் முழுவதற்குமே நஷ்டமாகும். பல வெற்றிகரமான வேலை நிறுத்தங்களுக்குப் பொறுப்பாளியான என்னைப் போன்ற ஒருவர், வேலை நிறுத்தங்களைக் கண்டித்து உபதேசம் செய்வது பொருந்தாது என எனக்கு ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு குறை கூறுவோர் இருப்பார்களாயின், அப்போது கயேச்சையோ அல்லது இப்போதுள்ள விதத்தில் சட்டங்களோ இல்லை என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. ராஜீய அதிகார ஜுரத்திலிருந்தோ, அல்லது கீழ்த் திசை நாடுகளிலும் மேல் நாடுகளிலும் அரசியல் உலகத்தைத் துன்புறுத்திவரும் அதிகார ஆசையிலிருந்தோ நாம் விடுபட முடியுமா என்றே நான் வியப்படைகிறேன். பூகோள ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இந்தியா இரண்டாகப் பிரிக்கப் பட்டுவிட்டாலும், உள்ளத்தில் பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் உள்ள நாம் என்றும் நண்பர்களாகவும் சகோதரர்களாகவும் இருந்துகொண்டு, ஒருவருக்கொருவர் உதவி புரிந்து, மரியாதை காட்டி வருவோம் என்றும், வெளி உலகிற்கு நாம் ஒரே நாட்டு மக்களாகத் திகழுவோம் என்றும் நம்புவோமாக.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 26—1—'48

—'ஹரிஜன்' - 1—2—1948

# 60

# பிஷாவரில் பாதகச் செயல்கள்

செவ்வாய்க்கிழமை பிரார்த்தனைக்குப் பின், காந்திஜி கேட்ட ஒரு கேள்வியுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. கூட்டத்தில் எத்தனை முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்று காந்திஜி கேட்டார். உடனே ஒரே ஒருவர்தான் கையைத் தூக்கினார். இதைக் குறித்து காந்திஜி தமது ஏமாற்றத்தைத் தெரிவித்தார். கூட்டத்திற்கு வரும் ஒவ்வொரு ஹிந்துவும், ஒவ்வொரு சீக்கியரும் தம்முடன் ஒரு முஸ்லிம் நண்பரை அழைத்து வர வேண்டும் என்று ஏற்கனவே காந்திஜி யோசனை கூறியிருந்தார். அவ்வளவாவது அவர்கள் செய்வார்கள் என்றும் காந்திஜி எதிர்பார்த்தார். எனவே, ஒரே ஒரு முஸ்லிம் மாத்திரமே கூட்டத்திற்கு வந்திருந்தது, அவருக்கு ஏமாற்றத்தை உண்டாக்கியது.

பிறகு காந்திஜி, அன்று காலை மேஹ்ராலியில் உள்ள தர்க்கா ஷரீப்பிற்குத் தாம் சென்றதை விவரித்துக் கூறினார். அவர் பேசியதாவது: "அங்கே நடந்த உர்ஸ் பண்டிகைக்கு ஏராளமான முஸ்லிம்கள் வந்திருந்தனர். அங்கே எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்த விஷயம், என்னவெனில், அந்தப்

பண்டிகைக்கு எத்தனை முஸ்லிம்கள் வந்திருந்தார்களோ, அத்தனை ஹிந்துக்களும் சீக்கியர்களும் வந்திருந்ததுதான். மூர்க்கத்தனமான, தப்பெண்ணத்தை உண்டாக்கக் கூடிய சில வதந்திகள் காரணமாக, அதற்கு வந்திருந்த முஸ்லிம்களின் தொகை முந்திய வருடங்களைக் காட்டிலும் குறைவாக இருந்தது. மனிதனைக் கண்டு மனிதன் பயப்பட வேண்டியிருப்பது வெட்கக் கேடான விஷயமாகும். அந்த தர்க்காவில் மிகவும் விலையுயர்ந்த சலவைக் கற்கள் சேதமாக்கப்பட்டிருந்தன. இது எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. பாகிஸ்தானில் இதைக் காட்டிலும் மோசமான காரியங்கள் நடைபெற்றுள்ளன என்று கூறுவது, இச்செயல்களுக்குச் சரியான பதிலாகிவிடாது. அத்தகைய கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான காரியங்களைச் செய்யும் அளவிற்கு நாம் அவ்வளவு தாழ்ந்த நிலையை அடைந்துவிட்டோமா? பாகிஸ்தானில் அத்தகைய சம்பவங்கள் பரந்த அளவில் நடைபெற்றிருப்பதாக வைத்துக்கொண்டாலும், தீச்செயல்களுக்கு உதாரணம் காட்டுவது ஒழுங்கற்றதாகும். உலகம் முழுவதுமே தவறு செய்தாலும்கூட, நாமும் அவ்வாறே செய்ய வேண்டுமா? இன்று நான் தீய வழிகளில் ஈடுபடத் தொடங்கினால், அது உங்களுக்கு மனவேதனையை உண்டாக்காதா? என் சம்பந்தப்பட்ட வரையில், அது மரணத்தைவிட மோசமானதாகும். அது போலவே, தர்க்காவிற்கு ஏற்பட்டுள்ள சேதத்தைக் குறித்து நாம் வெட்கமடைய வேண்டும். அத்தகைய புண்ணிய ஸ்தலத்திற்கு உகந்த மரியாதையுடன் நாம் நடந்துகொள்ள வேண்டும்.

"பிஷாவரில் உள்ள பரச்சினார் அகதிகள் முகாமில் ஹிந்துக்களும் சீக்கியர்களுமாக 130 நிரபராதிகள் கொல்லப்பட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. மலைப் பிரதேச வாசிகள் அங்கே படையெடுத்து அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள். அத்தகைய சம்பவங்கள் கோபத்தை உண்டாக்குவது புரிந்து கொள்ளக் கூடியதே என்றாலும், அது தவறு. திருப்பித் தாக்க வேண்டும் என்ற ரகசியமான விருப்பம் உங்கள் மனத்தில் இருக்குமாயின் அது, கடவுளறியச் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தை மீறுவதாகும். அத்தகைய சம்பவங்களை யொட்டித் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியது, இரு டொமினியன் அரசாங்கங்களின் கடமையாகும். பொது மக்கள் சம்பந்தப்பட்ட வரையில், அவற்றைக் குறித்து அவர்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும்

"காஷ்மீரைச் சேர்ந்த மீர்பூர் ஜில்லாவில் ஆடவர்களையும் பெண்களையும் கொள்ளைக்காரர்கள் தூக்கிச் சென்றுள்ளனர். அவர்கள் பல சிறு பெண்களையும் தூக்கிச் சென்று மானபங்கப் படுத்தியுள்ளனர். தூக்கிச் செல்லப்பட்டவர்களில் பலரை பாகிஸ்தானுக்குக் கொண்டு சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. கொள்ளைக்காரர்கள்கூட சில நாகரிக விதிக்கு உட்பட வேண்டும்.

இதெல்லாம் உண்மையாக இருக்குமாயின், இந்தத் தவறைச் சீர்படுத்தும்படி பாகிஸ்தான் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன். பண்டித ஜவாஹர்லால் நேருவின் மனம் இத்தகைய சம்பவங்களைக் குறித்துப் புண்ணுகியிருக்கிறது. அவ்விஷயமாக யூனியன் அரசாங்கம் சாத்தியமானதையெல்லாம் செய்து வருகிறது. இஸ்லாமை நான் ஆராய்ச்சி செய்துள்ளேன். அத்தகைய நடவடிக்கைகளை இஸ்லாம் ஆதரிக்கவில்லை என்பதை அறிவேன். அரசாங்க யந்திரம் மெதுவாகத்தான் இயங்கும். ஆனல், ஜீவகாருண்ய உணர்ச்சியுடன் நோக்குமிடத்து இவ்விஷயமாகப் பரிகாரம் அளிக்கத் தாமதம் ஏற்படவே கூடாது."

பிர்லா மாளிகை,
புது டில்லி, 27—1—'48

— 'ஹரிஜன்' – 8—2—1948

# 61

# வெறியர்களின் அட்டூழியங்கள்

பிரார்த்தனைக்குப் பின் மகாத்மா காந்தி பேசியதாவது: பன்னுவிலிருந்து சுமார் நாற்பது அகதிகள் அடங்கிய ஒரு கோஷ்டியினர் இன்று மாலை என்னைக் காண வந்தார்கள். பாவம், அவர்கள் யாவரும் துன்பத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர். அவர்களைத் தரிசனம் செய்வதை நான் உயர்வாக மதித்தேன். நான் கோரியதற்கிணங்க, அவர்கள் கூறியதையெல்லாம் ஸ்ரீ பிரிஜ் கிருஷ்ண குறித்துக்கொண்டார். அவர்களில் ஒருவர் என் மீது கோபம் கொண்டார். அவர்களுக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கெல்லாம் நான்தான் காரணம் என்று அவர் கூறினர். தங்களுக்கு எவ்விதத் தொந்தரவும் கொடுக்காமல் தனியே விட்டுவிட்டு, இமயமலைக்குச் சென்றுவிடும்படியும் என்னை அவர் கேட்டுக்கொண்டார். யாருடைய கட்டளையின் மீது நான் இமயமலைக்குச் செல்ல வேண்டுமென அவரைக் கேட்டேன். சிலர் கோபம் அடைந்தனர்; சிலர் என்னைத் தூற்றும் அளவிற்குச் சென்றுவிட்டனர். பலர் எனது முயற்சிகளைப் போற்றிப் பாராட்டவும் செய்தனர்.

எனவே, இந்நிலையில் எனக்கு உள்ள ஒரே வழி, கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றுவதேயாகும். மனிதர்களின் உள்ளத்தின் உள்ளே கடவுள் அவர்களுடன் பேசுகிறுர். அந்த அகதிகளின் கூட்டத்தில் பெண்களும் இருந்தனர். அவர்களை யெல்லாம் எனது சகோதரர்களாகவும் சகோதரிகளாகவுமே நான் கருதுகிறேன். நமது ஒரே உண்மையான நண்பர் கடவுள்தான். நாம் முற்றிலும் அவருடைய கையிலேயே இருக்கிறோம். இமயமலைக்குச் சென்று அங்குள்ள அமைதியை ஆனந்தமாக அனுபவிப்பதில்

நான் அக்கறை கொள்ளவில்லை. இந்தக் கொந்தளிப்பான சூழ்நிலையிலிருந்து நான் எவ்வளவு அமைதியைப் பெற முடியுமோ அதைக்கொண்டு நான் திருப்தி அடைவேன். எனவே, நான் உங்கள் மத்தியிலேயே தங்கியிருக்க விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் இமயமலைக்குச் சென்றால், உங்களுடைய ஊழியனாக நான் உங்களைப் பின்தொடர்ந்து வரலாம்.

பிர்லா மாளிகை,
புது டில்லி, 29—1—'48

— 'ஹரிஜன்' - 8—2—1948

# 62

# உத்தமரின் உயிர்த் தியாகம்

1948 ஜனவரி மாதம் 29-ஆம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டம்தான் காந்திஜியின் தலைமையில் நடந்த கடைசிப் பிரார்த்தனைக் கூட்டமாகும். மறுநாள் 30-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை வழக்கம்போல் பிரார்த்தனைக் கூட்டத்திற்குக் காந்திஜி சென்றுகொண்டிருந்தபோது, கத்தியவாரிலிருந்து இரண்டு தொழிலாளர்கள் அவரைக் காண வந்திருப்பதாக அவரிடம் ஒருவர் கூறினர். "பிரார்த்தனைக்குப் பிறகு பார்ப்பதாக அவர்களிடம் சொல்லுங்கள். நான் உயிருடன் இருந்தால், பிரார்த்தனை முடிந்த பின் அவர்களைப் பார்க்கிறேன்" என்றார் காந்திஜி. அதுவே அவரது தீர்க்கதரிசனமாகியது! காந்திஜி பிரார்த்தனைக் கூட்டத்திற்கு அருகில் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு வகுப்பு வெறியனால் மூன்று தடவை துப்பாக்கியால் சுடப்பட்டு, "ராமா, ராமா" என்று கூறியவண்ணம் கீழே சாய்ந்து அமரரானார். சமூக ஒற்றுமைக்காக காந்திமகான் தமது உயிரையே இவ்விதம் அர்ப்பணம் செய்து விட்டார்.

# பின் சேர்க்கைப் பகுதி

## 1

## உண்ணுவிரதத்தைப் பற்றிய கருத்துகள்

[1924-ஆம் வருடத்தில் இந்தியாவின் பல பாகங்களிலும் ஏற்பட்ட ஹிந்து-முஸ்லிம் கலகங்களால் மனவேதனை அடைந்த காந்திஜி, அவற்றிற்குப் பிராயச்சித்தமாக 21 நாட்கள் வரையில் உண்ணுவிரதம் இருக்கத் தீர்மானித்தார். அதன் சம்பந்தமான கட்டுரைகள் இந்தத் தொகுப்பில் 215-ஆம் பக்கத்திலிருந்து 235-ஆம் பக்கம் வரையில் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளன. அந்த உண்ணுவிரதத்தைப் பற்றி இந்தியத் தலைவர்களில் சிலர் அப்போது வெளியிட்ட அறிக்கைகளே கீழே கொடுக்கப்பட்டுள்ளன:]

### பாபு ராஜேந்திரப் பிரசாத் :

சமீப கால நிகழ்ச்சிகள், முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் இடையே இடைவிடாத போராட்டத்தில் வந்து முடிந்திருக்கின்றன. அதனால் தேசம் முழுதும் இருள் சூழ்ந்திருக்கிறது. காந்திஜியை 21 நாட்கள் உண்ணுவிரதம் இருக்கும்படியும் அது நிர்ப்பந்தப்படுத்திவிட்டது. தமக்காகவும், தவறுகள் செய்துள்ள தம் தேச மக்களுக்காகவும் காந்திஜி உண்ணுவிரதத் தவத்தை மேற்கொண்டுள்ளார். இந்த நாட்டிலிருந்து வகுப்புத் துவேஷத்தையும் கோபத்தையும் அகற்ற வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திப்பதே அவரது உண்ணுவிரதத்தின் நோக்கமாகும். இந்தக் கடுமையான தவத்தைக் காந்திஜி மேற்கொள்ளும்படியாக நேர்ந்திருப்பது, பத்திரிகைகளின் மூலமும் மேடைகளிலிருந்தும் அவர் செய்த உபதேசங்கள் வீணாகிவிட்டன என்பதையே காட்டுகிறது. அகிம்சை நெறியிலிருந்து தவறக்கூடாது என்றும், திருப்பித் தாக்கக் கூடாது என்றும் காந்திஜி மக்களுக்குச் செய்துவரும் உபதேசத்தில் அவருக்கு உள்ள நம்பிக்கை, எப்போதும் போல் சிறிதும் ஒளி குன்றாமல் பிரகாசமாகவே இருந்துவருகிறது. தற்போது தீர முடியாத பிரச்னை என்று தோன்றுவதைத் தீர்ப்பதற்கே, நம் அறிவுக்கு எட்டாத, நம் கண்களால் காண முடியாத சக்திகள், காந்திஜி இந்த மகத்தான தவத்தையும் தியாகத்தையும் மேற்கொள்ளும்படி செய்திருக்கலாம். அவரது தேச மக்களின் உள்ளத்திலிருந்து எழும் பிரார்த்தனை, கடவுளின் அருளால், ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே மீண்டும் சகோதர பாவத்தை உண்டாக்கித் தீருவதென்று பிரதிக்ஞை செய்துகொள்ளும் உறுதியும் உள்ளத் தூய்மையும் உள்ள தொண்டர்களைச் சிருஷ்

டிக்குமாக! நேர்மையில் உறுதியுடன் இருக்கவும், சத்தியத்தைக் கைவிடாமல் இருக்கவும், தேச மக்களின் பிரார்த்தனை நமக்குத் தைரியத்தை அளிக்குமாக! தவறான வழிகளில் சென்றுள்ள நம் தேச மக்கள், பரஸ்பரம் குற்றஞ்சாட்டுவதை விட்டுவிட்டு, அன்புடன் ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளும்படி நமது பிரார்த்தனை அவர்களை வற்புறுத்துமாக!

மற்றவர்களின் உரிமைகளையும், உணர்ச்சிகளையும் நாம் உணர்ந்துகொண்டு நேர்மையான முறையில் நமது கடமையைச் செய்ய கடவுள் நமக்கு அருள்புரிவாராக! அப்போதுதான் நம் உள்ளத்தில் உண்மையான சகிப்புத் தன்மை ஏற்பட முடியும். இந்தத் தவம் பலனைக் கொடுத்து, இந்த நாட்டில் உள்ள எல்லா மக்களிடையேயும் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் உண்டாக்குமாக!

## மௌலானா முகமது அலி:

உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி நான் காந்திஜியிடம் நீண்ட நேரம் வாதித்தேன், அவரை மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். ஆனால், யாதொரு பலனும் ஏற்படவில்லை. காந்திஜியிடம் பேசிவிட்டு விடியற்காலம் மூன்று மணிக்குத்தான் நான் திரும்பிச் சென்றேன். வேறு எக்காரணம் கொண்டும் தவிர்க்க முடியாத உண்ணாவிரதத்தைத் தவிர்ப்பதற்குக் காந்திஜி ஒரு நிபந்தனை விதித்தார். உடனே வந்து சேரும்படி எனது பெரிய சகோதரருக்குக் காந்திஜியே அவசரத் தந்தி கொடுத்திருக்கிறார். இந்த உண்ணாவிரதம் தவறு என்று காந்திஜிக்குத் திருப்தி ஏற்படும்படி என் சகோதரர் செய்வாராயின், உண்ணாவிரதத்தை விட்டுவிடுவதாகக் காந்திஜி கூறியுள்ளார். ஷவுகத் அலியின் பகுத்தறிவிலும், கடவுளிடத்தில் அவருக்கு உள்ள பயபக்தியிலும் காந்திஜிக்கு அவ்வளவு நம்பிக்கை உண்டு.

இரு சமூகங்களில் ஏதாவதொன்று, மற்றச் சமூகம் தனக்கு என்ன தீங்கு செய்தாலும் திருப்பித் தாக்குவதில்லை என்ற உறுதியுடன் முற்றிலும் விட்டுக் கொடுத்துவிடுவதாயின், பின்னர் சமாதானம் ஏற்பட்டுவிடும். அப்படி விட்டுக்கொடுத்த சமூகமே இறுதியில் பலனையும் பெருமையையும் அடையும். அவ்விதம் விட்டுக் கொடுக்கும் ஆற்றலை என் சமூகத்தினருக்குக் கடவுள் அளிக்க வேண்டுமென்று பிரார்த்திருக்கிறேன்.

மனிதர் யாவரும் சகோதரர்களே. அவர்கள் எல்லோருக்கும் குரான் மூலம் அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட ஆதமின் இரு குமாரர்களின் தத்துவக் கதையை அல்லா போதித்தார் என்பதை, என் மதத்தினருக்கு ஞாபகமூட்டுகிறேன்.

## மௌலானா ஷவுகத் அலி :

காந்திஜியிடமிருந்து வந்த அவசரத் தந்திக்கு இணங்கவே, நான் உடனே பம்பாயிலிருந்து புறப்பட்டு வந்தேன். காந்திஜி

யுடன் நான் நீண்ட நேரம் மனம் விட்டுப் பேசினேன். உண்ணு விரதத்திற்கு அவர் கூறிய காரணங்கள் எனக்குப் பூரண திருப்தி அளிக்கவில்லை. அவரைத் திருப்தி செய்வதிலும் நான் வெற்றி பெறவில்லை. எனினும், அதைக் குறித்து நான் சோர்வு அடைந்து விடவில்லை......காந்திஜி விடுத்துள்ள வேண்கோளுக்கு இந்தியா முழுவதும் உடனடியாக மக்கள் இணங்குவார்களாயின், டில்லியில் உள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தங்களுடைய சச்சரவுகளை நிறுத்திவிட்டுச் சமரசம் செய்துகொள்ள முன்வருவார்களாயின், நான் அதிக பலத்துடன் காந்திஜியிடம் செல்ல முடியும்; உண்ணுவிரதத்தை நிறுத்தும்படி இந்திய மக்கள் செய்யும் பிரார்த்தனையுடன் எனது பிரார்த்தனையையும் சேர்த்து அவரைக் கேட்டுக் கொள்ள முடியும். இந்த ஒரே வழியில்தான் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

## தீனபந்து ஆண்ட்ரூஸ்:

திடீரென்று ஏற்பட்ட இந்த நெருக்கடி, நமது மனத்தில் ஒரு விஷயம் நன்கு பதியும்படி செய்திருக்கிறது. அதாவது, நாம் எல்லோரும் சுயநலத்தை விட்டுவிட்டு, கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும் என்பதே. "கடவுளை அரியாசனத்திலிருந்து நாம் அப்புறப்படுத்திவிட்டதாகத் தோன்றுகிறது. எனவே, மீண்டும் அவரை நமது இருதய பீடத்தில் நாம் ஏற்றிவைக்க வேண்டும்" என்று காந்திஜி கூறியுள்ள புகழ் பெற்ற வார்த்தைகள் சரித்திரத்தில் இடம் பெறும். அதன் காரணமாகவே தவறு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தவறு சீர்படுத்தப்படுமுன், நாம் ஒவ்வொருவரும் அவரவர் சொந்த முறையில் தவம் செய்ய வேண்டும். நம்முடைய கீழ்த்தர உணர்ச்சிகள் நமக்கு மிக அதிகமான துன்பத்தை உண்டாக்கி, நமது உயர்ந்த சுபாவத்தையும் பயங்கரமான விதத்தில் இழிவுபடுத்திவிட்டது. மீண்டும் கடவுளை இருதய பீடத்தில் அமர்த்திறைலன்றி, நிலைமை சீர்பட முடியாது. தீங்கை விளைவிக்கும் ஒவ்வொரு செய்தியையும் காது கொடுத்துக் கேட்கவும், அதை நம்பவும், அதைத் திருப்பிக் கூறி அது எங்கும் பரவும்படி செய்யவும் நாம் மிகுந்த அக்கறையுடன் இருந்துவருகிறோம். "அன்பு, எல்லாவற்றையும் தாங்குகிறது; எல்லாவற்றிலும் நம்பிக்கை வைக்கிறது; அன்பு எக்காலத்திலும் தோல்வியுறுவதில்லை." அப்படிப்பட்ட அன்பு இன்று எங்கே இருக்கிறது? அது மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் ஊடுருவியிருக்கிறது; ஆனால், இன்னும் அது நம் வாழ்க்கையில் ஊடுருவவில்லை.

கடவுள் நமக்கு உயர்ந்த சுபாவத்தை அருளியிருக்கிறார். அந்தச் சுபாவத்திற்கு இணங்க நாம் உண்மையாக நடந்து கொள்ளுவதாயின், நாம் இரண்டு காரியங்களைச் செய்ய முடியாது. அதாவது, முதலாவதாக யார் மீதும் நம் உள்ளத்தில் நாம் விரோதம் கொள்ள முடியாது; இரண்டாவதாக, நாம் யாரையும் திருப்பித் தாக்க முடியாது. அது போலவே, இரண்டு

காரியங்களை நாம் செய்ய வேண்டியதும் அவசியம்; நம்மால் அவற்றைச் செய்யவும் முடியும். நாம் ஒவ்வொருவரிடமும் தீவிர அன்பு காட்ட வேண்டும்; நாம் தவறு செய்தால் அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும். "அமைதி ஏற்படும்படி செய்கிறவர்களே புண்ணியசாலிகள்; அவர்கள் தான் கடவுளின் குழந்தைகள் என அழைக்கப்படுவார்கள்" என்ற ஏசுநாதரின் அருள் மொழிக்குப் பொருள் அதுதான். இது இன்று இந்தியாவுக்கு மாத்திரமல்ல, சீனாவிற்கும் ஐரோப்பாவிற்கும்கூட பொருந்தும்.

**சுவாமி சிரத்தானந்தர் :**

மகாத்மா காந்தியின் மனத்தில் அமைதி ஏற்படுவதற்காக, செய்திகளுக்குப் பரபரப்பான தலைப்புகள் கொடுப்பதையெல்லாம் பத்திரிகைகள் அடியோடு நிறுத்திவிட வேண்டும். துரதிருஷ்டகரமான ஹிந்து-முஸ்லிம் சண்டைகளைப் பற்றிப் பத்திரிகைகள் வியாக்கியானம் செய்ய முற்படக் கூடாது. காந்திஜி தமது உண்ணாவிரதத்தின் போது, 21 நாட்கள் வரையில், தண்ணீர் மாத்திரமே அருந்துவார். இந்த வகுப்புத் தீயின் உக்ரத்தைத் தணிப்பதற்காக, காந்திஜி, தெய்விகமான தமது உடலை இந்தியர்களின் முன்னிலையில் பலி கொடுக்க முன்வந்துள்ளார். அதை நிறுத்த நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற எல்லா முயற்சிகளையும் செய்துவிட வேண்டும். காந்திஜி உண்ணாவிரதம் இருந்து கொண்டும் பிரார்த்தனை செய்துகொண்டும் வருகிறார். ஒவ்வொரு நாளும் காலை அவரது பிரார்த்தனையில் நாமும் கலந்துகொள்ளுவோமாக.

## 2

# சமூக ஒற்றுமை மகாநாடு

காந்திஜியின் உண்ணாவிரதத்தைக் கண்டு மனம் பதறிய நண்பர்களும் பிறரும், சமூக ஒற்றுமைக்கான வழி வகைகளைச் கண்டுபிடிப்பதற்காக டில்லியில் வந்து கூடினர். அவர்களுடைய முயற்சியால் 1924 செப்டம்பர் மாதம் 26-ஆம் தேதி டில்லியில் சமூக ஒற்றுமை மகாநாடு ஆரம்பமாயிற்று. அதற்குப் பண்டித மோதிலால் நேரு தலைமை வகித்தார். இந்தியாவில் உள்ள சகல சமூகங்களையும் சேர்ந்த முந்நூறு பிரதிநிதிகள் அம்மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். கல்கத்தா பிஷப் வெஸ்ட்காட், பெசண்டம்மையார், மௌலானா ஷவுகத் அலி, ஹக்கீம் அஜ்மல்கான், சுவாமி சிரத்தானந்தர், பண்டித மதன் மோகன் மாளவியா, சர் ஆர்தர் மூர் முதலிய பிரமுகர்கள் விசேஷ அழைப்பிற்கு இணங்க மகாநாட்டிற்கு வந்திருந்தார்கள்.

மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவரான மௌலானா முகமது அலி, காந்திஜி நீண்ட காலம் வாழ வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் நடவடிக்கைகளை ஆரம்பித்துவைத்தார்.

காந்திஜி மேற்கொண்ட உண்ணாவிரதத்தைக் குறித்து ஒற்றுமை மகாநாடு வருத்தத்தையும், கவலையையும் தெரிவித்ததுடன், ஒவ்வொருவருக்கும் அவரது மதத்தைப் பின்பற்ற பூரண சுதந்திரம் உண்டென்பதே தனது உறுதியான அபிப்பிராயம் என்றும் பிரகடனம் செய்தது. மேலும் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் சாரம் இதுதான்:

கடவுளை வழிபடும் புனித பிரதேசங்களை, அவை எம்மதத்தினருக்குச் சொந்தமாயினும் அசுத்தம் செய்வது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். கட்டாயப்படுத்தி யாரையும் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறும்படி செய்யக்கூடாது. இக்கொள்கைகளை அமலுக்குக் கொண்டு வருவதற்கான சகல முயற்சிகளையும் கைக்கொள்ளுவதாக இம்மகாநாட்டு அங்கத்தினர்கள் காந்திஜியின் முன்னிலையில் பிரதிக்ஞை செய்கின்றனர். எனவே, தங்களுடைய முயற்சிக்கு மகாத்மா காந்தியின் ஒத்துழைப்பையும் ஆலோசனையையும் நாடுகின்றனர். இக்காரணங்களை முன்னிட்டு காந்திஜி உண்ணாவிரதத்தை உடனடியாகக் கைவிட வேண்டும் என்பதே இந்த மகாநாட்டின் ஏகோபித்த அபிப்பிராயமாகும்.

இந்தியாவில் உள்ள பல இடங்களிலும் ஹிந்து-முஸ்லிம் கலகங்கள் நடந்து வருவதைக் குறித்து இம்மகாநாடு வருந்துவதுடன், அவை காட்டுமிராண்டித்தனமானவை என்றும், மத விரோதமானவை என்றும் கருதுகிறது. கலகங்கள் காரணமாகத் துன்பத்திற்குள்ளானவர்களுக்கு இம்மகாநாடு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

ஹிந்துக்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்தும் விதத்தில் பசு வதை நடைபெறுது. பசு வதையைக் குறைக்கத் தங்களால் இயன்றதைச் செய்யும்படி இம்மகாநாட்டில் உள்ள முஸ்லிம் அங்கத்தினர்கள் தங்கள் மதத்தினரைக் கேட்டுக் கொள்ளுகின்றனர். மசூதிகளுக்கு எதிரில் கொட்டு முழக்கத்தை நிறுத்தும்படி ஹிந்துக்களை முஸ்லிம்கள் பலாத்காரம் செய்யக்கூடாது. அவ்விஷயத்தை ஹிந்துக்களின் நல்லெண்ணத்திற்கு விட்டு, அவர்கள் முஸ்லிம்களுடைய உணர்ச்சிக்குத் தாங்களாக மதிப்புக் கொடுக்கும்படி செய்யவேண்டும்.

ஒவ்வொருவருக்கும் தமது விருப்பப்படி குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றவோ அல்லது அதிலிருந்து மாறவோ சுதந்திரம் உண்டு. பலாத்காரம், மோசடி, பணம் கொடுப்பது போன்ற நியாயமற்ற முறைகளால் எவரும் மற்றொருவரை ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாற்றக்கூடாது; ஆனால், வாதித்தும், அவருக்குத் திருப்தி ஏற்படும்படி செய்தும் அவ்விதம் செய்யலாம். பெற்றோர்கள் அல்லது மேற்பார்வையாளர்களின் சம்மதமின்றி, பதினாறு வயதிற்குக் குறைந்த எவரையும்

வேறு மதத்திற்கு மாற்றக்கூடாது. மத மாற்ற சம்பந்தமாக எவ்வித ரகசியமும் இருக்கக்கூடாது.

சிறுபான்மையோரிடம் சகிப்புத் தன்மையுடனும், வகுப்புப் பிரச்னைகளில் நீதியுடனும் பெருந்தன்மையுடனும் நடந்துகொள்ளும்படி இந்த மகாநாட்டைச் சேர்ந்த ஹிந்து, முஸ்லிம் அங்கத்தினர்கள், தங்கள் தங்கள் மதத்தினரைக் கேட்டுக்கொள்ளுகிருர்கள். ஒரு சமூகத்தினர் மற்ருெரு சமூகத்தினரைப் பகிஷ்கரிப்பதும், அவர்களுடன் வர்த்தக, சமுதாயத் தொடர்பு வைத்துக்கொள்ள மறுப்பதும் வெறுக்கத்தக்கவை. எனவே, அத்தகைய பகிஷ்காரத்தையும், தொடர்பு வைத்துக்கொள்ள மறுப்பதையும் தவிர்க்கும்படி இம்மகாநாடு எல்லா சமூகங்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.

காந்திஜி மேற்கொண்டுள்ள உண்ணுவிரதத்தின் நெருக்கடியான கடைசி வாரத்தில், அக்டோபர் 8-ஆம் தேதி இந்தியாவில் உள்ள ஒவ்வொரு நகரிலும் ஒவ்வொரு கிராமத்திலும் பொதுக்கூட்டங்கள் கூடி கடவுளுக்கு நன்றி செலுத்தும்படியும், நல்லெண்ணமும் சகோதர பாவமும் நாடெங்கும் வியாபித்து எல்லா சமூகங்களையும் ஐக்கியப்படுத்த வேண்டும் என்று பிரார்த்திக்கும்படியும் இம்மகாநாடு எல்லா சமூகங்களையும் சேர்ந்த ஆடவர்களையும் பெண்களையும் கேட்டுக்கொள்ளுகிறது.

சமூக ஒற்றுமை மகாநாடு சில நாட்கள் வரையில் நடந்ததுடன், இவை போன்ற மற்றும் பல முக்கிய தீர்மானங்களும் அதில் நிறைவேறின. அவற்றின் பலனுக நாட்டிலும், குறிப்பாக டில்லியிலும் வகுப்புக் கலகங்களின் உக்ரம் தணிவதற்கு வழி ஏற்பட்டது.

காந்திஜி உண்ணுவிரதத்தை நிறுத்தும்படிக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்ற மகாநாட்டின் ஏகோபித்த தீர்மானத்தை, பிரதிநிதிகளின் விருப்பத்திற்கு இணங்க மகாநாட்டின் தலைவரான பண்டித மோதிலால் நேரு நேரில் சென்று காந்திஜிக்கு அறிவித்தார். மறுநாள் அதற்குக் காந்திஜி அனுப்பியிருந்த பதிலின் விவரம் பின் வருமாறு:

"அன்பார்ந்த மோதிலால்ஜி,

"உங்களால் வழிகாட்டப்பட்ட மகாநாடு என்மீது அன்பும் இரக்கமும் கொண்டு நிறைவேற்றிய தீர்மானத்தை நேற்றிரவு நீங்கள் அன்புடன் எனக்கு வாசித்துக் காட்டினீர்கள். மகாநாட்டின் விருப்பத்திற்கு என்னல் இணங்க முடியுமாயின், மகிழ்ச்சியுடன் நான் அவ்விதமே செய்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். இதை மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் அறிவியுங்கள். நான் எனது நிலையைப் பரிசீலனை செய்தேன், திரும்பத் திரும்பப் பரிசீலனை செய்தேன். அதன்பயனுக, எனது உண்ணுவிரதத்தை நிறுத்துவது சாத்தியமல்ல என்ற முடிவிற்கு வந்துள்ளேன். ஓர்

உயர்ந்த நோக்கத்திற்காக ஒரு தடவை கூறிய உறுதி மொழியையோ அல்லது எடுத்துக்கொண்ட விரதத்தையோ மீறக் கூடாது என்றே எனது மதம் எனக்குக் கற்பித்திருக்கிறது. சென்ற நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அந்த அடிப்படையிலேயே எனது வாழ்க்கை ஒழுங்குபடுத்தப்பட்டு வந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

"உண்ணாவிரதத்திற்கு ஆழ்ந்த காரணங்கள் இருக்கின்றன. அவற்றை இந்தக் குறிப்பில் நான் விவரிப்பது முடியாத காரியம். இந்த உண்ணாவிரதத்தின் மூலம் நான் எனது நம்பிக்கையை அறிவுறுத்துகிறேன். ஓர் ஆங்கிலேயர் மீதாவது துவேஷம் அல்லது கெட்ட எண்ணம் காரணமாக ஒத்துழையாமை உருவாக்கப்படவில்லை. நமது அன்பினால் ஆங்கிலேயரை வெற்றி கொள்ளுவதே அதன் அகிம்சைத் தன்மையின் நோக்கமாகும். எனினும், அதனால் உத்தேசிக்கப்பட்ட அந்தப் பலன் கிடைக்காததுடன், ஒத்துழையாமை காரணமாக ஏற்பட்ட சக்தி, நமக்குள்ளேயே துவேஷமும் கெட்ட எண்ணமும் உண்டாகும்படி செய்திருக்கிறது. இந்த உண்மைதான் என் மனத்தில் மிகுந்த வேதனையை உண்டாக்கி, மாற்ற முடியாத இந்தத் தவத்தை நான் மேற்கொள்ளும்படியும் செய்திருக்கிறது.

"எனவே, இந்த உண்ணாவிரதம் கடவுளுக்கும் எனக்கும் இடையே உள்ள விஷயமாகும். ஆகையால், உண்ணாவிரதத்தை நிறுத்தாததற்காகத் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும் என்பது மாத்திரமல்ல, எனக்கு உற்சாகமும் அளித்து உண்ணாவிரதம் வெற்றிகரமாக முடிய வேண்டும் என்று பிரார்த்திக்கும்படியும் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"நான் இறப்பதற்காக உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவில்லை. நாட்டிற்குத் தொண்டு செய்வதற்காகச் சிறந்த முறையிலும் தூய்மையுடனும் வாழ வேண்டும் என்பதற்காகவே உண்ணாவிரதம் இருக்கிறேன். எனவே, ஓர் நெருக்கடியான நிலையை நான் அடைவேனாயின், உணவை உட்கொள்ள வேண்டும், இல்லாவிடில் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்படுமாயின், நான் நிச்சயமாக உண்ணாவிரதத்தை நிறுத்திவிடுவேன். ஆனால், டாக்டர் அன்சாரியும், டாக்டர் அப்துல் ரஹ்மானும் எனது ஆரோக்கியம் ஆச்சரியகரமான நிலையில் இருப்பதாக உங்களுக்குக் கூறுவார்கள். அவர்கள் மிகுந்த கவனத்துடனும், அக்கறையுடனும் என்னை மேற்பார்வையிட்டு வருகிறார்கள். எனவே, மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு என் மீதுள்ள அன்பை, எதற்காக மகாநாடு கூடியதோ அந்தச் சமூக ஒற்றுமைக்காக அக்கறையுடனும், உண்மையாகவும், உருவாகவும் உழைப்பதில் காட்டும்படி நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

# பொருட் குறிப்பு அகரவரிசை

(எண் - பக்கத்தைக் குறிக்கும்)


அ. இ. கா. கமிட்டி - 303, 305
அகதிகள் – 529, 530, 676, 677
அகிம்சை - 58, 59, 61, 64, 136, 193, 201, 305, 321, 338, 346, 347, 348, 354, 361, 418, 527, 536, 557, 576, 577, 583, 585
அகிம்சை நெறி – 381, 693, 704, 752
அக்பர் - சகிப்பு உணர்ச்சியை அறிந்தவர்-9
அட்லி, ஸ்ரீ – 592
அப்துல் மஜீத் - 624, 655
அப்துர் ரஹீம், சர் - 255
அப்துர் ரஹ்மான் - 226.
அப்துர் ராப் நிஷ்டார், சர்தார் – 487
அமிர்தகௌர், ராஜ்குமாரி-676
அரசியல் நிர்ணய சபை – 416, 417, 468, 565, 573, 645
அலகாபாத் – வகுப்புக் கலகங்கள்-337
அலி சகோதரர்கள் – 31, 54; – கைது - 59, 62, 67, 76, 99, 115, 146, 177, 244, 312, 365, 493
அனுசூயாபாய் காலே, ஸ்ரீமதி – 452
அன்சாரி, டாக்டர்-31, 188, 226, 244, 274, 333, 681
அன்பு நெறி - 61
அன்னியத் துணி பகிஷ்காரம்-62
அஜ்மல்கான்-67, 72, 76, 84, 94, 154, 244, 271, 348, 411

ஆண்டுருஸ், ஸ்ரீ - 38, 796
ஆம்தில், லார்டு - 37
ஆரிய சமாஜிகள்-163, 166, 308
ஆரிய சமாஜ்-145, 149 285
ஆஸப் அலி-65, 412

இடைக் கால அரசாங்கம் - 466, 468, 483
இந்திய தேசீய சேனை-431, 443, 456
இர்வின், லார்டு - 336

உண்ணாவிரதம், கல்கத்தாவில்– 650, 662; டில்லியில், 674, 752, 753, 759, 761, 766, 768, 776; தலைவர்களின் கருத்துகள், 794-797
உமார் பாய் முகமது - 317

ஒத்துழையாமை – 60, 171, 183 223
ஒற்றுமை மகாநாடு - 251, 797-800

கங்கிரி குருகுலம் - 292
கணேச சங்கர் வித்தியார்த்தி – 333, 438, 443
கபீர் – 8, 155
கர்ஸான், லார்டு - 10, 211, 644
கலப்பு மணம் – 81, 83
கல்கத்தா - 663, 665

காங்கிரஸ், லாகூர் கூட்டம் – 325
காங்கிரஸ் காரியக் கமிட்டி – 467, 475; - மாகாணங்களில்– 648
காங்கிரஸ் ஆட்சி-353
காத்ரி, ஸ்ரீ, பசுக்களைக் காத்தவர் - 97

**காந்திஜி**

சமூக ஒற்றுமை-தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது எழுதிய கட்டுரைகள்–1; கஷ்டங்

களின் உபயோகங்கள் - 2; துவேஷங்களை விட்டொழித்து விட வேண்டும்-3; முக்கியமாக இருக்க வேண்டிய குணம் அன்பும், தயாளமும்-5; மத சமரச முயற்சி-6; புத்தரின் உபதேசங்கள்-6; விக்கிரக ஆராதனை பற்றி-6; வங்காளம் பற்றி-12; ராஜதந்திரம் பற்றி-13; உலக சமயம்-ஜே. பி. எழுதிய கட்டுரை பற்றி-18; சமூக ஒற்றுமை பற்றி 'இந்திய சுயராஜ்ய'த்தில் எழுதியுள்ளது - 17; ஒரே தேசியச் சமுதாயம் என்பது என்ன? -19; கிலாபத் பிரச்னை குறித்து - 29; முஸ்லிம்களின் பிரச்னையைக் குறித்து சிரத்தை எடுத்துக் கொள்வதேன்? - 32; 'டைம்ஸ் ஆங் இந்தியா' ஆசிரியருக்கு எழுதிய கடிதம்-34; பம்பாய் கூட்டத்தில் பேசியது – 36; உபவாசம் - 38; பகிஷ்காரத்தில் நம்பிக்கையில்லை - 42; அ. இ. கிலாபத் மகாநாட்டில் - 43; பகிஷ்காரம் பழி வாங்கும் முறை - பலவீனத்தையே காட்டுகிறது - 45; பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை - 45; நாம் என்ன செய்யக்கூடாது? - 47; என்ன செய்யலாம்? - 48; வாக்குறுதிகள் வீணாயின - 49; வைஸ்ராயின் செய்திபற்றி - 51; ஒத்துழையாமைக் கமிட்டிபற்றி - 54; திறமை வாய்ந்த தொண்டனை எண்ணுகிறேன் – 55; புத்திக்கு இடமளிக்க வேண்டும், கத்திக்கு அல்ல - 57; அலி சகோதரர்கள் கைதானதும் விடுத்த வேண்டுகோள் - 59; பசுப் பிரச்னையுடன் இணைக்கக்கூடாது - 65; ஹிந்து சகோதரர்களுக்கு – 69; சநாதன ஹிந்து என்று சொல்லிக் கொள்வதேன்? - 75; பிரிந்து நின்றால் வீழ்ச்சியே - 78; ஹிந்துக்களின் பொறுப்பு - 79; சகிப்புத் தன்மையின் அவசியம் - 79; மதம், மணவினைபற்றித் திட்டமான கருத்துக்கள்–81; கலப்பு மணம், சமபந்தி போஜனம் பற்றி - 81, 83, 99; சச்சரவுக்குக் காரணம் - 82; பசுப் பாதுகாப்பு பற்றி சம்பாரணில் கூறியது-87; உணர்ச்சிகளைப் புண்படுத்தக் கூடாது–91; அன்புதான் மதத்திற்கு அடிப்படை - 98; வங்காள ஜமீன்தார் ஒருவரின் கடிதம் பற்றி - 100; மாப்பிள்ளைக் கலகம் பற்றி - 102; வேல்ஸ் இளவரசர் வருகை குறித்து பம்பாய் கலவரம் - பம்பாய் வாசிகளுக்கு விடுத்த வேண்டுகோள் - 113; ஒத்துழையாமை வாதியின் அகிம்சை ஒத்துழைப்பவரின் அகிம்சையைவிட மோசமாகியிருக்கிறது - 113; பம்பாய் கலவரங்கள் பற்றி - 116; உபவாசம் மேற்கொண்டது - 117; பம்பாய் மாவாலிகளுக்கு-118; சக ஊழியர்களுக்கு-121; உபவாசத்தை முடிக்குமுன்னர் விடுத்த அறிக்கை - 125; சச்சரவுகளைத் தீர்த்துவைக்க மஹாஜன சபை-126; பம்பாய் நகரவாசிகளுக்கு வேண்டுகோள் - இழந்த மதிப்பைப் பெற வேண்டும் - 127; ஹிந்து-முஸ்லிம் பிணக்கு – சிந்து சம்பவங்கள் பற்றி - 131; மூல்டானில் முஸ்லிம்களின் அட்டூழியங்கள் - பனரசிதாஸ் சதுர்வேதி கொண்டு வந்த செய்தி பற்றி - 132; மசூதி முன் சங்கீதம் - 137; பலாத்காரம் கூடாது - 139; துஷ்டனும் கோழையும் - 139; பிரச்னை தீர வழி - 140; குண்டர்கள் பற்றி-141; மசூதிகளுக்கு எதிரில் வாத்திய முழக்கம் பற்றி - 153; அரசாங்க உத்தியோக விஷயத்தில் சமூகப் பிளவுகளைப் புகுத்தக்கூடாது - 154; பதவிகளை சமூகவாரியாகப் பங்கு போட்டு வழங்கக்கூடாது – 155; நண்பரின் கடிதத்துக்குப் பதில் – 156; ஹிந்துக்கள்

என்ன செய்யலாம்? - 158; பேராசிரியர் ராமதேவரின் கடிதம் - பதில் – 166, 168; முகஸ்துதி பற்றி - 170; ஒற்றுமைக்கு வழி - 171; இருள் சூழ்ந்த சித்திரம் - அமிர்தசரஸ் முஸ்லிம் அன்பரின் கடிதம் - பதில் - 173; ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரு தேசீய இனங்களா? - 175; போல்ஷிவிசம் பற்றி - 176; இதய ஒற்றுமை–179; 1924 – ல் மௌலானா முகமது அலிக்கு எழுதிய கடிதம் - 180; மதமும் ஒழுக்கமும் - 182; எழுத்தாளரின் கடமைபற்றி - 184; சட்டசபைப் பிரவேசம்பற்றி – 184; டிபியா காலேஜ் சம்பவம் பற்றி - 189; ஹிந்து மதம் யாது? - 192; ஓய்வு ஒழிவின்றி உண்மையைத் தேடும் முயற்சியே ஹிந்து மதம் – 194; குல்பர்கா சம்பவங்கள் பற்றி– 195; விக்கிரக ஆராதனை -195; கோவிலை அசுத்தப்படுத்திய முஸ்லிம்களுக்கு அறிவுரை– 197; ஹிந்து ஆலயங்களை அசுத்தப்படுத்தியதன் பின்னணியில் ஒரு முஸ்லிம் ஸ்தாபனம் இருக்கிறதென்று கூறியதற்கு விளக்கம் – 198; வேண்டுவது மனமாற்றமே – 201; ஆண்மைக்கு அழகு அகிம்சையே - 201; இந்தியாவில் விரும்புவது சுயராஜ்யமேயன்றி ஹிந்து ராஜ்யமல்ல - 205; மசூதிக்கு முன்னால் மேளம் வாசிப்பது பற்றி-205; நாகபுரி கலகங்கள் பற்றி ஒரு நண்பர் எழுதிய கடிதமும் பதிலும் - 207, 209; மனோபலம் இல்லாதவர்களுக்கு இந்த உலகத்தில் இடமில்லை – 210, ஹிந்துக்களின் கோழைத்தனத்தைப் போக்க கல்வியறிவுள்ள பகுதியினர் குண்டர்களை எதிர்த்துப் போராட வேண்டும் – 211; 21 நாள் உபவாசம் - 216; கடவுள் ஒருவரே - உபவாசத்தின்போது எழுதிய தலையங்கம் - 217; கடவுளிடத்தில் நம்பிக்கை பற்றி - 221; உண்ணாவிரதம் பற்றி - தீர்க்காலோசனை செய்யாமல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை - 222; உபவாசம், கடவுளுக்கும் எனக்கும் இடையேயுள்ள ஒரு விஷயமாகும் – 225; முஸ்லிம் வீட்டில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டது பற்றி – 225; உண்ணாவிரதம் பற்றி ஷவுகத் அலியுடன் விவாதித்தது-229; நெப்போலியன் உதாரணம் – 234; கோஹட்டுக்குப் போவது குறித்து வைஸ்ராய்க்குக் கடிதம் - 235; ஜாமியத் தீர்மானம் பற்றி – 238; கோஹத் சம்பவங்கள் பற்றி - 239;240 ரயில் வண்டியில் அடைக்கலம் புகுந்தோருக்கு அளித்த வாக்குறுதி - 243; கோஹத் ஹிந்துக்களின் நிலைமை பற்றி - 244, கோஹத் செல்வது குறித்து வைஸ்ராயுடன் கடிதப் போக்குவரத்து - 246; பரஸ்பர நட்பு அவசியம் - பெல்காம் காங்கிரஸ் கூட்டத்தில் கூறியது - 248; சுயராஜ்ய அரசாங்கத்துக்கு விளக்கம் - 250; சர்வ கட்சி கமிட்டி பற்றி - 251; ஆன்ம சக்தியால் வாழ்க்கை நடத்துவது - 254; சரணாகதி தத்துவம் - 256; அன்பு அளிக்கும் நீதி - 257; கிட்டர்பூர் சம்பவம் பற்றி – 259; பெண்கள் தூக்கிச் செல்லப்படுவது பற்றி – 263; மேளத்தைப் பற்றிய பிரச்னை – 265; பத்திரிகைகள் பற்றி - 267; சட்டசபைகள் பற்றி – 269; சுவாமி சிரத்தானந்தரின் மரணம் குறித்து எழுதியது – 273; சுவாமிஜி பற்றி - 277; சிரத்தானந்தருக்கு ஞாபகச் சின்னம் அமைப்பது பற்றி - 280; கௌஹாதி காங்கிரஸ் கூட்டத்தில் பேசியது - 282; கொலையைப் பற்றிய உண்மையை மறைக்கவில்லை – 289;

கங்கிரி குருகுலத்தை ஆதரிக்க வேண்டுகோள் - 291; சுத்தி, தக்ளி பற்றி - 299; கடவுளைச் சரணடைந்தது - 301; அ. இ. கா. கமிட்டி தீர்மானம் பற்றி - 303; ரங்கிலா ரசூல் பற்றி - 308; மூத்தமகன் ஹரிலால் பற்றி - 314; கோழையை எப்படித் தீரனாக்குவது? - 322; வகுப்புப் பிரச்னை பற்றிய காங்கிரஸ் தீர்மானம் பற்றி எழுதியது - 325; கான்பூர் சம்பவங்கள் பற்றி கராச்சி காங்கிரஸில் பேசியது – 321 ; பம்பாயில் அ. இ. கா. க. கூட்டத்தில் பேசியது - 335; அலகாபாத் கலவரங்கள் பற்றி - 337; ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை பற்றி டில்லியில் பேசியது - 340; நம்பிக்கை குன்றவில்லை - 343; வகுப்புப் பிரச்னை பற்றி - 344; சில குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறியது – 349; ராணுவமா, நீதியா? - 353; மந்திரிகளும் சட்டசபை அங்கத்தினர்களும் பற்றி - 353; சமாதானப் படை - 354; சிந்து மாகாண கலவரங்கள் பற்றி - 358, 360, 364; காங்கிரஸ்வாதிகள் கடமை – 365; பொருள் சேதம் - 366; அவதூறுகளுக்குப் பதில் - 371; லியாகத் அலிகானின் கேள்விகளுக்குக் கூறிய பதில் – 375; தேசத்தைத் துண்டு போடுவதற்கு மனதார இசைய முடியாது - 375; முஸ்லிம் லீக் நடவடிக்கைகள் பற்றி - 378; கடவுளின் தூதனென்று கூறிக்கொள்ளவில்லை - 384; யுத்த லட்சியங்களை வெளியிட வேண்டுமென்ற காங்கிரஸ் கோரிக்கை பற்றி – 385- 390; ஒற்றுமையும் நீதியும் - 393, 395; தேசீய இனங்கள் பற்றி - 399; இஸ்லாம் பற்றி-399; பிரிவினையைத் தடுக்க பிரிட்டிஷ் பண்டங்களின் உபயோகத்தைக் காங்கிரஸ் விரும்பாது - 405; தனது நிலையை விளக்கி ஜின்னாவின் அறிக்கைக்குப் பதில் கூறியது - 406; முஸ்லிம்களின் எதிர்ப்புக் கடிதங்களுக்குப் பதில் - 411; பிரிட்டிஷ் ஆட்சி முடிவுற்றால்தான் சரியான பரிகாரம் கிடைக்கும் - 413; பிரிவினையும் முஸ்லிம் அல்லாதவர்களும் - 414; பாகிஸ்தானும் அரசியல் நிர்ணய சபையும் – 416; பாகிஸ்தானும் அகிம்சையும் - 418; அமைதியைக் கொடுத்து விடாது - 419; விஷம் நிறைந்த பதில் - வேண்டுகோளுக்கு ஜின்னா கொடுத்த விடை பற்றி - 423; சுழலும் ஆட்சி – 424; அகமதாபாத் கலவரங்கள் பற்றி - 439, 440, 442; இடைக் கால சர்க்கார் பற்றி - 445, 447; பம்பாயில் வகுப்புக் கலவரங்கள் பற்றி - 449; மதத்தின் பெயரால் கலவரங்கள் நடைபெறுவது குறித்து வருத்தம் - 455; "கருணை மழையாக வந்து பொழிக" - 457; ஜபல்பூர் கலவரங்கள் பற்றி - 459; ரயில்வே நிலையங்களில் மத அடிப்படையில் தேநீர் விற்கப்படுவது பற்றி - 460, 461; உடையில் ஒருமைப்பாடு பரிகாரமாகாது - 463; ஸ்ரீ பிரஸ்டன் குரோவருக்கு அளித்த பேட்டி - 467; அரசாங்க அறிக்கை பற்றி - 469; கிழக்கு வங்காள முஸ்லிம்களின் நடத்தை பற்றி 473; பலவந்த மணம், மத மாற்றம் பற்றி – 474; நோவாகாலி யாத்திரை - 479 கோழைகளுக்குக் கடவுளும் உதவி செய்யமாட்டார் – 503, மனச்சாட்சிக்குக் கோரிக்கை- 511; அச்சமின்மை போதனை - 513; பயத்தின் உடற் கூறு - 514; அமைதி நிலவவில்லையாயினும் அதற்குப் பிறகும் உயிர் வாழும் விருப்பம் இல்லை - 517; கடவுளையே நம்புங்கள் - 521; மதத்தின் சாரம் – 533;

முஸ்லிம்களின் நண்பன் - 534-
கடவுளுக்கு சேவை - 538, 540:
யாத்திரையின் நோக்கம் ;
541; கோஷா முறை பற்றி -
546; இரு சமூகங்களின் நண்
பன் - 548; வாழ்க்கைக் கலை
- 551; ஒரு முஸ்லிம் வீட்டில்
தங்கியிருந்தது பற்றி - 563; பத்
திரிகையாளரின் கடமை - 563;
சுதந்திர இயக்கத்தின் சரித்தி
ரம்-565; நடை யாத்திரை-
565; விரிவான மதம்-566;
உள்ளங்கள் ஒன்றுபட வேண்
டும் - 571; வாக்குரிமை அளிப்
பது பற்றி - 577; குறிப்பிட்ட
வயதுக்கு மேற்பட்டவர்
களுக்கு வாக்குரிமை கூடாது
578; முஸ்லிம் தலைவர்களின்
கூற்றுக்குப் பதில் - 586;
கலப்பு மணத்துக்கு ஆதரவு -
589; மதங்கள் பற்றி - 590;
எது மனிதத் தன்மை? - 593;
தகாத நடவடிக்கைகளும்
பிராயச்சித்தமும் - 597 ;
காமன் பண்டிகை கொண்டா
டும் முறை பற்றி - 599; தியா
கத்தின் இறுதி நிலை - 601;
மதமும் அரசாங்கமும் - 603;
மதக்கல்வி மதச் சங்கங்களின்
முழுப் பொறுப்பாக இருக்க
வேண்டும் - 603; ஹிந்துக்க
ளின் கடமை - 604; மந்திர்
களும் மசூதிகளும் - 606; தற்
கொலை மனப்போக்கு - 608;
பகிஷ்காரத்துக்கு இடமில்லை
- 614; அரசாங்கமும் ஈடுத்
தொகையும் - 615; உண்மை
யான ஹிந்துக்களின் கடமை -
620; வஞ்சம் கடவுளைச் சார்ந்
தது - 625; ஜின்னாவுடன் கூட்டு
அறிக்கை - 632; வேண்டு
கோள் வீணாயிற்று-634; மதங்
களின் ஆணிவேர் - 635; இந்
தியா, ராணுவ நாடாகிவிடு
வது உலக அமைதிக்கே
ஆபத்து 636; வைஸ்ராயின்
நேர்மை - 639; இந்தியாவைப்
பிரிப்பது தவறு-640; வகுப்பு
வாரியாக நாட்டைப் பிரிப்ப
தால் பிரச்னை தீர்ந்து விடாது
- 641; காபிர்கள் யார்? - 646;
பாகிஸ்தான் உண்மையாகி
யது - கா. கமிட்டியின் தீர்மா
னம் பற்றி - 648; உண்ணாவிர
தம் பற்றி - 650; ஹிந்துக்க
ளின் கடமை பற்றி - 653; பிரி
வினையில் சகோதர உணர்ச்சி
- 654; சுதந்திர மசோதா
பற்றி - 657; இந்தியா, எல்லா
இந்தியர்களுக்கும் தாயகம் -
659; ராணுவப் பிரிவினை பற்றி
- 661; உண்ணாவிரதம் கல்கத்
தாவில் - 663; கல்கத்தா முஸ்
லிம்கள் பற்றி - 665; சுஹ்ரா
வார்தியின் போக்கு - 666;
வகுப்புத் தீயைத் தணிக்க
ஒரே வழி உண்ணாவிரதம் -
669; டில்லியில் - 674; மத்திய
அரசாங்கம் பற்றி - 674; எல்
லைப் புற மாகாண நிலவரம்
பற்றி-679; கடவுளே புகலிடம்
-682; அரசாங்கங்கள்-மக்கள்
கடமை - 684: யூனியனிலுள்ள
முஸ்லிம்கள் பற்றி-685; 'செய்
வது இல்லையேல் சாவது' -
684; முஸ்லிம்களின் நண்பன் -
686; மனச் சோதனை - 688;
அரசாங்கத்தை நம்புக - 688;
ஹிந்து மதம் பற்றி - 690;
கோபத்தை அடக்குக - 692;
வீரத்துடன் இருங்கள் - 694;
டில்லி முஸ்லிம்கள் பற்றி -
696 ; சுதந்திரத்திற்காகப்
போராடியது, காங்கிரஸ்-699;
யூனியன் அரசாங்கத்தின்
கடமை - 699; இந்தியா -
பாகிஸ்தான் போர் பற்றிய
பிரஸ்தாபமும் விளக்கமும் -
701, 702, 703, 706; பிரிவினைக்
குக் காரணம் - 706; நீண்ட
நாள் உயிர் வாழும் ஆசையே
போய்விட்டது - 709; மனச்
சோர்வு இல்லை - 710; முஸ்
லிம்களை பாம்பிற்கு ஒப்பிட்ட
தற்குக் கண்டனம் - 711; இந்
திய முஸ்லிம்களிடத்தில் நம்
பிக்கை - 713; மக்கள் பரிவர்த்
தனை நிவாரணமளிக்காது -
716; உத்தியோகஸ்தர்களின்
கடமை பற்றி - 719; காஷ்மீர்

பற்றி – 720; துருப்புகளை அனுப்பியது சரியே - 721, 722; பிரிவினை செய்வது பைத்தியக்காரத்தனம் - 725; வழி காட்டும் தீபம் - 727; ஷேக் அப்துல்லா பற்றி - 728; போரின் விளைவு - 729; ஜுனகாத் பற்றி - 730; காஷ்மீர் இந்தியாவில் சேர்ந்ததற்கு ஆதரவு - 732; ராம்பூர் சமஸ்தானம் பற்றி – 733; கத்தியவார் முஸ்லிம்கள் - 734; மசூதிகள் கோயில்களாக மாற்றப்பட்டது பற்றி - 737; சமூகங்களைப் பற்றிக் காங்கிரஸ் கொள்கை – 738; வர்த்தகத்தில் வகுப்புவாதம் கூடாது - 740, 741; கடத்தப்பட்ட பெண்கள் பற்றி – 742 - 745; சிந்துவில் ஹரிஜனங்களின் நிலைமை –745; யூனியன் முஸ்லிம்களின் கடமை - 746, முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர வேண்டும் - 748; பஞ்சாயத்தின் கடமை - 751; ஹிந்துக்கள், சீக்கியர்களின் கடமை - 762; பாகிஸ்தானுக்கு ஒரு வார்த்தை - 764; உண்ணாவிரதத்திற்குத் தகுதியான பதில் - 766; உள்ளம் சுத்தமாக வேண்டும் – 768; சமூகப் பிரதிநிதிகளின் பிரதிக்ஞை பற்றி - 770; பிரார்த்தனையில் வெடிகுண்டு வெடித்தது பற்றி - 782; வார்தாவுக்குச் செல்வது பற்றி-787; பூரண சுயேச்சை தினம் – ஜனவரி 26 பற்றி – 789; பெஷாவரில் பாதகச் செயல்கள் - 790; 'இமயமலைக்குச் சென்றாலும் ஊழியனைப் பின் தொடர்வேன்' 793; உண்ணாவிரதம் பற்றி மோதிலால் நேருவுக்கு எழுதிய கடிதம் – 799.
காரியக் கமிட்டி - 266
கான்சாகிப், டாக்டர் - 616
காஜி முஸ்தாபா கமால் பாட்சா - 63, 65
காஷ்மீர் - 720, 722, 724 - 727, 729, 738, 748, 781
காஷ்மீர் மகாராஜா - 720

கிலாபத் - 25, 29, 31, 38, 40; - டில்லியில் அகில இந்திய மகாநாடு - 43, 45, 47 50; - அலகாபாத் கூட்டத்தின் முடிவு – 52, 63
கிலாபத்தும் பசுவும் - 65, 73, 84, 89, 105, 115, 209; - கிளர்ச்சி – 304

கீதை - 90, 136, 312, 523, 597

குருநானக் - 8, 635
குரான் - 23, 33, 64, 89, 105; 402, 562, 563, 632, 635
குல்பர்கா - 300
குவாலியர் - 782

கெதே, ஜெர்மன் கவி எழுதிய கவிதை – 217

கேசவ மேனன் - 107
கேண்ட்லர், ஸ்ரீ - 80

கோஹத் - 235; - அகதிகள் - 239; - கோர சம்பவங்கள் – 240, 241 - ஹிந்துக்கள் - 243, 244, 246

சங்கதன் இயக்கம் - 201
சட்டசபைகள் – 342; 344, 419, 421
சட்ட மறுப்பாளர் - 328
சதீஷ் பாபு, ஸ்ரீ - 494, 628
சத்தியார்த்தப் பிரகாசம் - 144; சாந்த்பூர் – 495; - சாட்டர்ஜி, ஸ்ரீ என். ஸி. 672
சமயம் - 15; - உலக சமயம் பற்றி ஜே. பி. எழுதிய கட்டுரை – 15
சமாதானப் படை – 354, 355
சமூக ஒற்றுமை – 17; – இன்றேல் சுயராஜ்யமில்லை - 75; - உண்ணாவிரதம் மேற்கொள்

ளத் தீர்மானித்தது பற்றி விடுத்த அறிக்கை - 213; மகா நாடு, 797
சமூகக் கலவரங்கள் - 321
சர்தார் மகான் சிங் - 241
சதீஷ்பாபு - 628
சரோஜினி நாயுடு - 120, 223
சாப்ரு - 52
சாமளதாஸ் காந்தி - 734

சிந்தாமணி ஸ்ரீ - 52
சிந்து மாகாணம் - 358
சிறுபான்மையினர் - 377, 391, 396, 452, 586

சுத்தி - 148, 149, 164, 299-
இயக்கம் - 303
சுவாமி சிரத்தானந்தர் - 143, 163, 164, 188, 273, 277, 280, 286, 317, 434, 797
சுவாமி தயானந்தர் - 293
சுஹ்ரவார்தி ஷஹீத் - 519, 616, 762

செம்ஸ்போர்டு, லார்டு - 39
சென் குப்தா - 261

சேத் ஹாஜு அப்துல்லா ஹரூன் - 131, 147

சையத் முகமது, டாக்டர் - 268, 595, 600

சோட்டானி - 72, 97
சோமநாத் ஆலயம் - 734
சோயித்ராம், டாக்டர் - 131, 145, 147, 360

சௌரி சௌரா - 135

டயர், ஜெனரல் - 290

டாக்டர் சுசீலா நய்யார் - 570

டில்லி - 753, 755, 757, 779

தப்ளிக் - 148, 295, 313

தயானந்த சரஸ்வதி - 144, 163, 168
தனித் தொகுதிகள் - 417, 419

தீண்டாமை - 318, 414

துருக்கிப் பிரச்னை - 34; சமாதானஷரத்துகள் பற்றி - 49; - துருக்கியை அழிக்கும் இயக்கம் - 58
துருரானி, எம். கே. - 293
துளசிதாசர் - 597

தேசபந்து குப்தா, ஸ்ரீ - 772
தேசீய முஸ்லிம்கள் - 411, 655
தேசீய ராணுவம் - 389
தேபர், ஸ்ரீ -735

நவாப்ஜாதா லியாகத் அலி கான் - 375, 377

நாசிக் - 311

நேதாஜி போஸ் - 456, 543, 565
நேரு, ஜவாஹர்லால் - 392, 488, 516, 631, 633, 691, 707, 780, 785

நைஜாம் ராஜ்யம் - 151

நோவாகாலி - 529, 531, 571, 580, 595, 599, 658, 685, 609, 613, 621, 626; - யாத்திரை - 479, 482, 489, 498, 500, 526

பகவன்தாஸ், பாபு - 158
பக்ரீத் - 96
பஞ்சாப் - 609, 616
பஞ்சாயத்துகள் - 751
பசுபதி நாத குப்தா - 339
பசுப் பாதுகாப்பு - 20, 26, 65, 67, 68, 72, 73, 83, 86, 87, 91, 152, 158, 205
பசுவதை - 26, 312, 571
பசுவதையும் கொட்டு முழக்கமும் - 92; - காரணங்களும் பரிகாரங்களும் - 92, 93
பலாத்காரம் - 33, 38
பனாரசிதாஸ் சதுர்வேதி - 132
பஸ்லுல் ஹக் - 587

பாகல்பூர் - 261
பாகில் ஹுசேன், ஸ்ரீ - 135
பாகிஸ்தான் - 416, 418, 419, 428, 465, 469, 482, 498, 556, 584, 613, 630, 637, 648, 651, 657, 659, 668, 691, 699, 715, 729, 791
பாட்ஷாகான் - 613
பாபா பச்சிதர் சிங் - 707
பாலர் சாகிப் கேர் - 465
பார்க்கவா, ஸ்ரீ - 695
பார்சிகள் - 114, 120

பிபி அம்துல் சலாம் - 559

பிரஜ் கிஷோர் பிரசாத் - 564, 596

பிரார்த்தனையில் வெடிகுண்டு - 782
பிரிஜ் கிருஷ்ண - 792

பீகார் - 486; - யாத்திரை - 593

புல்லர் ஜெனரல் - 3
புருஷோத்தம ஷா - 320

பெஸன்ட், ஸ்ரீமதி - 52

மகாதேவ தேசாய் - உண்ணு விரதத்தின் உட்கருத்து பற்றி - 227
மசூதிகளின் எதிரில் மேளம் வாசித்தல் - 571
மந்திரி சபைத் தூது கோஷ்டி - 576, 583
மவுண்ட் பாட்டன், லார்டு - 638
மனோரஞ்சன் பாபு - 372
மஜ்லிஸ் அஹ்ரார் - 473

மாடர்ன் ரிவ்யூ - 96
மாண்டேகு - 37
மாப்பிள்ளைக் கலகம் - 101, 107, 134
மார்லி, லார்டு - 24
மாவாலிகள் - 118
மாளவியா - 52, 142, 157, 244, 286

முகமது இக்பால் - 380
முகமது, டாக்டர் - 134
முன்ஷிராம், மகாத்மா - 277
முஸ்லிம் மகாநாடு - 38; - லீக் - 368, 378, 392, 406, 407, 411, 415, 422, 425, 445, 453, 465, 487, 497, 532, 554, 573, 584, 592, 614, 617, 625, 633, 634, 640, 649, 651, 652, 657, 660, 677, 679, 698, 723, 730

மூஞ்சே, டாக்டர் - 212

மெகாலே - 14

மொரார்ஜி தேசாய், ஸ்ரீ - 438

மோதிலால் நேரு - 52, 244, 251, 270, 799

மௌலானா அகமது சையது - 687
மௌலானா அப்துல் பாரி - 31, 33, 67, 108, 145, 170
மௌலானா அபுல் கலாம் ஆஸாத் - 266, 415, 471, 476, 771
மௌலானா முகமது அலி - 97, 146, 186, 189, 190, 795
மௌலானா ஹிப்சூர் ரஹ்மான் - 775
மௌலானா ஷவுகத் அலி - 326, 340, 489, 795
மௌலானா ஜாபர் அலிகான் - 725
மௌலானா ஷிபிலி - 301

யமுனலால் பஜாஜ், ஸ்ரீ - 689

ரத்னகிரி - 302

ரவீந்திரநாத டாகுர் - 564

ராட்டினம் - 622

ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ - 492
ராமதேவர், பேராசிரியர் - 16
ராம்பூர் சமஸ்தானம் - 733
ராஜபாலி, ஸ்ரீ - 443, 444
ராஜா கஜ்னபர் அலிகான் - 468
ராஜேந்திர பிரஸாத் - 387, 390, 564, 596, 627, 778, 794
ராஷ்டிரீய சேவா சங்கம் - 689, 737, 771

ருத்ரா, பிரின்ஸ்பால் - 681

ரௌலட் சட்டம் - 278, 434

லாயிட் ஜார்ஜ், ஸ்ரீ - 46, 47, 161
லாலா லஜபதிராய் - 143

லேடி ஸ்மித் - 3, 4

வகுப்புவாரித் தொகுதி - 616; - வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் - 325
வங்காளம் – 652; - பிரிவினை 9; – 'வீர வங்காளம்' - 12, 148
வசந்தராவ், ஸ்ரீ – 443
வர்தா – 788
வல்லபபாய் பட்டேல், சர்தார் - 380, 437, 686
வஸ்வானி - 83, 86

வாஷிங்டன் இர்விங் - இஸ்லாமைப் பற்றி - 7

வில்சன், பதினைன்கு திட்டங்கள் – 50

வேல்ஸ் இளவரசர் - 113

ஜம்னுதாஸ் மேத்தா - 120
ஜயகர், ஸ்ரீ - 120
ஜயராம்தாஸ் – 145

ஜாகிர் ஹுசேன், டாக்டர் - 435, 753
ஜாமியத்-உல்-தப்ளிக் இஸ்லாம் - 238
ஜாலியன்வாலாபாக் - 255, 632

ஜின்னு, காயிதே ஆஜம் - 375, 380, 387, 390, 392, 394, 406, 422, 423, 428, 450, 507, 510, 550, 552, 558, 562

ஜுனுகாத் - 730

ஷம்ஸுதீன் - 489, 494

ஷாம்லால் கித்வானி, ஸ்ரீ - 368, 369, 370

ஷேக் அப்துல்லா - 720, 724 726, 727, 728

ஹண்டர் கமிட்டி - 66

ஹரிபுரா - 338
ஹரிலால் - 314
ஹர்த்தால் - 47
ஹஸரத் மோஹனி - 54, 107, 185, 204

ஹார்னிமன், ஸ்ரீ - 185

ஹார்டிஞ்ஜ், லார்டு – 46

ஹிந்து மகாசபை - 737

ஹிந்து–முஸ்லிம் ஒற்றுமை - 26; - பிரதிக்ஞை - 26, 70, 75, 100, 105, 155, 200, 201, 263, 268, 291, 295, 323, 450

ஹெட்ஜ்வார், ஸ்ரீ - 689

ஹைதராபாத் – 730


TAMIL NADU ARCHIVES LIBRARY
100328
MADRAS-600 008

Manickam Press, Madras-29.